V211,31 N82
M-3.28;2
122252

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் *(முதலமைச்சர்)*—*பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.*

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் *(நிதி அமைச்சர்)*—*நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.*

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் *(மின் துறை அமைச்சர்)*—*மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.*

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி *(ஊரகத் தொழில் துறை அமைச்சர்)*—*கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத்துறை, முத்திரைச் சட்டம்.*

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் *(வருவாய்த் துறை அமைச்சர்)*—*வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.*

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் *(செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)*—*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.*

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் *(கல்வி அமைச்சர்)*—*தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி*

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாள நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்)—கதர், மது மனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

SUNDAR LALKURANA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister)-Public, General Administration, Indian Admistrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backword Classes, Youth Service Corps, Price Control and Ex—Servicemen.

3. Hon. Thiru. S· RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon· Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measurest) Regitration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Lgislation on Chits and Co-Operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Developmen, Rural Indeb edness, Bhoodan and Gramdhan and Hihgways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, S a is ics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommedation Contiol.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru. S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Tex iles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports, Public Works Department and Es ablishment ma er rela ing to Public Works Depar men.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minis er for Adi Dravidar Welfare)— Adi Dravidar Welfare, Stationery, And Printing, Government Press, News Prin. Control, Hill Tribes and Bonded Labour anq Employment and Training

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minis er for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and correctional Administration.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்.
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி. தா. இராசம்பாள்.
5. திரு. கு. ரமணி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி,ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ.,பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்-சி. (குழு அலுவலர்).
திரு. வி. சீதாராமன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி,ஏ., பி.எல். (சார்புச் செயலாளர்).
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ, பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்).
திரு. கே. தியாகராஜன், பி.ஏ.பி.எல்.(எஸ்டேட் அலுவலர்)
திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்).
திரு. மா. சந்திரசேகரன் (தலைமை நிருபர்).

(விவாதப் பதிப்பாளர் )

திரு. ஜி. எஸ் அனந்தநாராயணன், பி.லிட்.

---

* 21—6—1980 அன்று நேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

** 6-6-1982 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பெற்ற பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1. அங்குசாமி திரு. ச. | திருவாடானை |
| 2. அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 3. அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4. அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ) |
| 5. அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6. அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7. அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ) |
| 8. அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9. அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10. அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12. அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13. அன்பழகன், திரு க. | புரசைவாக்கம் |
| 14. அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15. அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17. ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18. ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19. சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2 |
| 20. ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 21. ஆனூர் ஜெகதீசன், திரு.பு. கோ. | செங்கல்பட்டு |
| 22. இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி |
| 23. இராசகுமார், திரு. மெ. அ... | மருங்காபுரி |
| 24. இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 25. இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி |
| 26. இராசாம்பாள், திருமதி தா... | தலைவாசல் (செ.வ.) |
| 27. இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 28. இராசாராமன், திரு. எஸ். .. | பாபநாசம் |
| 20. இராசு, திரு. ஜே. எஸ். .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 39. இராசேந்திரன். திரு.எஸ்.என். | தூத்துக்குடி |
| 31. இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 32. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33. இராமச்சந்திரன், திரு. ச. | பன்ருட்டி |
| 34. இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி |
| 35. இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36. இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 37. இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38. இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39. இராமலிங்கம், டாக்டர். கே. பி. | இராசிபுரம் |
| 40. இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41. இராஜசேகரன், திரு. வே. | இராதாகிருஷ்ண நகர் |
| 42. இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43. இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44. இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46. உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47. உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48. உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 49. உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50. கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51. கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52. கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 53. கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 54. கந்தசாமி, திரு. கா. வே | கிணத்துக்கடவு |
| 55. கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56. கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57. கருணாநிதி, டாக்டர் மு. | அண்ணாநகர் |
| 58. கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59. கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60. கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61. கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 62. கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 63. கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 64. கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ.) |
| 65. காளிமுத்து, திரு. கா. | திருப்பரங்குன்றம் |
| 66. கிட்டப்பா, திரு. என். | மாயவரம் |
| 67. கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 69. கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 70. கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71. கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 72. கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73. குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74. குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 75. குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 76. குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 76. குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 78. குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79. குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80. குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 81. கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர் |
| 82. கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83. கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84. கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 85. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ.வ.) |
| 86. கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87. கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 88. சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89. சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90. சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 91. சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92. சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93. சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 94. சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 95. சபாபதி, திரு. சி. .. | அரூர் (செ.வ.) |
| 96. சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டணம் |
| 97. சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | கடையநல்லூர் |
| 98. சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் |
| 99. சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100. சிதம்பரம், திரு. சி. த. .. | காரைக்குடி |
| 101. சிவசாமி, திரு. செ. .. | இளையான்குடி |
| 102. சிவஞானம், திரு. ந. .. | திருவோணம் |
| 103. சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104. சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர் |
| 105. சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம் |
| 106. சின்னசாமி, திரு. எம். .. | கரூர் |
| 107. சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர் |
| 108. சின்னராசு, திரு. க. இரா... | கிருஷ்ணகிரி |
| 109. சின்னராசு, திரு. மா. .. | தொண்டாமுத்தூர் |
| 110. சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம் |
| 111. சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர் |
| 112. சுந்தரம், திரு. மு. .. | ரிஷிவந்தியம் |
| 113. சுந்தரமூர்த்தி, திரு. ஆர். .. | முகையூர் |
| 114. சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம் |
| 115. சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர் |
| 116. சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை |
| 117. சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். .. | போடிநாயக்கனூர் |
| 118. சுப்பிரமணியன், திரு. மா... | திருவையாறு |
| 119. சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர் |
| 120. சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121. சுவாமிநாதன், திரு. வி. வி... | புவனகிரி |
| 122. செங்கோட்டையன், திரு. கு. அ. .. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 123. செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம் |
| 124. செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 125. செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம் |
| 126. சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. .. | அரவக்குறிச்சி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 127. சேதுராமன், திரு. ஏ. எம்... | ஆற்காடு |
| 128. சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் |
| 129. சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130. சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 131. சௌந்திரராசன், திரு. கே... | திருச்சி-2 |
| 132. டாக்டர் திரு. சௌரிராஜன், கே. .. | தி. நகர் |
| 133. தங்கமணி திரு. கே. எம். | திண்டிவனம் |
| 134. தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி |
| 135. தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம்(செ.வ.) |
| 136. தங்கவேலு, திரு. பி. .. | செயங்கொண்டான் |
| 137. தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ.வ.) |
| 138. தனபால், திரு. ப. .. | சங்கரி (செ.வ.) |
| 139. தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 140. தாமரைக்கனி, திரு. இரா... | ஸ்ரீ வில்லிப்புத்தூர் |
| 141. தியாகராாசன், திரு. ஆர். .. | விருத்தாச்சலம் |
| 142. திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 143. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 144. திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி |
| 145. திருமான், திரு. இரா. .. | ஏற்காடு (செ.வ.) |
| 146 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 147 தீர்த்தராமன், திரு. ப. .. | பென்னகரம். |
| 148 துரைசாமி, திரு. பி. எஸ்... | பர்கூர். |
| 149 துரைமுருகன், திரு. .. | ராணிப்பேட்டை. |
| 150 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 151 துரைராஜ், திரு. பி. .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.). |
| 152 தேவராஜ், திரு. வி. எம். | வேலூர். |
| 153 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 154 நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு. |
| 155 நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை. |
| 156 நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு. ஆர். | ஆலங்குளம். |
| 157 நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர். |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 158 | நாராயணசாமி, திரு. கே. . . | திருவண்ணாமலை. |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி. |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி. |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய). |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம். |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம். |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லாடம். |
| 166 | பலராமன், திரு. இல. . . | போளூர். |
| 167 | பழனிசாமி, திரு. சு. . . | மேட்டுப்பாளையம். |
| 168 | பழனிமுத்து, திரு. சி. . . | ஆத்தூர். |
| 169 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம். |
| 170 | பழனிவேல், திரு. என். . . | பழனி (செ. வ.). |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர். |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு. |
| 174 | பாரமலை, திரு. க. . . | மானாமதுரை (செ.வ.). |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி. |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. வி. . . | சிவகாசி. |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. . . | சீர்காழி (செ.வ.). |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி. பி. | வேடசந்தூர். |
| 179 | பாலன், திரு. சு. . . . . | பெரம்பூர் (செ:வ.). |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. . . | சமயநல்லூர் (செ. வ). |
| 181 | பிச்சை, திரு. எம். . . | அருப்புக்கோட்டை. |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. . . | வில்லிவாக்கம். |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை, சென்னை |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி. |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. . . | தாராபுரம் (செ. வ.). |
| 186 | பெரியசாமி, திரு. ரா. . . | தொட்டியம் (செ. வ.). |
| 187 | பெருமாள், திரு. என். . . | வரகூர் (செ.வ.). |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. . . | விளாத்திகுளம். |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு. |
| 192 | மணி, திரு. டி. . . | விளவங்கோடு, |
| 193 | மணிமாறன், திரு. ஆர். . . | திருப்பூர். |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. . . | குளத்தூர் (செ.வ.). |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி-1. |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி. |
| 199 | முத்துசாமி, திரு. சு. . . | ஈரோடு. |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம். |
| 201 | முத்துவேல், திரு. என். . . | வானூர் (செ. வ.). |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. . . | கும்மிடிப்பூண்டி. |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. . . | பாலக்கோடு. |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. . . | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ. வ.). |
| 207 | யசோதா, திருமதி. டி. . . | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 208 | ரகுமான்கான், திரு. அ. . . | சேப்பாக்கம். |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். . . | சத்தியமங்கலம். |
| 210 | ரங்கசாமி, திரு. க. . . | உளுந்தூர்பேட்டை (செ. வ.). |
| 211 | ரமணி, திரு. கு. . . | கோயம்புத்தூர் (கிழக்கு. ) |
| 212 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 213 | ராஜமாணிக்கம், திரு. எம் கே. . . | முசிறி. |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல். |
| 215 | வரதராஜன், திரு. என். . . | திண்டுக்கல். |
| 216 | விசயலட்சுமி, செல்வி வி. | வீரபாண்டி. |
| 217 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில். |
| 218 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.). |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 219 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார். |
| 220 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர். |
| 221 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு. |
| 222 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு. |
| 223 | வீரானம்பலம், திரு. க. வெ. | மேலூர். |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம். |
| 225 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர். |
| 226 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர். |
| 227 | வெள்ளைச்சாமி, திரு. ஆ. | ஆத்தூர். |
| 228 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு. |
| 229 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை. |
| 230 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர். |
| 231 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 233 | ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி. |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு. |
| 235 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | (நியமன உறுப்பினர்). |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்**

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் ஏழாவது சட்டமன்றப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடர்.

திங்கட்கிழமை 1982 செப்டம்பர் 6.

ஆவணி 21 துந்துபி—திருவள்ளுவர் 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 11.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்

"ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளிஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல்"

ஒருவனுக்குப் புகழைத் தருவது ஊக்க மிகுதியேயாகும். ஊக்கம் இல்லாமலே வாழலாம் என்று ஒருவன் எண்ணுவது, அவனுக்கு இழிவை உண்டாக்கும்.

### (1) இரங்கல் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் ஏ. குப்புசாமி நாயுடு, சா. கணேசன், ஏ. பி. சி. வீரபாகு, தி. பொன்னுமலை ஆகியோர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. ஏ. குப்புசாமி நாயுடு அவர்கள் 24-6-1982 ஆம் தேதியன்றும், திரு. சா. கணேசன் அவர்கள் 28-7-1982 ஆம் தேதியன்றும், திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்கள் 13-8-1982 ஆம் தேதியன்றும், திரு. தி. பொன்னுமலை அவர்கள் 30-8-1982 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. குப்புசாமி நாயுடு அவர்கள் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952ஆம் ஆண்டு வரை காஞ்சிபுரம் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

1908 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 5 ஆம் தேதியன்று காரைக்குடியில் பிறந்த சா. கணேசன், இளம் வயதிலேயே தன்னை தேசிய இயக்கத்தில் ஈடுபடுத்திக்கொண்ட விடுதலைப் போராட்ட வீரர். இதன் காரணமாக மூன்று முறை சிறைப் படுத்தப்பட்டார். 1941 ஆம் ஆண்டு நடந்த தனிநபர் சத்தியாக்கிரகம், 1942 ஆம் ஆண்டு நடந்த ஆகஸ்ட் போராட்டம் ஆகியவற்றில் பங்குகொண்டு முறையே 6 மாதம் மற்றும் 2 ஆண்டுகள் அவர் சிறைத்தண்டனை பெற்றார்.

தேசிய இயக்கத்தில் இருந்தபோது நூற்பு இயக்கங்கள் உட்பட பல்வேறு நிர்மாணத் திட்டப் பணிகளை நடத்திய பெருமையும், சர்வோதய சமாஜம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் பொதுமக்களுக்கு நூற்பு பற்றிய வகுப்புகளை நடத்திய சிறப்பும் இவருக்கு உண்டு 1957 ஆம் ஆண்டு காங்கிரசிலிருந்து விலகி, 1959-ஆம் ஆண்டு சுதந்திராக் கட்சியில் சேர்ந்தார். பிறகு 1960 ஆம் ஆண்டிலிருந்து 1969 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சுதந்திராக் கட்சியின் தலைவராகவும் பணி புரிந்தார். சட்டமன்றப் பேரவையிலும் 1962 முதல் 1967 வரை அக் கட்சியின் தலைவராக இருந்து தனது கருத்துக்களைத் தெள்ளத் தெளிவாகவும், அணித்தரமாகவும் விளக்கி வந்தார், எல்லா தரப்பு உறுப்பினர்களின் மரியாதையையும் பெற்று சிறந்து விளங்கினார். காரைக்குடியில் அழகப்பா செட்டியார் கல்வி அறக்கட்டளை நிறுவப்பட்டபோது, அவ்வறக் கட்டளையின் கீழ் உள்ள கல்வி நிறுவனங்கள் அனைத்திற்கும், நிறுவனர்-அறங் காவலராக இருந்து கல்வி வளர்ச்சியிலும் தனது பணியைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளார்.

திரு. சா. கணேசன் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றும், மற்றும், 1968 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு வரை மாநிலச் சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

விடுதலைப் போராட்ட வீரராக விளங்கிய இவர், தமிழ்த் தொண்டிற்காகவும் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டவர். இவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு தமிழ் மக்கள் என்றென்றும் நினைவு கூறத்தக்கதாகும். 1938 ஆம் ஆண்டு காரைக்குடியில் கம்பன் கழகம் நிறுவி அதன்மூலம் ஆண்டு தோறும் கம்பனுக்கு விழா எடுத்துக் கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும் பணியில் தமது இறுதிக் காலம் வரை அவர் ஈடுபட்டிருந்தார். கம்பன் மீது கொண்ட பற்றின் காரணமாக தமது பெயரையே ‘கம்பன் அடிப்பொடி’ என்றும் அவர் மாற்றிக்கொண்டார். கம்பன் படைத்தளித்த காவியத்தையும் அதன் தொடர்புடைய பிற இலக்கியங்களையும் ஆழ்ந்து கற்றுச்சிறந்த புலமை உடைய வராக விளங்கினார். பன்னூற்றாண்டுகட்குப் பின்னர் தமிழ் நாட்டில் பட்டிமன்றத்தை மீண்டும் தொடங்கி வைத்தார்.

தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் உறுப்பினராக இருந்து பணி யாற்றிய அவர் தமது வாழ்நாளின் பெரும் பகுதியைத் தமிழ் வளர்ச்சிக்கும், கல்வெட்டு ஆராய்ச்சிப் பணிக்கும் பயன் படுத்தினார். முதல் உலகத் தமிழ் மாநாட்டின் தொல்பொருள் கண்காட்சிப் பகுதியினை மிகச் சிறப்பாக அமைத்தவர்.



மலேசியா, பாரீஸ் ஆகிய இடங்களில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது தமிழகத்தின் சார்பில் அம்மாநாடுகளில் அவர் பங்கு கொண்டுள்ளார். தமிழ்ச் சங்கம், தமிழ் வெளி யீட்டுக் கழகம், மாநில தொல்பொருள் ஆராய்ச்சித் துறை ஆகியவற்றிலும், மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆலோசனை மன்றம், பேரவை, படிப்பு மன்றம், கல்வி வாரியம், கலைத் துறை ஆகியவற்றிலும் சீரிய பணியாற்றினார். பிறருடன் கூட்டாகவும், தாமே தனியாகவும் பணிபுரிந்து பல தமிழ்க் காப்பியங்களையும், பல இலக்கிய நூல்களையும் தொகுத்து வெளியிட்டு உள்ளார். கலை, கட்டிடக் கலை இவற்றில் ஈடு பாடும், தமிழ் ஆராய்ச்சி, தொல்பொருள் ஆராய்ச்சி ஆகிய வற்றின் மேம்பாட்டில் ஆழ்ந்த நாட்டம் உடையவராக இருந்தார். திரு. சா. கணேசன் தமிழுக்கும் இலக்கியத்துக்கும் செய்த சேவை என்றென்றும் தமிழ் கூறும் நல்லுலகம் மறக்க முடியாததாகும்.

திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்கள் 1957 ஆம் ஆண்டி லிருந்து, 1962 ஆம் ஆண்டுவரையும், மற்றும் 1962 ஆம் ஆண்டி லிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும், திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அவர்கள் நெல்லை மாவட்ட காங்கிரஸ் தலைவராகப் பல ஆண்டுகள் பதவி வகித்துள்ளார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும், தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவராகவும் இருந்துள்ளார். தூத்துக்குடியில உள்ள வ.உ.சிதம்பரனார் கல்லூரி நிறுவனர்களில் ஒருவராகவும் அக்கல்லூரியின் நிர்வாகக் குழுச் செயலாளராகவும் இருந்துள்ளார். கூட்டுறவு இயக்கத்தில மிகவும் ஈடுபாடுள்ள அவர் சவுத் இந்தியா பாங்க் தலைவராகவும் மற்றும் தென்பாரத இந்தி பிரசார சபையில் துணைத் தலைவராகவும் செயலாற்றி வந்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திருமதி. பொன்னுமலை அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையும் இரு முறை சேலம் மாவட்டம் பனமரத்துப் பட்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சேலம் மாவட்டத்தில் 1957 ஆம் ஆண்டு நெல் சாகுபடி போட்டியில் ஏக்கர் ஒன்றுக்கு 7,750 பவுண்டு நெல் சாகுபடி செய்து முதல் பரிசு பெற்ற சிறந்த விவசாயியாகத் திகழ்ந்தார்.

அன்னார்கள் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார்கள். அன்னார்களின் மறைவு குறித்து அவர் களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத் தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

## 2. அறிவிப்புகள்.

### (அ) தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலை கழகப் பேரவையில் (செனட்) ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி பகுதிவாரி அடிப்படையில் (Proportional representation) இத்தேர்வு நடைபெறுவதில்லை.

எனவே வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 8-9-1982 புதன்கிழமை மாலை 3.00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 9-9-1982 வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 10-9-1982 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது இரண்டு இடங்களுக்கு மேற்படுமாயின் 11-9-1982 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்குமிடையே, சென்னை கோட்டையிலிருக்கும் பேரவை குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை, இப்பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairman). நியமிக்கிறேன்:

1. திரு. க. பாலசுப்பிரமணியம்
2. திரு. ஆர். டி. கோபாலன்
3. திரு. ப. பொன்னுரங்கம்
4. திருமதி தா. இராசாம்பாள்
5. திரு. கு. ரமணி



### (இ) எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1982

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(முற்பகல் 11.10)

## 3. தகவல் கோரல்.

### பத்திரிகை நிருபர்கள் கறுப்புச்சின்னம் அணிந்திருப்பது

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் நடைபெறுகின்ற எந்த நிகழ்ச்சியானாலும் அதைச்சபைக்குத் தெரிவிப்பதுதான் நாம் வழக்கமாக கடைபிடித்து வருகிற முறை. இன்றையதினம் 'பிரஸ் ரிப்போர்ட்டர்ஸ்' கறுப்புச் சின்னம் அணிந்து வந்திருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, பிரஸ் ரிப்போர்ட்டர்ஸ் தங்களுடைய அனுமதியின் கீழ் வருகிறார்கள். தமிழ்நாடு அரசாங்கம் பத்திரிகை சுதந்திரத்தை அடக்குவதற்கு சட்டம் கொண்டு வந்து, அதை நிறைவேற்றுவது கண்டிக்கிற வகையில் இருக்கிறது என்று பத்திரிகையிலே படித்திருக்கிறோம். அது உண்மைதானா? அவர்களுக்கு என்ன குறை இருக்கிறது என்பதைக் கேட்டு அவைக்குத் தெரிவிக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. ஏதாவது குறைகள் இருக்கிறதா என்பதைக் கேட்டு அரசாங்கத் தரப்பிலே ஸ்டேட்மென்ட் வைத்தாலும் வைக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகை நிருபர்கள் சபையில் பத்திரிகைக் குறிப்புகளை எடுக்கிறவர்களே தவிர அவர்கள் சபையின் அங்கமாக இல்லை. அவர்களுக்கு இருக்கிற குறை பற்றி உறுப்பினர்கள்தான் தெரிந்து சொள்ள வேண்டும்.

திரு ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, பத்திரிகையின் நிருபர்கள் அவையின் அங்கத்தினர் அல்ல; எலெக்டட் மெம்பர்ஸ் தான் இங்கே வரமுடியும். அவையினுடைய நடவடிக்கைகளைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாடு முழுவதும் அனுப்புவதற்கு 'மெயின் இன்ஸ்ருமென்ட்' பிரஸ். அவர்களுக்கு 'கிரிவன்ஸ்' இருக்கிறது என்கிறபோது அவற்றை ரிசால்வ் செய்வது இந்த அவையினுடைய கடமை. உங்களுடைய கவனத்திற்கு வரவில்லை என்றாலும் எங்களுக்குத் தெரிய வந்ததை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

---

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே நடந்து முடிந்தஒரு பிரச்னை அது தீர்மானிக்பட்டு அமலாக்கப்பட்டிருக்கிறது. அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறதா? ஏன் செயல்படுகிறது? எபபடி செயல்படுகிறது? என்பதெல்லாம் வழக்கு மன்றம் வரையில் கூட சென்று விட்ட ஒன்று. அது குறித்து சபாநாயகரோ அல்லது அங்கத்தினர்களோ விளக்கம் பெறவேண்டுமென்று விரும்பினார்களானால் அதைத் தனியாக ஏதாவது ஒரு வகையில் கொண்டு வருவதுதான் சரியாக இருக்குமே தவிர, இப்படி சந்தேகத்தைக் கிளப்பி, அது எதற்காக, ஏன் என்று தெரியாதது போல் கேட்டு அதைக் குறிப்பேட்டிலே கொண்டுவர முயற்சிப்பது சரிதானா என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அரசாங்கம் அதை இப்போது வேண்டுமானாலும் 'வித்-டிரா' பண்ணிக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே இந்தச் சபையிலே இந்த மசோதா வந்து நிறைவேறி நடைமுறைக்கு வந்திருக்கிற மசோதா. இதிலே திருப்தி, அதிருப்தி என்பது வேறு விவகாரம். அதைத் தனிப்பட்ட ஒரு முறையில் கொண்டு வந்து விவாதித்தால் அதை விவாதிக்கத், தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதுபற்றி பிரச்சினையில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, அது பாஸ் பண்ணப்பட்டது என்பது ஒரு பாயின்ட். அதிலே எதுவும் குறுக்கே நிற்காது. ஒரு ஸ்டேஜிலே நாடு பூராவும் அதை எடுக்க வேண்டுமென்று கூறுகிற போது அரசாங்கம் அதை வித்-டிரா பண்ணுவதிலே எதுவும் குறுக்கே நிற்கவில்லை. ஆகவே அந்த பொசிஷன் தான் வந்திருக்கிறது. ஆகவே அரசாங்கம் நாட்டினுடைய, பிரஸ்ஸினுடைய, பப்ளிக்கினுடைய 'ரீ-ஆக்ஷன்களை' பார்த்து அதை வித்-டிரா பணணலாம், 'Nothing siands agains it'.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரும்பப்பெறுவது என்பது ஒருவேளை மக்கள் விருப்பத்தின் அடிப்படையிலே அரசு ஏற்பது என்பது சிலநேரங்களில் இயல்பாகவும் ஆகிவிடலாம். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இது வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறது. சில இடங்களில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. அவைகள் எல்லாம் சரியான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு முன்பு இதுபற்றி விவாதிப்பது என்பது சரியல்ல. ஆகவே அவர்கள் கறுப்பு அடையாளச் சின்னத்தை அணிந்து வந்திருக்கிறார்கள் என்பதை வைத்துக் கொண்டு, சபாநாயகர் கவனித்தாரா இல்லையா என்பதை பிரச்சினையாக்கி இதைக் குறிப்பேட்டிலே ஏற்றுவது நியாயமல்ல என்பதுதான் என்னுடைய கோரிக்கையாகும்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதம் 3-ஆம் தேதியன்று ஒரு பத்திரிகை கூட அகில இந்திய அளவிலே வெளிவரவில்லை. (குறுக்கீடு) 'அண்ணா'' பத்திரிகை வந்திருக்கலாம்.





மாண்புமிகு திரு. எம். ஜி இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ பத்திரிகை வெளிவந்திருந்கிறது.

திரு. என். வி. என். சோமு: பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு எழுந்திருக்கின்றபுதிய சூழ்நிலையில் பெரும்பாலான பத்திரிகைகள் 100-க்கு 99 சதவிகிதம் பத்திரிகைகள் அன்றைய தினம் வெளிவரவில்லை. இப்படிப்பட்ட புதிய சூழ்நிலை எழுந்திருப்பதால், இந்த நேரத்திலேயாவது பத்திரிகைகளின் உணர்ச்சிகளை மதித்துத் தாங்களாவது விசாரித்திருக்கலாம்.

Pen is mightier than sword

அதைத் தாங்கள் மனதில் கொண்டிருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில நான் விசாரிக்கின்ற வேலை என்பது இல்லை. அவரவர்கள் ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். அவரவர்களுடைய எண்ணத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை விசாரிக்க வேண்டிய வேலை கிடையாது. ஏற்கனவே இந்த மன்றத்தில் இந்த மசோதாவிற்காகச் சில நாட்களேகூட விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஏராளமாக விவாதிக்கப்பட்டிருககிறது. குறிப்பேடுகளைப் பார்த்தால் இது தெரியும். மாண்புமிகு உறுப்பினர்கள் கவனப்படுத்திப் பார்த்தாலும் இது தெரியும். ஆகவே சட்டமாக்கப்பட்டு விட்டது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னதைப் போல இது வழக்குமன்றத்தில் இருக்கின்ற விவகாரம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே. மாண்புமிகு முதலமைச்சரவாகள் சொன்னதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வாபஸ் பெறுவதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லாமல் ஜனங்கள் கேட்டால் வித்ட்ரா செய்கிறோம். ஆனால் சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது என்ற காரணத்தைக் காட்டுவது சரியாக இல்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, சில நேரங்களில், சில பிரச்னைகளில் மக்களுடைய எண்ணத்திற்கு மதிப்பு கொடுப்பதென்பதுபற்றிக் குறிப்பிட்டேனே தவிர, இந்தப் பிரச்னையில் நாங்கள் வாபஸ் வாங்குவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று குறிப்பிடவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, வழக்குமன்றத்தில் இருப்பதாகக் காரணங் காட்டி வாபஸ் வாங்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல,

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிற கேஸை அரசாங்கம் வித்ட்ரா செய்வது என்றால் செய்யலாம்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இது சம்பந்தமான நடவடிக்கைகள் அவைக்குறிப்பிலே இருக்கக்கூடாது என்பதுமாதிரி முதலமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அது சரியல்ல. இந்த

விஷயத்திலே நாங்கள் உள்ளேபோய் விவாதிக்கவில்லை. எனவே, இதுவரைக்கும் இதுகுறித்துப் பேசியது அவைக் குறிப்பில் இருக்க வேண்டும், அவைகளை நீக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசியிருக்கிறார்கள். உங்களுடைய கருத்தை அவர்களிடத்தில் சொல்லிப் பேசச் சொல்லியிருக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது என்பது ஒரு காரணம் ஆகாது. முதலமைச்சரவர்களுக்கு உங்கள் மூலமாக நினைவுபடுத்த விரும்புகிறேன். கோர்ட்டிலே இருக்கும் கேஸை அரசாங்கம் நினைத்தால் வாபஸ் வாங்க முடியும். நாராயண சாமி நாயுடு மீது இருந்த கொலை முயற்சி வழக்கு வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது. அண்ணா சதுக்கத்திற்கு முன்னாலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் விவாதத்தை ஆரம்பித்து விடுகிறார்கள். முதலமைச்சரவர்களைத் தனியாகப் பார்க்கும்பொழுது இதுபற்றி அவர்களிடத்தில் உறுப்பினரவர்கள் பேசலாம். இப்பொழுது இந்தப் பிரச்னை இத்துடன் முடிவடைகிறது. சொல்ல வேண்டிய அளவிற்குச் சொல்லியாகிவிட்டது.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) எதிர்பாராச்செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன். நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள், ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை'' இங்கே அறிமுகம் செய்திருக்கிறார்கள். இதற்கு நான் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்றால், ஏற்கனவே தமிழ்நாடு அரசினுடைய எதிர்பாராச் செலவுக்காக 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-20)

ஆனால் இந்த 50 கோடி ரூபாயை இப்போது 100 கோடியாக உயர்த்த நீங்கள் அனுமதி கோரியிருக்கிறீர்கள். நான் இங்கே சொல்ல விரும்புவது, எதற்காக இந்த 50 கோடி ரூபாயை



இன்னும் உயர்த்தி 100 கோடி ரூபாயாக ஆக்கி இருக்கிறீர்கள் என்று சொன்னால், ஏற்கனவே பள்ளிக் கூடங்களில் 2 வயது முதல் 10 வயதுள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு போடுவதற்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையினாலே இந்த 50 கோடியைக் கேட்டிருக்கிறீர்கள். நான் சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாக நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது இந்தச் சத்துணவுத் திட்டம் என்பது எதிர்பாராத செலவினங்களில் அடங்கக்கூடியது அல்ல. ஏற்கனவே பட்ஜெட்டில் சொல்லப்பட்டு, 100 கோடி வரைக்கும் இதற்குச் செலவு ஏற்படும் என்ற கருத்து பேசப்பட்டது. நீங்கள் பட்ஜெட்டிலே ஒதுக்கி இருக்க வேண்டும் அல்லது ஒதுக்கப்போகிறோம் என்று உத்திரவாதம் தந்திருக்க வேண்டும். ஆனால் பட்ஜெட்டரி புரொவிஷன் இல்லாமல் வெறும் அட்ஹாக் அலாட்மென்ட் மூலமாகவே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நிதி அமைச்சர் அவர்கள் அந்த பில்லை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறார்கள். இதை அப்போஸ் பண்ணும்போது ஆர்குமென்ட் தேவை இல்லை. ஏன் அப்போஸ் செய்கிறேன் என்பதை மட்டும் சொல்லி, பின்னர் சட்ட முன்வடிவு விவாதத்திற்கு வரும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பில்லைப்பற்றி விரிவாகப் பேசி விளக்கம் பெறலாம்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, அப்போஸ் ஏன் பண்ணுகிறேன் என்று சொல்வதற்கு எனக்கு ரைட் இருக்கிறது. காரணத்தைச் சொல்ல அனுமதியுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் இப்போது அறிமுகம் செய்ய அனுமதி கோரியிருக்கிறேன். சட்டத்தைக் கொண்டு வரப்போகிறோம். அப்போது முழு விஷயங்களையும் முழுக் கருத்தையும் தெரிவிக்கலாம். அதற்கு வாய்ப்பிருக்கிறது. காரண காரிய விளக்கங்களைத் தெரிவிக்கலாம். அந்தச் சட்டத்தை நாளையோ, நாளை மறுநாளோ கொண்டு வருகிறபோது விவாதிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக்குழுவிலே கூட இந்தச் சட்ட திட்டங்களைப் பற்றிதான் பேசப்போகிறோம். பில்லில் பேச உங்களுக்கு நிறைய நேரம் இருக்கிறது. அப்போது நீங்கள் தாராளமாக சாங்கோபாங்கமாகப் பேசலாம்.

திரு. அ. ரகுமான்கான்: It is my right-என்னுடைய கிரவுன்ட்ஸ் என்னவென்று நான் சொல்கிறேன். முக்கியமான பாயின்ட். கன்டிஜென்டிலே இந்தத் தொகை ஒதுக்குவதனாலே அதை மிஸ்யூஸ் செய்வதற்கு வழி இருக்கிறது. பட்ஜெட்டெரி புரொவிஷனிலே இருக்க முடியாது. நீங்கள் அதை பட்ஜெட்டிலே ஒதுக்கி இருக்கவேண்டும். ஒதுக்கவில்லை. அட்ஹாக் அலாட்மென்ட் பெற முடியாது. அவர்கள் ஏற்கனவே சொல்லி இருக்கிறார்கள். 1400 கோடி ரூபாய் ஸ்டேட்மென்ட் எக்ஸ்பென்டிச்சர் இருக்கிறது, ஏலக்ட்ரிசிட்டிபோர்டுக்குக் கொடுத்திருக்கிறோம், விவசாயத்திற்குக் கொடுத்திருக்கிறோம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் டீட்டெயில்ஸுக்குள்ளே போகாதீர்கள்.

திரு. அ. ரகுமான்கான் : இல்லை, டீடெயில்ஸ்க்குள்ளே போகவில்லை. 2 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். என்ன காரணம் என்று சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அறிமுகப்படுத்த அனுமதிதான் கோரப் பெறுகிறது. நாளையோ, நாளைய மறு தினமோ விவாதத்திற்கு இந்தச் சட்ட முன்வடிவு வரும்போது நீங்களே முதலில் பேசும் பேச்சாளராக இருந்து சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான் : It is my right. நான் அப்போஸ் பண்ணுவதற்கு ரைட் இருக்கிறது. அதை கர்ட்டெயில் பண்ணாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்லிமெண்டிலே ஒரு பில்லை அறிமுகப்படுத்தும் கட்டத்தில் எதிர்ப்பவர்தான் இன்ன காரணத்தால் எதிர்க்கிறேன் என்று சொல்லலாம். பிறகு ஓட்டெடுப்புதான். பில்லுக்குள் சென்று பேச அனுமதிக்கப்படுவதில்லை; பில்லை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போதுதான் விரிவாகப் பேச முடியும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, அப்போஸ் பண்ணுகிற சமயத்திலே சில கிரவுண்ட்ஸ்களை, அதாவது பில் அன்கான்ஸ்டிடுயூஷனல் என்று சொல்லலாம். He can say that the Bill is outside the purview of the Constitution. The member should not take much time. He must be brief.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏன் இன்ட்ரடியூஸ் பண்ணக் கூடாது என்பது வேறு. ஆனால், he is going into details of the Bill.

திரு. அ. ரகுமான்கான் : நான் டீட்டெயில்ஸ்க்குள் போக மாட்டேன் சார்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இந்த பில் அன்–கான்ஸ்டிடுஷனல் என்று சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாராளமாக உரிமை இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, my humble submission, Sir, ஒரே ஒரு பாயின்ட். நமது நிதி அமைச்சர் அவர்கள் அரசுக்கு 1,400 கோடி வருமானம் என்று சொல்லி, அதற்குப் பணியாளர்களுக்கு கொடுக்கவேண்டியது 640 கோடி, மின்வாரியத்திற்கு உதவி செய்வதற்கு 146 கோடி, போக்குவரத்துத் துறைக்கு கொடுக்கவேண்டியது 12 கோடி, விவசாயக் கடன் ரத்துகளுக்கு 120 கோடி, குடிமைப்பொருள் துறைக்கு 45 கோடி, இப்படி எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அரசினுடைய மொத்த வருமானத்திலே, இப்படிச் செலவினம்





வருவதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் புள்ளி விவரத்தை தந்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன, பட்ஜட்டரி புரொவிஷன் இல்லாமல், பட்ஜெட்டிலே ஒதுக்காமல் வெறும் பரிசுத்திட்டத்தின் மூலம், கட்டாயப்படுத்தித் தனி நபர் நன்கொடை மூலமும் அட்ஹாக் அலாட்மென்ட் மூலமும், இந்தத் திட்டத்தை எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள். நிறைவேற்றத்தான் வேண்டும் என்பது நோக்கம். நாளைக்குப் பிரச்சாரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இதற்கு எதிராகப் போகிறது என்று சொல்ல கூடாது. நான் சொல்லிக்கொள்ள விரும்புவது இது ஒரு தேர்தல் காலத்து ஏற்பாடாக இருக்கிறதே தவிர வேறல்ல. நீங்கள் பட்ஜட்டிலே ஒதுக்கியிருக்கிறீர்களா, அல்லது ஒதுக்கப்போகிறீர்களா? எப்படி ஒதுக்கப்போகிறீர்கள்? இங்கே போட்டிருக்கக்கூடிய கணக்கின் அடிப்படையிலே உங்களுக்குத் தொகை எப்படி வரும்? தலைமைச் செயலாளர் திரு. திரவியம் சொல்கிறார், டில்லியிலே கேட்கமாட்டோம் என்று. நீங்கள் கடிதம் எழுதி இருப்பதாகச் சொல்லுகிறீர்கள். ஆகையினாலே இதை ஒரு துவக்கவிழாவாகக் காட்டி, ஓட்டுகளை வாங்குகிற ஒரு முயற்சியாக செய்த பிறகு..

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதை எங்கோ கொண்டு போய் நண்பர் ரகுமான்கான் அவர்கள் நிறுத்தியிருக்கிறார்கள். ஓட்டு வாங்குவதற்காக என்று சொல்லி இதை திசை திருப்பி விடுவதை நான் எதிர்க்கிறேன். இதைத் தொடங்கியதற்கான காரணங்களையும் நாங்கள் விளக்கமாக கூறியிருக்கிறோம். ஓட்டு வாங்குவதற்கு நேரம் எப்போது என்பது அவர்களுக்குத் தெரியும். எங்களுக்கும் தெரியும். இது மக்களுக்குத்! தெரியும். யாருக்கு ஓட்டளிப்பது என்பது மக்களால் விரைவிலே நிரூபிக்கப்பட இருக்கிறது.(மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே அவர்கள் இதைச் சொல்லுவதால் மட்டுமே ஏதோ நான் வெற்றிகரமாக ஒரு செய்தியைச் சொல்லிவிட்டு அதை விளம்பரப்படுத்த முயன்று அதில் வெற்றி பெறுவதாக நினைக்கவேண்டாமென்று உங்கள் மூலமாக நான் சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் கூறிய காரணங்களைச் சொல்லி சட்டத்திலே இடமில்லை என்றாலும் உங்களுடைய உத்தரவுக்கு கீழ்ப்படிய நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் வேண்டும் என்றே அவர்கள் தன்னுடைய இயற்கையான குணத்தை—நான் குற்றம் சொல்ல மாட்டேன்—அவருடைய திறமையை இப்படி பயன்படுத்தக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இதற்காகத்தான் சொன்னேன். இந்த விவாதத்தை அனுமதிக்கக் கூடாது என்று.

திரு. ரா. உமாநாத்: இந்த contingency fund–ஐ by an ordiance increasee செய்ததை ஒட்டித்தான் இந்த பில் வருகிறது. ஆர்டினன்ஸ் மூலமாக கன்டின்ஜென்சி பன்டை இன்கிரிஸ் பண்ணுவது என்ற முறையே தப்பு. நான் அப்ஜெக்ட் பண்ணுகிறேன், அந்த பேசிஸ்லே இதற்கு இன்ஸ்ரோடக்ஷன் அனுமதிக்கக்கூடாது, என்று, எக்ஸ்பிளனேட்டரி மெமொ

ராண்டம் பார்த்தோம். அந்த மெமொரண்டம் படி பார்த்தால் There is a case for regular session with supplementary Budget. அதற்கும் அப்படி என்று சொன்னால், இன்னின்ன ஐயிட்டத்திற்கு இந்தமாதிரி செய்ய வேண்டியிருக்கிறது என்று எக்ஸ்பிளனேட்டரி நோட் பார்க்கும்போது செஷன் கூடி அதைச் செய்யாமல், பட்ஜெட்டாக வைத்துக்கொண்டு கவர்ன்மென்ட் எடுக்கக்கூடிய முறையே இந்த மாதிரி இத்தனை குரோர்ஸ் இன்க்கிரிஸ் பண்ணுவது, இன் பிரின்சிபிள் இதை நான் சட்டபூர்வமாக கிளப்பவில்லை. பார்லிமென்டரி புரோசீஜர் சரியில்லை, இது மாதிரி கன்டின்ஜென்சி பண்டையே இன்கிரிஸ் பண்ணுவது by promulgation of an ordinance என்பது most undemocratic ஆகவே, அதை அனுமதிக்கக் கூடாது என்று நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட விளக்கங்கள் சொல்ல நான் இந்த வாய்ப்பை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் அவசரச் சட்டத்தின் மூலமாக எதிர்பாராச் செலவு நிதிக்கு, அவசரச் சட்டத்தின் மூலமாக ஒதுக்கீடு செய்வது என்பது முன் மாதிரியாக பல சமயங்களில் இருந்திருக்கிறது. விவாதம் வருகின்றபோது அதற்கான விளக்கங்கள் எல்லாம் நான் தருகிறேன். ஆனால் இந்த எதிர்பாராச் செலவு நிதி மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு, சட்டப்படி, முறைப்படி, நியாயப்படி, சட்டத்திற்குப் புறம்பாகாத வகையில் அறிமுகம் செய்ய அனுமதி வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறை) மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு முறை) திருத்த சட்டமுன்வடிவு, 1982,

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982—ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறை) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இச்சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** இச்சட்ட முன் வடிவு பேரவைமுன் அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 11.30)

**(இ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1982**

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்,

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே நான் இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன். காரணம் நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து இந்த மன்றத்தில் இப்படிப்பட்ட சட்டமுன்வடிவை அறிமுகம் செய்து நிறைவேற்றி, தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீடித்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்த விற்பனை அங்காடிகளை ஒழுங்கு படுத்துவதற்கோ அல்லது அவற்றை ஒழுங்காக நடத்துவதற்கோ எந்த வழிமுறையையும் ஏற்படுத்த இதுவரையிலும் முன்வரவில்லை. அவற்றின் அமைப்பு விதித்துறைகளில் மேற்கு வங்காளம், அஸ்ஸாம், இமாச்சலப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் செயலில் உள்ள சட்டங்களுக்கு ஏற்ப விரிவான திருத்தங்களைச் செய்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்ற ஒரே காரணத்தை தேசீய கீதத்தை இசைப்பதுபோல் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த தனி அலுவலர்களின் நியமனத்தைத் தவிர்ப்பதற்கும் அங்கே தலைவர் தேர்வு நடத்துவதற்கும் ஏன் இந்த அரசு தயக்கம் காட்டுகிறது என்பது தெரியவில்லை. ஆகவே நான் இதை எதிர்க்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்:

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**(ஈ) வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.**

**மாண்புமிகு திரு. சி, பொன்னையன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5: அரசினர் தீர்மானங்கள்.

(அ) அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேரவை விதி 30 (3)-ன் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

“இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4 ‘தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீது விவாதம்’ என்பதனை ஒத்தி வைத்து, இனம் 5 அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்பதனை எடுத்துக் கொள்ளபெற வேண்டும்.”

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது,

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) கூட்டுறவுச் சங்கங்கள்* (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1982

மாண்புமிகு திரு. சி, பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

“தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்து, மேற்படி சட்ட முன்வடிவு *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்”

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது, இப்போது அலுவல் வரிசையில் மாற்றம் செய்யப்பட்டு, இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்து, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும் என்று சொல்வதால், இதன் மீது உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு சிரமமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் குறித்து ஒரு ‘காம்ரஹென்சிவ் ஆக்ட்’ கொண்டுவர இருப்பதால், அதையும் படித்துப்பார்த்துவிட்டு, இந்தச் சட்டமுன்வடிவின் மீது கருத்துக்கள் கூறுவது பொறுத்தமாக இருக்கும்,

*1982, ஆகஸ்ட் 31 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவிற்கிணங்க அலுவல் வரிசையில் மாற்றம் செய்யப் பெற்றுள்ளது.

திரு. அ. ரகுமான்கான்: இந்த முடிவு அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்டது என்று இருந்தபோதிலும், உறுப்பினர்கள் இதன் மீது கருத்துக்கள் தெரிவிப்பது இயலாத காரியமாக இருக்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்பெஷல் ஆபீசர்கள் குறித்தும் பேசவேண்டியிருப்பதால் அது குறித்து முழுமையாகப் பேசமுடியாது என்பதால் இதைத் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் ஏதாவது விளக்கம் அளிப்பதாக இருந்தால் அளிக்கலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எழுப்பியிருப்பது ஒரு முக்கியமான பிரச்சனை. அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்த மாற்றங்கள் சில இருந்தாலும், உறுப்பினர்களுக்கு கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டும். குறைந்த பட்சம் ஒரு மணி நேரமாவது அவகாசம் கொடுத்தால்தான் அவர்கள் பிரேபே செய்து, சட்ட முன்வடிவின்மீது கருத்து சொல்ல வசதியாக இருக்கும், உறுப்பினர்கள் எல்லாம் இன்றைக்கு மின்சார வாரிய அறிக்கைமீது விவாதம் வரும் என்று கருதி, அதற்குத் தயாராக இருந்தார்கள். அதை ஒத்திவைத்து, திடீரென்று பில்லின்மீது கருத்துச் சொல்ல வேண்டுமென்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கூட்டுறவுச் சட்டம் சம்பந்தப்பட்ட பில் இது என்று கருதுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். இது கூட்டுறவுச் சட்டம் சம்பந்தப்பட்ட பில் அல்ல. தனி அலுவலர்கள் சம்பந்தப்பட்ட பில் இது. அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி கூட்டுறவுச் சட்டம் சம்பந்தப்பட்ட பில் தற்போது எடுத்துக்கொள்ளப்படவில்லை,

திரு. அ. ரகுமான்கான்: தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கும் சட்டம் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், கூட்டுறவுத் துறையில் தனி அதிகாரிகள் அதிகாரத்தை நீக்கிவிட்டு, சீக்கிரமாக ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும் என்ற முறையில் இருக்கிற பிரச்சனைகளை எடுத்துச்சொல்ல அவகாசம் தேவைப்படுகிறது, இதை எல்லாம் ஒரே நிமிஷத்தில் முடிவு செய்து சொல்லிவிட முடியாது,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே இதுபற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்களின் கவனத்திற்கு இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மசோதா வரும் என்பது உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே தெரியும். யாருக்குத் தெரியவில்லை என்றாலும் திரு. ரகுமான்கான் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கூட்டுறவுத் துறையைப் பற்றித் தெரிந்தவர்கள் இதுபற்றி பொதுவான கருத்துக்களை எடுத்துச்சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான்: பொதுவான கருத்துக்களை மேடையில் பேசலாம்; ஆனால் சட்டமன்றத்தில் பேச முடியாது.

மாண்புமிகு திரு, சி. பொன்னையன்: தலைவரவர்களே, கூட்டுறவுச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு, அங்கே ஆழமாக ஆய்வு செய்யப்பட்டு, கமிட்டி அறிக்கை கிடைக்கப்பெற்று, அந்த பில்லும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படக்கூடிய அளவில் இருந்தது. ஆனால் அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி அந்த மசோதா ஒத்திவைக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் இல்லாத அளவுக்கு ஒரு புதிய சட்டம் கொண்டுவரப்பட்டு, செலக்ட் கமிட்டியின் பரிந்துரைகளை ஏற்று, புதிய திருத்தங்கள் பலவற்றைக் கொண்டுவரவேண்டியிருப்பதால் அதுபற்றி விவாதிக்க 2, 3 தினங்களுக்குமேல் ஆகும் என்று கருதுவதால் அதை இப்போது எடுத்துக்கொள்ள வேண்டாம்; பிறகு எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறோம். அதற்கு இடைப்பட்ட காலத்தில் ஏற்கெனவே இருக்கிற தனி அதிகாரிகள் அந்த அமைப்புகளின் நிர்வாகங்களை நடத்த வேண்டியிருப்பதால் அதற்கு ஆர்டினன்ஸ் பிறப்பிக்கப்பட்டு, அது இப்போது சட்ட முன்வடிவாக வந்திருக்கிறது. அதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம்.

*திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களின் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்ற இந்த மசோதா ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே பலமுறை கொண்டு வரப்பட்டிருப்பதை போலதான் இன்றைய தினமும் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் இதை வன்மையாகக் கண்டிக்கிறோம். இன்றையதினம் தமிழகத்தில் ஊராட்சிகளானாலும் சரி, ஊராட்சி ஒன்றியங்களானாலும் சரி, கூட்டுறவுத்துறையிலே இருக்கிற பிரதம நிலவள வங்கிகளானாலும் சரி, தாலுகா மார்க்கெட்டிங் சொசைட்டிகளானாலும் சரி— இப்படி பல்வேறு ஜனநாயக அமைப்புகள் இன்றைக்கு தனி அதிகாரிகளின் தலைமையில் சீரழிந்து கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் இந்த அரசுக்கு சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்,



ஏற்கெனவே இந்த அரசு 1979-80 ஆம் ஆண்டிலே இதற்காக ஒரு செலக்ட் கமிட்டி போட்டு, புதிய சட்டம் வருகிறது; பிறகு இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடைபெறும் என்று இன்றைய கிராமத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அன்றையதினம் கூட்டுறவு அமைச்சராக இருந்தபோது சொல்லி, அதிலே சிறிதுகாலம் பணியாற்றினார்கள். தேர்தலுக்குப் பிறகு இன்றையதினம் இருக்கிற கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு மாநிலங்களுக்கு எல்லாம் சென்று பரிசீலனை செய்து, கூட்டுறவுச் சட்டத்தை ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே அறிமுகம் செய்து, இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட இருந்து ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த கூட்டுறவுச் சட்டத்தை நிறைவேற்றாமல் இப்படியே ஒத்திவைத்துக்கொண்டிருப்பது என்பதை ஒரு ஜனநாயக நாட்டில் எப்படி அனுமதிக்க முடியும் என்பதை நான் இந்த மாமன்றத்திலே உங்கள் மூலமாக மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11.40)

இன்றையதினம் கிராமங்களிலே இருக்கிற பல்வேறு சங்கங்களிலே உள்ள பல்வேறு உறுப்பினர்கள் கூட தேர்ந்தெடுக்கப்படுகின்ற தகுதியை இழந்துவிட்டு, வேறு வழிகூட இல்லாமல் காலம் கடத்துகின்ற சூழ்நிலை இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் பிரதம நிலவள வங்கிகளில் அரசாங்கம் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கிற பணியானாலும் சரி, அதேபோல கடன் வசூலிக்கிற பணியானாலும் சரி, அவைகள் எல்லாம் முறையாக செய்யப்படுவதில்லை. காரணம் அந்தச் சங்கங்களிலே தலைவர்கள், அல்லது இயக்குநர்கள் எனச் சொல்லப்படுபவர்கள் இல்லாததுதான் ஒரு பெரிய குறை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே துரிஞ்சாபுரம் என்கிற இடத்திலே பிரதம நிலவள வங்கியிருக்கிறது. உதாரணத்திற்காகச் சொல்கிறேன், இன்றையதினம் அங்கேயிருக்கிற மேற்பார்வையாளர்களுக்கும், தனி அதிகாரிகளுக்கும் இடையே சுமூகமான உறவு இல்லாத காரணத்தால் பல லட்சக்கணக்கான விவசாயிகள், பல மாதங்களாக தொடர்ந்து விண்ணப்பம் செய்து, அவைகள் மேற்பார்வையாளர்களால் பரிசீலிக்கப்பட்டும் கூட, அந்த வங்கியினால் விவசாயிகள் பயன் பெறஇயலாத சூழ்நிலை இருக்கிறது. விவசாயிகள் கடன் பெற முடியாத சூழ்நிலையில் பல மாதங்களாக இருந்து வருகிறார்கள். இவைகளுக்கெல்லாம் என்ன காரணம்? அந்தச் சங்கங்களும், வங்கிகளும் தனி அதிகாரிகளால் ஆளப்படுகின்ற ஆட்சியின் கீழ் இருந்து வருகிற சூழ்நிலைதான் காரணம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அந்தச் சங்கங்களிலோ அல்லது வங்கிகளிலோ, தலைவர்கள் அல்லது இயக்குநர்கள் எனப்படுபவர்கள் இருப்பார்களே யானால், இது போன்ற பிரச்னைகளையெல்லாம் தீர்த்து, விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்றிட வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

அதேபோல கடன் வசூலிப்பதிலே கூட ஏராளமான பணச் செலவுகளை அந்தச் சங்கங்களிலே உள்ள தனி அதிகாரிகள் செலவழித்து வருகிறார்கள். காரணம் கடன் வசூலிக்கச் செல்வதற்கு, கார் அல்லது வேன்கள் ஏற்பாடு செய்வது, அல்லது அதிகமான அளவில் போலீசார்களை அந்த இடங்களுக்கு அழைத்துச் செல்வது போன்ற வழிகளிலேயெல்லாம், அந்தத் தனி அதிகாரிகள், அந்தச் சங்கங்களினுடைய நிதிகளை துஷ்பிரயோகம் செய்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் நினைவு படுத்த விரும்புகிறேன். இதுபோல பல்வேறு பிரச்சனைகள் பல்வேறு முறைகேடுகள் இருக்கின்றன.

அதேபோல கடன் வசதிகளைக் கொடுக்கிற அரசாங்கம், விவசாயிகளுக்கு எந்தெந்த வகைகளில் எப்படி எப்படி கடன்கள் கொடுக்கப்படுகிறது என்ற விவரங்களை ஒரு அறிக்கையாக வெளியிடுகிறார்கள். அப்படிப்பட்ட அந்த அறிக்கைகள் வந்ததற்குப் பிறகு, ஏதோ அந்த அறிக்கைகளை நிறைவேற்று வதற்கு பாடுபடுவது போல, அங்கேயிருக்கிற தனி அதிகாரிகள் போட்டி போட்டுக்கொண்டு, விவசாயிகளிடத்திலே சென்று, 'உங்களுக்கு கடன் தேவையா, எனக்கு இவ்வளவு பணம் தாருங்கள், நான் உங்களுக்கு கடன் பெற்றுத் தருகிறேன்' என்று சொல்லி அவர்களுக்கு பணம் வசூலித்துக் கொண்டு விடுகிறார் களே தவிர, அந்த விவசாயிகள் திரும்பவும் கடன் பெறமுடியாத சூழ்நிலையைத்தான் அவர்கள் ஏற்படுத்தி விடுகிறார்கள். இதுபோன்ற நிலைமை பல்வேறு சங்கங்களிலே இருந்து வருகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தாற்போல, இந்த தனி அதிகாரிகளுக்கு வழங்கப்படுகிற சம்பளம் கூட, அந்தச் சங்கங்களினுடைய நிதியிலிருந்துதான் அரசாங்கம் செலவழிக்கிற சூழ்நிலை இருந்து வருகிறது. ஏற்கெனவே உள்ள நிர்வாக மெம்பர்கள் இருந்தால்கூட அவர்களுடைய நிர்வாகச் செலவைக்கூட அந்தச் சங்கங்களின் நிதியிலிருந்துதான் செலவழித்தாக வேண்டிய ஒரு கட்டாயமான சூழ்நிலை இருந்து இருக்கிறது. ஆனால் நிர்வாகக் குழு இருந்தால் ஏதோ வருடத்திற்கு 5 அல்லது 6 முறை அந்த நிர்வாகக் குழு கூடுமேயானால் அந்த நிர்வாக குழு உறுப்பினர் களுக்கு பயணப்படி, குழுத் தலைவருக்கு டி ஏ. அல்லது பயணப்படி தருகிற முறையில்தான் அப்போது அந்தச் சங்கங்கள் செலவழித்து வந்தன. ஆனால் இன்றையதினம் தனி அதிகாரி களுக்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை சம்பளம் என்ற பெயரில் ஒரு பக்கத்திலே கொடுத்துவிட்டு, இன்னொரு பக்கத்திலே அங்கே பணிபுரிகின்ற சிப்பந்திகளுக்கு சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலைதான் பல்வேறு சங்கங்களிலே இருந்து வருகிறது.



இப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்து விடிவு பெற நம்முடைய தமிழக அரசாங்கம் எப்போதுதான் முடிவு காணப் போகிறார் களோ தெரியவில்லை. எப்படிப்பட்ட முடிவை எடுக்கப் போகிறார்களோ புரியவில்லை. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அவ்வப்போது தேர்தல் வருகிறது வருகிறது என்று சொல்லிவருகிறார், நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இன்னொரு பக்கம் தனி அதிகாரிகளின் ஆட்சியை நீடித்துக் கொண்டே போகிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஊராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் தேர்தல் வரப்போகிறதா, அல்லது நமது சட்டமன்ற பேரவையினுடைய உறுப்பினர்களைத் தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி களைக் கொண்ட அமைப்பே இல்லாமல் போய்விடுமோ, அந்த தேர்தல்கள் வருவதற்குள் இந்த சட்டப்பேரவையின் ஆயுள் காலமே முடிந்துவிடுமோ என்று கூட மக்கள் மத்தியிலேயும் சந்தேகம் ஏற்படுகிற ஒரு சூழ்நிலைதான் இருந்து வருகிறது, தமிழகத்தினுடைய கூட்டுறவாய்வாளர்கள் மத்தியிலேயும் அது இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் விரைவாக இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற புதிய சட்டங்களை அமுல் படுத்துவதோடு நின்றுவிடாமல், அதினும் மிக விரைவாக அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல்களைக் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் பல்வேறு கூட்டுறவுத் துறைகளில் நிபுணத்துவம் பெற்றிருக்கிற பல பெரியவர்கள் அந்த சங்கங்களுக்கு நிர்வாகிகளாகவோ தலைவர்களாகவோ வர முடியும். அப்படி வந்தால்தான் ஜனநாயக அமைப்பு அந்தக் கூட்டுறவுத் துறையிலே செழிப்பாக வளர முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இப்படி ஒவ்வொரு 6 மாதத் திற்கு ஒரு முறை அந்த தனி அதிகாரிகளின் பதவிகள் நீட்டித்து நியமிப்பதை வன்மையாகக் கண்டித்து, விரைவாக தேர்தலைக் கொண்டு வாருங்கள், கொண்டு வாருங்கள் என்று கேட்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன் வடிவினைப் பொறுத்தவரையிலே மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தமட்டிலே அதற்கான ஒரு பில் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு பின் இடையிலே அது நிறுத்தப்பட்டு அதற்குப் பிறகு மீண்டும் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டு அதனை பரிசீலிப்பதற்காக ஒரு பொறுக்குக்குழு போடப்பட்டு அக்குழு பல்வேறு இடங்களுக்கும் சென்று தகவல் களைச் சேகரித்து அறிக்கையினைச் சமர்ப்பித்தது. அந்த பில்லினை மார்ச் மாதத்திலே நடைபெற்ற அந்த பட்ஜெட் கூட்டத்தொடரிலேயே கொண்டுவருவதற்கான ஆயத்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் பின் ஜூலை மாதத்திலே சட்டமன்றம் கூட்டப்பட்டு அப்போது அந்த பில் பாஸ் ஆகும் என்றும் அதன்படி தேர்தல் வரும் என்றும் இந்த சட்டமன்றத் திலே வாக்குறுதிகள் எல்லாம் கொடுக்கப்பட்டன. ஆனால் என்ன காரணத்தாலோ ஜூலையிலே சட்டமன்றக் கூட்டம்

நடக்கவில்லை. ஆகஸ்ட் மாதத்திலேயும் சட்டமன்றக் கூட்டம் நடைபெறமுடியவில்லை. அதன்காரணமாக இன்று அந்த பில்லை பாஸ் செய்யக்கூடாத சூழ்நிலையில் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தினை மேலும் நீட்டிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

எனவே இப்படிக் காலம் கடத்துவது சரியல்ல என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பலமான ஆட்சேபத்தைத் தெரிவிக்கின்றது. ஆகவே இனியாவது சீக்கிரமாக இந்த பில்லைக் கொண்டு வந்து நிறைவேற்றி வெகு சீக்கிரத்திலே தேர்தலை நடத்தவேண்டும் என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வற்புறுத்துகிறேன். ஸ்பெஷல் ஆபீஸர்களுடைய பதவிக்காலத்தை நீட்டிப்பதை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விரும்பவில்லை. ஏனெனில் அதனால் பல்வேறு முறைகேடுகள் நடக்கின்றன. ஆகவே அந்த தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாக ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது என்பதைத் தெரிவித்துக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் கீழ் அதன் நிர்வாகத்தைக் கொண்டுவருவதுதான் சரியானது என்பதைத் தெரிவித்து சீக்கிரமாகத் தேர்தல் நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த பில்லை நான் பலமாக ஆட்சேபித்து அமர்கிறேன்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தனி அதிகாரிகளுடைய பதவிக்காலத்தை நீட்டிக்கவேண்டும் என்ற ஒரு மசோதாவை இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய எல்லா அங்கத்தினர்களும் இது தவறு என்று சுட்டிக்காட்டினார்கள். அதிலே நானும் மாற்றுக் கருத்து உடையவன் அல்ல. குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருத்திய சட்டத்தை விரைவாகக் கொண்டுவரவேண்டும் என்றும் ஜனநாயக அடிப்படையில் தேர்தல்கள் இருக்கவேண்டும் என்ற உணர்வோடு இருந்தாலும், சீக்கிரமாகத் தேர்தலை நடத்திவிடுவோம் என்ற வாக்குறுதியினை அவையிலே அவர்கள் தந்திருந்தாலும் அந்த சட்டத்தை நிறைவேற்றாமல் எப்போதுதான் தேர்தலை நடத்தப் போகிறீர்கள் என்ற கேள்வியும் இன்றைக்கு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அந்த சட்டத்தை விரைவாக நிறைவேற்றி அதன்படி தேர்தலையும் விரைவிலே நடத்தி கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையிலே நடைபெற மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த அவையும் நல்லதொரு வழிகாட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறப் பொருளாதாரத்திற்கு கூட்டுறவு மிகவும் அவசியம் என்ற நிலைமையினை நாமெல்லாம் ஏற்றுக் கொண்டாலும் அந்தத் துறை இன்றைக்கு ஸ்தம்பித்துப் போய் நிற்கின்றது. கூட்டுறவு சங்கங்களாக இருந்தாலும் அல்லது கூட்டுறவு சர்க்கரை ஆலையாக இருந்தாலும், சூப்பர்





மார்க்கெட் என்று கூறக் கூடிய அங்காடிகளாக இருந்தாலும் அந்த அமைப்புக்களுக்கெல்லாம் இப்போது தலைவர்கள் இல்லை என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகாரிகள் அந்த அமைப்புக்களை எந்த நிலைமையில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். வடாற்காடு மாவட்டத்திலே இருக்கக் கூடிய சர்க்கரை ஆலை என்ன நிலைமையிலே இருக்கின்றது? விவசாயிகளின் பொருளாதாரம் மேம்படவேண்டும் என்றால் அவை நன்கு நடைபெறவேண்டும். அந்த வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பைப் பதிவு செய்வதில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி இருந்தால் அந்த சர்க்கரை ஆலை அந்த மக்களுக்கு நல்லதொரு பணியினை ஆற்றி இருக்கும். ஆனால் தனி அதிகாரிகளின் எதேச்சாதிகாரத்தின் காரணமாக அங்கே பதிவு செய்யப்படாத கரும்பு சுமார் 2,500 ஏக்கர் அளவுக்கு இருக்கின்றது என்பதை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களும் கவனிக்க வேண்டும்.

அங்கே தண்ணீர் வறட்சி காரணமாக நெல்லை விட்டுவிட்டு கரும்பு பயிர் செய்யப்பட்டது. ஆனால் இதுகாறும் அந்த ஆலை ஏற்பட்டதிலிருந்து முறையாக எந்தவிதமான தவறுகளும் இல்லாமல் கரும்பினை உற்பத்தி செய்து தந்து அந்த ஆலை நடப்பதற்கு உறுதுணையாக இருந்த விவசாயிகளிடம் கூட கரும்பு பதிவு செய்யப்படாமல் விட்டுவிட்ட காரணத்தால் ஒரு போராட்டம் ஏற்படக்கூடிய சூழ்நிலை கூட அந்த மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கின்றது.

(முற்பகல் 11.50)

அந்த அதிகாரி அங்கே இருக்கிறாரா என்று பார்த்தால். அவர் அவரது அறையிலே அதிகமாக இருப்பதில்லை. அங்கே நடக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பார்த்தால், கடந்த 15, 20 நாட்களுக்கு முன்பு அங்குள்ள பெட்ரோல் பங்கிலே 5,000 லிட்டர் டீசல் அதிகமாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பெட்ரோல் பங்கிலே எப்போதும் குறைவதுதான் நிலவரம். ஆனால், இங்கே அதிகமாக இருப்பது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. மேலும் இப்படி நிர்வாகத்தில் இதுபோன்ற சீர்கேடுகளினால் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் விரயம் ஏற்படுவதுடன். சில தவறுகளும் நடக்கக்கூடிய சூழ்நிலை இந்தத் தனி அதிகாரிகளால் ஏற்படுகின்றன என்பதை இந்த நேரத்தில் வருத்தத்துடன் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

சூபர் மார்க்கெட் போன்ற நிறுவனங்களில் பொருள்கள் கொள்முதல் செய்வதிலேகூட பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக சூபர் மார்க்கெட்டிலே உள்ள பொருள்கள் எல்லாம் நல்லமுறையிலே இருக்கும் என்று கருதி வாங்குவார்கள்.

ஆனால், அனுபவபூர்வமாக இன்றைக்குப் பார்க்கும்போது, கடுகு வாங்கினால் அதோடு எள்ளும் கலந்திருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. சீல் வைக்கப்பட்டிருந்தாலும், இன்றைக்கு இப்படி இருக்கக்கூடிய நிலைமை வேலூர் மார்க்கெட்டிலே வாடிக்கையாக இருக்கிறது. இதுபோன்ற நிலைமைகள் இன்றைக்கு ஜனநாயக அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாததன் காரணமாக, இன்றைக்கு நிர்வாகத்திலே பல சீர்கேடுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த தனி அதிகாரிகளின் நிலைமை மேலும் எப்படி இருக்கின்றது என்று சொன்னால், அவர்கள் எங்கு வேண்டுமானாலும் காரை எடுத்துச் செல்லலாம். இந்தக் காரை அவர் கோயம்பத்தூருக்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம் என்ற நிலைமை பரவலாக இருக்கிறது. பொதுமக்களுக்கும், விவசாய பெருமக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய நிறுவனங்களாக இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவை நல்லமுறையில் நிறைவேற்றி, மக்களுக்கு நல்லதொரு தொண்டு செய்ய வேண்டும் என்று கருதுகின்ற நேரத்தில், அவர்களுக்கு உறுதுணையாக இந்த அவை இருக்கும். எனவே, இதனை விரைவிலே நிறைவேற்ற வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

மேலும், வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலே நல்ல முறையிலே குறுகிய காலம் வரை பணியாற்றி வந்த தனி அதிகாரி, திடீரென்று மாற்றப்பட்டு இன்றைக்கு அதிகமாக குறைகூறக் கூடிய ஒரு அதிகாரி அங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதை வருத்தத்தோடு கூறிக்கொண்டு, இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கூறி, இந்த மசோதாவை மேலும் நீடிக்காமல், விரைவாக தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர்கள் நியமனம் சட்டத்தை மேலும் திருத்துவதற்கு இந்தச் சட்டமுன்வடிவை, குறிப்பாக தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை மேலும் நீட்டிப்பதற்கான இந்தச் சட்ட முன்வடிவை கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது.

இன்றையதினம் கூட்டுறவு நிறுவனங்கள் ஜனநாயக பூர்வமாக அதிலே அங்கம் வகிக்கக்கூடிய அங்கத்தினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக தர்களைக் கொண்டு இயங்கக்கூடிய நிறுவனங்கள், கடந்த 6 ஆண்டுகளாக அவைகளுக்குத் தேர்தல் இன்றி, தனி அலுவலர்களுடைய பொறுப்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றையதினம் அவர்களுடைய எதேச்சாதிகார முறையில், தனி அலுவலர்களுடைய சொந்த வெறுப்பு



விருப்பத்திற்கான அடிப்படையில் அவைகள் இன்றையதினம் செயல்பட்டு வருவதுடன், பல்வேறு சீர்கேடுகள் அவைகளிலே ஏற்பட்டு வருகின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக, ஆரம்பத்திலே இதிலே அபெக்ஸ்பாடி என்று சொல்லக்கூடிய மத்திய கூட்டுறவு வங்கிகள். நிலவளவங்கிகள், கூட்டுறவு விற்பனை சங்கங்கள் போன்ற மத்திய அமைப்புகளுக்கு இம்மாதிரி தனி அலுவலர்கள் நியமித்து, அவர்கள் மூலம் இவைகளின் நிர்வாகப் பொறுப்பை நடத்துகின்ற முறையில் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். இன்றையதினம் அனைத்து கூட்டுறவு சங்கங்களுக்கும் தேர்தல் நடத்தாமல், ஒத்திவைக்கப்பட்டு, பழைய நிர்வாகத்தின்கீழ் தொடர்ந்து நிர்வாகம் நடைபெறுகின்ற ஒரு நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். மத்திய சங்கங்களுடைய, மத்திய அமைப்புகளுடைய நிர்வாகப் பொறுப்பை இந்தத் தனி அலுவலர்கள் எடுத்துக் கொண்டாலும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஊதியங்களை எந்த அளவுக்கு தாங்கக்கூடிய சக்தி இந்த நிர்வாகங்களுக்கு இருக்கின்றது என்பதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும்.

சூப்பர் மார்க்கெட் போன்ற பெரிய நிர்வாகங்களில் ஜாயிண்ட் ரிஜிஸ்திரார் போன்ற அதிகாரிகள், அதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்கும் தனி அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். அம்மாதிரி சில மத்திய நிர்வாகங்களில் டிபுடி ரிஜிஸ்திரார் நியமிக்கப்படுகிறார். இந்த அளவுக்கு அங்கே தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டாலும், அவர்களுக்கு ஆகும் ஊதியச் செலவை, மற்றச் செலவுகளை அந்த நிர்வாகம் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறதா என்பது ஒருபுறம். மற்றொருபுறத்தை எடுத்துக் கொண்டால், இந்த நிறுவனங்களுடைய தனி அலுவலர்கள் தங்களுக்கு நம்பிக்கையான அலுவலர்கள் வேண்டுமென்று கருதினால் அரசுத்துறையில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றுகின்றவர்களை தங்களுடைய நிறுவனங்களில் 'டெபுடேஷன்' என்ற அடிப்படையில் அவர்கள் பெற்று நியமனங்கள் செய்து இந்த நிறுவனங்களை நிர்வகிக்கக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. இது பெருவாரியாக அனைத்து நிறுவனங்களிலும் இன்றையதினம் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அந்த நிறுவனங்களிலே செலவு சுமை அதிகமாகி இருக்கிறது என்பதும் அந்த நிறுவனங்கள் லாபத்தில் இயங்கினாலும் சரி அல்லது நஷ்டத்தில் இயங்கினாலும் சரி இந்தச் செலவு தவிர்க்க முடியாத செலவு என்ற அடிப்படையில்-அரசு கொடுக்கக்கூடிய ஊதியத்தை அவர்களுக்கு கொடுத்துத்தான் ஆகவேண்டும்- என்ற முறையிலே—அதிகமான அதிகாரிகள் அந்த நிறுவனங்களிலே பணியாற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் திருச்சியிலுள்ள மொத்த விற்பனை பண்டகசாலை ''ஹோல்சேல் கோ—ஆப்ரேடிவ்'' நிறுவனத்தையும் அமராவதி கூட்டுறவு சிறப்பு நிறுவனத்தையும் எடுத்துக் கொண்டால் அங்கே இருக்கின்ற ஒரு 20 அரசு அலுவலர்களுக்கு

கொடுக்கக்கூடிய சம்பளம் அங்கு பணியாற்றக்கூடிய சுமார் 300க்கும் அதிகமான ஊழியர்கள் சம்பளத்தைவிட அதிகமாகவே இருக்கிறது. அங்கே உள்ள சாதாரண ஊழியர்கள் அனைவரும் தங்களுக்கு ஏதாவது சம்பள உயர்வு வேண்டும் என்று கேட்டால் இன்றையதினம் நிர்வாகத்திலுள்ள அந்த நிறுவனங்களைக் கவனிக்கக்கூடிய பொறுப்பிலுள்ள அதிகாரிகளும் அதற்குமேல் பதிவாளர் அவர்களும் இந்த நிறுவனம் லாபத்தில் இயங்குகிறதா? லாபத்தில் இயங்கினால் அவர்களுக்கு ஏதாவது ஊதிய பிரச்சினைப்பற்றி கவனிக்கலாம் என்ற முறையில் பரிந்துரை செய்யப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் அரசு அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்கள் அந்த நிறுவனங்களில் பணியாற்றுகின்றபோது அரசு அலுவலர்களுக்கு சம்பளம் உயர்த்தப்படும் பொழுது எல்லா சம்பள உயர்வு அளிக்கப்படுகிறது. இப்படி இரண்டு விதமான நிலைகள் இருக்கின்றன. ஆகவே, அந்த நிறுவனங்களுடைய அஸ்திவாரமாக இருந்து அந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கு பணியாற்றக்கூடிய சாதாரண ஊழியர்களுக்கு அவர்கள் எந்த அளவுக்கு திறமையாக பணிபுரிந்து இருந்தாலும் அந்த நிறுவனத்திற்கு லாபத்தை ஈட்டித் தரக்கூடிய பணிகளிலே அவர்கள் நல்லமுறையிலே பணியாற்றினாலும் அவர்களுடைய நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன. ஆனால் இத்தகைய நிறுவனங்களிலே பணிபுரியக்கூடிய அரசு அலுவலர்களின் முழுமையான நிதிச் சுமையை அந்த நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைமை இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய அதிகாரம் யாருக்கும் இல்லை. தனி அதிகாரிகள் தங்களுக்கு மேலும் 4 அரசு அதிகாரிகள் தேவை என்று விரும்பினால் உடனே அவர்களை பெற்றுக் கொள்ளலாம். அவர்களுக்கு உண்மையாகவே தேவையா என்பதைப்பற்றி ஆலோசனை கூறுவதற்கு எந்தவிதமான தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநரும் இல்லை, சபையும் இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆரம்பத்திலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தனி அதிகாரிகள் பொறுப்பிலே இருக்கின்ற நிறுவனங்களுக்கு 'அட்வைசரி போர்ட்ஸ்' அதாவது ஆலோசனைக் குழுக்கள் என்ற முறையில் குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஆனால் இப்போது அவை எங்கே இருக்கின்றன என்பது யாருக்கும் தெரியாது. அந்தக் குழுக்கள் இல்லை, செயல்படுவது கிடையாது. ஒரு வேளை அமைச்சர் அவர்கள் சொல்லலாம், அந்தக்குழுக்கள் ஏற்கெனவே அமைக்கப் பட்டு இருக்கின்றன என்று. ஆனால் அந்த மாதிரியான குழுக்கள் கலைக்கப்பட்டு விட்டன என்று இப்பொழுது அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே அந்த நிறுவனங்கள் நல்ல முறையிலே செயல்படுவதற்கு ஆலோசனை கூறுவதற்குக்கூட யாரும் இல்லை, தனி அதிகாரிகள் ஆதிக்கம்தான் செலுத்தப்படுகிறது. பல்வேறு நிறுவனங்களிலே ஏற்பட்டிருக்கக்கூடிய கோளாறுகளை நான் குறிப்பிட விரும்புகிறேன். எனக்குத் தெரிந்தவரையில் குளித்தலையிலே கூட்டுறவு விற்பனைச் சங்கத்திலே சமீப காலத்திலே தனி அதிகாரியாக பணியாற்றக்கூடிய அவருக்கு அரசாங்கம் சம்பளம் எப்படியும் கொடுத்துவிடுகிறது.



நிறுவனத்தைப்பற்றி அவர்களுக்கு கவலை இல்லை. அது லாபத்தில் ஓடுகிறதா? நஷ்டத்தில் ஓடுகிறதா என்ற கவலை இல்லை. அதன் 4, 5 ஆண்டுகள் வளர்ச்சியை எடுத்துக் கொண்டுப் பார்த்தால் தனி அதிகாரிகளால் அவை சீர்கெட்டு சீக்கிரமாக மூடப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

[நண்பகல் 12-00]

ஆகவே அந்த அடிப்படையில் பல்வேறு உதாரணங்களை என்னால் கூறமுடியும். கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்பு திருச்சியிலே அமராவதி சிறப்பு அங்காடியை ஜாயின்ட் ரிஜிஸ்திரார் ஒருவர் நிர்வகித்து வந்தார். ஒரு சாதாரண சிறிய பிரச்சினை வந்தது. அதை அப்போதே அந்த ஊழியர்களை கூப்பிட்டு வைத்துப் பேசிமுடித்து இருக்கமுடியும். ஏதோ இரண்டு ஊழியர்கள் தவறான வார்த்தைகளை உபயோகித்துக் கொண்டார்கள் என்ற காரணத்திலே நீடித்த வேலை நிறுத்தம் ஏற்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நானே தலையிட்டு அந்த அதிகாரியிடம் சொன்னேன். இரண்டு தரப்பாரையும் அழைத்துப் பேசி நடவடிக்கை எடுப்பேன் என்ற வார்த்தையை தயவுசெய்து சொல்லுங்கள் என்று யோசனை சொல்லப்பட்டது. நான் எதுவும் செய்யமாட்டேன், ஊழியர் வேலை நிறுத்தம் செய்தல் அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை என்ற அடிப்படையில் அவர் இருந்ததால் வேலை நிறுத்தம் நடந்தது. இம்மாதிரி நிறுவனத்தின் நலன்களைக் காட்டிலும் தன்னுடைய உணர்வுகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு என்ன நிலைமை ஏற்பட்டாலும் கவலையில்லை என்ற போக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைய தினம் கூட்டுறவு சங்கங்களில் சில அமைப்புகளுக்கு தனி அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள். மற்ற சங்கங்களுக்கு ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகஸ்தர்களின் பதவிக்காலம் நீட்டிக்கப்படுகிறது. புதிதாக சங்கங்கள் துவக்கப்பட்டால் நிர்வாகஸ்தர்களை துணைப்பதிவாளர் நியமிக்கின்றார். ஏற்கனவே நியமனம் செய்யப்பட்ட நிர்வாகஸ்தர்களையே தொடர்ந்து நீடித்து நியமிக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஒரு தடவை ஒரு குறிப்பிட்ட நிர்வாகஸ்தர்களை நியமித்துவிட்டால் அவர்களையே தொடர்ந்து நீடிக்கச் செய்கிறார்கள். அதே நிர்வாகஸ்தர்களின் பதவிக்காலம் மூன்று மாதத்திற்குப் பிறகு நீட்டிக்கப்படும் என்ற நிலைமை மட்டுமல்ல, அந்தச் சங்கங்களுக்குத் தலைவர்களையும் அதிகாரிகளே நியமிக்கக் கூடிய அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள்—நியமிக்கப்பட்ட போர்டுகள்கூட அவர்களுக்குள்ளே தலைவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய நிலைமை இல்லை, யார் தலைவராக இருப்பது என்பதை நிர்வாக உத்திரவுகளின் மூலம் நியமிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது.

[திரு. இரா. கருப்பையா] [1982 செப்டம்பர் 6

கிராமங்களிலே உள்ள பல்வேறு விவசாயக்கடன் சங்கங்களுக்கு நிர்வாகஸ்தர்களை நியமிக்கிறபோது தவணை தவறிய காரணத்தினாலே தகுதியிழந்தவர்களாக ஆகிவிடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அந்தச் சங்கங்களில் எப்படி யாரை நியமிப்பது என்ற பிரச்சினை இருக்கிறது. யார் தவணை தவறியது என்று கணக்குப்பார்க்க வேண்டியிருக்கிறது. யாராவது ஒரு ஆள் தவணை தவறாமல் இருந்தால் அவர் அந்தப் பொறுப்பை ஏற்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அங்கேயும் போர்டுகள் கிடையாது. தகுதியின்மை காரணமாக நீக்கக்கூடாது என்பது அல்ல என்னுடைய கருத்து. அதே நேரத்திலே இந்த மாதிரியான சங்கங்களில் உடனடியாகத் தேர்தல்கள் நடத்துவதன் மூலமாக நல்ல நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி சங்கங்கள் நல்லமுறையிலே இயங்க ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

ஆரம்பத்திலே கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்ட காலத்திலே கிராமங்களில் பணக்காரர்கள், லேவாதேவிக்காரர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருக்கிறது. பால் உற்பத்தி சங்கம், நூல் உற்பத்தி சங்கம், கரும்பு உற்பத்தியாளர் சங்கம், நெசவாளர் சங்கங்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் போன்ற உற்பத்திச் சங்கங்கள் மட்டுமல்ல மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய கன்ஸ்யூமர்ஸ் சொசைடிகளாகவும் உருவாகிவிட்டது, பரந்து விரிந்து வளர்ந்து வருகிறது. ஆனால் இப்பேற்ப்பட்ட அமைப்பை தேர்தல் இல்லாமல் தனி அதிகாரிகள் பொறுப்பிலே விடுவதன் மூலமாக, கிராமத்திலே இருக்கிற சங்கங்கள் தனிப்பட்ட சிலருடைய பொறுப்பிலே அதனுடைய நிர்வாகத்தை விடுவதன் மூலமாக பல்வேறு சீர்கேடுகள் ஏற்படுகின்றன. ஆகவே அதை நிவர்த்தி செய்வது அவசியம். ஆகவே, உடனடியாக தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியம். அமைச்சர் அவர்கள் கூறுவார்கள் 'நாங்கள் தேர்தலை நடத்துவதற்கு தயாராக இருக்கிறோம், சட்டத்தை நிறைவேற்றியதற்கு பிறகு தேர்தலை நடத்தலாம்' என்று கூறுவார்கள். ஆனால இம்மாதிரியான நிலை நீட்டிப்பது சரியல்ல, ஆகவேதான் தெளிவாக கூறுகின்றோம், அந்தச் சட்டம் ஒருபுறத்திலே நிறைவேற்ற வேண்டியது அவசியம் என்று அனைவரும் ஏற்றுக்கொண்டாலும், இந்த தனி அதிகாரிகள் நீட்டிப்பதன் மூலமாக சட்டத்தை நிறைவேற்றப்படக்கூடிய காலமும் நீடித்துக்கொண்டே போகிறது. ஆகவே அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இந்த நீடிப்பு கூடாது அந்த நீடிப்பு இல்லையென்றால் உடனடியாக மாற்று அமைப்பு ஏதாவது செய்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அரசுக்கும் ஏற்படுகிறது, எல்லோருக்கும் ஏற்படுகிறது. ஆகவே அந்த உணர்வோடு இந்த நீடிப்பு என்பது கூடாது. தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை மூலமாக இந்த கூட்டுறவுச் சங்கங்கள் இயக்கப்பட வேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்தி, மேலும் இந்த தனி அதிகாரிகள் நீட்டிப்பது என்ற இந்த மசோதாவை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். இதற்கு என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1982 செப்டம்பர் 6] [திரு. கருப்பையா]

ஆலோசனை சபைகள் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் தவிர்க்க முடியாமல் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டு நீடிக்கப்படலாம். இருந்தாலும் ஆலோசனை சபைகள் என்று உருவாக்கப்பட்ட சபைகள் கூட நீக்கியிருப்பது சரியல்ல. ஆகவே ஆலோசனை கூறுவதற்கான முறையிலே அந்த ஆலோசனை போர்டுகளை உருவாக்குகிற முறையிலே அமைச்சர் அவர்கள் அந்த நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இந்த மசோதா சட்டமாவதை எதிர்த்து என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது தனி அலுவலர்கள் கூட்டுறவு அமைப்புகளின் பொறுப்பிலே நீட்டிப்பது கூட்டுறவு இயக்கத்திற்கு உகந்ததாய் இராது என்ற கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். அரசும் அதே கருத்தோடு ஒன்றுகின்ற காரணத்தாலே தான் இந்த தனி அதிகாரிகள் நீட்டிப்பு முறையை அறவே நீக்கி தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் மூலமாக கூட்டுறவு இயக்கத்தை நடத்த வேண்டுமென்ற புதியதொரு கூட்டுறவுச் சட்டத்தை கொண்டு வர ஏற்பாடுகள் செய்தது. இங்கே தாமதத்திற்கு காரணம் அரசு அல்ல என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவுச் சட்டம், கூட்டுறவுச் சட்டத்தை ஒட்டிய விதிகள் பல குறைபாடுகளை, பல சந்து பொந்துகளைக் கொண்டிருந்த காரணத்தால் எத்துனையோ இன்னல்கள், இடர்ப்பாடுகள் அங்கத்தினர்களுக்கு மட்டுமல்ல, அந்த இயக்கத்தினுடைய பலனை நுகரவேண்டிய அனைவருக்கும் ஏற்பட்ட காரணத்தால்தான் புதிய சட்டத்தை, அந்த சந்து பொந்துகள் எல்லாம் அடைக்கப்பட்ட சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று அரசு முடிவு செய்து ஆய்வுக்குழுவை நியமித்ததை அவை அறியும். ஆய்வுக்குழு பாரதத்திலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டுறவு இயக்கம் எம்முறையில் நடைபெறுகிறது? அங்கேயுள்ள சிறப்புகள் என்ன? குறைபாடுகள் என்ன? நமது அமைப்பிலே இருக்கிற குறைகளை எவ்வாறு ஒப்பிட்டுக் களைவது என்பதைப் பற்றியெல்லாம் தீர ஆய்ந்து தான் இந்தக் கூட்டுறவு சட்டமுன்வடிவைக் கூட அவையிலே சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே அறிமுகம் செய்து, தற்போது ஆய்விற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வந்திருக்கிறது. ஆனால் அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவின் காரணமாக—நான் கூட மிக ஆவலாக இருந்தேன். அலுவல் ஆய்வுக் குழு கூட்டுறவு சட்ட முன்வடிவை இந்தத் தொடரிலேயே ஆய்விற்கு எடுத்தால் நன்றாக இருக்கும் என்று ஆர்வத்தோடுதான் இருந்தேன். இருப்பினும் அலுவல் ஆய்வுக்குழு தக்க காரணங்களின் அடிப்படையில் இதை பிறகு எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்திருக்கிற காரணத்தால் 1976-லே அமைக்கப்பட்ட தனி அலுவலர்களுடைய காலம் நீட்டிக்கப்பட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதிலே கூட குறிப்பாக கிட்டத்தட்ட 350 அமைப்புகளில்தான் தனி அலுவலர்கள் போடப்பட்டிருக்

கிறார்கள். பிரைமரி சொசைட்டீஸ் என்று சொல்லப்படுகிற கூட்டுறவு அமைப்பில் கீழ்நிலையில் இருக்கிற சுமார் 20,000, 25,000 அமைப்புகளில் எல்லாம் 1972–73 வாக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் மூலமே தான் அவர்களுக்கு பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டு இன்று வரையில் அந்த நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12.10)

மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் சொன்னதைப்போல தனி அலுவலர்களின் பொறுப்பில் இந்த அமைப்புகள் இருந்தாலும் சரி அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் காலம் போய் நீட்டிக்கப்பட்ட காலத்தோடு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருந்தாலும் சரி, அது ஜனநாயக ரீதிக்கு உட்பட்டதாக இராது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

பழைய சட்டத்திலேயிருந்த முக்கியமான குறை, ஸ்பெஷல் ஆபீசர்கள் 1976 ஆம் ஆண்டிலே போடப்பட்டு இன்று 1982 ஆம் ஆண்டு வரைக்கும் அவர்கள் மூலமாகவே கூட்டுறவு அமைப்பின் பிரதான அமைப்புகளை நடத்தக்கூடிய வழிவகை இருக்கிறது என்றால், அது அந்தச் சட்டத்திலே இருக்கின்ற ஒரு கோளாறு ஆகும். ஆனால் வரவிருக்கின்ற புதியச் சட்டத்திலே இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு, நான்கு ஆண்டு என்று ஆண்டுக் கணக்காகத் தனி அலுவலர்களைப் போட வழிவகை இல்லாத அளவிற்கு வர இருக்கிறது.

இப்படிப் புதிய சட்டம் பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்டிருப்பதால்தான் மூன்று நான்கு தினங்கள் அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்றும், பேச வேண்டுமென்றும் பல அங்கத்தினர்கள் கூறியுள்ளார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு, பலராமன் அவர்கள் பேசும் பொழுது சொன்னார்கள். சர்க்கரை ஆலை போன்ற அமைப்புகளுக்குத் தனி அலுவலர் இருக்கக் கூடாது என்று. இப்பொழுது இருக்கின்ற சட்டத்தில் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டித்து அவர்கள் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் இருப்பதற்கு வழிவகை இருக்கிறது. ஆனால் வரவிருக்கின்ற புதிய சட்டத்தில் கூட்டுறவு நூற்பாலையோ, சர்க்கரை ஆலையோ நிறுவப்பட்டு, அது தொழில் தொடங்கிய ஐந்தாண்டுக் காலம் முடிந்தவுடன் ஆறு மாத காலத்திற்குள்ளே தேர்தலைக் கொண்டு வந்தாக வேண்டுமென்று வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

அட்வைசரி போர்டைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே இந்த அரசால் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்கள் 1980-ல் இந்த அரசு கலைக்கப்பட்ட பொழுது அந்தக் குழுக்களும் கலைக்கப்பட்டதால் கூட்டுறவு அமைப்புகளுக்கு கூட்டுறவாளர்களின் நல்ல





ஆலோசனை கிட்டாத ஒரு நிலை ஏற்பட்டு விட்டது. ஆனால் தற்பொழுது தேர்தல் மூலம் இந்த இயக்கத்தைச் செம்மைப் படுத்த புதியச் சட்டத்தின் மூலம் நாம் நடவடிக்கை எடுக்கும் பொழுதும் அரசியல் தலையீட்டிற்குக் கூட இடமில்லாத அளவிற்கு உயர்ந்த நல்ல பல சிறப்பு அம்சங்கள் கொண்டதாக புதிய சட்டம் இருக்கும்.

தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள், வீக்கர் செக்ஷன் என்று சொல்லப்படும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள், பெண்கள் ஆகியவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில், இந்தப் புதிய சட்டத்தில் அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கக்கூடிய வகையிலே வர இருக்கிறது.

அதுமட்டுமல்ல, இதுகாறும் இருந்து வந்த சட்ட விதியின் அடிப்படையில் எல்லோருக்கும் வாக்கு என்ற முறை கூட்டுறவு அமைப்பில் இல்லாமல் இருந்தது. ஏழைகளின் பிரதிநிதித்துவம் செம்மையாகப் பிரதிபலிக்காமல் இருந்தது. ஆனால் வரவிருக்கும் புதிய சட்டத்தில் இந்தக் குறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் சொன்னார்கள், பணியாளர்களின் பாதுகாப்பு, தனி அலுவலர்கள் இருக்கின்ற காரணத்தால் குறைவாக இருக்கிறது என்று. வரவிருக்கின்ற புதிய சட்டத்தில், காமன் கேடர் என்று சொல்லும் அமைப்பைக் கொண்டுவரவிருக்கிறோம். பணியாளர்களுக்கு நல்லமுறையில் ஊதியம் கிடைக்கவும், பணிப் பாதுகாப்பு செம்மைப்படுத்தப்படவும் நிலைமைகள் உருவாகும். எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நாம் பல மாநிலங்களை ஒப்பிட்டுப்பார்த்தபிறகு, குறைகளையெல்லாம் நீக்கி சிறந்ததொரு நடைமுறைத் திருத்தத்தைக் கொண்டு புதிய சட்டத்தைக் கொண்டுவரவிருக்கிறோம்.

தனி அலுவலர்கள் குறைபாடுகளில் ஈடுபடுவதைப்போல, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் குறைபாடுகளில் ஈடுபட்டுவிடக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு ஒரு இன்செண்டிவ் இருக்க வேண்டுமென்று, லிட்டில இன்செண்டிவ் என்ற முறையில் ஆனரேரியம் ஆஸ்பெக்ட் கருத்தில் கொள்ளப்பட்டு, அவர்களுக்கு ஓரளவு சிறப்பு ஊதியம் தரவேண்டுமென்று கொண்டுவர இருக்கிறோம்.

தூய நிர்வாகம் கூட்டுறவு அமைப்பில் இருக்க வேண்டுமென்றதற்காக, தவறுகள் நடக்கும்பொழுது பல மாதங்கள், பல ஆண்டுகள் என்று விசாரணை நடத்தப்பட்டு, இறுதியில் ஒன்றுமில்லாமல் லிமிடேஷன்களிலே அடிபட்டுப் போவது ஒரு பிரச்னையாக இருக்கிறது. ஆனால் வரவிருக்கின்ற புதியச் சட்டத்தில் தூய்மையான நிர்வாகத்திற்குச் சட்டரீதியாக வழிவகை செய்யப் பட இருக்கிறது.

கிராமப் பொருளாதார மேம்பாட்டிலே அக்கறை கொள்ளும் வகையில், ஃபார்ம் ஓரியன்டட் பேங்க், ஃபார்ம் பேஸ்ட் பேங்க், கிரெடிட் சொஸைட்டி, எல்.டி. பேங்க்ஸ் ஆகியவற்றின் பணிகளை மாற்றியமைத்துக் கொண்டுவர இருக்கிறோம்.

புதிய சட்டத்தை இந்த அவையிலேயே எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது அரசினுடைய அவாவாக இருந்தாலும் அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுக்கேற்ப அடுத்த கூட்டத் தொடரில் வரவிருக்கிறது. அதுகாறும் தவிர்க்க முடியாமல் தனி அலுவலர்கள் பதவிக்காலம் நீட்டிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். மக்களுடைய இயக்கமான கூட்டுறவு இயக்கம் தனி அலுவலர்களுடைய கையிலே தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த ஆட்சிக்கும் இல்லை என்று சொல்லி இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து மேற்படி சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழு தீர்மானித்தபடி பேரவை அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| 7.9.82 செவ்வாய். | அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |



| | |
|---|---|
| 8.9.82 புதன் | 1. 1982-83 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கை பேரவைக்கு அளித்தல் |
| | 2. அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |
| 9.9.82 வியாழன் | 1. 1982-83 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கை மீது விவாதமும், மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும். |
| | 2. நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். |
| | 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |
| 10.9.82 வெள்ளி | 1. நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும் |
| | 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |

பேரவை வழக்கம்போல காலை 9 மணிக்குக் கூடும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இன்று காலை விவாதம் பண்ணியதிலே ஏற்றுக் கொண்ட விஷயம் விடப்பட்டிருக்கின்றது. வறட்சி நிலைபற்றியும், காவிரி நீர் விவகாரம் பற்றி—நமக்குக் கம்மியாக கொடுக்கப்படுவதன் காரணமாக—இந்த விஷயங்களைப் பற்றி பேசுவதற்கு, டிஸ்கஷன் செய்வதற்கு அக்காமடேட் செய்யவேண்டும் என்பது விடப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவைகளை எல்லாம் கால் அட்டன்ஷனிலே பேசிக்கொள்ளலாம் என்பதால் விடப்பட்டுள்ளது.

திரு. ரா. உமாநாத்: இவைகள் விவாதிக்கப்படும் என்ற எண்ணத்தினாலேதான் 9-ம் தேதியே முடிவடையவிருக்கும் இந்த சட்டசபை 10-ம் தேதிக்கும் தள்ளி வைக்கப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே 9-ம் தேதியோடு முடித்துக்கொள்ளலாம் என்று பேச்சு வந்த நேரத்தில் 10-ம் தேதியும் சட்டமன்றக் கூட்டம் இருக்க வேண்டும் என்பதற்காக சொல்லப்பட்ட காரணம் இந்த வறட்சி நிலையும், காவிரி தண்ணீர் பற்றியும்தான். ஆனால் நீங்கள் சொல்வதுபோல கால் அட்டன்ஷனில் எல்லா உறுப்பினர்களும் பங்குகொள்ள முடியாது. தமிழ்நாட்டை எதிர் நோக்கும் ஒரு முக்கியமானப் பிரச்சினையாக இருப்பதால் இதைப்பற்றி விவரமாகப் பேசவேண்டும் என்பதற்காகத்தான் 10-ம் தேதியும் ஏற்றுக்கொள்ளப்பட்டது, அதற்குத் தகுந்தாற்போல ஒரு அறிவிப்பை வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்; 10ம் தேதிக்குள் சொல்லு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, 9ம் தேதியும் 10 ம் தேதியும் கூட சட்ட முன்வடிவுகளை விவ திப்பதற்கு எடுத்துக் கொள்வது என்றுதான் போடப்பட்டிருக்கிறது. அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவிற்கு இணங்க, 9ம் தேதி சட்ட முன்வடிவுகளைக் கூடுமான வரையில் முடித்துவிடுகிற சூழ்நிலையை நாம் ஏற்படுத்துவோமானால், இந்த டிஸ்கஷனை வைத்துக்கொள்ள லாம். நாளையும், நாளை மறுநாளும் நிலைமை தெளிவாகிற போது, இதைப்பற்றி மாண்புமிகு பேரவைத் தலைவரைக் கலந்து கொண்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கலாம்.

5) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) அலுவல் வரிசை மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் துணைத் தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

,'இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 5 அரசினர் சட்ட முன் வடிவுகள்-ஆய்வு செய்தல், உள்ளினம் (ii) யை ஒத்திவைத்து விட்டு கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்து, அவைகள், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

(1) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரி கள் நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு.

(2) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக்குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு.

(3) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

4) அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி

(பிற்பகல் 12·20)

(ஊ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1982.

(எ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு 1982.

(ஏ) ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு 1982.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஊராட்சிகள் பற்றிய மூன்று சட்ட முன்வடிவுகளையும் அமைச்சர் அவர்கள் மொழிந்து விட்டால் விவாதத்தை ஒன்றாக வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

(1) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு @

(2) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு @

(3) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு @ ஆகியவைகளை அறிமுகம் செய்து மேற்படி சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு, ஊராட்சிகள், தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கின்ற வகையில் அறிமுகப் படுத்தியிருக்கிற இந்தத்திருத்தத்தை, சட்டத்தை எதிர்த்து என்னு டைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இங்கே ஊராட்சி தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தையும், ஊராட்சி ஒன்றிய குழுக்களின் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தையும் நீட்டி கின்ற வகையில் இங்கே இந்த திருத்தம் கொண்டு வந்து முன் மொழியப்பட்டிருக்கிறது. வழக்கமாக இந்தத் திருத்தச் சட்டம் மக்களாட்சித் தத்துவத்திற்கு முரணாக இங்கே அறிமுகப்படுத்தப் பட்டு இருக்கிறது. இந்த மசோதாக்களில் கூறப்பட்டிருக்கிற காரண காரிய விளக்கங்கள் அமைச்சர் அவர்கள் வழக்கமாக சொல்லும் பல்லவியாகத்தான் இருக்கிறது. சென்ற முறையும் இதேபோல் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கின்ற வகையில் கொண்டுவரப்பட்ட திருத்தங்களில் இதே காரணங் களை, நோக்கங்களை கூறியிருந்தார்கள். அதேபோன்று இந்த முறையும் சொல்லியிருக்கின்ற காரணங்கள், நியாயமாக உறுப் பினர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே கூறியிருக்கிறார்கள், தனிப் பட்டோருக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு முடிவுப்படி ஒதுக்கீடு செய்வதற்கான கால அளவினையும் அளிப்பது என்ற வகையிலே இங்கே ஊராட்சி தனி அதிகாரிகளுடைய பதவிக்காலத்தை 11-3-83 வரையிலும், ஊராட்சி ஒன்றிய குழுக்களின் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை 31-3-83 வரையிலும் நீட்டிக் கின்ற வகையில் இங்கே இந்தத் திருத்தம் அறிமுகம் செய்யப்பட்

@ 1982செப்டம்பர் 3-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

டிருக்கிறது. இதற்கு இடையில் அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் எப்படியும் நாங்கள் ஊராட்சி நிறுவனங்களின் தேர்தல்களை நடத்திவிடுவோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே கொண்டு வந்திருக்கின்ற சட்டம் அமைச்சருடைய கூற்றுக்கு முரணாக வழக்கம்போல் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

இங்கே தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மலை ஜாதியினருக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து இப்போது அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டம் முறையாக வழக்கு மன்றத்திலே உள்ளவர்களாலும், சட்ட நிபுணர்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலே உள்ளதா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ஆனால் வழக்கம்போல் அமைச்சரோ அல்லது மற்றவர்களோ கூறுகின்ற நேரத்தில் எல்லாம், எதிர்க் கட்சியினர் வழக்கு போடக்கூடாது என்று ஒரு கருத்தைச் சொல்லிவிட்டுத்தான் அவர்கள் தேர்தலைப் பற்றி அடிக்கடி கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் நாட்டிலே நடப்பது என்னவென்றால், தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தில் ஊழல்கள் ஏராளமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களின் நிதி ஆதாரங்கள் தவறான முறையில் செலவு செய்யப்படுகின்றன. அங்கே உள்ள மக்கள் குழுவும் மற்ற ஆலோசனைக் குழுக்களையும் கலந்து ஆலோசிக்காமல் அந்த அதிகாரிகள் தன்னிச்சையாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் கிராமப்புறங்களில் தெரு விளக்குகள் எரிவது கிடையாது. பல்வேறு கிராமங்களில் குடிநீர் வசதி கிடையாது. சுகாதார வசதி அடியோடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையிலேதான் தனி அதிகாரிகள் பதவிக்காலத்தை நீட்டித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக குடி மராமத்து வேலைகள் இதற்கு முன்னால் செய்து கொண்டு இருந்தார்கள். இந்த ஆண்டு குடிமராமத்து வேலைகள் செய்யப்படவில்லை. மாறாக, மைய அரசு அறிவித்துள்ள என். ஆர். இ, பி. திட்டத்தின் மூலமும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாகவும் இவற்றை செய்ய வேண்டும் என்ற வகையில் அரசு அறிவித்துள்ளது. இதன் காரணமாக அந்தப் பணிகள் ஆளும் கட்சியினர் அனுபவிக்கத் தக்க வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நான் இங்கே நினைவு கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். மேலும் ஊராட்சி ஒன்றியங்கள் தன்னிறைவுத் திட்டங்களை ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒப்பந்தக் காரர்களுக்கு மட்டுமே வழங்கி, அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியில், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஒன்றியங்களில் நடைபெறும் பெரும்பாலான வேலைகள் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு தேவைப்படுகின்ற திட்டங்கள் மட்டுமே எடுத்துக்



கொள்ளப்பட்டுள்ளன. மக்களுக்கு தேவையான திட்டங்கள் எதுவும் எடுத்துக் கொள்ளப் பெறவில்லை. இதன் காரணமாக ஒப்பந்தக்காரர்கள் தங்களுக்குத் தேவைப்படுகின்ற திட்டங்களை ஆளும் கட்சியினர் விரும்பும் திட்டங்களை எடுத்துக்கொண்டு அதற்கு முன்னுரிமை கொடுத்து, அந்தப் பணிகளை நிறைவேற்றி வருகின்றனர் என்பதையும் நான் இங்கே குறிப்பாக சொல்ல விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக, 1 லட்ச ரூபாய்க்கு உட்பட்ட வேலைகள் தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட வரைமுறையின் காரணமாக முக்கியமான பல வேலைகள் எடுத்துக் கொள்ளப் பெற முடியவில்லை. மேலும், 1½ லட்சம் 2 லட்சம் என்று தேவைப்படும் முக்கியமான பணிகள் செய்யமுடியவில்லை. ரோடுகள் போடுவது போன்ற முக்கியமான பணிகள் இதிலே சேர்க்க முடியவில்லை. இப்படிப்பட்ட வேலைகளை ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதி மூலமாகச் செய்ய அனுமதி வழங்கலாம் என்று ஒன்றியங்கள் மூலமாகவும், மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் மூலமாகவும் பரிந்துரைகள் செய்து இருந்தும், இதுவரையிலும் அரசாங்கம் அதற்கு ஒப்புதல் அளிக்காததன் காரணத்தால் பல்வேறு முக்கியமான பணிகள் வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்ற முடியாமல் இருக்கின்றன என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திருவிடைமருதூரில் என். ஆர். இ. பி. மூலமாக எடுக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் இன்னும் முடிக்கப் பெறாமல், பாதியில் நின்றுகொண்டு இருக்கின்றன. குறிப்பாக 15 ஆற்றுப் பாலங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான கால்கள் எல்லாம் கட்டி முடிக்கப் பெற்றுள்ளன. ஆனால், மேற்கொண்டு அந்தப் பணிகள் செய்யப்பெறாமல், அப்படியே அறைகுறையாக நின்று கொண்டு இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் கடந்த ஓராண்டுகாலமாக இருக்கின்றன. ஆனால், இதற்கான அட்வான்ஸ் தொகைகள் முழுவதும் பொறியாளர்கள் மூலமாகவோ, அல்லது ஒப்பந்தக்காரர்கள் மூலமாகவோ பெறப்பட்டுவிட்டது என்று அறிகிறேன் என்பதையும் உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே, இப்படி குறைபாடுடைய நிலைமையில் உள்ள வேலைகளை எல்லாம் உடனடியாக செய்து முடிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். தனி அதிகாரிகள் பதவியில் இருப்பதால் ஒன்றியப்பணிகள் சரியாக நடைபெறவில்லை என்பதையும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

தற்போது ஒன்றியப்பள்ளிகள் அரசுப் பள்ளிகளாக மாற்றப்பட்டு இருக்கின்றன. தனியார் நடத்தும் ஆரம்பப் பள்ளிகளை தற்போது ஊராட்சி ஒன்றியங்களும் ஏற்றுக் கொள்ள முடியாமல் அரசு பள்ளிகளாகவும் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியாமல், நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட தனியார் நிறுவனப் பள்ளிகளையும் அரசுப் பள்ளிகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. செ. இராமலிங்கம்] [1982 செப்டம்பர் 6

திருவிடைமருதூர் ஒன்றியத்தில் என். ஆர்.இ.பி. திட்டத்தின் மூலம் வண்டுவான்சேரி என்ற இடத்தில் 5 வேலைகள் எடுத்து கொள்ளப்பட்டன, அவைகள் முடிவடைந்து விட்டன. அப்படி இருந்தும் அந்தக் கட்டிடங்கள் இன்னும் ஒன்றியத்தால் மேற்கொள்ளப்படாமல் இருக்கின்றன, எனவே அப்படிப்பட்ட கட்டிடங்களை உடனடியாக ஒன்றியங்கள் எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தனி அதிகாரிகள் பதவிக்காலத்தில் என்ன நிலமைகள் ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னால். மக்களுக்குத் தேவையான பொதுவான வேலைகள் செய்வதற்கு பதிலாக, ஆளும் கட்சிக்காரர்களுக்கு, ஒப்பந்தக்காரர்களுக்கு தேவையான வேலைகள் எடுத்துக்கொள்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பொதுப் பணித்துறை மூலமாக செய்யப்பட்டு வந்த குடிமராமத்து வேலைகள் அரசு ஆணையின் காரணமாக ஒன்றியங்களில் ஒப்படைக்கப்பட்டு அந்தப் பணிகள் என். ஆர். இ. பி. திட்டத்தின் மூலமாக எடுத்துக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சி தலைவர் சொல்லி இருந்தாலும், இதுவரையிலும் அப்படிப்பட்ட குடிமராமத்துப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதனால் விவசாயிகள் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்பதையும் உங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். எனவே குடிமராமத்துப் பணிகளை உடனடியாக என். ஆர். இ. பி. திட்டத்தின் கீழ் செய்து முடிக்க, அதற்கான ஒதுக்கீடுகளைச் செய்ய அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்,

(பிற்பகல் 12–30)

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கிராமங்களுக்கு மின்சாரம் விநியோகம் செய்ய கிராம கூட்டுறவு மின்சார வாரியம் என்ற அமைப்பு இருக்கிறது. ஊராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான தெரு விளக்குகளை பராமரிக்கின்ற பணி அந்த மின்சார விநியோகக் கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சிஒன்றிய அதிகாரிகளுக்கும் மின்சார விநியோக கூட்டுறவுச் சங்க அதிகாரிகளுக்கும் இருக்கிற உட்பூசல் காரணமாக இப்படிப்பட்ட தெரு விளக்குகள் கடந்த 6 மாத காலமாக சரியாகப் பராமரிக்கப்படாமல், அந்த விளக்குகள் எரியாமல் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட தனி அதிகாரிகள் முறையாக செயல்படாத காரணத்தால் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தப்பட்ட பணிகள் எல்லாம் தேக்கநிலையில் இருக்கின்றன. எனவே அன்றாடம் பொதுமக்களுக்குத் தேவைப்படும் இப்படிப்பட்ட பணிகளை உடனடியாகச் செய்து முடிக்க மேலும் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்காமல் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.



1982 செப்டம்பர் 6]

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இன்றையதினம் மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தமிழ்நாடு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிடையே பணியாற்றும் தனி அதிகாரிகள் நியமனம் சம்பந்தமான திருத்தச் சட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

இன்றையதினம் தமிழ்நாட்டை பொறுத்த வரையில் ஊராட்சிகள், ஊராட்சிஒன்றியங்களில் தேர்தல் நடைபெறாமல் இருக்கிற ஒரு கால கட்டத்தில் பல்லாண்டுகளாக நாம் தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறோம். அங்கே இருக்கக்கூடிய பொது மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பொது மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாத நிலையில், தனி அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயல்படும் நிலையைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைகளை அங்கே இருக்கிற கோட்ட வளர்ச்சி அதிகாரிகளும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதே நேரத்தில் ஊராட்சிகளில் மக்கள் குழுக்களை நாம் அமைத்திருக்கிறோம். அந்தக் குழுக்களை அந்த அதிகாரிகள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வது கிடையாது. அந்தக் குழுக்கள் சொல்லும் கருத்துக்களை அவர்கள் ஏற்றுக் கொள்வது கிடையாது. ஏனென்றால் தனி அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயல்படுகிறார்கள். மக்கள் குழுக்களுக்கு போதுமான அதிகாரம் இல்லை என்பதால் அந்தக் குழுக்களால் தங்களை ஒன்றும் செய்ய முடியாது என்ற எண்ணத்தால் தனி அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயல்படுகிறார்கள்; முன் பின் முரணாகச் செயல்படுகிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் என்னுடைய தொகுதியான சின்னசேலத்தில் ஒரு பகுதியில் ஒரு பணியைச் செய்து முடிக்க வேண்டியிருந்தது. அந்த கோட்ட வளர்ச்சி அதிகாரியிடமும், ஒன்றிய ஆணையாளரிடமும் இங்கே அமைச்சர் அவர்கள் வருகிறார்கள், அதற்குள்ளாக வேலையை முடிக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லியும், அமைச்சருடைய சுற்றுப்பயண விவரங்களைச் சொல்லியும் அவர்கள் செய்யவில்லை. பிறகு கோட்ட வளர்ச்சி அதிகாரியிடமும், ஒன்றிய ஆணையாளரிடமும் எனக்கு வந்த பயண நிகழ்ச்சி நிரலைக் காட்டியும் அவர்கள் செய்யவில்லை. 2—9—1982 அன்று மாண்புமிகு அவை முன்னவர் நாவலர் அவர்கள் வந்தபோது இதுபற்றி சொல்லியிருக்கிறோம். 29—8—1982 அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு, குழந்தைவேலு அவர்கள் வந்திருந்தார்கள். அப்போது என். ஆர். டி. பி.—யின் கீழ் கள்ளக் குறிச்சி ஒன்றியத்தின் தனி அதிகாரியும் ஒன்றிய பொறியாளரும் சில பணிகளைச் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அங்கே அந்தப் பொதுமக்களுக்கு தேவைப்படுகிற பணிகளை அவர்கள் செய்யவில்லை. செய்யும் உத்தேசமும் அவர்களுக்கு இல்லை. இதற்கு காரணம் அந்த அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயல்படுவதுதான். அவர்களை

கட்சு மக்கள் குழுவுக்கு அதிகாரம் இல்லை. தனி அதிகாரிகள் அமைச்சர்கள் சொல்லுகிற பணிகளை கூட செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. இது அமைச்சர்களுடைய கவனத்திற்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குத் தெரியும். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று கருதுகிறேன். நான் இதை சொல்வதற்குக் காரணம் அங்கே இருக்கிற பதட்டமான சூழ்நிலை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரியும். ஆகவே, இந்த தனி அதிகாரிகளைத் தட்டிக்கேட்ட மக்கள் குழுவுக்கு தகுந்த அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். மக்கள் குழு சொல்லுகின்ற வேலைக்ளை அந்த தனி அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டுமென்று அவர்களுக்கு உத்தரவு போடவேண்டும்.

அது மட்டுமல்லாமல், தன்னிச்சையாகச் செயல்படும் தனி அதிகாரிகளை உடனடியாக நீக்குவதற்கு விரைவிலே ஊராட்சிகளுக்கும்ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன் வணக்கம்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு சட்டப்பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு (ஊராட்சிகளுக்கு) தனி அதிகாரிகள் நியமித்தல் திருத்தச் சட்டமுன்வடிவின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். இந்த மாமன்றம் பல்வேறு முறைகளில் பல்வேறு தடவைகளில், இந்தச் சட்ட நீட்டிப்பைக் கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நம்முடைய மாநிலத்தினுடைய உள்ளாட்சித் துறைகளும் கூட்டுறவுத் துறைகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமலேயே, தனி அதிகாரிகளுடைய ஆட்சியின் கீழ் நீடிப்பது ஒரு அவல நிலை என்றுதான் சொல்ல வேண்டும்.

அரசு தன்னுடைய துறைகளிலே ஆழ்ந்த அக்கறைசெலுத்த வேண்டும் என்பதும், ஜனநாயக மரபுகளை கடைப்பிடிப்பதிலே ஜனநாயக அமைப்பிலே ஜனநாயக அமைப்புக்கு உட்பட்டு செயலாற்றுவதும் நமது நாட்டிலே மிக முக்கியமான கடமைகளாக கருதப்படுகின்றன. ஆனால் அவைகளில் நம்முடைய மாநில அரசு அக்கறையின்மையில் இருக்கிறதோ என்று எங்களைப் போன்றக் கட்சிகாரர்கள் கவலை அடைய வேண்டியிருக்கிறது.

இன்றையதினம் நம்முடைய சட்டசபை நிகழ்ச்சிகளைப் பார்த்தாலே கூட, எங்களுக்கு மிக கவலையை அளிக்கிறது. திட்டமிட்டு இன்ன தேதியில் அது கூட்டப்பட்டால் உபயோகமாக இருக்கும் என்று பார்த்து, அவைகளுக்குள்ளே அஜெண்டாக்கள் என்னென்ன என்பதைப் பார்த்து, நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதில் கூட அக்கறையின்மை இருப்பதைப் போலத்தான், இன்றையதினம் இந்த தனி அதிகாரிகள் நியமனமும் இருக்கிறது. இப்பொழுது இந்த நாம் 'தனி அதிகாரிகள்' என்று பெயர்வைத்திருக்கிறோம் இன்னும்இவர்களுடையகாலம்நீட்டிக்க



நீட்டிக்க, அந்த 'தனி அதிகாரிகள்' என்ற பெயரை எடுத்துவிட்டால் 'சர்வாதிகாரிகள்' என்றே போட்டுவிடலாம். அந்த அளவுக்கு நிலைமைகள் முற்றிக் கொண்டேயிருக்கக்கூடிய காட்சியைத்தான் நாம் பார்க்க முடிகிறது. ஆகவே, இந்தச் சட்டத் திருத்தத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன்.

ஆனால் தற்போது நிலைமை என்னவென்றால், நம்முடைய உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் சபைக்கு வெளியிலே அதிகமாகப் பேசுகிறார்கள். தேர்தல்கள் நடைபெறும் என்றெல்லாம் சொல்கிறார்கள். அனைத்து கட்சிக் கூட்டங்களை நடத்தப் போகிறோம், என்று சொல்கிறார்கள். நான் அவர்களுக்கும் அமைச்சரவைக்கும் நினைவு படுத்த வேண்டியது இல்லை என நினைக்கிறேன். கடந்த சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடக்கும்போது நாங்கள் சொன்னோம. முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலே இருக்கும்போதே நாங்கள் சொன்னோம். பலர் ரிட் மனுக்கள் போட்டு நீதி மன்றங்களுக்கு போனதினாலே தான் தடை ஏற்பட்டது, தேர்தல் நடக்கவில்லை என்ற சர்ச்சை எழுந்தபோதே, எங்களுடைய கட்சியின் சார்பாக நாங்கள் முன்மொழிந்தோம்.

அன்றைக்கே அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து பேசி விரைவிலே தேர்தலை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அப்படி மேற்கொள்ளப்படுமா என்று நாங்கள் கேள்வி எழுப்பிய நேரத்திலே அன்று சரியாக விடை அளிக்கப்படவில்லை. ஆனால் இன்றைக்கு மறுபடியும் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சியின் கூட்டத்தைக் கூட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். எதற்காக கூட்டப் போகிறார்களோ? 'யாம் அறியோம் பராபரமே'. இப்படித்தான் நாங்கள் சொல்லமுடியும்.

அன்றைக்கு ரிட்மனுக்களுக்கு போனவர்களுக்கெல்லாம் என்ன நிலைமை ஏற்பட்டது என்று எல்லோருக்கும் தெரியும். அந்தந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், அவரவர்களை, வழக்கு நடைபெறும் அன்றையதினம் நீதிமன்றத்திற்கு போகாமல் தடுத்து நின்று, இந்த தேர்தல்களை நடத்துவதற்கு முன் வரவேண்டும் என்ற சர்ச்சை எழுந்த காலத்திலே—நான் ஒன்றை இந்த மன்றத்தின் முன்னாலே சொல்லவேண்டும்— மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அப்படிப்பட்ட ஆட்சேபணை மனுக்கள் நீதிமன்றத்திற்கு போவதற்கு எங்களுடைய ஆலோசனைக்கு வந்தது, எங்களுடைய மாநில செயற்குழு அதனை நிராகரித்தது என்று நான் இந்த மன்றத்திலே சொல்லியாகத்தான் வேண்டும்.

குமரி மாவட்டத்தில் மேல்புரம் பஞ்சாயத்து யூனியனை திடீர் என்று பெண்கள் ரிசர்வ் சீட்டாக மாற்றினார்கள். ஏற்கெனவே குமரி மாவட்டத்திலே குருந்தங்கோடு பஞ்சாயத்து யூனியன் பெண்கள் ரிசர்வ் சீட்டாக இருந்தது. ஆளுங் கட்சியினுடைய நண்பர் ஒருவர் தலைவராக வரவேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையில் அப்படி மாற்றப்பட்டது என்று சொல்கிறார்கள் பெரிய இடத்திலே, அது பற்றி தற்போது பிரச்னை இல்லை.

ஒரு 4,5 ஆண்டுக் காலத்திலே அவை மாற்றத்திற்குள்ளாக வேண்டியதாக இருக்கும். ஆகவே ரிட் மனுக்கள் போட வேண்டாம் நீண்ட காலமாக பஞ்சாயத்து யூனியன் தேர்தல்கள் நடைபெறாமல் இருந்து, இப்போது நடப்பதை நாம் தடுத்தோம் என்ற அவப் பெயர் நமக்கு வரக்கூடாது என்று நாங்கள் அன்றைக்கே ரிட் மனுக்கள் போடுவதை எங்கள் கட்சியளவில் தடுத்து நிறுத்தினோம்.

அன்றைக்கே எதிர்க்கட்சியினரும், ஆளும் கட்சியினரும் உட்கார்ந்து இது பற்றி பேசியிருந்தால், இந்தப் பிரச்னையைத் தீர்த்திருக்க முடியும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட, எதிர்க்கட்சிகள் அன்றையதினம் ரிட் மனுக்கள் போட்டதினாலேதான், தேர்தல்கள் தடைபட்டுவிட்டன என்ற ரீதியிலே பேசுவதுகூட ஆட்சேபிக்கத் தக்கது. ஆளும் கட்சியின் சார்பாகவே பலர் ரிட் மனுக்கள் போட்டதும், அது சம்பந்தமான வழக்குகளுக்கு அன்றைக்கு ஆளும் கட்சியை சேர்ந்த வழக்கறிஞர்கள் ஆஜரானதும், தமிழ்நாடு முழுவதும் அறிந்திருக்கிற ஒரு பெரிய உண்மையாகும். ஆகவே, இன்றையதினம் உடனடியாக அந்தத் தேர்தல்களை நடத்த வேண்டிய தேதிகளை பற்றி முடிவெடுக்க வேண்டியது இந்தமாமன்றத்தினுடைய கடமை. ஆகவே, இதற்கு முன்னாலே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலுரை அளிக்கும்போது, இதற்கு உறுதியான தெளிவான முடிவு ஒன்றை அறிவிப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

இப்போது இருக்கும் அமைப்புகளினால் என்ன நிலைமை இருக்கிறது? அல்லது என்ன நன்மை ஏற்பட்டு விட்டது? தன்னிறைவுத் திட்டத்தை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறோம். ஆனால் அது பற்றி ஊரில் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று நான் அமைச்சர் அவர்களிடம் சொல்லியாக வேண்டும். தன்னிறைவுத் திட்டம் என்பது நம்முடைய மக்களுக்கு தன்னிறைவு அல்ல, சில நபர்களுக்கு தன்னிறைவு உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்று ஊரில் பேசிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட வகையில் நிர்வாக அமைப்புகள் சீர்குலைந்து இருக்கும்போது, அதை இன்றைக்கு கட்டிக்காக்கும்படியான, தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாதபோது ஆளுகின்ற அரசர்களாகத்தான் இன்றைக்கு தனி அதிகாரிகள் மாறிக் கொண்டிருக்கிறார்கள். ஊழலுக்கும் ஊதாரித்தனத்திற்கும் அது இடம் அளிக்கிறது. அங்கே போடப்பட்டிருக்கிற ஆலோசனைக் குழுக்கள் கூட இன்றைக்கு உதாசீனமாக இருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்கு தெளிவு படுத்தியாக வேண்டும்.

(பிற்பகல் 12—40)

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஞாபகப் படுத்த விரும்புகிறேன். கோயம்புத்தூர் மாவட்டம் அவருடைய மாவட்டம். அந்த மாவட்டத்திலே கோயம்புத்தூர் நகரிலேயே இருக்கக்கூடிய கார்ப்பரேஷனின் ஆலோசனை குழுக் கூட்டம்



நடந்து ஓராண்டுகளுக்கு மேல் ஆகின்றது. இப்படி நிலைமை இருந்தால் எப்படி ஆலோசனைகளைச் சொல்ல முடியும் என்பதை கவனிக்க வேண்டும். இப்படியே 6 மாதங்கள் 9 மாதங்கள் என்று ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடப்பதே இல்லை. ஒரு வேளை இப்போது சட்டமன்றக் கூட்டம் நடந்து கொண்டிருப்பதால் இந்த நேரத்திலே அந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் நடக்கக்கூடும். ஏனென்றால் இப்போது கூட்டினால்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் வந்து கலந்து கொள்ளமுடியாது. அவர்களால் உரிய ஆலோசனைகளை தர முடியாது, இப்படிப்பட்ட சமயம் பார்த்துதான் நடத்துவார்கள். இதுதான் ஆலோசனைக் குழு கூட்டத்தின் லட்சணம்.

அடுத்து இப்போது கடுமையான குடி தண்ணீர் பிரச்சினை இருந்து வருகின்றது. மாண்புமிகு அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் இங்கே இல்லை. அவர் கோபமடைகிறார். அவர்கள் தண்ணீர் தண்ணீர் சினிமாவைப் பற்றி அதிகமாக பேசியிருக்கிறார்கள். அந்தப் படத்தின் உள்ளே நான் போகவில்லை. ஆனால் தண்ணீர் நெருக்கடி தமிழ்நாட்டில் இருக்கின்றது என்று சொல்வது பாவமா? அந்த தண்ணீர் நெருக்கடியினைத் தீர்க்க வேண்டியது நாம் செய்ய வேண்டிய ஒரு அடிப்படையானகடமை. அந்தக் கடமையைச் செய்யாத பாவத்தின் காரணத்தால் சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆகியும் நமது மக்கள் அந்த பாவத்தை அனுபவித்து கொண்டிருக்கிறார்கள், குடிதண்ணீர் கூட இல்லாமல். நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் ஊர்வலம் நடத்துகிறார்கள் தனி அதிகாரிகள் இதனை எப்படி கவனிப்பார்கள்? அமைச்சர் அவர்களிடத்திலே வற்புறுத்தினால் மக்களின் பிரதிநிதி என்றவகையிலே அவர்கள் கவனிப்பார்கள். ஏனென்றால் அவர்கள் மக்களிடத்திலே சென்று அப்போதுதான் மீண்டும் ஓட்டுக் கேட்க முடியும். சேடப்பட்டியாக இருந்தாலும், ஆண்டிப்பட்டியாக இருந்தாலும் திருமங்கலமாக இருந்தாலும் தற்போது கடுமையான குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. குடிதண்ணீர் பிரச்சினை தமிழகத்தில் இல்லையா? இந்தக் குடிதண்ணீர் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை இல்லையா? இதனைத் தனி அதிகாரிகள் எவ்வாறு நிறைவேற்றுவார்கள்? சாதாரணமான பிரச்சினையா இது? இது அமைச்சர் திரு இராகவானந்தம் அவர்கள் மட்டும் சம்பந்தப்பட்ட பிரச்சினையா? இன்றைக்கு உள்ளாட்சித்துறையின் மூலமாக ஒவ்வாரு இடத்திலும் 200, 300 ரூபாய் செலவு செய்து உடனடியாகத் தண்ணீர் கொடுக்கலாம். அப்படித் தண்ணீர் கொடுக்கக்கூடிய சூழ்நிலை கூட இல்லை. ஒரு பஞ்சாயத்து யூனியனின் எல்லா வேலைகளையும் கவனிப்பதற்கு ஒரு ஃபிட்டர் இருந்தால் அவர் எப்படி வேலைகளைக் கவனிக்க முடியும்? ஒரு நாளைக்கு ஒரு ரிப்பேர் கூட அவரால் செய்யமுடியாது. ஆகவே இதைப்பற்றி எல்லாம் ஆலோசனை சொல்வதற்கும், அதுபற்றி எல்லாம் விவாதித்து அவற்றை சீக்கிரமாக நிறைவேற்றுவதற்கும் உள்ளாட்சி மன்றங்கள் செயல்பட வேண்டாமா? அப்படி அவை செயல்படவில்லை என்றால் நாட்டின் ஜனநாயக

மே நாசமாகி விடுமே. எந்த கட்சி ஆட்சிக்கு வருகிறது என்பது பிரச்சினை இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆட்சிக்கு வருகிறார்கள். அவர்களை மாற்றவேண்டும் என்றால் மக்கள் அவர்களை மாற்றுவார்கள். ஆகவே எந்த கட்சி என்பது பிரச்சினை அல்ல. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஆட்சி வந்து நான்கைந்து ஆண்டுகள் ஆகியும் இப்படிப் பட்ட நிலைமை நீடித்தால் அது நமக்கு நல்லதா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஜனநாயகத்திற்கு நல்லதா நமக்கு நல்லதா என்று பார்க்க வேண்டும். 71 சென்சஸ் 81 சென்சஸ் என்று சட்டத்தைப் போட்டு குழப்பி, குழப்பி ஊரிலே இருப்பவர்களை ஏழை வைக்காதீர்கள். அப்படிச் செய்வது சரியான தேயல்ல. ஆகவே தேர்தலை விரைவிலே நடத்துவதற்கு இந்தச் சட்டமுன்வடிவின் மீது நடைபெறும் விவாதம் உதவ வேண்டும். இருக்கின்ற குறைபாடுகள் எல்லாம் நீக்கப்பெறவேண்டும்.

ஆலோசனைக் குழுக்கள்மாதத்திற்கு ஒருமுறையாவது கூட்டப் பட வேண்டும். தற்போது பல லிஸ்ட்கள் கொடுக்கிறார்கள். சத்துணவுத் திட்டம் என்றெல்லாம் சொல்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கு ஆயா போடுவது ஹெல்பர்ஸ் நியமிப்பது போன்ற வற்றில் எல்லாம் பல்வேறு ஊழல்கள் நடப்பதாக தெரிய வருகின்றது இதையெல்லாம் தடுக்க வேண்டும் என்றால் மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் தான் முடியும்ஆகவே இதில் உள்ளாட்சித் துறைஅமைச்சர் அவர்களுக்கு மட்டும் பொறுப்பல்ல. அமைச் சரவைமுழுவதும் சேர்ந்துஜனநாயக முறையில் காரியத்தைச் செய் கின்ற வகையிலே விரைவிலே தேர்தலை நடத்துவதற்கான ஒரு அறிவிப்பும் இந்த சட்ட முன் வடிவுக்கான விவாதத்திலே வர வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நமது உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 1982-ஆம் ஆண்டு ஊராட்சி தனி அதிகாரிகள் நியமன இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த சட்டமுன்வடிவைப் பொறுத்த வரையிலே ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத்தொடரிலும் அமைச்சர்கள் கொண்டுவருவதும், உறுப்பினர்கள் பேசுவதும் என்ற வகையிலே ஒரு நிகழ்ச்சி நிரலாகத் தொடர்ந்துகொண்டிருக் கின்றது. எனவே தேர்தல் வரும் என்று அமைச்சர்கள் உறுதி கூறுகிறார்கள் சட்டசபையிலே. கண்டிப்பாக வருமா என்று கேட்டால் கண்டிப்பாக வரும் என்று உறுதிய வாக்குறுதி தந்து நடக்கும் என்று சொல்கிறார்கள். இப்படி எல்லாம் அறிவித்து அனேகமாக ஆளும் கட்சியைத் தவிர மற்ற எல்லா கட்சியினரும் தேர்தலுக்கான நாமினேஷன்களை எல்லாம் கொடுக்கின்றார்கள். நாமினேஷனை வாபஸ் வாங்குகின்ற நேரம் வரையிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாமினேஷன் கொடுக்கவில்லை.

ஆனால், ஒரு தினத்திற்கு. மறுநாள் கோர்ட் தடை செய்து விட்டது. ஆனால் இப்படி கோர்ட் தடை செய்கிறபோது, இந்த சட்டசபையிலே ஒரு சட்டத்தைப் பிறப்பிக்கின்றபோது



அரிசனங்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு என்று வருகின்ற போது, அநேகமாக எல்லாக் கட்சிகளும் இதனை வரவேற்று ஆதரவு அளித்தார்கள், அப்படி ஆதரவு அளித்தற்குப் பின்னர் கொண்டு வந்த சட்டத்தில், பெண்களுக்கும், அரிசனங்களுக்கும் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் சரியாக ஒதுக்காமல், அதிலே இருக்கக்கூடிய ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு, தேர்தலை தடை செய்தார்கள். ஆனால் அந்தத் தடைக்குப் பின்னர், தடை நீங்கியதற்குப் பின்னர், முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். யாரும் கோர்ட்டுக்குப் போகாமல் இருந்தால், நிச்சயமாக தேர்தல் நடைபெறும் என்று அறிவித்தார்கள். நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விரைவிலே தேர்தல் நடைபெறும், மற்ற எதிர்க் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி தேர்தல் நடைபெறும் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார் கள், ஆனால் அப்படி தேர்தல் வருமென்று அறிவித்தவுடன், பொது வாக தமிழ்நாட்டு மக்கள் தேர்தல் வராது என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஆளுங் கட்சி சார்பிலே ஒரு அமைச்சர் அவர்களும் அமைச்சரவையும் அறிவித்தும் மக்கள் நீண்ட காலம் எதிர்பார்த்திருந்த தேர்தல் மக்கள் நம்பிக்கை இழக்கக்கூடிய அளவுக்கு, இந்த தேர்தல் வாக்குறுதி காற்றில் பறந்து கொண்டிருக்கிறது. எதிர்காலத்திலாவது, தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்கள் நலனைக் கருதி, உறுதியாக எதிர்க் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி, தேர்தலை நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

அதே நேரத்தில், இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலேயும் தேர்தல் கிடையாது. இன்றைக்கு மக்களுக்கு செய்யக்கூடிய குடி தண்ணீர், கிராம சாலைகள், மின்விளக்கு போன்ற வசதிகள் மிக மிக முக்கியமானவை. இன்றைக்கு தேர்தல் இல்லாத காரணத்தினால், தனி அதிகாரிகளின் காலம் நீடித்துக்கொண்டே வருகிறது. மக்கள் குழு என்று ஒன்றை அமைத்தோம். அந்த மக்கள் குழுவைக் கூட்டுவதே கிடையாது. அப்படி இடையில் அந்தக் குழுவைக் கூட்டுகின்றால் அறிவிப்பு வரும் அந்தக் குழுவின் கூட்டத்திற்குப் போகலாம், அங்கு ஆலோசனை கூறலாம் என்று நினைக்கும்போது, அடுத்த நாளே ஒரு அறிவிப்பு வரும். கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று. இப்படி மக்கள் குழு கூடுவதே இல்லை. மக்கள் குழுவின் உறுப்பினர்கள் தங்கள் ஆலோசனைகளை வழங்குவதற்கு தனி அதிகாரிகள் இடம் அளிப்பதில்லை; சந்தர்ப்பம் அளிப்பதில்லை; எனவே தனி அதிகாரி கள் என்று சொல்லுகிறபோது, தன்னிறைவுத் திட்டம் ஒரு முக்கியமானத் திட்டம். குறிப்பாக, ஒரு ஒன்றியத்திற்கு 50 இலட்சத்திற்கு மேல் செலவு செய்கிறோம். இந்த 50 இலட்ச ரூபாயை, குடிதண்ணீர் சாலைகள் போக்கு வரத்து, பள்ளிக் கட்டிடங்கள், சிறு பாலங்கள் இப்படி நல்ல வேலைகளை அமைந்திருக்கக் கூடிய இந்த தன்னிறைவுத் திட்டத்திலே, ஒரு பள்ளிக் கட்டிடத்தைக் கட்டி முடிக்கிறார்கள். அது எத்தனை ஆண்டுகளுக்கு நிற்கும் என்று சொல்ல முடியாது. என்னுடைய தொகுதியில் பள்ளிக் கட்டிடம்

கட்டுகிறார்கள். நான் அதைச் சுற்றிப் பார்த்தேன். அதிலே எந்த அளவுக்கு சிமெண்ட் போடவேண்டுமோ, அந்த அளவிற்கு சிமெண்ட் போடுவது கிடையாது. வெளி மார்க்கெட்டிலே அந்த சிமெண்ட் விற்கப்படுகிறது. இதை சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுகிறபோது, அதிகாரிகள் நாங்கள் கவனிக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இப்படிப் பெரும்பாலான வேலைகள் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு நிறைவேற்றுவதற்குப் பதிலாக சிலநபர்களுக்காக தன்னிறைவுத் திட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது. காரணம், ஊராட்சி ஒன்றியங்களிலே தேர்தல் நடந்து அதிலே பெருந்தலைவர்கள் இருந்தால், அதன் கவுன்சில் உறுப்பினர்கள் இருந்தால் ஒவ்வொரு மாதமும் கூட்டத்தைக் கூட்டுவார்கள். அந்த வேலைகள் எல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்று பார்ப்பார்கள். அந்த வேலைகள் சரிவர நடைபெறும். இந்தப் பணமும் ஒழுங்காக செலவு செய்யப்பட்டு மக்களுக்கு அதனால் பயனளிக்கும். எனவே, இன்றைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கிடையாது. எனவே ஊராட்சி ஒன்றியங்களில் இன்றைக்கு தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். 3 பஞ்சாயத்திற்கு ஒரு அதிகாரி என்றிருக்கிறார் 3 பஞ்சாயத்திற்கு ஒரு அதிகாரி என்று சொன்னால், கை பம்பு போட வேண்டுமென்று கேட்டால், மின் இணைப்பு அணைந்து விடுகிறது என்று சொன்னால், அந்த அதிகாரிக்கு நம் எழுதி, அதை அந்த ஊராட்சி ஒன்றிய ஆணையர் பார்த்து, அவர் அதற்குரிய ஈ.ஓ.யிடம் கொடுத்து, அந்த அதிகாரிக்கு ஆணையிட்டு, அதை அவர் பார்ப்பதற்குள் ஆறு மாதங்கள் ஆகிவிடும். எனவே இதனால் கிராம மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைப்பதில்லை. மாதத்திற்கு ஒருமுறை சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்கு ஜீப்பை எடுத்துச் சென்றால், எங்களிடம் ஆயிரக்கணக்கான மனுக்கள் கொடுக்கப்படுகிறது.

(பிற்பகல் 12.50)

ஆகவே இன்றைக்கு மின் விளக்குகள் சரியாக எரியவில்லை என்று ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே சொல்லாமல் இருக்கலாம். காரணம் ஆளும் கட்சி அமைச்சரவையிலே இருக்கிறது. ஆனால் மனச்சாட்சிப்படி கை வைத்துப் பார்த்தால் எல்லா தொகுதியிலுள்ள கிராமங்களிலே அதிகாரிகள் சரியாக செயல்படுவது இல்லை. அதற்கு மாறாக அதிகாரிகள் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் அமர்ந்து கொண்டு அங்கிருந்து பில் போட்டு பணத்தை செலவு செய்து விடுகிறார்கள். ஆனால் கை பம்புகள் வேலை செய்வது இல்லை. மின் விளக்குகள் அணைந்து இருக்கிறது. சென்ற ஆண்டு தன்னிறைவு திட்டத்தின் மூலம் போட்ட சாலைகள் இப்போது ஒன்று கூட நன்றாக இல்லை. அதே போல் குடிநீர் வாரியத்தின் மூலம் தன்னிறைவு திட்டத்தின் கீழ் ஓவர்ஹெட் டாங்குகள் போடப்பட்டன. என் தொகுதியில் 100 ஓவர்ஹெட் டாங்குகள் கட்டப்பட்டன. குறிப்பாக என்னுடைய கிராமத்திலே கோபாளப்பேட்டையிலே, ஒரு ஆண்டு ஆகிறது, டீ.டீ.சியில் தீர்மானம்



கொடுத்தேன். ஒரு மாதத்திற்குள் தண்ணீர் கொடுக்கப்பட்டு விடும் என்று சொல்லப்பட்டது. ஒரு ஆண்டு ஆகியும் ஓவர்ஹெட் டாங்க் அப்படியே நிற்கிறது, தண்ணீர் வரவில்லை. கிராமமே இன்றைக்கு நிலைகுலைந்து இருக்கிறது. தனி அதிகாரிகள் இன்றைக்கு சரியாக கவனிப்பது கிடையாது. எனவே ஊராட்சி மன்றத் தேர்தலையும், ஊராட்சி ஒன்றியத் தேர்தலையும் விரைவில் நடத்தி மக்கள் பிரதிநிதிகள் வந்தால் தான் இந்த அரசாங்கத்தாலே கொடுக்கக்கூடிய கோடிக்கணக்கான ரூபாய் செம்மையாக செலவழிக்கப்படும். மக்களுக்குத் தேவையான குடிநீர், மின்விளக்குகள், சாலை போக்குவரத்து எல்லாம் அமைத்துத் தரமுடியும். எனவே நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து இந்த தனி அதிகாரிகளுக்கு கால நீட்டிப்பு கொடுப்பது என்பது சரியில்லை என்று சொல்லி இந்த மசோதாவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வன்மையாகக் கண்டிப்பதோடு, அமைச்சர் அவர்கள் இதர கட்சிகளுடைய ஆதரவைப் பெற்று தேர்தலை விரைவாக நடத்த முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் இன்றைக்கு பேரவை முன்னால் வைக்கப்பட்டிருக்கின்ற இந்த 3 திருத்த மசோதாக்கள் மீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை சுருக்கமாக உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய எங்களுடைய பேரியக்கத்தின் உறுப்பினர் மாண்புமிகு சிவராமன் அவர்களும் இந்த அணியிலே இருக்கின்ற மற்ற உறுப்பினர்களும் விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே இந்த திருத்த சட்டங்களின் மீது காரண காரிய விளக்கத்தை சொல்கின்ற நேரத்திலே 1981 ஆம் ஆண்டுக்கான மக்கட்தொகை விவரம் வந்திருக்கிறது என்ற காரணத்தாலே ஒரு ஆண்டு அல்லது ஒரு ஆண்டு, ஒரு மாதம் என்று சொல்லி இந்தத் தனி அதிகாரிகள் கால வரம்பு நீட்டிக்கப்பட்டது. நான் உங்கள் மூலமாக நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வது எல்லாம் பல்வேறு கால கட்டங்களிலே இந்த நீட்டிப்பு மசோதாக்கள் இந்த மன்றத்திலே கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அவர்கள் கொண்டுவரக்கூடிய இந்த மசோதாவே கடைசி மசோதாவாக இருக்கவேண்டும் என்று இதற்குள்ளாகவே தேர்தல் நடைபெற வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால் 1971 ஆம் ஆண்டிலே மக்கள் தொகை கணக்கு எடுக்கப்பட்டது. இப்போது 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கு எடுக்கப்பட்டது. இது 1991 ஆம் ஆண்டு என்று போய்விடக் கூடாது என்று நான் இதை உங்கள் மூலமாக குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட கோட்டையிலே பேசுகின்றபோது கடந்த ஆண்டு என்று நினைக்கிறேன், ஒரு ஆண்டுக்குள் ஊராட்சித் தேர்தல் வரும் என்று சொன்னார்கள். அதையே மீண்டும் இந்த ஆண்டு கூட கோட்டையிலே பேசுகின்ற நேரத்திலே இந்த ஆண்டுக்குள்ளே தேர்தலை கொண்டு

வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். வெகு விரைவாக எவ்வளவு விரைவாகக் கொண்டு வரமுடியுமோ அவ்வளவு விரைவாக தேர்தலை கொண்டு வரவேண்டும். அப்படி இல்லாமல் உச்ச நீதிமன்றத்திற்கு யாரும் போகாமல் இருந்தால் ஊராட்சி மன்றத் தேர்தல் வெகு விரைவாகக் கொண்டுவரப்படும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசியதாக பத்திரிக்கையிலே நான் பார்த்திருக்கிறேன் ஒரு முறை அல்ல இரண்டு முறை அல்ல திரும்பத் திரும்ப அவர்கள் அப்படிச் சொல்வதைப் பார்த்தால் எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. மறைமுகமாக யாராவது உச்ச நீதிமன்றத்திற்குப் போக வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்களா இப்படி திரும்பத் திரும்ப சொல்கிறார்களே என்று. சட்டம் என்று வந்தால் திட்டம் என்று கொண்டு வந்தால் நீதிமன்றத்திற்கு நிச்சயமாக போகத்தான் செய்வார்கள். நீதிமன்றத்தில் நிற்கக்கூடிய சட்டமாக கொண்டு வரவேண்டுமே தவிர யாரும் நீதிமன்றத்திற்கு போகாமல் இருந்தால் கொண்டு வருகிறோம்; நீதிமன்றம் போகாமல் இருந்தால் கொண்டு வருகிறோம்; என்று சொல்வது அவ்வளவு நல்லவாதம் ஆகாது. விரைவாக தேர்தலை இந்த அரசாங்கம் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் சொன்னதைப் போல மக்கள் குழுக்களை இன்றையதினம் நியமனம் செய்து இருக்கிறார்கள். நகராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் அந்தமாதிரியான குழுக்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று சொல்வதை விட செயலற்று இருக்கின்றன என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். பல்வேறு இடங்களிலும் — வேண்டுமானால் உதாரணங்கள் தரமுடியும் அமைச்சர் விரும்பினால்— இந்த 5 மாத காலமாக மக்கள் குழுக்கள் கூட்டப்படாமல் இருக்கின்றன. நாங்கள் வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே, வட்ட வளர்ச்சி அதிகாரிகளைச் சந்திக்கின்ற நேரங்களிலே இப்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால் மக்கள் குழுக்களை விரைவிலே கூட்டவேண்டுமென்று பலமுறைகள் எடுத்துச் சொன்னதற்குப் பிறகு இப்போது கூட்டப்படுகிறது. அப்படி கூட்டப்படுகிற நேரத்திலேகூட முறையான விவரங்களை, தேவையான அஜண்டா போன்ற விவரங்களை கொடுக்கிறார்களா என்றால் இல்லை என்பதை நான் வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏதோ பேருக்காக 3 வரிகளில் ஒரே பேப்பரில் எழுதிக்கொடுத்துவிடக்கூடிய சடங்கு போல நடத்தப்படுகிறதே தவிர மன்றக் கூட்டங்களிலே உறுப்பினர்கள் என்ன சொன்னார்கள், அந்தப் பணிகள் நடக்கின்றனவா, தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா என்பனபோன்ற விவரங்களை எங்களுக்குத் தருவதில்லை.

இங்கே தன்னிறைவுத் திட்டம் பற்றிச் சொன்னார்கள். இன்னொரு சமயத்தில் நான் அதைப்பற்றி விரிவாகச் சொல்ல வேண்டும். தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் வேலைகளை எடுக்கிறபோது, ஒரு ஒன்றியத்திற்கு என்ன என்ன வேலைகள் செய்யப்படவேண்டுமென்பதைப் பட்டியல் போட்டு அந்த தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரின் கையெழுத்தைப் பெற்ற பிறகு தான் அந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும் என்ற



நிலைமை இருக்கிறது என்று நான் கருதுகிறேன். என்னிடம் அப்படித்தான் வாங்கினார்கள். இன்ன வேலையை எடுத்துக் கொள்ளலாம் என்று நங்கள் கையெழுத்து போட்டு, நிதி ஒதுக்கம் எல்லாம் செய்த பிறகும் கூட தனி அதிகாரிகளால் அந்த வேலை செய்யப்படாமல் விடப்படுகிறது. உதாரணத்திற்கு மட்டும் ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். திருமங்கலம் தொகுதியிலே கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்திலே சென்னம்பட்டியிலிருந்து பேய்குளத்திற்கு ஒரு பாலம் கட்டும் வேலை எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்து அந்தப் பட்டியலில் சேர்த்து நிதி ஒதுக்கம் செய்த பிறகு மக்கள் குழு ஒப்புதல் தந்த பிறகும்கூட யாருக்கும் தகவல் கொடுக்காமல் அந்த வேலை எடுத்துக்கொள்ளப்படாமல் விடப்பட்டிருக்கிறது. நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கடந்தமுறை நடந்த சட்டமன்றக் கூட்டத்தன்போது தனியாக ஒரு கடிதம் எழுதி அந்த வேலை எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று சொல்லியும் அது எடுத்துக் கொள்ளப்படும் என்று மக்களுக்குச் சொல்லியும்கூட இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதை நான் வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்......

திரு. இரா. கருப்பைய்யா: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே கையெழுத்து பெற்று அந்தத் திட்டங்கள் இறுதியாக்கப்படுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தமாதிரி நடைமுறை எங்கேயும் இல்லை. தவறான தகவலை சபைக்கு அளிக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னைவிட அனுபவத்தில் மூத்த உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள். இந்தமாதிரி நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்ற காரணத்தினாலே நான் சொன்னேன். தவறான தகவலை சபைக்குக் கொடுக்கும் பழக்கம் எனக்கும் இல்லை, என் கட்சிக்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தமாதிரி நான் கையெழுத்துப் போட்டிருக்கிறேன் என்பதை மீண்டும் உறுதிசெய்கிறேன். ஆனால் கொடுத்தமாதிரி நடக்கவில்லையே என்ற ஆதங்கத்தில் நான் பேசுகிறேன், அவர் கொடுப்பதற்கே இல்லை என்று சொல்கிறார். தன்னிறைவுத் திட்டம் என்றாலே ஆண்டாண்டுகாலமாக செய்துமுடிக்காமல் இருக்கின்ற திட்டங்களை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான். அந்த வேலைகளைப் பொறுத்தவரையில் நம் நேரிலே போய்ப் பார்த்து, பட்டியல் போட்டுக் கொடுத்து, நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்து பிறகு ஒரு அதிகாரி அதைச் செய்யாமல் விட்டுவிடுகிறார் என்றல் அதைப்பற்றி மக்கள் குழுவிற்குச் சொல்ல வேண்டும், சட்டமன்ற உறுப்பினருக்குச் சொல்லவேண்டும். அவ்வாறில்லாமல் அந்தப் பணத்தை எடுத்து வேறு ஆகாத வேலைகளுக்குச் செலவழித்துவிடுவது என்றால் மக்கள் மத்தியில் நாங்கள் அறிந்த உறுதி என்ன ஆவது? மக்களிடம், நானும் அமைச்சரிடம் சொல்லி யிருக்கிறேன், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று த்சொன்னதற்குப் பிறகு இப்படி தான் தோன்றித்தனமாக அதிகாரி செயல்படுகிறார் என்றால் ...

(பிற்பகல் 1.00)

எடுக்கப்படவேண்டும். இப்படி நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். சத்துணவுத் திட்டம் இப்போது வந்திருக்கிறது. சத்துணவுத் திட்டத்திலே எவ்வளவு வேகமாக பணியாட்களை நியமித்தார்கள்; எவ்வளவு பரபரப்போடு செய்யப்பட்டது என்பதையெல்லாம் பின்னாலே விவரமாக வைத்துக்கொள்ளலாம். எனக்குள்ள ஒரே மனக்குறை எல்லாம் — இந்த இடத்தில் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். பாலசேவிகாக்கள் நியமனம் செய்வதிலே குழு நியமித்தார்கள். முழுக்க முழுக்க அதிகாரிகள் அடங்கிய குழு என்று சொன்னால் நமக்கு கருத்து வேறுபாடு அதிகமாக இருக்கமுடியாது. ஆனால் அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்கள் என்று சொல்லி ஒரிரு ஒன்றியங்களிலே சட்டமன்ற உறுப்பினர்களை — அந்தப் பகுதியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களைப் போட்டுவிட்டால் பரவாயில்லை, ஆனால் ஒரு டிவிஷன் என்று சொல்லி ஒரு சட்டமன்ற உறுப்பினரைப் போட்டிருப்பதாக நான் அறிகிறேன். அப்படி போட்டதாலே என்ன காரணத்திற்காக அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்களை போடுகிறார்களோ அந்தப் பலன் நிறைவேறாமல் போய்விடுகிறது. ஒரு டிவிஷனுக்கு ஒருவர் என்று போட்டால் அதைப்பற்றி தெரிவதற்கான அதிகமான வாய்ப்பு இருக்க முடியாது. ஆகையால் இப்படிப்பட்ட சமயங்களில் — நாங்கள்தானே கடைசியாக மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். எங்களுக்குப் பின்னாலே மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் யாரும் வரவில்லை. அப்படி இருக்கிறபோது குழுக்கள் போடுகிறபோது ஏன் இந்த பாரபட்சம்? நகராட்சிகளில் சத்துணவுத் திட்டம் 15 ஆம் தேதியிலிருந்து அமல்படுத்தப்பட இருக்கிறது. அதற்கான பாலசேவிக்காக்கள் நியமனக் குழு வந்தது. அப்படி நியமனக் குழு வருகிறபொழுது சட்டமன்ற உறுப்பினர்களை விடுத்து விட்டு வேறு சிலரை நியமனம் செய்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகளுக்கு இந்த அரசு கொடுக்கிற மரியாதை, மதிப்பு இவ்வளவு தானா என்று கேட்க விரும்புகிறேன். வேண்டுமென்றே சட்டமன்ற உறுப்பினர்களைப் புறக்கணித்து, அவர்களுக்கு யாரைப் போட்டால் பொருத்தமாக இருக்குமோ அவர்களை அந்தத் திட்டத்திலே போடுகிற முறை நல்லதல்ல. வருகிற காலங்களிலாவது அது மாற்றப்பட வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல பல்வேறு பிரச்னைகள் இன்றையதினம் கிராமங்களில் இருக்கின்றன. மக்கள் பிரதிநிதிகள் ஊராட்சி ஒன்றியங்களிலே, நகராட்சிகளிலே இல்லாத காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்களுடைய முக்கால்வாசி பொழுதுமே இந்த உள்ளாட்சி விவகாரங்களிலேதான் செலவிடப்பட வேண்டியிருக்கிறது. வறட்சியாக இருக்கிற இந்தக் காலங்களில் நாம் கிராமங்களுக்கு போவோமானால் தண்ணீர் பிரச்னை அங்கே தலை தூக்கி இருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் சொன்னதைப் போல கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுக்கிற முயற்சியிலே அரசாங்கம் மிக அவசியமாக, அவசரமாக போர்க்





கொள்ளுங்கள். அதிலும்கூட, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்று போடுகிறார்கள். அதிலே எங்களுக்கு இருக்கின்ற வருத்தம் எல்லாம், தமிழகத்திலே ஏறக்குறைய 200 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வரக்கூடிய வகையில் கள்ளுக்கடைகள். சாராயக்கடைகளைத் திறந்துவிட்டு, மக்களிடமிருந்து பெற்ற இதுமாதிரிப் பணத்தைக் கொண்டு 100 கோடி ரூபாய் கொடுக்கும்பொழுது அதைப்பற்றி பிரபல்யமாகப் பேசுகிறீர்கள். இப்பொழுது அவைக்குள்ளே முதலமைச்சரவர்கள் வந்திருக்கிறார்கள் நான் அவர்களைக் கேட்கிறேன், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்று சொல்வது போல், முதலமைச்சர் சாராயக் கடை நம்பர் ஏழு என்று போடத் தயாரா? மக்களைக் கருத்துக் குருடர்களாகக் கருதி, அவர்களுடைய பலகீனத்தைப் புரிந்து கொண்டு நீங்கள் செயல்படுகிறீர்கள்? 200 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்றால் 2,000 கோடி ரூபாய்க்குக் குடிப்பார்கள் ஒரு ஆண்டிலே என்று பொருள்......

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு மரியாதைக்குரிய நண்பர் திரு. என் எஸ். வி. சித்தன் அவர்கள் ஒரு நல்ல பிரச்னையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். (குறுக்கீடு) அவர்கள் பேசியதன் விளைவுதான் கொறடா அவர்கள் குறுக்கிட வேண்டிய அவசியம் வந்தது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டத்தைக் கொண்டு வந்தது சரியா இல்லையா என்பது வேறு; திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற முறை சரியா இல்லையா என்பது வேறு. நடைமுறைப்படுத்துவதில் பாரபட்சம் காண்பிக்கப்பட்டது என்பது குற்றச்சாட்டு. ஒரு திட்டத்தில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு, அந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக இருக்கின்ற ஒரு குழுவிலே இடமளிக்க நியாயம் இல்லை என்பது கொறடாவின் பதில்.

இதைப்பற்றி மதிப்புக்குரிய திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் குறிப்பிடும்பொழுது காமராஜ் கொண்டுவந்த திட்டத்தைத் தொடர்ந்து செய்கிறார்கள், அவர்களுடைய பெயரைச் சொல்லக்கூடாது என்பதற்காக முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்று சொல்லி அந்தப் புகழை நாங்கள் பெற விரும்புவதாகக் கூறினார்கள். எங்களைப் பொறுத்த வரையில் புகழைப்பற்றிக் கவலையில்லை; தேவையைப் பூர்த்தி செய்ய முயல்கிறோமா என்பதை நாடு புரிந்து கொள்ள வேண்டுமென்பதுதான்.

இங்கே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், இருப்பவர்களைப் பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பு எடுத்துக் கொள்வது நியாயம்; ஆனால் இல்லாதவர்களைப்பற்றி விவாதம் எழுப்புவது முறை அல்ல, அது நாகரீகமாகவும் இருக்காது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன் ஏனெனில் அதைப்பற்றி பதில் சொல்ல முடியாத அளவில் அவர்கள் மறைந்து விட்டார்கள். அந்தப் பெரியவர்களை விவாதத்திற்கு

கால நடவடிக்கையைப் போல கவனம் செலுத்த வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் மக்கள் தங்களுடைய குறைகளைப் போதுமான அளவு சொல்ல முடியாதிருக்கிறதாலே மிக விரைவாக இந்தத் தேர்தலை நடத்த வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்துவதற்கான தேதியை இந்த மன்றத்தின் மூலமாக தமிழக மக்களுக்கு அறிவிப்பார்கள் என்று சொல்லி இந்த மசோதாவை எதிர்த்து அமைகிறேன்.

திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சன்னிறைவுத் திட்டத்திலே குழுக்கள் போடுவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்கான ஆயாக்கள், பாலசேவிகாக்களை நியமனம் செய்வதற்கான குழு போடுவதைப் பற்றிச் சொன்னேன். தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிக் கூறவில்லை.

திரு. ஆர். மணிமாறன்: துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தில் ஆயாக்கள், பாலசேவிகாக்கள் நியமனம் செய்வதற்கான குழுவில் உறுப்பினர் போடுவதைப் பற்றி சொன்னீர்கள். சத்துணவுத் திட்டத்திற்கென்று பாலசேவிகாக்கள் நியமிப்பதைத் தேர்ந்தெடுக்கிற அந்தக்குழுவில் தங்களைப் போடவில்லை என்று சொல்கிறீர்கள். அப்படியானால் அதற்கு அடிப்படையான சத்துணவுத் திட்டத்தை ஆதரிக்கிறீர்களா? சத்துணவுத் திட்டம் பயன்படாத திட்டம் தேவையில்லாத திட்டம், நாட்டிற்கு ஒத்துவராத திட்டம் என்று சொல்கின்ற இயக்கத் தலைவர்களைப் பெற்றிருக்கிற நீங்கள் அதை ஆதரிக்க முன் வருகிறீர்களா? இல்லையா?

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அருங்கட்சி கொறடா அவர்கள் மிகச் சுவையான வாதத்தை இங்கே துவக்கியிருக்கிறார்கள். அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் வருகிற நேரத்திலேயே நம்முடைய அமைச்சர் காளிமுத்து அவர்களின் தலைமையில் திருப்பரங்குன்றத்திலே பேசியிருக்கிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்திலே முதலமைச்சராக இருந்த காலத்திலே இந்த இலவச மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் கொண்டுவரும் நேரத்தில் தமிழ்நாட்டின் ஆண்டு வருவாய் 100 கோடி ரூபாய் முதல் 150 கோடி ரூபாய் வரை இருக்கும். 5 கோடி ரூபாயில் ஆரம்பிக்கப்பட்ட அந்தத் திட்டத்திற்கு 30 கோடி ரூபாய் வரையில் செலவானது. அவர்கள் இப்படி ஒரு அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன் தொடர்ச்சியாக நீங்கள் இதைக் கொண்டு வருகிறீர்கள். இலவச மதிய உணவுத் திட்டம் என்று சொன்னால் பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கு பெயர் போய்விடப் போகிறதே என்றுதானே நீங்கள் இதைச் சத்துணவுத் திட்டம் என்று சொல்கிறீர்கள். சரி, சத்துணவுத் திட்டம் என்றே சொல்லிக்



இழுத்தால்—அது நியாயமான விவாதத்தில் போய் முடிந்தாலும் கூட சில உண்மைகள் வெளிவரும்பொழுது புகழத்தக்க தலைவர்களுக்கு நம்மால் இழுக்கு ஏற்படும் அளவிற்குச் சென்றுவிடும். அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. எனவேதான், யார் மறைந்தாலும், அவர்கள் தவறுகள் செய்திருந்தாலும், அவர்கள் செய்த நல்லதை மட்டும் பாராட்டுகின்ற அந்தப் பண்பாட்டைச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்ற முறை தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் இருக்கிறது.

அதையொட்டி நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாபெரும் தலைவர் என்று அழைக்கப்படும்—ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற—இதில் வித்தியாசம் இல்லை—காமராஜ் அவர்கள் கொண்டு வந்த திட்டத்திற்கும் இதற்கும் மிகப் பெரிய வேறுபாடு உள்ளது என்பதை திரு. என் எஸ். வி. சித்தன் அவர்கள் அறிவார்கள். அது தெரிந்தும் அவரை இழுத்து வைத்துப் பேசி, இது அவர் கொண்டுவந்தது அல்ல என்று நாங்கள் சொல்லும் நிலைமைகளை நாட்டிலே ஏற்படுத்துவது நல்லதல்ல என்பதைப் பணிவன்போடும், உரிமையோடும், நல்ல உணர்வோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் இன்னொரு கேள்வியைக் கேட்டார்கள் அது புத்திசாலித்தனமான, சாமார்த்தியமான ஒரு கேள்வி சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து, அதை எம். ஜி. ஆர்—முதலமைச்சர் திட்டம் என்று சொல்கிறார்களே, அதைப்போல மதுவிலக்கைத் தளர்த்தி, சாராயக் கடையை மீண்டும் திறந்ததற்காக அதையும் அவர்களுடைய திட்டமாகக் கொண்டுவர ஒத்துக் கொள்வார்களா என்று கேட்டார்கள். நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன் சொல்லக் கூடாதுதான்—ஆனாலும் சொல்ல வேண்டியிருக்கிறது, இந்தியா முழுமையும் ஆண்டு கொண்டிருக்கின்ற பிரதம அமைச்சரவர்கள், மாநிலங்களில் அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப சாராயக் கடைகளைத் திறக்க அனுமதி தருகிறார்கள். காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களுக்கும் அனுமதி தருகிறார்கள். அதை பிரதம அமைச்சர் திட்டம் என்று சொல்ல முன்வருவார்களேயானால் இங்கேயும் அதை முதலமைச்சர் திட்டம் என்று சொன்னால் நான் ஆச்சரியப்பட மாட்டேன். ஆத்திரப்பட மாட்டேன். எனவே, தயவு செய்து இந்த நிலைமைகளை எங்களுக்கு உருவாக்காதீர்கள் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

*திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற ஊராட்சி ஒன்றிய தனி அதிகாரிகள் நீட்டிப்புச் சட்டத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லாத காரணத்தினாலேதான் இந்தத் தனி அதிகாரிகளின் பதவி நீட்டிப்பு இருப்பதன் காரணத்தினால்தான், ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற சாலைகள், தெருவிளக்குகள் சரிவர பராமரிக்கப்படுவதில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருந்தால் மக்களின் குறைகளைஅறிந்து உடனடியாக அவைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்வார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே தனி அதிகாரிகள் இருக்கின்ற காரணத்தினால், இங்கே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, தன்னிறைவுத் திட்டம் இப்போது சரிவர நடைபெறுவதில்லை. இப்போது என்னுடைய திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலே நடைபெறுகின்ற தன்னிறைவுத் திட்டத்திலே பல பேர்கள் தன்னிறைவு பெறுகிறார்களே தவிர, மக்களுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டுள்ள பணம் போய்ச் சேருகிறதா என்றால் இல்லை. நிச்சயமாக இல்லை. இங்கே என்.ஆர்.இ.பி. வேலை நடைபெறுகிறது. அதன் மூலம் 100 ரூபாய் ஒதுக்கப் பட்டால், அன்னாவின் மீது சத்தியமாகச் சொல்கிறேன், அந்த மக்களுக்குப் போய்ச் சேருகிற பணம் 25 ரூபாய்கள் தான். மீதி மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை நிரூபிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலே வேலைக்குக் கொடுக்கப்பட்ட அரிசி விற்கப்பட்டிருக்கின்றது. அதுபற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எடுத்துக் கூறியிருக்கிறேன். இதுபோன்ற தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்காக உடனடியாக ஊராட்சி மன்றத் தேர்தலை நடத்தவேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு முறை என்னுடைய தொகுதிக்கு வந்திருந்தார்கள். முதல் முறை வந்தபோது, அங்கே உள்ள புதுக்கோட்டை கிராமச் சாலை சரியில்லை என்று மக்கள் மனு கொடுத்தார்கள். அமைச்சர் அவர்கள் அதை உடனடியாக ஒரு மாதத்திலே நிறைவேற்றவேண்டும் என்று உத்தரவிட்டும், ஏறக்குறைய 3 ஆண்டுகளாகியும் அமைச்சரின் உத்தரவு நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோலத்தான் இப்போது தன்னிறைவுத் திட்டத்திலே பள்ளி இல்லாத கிராமங்களில் பள்ளிகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கின்றது. ஆனால் அப்படி பள்ளிகள் பல இருந்தும், பல கிராமங்களில் மரத்தடியிலே பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் நிலை இருக்கின்றது. நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் குறிப்பாக இரண்டு கிராமங்களை எடுத்துச் சொன்னேன். ஆண்டைப்பட்டி



கிராமத்திலே உள்ள பள்ளி மழையினால் இடிந்து விழுந்துவிட்டது என்று அதிகாரிகளிடம் சொல்லியும் கூட அங்கே புதிதாக பள்ளிக் கட்டிடம் கட்டித் தரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற நல்ல காரியங்கள் நிறைவேற்றப்படவேண்டுமானால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருந்தால்தான் அந்தக் காரியங்கள் நடைபெறும். இதுபோன்ற பல விஷயங்களைச் செய்வதற்கு நீங்கள் உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் சத்துணவுத் திட்டத்தை எதிர்க்கவில்லை என்றாலும், நடைபெறுகிற தவறுகளை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது நகராட்சிக்கு தன்னிறைவுத் திட்டம் வந்துள்ளது. அந்த நகராட்சியிலே அதற்காக ஆட்களை எடுக்கின்றபோது ஆயாக்களிடமும், பால்சேவிகாக்களிடமும் லஞ்சத்தைப் பெற்றுக் கொண்டுதான் அவர்களைப் போடுகிறார்கள். அவர்களுடைய சம்பளம் 50 ரூபாய்கள்தான் என்றாலும், அவர்களிடம் 500 ரூபாய், 1000 ரூபாய் லஞ்சம் வாங்கிக் கொண்டு தான் வேலை போடும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைப் போன்ற சூழ்நிலைகளைப் போக்குவதற்கு உடனடியாகத்தேர்தலை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே பல உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள், உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டுமென்று. நானும் அதே கருத்தைச் சொல்லி உடனடியாக இந்தத் தேர்தலை நடத்தாவிட்டால் இதுபோல் தவறுகளை எடுத்துச் சொல்வதற்கு எங்களுக்கு வாய்ப்பு கிடைக்காது. எனவே உடனடியாக தேர்தலை நடத்தி மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் செய்ய வேண்டும். அதற்காக இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கூறி இந்த மசோதாவை நான் எதிர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மூன்று மசோதாக்களின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 6 பேர் தங்களுடைய வலுவான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக இந்த மாதத்தில் பெரியகுளம் தேர்தல் இல்லை என்று சொல்லியிருந்தால், இப்படிப்பட்ட விவாதம் வந்திருக்காது என்றுதான் எதிர்பார்க்கிறேன். தேர்தல் இருக்கின்ற காரணத்திற்காகவே ஏதோ இட்டுக்கட்டிப் பேசவேண்டும் அல்லது பெரியகுளம் தேர்தலிலே நாம் இவைகளை எல்லாம் சொல்லவேண்டும். இவைகள் பத்திரிகையிலே வரவேண்டுமென்பதற்காகவும் கூட ஒரு சில நண்பர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஒருசில கருத்துக்களை எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த சில உண்மைகளை நான் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் இது ஏதோ அரசாங்கம் வேண்டும்

என்றே இந்தத் தேர்தலை ஒத்திப்போட்டுக்கொண்டே வருகிறது, தேர்தலை நடத்த இயலவில்லை, அல்லது மக்களைக் கண்டு பயப்படுகிறார்கள் என்கிற எண்ணம் யாருக்காவது இருந்தால் நான் மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் ஜனநாயகத்திலே ஈடுபாடும், நம்பிக்கையும் கொண்ட ஒரு இயக்கமாகும் என்பதை நான் மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தல்களை உடனடியாக நடத்தவேண்டும். ஜனநாயகத்தினுடைய தொட்டில்களாக இருக்கக்கூடிய இந்தத் தேர்தல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால்தான் கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்கு உடனடியாக அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கமுடியும் என்ற எண்ணமும் எங்களைப் பொறுத்தவரையில் இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதே மன்றத்தில் பல்வேறு நேரங்களில் இங்கேயே பல சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்து இந்தத் தேர்தலை சீக்கிரமாக நடத்த வேண்டும் என்கிற எண்ணத்தோடு தமிழகத்தின் முதல்வர் அவர்கள் ஒரு புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்ததும், அதுவும் தேர்தல்களிலே ஒதுக்கீடுகள் கொண்டு வந்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும், நம்முடைய அருமைத் தாய்மார்களுக்கும் ஒதுக்கீடுகளைக் கொண்டுவந்து அந்தச் சட்டம் நிறைவேறியது. சட்டம் நிறைவேறியதற்குப் பின்னாலே அதை எதிர்த்தவர்கள் யார்யார், வழக்கு மன்றத்திற்குப் போனார்கள் என்பதை இந்த மாமன்றம் அறிந்த உண்மை. ஆனாலும் ஒரு சிலர் எப்படியாவது ஆட்சியின் மீது, அல்லது ஆளுகின்ற அரசின்மீது பழிகளைப் போட்டுவிட்டு நாம் தப்பித்து விடலாம் என்று சொன்னால் கண்டிப்பாக உண்மை மறைக்க முடியாத ஒன்று என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நான் இன்னமும் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு சீக்கிரம் இந்தத் தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடத்தவேண்டுமென்ற எண்ணத்தோடு தான் நாங்கள் இருக்கிறோம். ஆனால் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் பல்வேறு நேரங்களில் இந்தத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டுமென்று அறிவிப்புச் செய்தார்கள். ஆனால் இந்த அறிவிப்பு செய்கின்ற நேரத்திலே—ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் மறந்து விடக்கூடாது. இங்கே கடந்த ஏப்ரல் மாதத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த சட்டம் செல்லும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்ததற்குப் பின்னாலே, நாங்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லுகின்றோம், அதற்கான ஸ்பெசல் லீவ், சிறப்பு அனுமதி தரவேண்டுமென்று கேட்டவர்கள் யார் என்பதை தயவுசெய்து மறந்துவிடவேண்டாம். அந்தச் சிறப்பு அனுமதியைப் பெற்றவர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர், வழக்கறிஞராக இருக்கின்றவர், அவருடைய பெயர் சிதம்பரம் ஆகும்.





(பிற்பகல் 1.20)

ஏற்கனவே இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயலாளராக இருந்தவர். அவர் தான் சிறப்பு அனுமதி பெற்று இருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் ஆகவே சிறப்பு அனுமதியைப் பெற்று இருப்பவர்கள், உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றோம் என்று சொல்லிக்கொண்டு இருப்பவர்கள் எங்களைப் பற்றி மக்களிடையே தவறான முறையில் கருத்துக்களைச் சொல்ல முற்பட்டால் அதனை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிக்க துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே இல்லாத வழக்கறிஞர் ஒருவரைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவர் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தவர் தான். இப்போது இல்லை. அவர் ஒரு வழக்கறிஞர். வழக்கறிஞர் என்ற முறையில் அவர் அதற்கு ஆஜராகியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் ஒரு வழக்கறிஞர் தான். இந்த மன்றத்திலும் பல்வேறு வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். ஆகவே ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அந்த வழக்கிலே ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்தேன்,

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்றத்திலே இல்லாத ஒருவரைப்பற்றிப் பேசுவது நமக்கு மரபு கிடையாது. அவரைப் பற்றி இங்கே பேசினால் அவர் இங்கே வந்து பதில் சொல்ல முடியாது என்கின்ற நிலைமை இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவருடைய பெயரைக் குறிப்பிட்டது பொருத்தம்தானா என்பதை உங்கள் மூலமாக நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : ஒரு கட்சியைச் சேர்ந்தவர் ஸ்பெஷல் லீவ் (சிறப்பு அனுமதி) வாங்கியிருக்கிறார் என்கிற தகவலைத்தான் சொல்லியிருக்கிறார். அதிலே ஒன்றும் தவறு இல்லை.

**திரு., என். எஸ். வி. சித்தன்** : கட்சியின் பெயரைச்சொல்லி, அவர் இந்தப் பதவியில் இருந்தார் என்பதையும் சொல்லி இருக்கிறார். அவர் இங்கே வந்து எப்படி இதற்கு பதில் அளிக்கமுடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அதிலே ஒன்றும் தவறு இல்லை. இந்த அவையில் விவரங்களைத் தெரிவித்தார்கள்; அவ்வளவு தான்.

**திரு. பொ. உத்திராபதி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *** ***

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெறவேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்டம் நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். காரணம் இந்த மன்றத்திலே 1981-லேயே இந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்று நாம் சட்டம் கொண்டு வந்த நேரத்திலே, 1971 மக்கள் தொகை கணக்கின் அடிப்படையில் தேர்தலை நடத்தவேண்டும் என்று சொன்ன நேரத்தில், 1981 ஜனத் தொகை அடிப்படையில் தேர்தல் நடப்பது பொருத்தமாக இருக்கும், இந்திய அரசு அந்தப்பணியை மிக வகு சீக்கிரத்தில் முடிக்க இருக்கிறார்கள் என்று கருத்துக்களைக்கூறியிருக்கிறார்கள் ஆகவே, அந்த அடிப்படையில் நாங்கள் தேர்தலை உடனடியாக நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம். அந்த 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கு கிடைக்கப் பெற்றதும் நாங்கள் தேர்தலை நடத்தத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் இங்கேத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால்தான் தற்போது வரஇருக்கின்ற 30-ம் தேதியோடு இந்தத் தனி அதிகாரியின் பதவிக் காலம் முடிவடைவதால் அவர்கள் பதவிக் காலத்தை நீட்டித்து தரவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஆகவேதான் இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், அரசாங்கம் சீக்கிரம் தேர்தலை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறது. மீண்டும் யாரும் உச்சநீதிமன்றத்திற்குச் செல்லாமல் இருந்தால், தடை உத்தரவுகள் பெறாமல் இருந்தால், வருகின்ற டிசம்பர் மாதத்திற்குள் நாங்கள் தேர்தல் நடத்தத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. சித்தன் அவர்கள் கேட்கிறார்கள். மறைமுகமாக யாரேனும் உச்சநீதிமன்றத்திற்குப் போக வேண்டும் என்பதை விரும்புகிறார்களா என்று. ஏற்கெனவே ஒருவர் சிறப்பு அனுமதி பெற்றிருக்கிறார் என்று சொன்னேன். அவர் பெற்று இருந்தாலும்கூட உச்சநீதி மன்றத்திற்குப் போகக்கூடாது, தடை உத்தரவைப் பெறக் கூடாது என்ற அடிப்படையில் நான் தெரிவித்தேன். ஆகவே, இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் டிசம்பர் மாதத்திற்குள்ளாக தேர்தல் நடத்துவோம் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் நடத்துவோம் என்று அவர்கள் சொல்வதாக நான் கருதுகிறேன். இப்போது செப்டம்பர் மாதம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது அடுத்து, அக்டோபர் நவம்பர், டிசம்பர் என்று மூன்று மாதங்கள் தான் இருக்கின்றன.





இந்த 3 மாதகாலம் போதுமா? நோட்டீஸ் கொடுக்க வேண்டாமா? மேலும் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கின்றன. 1981-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கு கிடைக்கப் பெறவேண்டும். ஆகவே, டிசம்பர் மாதத்திற்குள் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்துவோம் என்பதை திட்டவட்டமாக இந்த மன்றத்தின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மக்களுக்கு அறிவிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையிலேதான் நாம் ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். 1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் அடிப்படையில் இன்னும் ஒதுக்கீடுகளைச் செய்வது சரியாக இருக்காது. 1981 ஆம் ஆண்டு கணக்கு நமக்கு இன்னும் வந்து சேரவில்லை. இந்திய அரசின் மூலம் அது நமக்கு வரவேண்டும். அது அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில்தான் வந்து சேரும்போல் தெரிகிறது. அந்தக் கணக்கு வந்தபிறகு, மேற்கொண்டு செய்ய வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்துவிட்டு, தேர்தலை நடத்த வேண்டும். ஆகவே, இந்திய அரசு சீக்கிரமாக 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கை அனுப்பி வைத்தால் நாம் இந்தக் காலக் கட்டத்திற்குள் தேர்தலை நடத்த தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க துணைத் தலைவரவர்களே, நான் மீண்டும் கேட்க விரும்புகிறேன். முதலிலே டிசம்பர் மாதம் என்று சொன்னார்கள். இப்போது அக்டோபர், நவம்பர் என்று கொஞ்சம் கொஞ்சமாகத் தள்ளுகிறார்கள். டிசம்பர் மாதத்தில் தேர்தல் நடக்குமா என்பதை திட்டவட்டமாக அறிவிக்க வேண்டுகிறேன்.

**ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1982.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து, மற்றபடி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்)
இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்து மேற்படி சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட
முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து மேற்படி சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.



பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 7-9-1982 தேதி காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.28 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

1. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 1—2—1982 ஆம் தேதியிடப் பெற்ற எஸ்.ஆர்.ஓ. ஏ-1-3/1962 ஆம் எண் அறிவிக்கையில் வெளியான அனுமதி வழங்குவதற்கான விண்ணப்பங்கள் குறித்த விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து 13-2-1982 ஆம் தேதியிடப்பெற்ற ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 185 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1981] 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

2. துணை வணிக வரி அதிகாரி மற்றும் இப்பதவித் தரத்திற்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கு தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் 1(அ) ஆம் பிரிவின் உட்பிரிவு (1—13)ன் கீழ் புகார்களைப் பதிவு செய்வதற்கான அதிகாரம் அளிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 5-2-1982 ஆம் தேதியிடப்பெற்ற 47-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (அ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றுள்ளது].

3. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 16-10-1981-ஆம் தேதியிடப்பெற்ற 2443-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 8/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

4. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் பெற்ற அயல்நாட்டு சாராய வகை (தயாரித்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 30-1-1982 ஆம் தேதியிடப்பெற்ற 44-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 5 (1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. புதூர் அங்காடியிலிருந்து சில கிராமங்களை நீக்கியும் சில கிராமங்களை விளாத்திகுளம் அங்காடிப்பகுதியின் கிராமங்களாக அறிவித்தும் அறிக்கையிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் 24-7-1981ஆம் தேதியிடப்பெற்ற 1738ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

6. கிருஷ்ணகிரி அங்காடிப் பகுதியிலிருந்து சில கிராமங்களை நீக்கியும் காவேரிப்பட்டினம் அங்காடியின் அங்காடிப்பகுதியில் என அறிவித்தும் அறிக்கையிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் 26-3-1981ஆம் தேதியிடப்பெற்ற 665ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

7. தமிழ்நாடு 1957ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 29-1-1982ஆம் தேதியிடப்பெற்ற 200 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

8. தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 2-1-1982ஆம் தேதியிடப்பெற்ற 3 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

9. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை நடத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 2171ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

10. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு சாராய (சில்லறை விற்பனைக் கடைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறையின் 25-11-1981ஆம் தேதியிடப்பெற்ற 332ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

11. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் பெற்ற அயல் நாட்டு சாராவிகள் (தயாரித்தல்) விதிகளை உருவாக்குவது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின்



23-5-1981 ஆம் தேதியிடப் பெற்ற 35ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

12. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும திருவட்டீசுவரன் பேட்டை மேம்பாட்டுத்திட்டத்தை பொதுமக்கள்பார்வையிடுதல் குறித்துவீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 14-11-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1488ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1072) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

13. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு சாராய விநியோகம் (சிறப்பு விதிகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 22-7-1981ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 157 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

14, தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு சட்டமன்ற (உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் மருத்துவச் செலவை ஈடு செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொது (நிர்வாகம்) துறையின் 4-3-198 -ஆம் தேதியிடப்பெற்ற 397-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951-ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

15. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 24-11-1981-ஆம் தேதியிடப்பெற்ற 2796-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

16. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 4-12-1981-ஆம் தேதியிடப்பெற்ற உள் துறையின் 2899 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

17. தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறுத்து உள் துறையின் (போக்குவரத்து-1) 16.2.1982-ஆம் தேதியிடப் பெற்ற 374-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார்வண்டிகள்வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

18. மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையில் 3.5.1981-ஆம் தேதியன்று உருவாகி 3.5.1981-ஆம் தேதியிடப் பெற்ற தமிழ் நாடு அரசிதழ் பாகம் III பிரிவு 1 (a), பக்கங்கள் 14-18ல் கண்டுள்ள எஸ்,ஆர்.ஓ.ஏ–125 (2)/81-ஆம் எண் அறிவிப்பில் வெளியான தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராய (சில்லரை விற்பனை கடைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுலிலக்கு–ஆயத்தீர்வைத் துறையின் 8.7.1981—ஆம் தேதியிடப்பெற்ற 98—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937ஆம் உண்டு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/ (1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

19. செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணியைச் சேர்ந்த திரு. ஓ. இலட்சுமிகாந்தனுக்குச் சொந்தமானTNH — 9007—ஆம் எண்ணுள்ள சிறிய பயணப்பேருந்திற்கு செலுத்த வேண்டிய வரிவிதிப்பு கட்டணத்தைக் குறைப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து 1) 27.1.1982—ஆம் தேதியிடப்பெற்ற 175 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது·]

20. மதுவிலக்கு– ஆயத்தீர்வைத் துறையில் 3.5.1981 ஆம் தேதியன்று வெளியாகி 3-5-1981 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பிரிவு 1 (ஏ), பக்கங்கள் 40—47ல் கண்டுள்ள எஸ் ஆர்.ஓ—ஏ. 125 ( ) /81—ஆம் எண் அறிவிப்பில் வெளியான தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு சாராய விதிகளில் (மொத்த விற்பனை மூலம் வழங்குதல்) சில திருத்தங்கள் செய்வது குறித்து, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 19.1 1982-ஆம் தேதியிடப் பெற்ற 29—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937—ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937)54 (3) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பட்டது].

21. மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 3.5.1981 ஆம் தேதியன்று வெளியாகி 3–5–1981 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ் நாடு அரசிதழின் பாகம் III பிரிவு 1 (a) பக்கம் 40—47ப் கண்டுள்ள எஸ்.ஆர்.ஓ. ஏ—125 (b) /81ஆம் எண் அறிவிம் பில் வெளியான மதுவிலக்கு ஆயத்தீர்வையின் துறையின் தமிழ் நாடு 1981—ஆம் ஆண்டு சாராய விதிகளில் (மொத்த விற்பனை மூலம் வழங்குதல்) சில திருத்தங்கள் செய்வது குறித்து, 3.12.1981—ஆம் தேதியிடப் பெற்ற 388—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937—ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54. (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

22. தமிழ்நாடு 1940—ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 8.1.1982—ஆம் தேதியிடப் பெற்ற 57ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939—ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



23. தமிழ்நாடு 1931— ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் கீழ் சலுகைக் கட்டண வீதங்களை அளிக்கும் சில அறிவிப்புகளை நீக்குவது குறித்து உள்துறையின் (போக்குவரத்து—1) 0.9.1981—ஆம் தேதியிடப்பெற்ற 2352 —ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974—ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 1 /1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

24. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமானவரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறை யின் 19.11.1981—ஆம் தேதியிடப்பெற்ற 30 —ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1955—ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 5/1955) 61 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பேற்றது].

25. தமிழ்நாடு 1940—ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 11.2.1982 ஆம் தேதியிடப்பெற்ற 331 அம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் சபரவை முன்வைக்கப் பெற்றது].

26. மது விலக்கு ஆயத்தீர்வைத் துறையில் 3.5.1981 தேதி யன்று உருவாகி 3.5.1981 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பிரிவு 1(a) பக்கங்கள் 14 18ல் கண்டுள்ள எஸ்.ஆர்.ஓ.—ஏ 125( )/81—ஆம் எண் அறிவிப்பில் வெளியான தமிழ்நாடு 1981—ஆம் அண்டு சாராய (சில்லரை) விற்பனைக் கடைகள்) விதிகளல் சில திருத்தங்கள் செய்வது குறித்து, மது விலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 30.6. 981—ஆம் தேதியிடப் பெற்ற 87 ஆம் எண் விசாரணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் அண்டு மதுவீலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

27. மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையில் 3.5.1981 ஆம் தேதி அன்று உருவாகி 3–5-1981 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III, பிரிவு 1 (a) பக்கங்கள் 18- 28ல் கண்டுள்ள தமிழ்நா 1981 ஆம் ஆண்டு சாராயக் கடைக்ள் (ஏலத்தின் மூலம் ஒருவகை செய்தல்) விதி களில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறையின் 23.5.1981 தேதியிடப்பெற்ற 36 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

28. பழைய நகைகளை வாங்குவதில் (தங்கம், வெள்ளி) 4% மாற்று 1% என்ற வரிவிதிப்பு வேறுபாட்டையும், இதற் கேற்ற கூடுதல் வரி மற்றும் மேல்வரியையும் நீக்குவது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 15.8.1981—

ஆம் தேதியிடப் பெற்ற 665–ஆம் என் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959—ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (3) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பட்டது].

29. மதுவிலக்கு–ஆயத்தீர்வைத்துறையில் 23.5.1981 ஆம் தேதியன்று வெளியாகி, 23.5.1981 ஆம் தேதியிடப்பெற்று தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பிரிவு 1(a), பக்கங்கள் 46—65—ல் கண்டுள்ள எஸ். ஆர்.ஓ.ஏ—159 (h) /81—ஆம் எண் அறிவிப்பில் வெளியான தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு இந்தியாவில்தயாரிக்கப் பெறும் அயல்நாட்டு சாராயா (மொத்த விற்பனையாளர் வழங்கும்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 15 12.1981 ஆம் தேதியிடப்பெற்ற 358—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 —ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது.

30. விரிவான வளர்ச்சித் திட்டம் (சென்னை பெருநகர் திட்ட அமைப்புப் பகுதி) விதிகளைத் தயாரித்தல், வெளியிடுதல், மற்றும் அனுமதி வழங்குவதில் சில திருத்தங்களைச் செய்வது குறித்து வீட்டுவசதி –நகர்புற வளர்ச்சித் துறையின் 7.4.1980 ஆம் தேதியிடப் பெற்ற 441–ஆம் எண் அரசாணையில்வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர, நாட்டுப்புற அமைப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

31. பரம்பரையல்லாத அறங்காவலர் அலுவலர் காலி இடங்களை நிரப்புவதற்கான கால அளவை 1.6.1981-ஆம் தேதியிலிருந்து மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பது குறித்து வணிகவரிகள்- சமய அறக்கட்டளைகள் துறையின் 594—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959—ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

32. தமிழ்நாடு 1940—ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 6.10.1981—ஆம் தேதியிடப் பெற்ற 2387ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939– ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

33. உள் துறையில் 2-8-1980 ஆம் தேதியன்று வெளியாகி 27-8-1980 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் பிரிவு 2, பக்கம் 618-ல் (ஆங்கிலத்தில்) வெளியான (2)/HO/ 3806/80 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் (போக்குவரத்து-1) 11-2-1981 ஆம் தேதியிடப்பெற்ற 332 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



34. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 24-3-1982 ஆம் தேதியிடப்பெற்ற 679 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

35. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 22-4-1982 ஆம் தேதியிடப் பெற்ற 425 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

36. மோட்டார் வண்டிகளின் வரிவீதத்தைக் குறைப்பது மற்றும் அதனைச் சுற்றுலா வண்டியாக ஓட்ட அனுமதிப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து-1) 26-2-1982 ஆம் தேதியிடப்பெற்ற 490 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1874) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

37. மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 3-5-1981 ஆம் தேதியன்று உருவாகி 3–5-1981 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பிரிவு 1 (a) பக்கங்கள் 40–47ல் கண்டுள்ள எஸ் ஆர்.ஓ.ஏ-125 (h)/81-ஆம் அறிவிப்பில் வெளியான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (மொத்த விற்பனையாளர் மூலம் வழங்குதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு–ஆயத் தீர்வைத் துறையின் 15-6-1981 ஆம் தேதியிடப்பெற்ற 58 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

38. மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 3–5-1981 ஆம் தேதியன்று உருவாகி 3-5-1981 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பிரிவு 1 (a) பக்கங்கள் 1-13 ல் கண்டுள்ள எஸ்.ஆர்.ஓ.ஏ 125 (d)/81 ஆம் அறிவிப்பில் வெளியான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டுகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 31-12-1981 ஆம் தேதியிடப்பெற்ற 388-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைககப்பெற்றது).

39. தமிழ்நாடு சட்டமன்றத்தின் அமைச்சர்கள் மற்றும் தலைவர்களுக்கான (அரசு இல்லங்கள் மற்றும் இருக்கைகளைப் பராமரித்தல், வசதிகள் செய்துகொடுத்தல்) விதிகளில் சில திருத் தங்கள் செய்வது குறித்து பொது (நிர்வாகம்) துறையின் 12-8-1981 ஆம் தேதியிடப்பெற்ற 1568 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

40. தமிழ்நாடு சட்டமன்றத்தின் அமைச்சர்கள் மற்றும் தலைவர்களுக்கான குத்தகைக்கு எடுத்துள்ள தனியார் இல்லங் கள், இருக்கைகளைப் பராமரித்தல் மற்றும் வசதிகள் செய்து கொடுத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொது (நிர்வாகம்) துறையின் 12-8-1981 ஆம் தேதியிடப்பெற்ற 1569 ஆம் எண்அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

41. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத் துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 23-1-1982 ஆம் தேதியிடப்பெற்ற 143 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

42. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப் படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 24-2-1982 ஆம் தேதியிடப்பெற்ற 461 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

43. மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையில் 23-5-1981 ஆம் தேதியன்று உருவாகி 23-5-1981 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம்-III பிரிவு 1 (a), பக்கங்கள் 66-206 ல் கண்டுள்ள எஸ்.ஆர்.ஓ.ஏ 159 (சி)/81 ஆம் எண் அறிவிப்பில் வெளியான தமிழ்நாடு 1981 ஆம் ண்டு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 19-1-1982 ஆம் தேதியிடப்பெற்ற 26 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

44. ஊராட்சிகளின் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கான அலுவலக நடத்தை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊரகவளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 24-12-1980 ஆம் தேதி



யிடப்பெற்ற 1983 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது].

45. ஊராட்சி ஒன்றிய அலுவலர் மற்றும் பணியாளர்களுக் கான அலுவலக நடத்தை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊரக-வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 24-12-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1982 ஆம் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

46. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 27-2-1982 ஆம் தேதியிடப்பெற்ற 496 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

47. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 11-2-1982 ஆம் தேதியிடப்பெற்ற 330 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

48. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 22-2-1982 ஆம் தேதியிடப்பெற்ற 426 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

49. மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையில் 23-5-1981 ஆம் தேதியன்று உருவாகி 23-5-1981 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம்-III பிரிவு 1 (a), பக்கங்கள் 23-45ல் கண்டுள்ள எஸ்.ஆர்.ஓ.ஏ-159 (g)/81 ஆம் எண் அறிவிப்பில் வெளியான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக் கப்பெற்ற சாராவிகள் (சுங்கவரி கட்டாதத்தால் இருப்பில் வைத்திருக்கும்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 19-11-1982 ஆம் தேதி யிடப்பெற்ற 29 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

50. தேசியமயமாக்கப்பெற்ற வங்கிகள் மூலம் வசூலிக்கப் பெறும் போக்குவரத்திற்கும் பயன்படுத்தப்பெறாத வண்டிகளுக்கான வரியினை பண்ணைக்காடு உதகமண்டலத்திலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிளைகள் மூலம் வசூலிப்பது குறித்து உள் துறையின் (போக்குவரத்து-1) 8–3–1982 ஆம் தேதியிடப்பெற்ற 572 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

51. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப் படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 7–2–1981 ஆம் தேதியிடப்பெற்ற 281 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

52. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வெக்கை நோய் கட்டுப் பாட்டு விதிகளை உருவாக்குவது குறிதது வேளாண்மைத் துறையின் 31–3–1982 ஆம் தேதியிடப்பெற்ற 869 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1866 ஆம் ஆண்டு கால்நடை நோய் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1866) 18(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

53. மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையில் 3–5–1981 ஆம தேதியன்று உருவாகி 3–5–1981 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பிரிவு 1(a). பக்கங்கள் 14–18-ல் கண்டுள்ள எஸ். ஆர். ஓ. ஏ 125(e)/81 ஆம் எண் அறிவிப்பில் வெளியான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (சில்லரை விற்பனைக் கடைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலச்கு ஆயத்தீர்வைத் துறையின் 15–12–1981 ஆம் தேதியிடப்பெற்ற 360 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

54. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 20–4–1982 ஆம் தேதியிடப்பெற்ற 943 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1930 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(37) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

55. மதுவிலக்கு–ஆயத்தீர்வைத் துறையில் 23–5–1981 ஆம் தேதியன்று உருவாகி, 23–5–1981 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பிரிவு 1(a), பக்கங்கள் 4–92–ல் கண்டுள்ள எஸ்.ஆர்.ஓ.ஏ–159(f)/81 ஆம் எண் அறிவிப்பில் வெளியான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பெறும் அயல்நாட்டு சாராவிகள் (தயாரித்தல்)



விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு–ஆயத்தீர்வைத் துறையின் 314 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

56. ஊரக வளர்ச்சி–உள்ளாட்சித் துறையில் 4–12–1976 ஆம் தேதியன்று 2395 ஆம் எண் அரசாணையில் உருவாகி 4–12–1976 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம்-II, பிரிவு 1, பக்கம் 235-ல் கண்டுள்ள 11(i) 350/76 (RVL) ஆம் எண் அறிவிப்பில் வெளியான ஏற்பளிக்கப்பட்ட சென்னை பெருநகரப் பகுதிக்கான பெரும் திட்டத்தில் சில மாறுதல்கள் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 21–3–1981 ஆம் தேதியிடப்பெற்ற 196 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர–நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

57, ஊரக சாலைப் பகுதிகளில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்பெறும் ஜீப்புகளுக்குச் செலுத்தப் பெறும் வரியினைக் குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 27–4–1982 ஆம் தேதியிடப்பெற்ற 1039 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974)25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

58. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களுக்கு தொகைகள் வழங்குதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 29–5–1982 ஆம் தேதியிடப்பெற்ற 919 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நிலங்களுக்கான உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

59. மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையில் 23–5–1981 ஆம் தேதியன்று உருவாகி, 23–5–1981 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பிரிவு 1(a) பக்கங்கள் 66–206-ல் கண்டுள்ள எஸ். ஆர். ஓ. ஏ.-159(e)/81 ஆம் எண் அறிவிப்பில் வெளியான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுபான (உரிமம், அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 10–5–1982 ஆம் தேதியிடப்பெற்ற 314 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

60. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 24–6–1982 ஆம் தேதியிடப்பெற்ற 1620 ஆம் எண் அரசாணை

யில் வெளியான அறிவிப்பு (1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

61. மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 3–5–1981 ஆம் தேதியன்று உருவாகி, ?–5–1981 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பிரிவு 1(எ) பக்கங்கள் 14–15 ல் கண்டுள்ள எஸ். ஆர். ஓ. ஏ-125 (e)/81 ஆம் எண் அறிவிப்பில் வெளியான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (சில்லரை விற்பனை கடைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 25–11–1981 ஆம் தேதியிடப்பெற்ற 333 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

62. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 26–4–1982 ஆம் தேதியிடப்பெற்ற 1003 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (1930 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

63. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் 1981–82 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை (1948 ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(1) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

64. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் ஏழாம் ஆண்டறிக்கையும் கணக்குகளும், 1980–81 (தமிழ்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

65. தமிழ்நாடு கிடங்குக் கழகத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான 23-வது ஆண்டறிக்கை (தமிழ் 1962 ஆம் ஆண்டு கிடங்குக் கழகச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

66. தமிழ்நாடு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியத்தின் 1972–73, 1973–74, 1974–75, 1976–77 மற்றும் 1977–78-ம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கையும் (தமிழ்) காலதாமதத்திற்கான காரணங்களும் (தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண். 4/1971) 47 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)



67. தமிழ்நாடு பஞ்சாலைகள் கழகத்தின் 1981 ஆம் ஆண்டிற்கான 12–வது ஆண்டறிக்கையும் 1–4–1980 முதல் 31–3–1981 வரையிலான செயல்முறை குறித்து அரசின் மறு ஆய்வும் (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

68. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான 11-வது ஆண்டறிக்கையும் தணிக்கை அறிக்கையும் (ஆங்கிலம்) 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

69. தமிழ்நாடு தேயிலைத் தோட்ட நிறுவனத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் ஆண்டு அறிக்கையும் கணக்குகளும் (தமிழ்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

70. பல்லவன் பொறியியற் கழகத்தின் 1981 ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

71. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

72. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டு அறிக்கை (தமிழ் ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

73. தமிழ்நாடு மின் அனு நிறுவனத்தின் 1977–78, 1978-79, 1979–80 மற்றும் 1980–81 ஆம் ஆண்டிற்கான முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு அறிக்கையும், தணிக்கை அறிக்கையும் (தமிழ், ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

74. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1981 ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

75. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (சிவில்) (ஆங்கிலம்) (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

76. தமிழ்நாடு அரசின் 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள் (ஆங்கிலம்) (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

77. தமிழ்நாடு அரசின் 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகளை (ஆங்கிலம்) (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

78. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்) (ஆங்கிலம்) (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

**ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.**

1. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு மலைவாசஸ்தலங்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வன மீனளத் துறையின் 22-8-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1081 ஆம எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு.

2. 1-6-1981 ஆம் தேதியினை, 1979 ஆம் ஆண்டு இந்திய மீனள (தமிழ்நாடு சீர்திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/1980) செயலுக்கு வருவதற்கான தேதியாக நிர்ணயிப்பது குறித்து வன—மீனளத் துறையின் 28-4-1981 ஆம் தேதியிடப் பெற்ற 488 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு.

3. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சங்கு குளித்தல் விதிகளை உருவாக்குவது குறித்து வன-மீனளத் துறையின் 28-4-1981 ஆம் தேதியிடப்பெற்ற 489 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு.

4. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான முதலாம் ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

5. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம் மற்றும் சிறப்பு விதிகள்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 2/1982).

6. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1982).



7. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/1982).

8. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 5/1982).

9. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/1982).

10. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி நான்காம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 7/1982).

11. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி மூன்றாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 8/1982).

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### செவ்வாய்க்கிழமை, 1982 செப்டம்பர் 7

### ஆவணி 22, துந்துபி—திருவள்ளுவர் 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்''

இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வுறாமல் இருக்க வேண்டும். அரிய முயற்சி செய்து முடித்து விட்டால், அதனால் பெருமை உண்டாகும்.

### 1 வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**கந்திலியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம்.**

*வினா எண் 1—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வடாற்காடு மாவட்டம் கந்திலியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக அமைக்கவிருக்கிற துணை மின்நிலையம் எத்தனை கிலோவாட் மின் நிலையமாக அமையும். அதனுடைய மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் துணை மின்நிலையத்தின் மதிப்பீடு 39.76 லட்சம். 1982–83 ஆம் ஆண்டில் துவங்கி முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 7½ எம். வி. ஏ. நிறைவு செய்ய திட்டம் உள்ளது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு ஏதாவது காரணத்தை வைத்து ஆரம்பிக்கிறதா? அப்படி காரணம் இருந்தால், கோவை மாவட்டத்தில் அடிக்கொரு தடவை மின் தடை ஏற்படுகிறது. தொழில்கள் நிரம்பப் பெற்றிருக்கிற நகரமாக இருப்பதால், அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, காரணங்கள் இல்லாமல் எந்தக் காரியமும் நடைபெறுவது இல்லை. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையம் அமைக்க ஆற்காடு தொகுதியில் கண்ணியனூர் கிராமத்தில் இடம் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் வந்து அதனை சர்வே செய்ததாகவும் கேள்வி பட்டேன். ஆகவே, அமைக்கப்படவிருக்கும் துணை மின் நிலையத்தை திமிரி ஒன்றியத்தில் அரசு அமைக்கவிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

**மதுரை மாநகராட்சியில் புதிதாக சேர்ந்துள்ள பகுதியில் மின் இணைப்புப் பெறுவதற்கான அரசின் அனுமதி.**

* வினா எண் 2—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாநகராட்சியில் புதிதாக சேர்ந்துள்ள பகுதியில் வசிப்பவர்கள் மின் இணைப்புப் பெற அரசிடம் விசேட அனுமதி பெற வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள், இந்திய மின்சாரச் சட்டம் 1910, பிரிவு [illegible]-ன் கீழ் மின்சாரம் வழங்க, மதுரை மாநகராட்சிக்கு அளிக்கப்பட்டுள்ள மின் திட்டப்பகுதிகளுக்கு வெளியில் இருக்குமானால், இந்திய மின்சாரச் சட்டம் 1910, பிரிவு 27-ன் கீழ், மின் இணைப்பு வழங்குவது சம்பந்தமான வேலைகள் செய்யவும், மின் இணைப்பு வழங்கவும், மாநகராட்சி மாநில அரசின் தனி அனுமதியை பெற வேண்டும். புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள், மாநகராட்சியின் மின் திட்டப்பகுதிக்குள் இருக்குமானால், மாநில அரசின் அனுமதி பெற அவசியமில்லை.



திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே புதியதாக பல பகுதிகள் சேர்க்கப்பட்டு 3, 4 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கும், தொழில் நிலையங்களுக்கும் மின் இணைப்பு பெற வேண்டும் என்று கேட்டு, 3 ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு அது கிடைக்காமல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது, அந்தப் பகுதிகள் மாநகராட்சியின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிற பகுதிகளாக இருந்தால் வழங்கப்படும் என்று சொன்னார்கள். புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகள், தமிழ்நாடு மின் இலாகாவில் இருக்கிற அந்த அமைப்பின் கீழ் இணைப்பதற்கு வேண்டிய பணிகள் ஏன் காலதாமதமாகிறது? உடனடியாக அந்தப் பகுதிகளை மாநகராட்சியின் மின் திட்டப் பகுதிகளுக்குள் இணைத்து, அல்லது தமிழ்நாடு மின் இலாகாவில் இருக்கிற அந்த அமைப்பின் கீழ் இணைத்து, அந்த மாநகராட்சி அதிகாரிகளுக்கு, சீக்கிரமாக அந்த தேவையான அதிகாரங்களை வழங்கி, அந்தப் பகுதிகளுக்கு உடனடியாக மின் இணைப்புக் கிடைக்கச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே சில நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றன. சான்றாக மதுரை மாநகராட்சியின் எல்லைக்கோட்டுப் பகுதிகளிலே மதுரை மாநகராட்சியே மின்சாரம் வழங்க வேண்டிய அந்த மின் கம்பித் தொடர்களில் மின் வாரியத்தைச் சேர்ந்த பகுதிகளும் சேர்ந்து வருகின்றன.

ஆகவே கம்பித் தொடர்கள் எல்லாம் தனித்தனியாக அமைக்கப்பட வேண்டும். தனித்தனியாக மின்மாற்றிகள் அமைக்கப்படவேண்டும். உயர் அழுத்த மின் தொழில்களுக்கு இப்போது மின் வாரியம் மின்சாரம் வழங்கி வருகின்றது. ஆகவே உயர் அழுத்த மின்சாரம் தேவைப்படுகின்ற தொழில்கள் மாநகராட்சியின் எல்லைக்குள் இருந்தாலும் மின்சார வாரியம் தான் மின்சாரம் வழங்குகின்றது. மின் மாற்றிகள் மற்றும் கம்பித் தொடர்கள் அமைக்க வேண்டும் என்றால் ஏராளமான செலவாகும், எனவே இதை எல்லாம் வைத்துத்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, தனித்தனியாக கம்பித் தொடர்கள் அமைப்பதற்குப் பதிலாக மின் இலாக்காவின் கீழ் உள்ள மாநகராட்சியினைச் சேர்ந்திருக்கின்ற பகுதிகளில் மின்சார இலாக்காவே மின் இணைப்புக்களைக் கொடுத்து அவை எல்லாம் முடிந்து விட்டதற்குப் பிறகு அவர்களுக்கு ட்ரான்ஸ்ஃபர் செய்யலாம் அல்லவா? அந்த வகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, மதுரை மாநகரில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு மின் இணைப்புக்கள் கொடுப்பதிலே தாமதம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதி மதுரையின் ஒரு புறத்தில் இருக்கின்றது. எதிர்ப்புறத்திலே மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களின் தொகுதி இருக்கின்றது. இரண்டு தொகுதிகளுக்கும் ஒரே லைன்தான் வருகின்றது. ஆனாலும் அங்கே கூட பல சங்கடங்கள் இருக்கின்றன. அந்த மதுரை நகரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகள் அனைத்தையும் மாநகராட்சி மின் இணைப்புக்களோடு இணைக்க ஏற்பாடு செய்வதற்கு அமைச்சர் அவர்கள் யோசனை செய்வார்களா? சென்னை, கோயம்புத்தூர் போன்ற மாநகராட்சிகளிலும் இதே போன்ற சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கும் இந்தச் சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே ஒட்டுமொத்தமாக அரசு கொள்கை ரீதியில் ஒரு முடிவு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை மாநகராட்சி எல்லையும் மின் வழங்கு எல்லையும் ஒன்றாக இராத காரணத்தால்தான். வேறு காரணத்தால் அல்ல. அதனை ஒருமைப் படுத்துவதிலே ஒவ்வொரு அமைப்புக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. தனித்தனியாக [illegible] தொடர்கள் போன்றவைகளை அமைப்பதற்கு மின் வாரியமும் செலவு செய்தாக வேண்டும். மாநகராட்சியும் தனது மின் தேவையை நிறைவு செய்யவேண்டுமென்றால்—இப்போது 11000 வோல்ட் மின்சாரம் எடுத்துக் கொடுக்கிறார்கள். அதனை 110 கே. வி.யாக மாற்றியாக வேண்டும். அதற்காக ஏராளமாகச் செலவழிக்க வேண்டும். இப்படி பல நடைமுறைச் சிக்கல்களும், நிதிச் சிக்கல்களும் இருக்கின்ற காரணத்தால்தான் கால தாமதம் ஏற்படுகின்றது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னதைப் போல அந்தப் பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்படுகின்ற வரையிலே மாநகராட்சி எல்லையிலுள்ள மின்வாரியத்தின் பகுதிகள் என்று சொல்கிற போது அவற்றில் மின் வாரியமே மின்சாரத்தைக் கொடுப்பதற்கு நாம் வழிமுறைகளை மேற்கொள்ளலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே இருக்கின்ற மின்சார பற்றாக்குறை நிலைமையினை ஒட்டி மதுரை மாநகராட்சியினைச் சார்ந்துள்ள பகுதிகளிலே இருப்பவர்கள் மின் இணைப்பு பெறுவதைப் பொறுத்தவரையிலே முறையாக மின்சாரம் கிடைக்குமா என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைய



தினம் காலை செய்தித்தாளில் கேரள அரசிடமிருந்து நாம் மின்சாரம் பெற்றுக் கொண்டிருப்பதாக செய்தி வந்திருக்கின்றது. நமது அரசு அவர்களிடமிருந்து எவ்வளவு மின்சாரம் பெற்றுக் கொண்டிருக்கின்றது? அது எவ்வளவு காலத்திற்குக் கிடைக்கும்? விலை நிர்ணயம் செய்யப்பட்டு விட்டதா? இந்த மின்சாரத்தைக் கொண்டு இந்த ஆண்டு மின்சார வெட்டு தவிர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறை என்பது வேறு, மின் வெட்டு என்பது வேறு. கேரளம் சில தினங்களாக நமக்கு மின்சாரத்தைத் தந்துகொண்டு வருகின்றது. கேரள அரசோடு பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடந்துகொண்டு வருகின்றது. இன்னும் சில தினங்களில் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. அப்படி ஒரு தீர்வு காணப்பட்டால் கேரள மின்சாரம் தொடர்ந்து வரும். அதன் காரணமாக மின் வெட்டிற்கு இப்போது அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## Coconut Fibre and Sago Factory at Salem.

*Q.No. 3—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) Whether this Government have any proposal to start a coconut fibre factory and a sago factory in Salem District; and

(b) If so the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை 1981-82ஆம் ஆண்டில் ஐந்து கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்களும் ஒரு ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர் சேவை தொழிற் கூட்டுறவு சங்கமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர் சேவை சங்கம் தன் பணியினை 27-2-82 முதல் ஆரம்பித்து செயல்பட்டு வருகின்றது.

(முற்பகல் 9.10)

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஜவ்வரிசி சம்பந்தமான கூட்டுறவுத் தொழிற்சாலை பிப்ரவரியிலே ஆரம்பிக்கப்பட்டு, இப்போது சுமார் 6 மாதங்களுக்கு மேலாகி விட்டது. இதை விரிவாக அபிவிருத்தி செய்வதற்கு, அந்த வட்டாரத்திலே இன்னும் அதிகமான கெபாசிடி இருக்கிறது. எனவே, இது ஆரம்பிக்கப்பட்டு 6 மாதங்களில் இதன் புரோக்கிரஸ் எப்படி தெரிகிறது? இப்படி ஆரம்பிக்கப்பட்டதற்குப் பின்னால், விலை சம்பந்தமாக இன்புளுவன்சு பண்ண வாய்ப்பு உண்டா? அரசாங்கத்திற்கு இதன் பொசிஷன் என்ன தெரிகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 செப்டம்பர் 7

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற் கூட்டுறவு சங்கம் ஆரம்பிப்பதற்கு முன்புவரையில், இந்த ஜவ்வரிசி தொழில் ஒரு 4, 5 முனைவர்களின் கையில் அடக்கமாக வைத்துக் கொண்டு, விவசாயிகளுக்கும், இந்தத் தொழிலில் ஈடுபட்ட சிறு தொழில் முனைவர்களுக்கும் நியாயமான விலை கிடைக்காமல் இருந்தது. ரீசனபிள் பிரைஸ் கிடைக்காமல், அன்—எகனாமிகல் பிரைஸ் பெற்றுக் கொண்டு வந்தார்கள். 6 மாதங்களாக இந்த முயற்சியின் காரணமாக, குறிப்பாக ஜவ்வரிசி மூட்டை ஒன்றுக்கு பிப்ரவரி மாதம் ரூ. 225 பெற்றுக் கொண்டிருந்தவர்கள், இப்போது இந்த 6 மாதங்களுக்குப் பிறகு, அரசு நடவடிக்கை எடுத்ததற்குப் பிறகு ரூ. 440 சென்ற மாதம் பெறக்கூடிய ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்போலவே, மாவு (ஸ்டார்ச்) பொறுத்த வரையில் ரூ. 160 என்று ஒரு மூட்டை 6 மாதங்களுக்கு முன்பு இருந்தது; இப்போது ரூ. 310 என்று அவர்கள் நேரடியாக விற்பதன் காரணமாக நிலைமை ஏற்பட்டு, இப்போது இடைத் தரகர்கள் கொடுமை ஒழிக்கப்பட்டு, சுரண்டலற்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கயிறு சம்பந்தமான தொழில் கூட்டுறவு கூடங்கள் அமைத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். கயிறு உற்பத்தி செய்யும்போது, அதன் குவாலிடி அதாவது தரம் சம்பந்தமாக அதை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறதா? அப்படி யோசனை இருக்கிறதென்று சொன்னால், மாடர்னைசேஷன் என்று சொல்லும்போது, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வேலையில்லாமல் போகக்கூடிய வாய்ப்பு ஏற்படுமா? அது குறையாமல் பார்த்துக் கொள்வதற்கு ஏதாவது யோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தத் தொழிலை நம்பிக் கொண்டிருந்தவர்களுக்கு உத்திரவாதம் அளித்து, அதே நேரத்தில் நார், நார்ப் பொருள் போன்றவற்றில் தரமான பொருள்களை, மற்ற மாநிலங்களோடு, மற்ற நாட்டோடு போட்டி போடுகின்ற வகையில் அதனை உயர்த்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டு, அதற்கான காயர் போர்டை அணுகி, ஏறத்தாழ 51 இலட்சம் ரூபாயை இன்றைக்கு நாங்கள் பெற்றிருக்கிறோம். அதைக் கொண்டு விரைவில், இன்றைக்கு தமிழ் நாட்டில் தஞ்சை, கன்னியாகுமரி, கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்களிலே தான் அதிகமான அளவுக்குத் தேங்காய் உற்பத்தி செய்யப்படுவதால், இந்த மூன்று மாவட்டங்களில் ஏதாவது ஒரு மாவட்டத்தில் ரிசர்ச் செண்டர், அதாவது ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஏற்படுத்துவதற்கான ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது.



1982 செப்டம்பர் 7]

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தனியார் கயிறு திரிக்கும் நிறுவனங்களுக்கு முன்பெல்லாம் அரசு நேரடியாக ஸ்டேட் எய்ட் டு இன்டஸ்ட்ரீஸ் ஆக்ட் என்ற சட்டத்தின்படி, கடன் வழங்கி வந்தது. தற்போது அது நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எனவே, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில், அரசு இதுபோன்ற நிறுவனங்களுக்கு கடன் வழங்கப் பரிசீலிக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சேலம் மாவட்டத்தில், என்னுடைய தொகுதியில் அழகுசமுத்திரத்திலும், கருக்கல்வாடியிலும், அந்தப் பகுதி மக்கள் முழு நேரமும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்கள் பயன்பெறத் தக்க வகையில் இந்தக் கயிறு தொழிற்சாலையை அங்கே ஆரம்பிக்க பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 5 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் சேலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு இது பரிசீலிக்கப்படும். அடுத்து, இன்றைக்கு அரசு நிறுவனத்தின் சார்பாக இதுவரை கடன் வழங்கிக் கொண்டிருந்தார்கள். அதற்கு இப்போது சுணக்கம் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இது பற்றி என்னிடம் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மையமாக வைத்து ஆவன செய்யலாம்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்படுகிற அந்த ஜவ்வரிசித் தொழிற்சாலையை காவிரிக்கரையிலே இருக்கக்கூடிய சேலம் மாவட்டத்திலுள்ள குமாரபாளயத்திலோ அல்லது பள்ளிப்பாளையத்திலோ ஆரம்பித்தால், பெரியார் மாவட்டத்தில் அதிகமாக உற்பத்தியாகும் குச்சிக் கிழங்கு அதற்கு பயன்படுத்துவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவிப்பதோடு, புதியதாக ஆரம்பிக்க இருக்கும் நார் தொழிற்சாலயை பெரியார் மாவட்டத்தில் ஆரம்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தனிப்பட்ட முறையில் அரசாங்கத்தின் சார்பில் இந்த ஜவ்வரிசி தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை. தனியார் செய்கின்ற நேரத்தில் அவர்களுக்கு தேவையான வசதிகள் செய்து தரப்படும். பெரியார் மாவட்டத்தைப் பற்றி கேட்டார்கள். பரிசீலனைக்கு வருகின்றபோது அவர்களுடைய கருத்து எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எஸ். துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நார் சம்பந்தப்பட்ட நூதன பொருள்களை செய்வதற்கு தர்மபுரி மாவட்டத்தில் சுமார் 20,30 நார் தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆகையால் அந்த இடத்திலே அந்த தொழிற்சாலையிலே நூதன பொருள்களைச் செய்வதற்கு அரசு அனுமதிக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னது போல் தனியார்கள் இப்படிப்பட்ட முயற்சிகள் செய்வதற்கு எந்த எந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அந்த அந்த வகையில் உதவி செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, 'மாடர்னைசேஷன்' என்ற பெயரிலே இந்த குடிசைத் தொழிலுக்கு அரசு இயந்திரங்களை கொண்டுவர ஆரம்பித்தால் ஏராளமான பேருக்கு வேலை பாதிக்கக்கூடிய அபாயம் இருக்கிறது. கோவை மாவட்டத்தில் பல கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிலும் குடிசைத் தொழில் ஏராளமாக இருக்கிறது. அப்படிப்பட்ட தனி குடும்பங்களுக்கு பண உதவி, கடன் உதவி செய்வீர்களா? வேலை போகாமல் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுடைய நோக்கம் எல்லாம் அந்த பொருளின் தரத்தை உயர்த்துவது தான். மற்ற மாநிலங்களோடு, மற்ற நாடுகளோடு போட்டி போட வேண்டும் என்ற குறியோடு தான் இருக்கிறோம். பணி புரிபவர்களுக்கு நிச்சயமாக வேலை வாய்ப்பு உத்திரவாதம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கயிறு தொழிற்சாலையை வறண்டு இருக்கிற, எந்த தொழிற்சாலையும் இல்லாத வடஆற்காடு மாவட்டத்தில் அமைக்க அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ஆலோசிக்கப்படும்.

### கிண்டி, அம்பத்தூர் தொழிற் பேட்டைகளிலுள்ள தொழிற் கூடங்கள்.

*வினா எண் 4—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டி, அம்பத்தூர் பகுதிகளில் தொழிற்பேட்டைகளில் இருக்கும் ஷெட்டுகளை தொழில் நடத்துபவர்களுக்கே தவணை முறையில் பணம் பெற்றுக்கொண்டு ஷெட்டை சொந்தமாக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) கிண்டி, அம்பத்தூர் மற்றும் இதர அரசு தொழில் பேட்டைகளில் இருக்கும் தொழிற்கூடங்களை தொழில் நடத்துபவர்களுக்கே தவணை முறையில் வழங்குவதற்காக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மேற்படி ஆணைப்படி தொழிற்கூடங்களை தொழில் நடத்துபவர்களுக்கே வழங்கத் தொடங்கிவிட்டது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே இந்தத்தொழிற்கூடங்களை தொழில் நடத்துபவர்களுக்கே தவணை முறையில் வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். அதனுடைய மதிப்பீட்டை இன்றையதினம் இருக்கின்ற மதிப்பீட்டுப்படி கணக்கிடப்படுகிறதா? அல்லது கட்டப்பட்டபோது என்ன மதிப்பு இருந்ததோ அதன் அடிப்படையில் கணக்கிடப்படுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே இந்த பிரச்சனையைப் பொறுத்த வரையில் 2 அம்சங்களை மையமாக வைத்து இன்றைக்கு தவணை முறையில் அந்த தொழிற்சாலைகளை தொழில் முனைவோருக்கு கொடுக்கிறோம். (1) நிலத்தை வாங்கப்பட்ட நேரத்தில் ''அட் தி டைம் ஆப் அக்யூசேஷன்'' அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்யப்பட்ட நேரத்தில் என்ன விலைக்கு வாங்கப்பட்டதோ அந்த விலையில் அந்த தொழில் முனைவோருக்கு தரப்படும். (2) கட்டிடத்தை பொறுத்தவரையில் 1975 ஆம் ஆண்டை குறியீடாக வைத்து அந்த ஆண்டின் மதிப்பு பிரகாரம் வசூல் செய்யப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி கொடுக்கின்ற போது சில மெம்பர்கள் இந்த 20 ஆண்டு காலமாக அதற்குண்டான வாடகையை கட்டியிருக்கிறார்கள். அதனால் அரசுக்கு ஓரளவிற்கு வருவாய் வந்திருக்கிறது. தொழில் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தில் அதிலே ஒரு பகுதியை அவர்களுக்கு தள்ளுபடி செய்ய அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். சலுகை அடிப்படையில் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர்களைக் கலந்து பேசித்தான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறோம். அவர்களே இதைப் பற்றிக் கேட்கவில்லை.

[1982 செப்டம்பர் 7

## சந்தன மரங்களை வெட்ட கொடுக்கப் பெறும் ஈட்டுத் தொகை

*வினா எண் 5—திரு. கு. ரமணி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தாலுகா, குத்தியாலத்தூர். திங்களூர் மலைப்பகுதிகளில் உள்ள கிராமங்களில் பட்டா நிலங்களிலிருந்து காட்டு இலாகா அதிகாரிகள் எடுத்துச் செல்கிற சந்தன மரங்களுக்கு கடந்த 15 ஆண்டுகளாக எந்த ஈட்டுத் தொகையும் விவசாயிகளுக்கு கொடுக்காமலிருந்து வருவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) குத்தியாலத்தூர், திங்களூர் மலைப்பகுதிகளில் உள்ள கிராமங்களில் பட்டா நிலங்களிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட சந்தன மரங்களுக்கு சில பட்டாதாரர்களுக்கு இன்னும் ஈட்டுத்தொகை கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

(ஆ) சத்தியமங்கலம் வட்டாட்சியரிடமிருந்து பெற வேண்டிய விவரங்களை உடனடியாக பெற்று பட்டதாரருக்கு உரிய ஈட்டுத்தொகையை வழங்குமாறு சத்தியமங்கலம் கோட்ட வன அலுவலருக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அந்த மலைப் பிரதேசங்களில் இருக்கும்படியான பட்டாதாரர்கள் உண்மையிலேயே எழுத படிக்கத் தெரியாத சாதாரண மக்கள். எவ்வளவு சந்தன மரங்கள் அவர்கள் கொடுத்தார்கள், அதற்கு என்ன மதிப்பு என்று அவர்களுக்கு தெரியாது. அவர்களுக்கு அரசாங்கம் ஈட்டுத் தொகை தரவில்லை, காரணம் என்ன என்று தெரியவில்லை? கணக்கு போடுவதற்கு நேரம் இல்லையா அந்த அதிகாரிகளுக்கு, காலம் நீட்டிப்பது என்பது புரியாத விளைவாக இருக்கிறது. அதைப் பொறுத்து அரசு அதை துரிதப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? தாமதத்திற்குக் காரணம் என்னவென்று அந்த அதிகாரிகளைக் கேட்டு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு கிராமங்களிலும் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னதாகவே பட்டா நிலங்களிலிருந்து அரசுக்கு மரம் வழங்குவதை பட்டா நிலத்தின் சொந்தக்காரர்கள் நிறுத்தி விட்டார்கள். ஒரு கிராமத்திலே 1965-க்கு பிறகு எடுக்கவில்லை;



1982 செப்டம்பர் 7]

இன்னொரு கிராமத்திலே 1972-க்கு பிறகு எடுக்கவில்லை. ஆகவே ஒரு பத்து ஆண்டுகளாக அந்த பட்டாதாரர்கள் அரசுக்கு மரங்களை தரவில்லை. அதிலே ஒரு மிகப்பெரிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இந்த பட்டாதாரர்களுக்கும் அரசுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை பின்னால் நடைமுறைப்படுத்தாமல் இந்த பட்டா நிலக்காரர்கள் 1972-க்கு பிறகு தனி வியாபாரிகளுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டு மரங்களை, கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் விளைவாக சில முடிவுகள் எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. அது நீதிமன்றத்திற்கும் போய் அந்த ஒப்பந்தத்திலே சில சரத்துக்களின் மீது நீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கிறது. அதனாலேதான் இந்த தடை ஏற்பட்டிருக்கிறது. பத்துப் பதினைந்து ஆண்டுகளாக, அந்த பட்டாதாரர்கள் மரம் வெட்டியெடுப்பதற்கு அரசை அனுமதிக்கவில்லை.

திரு. கு. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள விவரங்களிலேயிருந்து இதில் அடிப்படையான சில சிக்கல்கள் இருக்கிறதை அவர் வெளிப்படுத்தினார்கள். மலைப்பகுதிகளில் வாழும் அந்த மக்கள் என்ன விலைக்கு இன்றைக்கு சந்தன மரங்கள் விற்கப்படுகிறதோ அதனுடைய பலனை அவர்கள் அடைய முடியவில்லை. அந்த பலனை அடையும்படியாக 'ஃப்ரீ சேல்' இஷ்டமாக எந்த வியாபாரிகளுக்கும் விற்கலாம் என்ற சுதந்திரத்தோடு அவர்களை அரசு விட்டுள்ளதா? எங்களுக்கு கிடைத்திருக்கிற தகவல்படி அப்படி அவர்கள் விற்க முடியாது என்று அதிகாரிகள் வற்புறுத்துவதாகவும், அரசுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று கட்டுப்பாடு இருப்பதாகவும் சொல்கிறார்கள். அது உண்மையானால் அந்த மக்களுக்கு நியாயவிலை கிடைக்க செய்ய அரசு எதிர்காலத்தில் என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது? என்ன ஒப்பந்தம் செய்யப் போகிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பட்டா நிலத்திலே சந்தன மரத்தின் உரிமைபற்றி மலைவாழ் மக்கள் என்ற பெயராலே இன்றைக்கு எழுப்பப்பட்டிருக்கிறதே தவிர, நடந்து கொண்டிருக்கிற முறை இந்த நிலங்களை கையகப்படுத்தி கொண்டிருக்கிறவர்கள் இந்த சந்தன மரங்களை சொந்தம் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். 1905-லிருந்து 1922 அல்லது 1923 ஆம் ஆண்டு வரை சில ஒப்பந்தங்கள் இந்த சந்தன மரங்கள் சம்பந்தமாக பட்டாதாரர்களோடு அரசு செய்து கொண்டிருக்கிறது அப்படி ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருக்கிற சூழ்நிலையில் அதிலே விளைகிற சந்தன மரங்கள்ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளே இருந்தால் அவர்களுக்கு சொந்தம் என்றும், அதற்கு பிறகு வருகிற சந்தன மரங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தம் என்றும் பல மாவட்டங்களில் பலவிதமான ஒப்பந்தத்தை அந்தக் காலத்திலே அரசு செய்து கொண்டிருக்

கிறது. ஆனால் ஒரு அடிப்படை உரிமை இதிலே என்ன எழுகிறது என்றால் சந்தன மரம் என்பது யாரும் உண்டாக்குவதில்லை; சந்தனமரம் என்பது இயற்கை இந்த நாட்டிற்கு தந்திருக்கிற சொத்து. ஆகவே அதிலே தனியார் உரிமை கொண்டாட முடியாது என்பது அரசினுடைய நீண்டகால கொள்கை, அதனாலேதான் இன்றைக்கு பிரச்னை எழுந்திருக்கிறது. 1920-க்கு பிறகு அந்த மரங்கள் புதிதாக வந்திருந்தால் அது அரசாங்கத்திற்கு சொந்தமா அல்லது தனியாருக்கு சொந்தமா என்கிற பிரச்னை எழுந்திருக்கிறது. அப்படி புதிதாக முளைத்து இருக்கிற மரங்கள் அரசாங்கத்திற்கு சொந்தம் என்கிற ஒரு உணர்வு ஏற்பட்டு ஒப்பந்த விதிகளின்படி கோர்ட்டிற்குச் சென்றிருக்கிறார்கள். ஆகவே அந்த பிரச்னையிலேதான் சிக்கல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அவர்கள் தான் கடந்த 15 ஆண்டுகளாக மரங்களை விற்றுக்கொண்டிருக்கிறார்கள். சில கிராமத்திலே 15 ஆண்டுகள்; சில கிராமத்திலே 10 ஆண்டுகள்; அவர்கள் அரசாங்கத்திற்கு தரவில்லை. அதனால் தான் இன்றைக்கு அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்திற்குச் சொந்தமான சந்தன மரங்களை இயற்கை தந்திருக்கிற சந்தன மரங்களை இது எங்களுடைய சொத்து என்று சொல்லி தனியார்கள் வியாபாரிகளிடத்திலே கொடுத்துவிடுகிறார்கள். அந்த சந்தன மரத்தின் மதிப்பையே உணராமல் மிகக் குறைந்த விலைக்கு 4, 5 வருடங்களுக்கு முன்பாகவே ஏதோ தொகையை வாங்கிக் கொண்டு கொடுத்துவிடுகிறார்கள். அதனாலேதான் இன்றைக்கு சந்தன மரக் கடத்தல்களும் அந்தக் காடுகளுக்குள்ளே இருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைத் தடுக்க முயற்சிக்கிற போது இப்படி சில பேர்கள் தாங்கள் பாதிக்கப்படுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதனாலேதான் இந்த சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** தலைவர் அவர்களே, பட்டா நிலங்களிலே இருக்கின்ற பயனற்ற மரங்களிலே எந்த மரத்தையும் வெட்டக் கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறதா? அப்படியென்றால் அதை தளர்த்துவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பட்டா நிலங்களில் உள்ள சந்தன மரங்களைப்பற்றிய கேள்விதான் இது. ஆகவே அந்தக் கேள்வியை அவர்கள் தனியாகப் போட்டால் விவரமாகப் பதில் தரமுடியும்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்கள் வளர்ந்துள்ள நிலங்களிலே உள்ள பட்டாதாரர்களுக்கு நியாயமான தொகை . கொடுக்கமுடியாத நிலை இருக்கிறது. அதற்கு ஒரு காரணம் சந்தன மரங்களை வெளிநாடுகளுக்கு அனுப்பக் கூடாது என்று மத்திய அரசு தடை



விதித்து இருப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா? அந்தத் தடையை நீக்குவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்வி நேரடியாக இதோடு தொடர்பு இல்லாத கேள்வி என்றாலும்கூட இது தொடர்பான கேள்வி. கடந்த இரண்டு ஆண்டுகளாக ஏற்றுமதிக்கு இருக்கின்ற தடையை நீக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசை கேட்டுக் கொண்டிருக்கிறோம். இன்னும் அவர்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் :** தலைவர் அவர்களே, பட்டா நிலங்களிலே உள்ள ஒவ்வொரு மரத்தையும் வெட்டவேண்டுமென்றாலும் ஒவ்வொரு மரத்திற்கும் இவ்வளவு ரூபாய் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டுமென்று விதியிருக்கிறதே, இது சந்தன மரத்திற்கும் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மற்ற மரங்களையும் சந்தன மரங்களையும் ஒன்றாக இணைக்க முடியாது. சந்தன மரங்கள் என்பது 'ஸ்டேட் டிரீஸ்' தேசீய சொத்து என்று ஆக்கப்பட்டிருக்கிறது. கர்நாடக மாநிலத்திலே சட்டம் தெளிவாக இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே கடந்த 1905 ஆம் ஆண்டிலிருந்து 1925 ஆம் ஆண்டு வரையிலே ஏற்படுத்தப்பட்ட சில ஒப்பந்தங்கள் காரணமாக சில சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதைத்தான் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். ஆகவே சந்தனமரத்தை வெட்டிவிட்டு மீண்டும் அதை பயிர் செய்யமுடியாது. மற்ற மரங்கள் அப்படி அல்ல. வெட்டப்படுகிற மரத்திற்குப் பதில் நான் இன்னொரு மரத்தை நடுகிறேன் என்று அவர்கள் உறுதியளிக்கிறார்கள். அதற்குத்தான் வைப்புத் தொகையாக ஒரு குறிப்பிட்ட கட்டணத்தை வசூலிக்கிறார்கள். சந்தனமரம் அப்படி அல்ல, வெட்டியது வெட்டியதுதான். அது வேறு. இயற்கையாக முளைத்து வர வேண்டும்.

### சொரி முத்தையனார் கோவிலுக்குச் செல்லும் பக்தர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணம்.

*வினா எண் 6 —திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், முண்டந்துறை ரேஞ்சு பகுதியில் உள்ள அருள்மிகு சொரி முத்தையனார் கோவிலுக்குச் செல்லும் பக்தர்களிடம் பாபநாசம் அடிவாரத்தில் வனத்துறை மூலம் பணம் வசூலிக்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாவை?

மாண்புமிகு திரு. ஆர். எம். **வீரப்பன் :** (அ) மற்றும் (ஆ) கோவிலுக்கு செல்லும் பக்தர்களிடமிருந்து பணம் வசூலிப்பதில்லை. இந்த கோவில் முண்டந்துறை வனவிலங்கு சரணாலயப் பகுதியில் இருப்பதால் சரணாலயத்திற்கு வரும் நபர்களிடமிருந்து நபருக்கு ரூபாய் 2 வீதமும் மோட்டார் கார், வேன் முதலியவைகளுக்கு ரூபாய் 5-ம், லாரி, பேருந்து முதலியவைகளுக்கு ரூ. 10-ம், ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபாய் 3-ம் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஆடி அமாவாசை போன்ற விசேட நாட்களில் கோவிலுக்கு செல்வோரிடமிருந்து எவ்வித நுழைவுக் கட்டணம் வசூலிப்பதில்லை.

[மேற்கண்ட விடை மாண்புமிகு அமைச்சர் (செய்தி மற்றும் அறநிலையத் துறை) அவர்களால் ஒப்புதல் பெறப்பட்டது.]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, எந்த ஆண்டிலிருந்து இது வசூலிக்கப்படுகிறது? இதுவரை எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது? பாதசாரிகளிடமிருந்து பெறுகின்ற கட்டணத்தை ரத்து செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** எந்த ஆண்டிலிருந்து வசூலிக்கப்படுகிறது என்ற விவரமும் மொத்தம் எவ்வளவு வசூலித்து இருக்கிறார்கள் என்ற விவரமும் இப்போது என்னிடத்திலே இல்லை. இது சாதரணமாக பாதசாரிகள் உள்ளே நுழைந்து கோயிலுக்குத்தான் செல்கிறோம் என்று குறிப்பிட்டால் அவர்களிடமிருந்து வசூலிப்பது இல்லை. ஆடி அமாவாசையை யொட்டி ஆண்டுதோறும் விதிவிலக்குக் கொடுத்துக் கொண்டிருந்தோம். இப்போது நிரந்தரமாகவே 11 நாட்களுக்கு முன்னாலே 5 நாட்கள், பின்னாலே 5 நாட்கள் ஆடி அமாவாசை ஒரு நாள் ஆக 11 நாட்களுக்கு நிரந்தர விதிவிலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது.

[முற்பகல் 9-30]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிரந்தர விதிவிலக்கு எப்போதிலிருந்து அமுலாக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** இப்பொழுது முடிந்த ஆண்டிலேயிருந்து.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த முண்டந்துறை ரேஞ்சு பகுதியில் சொரி முத்தையனார் கோயிலுக்கு முன்னதாகவே அகஸ்தியர் அருவியும் அகஸ்தியர் கோவிலும் இருக்கிறது. அமைச்சர் அவர்களும் அதைச் சென்று பார்த்து வந்தார்கள் என்று அறிகிறேன். ஆக. அகஸ்தியர் கோவிலுக்குப் போகிறவர்கள், அதற்கு மேலே சொரி முத்தையனார் கோயிலுக்குப் போகிறவர்கள், அகஸ்தியர் அருவியிலே குளிக்கப் போகிறவர்கள், யாராக இருந்தாலும் இந்த





ஒரு மலைப்பாதை வழியாகத்தான் செல்ல வேண்டும். ஆகவே, அங்கே வருகிற எல்லோரிடமுமே அந்தக் கட்டணத்தை வசூல் செய்கிறார்கள். இந்த ரேஞ்ச் ஆபீசை அந்த இடத்திலேயிருந்து சொரி முத்தையனார் கோயிலுக்கு அந்தப் பக்கத்திலே கொண்டு போய் வைப்பார்களானால் இந்த வசூல் செய்கிற சிரமம் இருக்காது, பொதுமக்களுக்கும் வசதியாக இருக்கும். யாராக இருந்தாலும் வசூல் செய்கிறார்கள். இன்றைக்கும் அந்த நிலைமை இருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, இவர்கள் போட்டிருக்கிற உத்தரவு அங்கே இன்னும் அமுலாகவில்லை. அமுலாக்குவதற்கு முன்னால், நான் தெரிவித்த யோசனையைப் பரிசீலனை செய்து அமுல் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது ஒரு பாதுகாக்கப்படுகிற வனவிலங்கு பாதுகாப்பிடமாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளே எல்லோரும் சென்றுவிடலாம் என்று அறிவிப்பது என்பது இயலாத காரியம். அதிலே மிகுந்த கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று மத்திய அரசு, மாநில அரசு முடிவெடுத்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில், அது உண்மையிலேயே கோயிலுக்குச் செல்கின்ற பக்தர்களுக்கு இடையூறாக இல்லாமல், அருவியிலே குளித்துவிட்டு வருபவர்களுக்கு அல்லது வழிபட வருபவர்களுக்கு இடையூறாக இல்லாமல் பார்த்துக்கொள்கிற வகையிலேதான் இந்த அனுமதியை வழங்க இயலும்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவை சபா நாயகர் அவர்களே, இந்த வனவிலங்கு சரணாலயப் பகுதி என்ற பெயரால் பணம் வசூலிக்கப்படுகிறது என்றும் சொரி முத்தையனார் கோயிலுக்கு ஆடி அமாவாசையை ஒட்டிச் செல்பவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். இப்பொழுது மட்டுமல்ல, பல்லாண்டுக் காலமாக, அந்தக் கோயிலுடைய பழக்க வழக்கப்படி, ஒவ்வொரு கடைசி வெள்ளிக்கிழமையன்றும் பக்தர்கள் அந்தக் கோயிலுக்குப் போய் கொண்டிருக்கிறார்கள். நமக்கு அதிலே நம்பிக்கை இருக்கிறதோ, இல்லையோ, ஆனால் ஜனங்கள் போகிறார்கள். கடைசி வெள்ளிக்கிழமையன்று போகின்றவர்களிடமிருந்து கூட பணம் வசூலிக்கப்படுகிறது. அதனுடைய உச்சக்கட்டம் அருள்மிகு வாக்காளப் பெருமக்களைச் சந்திக்க போயிருக்கின்ற தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் அருணாசலம் அவர்களிடமிருந்து வசூல் செய்த பிறகுதான் உள்ளே அனுமதித்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக, மரவட்ட வளர்ச்சி மன்றத்திலே கூட, இனி இந்த வசூலைத் தடுத்து நிறுத்த வேண்டும், அது ரத்து செய்யப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுப்பப்

பட்டிருக்கிறது. அது அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டதா? அதன் அடிப்படையில் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்து அந்த வனவிலங்கு சரணாலய கட்டணத்தை ரத்து செய்ய அரசாங்கம் முன் முயற்சிஎடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கார்களிலே செல்கின்றவர்கள் ஏதோ ஒரு குறைந்தக் கட்டணத்தைக் கொடுத்துவிட்டு செல்வதனாலே ஒன்றும் கஷ்டம் வந்துவிடாது. ஆனால் நடந்து செல்கின்றவர்களுக்கு அப்படிப் பட்ட சங்கடங்கள் இருக்குமேயானால் அதை அரசு பரிசீலித்து தக்க முடிவுகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவையாறு இசைக் கல்லூரி.

*வினா எண் 7—திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு இசைக்கல்லூரிக்கு எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது?

(ஆ) அதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) திருவையாறு இசைக்கல்லூரிக்கு 20.85 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப் படவுள்ளது.

(ஆ) இதனால் அரசுக்கு செலவு ஏதும் இல்லை. இதற்காகும் நட்ட ஈட்டுத் தொகையான 2.41 இலட்சம் சத்திரம் நிதியிலிருந்து பெறப்படும்.

மரவள்ளிக்கிழங்கு விளையும் மாவட்டங்கள்.

*வினா எண் 8—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மரவள்ளிக்கிழங்கு எந்தெந்த மாவட்டங்களில் விளைகிறது?

(ஆ) மரவள்ளிக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப் பட்டுள்ளதா?



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) தமிழகத்தில் மரவள்ளிக்கிழங்கு சேலம், தென்னாற்காடு, கன்னியாகுமரி, மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மிக அதிகமான பரப்பளவிலும் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர்,செங்கல்பட்டு மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பரவலாகவும் பயிரிடப்பட்டு வருகிறது.

(ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் முள்ளுவாடி கிராமத்தில் ஒரு மரவள்ளிக்கிழங்கு பரிசோதனை நிலையம் இயங்கிவருகிறது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சி நிலையத்தில் மரவள்ளிக் கிழங்கினுடைய புதிய ரகம் ஏதாவது கண்டு பிடிக்கப்பட்டிருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எம்.வி.டி. முள்ளுவாடி என்கிற புதிய ரகம் கண்டுபிடிக்கப்பட்டு வேளாண்மை மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

வைகை நதி நீர்ப்பிடிப்புப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் தொகை.

*வினா எண் 9—திரு. மெ. ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் வைகைநதி நீர்ப்பிடிப்பு பகுதியில் மண் அரிப்பு திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் 1981-82ல் எத்தனை பேருக்கு வழங்கப் பட்டது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் எந்த நபருக்கும் கடன் வழங்கப்படுவதில்லை. மண்வளப் பாதுகாப்புப் பணிகளைச் செய்து முடிப்பதற்காகும் செலவு கடனாகக் கருதப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் மண் வளப் பாதுகாப்பு பணிகள் செய்து முடிப்பதற்காகிய செலவு 5.47 இலட்சம் ஆகும்.

(ஆ) எந்த நபருக்கும் ரொக்கக் கடன் வழங்கப்படுவதில்லை. மதுரை மாவட்டம் வைகைநதி நீர்ப்பிடிப்புப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 1981-82 ஆம் ஆண்டில் பயனடைந்தவர்கள் எண்ணிக்கை 762.

திரு. மெ. ஆண்டிஅம்பலம் : தலைவரவர்களே, வைகைநதி பிடிப்பு பகுதியில் மண் அரிப்பு, நீர்பிடிப்பு ஆகியவைகளினால் சேதத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நஷ்டஈடு கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, சாயில் எரோஷனைத் தடுப்பதற்காகக் கடன் வழங்கும் நேரத்தில் ஒரு நபருக்கு 5,000 ரூபாய் என்ற முறையில் வழங்குவதாகவும், அதனால் பல ஏக்கரா நிலங்களில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்க முடியவில்லை என்றும் கூறப்படுகிறது. ஆகவே ஒரு நபருக்கு இவ்வளவு ரூபாய் என்று கொடுப்பதற்குப் பதிலாக ஏக்கராக்களின் அடிப்படையில் அந்தக் கடனைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, கடன் ரொக்கமாக வழங்கப்படுவதில்லை என்பதைத்தான் ஏற்கனவே குறிப்பிட்டேன். ஆகின்ற செலவினைத்தான் கடனாகக் கருதி பத்தாண்டு தவணைகளிலே வசூலித்துக் கொண்டிருக்கிறோம்.

### சென்னையில் போடப்பட்டுள்ள சோடியம் ஆவி விளக்குகள்

*வினா எண் 10—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் புதிதாகப் போடப்பட்டிருக்கும் சோடியம் ஆவி விளக்குகள் பலவற்றில் நிறைந்த ஒளியில்லாதிருப்பதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: சோடியம் ஆவி விளக்குகளில் ஒளித்திறன் மின் அழுத்த வேறுபாடுகளினால் மிகையாகவே பாதிக்கப்படுகின்றது. காலப்போக்கினாலும் ஒளித்திறன் குறைகிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது பலயிடங்களிலே இந்த சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இந்த விளக்குகள் பொருத்துவதற்கு ஒரு விளக்குக்கு – அந்த பல்புக்கு ஆகும் செலவு எவ்வளவு? அது கெட்டுவிட்டால் அந்த நகராட்சிகளோ அல்லது நகரப் பஞ்சாயத்துக்களோ திரும்ப வாங்குவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள், ஆகவே, அதற்குப் பதிலாக வேறு விளக்குகளை – கொஞ்சம் மலிவான விலை உள்ள விளக்குகளைப் போட்டுக் கொள்வதற்கு அரசு அந்த நகராட்சிகளுக்குச் சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, சோடியம் ஆவி விளக்குகளைப் பொறுத்தவரையில் மெர்க்குரி விளக்குகளைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிக மணி நேரம் விளக்கின் மின் திறன் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது ஒளி கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. அதே நேரத்தில் இந்த சோடியம் ஆவி விளக்குகளைப் போடுவதால்—குறிப்பாக டிராஃபிக் கன்ஜஷன் இருக்கும் இடங்களில் இவைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறோம்— இரவு நேரங்களில் குறிப்பாக மழை பெய்யும் காலங்களில் கண்ணுக்குப் புலனாகும் வகையில் அங்கேயுள்ள சாலைகள் மிகத் தெளிவாகத் தெரியும் வரையில் இந்த சோடியம் ஆவி விளக்குகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒரு விளக்கு ஏறக்குறைய 4,500 ரூபாய் அல்லது 5,000 ரூபாய் ஆகிறது. குறிப்பாக 15,000 மணிகள் நேரம் எரியக் கூடிய விளக்குகளாக இந்த விளக்குகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நல்ல தன்மை உள்ள விளக்குகளைப் போட்டால் அதிக நேரம் நீடித்த உழைப்பு கிடைக்கும்; மார்ட்டாலிட்டி ரேட் குறைவாகவும் இருக்கக் கூடியதாக இருக்கிறது.

### மதுரை நகரில் அழுகும் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களிடம் வசூலிக்கப்படும் கட்டணம்

*வினா எண். 11—திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சி அழுகும் பொருட்களான (Perishable commodites) கறிகாய் மற்றும் வாழை இலை போன்ற பொருள்களை மதுரை நகருக்குள் கொண்டு செல்கின்ற மதுரையிலிருந்து எடுத்துச் செல்கின்ற வாகனங்களுக்கு அதில் உள்ள சரக்குகளுக்கான தனி கட்டணம் வசூலிக்க ஏலம் விடப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

ஆம் எனில், இதை உடனடியாக ரத்து செய்ய ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ.) மற்றும் (ஆ). வாகனங்களில் வரும் சரக்குகளுக்கான தனிக் கட்டணம் வசூலிக்க ஏலம் விடப்படவில்லை. மதுரை வடக்காவணி மூலவீதியில் உள்ள பசும்பொன் நாளங்காடிக்கு நாள்தோறும் காய்கறிகள் கொண்டு வரும் வாகனங்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் – வகையில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை மதுரை-மாநகராட்சி மன்றத்தின் 24-7-81 தேதிய தீர்மானம் எண். 297—ன்படி ஏலம் விடப்பட்டது. ஆனால், மதுரை மாநகராட்சி மன்றத்தின் 29-10-81 தேதிய 499—வது எண் தீர்மானத்தின்படி, ஷி ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

## உசிலம்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக்கும் திட்டம்.

* வினா எண். 12—திரு எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ). உசிலம்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டே உசிலம்பட்டி பேரூராட்சியையும், திருமங்கலம் பேரூராட்சியையும் நகராட்சிகளாக ஆக்குவதற்கு அரசு உத்தரவு போட்டு, மத்திய அரசின் தடையின் காரணமாக நிறுத்தப்பட்டதாகத் தெரிகிறது. திருமங்கலம் பேரூராட்சி மட்டும் நகராட்சியாக மாற்றப்பட்டு, உசிலம்பட்டி பேரூராட்சி நிறுத்தப்பட்டு இருக்கிறது. 1979–லேயே நகராட்சியாக உத்தரவிடப்பட்டும், இவ்வளவு காலமாகியும் இன்னும் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்களே, எவ்வளவு காலத்தில் முடியும் என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.



திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, நிதி ஆதாரம் ஜனத்தொகையைப் பார்த்து, சில சட்ட விதிகளைப் பார்த்துத் தான் முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். நான் சொல்லுவது, 1979 ஆம் ஆண்டே நகராட்சியாக உயர்த்துவதற்குரிய தகுதி பெற்றுவிட்டது என்று அறிவிக்கப்பட்டுவிட்டது, அது இன்னும் பரிசீலனையில் இருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசு சட்டத்தைச் சொல்லி நிறுத்தப்பட்டிருந்தது. இப்போது ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை. உடனடியாக உயர்த்துவதற்குரிய ஆதாரங்கள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டுவிட்டதே, அது ஏன் இன்னும் காலதாமதம் ஆகிறது என்பதை அமைச்சர் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய 'பேன ஆர்டர்' அதாவது இது போன்ற பேரூராட்சிகளை நகராட்சிகளாக உயர்த்துவது என்பதெல்லாம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்ற நிலை இருந்தது. ஆனால், திருமங்கலம் சில விதிமுறைகளுக்கு உட்பட்டு உயர்த்தக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அந்த விதிமுறைகள் தளர்த்தப்படுகிற சூழ்நிலை இன்னும் இந்தப் பேரூராட்சியைப் பொறுத்த வரையில் வரவில்லை. அதனால் வருகிற காலம் வரையிலே பொறுத்திருந்தால் கண்டிப்பாகக் கிடைக்கும்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, உசிலம்பட்டி விரைவிலே நகராட்சியாக ஆக்கப்படும் என்று அமைச்சர் சொன்னார்கள். விருதப்பட்டி பேரூராட்சியாக இருந்து நகராட்சியாக மாற்றப்பட்ட போது, விருதுநகர் என்று மாற்றம் செய்யப்பட்டது. அதேபோல உசிலம்பட்டி நகராட்சியாக மாற்றம் செய்யப்படும்போது உசிலை நகர் என்று மாற்ற அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

## திருப்பாலைக்குடி மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம்.

* வினா எண். 13—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முகவை மாவட்டம் R S. மங்கலம் ஒன்றியத்தில் உள்ள திருப்பாலைக்குடி மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இங்கு ஒரு அரசு மருந்தகம் 1982–83 ஆம் ஆண்டு தொடங்கப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பாலைக்குடியிலே கிட்டத்தட்ட 6 ஆயிரம் ஜனங்களுக்கு மேல் உள்ளனர். அது ஒரு பெரிய நகரத்தைப்போல இருக்கின்றது. அந்த ஊரிலே ஒரு சிறிய மருந்தகம் கூட இல்லை. நீண்ட நாட்களாக இந்தப் பகுதியிலே ஒரு அரசு மருத்துவமனை வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது. அது விரைவில் கொண்டுவரப்படுமா என்று தெரிவித்து, அதற்கான ஏற்பாட்டை அரசு உடனடியாக செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இப்போதுதான் அரசு மருந்தகத்தை ஏற்படுத்துவதற்காக அரசாணை போட்டிருக்கிறோம். அதற்குப் பிறகு அதற்காக Government have also sanctioned a recurring expenditure of Rs. 20,000. 20 ஆயிரம் ரூபாயை அதற்காக ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சருக்காகவும், நான் ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சருக்காக 7 ஆயிரம் ரூபாயும், பர்னிச்சர் வாங்குவதற்கு 8 ஆயிரம் ரூபாயும் போட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நாம் உடனடியாக மருத்துவமனையைத் தனியாக ஏற்படுத்த முடியாது. மருந்தகத்தைத் துவக்க இருக்கின்றோம். அதற்குப் பிறகு வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மருத்துவமனை வயபிளாக இருக்குமா என்று பார்த்து, அதை ஆரம்பிக்கலாம்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருந்தகத்திற்கு ஒரு சில படுக்கைகளையாவது சாங்ஷன் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அப்போது அது மருத்துவமனையாக ஆகிவிடும். நான் ஏற்கனவே சொன்னதைப் போல, பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

காஞ்சிபுரம் அரசு மருத்துவமனை.

* வினா எண். 14—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் அரசினர் மருத்துவமனைக்கு சராசரியாக ஒரு நாளைக்கு வரும் புறநோயாளிகள் எத்தனை பேர்?

(ஆ) உள் நோயாளிகள் எண்ணிக்கை (படுக்கை) அனுமதிக்கப்பட்டுள்ளது எவ்வளவு?

(இ) எத்தனை உள்நோயாளிகள் தற்போது உள்ளனர்?



(ஈ) உள் நோயாளிகள் படுக்கை எண்ணிக்கையினை அதிகரிக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) 2522 (ஆ) 257 (இ) 368 (ஈ) தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை 300 ஆக உயர்த்த புதிய கட்டிடம் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேலும் காஞ்சிபுரத்தில் உள்ள அரிமா சங்கம் அளித்த நன்கொடை மூலமாக கட்டப்பட்ட நான்கு தணிவகை அறைகள் 'சி' பிரிவு வார்டாக அமைக்கப்பட்டு அதில் 8 படுக்கைகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பும் மருத்துவப்பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநரின் ஆய்விலுள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கும், அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனைக்கும் வளர்ச்சி ஏற்பட என்னென்ன நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரப்பட்டியில் இருக்கக்கூடிய காஞ்சிபுரம் அருகில் இருக்கக்கூடிய அறிஞர் அண்ண நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்காக 10 லட்சம் ரூபாய் provision of equipments to Arignar Anna Memorial Cancer Institute, Karapatti 10 இலட்சம் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரியாக provision of H.T. supply to the Government headquarters hospital, Kancheepuram. அதற்கு 9 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேலைகள் துவங்குவதற்கு நாங்கள் உத்தரவு போட்டிருக்கிறோம். அது அல்லாமல் டி.எம்.ஓ. குவார்ட்டர்ஸ் கட்டுவதற்கும் உத்தரவு போட்டு இருக்கிறோம். காஞ்சிபுரம் தலைமை மாவட்ட மருத்துவமனையிலே ஹோமியோபதி பிரிவை துவக்க உத்தரவு போட்டு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் அரசினர் மருத்துவமனையின் வளர்ச்சிக்காக 35 இலட்சம் ரூபாய்க்கு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளதா? அப்படி எனில் அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது ஏற்கனவே சில தொகைகளை குறிப்பிட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், அங்கே இன்னும் வளர்ச்சிக்காக பல பரிந்துரைகளை அனுப்பியிருக்கிறார்கள். அவை அரசினுடைய கவனத்தில் தற்போது இருக்கின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு புற்று நோய் இருக்கின்ற நோயாளிகள் — சமீபத்திலே என்னுடைய கிராமத்திலே ஒருவர் சென்றார் — ஆனால் அந்த நோயாளிகளுடைய கதையை எடுத்து அவர்களிடத்திலே கொடுத்து வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனைக்குச் சென்று டெஸ்ட் செய்து ரிசல்ட் வாங்கி வரும்படி குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது அவைகள் ஆராய்ந்து கண்டுபிடிக்கின்ற கருவிகள் அந்த புற்று நோய் மருத்துவமனையில் இல்லையா? அப்படி இல்லையென்றால் அரசு அதற்கான வசதிகள் செய்ய நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காரப்பட்டியில் இருக்கக்கூடிய அண்ணா பெயரால் இயங்கிக் கொண்டு வருகின்ற புற்று நோய் மருத்துவ மனையில் மிகச் சிறப்பான கருவிகள் இருக்கின்றன. நான்கூட ஒரு வாரத்திற்கு முன்பாக அங்கே சென்று பார்த்தேன். அங்கே 2 நோயாளிகள் சி.எம்.சி. மருத்துவமனையில் இருந்து லெட்டர் மூலமாக இந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதைப் பார்த்தேன். ஆகவே இது ஒரு குறிப்பிட்ட டெஸ்ட் பண்ணுவதற்கு அங்கே வசதிகள் இல்லாமல் இருந்திருக்கலாம். அது குறித்து முன் விவரத்தைக் கொடுத்தால் நான் இந்த பர்ட்டிகுலர் டெஸ்ட் அங்கே செய்யாமல் ஏன் அங்கே அனுப்பியிருக்கிறார்கள் என்று பார்க்கமுடியும். ஆனால் பல்வேறு மருத்துவமனைகளில் இருந்து கூட சி.எம்.சி. மருத்துவமனையில் இருந்துகூட ஏராளமான நோயாளிகள் அங்கே முடியாது நீங்கள் காஞ்சிபுரம் மருத்துவ மனைக்குச் செல்லுங்கள் என்று வந்துகொண்டிருக்கிறார்கள். இப்போதுகூட அங்கே ஒரு 100 படுக்கைகள் இருக்கின்றன. ஆனால் 150 நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். நான் ஏற்கனவே சொன்ன மாதிரி இன்னும் 100 படுக்கைகள் உயர்த்து வதற்காக ஏற்பாடுகள் செய்து வெகு விரைவில் நடைபெறும்.

## Medical Facilities to Adhivasi areas.

*Q. No. 15—THIRU S. SEMMALAI: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) Whether any special provision has been made under Sixth Five Year Plan to provide medical facilities in the Adhivasis, areas; and

(b) If so, the details there of?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம். (ஆ) இம் மாநிலத்திலுள்ள ஆதிவாசிகளுக்கும், மலைவாழ் மக்களுக்கும் மருத்துவ வசதி கொடுக்கும் பொருட்டு ரூ 30.25 இலட்சம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடர்ச்சிப் பணியின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.



திரு. செ. செம்மலை: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதனால் பயன்பெறும் மலை வாழ் மக்கள், ஆதிவாசி மக்கள் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏறத்தாழ ஒரு 15 ஆயிரம் பேர்கள் உடனடியாக இதனால் இந்தத் திட்டத்தின் மூலமாக பயன்பெறுவார்கள். அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு மருத்துவமனையிலும் தனித் தனியாக நாம் சில கருவிகளைக் கொடுத்திருக்கிறோம். சில வசதிகள் செய்து கொடுத்திருக்கிறோம். மற்றவர்கள்கூட வருகின்ற அளவிற்கு செய்யப்பட்டிருக்கிறது. இது தவிர கீழ்க் கண்டபடி நாங்கள் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோம்:—

1. Provision of an Ambulance van to the Government. Hospital Gudalur (started functioning from 1-6-76).

2. Establishment of an additional Mobile medical Unit at Uthagamandalam (started functioning from 1-6-76).

3. Construction of a 40 bedded ward at the Government Head-quarters Hospital, Uthagamandalam (started functioning from 15-5-79).

4. Construction of 40 bedded ward at the Government Hospital, Gudalur (started functioning from 15-5-79).

5. Opening of a Government dispensary at Gudalur Bazaar (started functioning from 28-1-77).

மேற்கண்டவற்றிற்காக நிதி ஒதுக்கியிருக்கிறோம். ஒட்டு மொத்தமாக 30 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே வாழும் ஆதி வாசிகளுக்கு அந்த மக்களுக்கு இப்படி ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அது எந்தெந்த வகையில் செலவழிக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்காக நிதி ஒதுக்கியிருக்கிறோம். சேலம் மாவட்டத்தில் ஏற்காட்டில் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். அதே மாதிரி During the year 1982-83 two Government dispensaries are proposed to be opened, one in the Rasipuram taluk part of kolli hills in Salem district and the other one at Theradipattu of Kalrayan hills in South Arcot district at a total cost of Rs. 7.90 lakhs.

திரு. மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, குன்னூர் அருகில் உள்ள யானைப்பள்ளம், சாணார்கொண்டை ஆகிய மலைப் பகுதிகளில் மருத்துவ வசதி இல்லை. அந்தப் பகுதிகளில் மருத்துவ வசதி ஏற்படுத்தித்தர அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் அதைச் செய்து தர முடியாது என்றாலும் கூட அது குறித்து ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். அதற்காக டேனிடால் திட்டத்தின் மூலமாக சில வசதிகளைச் செய்து கொடுக்க திட்டங்கள் தீட்டிக் கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 1979—80-ம் ஆண்டில் விபத்துக்குள்ளான அரசுப் பேருந்துகள்.

*வினா எண். 16—திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979–1980 ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கு சொந்தமான பேருந்துகள் எத்தனை விபத்துக்குள்ளாயின?

(ஆ) அதனால் உயிரிழந்தோர் எத்தனை பேர்?

(இ) விபத்துக்களை தடுக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) 6,711 பேருந்துகள்.

(ஆ) 601 பேர்கள்.

(இ) விபத்துக்களைத் தடுக்க அரசாங்கம் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளது:—

1. எல்லாப் பேருந்துகளிலும் வேகத்தடை கருவிகள் (Dysicon-speed controlling device) பொருத்தப்பட்டுள்ளன.

2. ஒவ்வொரு ஓட்டுநருக்கும் பேருந்து ஓட்டுவது மற்றும் போக்குவரத்து விதிகள் பற்றிய மறு பயிற்சி கல்வி வழங்கப்படுகிறது.

3. விபத்தின்றி ஓட்டுதலை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் விபத்தின்றி பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு பரிசுத் தொகை வழங்கும் திட்டம் 1-4-76 முதல் செயல்படுத்தப் பட்டுள்ளது.



திரு. பி. எஸ். துரைசாமி: தலைவர் அவர்களே, தனியார் பஸ்ஸுக்கும், அரசு பஸ்ஸுக்கும், லாரிக்கும் இடையே விபத்து ஏற்பட்டால், தனியார் பஸ்ஸில் இறந்தவர்களுக்கு அரசு உதவிப் பணம் கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

132253

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தனியார் பேருந்தாக இருந்தாலும் சரி, அரசுப் பேருந்தாக இருந்தாலும் சரி, வாகனங்கள் இன்ஷ்யூரன்ஸ் செய்யப்பட்டு இருக்கின்றன. அந்த அடிப்படையில் அவர்களுக்கு உதவிப்பணம் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, அரசாங்கம் தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் உதவிகளைச் செய்வதற்கு கவனிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, விபத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடு கொடுப்பதில் தமிழக அரசு கஞ்சத்தனம் காட்டுவதாகவும், அதோடு இல்லாமல், டிரிபியூனலில் ஏதாவது ஒரு தொகை காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அதைக் குறைக்கவேண்டும் என்பதற்காக அப்பீல் செய்யப்படுவதாகவும் கூட, ஹைக் கோர்ட்டில் கண்டித்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த ஜட்ஜ்மென்ட்டை அரசு வரவழைத்து, அப்படி ஏதேனும் நடந்து இருக்குமானால், அப்படிப்பட்ட துன்பங்களை, துயரங்களை இனிமேல் இல்லாமல் செய்வதற்கு, அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, பல நேரங்களில் விபத்துகள் ஏற்படுகின்றன. எந்தச் சூழ்நிலையில் அவை ஏற்பட்டன என்பதைப் பார்த்துத்தான் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் என்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது. இதிலே கஞ்சத்தனம் காட்டுவது ஒன்றும் இல்லை. கொடுக்கப் படுகின்ற காம்பன்சேஷன் தவறானவர்களுக்குப் போய் சேர்ந்து விடக்கூடாது என்பதற்காக அப்பீல் போவதில் நியாயம் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அப்படி தவறானவர்களுக்குக் கொடுத்து விட்டால்கூட, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் போன்றவர்கள் நாளைக்கு அது குறித்து கேள்விகளை எழுப்பக் கூடும். ஹைக்கோர்ட்டில் அப்படி ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்குமானால், அதைப் பற்றி நிச்சயமாகப் பரிசீலிக்க அரசு தயாராக இருக்கிறது. இது வரையில் அது எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, விபத்துக் களைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து இருப்பதாக சொன்னார்கள். அதற்காக பொருத்தப்

VR11,31'N82

பட்டுள்ள 'டைசிகான்' என்ற கருவி சரியாக இல்லை. அந்த வேகக்கட்டுப்பாட்டுக் கருவி பஸ் நின்று கொண்டு இருக்கிற போதே கத்துகிறது. பஸ் வேகமாக ஓடுகின்ற போது, அந்தக் கருவி சத்தம் ஏற்படுத்துகின்ற காரணத்தால், டிரைவர் எச்சரிக்கப் பட்டு, சரியான வேகத்தில் போவதற்கு தன்னை தயார்படுத்திக் கொள்வார். இது நிற்கிறபோதே கத்துவதால், அது சரியாக இயங்கவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இப்படிப் பட்ட ஒரு கருவியைப் பொருத்துவதற்குப் பதிலாக, வேறு வகையில் பேருந்து வேகத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஏதேனும் கருவியைப் பொருத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அந்தக் கருவி சரியாகப் பயன்படுகிறது என்றுதான் பலர் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போலவும் சிலர் சொல்கிறார்கள். இப்படி அவரவர்களுக்கு என்ன தோன்றுகிறதோ அந்த வகையில் அந்தக் கருவியைப் பற்றிச் சொல்கிறார்கள். ஆகவே, அதைப்பற்றியெல்லாம் கவனத்தில் கொண்டு அரசாங்கம் இப்போது சேரன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஒரு வேகக்கட்டுப்பாடு கருவியை கண்டுபிடித்து இருக்கிறது. அதன் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிச் சொல்லமாட்டார் என்று நம்புகிறேன்.

திரு. மு, அம்பிகாபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வேகக்கட்டுப்பாட்டு கருவி 'டைசிகான்' பொருத்தப்பட்ட பின்னால் விபத்துகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதா அல்லது கூடியுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், இப்படி விபத்துகள் ஏற்பட்டு விட்டால், அந்த வண்டியை ஓட்டிய ஓட்டுனருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. விபத்து என்பதே தற்செயலாக ஏற்படுவதுதான். அதைத்தான் 'ஆக்சிடென்ட்' என்று சொல்கிறோம். இப்படித் தற்செயலாக ஏற்பட்டு விடுகின்ற ஒரு நிலைமைக்கு அந்த டிரைவருக்கு சிறைத் தண்டனை விதிப்பது எந்த வகையில் நியாயம்? இதை அரசாங்கம் தடுத்து நிறுத்த முன் வருமா? வேண்டுமென்றே — இன்டன்ஷனலாக யாரும் இந்த விபத்துக்களைச் செய்ய மாட்டார்கள். அது தானாக ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, இந்த சிறைத் தண்டனை விதிப்பதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, வேகக் கட்டுப்பாட்டுக் கருவி என்பது ஒரு குறிப்பிட்ட வாகனங்களுக்கு மட்டும்தான் இப்போது பொருத்தப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 12,000 அல்லது 13,000 பேருந்துகள் இருக்கின்றன; 30,000 கனரக வாகனங்கள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் இந்தக் கருவி பொருத்தப்பட்ட பிறகுதான்



இதுபற்றிய முடிந்த முடிவைக் காணமுடியும். போக்குவரத்தில் வேகம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் விபத்துக்கள் குறைந் திருக்கின்றன என்று சொல்ல முடியும். விபத்தின் காரணமாக வேலை நீக்கம் அல்லது சிறைத் தண்டனை அளிக்கப்பட் டிருக்கிறது, அப்படி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். அவர்கள் தவறு செய்திருந்தால் அந்தத் தண்டனையை வேறு யாருக்குக் கொடுப்பது? அவர்களுடைய தவறு இல்லாமல் இருந்தால் அதுபற்றி அரசு பரிசீலனை செய்து, ஆவன செய்யும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை பெரும்பாலும் தனியார்கள் நடத்துகிறார்கள். ஓட்டுநர்களால் தவறுகள் நடைபெறுவதற்குக் காரணம் ஓட்டுநர்களுக்கு அந்தப் பயிற்சிப் பள்ளிகளிலே சரியான பயிற்சி அளிக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் அனைத்தையும் அரசே நடத்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, உடனடியாக அத்தனை பயிற்சிப் பள்ளிகளையும் அரசாங்கம் எடுத்து நடத்துவது என்பது சரியல்ல, அது முடியாத ஒன்று. இருந்தாலும் மாவட்டந்தோறும் ஒரு பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று சொல்லி, இப்போது அதுபற்றி நாங்கள் நடவடிக்கை எடுத்து, முதல் தடவையாக 5 மாவட்டங்களில் பயிற்சி நிலையங்களை நிறுவ நடவடிக்கை எடுத்திருக்கிறோம். படிப்படியாக எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்படும்போது இந்தப் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று கருதுகிறேன்.

போக்குவரத்துக்கழக டெப்போக்களிலுள்ள சிற்றுண்டிச்சாலைகள்.

*வினா எண் 17—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் டெப்போக் களிலும் சிற்றுண்டிச்சாலைகள் (காண்டீன்) உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றுள் போக்குவரத்துக்கழகமே நடத்துவன எத்தனை?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) 75 (எழுபத்தைந்து மட்டும்).

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்ததிலிருந்து இன்னும் பல பணி மனைகளில் சிற்றுண்டிச்சாலைகள் திறக்கப்படவில்லை என்று தெரிகிறது. அதே நேரத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பணிமனையில் சிற்றுண்டிச்சாலை திறக்கப்பட்டிருக்கிறது. அதன் அருகில் இருக்கிற பல்லவன் போக்குவரத்துக் கழக பணிமனையில் சிற்றுண்டிச்சாலை இல்லாத காரணத்தால் அங்குள்ள பணியாளர்கள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பணிமனை சிற்றுண்டிச்சாலைக்கு செல்லும்போது பல தகராறுகள் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. இந்த நிலை நீடிக்காமல் இருக்க, இந்தக் குறையைப் போக்க, பல்லவன் போக்குவரத்துக் கழக பணிமனையில் உடனடியாக சிற்றுண்டிச் சாலை ஒன்று திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 100 பணியாளர்களுக்குமேல் இருக்கிற அத்தனை பணிமனைகளுக்கும் சிற்றுண்டிச்சாலை திறக்கப்பட வேண்டுமென்று கொள்கை முடிவு எடுத்து, அந்த வேலையைச் செய்து வருகிறது. நாங்களே இதை எல்லாம் செய்ய வேண்டியிருப்பதால் இன்னும் சில இடங்களில் சிற்றுண்டிச் சாலைகளைத் திறக்க முடியவில்லை. ஏற்கெனவே இருந்தவர்கள் கொஞ்சம் செய்திருந்தால் நாங்கள் இதற்குள் அந்தப் பணியை முடித்திருக்க முடியும். இருந்தாலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக சிற்றுண்டிச்சாலை சம்பந்தப்பட்ட பிரச்சனை என்னுடைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி, உடனடியாக பல்லவன் போக்குவரத்துக் கழக பணிமனையிலும் சிற்றுண்டிச்சாலை திறக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, நடந்தவைகளைச் சொல்லி பல காரியங்களைத் தட்டிக்கழிக்க இங்கே பதில் சொல்கிறார்கள். அந்த நிலைமை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்திலிருந்த சிற்றுண்டிச்சாலை இரண்டு மாதங்களுக்கு முன்னால் எடுக்கப்பட்டுள்ளது. அங்கே இரண்டு மாதங்களாக சிற்றுண்டிச்சாலை இல்லாத காரணத்தால் அங்கு வருகிற பயணிகளுக்கு சிற்றுண்டி அருந்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக அங்கும் சிற்றுண்டிச் சாலையைத் திறக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மூலக் கேள்வி தொழிலாளர்களுக்கு சிற்றுண்டிச்சாலை ஏற்படுத்துவது சம்பந்தமானது, பயணிகள் சம்பந்தப்பட்டது அல்ல. அது வேறு, இது வேறு.



டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துக் கழகங்களே ஏற்று தொழிலாளர்களுக்காக நடத்துகிற இந்தச் சிற்றுண்டிச் சாலைகளில் தனியார் நிறுவனங்களில் இருப்பதைப் போல சப்சிடைஸ்ட் ரேட்டுகளில் குறைந்த விலையில் 10 காசு இட்டிலிகள், 20 காசு பொங்கல் என்பது போன்று, டி.வி.எஸ். நிறுவனங்களில் கூட கொடுக்கிறார்கள். அது போல் கொடுப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படித்தான் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு, வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

### நாட்டுடமைத் திட்டங்கள் வெளியிடப்பட்டு மனுக்கள் பரிசீலிக்கப்படாமலுள்ள புதிய வழித்தடங்கள்

*வினா எண் 18— திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புதிய வழித்தடங்கள் தருவதற்காக மாவட்ட போக்குவரத்து அதிகாரிகளால் மனுக்கள் கோரப்பெற்று பரிசீலிக்கப்படுகின்ற நேரத்தில், அதே வழித்தடங்களுக்கு நாட்டுடமைத் திட்டங்கள் வெளியிட்டு அந்த மனுக்கள் பரிசீலிக்கப்படாமல் மாவட்ட போக்குவரத்து அதிகாரிகளிடம் உள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மனுக்கள் எத்தனை ? வழித்தடங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) மனுக்கள் 432; வழித்தடங்கள் 67.

திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்துகளுக்கு புதிய வழித்தடங்கள் கொடுக்கும் விஷயமாக, அதை நடைமுறைப்படுத்த, பி.டி.சி. யிலிருந்து ஒரு அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். அவர் 4 மாத காலமாக புது மாற்று வழித்தடங்கள் கொடுப்பதிலோ அல்லது இருக்கிற வண்டிகளுக்கு வேரியேஷன் கொடுப்பதிலோ செயல்படாமல் இருக்கிறாரே, அவருக்கு எப்போது அதிகாரம் கொடுக்கப்போகிறீர்கள் ? உடனடியாக அவருக்கு அதற்கான அதிகாரங்களைக் கொடுத்து, இவைகளை அமுல்படுத்த அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, வேரியேஷனைப் பொறுத்தவரையில் எந்தத் தடையும் இல்லை, கொடுக்கலாம் என்று உத்தரவு போட்டாகிவிட்டது. புதிய வழித்தடங்கள் கொடுப்பதைப் பொருத்தவரையில், எந்தெந்த தடங்களில் பேருந்துகளை இயக்கினால் லாபகரமாக இருக்கும் அல்லது தேவையாக இருக்கும் என்று ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறோம். விரைவில் அந்த ஆய்வு முடிந்து விடும். அது முடிந்தவுடன் அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படும்.

**திரு. கே. நாராயணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே டவுன் பஸ் விடவேண்டும் என்று கோரிக்கை கொடுத்தேன். அதனை இதுவரைக்கும் இந்த அரசு பரிசீலிக்காமல் இருக்கிறது. அதற்கான கோரிக்கையை சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் கொடுத்தும் இன்னும் டவுன் பஸ் வரவில்லையே என்று தொகுதி பொது மக்கள் மத்தியில் ஒரு அதிருப்தி நிலவுகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த அதிருப்தியை நீக்கும் வகையில் நடவடிக்கை எடுப்பாரா, ஏதாவது அறிவிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஒட்டு மொத்தமாகத்தான் அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியும். இதனால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு ஏதோ கெட்ட பெயர் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அவர் மீது ஒன்றும் இதில் தவறு இல்லை என்று வேண்டுமானால் அறிவித்துவிடத் தயாராக இருக்கிறேன். (சிரிப்பு) அவருடைய கோரிக்கையின் மீது நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி எடுக்கும்.

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடப்பில் இருக்கிற மனுக்கள் பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு நட்டத்தில் இயங்கக் கூடிய வழித்தடங்கள் இருந்தால், தனியார்களுக்கு அந்த இடங்களில் அவர்களுடைய பேருந்துகளை விட, அந்த வழித்தடங் ளை அவர்களுக்குக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இது போன்ற பிரச்னைகளைத்தான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னேன். இவைகள் தான் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். எனவே கிடப்பில் இருக்கிற அந்த மனுக்களை விரைவில் பரிசீலிக்கக் கூடிய சூழ்நிலை நிச்சயமாக வரும்.



**திரு. சி. கோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேரியேஷன் கொடுப்பதற்கு அரசு உத்தரவு அளித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி வேரியேஷன் கொடுக்கிற போது, ஏற்கெனவே டவுன் வண்டிகள் செல்கிற இடங்களில், அரசு நன்கு ஆலோசனை செய்து, அப்படி டவுன் வண்டிகள் செல்கிற இடங்களிலாவது தனியார்களுக்கு வேரியேஷன் கொடுப்பது நிறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அப்படி வேரியேஷன் கொடுக்கிற நேரத்தில், அந்தப் பேருந்துகள் போகிற இடங்கள் பொதுமக்களுக்குப் பயன் ஏற்புடையதாக இருக்குமா என்று பார்த்துத் தான் கொடுக்கிறோம். அதே போல சில இடங்களில் கர்டைல்மெண்ட் கேட்கிறார்கள். அதிலேகூட பொதுமக்களுக்கு இடையூறு இருக்குமேயானால் கொடுக்கக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளோம், அந்த அடிப்படையில்தான் செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. எஸ். சிவராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது, பொதுவாக லாபகரமாக இயங்கக்கூடிய வழித் தடங்களில் பேருந்துகள் விட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் என்னுடைய தொகுதியில் கள்ளக் குறிச்சி—சின்னசேலம் இடங்களுக்கு ஆத்தூரிலே இருந்து வரக் கூடிய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை அவைகள் லாபகரமாக இயங்கியும், கடந்த 4, 5 மாதங்களுக்கு மேலாக நிறுத்திவைக்கப்பட்டிருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? அது சம்பந்தமாக அங்கே உள்ள பொதுமக்கள் அதிருப்தியோடு இருக்கிறார்கள். இதுபற்றி நான் அவர்களிடம் கூறியபோது, ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். இதுபோல் தமிழகத்தில் 73 பஸ் ரூட்டுகள் நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அவைகளை உடனடியாக மீண்டும் அந்தந்தப் பகுதிகளுக்கு விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, சில வழித்தடங்களில் பல்வேறுபட்ட சிக்கல்களின் காரணமாகக் கூட பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் அது பொதுமக்களுக்கு இடையூறாக இருக்குமேயானால் அந்தப் பேருந்துகளை அங்கே இயக்குவதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டாது. எவ்வளவு இருந்தாலும் இன்றையதினம் இருக்கும் ஒரு முக்கியமான சூழ்நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். டீசல், பெட்ரோல் போன்ற எரிபொருள்களின் விலை உயர்வை எண்ணிப்பார்ப்போமேயானால், அவைகள் மிக மிக அத்தியாவசியமான தேவைகளுக்கே பயன்படுத்தப் பட வேண்டும் என்பது பொருத்தமாக இருக்கும். அதில் அபிப்பிராய பேதம் இருக்காது என்று நான் கருதுகிறேன்.

## திருவிடைமருதூர் ஒன்றியத்தில் 1980-81-ல் கால்நடைகளுக்கு அளிக்கப்பட்ட கோமாரி நோய் தடுப்பு சிகிச்சை

*வினா எண் 19—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியத்தில் 1980—81-ல் கோமாரி நோயினால் இறந்துவிட்ட கால்நடைகள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) கோமாரி நோய் தடுப்பு மருந்து திருவிடைமருதூர் ஒன்றியத்திற்கு வினியோகிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில் எவ்வளவு கால்நடைகளுக்கு தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியத்தில் 1980-81-ல் கோமாரி நோயினால் எந்த கால்நடைகளும் இறக்கவில்லை.

(ஆ) ஆம்.

(இ) மொத்தம் 150 கால்நடைகளுக்குத் தடுப்பு சிகிச்சை 1981, மே மாதம் வரை அளிக்கப்பட்டது.

திரு. செ. இராமலிங்கம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தவறான தகவலைத் தருகிறார்கள். 1980-81லே என்னுடைய கிராமத்திலே 7 மாடுகள் கோமாரி நோயினால் இறந்திருக்கின்றன. 150 கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி மருந்துகள் போடப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் எந்தெந்த கிராமங்களில் தடுப்பூசி போட்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் தவறான தகவலைத் தருகிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். திருவிடைமருதூர் ஒன்றியத்தில் ஆடுதுறையில் ஒரு கால்நடை மருந்தகமும், நாச்சியார் கோவிலில் ஒரு கால்நடை மருந்தகமும் இருக்கின்றன. ஆடுதுறை கால்நடை மருந்தகத்தில் அப்பகுதியில் உள்ள மொத்தம் 34 கலப்பின கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று நாச்சியார் கோவிலில் இருக்கின்ற கால்நடை மருந்தகத்தின் மூலம் அங்கே இருக்கின்ற கால்நடைகளுக்கும் அந்தப் பகுதியினைச் சுற்றி இருக்கின்ற கால்நடைகளுக்கும் கோமாரி நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்து இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. செ. இராமலிங்கம்: தலைவரவர்களே, திருவிடைமருதூர் ஒன்றியத்தில் திருநாகேஸ்வரம், வேப்பத்தூர் போன்ற இடங்களில் கால்நடைகள் இறந்திருக்கின்றன. அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைப்பது பற்றி சென்ற நிதியாண்டில் கேட்டபோது அங்கே மருத்துவமனை துவங்கப்படும் என்று சொன்னார்கள். எனவே கால்நடைகள் நோயினால் இறந்து போவதைத் தடுக்க வேப்பத்தூர், திருநாகேஸ்வரம் ஆகிய இடங்களில் புதிய மருத்துவமனை துவங்குவதற்கு முன்வருவார்களா? அடுத்து கால்நடை மருத்துவமனைகளிலிருந்து விரிவாக்க ஆய்வாளர்களுக்கு இப்படிப்பட்ட நோய்களுக்கான மருந்துகள் கிடைப்பதில்லை என்கின்ற புகாரையும் என்னிடத்திலே சொல்லி இருக்கிறார்கள் எனவே மருந்துகள் கால்நடை ஆய்வாளர்களுக்கு உரிய நேரத்திலே கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, திருநாகேஸ்வரம், வேப்பத்தூர் போன்ற இடங்களில் கால்நடை மருந்தகம் அமைப்பது பற்றி அரசு ஆராயும். அடுத்து விரிவாக்க ஆய்வாளர்களுக்கு மருந்துகள் சரியான முறையில் போய்ச் சேரவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படிப் போகவில்லை என்றால் அதைப்பற்றி அரசு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் இந்த கோமாரி நோய் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் வந்து கொண்டிருப்பது அரசுக்கும் தெரியும். ஆனால் அப்படிப் பாதிப்பு ஏற்படுகின்ற பகுதிகளில் மருந்துகள் இல்லை என்று சொல்லப்படுகின்றது. ஆகவே மருந்துகள் எவ்வாறு கொள்முதல் செய்யப்படுகின்றது, மருந்து வாங்குவதற்கு மத்திய அரசு உதவி செய்கின்றதா? இனி எதிர்காலத்திலேயாவது மருந்துகளை வாங்கி ஸ்டாக் வைக்கின்ற வகையிலே முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, கோமாரி நோய்க்கு இரண்டு வகையான மருந்துகளை வாங்கி சிகிச்சை அளித்துக்கொண்டிருக்கிறோம். மத்திய நிதியுதவித் திட்டத்தின்படி இரண்டு வகையான மருந்துகளை வாங்குகிறோம். அவற்றில் ஒன்று பாலிவேலண்ட் 1980—81-ல் வாங்கப்பட்ட டோஸ்கள் 96,040. அவற்றின் விலை 5,99,969.60 ரூபாய். மோனோவாலண்ட் என்ற மற்றொரு மருந்து 1980—81-ல் 89,280 டோஸ்கள் வாங்கப்பட்டன. இதன் விலை 1,39,521.30 ரூபாய். ஆக மொத்தம் 7,39,490.90 ரூபாய்க்கு கோமாரி நோய்க்கான மருந்துகள் வாங்கி கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

## கால்நடை மருந்தகங்களில் உள்ள முறைகேடுகள்

*வினா எண் 20—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை மருந்தகத்தில் மருந்து வாங்குதல், இருப்பு வைத்தல், செலவழித்தல் மூன்றும் கால்நடை மருத்துவர் பொறுப்பில் உள்ளதால் முறைகேடுகள் நடப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மற்றும் (ஆ): கால்நடை மருந்தகங்களுக்கான மருந்துகள் வாங்குதல், சம்பந்தப்பட்ட கால்நடை உதவி இயக்குநரின் பொறுப்பில் உள்ளது. மருந்துகளை இருப்பு வைத்தலும் செலவழித்தலும் கால்நடை உதவி மருத்துவரின் பொறுப்பிலுள்ளது. எனவே முறைகேடுகள் நடப்பதற்கு வாய்ப்பில்லை.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, கால்நடைகளின் நோய்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் 2,000 ரூபாய், 5,000 ரூபாய் என்று ஒரு குறிப்பிட்ட தொகையினை ஒதுக்கி இருக்கிறார்கள். எனவே கிராமங்களில் இருந்து வருபவர்களிடம் மருந்துகள் இல்லை என்று சொல்லிவிட்டு சீட்டுக்களை எழுதிக் கொடுத்து வெளியிலே வாங்கி வரும்படி சொல்கிறார்கள் என்று தெரிய வருகின்றது. ஆகவே கால்நடைகளுக்கு எவ்வளவு மருந்து தேவையோ அவை முழுவதையும் வாங்கி வைத்து இலவசமாக வைத்தியம் செய்ய அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒவ்வொரு பிரதம மருத்துவ மனைக்கும் ரூ. 30,000 மதிப்புள்ள மருந்துகளும், கால்நடை மருத்துவ மனையாக இருந்தால், அதற்கு ரூ. 15,000 மதிப்புள்ள மருந்துகளும், கால்நடை மருந்தகமாக இருந்தால் அதற்கு ரூ. 10,000 மதிப்புள்ள மருந்துகளும், கிளை நிலயமாக இருந்தால் அதற்கு ரூ. 1,500 மதிப்புள்ள மருந்துகளும் கொடுக்கப்படுகின்றன. இந்த மருந்துகளைப் பாதுகாத்து, கால்நடைகளுக்குக் கொடுப்பதற்குச் செலவினப் பொருள்கள் பதிவேடு என்ற பதிவேட்டில் முக்கிய மருந்துகள் பதியப்படுகின்றன. அந்தப் பதிவேட்டில் என்ன மருந்துகளை வாங்கினார், இருப்பு வைப்பது, செலவழிப்பது போன்றவற்றை அந்தப் பதிவேட்டில் குறிப்பிட்டு, அதற்குரிய ஆய்வு செய்யப்பட்டு, அதற்கு சர்டிபிகேட் கொடுக்கப்பட்டு, அந்த வகையில் மருந்துகள் கால்நடைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) பேரவை அலுவல்

திரு. ரா. உமாநாத்; பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் கூறியபடி, இந்த செஷனில் சில ஐடம்களை மட்டும் எடுத்து முடிப்பது என்பது அரசாங்கத்தின் தரப்பிலும், எதிர்க் கட்சிகள் தரப்பிலும் ஒரு அன்டர்ஸ்டான்டிங்கில் முடிவு செய்யப்பட்டது. அந்த அன்டர்ஸ்டான்டிங்கின் படி பாக்கிப் பிரச்னைகளைப் பற்றி முடிவெடுப்பதற்கு இன்னொரு செஷன், அதாவது பெரியகுளம் இடைத் தேர்தலுக்குப் பிறகு என்று எல்லோரும் சேர்ந்து ஒத்துக்கொண்டு, முடிவெடுத்ததன் அடிப்படையில்தான் அது பைனலைஸ் செய்யப்பட்டது. வருகிற அக்டோபரிலோ அல்லது நவம்பரிலோ பேரவையின் கூட்டத்தை வைக்கலாம் என்ற அடிப்படையில் ஒரு அன்டர்ஸ்டான்டிங் இருக்கிறது. நவம்பர் மாதம் தாங்கள் சுற்றுப்பயணத்திற்கு போகிறபடியால், அவையை ஒத்தி வைக்கவேண்டிய அவசியமில்லை என்று, நீங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நிச்சயமாக நவம்பரில் வைப்பது என்ற ஒரு அன்டர்ஸ்டான்டிங் இருக்கிறது. எல்லோருக்கும் நான் அதைத் தெரியப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் சொன்னதை, இங்கே அவர்கள் ரெகார்ட் செய்கிறார்கள். அவ்வளவுதான்.

### (ஆ) விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தமிழகத்தில் லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். தங்களுக்கு ஊதிய உயர்வு ஒருங்கிணைந்த சட்டத்தின் மூலமாக வேண்டுமென்று கேட்டார்கள். அந்தச் சட்டம் சம்பந்தமாக மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தைக் கேட்டபோது, அந்தச் சட்டம் தேவையில்லை என்று நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அதன் விளைவாக இந்த விவசாயத் தொழிலாளர்களிடையே இன்றைக்குக் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடு.) மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சராக இருந்தாலும் அல்லது விவசாயத் துறை அமைச்சராக இருந்தாலும், விவசாயத் தொழிலாளர்கள் தங்களுக்கு ஒருங்கிணைந்த சட்டத்தின் மூலம்.. .. .. .. .. ..

மாண்புமிகு பேரவை தலைவர்: இதற்கு வருவாய் துறைத் அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க இருக்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி: மத்திய அரசாங்கத்திற்கு ஒருங்கிணைந்த சட்டம் தேவையில்லை என்று எழுதியதால்தான் விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு பதட்டமான, கொந்தளிப்பான, பரபரப்பான, கடுமையான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இதன்மீது உடனடியாகத் தங்கள் கருத்தை இந்த அவையிலே தெரிவிக்க முன்வர வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கு 1979 செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி கூலி நிர்ணயிக்கப்பட்டது. அந்தக் கூலியை மாற்றியமைக்க வேண்டுமென்று குழு அமைத்திருக்கிறோம். இந்தச் சமயத்தல் நீங்கள் கிளர்ச்சி செய்தால், நம்மால் அந்தக் கூலி உயர்வு வந்தது என்ற ஒரு அரசியல் தந்திரத்தோடு மாண்புமிகு அம்பிகாபதி அவர்கள் சொல்வது—அது அரசியல் தந்திரம் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்காக ஒரு காம்பிரெஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டுவர வேண்டுமென்று மத்திய அரசு முடிவெடுத்து, அதை மாநில அரசுக்கு அனுப்பியிருந்தார்கள். 2,3 நாட்கள் அதிகாரிகளுடன் உட்கார்ந்து என்னென்ன வகையில் மாற்றியமைக்க வேண்டும், எவை எவைகளைப் புதியதாகச் சேர்க்க வேண்டும் என்ற பரிந்துரையை மத்திய அரசுக்கு இந்த அரசு அனுப்பியிருக்கிறது.

(இ) வறட்சி, குடிநீர்ப் பிரச்சினை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டு குடி தண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதைப்பற்றி ஒரு மணி நேரம் விவாதத்தை எப்போது வைத்துக்கொள்ளப் போகிறீர்கள்?

திரு. செ. சிவசாமி: வறட்சியைப் பற்றி விவாதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வறட்சியைப் பற்றியும் காவேரி நீர் பிரச்சனை பற்றியும், உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஒரு மணி நேர விவாதம் என்ற முறையில் வைத்துக்கொள்ளலாமா அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ளலாமா என்பதைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்துகொண்டு முடிவு எடுக்கலாம்.





திரு. கு. ரமணி: வறட்சி பற்றி ஒரு மணி நேர விவாதம் என்று சொல்கிறார்கள். ஒரு மணி நேர விவாதம் போதாது. ஒரு நாள் விவாதம் வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு வறட்சியின் காரணமாக மக்கள் குடிநீர் இல்லாமல், விவசாயத்திற்கு நீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அன்றைக்குப் பேசும் போது ஒரு மணி நேர விவாதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு மணி நேர விவாதம் போதாது. ஒரு நாள் விவாதம் வைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: வறட்சியைப் பற்றி இப்போது எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி உங்களுக்கு நோட்டீஸ் வரும். அப்போது தெரிந்துகொள்ளுங்கள்.

திரு. ந. சிவஞானம்: மேட்டூர் அணைக்குத் தண்ணீர் வரவு குறைவாக இருக்கிறது. அதனால் தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே நான் சொன்னேன். காவேரி பிரச்சனை வறட்சியில் வருகிறது. அதனால், எல்லாம் ஒரே பிரச்சனைதான். அப்போது இதையும் சேர்த்து பேசிக் கொள்ளலாம்.

(ஈ) எஸ். ஐ. ஈ. டி. கல்லூரிப் பிரச்சனை.

திரு. அ. ரகுமான்கான்: எஸ். ஐ. ஈ. டி. பிரச்சனைப் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை இப்போது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கல்வி சம்பந்தப்பட்ட மசோதா வருகிறது. அதைப்பற்றி அதிலே பேசிக்கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவருகிற மசோதா பொதுவான பிரச்சனைப் பற்றியது. ஆனால் நான் கொடுத்து இருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம் எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியைப் பற்றியது. கல்வி மசோதாவிலே இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி பேசி விடமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்வி மசோதாவிலே யாரும் இதைப்பற்றி பேசாவிட்டால் அப்போது இதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான்: இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. இது தனிப்பட்ட கல்லூரி பற்றிய பிரச்சனை. அதனால் தான் விதி 55-ஐப் பயன்படுத்தி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; It depends upon your interpreation. நீங்கள் தருகிற விளக்கம் தனிப்பட்டது.

திரு. அ. ரகுமான்கான்: தமிழ்நாட்டிலுள்ள எல்லா கல்லூரிகளையும் பொறுத்தது அந்த மசோதா. ஆனால் நான் கொடுத்து இருப்பது எஸ்.ஐ.ஈ.டி. பிரச்னைப் பற்றி. அதிலே தனியாக பேசினால்தான் அரசாங்கத்தின் அணுகு முறை எப்படி இருந்தது? எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி தெரிந்து கொள்ளமுடியும்.

### 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்

#### (அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1982ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றுப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(முற்பகல் 10-20)

#### (ஆ) எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய நிதியமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன் வடிவானது சத்துணவுத் திட்டத்திற்கு எதிர்பாராச் செலவு நிதியில் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது செலவாகிவிட்டது என்பதால் மீண்டும் 50 கோடி ரூபாய் அனுமதிக்கப்படவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டவடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தக் கூட்டத் தொடருக்கு முன்பாக நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே சமர்ப்பித்தபோதும் அதைப்பற்றி விவாதம் இங்கே நடைபெற்றபோதும் அவர்கள் இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்திற்கு எவ்வளவு கோடி ரூபாய் தேவைப்படும் என்று எடுத்துச் சொன்னார்கள். 100 கோடி ரூபாய்க்கு மேல் தேவைப்படுகிறது நிரந்தரமாகச் செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள். அப்படியானால் சத்துணவுத் திட்டத்திற்குத் தேவைப்படும் தொகையை பட்ஜெட்டிலே ஏன் ஒதுக்கவில்லை என்பதை நான் முதலிலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதற்காக பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கம் செய்யாமல் இருப்பதற்கான காரணம் எனக்கு விளங்கவில்லை. கல்விக்காகவும் சுகாதாரத்திற்காகவும் மற்றத் துறைகளுக்காகவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு அந்த அந்தத் துறைகளுக்குச் செலவழிக்கப்படும். ஆனால் ஏற்கெனவே அரசு ஒதுக்கிய பணத்தில் இருந்து செலவழிக்காமல் அன்போர்சீன் எக்ஸ்பெண்டிச்சர் என்ற முறையிலே இந்த நிதியிலே இருந்து செலவழிக்கப்படுகிறது. ஆனால் சத்துணவுத் திட்டம் என்பது நிரந்தரமான திட்டம் என்றும் 100 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகக்கூடிய திட்டம் என்றும் சொல்லிவிட்டு எதிர்பாரா நிதியிலிருந்து ஒதுக்குவது என்றால் எதிர்பார்த்த செலவை அவ்வாறு செய்வது சரியா என்று நான் கேட்க விரும்புகிறேன். சத்துணவுத் திட்டத்திற்காக அதைப் பயன்டுத்தாமல் இருந்தால் வேறு காரியங்களுக்கு அதைப் பயன்படுத்தலாம். ஆகவே இட் இஸ் இம்ப்ராப்பர், இது ஒரு முறைகேடு என்பதை நான் குற்றச் சாட்டாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கன்டின்ஜன்ட் பண்ட் என்பது எதிர்பாராச் செலவுக்காக வைக்கப்பட்டு இருப்பது, ஆனால் எதிர்பார்த்த ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டத்திற்கு அதிலேயிருந்து ஒதுக்கியிருப்பது செலவழிக்கப் பட்டாகிவிட்டது என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன், மீதியிருக்கிற 59 கோடி ரூபாயையும் இந்தத் திட்டத்திற்கே செலவழித்துவிட்டால் அன்போர்சீன் எக்ஸ்பெண்டிச்சரே எதுவுமே ஏற்படவில்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன். 50 கோடியை உயர்த்தி மேலும் 50 கோடி உயர்த்தி 100 கோடி என்று கேட்டிருக்கிறார்கள். அப்படியென்றால் இதற்கான ஸோர்ஸ் எங்கேயிருந்து கிடைக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். எங்கே இருந்து அந்தத் தொகையைப் பெறப்போகிறீர்கள் என்று தெரியவில்லை அதையும் சொல்லியாக வேண்டும். கன்டின்ஜண்ட் பண்ட் என்பது 50 கோடி ரூபாயாக இருக்கலாம், 100 கோடி ரூபாயாக இருக்கலாம், நீங்கள் விரும்பினால் 1,000 கோடி ரூபாயாக இருக்கலாம், ஆனால் அதற்கான ஸோர்ஸ் எங்கிருந்து வருகிறது என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 50 கோடி ரூபாய் எங்கிருந்து கொண்டுவரப்போகிறீர்கள் என்ற விளக்கத்தைச் சொல்லியாக வேண்டும். சத்துணவுத் திட்டத்திற்காக ஏறத்தாழ 100 கோடி ரூபாய் ஆகும் என்று பட்ஜெட்டிலே குறிப்பிட்டார்கள், ஆனால் பட்ஜெட்டிலே ஒதுக்கவில்லை. நகர்ப்புறங்களிலும்

* * 1982 செப்டம்பர் 6 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

இந்தத் திட்டம் விரிவாக்கப்படும் என்றும் அதற்கு 120 கோடி ரூபாய் ஆகும் என்றும் முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். அப்படியானால் அந்த 120 கோடி ரூபாயும் இதிலே ஒதுக்கப்படவில்லை பட்ஜெட்டிலேயும் ஒதுக்கப்படவில்லை. எங்கே இருந்து எடுக்கப்போகிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டும். அமுதூட்டும் காரியங்களை பகுதிநேர தமிழ் ஆசிரியர்கள் 31 ஆயிரம் பேர்கள் திருக்குறளைப் போதித்துக்கொண்டே கவனிப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. திருக்குறள் மாநில நூல் என்று சொல்கிறார்கள். மத்திய அரசு அதை தேசிய நூல் என்று ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் மாநில நூல் என்று சொல்கிறார்கள். ஆகவே அது தேசிய நூலா மாநில நூலா என்று விளங்கவில்லை. 31 ஆயிரம் பகுதி நேர தமிழாசிரியர்களுக்கு பல கோடி ரூபாய் செலவாகும். ஏற்கனவே 100 கோடி என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு அடுத்து நகர்ப் புறங்களுக்கு விரிவு செய்வதற்கு 120கோடி ஆகும் என்று சொல்லியிருக்கிறீர்கள். தமிழாசிரியர்களைப் பகுதிநேர வேலையில் நியமிப்பதன் காரணமாக பலகோடி ரூபாய் செலவாகும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்தத் தொகையை எல்லாம் பட்ஜெட்டிலே ஒதுக்காமல் கன்டின்ஜென்சி பன்ட் எதிர்பாரா செலவு நிதியிலே ஒதுக்கப் பார்கிறீர்களா? அப்படியானால் அரசாங்கத்தினுடைய வரவு 1400 கோடி ரூபாய் தான் என்று சொல்கிறீர்கள். அந்த 1400 கோடி ரூபாய் சேல்ஸ் டாக்ஸ் மூலமாகவும் வருகிற வருமானம் என்று நான் கருதுகிறேன். அதே போல மதுவிலக்கு ரத்து செய்ததன் மூலமாக ஏற்பட்ட வருமானமும் அந்த 1400 கோடிக்குள் சேர்த்து தான் நம்முடைய நிதியமைச்சர் சொல்கிறார் என்று நான் நம்புகிறேன். அப்படியானால் இவ்வளவு பெரிய தொகையை பட்ஜெட்டிலே ஒதுக்கீடு செய்யாமல் திட்டத்தை நிரந்தரமாக நிறைவேற்றுவதற்கு ஏற்பாட்டைச் செய்யாமல் நீங்கள் எதிர்பாராச் செலவு என்ற ஒரு இனத்திலே இந்தத் தொகையை ஒதுக்கியிருக்கிறீர்கள் என்றால், நீங்கள் கொண்டு வந்திருக்கிற சத்துணவுத் திட்டம் சத்தான திட்டமாக இருக்குமா? நான் நேற்று சொல்லியதைப்போல இது தேர்தல் காலத்தைக் கணக்கிலே கொண்டு அந்த ஒரு காரணத்திற்காக இதை நீங்கள் வைத்திருக்கிறீர்களே தவிர நிரந்தரமான திட்டமாக நிறைவு படுத்தப்படுவதாக எனக்குத் தெரியவில்லை. அந்த எண்ணம் இருந்திருந்தால் நீங்கள் பட்ஜெட்டிலே இதற்கான நிதி ஒதுக்கீடு செய்திருக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நம்முடைய முதலமைச்சர்அவர்கள் தேனியிலே ஒரு பொதுக் கூட்டத்திலே பேசுகிற பொழுது கருணாநிதி இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு விரோதி என்று பொது மக்கள் மத்தியிலே பேசியிருக்கிறார்கள். நான் இந்த மன்றத்திலே சொல்ல விரும்புகிறேன். அந்த சத்துணவு திட்டத்திற்கு நாங்கள்





விரோதிகள் அல்ல. பெரியவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது இதே இலவச மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார். இதை யாரும் மறுக்க முடியாது. அவர் கொண்டுவந்தார் அந்தத் திட்டத்தை என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கவில்லை; அண்ணா அவர்களும் எதிர்க்கவில்லை. நல்ல ஒரு சமூக அரசு நல்ல பல திட்டங்களைக் கொண்டுவரலாம். கொண்டு வருவதை ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி. எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி வரவேற்க வேண்டியதுதான். கலைஞர் முதலமைச்சராக இருந்த போது கண்ணொளி வழங்குகின்ற திட்டத்தைக் கொண்டுவரவில்லையா கலைஞர் முதலமைச்சராக இருந்தபொழுது அரசாங்க ஊழியர் அகால மரணம் அடைந்து விட்டால் அவர் குடும்பம் தெருவில் நிற்கக் கூடாது என்பதற்காக பத்தாயிரம் ரூபாய் அவருடைய வாரிசுதாரர்களுக்குப் போக வேண்டுமென்று திட்டம் கொண்டுவரவில்லையா ஆகையினால் பல்வேறு நல்ல முற்போக்கான திட்டங்களைக் கொண்டு வந்தால் ஆதரிக்க வேண்டியதுதான். ஆகவே இந்தத் திட்டம் பெரியவர் காமராஜர் கொண்டுவந்த திட்டம். இது புரட்சித் திட்டம், இது எங்களுடைய சிந்தனையிலே உதித்த திட்டம் என்று மிகப் பெரிய அளவில் விளம்பரம் கொடுத்துக் கொண்டிருப்பது முறையல்ல. இது காமராஜர் கொண்டுவந்த திட்டம். அவர் கொண்டுவந்த திட்டத்தினுடைய எக்ஸ்டன்ஷன், அதனுடைய ஒரு விரிவாக்கம் தான் இந்தத் திட்டம். உதாரணத்திற்குச் சொல்கிறேன், காமராஜர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தை அமல் படுத்தியபோது சத்துணவிற்காக 15 காசுகள் கொடுத்தார். நீங்கள் 45 காசுகள் கொடுக்கிறீர்கள். நான் கேட்கிறேன், அன்றைக்கு விலைவாசிகள் என்ன? அன்றைக்கு அரசாங்கம் நிதிநிலை அறிக்கை எவ்வளவு தொகைக்கு தயார் செய்தது, அரசாங்கத்தினுடைய வருமானம் எவ்வளவு, இன்றைக்கு அரசாங்கத்தினுயை நிதிநிலை அறிக்கை எவ்வளவு ரூபாய்க்குத் தயார் செய்யப்படுகிறது, காமராஜர் காலத்திலிருந்து உயர்ந்து கொண்டே இருக்கிறது. ஆகவே 15 ஆண்டுக் காலத்திற்கு முன்பு 15 காசுகள் என்று இருந்தால் இன்றைக்கு நீங்கள் 45 காசுகள் என்று அந்தச் சூழ்நிலைகளின் அடிப்படையில் கொடுக்கிறீர்கள். ஆகையால் இது பெரியவர் காமராஜர் அவர்கள் கொண்டுவந்த திட்டம்தான்.

நமது முதலமைச்சர் அவர்கள் நேற்று கூடக் குறிப்பிட்டார்கள். நாங்கள் 365 நாட்களும் சத்துணவு கொடுக்கிறோம். ஆனால் காமராஜர் 220 நாட்கள்தான் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். ஆகவேதான் அந்தத் திட்டத்தினுடைய விரிவாக்கம் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இந்தத் திட்டத்தில் இல்லை என்பதைத்தான் நாங்கள் சொல்கிறோம்.

பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கம் செய்யாமல் கட்டாயமாக வசூல் செய்கிற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறீர்கள். சேரன் போக்குவரத்துக் கழகத்திலே ஒரு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. யார் இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு நிதி கொடுக்க விரும்பவில்லையோ— நிதி தருபவர்கள் அல்ல— நிதி கொடுக்க விரும்பவில்லையோ அவர்கள் தங்கள் பெயரைச் சொல்லட்டும். இது எதற்காக, அவர்களை அடையாளம் கண்டு பழிவாங்குவதற்காகத்தானே; தனியார்கள் தரக்கூடிய டொனேஷன்ஸ் முதலியவற்றை அடிப்படையாக வைத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது ஆரம்பத்திலே வசதியாக இருக்கலாம். ஆனால் போகப் போக அந்த நிலைமைகள் இருக்க முடியாது. ஆக இன்றைக்கு ஒரு கட்டாய வசூல் என்று ஏற்படுத்தி இருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். கட்டாய வசூல் மூலமாக இந்தத் திட்டம் வெற்றிபெற வாய்ப் பில்லை என்பதையும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதைப் போலவே பட்ஜெட்டிலே சத்துணவுத் திட்டம் எப்படி எப்படி இருக்கும். எந்த முறையிலே இருக்கும் உயர் மட்டக் குழு இருக்குமா, எவ்வளவு கட்டணம்? எவ்வளவு பேர் களுக்குப் போடுகிறார்கள், எந்த அடிப்படையிலே போடுகிறார்கள் என்ற விவரத்தை எடுத்துச் சொன்னால் சட்டமன்ற உறுப்பினர் கள் விவாதித்து கருத்துக்களைச் சொல்வதற்கு வசதியாக இருக்கும். ஆனால் நீங்கள் அதற்கான வாய்ப்புக் கொடுக்காமல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொதுக்கூட்டத்திலே அந்த அறிவிப்புகளை எல்லாம் செய்திருக்கிறார்கள், எப்படி எப்படி செய்யப் போகிறோம் என்று; இதனால் எங்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல்-10.30)

இன்றைக்கு இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன், அதிகாரம் எவ்வளவு தவறாக துஷ்பிரயோகம் செய்யப்படு கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். சத்துணவுத் திட்டத்திற்கு உயர்மட்டக் குழு போட்டிருக்கிறீர்கள். ஆனால், அதே நேர்த்தில் சத்துணவு மையங்களை, எந்தப் பொறுப்பிலும் இல்லாத ஒரு நடிகை, நம்முடைய முதலமைச்சருக்கு வேண்டியவர். போய் பார்வையிடுகிறார். செக்யூரிட்டிகள் கூடப் போயிருக்கிறார்கள். அந்த நடிகையின் பெயரைக் கூட நான் சட்ட மன்றத்திலே சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் இப்பொழுது அவர் உயர்மட்டக் குழு உறுப்பினராக இருக்கிறார், நடிகை ஜெயலலிதா அவர்கள், அவர்கள் அதிகாரத்தில் இல்லை, சட்டமன்ற உறுப்பினர் அல்ல, மேலவை உறுப்பினர் அல்ல, அன்றைக்கு அவர் போன நேரத்திலே, அந்த உயர்மட்டக் குழு உறுப்பினரும் அல்ல. அப்படி இருக்கும்போது, அதிகாரிகள் பின்தொடர அந்த நடிகை பார்வையிட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது 'அன்கான்ஸ்டிட்யூஷனல் அத்தாரிட்டி' இல்லையா, அது 'மிஸ்யூஸ் ஆஃப் பவர்' இல்லையா? அது சட்டத்திற்குப் புறம்பானது இல்லையா? அப்படியானால் முதலமைச்சருக்கு வேண்டிய நடிகைகள் போகலாம், முதலமைச்சருக்கு வேண்டியவர்கள் போகலாம், மற்றவர்கள் போகக் கூடாது என்று சொல்வது மிகப் பெரிய அதிகார துஷ்பிரயோகம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.





அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு இந்த மதிய உணவு திட்டத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அதைச் சொல்வது தப்பில்லை, நம்முடைய காஞ்சி காமகோடி சங்கராச்சாரியார் அவர்கள் கூட பத்திரிகை நிருபரிடத்திலே சொன்னார். இந்தத் திட்டத்தை வரவேற்கிறேன். ஆனால் இது சாப்பாடு விஷயம். கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். சாப்பாடு ஒழுங்காகப் போய்ச் சேரவேண்டும் என்று சங்கராச்சாரியார் அவர்கள் விமர்சனம் செய்கிறபொழுது அதற்கு என்ன அர்த்தம்; திட்டம் நல்ல திட்டமாக இருக்கலாம். ஆனால் நடைமுறையிலே சாப்பிடுகின்ற விஷயத்தைப் பல பேர்கள் சாப்பிட்டுவிடுகிறார்கள் என்பதைத்தான் அவர் உள்ளார்த்தமாகக் குறிப்பிட்டிருக்கிறார் கள். அந்த அடிப்படையிலே பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. ஆதாரத்தோடுதான் சொல்கிறேன். நெல்லை மாவட்டத்திலே போதுமான அளவிற்குச் சத்துணவு கொடுக்காத தனால் கெட்டுப் போன காய்கறிகளை வைத்து சமைத்ததால், ஒரு பால சேவிகாவை கலெக்டரே டிஸ்மிஸ் செய்திருக்கிறார்.

அதைப் போலவே, நம்முடைய அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் தொகுதியிலே ஒரு பள்ளிக்கூட தலைமையாசிரியர் மீதும் இன்னும் 4 பேர்கள் மீதும் வழக்குப் போடப்பட்டிருப்பதாகத் தகவல். காரணம் எண்ணெயையும் பருப்பையும் கடத்திக் கொண்டு போனதாகச் சொல்லியிருக்கிறார்கள். சில இடங்களில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் தலையிட்டு சரி செய்து கொண் டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, உணவு மோசமான உணவு என்று கலெக்டர் நடவடிக்கை எடுக்கிறார். சில சமயங்களில் பத்திரிகைகள் அந்தத் தகவல்களை வெளியிடுகின்றன. 'தின மலர்' பத்திரிகை அந்தத் தகவலை வெளியிட்டது. சேலத்திற் குப் பக்கத்திலே பள்ளிப்பாளையம் என்ற ஊரிலே இப்படி மதிய உணவு சத்துணவு சாப்பிட்ட 5 பேர் ரத்த வாந்தி எடுத்தார்கள் என்று செய்தி வெளியிடுகிறது, அந்த தினமலர் பத்திரிகை ஆசிரியர் கைது செய்யப்படவில்லை, நிருபர் கைது செய்யப்படவில்லை, வழக்கு போடப்படவில்லை, ஆனால் மாலை முரசு பத்திரிகையிலே அந்தச் செய்தி வந்தால் அந்த மாலை முரசு பத்திரிகை ஆசிரியர் கைது செய்யப்படுகிறார், நிருபர் கைது செய்யப்படுகிறார். தினமலர் சுப்பராம ஐயர் மீது நடவடிக்கை எடுக்காமல், வழக்கு போடாமல்— நான் கேட்கிறேன்—திரு. கந்தசாமி என்ற எங்கள் கட்சியினுடைய சார்புடையவர் மீது நீங்கள் நடவடிக்கை எடுக்கிறீர்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன?

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்பாராச் செலவினங்களின் நிதி ஒதுக்கீட்டைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்களா? அல்லது சத்துணவுத் திட்டம் எப்படி அமுலாக்கப்படுகிறது என்ற விளக்கவுரை இங்கே நடக்கிறதா என்பதை நான் தங்கள் மூலம் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த மசோதாவை யொட்டி மட்டும் பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: இந்த மசோதாவினுடைய நோக்கமே சத்துணவுதான். சத்துணவிற்கு அரசு நிதி கேட்டுத்தான் இந்த மசோதாவே அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையினாலே இந்த சப்ஜக்டே சத்துணவுதான், ஏனென்றால் இந்தத் தொகையை சத்துணவிற்காகத்தான் ஒதுக்க வேண்டுமென்று ரூ.509 கோடியை உயர்த்திக் கேட்கிறார்கள் அமைச்சர் அவர்கள். ஆகவேதான் உறுப்பினர்களாகிய நாங்கள் அதைப் பற்றி சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இன்றைக்கு மாலை முரசு பத்திரிகை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுப்பதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா? கிடைத்த தகவலை வெளியிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு எதிர்பாரா செலவு திருத்த மசோதா ரூ 50 கோடி ஒதுக்குகிற அதிகாரத்தை ரூ. 100 கோடியாக ஒதுக்க வேண்டுமென்று கேட்பதுதான். எந்தெந்த வகையிலே ஒதுக்கீடில் அதிகம் ஏற்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் இதனை அடுத்து வருகின்ற துணை மதிப்பீடுகளில் வரும். இந்த அவையில் நாளைக்கு அதை வைக்கும்போது அதிலேதான் எதெதெற்கு எவ்வளவு எவ்வளவு செலவு என்று வரும். அப்படி வரும்பொழுது சத்துணவுக்கு எவ்வளவு செலவழிக்கின்றோம் என்று அதிலே விரிவாகப் பேச வாய்ப்பிருக்கிறது. இந்த மசோதாவிலே சத்துணவுத் திட்டத்திற்காக ஒதுக்குகின்ற விவரங்கள் முழுவதும் தரவில்லை. இது ரூ. 100 கோடி கேட்கிறோம் என்பதற்கான ஒரு சிறு குறிப்பே தவிர, முழு விவரத்தையும் தருகின்ற ஒன்று அல்ல என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அதிலே நிறைய வாய்ப்பிருக்கிறது. அதிலே பதில் சொல்வதற்கும் வாய்ப்பிருக்கிறது. நிதி ஒதுக்கீடு மசோதாவிலேதான் முழு விவரமும் வரும்.

டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, நிதி அமைச்சர் சொன்ன அந்த விளக்கத்தை நானும் ஏற்றுக் கொள்ளுகின்றேன். நாளையதினம் இதைப் பற்றி தனியாகப் பேசப்படுகின்ற நேரத்திலே விவரங்களைப் பேசலாம் என்று





அவர்கள் கூறியிருக்கிறார்கள். 50 கோடியை 100 கோடியாக உயர்த்துவதில் சத்துணவு திட்டத்திற்கும் பணம் ஒதுக்கப்படும். அதை வைத்து திரு ரகுமான்கான் பேசினார். தொடர்ந்து இதற்குமேல் விளக்கங்கள் தேவையில்லை என்று கூறத் தங்களுக்கு உரிமையிருக்கிறது. ஆனால் கூறியவைகளை அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிட வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எடுக்கச் சொல்லவில்லை. தேவையில்லாத தினமலர் போன்ற விவரங்களைச் சொல்லவேண்டாம் என்றேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த நிதி எதிர்பாராச் செலவு நிதி என்று நம்முடைய நிதியமைச்சரவர்கள் சொல்கிறார்கள். நான் கேட்கின்ற கேள்வியே அதுதான். எதிர்பாராச் செலவுக்காக இருக்கக் கூடிய ஒரு அயிட்டத்திலே கொண்டு போய் எதிர்பார்த்த செலவுக்காக இவ்வளவு தொகையை ஒதுக்க வேண்டிய அவசியம் என்ன என்பது என்னுடைய கேள்வி. அதுமட்டுமல்லாமல், சத்துணவுத் திட்டத்தின் அடிப்படை என்று சொல்லிருப்பதால்தான் சத்துணவுத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்படும் அந்தத் தொகை முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று செல்கின்ற உரிமை எங்களுக்கு இருப்பதால்தான் சொல்கிறோம்.

இன்றைக்குச் சத்துணவுத் திட்டத்திற்காக 365 நாட்களும் லீவே இல்லாமல் ஆசிரியப் பெருமக்கள் அந்தக் காரியங்களை ஆற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். விஞ்ஞானம் கற்பித்துத் தர வேண்டிய ஆசிரியர்கள் சோறு சரியாக வெந்து விட்டதா என்று பார்க்க வேண்டிய நிலமை; சரித்திரம் கற்பித்துத் தர வேண்டிய ஆசிரியர் சாம்பார் சரியாக இருக்கிறதா என்று பார்த்துச் சொல்ல வேண்டிய நிலைமையில் கல்வியின் தரம் குறைந்து போய் ஆசிரியர்களின் வேலைப்பளு அதிகப்பட்டுப் போய், இன்றைக்குக் கல்விக் கூடம் ஏதோ ஒரு தர்ம சத்திரமாக இருக்கக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். இப்படிச் சொல்வதால் நாங்கள் சத்துணவுத் திட்டத்திற்கு விரோதிகள் அல்ல.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஒரு செய்தியைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சத்துணவுத் திட்டம் வருகின்ற வரைக்கும்தான் ஆசிரியர்களே சோறாக்கிப் போட்டுக்கொண்டு கல்வித்தரம் குறைந்து கொண்டு வரும் நிலைமை இருந்தது. சத்துணவுத் திட்டத்தின் மூலம் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு விடுதலை தரப்பட்டிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவரவர்களே, காய்கறிகளும், தக்காளிப் பழமும் வாங்குவதற்காக ஆசிரியர்கள் போய் வர வேண்டும். நான் அண்மையிலே ஒரு ஊருக்குப் போயிருந்தேன். பக்கத்திலே ஐந்து மைல் அளவில் கீரையே கிடையாதாம், அந்த உபாத்தியார் பத்து மைல் தூரம் போய் வந்தார்கள். அதுமட்டுமல்ல, கணக்கு எழுதும் வேலையும் அவருக்குத்தான்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் சாப்பாடு செய்கின்ற வேலையிலிருந்து விடுபட்டிருக்கிறார்கள் என்கின்ற உண்மையை முதலிலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவரவர்களே, காய்கறிகளும் கத்திரிக்காயும் வாங்குவதற்காகப் பத்து மைல் செல்ல வேண்டிய பரிதாபகரமான நிலைமையை நீங்கள் ஏற்படுத்திருக்கிறீர்கள். இந்தக் கணக்குப் பிள்ளை வேலையையும் அவர்தான் பார்க்க வேண்டும். பிள்ளைகளுக்குச் சாப்பாடு போடுவதற்காக அவர்களை உட்காரவைக்கிறார்களே அந்தக் காரியத்தையும் அவர்கள்தான் பார்க்கவேண்டும். வீட்டிலே மனைவி செத்துப் போனால் போக முடியாது; உடல் நலம் பாதிக்கப்பட்டால் போக முடியாது. ஆக இன்றைக்கு அவர்களுக்கு 225 நாட்கள் அனுமதிக்கப்பட்ட நாள், மீதி நாட்களுக்கு ஏர்ன் லீவாகக் கொடுத்து அவர்கள் அதைப் பணமாக மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு உண்டா என்றால் இல்லை. ஃபேக்டரியிலே வேலை பார்க்கக் கூடிய தொழிலாளர்களுக்கு எக்ஸ்ட்ரா பேமென்ட் உண்டு; அவர்கள் செய்யலாம். ஆனால் இன்றைக்கு ஆசிரியர்கள் முழுவதும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், நான் ஒரு விளக்கத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு ஆயாக்கள் பாலசேவிகாக்கள் போடப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய தங்கமணி அவர்கள் இந்திரா காங்கிரஸ் தோழர்களோடு உண்ணாவிரதம் இருப்பேன் என்று அறிக்கை விட்டார்கள். அதில் பல இலஞ்ச லாவண்யங்கள் நடைபெற்றிருக்கின்றன, யாராவது கேட்டால் கொடுப்பதற்காக நான் இவைகளையெல்லாம் எடுத்து வந்திருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் அதிலே சம்பந்தப்படாத நபர்கள்......

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிதி ஒதுக்கீடு பற்றிய ஒருமசோதாவின் மீது அதைப்பற்றிய விவரங்களைப் பேசும்பொழுது குற்றச்சாட்டாகச் சொல்வதும், லஞ்ச லாவண்யம் அதில் நடைபெற்றிருக்கிறது என்று அடுக்கடுக்காக எடுத்து வைப்பதும் சரியான வாதம்தானா? இதை ஏற்றுக்கொள்ளத் தாங்கள் தயாராக இருக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஒரு மெம்பரே சொல்லியிருக்கிறார் என்று மேற்கோள் காட்டிச் சொல்வதிலே என்ன தப்பு இருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தங்கமணி சம்பந்தமாக வெளியிலே நடந்த விவகாரங்களை இங்கே பேச வேண்டாம். (குறுக்கீடு) மேற்கோள் காட்டலாம். ஆனால் ஜெனரலைஸ் செய்து பேசக் கூடாது. லாவண்யம் என்று எடுத்தவுடனே சொல்லிவிட்டால் அது சரியில்லையே. ஏதாவது சப்ஸ்டான்ஷியேட் பண்ணக் கூடியதாக இருந்தால் பரவாயில்லை.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவரவர்களே, நமது நிதியமைச்சரவர்கள் 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து கொடுங்கள் என்று கேட்கிறார்கள், எதற்காக? நல்லமுறையில் சத்துணவுத் திட்டம் நடைபெற வேண்டுமென்பதற்காக, அப்படி நல்லமுறையில் வழங்கப்பட வேண்டும். ஆனால் வழங்கப்படுவதிலே சிக்கல்கள், தவறுகள் இருக்கின்றன. யார் வழங்குவது? பாலசேவிகாக்கள் போன்றவர்கள் அதிலே நியமிக்கப்படுகிறார்கள். அதற்கு ஒரு குழு இருக்கின்றது. அந்தக் குழுவில் அகில இந்திய அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த எந்தத் தகுதியும் இல்லாதவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் நம்முடைய உறுப்பினர் தங்கமணி அவர்கள் குற்றச்சாட்டு சொல்லி இருக்கிறார்கள். அவர்களுடைய தொகுதியிலே போட்டிருக்கிறார்கள். அவர்கள் எப்படி வந்தார்கள்?

(முற்பகல் 10-45)

அதுமட்டுமல்ல, ரூபாய் வாங்கியிருக்கிறார்கள். 500, 600 ரூபாய் வாங்கியிருக்கிறார்கள் என்று பகிரங்கமாக குற்றம் சுமத்தி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நான் சொல்ல விரும்புகிறேன். அங்கே முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. அதை இங்கே நாங்கள் சொல்லுகிறோம், 50 கோடியை கேட்பதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கின்றது? நாங்கள் மக்களுடைய பிரதிநிதிகள், அதை எடுத்துச் சொல்வதற்கான அங்கீகாரம் உரிமையை எங்களுக்கு நீங்கள் வழங்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, நான் இன்னொன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். மைலாப்பூர் குடிசை மக்கள் வாழ்கின்ற இடங்களிலே அந்த மையத்தை நீங்கள் கட்டியிருக்கிறீர்கள். மாநகராட்சியினுடைய உத்தரவில்லாமல் எப்படிக் கட்டப்பட்டது? என்று குடிசைவாசிகள் முறையிடுகிறார்கள். உயர் மட்டக் குழுவில் இருக்கக்கூடிய உறுப்பினர்களாக இருந்தாலும், அல்லது யாராக இருந்தாலும் அது பற்றி விசாரித்து, சரியானதா இல்லையா என்று முடிவிற்கு வந்தபிறகுதான் அதை இடிப்பதற்கு உத்தரவிடவேண்டும். ஆனால் எந்தப் பொறுப்பும் இல்லாத ஒரு நபர், ஒரு நடிகை அவர்கள் பெரிய அதிகாரிகளிடத்திலே தொலைபேசியிலே தொடர்புகொண்டு பேசுகிறார்கள். என்றால் நான் கேட்கிறேன். தமிழ்நாட்டை எம். ஜி. ஆர். ஆளுகிறாரா, ஜெயலலிதா ஆளுகிறாரா என்பது தெரியவேண்டும் என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் எதிர்பாரா செலவினங்களுக்கு நிதி ஒதுக்கும்படி கேட்டுள்ள மசோதாவின் மீது சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் திட்டம் நல்ல திட்டம். அவசியம் இதை நாங்கள் வரவேற்கிறோம். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஒவ்வொரு எதிர்கட்சியும் இந்தத் திட்டத்தை வரவேற்க வேண்டும். இதை நல்ல முறையில், பயன்தரக்கூடிய வகையில் செயல்படுத்தவேண்டுமென்பது என்னுடைய அவா. இந்தத் திட்டத்தை காமராஜ் அவர்கள் முதலிலே கொண்டு வந்தார்கள். அவர் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தபோது, இந்தத் திட்டத்தின் மூலமாகத்தான் பள்ளிகளில் பிள்ளைகள் அதிகமாக வந்து படித்து, அவர்கள் வாழ்வு நல்ல முறையிலே இருக்கும் என்றெல்லாம் நினைத்துதான் கொண்டு வந்தார்கள்.

இப்போது நீங்கள் 2 வயது முதல் 10 வயதுள்ள குழந்தைகளுக்காகக் கொண்டு வந்திருக்கிறீர்கள். சாதாரணமாக 2 வயது முதல் 4 வயதுள்ள குழந்தைகள் பால் உணவுதான் சாப்பிடுவார்கள். அந்தக் குழந்தைகளுக்குக் கீரை சாப்பாடு, தக்காளி சாப்பாடு அல்லது தக்காளி பிரியாணி போட்டால் அவர்களுடைய உடம்பு தாங்குமா? அதைச் சாப்பிட்டால் சரியாக இருக்குமா, உடல்நிலை பாதிக்குமா பாதிக்காதா என்பதைப் பார்க்கவேண்டும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே 2 வயது முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு நீங்கள் அதிகப்படியான பால் உணவு தான் தரவேண்டும்.

சத்துணவு என்றால் சாப்பாடு சாப்பிடுவது என்பது மட்டுமல்ல. அந்தக்குழந்தைகள் அந்தச் சத்துணவு சாப்பிடுவதால் மட்டும் நன்றாக இருப்பார்களா? இந்தச் சாப்பாடு போட வேண்டும் என்பதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று இதைக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். இதை பட்ஜெட்டிலே முதலிலே நீங்கள் கோரவில்லை. இப்போது கன்டின்ஜென்டிலே கொண்டு வந்திருக்கிறீர்கள். சத்துணவைப் பற்றி பேப்பரில் படிக்கும்போது, இந்தத் திட்டத்திற்கு 159 கோடிக்குப் போகும் என்று தெரிகிறது. இதை எப்படி நீங்கள் கொண்டுவரப் போகிறீர்கள்? எப்படி ஒதுக்கீடு செய்யப்போகிறீர்கள்? என்பதை தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, குழந்தைகளுக்கு சாப்பாடு போடுகின்ற காரியங்களால்மட்டும், அவர்களுக்கு திரேக ஆரோக்கியம் சரியாக வராது. அவர்களுடைய சுற்று வட்டாரங்கள், வீடுகள், விளையாடுகின்ற தெருக்கள் போன்ற இவைகள் எல்லாம் சுத்தமாக இருக்க வேண்டும். இப்போது தன்னிறைவுத் திட்டம்



நடந்து கொண்டிருக்கிறது. எங்கே பார்த்தாலும் குடிதண்ணீர் இல்லை, சாலைகளில் லைட் இல்லை அவைகளைச் சுத்தப் படுத்துவதில்லை. சரியான ரோடுகள் இல்லை. இவைகளைப் பற்றி இங்கே அங்கத்தினர்கள் பேசினார்கள் அப்படி இருக்கும்போது—உணவை மட்டும் கொடுத்தால் நல்ல திரேக வளர்ச்சி ஏற்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எனவே கிராமப் புறங்களிலேயும் சரி, முனிசிபாலிட்டியிலேயும் சரி, நகரங்களிலும் சரி, இந்த இடங்களைச் சீர்திருத்தம் செய்யாமல் இந்த உணவை மட்டும் கொடுப்பதில் கருத்தாக இருப்பதால் அது நல்ல பயன் தருமா என்பது சந்தேகமாக இருக்கின்றது.

* * *

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். நேற்றையதினம் திரு. சித்தன் அவர்கள் பேசியது *** *** நேற்று முடிந்துவிட்ட விஷயம். இன்றைக்கு இப்படி பேசக் கூடாது. திரு ஹாஜாசெரீப் அவர்கள் பேசியதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: துரதிருஷ்டவசமான பேச்சு என்று நான் நினைக்கிறேன். அது எப்படி குறிப்பில் இருந்தாலும் கூட அதைப்பற்றி பரவாயில்லை.

Prohibition is a State subject. When you decide to withdraw prohibition you have not taken Indira Gandhi's permission or the Centre's permission. You have done it on your own accord. Having done it, you can't now say that wherever States are having 'no prohibition' it will be called 'Indira Gandhi Prohibition'. I am afraid Mr. Deputy Speaker that it is very wrong conception on the part of the Hon'ble Chief Minister. I have got very high opinion..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேற்று நடந்த விவாதத்தில் சித்தன் அவர்கள் பேசும்போது, முதலமைச்சர் சாராயக் கடை என்று பேசினார்கள். அதற்கு காங்கிரஸ் ஆளுகின்ற இடங்களிலே எல்லாம் புரோகிபிஷன் ரிலாக்ஸ் செய்து இருக்கிறார்கள், நாம் மட்டும் ஏன் அந்தப் பெயரை வைக்க முடியாது ? என்று அந்த அர்த்தத்தில்தான் சொன்னார்களே ஒழிய, இப்போது நீங்கள் சொல்கிற மாதிரி அது ஸ்டேட் சப்ஜெக்ட், இந்திரா காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களிலே என்பதைப் பற்றித்தான் பேசினார்கள். அந்த விவாதம் இன்றைக்குத் தேவையில்லை.

---

* பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1982 செப்டம்பர் 7

திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் எங்களுடைய கட்சித் தலைவர் அவர்கள் விளக்கமாகக் கூறிக்கொண்டிருக்கிறார்......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதாவது அந்தக் கருத்து, நேற்று அவையில் சொல்லப்பட்டு அதற்குப் பதிலும் அளிக்கப்பட்டுவிட்டது. அதைப்பற்றி மீண்டும் பேசத் தேவையில்லை. (குறுக்கீடு).

திரு. என். எஸ். வி. சித்தன். நேற்று அந்தப் பகுதி நீக்கப் பெறவில்லை. இன்று ஏன் எக்ஸ்பஞ்ச் செய்யவேண்டும்? எக்ஸ்பஞ்ச் செய்ய அவசியமே கிடையாது. (குறுக்கீடு).

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்: துணைத் தலைவர் அவர்களே, அதை நான் விட்டுவிடுகிறேன். காரணம் நான் மாண்புமிகு முதல் அமைச்சர் சத்துணவுத் திட்டம் (குறுக்கீடு).

திரு. என். எஸ். வி. சித்தன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியிலேயிருந்து நேற்று மாண்புமிகு முதல் அமைச்சர் பேசியதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. மறுக்கிறேன். எங்கள் கட்சியினர் அதற்கு பதில் சொல்வதற்கு நீங்கள் இடம் கொடுக்க வேண்டும். அதை ஒன்றும் எக்ஸ்பஞ்ச் செய்வதற்கு அவசியம் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேற்று நீங்கள் ஒரு உதாரணத்திற்குச் சொன்னீர்கள். அவர்களும் ஒரு உதாரணத் திற்குச் சொன்னார்கள். இப்பொழுது திரும்பவும் அதைப் பேசுவது சரியில்லை, (குறுக்கீடு).

திரு. என். எஸ். வி. சித்தன்: நேற்று எக்ஸ்பஞ்ச் ஆகவில்லை; அதைத் தொடர்ந்துதான் இது வருகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் ஒரு கருத்தினை எடுத்து ஒரு அபிப்பிராயத்தைச் சொன்னார்கள். அந்த அபிப்பிராயத்திற்கு முதல் அமைச்சர் அவர்கள் தன்னுடைய அபிப்பிராயத்தைச் சொன்னார்கள். அத்தோடு பிரச்னை தீர்ந்ததே தவிர யார் ஏற்றுக் கொள்கிறார் கள், யார் ஏற்று கொள்ளவில்லை என்பது அல்ல பிரச்னை.



1982 செப்டம்பர் 7]

(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்: தேங்க் யூ சார், மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இரண்டாவதாக இன்றைக்கு கமிட்டி போடப் பட்டிருக்கிறது என்பதை நான் அறிவேன். அந்தக் கமிட்டியில் அப்போசிசன் பார்ட்டிக்கு இடம் இல்லை. ஒரு டெமாக்கரசியில் ஒரு கமிட்டி போட்டால், செம்பளி மூலமாக ஒரு கமிட்டி போட்டால் அப்போசிசன் பார்ட்டிக்கு அங்கம் வகிப்பதற்கு இடம் கொடுத்தால்தான் ஒரு நல்ல வழிமுறையாகும். நாங்கள் ஆட்சி புரிந்தபோது, நான் எஸ்டிமேட் கமிட்டி சேர்மென்னாக இருந்தபோது மாண்புமிகு நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டிக்குச் சேர்மனாக இருந்தார். ஒவ்வொரு கமிட்டியிலேயும் நாங்கள் அங்கம் கொடுத்தோம். இந்த மாதிரி சத்துணவுத் திட்ட மேற்பார்வைக்கு போட்டு இருக்கிற கமிட்டியில் ஏன் அப்போசிசன் பார்ட்டிக்கு நீங்கள் இடம் கொடுக்கவில்லை என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அப்படி நீங்கள் அப்போசிசன் பார்டிக்கு இடம் தந்து அவர்கள் உங்களுக்கு அப்போசாக கருத்து கூறுவார்கள் என்ற பயமா? எந்த அப்போசிசன் பார்டியும் கவர்ன்மென்ட் செய்கிற நல்ல காரியங் களுக்கு உதவி புரியவேண்டுமே தவிர, உதவி புரிவார்களே தவிர, அதற்கு மாறாக விரோதமாகப் பேசமாட்டார்கள் அல்லது கருத்துக் கூறமாட்டார்கள் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை. இதை நீங்கள் மனதில் கொள்ளவேண்டும். இப்போது யாரைப் போட்டு வருகிறீர்கள் என்று சொன்னால், யார் 75 லட்சம் ரூபாய் கொடுக்கிறார்களோ, அல்லது யார் அதிகப் பணம் கொடுக்கிறார்களோ அவர்களை அதிலே போடுகிறீர்கள். இந்த மாதிரி பெரிய தனவந்தர்களை அதிலே அங்கம் வகிக்கச் செய்கிற காரணத்தால், அந்தச் சபையின் மரபு என்னவாகும் என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10.50)

நான் நேற்று பத்திரிகையில் பார்த்தேன். 60 லட்சம் குழந்தைகளுக்கு இந்தச் சத்துணவுத் திட்டம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. மேலும் ஒரு 15 லட்சம் குழந்தைகளுக்கு இதை விஸ்தரிப்பதாகச் சொல்லப்படுகிறது. நம்முடைய தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட 2 கோடி குழந்தைகள் இருப்ப தாக நான் அறிகிறேன். இப்படி இந்தத் திட்டத்தை நீங்கள் விரிவுபடுத்திக்கொண்டே போனால், இதற்காக எவ்வளவு கோடி ரூபாய் செலவாகும், அதற்காக எவ்வளவு நிதி தேவை, அதை எந்த வகையில் திரட்டப் போகிறீர்கள் என்ற திட்ட வட்டமாக நடவடிக்கையை நீங்கள் இந்த மன்றத்தில் அறிவிக்க

வேண்டும். இந்தச் சத்துணவுத் திட்டத்தில் முதலில் கிராமத்தில் கொண்டு வந்தீர்கள், பிறகு, டவுனுக்குக் கொண்டு வந்தீர்கள். அதற்கு அடுத்து நகரங்களுக்கு விஸ்தரிக்கப் போகிறோம் என்று சொன்னால் அது வரவேற்கத்தக்கது தான். இது ஒரு பெரிய செயல். அதை வெற்றிகரமாக முடிப்பதற்கு என்ன திட்டத்தை நீங்கள் வைத்து இருக்கிறீர்கள். அதை இந்தச் சபை முன்னால் தெரிவியுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும் என்று நாங்களும் விரும்புகிறோம். மாண்புமிகு பிரதம அமைச்சர் அறிவித்துள்ள 20 அம்சத் திட்டத்தில் 16-வது அம்சம் இந்தச குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் திட்டம், அந்த வகையில் பிரதமர் அறிவித்துள்ள திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்ததற்காக நான் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சுற்றுப்புற விஷயத்தில் நீங்கள் இன்னும் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். சென்னை நகரத்தில் லைட் இல்லை, தண்ணீர் இல்லை, ரோடுகள் சுத்தமாக இல்லை. நேற்று கூட பெரம்பூரில் இருந்து ஒரு நண்பர் வந்தார். அவர் ஒரு குழாயில் இருந்து தண்ணீர் எடுத்ததாகவும், அதில் புழுக்கள் இருந்ததாகவும், அதை அப்படியே பின்னர் கம்மோடில் கொட்டிவிட்டதாகவும் கூறினார். இப்படி பல புகார்கள் வருகின்றன. நான் கூட அந்தக் குடிநீர் வாரிய எம். டி. அவர்களைப் பார்த்துச் சொன்னேன். அவர் அதை ஒப்புக் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். இப்படி தொடர்ந்து நகரத்தில் சங்கடங்கள் இருக்கின்றன. இது எத்தனை நாளைக்குத் தொடர்ந்து போகும் என்று தெரியவில்லை. ஆகவே, இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இது குறித்து ஒரு முறை கனம் அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டேன். அவர் போதுமான நிதி வசதி இல்லை என்று சொன்னார்கள். ஆகவே, அரசாங்கம் போதுமான நிதியை ஒதுக்கி இந்த நிலைமைகளைச் சீர் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலைமைகளை எல்லாம் சீர் செய்யாமல் வெறும் சத்துணவு மட்டும் போட்டால் போதாது. அக்கம்பக்கத்தில் உள்ள சுற்றுப்புற சூழ்நிலையும் சரியாக இருக்க வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஏனென்றால் இதனால் பெரிய விளைவுகள், தொந்தரவுகள், கஷ்டநஷ்டம் மிகவும் பெருகிக் கொண்டே இருக்கிறது. எடுத்துக் காட்டாகச் சொல்லவேண்டுமானால், நம்முடைய நகரத்தில் தற்போது காலரா பரவியிருப்பதாகச் செய்தி வந்து இருக்கிறது. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். நகரம் சுத்தமாக இருந்தால்தான் நல்ல சுமுகமான சூழ்நிலை ஏற்படும். அதிலே நீங்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்று சொல்லி, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.





திரு. என். எஸ். வி. சித்தன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். எங்களுடைய கட்சித் தலைவர் நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு பதில் சொல்லியிருக்கிறார்கள். அதை எக்ஸ்பஞ்ச் செய்யவேண்டும் என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். நேற்றைக்கே நான் பேசியதையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதையும் எக்ஸ்பஞ்ச் செய்து இருந்தால் பரவாயில்லை. நான் பேசியதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதும் பத்திரிகையில் வந்து இருக்கிறது. நான் பேசியதற்கு பதில் சொல்ல வேண்டும் என்ற முறையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேறு ஒரு மாநில முதலமைச்சரைக் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால் பரவாயில்லை. ஆனால் அவர்கள் பிரதம அமைச்சரைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். சாராயக்கடை திறப்பது என்பது ஒரு மாநில முதலமைச்சரின் பொறுப்பு. அது குறித்து மத்திய அரசுக்கு எந்தவிதத்திலும் பொறுப்பு இல்லை. ஆகவே, மத்திய சர்க்கார் குறித்து நேற்றைக்குச் சொல்லியிருக்கத் தேவையில்லை. அப்படி அவர்கள் சொல்லியிருப்பதால், இன்றைக்கு எங்கள் கட்சித் தலைவர் பேசிய பேச்சும் அவைக் குறிப்பில் இருக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கருத்தை திரும்பத் திரும்ப அவைக் குறிப்பில் 'ரிக்கார்ட்' செய்வதில் பயன் ஒன்றும் வந்து விடப்போவது இல்லை. ஏற்கனவே செய்தியாக பத்திரிகையில் அது வந்து விட்டது. இனிமேல் அதை பத்திரிகையிலும் போடப்போவது இல்லை. ஆகவே, எக்ஸ்பஞ்ச் செய்ததில் தவறு ஒன்றும் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேறு ஒரு முதலமைச்சரைப் பற்றி சொல்லியிருந்தால் பரவாயில்லை. பிரதம அமைச்சரைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அதற்கு பதில் சொல்ல வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. சட்டப்படி, மத்திய சர்க்காருக்கு சாராயக் கடை வைப்பது குறித்து எந்தவித அதிகாரமும் இல்லை. ஆகவே, நேற்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அவர்களின் பெயரை இழுத்து இருக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அறிந்த வரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று சொன்னது, உறுப்பினர் இப்படிச் சொன்னால், ஏன் பிரதமர் பெயரிலும் வைக்கலாம் என்று சொல்லக்கூடாது ; அப்படி பிரதமருக்கு இழுக்குத் தேடும் வகையில் சொல்வது சரியா என்பதாகத்தான் சொல்லியுள்ளார். தவறாக ஒன்றும் சொல்லவில்லை.

எனவே இன்றைக்கு உறுப்பினர் தம் கருத்தை திரும்பத் திரும்பச் சொல்லி, குறிப்பேட்டில் ஏற்றுவது சரியான நடவடிக்கையாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது அவைக் குறிப்பில் இருப்பது தேவையில்லை என்று நினைக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, நேற்றைய தினம் பேசியது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசியதற்கு திரு. ஹாஜா செரீப் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டுமென்ற முறையில் கூறவில்லை; அவ்வாறு வரக் கூடாது என்ற கருத்தில் தான் சொல்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தாங்கள் கூறுவதுபோல் திரு. ஹாஜாசெரீப் அவர்கள் ஒரு நல்ல கருத்தோடு சொல்லியிருந்தால் அதை ஏன் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இருப்பதால் பயன் ஒன்றும் இல்லை என்பதால் அதை எடுத்திருக்கிறார்கள். அதை மீண்டும் அவைக் குறிப்பில் வைக்க வேண்டுமென்பது சரியல்ல.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சொல்வதையும் சொல்லிவிட்டு அப்புறம் ஏன் பயப்பட வேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. தேவையில்லை என்பதால் எடுத்திருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: நேற்றையதினம் இரண்டு பக்கங்களிலிருந்து பேசியதையும் எக்ஸ்பஞ்ச் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அது எல்லாம் பத்திரிகையில் வந்து விட்ட பிறகு நீங்கள் அது சம்பந்தமாகச் சொல்லுகின்ற கருத்தை மறுப்பது அல்லது நீக்கிவிடுவது என்பது நியாயமல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையும் துணைத் தலைவர் சொல்லியிருக்கிறார். நேற்றையதினம் பேசியது பத்திரிகையில் வந்திருக்கிறது. திரும்பத் திரும்ப அது வரவேண்டாம் என்பதால் எடுத்திருக்கிறார்கள். நேற்று பேசியது எல்லாம் அவைக் குறிப்பிலும் இருக்கிறது. ஆகவே இன்றைக்கு மீண்டும் அது அவைக்குறிப்பில் இடம்பெற வேண்டாம்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இருக்கிற பிரச்சனை 50 கோடி ரூபாய்க்கு அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து, திரு. ஹாஜாசெரீப் அவர்கள் அந்தப் பிரச்சனைக்கு இடையே இதைப் பேசினார்கள். உடனே நம்முடைய துணைத்



தலைவரவர்கள் அதைக் குறிப்பிட்டுப் பேசி, பிரச்சனை 50 கோடி ரூபாய் சத்துணவுத் திட்டத்தைப் பற்றியது என்று சொல்லியிருந்தால் அது வரவேற்கத்தக்கது. ஆனால் நீங்கள் பொது இலக்கணம் வகுப்பது நல்லதல்ல. நேற்றையதினம் பேசியதை இன்றைக்கு பேச வேண்டாம் என்று சொல்லி, எக்ஸ்பஞ்ச் செய்வதாக இருந்தால் அதே அடிப்படையில் பேசுகின்ற எல்லாக் கருத்துக்களையும் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டி வரும். ஆகையால் திரு. ஹாஜாசெரீப் அவர்கள் கூறியதை அவைக்குறிப்பிலிருந்து எடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக் குறிப்பில் இருக்க வேண்டும் என்றால் அப்படியே இருக்கட்டும். (குறுக்கீடு) மேலும் இதுபற்றிய விவாதம் தேவையில்லை.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே, நேற்றையதினம் பேசிய முதலமைச்சர் பேச்சு துரதிர்ஷ்டமான பேச்சு ; அவர் இந்த அவையில் பேசக் கூடாத பேச்சு என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, முதலமைச்சர் சொல்லியிருக்கிற வார்த்தை துரதிர்ஷ்டமானது, அவமானமானது என்ற கருத்தைத்தான் எதிர்க்கிறோமே தவிர வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒவ்வொருவரும் கருத்துக்கு விளக்கம் சொல்லிக்கொண்டிருந்தால் அது போய்க் கொண்டே இருக்கும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : துரதிர்ஷடவசமானது என்பதை வேண்டுமானால் ஆட்சேபகரமானது என்று வைத்துக் கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்குறிப்பில் இருக்கட்டும் என்று சொல்லிவிட்டேன். மேலும் இதுபற்றிய விவாதம் தேவையில்லை. அடுத்து திரு. ரமணி அவர்கள் பேசுவார்கள்.

*திரு. கு. ரமணி : மரியாதைக்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த எதிர்பாராத செலவு என்ற சட்டத்தின்கீழ் கொண்டு வந்திருக்கும்படியான இந்த பிரேரணையில் சத்துணவுத் திட்டம் சம்பந்தமாகப் பேசவேண்டாம் என்ற முறையில் கருத்து சொல்லப்பட்டது. நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்வது என்னவென்றால் சத்துணவுத் திட்டத்திற்கு செலவழிப்பதற்காகத்தான் இந்தப் பணம், இந்த சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால் அது சம்பந்தமாக ஆரம்பத்திலேயே இந்த மாமன்றத்தில் விரிவாக விவாதித்து இருந்தால் இந்தப் பிரச்சனை வந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இனிமேல் அதுபற்றி விமர்சித்துக் கொண்டிருப்பது சரியல்ல என்று நிதியமைச்சர்

சொல்கிறார். ஆனால் இந்த நிலையில் அந்தக் கருத்தையும் இந்தக் கருத்தையும் தனிப்பட்ட முறையில் பார்க்காமல் இணைப்பாக பார்க்க வேண்டும். இதிலே கோரப் பட்டிருக்கிற தொகை இந்த சத்துணவுத் திட்டத்திற்கு செலவழிப்பதற்கான பணம் என்பது உண்மையானால் அதைப் பற்றிக் கருத்துக்களைச் சொல்லும்போது 'அது தவறு' என்று அதற்கு பெயர் சூட்ட வேண்டாம் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

அந்தச் சட்டத்தைப் பற்றி நேற்றைக்குச் சொல்லும்போதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய துணைத் தலைவர் இங்கே குறிப்பிட்டார். இந்த மாதிரி அவசரச் சட்டங்களை பயன்படுத்திக் கொண்டு, ஏராளமான பணம் செலவு ஆகும் படியான காரியங்களுக்கு நடவடிக்கைகள் எடுப்பது என்ற மரபு சரியல்ல. அந்த முறை கூடாது. அப்படிப்பட்ட ஒரு நிலை பழக்கத்தில் வந்து விட்டால் அது எதற்கும் பொருந்தும் படியாக ஆகிவிடும் என்று நேற்றைக்கே இங்கே அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

சென்ற பட்ஜெட் காலத்திலே ஒரு குத்து மதிப்பாக ஒரு தொகையை சுமார் ரூ. 100 கோடி செலவாகும் என்று சொல்லப்பட்டது. ஆனால் அன்றைக்கு திட்டங்கள் இல்லை. அதைப்பற்றி இதே சட்டமன்றத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். நான் கூட பேசியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது அது பற்றிய திட்டங்கள் உடனடியாக அமைக்கப்படவில்லை என்றும், பின்னால் அமைக்கப்பட்டு அவைமுன் வைக்கப்படும், பின்னர் அதுபற்றி பேசலாம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் நிதி ஒதுக்கீடு மட்டும் ரூ. 100 கோடிக்கு மேலே செலவாகும் என்று சொல்லப்பட்டது. அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இந்த விஷயத்தைப் பற்றி சொல்வது பொருத்தம் என்று கருது கிறேன். ஆனால் இப்போது இந்த சத்துணவு திட்டத்திற்கு ரூ. 120 கோடிக்கு மேலே கூட செலவாகும் என்று குறிப்பிடு கிறார்கள். 60 லட்சம் குழந்தைகளுக்கு மேலே, இதனால் தயாரிக்கப்படும் உணவை பயன்படுத்துவார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

அப்படியானால் நமக்கு மிக முக்கியமான கவலை இருக்கிறது. அந்த 120 கோடி ரூபாயினுடைய உணவு நம்முடைய மாநிலத்தின் குழந்தைகளின் வயிற்றிற்குப் போய்ச் சேர வேண்டும். வேறு எங்கும் போய்விடக்கூடாது. இதில் எந்தவிதத் தவறும் ஏற்பட்டுவிடக் கூடாது. ஒரு மாஸிவ் ப்ரோக்கிராம் என்ற அளவில் பெரியதாக நடக்கவிருப்பதில்,



தவறுகள் நடைபெற்றுவிட இடம் உண்டு என்பதால்தான், அதன் பயன் முழுவதும் நம் தமிழக குழந்தைகளுக்கு கிடைக்கச் செய்வதில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்று கூறுகிறேன்.

மக்களுடைய வரிப்பணம் தான் இதற்காகச் செலவழிக்கப் படுகிறது. இலவச சத்துணவு என்று சொன்னாலும் அல்லது வேறு எந்தப் பெயர் வைத்தாலும், தமிழ்நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு பிரஜையும், அவர்களின் குழந்தைகள் இந்தச் சத்துணவை சாப்பிட்டாலும் அல்லது, அவரவர்கள் வீட்டிலேயே உணவு உண்டாலும் கூட, அவர்கள் தரும் வரிப்பணத்திலிருந்து தான், கல்விச் செலவுக்காக என்றும், மற்ற பணிகளுக்காக என்றும் நாம் நிதியை ஒதுக்குகிறோம். ஆகவே அவர்களுடைய பணத்தைத்தான் நாம் அவர்களுக்காகச் செலவு செய்கிறோம். இந்த அடிப்படை உண்மையை யாரும் மறுக்க முடியாது. அதற்கு எந்தப் பெயரை போட்டாலும் தமிழக மக்களின் வரிப்பணத்தைக் கொண்டுதான் திட்டங்கள நிறைவேற்றப்படுகின்றன. ஆகவே தான் இதை மிகுந்த கவலையோடு, அக்கறையோடு கவனிக்க வேண்டும் என்று சொல்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். கோவை மாநக ராட்சியில் அப்போது அது நகராட்சியாக இருந்தது — 17 ஆயிரம் குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுத்த காலத்தில், 1973–74 ஆம் ஆண்டுக்காலத்திலே $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய் அளவிலே திருட்டு நடைபெற்றது. இன்றுவரையில் அது கண்டுபிடிக்கப் பட்டு அதன்மீது தீர்வு காணப்படவில்லை. தவறு செய்தவர் களை கண்டு பிடித்து தண்டனை அளிக்கப்படவில்லை. ஏதோ அந்த நேரத்தில் பிடிக்கப்பட்டு, தற்காலிகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் கூட, வேலைக்கு திரும்பவும் சென்று வேலை செய்து வருகிறார்கள். லோக்கல் போர்டினுடைய, கணக்குகளை தணிக்கைச் செய்ய வேண்டிய குழுவும், இன்றுவரையில் அந்த கணக்குகளை தணிக்கைச் செய்து முடிக்கவில்லை என்று சொல்கிறார்கள். இதை ஒரு உதாரணத்திற்காகத்தான் சொன்னேன். இதை ஒரு எச்சரிக்கைக்காகச் சொல்கிறேன்.

அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறபோது, 100 கோடி அல்லது 120 கோடிக்கு மேல் பணம் செலவழிக்கக்கூடிய திட்டத்தில் நிச்சயமாக ஊழல் உள்ளே வர இடம் இருக்கிறது, அவைகள் எல்லாம் தடுக்கப்பட்டாக வேண்டும் என்று சொல்கிறேன்.

ஆகவே, இந்தத் திட்டத்தில் ஒரு காசு கூட அநியாயமாகப் போகாமல், ஊழலுக்கு இடம் அளிக்காமல், பூராவும் முழுமை யாக குழந்தைகளுக்கே உணவாக கிடைக்கும் வகையில் அந்தப் பணம் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் சொல்கிறேன்.

ஆசிரியர்களுக்கு இதிலே பங்கு இருக்கிறது. ஆசிரியர்களின் பங்கைப் பற்றி நாம், ஆசிரியர்கள் தின விழாவிலே கூட பெருமை யாக எடுத்துச் சொன்னோம். அவர்கள் தாங்களாகவே விரும்பி இதில் பங்கு கொண்டு, தங்களுடைய கல்விப் பணிக்கு எந்த விதமான பாதகமும் ஏற்படாத வகையில், இந்தப் பணிகளில் பங்கெடுக்க முன் வருவதற்கு பாராட்டியாக வேண்டும். பாராட்டுவது ஒரு பக்கம் இருக்கட்டும். அவர்களுக்கு வேலை பளு அதிகமாக இருக்குமா இல்லையா? கட்டாயமாக இருக்கும். அப்படி இல்லை என்று சொல்வது சரியல்ல. தலைமை ஆசிரியர்களாக இருப்பவர்கள், இந்த மொத்தப் பணிகளையும் மேற்பார்வை பார்த்தாக வேண்டிய நிலை இருக்கிறது.

காய்கறிகள் வாங்குவது, விறகு வாங்குவது போன்றவை களை நேரிடையாக கவனிக்க வேண்டிய அவசியம் இல்லா விட்டாலும் ஒட்டு மொத்தமாக கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. அது அவர்களுக்கு வேலைப் பளுதான். அந்த ஆசிரியர்கள் 365 நாட்களும் பிரிவு வாராக வந்து வேலை செய்தாக வேண்டிய அவசியம் இருக்கிறது. அதனால் அவர்கள் மனதில் அலுப்பும் இருக்கிறது. அதை அவர்கள் எங்களிடத்திலே தனிப்பட எடுத்துச் சொல்கிறார்கள். அவர்கள் எவ்வளவுதான் வேலை பளுவைச் சுமக்க முடியும்? ஜனத்தொகை கணக்கெடுப்பு, ஓட்டு அளிக்கிற மக்கள் கணக் கெடுப்பு, சிறு சேமிப்புக்கு ஆள் சேர்ப்பது, குடும்பக் கட்டுப் பாட்டிற்கு ஆள் பிடிப்பது, இப்படி பல வேலைகளையும் அவர்கள் செய்வதோடல்லாமல், இந்த வேலைக்கும் அவர்களையே நியமிப்பீர்களேயானால், அது சரியல்ல நியாயமும் அல்ல.

அதற்கென தனியாக ஆக்கபூர்வமான யோசனைகளை முன் வைத்து, தனியான ஒரு செட்அப் அமைத்து, அதைக் கொண்டு இந்த திட்டங்களை நிர்வாகம் செய்தால் நல்லது. இதனால் மேலும் 100-க் கணக்கான ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அப்படிப்பட்ட ஒரு தனியான அமைப்பு வேண்டும் என்று தான் சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே ஆசிரியர்களுடைய வேலைப்பளு குறைக்கப்பட வேண்டும். கல்வி வளர்ச்சி பாதிக்கப்படக்கூடாது. அந்த ஆசிரியர்களின் பணி முழுவதும் கல்வி வளர்ச்சிக்கு மட்டும் பயன்படவேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து. ஆகவே இதற்காக நீங்கள் ஒரு தனி நிர்வாகத்தை ஏற்படுத்திக் கொண்டால்தான் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து முறையாக நடக்கும்.

இன்றைக்கு இந்தத் திட்டத்தினை இந்த அரசு நடத்து கின்றது. ஆனால் பிறகு இந்த அரசு வந்தாலும் வரா விட்டாலும், வேறு அரசுகள் வந்தாலும் இந்தத் திட்டம் தொடர்ந்து நிரந்தரமாக நடத்தப்படவேண்டிய ஒன்று. கைவிடப்படக்கூடிய திட்டமல்ல இது. எனவே இதற்கு நிரந்தரமான ஒரு செட் அப் இருக்க வேண்டும் என்பது இன்றியமையாதது.





அடுத்து இதனை மேற்பார்வையிடுவதற்காக கமிட்டிகள் அமைக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் மூலம் பல பேர் களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படுகின்றது. அங்கே சமையல் செய்பவர்களுக்கு இரண்டு ரூபாய் கூலி என்றும், எடுபிடி வேலை செய்பவர்களுக்கு ஒரு ரூபாய் கூலியும் என்றும் வைத்திருப்பது எப்படிச் சரியாக இருக்கும்? அவர்கள் சாப்பிடு கின்ற நேரத்தில் வீட்டிற்குச் செல்ல முடியாது. இங்கேயே சாப்பிடலாம். ஆயினும் அவர்களுக்கு இப்படிப்பட்ட கூலி கொடுத்தால் அது எப்படிச் சரியானதாக இருக்கும். அப்படி இருந்தால் அவர்களால் எப்படி நம்பிக்கையோடு விசுவாசமாக உழைக்க முடியும் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

அடுத்து உள்ளூரில் இருப்பவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணை இருக்கின்றது. ஆனால் அது சரியாகப் பின்பற்றப்படுகின்றதா? கமிட்டி இருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால் அங்குள்ள எந்தவிதமான நிலைமையும் எங்களுக்குத் தெரியாது. நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினர். ஆனால் எத்தனை உறுப்பினர்கள் அந்த கமிட்டியில் இருக்கின்றார்கள் என்பது எங்களுக்குத் தெரியாது. எதிர்க் கட்சியினைச் சேர்ந்தவர்கள் அதிலே இருக்கிறார்களா, அல்லது ஆளும் கட்சியை மட்டும் சேர்ந்தவர்கள்தான் இருக்கிறார்களா எதுவும் தெரியவில்லை. நான் கோவை கார்ப்பரேஷன் தனி அதிகாரியிடம் கேட்டேன் யார், யார் உறுப்பினர்கள் என்று. கடிதம் எழுதியும் கேட்டேன். ஆனால் எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. பின்னர் கலெக்டரிடம் கேட்டேன். அவர் சொன்னார் அந்த கமிட்டிக்கு தன்னுடைய பி. ஏ—வை அனுப்பி இருப்பதாக. சரி அப்படியானால் மற்ற அங்கத்தினர்கள் யார் யார் என்று கேட்டதற்கு சில அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். வேறு ஒரு பொது நபர் ஒருவரும் அதிலே உறுப்பினராக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அவர்கள் எல்லாம் யார்? ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்களா, அல்லது எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் இருக்கின்றார்களா என்றால் எங்களுக்கு எதுவும் தெரியவில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் சட்டமன்ற உறுப்பினர்களே இருக்கும்போது சாதாரண ஜனங்களின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

இந்தத் திட்டத்தின் மூலம் நூற்றுக்கணக்கான பேர்களுக்கு வேலை அளிக்கப்படுகின்றது. அந்த வேலைகளுக்கு விண்ணப்பம் போடுகின்றபோது என்னிடத்திலும் வந்து சிலர் கேட்டார்கள், ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்கள் நூற்றுக்கணக்கான பேர் களுக்கு வேலை வாங்கிக் கொடுக்கிறார்கள், நீங்களும் சட்ட மன்ற உறுப்பினர்தானே ஆகவே எங்களுக்கு வேலை வாங்கிக் கொடுங்கள் என்று கேட்டார்கள். நீங்கள் எங்களுக்காக சிபாரிசு செய்யுங்கள் என்று கேட்டார்கள். அப்படிக்

கேட்கின்றபோது நாங்கள் என்ன பதில் சொல்ல முடியும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். ஆகவே இவற்றை எல்லாம் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை, இந்தத் திட்டம் எப்படி இம்ப்ளிமென்ட் ஆகின்றது என்பதைப் பற்றிக் குறிப்பிடுகிறேன்.

எனவே கமிட்டிகளை ஏற்படுத்துகின்றபோது அவற்றிலே அரசியல் பாகுபாடு காட்டப்பட வேண்டிய அவசியம் இல்லை. இந்தத் திட்டம் நல்ல முறையிலே செயல்படவேண்டும் என்றால் அரசியல் பாகுபாடின்றி இடம் கொடுக்கப்பட வேண்டும். எல்லோருக்கும் வாய்ப்புத் தரவேண்டும். அப்படி இல்லை என்றால் சந்தேகம் வரத்தான் செய்யும்.

அடுத்து உணவு சமைத்து பரிமாறப்படுகின்ற இடத்திலே அது சரியாகக் கொடுக்கப்படுகின்றதா என்று கண்காணிப்பதற்கு பொதுமக்கள் கமிட்டி தேவை. ஆனால் இன்றைக்கு அப்படிப் பட்ட கமிட்டி எப்படி அமைக்கப்பட்டிருக்கின்றது, அதில் யார், யார் இருக்கிறார்கள் என்பது தெரியாது. இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் இதிலே ஆளும் கட்சி ஆதிக்கம் செலுத்து கின்றது என்ற குற்றச்சாட்டு வருமா, வராதா என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வந்தால் அதைக்கண்டு நாம் ஆத்திரப்பட்டு பிரயோசனம் இல்லை. சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து பொருட்கள் பற்றி பல செய்திகள் வர ஆரம்பித்து விட்டன. புழுத்துப்போன அரிசி வழங்கப்படுகின்றது. இந்தத் திட்டத்திற்காக என்று சொல்கிறார்கள். காய்கறிக்குக் கொடுக்கப்படுகின்ற ரூபாய் போதாது என்று சொல்கிறார்கள். பல இடங்களில் விறகின் விலை அதிகமாக இருப்பதால் விறகுக்கு கொடுக்கப்படுகின்ற பணம் போதவில்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 11.10)

இதற்கெல்லாம் கண்காணிப்பு மிகவும் அவசியம். மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்பு கமிட்டி மிகவும் முக்கியம். இன்றைக்கு இந்த நிலை எங்கே கொண்டு போய் விடுமென்று தெரியாது. இப்போது இதற்கு நிதியமைச்சர் அவர்கள் 50 கோடி ரூபாய் கன்டின்ஜென்ட் பண்ட் சட்டத்தில் வேண்டுமென்று கேட்கிறார்கள். இது மேலும் போதாமலும் போகும். மேலும் நிதி இதற்கு சேர்க்க வேண்டியிருக்கிறது. யாரிடத்திலே போய் இதற்கு நிதி வசூல் செய்வது என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. இப்போது இதற்கு மக்கள் வரிப் பணத்திலே இருந்து செலவழிக்கப்படுகிறது. இதற்கு



மேலும் நிதி தேவையென்றால், செல்வந்தர்களிடம் நன்கொடையாக வசூல் செய்யுங்கள், தொழிற்சாலை முதலாளி களிடம், பெரிய பெரிய நிறுவனங்களிடம் அல்லது தர்ம ஸ்தாபனங்களிடம் அல்லது வசதிபடைத்தவர்களிடம வசூல் செய்யுங்கள். ஆனால் யாரிடத்திலே வேண்டுமானாலும் வசூல் செய்யும் நிலைமை வேண்டாம். சேரன் போக்குவரத்து, பல்லவன் போக்குவரத்து தொழிலாளர்களிடம் போய், அரசாங்கத்தின்கீழ் உள்ள நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களிடம் போய் உதாரணமாக சேரன் போக்குவரத்து தொழிலாளர்களிடம்போய் ஒருநாள் சம்பளத்தை வெட்டுவதாகத் தீர்மானித்திருக்கிறோம் என்று சொன்னால், அது சரியல்ல. நானே இதை எடுத்துச் சொல்லியும், கேட்கவில்லை. இவ்வாறு செய்வது சரியல்ல. அந்த சேரன் போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஒருநாள் சம்பளத்தை வெட்டுகிறேன் என்று அதிகாரிகள் நோட்டீஸ் போடுவது சரியல்ல. யாரைவேண்டுமானாலும் பணம் கொடுங்கள் என்று கேளுங்கள், அவர்கள் கொடுத்தால் வாங்கிக் கொள்ளுங் கள்; ஆனால் கட்டாய வசூல் கூடாது. அதற்கு வசதி படைத்தவர்களிடம் போய் கேளுங்கள். அரசாங்க ஊழியர் களிடத்திலே, போக்குவரத்து கார்ப்பரேஷன் ஊழியர் களிடத்திலே, என். ஜி. ஓக்களிடத்திலே, இன்னும் பல்வேறு பகுதிகளிலே உள்ளவர்களிடத்திலே பணம் கொடுக்க வேண்டு மென்று கட்டாயப் படுத்தக் கூடாது. அவர்களாகத் தரட்டும். ஆனால், நிர்ப்பந்தப்படுத்தாதீர்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே கட்டாய வசூல் கூடாது. பி. டி.சி. யில் வேலை செய்யக்கூடிய 1,500 ஊழியர்களிடம் ஒருநாள் சம்பளத்தை வெட்டியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். எனக்கும் அதுபற்றிய ரிப்போர்ட் வந்திருக்கிறது, அந்த நிலை மாற்றப்பட வேண்டும். இப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது. ஆகவேதான் நான் சொல்கிறேன். பட்ஜெட்டிலே இந்தப் பிரச்சனையைப் பற்றி சரியான விவாதம் நடத்தப்பட்டிருந்தால், பணம் எப்படித் திரட்டலாம் என்பதுபோன்ற யோசனைகளைச் சொல்லியிருக்கக்கூடும்,

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை) :

அதோடு, அந்தக் கமிட்டியில் யார் யார் இருக்க வேண்டும், எப்படியெல்லாம் செலவழிக்க வேண்டும், இதன் நிர்வாகம் எப்படி இருக்க வேண்டும் என்பது சம்பந்தமாக ஆலோசனை சொல்லி யிருக்கக்கூடும். காரணம், இது ஒரு நீண்ட கால திட்டம் இதற்கான அமைப்பை எப்படி நிறுவ வேண்டும்? இன்றைக்கு நிறுவுகின்ற இந்த அமைப்பு, பல ஆண்டுகள் தொடர்ந்திருக்க வேண்டும். இந்த அரசாங்கம் போனாலும், அடுத்து வருகின்ற அரசாங்கம் இதைத் தொடர்ந்து நடத்த வேண்டாமா? ஆகவே, அப்படிப்பட்ட ஒரு பர்மனென்ட் ஸ்கீமுக்கு, பர்மனென்ட் செட் அப்பிற்கு, இந்த சமுதாயத்திற்கு எப்படி செலவு செய்ய வேண்டும்? இந்தப் பணம் எப்படி செலவழிக்க வேண்டும்,

அதற்கு இப்படிப்பட்ட ஏற்பாடு தேவையா? இந்த 120 கோடி ரூபாய் திட்டத்தைப் பற்றி இங்கே விவாதித்திருந்தால் சரி. இதிலே எல்லோருக்கும் பங்கிருக்கிறது என்ற ஒருமன நிறைவோடு செயல்பட்டிருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்யப்படவில்லை. நான் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுக்கிறேன். ஆனால், நீங்கள் ஒத்துழையுங்கள், ஒத்துழையுங்கள் என்று சொல்கிறீர்கள். எப்படி நான் ஒத்துழைப்பது? அப்படிப்பட்ட நிலைதான் இன்றைக்கு ஏற்படுகிறது. இதற்கான தகுந்த நடவடிக்கையை எடுக்கவேண்டும். இந்த மாமன்றத்திலே இவைகளைப்பற்றி பேசி முடிவெடுத்திருந்தால், இந்தப் பிரச்சனையெல்லாம் எழ இடமிருந்திருக்காது. நீங்கள் நன் நோக்கத்தோடு செய்தாலும், இதிலே பல தவறுகள் நடக்கின்றன. அதனால், உங்களுக்கு எரிச்சல் ஏற்பட இடமேற்படுகிறது. இந்த நடவடிக்கையில் தவறுகள் ஏற்படுகின்றபோது, இந்தமாதிரியான விமர்சனங்கள் செய்யக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு, இதிலே சரியான முறையிலே விவாதத்தை நடத்தி, ஒரு விமர்சனத்தை நடத்தி, இதிலே வரக்கூடிய மொத்த அனுபவத்தை எடுத்துக் கொண்டு, இதற்கான ஒரு நிரந்தரமான ஏற்பாடு செய்வது, இதற்கான நிதி திரட்டுவது, ஆள் சேர்ப்பது, ஊதியம் கொடுப்பது, கண்காணிப்பது போன்றவைகள் தொடர்ந்து நடத்த வேண்டிய ஒரு ஏற்பாட்டை இந்த சட்டமன்றத்திலே விவாதித்து, அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்.

இப்படி கன்டின்ஜென்ட் பண்டுக்கு 50 கோடி ரூபாய் அதிகம் வேண்டும், இதற்காக செலவழிக்க வேண்டும் என்று சொல்வது கூடாது. அப்படிச் சொல்வது சரியல்ல என்பதை நான் கூறிக் கொண்டு. இந்த நிலையில் இந்த அரசு இதிலே கவனமாக இருந்து, இந்தப் பணம் முழுவதும் குழந்தைகளின் வயிற்றிலே உணவாகப் போய்ச் சேரவேண்டும். இதிலே ஒரு துளிகூட வெளியே எங்கும் போகக்கூடாது. எந்த வகையிலும், இதிலே ஊழலைத் தவிர்க்க வேண்டும். ஊழல் செய்யக்கூடியவர்கள் அதிகாரிகளாக இருந்தாலும்சரி, ஆளுங்கட்சியினராக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியினராக இருந்தாலும் சரி, அல்லது எந்த நபர்களாக இருந்தாலும் சரி. குழந்தைகள் உணவைத் திருடக்கூடிய எந்த நபராக அல்லது நிறுவனமாக இருந்தாலும் சரி, கண்டிப்பாக அவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட்டிலே சத்துணவு திட்டத்தின் பெயராலே எதிர்பாராத செலவு நிதியில் மேலும் ரூபாய் 50 கோடி கேட்கப்பட்டிருக்கிறது. கடந்த வரவு செலவுத் திட்டக் காலத்தில் 110 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று குறிப்பிடப்பட்டது.



அதற்கு பட்ஜெட் ப்ரொவிஷன் கொண்டு வரவேண்டும் என்று சொன்னோம். அப்படி கொண்டுவரப்படாமல் இதை எப்படி செய்வது என்பதை முடிவு செய்யாமல் கொண்டு வந்தால் பலத்த சிக்கல்களுக்கு உள்ளாக நேரிடும் என்று குறிப்பிட்டோம். இருந்தாலும் கூட அதை ஏற்றுக் கொள்ளாமல் மொட்டையாக 110 கோடி சத்துணவுத் திட்டம் என்று கொண்டுவரப்படும், கொண்டு வரவேண்டும் என்று சொல்லப்பட்டதே தவிர அதற்குண்டான நிதி எதாரும் என்ன என்று சொல்லப்படவில்லை. விவரங்கள் சொல்லவில்லை. அதற்கு பிறகு மீண்டும் எடுத்துச் சொன்னோம். குறிப்பாக நான் சொன்னேன், அண்ணா காலத்தில் படி அரிசி திட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த திட்டம் ஒரு வருட காலத்திற்குள்ளாகவே பிறந்த இடத்திற்கு திரும்ப போக நேரிட்டது, என்று குறிப்பிட்டு சொன்னேன். அதை ஏற்றுக் கொள்ளவில்லை. குழந்தைகளுக்கு நிரந்தரமாக சாப்பாடு போடக்கூடிய நிலையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எடுத்துச் சொன்னோம். அந்த விவரத்திற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கவில்லை. ஆனால் இன்றைக்கு எதிர்பாராத செலவு நிதியிலிருந்து 50 கோடி ரூபாய் வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது.

அன்றைக்கு எங்களுக்கு புள்ளிவிவரம் சொல்கிற நேரத்திலே தமிழகத்திலே 60 லட்சம் பிள்ளைகளுக்கு சத்துணவு கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அதற்கு பிறகு நகராட்சிகளிலுள்ள 15, 16 லட்சம் பிள்ளைகளுக்கும் விரிவு படுத்தப்படும் என்று சொல்லப்பட்டது. மொத்தம் கிட்டத்தட்ட 80 லட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு போடப்படும் என்று சொல்லப்படுகிறது. 80 லட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு போடப்படும் என்றால் ஒரு குழந்தைக்கு 42 பைசா என்று வைத்துக் கொண்டால் கூட கிட்டத்தட்ட 150 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு பெரிய தொகை செலவழிக்கக்கூடிய நேரத்திலே அதற்கு பட்ஜெட் ப்ரொவிஷன் இல்லாதது வருந்தத்தக்கது.

இதை நாம் தான் செய்தோம், நம் காலத்தில் இதைப் போட்டோம் என்ற முறையிலே செயல்படுகிறார்களா என்று தெரியவில்லை. பின்னாலே வரக்கூடிய எந்த அரசாங்கமும் இதை செய்துவிடக்கூடாது என்ற நோக்கத்திலே செயல்பட்டு இருக்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. பட்ஜெட் ப்ரொவிஷன் செய்து இருந்தால் தான் எதிர்காலத்தில் வரும் அரசாங்கம் அதை மீண்டும் கொண்டுவரமுடியும். பட்ஜெட் ப்ரொவிஷன் இல்லாத நிலையில் கொண்டுவந்தால் இதோடு முடிந்துவிடும் எதிர்காலத்திலே வருகிறவர்கள் எப்படி வேண்டுமானாலும் செய்யலாம் என்ற கருத்தோடு கொண்டு வந்தார்களோ என்ற சந்தேகம் எழுகிறது. கடந்த காலத்திலே இதைப்பற்றி பேசக்கூடிய நேரத்திலே நாங்கள் எடுத்துச் சொன்னோம். பிறகு

என்ன நடைபெறுகிறது என்று பார்த்தால் எதிர்பாராத செலவு நிதியிலிருந்து பணம் கேட்கப்படுகிறது. இது சத்துணவு திட்டத்திற்கு மட்டும் தான் பயன்படுத்தப்படுகிறது என்ற நிலையில் கேட்கவேண்டியிருக்கிறது. தமிழகத்திலே இன்று திடீர் என்று புயல் ஏற்படவில்லை. திடீர் என்று வெள்ளம் ஏற்படவில்லை, வறட்சி ஏற்படவில்லை சாதி சண்டை ஏற்படவில்லை. இந்தக் காரணங்களுக்காக எதிர்ப்பாராத செலவு நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது. இவைகள் எல்லாம் இல்லாத நிலையில் இன்றைக்கு மீண்டும் அந்த நிதியிலிருந்து 50 கோடி ரூபாய் கேட்கப்படுகிறது என்றால் சத்துணவு திட்டத்திற்கு தானே தவிர வேறு எதற்கும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். சத்துணவு திட்டம் எப்படி நடைபெறுகிறது என்று பார்த்தால் குறிப்பாக என்னுடைய இளையாங்குடி தொகுதியில் திருவள்ளூர் கிராமத்தில் 100 பிள்ளைகள் இருக்கக்கூடிய ஒரு பள்ளிக்கூடம் மூடப்பட்டிருக்கிறது. சத்துணவு போடப்படவில்லை. சத்துணவு எப்படி போடப்படுகிறது என்று கண்காணிக்க ஒரு கமிட்டி போடப்பட்டது. அந்த கமிட்டி அங்கே போய் பார்க்கவில்லை: ஏன் அங்கே சத்துணவு போடப்படவில்லை என்று அந்த கமிட்டியைக் கேட்டால் அந்த கமிட்டியை கலைக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். இப்படி கிராமங்களிலே சத்துணவு திட்டம் சரியாக நடைபெறவில்லை. மேலும் சத்துணவை சமைப்பதற்கு எந்த விதமான ஷெட்டும் போடப்படாமல் 'ஓப்பன் ஸ்பேஸில்' சமயல் நடைபெறுகிறது. நானே நேரடியாக ஒரு இடத்திலே பார்த்தேன். ஒரு மரத்தின் கீழே சமையல் நடைபெறுகிறது. நான் போய் இருந்தபோது மரத்தின் மேலே ஒரு காக்கை எச்சம் என் சட்டை மீது விழுந்தது. அங்கு உள்ளவர்களிடம் தண்ணீர் வாங்கி அதை கழுவக்கூடிய நிலைமை ஏற்பட்டது. சமையல் நடைபெறுகிறபோது காக்கை எச்சம் சமையலில் விழுந்து இருந்தால் அது குழந்தைகளுடைய ஆரோக்கியத்தை பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே பக்கா ஷெட் போட்டு அதில் சமையல் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–20)

தமிழகத்திலே இன்றைக்கு 6,7 மாவட்டங்களிலே குறிப்பாக கிழக்கு இராமநாதபுரத்திலே குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லை, இந்த நிலையில் சத்துணவு சமைப்பதற்கு எங்கே இருந்து தண்ணீர் கிடைக்கும்? அரிசி இருக்கிறது, பாத்திரம் இருக்கிறது, திரு. ஹாஜா செரீப் சொன்னதைப்போல் பிரியாணி கூட போடலாம். ஆனால் தண்ணீர் இல்லையே? எப்படி சத்துணவைச்சமைப்பது? தண்ணீர் நல்ல தண்ணீர் கிடைக்காததால் உப்புத் தண்ணீரிலே சமைப்பதால் உப்புப் போடாமலேயே சமைத்த சாதம் உப்பாக இருக்கிறது, மஞ்சள் நிறமாக இருக்கிறது, ஆகவே கிராமங்கள் முழுவதும் இந்த சென்டர்கள் முழுவதும் நல்ல குடிநீர் கிடைப்பதற்கு கியாரண்டி கொடுப்பதற்



கான ஏற்பாடுகளை அரசாங்கம் முதலிலே செய்தாக வேண்டும்.

அது மட்டுமல்ல, நிதி வசூல் செய்வதுபற்றிச் சொன்னார்கள் நேற்றைக்கு முன்தினம் அரசாங்க அலுவலகத்திலே நன்கொடை மூலமாக எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டபோது அவர்கள் சொன்னார்கள் 1 கோடி ரூபாய் என்று. எவ்வளவு தான் மும்முரமாக வசூலித்தாலும 4,5 கோடி ரூபாய் தான் வசூலாகும் என்ற நிலைமை தான் தெரிகிறது. ஆகவே நன்கொடை வசூல் மூலமாகவே இந்தத் திட்டத்தை முழுவதுமாக நிறைவேற்றமுடியாது. மேலும் நன்கொடை மூலயாக செயல்படுத்துவதன் மூலமாக பலவிதமான அசம்பாவிதங்கள் நடப்பதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு. ஆகவே பட்ஜெட் புரவிஷன் செய்து இங்கே நல்ல முறையிலே விவாதம் செய்ததற்குப் பிறகு இந்தத்திட்டத்தை நல்லமுறையிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் கேள்விப்பட்ட அளவிலே செக்ரடேரியட்டிலே சொல்கிறார்கள், சத்துணவுத் திட்டத்திற்காக எங்களை நிதி கேட்கிறார்களே, நாங்கள் எவ்வளவோ கஷ்டப்படுகிற நிலையில் நாங்கள் இதற்கு எப்படிக் கொடுக்கமுடியும் என்று சொல்கிறார்கள். எனவே 100 கோடி அல்ல 120 கோடி ரூபாய் அளவிற்கு பட்ஜெட் புரவிஷன் செய்து அதன்மூலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனோ தானோ என்று இன்றைக்குச் செய்துவிடுவதன் மூலமாக எதிர்காலத்திலே பிள்ளைகள் ஏமாற்றப்படுகின்ற சூழ்நிலை தான் ஏற்படும். பலகோடிக்கணக்கான ரூபாய்கள் இதற்குத் தேவைப்படுகிற காரணத்தினால் நல்லமுறையில் திட்டமிட்டு நீங்கள் அல்ல, எதிர்காலத்திலே வரக்கூடிய எந்த அரசாங்கமும் சத்துணவுத் திட்டத்தை நடத்தக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இன்றைக்கு நல்லமுறையிலே செய்தால் தான் எதிர்காலத்திலேயும் 80 லட்சம் குழந்தைகளுக்கு அவர்களுடைய வயிற்றிலே போய் உணவு சேரக்கூடிய அளவுக்கும் அத்தனை பிள்ளைகளும் கிராமங்களிலே படிப்பதற்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். ஏதோ ஏனோதானோ என்று இந்தத் திட்டத்தை நடத்துவதன் மூலமாக இந்த நோக்கம் நல்ல நோக்கமாக இருந்தாலும்கூட இதை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்படும், ஆகவே திட்டமிட்டு பட்ஜெட் புரவிஷன் செய்தால்தான் எதிர்காலத்திலே வரக்கூடிய எந்த அரசாங்கமாக இருந்தாலும் இந்தத் திட்டத்தை நடத்தமுடியுமென்ற முறையிலே நிறைவேற்ற வேண்டும். அப்படியில்லாமல் வசூல் மூலமாகவே நடத்திவிட முடியாது, நிரந்தரமாக நடத்தக்கூடிய முறையிலே எதிர்காலக் கண்ணோட்டத்தோடு இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்,

*டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எதிர்பாரா நிதியிலிருந்து செலவு என்ற அடிப்படையிலே நிதியைக் கோருகின்ற இந்த சட்டமுன்வடிவின் விவாதத்திலே கலந்துகொள்வதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி கூறிக்கொள்கிறேன். கன்டின்ஜன்ட் பண்ட் என்பதைப் பற்றி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 267-வது ஆர்டிக்களில் ஷரத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே

"The Legislature of a State may by law establish a Contingency Fund in the nature of an imprest to be entitled "the Contingency Fund of the State" into which shall be paid from time to time such sums as may be determined by such law, and the said Fund shall be placed at the disposal of the Governor of the State to enable advances to be made by him out of such Fund for the purposes of meeting unforeseen expenditure pending authorisation of such expenditure by the Legislature of the State by law under Article 205 or article 206" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கன்டின்ஜென்சி பண்ட் என்றாலே அது ஒரு இம்பிரெஸ்ட். இம்பிரெஸ்ட் என்று சொன்னால் சாதாரணமாக பெரிய நிறுவனங்களில் கூட கோடிக்கணக்கான ரூபாய்கள் புழங்குகின்ற இடத்தில் 200 ரூபாய், 300 ரூபாய் அல்லது ஒரு 1,000 ரூபாய் என்று தான் இருக்கும். ஆனால் 1,000 கோடி ரூபாய் பட்ஜெட் உள்ள இடத்தில் 100 கோடி வரையில் இம்பிரெஸ்டாக கன்டின்ஜென்சி பண்ட் வைத்திருக்கிறோம் என்று சொன்னால் வேடிக்கையான விஷயமாகத் தான் இருக்கிறது. அடுத்தபடியாக 'டு மீட் அன்பார்சீன் எக்ஸ்பென்டிச்சர்' என்று சொல்கிறார்கள். எதிர்பாரா செலவினங்களுக்கு பயன்படுத்துவதற்கு தான் கன்டின்ஜென்சி பண்ட் உருவாக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இது 'போர்சீன் எக்ஸ்பென்டிச்சர்' நம்முடைய ஆனிவல் பினான்சியல் ஸ்டேட்மென்ட்சை' வைத்த பொழுதே சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்தப் போகிறோம் என்பது நன்றாகத் தெரியும். ஆகவே இது எதிர் பார்க்கப்பட்ட செலவினம். எதிர்பார்க்கப்பட்ட செலவினத்திற்கு எதிர்பாரா செலவினத்திலிருந்து செலவிடுவது சரிதானா என்றாலும், நிச்சயமாக சரி தான். காரணம் சட்டத்திலே உங்களுக்கு அதிகாரம் எல்லாம் இருக்கிறது. ஆர்டிக்கிள் 267—ஐ ஆர்டிக்கிள் 205 மற்றும் 206—ஓடு எடுத்து படிக்கிற நேரத்திலே 206 (பி)-யில்

"to make a grant for meeting an unexpected demand upon the resources of the State when on account of the magnitude or the indefinite character of the service, demand cannot be Stated with the details ordinarily given in an annual financial Statement;





என்று இருக்கிறது. அந்த மாக்னிடியூட் அதனுடைய அளவு எவ்வளவு? அவைகளை நாம் கண்காணிக்க முடியாத நேரத்திலே 'ஆனுவல் பினான்சியல் ஸ்டேட்மென்ஸ்'-லே கொடுக்காமல் போனாலும் கூட உங்களுக்கு பரிபூரணமாக எப்போது வேண்டுமானாலும் கண்டின்ஜென்சி பண்டிலேயிருந்து எடுத்து செலவு செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனாலும் it will set up a bad precedent. நடைமுறைக்கு இது தவறான காரியம். இதை ஏற்கெனவே நாம் எதிர்பார்த்து சரியான முறையில் உருவாக்கி இருந்தோமானால் சட்டத்திலே உங்களுக்கு எவ்வளவு அதிகாரம் இருந்த போதிலும் கூட you are unfortunately setting a bad precedent. இன்று அந்த நல்ல திட்டத்திற்கு இது பயன்படுத்தப் படலாம். ஆனால் வருங்காலத்திலே இதுவே ஒரு பிரசிடென்ட்டாக உருவாகி பலர் வருகிற நேரத்தில் பல காரியங்களுக்கு இதை உருவாக்குவதற்கு வாய்ப்பாக நீங்கள் முன்னோடியாக அமைந்து விடுவீர்கள் என்பதை நான் இங்கே என்னுடைய தாழ்மையான கருத்தாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சத்துணவுத் திட்டம் என்பதைப் பற்றி இரண்டுவிதமான அபிப்பிராயங்கள் இருக்க முடியாது. காரணம் என்னவென்றால் உலகத்திலே உள்ள மிகச் சிறந்த அறிவாளிகள், கம்யூனிஸ்ட்டுகள், புரட்சிக்காரர்கள் எல்லோரையும் விட இன்று மிகப்பெரிய சித்தாந்தமாக, தத்துவமாக நம்முடைய அரசு இதை உருவாக்கி இருக்கிறார்கள். தமிழகத்திலே உள்ள 60 லட்சம் குழந்தைகளை தமிழக அரசே தத்து எடுத்துக் கொண்டதாக அறிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே மிக புரட்சிகரமான கருத்து. இதை எதிர்ப்பதற்கு இந்த உலகத்திலேயே யாருமே இல்லை என்பதை நான் நன்றாக புரிந்துகொண்டிருக்கிறேன். அதை பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இதற்காக சரியான முறையிலே செலவிடப்படுமா? இதற்கு சரியானபடி திட்டங்களை வகுத்திருக்கிறார்களா? என்று பார்க்கிற நேரத்திலே, ஏதோ அவசரம் அவசரமாக ஈடுபட்டு மிகப்பெரிய சித்தாந்தத்தையே பாழ்படுத்தி விடுவார்களோ என்ற அச்சமும் என்னிடத்திலே இருக்கிறது.

உலக சுகாதாரக் கழகம் கூட சத்துணவுத் திட்டத்தைப் பற்றி பேசுகிற நேரத்திலே சத்துணவுத் திட்டம் என்பது it is not a substitute but its only a supplement to the diet என்று அவர்கள் மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறைந்த சத்துக்கள் உள்ள, விட்டமின்கள் மினரல்கள் இல்லாத உணவுகளை உட்கொள்கிற காரணத்தால், குழந்தைகள் பல வியாதிகளுக்கு இலக்காகி விடுகிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு சப்ளிமெண்ட்டாக சத்துணவு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்களே தவிர சாப்பாட்டிற்கே சப்ஸ்டிடியூட்டாக இலவச உணவு என்ற அந்த அடிப்படையிலே உலக சுகாதாரக் கழகமும் கூட எடுத்துச் சொல்லவில்லை. இந்த அமல்படுத்துவதற்கு 10, 12 கண்டிஷன்களை போட்டிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டம் என்று சொன்னால் preparation, transportation and distri-

bution என்று மூன்று பிரிவுகள் இருக்கின்றன. உணவை சமைக்க
வேண்டும். அவர்கள் சுத்தமான சூழ்நிலையில், சுகாதாரமான
முறையிலே நல்ல ஆரோக்கியமான சமையல்காரர்களை வைத்து
சமைக்க வேண்டும். அவைகளை எடுத்துக் கொண்டு செல்கிற
நேரத்தில் நல்லமுறையில் எடுத்துச் செல்ல வேண்டும்.
அவைகளை நல்லமுறையில் விநியோகித்து, குழந்தைகள் நல்ல
முறையில் சுகாதாரமான சூழ்நிலையில் உட்கொள்ள வேண்டும்.
இவைகளை நாம் செய்யாமல் போனால் அந்தத்திட்டமே பாழாக
போகுமே என்ற அச்சமும் என்னிடத்திலே இருக்கிறது.
சுகாதாரத் துறையிலே கலந்துகொண்டு இருவரும் ஒருங்
கிணைந்து செயல்பட்டிருந்தால் இந்தத் திட்டம் இன்னும்
மிக வெற்றிகரமாகப் பயன்பட்டிருக்கும் என்ற எண்ணத்தைச்
சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-30)

அடுத்தபடியாக, குறிப்பாக, சென்னை நகரத்திலே பார்க்கப்
போனால், எங்கெங்கே எல்லாம் ஓப்பன் ஏர் ஸ்பேஸ் கிடைக்கின்ற
தோ, அது பார்க்கானாலும், கக்கூசுக்குப் பக்கத்திலே ஆனாலும்
பிளேகிரவுண்ட் ஆனாலும், எல்லா இடங்களிலும் திடீர், திடீர்
கட்டிடங்களை உருவாக்கி, அங்கே சமையற்கூடங்களை,
உருவாக்கி, நாங்கள் சமைக்கப் போகிறோம் என்று சொல்வது
It will be a public health hazard என்பதை நாம் சிந்திக்க
வேண்டும். தண்ணீரே இல்லாத பல இடங்களிலே, இரண்டு
மூன்று வயதிலிருந்து 10 வயதுவரை உள்ள குழந்தைகள் மலஜலம்
எங்கே கழிப்பார்கள்? நிச்சயமாக, சத்துணவு சாப்பிட வருகின்ற
நேரத்திலே அவர்கள் மலஜலம் கழிப்பார்கள். Have you made
provisions for all these things? அங்கங்கே, கட்டிடங்களைக் கட்டி
சமையற்கூடங்களை உருவாக்கியிருக்கிறார்கள். சமையல் கூடங்
களைக் கட்டுவதற்கு முன்னாலே, பக்கத்திலே தண்ணீர் கிடைக்
கிறதா என்பதை ஆய்ந்து பார்த்திருக்கிறார்களா? அப்படியானால்
சமையல் காரருக்கு மெடிக்கல் செக் அப் இருக்கிறதா? உதார
ணத்திற்கு ஒன்று சொல்கிறேன். இங்கேயிருக்கும் மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்,
'டைபாய்ட் வைரஸ் கேஸ்' பற்றி. அமெரிக்காவிலே ஒரே ஒரு
சமையல்காரருக்கு டைபாய்ட் வந்ததால், அமெரிக்கா பூராவும்
அது பரவி விட்டது. ஆகவே, சமையல்காரருக்கு மெடிக்கல்
எக்சாமினேஷன்—செக் அப்—புக்கு நீங்கள் வழி செய்திருக்கிறீர்
களா? பல தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டும். நீங்கள்
போட்டிருக்கிற இந்த மாபெரும் திட்டத்தை யாரும் குறை
சொல்ல முடியாது. கணக்குக்காக ரூ. 120 கோடி என்று
சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், எல்லா கணக்குகளையும்
சேர்த்தால், ரூ. 200, ரூ. 300 கோடிக்குச் செலவு ஏற்படும்.
அப்படிப்பட்ட மாபெரும் செலவைத் தாங்குவதற்கு இந்த
அரசாங்கத்திற்குப் பொறுப்பிருக்கிறது, திறமையிருக்கிறது- வலு
இருக்கிறது. எனவே, இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்துச்





செய்ய வேண்டுமென்று கூறி, இந்த கன்டின்ஜென்ஸி பன்டை நான் ஆதரித்து, மேலும் வேண்டுமானால் செய்யுங்கள், ஆனால், திட்டத்தைச் சரியான முறையிலே, நல்லமுறையிலே, 'With a programme and plan' செய்ய வேண்டுமென்று சொல்லி நான் விடைபெறுகிறேன். வணக்கம்

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதிலே நிதியமைச்சர் பதில் சொல்வதற்கு முன்பாக நான் குறுக்கிடுவதற்காக யாரும் தவறாகக் கருத மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். இங்கே மதிப்பிற்குரிய சௌரிராஜன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சத்துணவிற்கு என்னென்ன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், உணவு அல்லது அதில் ஊட்டச் சத்து இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன், உணவே இல்லாமல் இருக்கிறார்கள். அந்த உணவையும் கொடுத்தாக வேண்டும்; அதிலே சத்தும் சேர்க்கப்பட வேண்டும். அதுதான் இந்தத் திட்டத்தினுடைய அடிப்படை என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அவர் பாராட்டினார் என்பதற்காக நன்றியையும், எச்சரிக்கை செய்தார் என்பதற்காக அதற்கு மரியாதையையும், இந்தக் கருத்தை அவருக்கு நான் சொல்வதிலே மன நிம்மதியையும் பெறுகிறேன்.

இங்கே வருவதற்கு முன்பாக மதிப்பிற்குரிய ஹாஜா செரீப் அவர்கள் நேற்றையதினம் இங்கே பேசியதைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லி, நான் பதில் சொன்னது துரதிருஷ்டமானது என்று வருத்தப்பட்டிருக்கிறார்கள். துரதிருஷ்டமான கேள்விகள் கேட்கும்போதுதான் பதிலும் வேறு விதமாக வந்து விடுகின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

ஆனால், துரதிருஷ்டவசமாக என்னைத் தாக்காமல், நான் சாராயக் கடைக்கு நம்பர் எழுதிக் கொடுத்தேன், என் பெயரைக் குறிப்பிட வேண்டும் என்ற அந்தக் கேள்வியை என்னைக் கேட்காமலிருந்திருந்தால் நான் பிரதம அமைச்சர் பெயரைச் சொல்ல நிச்சயமாக முன் வந்திருக்க மாட்டேன். பிரதம அமைச்சர் எப்படி பொறுப்பேற்க வேண்டுமென்று கேட்கிறார்கள். 20 அம்சத் திட்டம் பிரதம அமைச்சர் பெயரிலேதான் இருக்கிறது. தமிழக அரசாங்கத் திட்டம் என்று சொல்வதற்குப் பதில் முதலமைச்சர் திட்டம் என்று சொன்னால் குறை, ஆனால், அதே சமயத்தில் இந்திய அரசின் 20 அம்சத் திட்டம் என்று சொல்லாமல், பிரதம அமைச்சரின், இந்திரா காந்தி அம்மையாரின் 20 அம்சத் திட்டம் என்று சொல்வது நியாயம் என்பது எப்படி பொருத்தம் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, அவர்கள் தயவுசெய்து இப்படிப் பிரித்துப் பார்க்காமல் முதலிலே குறை சொல்பவர்கள், தாக்கும்போது, நியாயத்தின் அடிப்படையில்

தாக்குமாறும், அதிலே கொஞ்சம் மரியாதையும், நியாயமும். பணிவும் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். தாக்க வேண்டுமென்ற நிலைமை வந்தால், இங்கே டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சொன்னதைப் போல், எடுத்துக் காட்டி, எச்சரிக்கை செய்வதாக, யோசனை செய்யக் கூடியதாக, வலியுறுத்துவதாக அமைந்தால், அதற்கு நன்றி தெரிவிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றையதினம் இந்த விவாதத்திலே நான் பேசுகின்ற நேரத்திலே நம்முடைய ஊராட்சி ஒன்றியங்களுடைய பதவிக் காலம் நீடிப்பு சம்பந்தமாக நான் பேசி முடித்ததற்குப் பின்னாலே, ஆளுங்கட்சி சொறடா அவர்கள் ஒரு உதாரணத்தைத் தொட்டுக் கேட்டார்கள். அதன் தொடர்ச்சியாகப் பேசும் பொழுதுதான் இந்தக் கருத்தைக் குறிப்பிட வேண்டியிருந்தது. நான் தமிழகத்தின் முதலமைச்சரைப் பற்றி சொன்ன நேரத்திலே, நான் நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் வேறு மாநில முதலமைச்சர்களைச் சொல்லியிருப்பார்களானால், அது ஒரு ஸ்டேட் சப்ஜக்ட் என்கிற முறையிலே மத்திய அரசுக்குச் சம்பந்தம் இல்லையென்ற முறையிலே நான் அதை விட்டுவிட்டிருப்பேன். ஆனால், நாங்கள் பெரிதும் மதிக்கின்ற எங்களுடைய தலைவியைப் பற்றிப் சொல்லிவிட்ட நேரத்திலே நான்....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, ஒன்றை நான் தெளிவுப்படக் கூற விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் நாங்கள்தான் எங்களுக்குத் தலைவர்கள். இந்திரா காங்கிரஸைப் பொறுத்தவரையில் மரியாதைக்குரிய பிரதம அமைச்சர் தலைவர். எங்கள் கட்சியைப் பற்றிப் பேசும் பொழுது நாங்கள் யாரைச் சொல்ல வேண்டுமோ அவர்களைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, நான் அதைத்தான் இன்னமும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த மதுவிலக்கு ஒரு ஸ்டேட் சப்ஜெக்ட்....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, நேரத்தை வீணாக்க வேண்டாமென்பதற்காகச் சொல்கிறேன். இந்த மதுவிலக்கைக் கொண்டு வர வேண்டுமென்று சொல்வது மத்திய அரசினுடைய திட்டக் குழுத் தலைவரும், அந்தக் குழுவும், தயவுசெய்து இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதைப் புரிந்து கொண்டு இது ஸ்டேட் சப்ஜெக்டா அல்லது சென்ட்ரல் சப்ஜெக்டா என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.





திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, மதுக் கடைகளைத் திறப்பது அந்தந்த மாநிலங்களினுடைய உரிமை. பிரதம அமைச்சரவர்கள் யாரையும் பார்த்து நீங்கள் திறுங்கள் என்று சொல்வதில்லை. அதைத்தான் நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இன்னொரு மாநில முதலமைச்சரைப்பற்றிச் சொல்லியிருந்தால் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் பிரதம அமைச்சரை இழுத்திருக்க வேண்டாமென்ற கருத்திலேதான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொல்வதைப் பார்க்கும்பொழுது, விவாதம் வளர்ந்து வளர்ந்து இப்பொழுது இன்னொரு முதலமைச்சரைப்பற்றிச் சொல்லச் சொல்கிறார்கள் போல் இருக்கிறது. (சிரிப்பு) இப்படித் தவறான ஒரு எண்ணம் வளர்ந்து கொண்டு போகக் கூடாது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

நேற்று மாண்புமிகு முதல்வரவர்கள் சொன்னதை திரு. ஹாஜா செரீப் அவர்கள் எப்படிப் புரிந்துக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நேற்று முதல்வர் சொன்ன குறிப்பையும் தேடி எடுத்து வைத்திருக்கிறேன். நேற்று அவர்கள் சொல்லியிருப்பது, ‘அதைப் பிரதம அமைச்சர் திட்டம் என்று சொல்ல முன் வருவார்களேயானால் இங்கேயும் அதை முதலமைச்சர் திட்டம் என்று சொன்னால் நான் ஆச்சரியப்படமாட்டேன்’ என்று மிகவும் பாதுகாப்பாகச் சொல்லியிருக்கிறார்களே தவிர பிரதம அமைச்சரை இழுத்துப் பேச வேண்டுமென்ற எண்ணத்தில் பேசியதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்தப் பிரச்சனையை அதிகமாக மேலும் மேலும் பேசிக்கொண்டிருக்க வேண்டாம். அது தேவையில்லை. நேற்று பேசியது பத்திரிகையிலே வந்து விட்டது. எனவே திரும்பத் திரும்பப் பேசினாலும் பத்திரிகையிலே வராது. விளம்பரத்திற்குப் பயன்படப் போவதில்லை. ஆகவே, இந்தப் பிரச்சனையை இத்துடன் விட்டு விடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எதிர்பாராச் செலவு நிதி மசோதாவை இந்த அவையின் முன் கொண்டு வந்து, அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த எதிர்பாராச் செலவினத்தில் ஏற்கனவே ஒதுக்கப்பட்டு நிலையாக இருக்கிற தொகை 50 கோடி ரூபாயாகும். இந்த 50 கோடி ரூபாய்க்குள்ளே எதிர்பாராத செலவினங்களை ஈடுகட்டுவதற்காக வழி செய்வதற்குத்தான் இந்த எதிர்பாராத செலவினங்களில் வைக்கப்படுகின்ற ஒன்றாகும். பொதுவாகவே அரசாங்கம் பட்ஜெட் என்று 1982—83 ஆம் ஆண்டுக்குப் போடுகின்றபொழுது இந்த ஓராண்டுக் காலத்திற்குச் செலவுகளுக்கான

வழி வகுக்கப்படுகின்ற வரவு செலவுகளை வரவு செலவுத் திட்டத்திலே வைத்து இந்த அவையினுடைய அனுமதியைப் பெற்று நடைமுறைக்குக் கொண்டு வரும்.

பார்ட் 2 ஸ்கீம் என்ற அளவிற்கு இரண்டாம் தொகுதி திட்டம் என்ற வகையில் சில திட்டங்களைக் கொள்கையினுடைய அடிப்படையில் நாம் ஏற்றுக்கொண்டு அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் எவ்வளவு அதற்குச் செலவழிக்க வேண்டி வரும் என்று எதிர்பார்க்க முடியாத ஒரு சூழ்நிலையில் ஒரு டோக்கன் புரொவிஷன் என்று ஒரு ரூபாயோ அல்லது 100 ரூபாயோ ஒதுக்கி வைத்துவிட்டு, அதற்குப் பிறகு திட்டங்கள் வந்ததற்குப் பிறகு 1 கோடியோ அல்லது 10 இலட்சமோ என்று ஏற்படுகின்றபொழுது அதனைச் செலவழிப்பதற்கு இந்த எதிர் பாராச் செலவினத்திலிருந்து எடுத்துச் செலவழிக்க முடியும். ஆனால், அவை இந்த ஒரு ரூபாய்க்கும், 100 ரூபாய்க்கும்தான் முதலிலே அனுமதி அளிக்கும்.

(முற்பகல் 11-40)

பிறகு அதனை செலவழிக்க வருகின்றபோது, எதிர்பாராத செலவினத்திலிருந்துதான் எடுத்துச் செலவழிக்க வேண்டி வரும். அப்படிப்பட்ட செலவினங்கள் செய்கின்ற வகையிலேதான் இந்த அறிக்கையிலே தெளிவுபட கூறியிருக்கிறேன்.

'As the State Government were incurring considerable expenditure towards implementation of the programmes for feeding poor children in the age group 2 to 10 and other unforeseen items of expenditure, it was considered necessary to increase the said sum temporarily from fifty crores of rupees to one hundred crores of rupees during the period beginning on the 1st August 1982 and ending on the 31st March 1983.

இது சத்துணவுத் திட்டத்திற்காக மட்டுமே செலவழிப்பதற்காக இவ்வளவு பெரிய தொகை தேவை என்கின்ற நிலைமையிலே கூட ஒதுக்கப்படவில்லை. ஆகவே சத்துணவுத் திட்டம், கல்வித் துறை, வேளாண்மைத் துறை, சுகாதாரத் துறை, வேறுபல துறைகளுக்கு எதிர்பாராத செலவினங்களிலிருந்து எடுத்து செலவழிக்க வேண்டுமென்று வருகிறது. இந்த எதிர்பாராத செலவினங்களிலிருந்து 50 கோடிக்குள்ளாகவே முடிக்கின்ற சூழ்நிலை இருக்குமானால் அதற்கு மேல் கேட்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆனாலும் 6 மாதத்திற்குப் பிறகு சட்டமன்றத்தின் அனுமதி பெற்றுதான் பெறமுடியும். ஆகவே 6 மாதத்திற்குள்ளாகவே இந்தச் செலவினம் பெருகிவிட்டதன் காரணமாக, டெம்பரரியாக 1982 மார்ச் 31 வரையிலும் இந்த நிலையாக இருக்கின்ற 50 கோடி ரூபாயை 100 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்துவதற்கு அனுமதி தேவைப்படுகிறது. இதிலே சத்துணவுக்கு இவ்வளவு செலவழிப்போம் என்பது இதிலே அதற்கான



காரணங்கள் விளக்கப்பட்டிருக்கிறதே தவிர இந்த எதிர்பாரா செலவினத்தில் ஒதுக்கியதே அனுமதி அளித்ததாக ஆகாது. இதிலிருந்து எடுத்துக் கொள்வதற்கு அரசுக்கு ஒரு வாய்ப்பை தருகின்றதுதானே தவிர, வேறல்ல. இது எதிலே வருகிறது என்றால், நாளைக்கு நான் வைக்கவிருக்கின்ற துணை மதிப்பீட்டிலே, இதுவரை சத்துணவுத் திட்டத்திற்கும், சுகாதாரத் துறையிலேயும், வேளாண்மைத் துறையிலேயும், வேறு துறையிலும் இந்த அவை ஒப்புக் கொண்டதற்குப் பிறகு, ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் இவ்வளவுக்கு நாங்கள் அனுமதி அளிக்கிறோம் என்று ஒத்துக் கொண்டதற்குப் பிறகு, மேற்கொண்டு ஆன செலவுகளை எதிலிருந்து எடுப்பது என்கிறபோது, எதிர்பாராத செலவினங்களிலிருந்துதான் எடுத்துக் கொள்ளவேண்டும்.

அதிலே எடுத்துக் கொள்வதன் காரணமாகவே அவை அனுமதி அளித்ததாக ஆகாது. 50 கோடியை 100 கோடியாக ஆக்குவதும் அனுமதி அளித்ததாக ஆகாது. இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்ற ஒன்றே தவிர, இந்த 100 கோடி என்பது இந்த சத்துணவுத் திட்டத்திற்காக செலவழித்ததற்கு அனுமதி அளித்ததாக ஆகாது. அதிலே எவ்வளவு எடுத்துச் செலவழித்தோம் என்பதற்கு சென்ற பட்ஜெட்டிலே இந்த அவை முன் வைத்து அனுமதி பெறாத இனங்கள் எவையெவையோ, அந்த பட்ஜெட்டிலே நிறைவேற்றப்பட்டதிலிருந்து இன்று வரையிலும் எதையெதை நாம் கூடுதலாக செலவழித்து இருக்கிறோமோ, அந்தக் கூடுதலான செலவழிப்பை இந்த எதிர் பாராத செலவினத்திலேயிருந்து நாம் எடுக்கிறோம். எடுத்ததற்குப் பிறகு துணை மதிப்பீட்டிலே செலவழிக்கப்பட்ட செலவினங்களுக்கு நாம் அனுமதி கோருகிறோம்.

நாளை துணை மதிப்பீடு வைக்க இருக்கிறேன். அதிலே எந்தெந்த செலவினங்களுக்கு இதுவரையில் செலவழித்து இருக்கிறோம் என்ற புள்ளிவிவரங்கள் முழுவதும் வரும். அதைப் பற்றி விவாதம் இங்கே, நாளை மறுநாள் நடத்தப்போகிறோம். இந்த அவை அனுமதி அளித்ததற்குப் பிறகு, அதற்குப் பிறகு செலவழிக்க வேண்டிய வகையில் எதிர்பாராது செலவழிப்பதற்கான ஒரு வாய்ப்பே தவிர, இதுவே அனுமதி அளித்ததாக ஆகாது. மாண்புமிகு உறுப்பினர்கள் விரிவாக இதிலே பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று நான் சொல்லுகிறேன். ஆகவே செலவினத்தைப் பெருக்கிக் கொண்டு போகிறபோது அதை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பே இல்லாவிட்டால், அரசாங்கத்தினுடைய பணிகள் நிறைவேற முடியாமல் போய் விடும். ஆகவே 50 கோடி நிலையாக இருப்பதை 100 கோடியாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நிலைமை பல்வேறு ஆண்டுகளிலே பல்வேறு சமயங்களிலே அவசரச் சட்டத்தின் மூலமாகவும், 1 கோடி, 20 கோடி, 30 கோடி என்று ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கூடுதலாக இந்த எதிர்பாராத செலவினத்தைப் பெருக்க வேண்டும்

என்பதற்கான புள்ளிவிவரங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆர்டினன்ஸ் மூலம், நிறைவேற்றி இருக்கிறோம். மசோதாவின் மூலமும் நிறைவேற்றியிருக்கிறோம். இது சட்டத்திற்கு உட்பட்ட ஒன்றே தவிர, சட்டத்திற்குப் புறம்பான ஒன்று அல்ல. அது கூட 31.3.1983 வரையில் தற்காலிகமாகத்தான், இந்த 100 கோடி என்பது. நிலையாக இருப்பது 30 கோடிதான். அதை ஏன் செலவழிக்கவேண்டும், எதற்கு செலவழிக்கவேண்டும் என்பதை எல்லாம் துணை மதிப்பீட்டுக் கோரிக்கை வருகிறபோது, விரிவாக எவையெவைகளுக்கு எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்ற புள்ளி விவரக் குறிப்புகள் முழுவதும் உங்களுக்குத் தரப்படும். அது பற்றி முழு விவரங்களையும் நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்ற காரணத்தால் இங்கே அவற்றைப் பற்றியெல்லாம் விரிவாக பேசவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். இதிலே செலவழிக்கப்படுவது சத்துணவுத் திட்டத்திற்கு மட்டுமல்ல, சுகாதாரத்துறைக்கு செலவழித்து இருக்கிறோம், கூடுதலாக. வேளாண்மைத் துறைக்கு, கல்வித் துறைக்கு செலவழித்திருக்கிறோம். அதிலே முக்கியமானது சத்துணவுத் திட்டம் என்று வருவதன் காரணமாக, அதை பார்ட் 2—லே கொண்டு வரவில்லை. அப்படி இருந்தால் டோக்கன் புரொவிஷன் ஒதுக்கி இருப்போம். டோக்கன் புரொவிஷனிலே இல்லை. நிதிநிலை அறிக்கையிலே பட்ஜெட் ஸ்பீச்சிலே இந்த திட்டம் வந்தது. அதிலே வருகின்றபோது நான் சொன்னது 100 கோடி ஆகும் என்று சொன்னோமே தவிர, அதற்கு இந்த அவை புரொவிஷன் செய்யவில்லை. பிறகுதான் இந்தத் திட்டத்திற்கான செலவினம் என்னென்ன என்று வகுக்கப்பட்டது. செலவினம் வகுக்கப்பட்டதற்குப் பிறகு செலவு செய்யும்பொழுது, எதிலிருந்து எடுப்பது என்று கேட்டால் எதிர்பாராத செலவினத்திலிருந்து எடுக்கப்படும். அப்படி எடுப்பதற்கான உரிமையை இந்த அவை தந்திருக்கிறதே தவிர, அதைச் செலவழிப்பதற்கான உரிமையை நாளைக்கு நான் கொண்டு வருகின்ற நிதி நிலை அறிக்கையின் மூலமாகத்தான் உரிமையை நீங்கள் தரவேண்டும். அதை ஏற்றுக் கொள்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. அதைப்பற்றி முழு விவரங்களையும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதிலே குறிப்பிட்ட 50 கோடி, 100 கோடியாக்குவதுதான் இந்த மசோதாவினுடைய மிக முக்கிய நோக்கம். மற்றபடி சத்துணவு திட்டத்தைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்றும் அதுபற்றி எடுத்துச்சொன்னார்கள். இது பரவலாக எல்லோராலும் வரவேற்கின்ற அளவுக்கு, ஆதரவு தருகின்ற அளவுக்கு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இதிலே சில குறைபாடுகள் ஆங்காங்கே இருக்கக்கூடும், அந்தக் குறைபாடுகளை எப்படி களையவேண்டுமோ, அவைகளைக் களைவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இது கல்வித் துறை மூலமாக நிறைவேற்றப்படுகிறது; சமூகநலத்துறையின் மூலமாக இது நிறைவேற்றப்படுகிறது. பிறகு எந்த எந்த இனத்திற்கு எவ்வளவு செலவழிக்கப்பட்டது, என்ற விவரங்கள், முழு விவரங்



கள் துணை மதிப்பீடு நிதி நிலை அறிக்கை வருகிறபோது தெளிவாக வரும். அப்போது விரிவாக எடுத்துச்சொல்வதற்கு வாய்ப்பு இருப்பதன் காரணமாக அவற்றைப்பற்றி இப்போது நான் சொல்லவிரும்பவில்லை. அதற்கான பதில் சொல்லும்போது விரிவாக எடுத்துச்சொல்லலாம் என்று சொல்லி, இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி ''தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ''நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்'' ''தமிழ்நாடு 1982—ஆம் ஆண்டு எதிர்பாரா செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1982) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### 4. அறிவிப்பு

**அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறை) திருத்த சட்டமுன்வடிவு, 1982.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறை) மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு முறை) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்.

[1982 செப்டம்பர் 7

## 4. அறிவிப்பு—தொடர்ச்சி

### (இ) அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறை) திருத்தச் சட்டமுன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு முறை) திருத்தச் சட்ட முன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

சில தனியார் பள்ளிகள் கல்லூரிகள் ஆகியவற்றின் நிர்வாகத்தினர் அக்கல்வி நிலையங்களின் நடவடிக்கைகளை சரிவர நிர்வகிக்கவில்லை என்றும் அதனால் அந்நிலையங்களில் கல்வி போதிக்கப்படுவது மிகவும் பாதிக்கப்படுகிறது என்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இக்கல்வி நிலையங்களுக்கு பொருந்துகின்ற விதிகள், சட்டங்கள் ஆகியவற்றுக்கு முரணாக இறுதியில் இக்கல்வி நிலையங்களை மூடிவிடக்கூடிய நோக்குடன் இக்கல்வி நிலையங்களில் சில நிர்வாகத்தினர் வகுப்புகளை மூடிவிட்டு, பாட முறைகளை நீக்கி விட்டனர் என்று அரசுக்குத் தகவல் வந்தன. மேற்கூறிய சட்டத்திற்கு முரணாக இக்கல்வி நிலையங்களில் வகுப்புகளை மூடிவிடுவதோடு பாட முறைகளை நீக்கிவிடுவது அல்லது பணிபுரியும் ஆசிரியர்களையும் பயிலும் மாணவர்களையும் மிகுந்த இடர்பாட்டுக்கு விளைவிக்கிற இப்படிப்பட்ட நிலையங்களில் நிர்வாகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு 1973—ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள், (ஒழுங்குமுறை) சட்டம், 1976-ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் ஆகியவற்றின் விதித்துறைகள் போதுமானவையாக இல்லை. எனவே கல்வியின் நலனை முன்னிட்டும், கல்விக் கால அளவுகள் சரியாக பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், சரிவர நிர்வாகத்தை, முறகேடுகள் இல்லாத வகையில் நடத்தப்பட வேண்டும் என்பதற்காகவும் மேலே சொன்ன சட்டத்திற்கும் அவற்றின் கீழ் உள்ள விதிகளுக்கும் முரணாக நடக்கின்ற நிர்வாகத்தினருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதற்காக வகை செய்யும் விதத்தல் மேற்சொன்ன 1973—ஆம் ஆண்டு கல்வி கள் மற்றும் 1978-ஆம் ஆண்டு கல்லூரிகள் சட்டத்தை உரிய முறையில் திருத்தி இச்சட்ட முன்வடிவு இயற்றப்படுகிறது. ஆகவே இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

---

@1982, செப்டம்பர் 6-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1982 செப்டம்பர் 7]

(முற்பகல் 11-50)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டம் ஏற்கனவே பள்ளிகளை ஒழுங்குபடுத்துவதற்காக போதுமான சட்டங்கள் இருந்தபோதிலும், குறிப்பாக மைனாரிட்டிகள்-முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் என்று இருக்கக்கூடிய மைனாரிட்டிகள்-நிர்வகிக்கக்கூடிய பள்ளிகளை, கல்லூரிகளை அரசாங்கம் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தினால்—அந்த உள்நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்பதை எடுத்துச்சொல்லி, இந்தச் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்ற சமயத்தில் சில கல்லூரிகளுடைய நிர்வாகம், பள்ளிகளுடைய நிர்வாகம் சரிவர நடப்பது இல்லை என்றும், அதனால் மாணவர்களுக்கு துன்பம் நேரிடுகின்றது என்றும் அதற்காகவே இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டம் எதற்காக இந்தத் தருணத்தில் கொண்டு வரப்படுகிறது என்பதை மன்ற உறுப்பினர்கள் தயவு செய்து ஆராய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நேற்றைக்கு முன் தினமே இப்படிப்பட்ட ஒரு சட்டம் வர இருக்கின்றது-வரும் என்று சில பத்திரிகைகளில் கூட செய்தி வந்து இருக்கிறது. எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி நிர்வாகத்தை அரசாங்கம் மேற்கொள்ள இருக்கிறது என்கிற தலைப்பிட்டு பத்திரிகையில் செய்தி போட்டு, அதற்காக இப்படி ஒரு சட்டம் வர இருக்கிறது என்று சொல்கிறார்கள். அரசாங்கம் உள்நோக்கத்தோடு இதைக்கொண்டு வருகிறது என்று நான் சொல்வதற்குக் காரணம், இதேபோன்ற நிலைமைகள் வேறு எங்கும் நடைபெறவில்லையா? அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சென்ற ஆண்டு இதேபோன்ற நிலைமைகள் ஏற்பட்டு, அங்கே ஆசிரியர்கள் போராடினார்கள், மாணவர்கள் போராடினார்கள், நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள், பல்வேறு மாணவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள்: அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்த சமயத்தில் அரசாங்கம் இத்தகைய நடவடிக்கையை எடுக்காமல், இப்போது இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியம் என்ன என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

சென்னையிலே இருக்கக்கூடிய எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி மூடப்பட்டதன் காரணமாக இந்த ஆண்டு ஆரம்பத்திலேயே வகுப்புகளில் சேர்வதற்கு மாணவிகளால் இயலாமல் போய்விட்டது. அதனால் மாணவிகளுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு இருக்கிறது இதை ஓரளவிற்கு ஒப்புக்கொள்ள வேண்டும் என்று சொன்னாலும், ஏற்றுக்கொள்ளவேண்டியதொன்று, எண்ணினாலும், இப்போது கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு மூடிய சமயத்தில் ஏன் கொண்டுவரவில்லை? பட்டப் படிப்புகளை அவர்கள் மூடியதன் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள் மிகவும் பாதிக்கப்படவில்லையா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பு வகுப்புகள் இருக்கத் தேவையில்லை என்பது இந்த அரசாங்கத்தின் கொள்கை முடிவாகும். அந்த அடிப்படையில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பு வகுப்புகளை மூடியதை அரசு அங்கீகரிக்கிறது. பட்டப்படிப்பு வகுப்புகளை அங்கே பல்கலைக் கழகம் வைத்துக்கொண்டு இருப்பதால், அதிகமான மாணவர்கள் வைத்துக்கொண்டு பாடங்களை நடத்தவேண்டி இருக்கிறது. அதனால் அங்கே பல தகராறுகள் ஏற்பட்டு இருக்கின்றன. அதனால் பல்கலைக் கழகம் சரிவர இயங்க முடியவில்லை. அந்த அளவிற்கு நிலைமைகள் வளர்ந்து விட்ட காரணத்தால்தான், எங்களுடைய ஆதரவின் பேரில், நாங்களும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு இருப்பதால், அந்த பட்டப்படிப்பு வகுப்புகள் மூடப்பட்டன. ஆகவே, நாங்கள் விரும்பாமல் அதை அவர்கள் செய்யவில்லை. நாங்கள் அதை ஏற்றுக்கொண்ட காரணத்தினால் தான் இப்போது அரசாங்கத்தின் சார்பில் அங்கே ஒரு கல்லூரி ஆரம்பிக்க முன்வந்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பட்டப்படிப்பை மூடியது தவறு என்று உயர்நீதி மன்றம் இப்போது முடிவு செய்திருக்கிறது. அப்படி மூடியது செல்லாது என்றும் முரணானது என்றும் கூட உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்த நிலையிலே இன்றையதினம் அமைச்சரவர்கள் பட்டப்படிப்பு வேண்டாம் என்று சொல்லக் கூடியவர்கள்........

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, உயர்நீதி மன்றம் பட்டப் படிப்பை மூடுவதற்கு முடிவு எடுக்க முடிவு எடுத்தது ஒரு அகடமிக் கவுன்சில் என்று வைத்துக் கொள்ளுங்கள்–அவர்களுக்கு உரிமை இல்லை என்ற முறையிலே தீர்ப்பு வழங்கியிருக்கிறதே தவிர வகுப்புகளை மூடுவதற்கு உரிமை இல்லை என்று தீர்ப்புத் தரவில்லை. நாம் மாற்று ஏற்பாடுகளைச் செய்கிறோம். அதன் பிறகு உயர்நீதி மன்றத்தில் தக்க பரிகாரத்தை அரசு பெறும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** நான் உயர்நீதிமன்ற ஜட்ஜ்மெண்டைப் படித்துத் தெரிந்தது கொண்டவரையில், உயர்நீதி மன்றத்தில் ''மாணவர்களுக்கு இன்னல்கள் உண்டாக்குகின்ற காரணத்தால் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பட்டப்படிப்பை மூடியது சரியல்ல'' என்று தீர்ப்பு அளித்திருப்பதாகத்தான் நான் கருதுகிறேன். அப்போது நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே பல விளக்கங்களைச் சொல்லி இருக்கிறார்கள்.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்;** தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பற்றிச் சொன்னது நினைவு இருக்கிறது. அதுபற்றி பல்வேறு மட்டங்களில் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திருத்த ஒரு மசோதா வரும். அப்போது நிச்சயமாக திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களையும் சந்திப்போம். அதில் சந்தேகம் வேண்டாம். இப்போது ஏற்பட்டிருக்கிற சில பிரச்சனைகள், சூழ்நிலைகள் காரணமாக இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சட்டத் திருத்தம் கொண்டுவரப் போகிறோம் என்று சென்ற ஆண்டே சொன்னார்கள். இப்போதும் சொல்கிறார்கள். ஆனால் சில சூழ்நிலைகளின் காரணமாக-எந்தச் சூழ்நிலையில் எப்படி தவிர்க்கப்பட்டது என்று கல்வி அமைச்சருக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அதை நாம் பார்த்தப் பிறகு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருந்தால் அது வேறு விஷயம். இன்றைய தினம் உள்நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது. அதற்குக் காரணம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமை இருக்கிறது. அதில் ஆர்ட்டிக்கிள் 26

Subject to public order morality and health, every religious denomination or any section thereof shall have the right to established and maintain institutions for religious and charitable purposes.

என்று கொடுத்திருக்கிறார்கள். அப்படி அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற அடிப்படை உரிமைக்குப் புறம்பாக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தக் கல்வி நிறுவனத்தில் 'மால் அட்மினிஸ்டிரேஷன்' இருக்கிறது, மூடுகிறார்கள், ஆகையால் எடுத்து விடுகிறோம என்று ஒரு காரணத்தைச் சொல்லி, அரசாங்கம் உள்ளே போவதற்கு இது காரணமாக அமையும் என்று நாங்கள் கருதுகிறோம், இப்படிப் பட்ட ஒரு எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கக்கூடாது. இந்த அரசாங்கத்திற்கு மட்டுமல்ல; எந்த அரசாங்கத்திற்கும் இருக்கக் கூடாது. இன்றைக்கு இந்த அரசு இருக்கும்; நாளை வேறு ஒரு அரசு வரும். எந்த அரசாங்கம் வந்தாலும் இப்படி மைனாரிட்டி உரிமையை நசுக்குவதற்கு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த முடியாது என்று எப்படி நீங்கள் சொல்ல முடியும்?

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

இதைப்போன்று ஒரு சட்டம் கேரளத்தில் பலமுறை விவாதிக்கப்பட்டது. ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவ இன்ஸ்டிடியூஷன்களை, அரசியல் தலையீடு காரணமாக, எடுத்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் மத்திய அரசு அதற்கு ஒப்புதல் அளிக்காததால் அல்லது மேலே இருக்கிறவர்கள் அனு

மதிக்காததால் இந்தச் சட்டம் அங்கே அமுல்படுத்தப்படாமல் இருக்கிறது. அதைப்போன்றுதான் இங்கே கொண்டுவரப்பட்டு இருக்கிற இந்த சட்டமும் இருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை.

இந்த எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. அதனால் 1,500 மாணவிகளுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற காரணத்தைத் தவிர வேறு என்ன காரணம் இருக்கிறது? எஸ் ஐ.ஈ.டி. கல்லூரியைப் பற்றி என்ன கருத்தைத் சொல்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் அந்தக் கல்லூரிக்கு 1982—ல் போயிருக்கிறார்கள். அந்த நிர்வாகத்தைப்பற்றி அவர்கள் கருத்து சொல்லியிருக்கிறார்கள். எப்போது? இந்த ஆண்டிலே, 6—3-1982 அன்று மாண்புமிகு அமைச்சர் ஹண்டே அவர்கள் தலைமையில் கல்லூரி விழாவை சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. எவ்வளவு தகராறுகள் இருந்தாலும் அந்த மாணவிகளும், ஆசிரியைகளும் அந்த விழாவை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அங்கே என்ன நடந்திருக்கிறது? அந்த நிர்வாகத்திலே ஒரு பகுதியினர் சில தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக அந்த நிர்வாகத்திற்கும் அங்குள்ள ஆசிரியர்களுக்கும் தகராறு ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அந்த ஆசிரியர்களில் சிலர் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள் சிலர் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அது துரதிர்ஷ்டவசமானது. அதை நாங்கள் ஆதரிக்கவில்லை. ஆனால் அரசாங்கம் என்ன செய்திருக்க வேண்டும்? அந்த நிர்வாகத்தை அழைத்துப் பேசி, முதலமைச்சர் அல்லது கல்வி அமைச்சர் மட்டத்தில் பேசி, தீர்வு காண்பதற்கு முயற்சி செய்திருந்தால் அது பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

அந்த எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி 1955-லே ஆரம்பிக்கப்பட்டது. 1978/79-ஆம் ஆண்டுவரையில் அந்த கல்லூரி நிர்வாகம் மிகச் சிறப்பாக நடைப்பெற்றதாகத்தான் ரிக்கார்டு இருக்கிறது.

(நண்பகல் 12—00)

பண்டித ஜவஹர்லால் நேரு போன்றவர்கள், ஜாகீர் உசேன் போன்றவர்கள், மற்றும் இந்தியாவிலே இருக்கக்கூடிய பிரபல தலைவர்களும், வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய பெரிய தலைவர்கள் எல்லாம் கூட அந்த இன்ஸ்டிடியூஷனுக்கு வருகை தந்து அதனை பாராட்டி பேசியிருக்கிறார்கள் என்பதை நம்மால் மறைக்க முடியாது. ஆனால் இன்றயதினம் இந்த அரசாங்கம் இதுபோன்ற ஒரு மசோதாவைக் கொண்டு வருகிறது என்றால்..

This is nothing but a democles Sword which they will utilise against anybody.

ஆகவே இன்றையதினம் இதைச் செய்தார்கள். நாளையதினம் கிறிஸ்துவ பள்ளிக்கூடங்கள் சரியாக நடைபெறவில்லை என்று சொல்வார்கள். செயின்ட் ஜோசப் நிறுவனம், அதைப்போல





கிறிஸ்துவ கல்லூரி சரியாக நடைபெறவில்லை, லயோலா கல்லூரி சரியாக நடக்கவில்லை, நாங்கள் சொல்லுகின்ற உத்தரவை மறுக்கிறார்கள் என்று சொல்லி, அவைகளுக்கும் இதைச் செய்ய மாட்டார்கள் என்று யார் சொல்ல முடியும்? இப்படி எல்லாம் உள்ளே புகுந்து பார்த்து 'மால் அட்மினிஸ்டிரேஷன்' என்று யார் சொல்வது?

அங்கேயிருக்கக்கூடிய 10 மாணவர்கள் சேர்ந்து சொல்லி கையெழுத்துப் போட்டுவிட்டால், அதைப் பத்திரிகையிலேயும் போட்டுவிட்டால், அல்லது அங்கேயிருக்கக்கூடிய 10 ஆசிரியர்கள் பிளாக் லிஸ்ட் என்று சொல்லி, அங்கே வேலை செய்யக்கூடியவர்கள் சொல்லிவிட்டால் உடனே அதை மால் அட்மினிஸ்டிரேஷன் என்று எடுத்துக் கொள்ள முடியாதா? அதை வைத்துக்கொண்டு கிறித்துவர்கள் நடத்தக்கூடிய பள்ளிகள், கல்லூரிகள் அதைப் போல இஸ்லாமிய சகோதரர்கள் நடத்தக்கூடிய..

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்பொழுது எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியிலே 100-க் கணக்கான ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். ஆயிரக்கணக்கான மாணவர்களுடைய படிப்பு நின்றுவிட்டது. அதை எதிர்த்து அந்த ஆசிரியர்கள் சங்கம் போராடிக் கொண்டு வருகிறது. இப்படிப்பட்ட மைனாரிட்டி தன்மையுள்ள கல்லூரிகளிலே உள்ள பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள், அல்லது அந்த ஊழியர்கள் நிலைமை பாதிக்கப்படுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்ன என்பதை நான் அறிந்துக் கொள்ளலாமா?

டாக்டர் மு. கருணாநிதி :: தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் நலம், மாணவர்கள் நலம் அல்லது அலுவலர்களின் நலம் பாதிக்கப்படுவார்களேயானால், அவர்களுக்காக குரல் கொடுக்க திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது. இப்போது ஆசிரியர்கள் இந்தச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அது குறித்துக் கூட ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்ற அதங்கத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நண்பர் ரகுமான்கான் அவர்கள் காலையிலே எழுப்பியிருக்கிறார்கள். அது வேறு பிரச்னை.

ஆசிரியர்கள் மாணவர்கள் அல்லது நிர்வாகத்தினர்களுக்கிடையே எழுந்துள்ள ஒரு சிறிய குமுறலை அல்லது சச்சரவை, ஏற்பட்டுள்ள சிக்கலை தீர்ப்பதில் அரசு தவறிப்போய், அதற்குப் பதிலாக சிறுபான்மையினர் நடத்துகின்ற, அல்லது சிறுபான்மையினரால் நடக்கின்ற இப்படிப்பட்ட நிறுவனங்களை அரசு தன்னகப்படுத்திக் கொள்கின்ற முயற்சியிலே ஈடுபடுவதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிக்கிறதே தவிர வேறு அல்ல.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்—தலைமை)

திரு. என். சங்கரய்யா: நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்ளவிரும்புவது, சிறுபான்மை தன்மைப் படைத்த, பள்ளிகள் அல்லது கல்லூரிகள் என்ற பெயரால், அதிலே பணிபுரியக்கூடிய ஊழியர்களை எதிர்த்து அவர்கள் என்ன விதமான அட்டூழியங்கள் புரிந்தாலும் அதை சிறுபான்மைத் தன்மை என்ற பெயரால் நாடு ஏற்றுக் கொள்ள வேண்டுமா? அதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையா என்று அறிய விரும்புகிறேன்? கடந்த காலத்திலே அப்படிப்பட்ட நிலையை திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்ததா?

டாக்டர் மு. கருணாநிதி:: நல்ல தொழிற் சங்கத் தலைவரான என்னுடைய அருமை நண்பர் சங்கரய்யா அவர்களுக்கு, அவருக்கே உரிய உதாரணத்தின் மூலமாக நான் விளக்கமாக சொல்லவிரும்புகிறேன். ஏதாவது தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கும், அல்லது தொழிற்சங்க ஊழியர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே தகராறுகள் ஏற்படுகிறபோது, அந்தத் தகராறுகளை தீர்த்து வைக்க அரசாங்கம் முற்படுகிறதே யல்லாமல், உடனடியாக அந்த தொழிற்சாலைகளை அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்தின் கீழ் எடுத்துக் கொண்டது என்கிற வரலாறே இல்லை. எனவே இப்போது இருக்கும் அந்தத் தகராறுகளைத் தீர்த்து வைக்க அரசு முன்வரவில்லை என்பது தான் நாங்கள் சாட்டுகின்ற குற்றச்சாட்டு.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற தகராறுகளை தீர்த்து வைப்பதற்கும் அந்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் போதுமான அதிகாரங்கள் தற்போது இல்லை என்பதினால்தான் இந்த மசோதாவை நாம் கொண்டு வந்திருக்கிறோம். அதுவும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கும்போது கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய சட்டத்தில் சில பிரிவுகள் உயர்நீதி மன்றத்திலே ரத்து செய்யப்பட்டுவிட்டதால், இப்போது வந்திருக்கக்கூடிய சில தீர்ப்புகளின் அடிப்படையில் இதைக் கொண்டு வருகிறோம். 1973-லேயும் 197?-லேயும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆசிரியர்களுடைய நலனை அடிப்படையாக வைத்து எடுத்த முடிவுகளுக்கும், இன்றைக்கு இருக்கும் நிலைமைகளுக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது. அது நமது துரதிருஷ்ட வசமான நிலைமையாகும்.

டாக்டர் மு. கருணாநிதி:: நேற்று முதற்கொண்டே இந்த துரதிருஷ்டவசம் இங்கே படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு மிகுந்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், ஆசிரியர்களின் நன்மைக்காக இயற்றப்பட்டிருக்கிற நம்முடைய சட்டங்களின் விதிமுறைகளையும், அதன் கோட்பாடுகளையும், [illegible]வைகளிலிருந்து





கிஞ்சித்தும் நழுவிட அல்லது பிறழ்ந்திட இப்போது எதிர்கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் விரும்பவில்லை. ஏதே அவர்களை அழைத்துப் பேசுவதற்குக் கூட அதிகாரம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. ஒரு பொறுப்போடு, அரசிலே உள்ளவர்கள், முதல் அமைச்சர் அவர்களோ, அல்லது கல்வி யமைச்சர் அவர்களோ அந்த நிறுவனத்தினரை அழைத்து கொஞ்சம் கண்டிப்பாக அவர்களிடத்திலே இது குறித்துப் பேசி யிருந்தால், ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாகியிருக்கலாம். அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் அரசே அதனை ஏற்றுக் கொள்ளப்போகிறோம் என்று அப்போது மிரட்டப்பட்டு, இடையில் என்ன நடந்ததோ எனக்கு தெரியாது, அது அப்படியே கைவிடப்பட்டது. இப்போது அவசரம் அவசர மாக ஒரு சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்திருக்கிற முஸ்லீம் களுடைய நிறுவனத்தை எடுத்துக் கொள்வதிலே ஏன் இவ்வளவு அவசரம் காட்டுகிறார்கள் என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சிறுபான்மையோர் நலனுக்குக் காட்டவேண்டிய ஆதரவை இந்த அரசு காட்டுவதிலே எந்தவிதமான குறைபாட்டையும் வைக்கவில்லை. ஆனால் சிறுபான்மையோர் நலன் என்ற பெயரைச் சொல்லி ஒரு தனி நபர் சமுதாய விரோதியாக மாறுவதற்கு நாங்கள் ஆதரவு தர மாட்டோம். அதைக் கண்டிப்பதற்கு நடவடிக்கை எடுத்தே தீருவோம். அதற்கு ஆதரவாக எப்படிப்பட்டவர்கள் வந்தாலும் அதற்காக அஞ்சப்போவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மாணவர்களின் பட்டப்படிப்பு ஓராண்டுக்காலம் இல்லாமல் போய்விட்டதே, இப்போது இவ்வளவு ஆர்வம் காட்டுகின்ற இந்த அரசாங்கம் அப்போது ஏன் கவலைப்பட வில்லை அவர்கள் அக்காடமிக் கவுன்சிலே முடிவு எடுத் தார்களா? சிண்டிகேட்டிலே முடிவு எடுத்தார்களா? ஒரு நிர்வாகம் சட்டத்திற்குப் புறம்பாக அந்தப் பகுதியிலே எந்தவிதமான முன் அறிவிப்பும் செய்யாமல் பட்டப் படிப்பினை நிறுத்திவிட்டார்கள். அதனால் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பல்லாயிரக் கணக்கான மாணவர்களால் படிக்க முடியாமலே போய்விட்டது. அப்படி படிக்காமலே மாணவர்கள் ஓராண்டு காலத்தை கழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. அப்போது இந்த அரசாங்கம் அந்த யுனிவர்சிட்டி செய்தது தவறு என்று சொல்லி இருக்கலாம் அல்லவா? அதற்கு ஒரு ஆல்டர்நேடிவ் அரேஞ் மென்ட் என்ற வகையிலே அந்த ஓராண்டுக் கல்லூரிப் பட்டப் படிப்பினைத் தொடர்ந்து நடத்துங்கள் என்று முதலமைச்சர்

அவர்களோ, அல்லது கல்வி அமைச்சர் அவர்களோ சென்ற ஆண்டு சொல்லவில்லை. அப்படி பட்டப் படிப்பினைத் தொடர்ந்து நடத்தி இருந்தால் என்ன குடி முழுகியா போய் இருக்கும்? அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சட்டம் குறுக்கே நிற்கின்றது என்ற காரணத்திற்காக இன்றைய தினம் கல்வி அமைச்சர் அவர்கள் அந்த ஆக்டிற்கு ஒரு அமெண்ட்மென்ட் வைத்திருக்கிறார்கள். 10 மைலுக்கு உள்ளே கல்லூரி வைக்கக்கூடாது என்ற நிலைமையைத் தளர்த்தி 10 மைலுக்கு உள்ளே கல்லூரி வைக்கலாம் என்று சட்டத்தைத் திருத்தி அங்கே கல்லூரி ஆரம்பிக்க இருக்கின்றது இப்போது. ஆனால் அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் கல்லூரியினை மூடிவிட்டதன் காரணத்தால் ஓராண்டுக் காலம் மாணவர்கள் பாதிக்கப்பட்டார்கள். ஆனால் இந்த ஆண்டு சட்டம் குறுக்கே நிற்கின்றது என்று சொல்லி சட்டத்தினைத் திருத்தி கல்லூரி ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். அப்படியானால் மேனேஜ்மென்ட் எடுத்த முடிவிற்கு அரசாங்கம் வளைந்து கொடுத்திருக்கின்றது. அப்படி ஏன் அரசாங்கம் வளைந்து கொடுக்கவேண்டும்? ஆசிரியர்கள் போராட்டத்தின் போது கல்வி அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் என்னென்ன உறுதிமொழிகளை அந்த ஆசிரியர்களிடத்திலே கொடுத்தார்கள்? அந்த உறுதிமொழிகள் எல்லாம் என்ன ஆனது? அதெல்லாம் யாருக்கு வெளிச்சம்? ராமசாமிக்குத்தான் வெளிச்சம். விதிகள் எப்படி மீறப்பட்டது' எப்படி சரி செய்யப்பட்டது என்பதெல்லாம் அந்த நிர்வாகத்தின் மிக முக்கியமான பொறுப்பிலே இருப்பவர்களுக்குத்தான் தெரியும்.

தமிழ்நாட்டிலே தென்னாற்காடு மாவட்டத்திலே அந்தக் கல்லூரியிலே அந்தப் பல்கலைக் கழகத்திலே படிக்கக்கூடிய அத்தனை மாணவர்களுக்கும், பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களுக்கும் என்ன காரணத்தால் அண்ணாமலை பல்கலைக் கழக விஷயத்தில் அரசாங்கம் பின் வாங்கியது என்பது தெரியும்? அந்தப் பகுதியிலே உள்ள எல்லோருக்கும் தெரியும். ஆனால் இப்போது அங்கே கல்லூரி ஆரம்பிக்கவேண்டும் என்றிருப்பதை வரவேற்கிறேன். ஆனால் அப்போது ஓராண்டுக் காலம் தொடர்ந்து அந்தக் கல்லூரியினை நடத்துங்கள், மாணவர்களின கல்வி பாதிக்கப்படும் என்று சொல்வதற்கு இந்த அரசாங்கத்திற்கு ஏன் தைரியம் வரவில்லை. ஓராண்டுக்காலம் அந்தப் பகுதியிலே உள்ள மாணவர்கள் பட்டப்படிப்பு அறிவு இல்லாமல் பாழாகி விட்டார்களே, அதற்கு என்ன சமாதானம் சொல்லப் போகிறீர்கள்?

மிஸ் யூஸ் பண்ணப்பட்டது என்றால் மிஸ் யூஸ் என்று யார் முடிவு செய்தார்கள்? அரசாங்கத்தினிடத்திலே வேண்டுகோள் கொடுத்திருக்கிறார்கள ? மால் அட்மினிஸ்ட்ரேஷன் நீடிக்கின்றது என்றும் எனவே அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் வைத்தார்களா? ஒரு ஃபேக்டரி இருக்கின்றது





என்றால் அங்கே இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்களில் சிலர் ஒருவகையான டிமாண்டுகளையும் வேறு சிலர் வேறு வகையான டிமாண்டுகளையும் வைப்பார்கள்: எனவே அதேபோன்று அங்கே ஆசிரியர்களுக்குள்ளே சில பிரச்சினைகள் இருக்கின்றன. எல்லா ஆசிரியர்களுமா அந்த நிர்வாகம் சரியில்லை என்று சொல்கிறார்கள்? ஆகவே, மேனேஜ்மென்ட் தவறு செய்கிறது என்றால் அந்த மேனேஜ்மென்டைத் திருத்துவதற்கு அரசாங்கத்திற்குப் பொறுப்பு இருக்கவேண்டும். முதலமைச்சர் கூப்பிட்டும் வரவில்லை, கல்வியமைச்சர் கூப்பிட்டும் வரவில்லை, வாருங்கள் பேசித் தீர்க்கலாம் என்று கூப்பிட்டும் வரவில்லை, ஆகவே இந்த வழியிலே செய்கிறோம் என்று சொன்னா அது வேறு விஷயம். ஆனால் அப்படி ஒன்றுமே செய்யாமல் இருந்துவிட்டு அந்தக் கல்லூரியில் இந்த ஆண்டு நடைபெற்ற விழாவிலே அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார்கள். 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலே இருந்து அங்கே இப்படிப்பட்ட நிலைமை நீடித்துக்கொண்டிருக்கின்றது. துரதிஷ்டவசமாக அங்கே சில ஆசிரியர்கள் வெளியிலே தள்ளப்பட்டார்கள். அப்படி துரதிஷ்டவசமாக தள்ளப்பட்டவர்களை மீண்டும் பணியிலே அமர்த்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது? அங்கே வேலை செய்யக்கூடிய குமாஸ்தா போன்றவர்கள் எல்லாம் வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்களை மீண்டும் வேலையில் வைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இரண்டாண்டுக் காலமாக நிர்வாகம் சரியாக நடத்தப்படாத இந்த கல்லூரியில் நடத்தப்படுகின்ற விழாவிலே ஏன் அமைச்சரவர்கள் சென்று கலந்து கொண்டார்கள்?

(பிற்பகல் 12-10)

This is a quick decision. இது எப்போது ஏற்பட்டது இந்த ஆண்டு கல்லூரியை நடத்த முன்வரவில்லை; அவர்கள் சொல்லுகிறார்கள், நாங்கள் அண்ணாமலை யூனிவர்சிடியிலே பட்டப் படிப்பு நடத்தத் தேவையில்லை என்று லாவகமாகச் சொல்லுகிறார்கள், அதைப்போல்தான் இவர்களும் சொல்லுகிறார்கள். . . .

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், அந்த விழாவிலே நான் கலந்து கொண்டதைப் பற்றிச் சொன்னார்கள். அன்றையதினம் அங்கிருந்த ஆசிரியர்கள் அத்தனை பேரும், என்னைப் பொறுத்தவரையில் பட்டதாரி தொகுதியாக இருக்கிறது, நான் எம்.எல்.சி.யாக இருக்கிறேன். அந்தத் தொகுதியின் பட்டதாரிகள் கூப்பிடுகிறார்கள். அப்படி கூப்பிடுகின்ற நேரத்தில், இன்னும் பல பட்டதாரி ஆசிரியர். ஆசிரியைகளும் நாங்கள் நிர்வாகத்தினரால் புறக்கணிக்கப் பட்டிருக்கிறோம்,

மானேஜ்மெண்ட் சரியாக இல்லை என்ற பிரச்னையை யெல்லாம் சொன்னார்கள். நீங்கள் வந்தால், நேரடியாக அந்தப் பிரச்னைகளைத் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று சொன்னார்கள்.

I had a wonderful opportunity to know both the sides of the case and then I found that the Lecturers are having a raw deal.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. அன்றையதினமே இதைப்பற்றிச் சொல்லியிருந்தால், நான் இதை மேற்கோள் காட்டவேண்டிய அவசியம் வந்திருக்காது. அன்றையதினமே பத்திரிகையிலே ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கலாம். அப்படி யில்லாததால்தான், இங்கே கேட்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது....

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: Whatever imformation we get we pass it on to the relevent Minister. நான் உடனடியாக அறிக்கை கொடுக்கும் பழக்கம் உடையவன் அல்ல. கிடைத்த தகவலை அந்த இலாகாவின் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். அப்படித் தான் நீங்களும் செய்வீர்கள் என்று கருதுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மூலம் மைனாரிட்டிகளின் உரிமைகள் வேண்டுமென்றே பறிப்பதற்காக, இன்னும் சொல்லப்போனால், அரசியல் லாபத்தோடு ஏன் அதைச் சொல்லக்கூடாது, ஒரு கிறிஸ்தவ இன்ஸ்டிடியூஷன் இருக்கிறது, அந்த கிறிஸ்தவ இன்ஸ்டிடியூஷனிலே இருக்கக்கூடிய மானேஜ்மென்டாரை அழைத்து, நீங்கள் உங்கள் வாக்குகளை எங்களுக்கு அளிக்க வில்லை என்றால், உங்கள் நிர்வாகத்தை எடுத்துக்கொள்வோம் மால்-அட்மினிஸ்ட்ரேஷன் என்று மேற்கோள் காட்டி, இரண்டு பேர்கள் கொடுத்த கம்பிளயின்ட் அடிப்படையில் அந்த நிர்வாகத்தை எடுத்துக்கொள்வதற்கு வேறு மாநிலங்களிலே முயற்சி செய்தார்கள், அதே முறையில் இங்கே துஷ்பிரயோகம் ஏன் செய்ய மாட்டார்கள்? 'வாட் இஸ் தி கியாரண்டி இயர்?' இந்த மசோதா மூலம், அரசாங்கம் வேண்டுமென்றே முஸ்லீம்கள் கிருத்துவர்கள் ஆகிய மைனாரிட்டிகளின் உரிமைகளை பறிப்பதற் காக, எதிர்க்கப்பட்ட கெடுபிடி, உள்நோக்கம், வேண்டுமென்றே திட்டமிட்டு ஒரு மோடிவோடு இதை இங்கே கொண்டு வந்து இருக்கிறீர்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாக எதிர்க்கிறது. பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிவாரணம் தேடி தந்திருக்கலாம், ஒன்றிரண்டு ஆண்டுகளில். அந்தபோது நிர்வாகத்தைத் திருத்தியிருக்கலாம். ஆனால் அதை விட்டுவிட்டு, இதிலே தவறுகள் நடந்திருக்கின்றது என்,



காரணத்தைக் காட்டி, அந்த அடிப்படையில், அந்த நிர்வாகத்தை எடுத்துக்கொள்வது என்பது, அவர்கள் உரிமையை, மைனாரிட்டி களின் உரிமையைப் பறிப்பதாகும் என்ற குற்றச்சாட்டைக் கூறி நான் அமர்கிறேன்.

THIRU K.S.G. HAJASHAREEF: Mr. Deputy Speaker Sir, would like to say my observation on the amendment to the Tamil Nadu Recognased Private Schools (Regulation) Act, 1973. Sir, I have gone through there amendments very carefully. In the statement of Objects and Reasons, the Government have stated that 'It has been brought to the notice of the Government that the managements of aome of the private schools and private colleges indulge in maladministration in the affairs of such educational institutions which adversely sffect the imparting of education in these institutions. Reports have also been received by Governmen that some of the managements have closed down the classes aud course of instructions with the ultimate aim of closing down the educational institutions in violation of the provisions of the Acts and rules'.

The minority institutions run by Muslims, Christians and othert minority communities are given safe-guards under the constitution. I am afraid whether this will result in lot of legal complications and that is the case, what is going to be the future of these institutions. I remember I spoke to the Hon' ble Minister for Education, about 3 to 4 weeks ago that according to me, only about a dozen members of the teaching staff and peons are the sole cause and bottom of this agitation. If they are asked to observe discipline, the whole thing will come to a reson ble solution. The Honb'le Minister told me that it was too late and therefore he cannot do anything in the matter.

We are business people. In business, if any of my subordinates is not behaving properly and his behaviour is rude towards me and is positively damaging my reputation and is not observing disciplins which he ought to observe, I certainly have reason to warn him, to demote him, and to stop his increment and finally we even dismiss. Accordingly, in my opinion, I think the management have taken this course. The mauagement who is running this institution since 20 years, had been doing admirably well. It was imparting education to thousands and thousans of girls and the whole thing was going on in a very smooth manner. Why with in these two years, these things have come to such a stage as this, I do not know. I feel if the Government wanted to resolve this affair, they should have called the management they should have called the people who are indulging in this indiscipline issue and warned them. They should have brought out a compromise I still feel it is not difficult.

Now, you want to take over this institution. Today it is a Muslim institution. Tomorrow it may be a Christian institution and day after tomorrow some other minority community institution. If this sort of thing goes on, where will it go? We have to find a solution for all things. If the Government is going to do these things in an arbitrary manner and do not bring about a smooth atmosphere, this sort of thing will be taken as 'Paazhi Vangum Padalam'.

பழிவாங்கும் படலம் என்றுதான் முஸ்லீம்கள் நினைப்பார்கள் இந்த மாதிரி பழிவாங்கக்கூடாது என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இது ரொம்ப சுலபமான காரியம். இரண்டு பேரையும் தனியாக கூப்பிட்டு சமரச முயற்சியில் ஈடுபட்டிருந்தால் இது இவ்வளவு தூரம் முற்றிப்போய் இருக்காது' இன்றும் முற்றிப்போகவில்லை. இதை நீங்கள் அவசரமாய் பாஸ் செய்யத்தான் போகிறீர்கள். இதை நீங்கள் சுலபமாக முடிப்பது நல்லது.

If they involve the Constitutional right, I do not know what is the position. The whole institution itself may come to a stand still ஆகவே நீங்கள் தயவுசெய்து இதை பெரிய அந்தஸ்த்து பிரச்சனையாகக் கருதாமல் எப்படி நடத்தினால் பிள்ளைகளுக்கு சுமுகமாக எஜுகேஷன் வரும் என்று யோசித்து, டீச்சிங் ஸ்டாப்புகளுக்கு கௌரவம் ஏற்படும் முறையிலும், அட்மினிஸ்டிரேட்டிவ்க்கு கௌரவம் இருக்கக்கூடிய முறையிலும் மற்றும் வேலை செய்பவர்கள் கௌரவம் பாதிக்கப்படாத முறையிலும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, தமிழக கல்வித் துறையிலே இதுவரை முட்டுக்கட்டையாக இருக்கக்கூடியவற்றை எல்லாம் அகற்றக்கூடிய வகையில் ஒரு சட்டத்தை கொண்டுவந்து இருப்பதற்கு இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுதலை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும் தமிழகம் பூராவும் கல்லூரி ஆசிரியர்களும், பல்கலைக் கழக ஆசிரியர்களும் எந்த கோரிக்கைகளை முன் வைத்து இன்றையதினம் ஒரு போராட்டத்தை தொடங்கி இருக்கிறார்களோ அந்த போராட்டத்தின் நோக்கத்தை முக்கியமாக இந்தச் சட்டத்தின் மூலம் நிறைவேற்றக்கூடிய ஒரு வாய்ப்பு இருப்பதாக கருதுகிறேன். இந்த சட்டத்திற்கு என்னுடைய கட்சியின் சார்பில் ஆதரவு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சட்டத்திலே வரவேற்கக்கூடிய அம்சம் ஒன்று இருக்கிறது என்று சொன்னால் மைனாரிட்டி மதங்களுக்குரிய கல்வி நிறுவனங்களையும் சேர்த்து இந்த சட்டம் பிறப்பிக்கப்பட்டது நியாயம் ஆகும். மைனாரிட்டி மதங்களுக்குரிய உரிமைகளில் தலையிடுகிற நோக்கம் யாருக்கும் இருப்பது நியாயம் இல்லை. ஆனால் இந்த உரிமையை பயன்படுத்தி ஆசிரியர்களின், மாணவர்களின்



உரிமைகளை பறிக்கிற முயற்சியில் யாரும் ஈடுபட்டால் சட்ட ரீதியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து கட்டுப் படுத்த வேண்டியது எந்த ஒரு அரசாங்கத்தின் கடமையாக இருக்கவேண்டும்.

(பிற்பகல் 12.20)

இந்தச் சட்டம் எதற்காகக் கொண்டுவரப்பட்டது என்பதைப் பற்றி விளக்கத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், "கல்வி நிலையங்களுக்குப் பொருந்தத்தக்க சட்டங்கள்; விதிகள் ஆகியவற்றிற்கு முரணாக இறுதியில் இக் கல்வி நிலையங்களை மூடிவிடும் நோக்குடன், இக்கல்வி நிலையங்களின் சில நிருவாகத் தினர் வகுப்புகளை மூடிவிட்டதோடு, பாடமுறைகளையும் நீக்கி விட்டனர் என்று அரசுக்குத் தகவல்கள் வந்துள்ளன. மேற்கூறியவாறு சட்டத்திற்கு முரணாக இக்கல்வி நிலையங்களில் வகுப்புகளை மூடிவிடுவதோடு, பாடமுறைகளை நீக்கிவிடுவது அங்கு பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் பயிலும் மாணவர்களுக்கும் மிகுந்த இடர்ப்பாட்டை விளைவிக்கிறது," என்று தெளிவாக இதிலே சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த நிலைமை தான் தமிழகத்திலே இன்றைக்கு பல இடங்களிலே பல்வேறு கல்லூரிகளிலே உள்ளது. நான் சில வற்றை மட்டும் உதாரணத்திற்காக எடுத்து வைக்க விரும்பு கிறேன். எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்தார்கள் அது மைனாரிட்டி இன்ஸ்டிட்யூஷனாக இருப்பதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால் மைனாரிட்டி இன்ஸ்டிட்யூஷன் என்ற பெயரால் அங்கே உள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் மற்றவர்களும் பழிவாங்கப்படுவார்களானால் அதை நியாயம் என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

இன்றைய தினம் அங்கே 12 ஆசிரியர்களுக்கு சஸ்பென்ஷன் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் இங்கே நிறைவேறுவதற்குள்ளாகவே அவர்கள் டிஸ்மிஸ் பண்ணப் படலாம், அந்த அபாயம் இருக்கிறது. அவர்கள் செய்த தவறு என்ன? சாதாரண காரணங்களுக்கு' பிரிம்ஸ் கிரவுன்ட்ஸ் என்ற முறையிலே குற்றச்சாட்டுச் சொல்லி அவர்களை நீக்கக் கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. அதன் மூலமாக ஒரு வகுப்புக்கு இந்த ஆண்டு அட்மிஷன் இல்லை என்ற நிலை உருவாக்கப் பட்டு அதன் காரணமாக அடுத்த ஆண்டு இதேபோன்று ஒரு வகுப்பை மூடி கடைசியிலே கல்லூரியையே மூடிவிடுவது என்ற திட்டத்துடன் இப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைக்கு உருவாக்கப்படுகிறது. இதன்மூலம் எந்த மைனாரிட்டிகளுக்காக அந்த நிலையம் உருவாக்கப்பட்டதோ அந்த மைனாரிட்டிகளை

சேர்ந்த மாணவர்களுக்கேகூட கல்வியை அவர்கள் பெறுகின்ற உரிமையை பறிக்கின்ற நிலைமை இருக்கிறது. அங்கே பணியாற்றுகின்ற அதே சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மைனாரிட்டிகளை அந்த நிர்வாகம் தான் இந்த நிலைமைக்கு ஆளாக்குகிறதே தவிர வேறு யாரும் இல்லை, நான் மதுரையிலே ஒரு பிரச்சினையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மதுரைக் கல்லூரி என்பது ஒரு அட்டானமஸ் காலேஜ். ஆனால் அட்டானமஸ் என்ற பெயரால் எதை வேண்டுமானாலும் அவர்கள் செய்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிர அதிகாரங்கள் வேண்டுமென்று நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். அந்த கல்லூரிகளுக்கு நாம் அந்த உரிமையை வழங்கினால் அதை ஆசிரியர்களுக்கு எதிராக அவர்கள் பயன்படுத்துகிறார்களே தவிர வேறு எதற்கும் பயன்படுத்துவதில்லை.

மதுரை கல்லூரியிலே 14 துணைப் பேராசிரியர்களும் 1 பேராசிரியரும் ஆங்கிலத் துறையிலே இருக்கிறார்கள். அப்படி இருக்கவேண்டுமென்பது பல்கலைக் கழக நிர்வாகக் குழுவின் நிலைமை, விதி. ஆனால் ஒரு ஆசிரியர் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டார் என்பதற்காக எக்சஸ் ஸ்டாஃப் என்ற பெயரால் அவர் மாற்றப்பட்டார், அதற்கு அந்த நிர்வாகம் ஏற்பாடு செய்தது. பல்கலைக் கழக நிர்வாகக் குழு 14 பேர்கள் இருக்க வேண்டுமென்று சொன்னதற்குப் பிறகும்கூட அந்த நிர்வாகம் ஒரு ஆசிரியரை அனுப்பிவிட்டது. அதே மதுரைக் கல்லூரியிலே கணித ஆசிரியர் பதவி ஒன்று கடந்த இரண்டாண்டுக் காலமாக நிரப்பப்படாமல் காலியாகவே இருக்கிறது. அந்த நிர்வாகம் அந்த இடத்தை நிரப்பாமல் பிடிவாதமாகவே வைத்து இருக்கிறது. அதன் விளைவாக அங்கே படிக்கிற மாணவர்கள் எவ்வளவு சங்கடங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. பல்கலைக் கழக நிர்வாகக்குழு சொல்லியதற்குப் பிறகு 90 நாட்களில் நடக்க வேண்டிய பாடத்தை 15 நாட்களிலேயே நடத்தி அவர்களை அனுப்பிவைத்திருக்கிறார்கள். இப்படிச் செய்வது எல்லாம் நம்முடைய பிள்ளைகளை எப்படிப் பாதிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடையப் பிள்ளைகளின் கல்விக்குப் பாதகம் ஏற்படுகிறது என்றால் அந்தக் கல்லூரிகளின் நிர்வாகங்களை அடக்கியொடுக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். எதிர்கால தலைமுறையை உருவாக்குகிற ஒரு பிரச்னையிலே தவறாக அணுகினால் அந்த சந்ததிகளின் எதிர்காலம் இருள் சூழ்ந்து போகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியிலே என்ன நடக்கிறது? இதுகுறித்து சில வார்த்தைகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அவிநாசி லிங்கம் மனை இயல் கல்லூரியிலே





அங்கேயுள்ள ஆசிரியர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். அதுவும் ஒரு அட்டாமனஸ் காலெஜ். அட்டாமனஸ் காலேஜுக்கு என்னென்ன அதிகாரங்களை அளித்திருக்கிறோமோ அந்த அதிகாரங்களை அளித்ததே தவறு என்ற எண்ணம் என் போன்றவர்களுக்கு வருகிறது. அந்த கல்லூரியில் இருந்து எந்த காரணமும் இல்லாமல் அங்கேயுள்ள ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். அங்கே ஒரு பேராசிரியை ஆசிரியர் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார் என்பதற்காக அவரை பழி வாங்கினாலாவது அது வேறு விஷயம்--ஆனால் அதற்குப் பதிலாக அவர் எந்த தமிழ் துறையிலே தலைவராக இருக்கிறாரோ அந்த தமிழ் துறையிலே எம்.ஏ., வகுப்பையே தேவையில்லை; எம்.ஏ. வகுப்பை எடுத்துவிட்டால் அந்த தமிழ் துறையிலே அவருடைய தகுதி குறைந்து போகும்; ஆகவே அவரை அப்படி பழி வாங்கலாம் என்று சொல்லி இந்த ஆண்டு எம்.ஏ, வகுப்பை மூடிவிட்டார்கள். எம்.ஏ., வகுப்பு வேண்டும், நாங்கள் எம்.ஏ., தமிழ் படிக்க வேண்டுமென்று பல மாணவிகள் விண்ணப்பம் கொடுத்தபோதிலும்கூட எம்.ஏ., வகுப்பு எங்கள் கல்லூரிக்கு தேவையில்லை என்று முடிவு செய்து மூடியாகிவிட்டது. சென்ற ஆண்டு எம்.ஏ., வகுப்பு மாணவிகள் பரிட்சையே நடத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல மற்ற கல்லூரிகளிலே, மற்ற பல்கலைக் கழகங்களிலே எவ்வளவு நேரம் தமிழ் வகுப்புக்கு ஒதுக்கப்படுகிறதோ அதிலே 50 சதவீதம் போதும் என்று பேர் பாதியாக குறைத்து, அதன்மூலம் பாதிக்கப்படக்கூடிய ஆசிரியைகளை வெளியேற்றுகிற திட்டத்துடனும் இந்த நிர்வாகம் ஈடுபடுகிறது, எங்கும் தமிழ், எல்லாவற்றிலும் தமிழ்; பல்கலைக் கழக மட்டத்திலேயிருந்து பாலகர் பள்ளி வரையில் தமிழே பயிற்றுமொழியாக இருக்க வேண்டுமென்று கொள்கையை இந்த அரசாங்கம் சொல்கிறது. ஆனால் அந்த அரசாங்கத்தின் எல்லா உதவிகளையும் பெற்றுக் கொண்டிருக்கிற ஒரு கல்லூரியிலே 50 சதவீதம் தமிழ் இருந்தால் போதும்; மற்ற ஆசிரியைகளை நீங்கள் வெளியே போங்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள் என்பதையும் நாம் சகித்துக் கொண்டிருக்க வேண்டுமா என்று மாண்புமிகு உறுப்பினர்களை பார்த்து நான் கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியிலே போர்டு ஆப் தமிழ் ஸ்டடிஸ் இருக்கிறது. சுயஆதிக்கமுள்ள கல்லூரிகளில் போர்டு ஆப் ஸ்டடிஸ்தான் என்னென்ன பாடங்கள் இருக்கவேண்டுமென்று முடிவு செய்கிறது. போர்டு ஆப் தமிழ் ஸ்டடிஸ்கூட எம்.ஏ., வகுப்பு இருக்கவேண்டுமென்று முடிவு செய்கிறது. நிர்வாகம் அதை தூக்கி குப்பையிலே போடுகிறது. அவர்களை ஒதுக்குவதற்கான அதிகாரம் இருந்தாலொழிய இதுபோன்ற சுயநலமிகளின் வேட்டைகளை நம்மால் நிறுத்த முடியாது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. ப. நெடுமாறன்] [1982 செப்டம்பர் 7

இதுபோன்று பல்வேறு கல்லூரிகளைப் பற்றி இன்னும் நிறைய சொல்லலாம். ஆனாலும்கூட சில உதாரணங்களை மட்டும் இங்கே சொன்னேன். அந்த சூழ்நிலையிலேதான் இந்த சட்டம் இங்கே வந்திருக்கிறது. இந்த சட்டத்திலே இது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால், இந்திய அரசியல் சட்டத்தில் 30-வது ஆர்ட்டிக்கிள் 1-வது பிரிவின்படி மைனாரிட்டி சமூகத்தினருக்கு கொடுக்கப் பட்டிருக்கிற உரிமைகளுக்கு எதிரானது இந்த சட்டம் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அந்த வாதம் நியாயமா என்று அவர்களை பார்த்து நான் கேட்க விரும்புகிறேன். இது பற்றி சுப்ரீம்கோர்ட் ஒரு தெளிவான தீர்ப்பினை வழங்கி இருக்கிறது. ஆந்திரமாநிலத்திலே ஒரு வழக்கு சுப்ரீம் கோர்ட்டிற்கு போய் 1980-ல் சுப்ரீம்கோர்ட் தீர்ப்பின்படி All saints school judgement என்ற சுப்ரீம் கோர்ட் வழங்கியிருக்கிற தீர்ப்பிலே தெளிவாக சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிறது. The supreme court categorically held that teachers service conditions even in a minority colleg can be regulated by the state. இந்தியாவினுடைய உச்ச நீதி மன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியிருக்கிறது. மைனாரிட்டி என்றால் மதவழிபாடுகளில் வைத்துக் கொள்ளலாம். ஆசிரியர்களை ஒழுங்கு படுத்துகிற, ஆசிரியர்களின் வேலை முறையை ஒழுங்கு படுத்துகிறவைகளில் மைனாரிட்டி, மெஜாரிட்டி என்பது நிச்சயமாக இருக்க முடியாது.

[பிற்பகல் 12-30]

எந்த ஆசிரியராக இருந்தாலும், எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், மைனாரிட்டி மதமோ, மெஜாரிட்டி மதமோ, எந்தச் சேர்ந்தவராக இருந்தாலும், ஆசிரியர்கள், ஆசிரியர்கள்தான். ஆசிரியர்களை நீங்கள் ஆசிரியர்களாகப் பார்க்க வேண்டும். மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் என்பதற்காக ஆசிரியர்கள் தங்கள் கடமைகளைச் செய்யாமல் இருந்தாலோ, அல்லது ஆசிரியர்கள் பழி வாங்கப் பட்டாலோ, அதற்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பது எந்த வகையிலும் நியாயமாகாது. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பை நாம் மதிக்கப் போகிறோமா, இல்லையா என்பதுதான் நான் உங்கள் முன்னாலே வைக்கின்ற கேள்வி.

இந்தச் சட்ட முன்வடிவிலே சில விஷயங்களைச் சொன்னாலும் கூட, இதிலே சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதை நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரு கல்லூரி நிர்வாகம் தவறாகச் செயல்படுகிறது, முறையாகச் செயல்பட வில்லையென்ற குற்றச்சாட்டின் பேரில் நீங்கள் அந்த கல்லூரி நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று சட்டத்திலே இடம் இருந்தாலும்கூட அதற்கு 'ஹர்டில்ஸ்' நிறைய இருக்கிறது. நீங்கள் எடுத்த எடுப்பிலே செய்ய முடியாது.



1982 செப்டம்பர் 7] [திரு. ப. நெடுமாறன்]

Before suspending the college management, the Government wile have to do the following act :

(1) Receipt of a report from the Director of Collegiate Education.

(2) Issue a Show Cause notice to the College Management for—

(a) maladministration;

(b) lapses;

(c) irregularities;

(3) Opportunity for the management to make representation has to be given.

(4) Pass an order in writing after recording the reasons;

(5) Appoint a Special Officer.

(6) The Management can have a right to appeal to a Special Tribunal to a bench of two High Court Judges.

(a) Special Tribunal appeal should be filed within one month;

(b) It can be extended by another month.

(c) The Special Tribunal can grant stay and pass interim order

(d) The Special Tribunal can decide both questions of law and facts.

(e) Even after the order of the Special Tribunal an appeal can be filed to the Supreme Court/under Article 136 of the Constitution.

இவ்வளவு தடைகளையும் தாண்டி நீங்கள் ஒரு கல்லூரியை எடுப்பதற்குள்ளாக அந்தக் கல்லூரியினாலே பழி வாங்கப் பட்ட ஆசிரியர்கள் பட்டினியாலே இறந்து போவார்கள்.

எனக்குத் தெரிந்த உதாரணத்தை நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நான் ஏற்கனவே சுட்டிக் காட்டியிருக்கிறேன். மதுரையிலே செளராஷ்டிரா உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியருக்கு 20 ஆண்டுக் காலத்திற்கு மேலாகச் சிறப்புற பணியாற்றி, அரசாங்க விருதையும் பெற்ற ஒருவர், அங்கே இருக்கக்கூடிய உடற்பயிற்சி ஆசிரியர், ஆக இரண்டு பேர்கள் அந்தப் பள்ளியினுடைய நிர்வாகம் ஆர்.எஸ்.எஸ் ஸைச் சேர்ந்தது என்பதாலே, அந்தப் பள்ளிக்குள்ளே அவர்கள் ஆர்.எஸ்.எஸ். நடவடிக்கைகளை அனுமதிக்க மறுத்தார்கள் என்பதற்காக, அந்தத் தலைமை ஆசிரியரின் மேல் சில குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, வேண்டுமென்றே, அவரை டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். 5 ஆண்டுக்காலம் ஆகிறது. அவர்களும் ஒவ்வொரு நீதிமன்றமாக ஏறி, ஏறி இறங்கினார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் தலையிட்டு, முயற்சி செய்து பார்த்தார்கள். முடியவில்லை. அவருடைய

கதி என்ன? தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர் இன்று வீதியிலே பிச்சை எடுக்கக்கூடிய நிலைமையிலே இருக்கிறார். காரணம் சௌராஷ்டிரா இன்ஸ்டிடியூஷன் மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன், ஆகவே, அதிலே அரசாங்கம் தலையிட முடியாது என்று இருக்குமானால் இந்த அரசாங்கம் இருப்பதிலே அர்த்தமே இல்லை. அவ்வளவுதூரம் ஆசிரியர்கள் பழி வாங்கப் படுகிறார்கள். கல்விக் கூடங்களிலே நம்முடைய குழந்தைகளின் படிப்பு வீணாகிறது, அதை முக்கியமாக மனதிலே கொண்டு இந்தப் பிரச்னையை அணுக வேண்டுமே தவிர, அதை மத அடிப் படையிலோ அல்லது சமூக, ஜாதி அடிப்படையிலே, அந்தப் பிரச்னையை அணுகுவது எந்த வகையிலும் நியாயம் ஆகாது.

அந்த நிர்வாகத்தின்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் அவர்கள் டெல்லிக்குப் போகலாம். அதற்கு ஒரு ஸ்பெஷல் டிரிபியூனல் அமைக்கப்படலாம் என்ற சலுகைகள் எல்லாம் இந்தச் சட்டத்திலேயிருக்கிறது. ஆனால், பழி வாங்கப்படுகிற ஆசிரியர்களுக்கு நிவாரணம் அளிக்க இந்தச் சட்டத்திலே வழி வகை இல்லை. அதை அமைச்சர் அவர்கள் கட்டாயம் சேர்க்க வேண்டும். ஆசிரியர்கள் பழிவாங்கப்படுகிறபொழுது, அவர்களும் அப்பீல் செய்வதற்கு வழி இருக்க வேண்டும். மானேஜ்மெண்ட் மேல் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் அப்பீல் செய்ய அவர்களுக்கு ஸ்பெஷல் டிரிபியூனல் அமைக்க வழி வகை செய்கிற இந்தச் சட்டம் ஆசிரியர்களுக்கும் அந்த உரிமையை நிச்சயமாக வழங்கவேண்டும், வழங்குவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

1975 ஆம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்தைப் பற்றியும் இங்கே சில உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்தச் சட்டம் சம்பந்தமாகக் கூட அன்றைக்கு என்ன நடந்தது? 1975-லே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்தில் மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன்களைப் பாதிக்கிற பிரிவுகள் அத்தனையும் ஒட்டுமொத்தமாக நீக்கப்பட்டிருக்கின்றன, உறைதான் இருக்கின்றது, உள்ளே இருக்க வேண்டிய உடை வாள் இல்லை. உடை வாள் இல்லாமல் யாரும் போராட்டத் திற்குப் போகமுடியாது உறையை மட்டும் வைத்துக் கொண்டு. அதைப்போல மைனாரிட்டி கல்வி நிலையங்களைப் பாதிக்கக் கூடிய பிரிவுகள் என்று எது எது கருதப்பட்டதோ அவை களெல்லாம் அறவே நீக்கப்பட்டன. அது இல்லாமல்தான் அன்றைக்கு அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, அதன் விளைவாகப் பல மைனாரிட்டி கல்வி நிலையங்களிலே பல ஆசிரியர்கள் சொல்லொணாக் கொடுமைகளுக்கும், சொல் லொணாப் பழி வாங்குதலுக்கும் ஆளாகியிருக்கிறார்கள் இதற்கு இந்தப் பிரிவுகள் நீக்கப்பட்டதுதான் முக்கியமான காரணமாகும்,



எனவே, மூலச் சட்டத்திலே சில திருத்தங்களை அரசு கொண்டுவர வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். குறிப்பாக செக்ஷன் 24 (3)-ஐ நிச்சயமாக நீக்க வேண்டும், இதை நீங்கள் செய்யாவிட்டால், எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில், மதுரைக் கல்லூரியில், அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி ஆசிரியர்கள் பழி வாங்கப்படுவதை உங்களால் தடுத்து நிறுத்த முடியாது. இந்தச் சட்டம் நிறைவேறினாலும் உடனடியாக அதன் பலன் ஆசிரியர்களுக்குக் கிடைக்க வழியில்லை என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்தச் சட்டம் மத உரிமைகளை அல்லது சமுதாய உரிமைகளைப் பாதிக்கிற சட்டம் என்று பார்க்காமல், எதிர்கால சந்ததியினராக எதிர்காலத் தலைமுறையினராக நம்முடைய குழந்தைகளின் வாழ்வை வளமாக்க ஓரளவு வழிவகை செய்கின்ற ஒரு சட்டம் என்ற வகையிலே சகல மதத்தவர்களும் இதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டு எங்கள் கட்சியின் ஆதரவையும் கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசாங்கத்தினால் இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் சட்டம் 1973-ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டத்திற்கான திருத் தமும், 1977-ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் ஒழுங்கமைப்பு திருத்தமும் அடங்கிய ஒரு சட்டத்தை அரசு கொண்டு வந்திருக் கிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அபிப்பிராயத்தில் இந்தச் சட்டம் ஏற்கனவே கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு கொண்டு வரப்பட்டிருந்தால் இப்பொழுது தமிழ் நாட்டிலே சில மைனாரிட்டி நிறுவனங்கள் என்ற பெயரால் வைத்துக் கொண்டிருக்கும் கல்லூரிகளிலே ஆசிரியர்களுக்கு எதிராகவும், ஊழியர்களுக்கு எதிராகவும் எடுக்கப்பட்டிருக்கின்ற கடுமையான நிலைமைகளைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும் என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, இந்தச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. இந்தச் சட்டத்திலே மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிப்பதற்குக் காரணம் இங்கே எந்தக் கல்லூரியானாலும் அது தனியார் கல்லூரியானாலும், அரசுக் கல்லூரியானாலும், அந்தத் தனியார் கல்லூரிகளிலேயும் சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்லூரி யானாலும் மாநில அரசாங்கத்தின் நிதி உதவியையும்; பல்கலைக் கழக மானியக் கமிஷனுடைய பண உதவியையும் கொண்டு நடத்தப்படும நிறுவனங்கள் ஆகும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

எனவே, இவை தமிழக மக்களால், இந்திய மக்களால் கொடுக்கப்படக்கூடிய நிதியைக் கொண்டு நடத்தப்படும் பொது நிறுவனங்கள். இந்த மைனாரிட்டி நிறுவனங்கள் என்பது அதை நடத்தக் கூடியவர்கள் சொந்த நிதியிலே நடத்துவதைப் போலவும், அப்படி நடத்தும் நேரத்தில் எப்படி நடத்துவது என்பதற்கு அவர்களுக்குப் பரிபூரண உரிமை இருக்கவேண்டும் என்பது போலவும் இங்கே பேசப்படுவது குறித்து நான் ஆச்சரியப்படுகிறேன்.

(பிற்பகல் 12.40)

இந்த எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியை எடுத்துக் கொண்டாலும் அல்லது எந்த ஒரு மைனாரிட்டி நிறுவனத்தை எடுத்துக் கொண்டாலும் அதனுடைய ஆசிரியர்களுடைய சம்பளம் அதிலிருக்கக்கூடிய மற்ற கல்விக்கான மற்ற செலவு பூராவும், அரசாங்கத்தினாலும் அரசாங்கத்தினுடைய சார்பான நிறுவனங்களாலும் கொடுக்கப்படுகிற பணம். ஆனால் இவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் இந்த ஊழியர்களை எப்படி நடத்துவது என்பது பற்றி அரசாங்கத்தினுடைய எந்த முடிவுக்கும் நாங்கள் கட்டுப்படமாட்டோம், என்று சொல்லுகிறார்கள். அதனுடைய அர்த்தம் என்ன? அரசாங்கம் அரிசி கொண்டு வரவேண்டும், அவர்கள் உமி கொண்டு வருவார்கள். இவர்கள் இரண்டு பேரும் ஊதி ஊதி சாப்பிடலாம். ஆனால் பணம் கொடுக்க வேண்டியது அரசாங்கம். அந்த அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, தன்னுடைய சொந்த நலனுக்காகப் பயன்படுத்தும் உரிமை அவர்களுக்கு வேண்டும். இது எப்படி ஒரு ஜனநாயக உணர்வுள்ள யாரும் ஏற்றுக் கொள்ள முடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன். இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டத்தில் அதனுடைய காரண காரிய விளக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், 'சரிவர செய்யப்படாமல் இருந்தாலும், செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருந்தாலும், முறையற்ற காரியங்களைச் செய்தாலும்' என்று சொல்லப்பட்டு, இப்படிச் சில நிறுவனங்கள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதைத்தான் நான் ஆட்சேபிக்கிறேன். 'சில' அல்ல. 'பல'. பெரும்பாலான என்று அதை மாற்றிக் கொண்டால் அந்தக் காரண காரிய விளக்கங்கள் சரியாக இருக்கும். இந்தச் 'சில' என்பது அன்டர் எஸ்டிமேட் மிகக் குறைவாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொல்லிக் கொண்டு வந்தார்கள். மதுரையிலே இருக்கின்ற சௌராஷ்டிரா ஹைஸ்கூலிலே அந்த தலைமை ஆசிரியரை விலக்கியதைப் பற்றி சொன்னார்கள். நானும் மாண்புமிகு அமைச்சரிடத்திலே விசாரணை நடத்தவேண்டும் என்று கொடுத்திருக்கிறேன். அவர் இந்த ஆர்.எஸ்.எஸ், நடவடிக்கைகளைப் பற்றி ஏதோ



சொன்னார் என்ற காரணத்தினால் அவர் நீக்கப்பட்டார். இன்றைக்கும் அந்த பிசிக்கல் டைரக்டர் வேலை இல்லாமல் அலைந்து கொண்டிருக்கிறார். சில ஆண்டுகளுக்கு முன்னாலே அரசாங்கத்திலே கொடுத்து, அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்கு சென்று அதை எதிர்த்துப் போராட வேண்டும் என்று நான் கேட்கிறேன். அதேபோலத்தான், இந்தச் சட்டத்திலே 1976 ஆம் ஆண்டு தனியார் கல்லூரி ஒழுங்குமுறை சட்டத்திலே ஒரு பெரிய பிரிவு இருக்கிறது. அந்தப் பிரிவிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், 'தனியார் கல்லூரியில் உள்ள ஊழியர்களும், ஆசிரியர்களும் அந்தத் தனியாருடைய கல்லூரியினுடைய நிர்வாகத்தினரால் அவர்கள் பழி வாங்கப்பட்டால் அவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அரசாங்கத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். ஆனால் அதே தனியார் நிறுவனங்கள் இன்றைக்கு சிறுபான்மையாரால் நடத்தப்பட்டால் அந்த சிறுபான்மையாரால் நடத்தப்படுகிற நிறுவனங்களிலுள்ள ஆசிரியர்கள், பழிவாங்கப்பட்டால் அவர்கள் அரசாங்கத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ள உரிமை கிடையாது என்று அந்த மூலச் சட்டத்தில் 'சேப்டர் 4-அதிகாரம் 4-லே' செக்ஷன் 24 (3)லே, மற்ற வெளியார் கல்லூரியிலே உள்ள ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் மேல் முறையீடு செய்ய உரிமை இருக்கின்றது என்று போட்டு, ஆனால் இந்த உரிமை சிறுபான்மையினரால் நடத்தப்படுகின்ற நிறுவனங்களிலே உள்ள ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் பொருந்தாது, என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நான் கேட்கிறேன். சிறுபான்மையினர் நடத்துகின்ற தொழிற்சாலைகளிலே அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்சக் கூலியைக் காட்டிலும் குறைவாகக் கொடுப்பதற்கு விதி இருக்கிறதா? இல்லை அப்படி வந்தாலும் வரும். மற்றவர்கள் எல்லாம் காரிலே போனால் இடது பக்கம் போக வேண்டும். சிறுபான்மையினர் மட்டும் வலது பக்கத்திலே போகலாமா. தமிழகத்திலே இருக்கக்கூடிய தனியார் கல்லூரிகளிலே இருக்கக்கூடிய நிறுவனங்களிலே பணிபுரியக்கூடிய ஊழியர்கள், ஆசிரியர்கள் அந்த நிறுவனங்களிலே உள்ள நிர்வாகத்தினால் பழிவாங்கப்பட்டால் அரசுக்கு முறையீடு செய்யலாம் ஆனால் எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியிலே உள்ள ஊழியர்கள், ஆசிரியர்கள் முறையீடு செய்ய முடியாது. லயோலா கல்லூரியிலே இருக்கக்கூடியவர்கள் முறையீடு செய்ய முடியாது......

THE HON. THIRU S. ARANGANAYAKAM: Section 20, it has been stated:

Appeal against orders of punishment imposed on teachers and other persons employed in private colleges.— Any teacher or other person employed in any private college,—

(a) who is dismissed, removed or reduced in rank or whose appointment is otherwise terminated; or

(b) whose pay or allowances or any of whose conditions of service are altered or interpreted to his disadvantage, by any order, may prefer an appeal against such order to such authority or officer as may be prescribed, and different authorities or officers may be prescribed for different classes of private colleges.

Explanation:— In this section, the expression 'Order' includes any order made on or after the date of commencement of this Act in any disciplinary proceeding which was pending on that date.

இதிலே மைனாரிட்டி காலேஜை எக்ஸ்குளுட் பண்ணுமாறு எதுவும் வரவில்லை.

திரு. அ. ரகுமான்கான்; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் இங்கே பேசுகிற போது சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படுகின்ற நிறுவனங்களில் அங்கே பணிபுரியும் ஆசிரியர்கள் பழிவாங்கப்பட்டால் மேல் முறையீடு செய்வதற்கு அதிகாரம் கிடையாது என்ற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். ஆனால் அப்படி மேல் முறையீடு செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் பேசுகிறபோது அந்தப் பேச்சை விட்டுவிட்டு வேறு பிரச்னைக்குப் போவது போல் தெரிந்தது. எனவே, அதை விளக்கிவிட்டால் நன்றாக இருக்கும்,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: திரு. சங்கரய்யா அவர்கள் சொல்வது சரி.

The provisions of sub-section *(2)* of section *18* of sections *19* to *22* (both inclusive) of this chapter or any rule providing for all or any of the matters specified therein or any order made in relation to any such matter shall not apply to a minority college என்று இருக்கிறது.

திரு. என். சங்கரய்யா: ஆகவே, நான் இப்போது குறிப்பிட்டதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கல்லூரிகளிலே பணிபுரியக்கூடிய ஆசிரியர்களின் சங்கம் இதைப் பற்றி கடந்த பல ஆண்டுகளாக அவர்கள் கிளர்ச்சி செய்துகொண்டு வருகிறார்கள். ஆகவேதான் நான் கூறுகிறேன். அரசாங்கம் அவ்வாறு அந்த சிறுபான்மையினராலே நடத்தப்படக்கூடிய நிர்வாகத்திலே பணிபுரியக்கூடிய ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் அவர்கள் மீது அந்த நிர்வாகம்



எடுக்கக்கூடிய ஒழுங்கு நடவடிக்கைகளை எதிர்த்து மேல் முறையீடு செய்வதற்கான முறையை செய்திருக்கக்கூடிய பகுதியையும் சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்தால் நிச்சயமாக இது எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரு பாதுகாப்பு ஏற்படும். இது மிக முக்கியமாக அந்த மூலச்சட்டத்திலே செய்யப்படவேண்டிய ஒரு திருத்தம். அதாவது செக்ஷன் 24 (3) என்பது டெலிட் பண்ணப்படவேண்டும். ரத்து செய்யப்படவேண்டும்; நீக்கப்படவேண்டும். அதை நீக்கிவிட்டால் மற்ற கல்லூரி ஆசிரியர்களுக்கு என்ன மேல் முறையீடு உரிமை இருக்கிறதோ அது இந்த மைனாரிட்டி நிறுவனங்களிலே பணிபுரியக்கூடிய ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும், ஏற்பட்டுவிடும். ஆகவே அரசாங்கம் இதை மிகவும் ஆழ்ந்த கவலையோடு பரிசீலிக்கவேண்டுமென்றும் இந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அதேபோல் இன்றைக்கு நாம் பார்த்தோமானால், எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரிலே 10 ஆசிரியர்களும், 2 ஊழியர்களும் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அவர்கள் இந்த இடைக் காலத்திலே இந்த சட்டமன்றத்திலே பேசிக் கொண்டிருக்கின்ற போது அவர்கள் அந்த ஆசிரியர்களை பதவி நீக்கம் செய்வதற்கு முயற்சி செய்திருப்பார்கள். ஆனாலும் ஒரு மாநில அரசாங்கத்திற்கு எத்தனையோ வழிவகைகள் இருக்கின்றன. அதற்கு சட்டப்படி ஆலோசிக்க சட்டத்துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் இருக்கிறார்கள். இதை தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புவது, 1976-ஆம் சட்டத்திலே செக்ஷன் 30 (3)லே அரசு அந்த தனியார் கல்லூரிகளிலே ஊழல்கள் நடந்தால் அந்த நிர்வாகத்தை மேற்கொள்வதை நாம் ஏற்கனவே சட்டத்திலே 10 ஆண்டுகள் வரைக்கும் போட்டோம். வருஷாவருஷம் புதுப்பிக்க வேண்டியது. நாம் அதிகப்படியான காலம் போடவில்லை. வருஷாவருஷம் தேவையைப் பார்த்துப் புதுப்பிக்க வேண்டியது. ஆனால் அதிக பட்சம் 10 ஆண்டுகள் வரைக்கும் வைத்துக்கொள்ளலாம் என்று இருந்ததை இப்போது அரசாங்கம் கொண்டு வந்து இருக்கக்கூடிய சட்டத்திருத்தத்திலே அது 6 ஆண்டுகாலம்தான் அதிக பட்சம் என்று குறைத்திருப்பது பொருத்தம் அல்ல என்று நான் கூறிக் கொள்கிறேன். இங்கே நான் எதற்காக சொல்கிறேன் என்றால் தமிழகத்திலே இருக்கின்ற தனியார் கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் என்பது வர்த்தக ரீதியிலே பணம் சம்பாதிக்கின்ற கம்பெனிகளாக நடந்து கொண்டு வருவதைத்தவிர அவர்கள் நிர்வாகத்தை மேம்பாடு அடையச் செய்வதற்கு உரிய நிறுவனங்களாக நடத்தவில்லை, இதுதான் யதார்த்தமான உண்மை. அப்படி இருப்பதுதான் எனக்கு உண்மையிலே வருத்தம். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கல்லூரிகளிலே பணிபுரியக்கூடிய

[திரு. என். சங்கரய்யா] [1982 செப்டம்பர் 7

ஆசிரியர்களும், தனியார் கல்லூரிகளில், பள்ளிகளில் பணிபுரியக் கூடிய ஆசிரியர்களும், இங்கே மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக பிரதிநிதிகளாலும், இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய பிரதிநிதிகளாலும் அவர்கள் இந்தச் சட்டத்தை எதிர்த்து இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டால் அது தமிழகத்திலே இருக்கக் கூடிய தனியார் கல்லூரிகளிலே பணிபுரியக்கூடிய பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களும், ஆசிரியைகளும், ஊழியர்களும், மிகுந்த வேதனை மட்டுமல்ல, மிகுந்த அதிர்ச்சி அடைவார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரஸ் கட்சியும், இன்றைக்கு அரசியல் வித்தியாசம் எதுவாக இருந்தாலும் ஏனென்றால், இன்றைக்கு அனைத்துக் கல்லூரிகள் ஆசிரியர்கள் சங்கத்திலே அனைவரும் இருக்கிறார்கள். ஒவ்வொரு பல்கலைக் கழகம் ஏரியாவுக்கும் ஒரு சங்கம், இவை எல்லாவற்றையும் இணைத்து வைத்திருக்கக்கூடிய ஒரு சம்மேளனம். இதிலே பல்வேறு வகை அபிப்ராயம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்திலே இப்போது மிகவும் காலம் கடந்து கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்டத்திலேகூட திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரஸ் கட்சியும் மைனாரிட்டி என்ற பெயரால் எதிர்க்கிறார்கள் என்று கேள்விப்பட்டால்—அதிலே இன்னொரு விஷயம் என்னவென்றால் எஸ்.ஐ ஈ.டி.லோ அல்லது கிறித்துவ நிறுவனங்களிலே அல்லது வேறு மைனாரிட்டி ஸ்தாபனங்களிலே கணிசமானவர்கள் மைனாரிட்டி சமூகத்தைச் சார்ந்தவர்களே இருக்கிறார்கள். அந்த மைனாரிட் ஆசிரியர்கள் மீது, அந்த மைனாரிட்டி ஆசிரியைகள் மீது அந்த ஊழியர்கள் மீது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் அக்கறை இல்லையா?

(பிற்பகல் 12.50)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் நாங்கள் ஏதோ ஆசிரியர்களுக்கு விரோதமாக இருப்பதாகச் சொன்னார்கள். இப்படியெல்லாம் மிகைப்படுத்திச் சொல்வதில் பயன் இல்லை. எங்கள் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் பேசுகின்றபோது சரியான வகையில் விளக்கம் தெரிவித்தார்கள். அந்த ஆசிரியர்கள் நீக்கப்பட்டதை நாங்கள் கண்டிக்கிறோம். அவர்களுக்கு வேலை வாங்கித் தரும் பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதை இந்த அரசாங்கம் செய்ய வில்லை என்று நாங்கள் குற்றம் சாட்டுகிறோம். 1½ ஆண்டுக் காலமாக அதைச் செய்யாமல், அதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல் இந்த அரசாங்கம் தவறிவிட்டது என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, திராவிட முன்னேற்றக்கழக ஆசிரியர் களுக்கு விரோதமாக நடந்து கொள்கிறது என்று நீங்கள் எப்படிச் சொன்னாலும் அதை அவர்கள் நம்பப் போவது இல்லை.



1982 செப்டம்பர் 7]

திரு. என். சங்கரய்யா : திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தங்கள் கட்சியின் நிலையை விளக்கியதற்கு நன்றி. ஆனால் அதை நம்புவது அல்லது நம்பாதது என்பது வேறு. அந்த ஆசிரியர்களுக்கு பாதுகாப்புத் தரும் இந்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வருகிறபோது அதை எதிர்க்கிறோம் என்று சொன்னால், அந்த ஆசிரியர்கள் அதை எப்படிப் புரிந்துகொள்வார்கள் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்தப் பாதுகாப்பு அவர்களுக்குத் தேவை இல்லை என்று தி.மு.க. சொல்வதாகத்தானே அவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையில் நாங்களே முன்பு சட்டம் கொண்டுவந்து இருக்கிறோம். ஆகவே, அவர்கள் தவறாகப் புரிந்துகொள்ள மாட்டார்கள்.

திரு. என். சங்கரய்யா : முன்பு சட்டம் கொண்டு வந்தநீங்கள் தற்போது இதை ஏன் எதிர்க்கிறீர்கள் என்பதுதான் எனக்கு ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது. தொழிலாளர் பிரச்னை அரசாங்கம் தீர்க்க முயற்சி எடுக்கவேண்டும் என்று சொன்ன அதே சிம்சன் கம்பெனியில் வந்த நேரத்தில், அந்தப் பிரச்னையை அரசாங்கம் தீர்க்க முயற்சி எடுக்க வேண்டும் என்று சொன்ன அதே நேரத்தில், அந்தத் தொழிற்சாலையையே அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் ஆசிரியர் போராட்டங்கள் நடைபெற்ற நேரத்தில் எல்லாம் அவர்கள் பக்கம் நின்று ஆதரவைத் தந்து இருக்கிறது. உதாரணத்துக்குச் சொல்லவேண்டுமென்றால், மதுரை மாவட்டம், உத்தமபாளையம் கருத்த ராவுத்தர் கல்லூரியில் ஆசிரியர்கள் போராட்டம் நடத்தியபோது (குறுக்கீடு)—உதாரணத்திற்காகத்தான் அதைச் சொல்கிறேன்—நீண்ட நெடுங் காலம் அங்கே ஆசிரியர்கள் போராட்டம் நடத்தியபோது, அவர்கள் சம்பளம் தரவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி போராட்டம் நடத்தியபோது, அதற்காக திராவிட முன்னேற்றக்கழக சார்பில் இங்கே தீர்மானம் கொடுத்து, போராடி, வாதாடி, அவர்கள் கோரிக்கையை வலியுறுத்தி யிருக்கிறது. ஆகவே, திராவிட முன்னேற்றக்கழகம் ஆசிரியர் களுக்கு விரோதமான நடவடிக்கைகளை எப்போதும் எடுத்தது இல்லை. ஆகவே, ஆசிரியர்கள் பிரச்னையைத் தீர்ப்பது என்பது வேறு; நிர்வாகத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்வது என்பது வேறு என்பதை இங்கே வலியுறுத்தி கூற விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. ஹாஜா செரீப் அவர்கள் கூறினார்கள், அங்கே அந்தப் போராட்டம் ஒரு சில பியூன்கள், டிரைவர்கள் தூண்டுதலின் பேரில் நடக்கிறது என்று. அந்தப் போராட்டத்தின் நியாயத்தை ஏற்று, அந்த ஆசிரியர்களின் மாநில சம்மேளனமே அந்தப் போராட்டத்தை நடத்தி வருகிறது. அந்த இடத்தில் பணி செய்யக்கூடிய முஸ்லீம் ஆசிரியர்கள் உட்பட பழி வாங்கப் பட்டிருக்கிறார்கள். அப்படிப் பழிவாங்கப்பட்ட ஆசிரியர்கள் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அங்கேயிருக்கும் சிறு பான்மையினரின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறபோது, இதைத் தவறு என்று எப்படிச் சொல்லமுடியும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், கல்வி நிறுவனங்கள் 100-க்கு 75 விழுக்காடு அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு நடைபெறுவதால், அவைகள் முழுக்க முழுக்க அரசாங்கத்தின் பொறுப்பில் இருப்பது நியாயம் எனகிற அழுத்தமானக் கொள்கையைக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் அடானமஸ்காலேஜில் நடைபெறுகின்றநடவடிக்கைகளைப்போய்ப் பாருங்கள் என்று சொன்னார்கள். தன்னாட்சிக் கொடுக்கப்பட்ட அந்தக் கல்லூரிகளில் என்ன நடைபெறுகிறது என்பதை நீங்கள் போய்ப் பார்க்கவேண்டும், அங்கே தன்னாட்சி நடைபெறுகிறதா அல்லது பேயாட்சி அங்கே நடைபெறுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. அந்தக் கல்லூரிகள் சர்வகலாசாலை ஆளுகையின் கீழும் வராமல், அரசின் ஆளுகையின் கீழும் வராமல் இருப்பது சரியல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சரியாகச் சொன்னார்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும் நீங்கள் ஏன் எடுக்கக்கூடாது என்று கேட்டார்கள். அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. ஏற்கனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதை வலியுறுத்தியிருக்கிறது, ஆகவே, நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும் உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று கூறியிருந்தால் நான் அதை ஏற்றுக்கொண்டு இருப்பேன்.



திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : போன வருஷமே முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். ஏன் அதைச் செய்யவில்லை என்றுதான் நாங்கள் வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். அதற்காக பைட் செய்து கொண்டு வருகிறோம். ஏன் என்னை நீங்கள் மிஸ்குவோட் செய்கிறீர்கள்?

திரு. என். சங்கரய்யா : மிஸ்லீட் பண்ணவில்லை. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்; முத்தையா செட்டியாரின் ஆதிக்கத்தை ஒடுக்க சட்டம் கொண்டுவர வேண்டும். ஆனால் அதைக் கொண்டுவரவில்லை என்பதற்காக இதை எதிர்க்கிறோம் என்று சொன்னால் அதற்கு என்ன காரணம்? உங்களுக்குத் தெரியும். பெரியகுளம் தேர்தலில் 5 கட்சிகள் போட்டியிடுகின்றன. இது அரசியல் ரீதியான போராட்டம். ஆளும் கட்சியும் போட்டியிடுகிறது; எதிர்க்கட்சிகளும் போட்டியிடுகின்றன. அது வேறு விஷயம். அதேமாதிரி கல்லூரி நிர்வாகத்தில் இருக்கக்கூடாது; எஸ்.ஐ.இ.டி. கல்லூரி பிரச்னையும் அப்படி இருக்கக்கூடாது.

அது மட்டுமல்ல. அவினாசிலிங்கம் செட்டியார் கல்லூரி ஒன்று இருக்கிறது. சேலத்தில் ஒரு கல்லூரி இருக்கிறது. இப்படி பல்வேறு கல்லூரிகள் இருக்கின்றன. எந்தக் கல்லூரியாக இருந்தாலும் தவறு நடந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான்.

கல்லூரி ஆசிரியர்கள் சம்மேளனம் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறது. ஒரு 'சார்டர் ஆஃப் டிமான்ட்ஸ்' கொடுத்திருக்கிறது. இந்த நேரத்தில் நான் மாண்புமிகு கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை கையாண்டு, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் கோரிக்கைகளிலே ஒன்று, தமிழக கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தின் நிர்வாகி பேராசிரியர் நரசிங்கத்தின் மீது நடவடிக்கை எடுத்து, அவருடைய ஆண்டு ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவு சரியல்ல; அதை நீக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இது நியாயமான கோரிக்கை.

அவருக்கு எதிராக பாரபட்சமான தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அவர் அந்தக்கல்லூரி ஆசிரியர்கள் நிர்வாகக்குழு தலைவர் என்பதால் ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். அந்தக் கோரிக்கையை நீங்கள் ஏற்று, பரிசீலிக்க வேண்டும். காரணம் அந்த ஊழியர் சங்கத்தின் தலைவர் மீது ஒரு களங்கம் ஏற்பட்டால் அது அந்த ஆசிரியர்கள் அத்தனை பேர்கள் மீதும் களங்கம் ஏற்படுத்துவதாக ஆகும். ஆக, பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்கள் மீது ஏற்படுத்துகிற களங்கத்தைப் போக்க வேண்டும்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக அசிஸ்டன்ட் ப்ரஃபசராக இருக்கிறவர்களுக்கு ப்ரஃபசர் பதவி உயர்வு அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் எல்லோருக்கும் பதவி உயர்வு கிடையாது. 1-1-1980-க்கு முன்னால் வந்த உதவி பேராசிரியர்களுக்குத்தான் பேராசிரியர் பதவி அளிக்கப்படும். மற்றவர்களுக்கு கிடையாது. 2-4-80 அல்லது அதற்குப் பிறகு வந்தவர்களுக்கு பதவி உயர்வு கிடையாது. இது எதற்காக? தகுதியுள்ள எல்லோருக்கும் பதவி உயர்வு கொடுப்பதுதான் நியாயம். ஆகவே இதுவும் நியாயமான கோரிக்கைதான்.

அதைப்போன்று லைபிரரியன், பிசிக்கல் டைரக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவிப் பேராசிரியர் கிரேடு கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்கள் எம்.ஏ. அல்லது எம்.எஸ்ஸி (சி.பிளஸ்) படித்திருந்தால் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழக பணக் குழுவும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் எல்லாம் இப்படிக் கொடுக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் மட்டும்தான் அதற்கு மாறான ஒரு விதியை வைத்திருக் கிறார்கள்; அதை மாற்ற வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இதுவும் நியாயமான கோரிக்கைதான். உதவி பேராசிரியர் பதவி உயர்வுக்கு 'எம்ஃபில்' படிக்க வேண்டும் என்று இருக்கிறது. அது சாத்தியமில்லை. ஆகவே, அதனால் அவர்கள் பாதிக்கப் படக்கூடாது.

26-2-1979-க்குப் பிறகு 1982 வரையில் எம்பிளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலமாக வேலைக்கு வந்தவர்கள், சுமார் 500 பேர்கள் லெக்சரர்களாக கல்லூரிகளில் பணியாற்ற தற்காலிகமாகப் போடப்பட்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டு மென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதுவும் முக்கியமான, நியாயமானகோரிக்கைதான்.

அவர்கள் கொடுத்திருக்கிற இப்படிப்பட்ட நியாயமான கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த மைனாரிட்டி நிர்வாகத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு இருக்கவேண்டும். அதற்காக நீங்கள் தைரியமாக நடவடிக்கை எடுங்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அண்ணா தி.மு.க.வுக்கும் அடிப்படையான கொள்கை வேறு பாடுகள் உண்டு. ஆனால் இந்தக் கொள்கையைப் பொறுத்த வரையில், ஆசிரியர்கள் மற்றுமுள்ள பணியாளர்கள் உரிமையைப் பாதுகாப்பதில் நீங்கள் தைரியமாக நடவடிக்கை எடுங்கள்; அவர்களைக் காப்பாற்ற உறுதியான நடவடிக்கை எடுங்கள்; அதற்கு எங்களுடைய ஆதரவு உண்டு என்பதைத் தெரிவித்து, இந்தச் சட்டத்தை ஆதரித்து அமர்கிறேன்.





திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த கல்லூரி நிர்வாக சீர்திருத்த மசோதாவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். இந்த மசோதாவை நான் வரவேற்கும்போது, எனக்கு முன்னால் பேசிய அருமை தோழர் சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டதைப்போல இன்றைக்கு தனியார் கல்விக் கூடங்கள் எல்லாம் கல்விக் கூடங்களாக இல்லாமல் கொள்ளைக் கூடங்களாக மாறியிருக்கின்றன என்பதை வலியுறுத்திக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1.00)

சிறுபான்மை என்ற பெயரால், மைனாரிட்டி என்ற பெயரால் மதத்தின் பெயரால், ஜாதியின் பெயரால் கல்விக் கூடங்கள் இன்றைக்கு கொள்ளைக் கூடங்களாக செயல்பட்டு வருகின்றன. இது தமிழ்நாட்டில் மட்டுமல்ல; இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட காரணங்களால் மாணவர்கள், ஆசிரியர்கள் போராட்டங்களை இன்று நாம் பார்க்கிறோம்.

அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு மைனாரிட்டி உரிமை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவதெல்லாம் இன்றைக்கு பாலஸ்தீனியர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு போராடிக் கொண்டிருக்கிற காலத்திலே அங்கே அந்த மைனாரிட்டியை ஆதரிப்பதற்கு நாமெல்லாம் ஒத்தக் கருத்து உடையவர்களாக இருக்கிறோம். அதற்காக பக்கத்திலே இருக்கக்கூடிய பாகிஸ்தானியரும், இந்திய துணை கண்டத்தின் மீது போர் தொடுக்கப்பார்த்தால், அதை மைனாரிட்டி என்ற முறையில் நாம் ஏற்றுக்கொள்வோமா?

அந்த சூழ்நிலையில்தான் இன்றைக்கு இங்கே இருக்கக்கூடிய எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியாக இருந்தாலும் சரி, லயோலா கல்லூரியாக இருந்தாலும் சரி, தூய சேவியர் கல்லூரியாக இருந்தாலும் சரி, இன்னும் சொல்லப்போனால் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் என்று சொல்லக்கூடிய மகான்களின் கீழ்உள்ள நிறுவனங் களானாலும் சரி, அல்லது எந்த ஒரு மதஸ்தாபனங்களாக இருந்தாலும் சரி, சிறுபான்மை என்று சொல்லி கொள்ளை யடிக்கப்பட்ட பணத்தால் நடத்தப்படுகின்ற தனியார் நிறுவனங் களானாலும் சரி, அவைகளை மைனாரிட்டி என்ற முறையில் நாம் ஏற்றுக்கொள்ள இயலாது. இந்தக் கொள்கையின் அடையாளமாகத்தான் இன்றைக்கு இந்தப் போராட்டங்கள் நடைபெறுகின்றன.

மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்த நிறுவனங்கள் என்று சொல்கிறார்களே, அங்கே பணிபுரிகின்ற ஆசிரியப் பெருமக்கள் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்? இன்றைக்கு குறிப்பாக

இளையான் குடி போன்ற இடங்களில் நடத்தப்படுகிற முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த நிறுவனங்களில் படிக்கக்கூடிய மாணவர்கள் மைனாரிட்டிகள், பணிபுரிகின்ற ஆசிரியர்கள் மைனாரிட்டிகள். ஆகவே, இப்படி மைனாரிட்டிகள் என்று சொல்லி மைனாரிட்டிகளையே கொடுமைப்படுத்துவது என்ன நியாயம் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

ஆகவே இன்றைக்கு கல்லூரிகளுக்குள்ளே சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும். அது மட்டும் அல்லாமல் இப்படிப்பட்ட தனியார் நிறுவனங்களில் அரசு சட்டத்திற்கு விரோதமாக மட்டும் அல்லாமல், அரசின் கொள்கைகளுக்கும் மாறுபட்ட முறையில், ஜாதிக் கலவரங்களையும், மதக் கலவரங்களையும் தூண்டுகிற பாடத்திட்டங்களைக் கூட போதிக்கக்கூடிய அளவுக்கு அந்தக் கல்விக் கூடங்கள் இருந்துக் கொண்டிருக்கின்றன என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இந்த மாமன்றத்திற்கும் எச்சரிக்கையாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக அப்படிப்பட்ட சூழ்நிலையில் இப்படிப்பட்ட கொடுமைகள் நடைபெறுவதை தடுத்து நிறுத்துவதற்காக இந்தச் சட்டத்தின் வாயிலாக வழிவகைகளைக் கொண்டு வந்திருக்கிறீர்கள், வரவேற்கிறோம்.

ஆனால் இந்தச் சட்டத்தின் மூலமாகவாவது உடனடியாக இந்தக் கொடுமைகளைத் தீர்த்து விடலாம் என்று நாம் நினைத்தோம் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இந்தச் சட்டம் அமுலுக்கு வரும்போது, நீதிமன்றத்திற்குப் போய் இந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய ஓட்டை உடைசல்களைப் பயன் படுத்திக் கொண்டு, காலதாமதத்தை ஏற்படுத்துவதற்கு அவர்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அந்தக் காலதாமதம் ஏற்படுகிறபோதுதான் எங்களுக்கே ஒரு சந்தேகம் வருகிறது. இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற அனைத்துக் கல்லூரிகளிலே இருக்கக்கூடிய பட்டதாரி ஆசிரியர் கழகங்கள் தங்களுடைய ஒன்று பட்ட அமைப்பின் மூலம் ஒரு முக்கியமான போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போராட்டத்தை திசை திருப்புவதற்கும், அதை வலுவிழக்கச் செய்வதற்கும் இந்தச் சட்டத்தின் மூலமாக இன்றைக்கு ஆட்சியில் இருக்கக்கூடியவர்கள் காலதாமதம் செய்கிறார்களோ என்றுதான். அப்படிக் கால தாமதம் செய்யக்கூடாது என்பதைத்தான் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு நம்முடைய இந்தச் சட்டமுன் வடிவிலே இரண்டு முக்கியமான திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்று நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்தச் சட்டத்தில் எப்படி அந்த மைனாரிட்டிகள் மேல்முறையீடு செய்வதற்கு அதிகாரம் வழங்கப்



பட்டிருக்கிறதோ, அதே அடிப்படையில் அப்படிப்பட்ட முறையீடு களை கல்லூரிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்களாக இருந்தாலும் சரி அல்லது மற்ற ஊழியர்களாக இருந்தாலும் சரி, அவர்களும் மேல்முறையீடு செய்வதற்கு நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும், அதற்கான வழி வகைகளை இந்தச் சட்டத்தில் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல அந்த நிறுவனங்களை அரசு எடுத்து கையகப் படுத்துவதற்கு, பத்தாண்டு காலத்திற்கு அவைகளை எடுத்துக் கொள்வது என்று இருந்த நிபந்தனையை 6 ஆண்டு காலத்திற்கு என்று குறைத்திருக்கின்றீர்கள். அதை மீண்டும் 10 ஆண்டுக் காலமாகவே ஆக்கி அந்த நிறுவனங்களை அரசு எடுத்துக்கொள்ளும் வகையில் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவைகள் மட்டும் அல்லாமல், இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு கல்லூரிகளிலும் நடக்கக்கூடிய சீர்கேடு களைப் பற்றி பலர் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தைப் பற்றிக்கூட எடுத்துச் சொன்னார்கள். நான் இந்த மாமன்றத்தில் கேட்க விரும்புவதெல்லாம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இது போன்ற போராட்டம் நடந்தபோது, அங்கே இருக்கக்கூடிய ஆசிரியப் பெருமக்களும், மாணவர்களும், ஊழியர்களும் எழுச்சிக் கொண்டு போராடியபோது, இங்கே அன்று இந்தக் கருத்தைச் சொன்னவர்கள் எல்லாம் எந்தக் காராக்கிரஹத்தில் இருந்துக் கொண்டிருந்தார்கள் என்பதை இந்த நாடு அறியும் என்பதை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மட்டும் அல்லாமல், எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியைப் பற்றிக்கூட எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எஸ்.ஐ.ஈ.டி. மட்டும் அல்ல, எஸ்.ஐ.ஈ.டி. போன்று ஆயிரக்கணக்கான கல்லூரிகள் இன்றைக்கு தமிழகத்தில் இதேபோன்ற நிலைமையில் இருக்கின்றன. அதற்கு அடையாள மாகத்தான் இன்றைக்கு எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் மாபெரும் போராட்டம் நடந்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்லாமல், இன்றைக்கு நம்முடைய தமிழகத்திலே உள்ள ஆசிரியப் பெருமக்கள் ஒரு மகஜரைக் கொடுத்திருக் கிறார்கள். பல்வேறு வகையான நிறுவனங்களையும் அப்படி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு இதனால் நினைவுக்கு வருவதெல்லாம், நாம் இங்கே ஒரு புறம் ஏதேதோ சட்டங்களைப் போட்டு இப்படிப்பட்ட தவறுகளைக் குறைத்துக் கொண்டு வருகிற காலத்தில், அவைகள் ஒரு பக்கத்தில் பெருக்கிக் கொண்டேயும் இருக்கின்றன. நமது முதலமைச்சர் அவர்கள் பாடிய பாட்டு எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

சட்டம் போட்டு தடுக்கின்ற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது, திட்டம் போட்டு திருடுகிற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது என்று சொன்னார்கள். நம்முடைய சென்னை மாநகரத்திலே இருக்கக்கூடிய பச்சையப்பன் ட்ரஸ்டிலே இருக்கக் கூடிய கந்தசாமி நாயுடு கல்லூரியினை அரசு கையகப்படுத்தியது. அப்படி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கையகப்படுத்தப்பட்ட அந்தக் கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பிலே முக்கியமான இலாக்காவின் பொறுப்பிலே உள்ள ஐ.ஏ.எஸ். ஆபீஸர்களை நியமித்திருக்கிறார்கள். ஆனால் இப்போது அங்கே என்ன நடக்கின்றது? அந்த பச்சையப்பன் ட்ரஸ்டிலே இருந்து எடுக்கப்பட்ட 25 ஏக்கர் நிலத்தின் வருமானம் வருடத்திற்கு 3,000 ரூபாய்தான் என்று சொல்வது யாரை ஏமாற்ற? தனியார் கல்லூரியிலே நடக்கக்கூடிய அட்டூழியங்களை தடுத்து நிறுத்துவதற்காகத்தான் அரசாங்கம் அதனைக் கையகப்படுத்துகின்றது. ஆனால் மீண்டும் அரசின் அதிகாரிகளே அங்கே தவறுகள் செய்தால், அதற்கான வழிவகைகளை செய்தால் அவர் பாடிய பாட்டிற்கு என்ன அர்த்தம் என்று கேட்க நான் விரும்புகிறேன். ஆகவே பச்சையப்பன் நிர்வாகத்திலே இருந்து அரசாங்கம் கையகப்படுத்திய பின்பு தவறுகள் நடப்பதை அரசாங்கம் களைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே இருக்கக்கூடிய அனைத்துக் கல்லூரி ஆசிரியர்கள் சங்கங்களின் போராட்டங்களை நீடிக்கவிடாமல் பேச்சுவார்த்தை நடத்தி முடிக்கவில்லை, இரண்டாண்டுகளாகப் பிரச்சினை நீட்டிக்கப்பட்டுக் கொண்டே போகிறது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு உயர்ந்த எண்ணங்கள் இருக்கலாம். ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரிகள் ஆசிரியர்களை அழைத்து உரிய முறையிலே பேச்சு வார்த்தை நடத்தவில்லை. அதற்குப் பதிலாக ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பிரச்சினையை நீடித்து வந்திருக்கிறார்கள், இப்படிப்பட்ட நிலைமைகள் பல்வேறு நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட வகையிலே தொடர்ந்து இருந்து அவை தீர்க்கப்படாததன் காரணத்தால் தற்போது பல போராட்டங்கள் வெடித்துக் கொண்டிருக்கின்றது. எனவே அப்படிப்பட்ட நிலைமையை அரசாங்கம் கைவிட்டு துரிதமாகப் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். மைனாரிட்டி என்ற பெயரால், சிறுபான்மையோர் என்ற பெயரால் சிறுபான்மை மக்களுக்கு மட்டுமல்லாமல், கல்விக்கே களங்கம் ஏற்படுத்தக்கூடிய நிலைமைகளை மாற்றவேண்டும் என்று கேட்டு இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.





திரு. கோ. விஸ்வநாதன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவினை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். இந்த விவாதத்தினைத் துவக்கி வைத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த மசோதா உள்நோக்கம் கொண்டது என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் தன்னுடைய அவநம்பிக்கையைத் தெரிவித்து அதன்மூலம் கிறிஸ்துவ கல்வி நிலையங்கள் மற்றும் முஸ்லீம் கல்வி நிலையங்கள் அரசாங்கத்தினுடைய ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுவிடும் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் தனியார் கல்லூரியிலே படித்தவர்கள்தான். நானும் தனியார் கல்லூரியிலே படித்தவன்தான். இங்கே இருக்கின்ற பலர் தனியார் கல்லூரியிலே குறிப்பாக மைனாரிட்டி சமுதாயத்தினர் கல்லூரியிலே படித்துவிட்டுத்தான் வந்திருக்கிறோம். எனவே நாமெல்லாம் இந்தக் கல்வி நிறுவனங்கள் எல்லாம் அரசாங்கத்தின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் அல்ல. நிச்சயமாக ஆளுங்கட்சிக்கும் அப்படிப்பட்ட எண்ணமே இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தனியார் கல்வி நிலையங்களில் பல பெரியவர்கள் தங்களுடைய அருமை சொத்துக்களை எல்லாம் அளித்திருக்கிறார்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. அவர்கள் தங்களுடைய வாழ்நாள் முழுவதும் சம்பாதித்த சொத்துக்களை எல்லாம் கொண்டு வந்து இப்படிப்பட்ட கல்வி நிலையங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடாமல்தான் இருக்கிறோம். ஆகவேதான் மைனாரிட்டி சமுதாயத்தின் கல்வி நிலையங்களானாலும் அல்லது எத்தகைய கல்வி நிலையங்களானாலும் அவர்களுக்கு வேண்டிய அத்தனை ஒத்துழைப்பையும் அரசு கொடுத்துக் கொண்டு வருகின்றது. ஆனால் அதே நேரத்தில் இந்த அறக்கட்டளைகள் எல்லாம் அறக்கட்டளைகளாகச் செயல்படாமல் அரக்கக் கட்டளைகளாக மாறிவிடக்கூடாது என்பதில் அரசாங்கம் அக்கறை கொள்வது தவிர்க்க முடியாதது. எனவே தான் இந்த மசோதாவினைப் பார்த்து உள்நோக்கம் கொண்டது என்று அவர்கள் சொன்னதில் நான் புரிந்துக்கொண்ட அளவிலே அவருடைய எதிர்ப்பிலே உள்நோக்கம் இருக்கின்றது என்றுதான் நான் கருதுகிறேன். அவர்கள் ஆளும் கட்சியாக இருந்தபோது ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட சட்டமுன்வடிவுகளைக் கொண்டு வந்தவர்கள் இந்த சட்டமுன்வடிவினை எதிர்ப்பதின் உள்நோக்கம் என்ன என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மைனாரிட்டியினருக்கு அரசியல் சட்டத்திலே உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த உரிமைகளை வழங்கக்கூடாது என்று நான் நிச்சயமாக இங்கே சொல்லப்போவதில்லை. ஆனால் அதே நேரத்தில் மைனாரிட்டி சமுதாயத்தினருக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற உரிமைகளை வைத்து வேறு சில மைனாரிட்டி சமுதாயத்தினரின் உரிமைகளைப் பறித்துவிடக்கூடாது என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முஸ்லீம் சமுதாயத்தினர் நடத்துகின்ற கல்வி நிலையங்களானாலும் கிறிஸ்துவர்கள் நடத்துகின்ற கல்வி நிலையங்களானாலும், அல்லது வேறு மைனாரிட்டி சமுதாயத்தினர் நடத்துகின்ற கல்வி நிலையங்களானாலும் அந்த நிலையங்களில் வேலை செய்கின்ற ஆசிரியர்கள், ஆசிரியைகள் அதேச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக பலபேர் இருக்கிறார்கள். அவர்கள் பழிவாங்கப் பட்டார்கள். 28 ஆண்டுகளாக பணிபுரிந்து வந்த ஆசிரியையை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். அரசாங்கம் கைக் காட்டிக் கொண்டிகிறது. அரசுக்கு அதிலே தலையிட அதிகாரமில்லை. கோர்ட்டுக்குப் போனால், அங்கே அவர்கள் சொல்கிறார்கள்--அரசியல் சட்டதிலே பாதுகாப்பு தாப்பட்டிருக்கிறது, நாங்கள் தலையிடமுடியாது என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் என்ன செய்யவேண்டுமென்று எதிரிக்கட்சிகள் விரும்புகின்றன என்று நான் கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

அடுத்து பேசிய இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் மதிப்பிற்குரிய ஹாஜா ஷெரிப் அவர்கள் சொன்னார்கள்--இந்த மசோதா பழிவாங்கும் படலத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றை மட்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். குறிப்பாக, எஸ்.ஐ.ஈ.டி கல்லூரியைப் பற்றிப் பேசினார்கள். எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியை நடத்துகின்ற மதிப்பிற்குரிய பஷீர் அகமது சையத் அவர்கள் இந்திய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டது காங்கிரஸ் ஆட்சியில்தான் என்பதை நினைவுகூற விரும்புகிறேன்.

இங்கே, தனி அலுவலர் நியமனத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இங்கே அதைப்பற்றி மசோதாவிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நிர்வாகத்தை ஏதோ திடீரென்று எடுத்துக்கொள்ளப் போவதில்லை. இதற்காக கல்வி இயக்குநரிடமிருந்து ரிப்போர்ட் பெறப்பட்டு, அங்கே சட்டத்திற்கு புறம்பாக நடந்திருக்கிறார்கள், நிர்வாகத்தில் முறைகேடுகள் இருக்கின்றனவா நிர்வாகத்தில் வேறு குறைபாடுகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்த பிறகு, தனி அலுவலர்களை நியமிக்கப் போகிறோம். அது மட்டுமல்ல அந்த தனி அலுவலர் நியமிப்பதை, அது மைனாரிட்டி இன்ஸ்டிடியுஷனாக இருக்குமானால், அந்த மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவரை நியமிக்கப்போகிறோம் என்பதை அரசாங்கம் சொல்லியிருப்பதை மறந்து விடக்கூடாது. இதை மதிப்பிற்குரிய ஹாஜா ஷெரிப் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். மைனாரிட்டி சமுதாயத்திற்கு அளிக்கப்பட்டிருக்கின்ற உரிமைகளைப் பறிக்கக்கூடிய எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. அது மட்டுமல்ல, அரசாங்கம் கல்வி நிலையத்தை





எடுத்துக்கொள்வது லாப நோக்கத்திற்காக அல்ல. அதனால் அரசாங்கத்திற்கு நன்மையும் கிடையாது. ஏற்கனவே அரசுக்கு இருக்கின்ற தொல்லைகளோடு இது அதிகமாகும். அரசு இதை எடுத்துக்கொள்வதைத் தவிர' வேறு வழியில்லை, முகாந்திரமில்லை என்ற நிலையில்தான் அரசாங்கம் ஒரு கல்வி நிலையத்தை மேற்கொள்ளுகிறது.

இந்த ஆண்டு வேலூரில் ஒரு கல்லூரியை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது வேறு வழியில்லாமல், மூடிவிடக்கூடிய நிலைமை அங்கே வந்த பிறகுதான், கல்லூரி நிர்வாகத்திற்கும் ஆசிரியர்களுக்கும் இடையே தகராறு மூண்டு, முற்றிய பிறகுதான் அரசு தலையிடுகிறது. அதுவும், 'அஸ் எ லாஸ்ட் ரிசார்ட்'—ஆகத்தான் இந்த அரசு தலையிடுகிறதே தவிர, அந்தக் கல்லூரியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்கு நிச்சயமாக இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மைனாரிட்டி கல்விக் கூடங்களில் எவ்வளவோ தவறுகள் நடக்கின்றது என்று எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள். அதையே நான் திரும்பச் சொல்ல விரும்பவில்லை. இந்த தனியார் கல்வி நிறுவனங்களில் தவறுகள் நடந்து, அது இந்து நிறுவனமாக இருந்தால், அரசாங்கம் தலையிட முடிகிறது. ஆனால், அதுவே கிறிஸ்துவ அல்லது முஸ்லீம் கல்வி நிறுவனமாக இருந்தால், அரசாங்கம் தலையிட உரிமையில்லை. இதனால் என்ன நடைபெறுகிறதென்றால், இந்துக்கள் நடத்தக்கூடிய கல்வி நிலையங்களிலுமே கரஸ்பான்டென்டாக ஒரு முஸ்லீமையோ அல்லது ஒரு கிறிஸ்துவரையோ நியமனம் செய்கின்ற ஏற்பாடு நடைபெற்று வருகிறது. இதற்கு என்ன காரணம்? இப்படிப்பட்ட கல்விக்கூடங்களில் கிறிஸ்துவரையோ அல்லது முஸ்லீமையோ நியமித்து விட்டால், அந்த கல்விக்கூடத்திற்கு முழு பாதுகாப்பு கிடைத்துவிடுகிறது. அரசாங்கம் தலையிட முடியாது. எனவே, இந்த மசோதா எந்தச் சூழ்நிலையிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும் இதை நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால், பெரியகுளத்தில் நடைபெற இருக்கும் உப தேர்தலை மனதிலே வைத்து, இதை வன்மையாக எதிர்க்கிறேன் என்று மாண்புமிகு வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன்.

நான் இன்னொன்றையும் வலியுறுத்த விரும்புகிறேன். தனியார் கல்லூரியின் நிர்வாகத்தில் தவறுகள் நேரும்போது, அதிலே அரசாங்கம் தலையிட வேண்டுமென்று நாம் அனைவரும் வற்புறுத்த வேண்டும். ஆனால், அதே நேரத்தில் இப்படிப்பட்ட சட்டத்தை இயற்றியபிறகு ஆசிரியர்கள் தவறு செய்தால்,

[திரு. கோ. விஸ்வநாதன்] [1982 செப்டம்பர் 7

அதையும் அரசாங்கம் ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் குறைகளை அரசாங்கத்திடம் வற்புறுத்தி, ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு ஆசிரியர்களில் சில பகுதியினர் போராட்டத்தில் இறங்கினால், அதையும் அரசாங்கம் ஜாக்கிரதையாக கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் தங்கள் குறைகளைப் போக்கிக் கொள்வதற்காக, சங்கங்கள் மூலமாக அமைச்சரை அணுகுவதில் தவறில்லை. ஆனால் அந்தச் சங்கங்கள் தொழிற் சங்கங்களாக மாறிவிடக் கூடாது. ஸ்டிரைக் செய்வது, ஊர்வலம், உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், மறியல் இப்படிப்பட்ட காரியங்களில் ஆசிரியர்கள் ஈடுபடுவதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன் அது மட்டுமல்ல. மாணவ, மாணவிகளை தங்களோடு சேர்த்துக் கொண்டு நடவடிக்கைகளில் இறங்குவது மோசமான சூழ்நிலைமையை உருவாக்கும் அண்மையில் கல்வி அமைச்சர் அவர்கள் இதை கண்டித்துப் பேசியதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். ஆசிரியர்களிடத்திலே முழு நம்பிக்கைக் கொண்ட அவர்கள், ஆசிரியர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டியிருப்பது மிகவும் நல்லதென்று கருதுகிறேன். அரசே எல்லா அதிகாரத்தையும் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அதிலும், கடைசியாக இருக்கக்கூடிய அம்சம் அரசு தனக்கிருக்கிற அதிகாரத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு அந்தக் கல்லூரி நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளலாம் என்றிருந்தாலும், அதை 6 ஆண்டுகளாகக் குறைத்துக் கொண்டிருப்பது போதுமான அதிகாரமே போதும் என்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது; அப்படிப்பட்ட வாய்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிற இந்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன். நன்றி.

*திரு பொ விஜயராகவன்: மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிக்க கல்வித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறை) திருத்தச் சட்ட முன்வடிவை ஜனதா கட்சியின் சார்பில் ஆதரித்து ஒரு சிலவற்றை பேச நான் முன்வருகிறேன். இந்த மசோதாவை எடுத்துக்கொண்டால், இந்த மசோதாவை மைனாரிட்டிகளுக்கு எதிராக ஏவி விடப்பட்ட ஒரு பிரயோகம் என்று சொல்வது இந்த மசோதாவினுடைய கருத்துக்களை திசை திருப்பி விடும் ஒரு முயற்சி ஆகும். இந்த மசோதாவை பொறுத்தவரையில் மைனாரட்டியாக இருந்தாலும் மெஜாரட்டியாக இருந்தாலும் 2 பேருக்கும் இது பொருத்தமாக இருக்கவேண்டும். எல்லோருக்கும் சமமாக இருக்கும் சட்டமாக இந்த மசோதாவை கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே இதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே இந்த மாமன்றத்திலே பேசுகின்றபோது



1982 செப்டம்பர் 7] [திரு. பொ. விஜயராகவன்]

தனியார் கல்லூரிகள், தனியார் பள்ளிகள் ஒட்டுமொத்தமாக தனியார்களுக்குச் சொந்தமாக இருப்பவை அல்ல என்பதை வலியுறுத்தி பேசினார்கள். யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் அல்லது கவர்ண்மெண்டிடம் இருந்து பெறக்கூடிய மானியத்தின் உதவியால் அங்கே நூலகங்கள் அமைகின்றன, அங்கே லெபாரட்டரிகள் அமைகின்றன, அங்கே இருக்கக்கூடிய ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகின்றன. சர்க்காராலோ அல்லது சர்க்காருடைய ஏஜென்ஸி மூலமாகவோ பெறப்படுகின்ற பணத்தை வைத்துக்கொண்டு தனியார் நிறுவனங்கள் பல்வேறு தவறுகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த மசோதா எல்லா மைனாரிட்டி ஸ்தாபனங்களுக்கும் எதிராக பிறப்பிக்கப்பட்ட போர் அல்ல. எஸ்.ஐ.ஈ.டி. நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் அந்த நிர்வாகம் கடந்த பல ஆண்டுகளாகவே முரண்பட்ட கொள்கையை கடைபிடித்து வந்ததை இந்த நாடு மறந்து இருக்க முடியாது. 1971-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்தபோது பி.யு.சி.க்கு இலவசமாக கல்வி திட்டம் கொண்டுவந்த போது மாணவர்களிடமிருந்து பீஸ் வசூலித்ததை இந்த நாடு மறந்து இருக்க முடியாது. இது போன்று தொடர்ந்து தவறுகளை இழைத்துக் கொண்டிருக்கிற அந்த நிறுவனங்களை விட்டு வைத்து இருப்பது நியாயம் அல்ல. மைனாரிட்டி நிறுவனம் அல்லது மெஜாரிட்டி நிறுவனமாக இருந்தாலும் கூட அவ்வாறு செய்கின்றபோது அதைத்தட்டிக் கேட்பதற்கு இந்த சட்டத்திலே வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பூம்புகார் பேரவை கலலூரி இந்து அறநிலையத் துறையின் கீழ் வருகிற நிர்வாகத்தை உடையது ஆகும். அப்படி இருந்தாலும் கூட அந்த நிர்வாகம் சரிவர நடத்தப்படாமல் இருக்கிறது. அங்கே உள்ள ஆசிரியர்களும், மற்றவர்களும் பழிவாங்கப்படுகிற நிலைமை இருக்கிறது. மாணவர்களுக்கு கொடுக்கவேண்டிய அடிப்படை வசதிகளைகூட செய்து கொடுக்க முடியாத அளவுக்கு கல்லூரியின் நிர்வாகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட தவறுகளை போக்குவதற்கு இந்தச் சட்டத்தின் மூலம் நிர்வாகத்தைத் திருத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுகிறது. ஆகவே உடனடியாக இதைச் செய்வதற்கு அரசு முன்வரவேண்டும். மைனாரிட்டி மெஜாரிட்டி என்று வேறுபடுத்திப் பார்ப்பது இதை திசை திருப்பி விடுகின்ற செயலாகும். இதிலே மைனாரிட்டி, மெஜாரிட்டி என்பதற்கு இடம் இல்லை. மைனாரட்டிகளுடைய ரைட்ஸ் என்ற பெயரால் அரசியலமைப்புச் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற நிலைமைகளை தவறாக யாரோ சில நிர்வாகங்கள் பயன்படுத்துவதாக இருந்தால் அதை தட்டி சேட்பதற்கு சட்டத்தில் வாய்ப்பு இல்லாமல் போனால், இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கை எப்படி நிலை நாட்ட முடியும் என்பதை கேட்க விரும்புகிறேன். தனியார் கல்வி நிலையங்களை அதிலும் குறிப்பாக மைனாரிட்டி

கல்வி நிறுவனங்களை அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கான நிலைமைகளை இந்த சட்டம் உருவாக்குகிறது என்று சொன்னார்கள். அது எங்கே இந்த சட்டத்திலே இருக்கிறது என்று தெரியவில்லை. தனியாருடைய கல்வி நிறுவனங்களை மைனாரட்டி வர்க்கத்தினுடைய கல்வி நிறுவனங்களை எடுத்து கொள்கிற நிலையில் இந்த சட்டம் இல்லை. அவைகளிலே தவறான போக்குகள் இருக்குமானால் அதை திருத்துவதற்கும் அந்த நிர்வாகத்தை செம்மைப் படுத்துவதற்கும் தான் இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். சர்க்காரே எடுத்துக்கொள்ளக் கூடிய நிலைமை இல்லை. ஆகவே தவறான எண்ணத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டதா என்று நான் சந்தேகிக்கிறேன். இந்தச் சட்டமுன் வடிவத்தில் பல்வேறு காரியங்களைப் பற்றி சொல்லியிருந்தாலும் அதை திருத்துவதற்காக தனி அலுவலர்களை போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தனி அலுவலர்களை பரிசீலித்து அப்பாயிண்டு செய்தாலுங்கூட தனியாக ஒரு குழுவை போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனி அலுவலர்கள் நிர்வாகத்தை செம்மையாக நடத்துகிறார்களா என்பதை கண்காணிக்கவும், தனி மனிதனுடைய விருப்பு, வெறுப்புகளுக்கு இடம் தராமல் நிர்வாகத்தை நடத்தவும் வாய்ப்பு ஏற்படும்.

(பிற்பகல் 1.20)

ஒரு குழு என்ற முறையிலே அமைத்து அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்கள், அவர்களுடைய பெற்றோர்கள் இவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து——நிர்வாகம் செம்மைப்படுத்தப்பட வேண்டும். அந்த ஸ்தாபனங்கள் நிலைநிறுத்தப்பட வேண்டும், என்பதை அடிப்படையாக வைத்து அந்தத் திருத்தத்தை அரசாங்கமே கொண்டுவர வேண்டும். இன்றைக்குள்ள சூழ்நிலையில் தமிழகம் முழுவதையும் பார்த்தால் தனியார் துறையில் புதிதாகக் கல்லூரிகள் தொடங்கபடமுடியாத நிலையில், அரசாங்கத் துறையிலும் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்பட அனுமதி தரப்பட மாட்டாது என்று அரசு கொள்கை ரீதியாக அறிவித்திருக்கின்ற நிலையில் சிக்கல் உள்ள நிர்வாகங்களை செம்மைப்படுத்த வழிவகை காணவேண்டும். தவறான போக்கில் செல்கிற, அதன் மூலம் வகுப்புகளை நிறுத்திக்கொண்டே போகிற போக்கை அனுமதித்தால் கல்வி கற்க விரும்புகின்ற மாணவர்கள் எங்கே போய் நிற்பார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

அதுவும் எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியைப் பொறுத்தவரையில் படிப்படியாகத் திட்டமிட்டே மாணவர்களைச் சேர்க்கிறபோதே எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டே வந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு நிறுத்தியும் விட்டிருக்கிறார்கள். சென்னை மாநகரத்திலே மேல் படிப்பு படிப்பதற்கு கல்லூரிகள் ஏராளமாக இருந்தாலும் இங்கே உள்ள இட நெருக்கடிவேறு எந்த



இடத்திலும் கிடையாது என்ற நிலையில் மாணவர்களின் கல்விக்குப் போதுமான பாதுகாப்பைத் தரவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். இதையெல்லாம் கருத்திலே கொண்டு முன்னாலேயே கொண்டுவந்திருக்க வேண்டிய சட்டத்தை 'பெட்டர் லேட் தேன் நெவர்' என்று சொல்வார்கள், காலம் கடந்து கொண்டு வந்தாலும் கூட இது நல்ல மசோதா இதைச் செய்வதில் எந்தவித தயக்கமும் சுணக்கமும் இருக்கக்கூடாது. பூம்புகார் பேரவைக் கல்லூரி, அவினாசிலிங்கம் செட்டியார் கல்லூரி, எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி இதுபோன்ற கல்லூரிகளில் பழி வாங்கப்பட்ட ஆசிரியர்களுடைய பிரச்னைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும், அவர்கள் பட்டினிப் பட்டாளமாய் தெருவிலே நிற்கிற அளவுக்கு இல்லாமல் அரசாங்கம் உடனடியாக பரிகாரம் காண வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் முன்னாலே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) சட்டத்தையும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறை) சட்டத்தையும் மேலும் திருத்துவதற்கான சட்டமுன்வடிவின்மீது நல்ல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் வெளியிட்டதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பேசப்பட்ட பல்வேறு கருத்துக்களுக்கு என்னுடைய கருத்தை எடுத்துவைப்பதற்கு முன்னாலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மைனாரிட்டி வகுப்பினர் நடத்துகின்ற கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாதோர் ஆகியவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கவேண்டுமென்று இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம். இதைப்பற்றிய கருத்துக்களைச் சொல்கிறபோது ஏன் அவர்களிடத்திலே பேசி ஒரு முடிவு காணவில்லை, அப்படிக் காண்பதற்குப் பதிலாக அரசு இப்படிப்பட்ட நிலைமைக்கு வந்தது என்ற சந்தேகத்தைக் கிளப்பினார்கள். அதற்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். மற்றக் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்கள் அல்லாதோருக்கும் கிடைத்து வருகின்ற வாய்ப்புகள் மைனாரிட்டி வகுப்பினர் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்கள் அல்லாதோர்களுக்கும் இல்லை என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மைனாரிட்டி மக்களாலே நடத்தப்படுகிற தொழிற்சாலைகள், நிறுவனங்கள் இதுபோன்றவற்றில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு கிடைக்கிற பாதுகாப்பு

கூட, அவர்கள் அனுபவிக்கிற பல பாதுகாப்புகள் கூட இந்தக் கல்வி நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கு கிடையாது. இன்றைக்கு இந்தியாவிலே ஒரு வேலை செய்து கொண்டிருக்கிற, ஒரு தொழில் செய்து கொண்டிருக்கிற ஒவ்வொருவருக்கும் கிடைத்துக் கொண்டு வருகிற பாதுகாப்பு மைனாரிட்டியினரால் நடத்தப்படுகிற கல்வி நிறுவனங்களில் பணியாற்றுகிற ஆசிரியை, ஆசிரியர்களுக்கு இல்லை என்பது நம் எல்லோருக்குமே ஒரு சவாலாக இருந்து கொண்டு வருகிறது. ஆகவே அந்த குறிப்பிட்ட பாதுகாப்பிற்காகத் தான் இந்த மசோதாவை, திருத்தத்தை நாம் கொண்டு வருகிறோமே தவிர, மற்றவர் களுக்கெல்லாம் உரிமைகளை வாரி வாரி வழங்கி விட்டு, ஏதோ மைனாரிட்டி மக்களாலே நடத்தப்படுகிற கல்வி நிறுவனங்களை மட்டும் கையிலே எடுத்துக் கொண்டு இந்த மசோதா வருவதாக தவறுதலாகக் கூட தயவுசெய்து நீங்கள் நினைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற எல்லாத் துறைகளிலும், எல்லாப் பிரிவுகளிலும் மெஜாரிட்டி மக்களாலே நடத்தப்படுகிற கல்லூரிகளில் கிடைத்து வருகிற பாதுகாப்பு இந்த குறிப்பிட்ட நிறுவனங்களில் இல்லை என்பதை நாம் பார்த்து, அதை ஆராய்ந்து அதற்கு அந்த பாதுகாப்பைத் தரவேண்டுமென்று கருதித் தான் இந்தத் திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறோம்.

ஒரு தொழில் செய்கின்ற ஒருவர், ஒரு பணி செய்கின்ற ஒருவர் தன்னுடைய உரிமைகளை கெஞ்சி கேட்கிற நிலைமை இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் கருத மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே சட்டப் பூர்வமான உரிமையை, சட்டப்பூர்வமான பாதுகாப்பை தர வேண்டுமென்று அரசு கருதி ஒரு நடவடிக்கை எடுக்கிற போது அதற்கு உள்நோக்கம் இருக்கிறது என்று சொல்வது என்பது ஆச்சரியத்திற்குரிய ஒன்று என்றே நான் கருதுகிறேன். அப்படி தயவுசெய்து யாரும் நினைக்க வேண்டாம். இது சமுதாய நலனை மிக முக்கியமாகக் கொண்டு மற்றவற்றைப் பற்றி கவலைப்படாமல் எடுக்கப்பட்டிருப்பது, ஒரு சிறந்த முடிவாகும். பெரியகுளத்திலே தேர்தல் வருகிறது, நாங்களும் தான் அங்கே போட்டியிடுகிறோம். அதற்காக நாங்கள் சமுதாய நலனை மறந்து விட்டு செல்கிற அந்த நிலைக்குச் செல்லவில்லை என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

THIRU K.S.G. HAJA SHAREEF: On a point of information. May I know from the Hon'ble Minister for Education whether the Government had called both the parties as one together or separately and tried to effect compromise as far as possible?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அதற்கு நான் வருகிறேன். இப்போது பெரியகுளத்திலே நடைபெறுகிற தேர்தலுக்காக என்று கருத்துக்களை தயவுசெய்து யாரும் வெளியிட வேண்டாம். இன்னும் சொல்லப்போனால் கோவை மேற்கு தொகுதியில் மூன்று முறை வெற்றி பெற்றிருக் கிறேன் என்றால் அதில் நான் பெற்ற பெரும்பாலான ஓட்டுக்கள் சிறுபான்மை இனத்தை சேர்ந்தவர்களுடையது தான். இதிலே இன்னும் சொல்லப்போனால் அந்தத் தொகுதியே சிறுபான்மை யினர் தொகுதியாகக் தான் இருக்க முடியுமே தவிர தமிழ் பேசுகிற தமிழர்கள் அங்கே மைனாரிட்டிகளாகத் தான் இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே பெரும்பான்மை மைனாரிட்டிகள் அடங்கிய தொகுதியிலே இருந்து தான் நான் வந்திருக்கிறேன். ஆகவே அவர்களைப் பற்றிய அக்கறை, அவர்களைப் பற்றி நல்ல காரியங்களை செய்யவேண்டுமென்ற எண்ணம் இங்கே யாருக்கு இருந்தாலும் அவர்கள் எல்லோரையும் விட ஒரு படி மேலாக எனக்கிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. ஆகவே மைனாரிட்டி மக்களுடைய உரிமைகளை பாதுகாப்பதில் நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல, இந்த அரசும் யாருக்கும் சளைத்தது அல்ல.

மாண்புமிகு உறுப்பினர் ஹாஜாசெரீப் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள், பேசிப் பார்த்தீர்களா என்று; பேசிப் பார்க்கவில்லை என்று யார் சொன்னது? காலில் விழுவதைத் தவிர பாக்கி எல்லா முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டாகி விட்டது. வைஸ்-சான்சிலர் மூலமாக, டைரக்டர் மூலமாக, கவர்னர் மூலமாக, எனக்குத் தெரிந்த நண்பர்கள் மூலமாக பேசிப் பார்த்தாகி விட்டது. இன்றைக்கு அவர்கள் ஏன் பேச வருகிறார்கள் என்றால் இந்த மசோதாவை தடுக்க வேண்டு மென்கிற தவறான நோக்கத்தோடு வருகிறார்களே தவிர, வேறு எந்த நோக்கத்தோடு வருகிறார்கள்? இன்றைக்குப் பேச வேண்டுமென்று சொல்கின்றவர்கள் அன்றைக்கு எங்கே போனார்கள்? இன்றைக்கு பேசி முடிவெடுக்க வேண்டுமென்று நியாயம் பேசுகின்றவர்கள் அந்தப் போராட்டம் நடைபெறுகின்ற நேரத்திலே வகுப்புகளை மூடி, மாணவிகள் இடம் கிடைக்காமல் இருந்த நேரத்திலே எங்கே போனார்கள்? அப்போது அவர்களுக்கு புத்தி சொல்லி அவர்களை கூட்டி பேசியிருந்தால் இந்த இரசு அவர்களுக்கு நன்றி சொல்லுமே தவிர நிச்சயமாக தவறாக கருதாது. ஆக அன்றைக்கு வராதவர்கள் மசோதா வருகிறது என்ற உடனே எங்கேயிருந்து வருகிறார்கள். இதிலே நியாயம் எப்படி இப்போது மட்டும் தென்படுகிறது? நான் இன்னும் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதிலே இந்திரா காங்கிரசிற்கு பொறுப்பில்லை என்று யாரும் நினைக்கக் கூடாது. அந்த பெட்டிஷன் ஆசிரியர்கள் மூலமாக மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்களுக்கு போய், அது அங்கேயிருந்து உள்துறைக்கு வந்து அவர்கள் எங்களை என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். அந்த அளவிற்கு அந்த பெட்டிஷன் வந்திருக்கிறது.

[1982 செப்டம்பர் 7

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இன்றைக்கு இந்த மசோதா வந்திருக்கிறது என்றால், இது ஏதோ இங்கே இருக்கிற செக்கரட்டேரியட்டிலே உருவான மசோதா அல்ல. அங்கே கல்வித் துறை, சட்டத் துறை, உள் துறை ஆகியவைகளை எல்லாம் பரிசீலித்து, எங்களுடைய கருத்துக்களோடு, தங்களுடைய கருத்துக்களை ஒருமித்து அவர்கள் ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு 'கன்கரன்ட் சப்ஜக்ட்' என்கிற முறையில் இன்றைக்கு இந்த மசோதா இங்கே வந்திருக்கிறது. ஏனென்றால், இந்திரா காங்கிரசினுடைய மேலிடத்தின் ஆதரவோடு வந்திருப்பதாக நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். திரு. ஹாஜா செரீப் அவர்களுடைய கருத்து அதற்கு மாறுபாடாக இருக்கிறது என்றால் அதைப் பற்றி பரிசீலிக்க வேண்டிய, பதில் சொல்ல வேண்டிய கடமை அந்தக் கட்சிக்குத் தான் இருக்கிறதே தவிர, நான் இப்பொழுது அதற்கு மேல் பேச விரும்பவில்லை.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு ஹாஜா செரீப் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். பேச்சு வார்த்தை நடத்துவதற்கு முன்னால், அவர்கள் தங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, இன்றைக்கு சஸ்பென்ஷன் ஆகியுள்ள ஆசிரியர்களின் சஸ்பென்ஷன் உத்தரவை ரத்து செய்ய ஏற்பாடு செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

THIRU K.S.G. HAJASHAREEF: Sir, let me make my position very very clear. I have not taken brief from the Management nor have I taken the brief from the alleged people who are being oppressed or suppressed. As a publicman, I spoke to the Hon. Minister three or four weeks ago and asked whether can't you interfere and speak freely to the management. Even now I will not plead for the management, if they are wrong. I only said that it is a Minority Institution and that he should be very careful because the Minority Institution are given safeguard. If the Hon. Minister says that the concurrence had come from the Centre, then it is not my concern to indulge in it

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அண்ணாமலை யுனிவர்சிட்டியைப் பற்றி அதிகமாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டதைப் போல எஸ்.ஐ.இ.டி.யின்



மீது மட்டும் இப்படி நடவடிக்கை எடுக்கின்ற அரசாங்கம் அண்ணாமலை யுனிவர்சிடியின் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறியிருப்பாரானால் நான் உள்ளபடியே மகிழ்ந்திருப்பேன், பாராட்டியிருப்பேன். அதற்கு மாறாக, அண்ணாமலை யுனிவர்சிட்டியின் மீது எடுக்காததைப் போல், எஸ்.ஐ.இ.டி. மீது எடுக்கவேண்டாம் என்று சொல்வதே விநோதமானது மட்டும் அல்ல, அவர்களுடைய அடிப்படையே நாட்டுமக்களுக்குச் சந்தேகத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்றை நான் இங்கே தெளிவுபடுத்தியாக வேண்டும். ஏதோ நடந்துவிட்டது. ஏன் அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரவில்லை? இராமசாமி, குப்புசாமி என்று அவர்களுக்குத் தெரிந்த பெயர்களை, அறிமுகமான பெயர்களை, பழக்கமான பெயர்களை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் சொல்கிறேன், எதுவும் நடக்கவில்லை. நாங்கள் மதுரைப் பல்கலைக் கழகத்திலே செனட் உறுப்பினர்களும் சின்டிகேட் உறுப்பினர்களும் இரண்டு டெர்ம்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்ற ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தபொழுது இதே காரியத்தை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே செய்வீர்களா? செய்ய மாட்டீர்கள் ஏன் தெரியுமா? ஏதோ நடந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் மறுபடியும் திருத்தத்தை இந்த மாமன்றத்திலே கொண்டு வந்தபொழுது அவர்கள் அதற்கு மேல் பேச முடியவில்லை. தங்கள் கருத்தை அதற்குமேல் அவர்களாலே எடுத்துச் சொல்ல முடியவில்லை. நான் இப்பொழுதும் சொல்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு வந்த ஒரு நிறுவனம் அல்ல. நீங்கள் 7 ஆண்டுக்காலம் கோலோச்சிய காலத்திலேயே அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அந்தத் தனி நபர் கையிலே தான் இருந்து வந்தது. இன்றைக்கு என்ன, என்ன குறைபாடுகளை அந்தப் பல்கலைக் கழகத்தின்மீது சொல்ல முடியுமோ, அத்தனை குறைபாடுகளும் அதற்கு மேலும் அன்றைக்கும் நடந்து கொண்டிருந்தன. இன்றைக்கு நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு ஒரு திருத்தம், இரண்டு திருத்தம் என்று கொண்டு வந்திருக்கிறோம். முழுமையையும் திருத்துவதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறோம். எங்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்த நிர்வாகத்தை அந்தப் பல்கலைக் கழகத்தைச் சரிப்படுத்தியே தீருவோம் என்கிற வாக்குறுதியைக் காப்பாற்றியே தீருவோம். (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிற சங்கடமான நிலைமைகள் எல்லாம், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. கொண்டு வராத நேரத்தில் ஏதோ நடந்து விட்டது என்று சொல்லிய நாம்--அந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்ததற்குப் பிறகு, அந்தக்

குற்றச்சாட்டுக்களிலிருந்து அவர்கள விடுபட்டு விட்டார்கள். 7 ஆண்டுக்காலம் எதையுமே செய்யாத நாம், அந்தக் குற்றச் சாட்டுக்களுக்கு நம்மை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்கிற உணர்வு, எண்ணம் அவர்களுக்கு இருக்க வேண்டும். மக்கள் அதைச் சந்தேகிக்கிறார்கள். ஏன் 7 ஆண்டுக்காலம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை? 7 ஆண்டுக்காலம் உங்களுக்கும் அவர்களுக்கும் இருந்த சம்பந்தம் என்ன? உறவு என்ன? எங்கள் மீது குற்றம் சாட்டுகிற நீங்கள், இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்காவது பதில் சொல்லியே தீரவேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் உணர்ச்சிவசப்பட்டு பேசுகின்றார்கள். இந்த இரண்டு வருஷ காலமாக எஸ்.ஐ.இ.டி. கல்லூரி தகராறு இருந்தும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை, இன்றைக்கு ஏன் எடுக்கிறீர்கள்? இரண்டு வருஷமாக இந்த எஸ்.ஐ.இ.டி. கல்லூரி தகராறு இருந்தும் இன்றைக்கு ஏன் கொண்டு வந்திருக்கிறீர்கள்? இதை ஏன் இரண்டு வருஷங் களுக்கு முன்னால் கொண்டு வரவில்லை? அதற்கு நாங்கள நோக்கம் கற்பிக்கக் கூடாதா? அதைப்போல அண்ணாமலை யுனிவர்சிட்டியிலே பட்டப் படிப்பை மூடுகிறோம் என்று சொன்ன சமயத்திலே அரசாங்கம் மூடக்கூடாது என்று சொல்லிற்றா? இப்பொழுது சொல்கிறீர்கள், காலேஜ் ஆரம்பிக்கிறேன் என்று முடிவெடுத்தபிறகு, அமெண்டமென்ட் கொண்டு வந்த பிறகு எங்களுடைய கொள்கையும், நோக்கமும் அதுதான் என்று. போன வருஷம் படிக்க இடமில்லாமல் போய்விட்ட நிலையில் ஆல்டர்நேட்டிவ் அரேன்ஜ்மென்ட் முடியும் வரையாவது நீங்கள் சொல்லிக்கொடுங்கள் என்று அண்ணாமலை யுனிவர்சிட்டியிடம் சொன்னீர்களா? ஒரு வருஷம் பூராவும் ஆயிரக் கணக்கான மாணவர்கள் படிக்காமல் இருந்தார்களே அதற்கு என்ன காரணம்? ஒரு வருஷமாக நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்கு மூலகாரணம் என்ன? இதற்க க எம்.ஏ. இராமசாமியிடத்தில் நீங்கள் என்ன பேசினீர்கள் என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நாங்கள் எங்கள் மீது கூறப்படுகின்ற புகார்களை, குற்றச்சாட்டுக்களை இல்லை என்று நிரூபித்துக் கொண்டு வருகிறோம். ஆனால் ஏழாண்டுக் காலமாக நீங்கள செய்யாமல் இருந்ததற்கு அந்தக் குற்றச் சாட்டுக்களின் அடிப்படையிலே நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்ற ஒரு குற்றச் சாட்டை நான் இப்பொழுது சுமத்துகிறேன். உங்களைப் பற்றி நாடு அறியும். நீங்கள் எது எதில் என்னென்ன செய்து கொண்டு வந்திருக்கிறீர்கள் என்பதை நாடு அறியும்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ...வரவர்களே, ...ண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பற்றிச் சொல்லி ...ங்கள் மீது குறிப்பாக ஒரு தவறான கருத்தைச் சொன்னதால் ...ான் சொல்ல வேண்டி வந்ததே தவிர, இதுவரைக்கும் ...றிப்பாக எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றியோ, அந்த ...றுப்பினர்களைப் பற்றியோ ஒரு தவறான கருத்தைச் ...சால்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு ...க்கும் நான் ...பசவில்லை. இன்னும் சொல்லப்போனால் இந்த ...சோதாவிற்கும் அவர்களுடைய ஆதரவும் இருக்க வேண்டு ...மன்று விரும்பித்தான் பேசி வந்திருக்கிறேன். ஆனால் ...ன்றைக்கு அவர்கள் பேசும்பொழுது ...டவை ஒரு ...தாரமற்ற குற்றச்சாட்டை, ஆதாரமற்ற ...ரை எடுத்துச் ...சால்லிச் சொல்லி அவர்களே மகிழ்ந்து ...வது என்பது ...வ்வளவு நல்லதல்ல. அப்படிப்பட்ட ...வாதங்களுக்கு ...டம் தர வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய ...ணைத் தலைவரவர்களே, நான் அமைச்சரவர்கள் மேலும் ...ளக்கம் கொடுக்க வேண்டுமென்பதற்காக இந்தக் கேள்வியைக் ...கட்கிறேன். எஸ்.ஐ.இ.டி. கல்லூரியினுடைய நிர்வாகம் ...வறான போக்கிலே ஈடுபட்டிருக்கிறது என்று சொல்லி ...ரசாங்கம் ஒரு வழக்கைத் தொடுத்திருக்கிறது. எஸ்.ஐ.இ.டி. ...ல்லூரி பட்டப் படிப்பு முதலாண்டு மாணவர்களுக்கு அட்மிஷன் ...காடுக்கவில்லை என்பதை மையமாக வைத்து அந்த வழக்கு. ...னால் அதேநேரத்தில் இதே காரியத்தை அண்ணமாலைப் ...ல்கலைக் கழகம் செய்திருக்கிறது. அரசாங்கம் வழக்கு ...பாட்டிருக்கிறதா என்றால் இல்லை. மாணவர்கள்தான் ...ழக்கு போட்டார்கள். நீதிமன்றத்திலே ஸ்டே கொடுக்கப் ...ட்டது. இப்பொழுது நிர்வாகம் மீண்டும் போய் ஸ்டேயை ...வக்கேட் செய்து விட்டது. ஆகவே, அண்ணாமலைப் பல்கலைக் ...ழகத்தினுடைய நிலைமை என்னவென்று கேட்டால் அவர்கள் ...ந்த முடிவைக் கொண்டு வந்தார்களோ-பட்டப் படிப்பிலே ...தலாண்டு மாணவர்களைச் சேர்ப்பதில்லை என்ற அந்த ...டிவில் அவர்களை யாரும் ஒன்றும் செய்ய முடியாதபடி ...ன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இதுகுறித்து நீங்கள் ...டவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக நீங்கள் என்ன காரியம் ...சய்திருக்கிறீர்கள் என்றால் ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு ...ந்து, பல்கலைக் கழகச் சட்ட விதிகளின்படி பத்து மைல் ...ரடியஸுக்குள்ளே வேறு கல்லூரி இருக்கக்கூடாது என்றிருக் ...ன்ற அதை மாற்றி, இருக்கலாம் என்று சொல்லி, அருமை ...ண்பர், உங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சுவாமிநாதன் அவர்கள் ...லைமையில் ஒரு கமிட்டியை அமைத்து, சிதம்பரத்திலே இரண்டு ...ல்லூரிகளை அமைத்திருக்கிறீர்கள். அந்தச் சிதம்பர ரகசியம் ...ன்ன என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, அந்த சிதம்பர ரகசியம் பற் நான் சொல்லிவிடுகிறேன். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பட்ட வகுப்பிலே ஆயிரக் கணக்கா மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு, விடுதியிலேயு வகுப்பிலேயும் எண்ணிக்கையை அதிகமாக வைத்து கொண்டிருந்தார்கள். அங்கே கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலமாக ஒரு ஒழுங்கீனம் ஏற்பட்டு, அந்தப் பல்கலை கழகமே சரியாக இயங்காத முறையில் மாணவர்க வன்முறையிலே ஈடுபட்டு வந்தார்கள். அதிலே இன்னொன்றை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும் கிறேன.

பல்கைலைக் கழகத்திலே பட்டப் படிப்பு இருப்பது என்ப சரியல்ல, பட்ட மேற்படிப்பு இருக்கலாம்; ஆராய்ச்சிப் பிரி இருக்கலாம் என்ற அடிப்படையில் பட்டப் படிப்பு இருக்க கூடாது என்ற கொள்கையை நாம் வலியுறுத்தி வருகிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)

ஆகவே, அண்ணாமலைப் பல்கலைக் ழகம் பட்டப் படிப் நிறுத்தியபொழுது இந்த அரசினுடைய சார்பில் நாங்களு அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்ட நிலைமையிலேதான் அவர்கள் நிறுத்தினார்கள். இல்லையென்றால் நாங்கள் நடவடிக்கை எடுத்திருப்போம். அப்படி நாங்கள் ஏற்றுக்கொண்ட காரணத் தினாலேதான் இன்றைக்குக் கல்லூரியே துவங்குவதில்லை என்கிற முடிவை எடுத்துக்கொண்டிருந்த அரசாங்கம், இன்றைக்கு அந்தக் குறைபாட்டைப் போக்குவதற்காக கல்லூரியைத் துவக்குகிறோம்.

சென்ற ஆண்டே உடனடியாக எடுக்க முடியாததற்குக் காரணம், இந்தச் சட்டச் சிக்கல் மட்டுமல்ல; அங்கே பொதுமக்கள் உடனடியாகக் குழுவை அமைத்து. விதிகளுக்கு ஏற்ப நாம் சில காரியங்களைச் செய்ய வேண்டிய நிலையிலே உடனடியாக அவர்கள் செயல்பட முடியாமல் இருந்தது. இப்பொழுது அவர்கள் அந்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து, நாம் சொல்லியிருக்கின்ற நிபந்தனைகளையெல்லாம் பூர்த்தி செய்ததன் அடிப்படையில் இன்றைக்கு நாம் அந்தக் கல்லூரியை ஆரம்பிக்கிறோம். ஆகவே, அரசு இந்தப் பல்கலைக் கழகத்திலே பட்டப் படிப்பு இருக்கக் கூடாது என்று கொள்கையை ஏற்றுக் கொள்கிறது

(பிற்பகல் 1.40)

பல்கலைக்கழகம் ஒரு சிறந்த மேற்பட்டப் படிப்பு நிறுவன மாக வளரவேண்டும் என்பதை நாம் வரவேற்கிறோம். இன்னும் இருக்கின்ற பல்கலைக்கழகங்களிலே கூட, செய்யலாமா என்று கூட யோசனை செய்து கொண்டிருக்கிறோமே தவிர, வேறல்ல. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் அண்ணா யூனிவர்



சிடியிலே இன்றைக்கு பி.இ. பட்டப்படிப்பு இருக்கின்றது. அது பல்கலைகழகத்திலே இருக்கலாமா, அல்லது வெளியே தனியாக ஒரு கல்லூரியாக எடுத்துச் சென்று விடலாமா என்கிற ஒரு எண்ணம் அரசுக்கு அல்லது இந்த துறையைச் சேர்ந்தவர்கள் இடத்திலே ஒரு தனிக் கருத்தாக அந்த பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களாலே பேசப்பட்டு வருகிறது. ஆகவே ஒரு பல்கலை கழகத்திலே என்ன நடைபெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோமோ அந்த அளவிற்கு மாற்றங்களைச் செய்து எங்களுடைய ஆட்சிக் காலத்தில் பல்கலைக்கழகத்தில் தேவை யான காரியங்கள் நடைபெற்றன. அந்தப்பல்கலைக் கழகத்தின் மூலமாக சமுதாயம் பலவேறு நல்ல நன்மைகளைப் பெற்றது. என்பதை நாங்கள் பார்க்க வேண்டும். அந்த அடிப் படையிலே தான் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

திரு.அ.ரகுமான்கான்: தலைவர் அவர்களே, ஒரே ஒரு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏற்கனவே நிறைய கேள்விகளைக் கேட்கிறீர்கள். இப்போதுமணி 1.40 ஆகிவிட்டது. மேலும் இது கேள்வி பதில் நேரமல்ல. இப்படி ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களும்கேட்டுக் கொண்டே இருந்தால் நாம் அவையை குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க முடியாது.

திரு.அ.ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நான் நீண்ட நேரம் எடுத்துக் கொள்ள மாட்டேன். ஒரு விஷயம் கேட்டு விடுகிறேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே பட்டப் படிப்பிலே முதலாண்டு அட்மிஷன் இல்லாத நிலையை நாங்கள் ஏற்கவில்லை. இருக்க வேண்டும் என்பது தான்எங்கள் கொள்கை ஆனால் அங்கே பல்வேறு பிரச்சினைகள் இருந்தன, ஒரு அமைதி யின்மை இருந்தது. ஆகையினால்தான் அங்கே நாங்கள் ஒரு அவசரச்சட்டம் கொண்டு வந்து கல்லூரிகளை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்தோம் என்று சொன்னார்கள். அதைப் போலவே மைனாரிட்டி இன்ஸ்டியூஷன் ஆக இப்போது இருக்கக் கூடிய எஸ்.ஐ.இ.டி. கல்லூரியிலும் இப்படி ஒரு பிரச்சினை இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். அதை ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல. இங்கேயும் ஒரு கல்லூரியைத் துவங்கலாமே. அதைவிட்டு ஏன் சிறுபான்மையினருடைய நிர்வாகத்தில் உள்ள கல்லூரியை அபகரிக்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு.செ.அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே நான் பதில் சொல்ல முடியாத கேள்வியைத் தான் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். ஆகவே அதற்குப் பதில் சொல்லத் தேவை

யில்லை. என்று கருதுகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு எடுக்கப்படுகிறது என்பதற்கு ஒரு விளக்கத்தை நான் தந்தேன். அதையே எஸ். ஐ. இ. டி. கல்லூரிக்கும் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறார்கள் என்று கருதுகிறேன். அதைச்செய்ய முடியாது.

அதற்கடுத்து, மைனாரிட்டி உரிமைகளின் பேரால்-மைனாரிடி மக்களுக்கு தரப்பட்ட உரிமைகளின் பேரால் தனி நபர்கள் அதை பயன் படுத்திக் கொண்டு சமுதாயத்திற்கு விரோதமான காரியங்களில் சமுக நலனுக்குப் பாதகமான காரியங்களிலே ஈடுபடுகின்றபோது தான் பிரச்சினைகள் வருகின்றனவே தவிர, மைனாரிட்டி மக்கள் தங்களுடைய உரிமைகளை அனுபவிக்கிறபோது இப்படிப்பட்ட பிரச்சினை தோன்றவும் இல்லை. அரசு இப்படிப்பட்ட பிரச்சினைகளைச் சிந்திக்கவும் இல்லை.

ஆகவே மைனாரிட்டிகள் தங்களுடைய உரிமைகளை அவர்
கள் அனுபவிக்கிறார்கள் என்பதில் நம் எல்லோருக்கும் ஒரு
ஆதரவான எண்ணம் தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால்
அந்த உரிமைகளை தவறான முறையில் தனிப்பட்டவர்கள்
பயன்படுத்துகின்றபோது தடுக்கின்ற அதிகாரம் அங்கே செயல்
படுகிற அரசுக்கு இருந்து தீர வேண்டும். அப்படி இல்லை
என்றால், ஒரு தனி நபர் ஒரு இயக்கத்திற்கு மேலே அல்லது ஒரு
சமுதாயத்திற்கு மேலோர் ஆளுகின்ற அரசாங்கத்திற்கு மேலே
அவர்கள் வந்துவிடுகிறார்கள், அது இந்தக் கால சட்டத்திலே
ஏற்றுக் கொள்ள படாது என்பதையும் நான் இங்கே சொல்லி
கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட தவறுகளை இத்தகைய
கல்லூரிகளிலே போக்குவதற்காக, சட்டபூர்வமான பாதுகாப்பை
தருவதற்காகத்தான் ஒரு நல்ல எண்ணத்தோடு தான் எல்லா
துறைகளிலேயும் எல்லா பகுதிகளிலேயும் எல்லோரும் அனுபவித்து
வருகின்ற உரிமைகள் இந்த கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற
மைனாரிட்டியைச் சேர்ந்தவர்கள் சேராதவர்கள் ஆகியோர்
ஆசிரியர் ஆசிரியரல்லாதோர்கள் இவர்களுடைய நலன்களை
முற்றிலும் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தான்
நல்ல எண்ணத்தோடு தான் இம் மசோதா கொண்டு வரப்
பட்டிருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையில் இதற்கு
உங்களுடைய ஆதரவை தர வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். ஆசிரியர்களுடைய மற்ற கோரிக்கைகளைப் பற்றி நாம்
ஆராய்ந்து வருகிறோம். அந்த ஆசிரியர்களின் கோரிக்கையினைப்
பற்றி ஆராய்ந்து நல்ல முடிவை அரசு எடுக்கும் என்ற உறுதி
மொழியினை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். வெளியே பேசப்பட்டதைப் போல ஒன்றுமே
செய்யாமல் இல்லை. நாம் பல்வேறு பிரச்சினைகளை தீர்த்துக்
கொண்டு வருகிறோம். சில புதிய பிரச்சினைகள் தோன்றலாம்
சில பிரச்சினைகள் காலம் கடந்து கொண்டு வரலாம். ஆனால்
அவைகளை எல்லாம் தீர்க்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்
தோடு தான் இந்த அரசு முயற்சியினை மேற்கொண்டு வருகிறது.



இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நான் ஆசிரியர்களை ஒன்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தயவுசெய்து எந்த காரணத்தைப் பற்றியும் வேலை நிறுத்தம் என்கிற ஒரு நிலைக்கு நீங்கள் செல்லக் கூடாது. அது தொழிற்சாலைகளிலே வேலைச் செய்கின்ற தொழிலாளர்களுக்கு அனுபவிக்க கிடைத்த நல்ல உரிமையாக கருதப்படலாம். மற்ற தொழிலாளர்களுக்கு நல்ல உரிமையாகக் கருதப்படலாம் ஆனால் அதே உரிமைகள் ஆசிரியர் அனுபவிக்க முடியுமா என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேறு வகைப் போராட்டங்களைப் பற்றி நாங்கள் சொல்லவில்லை. வேறு வகையில் அரசையோ அல்லது நிர்வாகத்தைப் பற்றி எதிர்த்து பேசுவதை நாங்கள் சொல்லவில்லை. ஆனால் கல்லூரிகளை மூடுவதன் மூலமாக மாணவர்கள், மாணவிகளின் படிப்பை கெடுப்பதன் மூலமாக இந்தச் சமுதாயத்திற்கு நிரந்தரமான பாதிப்பை ஏற்படுத்துகிற உரிமையை ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல. வேறு யாருக்குமே கிடையாது என்கிற அந்த பொதுவான நலனில் அக்கறை கொண்டு நான் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன், தயவுசெய்து இனிமேல் எந்தப் பகுதி ஆசிரியர்களாக இருந்தாலும் இன்றைக்கு இலட்சக் கணக்காக இருக்கின்ற தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கையாளாத அந்த ஆயுதத்தை, ஆயிரக் கணக்கில் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் கையாளாத அந்த ஆயுதத்தை இந்தக் கல்லூரி ஆசிரியர்கள் மட்டும் கையாள வேண்டிய அவசியம் எப்படிவரும் என்பதுதான் நான் இப்போது கேட்கின்ற கேள்வி. அந்தத் தவறான நிலைக்கு ஆசிரியர்கள் எந்த நேரத்திலும் போக வேண்டாம். மற்றபடி உங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க உங்களுடைய நலன்களை பாதுகாக்க உங்களுடைய குறைகளைப் போக்க இந்த தமிழக அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் நடைபெறுகிற அரசு கடந்த நான்கு ஆண்டு காலத்தில் கோரிக்கைகள் நிறைவேற்றி இருக்கிறது என்பதை நினைவுகூர்ந்து கவனிக்க வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்கிறேன். அதை ஏற்று இத்தகைய முயற்சிகளில் இனிமேல் எந்தக் காரணம் கொண்டும் ஈடுபட மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

இங்கே கூட எல்லாக்கட்சித் தலைவர்களும் வேறு சில கருத்துக்களிலே வேறுபாடு காட்டினாலும், ஆசிரியர்கள் நலனைப் பொறுத்தவரையில் அதைப் பற்றி பேசுகிற போது பலபேரும் ஒன்றாக பரிந்துதான் பேசியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இங்கே அங்கம் வகிக்கின்ற போது நீங்கள் நேரடியாக அந்தக் காரியங்களில் ஈடுபடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு வழக்கு போடப்பட்டு இருந்தாலும் கூட அந்த வழக்குகள் திரும்ப பெறப்படும். ஆகவே

அவர்கள் அந்த வகையில் சமுதாயத்தினுடைய நலனை மனதில் வைத்து கல்லூரிகள் சிறப்பாக நடைபெற வேண்டும். கல்லூரிகளிலே படிக்கின்ற அந்த மாணவ மாணவிகளுடைய அந்த நேரங்கள் வீணாக்கக் கூடாது. அந்த இளைஞர்கள் எதிர்கால சமுதாயமாக விளங்குகின்ற அந்த இளைஞர்கள் நமமுடைய இந்தக் காயங்களினாலே அவர்களுடைய வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது. பெற்றோர்கள் அதைப்பற்றி கவலைப் படுகிறார்கள். பொதுநலனில் அக்கறை கொண்டவர்கள் இதைப் பற்றி கவலைப்படுகிறார்கள், இதைப் பற்றி பல்வேறு சினிமாவிலேக் கூட ஒரு காட்சி வந்து கொண்டிருக்கிறது. அதையும் பார்க்க கூடிய ஒரு நிலைமை எனக்கு ஏற்பட்டது அதையெல்லாம் பார்க்கின்ற போது சமுதாயத்தில் அக்கறை கொண்ட யாரும் ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபடுவதை ஆதரிப்பதாக எனக்கு தெரியவில்லை. ஆகவே அந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, உங்களுடைய கஷ்டங்களில், நஷ்டங்களில் இந்த அரசு என்றைக்கும் பங்கு வைக்கும், அதற்காக பாடுபடும்; அதற்காக நடவடிக்கைககளை எடுக்கும் என்பதைஅரசின் சார்பிலே சொல்லி ஆசிரியர்களையும் நான் கேட்டுக் கொண்டு இந்த மசோதாவிற்கு ஆதரவு தந்து நிறைவேற்றித் தருமாறு எல்லா உறுப்பினர்களையும் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ''தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறை) மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு முறை) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்ற பேரவை சட்ட முன் வடிவு எண்.36/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்,,.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1.முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :- தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறை) மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு முறை) திருத்த சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 36/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்,,.



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 8-9-1982 காலை 9 00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·49 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

79. தமிழ்நாடு 1940ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 11-5-1982-ஆம் தேதியிடப் பெற்ற 1146-ஆம் எண்அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4/1939 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

80. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சமய நிறுவனங்கள் (காப்பு முதலீடுகள், பணம் கடன் வழங்குதல்அல்லது பெறுதல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 12-3-1982 ஆம் தேதியிடப் பெற்ற 394 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

81. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு மரம் எடுத்துச்செல்லுதல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வன-மீனளத் துறையின் 27-11-1981ஆம் தேதியிடப் பெற்ற 1376 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 5/1882) 64 அ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

82. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 8-4-1982 ஆம் தேதியிடப் பெற்ற 528 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1982 செப்டம்பர் 8

83. தேசியமயமாக்கப் பெற்ற வங்கிகள் மூலம் வசூலிக்கப் பெறும் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்பெறாத வண்டிகளுக்கான வரியினை திருநெல்வேலி மாவட்டம் சாத்தான் குளத்திலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிளைகள் மூலம் வசூலிப்பது குறித்து உள்துறையின் 19-6-1982 ஆம் தேதியிட்ட பெற்ற 1580 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (வரி விதிப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

84. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் (வரையறுக்கப் பட்டது) 1981 ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டு அறிக்கையும் பெரம்பலூர் சர்க்கரையின் ஆலையின்(வரையறுக்கப் பெற்றது) 1981 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் ஆண்டறிக்கையும் )தமிழ், ஆங்கிலம்) (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்திய சட்டம் 1/1956) 619ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

12. 1-4-1979 முதல் 31-3-1980 முடிய தமிழ்நாடு ஒழுக்க கண்காணிப்பு ஆணைக்குழுவின் 14வது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

புதன்கிழமை, 1982 செப்டம்பர் 8,

ஆவணி 23, துந்துபி, திருவள்ளுவர் 2013,

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

நயனோடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### முன்னாள் இராணுவ வீரர்கள்.

*வினா எண். 21—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழக அரசு முன்னாள் இராணுவ வீரர்களை எந்தெந்தப் பணிகளுக்குப் பயன் படுத்த திட்டமிட்டுள்ளது?

(ஆ) இவ்வீரர்களை இரவு நேர ரோந்துப் பணிகளுக்கு பயன்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) முன்னாள் படை வீரர்களை மின்துறை மற்றும் மருத்துவத் துறைகளில் அவசரக் காலங்களில் பயன்படுத்துவதற்காக அத்துறைகளில் அனுபவம் உள்ள வேலையில்லாத முன்னாள் படை வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கலாம் என்று அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. மேற்கண்ட துறைகளில் அனுபவம் உள்ள முன்னாள் படை வீரர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதினால் இத் திட்டம் இன்னும் செயலாக்கப்படவில்லை.

(ஆ) 350 ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ வீரர்கள் சென்னை மாநகரில் திருடு, கன்னக்களவு போன்ற குற்றங்களைத் தடுப்பதற்காக இரவு நேர ரோந்துப் பணிகளுக்கு 1980ல் நியமிக்கப்பட்டு அவர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இத் திட்டத்தை மாநிலத்தில் மற்ற நகரங்களுக்கு விரிவு படுத்துவதனை மேலே சொன்ன பரீட்சார்த்தத் திட்டம் எவ் விதம் செயல்படுகிறது என்பதனை மூன்றாண்டுகள் கண்காணிக்க வேண்டும் என்பதற்காக தற்சமயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே. நாட்டிற்காக உழைத்த முன்னாள் ராணுவ வீரர் களுக்கும், அவர்களின் குடும்பத்தாருக்கும் உதவி அளிக்க சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசு வைத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது பற்றி தனிக் கேள்வி போட்டால் விரிவாக எடுத்துச் சொல்லலாம். முன்னாள் ராணுவ வீரர்களுக்கு பல்வேறு வகைகளில் சலுகைகள் அளிக்கவும், வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரவும், அவர்களுடைய நலிந்த தன்மையைப் போக்குவதற்கு வழிவகை செய்யும் முறையில் பல திட்டங்களையும் அரசு தீட்டியுள்ளது. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் அது பற்றிய முழு விவரங்களையும் தெரிவிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முன்னாள் ராணுவ வீரர்களுக்கு வேலை கொடுப்பதற்காக — அதாவது Pre-training Course ஏற்படுத்த லாம் என்று இதே மன்றத்திலே இதற்கு முன்னால் அறிவிக்கப் பட்டு இருக்கிறது. அப்படி வேலை கொடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். மேலும், அந்தத் திட்டத்தை அரசு இன்னும் வைத்து இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முன் பயிற்சித் திட்டம் இருக்கிறது. மருத்துவத் துறை, மின் துறை ஆகியவற்றில் அனுபவம் பெற்றுள்ள முன்னாள் ராணுவ வீரர்களின் பெயர்கள் மாவட்டங்களில் இருந்து பெறப்பட்டன. மருத்துவத் துறையில் 24 பேர், மின் துறையில் 17 பேர் உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இப்படி மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட விவரங்களை உள்நாட்டு பாதுகாப்புத் துறை இயக்குநருக்கு Director of Cilvil Defence அனுப்பி வைக்கப்பட்டது. அவர் முன்னாள் ராணுவ வீரர் களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால் பயிற்சித் திட்டத்தை செயலாக்கவில்லை. இருந்தாலும், மேற்கொண்டு அது தொடர்பாக பல்வேறு மாவட்டங்களில் இருந்து மேலும் விவரங்கள் சேகரித்து வருகிறோம். போதுமான அளவிற்கு பயிற்சி பெறுவதற்கு முன்னாள் ராணுவ வீரர்கள் முன்வருவார் களானால் இத் திட்டம் செயல்படுத்தப்படும்.



திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முன்னாள் ராணுவ வீரர்களை அரசுத் துறையில் காவலர்களாகவோ அல்லது அரசு நிறுவனங்களில் காவலர்களாகவோ நியமிக்க அரசு ஆணை ஏதேனும் பிறப்பித் துள்ளதா? அவ்வாறு பயன்பெற்ற ராணுவ வீரர்களின் எண்ணிக்கையை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே, சென்னை மாநகரிலே இரவு நேர ரோந்துப் பணிக்காக 350 முன்னாள் இராணுவ வீரர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். சேலத்தில் 72 முன்னாள் இராணுவ வீரர்களை இரவு ரோந்துப் பணிக்கு நியமிக்கலாம் என்று 12–7–1982 அன்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும் தனியார் நிறுவனங்களிலும் அரசு நிறுவனங்களிலும் காவல் பணிக்கு ஆட்களை நியமிக்கும்போது முன்னாள் இராணுவத்தினருக்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று ஒரு செயற்குறிப்பு எல்லா நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டிருக் கிறது. அதற்காக முன்னாள் இராணுவ வீரர்கள் முகவரிப் பட்டியல் ஒன்றை அவர்களுக்கு அமைக்கப்பட்டிருக்கிற பிரிவு ஒன்று வைத்து வருகிறது. எந்தெந்த நிறுவனங்களிலிருந்து முன்னாள் இராணுவ வீரர்கள் தங்களுக்கு காவல் பணிக்கு வேண்டுமென்று கேட்கிறார்களோ அவர்களுக்கு அந்தப் பிரிவு அனுப்புகிறது. மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்று இப்போது சொல்லுவதற்கான குறிப்பு இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, முன்னாள் இராணுவ வீரர்களை சென்னை மாநகரில் இரவு நேர ரோந்துப் பணிக்கு நியமித்திருப்பதாகச் சொன்னார்கள். நியமித்தும் இருக்கிறார்கள். இப்போது எத்தனை பேர் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள்? அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஊதியம் மிகக் குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்த ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது சென்னை மாநகரில் 350 பேர்கள் இரவு ரோந்துப் பணிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பகுதி நேரப் பணியாளர்களாக இருப்பதால் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் ஊதியமாகத் தரப்படுகிறது. சேலத்தில் 72 பேர்களை நியமிக்க 12–7–1982 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, முயற்சி மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மாதம் 250 ரூபாய் பகுதி நேரப் பணி ஊதியமாக வழங்கப்பட இருக்கிறது. பகுதி நேரப் பணியாக இருப்பதால் இந்த நிலையில் ஊதியத்தை உயர்த்த வாய்ப்பு இல்லை.

* வினா எண். 22. திரு. இல. பலராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) வடாற்காடு மாவட்டம் முன்னாள் இராணுவத்தினர்களுக்கு விடுதி கட்டப்பட்டதா?

(ஆ) இவ்விடுதியில் தங்கியுள்ள இராணுவத்தினர் எத்தனை பேர்?

(இ) இவ்விடுதி கட்டி முடிக்க ஆன தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) 7 பேர்.

(இ) ரூ. 6,29,981.22 (ரூபாய் ஆறு லட்சத்து இருபத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தொன்று மற்றும் பைசா இருபத்தியிரண்டு)

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, இந்த இல்லத்தை கட்டியதற்கான பொதுவான நோக்கம் என்ன? இந்த விடுதியில் அதிகமான பேர்கள் தங்காததற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டைச் சேர்ந்த, வயது முதிர்ந்த, ஆதரவற்ற நிலையில் இருக்கிற முன்னாள் இராணுவ வீரர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்த விடுதி கட்டப்பட்டது. அதுவும் முன்னாள் இராணுவ வீரர்களுக்காக இருக்கிற சங்கத்தின் ஆலோசனையின் பேரில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. பொதுவாக தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களைவிட வடாற்காடு மாவட்டத்தில்தான் அதிகமான அளவில் முன்னாள் இராணுவ வீரர்கள் இருக்கின்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை அங்கே செயல்படுத்த 6,29,981 ரூபாய் செலவில் இந்த இல்லம் கட்டப்பட்டது. இந்த இல்லத்தில் சேர்த்துக் கொள்வதற்காக வைத்திருக்கிற தகுதிகள் சில இருக்கின்றன. அவர்கள் ஒய்வுபெற்று வயது முதிர்ந்தவர்களாக இருக்க வேண்டும். மாதம் 250 ரூபாய்க்கு குறைந்த ஒய்வு ஊதியம் பெறுபவர்களாக இருக்க வேண்டும். இந்த இல்லத்தில் 58 பேர்கள் தங்கலாம்; ஆனால் இப்போது 7 பேர்கள்தான் தங்கியிருக்கிறார்கள். மிகக் குறைந்த அளவிலான நபர்களே தங்க முன் வந்திருப்பதனால் அதற்கான காரணத்தை ஆராய்ந்து விதிகளைச் சற்று தளர்த்தியிருக்கிறோம். தற்போது 250 ரூபாய்க்கு ஒய்வு ஊதியம் பெறுபவராக இருந்தாலும் சேர்த்துக்



கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம். மாதம் 150 ரூபாய் ஓய்வூதியம் பெறுகின்றவர்கள் 75 ரூபாய் உணவுக்கும் உடைக்கும் கொடுக்க வேண்டும். 151 ரூபாய் முதல் 300 ரூபாய் வரையில் பெறுகின்றவர்கள் 100 ரூபாய் கொடுக்க வேண்டும். 351 ரூபாய் முதல் 500 ரூபாய் வரையில் பெறுகின்றவர்கள் 125 ரூபாய் கொடுக்க வேண்டும். 501 ரூபாய்க்கு மேல் ஓய்வூதியம் பெறுகின்றவர்கள் 150 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம். அதன் பிறகும் இந்த 7 நபர்கள்தான் வந்திருக்கிறார்கள். மேலும் பலரை இந்த இல்லத்தில் சேர்த்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறதா என்பதை ஆராய்ந்து வருகிறார்கள்.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, இந்த இல்லத்தில் 7 நபர்கள் தான் தங்கியிருக்கிறார்கள் என்று கூறினார்கள். இல்லத்தில் சேர்த்துக் கொள்வதற்கான விதியை தளர்த்தி இருப்பதாகவும் கூறினார்கள். அது வரவேற்கத்தக்கது. இருந்தாலும் அதிகமான நபர்கள் மனு செய்தும் இடம் கிடைக்கவில்லை என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. அதுபற்றி ஆராயப்படுமா? அரசாங்கம் விதியைத் தளர்த்தி போட்டிருக்கிற உத்தரவை சரியாக செயல்படுத்துகிறார்களா என்பதை யார் கண்காணிப்பது? மேலும் அந்த இடத்தை வேறு ஒரு காரியத்திற்காகக் கேட்டு, அதற்காக அந்த இடத்தைக் கொடுக்க அரசு முடிவு எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இல்லத்தினுடைய ஒரு பகுதி மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை இயக்குநருக்கு அவருடைய அலுவலகத்திற்காக 14 மாதங்களாக வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. 58 நபர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலை வருமேயானால், அரசாங்கத்தின் விதிகளைக்கூட ஓரளவு தளர்த்தி, அவர்களுக்கு இதை முழுமையாகக் கொடுக்கலாம். தற்போது வாடகைக்கு விடுவதற்குக்கூட காரணம் ஓரளவிற்கு வருவாய் இருக்கும் என்றுதான். மொத்தச் செலவு எவ்வளவு இருந்தாலும், இதுவரையில் தங்கியிருந்தவர்கள் எத்தனை பேர்களாக இருந்தாலும் கூட, படையினர் மாளிகை நிதியிலிருந்து ஏற்கப்பட்ட செலவு 22,142 ரூபாய் அளவுக்குத்தான் ஏற்பட்டிருக்கிறது. அரசினுடைய நோக்கம், 58 பேர்கள் அங்கே தங்க முன் வந்தால், அந்த 58 பேர்களும் தங்குவதற்கு அந்த இடத்தை ஒதுக்கித் தரவேண்டும் என்பதுதான்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் அவ்வாறு அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்து அவைகள் தவிர்க்கப்பட்டன அல்லது ஒதுக்கப்பட்டன என்றால் என்ன காரணம் என்று தனியாக ஆராயத்தான் வேண்டும். விண்ணப்பங்கள்

வந்தால், அந்த விண்ணப்பங்களை ஆய்வு செய்து அவர்களுக்கு அங்கே தங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தி தருவதற்கு பரிசீலனை செய்யலாம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது 58 பேர்களுக்கு கட்டப்பட்டது 7 பேர்கள் தான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் நலிந்தவர்கள், போதுமான ஓய்வு ஊதியம் கூட கிடைக்கப் பெறாதவர்கள் என்று அவர்களே ஒப்புக் கொண்டுள்ளார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நிலம் கொடுப்பதாகச் சொல்லி, அப்படி நிலம் கிடைக்கப் பெற்றச் சிலருக்கும், அங்கே போய் தங்குவதற்கு ஏற்ப வசதிகள் செய்து தரப்படவில்லை என்ற காரணத்தால், அவர்கள் அந்த நிலங்களை விட்டுவிட்டுச் சென்று விட்டதாகச் சொல்லப் படுகிறதே, அது உண்மைதானா? இனி வருங்காலத்திலாவது அப்படி நிலம் கொடுக்கப்பட்டவர்கள் போதிய அளவு வசதி செய்து தரப்படாத காரணத்தால் அப்படியே விட்டுவிட்டுப் போய்விடும் நிலைமையை தவிர்ப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற விரை குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. அவர்களுக்கு என்று நிலம் தனியாக ஒதுக்கப்பட்டிருந்தால் அந்த நிலத்தைப் பண்படுத்தி அவர்கள் அதனை பயன் படுத்துகின்ற நிலைதான் இருக்க வேண்டும் என்று அரசு நினைக்கிறது. அதிலே ஏதாவது குறைபாடுகள் இருக்குமேயானால், உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்று மனுக்கள் கொடுத்தால், அவர்கள் அதனை ஆராய்ந்து அவர்களுக்கு அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்குமேயானால், அதைத் தவிர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வார்கள்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தக் கமிட்டியிலே சேர்மேனாக இருக்கக் கூடியவர்கள் யார்? அதிலே மாநில சர்க்காருடைய பங்கு எவ்வளவு? மத்திய சர்க்காருடைய பங்கு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவிலே இருக்கிற இந்தக் குழுவிற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். அந்தத் துறையினுடைய அமைச்சர் என்ற முறையில் நான் துணைத்தலைவராக இருக்கிறேன், மற்ற ராணுவ அதிகாரிகளும் மற்றவர்களும் இதிலே உறுப்பினர்களாக இடம் பெற்றிருக்கிறார்கள். அமால்கமேட்டட் பண்ட் என்று



சொல்லப்படுகிற தொகுப்பு நிதியிலிருந்தும், புது டெல்லி முன்னாள் படையினர் புனரமைப்பு இயக்கத்திலிருந்தும், வேலூர் படையினர் மாளிகையிலிருந்தும், தமிழ்நாடு முன்னாள் படையினர் சேமநல நிதியிலிருந்தும் நிதி ஒதுக்கப்பட்டு, 6 லட்சத்து இருபத்தொன்பதாயிரத்து சில்லரை ரூபாய் அளவில் திருத்தியமைக்கப்பட்டு, இந்த விடுதிகள் கட்டப் பட்டிருக்கின்றன.

**விவசாய வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது பாம்பு கடித்து இறந்தவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை.**

*வினா எண். 23. திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) விவசாய வேலைகளில் ஈடுபட்டிருக்கும் காலத்தில் பாம்பு கடித்து இறந்தால் ரூ. 10,000 (பத்தாயிரம்) உதவித் தொகை வழங்கப்படும் என அரசு அறிவித்தபிறகு உதவிகோரி ஏதேனும் விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனை பேர் பயனடைந்துள்ளார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) விவசாய நிலங்கள் மற்றும் வெற்றிலைத் தோட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் தொழில் செய்யும்போது பாம்பு அல்லது சீத்த மண்டலம் போன்ற விஷப்பூச்சி கடித்து இறந்தால் அவ்விதம் இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ. 5 000 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கலாமென்று அரசாணை எண் 1092, நிதித்துறை, நாள் 4-12-1980—ல் அரசு ஆணையிட்டுள்ளது. அரசு உத்தரவு போட்டிருக்கிறது.

(ஆ) ஐந்து பேர் பயனடைந்துள்ளார்கள்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற போது, பாம்பு கடித்தாலும் அல்லது வேறு எந்த விஷப் பூச்சிகள் கடித்து இறந்தாலும் 5,000 ரூபாய் அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிதியிலிருந்து கொடுப்பதற்கு உத்தரவு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நான் கேட்க விரும்புவது, அந்த உத்தரவு வந்ததற்குப் பின்னால் இந்தவகையில் அப்படி இறந்ததாக எத்தனை பேர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்திருக்கிறது? இந்த உத்தரவின்படி அந்தப் பணத்தை எவ்வளவு பேர்கள் பெற்றிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் அப்படி அரசாங்கத்திடம் இருந்து மனு போட்டு 10 பேர்களுக்கு பணம் கிடைத்திருக்கிறது. இன்னும் 10 பேர்களுடைய மனுக்கள் அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 பேர்களுடைய மனுக்கள் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனக்குத் தெரிந்த வரையில் பாம்பு கடித்து மருத்துவமனைக்கு வந்துவிட்டால் டாக்டர்கள் பரிசோதனை செய்து அதன்படி சர்ட்டிபிஃபிகேட்டை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பட்டு மாதங்கள் பல ஆகியும் உரிய நேரத்தில் உரிய தொகையினைப் பெற முடியவில்லை. எனவே பரிசோதனை செய்ததற்குப் பிறகு உடனடியாக ரெவின்யூ அதிகாரிகள் விசாரணை செய்து குறிப்பிட்ட ஒரு மாதத்திற்குள்ளாக உதவித் தொகை கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

அதேபோன்று இடி இடித்துச் செத்தாலும், வாகனங்கள் மோதுவதால் இறந்தாலும் அப்படிப்பட்டவர்களுக்கும் உதவித் தொகை ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகின்றது. ஆனால் அந்த உதவித்தொகையும் கிடைப்பதற்கு மாதங்கள் பல ஆகின்றன. எனவே அவர்களுக்கும் குறிப்பிட்டு ஒரு மாதத்திற்குள்ளாக உதவித்தொகை கஷ்டம் இல்லாமல் கிடைப்பதற்கு அரசாங்கம் துரிதமான நடவடிக்கை எடுத்து ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, 10 பேர்கள் சம்பந்தப்பட்ட வரையிலே நிதியுதவி அளிக்கப்பட்டிருக்கின்றது. 10 பேர்களின் மனுக்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. அரசின் நோக்கமே உதவித்தொகைகளை மிக விரைவிலே தரவேண்டும் என்பதுதான். ஆனால் குறிப்பிட்டு எந்தெந்த இடங்களில் உதவித்தொகை கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கின்றது என்று உறுப்பினர் அவர்கள் சொன்னால், காலதாமதம் ஆகாமல் அரசு நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்கள் பாம்பு கடித்து இறந்துவிட்டால் உதவித்தொகை 5,000 ரூபாய் வழங்குவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் விவசாயத் தொழிலாளர்கள் பூச்சி மருந்து அடிக்கின்றபோது கூட இறந்துவிடுகிறார்கள். அவர்களுக்கும் நிதியுதவி செய்வது என்பதோடு இந்த உதவித்தொகை தற்போது 5000 ரூபாய் தான் கொடுக்கப்படுகின்றது. இது மிகவும் குறைவு. எனவே இதனை உயர்த்தி 10,000 ரூபாயாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சி மருந்து அடிப்பவர்களுக்கும் கொடுக்கப்படுகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்படிக் கொடுப்பதைப் பொறுத்தவரையில் இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் கொடுக்கின்றது. ஆனால் இப்போதோ தொகையினை உயர்த்தித் தரவேண்டும் என்று சொல்கிறீர்கள். இதுபற்றி நிதிநிலையினை ஆராய்ந்து தக்க நேரத்திலே அரசு முடிவு எடுக்கும்.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, பூச்சி மருந்து அடிக்கும்போது விவசாயத் தொழிலாளர்கள் இறந்தால் அரசு தருகின்ற நஷ்ட ஈட்டுடன் சேர்த்து நிலச்சொந்தக்காரர்களும் தருவதற்கு அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி இதுவரையிலும் அரசு பரிசீலிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது விவசாயத் தொழிலாளர்கள் பாம்பு கடித்து இறந்துவிட்டால் அவர்களுக்கு 5,000 ரூபாய் உதவித் தொகை தரப்படுகின்றது என்றும், அதன்படி 10 பேருக்குத் தரப்பட்டிருக்கின்றது என்றும் சொல்கிறார்கள். விவசாய வேலைகள் என்றால் என்னென்ன வேலைகள் என்பது பற்றி வரையறுக்கப்பட்டிருக்கின்றதா, அப்படியானால் அந்த விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? மேலும் இந்த அரசு ஏற்பட்டதற்குப் பிறகு 10 பேருக்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 10 பேர்களுடைய மனுக்கள் பரிசீலனையில் இருப்பதாகவும் சொன்னார்கள். அவை எவ்வளவு நாட்களாக பரிசீலனையில் இருக்கின்றன. ஏன் இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கின்றது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும். ஆகவே அது அரசு பணமாக இருந்தாலும் மக்களுடைய பணம். உரியவர்களுக்கு சரியான வகையிலே கொடுக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் நன்றாகப் பரிசிலனை செய்து கொடுக்கிறோம். தகுதியற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டால், இப்படித் தகுதியற்றவர்களுக்கு கொடுத்துவிட்டீர்களே என்று கேள்வி கேட்பதற்கும் உங்களுக்கு உரிமை இருக்கின்றது. அப்படி உங்களுடைய உரிமையின்படி கேள்வி கேட்கப்பட்டால் பதில் சொல்ல வேண்டி இருக்குமே என்பதற்காகத்தான் நன்றாகப் பரிசீலனை செய்து ஆராய்ந்து கொடுக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நில உடைமை பதிவு மேம்பாட்டுத் திட்டம்.

*வினா எண் 24.—திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

நில உடைமை பதிவு மேம்பாட்டு திட்டத்தில் சர்வே கற்களை நட்டால், நில அளவை அலுவலர்கள் இருக்கும் போதே நான்கு எல்லைகளை அழிக்கும் நோக்கத்துடன் நடப்பட்ட சர்வே கற்களை அகற்றுவதை தடுக்க அரசு கடுமையான சட்டம் கொண்டு வருமா?

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பட்ட நில அளவை கற்களை அகற்றுவது குற்றமாகும். இதுகுறித்து 1923 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 8 ஆவது பகுதி 15-ன் கீழ் சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் இவ்விதம் செய்தால் அவர்களே பாது காத்துக் கொள்ளவேண்டும் என்று சட்டம் போடப்பட்டிருக்கிறது. இப்படி இப்போது யாராவது செய்தால், 1860 ஆம் வருடத்திய இந்திய பீனல் கோடு செக்ஷன் 434-ன்படி குற்றமாகும். அப்படி குற்றம் செய்தவர்களுக்கு ஒரு வருட கால சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டையும் சேர்த்து தனித் தனியாக விதிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. புதிதாகச் சட்டம் தேவையில்லை.

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1923 வது ஆண்டு சட்டம் 'மெட்ராஸ் சர்வே அண்டு பவுண்டரி ஆக்ட்' ஆகும். அதன்பிரகாரம் செக்ஷன் 16, செக்ஷன் 21படி வில்லேஜ் ஆபீசர்கள், கிராம அதிகாரிகள் இந்த எல்லையைக் காட்டக்கூடிய கற்களை அப்புறப்படுத்தினால், ரிப்போர்ட் செய்ய வேண்டுமென்றுதான் இருக்கிறது. இதிலே அப்படி ரிப்போர்ட் செய்தால், அந்த ரிப்போர்ட் மீது யார் நடவடிக்கை எடுப்பது என்பது சந்தேகம். அது மாத்திரமில்லாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தியன் பீனல் கோடு செக்ஷன் 434ன்படி நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். 434வது செக்ஷன் நான்—காக்னிசபிள் ஆகும். சர்வேயர் ரிப்போர்ட் செய்தாலும், கிராம அதிகாரி ரிப்போர்ட் செய்தாலும் போலீஸ் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாது, நடைமுறையில் பணக்காரர்களும், பலவான்களும் சாதாரண ஏழைகளிடம் இதுமாதிரி கற்களை அகற்றும் போது, அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, சாதாரண ஏழைகள், அல்லது மத்தியதர வகுப்பினர், விவசாயிகள் ஆகியோர்களைக்





காப்பாற்றுவதற்காக பஞ்சாப் மாநிலத்தில் உள்ளதுபோல் எல்லைக்கோட்டை மாற்றுவது, எல்லைக்கோட்டு கற்களை அகற்றுவது போன்றவற்றிற்கு கடும் தண்டனை விதிக்கப்படுகிறது. அதுபோல், சர்வே அண்ட் பவுண்டரிஸ் ஆக்ட் செக்ஷனிலே மாற்றம் செய்து கடுந் தண்டனை அளிப்பதற்கு இந்த அரசு சட்டம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற சட்டப்படி கிராம அதிகாரிகள் ரிப்போர்ட் செய்தாலே போதும் என்றிருப்பது உண்மைதான். ஆனால், அவர்கள் சொல்லுகிறபடி செக்ஷன் 434-ல் தண்டனை விதிப்பதற்கு அதிகாரம் இருக்கிறது என்பதும் உண்மைதான். இது போதவில்லை என்று அவர்கள் சொல்வதாலே, மீண்டும் இது பற்றி சட்டத் துறையோடு ஆராய்ந்து, தேவைப்பட்டால் அதற்கான சட்ட முன்வடிவு கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எல்லைக்கோடு சம்பந்தமாக பெரும்பாலும் எல்லைக் கற்களை பிடுங்கி எறிந்தவுடன் காவலர்களிடம் சொல்கின்றபோது, காவல்துறையிலே உள்ளவர்கள் இது சிவில் விவகாரம், நாங்கள் தலையிட முடியாது என்று கூறுகின்ற காரணத்தினால், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கக்கூடிய சிறிய விவசாயிகள் பெரும்பாலும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இதை உடனடியாகச் செய்வதற்கு இந்தச் சட்டத்தை திருத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி முன்பே நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்து விட்டேன்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வேயர் அளக்கின்றபோதே தவறான முறையில் அளந்து கற்கள் நடப்படுகிறது. மீண்டும் அந்த தவறைச் சுட்டிக் காட்டுகின்றபோது, ஏற்கனவே பழைய நிலையிலே அளந்து, அதே தவறைச் செய்கிறார்கள். அதை ரிப்போர்ட் செய்கின்றபோது, அதனால் பல விளைவுகள் ஏற்படுகின்றது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு, இப்படிப்பட்ட தவறைச் செய்யக்கூடிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்வே எண் அல்லது கல் நடுவதற்கு முன்னால், அது சரியாக இருக்கிறதா, இல்லையா என்பதைச் சரிபார்த்து சரியாக அளந்து தான் அந்தக் கற்கள் நடப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது புதிதாக கற்கள் நடப்படுவதில்லை. எங்காவது தவறு ஏற்பட்டால், அதைத் திருத்திக் கொள்வதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதற்குத் தயாராக இருக்கிறோம். இப்படிப் பொதுவாகச் சொல்வதைவிட உதாரணமாக இந்த இந்த இடத்தில் இப்படி இப்படியெல்லாம் தவறு நடந்திருக்கிறது என்பதை எடுத்து, நீங்கள் எழுத்து மூலமாகக் கொடுத்தால், அது சரியா இல்லையா என்பதை ஆராய்ந்து, அது தவறுதான் என்று தெரிந்தால், தவறு வருவதற்குக் காரணம் என்ன, அதற்கான அடிப்படையைக் கண்டுபிடித்து, அப்படிப்பட்ட தவறுகள் இனிமேல் நடைபெறமால் இருக்க நடவடிக்கை எடுப்பதற்கும், அப்பேர்ப்பட்ட தவறுகள் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அரசுக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*வினா எண் 25—திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு பூராவும் இரண்டாண்டில் தமிழக அரசு அமுல்படுத்துவதால் வேலை வாய்ப்புக்களும் பதவி உயர்வும் ஏற்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) சர்வே பயிற்சிக்கு தனியே கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ, ஆ மற்றும் இ.) பேரவைத் தலைவர் அவர்களே, நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இதை செய்து முடிக்க வேண்டும் என்பதற்காக 2 அல்லது 3 ஆண்டுகளுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு, அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2, 3 ஆண்டுகளில் வேலை முடிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் மொத்தம் புதியதாக எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்? அதனால் எத்தனை பேர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்?



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 5,500 பட்டதாரிகளுக்கும் அல்லது இறுதி வகுப்பு தேறியவர்களுக்கும் வேலை கிடைக்கும் என்று கருதப்படுகிறது. அது மட்டுமல்லாமல், கிராமங்களில் அன்றாடம் தினக் கூலியாக வேலை செய்யும் 20,000 பேர்களுக்கு அதிகமானவர்களுக்கு இதிலே வேலை கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வி வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே' இந்த இந்த சர்வே செய்வதற்கு நூற்றுக்கணக்கான சர்வேயர்கள் பயிற்சிப்பெற வேண்டியிருக்கிறது. அதற்கு போதிய சர்வே பயிற்சி கல்லூரிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம்: சர்வே பயிற்சி செய்வதற்கு உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ அந்த நடவடிக்கை உடனே எடுக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நிலவுடமை பதிவு மேம்பாட்டுத் திட்டம் அமுல்படுத்தப்பட்ட நேரத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலே ஏற்கனவே கூட்டுப் பட்டா வழங்கப்பட்ட காரணத்தால் சரியாக ரீ-சர்வே செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்ற காரணத்தால் கூட்டுப் பட்டா வழங்கப்பட்ட காரணத்தால் பல சிவில் வழக்குகளும், பல போலீஸ் வழக்குகளும் நடப்பதற்கு காரணமாக இருப்பதால் கூட்டுப்பட்டாக்களை தனிப் பட்டாக்களாக வழங்க வேண்டும் என்று பல விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அது சம்பந்தமாக பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை என்பது உண்மையா? அப்படியானால் கூட்டுப் பட்டாக்களை, தனிப் பட்டாக்களாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தமிழகத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட மாவட்டம் அது. ஆகவே இதற்கு முன்னால் ரீ-சர்வே செய்யப்பட்டிருக்கிறது. இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற மனுக்களிலிருந்து மீண்டும் ரீ-சர்வே செய்யவேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறது. அதையும் அரசு பரிசிலனை செய்து ஆவன செய்யும்.

சிறந்த விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துவதற்கான திட்டங்கள்.

*வினா எண் 26—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சிறந்த விளையாட்டு வீரர்களை மேலும் உற்சாகப்படுத்த தமிழக அரசு ஏதேனும் புதிய திட்டங்களை வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்நாட்டின் சிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு விளையாட்டு மற்றும் இளைஞர் பயிற்சித் துறை ஒவ்வொரு ஆண்டும் பாராட்டு விழா ஒன்றினை நடத்தி, அந்த ஆண்டில் பன்மாநில, தேசிய, பன்னாட்டு ஆகிய உலக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அரசு விருதுகள் வழங்கி கௌரவிக்கின்றது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் டோக்கியோவில் நடைபெற்ற ஜூனியர் ஹாக்கி விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர் ஒருவர் கூட இல்லை. தமிழ்நாட்டில் பயிற்சிப் பெற்ற இரண்டு வீரர்கள் இருந்தும் கூட அவர்களை போட்டிக்கு அனுப்ப வில்லை என்று தெரிகிறது. இதுபோல் பல புகார்கள் இருக்கின்றன. பலர் ஒதுக்கப்படுகிறார்கள். இது அரசின் கவனத்திற்கு வந்ததா? இதற்கு தக்க பரிகாரம் செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நேரடையாக இந்தத் துறைக்கு தொடர்பு இல்லை என்றாலும் மாண்புமிக்க உறுப்பினர் அவர்கள் வெளியிட்ட உணர்வு எல்லோராலும் மதிக்கப்பட வேண்டிய ஒன்று கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. உலக ஹாக்கி பந்தயத்தில் நாம் வெற்றிப் பெறாததற்கு முக்கியமான காரணம், அப்பந்தயத்திற்கு வீரர்களைத் தேர்ந்தெடுப்பதில் தவறுகள் ஏற்படுகிறது என்பது பலராலும் சொல்லப்படும் ஒன்று. இதை உரிய பொறுப்பில் உள்ளவர்களிடம் எடுத்துச் சொலலி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. பாலன் : மாண்புமிகு அவைத தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் கால் பந்து விளையாட்டில் ஆர்வம் காட்டப்பட்டு சிறந்து கால் பந்து வீரர்கள் பயிற்சி பெறுகிறார்கள். சென்னையில் நேரு ஸ்டேடியத்தில் அப்படிப்பட்ட கால் பந்து விளையாட்டு வீரர்கள் உருவாகுவதற்கு மாலை நேரத்தில் பயிற்சி பெறுவதற்கு வசதியாக அங்கே பிரகாசமான ஒளி வசதி செய்து தரவேண்டும் என்று கோரிக்கை இருக்கிறது. அந்த கோரிக்கையை அமைச்சர் அவர்கள் நிறைவேற்ற முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கோரிக்கை விடப்பட்டது உண்மை. ஆனால் அதைப்பற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை. ஆகவே தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கும் முயற்சியில் தொழில்நுட்பக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகளில் குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு சலுகை ஓரளவுக்கு நாம் செய்கிறோம். மேலும் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிப்பது என்பது வேறு, இன்ஜினியர்கள், டாக்டர்களை ஊக்குவிப்பது என்பது வேறு. விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் தர வேண்டும் என்பதற்காக எல்லாவிதமான ஆதரவும் தரப் படுகிறது.

பேயன்விளை இந்து ஆரம்பப்பள்ளி.

* வினா எண் 27–திரு. பி. கோசல ஆதித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்செந்தூர் தொகுதி ஆறுமுகநேரி பேயன்விளை இந்து ஆரம்பப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன?

(ஆ) அந்தப் பள்ளியின் அங்கீகாரம் இடையில் ஏன் ரத்து செய்யப்பட்டது?

(இ) மீண்டும் அங்கிகாரம் எப்பொழுது கொடுக்கப் பட்டது?

(ஈ) இப்பொழுது அங்கு எத்தனை ஆசிரியர்கள் வேலை பார்க்கின்றனர்?

(உ) எத்தனை மாணவர்கள் படிக்கின்றனர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 90 ஆண்டுகள்.

(ஆ) இப்பள்ளியில் பணி புரிந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட தலைமையாசிரியரை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளுமாறு, மேல் முறையீட்டு அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவைப்பள்ளி நிர்வாகம் நிறைவேற்றாத காரணத்தால் விதிகளின்படி இப்பள்ளியின் அங்கீகாரம் 11-1-78 முதல் ரத்து செய்யப்பட்டது.

[1982 செப்டம்பர் 8

(இ) 1980-81 கல்வி ஆண்டு முதல் அங்கீகாரம் மீண்டும் வழங்கப்பட்டது.

(ஈ) ஒன்பது ஆசிரியர்கள் வேலை பார்க்கிறார்கள்.

(உ) 238 மாணவர்கள் படிக்கின்றனர்.

(முற்பகல் 9-30)

திரு. எஸ். என். இராமசாமி : தலைவர் அவர்களே, பேயன் விளை இந்து ஆரம்பப் பள்ளியில் ஒன்பது ஆசிரியர்கள் பணி புரிந்தாலும்கூட அங்கே பணிபுரிகின்ற மூன்று ஆசிரியர்களுக்கு இரண்டு ஆண்டுகளாகச் சம்பளம் வழங்கப்படாமல் இருக்கிறது. சம்பளம் கிடைக்காத அந்த ஆசிரியர்கள் சம்பளம் பெறுவதற்கான ஏற்பாடுகளை அரசு உடனே செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நாங்கள் எவ்வளவு இடங்களைத் தருகிறோமோ அந்த இடங்களிலே ஆசிரியர்களை நியமிக்கிறபோது அதற்கான சம்பளத்தை மட்டும் கொடுப்பதற்கான பொறுப்பைத்தான் அரசு ஏற்றுக் கொள்கிறது. அதை மீறி அவர்கள் ஆசிரியர்களை நியமித்துக் கொண்டால் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டியது அந்த நிர்வாகத்தினுடைய பொறுப்பு, அந்த ஆசிரியர்களுடைய பொறுப்பு. சட்டமன்றத்திலே நாம் ஆண்டுதோறும் அனுமதிக்கின்ற இடங்களைப் பல்வேறு மாவட்டங்களுக்கும் பகிர்ந்து அளிக்கிறோம். அந்த முறையிலே 1,2 இடங்களுக்குத்தான் தர முடியுமே தவிர, அவர்கள் நியமித்துக் கொண்ட ஆசிரியர்களுக்கு எல்லாம் நாம் சம்பளம் தர முடியாது.

பள்ளிகளில் புவியியல் பாடம் கற்பிக்க நியமிக்கப்படும் ஆசிரியர்கள்.

* வினா எண் 28—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் புவியியல் (Geography) பாடம் கற்பிக்க புவியியல் படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களையே நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1982 செப்டம்பர் 8]

மேல்நிலை வகுப்புகளில், புவியியல் போதிக்க முதுகலைப் பட்டம் பெற்றவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்ற விதி உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலே இம் மாதிரியான பாடங்களுக்கான ஆசிரியர்களை நியமிக்கிறபோது அந்த அந்தப் பாடங்களிலே தேர்ச்சி பெற்றவர்களைத்தான் நியமனம் செய்கின்ற பழக்கம் இருந்து வருகிறது. அப்படியிருக்கிறபோது, இப்போது புவியியல் பாடத்திலே தேர்ச்சி பெற்றவர்கள் நிறையப் பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே வருகின்ற காலத்திலே அந்த ஆசிரியர்களை நிறைய எடுத்துக் கொள்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, புவியியல் பட்டதாரிகளை நாம் எடுப்பதில்லை என்பது நம்முடைய நிலையாக இப்போது இல்லை. வரலாறு, புவியியல் இரண்டு பாடங்களுக்கும் ஒரு ஆசிரியரைப் போடுகிறோம். அவர் வரலாறு படித்தவராக இருக்கலாம் அல்லது புவியியல் படித்தவராக இருக்கலாம். ஆனால் புவியியல் படித்த பட்டதாரிகள்தான் புவியியலைச் சொல்லித்தர வேண்டுமென்பது சரியான கருத்து. அந்தக் கருத்தை நாம் ஆதரிக்கின்ற முறையிலேதான் மேல்நிலைப் பள்ளிகளிலே புவியியல் பட்டதாரிகளை எடுக்கவேண்டுமென்று வைத்திருக்கிறோம். இதுபற்றிய யோசனைகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம். புதிதாக ஏற்படுகின்ற மாற்றத்திற்கு ஏற்ப பொருளாதாரத்தை 10 வது வகுப்பு வரையிலே வைக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே காலத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்றபடி பாடங்களைத் திருத்தியமைக்கிறபோது இதுபோன்ற கருத்துக்களைப் பரிசீலிப்போம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்கின்ற பணி ஒவ்வோர் ஆண்டும் மிகக் காலதாமதமாகவே செய்யப்படுகிறது. மாவட்டத்திலே உள்ள சி. இ. ஓ. தேர்ந்தெடுத்து இங்கே வந்து அவர்கள் நியமிக்கப்படுவதிலே கால தாமதம் ஏற்படுகிறது. இந்தக் கால தாமதத்தைத் தவிர்ப்பதற்காக நியமனங்களை அவர்களே செய்து கொள்ளக்கூடிய முறையில் அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா?

திரு. எஸ். இராசாராமன் : தலைவர் அவர்களே, வரலாறு படித்தவர்களுக்கு இப்போது புதிதாகப் படித்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது, அதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு படித்தவர்கள் உயர்நிலைப்பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்கள் பலபேர் அதிலே பட்டம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் புரொமோஷன் என்கிற முறையில் வருகிற காரணத்தால் வெளியே தனியாகக் கல்லூரிகளில் படித்து பட்டம் பெற்றவர்களுக்குப் போதுமான வேலை கிடைக்காமல் இருக்கிறது. இது வரலாறு படித்தவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ் படித்தவர்களுக்கும் இந்தப் பாதகமான நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதை ஓரளவிற்குத் தீர்ப்பதற்கு அரசு சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## பாளையங்கோட்டையிலுள்ள நீதிமன்றங்களுக்கான கட்டிடங்கள் கட்டும் திட்டம்.

*வினா எண் 29—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகுகூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையிலுள்ள உரிமையியல் நீதிமன்றத்திற்கும், குற்றவியல் நீதி மன்றத்திற்கும் தனித்தனி கட்டிடங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) எந்த இடத்தில் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இ மற்றும் (ஈ) திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரி ஹைகிரவண்ட்ஸ் மனை வளாகத்தில் ரூ. 54,00,000 மதிப்பீட்டுச் செலவில் சிவில் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்குத்தனித்தனியாகக் கட்டிடம் கட்டுவதற்கான உள் துறை ஆணை 582 எண்ணும் 16-3-81 நாளிட்ட அரசாணையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடங்கள் எவ்வளவு காலத்தில் கட்டி முடிக்கப் பெறும்? இவைகளில் வழக்குரைஞர்களுக்கென்று தனியாக சேம்பர் கட்டித் தருகிற உத்தேசம் இருக்கிறதா?



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிட வேலை துவக்கப்பட்டு விட்டது. மிக விரைவில் முடித்து விட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது. வழக்குரைஞர்களுக்குத் தனியாக ஒரு கட்டிடம் கட்டுவதற்கு அரசு தனியாக அதைப் பரிசீலிக்கும்.

## சிமென்ட் ஆலைகளில் நடத்தப்பட்ட சோதனை.

*வினா எண் 30—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மாநிலத் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் 14–10–1981 அன்று தமிழகத்திலுள்ள சிமெண்ட் ஆலைகளில் சிமெண்ட் மூட்டைகளின் எடை அளவுச் சோதனை நடத்தினார்களா?

(ஆ) ஆம் எனில், சோதனையில் என்னென்ன தவறுகள் எந்தெந்த தொழிற்சாலைகளில் கண்டுபிடிக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) சோதனையில் சிமெண்ட் மூட்டைகளில் எடை குறைவு கீழ்க்கண்ட தொழிற்சாலைகளில் கண்டு பிடிக்கப்பட்டது :—

(1) செட்டி நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், கரூர்,

(2) தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், அரியலூர்.

(3) மெட்ராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட், துலுக்கப்பட்டி.

(4) அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனி லிமிடெட், மதுக்கரை.

(5) இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், திருநெல்வேலி மற்றும்

(6) டால்மியா சிமெண்ட்ஸ் லிமிடெட், டால்மியாபுரம்.

திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமென்ட் மூட்டைகளின் எடை குறைவை மாநில அதிகாரிகள் ஆலைகளில் கண்டுபிடித்தாலும் அல்லது தனிப்பட்ட டீலர்களிடம் கண்டுபிடித்தாலும் அவர்கள் சிமென்ட் சணல் பைகளில் கட்டப் படுவதால் இதுபோன்று எடை குறைவு ஏற்பட்டு விடுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, உரிய

அளவில் சிமெண்ட் கிடைக்கிற வகையில் சிமெண்ட்டை பாலீதின் பைகளில் அடைத்து வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய நிறுவனமாக இருக்கிற தமிழ் நாடு சிமெண்ட்ஸ் பொறுத்தவரைக்கும் இதுபோன்ற உத்தரவை அரசால் இட இயலும். மற்ற சிமெண்ட் ஆலைகளைப் பொறுத்தவரையில் அதற்கு உரிமம் கொடுக்கிற அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறதால் மத்திய அரசிடம் கலந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் மூட்டைகளில் அளவு குறைவாக இருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அரசாங்க ஆலைகளில் அப்படி எடைக்குறைவு ஏற்பட்டிருக்கிறதா? அப்படி ஏற்பட்டிருந்தால் அதை நிவர்த்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச்சொந்தமான சிமெண்ட் நிறுவனம் ஒன்றே ஒன்று தான் இருக்கிறது. தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் என்பதாகும். அதைப் பொறுத்தவரையில் 4 மூட்டைகளில் மட்டும் எடைக்குறைவு காணப்பட்டது. தனியார் சிமெண்ட் ஆலைகளில் எடைக்குறைவு அதிகமாக இருக்கிறது. சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. தனுக்கோடித்தேவர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சிமெண்டைப் பொறுத்தவரையில் தனியார்கள் சிமெண்டை மூட்டைகளிலிருந்து எடுத்துவிட்டு சாம்பல் போன்றவற்றை நிரப்பிக் கொடுத்துவிடுகிறார்கள். இதனால் சிமெண்ட் வாங்குகிறவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள், இப்படித் தவறு செய்பவர்களின் பெர்மிட்டையே கேன்சல் பண்ணி விடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட்டில் கலப்படம் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.



(முற்பகல் 9-40)

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது சிமெண்டினுடைய விலையை ஒன்றுக்கு மூன்றாக, ஏறக்குறைய ரூ. 32 வரையில் உயர்த்தி விட்டார்கள். அப்படி இருக்கும்போது ஆலைகளிலே சோதனை செய்யும்போது எடைகளிலும் குறைவு இருக்கிறது. தமிழகத்திலே இருக்கிற அத்தனை ஆலைகளிலும் ஒன்றிரண்டு தவிர, எடைகளில் குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறதே அதன்மீது நடவடிக்கை எடுக்க மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா? மத்திய அரசாங்கம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமா? மாநில அரசாங்கமே நடவடிக்கை எடுக்க முடியுமானால், கடுமையான நடவடிக்கை எடுத்து, எடை குறையாமல் இருக்க உத்தரவாதம் பெற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசே நடவடிக்கை எடுக்கலாம். அப்படி நடவடிக்கை எடுக்கும்போது, தற்போது இருக்கிற சட்ட விதியின் அடிப்படையில் ரூ. 550 வரைக்கும்தான் அவர்களுக்குத் தண்டனை விதிக்கலாம். அதுவும் ரூ. 500 உச்சகட்டமாக இருக்கிற தண்டனை. ரூ. 5, ரூ10 தண்டனை பெற்று அவர்கள் விடுபட வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அந்தச் சட்டத்தைத் திருத்தவும் அரசு தற்போது முடிவு செய்துள்ளது.

திருச்சி ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரியின் உள்ளே செல்லும் பெரியகழிவு நீர் அகழி.

*வினா எண் 31—திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி நகரில் ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரியின் உள்ளே நகரின் மிகப்பெரிய கழிவுநீர் அகழி செல்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதை அங்கிருந்து அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) தற்சமயம் நடைபெறும் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள் முடிவடைந்து, வீட்டு இணைப்புகள் கொடுத்த பிறகு, மேற்படி கழிவு நீர் அகழியைத் தூர்ப்பது பற்றி ஆராயப்படும்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டம் திருச்சி மாவட்டத்திலே முடிவடையக்கூடிய காலத்தில் இது திறக்கப்படும் என்கின்ற முறையிலே அமைச்சர் அவர்கள் பதில் அளித்துள்ளார்கள். அந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் எப்போது முடிவடையும் என்பதை அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவிக்க இயலுமா?

[1982 செப்டம்பர் 8

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே முடிப்பதற்குப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

விவசாயக் கூலிகளுக்குக் குறைந்தபட்ச ஊதியம் தரத் தவறி நில உரிமையாளர் மீதான நடவடிக்கை.

வினா எண். 32—திரு பெ. ச. திருவேங்கடம்: மாண்புமி தொழிலாளர் நலத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடையளிப்பாரா—

(அ) 1980-81 ல் வடாற்காடு மாவட்டத்தில் விவசாய கூலிகளுக்குக் குறைந்தபட்ச ஊதியம் தரத் தவறியதற்காக நி உரிமையாளர் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

அ) ஆம்.

ஆ) வேளாண்மைத் தொழில்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் தரத் தவறியதற்காக வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர், வாணியம்பாடி மற்றும் குடியாத்தம் வட்டங்களில் 1980-81-ல் மொத்தமாக 109 வழக்குகள் நிலச்சுவான்தார்கள் மீது தொடரப்பட்டு அவ்வழக்குகளில் கீழ்க்கண்டவாறு முடிவுகள் செய்யப்பட்டன:—

| வரிசை எண் | வட்டத்தின் பெயர். | மொத்த வழக்குகள். | சமரசம் ஏற்பட்ட வழக்குகள். | அபராதம் போடப்பட்ட வழக்குகள். | அபராத தொகை. | மீதமுள்ள வழக்கு. |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருப்பத்தூர் | 36 | 31 | 5 | நான்கு வழக்கில் ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ. 25/— ஒரு வழக்கில் ரூ. 20/— | — |
| 2. | வாணியம்பாடி | 36 | 36 | — | — | — |
| 3. | குடியாத்தம் | 37 | 37 | — | — | — |



1982 செப்டம்பர் 8]

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கூலிகளுக்கு மிகக் குறைந்த கூலியைக் கொடுக்காத நிலச் சுவாந்தார்கள் மீது வழக்கு தொடரப்பட்டதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த விவசாயக் கூலிகள் புகார்கள் கொடுத்து அந்த வழக்குகள் தொடரப்பட்டனவா? மாவட்டத்திலே எந்த அதிகாரிகள் இதைக் கண்காணிக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைச் செயல்படுத்தும் பொறுப்பு ரெவினியூ அதிகாரிகளிடம் இருக்கிறது. நாங்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்களைக் கண்டிப்பான முறையில் அமுல் செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளோம். ரெவினியூ துறை அதிகாரிகளும் அதைப் பார்க்கிறார்கள். அவர்களிடம் புகார் செய்தாலும் அதைப் பார்க்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபொழுது ரெவினியூ அதிகாரிகள் என்று சொன்னார்கள். ஆனால், குறிப்பாக ரெவினியூ அதிகாரிகள் இந்த நடவடிக்கை எடுக்காததோடு மட்டுமல்ல, விவசாயத் தொழிலாளர்கள், நேரில் சொல்லியுங்கூட நடவடிக்கை எடுக்கப்படாமலிருக்கிறது. அப்படிப்பட்ட ரெவின்யூ அதிகாரிகள் பேரில் இதுவரையில் எந்த மாவட்டத்திலாவது நடவடிக்கை எடுக்க அரசாங்கத்துக்குக் கோரிக்கை வந்துள்ளதா? அப்படிப் பட்டவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? அது மட்டுமல்ல. விவசாயத் தொழிலாளர்கள் கூலி சம்பந்தமாக ரெவின்யூ அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தும் போது, அவர்களுக்கு வேறு பல பொறுப்புகள் இருப்பதனால், இந்த வேலைகள் அலைக் கழிக்கப்படுகின்றன. ஆகவே, விவசாயிகளுக்குக் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிக்கவும், அவர்களுக்கு வேண்டிய நியாயமான ஊதியம் கொடுக்கச் செய்யவும் ஒரு தனி அதிகாரியை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவா[illegible]ம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல எந்த அதிகாரி மீதும் எந்தக் குற்றச்சாட்டும் இதுவரையும் வரவில்லை. வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். பொதுவாக, குறைந்த பட்ச ஊதியம் விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் செயல்படுத்துவதில் அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்பதை இந்த அரசு உணர்கிறது. 'என்ஃபோர்ஸ்மென்ட், மெஷனரி'யும் அவ்வளவு முறையாக அமைக்கப்படவில்லையென்றும் இந்த அரசு கருதுகிறது. எனவே அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற குறைந்த பட்ச ஊதியத்தை முறையாக வாங்கித் தருவதற்குப் புதிதாக ஏதாவது செயல் முறைத் திட்டங்களைக் கொண்டு வரலாமா என்பதைப் பற்றியும் இந்த அரசு தீவிரமாகப் பரிசிலித்து வருகிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கொடுக்கின்றபொழுது பல டிஸ்ப்யூட்ஸ்-இல் சமரசம் செய்து தீர்வு காணப்பட்டது என்று எண்ணிக்கையைக் கொடுத்தார்கள். அதிலே சட்டக் கூலி கொடுக்கப்பட்டிருக்கிறதா? அந்த செட்டில்மெண்டுகளிலே சட்டக் கூலி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதா அல்லது குறைவாகக் கொடுத்து செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. குறைந்தபட்ச ஊதியம் என்று சொல்லும்பொழுது அதற்குக் குறைவாகக் கொடுத்தாலும் அல்லது செக்ஷன் 13-இன் பிரகாரம் வேலை நேரங்களை அதிகமாக ஆக்கினாலும், என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமேயானால் செக்ஷன் 22 இன் பிரகாரம் பிராசிகியூட் செய்யலாம். ஆனால் துரதிருஷ்டம் என்னவென்றால் மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் சொன்னதைப்போல ஆறு மாதங்கள் சிறை அல்லது 500 ரூபாய் தண்டனை என்று இருக்கிறது. கோர்ட்டிலே 20 ரூபாய், 25 ரூபாய் என்றுதான் போடுகிறார்கள். இதைப்பற்றிப் பரிசீலனை செய்து தண்டனையைக் கொஞ்சம் கடுமையாக ஆக்கலாமா என்று யோசிக்கலாமா என்று கருதுகிறேன்.

திரு பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூலி சரியாக வழங்கப்படுகிறதா என்பதைப்பற்றி ரெவின்யூ அதிகாரிகள் கண்காணிப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். தாலுக்காக்களிலே ரெவின்யூ அதிகாரிகள் இதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது ஏற்கனவே இருக்கின்ற தாசில்தார், டெபுடி தாசில்தார் போன்றவர்கள்தான் கூடுதலாக இந்தப் பணியை நிறைவேற்றுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூடுதலாகத்தான் கவனிக்கிறார்கள். நான் ஏற்கனவே சொன்னதைப்போல இது அவ்வளவு திருப்திகரமாக இல்லை. செப்பரேட் மெஷினரியை இதற்காக அமைக்கலாமா என்பது அரசின் யோசனை. இதைப்பற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 70 இலட்சம் பேர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். குறைந்தபட்சக் கூலிச் சட்டம் தமிழ்நாட்டில் பரவலாக சரிவர அமுலாகவில்லை என்பதை அமைச்சரவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது, கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் இந்தக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்ற பொழுது இந்தக் குறையை ஏற்றுக்கொண்டு நிவர்த்தி



செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். எவ்வளவு விரைவிலே அரசு புதிய சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறைந்த பட்ச ஊதியச் சட்டம் விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவ்வளவு திருப்திகரமாக அமல்படவில்லை என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆனால் இதைச் சட்டத்தின் மூலமாகத் தீர்த்து விட முடியுமென்று இந்த அரசு கருதவில்லை. ஏற்றவகையில் தொழிற்சங்க இயக்கங்கள் அமைய வேண்டுமென்று அரசு கருதுகிறது. அன்-ஆர்கனைஸ்ட் லேபராகிய விவசாயிகளுக்கு என்று ஏதாவது தொழிற்சங்கம் இருக்கிறது, அது என்றைக்காவது வேலை நிறுத்தம் என்று சொல்லிவிட்டுப் பிறகு மறுபடியும் அந்த இயக்கம் வேலை செய்வதில்லை. அவர்களுக்கு என்று தொழிற் சங்கங்கள் நிரம்ப ஏற்பாடு செய்யப்பட்டு இயங்குவது நல்லது. அவர்களுக்காக நிறையத் தொழிற்சங்கங்களை ஏற்பாடு செய்து அவர்களது குறைகளைத் தீர்க்கின்ற முறைகளைச் செயலாக்குவது நல்லது என்று இந்த அரசு கருதுகிறது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, எங்களைத் தாக்குவது மாதிரி அமைச்சரின் பதில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவர்கள் நல்லதாகத்தான் சொன்னார்கள். சிறப்பாகத் தொழிற்சங்கங்களை அமைக்க வேண்டுமென்ற கருத்தைத்தான் சொன்னார்கள். அதுபோன்று சிறப்பாகத் தொழிற்சங்கங்களை அமையுங்கள்.

### தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்படும் வைப்பு நிதி

*வினா எண். 33 திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழிலாளர்களிடம் பிடிக்கப்படும் வைப்புத்நிதியை தொழில் நிறுவனங்கள் முறையாக மாதாமாதம் வைப்பு நிதி அலுவலகத்தில் செலுத்துகிறார்களா?

(ஆ) செலுத்தாமல் இருக்கும் நிறுவனங்கள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (அ) மற்றும் (ஆ) ஒரு விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர்களிடம் பிடிக்கப்படும் வைப்பு நிதியைத் தொழில் நிறுவனங்கள் முறையாக மாதாமாதம் வைப்பு நிதி அலுவலகத்தில் செலுத்துகிறார்களா என்ற கேள்விக்கு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் ஒரு விவர அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறர்கள். அந்த அறிக்கையில், 90 சதவிகிதம் நிறுவனங்கள் செலுத்தியிருக்கின்றன என்றும் மீதியிருக்கின்ற நிறுவனங்கள் செலுத்தவில்லை, அந்த நிறுவனங்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் கொடுத்திருக்கிறார்கள். அப்படியானால் 10 சதவிகிதம் நிறுவனங்கள் இந்தத் தாழிலாளர்களுடைய வைப்பு நிதியைச் செலுத்தவில்லை என்பதை இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

அப்படி நீதி மன்றங்களில் இருக்கின்ற அந்த நிறுவனங்கள் எவை எவை என்பதை அறிவிப்பார்களா? அதன் காரணமாக தொழிலாளர்களுடைய வைப்பு நிதி சலுத்தாமல் இருக்கின்ற தொகை எவ்வளவு என்பதையும் இதில் தோட்டத் தொழில் நிறுவனங்களிடமிருந்து எவ்வளவு வைப்பு நிதி சலுத்தப்படாமல் இருக்கின்றது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய பஞ்சாலைக் கழகத்தால் எடுத்துக் கொள்ளப்பட்ட நசத் தொழில் நிறுவனங்கள்-9, பாக்கித் தொகை 59.13 லட்சம் முறையிட்டு மனுசெய்து நிறுத்தி வைக்கும் ஆணை பெற்ற (ஸ்டே ஆர்டர்) நிறுவனங்களும் வருங்கால வைப்பு நிதிச் (பல்வகை விதிகள்) சட்டத்தின் பிரிவு

19-எயின் கீழ் மனு செய்துள்ள நிறுவனங்கள் எண்ணிக்கை 66—நிலுவைத் தொகை 68.11 லட்சம்; நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை 10—பாக்கித் தொகை 12.84 லட்சம். மூடப்பட்டிருக்கும் நிறுவனங்கள் எண்ணிக்கை 9— பாக்கி தொகை 4.50 லட்சம். பிற நிறுவனங்களின் எண்ணிக்கை 367 ———அவைகளிடம் இருந்து பாக்கி தொகை 59.06 லட்சம்; ஆக மொத்தம் 461 நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய தொகை 203.64 லட்சம் தாகை வரவேண்டியதாக இருக்கிறது. அதற்கு நடவடிக்கை எடுத்துக் காண்டிருக்கிறோம். பாதுவாக தாழிலதிபர்கள் இந்த விஷயத்தில் சரியாக நடந்து காள்வதில்லை. வசூல் செய்த தொகையைக் கொடுப்பதில்லை என்பதை இந்த அரசு அவர்களுக்குச் சால்லி இருக்கிறது. ஸ்லாப் மீட்டிங் நடந்த போதும் தனியாகத் தாழில் அதிபர்களை அழைத்துப் பேசும்போதும் நீங்கள் ஒத்துழைத்து ஒழுங்காக அந்தப் பணத்தை

---

*326..ம் பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப் பெற்றுள்ளது.





கட்டி விட வேண்டுமென்று சொல்கிறோம். நான் ஏற்கனவே சொன்னதைப் போல, கட்டாததற்கு இருக்கின்ற தண்டனைகள் போதுமானதாக இல்லை என்பதை நான் வருத்தத்தோடு இந்த நேரத்தில் சொல்லிக் காள்கிறேன். ஆகையினால்தான் இப்படி எல்லாம் வருகிறது.

திரு. டி. கருப்பையா: தலைவர் அவர்களே, தோட்டக் காடுகள் இறைநச் செலுத்தாமல் இருக்கும் பட்டியலில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருகால் பிற நிறுவனங்ள் என்ற பட்டியலில் இது சேர்ந்திருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவர் அவர் ளே, மல் முறையீட்டின் பேரிலே திருத்தப்பட்டுள்ளதாகவும் அநசற்றேறக்குறைய 68 லட்சம் இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது பீடி தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டதா என்பதையும் அறிய விரும்புகிறேன். அத்தோடு இந்த பீடித் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சம் இந்தப் பிற்கால சேமிப் நிதியை அமல் படுத்துவதற்கு அரசு உடனடியாக ஆவன சய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இப்போது வழக்கு அந்தக் குறிப்பில்லை. ஆனால் ஒன்று. இப்போது வழக்கு மன்றத்திலே புதியதாக 'நியு வேவ் அப்ரோச்' என்று சொல்லப் படுகிறது. யார் ஸ்டே ஆர்டர் கேட்டாலும் எக்ஸ்பார்ட்டி ஸ்டேயாகக் கொடுத்து விடுகிறார்கள். அதனால் நாம் பாதிக்கப் படுகிறோம். நோட்டீஸ் கொடுத்து விசாரித்துத்தான் ஸ்டே ஆர்டர் கொடுக்க வேண்டு என்ற வழக்கத்தை உயர் நீதி மன்றங்கள் பின்பற்றினால் உதவியாக இருக்கும். ஆனால் எடுத்த உடனே ஸ்டே ஆர்டர் கொடுத்துவிடுகிறார்கள். அதைப் பற்றி நான் விசாரித்ததற்கு, ஏதோ நியுவேவ் அப்ரோச் என்று சொல்கிறார்கள். எனவே இனிமேலாவது ஸ்டே ஆர்டர் கொடுப்பதற்கு முன்னாலே இரு சாராரையும் கேட்டுக் கொடுத்தால் இப்படித் தொழிலாளர்கள் பாதிக்கப்படமாட்டார்கள்.

குறிப்பாக கன்பர்மேஷன் ஆப் பர்மனன்சி அதாவது 24 மாதங்களில் 480 நாட்கள் வேலை செய்தால் பர்மனன்ட் செய்ய வேண்டும் என்று நாம் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அதற்கு நம் இரண்டு நிறுவனங்கள் ஸ்டே ஆர்டர் வாங்கி இருக்கின்றன. அதைப்பற்றி உயர் நீதி மன்றம் கூட கவனித்தால் நன்றாக இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

* * *

[1982 செப்டம்பர் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் * * * * * சொல்லக்கூடாது. ஸ்டே கிடைத்துவிடுகிறது என்று சொல்லலாமே தவிர, அதை கமென்ட் பண்ணக் கூடாது. அதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. டி.மணி பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தொழில் நிறுவனங்கள் இந்த வைப்பு நிதியைக் கட்டவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசு நிறுவனங்களிலே குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான ரப்பர் தோட்டங்கள் கீரிப்பாரை, பரலியார் போன்ற இடங்களில் உள்ளன. அங்கே இந்த வைப்புநிதித் தொகை முறையாக விநியோகிக்கப்படவில்லை. அதற்கான ரசீதுகளும் அந்தத் தொழிலாளர்கள் கையிலே கொடுக்கப்படுவதில்லை என்று ஏற்கனவே நிறைய புகார்கள் வந்திருக்கின்றன. இந்தப் பிரச்சினைகள் கூட இந்தப் பட்டியலிலே இடம் பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த தோட்டங்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பாக எழுதிக் கொடுப்பார்களானால் அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி தக்க நடவடிக்கை எடுக்க உடனடியாக ஏற்பாடு செய்கிறேன்.

திரு என். ஏ. பூங்காவனம் தலைவர் அவர்களே, பீடி முதலாளிகள் நீண்ட காலமாக, 2 அல்லது 3 ஆண்டுகளாக கோர்ட்டிலே ஸ்டே வாங்கி இருக்கிறார்கள் என்பதை மற்றக் கம்பெனிகளோடு சேர்த்து அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். அதை நீக்கி புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த வைப்பு நிதியை இந்தப் பீடித் தொழிலாளர்களுக்கு உடனடியாக அமலாக்குவதற்காக,

இந்தத் தடையை நீக்கி அரசாங்கம் என்னென்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது அல்லது இருசாராரையும் அழைத்துப் பேசி உடன்பாடு ஏற்படுவதற்குண்டான முயற்சிகளை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பற்றது.



1982 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டே ஆர்டர் வாங்கிய பிறகு நங்கள் கூப்பிட்டு சம்பந்தப்பட்ட சட்ட அதிகாரிகளிடம் உடனடியாக அதை வெக்கேட் செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று சொல்கிறோம். குறிப்பாக கைத்தறி நெசவாளர் சட்டத்தைக் கூட அவர்கள் மாஸ்டர் வீவர்கள் சென்று ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேசுவதாகக் கூட இருக்கிறேன். அதற்குக் கூட தேதி குறிப்பிட்டுச் சொல்லி இருப்பதாக எனக்கு ஞாபகம். இதில் எல்லாம் பலன் கிடைக்கும் என்று நான் நம்பவில்லை. கோர்ட்டுக்கு என்று போகிறவர்கள் நாங்கள் சொல்கின்ற காரணத்திற்காகவே வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்வார்கள். ஆனால் நாம் பன்னிப்பன்னி கேட்டுக்கொள்வதெல்லாம் அருள் கூர்ந்து சட்டங்களை எதிர்த்து ஸ்டே ஆர்டர் வாங்குவதற்கு வழக்கு மன்றத்திற்குச் செல்லவேண்டாம் என்று, அப்படியே நீங்கள் வெற்றி பெற்றால்கூட சட்டத்தை மறுபடியும் திருத்தி எந்த நோக்கத்தோடு அரசு அதைக் கொண்டு வந்ததோ, அதை மீண்டும் கொண்டு வருவதற்கு நிச்சயம் அரசு செய்யும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்வது நலம் என்று கருதுகிறேன்.

### சோழவந்தான் தொகுதியிலுள்ள ஒரு போக விளைச்சல் நிலங்களை இருபோகமாக மாற்றும் திட்டம்

*வினா எண். 34 —திரு ஏ. சந்திரசேகரன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சோழவந்தான் தொகுதி, தளச்சியம், சித்தாளங்குடி, சி. புதூர், சம்பக்குளம் திருவாயை நல்லூர் ஆகிய கிராமங்களில் உள்ள ஒரு போக விளைச்சல் நிலங்களை, பெரியார் கால்வாய் விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொண்டு மேற்படி நிலங்களில் இருபோகம் சாகுபடி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு.கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) :சி. புத்தூர் கிராமம் தவிர ஏனைய கிராமங்களில் ஒரு போக நிலங்களாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்கள் உரிய அங்கீகாரம் இன்றி, இரு போக நிலங்களாக விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறான மாமூல் கோடை நிலங்கள் மற்றும் மேட்டுப் பகுதி நிலங்கள் பெரியாறு வைகை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் முறைப்படுத்தப்படும். இது தவிர மேற்படி கிராமங்களில் ஒரு போக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

## டேராப்பாறை அணைக்கட்டுத் திட்டம்

**வினா எண் 35. —திரு இரா. முத்தையா:** மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டத்தில் டேராப்பாறை அணைக்கட்டுத் திட்டம் பரிசீலனையில் உள்ளதா

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடை ஏற்கனவே 4 மாதங்களுக்கு முன்பு ஒப்புதல் அளிக்கப்பட்ட விடை புதிய நிலைமைகள் இருக்கிற காரணத்தாலே ஒரு திருத்திய விடையை அளிப்பதற்கு நான் விரும்புகிறேன். அதற்குத் தங்களுடைய அனுமதியைப் பெற்று நான் இந்த விடையை அளிக்க விரும்புகிறேன்.

இத் திட்டத்திற்காக அறிக்கை ஒன்றை தலைமைப் பொறியாளர் அவர்கள் அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அரசு அதைப் பரிசீலனை செய்து அதை எடுத்துக்கொள்ளலாம் என்று சமீபத்திலே ஆணையிட்டிருக்கிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதே பகுதியிலே கட்டளைக்கோம்பை என்ற அணைக்கட்டு திட்டம் அந்தப் பகுதி மக்களுடைய, விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயன் அடையக்கூடிய இந்தத் திட்டத்தை அரசு விரைவாகச் செயல்படுத்துவதற்கு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டம் மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகாவிலே சாத்தூர் பகுதியிலே இருக்கக்கூடிய வட்டாறு ஆற்றில் இருக்கக்கூடிய பல உபநதிகளின் குறுக்கே அமைப்பதாக ஏற்கனவே முடிவு செய்து நாம் அந்த வேலைகளைத் துவக்க இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கக்கூடிய அந்த கட்டளைக்கோம்பை திட்டமும் நீண்டநாட்களாக இருந்து வருகிற கோரிக்கைதான். அதை உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டேராப்பாறை அணைக்கட்டுத் திட்டத்திலே ஏறத்தாழ 1,065 ஏக்கருக்கு மேல் புதிய விளை நிலங்கள் இந்தப் பாசனத் திட்டத்தின் கீழ் வருவதாக அறிகிறேன். அப்படிக் கொண்டுவருகிறபோது ஏற்கனவே அந்த வட்டாறு களின் மூலமாகப் பாய்ந்துகொண்டிருக்கின்ற அங்கப் பகுதியிலே



உள்ள நிலங்களா அல்லது வேறு நிலங்களா? அப்படி வேறு நிலங்கள் என்றால், ஏற்கனவே தண்ணீர் பாய்ச்சப்படுகின்ற, இந்த ஆறுகளில் இருந்து பயன்பெற்றுக் கொண்டிருக்கின்ற நிலங்களுக்குப் போதுமான அளவு தண்ணீர் இருக்கும் என்று அரசு கருதுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பயன் ற்றுவரும் நிலங்களுடைய அளவு 732.55 ஏக்கர். இவைகளுககு முதலிலே பாசன உறுதியை அளித்ததற்குப் பிறகுதான், கிட்டத்தட்ட 1 .75 ஏக்கர் புதிய புஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறுவதற்காக இந்தத் திட்டத்தை அரசு எடுத்திருக்கிறது.

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே டேராப்பாறை அணைக் கட்டுத்திட்டத்திற்குத் தலைமைப் பொறியாளருடைய அறிக்கை பெற்றுவிட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி என்று சொன்னால், இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு? இது எப்போது ஆரம்பித்து முடிக்கப்படும் என்று அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் சமீபத்திலேகூட அதற்குக் கால்கோள்விழா நடத்தி விட்டு வந்தோம். மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் கூட அதிலே பங்கு பெற்றார்கள். ஏற்கனவே அது விரைவாக பணி துவக்கப்பட்டு இருக்கிறது. அதனுடைய மதிப்பீடு ரூ. 233 இலட்சம்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன், வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

## சாத்தனூர் அணையிலிருந்து மேல்மட்டக் கால்வாய் அமைக்கும் திட்டம்.

*** வினா எண் 36—திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சாத்தனூர் அணையில் இருந்து மேல் மட்டக் கால்வாய் வெட்டுவதற்கு ஆய்வுகள் செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்போது துவங்கப் படும்?

[1982 செப்டம்பர் 8

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** (அ) மற்றும் (ஆ): இத் திட்டம் அரசினால் ஆய்வு செய்யப்பட்டது. மேல் மட்ட வாய்க்கால் வெட்டும் பணியை, பொன்னையாற்றை நவீனப் படுத்தும் திட்டத்துடன் இணைத்துச் செயல்படுத்தினால், இத் திட்டத்தின் நீரியல் (H drology) அதிகரிக்கும் எனக் கருதப் பட்டதால், பொன்னையாற்றை நவீனப்படுத்தும் திட்டத்தோடு மேல்மட்டக் கால்வாய் வெட்டும் திட்டத்தை இணைத்து அனுப் பும்படி தலைமைப் பொறியாளர் (ஆய்வு) கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. த. வேணுகோபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலங்களில் பொன்னையாற்றில் சாத்தனூர் கொள்ளைவை விடப் பல மடங்கு அதிகமாகத் தண்ணீர் வருவதால், அத் தண்ணீர் வீணாக ஆற்றில் சென்றுவிடுகிறது. ஆகவே, அந்த அணையில் இருந்து மேல்மட்டக் கால்வாய் வெட்டுவதற்கு அரசு ஆய்வுகள் நடத்தியுள்ளது என்று ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் கூறியிருக்கிறார்கள். இப்போது பொன்னையாற்றை நவீனப்படுத்தும் திட்டத்துடன் அதனை இணைத்துள்ளதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள் ளார்கள். எந்தப் பணியை உடனடியாக மேற்கொள்ள அரசு முன்வர இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னையாற்றின் மீது கட்டப்பட்டுள்ள சாத்தனூர் அணைக்கு மேலே, வறண்ட மாவட்டமாக இருக்கும் தருமபுரி மாவட்டத்திற்குப் பயன் அளிக்கும் வகையில் அங்கே 5 அணைகள் கட்டும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்து, அந்த வேலைகள் நடந்து வருகின்றன. அப்படி வருகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், மழைக்காலங்களில் வரும் தண்ணீர் அளவு 40 சதவீதம் என்கிற அளவிற்குக் குறைந்து விடும் என்று மதிப்பீடு செய்யப்பட்டு இருப்பதால், பொன்னையாற்றை நவீனப்படுத்தும் திட்டத்தை மேற்கொள்கிறபோது கூடுதல் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கும் என்பதால், அதையும் இணைத்து, இந்த மேல்மட்டக் கால்வாய் வெட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, பொன்னையாற்றை நவீனப்படுத்துகிறபோது, இந்த மேல்மட்டக்கால்வாய் வெட்டு வதைச் செய்யலாம் என்று அரசு கருதுகிறது.

**திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், வறட்சி மாவட்டம் என்பதால், சாத்தனூர் அணைக்கு மேல் பகுதியில் 5 அணைகள் கட்டுவதற்குத் திட்டங்கள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டார்கள். சாத்தனூர் அணையின் மேல் பகுதியில் 5 அணை களைக் கட்டினால் சாத்தனூர் அணைக்கு வரக்கூடிய நீர் குறைந்து விடும். அதனால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள்



1982 செப்டம்பர் 8]

மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அந்த 5 அணைகள் கட்டும் திட்டத்தை நிறுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** தலைவர் அவர்களே சாத்தனூர் அணையின் கொள்ளளவுக்கு மேல் கிடைக்கும் கிட்டத்தட்ட 750 மில்லியன் கனஅடி உபரி நீரை மிச்சப்படுத்து வதுதான் நம்முடைய முக்கியமான நோக்கமாகும். சாத்தனூர் அணைக்கு மேலே நாம் ஐந்து அணைகள் கட்டுகிறபோது, அவ்வளவு உபரி நீர் கிடைக்காது. கிட்டத்தட்ட 400 மில்லியன் கன அடிதான் கிடைக்கும் என்று திட்டமிடப்பட்டு இருக்கிறது. முதலில், திட்டமிடப்பட்ட 750 மில்லியன் கன அடி உபரி நீரைக் கொண்டு 5,788 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கலாம் என்பதற்காக 638 இலட்ச ரூபாய் நிதி தேவைப் படும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆகவே, அணைக்கு மேலே கிடைக்கும் உபரி நீரை மிச்சப்படுத்துவதற்குத்தான் நாம் இந்த 5 அணைகளைக் கட்டுகிறோம். ஆகவே, இந்த 5 அணைகளை மேலே கட்டுவதால், சாத்தனூர் அணையின் கொள்ளளவு நிச்சயமாகக் குறையாது.

**திரு என். ஏ. பூங்காவனம்:** தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையில் இருந்து மேல்மட்டக் கால்வாய் கட்டுவதற்கா உலக வங்கியில் இருந்து அரசு நிதி கோரியதாகவும், அதற்கு அவர்கள், நாம் ஏற்கனவே தயாரித்துள்ள சீரமைப்புத் திட்டத்தை மாற்றி, புதிய முறையில் அதைத் தயாரித்தால் நிதி தருகிறோம் என்று கூறியதாகவும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. இங்கே அரசினுடைய நிதி ஆதாரங் களில் இருந்துதான் 638 இலட்ச ரூபாய் செலவு செய்து 5,788 ஏக்கர் புதிய புஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதி கொடுப் பதற்காக மேல்மட்டக் கால்வாய் வெட்டுவது என்று அரசு ஆய்வு செய்து இருக்கிறது. பின்னர், தருமபுரி மாவட்டம் வறண்ட மாவட்டமாக இருப்பதால், அதற்குப் பயன்தரும் வகையில் 5 அணைகளைக் கட்டுவது என்று ஆய்வுகள் செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டது. ஆகவேதான, இந்தப் பொன்னையாற்றை நவீனப்படுத்துகின்றபோது அதிகமான உபரிநீர் கிடைக்கும் என்பதால், அப்போது இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள லாம் என்று அரசு கருதுகிறது,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 37-ம், 38-ம் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்பெறும்.

178/172—5

## தொழில் உரிமங்கள்.

* வினா எண். 37—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 31-3-1981 ஆம் தேதியன்று மத்திய அரசின் அனுமதி பெறுவதற்காக நிலுவையில் உள்ள தொழில் உரிமங்களின் எண்ணிக்கை யாது?

(ஆ) இம் முறையினை துரிதப்படுத்த மாநில அரசு நடவடிக்கை ஏதேனும் மேற்கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

* வினா எண். 38—திரு மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980—1981—ம் ஆண்டுகளில் அரசால் எத்தனை கனரக தொழிற்சாலைகள் தொடங்க உரிமம் வழங்கப் பட்டுள்ளது?

(ஆ) அரசு பரிந்துரைத்த அனைத்து கனரக தொழிற்சாலை களுக்கும் மத்திய அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, (அ) 31-5-1982 வரையில் 65. ஆனால், 6-9-1982 முடிய 20.

(ஆ) மற்றும் (இ): மாநில அரசால் பரிந்துரை செய்யப் பட்டு மைய அரசின் முடிவை எதிர்நோக்கியுள்ள விண்ணப்பங் களைப் பற்றி தமிழக தொழில் துறை அதிகாரிகள் அங்கே சென்று வலியுறுத்துகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதங்கள் மூலம் தொடர்பு கொண்டும், நேரில் செல்கிறபோதும் மைய அமைச்சர்களைச் சந்தித்துச் சொல்கிறார்கள். தொழில் அமைச்சர் என்ற முறையில் நானும் மாண்புமிகு மைய அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தும், கடிதங்கள் மூலமும் வலியுறுத்தி வருகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, ஒரு சப்மிஷன். இப்படிப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சரவர்கள் ஒரு விவரமான அறிக்கையை அவையில் வைத்தால் அதை உறுப்பினர்கள் பார்த்துவிட்டு, துணைக் கேள்விகள் கேட்க வசதியாக இருக்கும். வெறுமனே எண்ணிக்கையை மட்டும் சொல்லிவிட்டால் எப்படி மற்ற விவரங்களைத் தெரிந்துகொள்வது? ஆகவே, இனிமேலாவது இப்படிப்பட்ட வினாக்களுக்கு விவர அறிக்கை வைக்கும்படி தலைவரவர்கள் டைரக்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



திரு ரா. உமாநாத்: விவரம் முழுவதையும் சொல்லிவிட்டால் துணைக்கேள்விக்கு இடமில்லாமல் போய்விடும். நான் கேள்விக்கு வருகிறேன். சபாநாயகர் அவர்களே, இப்போது நிலுவையில் இருக்கக்கூடிய தொழில் உரிமங்களில் மொத்த காபிட்டல் இன்வால்வ்டு எவ்வளவு? அதிலும் தனியார் துறையில் எவ்வளவு? பப்ளிக் செக்டாரில் எவ்வளவு? பிரதானமான பிராஜக்ட் ஏதாவது நிலுவையில் இருக்கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே,

In 1977:

- Speciality papers 3600 tonnes
- Speeda meter cables, Madras
- Nylon tyres, Manali

In 1978:

- Industrial machinery, Madras
- Cast and forged steel and stainless steel, Chingleput
- Tyre retreading-Sundaram Industries

In 1979:

- Aluminium Boilers
- By products unit
- Service crusdores
- Industrial Machinery
- Gypsem Corporate Board
- F.R.B. Finished and solid products
- Super-phasphate
- Finished leather etc.

மாண்புமிகு தலைவரவர்களே, இப்படிப் பொதுவாக கேள்விகள் வருகிறபோது பதில் அளிப்பதற்கு முன்னால் அவையிலே அறிக்கை வைப்பது சரியாகாது என்று கருதுகிறேன். இந்த வினாக்களுக்கு இன்னும் நிறைய விவரங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் சொல்ல வேண்டுமென்றால் காலம் அதிக மாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பினால் தனியாக இன்னொரு நாள் தனியார் துறை, கூட்டுறவுத்துறை, பொதுத் துறைகளில் என்னென்ன தொழில்கள், எவ்வளவு காஸ்ட் என்ற விவரங்களை அச்சடித்து அவையில் வைக்கத் தயாராக இருக் கிறேன். தலைவரவர்கள் அனுமதித்தால் இப்போதே சொல்லவும் தயாராக இருக்கிறேன். இன்னும் நூற்றுக்கு மேற் பட்ட தொழில்கள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 37, 38-க்கான விடைகள் மிகவும் நீளமாக இருப்பதால் அவற்றை அச்சிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையில் வைப்பார்கள்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1982 செப்டம்பர் 8

அவ்வறிக்கை வைக்கப்பெறும் அன்று உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்கலாம்.

வினா எண்கள் 39-ம், 40-ம் மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 10-10)

## (2). தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. அ. ரகுமான்கான்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இலங்கையிலே மரண தண்டனை அளிக்கப்பட்டிருக்கிற திரு. ஜெகன், திரு. குட்டிமணி பற்றி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றிய பிரச்சனை பின்னால் வருகிறது. அதனால் இப்போது நான் அனுமதிக்க வில்லை; உட்காருங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அரசாங்கத்தின் சார்பாகவே அதைக் கொண்டு வருகிறீர்கள் என்று சொன்னால், பரவாயில்லை. அதில் எல்லோரும் பேசிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது....(குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்பதைத் தயவு செய்து முதலிலே கேட்டுவிட்டு பிறகு தீர்ப்புச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வது வெளிநாட்டு விவகாரம். அது குறித்து தலைவர்கள் எல்லாம் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருவார்கள். அப்படி முடிவிற்கு வந்தவுடனே, சபையில் அதனை எடுத்துக் கொள்ள அனுமதிக்கிறேன். பிறகு நீங்கள் பேசலாம்.



1982 செப்டம்பர் 8]

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, அவை சம்பந்தமாக நான் ஒரு பிரச்னையை தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். சபை நடக்கும் இந்தக் கூடத்தை 8.45 மணிக்குத்தான் காலையில் திறக்க வேண்டும் என்று உத்தரவு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே. அப்படியென்றால டேபிள்களில் பேப்பர்களை வைப்பதற்கோ டஸ்ட் கிளீன் போன்ற வேலைகளுக்கோ நேரம் போதாதே, ஆகவே அது மாதிரி உத்தரவு இருக்கிறதா? இருந்தால் அதை மாற்றுவீர்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே இங்கே காலை யில் 8¼ மணிக்கெல்லாம் வந்துவிடுகிறேன் அதனால் என்னை நம்பி முன்னதாகவே திறக்கலாம் என்று உத்தரவு பிறப்பித்து விடுகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவதிலே ஏற்பட்ட சிக்கல் காரணமாக, தஞ்சை மாவட்டத் திலே ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காவிரி நீர் பிரச்னையை அவையில் எடுத்துக்கொள்ளும்போது 1½ மணி நேரம் ஒதுக்குகிறேன், அப்போது நீங்கள் பேசலாம்.

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள் 31-3-1982 அன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் என் தொகுதியின் சார்பாக ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறேன். அந்த மனுவிற்கு அமைச்சரிடம் இருந்து எனக்குப் பதில் வரவில்லை. ஆனால் அரசு இணைச் செயலாளரிடமிருந்து வந்திருக்கிறது. நான் கேட்டது என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட தர்மபுரி மாவட்டப் பிரச்னை. செயலாளரிடமிருந்து வந்த பதிலிலே, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்த மனுவின் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி கடிதம் எழுதிவிட்டு எனக்கு அதன் பிரதியைத் தந்திருக்கிறார்கள் தர்மபுரி மாவட்டப் பிரச்னைக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் எப்படி நடவடிக்கை எடுப்பார்? உறுப்பினர்களுக்கே இது போன்ற பதில் வந்தால் தனிப்பட்ட மனிதர்களுக்கு எப்படியோ...—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. தீர்த்தராமன் அவர்கள் அது பற்றிய முழு விவரமும் எனக்கு முதலிலே எழுதிக் கொடுக்கட்டும் பிறகு விசாரிக்கிறேன். சபையிலே இப்படி திடீர் என்று எழுந்து எது சம்பந்தமாக என்று புரியாமலேயே சொன்னால் எப்படி புரிந்து கொள்ள முடியும்? எப்படி தீர்ப்பு வழங்க முடியும்?

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, 6-9-1982 ஆம் தேதியன்று நான் கிழக்கு முகவை மாவட்டத்தில் குடி தண்ணீர்ப் பஞ்சம் மிகக் கடுமையாக இருக்கிறது என்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது எப்பொழுது வரும் என்று சொல்லப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வறட்சி பற்றி இந்த அவையிலே கொண்டு வரப்படும்போது, இதையெல்லாம் அதிலேயே பேசிக் கொள்ளுங்கள்.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்திலே அம்மாபேட்டை பஞ்சாயத்திலே தாக்கியது குறித்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திடீரென்று எழுந்து இதுபோன்ற பிரச்சினைகளை எல்லாம் கேட்கக்கூடாது. அப்படிக் கேட்டால் அதற்கு யார் என்ன பதிலைச் சொல்ல இயலும்? எனவே முறைப்படி எப்படி கொண்டுவர வேண்டுமோ அப்படி அவையிலே கொண்டுவர வேண்டும்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

மலுமிச்சம்பட்டி எவரெஸ்ட் என்ஜினியரிங் தொழிற்சாலையில் கலகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. ரமணி, ரா. கிருஷ்ணன், என். பழனிவேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் "கோவை மாநகரத்திலிருந்து பொள்ளாச்சிக்குச் செல்லும் பாதையில் மலுமிச்சம்பட்டியில் உள்ள எவரெஸ்ட் என்ஜினியரிங் தொழிற்சாலையில் 3-9-1982 அன்று கலகம் விளைவித்து பலர் கத்தியால் குத்தப்பட்டும்,



ஒருவர் இறந்தும் 50-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டும் உள்ளதால் தொழிலாளர்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. ரமணி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அப்பட்டமான சட்ட மீறல்கள் காரணமாக ஏற்பட்டுள்ள ஒரு நிலை பற்றி எடுத்துச் சொல்லி இது குறித்து விவாதிப்பதற்காக ஏன் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்ற விஷயத்திற்கு நான் வரவேண்டி இருக்கின்றது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜூலை மாதத்திலே இந்த எவரெஸ்ட் கம்பெனியிலே தகராறு ஏற்பட்டது. இது ஆயிரம் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட தகராறு. இதிலே 6 யூனிட்டுகள் இருக்கின்றன. மலுமிச்சம்பட்டியிலே அதன் 2 யூனிட்டுகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினையிலே டெபுட்டி லேபர் கமிஷனர் அவர்கள் தலையிட்டு ஒரு தற்காலிக ஒப்பந்தம் ஏற்பட்டு அதன்படி இரண்டு கோரிக்கைகளை மட்டும் முதலாளி ஏற்றுக் கொண்டு பாக்கி கோரிக்கைகளை ஒரு மாதத்திற்குள்ளாகத் தீர்த்து கொள்ளலாம் என்றும் அதற்கு டி.சி.எல். அவர்கள் விசாரணை நடத்த வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் பிறகு அந்த ஒப்பந்தத்தை அமலாக்காமல் அதை மீறி முதலாளி பக்கத்திலே இருந்து தகராறு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் டி. சி. எல். அவர்கள் மறுபடியும் அழைத்துப் பேசலாம் என்று அழைத்தபோது முதலாளியின் பிரதிநிதிகள் அதில் கலந்து கொள்ளவில்லை. அதனால் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

பிறகு திரும்பவும் டி.சி.எல். அவர்கள் விசாரணை நடத்தி பேசுவதற்குக் கூப்பிட்டபோது தாங்கள் எந்தவிதமான முடிவுகளையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்று சொல்லி விட்டனர் முதலாளிகள். இப்படி லேபர் இலாக்காவே எதுவும் செய்ய முடியாத வகையிலே அந்த முதலாளிகள் சட்டத்தையும் மீறி லேபர் இலாக்காவினையும் புறக்கணித்து விட்டனர். இத்தகைய முதலாளிகளின் போக்கு காரணமாக வேறு வழியில்லாமல் தொழிலாளர்கள் 3-8-1982 முதல் எல்லா யூனிட்டுகளிலும் உள்ள 1000 தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் நடத்த ஆரம்பித்து ஒரு மாத காலம் ஆகின்றது. இந்தப் பிரச்சினை குறித்து தொடர்ந்து ரிப்போர்ட்டுகள்

(முற்பகல் 10-20)

தொழிற்சங்கங்களிலிருந்து அனுப்பிக் கொண்டே இருந்தும் முதலாளிகள் காவல் துறையின் துணையுடன் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். காவல் துறையின் உதவி, முதலாளிகள் சட்டத்தினை மீறி நடந்தாலும் அவர்களுக்குத்தான் கிடைத்ததே அல்லாமல் தொழிலாளிகளுக்குக் கிடைக்கவில்லை. பெரிய நாயக்கன் பாளையம் பிரிவு டி.எஸ்.பி. மதுக்கரை போலீஸ் ஸ்டேஷன், போத்தனூர் போலீஸ் ஸ்டேஷன் போன்ற எல்லா காவல் துறையினரும் பரிபூரணமாக முதலாளிக்கு ஆதரவு கொடுத்து வந்தார்கள். இப்படித் தொடர்ந்து முதலாளிகள் எந்தக் காரணத்தைக் கொண்டும் சட்டத்திற்குட்பட்டு வர முடியாது என்று முடிவு மேற்கொண்டதற்குப் பிறகு வேறு வழி யின்றி இந்த விஷயம் கலெக்டர் அவர்களுக்கு, டி.சி.எல். அவர்கள் மூலமாகவும் தொழிற்சங்கங்களின் மூலமாகவும் ரிப் போர்ட் பண்ணப்பட்டு கலெக்டர் முதலாளியைக் கூப்பிட்டு பேசி சமாதான நிலைமை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்த போதும் முதலாளி முடியாது என்று மீறிவிட்டார்கள். அந்த முதலாளி எதையும் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. தொழிலாளர்கள் அன்-கண்டிஷனலாக வேலைக்குத் திரும்ப வரட்டும், அதற்குப் பிறகு பேசுவேன் என்று சொல்லுகிறார். டி.சி.எல். அவர்கள் சொன்ன ஆலோசனையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. கலெக்டர் அவர்கள் சொன்னதையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அதற்குமேல், ஒரு மாத கால மாக தொழிலாளர்கள் பிடிவாதமாக, உறுதியாக இருக்கி றார்கள் என்று தெரிந்தவுடனே, போலீஸ் உதவியைக் கொண்டு, முதலாளியின் காரிலேயே வெளியிலே இருந்து சில கருங்காலி களைக் கொண்டு வந்து, கம்பெனிக்குள் வேலை செய்ய முயற்சி செய்கிறார். அதற்கும் மேலே சட்ட விரோதமாக அந்தக் கம்பெனியைச் சார்ந்த ஸ்டாப் அங்கத்தினர்களை—அவர்களுக்கும் இந்த மெஷின் வேலைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அவர்களை—வேலை செய்ய வைப்பதில் தூண்டினார்கள். அவர்கள் வேலை செய்தால், அவர்களுக்கும், வேலை நிறுத்தம் சேய்யும் தொழிலாளர்களுக்கும் தகராறு ஏற்படும், சண்டை உண்டாகும் என்று சொல்லப்பட்டது. இதற்கு 'பாரா'விற்காக வந்த மதுக்கரை சப் இன்ஸ்பெக்டரிடத்திலே ரிப்போர்ட் செய் தார்கள். அந்த சப் இன்ஸ்பெக்டர் அங்கே இருக்கும் எலக்ட்ரிசிடி ஸ்விட்சைப் போட்டு, மெஷினை ஓட்டும்படி அந்த ஸ்டாப் அங்கத்தினர்களைச் சொல்கிறார். சாத்வீகமான முறையில் வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள், இது சட்டத்தை மீறும் செயலாகும் என்று அந்த சப் இன்ஸ்பெக்டரிடம் சொல்லு கிறார்கள். ஆனால், சப் இன்ஸ்பெக்டர் ஒரு போர்மேனைப் போல் நடந்து கொள்கிறார். எனவே, இதை அனுபவித்துக் கொண்டு வந்த தொழிலாளர்கள் இதைப்பற்றி மீண்டும் கலெக் டருக்கும், அரசாங்கத்திற்கும் ரிப்போர்ட் செய்கிறார்கள். நமது கனம் தொழில் அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர்



அவர்களுக்கும், இது சம்பந்தமாக கடிதங்களும், மற்றும் சகல போலீஸ் அதிகாரிகளுக்கும், கலெக்டர் அவர்களுக்கும் தொடர்ந்து உடன் கணக்கிலே கடிதங்கள் எழுதி அனுப்பு கிறார்கள். இதற்கெல்லாம் எந்தவிதமான பதிலையும் ஒழுங் காகக் கொடுக்காமல், லேபர் இலாகாவும் தன்னால் ஒன்றும் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு, தொடர்ந்து மறுபடியும் டிபுடி லேபர் கமிஷனருக்கும், கலெக்டருக்கும் ரிப்போர்ட் செய்து, கலெக்டரும் அந்த முதலாளியைக் கூப்பிட்டுப் பேசி; அதற்கு அந்த முதலாளி ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு, டிபுடி லேபர் கமிஷனர் இறுதியாக ஒரு அட்வைஸ் அனுப்புகிறார் அந்த முதலாளிக்கு. எந்தக் காரணத்தைக் கொண்டும், அந்த ஸ்டாப் மெம்பர்களை உள்ளிருப்பு வேலைநிறுத்தம் நடக்கும்போது, அந்தத் தொழி லாளர்களிடத்திலே போய், இவர்களை வேலை செய்யக்கூடிய நடவடிக்கை எடுக்கக்கூடாது, அது தவறு. அது தவிர்க்கும்படி அவர் அட்வைஸ் அனுப்புகிறார். உள்ளிருப்பு வேலை நடக்கும் இடத்தில் கருங்காலிகளைக் கொண்டு போனால் எப்படி? அவர்கள் உள்ளே சாத்வீகமான முறையிலே உட்கார்ந்து கொண்டு வேலை செய்யும் தொழிலாளர்களிடத்திலே போய், இவர்களைப் போய் மெஷினை எடுத்து வேலை செய்யுங்கள் என்று சொன்னால் தகராறு வரும், சண்டை ஏற்படும், கலகம் ஏற்படும். அப்போது போலீஸ் தலையீடு வரும். அப்போது போலீஸ் உதவியுடன் இந்த ஸ்டிரைக்கை உடைத்து விடலாம் என்ற தந்திரத்தைத் தெரிந்து முதலாளி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல விவகாரங்களைப் பற்றிப் பேசலாம்; முக்கியமானவற்றை மட்டும் சொல்லுங்கள். ஏற்கனவே அங்கே ஒரு ஆள் இறந்து போயிருக்கிறார் ; அடி தடியாகி இருக்கிறது. மேலும் அங்கே இதனால் பிரச்சனை வந்துவிடக் கூடாது.

திரு. கு. ரமணி : வேறு பிரச்னை வராது. சொல்ல வேண்டிய வற்றைத்தான் சொல்கிறேன். கலெக்டர் சொல்லியும் அதே நிலைதான். எனவே, வேறு வழியில்லாததினால், தொழி லாளர்கள் அந்த வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருந்தார்கள். அப்போதுதான், 3 ஆம் தேதி அன்று அந்த முதலாளி சில கருங்காலிகளை ஜீப்பில் அழைத்துக் கொண்டு, கம்பெனிக்குள் சென்று, வேலை செய்யச் சொல்லும்போது அங்கே வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள், அவ்வாறு வேலை செய்யக் கூடாது என்று சமாதானமாக அவர்களைக் கேட்டுக் கொண்டும், நீங்கள் திரும்பிப் போய்விடுங்கள் என்று கேட்டுக் கொண்டும், அந்த முதலாளியின் கையாட்கள், சில ரௌடிகள் உட்கார்ந்து கொண்டு சத்தியாகிரக முறையில் உட்கார்ந்து கொண் டிருக்கும் தொழிலாளர்களைக் கத்தியால் குத்தி விடுகிறார்கள். அப்படி குத்திய உடனேதான் அந்த கம்பெனி முழுவதிலும் ஒரு பதட்ட நிலை ஏற்பட்டு, அடிபட்ட ஆட்கள், குத்தப்பட்ட

ஆட்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கே ஒருவர் இறந்து விடுகிறார். அதற்குப் பிறகு போலீஸ் தலையிட்டு, அந்தக் கம்பெனியில் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்யும் அனைத்துத் தொழிலாளர்களையும் 302 செக்ஷன்படி கைது செய்து அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள். கம்பெனி முழுவதிலும் உள்ள தொழிலாளர்கள் அரெஸ்ட் செய்யப்பட்டு, கம்பெனி காலியாக வைக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமை அங்கே உருவாக்கப்பட்டு, அதன் விளைவாக இன்றையதினம் கூட அங்கே வேலை நிறுத்தம் நடைபெறுகிறது; யாரும் வேலைக்குச் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. அந்த முதலாளி கலெக்டர் சொல்வதையும் கேட்பதில்லை; டீ.சி.எல். சொல்வதையும் கேட்பதில்லை. அந்த முதலாளி பரிபூரணமாக சட்டத்தை மீறி தொழிற் சங்க உரிமையில் போலீசாரைத் தலையிடச் செய்து, அதன் விளைவாக இத்தகைய நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இந்த மோசமான விளைவுகளைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை காலாகாலத்தில் தொழிலாளர் நல இலாகா எடுக்க முடியாமல் போனதும், அதே மாதிரி மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்கள் தலையிட்டும், காரியங்களைச் செய்ய முடியாத நிலைக்குக் கொண்டு வரப்பட்டது அந்த முதலாளிக்குப் போலீஸ் ஆதரவு கிடைத்திருக்கிறது. போலீஸ் தலையிட வேண்டுமென்று அரசாங்கம் சொல்லவில்லை; அது அரசாங்கத்தின் கொள்கையும் அல்ல. தொழிலாளர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். பாதுகாப்பு கொடுப்போம் என்று சொல்லக்கூடியதையும் மீறி இந்தக் காரியம் நடந்து இருக்கிறது. ஆகவே இதில் அடிப்படையாகவே சட்ட மீறல்கள். போலீஸ் தாக்குதல்கள் கடுமையாக ஏற்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. டிஸ்டிரிக் கலெக்டர் போன்றவர்கள் தலையிட்டும் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமானால் இங்கே எப்படி உரிமைகள் மீறப்பட்டு இருக்கின்றன? எப்படி சட்டங்கள் மீறப்பட்டு இருக்கின்றன? என்ற அடிப்படையான விஷயங்களை சாங்கோபாங்கமாக இங்கே விவாதித்து ஒரு சரியான முடிவுக்கு நாம் வர வேண்டும். அப்போதுதான் தொழிலாளர்களுடைய உரிமைகளையும், சட்டங்களையும் முறையாக செயல்படுத்த முடியும். ஆகவே இந்த மன்றத்தின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இந்த விஷயங்களை விரிவாக விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, எவரெஸ்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் மற்றும் அதனுடன் இணைந்த பிளாக்ஸ்மித் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி, ஆட்டோஸ்மித் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் அழகர் இண்டஸ்ட்ரீஸ் இந்த நிறுவனங்களில் 890 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.



இந்தத் தொழிலாளர்கள் ஏ.ஐ.டி.யூ.சி.யுடன் இணைக்கப்பட்ட கோவை மாவட்ட பொறியியல் பொது தொழிலாளர் சங்கத்திலும் மற்றும் சி.ஐ.டி.யூ. உடன் இணைக்கப்பட்ட கோவை ஜில்லா ஜெனரல் இன்ஜினியரிங் மற்றும் மெக்கானிக்கல் தொழிலாளர் சங்கத்திலும் உறுப்பினர்களாவர். இவர்கள் நிர்வாகத்துடன் 31–12–1980 அன்று தொழிற் தகராறுகள் சட்டப் பிரிவு 12 (3)-ன்கீழ் ஒரு உடன்பாடு செய்து கொண்டனர். இந்த உடன்பாடு 31–12–1982 உடன் முடிவுறும். பின்னர், தொழிற் சங்கங்கள் சில கோரிக்கைகளை எழுப்பியதன் பேரில் 14-7-1982 அன்று இன்னொரு 12 (3) உடன்பாடு ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் 7-வது பிரிவு வருமாறு:—

"இடைக்கால நிவாரணம், சம்பள நிர்ணயம் முதலிய பிரச்சினைகள், கோவை தொழிலாளர் துறை துணை ஆணையரால் மேலும் பேச்சு வார்த்தைகட்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஒரு மாதத்திற்குள் சுமுகமாகத் தீர்க்கப்படும்."

இந்தப் பிரிவை உடனடியாகச் செயற்படுத்த வேண்டுமென்று தொழிலாளர்கள் வற்புறுத்தி வந்தனர். ஆயினும், ஏற்கனவே 31–12 1980 ல் ஏற்பட்ட உடன்பாடு 31–12–1982 அன்று வரை நடைமுறையில் இருப்பதால், இரண்டாவதாக ஏற்பட்ட உடன்பாடு செல்லாது என்று நிருவாகம் கூறி வந்தது. இப்பிரச்சினை மீது கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் 27-7-1982, 3–8–1982, 10–8–1982, 13–8–1982 மற்றும் 23–8–1982 அன்று சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும் நிர்வாகத்துடன் 1–9–1982 அன்று பேச்சு வார்த்தைகள் நடத்தினார். இடையில், 3–8–1982 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வேலை நிறுத்தம் செய்து வரும் தொழிலாளர்களில் 50 பேர் 3—9—1982 அன்று தொழிற்சாலைக்குள் புகுந்தபோது தொழிலாளர்கட்கு இடையே ஏற்பட்ட கலவரத்தினால், சாந்தப்பன் என்கிற தொழிலாளர் பலத்த காயமுற்று, பின்னர் மருத்துவமனையில் 3—9—1982 அன்று இறந்து விட்டார். காவல் துறையினர் வழக்கு ஒன்றினைப் பதிவு செய்து பிணைவிடா குற்றங்களுக்காக 51 தொழிலாளர்களைக் கைது செய்து, காவலில் வைத்துள்ளனர்.

4—9—1982 அன்று கோவை சென்றிருந்த தொழிலாளர் நல ஆணையர் நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி, கோவை தொழிலாளர் நலத் துணை ஆணையருடனும், மாவட்ட ஆட்சியருடனும் சமரசப் பேச்சு வார்த்தைகளைத் தொடருமாறும், விரைவில் ஒரு சுமுகமான உடன்பாட்டுக்கு வந்து தொழில் அமைதியைப் பராமரிக்க உதவுமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 செப்டம்பர் 8

கோவை மாவட்ட ஆட்சியரும், கோவை தொழிலாளர் நலத் துணை ஆணையரும் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகின்றனர். விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்க போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்பொழுது நிலைமை அமைதியாக உள்ளது. எனவே அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(முற்பகல் 10-30)

## 4. கவன ஈர்ப்பு.

### விவசாயிகளுக்கு லெவி விலையில் சிமெண்ட் கிடைக்காதது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, ''புதிய லெவித் திட்டத்தில் விவசாயக் காரியங்களுக்கு லெவி விலையில் சிமெண்ட் கிடைக்காததால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

1979-ம் ஆண்டிலிருந்து சிமெண்ட் மீது கட்டுப்பாடு இருந்து வந்தது. அப்போது தமிழகத்திற்குச் சராசரியாக ஒரு காலாண்டிற்கு 3.4 லட்சம் டன்கள்தான் ஒதுக்கப்பட்டு வந்தது. இது மின்சாரம் மற்றும் பாசனத்துறைகளுக்கும் உட்பட்டது. இந்த ஒதுக்கீட்டிலிருந்து 1.5 லட்சம் டன்கள் பொது விநியோகத்திற்காக ஒதுக்கப்பட்டு வந்தது. 1-3-1982 முதல் மத்திய அரசு சிமெண்ட் மீதான கட்டுப்பாட்டை தளர்த்திய பின்பு மத்திய சிமெண்ட் கட்டுப்பாட்டலுவலர், புதுடில்லி நடப்பு ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளுக்கு 1.42 லட்சம் டன்கள் ஒதுக்கீடு செய்துள்ளார். இந்த ஒதுக்கீட்டிலிருந்து பொது மக்கள் விநியோகத்திற்காக 30,000 டன்களே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது எல்லா மாவட்டங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. சிமெண்ட் மீதான கட்டுப்பாட்டை தளர்த்திய பிறகு, வெளிச் சந்தையில் ஒரு சிமெண்ட் மூட்டை ரூ. 62 அளவில் தாராளமாகக் கிடைத்து வருகிறது.



1982 செப்டம்பர் 8] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

2. மத்திய அரசின் புதிய கொள்கையின்படி கீழ்க்கண்ட நுகர்வோர்கள், திட்டங்கள் மற்றும் வேலைகள் ஆகியவை லெவி சிமெண்ட் ஒதுக்கீடு பெறும் தகுதியுடையவை ஆகும்.

(அ) முன் உரிமை பகுதிக்கும், சமூகத்தில் நலிந்த பிரிவினருடைய தேவைகளை நிறைவு செய்வதற்காக லெவி சிமெண்ட் உபயோகப்படுத்தப்படும். முன்போலவே மாநிலங்கள் ஒவ்வொரு காலாண்டுக்கும் மைய அரசிடமிருந்து சிமெண்ட் ஒதுக்கீடுகளைப் பெறும். இந்த ஒதுக்கீடுகளைக் கொண்டு கீழே குறிப்பிட்டுள்ள இனங்களின் தேவைகள் நிறைவு செய்வதற்காக பயன்படுத்தப்படும்:—

(1) அரசுத்துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அலுவலகங்கள்.

(2) ஆலை கட்டிடம் கட்டுவதற்காக சிறு தொழில் நிறுவனங்கள் சிமெண்ட்டை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யும் சிறுதொழில்கள், சமூக மேம்பாட்டிற்காக அமைந்துள்ள கிராமங்களில் வீடு கட்டுதல், குடிசைவாழ் மக்கள், ஆதி திராவிடர்கள், ஆதிவாசிகள் சமூகத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டுதல், கிராமங்களுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம், மேலும் புதிய 20 அம்சத் திட்டத்தில் அடங்கிய எல்லா இனங்கள்.

(3) 1981-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1 லட்சத்திற்கு அதிகமாக ஜனத்தொகை உள்ள நகரங்களுக்கு 100 சதுர மீட்டர் வரையிலும், 1 லட்சத்திற்கு குறைவாக ஜனத்தொகை உள்ள கிராமப்புற பகுதிகளுக்கு 120 சதுர மீட்டர் மேற்படாமல் தரைமட்டம் அமையும் வீடுகள் கட்டுதல்:

(4) குடியிருப்பு வீடுகளுக்குப் பழுது பார்த்தல். மேலும் நீர்ப்பாசனம், மின்சாரம் திட்டங்களுக்காக லெவி சிமெண்ட் வழங்கப்படும்.

(5) திரை அரங்குகள், சிற்றுண்டிசாலைகள், வங்கிகள், பலமாடி அடுக்கு கட்டிடங்கள், வியாபார கட்டிடங்கள், 100/120 சதுர மீட்டர் தரைமட்டம் மேலுள்ள கட்டிடங்கள் ஆகியவை களுக்கு லெவி சிமெண்ட் வழங்கப்பட மாட்டாது. ஆனால் கோயில்கள், மசூதிகள், மாதாகோயில்கள் போன்ற எல்லா மத வழிபாடு நடைபெறும் இடங்கள் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற கல்வி நிலையங்கள் ஆஸ்பத்திரிகள் மற்றும் தர்ம ஸ்தாபனங்கள் கட்டுவதற்கும் லெவி சிமெண்ட் ஒதுக்கப்படும்.

3. அண்மையில் வந்துள்ள செய்திகளின்படி தமிழகத்திலுள்ள இரண்டு சிமெண்ட் ஆலைகள் (இண்டியா சிமெண்ட் தாளையத்தூர் அரசு சிமெண்ட்ஸ், ஆலங்குளம்) தங்களின் திறனில் 50 சதவீதத்துக்கு மேல் உற்பத்தி செய்யும் சிமெண்டை வெளிச் சந்தையில் எந்தவிதமான விலை அல்லது விநியோக கட்டுப்பாடு இல்லாமல் விற்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

4. கட்டுப்பாடு இருந்தபோது பொதுமக்கள் விநியோகத்திற்காக 1.5 லட்சம் டன்கள் அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. மைய அரசின் குறைவான ஒதுக்கீட்டினால் பொது மக்கள் விநியோகத்திற்காக காலாண்டிற்கு சுமார் 30,000 டன்கள் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஒதுக்கீட்டிலிருந்து பொதுமக்கள் 100/120 சதுர மீட்டர் தரைமட்டம் மேலுள்ள கட்டிடங்கள் கட்டுவதற்கும், குடியிருப்புகளை பழுது பார்க்கவும் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கு மேல் தேவைக்கு விவசாய காரியங்கள் உட்பட பொதுமக்கள் சிமெண்ட்டை வெளிச்சந்தையிலிருந்து வாங்கிக் கொள்ளலாம். லெவி சிமெண்ட்டின் ஒதுக்கீட்டை அதிகப்படுத்துமாறு மைய அரசுக்கு மாநில அரசு எழுதியது. இதை அதிக்கப்படுத்த முடியாது என்று மைய அரசு தெரியப் படுத்தியுள்ளது. ஆதலின் மைய அரசு லெவி சிமெண்ட்டை கூடுதலாக ஒதுக்கீடு செய்தாலன்றி மாநில அரசு எந்த ஒரு தேவையோ, அல்லது பொதுமக்களின் தேவையோ முழுவதும் பூர்த்தி செய்ய இயலாது.

5. மேலும் இவ்வரசு பின்பற்றும் சிமெண்ட் கொள்கை, மத்திய அரசின் கொள்கையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட சிமெண்ட்டை அரசுத் துறைகளுக்கும் நிறுவனங்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குமென மறு ஒதுக்கீடு செய்வதன்றி தனியாக வேறு எதுவும் செய்வதற்கில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இதுவரையில் விவசாயக் காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்டு வந்த—கிணற்றுச் சுற்றுச் சுவர் கட்ட, பைட் லைன் போட, விவசாயக் கட்டடங்கள் கட்ட கொடுக்கப்பட்டு வந்த—குறைந்தபட்ச சிமெண்ட் கூட இன்றைக்கு கொடுக்கப் படக்கூடிய நிலைமை இல்லையென்று சொல்கிறார்கள். காரணம் மத்திய அரசினுடைய ஒதுக்கீடு குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. விவசாயக் காரியங்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் கொடுக்க வேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?





மாண்புமிகு திரு. எஸ. திருநாவுக்கரசு: சிமென்ட் மீது கட்டுப்பாடு இருந்தபோது கால் ஆண்டுக்கு 3.4 லட்சம் டன்கள், இப்போது கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதற்குப் பிறகு ஒதுக்கப்படுவது 1.42 லட்சம் டன்கள். 3.4 லட்சம் டன்கள் கால் ஆண்டுக்கு ஒதுக்குவதில் பொதுவிநியோகத்திற்கு 1.5 லட்சம் டன்கள் ஒதுக்கப்படுகிறது. இப்போது மொத்தமே 1.42 லட்சம் டன்கள்தான் ஒதுக்கப்படுவதால் 30 ஆயிரம் டன்கள் மட்டுமே மாவட்டங்களிலே பொது மக்களுக்கு விநியோகத்திற்காகக் கொடுக்கப்படுகிறது. மீதம் இருக்கிற லெவி சிமென்ட் அரசினுடைய பல்வேறு துறைகளுக்கு தன்னிறைவுத் திட்டத்திற்கு, சத்துணவுத் திட்டத்தின் கீழ் கட்டடங்கள் கட்டுவதற்கு, பொது துறைகளுக்கு ஒதுக்கப்படுகிறது. இவற்றைக் கருத்திலே கொண்டு குறைவான அளவு வழங்கப்படுவதைச் சுட்டிக்காட்டி மைய அரசுக்கு மாநில அரசு லெவி சிமென்ட்டை அதிகமாக ஒதுக்குமாறு தொடர்ந்து வற்புறுத்தும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் 'இவ்வரசு பின்பற்றும் சிமென்ட் கொள்கை, மத்திய அரசின் கொள்கையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. மைய அரசு விவசாயிகளுக்கு விவசாய காரியங்களுக்காக குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கவேண்டுமென்று மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, மாநில அரசு லெவி சிமென்ட்டை எப்படிப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்பதற்கான வழிமுறைகளை மைய அரசுதான் வழிகாட்டுதலாகக் கொடுக்கிறார்கள். அந்த வழிமுறைகளைப் பின்பற்றித்தான் மாநில அரசு ஒதுக்குகிறது. விவசாயிகள் கிராமப்புறங்களிலே வீடுகளைக் கட்ட, வீடுகளைப் பழுதுபார்க்க, இப்படிப்பட்ட இனங்களுக்கு மைய அரசு மைய அரசின் பரிந்துரையின் பேரில் மாநில அரசு ஒதுக்குகிறது. விவசாயிகள் ஒட்டுமொத்தமாக புறக்கணிப்படுகிறார்கள் என்று சொல்ல முடியாது. விவசாயிகள் பயன்படுத்துவதற்கு லெவி சிமென்டிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்ற முறையில் மைய அரசு சொல்லி மாநில அரசு அதைப் பின்பற்றுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையை ஏற்று மைய அரசினுடைய ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு மாநில அரசு மைய அரசை வற்புறுத்தும்.

(5) முதல் துணை நிதி அறிக்கை 1982–83 அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

1982-83 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இந்த அவையில் வைக்க முன் வருகிறேன். இந்த துணை மதிப்பீடுகளில் உள்ள மொத்தத் தொகை ரூ. 130.75 கோடியாகும். இதில் ரூ. 124.35 கோடி வருவாய்க் கணக்கிலுள்ளது. 6.40 கோடி மூலதன, கடன் கணக்குகளில் உள்ளது. இந்த மதிப்பீடுகளுடன் வைக்கப்பட்டுள்ள விரிவான விவர அறிக்கை, செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதன் நோக்கத்தை விளக்குகிறது. மாண்புமிகு மன்ற உறுப்பினர்களின் தனி கவனத்திற்காகக் குறிப்பிட்ட சில முக்கிய இனங்களின் விவரங்களை மட்டும் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

2. இம்மாநிலத்தின் கிராமப் பகுதிகள் அனைத்திலும் முதல் அமைச்சரின் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் 1982 ஜூலை 1 ஆம் நாளிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருவதை மன்ற உறுப்பினர்கள் அறிவர். 1982-83ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட உரையில் சுட்டிக் காட்டியவாறு இத்திட்டத்தின் கீழ், 2 வயது முதல் 10 வயது வரையுள்ள சிறார்கள் பயனடைகின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நாள்தோறும், நண்பகலில் சத்து உணவு அளிக்கப்படும். இத் திட்டம் 1982 செப்டம்பர் 15 லிருந்து நகர்ப் பகுதிகளுக்கும் நீட்டிக்கப்படவிருக்கிறது. 2 வயதிலிருந்து 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு உணவளிக்கும் செலவாக ரூ. 32.00 கோடியும், 5 வயதிலிருந்து 9 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு உணவளிக்கும் செலவாக ரூ. 20.59 கோடியும் துணை மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் இத்திட்டத்திற்கு வழங்கும் உணவுப்பொருளுக்கு ஆகும் செலவுக்காக துணை மதிப்பீடுகளில் ரூ. 55.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

3. இம்மாநிலமெங்கும் தன்னிறைவுத் திட்டங்களை இவ்வரசு செயற்படுத்தி வருவதையும், இத் திட்டம் இவ்வாண்டில் மூன்றாவது கட்டத்தை எய்தியுள்ளது என்பதையும் உறுப்பினர்கள் அறிவர். தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொண்ட பணிகள் உரிய காலத்தில் முடிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், சாலை உருளை இயந்திரங்கள் 50 வாங்க அரசு ரூ. 1.125 கோடி அனுமதித்துள்ளது. தற்போது வைக்கப்பட்டுள்ள துணை மதிப்பீடுகளில் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

---

*நிதி அமைச்சரின் உரையை ஆங்கிலத்தில் 327 ம் பக்கங்களில் காண்க.



4. 1981 ஆம் ஆண்டில் போதிய மழையின்மை காரணமாக ஒரு சில மாவட்டங்களின் சில பகுதிகளில் குடிநீர் கிணறுகளில் நீர் மட்டம் இறங்கிக் கொண்டே வருவதற்கான சாத்தியக்கூறு உள்ளது. இந்நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு தற்போதுள்ள பொது குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக அரசு ரூ. 10 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. இராமேஸ்வரம், மாமல்லபுரம், கன்னியாகுமரி நகரியங்களை, அனைத்து நாட்டு சுற்றுலா மகிழ்விடங்களாக ஒருங்கிணைந்த வகையில் மேம்படுத்துவதற்கான பெருந் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நிதியுதவி வேண்டி இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. நமது வேண்டுகோள் இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்திய அரசிடமிருந்து உதவி கிடைப்பதை எதிர்பார்த்து இவ்வரசு மாமல்லபுரம், இராமேசுவரம், கன்னியாகுமரி நகரியங்களில் கடைகள், கட்டடத் தொகுதி போக்குவரத்து நிலையம், திறந்த வெளித் திரையரங்கம் முதலிய அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காக அவற்றுக்கு 50 சதவீத கடன், 50 சதவீத மானிய அடிப்படையில் ரூ. 58 இலட்சம் அனுமதித்துள்ளது. இதில் மானியப் பகுதி தற்போது வைக்கப்பட்டுள்ள துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. 1982–83 நிதியாண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கவியலாத ஒரு சில முக்கிய செலவினங்களை மட்டுமே இப்போது எடுத்துக் கூறியுள்ளேன். துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்திற்கும் இசைவளித்து, அவற்றுக்குக் கேட்டுள்ள தொகையை வழங்குமாறு அவையை வேண்டி அமர்கிறேன்,

(6) அறிவிப்புகள்.

(அ) முதல் துணை நிதி அறிக்கை 1982–83 வெட்டுத் தீர்மானங்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1982-83-ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதமும், மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும், 9-9-1982 ஆம் தேதியன்றே எடுத்துக் கொள்வது என்ற அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க, வெட்டுத் தீர்மானங்கள் இன்று 8-9-1982 மாலை 3–00 மணிக்குள் பேரவை அலுவலகத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.

128/172—7

## (7) அரசினர் சட்டமுன்வடிவுகள்.

### (அ) மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்,

(முற்பகல் 10-40)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்திலே கொண்டு வந்துள்ள இந்தத் திருத்தத்தினை இன்ட்ரடக்ஷன் ஸ்டேஜிலேயே நான் எதிர்க்கிறேன். இதற்கு விளக்கமான காரணங்களை நான் இந்த மசோதாவை எடுத்துக் கொள்கின்ற சமயத்திலே சொல்லி இருக்கிறேன். * * * *

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவை முன்மொழியும்போது, மறுப்பதாக இருந்தால் ஒரே வரியிலே மறுத்து விடலாம். அல்லது, சட்ட முன்வடிவிலுள்ள விஷயங்களை மட்டும் சொல்லாம். ஆனால்; சட்ட முன்வடிவில் இல்லாத விஷயங்களை, இதற்கு முன்பு இதைச் சொன்னோம், அதைச் சொன்னோம், என்றால், இதற்கு முன்பு எவ்வளவோ சொல்லியிருக்கிறீர்கள். இதை மறுப்பதற்கு, இந்தச் சட்ட முன்வடிவிற்கும் அதற்கும் சம்பந்தம் இருக்கிறதா என்று பாருங்கள். முன்பு பேசியதைச் சொல்கிறேன் என்றால், சட்ட முன்வடிவிற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. அதையெல்லாம் இப்பொழுது பேசுவது என்றால், அது பொருத்தம் இல்லையென்றும் அதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்,

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: எனது அன்புச் சகோதரர் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்த அளவுக்கு எனக்குத் தெரியவில்லை என்றாலும் 'சூட்டபிலிட்டி ஆப் தி அப்ளிகன்ட்' என்று இருக்கிறது. * * * அதை விளக்குகின்ற......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: சூட்டபிலிட்டி என்பது இருக்கிறது என்பது தெரியும், சூட்டபிலிட்டி என்பதற்கு, என்ன, இருக்க வேண்டுமென்பதும் தெரியும் * * என்பதை மட்டும் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. அ. ரகுமான்கான்: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * அறிமுக நிலையில் ஏன் எதிர்க்கிறீர்கள் என்பதை மட்டும் சொல்லுங்கள். அமைச்சர் சொன்ன மாதிரி, * * போய் இங்கே வந்தால், இதை எப்படி முடிக்க முடியும்?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: * * *

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: * * என்பது அவர்களுடைய கருத்து. * * என்பது என்னுடைய கருத்து. ஆகவே, அதற்கும் இந்தச் சட்ட முன்வடிவிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது என்னுடைய கருத்து.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: It is stated in the statement of objects and reasons as follows:

" The Supreme Court has held that the expression 'suitability or suitable' has to be viewed in the context in which it is used having regard to the object of the enactment and purpose sought to be achieved.

* * விளக்கமான பதிலை, நாளையதினம் விவாதம் நடக்கின்ற சமயத்திலே நான் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். இருந்தாலும், இதை இன்ட்ரடக்ஷன் ஸ்டேஜிலேயே நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நாளைக்குச் சட்ட முன்வடிவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது சம்பந்தப்பட்ட சட்டமுன்வடிவில் எவையெவை எல்லாம் வருகின்றனவோ, அவைபற்றியெல்லாம் பேசலாம். இதற்குச் சட்டம் இருக்கிறது. சட்ட முன்வடிவை எதிர்க்கிறேன் என்று மட்டும் சொல்லலாமே ஒழிய * * என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளையதினம் அதைத்தான் திரும்பப் பேசப் போகிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அதையெல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவு விவாதத்திற்கு வரும்போது பேசுவது போல அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாளைய தினம் நீங்கள் பதில் சொல்லும்போது சொல்லி முடித்து விட்டால் போதும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் இன்ட்ரடக்ட்டரி ஸ்டேஜிலே இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற நேரத்தில் சட்ட ரீதியாக இந்த பில்லை எப்படி எதிர்க்கிறோம் என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், சட்டரீதியாக பிரச்னையை எழுப்பாமல், இதற்குச் சம்பந்தப்பட்ட, தொடர்பான பிரச்னைகளை எழுப்புகின்ற காரணத்தால் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதை நீக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாளைக்குப் பதில் சொல்கிறபொழுது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களுக்குப் பதில் சொல்லுகின்ற வாய்ப்பும், அதே நேரத்திலே பத்திரிகைகளிலே வரும் வாய்ப்பும் இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இன்றைக்குப் பேசியது மட்டும்தான் பத்திரிகையிலே வருமே தவிர பதில் சொல்ல வாய்ப்பில்லை. எனவே, அந்தப் பகுதிகளை நீக்கிவிட்டு, அவர்கள் எதிர்ப்பது மட்டும்தான் சபைக் குறிப்பிலே இருப்பது பொருத்தமாக இருக்கும். நாளைக்கு அவர்கள் பேசுகின்றபொழுது பதில் சொல்வதற்கு வாய்ப்பும் இருக்கும். இரண்டும் பத்திரிகைகளிலே வருவதற்கான வாய்ப்பும் இருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் காரணங்களுக்காக நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல்லக் கூடாதா? அமைச்சரவர்கள் சொல்வது மாதிரி, ஒரே வார்த்தையிலே நாங்கள் இதை எதிர்க்கிறோம் என்று சொல்லி விட்டால் நாங்கள் எதற்காக இங்கே இருக்கிறோம். எதிர்க்கட்சி செய்ய வேண்டிய கடமையை நாங்கள் செய்கிறோம். அது அவர்களுக்குச் சரியாகப் படவில்லை என்றால் அவர்களுக்கு நிறைய நேரம் இருக்கிறது, கிருஷ்ணமூர்த்தியோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகமோ சொல்வது அத்தனையும் உண்மைக்கு மாறானது என்று சொல்லட்டுமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * என்ற இந்த மூன்றையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறார்கள். * * பற்றி இப்பொழுது சொல்ல வேண்டியதில்லை. நாளைக்கு பேசும்பொழுது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



வேண்டுமானால் அவர்களுக்கு ஏதாவது ஆதாரங்கள் இருந்தால் சொல்லலாம்: ஆகவே, இந்த மூன்றும் இப்பொழுது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, * * * என்று சொல்லப்பட்ட வார்த்தைகளையும் நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * என்பதையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பாயின்ட் ஆப் ஆர்டர். நாங்கள் என்ன இரப்பர் ஸ்டாம்பா, ஸ்டாம்பு குத்திக் கொண்டிருப்பதற்கு? நாங்கள் எங்கள் கருத்துக்களைச் சொல்கிறோம். எங்கள் கருத்து தவறாக இருக்கலாம். இன்னும் சொல்லப் போனால் உண்மைக்கு மாறானதாக இருக்கலாம். ஆனால் அதைத் தெளிவுபடுத்தும் ஆற்றல் அவர்களுக்கு இல்லை என்று என்னாலே சொல்ல முடியாது. நான் சொல்வதில் தவறு என்று சொல்லும் உரிமை எல்லோருக்கும் இருக்கிறது. ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் அந்த உரிமை இருக்கிறது; எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் அந்த உரிமை இருக்கிறது. ஆகையால் இதில் ஷட் அவுட் பண்ணுவதால் அது இருக்கக் கூடாது, இது இருக்கக் கூடாது என்று சொல்லக் கூடாது. * * *

அதற்காகத் தான் அந்தச் சட்டத்தைச் சட்டசபையிலே கொண்டு வந்து நிறைவேற்றும் சமயத்தில் நாங்கள் எங்கள் கருத்தைச் சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது பேசுகிற மாதிரி, அறிமுக நிலையில் பேச முடியாது. இப்போது அறிமுகம்தான் செய்யப்படுகிறது. சட்ட முன்வடிவை நீங்கள் எதிர்க்கலாம், அதை நான் ஆட்சேபிக்கவில்லை. நீங்கள் குறிப்பிட்ட ஆட்சேபகரமான சில வார்த்தைகளைத்தான் நீக்கினேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும், இந்தப் பிரச்னைகள் விரிவாக இங்கே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேசப்பட்டது போன்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆகவே, தெளிவாக எதை நீக்குவதற்கு உத்தரவிடுகிறீர்கள் என்பதைச் சொல்லும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * என்பதை மட்டும் நீக்கி இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * *என்பதற்கு அவர்கள் என்ன பொருள் கொள்கிறார்கள் என்று தெரியவில்லை. இவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள் என்றும் எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு.எம். ஜி. இராமச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் நாளைய தினம் விவாதத்தின்பொழுது எதை வேண்டுமாலும் சொல்லட்டும் அதை நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் இன்றையதினம் தொடக்கத்திலே இதைப்போன்று பேசி எங்களுக்குப் பதில் சொல்வதற்கான வாய்ப்பில்லாமல் அவர்கள் நிலைமைகளை உருவாக்குவது—அதுவும் உண்மைக்கு மாறான நிலைமைகளை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தமல்ல; நியாயமல்ல; சட்டமன்ற மரபுக்கேற்றதாகவும் இல்லை என்ற என்னுடைய எண்ணத்தை வெளியிடுகிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, விவாதத்திற்குப் பதில் அளிக்க வாய்ப்பில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இது விரிவான விவாதம் அல்ல என்று சொன்னாலும் சுருக்கமாகத் தங்கள் கருத்தைச் சொல்கிறபொழுது கூட அமைச்சரவர்கள் பதில் சொல்லலாம். ஆகவே பதிலே சொல்லக் கூடாது என்ற ஒரு நிலையிலிருந்து எதிர்க்கட்சி அதைப் பயன்படுத்தவில்லை.

மற்றொன்று, தாங்கள் குறிப்பிடும்பொழுது சுப்ரீம் கோர்ட் என்ற வார்த்தையையும் நீக்குவது பற்றிச் சொன்னீர்கள். சுப்ரீம் கோர்ட் என்பது இங்கே ஆப்ஜெக்டிலே குறிக்கோளிலே அந்தச் சொல்இடம் பெற்றிருக்கிறபொழுது அந்தச் சொல் அவைக் குறிப்பிலே இடம் பெறக் கூடாது என்று தாங்கள் சொல்வது, இந்தச் சட்டமுன்வடிவு இங்கே முன்மொழியப்படுகின்ற நிலையில் இந்தச் சட்டத்திற்கே பொருந்தி வராத ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வாதங்கள் முழுவதையும் நாளைக்கு வைத்துக்கொள்ளுங்கள் என்று நான் சொன்னேன். இப்பொழுதுகூட அமைச்சரவர்கள் விரும்பினால் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர்

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு இப்பொழுதே பதில் சொல்லலாம். அவ்வாறு பதில் சொல்லிவிட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு, திரும்பவும் நாளைக்கு எடுத்துக்கொள்ளும் பொழுதும் பேசலாம். ஆகவே, இரண்டுக்குமே வாய்ப்பு இருக்கிறது.

(முற்பகல் 10-50)

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறபோது, அந்தச் சட்டத்திற்கான நோக்கத்தை அரசாங்கம் வெளியிடுகிறது. அந்த நோக்கத்தை வெளியிடுகிறபோது, சில கருத்துக்களை அவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்த நோக்கம், இந்த அடிப்படையிலே பார்க்கிற காரணத்தினால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்று எதிர்க்கட்சி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றது. இந்த அடிப்படையில் நோக்கம் பிறக்கிறது என்று சொல்கிற போது வருகிற சொற்களை நீக்குவதாக இருந்தால், நீக்குவதைப் பற்றி சொல்கிற போது அதற்கு மாறுபடுகிறவர்கள், அந்த நோக்கத்திற்கு மாறுபடுவதற்கான காரணத்தை இப்போது இந்த அவையிலே சொல்லாமல், இந்த நேரத்திலே சொல்லாமல், பின்னாலே வாதிப்பது என்பது, நோக்கத்தைப் பற்றி பின்னாலே விவாதிப்பதற்கு அதிக முக்கியத்துவம் இல்லை. ஆகவே, முன்கூட்டியே சொல்ல வேண்டும் என்ற கடமை உணர்வு காரணமாகத்தான் சொல்லப்படுகிறது. இங்கே பேசப்பட்ட எந்தக் கருத்தும் இதற்கு முன்னாலே இந்த அவையிலே இடம் பெறாத ஒரு கருத்து அல்ல. இடம் பெற்ற கருத்தை நினைவூட்டுகிற முறையிலே பேசுவது சட்டமன்ற மரபுக்கு மாறுபட்டதல்ல.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சொல்கிறபோது, இத்தச் சட்டத்தை எதிர்க்கிறேன் என்று சொல்லியிருக்கலாம். அல்லது இந்தச் சட்ட முன்வடிவிலே உள்ள விஷயங்களைச்சொலலியிருக்கலாம். அதல்லாமல் * * * என்று சொன்ன வார்த்தைகளையெல்லாம் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * என்பவைகள் எல்லாம் நீக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்தி அனுமதி கோருகிற போது அதைக் கொண்டு வருகிற அமைச்சர் அதைப்பற்றி ஒரு சிறு கருத்துரை வழங்கலாம். அதேபோல் எதிர்க்கின்றவர்கள் கருத்துரை வழங்கலாம், அதோடு முடிந்து

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1982 செப்டம்பர் 8

விடுகிறது. விவாதமே கூடாது என்பதுதான் நம்முடைய சட்ட மன்றத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கிற முறைகள். விவாதங்கள் எப்போது வருகின்றன என்றால், குற்றச்சாட்டுகள் வருகின்றபோது விவாதங்கள் வருகின்றன. ஆகவே, ஏன் எதிர்க்கிறோம் என்பதற்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் நம்முடைய விதிமுறைகள் எவ்வாறு இருக்கின்றன என்றோ அல்லது அரசியல் சட்டத்திற்கு முரணாக இருக்கின்றன என்றோ, அந்த அடிப்படையிலேதான் எதிர்ப்பது மரபு. நம் முடைய சட்டமன்றங்களிலேயும் அப்படித்தான் நடந்து வருகின்றது. ஆனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் குற்றச்சாட்டு சொல்கிறபோது, இந்தப் பிரச்சினை வருகிறது. ஏனென்றால் அமைச்சர் பிறகு பேசலாம் என்பது நம்முடைய விதியிலே இல்லை. ஆகவே, இங்கே பேசப்பட்டவைகளிலே எதை எதை குற்றச்சாட்டுகள் என்று தாங்கள் கருதுகின்றீர்களோ அவைகள் எல்லாம் இந்த விதிக்குப் புறம்பானவைகள் என்ற காரணத்தினால் அவற்றை நீக்குவதுதான் பொருத்தம்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிட வேண்டும் என்றோ, மறுக்க வேண்டும் என்றோ ஒரு ஆர்வத்திலே உந்தப்பட்டு நான் இதைத் தெரிவிக்க வில்லை. ஏற்கனவே இந்த அவையில் பேசப்பட்ட சில கருத்துக்களின் அடிப்படையில் அந்தக் கருத்துக்களை ஆளும் கட்சி மறுத்திருந்தாலும், அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் * *. * சொல்லுகிற காரணத்தால் அது எப்படி தவறு ஆகும் என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு.எம்.ஜி இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒரு நியாயமான விளக்கத்தைச் சொல்ல முனைந்து இருக்கிறார்கள். நன்றி. * * * வார்த்தைகளைப் பார்க்கும்போது விவாதங்கள் நடைபெறுகின்றன. ஆகவே, அப்படிப்பட்டவைகள் கூடாது என்பதும், அந்த அடிப்படைப் பிரச்சினைகள், அதைப் பற்றி விவாதங்கள் வரும்போது எது வேண்டுமானாலும் சொல்லட்டும். நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை மீண்டும் சொல்லுகிறேன். எதை வேண்டுமானாலும் ஆதாரத்துடன் சொல்லட்டும், ஆதாரத்தோடு சட்டத்திற்குட்பட்டு, மரபுக்குட்பட்டு மறுக்கிறோம் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட * * * பற்றிய பிரச்சினைளை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1982 செப்டம்பர் 8]

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றப் பேரவை விதி புத்தகத்தில் விதி 124—ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தயவுசெய்து அந்த விதியைப் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRU A. RAHMANKHAN: "124 (1) – If a motion for leave to introduce a bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit, a brief statement from the member who moves and from a member who opposes the motion, may without further debate, but the question thereon."

It may be in question form. That is a different matter.

THE HON. THIRU S. RAMACHANDRAN: 'may without further dispute, but the question thereon'.
என்பது வேறு, உறுப்பினர் சொல்வது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதியிலேயே பிரிப் ஸ்டேட்மெண்ட் என்றுதான் சொல்லியிருக்கிறது. (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான்: அதற்கு என்ன அர்த்தம் என்று சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம் வரும்போது, அது எதிர்க்கப்பெற்றால், பேரவைத் தலைவர் தேவையெனக் கருதினால் அந்தத் தீர்மானத்தை மொழியும் உறுப்பினரையும் எதிர்க்கும் உறுப்பினரையும் அவர்கள் [illegible] சுருக்கமாகக் கூறும்படி அனுமதித்த பிறகு, மேற்கொண்டு எவ்விதவிவாதமும் இன்றி தீர்மானத்தைப் பேரவை முடிவிற்கு [illegible] வேண்டும். அத்தகைய தீர்மானம் ஏற்கப்பட்டால் சட்ட முன்வடிவு பேரவைக்கு அறிமுகப்படுத்தப் பெறலாம் என்று இருக்கிறது. (கூச்சல், குழப்பம்.)

திரு. அ. ரகுமான்கான்: அதற்கு என்ன அர்த்தம்; உறுப்பினர் தன்னுடைய கருத்தைச் சொல்லலாம் என்று அர்த்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் தம் கருத்தைச் சொல்லலாம். அதில் பிரச்னை இல்லை. [illegible] கருத்தை சொல்லலாம் என்பதுதான் பிரச்னை. [illegible] சொல்லக் கூடாது என்றால், எல்லோரும் வாய் [illegible]க்கொண்டுதான் இருக்க வேண்டும். (குறுக்கீடு)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: நாங்கள் சொன்ன கருத்திலே நீங்கள் எதை நீக்கவேண்டுமென்று ஆணையிடுகிறீர்களோ, அதற்கு நாங்கள் உட்படுகிறோம். (கூச்சல்) சட்ட முன் வடிவின் நோக்கப் பற்றிச் சொல்லும்போதே சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * என்ன என்பதைப் பற்றி லா மினிஸ்டர்தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு.)

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், சுப்ரீம்கோர்ட் என்ன சொல்லியிருக்கிறது என்பதை ஸ்டேட்மெண்ட் ஆஃப் ஆப்ஜெக்ட் அண்ட் ரீசன்ஸ்—லே சொல்லியிருக்கிற, 3வது பாராவிலே இருப்பதை மட்டும் இந்த பிரச்னையில் எழுப்புவது சரியல்ல. அவர் இறுதி பாராவையும் படித்தாக வேண்டும். * * * கடைசி பாராவிலேகூட

"Though these guidelines have always been the basis for deciding the suitablity of an applicant by the competent authority under the Tamil Nadu Prohibition Act 1937 it is considered expedient that Legislatures itself declares these guidelines by way of a suitable amendment to the Act. என மிகத் தெளிவாக போடப்பட்டிருக்கிறது. * * என்று கூறியுள்ளதை அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** The Hon.Minister should correctly state the position. As a Layer, I have unoerstood the Act. (குறுக்கீடு) * * *

(முற்பகல் 11–00)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான தகவலை அவைக்குத் தந்து கொண்டு இருக்கிறார்கள். அப்படியல்ல. நான் ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பகுதியே நீக்கப் பெறுகிறது. எனவே, இதிலே மேலும் விவாதம் தேவையில்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு வேண்டுகோள். முதலில் குறிப்பிட்டதைப் போல் இந்த விவாதத்தில் ஏதாவது ஒரு பகுதியை நீக்குவதாக இருந்தால், அதுபற்றி அளிக்கப்பட்ட விளக்கங்கள் அனைத்தையும் சேர்த்து நீக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். ஏற்கெனவே நீக்கப்பெற்ற பகுதியை ஒட்டி அளிக்கப் பெற்ற விளக்கங்களும் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பெற வேண்டும் என்று ஆணையிடுகிறேன். (குறுக்கீடு)

**திரு. அ. ரகுமான்கான்:** எந்தெந்தப் பகுதிகள் நீக்கப் பெறுகின்றன என்பதை விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * * * ஆகியவற்றையும் அவற்றையொட்டி அளிக்கப்பெற்ற விளக்கங்களையும் அவைக் குறிப்பில்இருந்து நீக்குகிறேன். இது சம்பந்தமாக விவரங்களைப் பத்திரிக்கையில் பிரசுரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** ஒரு சப்மிஷன் சார். எந்தெந்தப் பகுதிகள் என்று குறிப்பிட்டு விளக்கமாகச் சொல்லிவிட்டால் பத்திரிகைகள் அவற்றைப் பிரசுரிக்காமல் இருக்கமுடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நடைபெற்ற விவாதம் எதையும் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டாம். அவைக் குறிப்புகளைப் பார்த்து நான் விவரங்களைத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி. "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு மதுவிலக்கு திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**ஆ) வேளாண்விளைபொருள் அங்காடிகள் (திருத்தம் சிறப்பு விதி, துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு 1982**

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு *எண். 37/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் அவர்களால் அவைமுன் மொழியப்பட்டுள்ள வேளாண் விளைபொருள் அங்காடிகள் திருத்தச் சட்ட முன்வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

*1982 செப்டம்பர் 6-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1982 செப்டம்பர் 8

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

தமிழ்நாடு சட்டமன்றம் கூடுகிறது என்று சொன்னாலே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் வேளாண் விளைபொருள் அங்காடிகளில் உள்ள தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீடிக்கும் மசோதாவும், அதேபோன்று கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கூட்டுறவுத் துறையில் உள்ள தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீடிக்கும் மசோதாவும் அதே போன்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றில் உள்ள தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீடிக்கும் மசோதாவும் ஒவ்வொரு முறை தமிழ்நாடு சட்டமன்றம் கூடுகின்ற போதும் மீண்டும் மீண்டும் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படுகின்ற நிகழ்ச்சியை ஏறக்குறைய கடந்த 5 ஆண்டுக் காலமாக பார்க்கிற துர்ப்பாக்கிய நிலைமையில் இந்த அவை இருக்கிறது என்பதை நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதாரணமாக விவசாயிகள் தங்களுடைய விளைபொருள்களை நியாயமான விலைக்கு, நியாயமான எடையில், நல்ல முறையில் தங்கள் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்து லாபம் அடைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடும், தரகுக் கடைக்காரர்களிடம் விவசாயிகள் சிக்கித் தவிக்கும் நிலைமையைப் போக்கவேண்டும் என்ற நோக்கத்தோடும் இந்த அங்காடிகளைத் தமிழகத்தில் ஒரு காலத்தில் அறிமுகப்படுத்தினார்கள்.

இதிலே அரசியல் கலக்க வேண்டிய நியாயம் ஏற்படவில்லை. விவசாயிகளுடைய பிரதிநிதிகளும், வியாபாரிகளுடைய பிரதிநிதிகளும் தங்களுக்குள்ளே அவர்கள் சில பல பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து இந்த அங்காடிகள் நிர்வாகத்தைத் திறம்பட செய்து, வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் சுமுகமான ஒரு உறவு ஏற்பட்டு, இரண்டு பேர்களும் நல்ல முறையில் வியாபாரம் செய்து வந்தார்கள். விவசாயிகளும் வியாபாரிகளை ஏமாற்றமாட்டார்கள். வியாபாரிகளும் விவசாயிகளை ஏமாற்றமாட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு நல்ல சூழ்நிலையில் அங்காடிகள் நடைபெற்று வந்தன.

ஆனால் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தமிழ்நாட்டிலே எல்லா அங்காடிகளிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பதவி வகிக்கின்றார்கள் என்ற காரணத்திற்காக அங்காடிகளிலிருந்து தலைவர்கள், உறுப்பினர்களைக் கலைத்துவிட்டார்கள். தனி அதிகாரிகள்



1982 செப்டம்பர் 8] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

அங்கே நியமனம் செய்தார். தனி அதிகாரிகள் இருந்தாலும் புதிய சட்டம் வருகிறது, வருகிறது என்று சொல்லி, ஒவ்வொரு பேரவைக் கூட்டத்திலும் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். அப்படியானால் எப்போது இந்தப் புதிய சட்டம் வரப்போகிறது என்பதை அமைச்சரவர்கள் இந்த பேரவைக்கு திட்டவட்டமாக அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே இருந்த உறுப்பினர்கள் பதவிகளை கலைத்த காலத்திலே தேர்தல் நடத்தி இருந்தாலும் இதற்குள் இரண்டாம் முறை தேர்தல் நடத்தக்கூடிய ஒரு காலகட்டம் வந்திருக்கும். ஆனால் ஒவ்வொரு முறையும் அமைச்சரவர்கள் புதிய சட்டம் வருகிறது, வருகிறது என்று சொல்லி தனி அதிகாரிகள் பதவி நீட்டிப்புச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். பஞ்சாப் அல்லது அஸ்ஸாம் போன்ற வடக்கே இருக்கிற பல்வேறு மாநிலங்களிலே இருக்கிற வேளாண்மை விளைபொருள் அங்காடி சட்டத்தைப்போல தமிழ்நாட்டிலேயும் அறிமுகப்படுத்த போகிறோம் என்று காரணம் சொல்லி, ஒவ்வொரு சட்டமன்ற கூட்டத்தின்போதும் இப்படிப்பட்ட பதவி நீட்டிப்புச் சட்டத்தை வேளாண்மை அமைச்சரவர்கள் கொண்டு வருகின்ற ஒரு சூழ்நிலை வழக்கமாக இருக்கிறது.

என்ன சட்டம் வரப்போகிறது? தமிழ்நாட்டிலே அந்தச் சட்டத்தைக் கொண்டுவர என்ன தடை இருக்கிறது? இன்றைய தினம் தனி அதிகாரிகள் இருந்தாலும், அங்கே இருக்கிற தனி அதிகாரிக்கும் செயலாளருக்கும் அல்லது செயலாளருக்கும் மேற்பார்வையாளருக்கும் சுமுகமான ஒரு உறவு இருக்கிறதா? நிர்வாகம் சரியாக நடைபெறுகிறதா என்றால் இல்லை. விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது என்று எந்த நல்ல நோக்கத்திற்காக இந்த அங்காடிகள் சட்டத்தைக் கொண்டு வந்தீர்களோ அது இன்றையதினம் இந்தத் தனி அதிகாரிகள் பதவிநீட்டிப்புச்சட்டத்தாலே குழிதோண்டி புதைக்கப்பட்டு விட்டது என்பதை மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் ஒரு விவசாயி தன்னுடைய விளைபொருளை எந்த ஒரு அங்காடிக்கு எடுத்துச் செல்வதாக இருந்தாலும் ஆரம்ப கட்டத்திலே லஞ்சம் தரப்படவில்லை என்றால் நியாயமான எடை கிடையாது. வேண்டுமானால் வேளாண்மை அமைச்சர் திடீரென்று வடஆற்காடு மாவட்டத்திலே எந்த அங்காடிக்கு வேண்டுமானாலும் அமைச்சர் வருகிறார் என்ற முன்னறிப்பு இல்லாமல் ஒரு விவசாயியைப் போல சென்று பார்த்தால் நிச்சயமாக உங்களிடத்திலே கூட "உங்களுக்கு நியாயமான எடை வேண்டுமானால் பணத்தை எடுங்கள் என்று சொல்லும் ஒரு அவல நிலைமை தான் ஏற்படும் வாய்ப்பை பெறுவீர்கள் அப்படிபட்ட ஒருமோசமான நிலைமை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. இப்படி எல்லா அங்காடிகளிலும் ஒரு கொடுமையான நிலைமை நிலவிக்கொண்டிருக்கிறது என்பதை

இந்த நேரத்திலே, இந்த இடத்திலே என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இதற்கு எப்போது விமோசனம் பிறக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

இன்றைக்கு என்ன நிலைமை இருக்கிறது? கீழே இருக்கிற சாதாரண எடை தூக்குகின்ற அலுவலர்கள் கூட அங்கே இருக்கின்ற அலுவலர்களுக்கு அல்லது அதிகாரிகளுக்கும் பணிவு இல்லை. அதனால் இந்த அங்காடிகளுக்கு வரவேண்டிய வருவாய்கூட வராமல் தடுக்கப்படுகின்ற நிலைமை ஏற்படுகிறது. இலாபம் கிடைக்காமல் போய்விடுகிறது.

அதுமட்டுமல்ல. ஏற்கெனவே இந்த அவையில் ஒருமுறை சொன்னார்கள் அந்த அதிகாரிகள் விருப்பப்பட்டால்இன்னின்ன விளைபொருட்களை கொண்டு வரவேண்டுமென்று அறிக்கையிடுவார்கள்? திடீரென்று அவர்கள் விரும்பாவிட்டால் வேண்டுமென்றே அந்த அறிக்கையை அல்லது அந்த உத்தரவை ரத்து செய்துவிடுவார்கள், இப்படிப்பட்ட ஒரு நிலைமை கூட இன்றைய தினம்தமிழ்நாட்டில் பல்வேறு அங்காடிகளில் இருக்கிறது என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கூட அதை அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இது தீர்க்கப்பட வேண்டாமா? ஒவ்வொரு முறையும் இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவந்து காரணம் சொல்லிக் கொண்டிருப்பது ஒரு அரசுக்கு அழகாக இருக்குமா என்று துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக இந்த அரசைக் கேட்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைய தினம் அங்கே பல்வேறு ஊழல்கள் நடைபெறுகின்றன. புதிய நியமனமா? அதற்குக் கூட ஏராளமான பணத்தைப் பெறுகின்ற ஒரு துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது. ஒருவருக்கு மாறுதல் வேண்டுமா? அதற்குகூட அதிகாரிகள பணம் பெறும் நிலைமை இருக்கிறது. சிலருக்கு பதவி உயர்வு வேண்டுமா? அதற்குக் கூட பணம் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலைமைதான் இன்றையதினம் அந்த அங்காடிகளில் பரவலாக இருந்து வருகிறது. எல்லா இடங்களிலும் இருக்கிற தனி அதிகாரிகள் எதையும் கவனிப்பது இல்லை. அவர்கள் மிகவும் மெத்தனமான போக்கில் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். பல்வேறு இடங்களில் புதிய அங்காடிகளை திறக்கலாம் என்று நாங்கள் கூட பல்வேறு காலக் கட்டங்களில் எங்களுடைய ஆலோசனைகளைச் சொல்லி இருக்கிறோம். ஆனால் அவைகளைக் கூட அதிகாரிகள் கவனிப்பது இல்லை.

அது மட்டும் அல்ல, அறிக்கை தயாரிக்கப்பட்ட பொருள்களை பல இடங்களிலிருந்து வியாபாரிகள் லாரிகளில் எடுத்துச் செல்லும்போது, இந்த அதிகாரிகள் தடுத்து சோதனைச்செய்து அப்படி அறிக்கை தயாரிக்கப்பட்ட பொருள்களுக்கு உரிய வரிகளைச் செலுத்தியிருக்கிறார்களா என்று சோதிக்கிற அதிகாரம் படைத்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம்



அவ்வாறு சோதிக்கப்பெறுகையில் வசூலிக்கப்படுகின்ற பணம் எல்லாம் அந்தந்த உரிய அங்காடிகளுக்குப் போய் சேருகின்றதா என்றால் நிச்சயமாக 90 சதவீதம் அவ்வாறு போய்ச் சேருவதில்லை என்று சொல்ல முடியும். இந்த உண்மையை எல்லோரும் அறிவார்கள். விவசாயிகளும் அறிவார்கள். வியாபாரிகளும்அறிவார்கள்.

அது மட்டும் அல்ல, அந்த அதிகாரிகள் திடீரென்று மண்டித் தெருவுக்குச் சென்று மிகப் பெரியதனத்துடன் நடந்து கொண்டு தங்களுக்கு இருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டு அங்கிருக்கும் வியாபாரிகளை மிரட்டி ஏராளமாகப் பணம் பறிக்கிற ஒரு சூழ்நிலையும் இன்றைக்கு பரவலாக எல்லா இடங்களிலும் இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இவைகளையெல்லாம் களைய வேண்டும் என்று சொன்னால், இதற்கென நீங்கள் புதிய சட்டம்கொண்டு வருவதற்கு காலதாமதம் ஆகும் என்றாலும் கூட, உடனடியாக தேர்தலையாவது வைத்து நடத்துங்கள். அப்போது தான் அங்கேயிருக்கிற விவசாயிகளும், வியாபாரிகளும் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பி அந்த அங்காடிகளின் நிர்வாகம் நல்ல முறையில் செம்மையான முறையில் நடைபெற்று, அந்த விவசாயிகளும் வியாபாரிகளும் தங்களுடைய பொருளுக்கு தகுந்த விலையைப் பெற முடியும். ஆகவே விரைவில் தேர்தலை நடத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் அப்படி விரைவிலே தேர்தல் நடந்து, தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகள் வந்தாலும் கூட, செம்மையாக சீர்திருத்த முடியாத அளவுக்கு இந்த அங்காடிகளின் நிர்வாகம் பயங்கரமாக சீர்குலைந்து கொண்டிருக்கிறது. அதை ஒரு முடிவுக்குக் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள். ஆனால் அவர்களே விவசாயிகளுக்கு நன்மை பயக்கிற இது போன்ற சட்டங்களைக் கொண்டு வந்து இது காலம் வரையில் நிறைவேற்றாமல் காலதாமதம் செய்து வந்ததைப் பார்க்கும்போது, அவர்களுடைய பணியினைக் கூட அவர்கள் ஒழுங்காக நிறைவேற்றவில்லையோ என்கிற எண்ணங்களைத் தான் உருவாக்குகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தனி அதிகாரிகளுடைய பதவிகளை நீடிக்கச் செய்வதற்காக கொண்டு வரப்படும் சட்டம் இதுவே இறுதியாக இருக்கட்டும். அந்த வகையிலே விரைவாக முடிவு செய்து, அந்த ஊழல்களுக்கெல்லாம் முடிவு கட்டுகிற வகையில், விரைவில் இந்த வேளாண்மை விளை பொருள் அங்காடிகளுக்கெல்லாம் தேர்தல் நடத்துங்கள். அத்தோடு மட்டும் அல்லாமல் வட மாநிலங்களிலே இருப்பதைப்போல, மாவட்ட அளவிலே என்று மட்டும் இல்லாமல், கோட்ட அளவிலே, தாலூக்கா அளவிலே தனித் தனியாக இந்த அங்காடிகளை ஏற்படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்த

மாக இந்த அவையிலே பல்வேறு உறுப்பினர்கள் பலவிதமான ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். அந்த ஆலோசனைகளையும் ஆராய்ந்து விரைவாகச் செயல்படுத்த முயற்சி எடுங்கள், விரைவிலே இவைகளுக்கான தேர்தல்களையும் நடத்துங்கள் என்று கேட்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு ந. சிவஞானம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதா குறிப்பாக தனி அதிகாரிகள் நீடிப்பு பற்றிய மசோதா விரும்பத்தக்கதா என்றால் இல்லை. ஏனென்றால் விவசாயிகள் உற்பத்தி செய்த பொருள்களுக்கு நல்ல விலை கிடைத்தாக வேண்டும், நல்ல எடைக்கும் விற்பனை செய்தாக வேண்டும், அப்படியென்றால் விவசாயிகளுடைய வியாபாரிகளுடைய பிரதிநிதிகள் அந்த அங்காடிகளிலே இருந்தாக வேண்டும். அப்படி அவர்களுடைய பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால் தான் விளை பொருள்கள் சரியான விலைக்கு விற்பதில்லை; சரியான எடையும் கிடைப்பதில்லை. ஆகவே இதற்கு நிவாரணம் வேண்டும் என்றால் உடனடியாகத் தேர்தலை நடத்தியாக வேண்டும். அப்படி தேர்தல் நடத்தி வியாபாரிகளுடைய பிரதிநிதிகளும், மக்கள் பிரதிநிதிகளும் அந்த அங்காடிகளில் இடம் பெற்றால் தான், சரியான விலைக்கும், சரியான எடைக்கும் பொருள்களை கிடைக்கச் செய்வது மாத்திரம் அல்ல, இடைத் தரகர்களின் தலையீட்டையும் இதிலே விலக்க முடியும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே இருக்கிற தனி அதிகாரிகள் லஞ்சப் பேர்வழிகளாக இருக்கிறார்கள் என்பது மாத்திரம அல்ல. அவர்கள் மன்னர்கள் போல் மிகவும் சொகுசான வாழ்க்கையை நடத்துகிறார்கள். இந்த வேளாண்மை விளை பொருள் மார்க்கெட்டிங் கமிட்டியில் மாத்திரம் அல்ல. அது கூட்டுறவுத் துறையானாலும் சரி, உள்ளாட்சித் துறை ஆனாலும் சரி அங்கேயிருக்கிற தனி அதிகாரிகள் எல்லாம் மக்களுடைய பணத்தில் மிகவும் சொகுசான வாழ்க் கையைத் தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நான் எந்த வகையில் பார்த்தாலும், இந்த தனி அதிகாரிகளுடைய கால நீட்டிப்பு என்பது விரும்பத்தக்கதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் வேளாண் விளைபொருள் அங்காடிகள் மாவட்ட அளவிலே மட்டும் அல்லாமல் ஒவ்வொரு தாலுக்கா அளவிலேயும் ஒவ்வொரு கோட்ட அளவிலேயும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு உதாரணமாக மணிலா, பஞ்சு போன்ற பொருள்களுக்குஅவரவர்களுடைய இடங்களிலேயே நல்ல விலைக்கும் சரியான எடைக்கும் விற்க முடியும். இந்த விவசாய அங்காடிகள் ஏற்படுத்தப் பட்டதன் முழு பலனும் விவசாயிகளுக்கு போய்ச் சேர முடியும். அந்த வகையில் இவைகளை எல்லா மட்டத்திலேயும் அமைத்துத்



தருவதோடு, இவைகளின் நிர்வாகத்தையும் சரியானபடி மாற்றி அமைக்க வேண்டும், கூடியவிரைவில் அதற்கு தேர்தல்கள் கொண்டுவர வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மார்க்கெட்டிங் கமிட்டி நல்ல முறையில் அமைய வேண்டும். தென்னார்க்காடு மாவட்டம் இதற்கு எடுத்துக்காட்டாக இருப்பதைப் போல எல்லா மாவட்டங்களிலும் இதனை அமல் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாப் மாநிலத்திலே நல்ல முறையிலே மார்கெட்டிங் கமிட்டி செயல்படுகின்றது. அதே முறையில் நம்முடைய மாநிலத்திலேயும் நல்ல முறையிலே மார்க்கெட்டிங் நடப்பதற்கும் அதன்மூலம் உற்பத்தி செய்யப் படுகின்றபொருள்களுக்கு நல்ல விலைகள் நிர்ணயம் செய்யப் படுகின்ற வகையிலும் ஏற்பாடு செய்வதோடு உற்பத்தியாளர்களுக்கு அதிலே பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன், தனி அதிகாரிகள் தவறுகள் பல செய்வதன் காரணத்தால் உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாயிகளுக்கும், மக்களுக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும், என்று கேட்டு என்னுடைய உரையினை முடித்துக் கொள்கிறேன்,

திரு. என் பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் தனி அதிகாரிகள் திருத்தச் சட்ட முன்வடிவு இன்றைக்கு இந்தச் சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அந்த அதிகாரிகளின் பதவிக்காலம் நான்கைந்து ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டு இப்போது மேலும் 5-12-82 வரை நீட்டிப்பதற்காக இந்த சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. எனவே தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடிய இந்தச் சட்டத்திற்கு மார்க்ஸிஸ்ம் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே நான் எதிர்ப்பு தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி அதிகாரிகளைப் பொறுத்தவரையிலே அவர்கள் இஷ்டத்திற்குத்தான் எதையும் செய்கிறார்கள். இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்கள் இல்லாததன் காரணத்தால் அவர்கள் இஷ்டப்படித்தான் காரியங்கள் நடக்கின்றன. இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களுக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது, அவர்கள் யார், அவர்கள் எங்கே இருக்கிறார்கள்: சட்டமன்ற உறுப்பினர்களோடு தொடர்பு ஏற்படுத்திக கொள்ள முடியுமா, அது வேண்டுமா என்பதைப்பற்றிக் கூட அந்த தனி அதிகாரிகள் சிந்திப்பது கிடையாது. ஆகவே எதற்காக இப்படி அவர்களுடைய காலத்தினை நீட்டிக்கொண்டு போகிறார்கள் என்பது தெரியவில்லை. பஞ்சாயத்துத் தேர்தல் நடத்த வேண்டும் என்றால் அதிலே இட ஒதுக்கீடுப் பிரச்சினை, மற்ற குறுக்கீடுகள்

ஓட்டு சேகரித்தல் இப்படிப் பல பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொல்கிறோம். தொழில்கள் துவங்குவது என்றாலும் அதற்கு மத்திய சர்க்கார் அனுமதி இல்லை என்ற காரணத்தால் காலதாமதம் ஏற்டடுகின்றது என்று சொல்கிறோம். ஆனால் இப்படி ஒரு இலாக்காவிலே தேர்தல் நடத்துவதிலே எது குறுக்கே இருக்கின்றது என்பதை அரசாங்கம் விளக்கவேண்டும். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே இமாச்சல பிரதேஷம், மேற்கு வங்காளம், ஆந்திரா போன்ற மாநிலங்கள் மாதிரி சட்டம் கொண்டுவரவேண்டும் என்று சொல்கிறார்கள். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை, நன்றாகக் கொண்டு வாருங்கள். ஆனால் அப்படிக் கொண்டு வருவதிலே ஏன் காலதாமதம்? இப்போது 5–12-82 வரையில் அவர்களுடைய பதவிக் காலத்தினை நீட்டிப்பதற்காகச் சட்ட முன்வடிவு கொண்டு வந்திருக்கிறீர்களே, அந்த 5-12–82–க்குப் பிறகாவது தேர்தல் வருமா என்றால் நிச்சயமாக வராது. ஏனென்றால் அதற்குப் பிறகு சட்டமன்றக் கூட்டம் வந்து விடும், பஞ்சாயத்துத் தேர்தல், அது, இது என்று சொல்லி பல காரணங்களைச் சொல்லி மேலும் மேலும் நீட்டிக்கத்தான் போகிறீர்களே தவிர தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்கள் ஆங்காங்கே இருந்து நல்ல முறையிலே செயல்படுத்துவதற்கு இந்த அரசு உதவத் தயாராக இல்லை,

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட சினிமாவிலே 'கடவுள், என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி என்று விவசாயிகள் பற்றி பாடி இருக்கிறார்கள். ஆனால் அந்த விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் சரியான கவனம் செலுத்தவில்லை. விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு நாம் என்ன விலை கொடுப்பது, மத்திய சர்க்கார் என்ன விலை கொடுப்பது என்ற பிரச்சினை எல்லாம் வருகின்றபோது மத்திய சர்க்கார் 147 கொடுக்க வேண்டும் என்று நாம் சொல்ல அவர்கள் 122 ரூபாய் என்றுதான் நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லி இப்படி நாம் ஒன்று சொல்ல அவர்சள் இன்னொன்று சொல்ல கடைசியில் பாதிக்கப்படக்கூடியவன் விவசாயிதான். இப்படி விவசாயிகள் தவித்துக்கொண்டிருக்கின்ற இந்த சூழ்நிலையில் நீங்கள் உடனடியாகத் தேர்தலை நடத்தியாகவேண்டும். தனி அதிகாரிகளுக்கு கால நீட்டிப்பு கொடுப்பது லஞ்சமும் யதேச்சாதிகாரமும் வளர்வதற்குத்தான் வழிவகுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசாங்கத்திற்கும் கெட்ட பெயர், மக்களுக்கும், விவசாயிகளுக்கும் பாதுகாப்பு இல்லாத நிலைமைதான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே உடனடியாகத் தேர்தலை நடத்துவதுதான் சிறந்தது என்பதைக்கூறி இந்த மசோதாவை எதிர்த்து அமர்கிறேன்.





(முற்பகல் 11–20)

**திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண் விளைப்பொருள் அங்காடிகள் திருத்தச் சட்ட முன்வடிவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய அந்த விளைப்பொருள்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய, நியாயமான விலை கிடைப்பதில்லை என்ற காரணத்தினால், அந்த விலையை நிர்ணயிக்கின்ற அதிகாரம் தமிழக அரசுக்கு இல்லாத காரணத்தினால், இப்படி சிறு விவசாயிகள் பயன்பெறுவதற்கு இந்த அங்காடிகளை ஏற்படுத்தி யிருக்கிறோம். அதுவும், குறிப்பாக விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காலத்தில், விவசாயிகள் உற்பத்தி செய்து அறுவடை செய்கின்ற அந்தக் காலத்தில், விளைப்பொருள்கள் திடீர் திடீரென்று கீழே இறங்குகின்ற அந்தக் சூழ்நிலையில், விவசாயிகள் தங்களுக்கு அத்தியவசியமான அல்லது அறுவடை செலவுக்கு தாங்கள் பெறவேண்டிய பணத்தை அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய கடலையானாலும் சரி, மஞ்சள் ஆனாலும் சரி அல்லது பருத்தியானாலும் சரி அல்லது ஏனைய விவசாயப் பண்டங்கள் ஆனாலும் சரி, அவைகளை இங்கே கொண்டுவந்து கொடுத்து, ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக்கொண்டு, மறு விவசாய உற்பத்திக்கு அவர்கள் அந்தப் பணத்தை செலவு செய்து கொண்டிருந்தார்கள். அதே சமயத்தில் விவசாயப் பொருள்களுக்கு விலை ஏறுகின்ற வரையில் அந்த மார்க்கெட்டிலே வைத்திருந்து விற்கக் கூடிய சூழ்நிலை இருந்தது. ஆனால் அன்றைய தினம் எந்த நோக்கத்திற்காக இது ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த நோக்கம் தனி அதிகாரிகள் என்ற பெயரால், விவசாயிகளுக்கு பயன்படுவதற்குப் பதிலாக, இன்றைக்கு அவர்களுக்கு பயன் ஏற்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக, தனி அதிகாரிகள் மற்ற வியாபாரிகளைக் கலந்துகொண்டு செய்கிறார்களே தவிர, சிறுவிவசாயிகளைக் கலந்துகொண்டோ அல்லது அவர்களுக்கு பயனளிக்கக் கூடிய முறையிலே விளைபொருள்களுக்கு விலை கொடுப்பதில்லை. அதேபோல் கடன் கொடுப்பது இல்லை. அதற்கு மாறாக, விவசாயிகளிடம் என்ன சொல்கிறார்கள் என்றால், தவறான செய்திகளைத் தான் சொல்லுகிறார்கள். இதுதான் அங்கே நடந்து கொண்டிருக்கிறது.

மேலும் தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு இந்தச் சட்டம் திருத்தக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வேறு பல மாநிலங்களில் இருப்பதைப் போல் இங்கே கொண்டு வருகின்ற அடிப்படையிலே, சட்டத்திருத்தம் கொண்டு வருவதற்காக நீட்டிக்கிறோம் என்று காரண காரிய விளக்கத்திலே சொல்லியிருந்தாலும், ஏற்கெனவே 4½ ஆண்டுக் காலம் தனி அதிகாரிகளின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டு, இப்போதும் மேலும் 4 மாதங்கள் நீட்டிப்பதற்கு உண்டான ஒரு சூழ்நிலையிலே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது, 4½ ஆண்டுக் காலம் தனி அதிகாரிகளின் பதவிக்

காலத்தை நீட்டித்துக் கொண்டே வந்ததற்கான அடிப்படைக் காரணம் என்ன? ஏன் இந்த 4½ ஆண்டுச் காலத்தில் இதைக் கொண்டு வராத ஒரு நிலை இருக்கிறது? எந்த நோக்கத்தோடு நாம் இந்த வேளாண் விளைபொருள் அங்காடிகள் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோமோ, அந்த நோக்கம் தனி அதிகாரிகள் போட்டதன் மூலமாக நிறைவேற்ற முடியாமல் விளைபொருள்களுக்கு நியாயமான விலை கொடுக்க முடியாமல் இருப்பதால், இந்த மசோதாவை எதிர்ப்பதோடு, உடனடியாக தேர்தல் நடத்த வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு.கா.காளிமுத்து:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேளாண் விளைபொருள் அங்காடிகள், விற்பனைக் குழு, தனி அதிகாரிகள் பதவி நீடிப்பு தொடர்பாக கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை தொடர்ந்து நீக்க வேண்டும், வேளாண் விற்பனைக் குழுக்கள் இப்படித் தான் இயங்கிக் கொண்டிருக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல என்பதை இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதற்குரிய நோக்கத்திலே அரசு தெளிவுப்படுத்தி யிருக்கிறது. ஆனால், விற்பனை குழுக்களின் தேர்தலை நடத்துவதென்றால், அதிலே வியாபாரப் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்; அந்த வட்டாரங்களிலே இருக்கின்ற விவசாயப் பெருமக்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இவர்களை வாக்காளர்களாக வைத்துக்கொண்டு, தேர்தலை நடத்துவது என்கின்றபோது, ஏறத்தாழ ஒரு குட்டிப் பொதுத்தேர்தலையே நடத்த வேண்டுமென்ற அளவுக்கு இப்போது நிலையிருக்கிறது. அப்படித் தேர்தலை நடத்துவது என்றால், ஒவ்வொரு விற்பனைக் குழுவிற்கும் ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய் அதற்காக செலவிட வேண்டிய நிலைமை இருக்கிறது. தேர்தலை நடத்த ஒரு விற்பனைக் குழுவிற்கு 10 இலட்சம் ரூபாய் செலவானால், இந்த விற்பனை குழுவின் நோக்கமே சிதைந்து போகும். அது இயங்க முடியாது போகும். அதனால்தான் எந்த வகையிலே இவைகளை செயல்பட வைப்பது, அதே நேரத்தில் விவசாயப்பிரதிநிதிகளை, வேளாண் பெருமக்களுடைய பிரதிநிதிகளை அதிலே பொறுப்பேற்கச் செய்து, அதிலே வியாபாரப் பிரதிநிதிகளை அங்கம் பெறச் செய்து, எப்படி இதை இயங்க வைப்பது என்கின்ற வகையில் அரசு மேற்கு வங்காளம், அஸ்ஸாம், இமாசலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் எத்தகைய நடைமுறையைப் பின்பற்றுகிறது என்பதை கண்டறிந்து, அதை மேற்கொள்ளுகின்ற வகையில், நம்முடைய வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தில் திருத்தங்கள் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம். அப்படி சில திருத்தங்கள் செய்யப் பெற்று, சட்டத் துறைக்கு அனுப்பப் பட்டிருக்கிறது என்பதை நான் இப்போது தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





அதிகமான அளவிற்கு கால நீடிப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்கவில்லை. வருகின்ற டிசம்பர் திங்கள் வரைக்கும், தனி அதிகாரிகளின் பதவிக் காலம் நீடிக்கச் செய்ய வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம், அதே நேரத்திலே, இவைகளுக்கு ஆலோசனைக் குழுக்களை நியமித்து, அவைகளின் கொடுமை நீட்டித்து, அதன்மூலமாக முழுப் பிரச்னையையும் தீர்க்க முடியாது. இனிமேல் அமையக்கூடிய குழுக்கள் அதிகார பூர்வமான குழுக்களாக அமைக்கப்படும். அதிலே, விவசாய பெருமக்கள் பயன்படக் கூடிய வகையில், சட்டத் திருத்தத்தை செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் தனி அதிகாரிகள் இதனுடைய மேற்பார்வையாளராக இருக்கின்ற காரணத்தினால் இந்தத் துறையே ஒழுங்கு இல்லாமல் போய்விட்டது என்ற குற்றச்சாட்டை நான் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஏன் என்றால் 1933 லிருந்து 1977 ஆம் ஆண்டுவரை இருந்த அங்காடிகள் 140. ஆனால் 5 ஆண்டு காலத்திலே 114 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் வருவாய் ரூபாய் 309 லட்சத்திலிருந்து ரூ. 400 லட்சத்திற்கு மேல் உயர்ந்து இருக்கிறது. வேளாண்பெருமக்களுக்கு இது முறையாகப் பயன்பட்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திராவிட முன்னேற்ற கழக ஆட்சி காலத்தில் இருந்த பிரதிநிதிகளை, அன்றைக்கு தணிக்கை குழு கண்டு அறிந்து சில குற்றச்சாட்டுகளை சொல்லி நீக்கி அதற்கு பிறகு வழக்குகள் நடைபெற்று இருக்கின்றனவே தவிர அதற்கு இந்த அரசு பொறுப்பு இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம், வியாபார பிரதிநிதிகள், விவசாய பிரதிநிதிகள் ஆகியவர்களைக் கொண்டு குழுக்களை அமைத்து குற்றச்சாட்டுகள் இல்லாத முறையில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் சிதைந்து விடக் கூடாது என்ற முறையில் ஒரு கட்டுக்கோப்பான முறையில் அவைகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் வேளாண் பெருமக்கள் வாழ்க்கைஉயர வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இன்று கால நீட்டிப்பு கேட்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள், தனி அதிகாரிகளின் கால நீட்டிப்பு இதுவே இறுதியாக இருந்தால் நல்லது என்ற விருப்பத்தை தெரிவித்தார்கள். அதே டிசம்பர் மாதத்திற்கு பிறகு விவசாய பிரதிநிதிகள், வியாபார விருப்பத்தை நானும் தெரிவித்துக் கொள்கிறேன் பிரதிநிதிகள் மேற்பார்வை செய்யக் கூடிய வாய்ப்பு உருவாகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித்தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[1982 செப்டம்பர் 8

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்–சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, மற்றும் 3 பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்–சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(இ) வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப் பவர்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (*) (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

திரு. அ. ரகுமான்கான்: அடுத்த சட்ட முன்வடிவும் இதே போன்ற சட்ட முன்வடிவு தான். அதையும் சேர்த்து ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

---

*1982, செப்டம்பர் 6-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1982 செப்டம்பர் 8]

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தம்முடைய இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) கடன் நிவாரணச் சட்டமுன்வடிவு, 1982,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவை *அறிமுகம் செய்து, மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த கடன் நிவாரணச் சட்டம் கிராமப் புறங்களில், நகரப் புறங்களில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் கடன் தொல்லையிலிருந்து காப்பாற்றப்படவேண்டும் என்ற தூய நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டதாக இங்கே சொல்லப் பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-30)

நான் ஒன்றை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆண்டு வருமானம் 4,800 ரூபாய்க்குக் கீழே உள்ளவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய கடன்கள் ரத்து செய்யப்படுகின்றன, கடன் கொடுத்தவர்கள் நீதிமன்றத் திற்குப்போகமுடியாது, வழக்குப் போட முடியாது என்ற பிரிவுகளை உள்ளடக்கிய சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டிருக் கிறது. கடன் வாங்கியவர்கள் இந்தச் சட்டத்தால் பயன் அடையவேண்டுமென்று சொன்னால் தாசில்தாரிடத்திலே அவர்கள் மனு செய்து தங்களுடைய வருமான விவரங்களை

---

*1982, செப்டம்பர் 4-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

யெல்லாம் கொடுத்து அவைகளை தாசில்தார் பரிசீலித்து அவர், கடன் கொடுத்தவர்களையும் கடன் வாங்கியவர்களையும் அழைத்து விசாரித்து அதன்மேலே கடன் ரத்து என்று தீர்ப்பை வழங்கவேண்டும் என்ற முறையிலே தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்த மாதிரிச் சட்டங்கள் பல தடவைகள் கொண்டுவரப் பட்டு இருக்கின்றன. 1938 ஆம் ஆண்டிலிருந்து இங்கே அவசர நிலைப் பிரகடனம் இருந்தபோது பல்வேறு ஆட்சிகள் இருந்தபோது இதுபோன்ற சட்டங்கள் பல கொண்டுவரப் பட்டிருக்கின்றன. ஆனால் இதுபோன்ற சட்டங்கள் கொண்டு வரப்பட்டும்கூட கடன் சுமையிலிருந்து ஏழை எளிய மக்கள் நகர்ப்புறங்களிலே, கிராமப்புறங்களிலே உள்ளவர்கள் விடுபட்டு நிம்மதியாக இருக்கிறார்களா என்றால் இல்லை. இன்றைக்கு சிவப்பு நாடா சிக்கலினால் பல்வேறு பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன: தாசில்தாரிடத்தில் மனு கொடுத்தால் அவையெல்லாம் கவனிக்கப்படாமலேயே கிடக்கின்றன. காலம் அதிகமாகவே எடுத்துக்கொள்ளப்படுகிறது. கடன் கொடுத்தவர் கள் தாசில்தார்களை தங்களிடத்திலே அடக்கிக்கொண்டு நகர்ப் புறங்களிலும் கிராமப்புறங்களிலும் அவர்கள் பிரச்சினைகளைத கவனிக்க முடியாத சூழ்நிலையை உருக்ாக்கி இருக்கிறார்கள், தாசில்தர் அலுவலகத்திலே இன்றைக்கு ஆயிரக்கணக்கான மனுக்கள் அனாதைப் பிள்ளைகள்போல் அவலநிலையிலே இருக்கின்றன. இதை மாற்றுகிற முயற்சியிலே இந்த அரசு ஈடுபடவேண்டும்.

உண்மையிலேயே இது கடன் நிவாரணச் சட்டம்தானா இதனால் ஏழை எளிய மக்கள் பயன் பெற்றார்களா என்று கேட்டால் நீங்கள் நாட்டு மக்களை ஏமாற்றுவதற்கே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தீர்கள் என்று சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன். ஒருவேளை பெரியகுளத்திலே மீன் பிடிப்பதற் குக்கூட இருக்கலாம், அது வேறு விஷயம். நான் சொல்கிறேன், நீங்கள் கொண்டுவரக்கூடிய சட்டத்தால் எவ்வளவு பேர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் அமைச்சரிடத் திலே இருக்கும் என்று நம்புகிறேன். அதை அவைக்குக் கொடுத்தால் நன்றியுடையவனாக இருப்பேன். எனக்கு கிடைத்த புள்ளிவிவரப்படி கிராமப்புறங்களிலேயும் நகர்ப்புறங் களிலேயும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் 52% 62% என்று புள்ளிவிவரப்புலிகள் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் இதனால் பத்தாயிரம் பேர்களுக்கும் குறைவானவர்கள் தான் பலன் பெற்றிருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அப்படியானால் இவ்வளவு மக்கள் இருக்கின்ற ஒரு அமைப்பில் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டதற்குப் பிறகு மிகக் குறைந்த அற்பமான தொகை, 10 ஆயிரம் பேர்கள் தான் பயன்பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்தச் சட்டம் கொண்டுவருவதில் ஏதாவது





அர்த்தம் இருக்கிறதா? ஆனால் வெளியே பார்க்கிறபோது ஏதோ ஏழை எளிய மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற ஒரு தோற்றம், மாய மான் போன்று, சீதையை ஏமாற்றிய மாரிசயான் போன்று காட்சியளிக் கிறதே தவிர அடிப்படைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உதவவில்லை. மாதம் 400 ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்கு 1,000 ரூபாய், 2,000 ரூபாய், அல்லது 5 ஆயிரம் ரூபாய் கடன் யார் கொடுப்பார்கள், அவர்களுக்கு 200, 300, 400 ரூபாய்தான் கடன் கொடுப்பார்கள். அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லையென்று சொன்னால் நீதிமன்றத்திற்குப் போய் பயன் கிடையாது, சிறையிலே அடைத்துவிட முடியாது, காரணம் 'தே ஆர் மென் ஆப் நோ மீன்ஸ்'. அவர்களை நீங்கள் என்ன செய்துவிட முடியும்? கடன் நிவாரணச் சட்டத்தின் மூலமாக உண்மையி லேயே ஏழை எளிய மக்களைப் பாதுகாக்கவேண்டுமென்ற எண்ணம் தங்களுக்கு இருக்குமானால் நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும். இந்த தேசத்தினுடைய முதுகெலும்பு என்று சொல்லப்படுகின்ற, இந்த தேசத்தினுடைய ஆத்மா என்று சொல்லப்படுகின்ற விவசாயப் பெருங்குடி மக்களின் கண்ணீர் இன்றைக்கு காவிரிபோல், கங்கைபோல் ஓடுகிறது.

விவசாயிகள் கடன் சுமையிலே அழுத்தப்பட்டு கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அன்றைக்கு சட்டசபை தேர்தல் சமயத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு வாக்குறுதிகளை அளித்தார்கள். அவர் கொடுக்காத வாக்குறுதியே கிடையாது. ** ** அவ்வளவு வாக்குறுதி களை கொடுத்தார்கள். கருணாநிதி பேசுவது சரியல்ல. விவசாயிகள் பிரச்னை குறித்து நான் தெளிவாக பேசுகிறேன். சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்ற பேச்சுக்கே இடம் கிடையாது. மத்திய அரசு அனுமதித்தாலும், அனுமதிக்கா விட்டாலும் நான் எல்லா விவசாய கடன்களையும் ரத்து செய்கிறேன் என்று தேர்தல் காலத்திலே பிரச்சாரம் செய்தார் கள் நம்முடைய முதலமைச்சர். உங்களுடைய எலக்ஷன் மானிபெஸ்டோ வைக்கிறபோதும் அதே வாக்குறுதிகளை சொன்னீர்கள். உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அண்ணா சாலையில் அண்ணா சிலை முன்பு நின்று கொண்டு அண்ணாவின் பெயராலே சத்தியம் செய்தீர்கள். ''என் தாயின் மீது ஆணையாக சொல்கிறேன். விரைவிலே நான் இந்த கடன்களை எல்லாம் ரத்து செய்வேன். 200 கோடிகளுக்கு மேலே விவசாய கடன்கள் இருக்கும். இவைகளை எல்லாம் ரத்து செய்வேன்'' என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார் கள். ஆனால் ரத்து செய்யப்பட்டதா என்றால் இல்லை. அதற்கு மாறாக விவசாயக் கடனை ரத்து செய்யவேண்டுமென்ற கோரிக்கையை அடிப்படையாக வைத்துப் போராடியபோது நம்முடைய முதலமைச்சர் நாயுடுவை தேசிய பாதுகாப்புச் சட்டத்திலே கைது செய்தார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது சம்பந்தப்பட்ட பிரச்னைகளைக் கூறி * * என்பது போல அந்த வார்த்தைகளை எல்லாம் பேசினார். அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப் படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவற்றை அவைக் குறிப்பிலே இருந்து நீக்குகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவருக்கு அப்படி ஒரு ஆசை இருந்தால் அதை நாம் நிறைவேற்றுவோம். அதற்காக யாரும் கவலைப் பட வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு சுவையாக சொல்லவேண்டுமென்றுச் சொன்னால், அல்லாவுதீன் கையிலே இருக்கிற அற்புத விளக்கைப் போல அற்புதங்களைச் சாதித்து விடுவோம் என்பது போல நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தேர்தல் காலத்தில் சொன்னார்கள். அதிலே நான் சொல்ல விரும்புவது. . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அலாவூதீன் அற்புத விளக்கு மட்டும் தான் அவருக்கு தெரிகிறது. ஆனால், அவருக்கு சில விஷயங்கள் மறந்து போகிறதோ என்று நினைக்கிறேன். புதையல் எல்லாம் அவர்கள் கையிலே இருக்கிறது.

திரு அ. ரகுமான்கான்: துணைத்தலைவர் அவர்களே, புதையல் எல்லாம் என் கையிலே இருக்கிறது என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் கையிலே இருக்கிறது என்று சொன்னேன் என்பதை உங்கள் மூலமாக சொல்லிக் கொள்கிறேன்.

திரு அ. ரகுமான்கான்: துணைத்தலைவர் அவர்களே, உங்கள் கையிலே என்றால் அவர் சொல்கிறபோது என்னைச் சொல்கிறரா? அல்லது எங்கள் கட்சியின் தலைவரைச் சொல்கிறரா? அல்லது எங்கள் கட்சியிலே இருக்கக்கூடிய அத்துணைப் பேர்களையும் சொல்கிறாரா? அல்லது சட்டமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களைச் சொல்கிறாரா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவரைத் தனிப்பட்ட வகையிலே சொல்வது என்றால் ரகுமான்கான் என்று குறிப்பிட்டிருப்பேன்.

---





அவர் தன்னையும் தலைவரையும் பிரித்து வைத்துக் கொள்கிறார் என்பதும், தன்னையும் கட்சியையும் பிரித்துக்கொள்கிறார் என்பதும் எனக்குத் தெரியாது. நான் பொதுவாக சொல்கிறபோது 'எங்கள்' என்று சொன்னால் எங்கள் கட்சி என்று பொருள், 'எங்கள் ஆட்சி' என்று பொருள்; 'உங்கள்' என்று சொன்னால் 'உங்கள் கட்சி,' உங்கள் கொள்கை எல்லாம் வரும்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக குடும்பத்திலே அப்படிப்பட்ட புதையல் இல்லை. ஆதாரம் இருந்தால் இந்த மன்றத்திலே நம்முடைய முதலமைச்சர் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, படம் எடுத்தீர்கள், புதையல். அதைக் குறிப்பிட்டேன். (சிரிப்பு)

திரு அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, நன்றி, நான் சொல்ல விரும்புவது தேர்தல் காலத்திலே பலவிதமான வாக்குறுதிகளை நம்முடைய முதலமைச்சர் சொன்னார்கள். ஆனால் தேர்தல் நேரத்தில் நீங்கள் சொல்லாதது, மத்திய சர்க்கார் இதிலே அனுமதி தரவில்லை. இதிலே ரிசர்வ் பாங்க் பிரச்னைகள் எல்லாம் இருக்கின்றன என்று. . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகுத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம், மத்திய சர்க்கார் தராவிட்டாலும் நாங்கள் மாநிலத்திலே மக்கள் கொடுக்கிற வரிப்பணத்திலேயிருந்து உதவி செய்வோம் என்று; ஆனால் கொடுக்காதே என்று மத்திய சர்க்கார் கட்டளையிடும்போது அதற்குக் கட்டுப்பட்டிருக்கிற மாநில அரசுகள் எதுவும் செய்ய முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத்தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய கட்டளையை எல்லாம் ஏற்று நாங்கள் செயல்படுகிறோம் என்று சொன்னால் நாளைக்கு மத்திய சர்க்கார் இங்கே மும்மொழிக் கொள்கையை அனுமதித்தே தீரவேண்டும்; இங்கே இந்தியைத் திணித்தே தீர வேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டு வந்தால் முதலமைச்சர் ஏற்றுக் கொள்வாரா?

மாண்புமிகு திரு. எம். ஜி: இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, கொள்கை வழியிலே நாங்கள் எதிர்க்கிறோம் என்பது வேறு, பொருளாதாரத்திலே அவர்கள் உதவியைக் கேட்டு பெற்று ஆட்சியை நடத்த வேண்டிய நிலைமை இருக்கிறது என்பது வேறு.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இது தெரியாவிட்டால் இனியாவது அவர்கள் தலைவரைக் கேட்டு தெரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தினுடைய விதிகள்படி மத்திய சர்க்கார் போடுகிற உத்தரவுகளை மாநில சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இருக்கின்றன. இல்லையென்றால் அதைக் காரணம் காட்டி ஒரு மாநில சர்க்காரை மத்திய சர்க்கார் டிஸ்மிஸ் செய்து விடலாம். அந்த அடிப்படையிலே சில சிக்கல்கள் இருக்கலாம். ஆனால் தேர்தல் நேரத்தில் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வோம் என்ற வாக்குறுதியைக் கொடுத்தீர்கள்.

(முற்பகல் 11.40)

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, தக்காவிக் கடன்கள் ரத்து செய்யப்பட்டிருப்பதைப் பொறுத்தவரை, நம்முடைய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், அவைகள் ஏற்கனவே கணக்கிலே வராத கடன்கள்—மத்திய அரசாங்கத்திடம் நம்முடைய நிதி ஆதாரத்தைக் காட்டிப் பெறுவதற்காக கணக்கில் வைத்துக்கொள்ளக் கூடிய கடன்கள்—அவைகளையும் சேர்த்து ரூ.120 கோடி கடனை ரத்து செய்து விட்டோம். இன்னும் $2\frac{1}{2}$ ஆண்டுக் காலம் எங்களுக்கு அனுமதி.....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூ. 120 கோடி தீர்க்கப்பட்டது. ரூ. 190 கோடி என்றுதான் கணக்கிலே வருகிறது.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அண்ணா சாலையிலே பேசிய நம்முடைய முதல்வர் அவர்கள் விவசாயக் கடன்கள் 5 ஏக்கருக்குக் கீழே இருக்கிறது என்ற பாகுபாடு இல்லாமல், புயலால், வெள்ளத்தால், மழையால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற பிரச்னையைச் சொல்லாமல், அதே போல் குறுகிய காலக் கடனை, மத்திய காலக் கடனாக மாற்றுவது என்ற கண்டிஷன் எல்லாம் வைக்காமல், ஒட்டுமொத்தமாக, எதிர்க்கட்சி, கருணாநிதி....

மாண்புமிகு திரு. எம் ஜி.இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அடிக்கடி இப்படி குறுக்கிடுவதற்காக வருத்தப்படுகிறேன் என்றாலும் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து என்னுடைய பேச்சை அவர் கையிலே வைத்துக் கொண்டு பேசினால் உதவியாக





இருக்கும். நான் என்ன சொன்னேன் என்பதை அவர்கள் கவனிக்கவேண்டும். இவ்வளவு செய்திருக்கிறோம்- இத்தனை ஆண்டுகளில் இதை நாங்கள் நிறைவேற்றித் தீருவோம் என்று சொன்னேன். இதை நீங்கள் படித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட சட்ட முன்வடிவு தனியார் கடனைப் பற்றியது, கூட்டுறவுக் கடனைப் பற்றியது அல்ல. அதை நான் அவர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்டம் கிராமப் புறங்களிலே மாதம் ரூ. 400 வருமானத்துக்குக் கீழே, குறைந்த வருமானமுடையவர்கள் பட்ட கடன்கள் பற்றியது. அவை அதிகப்படியாக இல்லை. அதனாலே மிகப் பெரிய நிவாரணம் கிடைத்து விடாது. ஆனால், விவசாயிகள் நாடு முழுவதும் கடன் சுமையாலே சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் ரூ. 200 கோடியை ரத்து செய்வோம் என்று சொன்னார்கள். அமைச்சர் இப்பொழுது பேசுகிறபொழுதுகூடக் குறிப்பிடுகிறார். இந்தச் சட்டத்திலே அந்தக் கடன் ரத்து செய்யப்படும், அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று. அதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் நான் இவைகளைச் சொன்னேன். அந்தக் கடன்களை ரத்து செய்து, சட்டம் கொண்டு வந்திருந்தால் அது நான் பாராட்டக் கூடியதாக இருக்க முடியும். நான் இன்னுங்கூடக் கேட்கிறேன். ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்வதற்கு 10 மாதம் கூட தேவைப்படலாம். ஆனால், ரூ. 120 கோடி ரத்து செய்து விட்டோம் என்று சொல்கிறீர்களே, இந்த ரூ. 200 கோடியை ரத்து செய்ய உங்களுக்கு என்ன தடை இருக்கிறது. அன்றைக்கு மத்திய சர்க்கார் குறுக்கீடு, ரிசர்வ் பாங்க் தடை என்று சொன்னீர்களா?

அதுமட்டும் அல்ல, நீங்கள் கொண்டு வந்திருக்கிற இந்தக் கடன் நிவாரணச் சட்டம், நாட்டிலே விவசாயிகள் பட்டிருக்கிற கூட்டுறவுக் கடன்களைக் கட்டுப்படுத்தாது என்று சொல்கிறீர்களே, இன்றைக்கு வறட்சி இல்லையா இன்றைக்கு மேட்டூரிலே தண்ணீர் நிலைமை என்ன? தஞ்சாவூரிலே $4\frac{1}{4}$ இலட்சம் ஏக்கர் இருக்கிறது. $2\frac{1}{4}$ இலட்சம் ஏக்கர்தான பயிரிட முடிகிறது. சம்பா பாதிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் நெற்களஞ்சியமே பாதிக்கப்பட்டிருக்கிறது. எங்கே பார்த்தாலும் வறட்சி நிலவிக் கொண்டிருக்கிறது. ஜப்தி நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. பம்பு செட்டுகளை இன்றைக்குப் பல இடங்களிலே ஜப்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் கழற்றிக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், அந்தக் கடனைக் கட்டித் தீர வேண்டுமென்று உங்களால் ஏவிவிடப்படுகின்ற அதிகாரிகள், விவசாயிகளை வேட்டையாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான்

சொல்கிறேன், நீங்கள் கொண்டு வந்திருக்கிற கடன் நிவாரணச் சட்டம், விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்கக் கூடிய சட்டம் அல்ல. கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்தால், விவசாயக் கடன்களை ரத்து செய்து கடன் நிவாரணம் தருகிறோம் என்றால், அது முற்போக்கான சட்டம் என்று பாராட்டலாம். ஆனால் நிவாரணம் வழங்குவதற்கே ஒன்றும் இல்லை. ரூ. 400-க்குக் கீழ் வருமானம் பெறக் கூடியவர்கள் எத்தனை பேர்கள் இருப்பார்கள்? கணக்குப் போட்டுப் பார்த்தால், 10,000 பேர்கள் கூட வராது. ஆனாலும், நமது முதலமைச்சர் பெரியகுளத்தை மனதிலே வைத்து, பெரிய மீன் பிடிக்கின்ற முயற்சியில் இன்றைக்குப் பாமரத்தனமாக, பலரை ஏமாற்றுகின்ற காரியமாக, நான் ஏழைகளுக்குப் பாருங்கள், கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்திருக்கிறேன் என்று ஒரு தேர்தல் தந்திரமாக, பெரியகுளத்தில் மீன் பிடிக்கும் வேலையே தவிர,....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நானும் கொஞ்ச நேரமாகப் பார்க்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் மீனைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு)

அதிலும் நான் தேர்தல் நேரத்திலே வேட்பாளரை அறிமுகப் படுத்தும்பொழுது என்ன பேசவில்லையோ அதை அவர்கள் இங்கே உதாரணமாக எடுத்துக் கொள்வதுதான் வேடிக்கையாக இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் உருவாக்கினால் நாங்கள் பயன் படுத்திக் கொள்வோம்; நீங்கள் ஆயுதங்கள் தந்தால் நாங்கள் அதை மிக நன்றாகவே பயன்படுத்துவோம். ஆனால் நான் இதை இதுவரை பேசவேயில்லை. நான் பேசியதெல்லாம் வேறு. அவைகள் பத்திரிகைகளிலேயும் வந்திருக்கின்றன; அவர்களுக்கும் நிச்சயமாகச் சொல்லப்பட்டிருக்கும்.

என்ன காரணமோ தெரியவில்லை, நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதையாவது பேச வேண்டுமென்று நினைக்கும்பொழுது யாரையாவதுபற்றி எப்படியாவது பிரச்னையை எழுப்புவதும் அவர்களுக்கு வழக்கமாக இருக்கிறது. நேற்றுகூட செல்வி ஜெயலலிதாவைப் பற்றி இங்கே பேசியதாக நான் கேள்விப்பட்டேன்; பத்திரிகையிலேயும் பார்த்தேன். அப்பொழுது நான் இங்கே இல்லை. இருந்திருந்தால் பதில் சொல்லியிருப்பேன். ஆகவே, இப்பொழுது நான்சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்குச் சிலசமயங்களில் சந்தேகம் வருகின்றது. சகோதரியா அல்லது மனைவியா அல்லது தாயா என்பதிலே சந்தேகப்பட்டால் எப்படி இருக்குமோ அப்படிப்பட்ட நிலைமையில் சில பதவிகளைப்பற்றி அவர்களுக்குச் சந்தேகம் வந்து விடுகிறது. அப்படி வரக்கூடாது. ஆளுவது எம் ஜி. ஆர் அல்ல; எம். ஜி. ஆரினுடைய கட்சியின் மூலமாக நான் தலைவராக ஆக்கப்பட்டிருக்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது நடைபெறுகின்ற விவாதத்திற்குச் சம்பந்தமில்லாவிட்டாலும் தாங்கள் அனுமதி தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஒரு விளக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், என்னையும் சேர்த்துப் பேசியதால்.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் நேற்று பேசியது, யார் ஆளுகிறார்கள் என்று தெரியவில்லை என்பது. செல்வி ஜெயலலிதா அவர்களைப் பொறுத்தவரையில் இந்தச் சத்துணவுத் திட்டத்தின் உச்ச மட்டக் குழுவிலே நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் 40,000 ரூபாய் வரையில் கொடுத்து ஒரு கூடத்தைக் கட்டிக் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். அதிகாரிகள் என்ன சொன்னார்கள் முதலிலே என்றால், இராமநாதபுரத்திற்குப் பக்கத்திலே நீங்கள் எந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கிறீர்களோ அதில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னார்கள். அதற்காகப் பார்க்கப் போனவர்கள், கட்டிடங்கள் எப்படி இருக்கின்றன என்று பார்க்கப் போன நிலையில் அந்தப் பள்ளிக் கூடத்துக்குச் சென்றார்கள் என்பது உண்மை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்குச் சரியாகத் தெரிந்திருக்கும். அது தவறு என்று பேசப்பட்டது; வெளியிலே பேசினார்கள். அதற்கு நான் இங்கே பதில் சொல்லத் தயாராக இல்லை.

இங்கே லாலா தோட்டம் என்கின்ற இடத்திலேயிருந்து 3,500 மக்களுக்கு மேல் வாழும் இடத்தில் உள்ள அந்தக் குடிசை வாழ் மக்கள், தாங்கள் போவதற்கு இருக்கின்ற ஒரே வழியை இந்தக் கட்டிடம் கட்டுவது என்ற பெயரால் அடைப்பதற்காக சுவர் வைத்து அடைக்கிறார்கள்; உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் நாங்கள் வெளியே செல்லும் அளவிற்கு, வீட்டுக் கூரைகளையெல்லாம் பிரித்துவிட்டு, குடிசைகளையெல்லாம் பெயர்த்துவிட்டு எங்கோ போய் தெருவிலே நிற்க வேண்டியிருக்கும் என்ற நிலைமையில் அங்கு போய் சத்துணவுத் திட்டத்தின் உச்ச மட்டக் குழுவிலே இருக்கிறார்கள் என்பதற்காக, இப்படிக் கூடங்கள் கட்டுகிறார்கள், நீங்கள் அதிகாரிகளுக்குத் தொலைபேசியில் சொல்ல வேண்டுமென்ற நிலையில் அவர்கள் பதில் சொன்னது இது தான்: ''இதை நான் சம்பந்தப்பட்ட தலைமைச் செயலாளருக்கு எழுதுகிறேன், அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள்'' என்று சொன்னபொழுது, நீங்கள் அப்படிச் செய்யாவிட்டால் நாங்கள் அந்தச் சுவற்றை இடிக்க வேண்டியிருக்கும் என்று பெண்கள்—நூற்றுக்கு எழுபது சதவீதம் சென்றிருந்த, பெண்கள் அந்த வற்புறுத்தலை எடுத்துக் காட்டிய பிறகு, வன்முறை கூடாது என்று சொல்லி, அதற்குப்பிறகு போலீஸ் நடவடிக்கை எடுத்தால் என்னவாகும் என்ற நிலைமையில், வேறு வழியின்றி போலீஸ் கமிஷனருக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். இதுதான் நிலைமை.

இதிலே ஆட்சித் தலைமை யார் அல்லது முதலமைச்சர் யார் என்ற பிரச்சினையெல்லாம் அங்கே இல்லை என்பதையும், வன்முறை வருகிறது என்றால் எந்த ஒரு குடிமகனும் உடனடியாக யாருக்காவது தகவல் சொல்வது என்றால் போலீஸ் அதிகாரிகளுக்குத்தான் சொல்ல வேண்டும் என்ற அந்த வகையில் கமிஷனருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதே தவிர வேறல்ல. நடவடிக்கை எடுத்து, 3,500-க்கு மேற்பட்ட குடிசைவாழ் மக்களுக்குத் தொல்லையிருக்கக் கூடாது என்பதற்காக மூன்று கட்டிடங்களில் ஒரு கட்டிடத்திற்குச் சுவர் எழுப்புவதை நிறுத்தி இருக்கிறார்களே தவிர இதில் அதிகாரமும் இல்லை, அதிகார நிலைமையில் யாரையும் வைக்கவும் இல்லை என்பதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தப் பிரச்னையில் பேசும் பொழுதுகூட தயவு செய்து பிரச்னைக்குள்ளேயிருந்து பேசி, இந்த மன்றத்தினுடைய நேரத்தை அவர்கள் எவ்வளவு உயர்வாகக் கருதுகிறார்களோ அதைக் காப்பாற்ற வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, இந்த விவாதத்திற்குச் சம்பந்தம் அல்லாத பிரச்னையாக இருந்தாலும் நம்முடைய முதல்வரவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். நான் உங்கள் மூலமாக முதல்வரவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தனிப்பட்ட முறையில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கக் கூடிய யாராக இருந்தாலும் சரி, முதல்வராக இருந்தாலும் சரி, எனக்கு எந்தவிதமான பகைமையுணர்ச்சியும் இல்லை; விரோத உணர்ச்சியும் இல்லை.

அரசியல் பின்னணியின் அடிப்படையிலேதான் பிரச்னைகளை நாங்கள் விமர்சிக்கிறோம். நம்முடைய முதலமைச்சரவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்த பொழுதுகூட இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞரை நான் எப்படித் தலைவராக எற்றுக் கொண்டிருக்கிறேனோ அதைப்போல அவர்களிடத்திலே மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தவன் தான்.

(முற்பகல் 11-50)

இன்னும் சொல்லப்போனால், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அமைச்சரவையிலே இருக்கக் கூடிய பல நபர்கள் என்னுடன் கல்லூரியிலே படித்தவர்கள், அதுமட்டுமல்ல ஒன்றாக உறங்கி ஒன்றாக இருந்த இனிய நண்பர்கள். அவர்களைக் கூட நான் விமர்சிக்கக் கூடிய அவசியம்தான் வருகிறது. காரணம் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.—ஆளும் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம்—எதிர்கட்சி. எனவே மக்களுடைய நலனை அடிப்படையாக வைத்து......





மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விமர்சிப்பதைப் பற்றி, திறனாய்வு செய்வதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. அதை உண்மையின் அடிப்படையிலே செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

திரு. அ. ரகுமான்கான் : மக்களுடைய நன்மைகளின் அடிப்படையில் தான் பிரச்சினைகளை விமர்சிக்கிறோம். அண்ணாவிடத்திலே பாடம் பயின்றவராகவும், நீண்டகாலம் அரசியலிலே இருக்கக் கூடியவருமான நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த மாதிரி விமர்சனங்களை உண்மையின் அடிப்படையில் மக்கள் நலன் கருதி விமர்சிப்பதை, உள்ளபடியே வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆனால் இங்கே நான் சொல்லக்கூடிய விவரங்கள் எனக்குக் கிடைத்திருக்கக் கூடிய தகவலின் அடிப்படையில் சொல்வதாகும். இந்த மன்றத்திலே முதல்வர் இருக்கிறார் மற்றவர்கள் இருக்கிறார்கள். அரசாங்கம் இருக்கின்றது. எனவே அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து உண்மைகளைப் பெறவேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். எங்களுக்கு செய்திகள் வருகின்றன. அந்தச் செய்திகள் தவறாகவும் இருக்கலாம், உண்மையாகவும் இருக்கலாம். அவைகள் உண்மைதானா என்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்துதான் தீரவேண்டும். ஆனால் அதே நேரத்தில் எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற தகவலின் அடிப்படையில் இங்கே நான் சொன்னேன்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், இன்றைக்கு உயர் மட்டக் குழுவிலே செல்வி ஜெயலலிதா அவர்கள் உறுப்பினராகப் போடப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் எங்களுக்குக் கிடைத்த தகவல், அவர் மதுரைப் பக்கம் போயிருந்தபோது, இந்த மாதிரி சத்துணவு மையத்திலே அவர்கள் சென்று சோதனை இட்டார்கள், அங்கே இருக்கக் கூடிய உணவை ருசித்துப் பார்த்தார்கள். போலீஸ் அதிகாரிகள் போனார்கள் என்ற நிலைமைகள் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அந்தத் தகவலை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உண்மைக்குப் புறம்பானது என்று வேண்டுமானால் மறுத்தால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் அந்த சம்பவம் நடைபெற்றிருக்கும்போது, நான் கேட்க விரும்புகிறேன்—அவர் அமைச்சரல்ல, சட்டமன்ற உறுப்பினர் அல்ல, அந்தத் தேதியில் உயர்மட்டக் குழுவின் உறுப்பினரும் அல்ல. அப்படி இருக்கும் போது, போவதற்கான அதிகாரம் பொதுமக்களில் யார் போனாலும் கிடைக்குமா? அதிகாரிகள் பின் தொடர்வார்களா? எஸ்.பி. போன்ற பெரிய போலீஸ் அதிகாரிகளுக்கு அந்த உரிமையை முதலமைச்சர் வழங்குவாரா? இது அதிகார முறை கேடு அல்லவா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அவர் கேள்வியைக் கேட்கும்போது ஏதோ நியாயம் இருப்பதைப்போல திறமையாகப் பேசுகிறார். அவர் வழக்கறிஞர். ஆனால் 40 ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு கட்டிடம் கட்டவேண்டும் என்று வரும்போது இடத்தை நான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லி, அதிகாரிகள் அதற்கு பக்கத்திலே இருக்கின்ற கட்டிடங்களைப் பார்த்து, இதில் எதைபோன்ற கட்டடங்களைக் கட்டவேண்டும் என்று விரும்புகிறீர்கள், எங்கே கட்டவேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்று, இடத்தைப் பாருங்கள் என்று சொன்னால், அங்கே போகும்போது, விளம்பரம் உள்ளவர்களைப் பார்ப்பதற்கு ஆட்கள் வருவதும், அந்தக் கூட்டத்திலே இருந்து சிலரைக் காப்பாற்றுவதற்காக காவல் துறை செல்வதும் தேவையாக இருக்கின்றது.

ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்திரா காந்தி அம்மையார் தாக்குதல் என்று ஒரு செய்தியும் உங்களுக்குத் தெரியும். அது உண்மையா, இல்லையா என்பதைப் பற்றி வழக்கு மன்றம் தான் தீர்ப்பு சொல்ல முடியும். இப்போது அதைத் பற்றி நான் எதுவும் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, இங்கே எதிர்க் கட்சித் தலைவர் என்று நீங்கள் பெருமையோடு சொல்லுகிறீர்களே, அந்த மாண்புமிகு எனது நெருங்கிய நண்பர் கலைஞர் கருணாநிதி அவர்கள், திரும்ப ஒரு முறை அங்கே நிகழ்ச்சிகளுக்குப் போகும்போது, ஒரு முதலமைச்சர், பிரதம அமைச்சருக்குக் கூட கொடுக்காத அளவுக்கு பாதுகாப்பு அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது என்றால், அதன் பொருள் என்ன? அவர் பிரதம அமைச்சரா? அப்போது முதல்மைச்சரா? எதிர்கட்சியிலே இருக்கின்றவர். அப்போது ஆட்சி இல்லை. இவைகளை எல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சிலபேர்கள் போகும்போது கூட்டம் கூடுகிறது. அதிலும் பெண்கள் போகும்போது கூட்டம் சேருகிறது அதிகமாக, அதுவும் விளம்பரம் பெற்றவர்கள் போகும்போது எப்படிப்பட்டவர்கள் அங்கே கூடுகிறார்கள் என்பதை நாம் கணக்கில் எடுக்க முடியாது,

ஆகவே, எச்சரிக்கையாக, பாதுகாப்பிற்காக அதிகாரிகள் போனால் அவர்கள் முதலமைச்சரா, அல்லது அவர்தான் ஆளுகிறாரா ? என்ற சந்தேகத்திற்கெல்லாம் நம்மை ஆளாக்கிக் கொள்ளவேண்டாம். அதற்காக நேரத்தை வீணாக்கவேண்டாம். இதற்கு இறுதியான முடிவு உங்களுக்குத்தான் சாதகமாக இருக்க வேண்டும் என்று கருதினால், நான் குறுக்கிடத் தயாராக இல்லை. ஆனால் நியாயம் ஏது, உண்மை ஏது, என்று பார்க்க வேண்டும். நாளைய தினம் இதே நிலைமை ரகுமான்கான் அவர்களுக்கு வருமானால் இந்த அரசு பாதுகாப்புகொடுக்கும்.



**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, அரசு எனக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் என்பதற்காகவோ அல்லது பாதுகாப்பு கொடுக்காது என்பதற்காகவோ அரசியலுக்கு வந்ததற்குப் பிறகு வருத்தப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது. ஆனால் பாதுகாப்புக் கொடுத்தால் நல்லது, வரவேற்கிறேன். அதே நேரத்தில் நான் கேட்ட கேள்வியை நம்முடைய முதல்வர் அவர்கள் வேறு விதமாகச் சொல்லுகிறார்கள். பாதுகாப்புக்காக போலீஸ் அதிகாரிகள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஜெயலலிதா இந்த நாட்டினுடைய பிரஜை......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது. முதல்வர் அதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் பேசும்போது விளம்பரம் உள்ளவர்கள் போகும்போது பாதுகாப்புக் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினர் கடன் நிவாரணச் சட்டத்தைப் பற்றிப் பேசுமாறு பணிவோடு வேண்டுகிறேன் உங்கள் மூலமாக.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விளம்பரம் அடைந்த யாராவது சென்றாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் நிலையில் போலீசார் இருக்கிறார்கள். அதற்காகத் போகிறார்கள். உங்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கப்படும் என்று சொல்லி விட்டார்கள். அத்துடன் இந்தப் பிரச்சினை முடிந்து விட்டது. நீங்கள் மசோதாவின் மீது பேசுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, பேச்சை இதோடு விட்டுவிட்டு வேறு பிரச்சினைக்குப் போய் விடுங்கள் என்று தாங்கள் சொன்னால் நம்முடைய முதல்வர் அவர்கள் சொல்லிய குற்றச்சாட்டு மட்டும் இருக்கும். உறுப்பினராக இருக்கக்கூடிய எங்களுக்கு அதில் பதில் சொல்ல உரிமை இல்லையா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, அவர் சொல்வது புரியவில்லை. குற்றச்சாட்டு நான் எங்கே சொன்னேன் ? நீங்கள் சொல்லிய குற்றச்சாட்டுக்கு நான் பதில் விளக்கம் சொன்னேன். குற்றச்சாட்டு உங்கள் மீது சொல்வதற்கு எவ்வளவோ இருக்கிறது. அதை நான் இப்போது பயன்படுத்தத் தேவையில்லை. அதற்கான நேரமும் காலமும் வரும்போது அதை அப்போது சொல்கிறேன். ஆனால் இன்றுள்ள பிரச்சினை, நேற்று சொன்னது உண்மைக்கு மாறானது என்பதை விளக்குவதற்காக விளக்கம் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதை முடித்து விட்டு, பில்லுக்கு வந்துவிடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகச் சாமார்த்தியமாகப் பேசுகிறார். நான் எப்போதுமே திறந்த புத்தகம். வேண்டுமானால் என் மீது பொய் வழக்குப் போடலாமே தவிர, எனக்கு எதிராக குற்றச்சாட்டு சொல்ல முடியாது. * * * (கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னதை அவைக்குறிப்பில் இருந்து நீக்குகிறேன். (கூச்சல், குழப்பம்).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் திறந்த புத்தகம் என்று சொன்னதை நான் வரவேற்கிறேன். எனக்கு ஆட்சேபணை இல்லை. அவர் மீது வீண் பழிசுமத்துகிறேன் என்று சொன்னால் அது அவருடைய நம்பிக்கை, அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் * * * என்று சொல்வது இந்த மன்றத்திலே சொல்லக்கூடிய வார்த்தை அல்ல. அதிலும் ஆட்சி செய்யக்கூடியவர்களைப்பற்றி சொல்லக்கூடிய வார்த்தை அல்ல. மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இதை உணர்வார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரகுமான்கான் கடைசியாகச் சொன்ன அந்த வாசகம் முழுவதையும் நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என் மீது குற்றச்சாட்டு சொல்கிறபோது, வெளியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு ஏதோ கருணையின் அடிப்படையில் விட்டு வைத்திருப்பதைப் போல் ஒரு உணர்வு தெரியும். ஏதோ குற்றச்சாட்டு இருக்கிறது. நேரம் வரும்போது பயன்படுத்துகிறேன் என்று சொன்னபோது, குற்றச்சாட்டுகளை சந்திப்பதற்கு எப்போதுமே நான் தயாராக இருக்கிறேன்.

ஆகவே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தக் கடன் நிவாரணச் சட்டம் ஏழைஎளிய மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய சட்டம் அல்ல. காரணம் இதனாலே 10 ஆயிரம் பேருக்குக் கூட நன்மை வரவில்லை. உண்மையிலேயே விவசாயிகள்தான் பெரும் கடன்காரர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய அனைத்துக் கடன்களும் ரத்து செய்யப்படவேண்டும். தேர்தல்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





காலத்திலே வாக்குறுதி கொடுத்தீர்கள். ஆனால் இப்போது இதில் கூட்டுறவு கடன்களையும், விவசாயக் கடன்களையும், ரத்து செய்து நிவாரணம் அளிக்கக்கூடிய பிரிவுகள் இல்லை. ஆகையினாலே இது ஏழை எளிய மக்களை ஏமாற்றுகின்ற சட்டம் என்று சொல்லி, இருந்தாலும்கூட குறைந்த பட்சம் 400 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு, கீழே உள்ளவர்களுக்கு ஒரு 100 ரூபாய், 200 ரூபாய் கடன் நிவாரணம் செய்யவேண்டுமென்று குறைந்த அளவிலேயாவது, கொண்டுவரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டுமென்று கூறி, உங்களுடைய சிகப்பு நாடா முறையைத் தவறாகப் பயன்படுத்தாமல், தாசில்தார்கள் தவறாகப் பயன்படுத்தாமல் அதிகாரிகள் தவறாகப் பயன்படுத்தாமல், மனுக்களை பரிசீலனை செய்து அதன் மீது நடவடிக்கை எடுத்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இதனால் பெரும் பலன் வந்துவிடாது. விவசாயிகளுக்கு கடன் ரத்து செய்யாத இந்தச் சர்க்கார் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த சட்டத்தை இன்னும் மக்களை ஏமாற்றக்கூடிய சட்டம் என்று கூறி அமைகிறேன்.

(நண்பகல் 12-00)

* திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் இந்த அவைமுன் வைக்கப்பட்டு இருக்கிற கிராமப் கடன் நிவாரணச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். கிராமப் பகுதியில் உள்ள ஏழை எளிய நடுத்தர விவசாயப் பெருங்குடி மக்கள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயக் கூலிகள் ஆகியோர் பெற்றுள்ள கடன்களை 3-வது முறையாக முழுமையாக ரத்து செய்யப்படுகின்ற வகையில் கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டத்தைப் போன்று வேறு எந்த ஒரு கால கட்டத்திலும், எந்த ஒரு மாநிலத்திலும், எந்த ஒரு அரசாலும் கொண்டு வரப்படவில்லை. கடன் ரத்து என்று மற்ற மாநிலங்களில் கொண்டு வந்து இருந்தாலும், 2400 ரூபாய் அளவிற்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்குத்தான் அந்தச் சலுகை அளிக்கப்பட்டு இருக்கிறது ஆனால், இங்கே 4800 ரூபாய் மற்றும் அதற்குக் கீழே வருமானம் பெறக்கூடிய விவசாயிகள், விவசாயக் கூலிகள் மற்றும் நலிந்த பிரிவினர் ஆகியோர் பெற்றுள்ள கடனை முழுமையாக ரத்து செய்து இங்கே சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தை நான் மனதார வரவேற்கிறேன்.

இந்தச் சட்டத்தைப் பற்றிப் பேசுகிறபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இப்படிப்பட்ட சட்டங்கள் கடந்த காலத்திலும் கொண்டு வரப்பட்டு இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் கொண்டு வந்து இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் ஒரு

[திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

[1982 செப்டம்பர் 8

நல்ல தொழில் நடத்தும் வழக்கறிஞர். இப்படிப்பட்ட ஒரு சட்டம் 1972-ம் ஆண்டிற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டதா ? தயவு செய்து மனசாட்சியைத் தொட்டுப் பார்த்து பதில் சொல்லுங்கள்.

இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை முதன் முதலாக புரட்சித் தலைவர் அவர்கள் தான் கொண்டு வந்தார்கள். திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில் கடனை ரத்து செய்வதற்கு எந்தவிதமான முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. நீங்கள் என்னென்ன வாக்குறுதிகளை அளித்தீர்கள், திராவிட முன்னேற்றக்கழகம் இதே மன்றத்தில் என்னென்ன வாக்குறுதிகளை அளித்தது, அவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டனவா என்பதை திராவிட முன்னேற்றக்கழகம் தன்னுடைய வரலாற்றை சற்று பின்நோக்கிப் பார்த்துப் பதில் சொல்லவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

1972–73-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை இந்த மன்றத்தில் சமர்பித்து அன்றைய முதலமைச்சர் கருணாநிதி என்ன பேசினார் தெரியுமா ? ''நிலத்தை நம்பி வயிற்றைக் காக்கும் எண்ணிறந்த விவசாயப் பெருங்குடி மக்கள் கடன் சுமை கழுத்தை அழுத்திக் கொண்டு இருக்கிறது. அவர்கள் அதிக வட்டிக்கு தனிப் பட்டவர்களிடம் கடன்களைப் பெறுவதும், அந்த வட்டி முதலை விட அதிகமாகப் பெருகி பயமுறுத்துவதும், திருப்பிச் செலுத்த முடியாமல் திண்டாடுவதும், நம் கண்முன்னதிரே காணுகின்ற காட்சியாகும் அவர்களுக்கு நிவாரணம் வழங்குகிற வகையில், அவர்களுடைய கடன் சுமையைக் குறைக்கவும் சட்டம் கொண்டு வரப்படும் என்று களிப்புடன் அளிக்கிறேன் என்று கரவொலியிடையே அறிவித்தார்.'' அருமை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களே, உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அப்போது கடன் ரத்துசெய்யப்பட்டதா? தொழில் நடத்தும் வழக்கறிஞர்களே ஆக்ட் 38/72-ல் அந்தக் கடன்கள் முழுமையாக ரத்து செய்யப் பட்டனவா ? ரத்து செய்யப்படவில்லை. அந்தச் சட்டத்தின் நோக்கம் என்ன தெரியுமா ? வாங்கியிருக்கிற முதலைப் போல், இன்னொரு மடங்கு வரை வட்டி கட்டவேண்டும். மேற்கொண்டு உள்ள தொகை தான் ரத்து செய்யப்படும். இப்படிபட்ட ஒரு சட்டம் தான் அன்றைக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால், தற்போது கொண்டு வரப்பட்டுள்ள சட்டத்தைப் போல், முழுமையாக கடனை ரத்துசெய்து சட்டம் கொண்டு வரப்பட்டது திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் என்று மாண்புமிகு ரகுமான்கான் போன்றவர்கள் தவறான தகவலைக்கொடுக்கலாமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்த பிறகு, இன்றைக்கு 3-வது முறையாக இப்படிப்பட்ட ஒரு சட்டம், நடுத்தர விவசாயிகள், நலிந்த பிரிவினர்கள், விவசாயக் கூலிகள், 4800 ரூபாய்க்குக் கீழே வருமானம் பெறுபவர்கள் ஆகியோர் பெற்றுள்ள கடனை முழுமையாக, வட்டியும், முதலையும்



[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

1982 செப்டம்பர் 8]

சேர்த்து முழுமையாக ரத்து செய்து இருக்கிறது. இதைப் போன்று ஒரு சட்டம் கொண்டு வரப்படவேண்டும் என்று எந்த ஒரு விவசாயத் தொழிலாளியோ, விவசாயச் சங்கமோ அல்லது வேறு எந்த அமைப்போ அரசைக் கேட்கவில்லை. எந்த ஒரு முனையிலிருந்தும் இப்படிப்பட்ட ஒரு கோரிக்கை இந்த அரசுக்கு வைக்கப்பெறவில்லை. குறிப்பாக, 24–8–82 அன்று வரையில் பெற்றுள்ள கடனை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை இந்த அரசுக்கு வைக்கப்பெறவில்லை. எந்த வித கோரிக்கையும் வராமல், எந்த ஒரு முனையில் இருந்தும் கோரிக்கை வராமல், போராட்டங்கள் எதுவும் நடைபெறாமல், இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை, எளிய, நடுத்தர விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, விவசாயக் கூலிகளுக்கு, நலிந்த பிரிவினருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, அவர்கள் பெற்றுள்ள கடன் முழுவதையும் ரத்து செய்யவேண்டும் என்று இந்தச் சட்டத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

இந்தச் சட்டத்தைப் பாராட்ட முடியாவிட்டாலும், இதைக் கொச்சைப் படுத்தாமல் இருக்கலாம் அல்லவா ? இப்படிப்பட்ட ஒரு சட்டம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது வந்தது என்ற தவறான தகவல் கொடுக்காமல் இருக்கலாம் அல்லவா ?

நான் திட்டவட்டமாக இந்த மன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட முறையில் கடனை ரத்து செய்யவேண்டும் என்ற எண்ணமோ, துணிவோ முயற்சியோ கடந்த காலத்தில் இருந்த அரசுகள் எதுவும் மேற்கொள்ளவில்லை. புரட்சித் தலைவர் அவர்கள் தான் 3-வது முறையாக இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அடியோடு வட்டியும் முதலுமாக அந்தக் கடனை ரத்து செய்து இருக்கிறார்கள். திரிபுரா போன்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டு வரப்பட்டு இருந்தாலும், அங்கே ஆண்டு வருமானம் ரூ. 2400 என்ற அளவில் தான் வைத்து இருக்கிறார்கள். தமிழகத்தில் மட்டும் தான் ரூ. 4800 என்ற அளவிற்கு அதை உயர்த்தி, அதற்குக் கீழே வருமானமுள்ள விவசாய்கள் பெற்று இருக்கும் கடன்கள் ரத்து செய்யவேண்டும் என்று ஒரு நிலையை எடுத்து இருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் 1980-ம் ஆண்டில் போடப்பட்ட இப்படிப் பட்ட சட்டத்தின் வாயிலாக—எனக்குக் கிடைத்த தகவல்படி—4 கோடி முதல் 5 கோடி வரையில் கடன்கள் ரத்து செய்யப் பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் தான், அத்தகைய பலன் இன்னும் இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள், நடுத்தர மக்கள் நலிந்த பிரிவினர் ஆகியோருக்குக் கிடைக்கவேண்டும் என்ற முறையில் 24–8–82 அன்று வரையில் இந்த நாட்டிலே அவர்கள் பெற்றுள்ள கடனை முழுமையாக ரத்துசெய்வது என்ற புனிதமான நோக்கத்துடன் இந்தச் சட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர்

அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். அதுவும் எந்த விதத்திலும், யாரிடமிருந்தும் எந்தவிதமான கோரிக்கையும் வராமல் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது என்பதைப் பார்க்கிற நேரத்தில், உள்ளபடியே இந்த நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்கள், விவசாயிகள், மிகவும் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

கடந்த காலத்தில் தி.மு.க. அரசால் கொண்டு வரப்பட்ட சட்டம் ஒருவர் 1,000 ரூ. கடன் பெற்று இருந்தார் என்று சொன்னால், வட்டி ஆயிரம் ரூபாய் வரை அவர் அதற்குச் செலுத்தவேண்டும், மேற்கொண்டு வருகின்ற வட்டியை மட்டும் தான் ரத்து செய்தார்கள். ஆனால் இன்றைக்கு முழுவதுமாக அந்தக் கடன் ரத்து செய்யப்படுகிறது. ஆகவே, இந்தச் சட்டத்தால் ஏற்படுகின்ற பயனைப் போல் கடந்த காலத்தில் எப்போதும் ஏற்பட்டது இல்லை. மற்ற இடங்களிலும் இது கொடுக்கப்படவில்லை. இங்கேதான் கடனில் இருந்து முழுமையாக நிவாரணம் அளிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டம் ஏழை எளிய மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் கூட்டுறவுக் கடனைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். கூட்டுறவுக் கடனைப் பொறுத்த வரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே 120 கோடி ரூபாய் வரையில் நிவாரணம் அளித்து இருக்கிறார்கள். மேலும் நிவாரணம் கொடுக்கின்ற அளவிற்கு காலம் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். அந்த ஒரு வாக்குறுதி என்று சொன்ன திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கு, உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதே மன்றத்தில் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிகாலத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் எத்தனை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன தெரியுமா?

''மால்கோ நிறுவனம் தேசியமயமாக்கப்படும் என்று அறிவித்தார்கள். உழுகின்றவனுக்கு நிலம் சொந்தம் என்று சொல்லி சட்டம் கொண்டு வருவோம் என்று அறிவித்தார்கள். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வந்த காலத்தில் இருந்து டிரஸ்டிகளுக்கு அளிக்கப்பட்டு இருந்த விதிவிலக்குகளை ரத்து செய்து சட்டம் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள்'' அந்த வாக்குறுதிகள் எல்லாம் அப்படியே காற்றிலே கலந்து விட்ட கீதங்களாக ஆகிவிட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த கடன் நிவாரணம் என்ற முறையிலே இருக்கிற 80 கோடி ரூபாயையும் ரத்து செய்ய வேண்டுமென்றாலும் கூட அதற்குப் பணம் ஒரு தடையாக இருக்கிறது. மத்திய அரசின் ஆணை ஒரு பக்கம் தடையாக இருக்கிறது. பணம் தேவை என்ற காரணம் ஒரு பக்கம் தடையாக இருக்கிறது. ஆனால் மால்கோ நிறுவனத்தை தேசியமயமாக்குவேன் என்று





அறிவித்த அறிவிப்புக்கும் உழுகின்றவனுக்கே நிலம் சொந்தம் என்ற சட்டத்தை இந்த மன்றத்திலே கொண்டுவந்து நிறைவேற்றுவேன் என்று சொன்ன வாக்குறுதிக்கும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் தோன்றிய காலத்திலிருந்தே ட்ரஸ்ட் நிலங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற விதிவிலக்கை ரத்து செய்தே தீருவேன் என்றெல்லாம் அறிவித்த அறிவிப்புகளைச் சட்டமாக்குவதற்கும், அதை எல்லாம் நடைமுறைப்படுத்துவதற்கும் எத்தனை கோடிகள் தேவை? ஒவ்வொன்றுக்கும் ஒரு சட்டம் தானே போட வேண்டும்? அவை எல்லாம் காற்றிலே கலந்த கீதங்களாக இருக்கின்றபோது இப்படிப்பட்ட நடுத்தர விவசாயிகள், ஏழை எளிய விவசாயிகள் சமுதாயத்தில் நலிந்த பிரிவில் இருக்கிற மக்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகளை பாராட்டவேண்டாமா?

இந்த அரசு எவ்வளவு உறுதியாக, எவ்வளவு துணிவாக இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, இந்தக் சட்டத்தினுடைய பயன் நலிந்த பிரிவினருக்குப் போய்ச் சேர வேண்டும்; அதற்காக ஒரு குறிப்பிட்ட காலத்திலே அவர்களுக்கு ஏற்பட்ட கடனை மட்டும் ரத்து செய்தால் போதாது; அடுத்த கட்டமாக 24-8-1982 வரையிலுள்ள பட்ட கடனையும் ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லுகின்றபோது அதை பாராட்ட வேண்டாமா? சில மாற்றங்களை வேண்டுமானால் சொல்லலாம். நல்ல மாற்றங்களை சொன்னால் அதை வரவேற்கலாம். ஆனால் அரசு எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும் அருமை நண்பர் ரகுமான்கான் அவர்களுக்கு முன்னால் வருவதெல்லாம் பெரியகுளம் ஒன்றுதான்.

சமுதாயத்திலே நலிந்த பிரிவிலுள்ள மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்திற்காக இந்த அரசு 24-8-82 வரையிலுள்ள கடனை ரத்து செய்வதற்கான நடவடிக்கையை இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நல்ல சட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் நான் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின்முன் என்னுடைய தனிப்பட்ட கோரிக்கைகளாக இரண்டை வைக்க விரும்புகிறேன்.

நலிந்த பிரிவினருக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற புனிதமான நோக்கத்தால் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் சட்டங்களை இயற்றும் போது சில நேரங்களில் நீதிமன்ற தீர்ப்புகள் அதற்கு தடையாக இருக்கின்றன. அதை சீர்செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சமுதாயத்தில் நலிந்த மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதில் நாம் கொண்டிருக்கிற அக்கறையை இந்த சட்டம் எடுத்துக் காட்டுகிறது. அதற்கு நீதிமன்றம் தடையாக இருக்கிறது. அரசு இந்த நீதிமன்றத் தடையை ரத்து செய்ய வேண்டும்.

தாசில்தாரே விசாரித்து முடிவை அறிவிக்க வேண்டுமென்று இருந்தாலும் சமீபத்திய நீதிமன்ற ஆணை அதற்கு முரணாக இருக்கிறது. கடன் என்று சொல்லுகின்றபோது செக்யூர்டு டெட் ''நான் செக்யூர்டு டெட் என்று இருந்தாலும்கூட இந்தச் சட்டத்திலே விதி 5-லே அடகு வைக்கப்பட்ட பொருள் சம்பந்தமாக தாசில்தாரருக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் விதி 6—ன்படி ஈடு வைக்கப்பட்ட பொருள்களைப்பற்றி விண்ணப்பம் செய்யலாம் என்ற காரணத்தைக் காட்டி சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டு டிவிஷன் பெஞ்சுகள் சிவில் நீதிமன்றம்தான் விசாரிக்க வேண்டும், தாசில்தார் விசாரிக்கக்கூடாது என்று திர்ப்பு அளித்திருக்கின்றன. தாசில்தாருக்கு புரோநோட்டுகளை ரத்து செய்யவேண்டுமென்று மனு செய்து, அது தீர்க்கப்பட்டு 4, 5 மாதங்கள் ஆனபிறகும், அதிலே ஒரு முடிவு பெற்றபிறகும்கூட தாசில்தார் விசாரித்தது செல்லாது சிவில் நீதிமன்றம்தான் விசாரிக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. சென்னை உயர்நீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்சுகள் தாசில்தார் விசாரிக்கக்கூடாது என்று தீர்ப்பு வழங்கி இருக்கிற காரணத்தால் புரோநோட்டு சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க தாசில்தாருக்கு அதிகாரம் கிடையாது. அந்த அதிகாரத்தை இன்றைக்கு தமிழ்நாட்டிலே சிவில் நீதிமன்றங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்றன. அந்த நிலையை மாற்றுவதற்கு புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விதி 5, விதி 6—ன் கீழ் தொடர்பு இருக்கிற வழக்குகளை விசாரிக்க தாசில்தாருக்கு மனு கொடுக்கும்போது மனுதாரரே அவருடைய வருமானம், கடன் நிவாரண மதிப்பு, சொத்து, சொத்துக்களின் மதிப்பு, இவைகளை ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடமிருந்து வாங்கிவரவேண்டுமென்று இருக்கிற நிலைமையை மாற்றி கடன் நிவாரணம் கோரி ஒருவர் விண்ணப்பித்தவுடன் தாசில்தாரே தன்னுடைய நிர்வாகத்தின் மூலமாக அந்த விவரங்களைப்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த முறை ஏற்படுத்தப்படுமானால் இந்தச் சட்டம் ஏழை எளிய விவசாயிகளுக்கு ஒரு புனிதமான சட்டமாக, ஒரு வரப்பிரசாதமாக அமையும். அது மட்டுமல்லாமல் இது இந்திய துணைக் கண்டத்திலுள்ள மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுகிற ஒரு கடன் நிவாரணச் சட்டமாக எந்த மாநிலத்திலும் நிறைவேற்றாத ஒரு சட்டத்தை மிகத் துணிச்சலோடு நிறைவேற்றிய ஒரு சட்டமாக இது அமையும். சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குச் செய்யும் ஒரு புனிதமான சட்டமாக இது அமையும். இது ஒரு புரட்சிகரமான சட்டமாக அமையும். ஆகவே, என்னுடைய இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்தை வைத்து, அமர்கிறேன். நன்றி. வணக்கம்.





திரு. எஸ். இராசாராமன் மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தாக்கல் செய்திருக்கின்ற இந்த 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக சிலக் கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

(பிற்பகல் 12.10)

இங்கே எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர் எந்த அரசும் செய்யாத சலுகையை இந்த அரசு செய்திருக்கிறது என்று குறிப்பிட்டார். ஆனால் 1937 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். வட்டிச் சலுகையைச் செய்ய வேண்டுமென்று அன்றையதினம் ஆட்சியிலே இருந்தவர்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதைப் போலவே 1952 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், கடன் ஒத்திவைப்பு என்று வரையறுக்கப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தக் காலத்தில் ஒரு ஆண்டு அல்லது 2 ஆண்டுகளுக்கு கடனை ஒத்தி வைக்க வேண்டும் என்று (குறுக்கீடு)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மற்றைய அரசுகள் எல்லாம் கொண்டு வந்தது கடன் நிவாரணச் சட்டம்தான். இந்த அரசு தான் கடன் ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்திருக்கிறது. வட்டி அசல் எல்லாவற்றையும் சேர்த்து கடன் ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்திருக்கிறது. வட்டிச் சலுகை மற்றும் கடன் ஒத்தி வைப்பு போன்ற சட்டங்களை மற்றவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நானே சொல்லியிருக்கிறேன். ஒரு தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள்.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1952 கடன் ஒத்தி வைப்புச் சட்டம் 2 ஆண்டுகளுக்கு என்று வரையறுத்து கொண்டு வந்தார்கள். ஆனால் 1976 ஆம் ஆண்டு தமிழகத்தில் மாத்திரம் அல்ல, இந்தியா பூராவும் எமர்ஜென்சி இருந்தபோது, தமிழகத்தில் கடன் தள்ளுபடி என்ற அளவுக்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் இன்றையதினம் நீங்கள் கொண்டு வந்திருக்கிற இந்தக் கடன் ஒழிப்புச் சட்டம் அத்துணை வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் சரியாக பயன் அளிப்பதாகயில்லை. அதிகமான பேர்களுக்கு இதில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இந்தச் சட்டம் அத்துணை ஏழை பாழைகளுக்கும், குடியானவர்களுக்கும், விவசாயிகளுக்கும் சிறு தொழில் செய்கிற விவசாயிகளுக்கும் இன்னும் தேவைப்படும் அத்தனைப் பேருக்கும் பலன் அளிக்கக்கூடிய நிலையில் இல்லை.

விதவைகளாக இருந்தால் இந்தச் சட்டத்திலேயிருந்து விதிவிலக்கு அளித்துவிட்டீர்கள். அதேபோல வயது வராத சிறுவர்களாக இருந்தால் விதிவிலக்கு அளித்திருக்கிறீர்கள். விவாகரத்து செய்யப்பட்டமனைவியாக இருந்தால் அவர்களுக்கு இந்தச் சட்டத்திலேயிருந்து விதிவிலக்கு அளித்திருக்கிறீர்கள். வருமான வரி கட்டுகிற நபராக இருந்தால் அவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்கும் விதிவிலக்கு அளித்திருக்கிறீர்கள். 25,000 ரூபாய் சொத்து மதிப்பு வைத்து உள்ள யாராக இருந்தாலும் சரி, இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்திருக்கிறீர்கள். 5 ஏக்கர் 10 ஏக்கர் நஞ்சை வைத்திருக்கிற விவசாயியாக இருந்தால் இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படி எல்லோருக்கும் இதிலே விதிவிலக்கு அளித்துவிட்டால், பாக்கியுள்ளவர்களில் மிகச் சொற்பமானவர்களே இந்தச் சட்டத்தினால் நன்மை அடைவார்கள். அதிகமான அளவிலே மக்கள் இதிலே நன்மை அடைய வாய்ப்பில்லை என்பதைச் சுட்டிக் காட்டத்தான், 1937 ஆம் ஆண்டிலும் 1952 ஆம் ஆண்டிலும் போடப்பட்ட சட்டத்தைப்போல வரையறுத்துப்போட வேண்டும் என்று குறிப்பாக சுட்டிக் காட்டினேன்.

கடந்த 6 ஆண்டுக்காலமாக, 1976—க்குப் பிறகு இந்தச் சட்டம் தொடர்ந்து 6 மாதத்திற்கு ஒரு முறை ஒத்தி வைக்கப்பட்ட காரணத்தால் மாநிலத்திலே உள்ள சாமானிய மானவர்கள், சாதாரணமானவர்கள், கடன் வாங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏதோ சிறிய அளவிலே தொழில் செய்பவர்கள், வெற்றிலை பாக்கு கடை போன்று வைத்துப் பிழைப்பவர்கள், சிறிய வியாபாரிகள், சிறிய அளவிலே ரூ. 100, ரூ. 200. கூட கடனாக வாங்க முடிவதில்லை. இது போலவே விவசாயிகள் ஒரு ஏக்கர், 2 ஏக்கர் வைத்துக் கொண்டிருப்பவர்கள் சாகுபடிச் செய்ய கடன் வாங்க முடியவில்லை. கூட்டுறவு விவசாயச் சங்கங்களின் கொடுக்கப்படவேண்டிய கடன் பல ஆண்டுக்காலமாக ஒத்தி வைக்கப்பட்ட காரணத்தாலும், அங்கே அதிகமாக ஓவர் டியூ இருக்கிற காரணத்தினாலும் அவர்கள் கடன் பெற முடியாமல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே 1937 ஆம் ஆண்டிலே செய்ததைப் போல, 1952 ஆம் ஆண்டிலே செய்ததைப் போல இந்தக் கடன் ஒழிப்புச் சட்டத்தை வரையறுத்துக் கொண்டு வர வேண்டும். இல்லையென்றால் கடன்கள் அத்தனையும் ரத்து செய்து விடுங்கள். அதுவும் இல்லையென்றால் வட்டிக் கடைகளின் லைசன்சுகள் அத்தனையும் ரத்து செய்துவிட்டு, அவைகளை அரசே ஏற்று நடத்த வேண்டும். தற்போது கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக சில இடங்களில் நகைக்கு கடன்கள் வழங்கப்படுவது போல, மாநிலத்திலுள்ள அத்துணை வட்டிக் கடைகளையும்



அதன் லைசன்சுகளையும் ரத்து செய்து விட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக சிறு விவசாயிகளுக்கு, சிறு வியாபாரிகளுக்கு கடன் கொடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்வதோடு, கடந்த 6 ஆண்டுக் காலமாக அனைத்துக் கடன்களையும் ஒத்தி வைத்து ஒத்தி வைத்துக் கொண்டே இருந்த காரணத்தால் இப்பொழுது யாரும் கடன் கொடுப்பதற்கும் தயாராக இல்லை என்றும் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக வசதி பெற்றவர்களும் ஓரளவிற்கு செல்வாக்கு மிகவும் உள்ளவர்களும் தான் ஆங்காங்கே கொஞ்சம் கொஞ்சம் கடன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். 1 ஏக்கர் 2 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்க வேண்டும் என்றால் அல்லது அதன் மேல் கடன் வாங்க வேண்டும் என்றால், 10 ஏக்கர் அளவில் வைத்துக் கொண்டிருப்பவர்கள் தான் கடன் வாங்குகிறார்கள். ஏனென்றால் கடன் கொடுப்பதற்கு வட்டிக் கடைக்காரர்களானாலும் சரி, அல்லது வெளியிலே பணம் வைத்துக்கொண்டு வட்டிக்கு விடுபவர்களானாலும் சரி, கடன்களை தொடர்ந்து ரத்து செய்துகொண்டிருக்கும் நிலையில், பணத்தைக் கடன் கொடுக்க தயாராக இல்லை.

சிறு விவசாயிகளுக்கு இந்தக் கடன் சலுகை சென்று சேரவில்லை, எனவே நீங்கள் குறிப்பிட்ட ஒரு கால வரையறை நிர்ணயித்து இந்தச் சட்டம் எப்படியாவது ஏழை மக்களுக்குச் சென்று சேருகின்ற அளவுக்கு, சிறு வியாபாரிகள் பயனடைகின்ற அளவுக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே நான் கருத்து தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது தமிழ்நாடு பூராவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இன்றையதினம் தஞ்சை மாவட்டம் பூராவும் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் போய்ச் சேரவில்லை. இப்படித் தஞ்சை மாவட்டமும், தமிழகமும் வறட்சியால் பாதிக்கப்பட்ட இந்த நேரத்திலே இந்தச் சட்டத்திலே ஒரு குறிப்பிட்டவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப் பல்வேறு விதிவிலக்குகளையும் ஓட்டைகளையும் வைத்து இந்தச் சட்டத்தை நிறைவேற்றினால் நிச்சயமாக விவசாயிகளுக்கும் சாமானியர்களுக்கும், இது பயன்படாது என்ற என்னுடைய கருத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணி லெண்டர்ஸ் அமெண்ட்மெண்ட் பில் சம்பந்தமாக ஒருசில கருத்துக்களை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1982 செப்டம்பர் 8

தமிழகத்திலே இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய மிகப் பெரிய பிரச்சினை இந்தத் திருத்தத்தினால் மட்டும் முடிந்து விடப் போகின்ற பிரச்சினை அல்ல என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் அரசின் கவனத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல நூற்றுக்கணக்கான ஏழை மக்கள் அவர்கள் தங்களுடைய தேவைக்காக தங்களுடைய நகைகளை வைத்து வங்கிகளிலே பணம் பெறுவதற்கு இருந்த வசதி இன்றைக்கு பிடுங்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், அவர்கள் தனியார்களிடத்திலே சென்று கடனுக்காக அணுகவேண்டிய ஒரு நிலை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கின்றது. 9 சதவீதத்திற்கு மேலே வட்டி வாங்கக்கூடாது என்று விதி இருந்தும் மணி லெண்டிங் பிஸினஸ் நடத்தக்கூடியவர்கள் எந்தவிதமான கணக்கும் இல்லாமல் வட்டி வாங்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. 100 சதவீதம் 150 சதவீதம் வரை வட்டி வாங்கக் கூடியவர்கள் கூட இந்த பிஸினஸை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்துவதற்கு இன்ஸ்பெக்டர்ஸ் நியமிப்பதற்குச் சட்டத்திலே இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இன்ஸ்பெக்டர்ஸ் இருந்தால்கூட அவர்களுக்கு இவர்கள் செய்கின்ற காரியங்கள் தெரிவதில்லை. லைசென்ஸ் வாங்கி வைத்துக்கொண்டு மணி லெண்டர்ஸ் பிஸினஸ் நடத்துகின்றவர்களிடம் வேறு வழியின்றி கடன் வாங்குகிற ஏழைகள் கொள்ளை அடிக்கப்படுகிறார்கள். இந்த நிலைமையினை மாற்றுவதற்குரிய சட்டமுன்வடிவினை கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதுதான் இந்த நேரத்திலே அரசு கவனிக்க வேண்டிய ஒன்றாகும். இது மிக முக்கியமான பிரச்சினை. அந்த முறையில் உள்ள சட்ட திட்டங்கள் இந்த சட்டமுன்வடிவிலே இல்லை என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

கேன்சலேஷன் செய்வதற்முன் சஸ்பென்ட் பண்ணுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்வதற்காகத்தான் இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றது. ஆனால் அப்படி கேன்சலேஷனுக்கு உட்பட்டு சஸ்பெண்ட் பண்ணக்கூடியவர்கள் சஸ்பெண்டை எதிர்த்து முறையீடு செய்வதற்கு அந்தச் சட்டத்திலே இடம் கொடுக்கக்கூடிய முறையிலே திருத்தம் கொண்டுவரவில்லை.

மேலும் மணி லெண்டர்ஸிடத்திலே இருந்து ஏழை மக்களை பாதுகாக்கின்ற வகையிலே நடவடிக்கை எடுத்துக் கொள்வது தான் இந்த நேரத்திலே மிக முக்கியமான ஒன்று.



1982 செப்டம்பர் 8] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

(பிற்பகல் 12.20)

இன்று மணி லெண்டர்ஸ் பிசினெஸ் நடத்தக்கூடியவர்கள், சட்டப்படி ரசீது கொடுக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆனால், பலர் ரசீது கொடுப்பதில்லை, அதுமட்டுமல்ல, பணம் கொடுக்கின்ற நேரத்தில் ஒரு வட்டிக்கு பேசுகிறார்கள். ஆனால், அந்தப் பொருளை திருப்பி எடுப்பதற்குச் செல்லுகின்ற நேரத்தில் அதைவிட அதிகமான வட்டியை கேட்கக்கூடிய ஆபத்து ஏற்படுகிறது. அப்படி அதிக வட்டி கொடுக்கவில்லை என்றால், அதற்காக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. காரணம், அவர்கள் ரசீது கொடுக்காத நிலையிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு ஒரு மாறுதல் ஏற்படுத்தக்கூடிய முறையில் இன்று கூட்டுறவு வங்கிகள் வழியாகவோ அல்லது வேறு ஏற்பாடுகள் மூலமாகவோ, இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு, அவர்களுக்கு அத்தியாவசிய தேவையான கடனைக் கொடுக்கக்கூடிய முறையில் ஒரு ஏற்பாட்டை அரசு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சஸ்பென்ஷன் என்ற பிரச்னைக்கு ஒரு திருத்தம் கொண்டு வருவதோடு இது முடிந்துவிட்ட பிரச்னையல்ல. இந்தப் பிரச்னைக்கு ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வர வேண்டும்; அல்லது இந்தச் சட்டத்தில் தேவையான திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு இந்த அரசு முன்வரும் என்று நம்பி, அந்த நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். ஏ. பூங்காவனம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கடன் நிவாரணச் சட்டத்தின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கடன் நிவாரணச் சட்டம் என்று வந்திருப்பது பொதுவாக வரவேற்க வேண்டிய ஒரு நல்ல அம்சம் என்று சொன்னாலும், கடனைப் பெற்றுள்ள மக்கள் அரசு அறிவிப்பு வந்து விட்டது, அதனால் தங்களுக்கு கடன் நிவாரணம் கிடைத்து விட்டது என்ற நிலை பத்திரிகைகளிலே வருகின்றதே ஒழிய, நடைமுறையில் கிராமப் புறங்களில், ஏன் நகரப்புறங்களில், சாதாரண ஏழை எளிய மக்களுக்கு நிவாரணம் கிடைக்கிறதா என்று சொன்னால், இல்லை.

ஒரு குடும்பத்தை எடுத்துக்கொண்டால், அந்த குடும்பத்தினுடைய மொத்த வருமானம் ரூ. 400 என்ற அடிப்படையில், அதனுடைய கணக்குகளைப் பார்க்கின்றபோது, கிராமத்திலுள்ள விவசாயி குடும்பத்தில் 5, 6 பேர்கள் இருப்பார்கள். சட்டத்தின்படி கூலியைக் கணக்கிடும்போது, வருமானத்தைக் கணக்கிடும்போது, ரெவின்யூ அதிகாரி குடும்பத்தில் எத்தனை பேர்கள் இருக்

கிறார்கள் என்று கேட்பார், மொத்த வருமானத்தைக் கணக்கிட்டவுடனே, அந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் நோக்கமே திரும்பிப் போய்விடும். அதேபோல், நகரத்தில் 2, 3 பேர்கள் வேலை செய்வார்கள். அந்த 2, 3 பேர்களுக்கு ரூ. 200 ரூ. 300 சம்பளம் வந்து கொண்டிருக்கும். அதன் விளைவாக, மொத்தத்தைக் கணக்கிடும்போது, அந்த நிவாரணம் கிடைக்காமல் போய்விடுகின்றது. இதனால் நாட்டிலே ஏழை எளிய மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் வராத, கிடைக்காத, கிடைக்க முடியாத ஒரு அவல நிலை நாட்டிலே இருக்கிறது என்பதை நம்முடைய அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனவே, இதற்கும் ஒரு திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற முறையிலே, அதற்கான முயற்சியை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கூட, நிலம் 5 ஏக்கர் அல்லது 10 ஏக்கர் என்று வைத்துக்கொண்டால், அதுவும் இந்த வறட்சியான காலத்திலே, மழை பெய்யாத இந்த காலத்திலே, விவசாய விளைபொருட்களுக்கு விலை கிடைக்காத இந்த காலத்திலே, அவர்களுடைய ஆண்டு வருமானத்தை ரூ. 4,800 என்றிருப்பதை, மேலும் கூட்டுவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். மேலும், 5 ஏக்கர், 10 ஏக்கர் என்றிருப்பதை மேலும் கூட்டுவதற்கு அரசு முயற்சி செய்யவேண்டும்.

அதுமட்டுமல்ல, அந்தக் கடனைப் பெற்றுக் கொண்டிருந்த கிராம விவசாயிகள், சாதாரண ஏழை எளிய மக்கள், நகர்ப்புற மக்கள் இப்போது கடன் நெருக்கடியில் இருக்கிறார்கள். ஏன் என்று சொன்னால், கிராமத்தில் நல்லது கெட்டது என்ற நிலை வருகின்றபோது, கிராமப்புற மக்கள், ஏன் நகரப்புறத்திலே உள்ள மக்களும் சாவோ அல்லது கல்யாணமோ வருகின்ற நேரத்தில், மக்கள் கடன் கொடுக்க உள்ளபடியே அஞ்சுகிறார்கள். வங்கிகளுக்குச் சென்றாலும், அங்கே நகையை வைத்தாலும், அங்கே கொடுக்கப்படுகின்ற பணம் மிகவும் குறைவாக இருக்கிறது. இந்தப் பணத்தைக் கூட்டிக் கொடுப்பதற்கு அரசு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அதேபோல், நாம் பல்வேறு கடன்களை ரத்து செய்து உதவி செய்தாலும், நம்முடைய அரசு ஏன் முழுமையாக இந்தக் கூட்டுறவுக் கடனை ரத்து செய்யக்கூடாது? அதைச் செய்தால் என்ன நஷ்டம் வந்துவிடப்போகிறது என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். அதனால் ஏற்படக்கூடிய இழப்பு எவ்வளவு என்பதைப் பரிசீலித்து, அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான், இந்தக் கடன் நிவாரணம் உண்மையாக, நியாயமாக ஏழைமக்களுக்குக் கிடைக்கும்.

உதாரணமாக, நிலவள வங்கியில் கடன் பெற்ற கிராமப்புற விவசாயிகள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர்கள், ஏன் அரை ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள்கூட இப்போது கடன்பெற முடியாமல் இருக்கிறது. காரணம், கடன் நிவாரண சட்டத்திலே அவர்கள்



வரமுடியவில்லை. அதனால் நிலவள வங்கிக்கு சம்பந்தமில்லை என்று சொல்லப்படுகிறது. கூட்டுறவு சம்பந்தப்பட்ட நிலைமை வருகின்றபோது, ஏழைஎளிய விவசாய மக்களால் இந்தச் சட்டத்தால் பயன்பெற முடியவில்லை. ஆகவே, இதற்கான திருத்தத்தைக் கொண்டு வந்து, மாறுதலைக் கொண்டு வந்து இதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். கிராமப்புறத்திலே உள்ள விவசாயிகள், விவசாயத்தைத் துவக்குகின்றபோது, அவர்களுக்குப் பணம் தேவைப்படுகின்றது, அப்படி விவசாயம் செய்து, அறுவடை செய்யும்போதுதான் அவர்களுக்கு வருவாய் கிடைக்கக் கூடிய நிலைமை இருக்கிறது நகரப்புறத்திலே உள்ள விவசாயிகள் அப்படியல்ல. ஆகவே, அவர்களுக்கு விவசாயம் செய்வதற்குப் பணம் வேண்டுமென்று சொன்னால், அதற்குத் தேவையான பணம் கிடைப்பதற்கு வசதி செய்யவேண்டும், அதற்கான மாற்று ஏற்பாட்டைச் செய்யவேண்டும். எனவே, இந்தச் சட்டத்திலே பயனுள்ள வகையிலே, ஏழைஎளிய விவசாய மக்கள் பயன்படக் கூடிய வகையிலே சட்டத்தைத் திருத்த வேண்டும். இந்தச் சட்டத்தை நல்ல முறையிலே கொண்டு வரவேண்டுமென்ற உணர்வு இந்த அரசுக்கு இருக்கிறது. அது வரவேற்கக்கூடியது. இந்த நல்ல உணர்வு வரவேற்கக்கூடிய உணர்வு. நான் சொன்ன கருத்துக்களை அரசாங்கம் சிந்தித்து பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

திரு. டி. மணி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரண சட்டம் சம்பந்தமாக ஏற்கனவே இதற்கு முன்னாலே பல்வேறு காலங்களிலே இந்த சட்டம் இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த கடன் நிவாரணம் கேட்டு தாலுக்கா அலுவலகங்களில் பல மனுக்கள் பைசல் ஆகாத சூழ்நிலை இருந்து வருகிறது. தாசில்தார்களுக்கு இருக்கின்ற வேலை அதிகப்படியாக இருப்பதால் காலாகாலத்தில் கடன் நிவாரண மனுக்கள் பைசல் ஆகாமல் இருக்கிறது. தாசில்தார்களுக்கு யோசனைக் கூறுவதற்காக, அவர்கள் காலாகாலத்தில் முடிவுகளை எடுப்பதற்காக ஒரு குழுவை அமைத்து குழுவின் ஆலோசனையின் பேரில் சான்றிதழைப் பெற்று முடிவு எடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும்.

கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் 5 ஏக்கர் கீழே உள்ளவர்கள் இந்த சட்டத்தின் மூலம் பயன்பெறவேண்டுமானால் அப்படிப்பட்டவர்கள் 52 சதவீதத்திற்கு மேல் இருக்கிறார்கள். பல்வேறு வகையிலான விவசாய தொழிலாளர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையிலே விவசாய தொழிலாளர்களுடைய அனைத்து கடன்களையும் ரத்து செய்யக்

(பிற்பகல் 12-30)

கூடிய முறையிலே அரசு சட்டம் கொண்டு வரவேண்டும். அப்போது தான் இது பயன் உள்ளதாக இருக்கும். விவசாய தொழிலாளர்களுடைய அனைத்து கடன்களையும் ரத்து செய்யவேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்படுகிறபோது குடியிருப்பு வீட்டு வருவாயை கணக்கில் சேர்த்துக் கொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது. அதை சேர்த்துக் கொள்ளக்கூடாது என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடன் பெறுகிறபோது கடன்களை கொடுக்கக்கூடிய நிதி வசதியை கூட்டுறவு சங்கங்களுக்கு செய்து கொடுக்க வேண்டும். விவசாயிகள் சாகுபடி செய்யக்கூடிய நேரத்திலே உதவக்கூடிய முறையிலே கூட்டுறவுச் சங்கங்கள் அதிகப்படியான கடன்களை தந்து உதவி செய்ய வேண்டும். அதற்கு கூட்டுறவு சங்கங்களுக்கு அரசாங்கம் போதுமான நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்படி செய்தால் தான் சாகுபடி நேரத்தில் விவசாயிகள் கடன் தொல்லையிலிருந்து விடுபடமுடியும்.

விவசாய உற்பத்திச் செலவைத் தவிர்த்து வருமான கணக்கை எடுத்துக்கொள்ளக்கூடாது. விவசாய உற்பத்தி செலவினங்களை சேர்த்துக்கொண்டு வருமான கணக்கைப் போடவேண்டும்.

இந்தச் சட்டத்தினால் ஏற்படக்கூடிய பலனை எத்தனைப் பேர்கள் அனுபவித்தார்கள், எத்தனை ஆயிரம் ருபாய் ஏழை விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். குறிப்பாக விளவங்கோடு தாலுக்காவை எடுத்துக் கொண்டால், நூற்றுக்கணக்கான கடன் நிவாரண மனுக்கள் கவனிக்கப்படாமல் முடங்கி கிடக்கின்ற காட்சியைப் பார்க்கிறோம். கடன் ரத்து என்று முடிவு செய்யப் பட்டாலும்கூட பின்னர் சிலர் கோர்ட்டுக்குச் செல்வதால் அப்பீலுக்குச் செல்வதால் பலன்களை பெறமுடியாத நிலமை ஏற்பட்டுவிடுகிறது.

ஆகவே கடன் நிவாரணம் கொடுக்கவேண்டும் என்ற நல்ல எண்ணம் அரசாங்கத்திற்கு இருந்தாலும்கூட அந்த நல்ல எண்ணத்தை சட்டத்தின் மூலமாக அமுலாக்குகிறபோது கோர்ட்டுக்கு போகிற துரதிருஷ்டவசமான நிலமையை ஏற்படுத்துவதை பார்க்க முடிகிறது. அந்த நிலமையை போக்க ஏற்பாடு செய்யவேண்டும். தாசில்தார்களிடத்திலே மனுக்கள் கொடுக்கப்படுகிறபோது அவர்கள் துரிதமாக பைசல் செய்ய வேண்டும். அதற்காக ஒரு குழுவை அமைக்க அவர்களிடமிருந்து சான்றிதழ் பெற்று அதிவேகமாக பைசல் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இந்தச் சட்டத்தை துரிதமாக அவசரமாக விவசாயிகள் நலன் பெறுகிற அளவிலே அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.





திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, நமுடைய சட்டத் துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கின்ற கடன் நிவாரணச் சட்டமுன்வடிவின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1976 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆட்சி இருந்த காலத்திலே ஆண்டு வருமானம் ரூ. 2,400 வரை உள்ளவர்களுக்கு கடன் ரத்து செய்யப்பட்டு சட்டம் கொண்டுவரப்பட்டது. அதற்குப்பிறகு ஆண்டு வருமானம் 4 800 வரை உள்ளவர்களுடைய கடனை ரத்துச் செய்கின்ற சட்டம் ஒன்று 1980 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், அப்போது கொண்டுவரப்பட்டது. ஆனால் இதுவரையில் அந்தச் சட்டங்களின் பலனை அனுபவத்திலே கணக்கு பார்க்கிறபோது எத்தனைபேர்கள் பலன் பெற்றார்கள் என்று நான் கேள்வியைக் கூட போட்டேன், பதிலே வரவில்லை—இங்கே பேசிய திரு. பாலசுப்பிரமணியன் கூடச் சொன்னார்—அந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்ணன், தம்பிகளுக்கு—4, 5 பேர்கள் இருக்கலாம், பத்து ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால் கூட்டுப்பட்டாவாக வைத்து இருக்கலாம்—10 ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால் ஆளுக்கு 2 ஏக்கர் தான் வரும். அப்படியிருக்கிறபோது கூட்டுப் பட்டாவாக இருந்தால் இந்தச் சட்டம் செல்லாது என்று சொல்லப்படுகிறது, அப்படி இருக்கக்கூடாது. அவர்களுடைய கடன்களையும் ரத்துச் செய்வதற்கான முறையிலே திருத்தத்தை அமைச்சர் அவர்கள் கொண்டுவரவேண்டும். ஒருவருக்கு பழைய காலத்திலே கட்டிய வீடு இருக்கலாம், அதிலே அவர் குடியிருக்கலாம், அதிலிருந்து எந்த வருமானமும் அவருக்கு வராது. அவருக்கு எந்தவிதமான தொழிலும் இருக்காது, நிரந்தரமான வருவாயும் இருக்காது. அப்படி இருக்கிறபோது அந்த வீட்டின் மதிப்பு 25 ஆயிரம் என்று தாசில்தார் சொல்லி விட்டால் போதும், அவருக்கு நிவாரணம் கிடைக்காது என்று சொல்லப்படுகிறது. இது தவறு. அவருக்கும் நிவாரணம் கிடைக்கக்கூடிய முறையிலே சட்டத்தைத் திருத்த வேண்டும். உண்மையிலேயே ஆண்டு வருமானம் 4,800 ரூபாய்க்குக் கீழே உள்ளவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று விரும்பினால் இந்தச் சட்டத்திற்கு நல்ல திருத்தங்களைக் கொண்டுவரவேண்டும். அமைச்சர் அவர்கள் நிவாரணம் நல்லமுறையிலே கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே அதற்கான திருத்தங்களை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடன் கொடுத்தவர்கள் ஒரு வீட்டின் மதிப்பு 25 ஆயிரம் என்று சொல்லி விட்டால் உடனே தாசில்தார் கடனாளியின் வீட்டின் மதிப்பை 30 ஆயிரம் என்று போட்டுவிடுகிறார். அவருக்கு நிவாரணம் கிடைக்காது போய்விடுகிறது. வீட்டை கணக்கிலே எடுத்துக் கொள்ளக்கூடாது. அதைப்போலவே கூட்டுப் பட்டாவாக 10 ஏக்கர் நிலம் இருந்தால் அவர்களுக்கு கிடையாது என்று சொல்லக்கூடாது. திரு. பாலசுப்பிரமணியன் ஆளுங்கட்சி உறுப்

பினர் அவரே பேசினார். ஆகவே அதை கவனிக்கவேண்டும். கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று நானேகூட கடுமை ரன முயற்சிகளைச் செய்தேன், ஆனால் மனுக்கள்தான் தள்ளுபடியானதே தவிர கடன்கள் தள்ளுபடியாகவில்ல, 10 ஏக்கர் என்று இருப்பதற்குப் பதிலாக 5 ஏக்கர் புஞ்சை என்றும் 2½ ஏக்கர் நஞ்சை என்றும் போட்டுவிடுங்கள். அவர்கள் கடன் செலுத்த வேண்டியதில்லை என்று வைத்துவிட வேண்டும். அடைமானம் வைத்த சொத்தை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். தாசில்தார் சர்டிபிகேட் கொடுக்க வேண்டிய அவசியமே இருக்காது, பிரச்சினைகள் சங்கடங்கள் இருக்காது. ஆகவே அந்த முறையிலே ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டும்.

நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைப் பொறுத்த வரையில் ஒரு தாசில்தார் 2 ஏக்கரிலிருந்து 10 ஆயிரம் வருமானம் வரும் என்று சொல்லிவிடுவார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரிச் சொல்வார்கள். இல்லை என்று நிருபிப்பதும் கஷ்டமாகி விடும். ஆகவே புஞ்சை என்றால் 5 ஏக்கர் என்றும் நஞ்சை என்றால் 2½ ஏக்கர் என்றும் போட்டுவிட வேண்டும். சொத்து மதிப்பு என்பதே வேண்டாம். வருவாய்க் கணக்கிலே வீட்டைச் சேர்க்கக்கூடாது. விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் ஒரு வீட்டில் உள்ள புருஷன், பெண்டாட்டி, பிள்ளை மூவரும் வேலை செய்யலாம். ஒருவருக்கு 5 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் மூவருக்கும் மாதம் 450 ரூபாய் வந்துவிடுகிறது. இதனால் அவர்களுக்கு கடன் நிவாரணம் கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே விவசாயக்கூலிகள் இந்தப் பலனை பெற முடியவில்லை. மாத வருமானக்காரர்கள் என்றால் எவ்வளவு வருமானம் என்பதற்கு ரிக்கார்டுகள் இருக்கும், ஆகவே எவ்வளவு வருமானம் என்பதை கடன் கொடுத்தவர்கள்தான் நிரூபிக்க வேண்டும், கடன் வாங்கியவர்களுக்கு அதை நிரூபிக்கக்கூடிய பொறுப்பு இருக்கக்கூடாது. கடன் கொடுத்தவர் இவருக்கு வருமானம் இருக்கிறது என்று ரெக்சார்டு பூர்வமாக நிரூபிக்க வேண்டும். அந்த பொறுப்பை கடன் கொடுத்தவரிடத்திலே ஒப்புவிக்க வேண்டும். அந்தமாதிரி இதிலே திருத்தங்களை எல்லாம் கொண்டுவந்தால் உண்மையாகவே 4,800 ரூபாய்க்கு கீழே வருமானம் இருப்பவர்களுக்கு நிவாரணம் கிடைக்க ஏற்பாடு இருக்குமே தவிர 1976-லே சட்டம் வந்தது, 1980-லே சட்டம் வந்தது. வரிசையாக சட்டம் வந்துகொண்டேயிருக்கிறது. ஆனால் நிவாரணம் கிடைக்கவில்லை. ஆகவே தயவுசெய்து நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தங்களைக் கொண்டுவந்து ஏழை, எளிய மக்களுக்கு உதவிட வேண்டும். இந்த சட்டம் கொண்டு வந்ததின் நோக்கம் என்னவென்றால் அநியாய வட்டி; நாம் எத்தனையோ சட்டதிட்டங்களை வைத்திருக்கிறோம். 12 சதவீதம்தான் வட்டி வாங்க வேண்டுமென்று, சொல்லியிருக்கிறோம். ஆனால் 12 சதவீதம்



மாதா மாதம் வாங்குகிறார்கள்; சட்டத்திலே இருப்பது 12 சதவீதம், வெளியிலே வாங்குவது 144 சதவீதம். சட்டத்திலே என்ன வழிவகைகள் இருந்தாலும் அவற்றை அமல் நடத்த முடிவதில்லை, ஆகவே இந்தமாதிரி அநியாய வட்டி வாங்குபவர்களை கட்டுப்படுத்த வேண்டும். நலிந்தவர்களுக்கு 4,800 ரூபாய்க்கு கீழே வருமானம் உள்ளவர்களுக்கு, உண்மையாகவே கடன் வாங்கி கஷ்டப்படுகிறவர்களுக்கு நீங்கள் கட்ட வேண்டியதில்லை என்று சொல்லி தைரியமாக கொண்டு வந்த இந்த சட்டத்தை பாராட்டுவதோடு, இதிலே இருக்கிற குறைகளை, ஓட்டைகளை அடைத்து உண்மையிலே பலன் கிடைக்கிற ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த கடன் நிவாரணச் சட்டம் பல உறுப்பினர்களால் வரவேற்கப்பட்டு, சில ஆலோசனைகள் பெறப்பட்டு இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்றதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். மரியாதைக்குரிய நண்பர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது, குறிப்பாக சில பிரச்னைகளை இதிலே சொன்னார்கள். விவசாயிகளுடைய கண்ணீரைத் துடைக்க இந்தச் சட்டம் பயனுள்ளதாக இல்லையென்னும் பொருள்பட சொன்னார்கள்.

விவசாயிகளுடையத் துயரைத் துடைக்க தமிழகத்திலே வேறு எந்த காலத்திலும் எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு, பாரதத்தின் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல 120 கோடி ரூபாய் கடனை ரத்து செய்து, வட்டியையும் ரத்து செய்து மேலும் ஒரு 80 கோடி ரூபாய் வழிவகை கடனாக விவசாயிகள் மத்திய சர்க்காருக்கு, ரிசர்வ் வங்கிக்கு திருப்பிக் கட்டவேண்டிய கடனை அவர்கள் கட்ட முடியாத நிலையில் இருந்த காரணத்தாலே இந்த அரசு அந்த பொறுப்பையும் ஏற்று அவர்கள் சார்பிலே கட்டி விவசாயிகளுக்கு சலுகையை செய்திருக்கிறது. இது நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல, பாரதத்திலேயே எந்த மாநிலத்திலும் இந்த ஆட்சிக்கு முன்னாலே செய்யப்படாத அளவிற்கு செய்யப்பட்ட மாபெரும் சலுகையாகும். ஆனால் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது பெரியகுளம் தேர்தலில் பெரிய குளத்தில் மீன்பிடிப்பதற்காக இந்த சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதோ என்று ஒரு முறை அல்ல பல முறை சொன்னார்கள். பெரியகுளம் தேர்தலுக்கும், இந்தச் சட்டத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதையும், இன்னும் சற்று தீவிரமாக விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் சேகரித்திருந்தால் இது அவர்களுக்கு கிடைத்திருக்கும். காரணம் ஏதோ புதிதாக நலிந்த பிரிவினர்களுக்கு, அவர்கள் பட்டிருக்கின்ற கடன் தொல்லையிலிருந்து

விடுதலை பெறவேண்டுமென்ற நோக்கோடு முதல் முறையாக
இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. இதற்கு முன்னாலே
இரண்டு முறை புரட்சித்தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே
கொண்டு வரப்பட்டு மூன்றாவது முறையாக தற்போது
மக்களுடைய நலம் கருதி, ஏழைகளின் நலம் கருதி, நலிந்தோர்
களின் நலம் கருதி இப்போது கொண்டு வரப்படுகிறது.

பெரியகுளம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த மதிப்பிற்
குரிய நடராசன் அவர்கள் இறந்தது ஜூலை மாதம் என்று
கருதுகிறேன். ஆனால் இந்த சட்டத்தை இயற்ற வேண்டுமென்று
அரசு முடிவு செய்து, முன் ஒப்புதலை பெறவேண்டுமென்று
விதிகளில் இருக்கிற காரணத்தால், மத்திய அரசினுடைய
ஒப்புதலை பெறுவதற்கு 10.5.1982 தேதியில் அனுப்பப்பட்டு
விட்டது.

(பிற்பகல் 12-40)

10-5-1982 ஆம் தேதி, இந்தச் சட்டத்தை, நாங்கள்
கொண்டு வந்திருக்கிற சட்டத்தை இயற்றி, மைய அரசுக்கு
அனுப்பிய பொழுது பெரியகுளத்தில ஒரு இடைத் தேர்தல்
வரும், நமது மதிப்பிற்குரிய நண்பர் கம்பம் நடராஜன்
அவர்கள் தவறிவிடுவார்கள் என்று யாருக்கும் தெரியாது.
எங்களுக்கும் தெரியாது, நண்பர் ரகுமான்கான் அவர்களுக்கும்
தெரியாது. எனவேதான், எதை எடுத்தாலும் பெரியகுளம்
தேர்தலை இழுத்து மக்களின் நலன் கருதி, மக்களின் துயர்
துடைக்க, ஏழைகளின் நலன் கருதி, கொண்டு வருகின்ற
திட்டங்கள், சட்டங்களை எல்லாம் ஏதேனும் குறை சொல்ல
வேண்டுமென்பதற்காகச் சொல்லக் கூடாது. அதை நான் சுட்டி
காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்த சட்டம் எந்த அளவுக்கு
ஏழைகளுக்கு கிராமப்புற மக்களுக்கு, குறிப்பாக, விவசாயி
களுக்குப் பலன் அளிக்கிறது என்று சொன்னார்கள். புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்அரசைப் பொறுத்தவரைக்கும்,
விவசாயிகளின் நலன்கருதி மற்ற மாநிலங்கள் கவனிக்காத
அளவுக்கு, சலுகைகளை செய்து நாம் கவனித்திருக்கிற அதே
நேரத்திலே விவசாயிகளை ஒட்டி வாழ்கிற விவசாயத் தொழி
லாளர்கள், அங்கேயிருக்கிற ரூரல் ஆர்ட்டீசன் என்று சொல்லப்
படுகிற கைவினைஞர்களுடைய குறைகளையும் போக்க வேண்டு
மென்ற நோக்கத்தோடு தான் இந்தச் சட்டம் கொண்டு
வரப்பட்டிருக்கிறது. 1972 ஆம் ஆண்டு இறுதியில், 1973 ஆம்
ஆண்டு துவக்க கட்டத்தில் கொண்டு வரப்பட்ட, ஆக்ட் 8ஆப்
1973 என்ற சட்டம் அப்பொழுது, திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சியாலே கொண்டு வரப்பட்டது. ஆனால், அந்தச்
சட்டத்தில் விவசாயிகளுடைய கடனைக் குறைப்பதற்காகச்
சட்டம் கொண்டு வரப்பட்டதே ஒழிய, கடனை ரத்து செய்
வதற்கு எந்தச் சட்டமும் கொண்டு வரப்படவில்லை. ஆக்ட் 32





ஆப் 1972 என்ற சட்டத்திலே, கிராமங்களிலே இருக்கிற
தொழிலாளிகள், கூலிகள், ரூரல் ஆர்ட்டீசன் என்று சொல்லப்
படுகின்ற கைவினைஞர்களுடைய கடனை ரத்து செய்யவில்லை.
ரத்து செய்யவில்லை என்பது மட்டுமல்ல, ஸ்கேல் டவுன்
பண்ணக் கூட, அவர்களுடைய கடனை, வட்டியைச்
குறைக்கக் கூட அன்று சிந்திக்கவில்லை, சட்டம் கொண்டு வர
வில்லை. புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் தற்போது
கிராமத்திலிருக்கிற பாதிக்கப்பட்ட, சாதாரண ஏழை விவசாயி
களுக்கு மட்டுமல்ல, விவசாயக் கூலிகளுக்கும், கிராமத்திலே
இருக்கிற ரூரல் ஆர்ட்டீசன் என்று சொல்கின்ற கிராமப்புற
கைவினைஞர்களுக்கும் இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல, 1973 ஆம் ஆண்டிலே கொண்டு வரப்பட்ட
சட்டம் கிராமத்திலே இருக்கிற விவசாயிகளுக்குக் கடனை
ரத்து செய்யவில்லை, குறைக்கக் கொண்டு வரப்பட்ட சட்டம்
அது. ஆனால் தற்போது கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டம்
அவர்கள் கிராமத்திலே இருக்கிற மக்களாக இருந்தாலும் சரி,
நகரத்திலே இருக்கிற மக்களாக இருந்தாலும் சரி. ரூரல் அன்ட்
அர்பன் செக்ஷன்ஸ் என்ற முறையிலே, இரண்டு பகுதிகளிலும்
வாழ்கிற ஏழை மக்களுக்கு அவர்கள் கடன் தொல்லைகளி
லிருந்து அவர்களுக்கு விடுதலை தரவேண்டும், பொருளாதார
விடுதலை, நலிந்த பிரிவினருக்குத் தர வேண்டுமென்ற
முறையிலே, இந்தச் சட்டத்தை நாம் கொண்டு வந்திருக்
கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் இராஜாராம் அவர்கள் பேசுகிற
பொழுது, 1976 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டம்
பலனை நன்கு ஈன்றிருக்கிறதே இந்தச் சட்டம் ஓட்டை
உடைசல் உள்ள சட்டம் என்று குறிப்பிட்டார்கள். 1976 ஆம்
ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்தில், ரூ. 2,500-க்கும் கீழ்
வருமானம் உள்ளவர்களுக்கு மட்டுமே அன்று வசதி செய்து
தரப்பட்டது. ஆனால், அதே சட்டத்தில், அக்ரிக்கல்சுரல்
லேபரர்ஸ், ரூரல் ஆர்ட்டீசன் அன்ட் ஸ்மால் ஃபார்மர்ஸ் என்று
3 பிரிவினருக்கு மட்டுமே அது பொருந்துமே ஒழிய, அர்பன்
வீக்கர் செக்ஷனுக்கு மட்டுமே அந்தச் சட்டம் பொருந்துவதாக
இருந்தது. ஆனால், அந்தச் சட்டத்தில் சில குறைபாடுகள்
இருந்து, உயர்நீதிமன்றம் வரை சென்று கொள்கை ரீதியாக
சில முடிவுகளை எடுத்து. பிறகு வந்த சட்டங்களில்தான்
நகர்ப்புற, கிராமப்புற பொருளாதாரத்தில், பின்தங்கிய
நிலையில் இருக்கிற அனைவருக்கும், ரூ. 4,800 குறைந்த
வருமானம் உள்ளவர்களுக்கு இந்தச் சட்டத்தின் பலன் கிடைக்க
வேண்டுமென்ற நோக்கோடு இதை நாங்கள் கொண்டு வந்திருக்
கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபொழுது, சட்டரீதியாக 9 சதவீதம் என்ற வட்டியினை போட்டுவிட்டு, பல மடங்கு அதிகப்படியான வட்டியினை வசூலிக்கின்ற மனப்பாங்கு கடன் தருகின்றவர்களிடத்திலே இருக்கிறது. இதனால் ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள். வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னார், அதை நான் ஒத்துக்கொள்கிறேன். அந்த நிலை இருக்கிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வசதி படைத்தவர்கள், வட்டிக் கடைக்காரர்கள், பான் புரோக்கர்ஸ், மணி லென்டர்ஸ் என்று சொல்லப்படுகின்றவர்கள் எல்லாம், சட்டத்திலே இருக்கிற சில கோளாறுகளை வைத்து, ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சுகிற மனப்பான்மை மேற்கொண்டிருந்தார்கள்.

அந்தக் குறையைப் போக்குவதற்காகத்தான் தற்போது இதோடு இணைத்து அடுத்து நாம் எடுத்திருக்கின்ற பில்லிலே அவர்கள் மணி லென்டிங் ஆக்ட் பிரகாரம் வட்டிக்குக் கடன் கொடுக்கின்றவர்களாக இருந்தாலும் சரி, அல்லது பான் புரோக்கர்ஸ் ஆக்டின் கீழ் வட்டிக்குக் கடன் கொடுக்கின்றவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் தவறுகள் செய்யும்பொழுது, அதிகப்படியான வட்டியைப் போட்டு அந்த வட்டியை முன் கூட்டியே அசலிலிருந்து கழித்துவிட்டு அந்த ஏழைகளுக்குக் குறைந்த முதலைத் தந்து பிறகு பான் புரோக்கர்ஸ் ஆக்டின் கீழ், அவர்கள் அடகு வைத்தாலும் அந்தப் பொருள்களைத் திருப்பி மீட்காத நிலையிலே ஏழைகள் பெரிதும் பாதிக்கப்படுவதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அதைப் போக்குவதற்காகத்தான் ஏற்கனவே உள்ள சட்டத்தில் அவர்கள், குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டால் பிறகு அவர்களின் உரிமத்தை ரத்து செய்ய முடியும். குற்றவாளிகள் என்று குற்ற மனு அரசுக்கு வருகின்ற பொழுது அந்த அடிப்படையில் தற்காலிகமாக அவர்களுடைய லைசென்ஸை ரத்து செய்யக் கூட இருக்கின்ற சட்டத்திலே இடமில்லை. அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்பதற்காகத்தான் பாதிக்கப்பட்ட மக்களிடத்திலிருந்து குற்றச்சாட்டு மனு வரும்பொழுது குறைபாடுகள் காணப்படுகின்றபொழுது, ஆய்விலே அவைகள் தெரிய வருகின்றபொழுது உடனடியாகத் தற்காலிகமாக அந்த மணிலென்டிங் பான் புரோக்கர்ஸ் ஆக்ட்—இன் கீழ் அந்த உரிமத்தைப் பெற்று கடன் தருகின்ற வட்டிக்காரர்களது உரிமத்தைத் தற்காலிகமாக ரத்து செய்தபிறகு, விசாரித்து நடவடிக்கை எடுக்க வழிவகை செய்து முதல் கட்டமாக மணிலெண்டர்ஸ் ஆக்டிலே அப்படிபட்ட திருத்தத்தைக் கொண்டுவர இருக்கிறோம், கொண்டு வருகிறோம்.

அதையடுத்து பான் புரோக்கர்ஸ் ஆக்டிலும்கூட அந்தத் திருத்தத்தைக் கொண்டு வர இருக்கிறோம்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதைப் போல, அதிக வட்டிக்கு அவர்கள் கடனைக் கொடுத்துவிட்டு, ரெக்கார்டிலே குறைந்த வட்டியைக் காட்டி மக்களை ஏமாற்றுகிறார்கள்; இதனால் ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் முழுமையாக ஒத்துக் கொள்கிறேன். புதியதொரு சட்டத் திருத்தத்தை விரைவிலே இந்த அரசு கொண்டு வரவிருக்கிறது, இந்தக் குறையை அறவே களைவதற்காக.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பூங்கவானம் அவர்கள் பேசுகின்ற பொழுது 5 ஏக்கராவிலிருந்து 10 ஏக்கரா வரை நிலம் உள்ளவர்களுக்கும் இந்தச் சலுகையைத் தர வேண்டுமென்று சொன்னார்கள். Five acres of wet land and Ten acres of dry land என்ற அளவிலே இருக்கின்றவர்களுக்கு இந்தச் சட்டத்திலே நிவாரணம் உண்டு என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டுறவுக் கடனைப் பொறுத்தவரைக்கும் ஏன் இந்தச் சட்டத்திலேயே ரத்து செய்யக் கூடாது என்றுகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. பூங்கவானம் அவர்கள் கேட்டார்கள். கூட்டுறவுக் கடனை ரத்து செய்யும் பிரச்னையைப் பொறுத்தவரைக்கும் மாநில அரசு தபால் பெட்டி என்ற நிலையிலே, மைய அரசிடமிருந்து-ரிசர்வ் வங்கியிடமிருந்தும், உலக வங்கியிடமிருந்தும் கடனைப்பெற்று விவசாயிகளுக்குத் தந்து, திரும்ப அந்தக் கடனைப்பெற்று அந்த மைய வங்கிக்கும், அதைப் போன்று உலக வங்கிக்கும் திருப்பித் தரும் நிலையிலே மட்டுமே இருக்கின்றது. மாநில அரசைப் பொறுத்தவரைக்கும் பல்வேறு திட்டங்களை நாங்கள் தீட்டிக்கொண்டிருக்கிறோம். ஏழைகளின் துயர் துடைக்க சத்துணவுத் திட்டம் போன்ற உன்னதத் திட்டங்களை நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கின்ற பொழுது, பொருளாதார நெருக்கடி பிரச்னை அவ்வப்பொழுது எழுந்தாலும், விவசாயிகளின் குறையும் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை உணர்ந்த அரசாக இந்த அரசு செயல்பட்டு, எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவில் நாம் கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் அளவிற்குப் பல்வேறு சலுகைகளைச் செய்திருக்கிறோம்.

ஆனாலும்கூட, அப்படி நமக்கு வசதியிருந்தும், வருமானம் இருந்தும்கூட ஒரு கடனை ரத்து செய்ய விரும்பி மாநில அரசு ஒரு நடவடிக்கை எடுக்குமேயானால் மற்ற மாநிலங்களிலேயும் இது ஒரு நோயாகப் பரவி, பாரதம் முழுவதும் ஒரு பெரிய பொருளாதாரப் பிரச்னையை உருவாக்கிவிடும். ஆகவே எந்த மாநிலமும் மைய அரசினுடைய அனுமதியில்லாமல் கடனை ரத்து செய்யவோ, வட்டியை ரத்து செய்யவோ கண்டிப்பாகக் கூடாது என்று மைய அரசு மாநில அரசுக்குத் தெளிவாக எழுதிவிட்டது. இந்த நிலையில் மைய அரசினுடைய உதவியுடன்,

''Within he limited financial powers, the S a e Government is in possessio n of,, எந்த அளவிற்கு நாம் செயல்பட முடியும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மணி அவர்களும், திரு. அழகர்சாமி அவர்களும் பேசுகின்றபொழுது கிராமங்களியே இருக்கின்ற கூலிகளுக்கும் இதனுடைய பயன் முழுமையாகக் கிட்ட வேண்டுமென்று சொன்னார்கள். இந்தச் சட்டம் பழைய சட்டத்தைப் போன்று அல்லாமல் 1973 ஆம் ஆண்டுச் சட்டத்தைப் போல அல்லாமல், இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரைக்கும் கிராமங்களிலே இருக்கின்ற கூலிகளுக்கும் விவசாயத்தை ஒட்டியிருக்கின்ற ஏழைகளுக்கும், ஆர்டிசான் களுக்கும் சலுகை தர வேண்டுமென்ற நோக்கத்தோடும், அதைப் போலவே அர்பன் வீக்கர் செக்ஷன் என்று சொல்லப்படுகின்ற நகர்புறத்திலே இருக்கின்ற நலிந்த பிரிவினருக்கும் இதன் பலன் கிட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக் கின்ற சட்டம்தான். ஆனால் நடைமுறையிலே பிரச்னைகள் எழுந்து விடக்கூடாது என்பதில் நாம் மிக அக்கறையாக, உன்னிப்பாக இருக்க வேண்டுமென்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வேடசந்தூர் பாலசுப்பிரமணியன் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

(பிற்பகல் 12.50)

அதை நான் ஒத்துக் கொள்கிறேன். சட்டத்தை, உன்னத நோக்கோடு கொண்டு வருகின்ற சட்டத்தை, நடைமுறைப் படுத்துகிற போது, அந்தச் சட்டத்தினுடைய பலன் ஏழை மக்களுக்குச் சென்று சேராத நிலை ஏற்படுமானால், அந்த நோக்கமே பொய்யாகிவிடும் என்ற காரணத்தினால் இதிலே அக்கறையாக இருக்கவேண்டும் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். தாசில்தார் அளவிலே இந்த மனுக்களைப் பெறுகிறபோது, அந்தக் கடன் பட்டவர்களுக்குப் பல நேரங் களிலே இன்னல்கள் ஏற்பட்டு அவர்கள் கடனை 'வைப் அவுட்' பண்ண முடியாத நிலை ஏற்படக் கூடாது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். அந்த உணர்வோடு,ஒன்றுகிறேன்.

சட்டத்தை ஒட்டி நாம் விதிமுறைகளைப் போட்டு இருக் கிறோம். சட்டத்தை ஒட்டி வரவிருக்கின்ற விதி முறைகளில் இந்தச் சட்டத்தினுடைய பலன் ஏழைகளுக்கு நேரடியாக, தாமதம் இல்லாமல், முழுமையாக சென்று அடைய, எந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அந்த நடவடிக்கைகளை கண்டிப்பாக எடுப்பேன் என்ற உறுதியை அரசின் சார்பிலே நான் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது இன்னும் ஒன்றைக் கேட்டார்கள். கடந்த நிவாரணச் சட்டங்கள் மூலம் எந்த அளவுக்குப் பலன் கிடைத்திருக்கின்றது என்று கேட்டார்கள். 1976 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்தில், கிட்டத்



தட்ட 42,174 மனுக்கள்வரப்பெற்றன. கிட்டத்தட்ட 23,98,000 ரூபாய் வரைக்கும் ஏழைகளுக்குப் பரிகாரம் தேடித் தரப் பட்டிருக்கிறது. ஆனால் அதை அடுத்து வந்த 1980-ம் ஆண்டுச் சட்டம், நீட்டிப்பும் சேர்த்து 1,26,855 மனுக்கள் வரப்பெற்று, அதிலும் கிட்டத்தட்ட 2,93,34,000 ரூபாய் வரைக்கும் பரிகாரம் தேடித் தரப்பட்டது. ஆனால் இது போதியது என்று என்று நான் சொல்லவில்லை. கடன் பட்டவர்களின் எணணிக்கை அதிகம். அவர்கள் கடன் பட்ட தொகையும் அதிகமாக இருக்கிறது. இதை விரைவு நடவடிக்கையாக இந்த ஏழை களுக்கு என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதனை விதிகளிலே நாம் நடைமுறைப்படுத்தி, ஏழைகளின் துயர் நீக்க இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதனை சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல, மணிலெண்டர் ஆக்டைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இருக்கின்ற விதிகளிலே ஒரு தவறு செய்வார் களானால், செக்ஷன் 14-ன் கீழ், குறிப்பிட்ட வார்த்தைகளின் அடிப்படையில் ஒரு மணிலெண்டர் குற்றங்களைப் புரிகிறபோது அவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கின்ற நிலையில் பல மாதங்கள் இந்த விசாரணை தொடர்ந்து நடக்க நடக்க, தவறை இவர் தொடர்ந்து செய்யச் செய்ய ஏழைகளுக்குப் பாதிப்பு இருக்கின்ற காரணத்தால், அந்தத் தற்போது மாற்றி, அவர்களுக்கு தற்காலிகமாக ஆரம்பத்தில் சஸ்பெண்டு செய்யும் அதிகாரம் வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. அதன் மூலமாக மணிலெண்டர் அல்லது பான் புரோக்கர் என்று சொல்லப் படுகின்ற இரு சாராரும், ஏழைகளைச் சுரண்டுகிற அந்தப் போக்கிலிருந்து தடுக்கப்பட்டு விடும் வாய்ப்பு இருக்கின்றது. தடுக்கப்படுவார்கள் என்பதனைச் சொல்லி, இந்த இரு சட்டங் களையும் அவை நிறைவேற்றித் தர பணிவோடு வேண்டுகிறேன்.

வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்க்ள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1982) நிறைவேற்றப்பெறவேண்டும்,,.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1982.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து, மேற்படி சட்டமுன்வடிவு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 16 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 8. அரசினர் தீர்மானம்

### பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அலுவல் வரிசையில் மாற்றம்—மாண்புமிகு அமைச்சர்—

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகுமன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குள்ள நிகழ்ச்சி நிரலின்படிகடன் நிவாரணச் சட்டமும் அதைப் போலவே மனிலெண்டர் சட்டமும் இரண்டுமே தனித்தனியாக விவாதிக்கக் கூடியதாக இருந்தாலும் அவையினுடைய நேரம் வீணாகக் கூடாது என்பதாலும் இரண்டிற்கும் சேர்த்து லிங்க் இருந்தாலே ஒன்றாக எடுத்துக் கொண்டு விவாதிக்கப் பட்டது, அது முடிந்து விட்டது. ஆனால் அதற்கடுத்து





நாங்கள் தயாராக இருப்பது அண்ணாமலைப் பல்கலைக் கழக சட்டம் திருத்த சம்பந்தமாக தயார் நிலையில் இருக்கிறோம். எங்களுடைய கணக்குப் படி இன்றைக்கு 1.30 மணிக்கு எல்லாம் அது முடிந்து விடுகிறது. எனவே சேல்ஸ் டாக்ஸ் பிரச்சனை வருகிற போது இப்போது அந்தப் பிரச்சினையை நீங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழக மசோதாவைஅமைச்சர் அவர்கள் வரவில்லை என்பதற்காக உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது, உரிமை இருக்கிறது அதிலே நான் குறுக்கிடவில்லை அமைச்சர் அவர்களுடைய சவுகரியத்தை முன்னிட்டு இப்போது நம்முடைய அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களுடைய மசோதா வருகிறது. ஆனால் அதற்கு எங்களுக்கு அவகாசம் இல்லை. நாங்கள் தயார் நிலையில் அதற்கு இல்லை என்பது தான் என்னுடைய கருத்து. அதற்குப் பிறகு உங்களுடைய இஷ்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் வரவில்லைஅதனால் தான் எடுத்துக் கொள்கிறோம்.

**மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன்:** துணைத்தலைவர் அவர்களே பேரவையின் விதி 30. உள்விதி (3) இன் கீழ் பின்வரும் தீர்மானத்தை மொழிகிறேன்.

''இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4' அரசினர் சட்டமுன் வடிவுகள்-ஆய்வு செய்தல் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண் (111) 1982ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை ஆய்வு செய்வதை பின்னர் எடுத்து கொள்ள வேண்டும். மற்ற சட்டமுன்வடிவுகளைத் தொடர்ந்து வரிசைப் படி எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ). பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு 1982

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த)சட்ட முன் வடிவு பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்து சொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

1982 செப்டம்பர் 8]

அரசினர் சட்ட முன்வடிவுகள் தொடர்ச்சி

(2) பொது விற்பனை வரி நான்காம் திருத்த சட்ட முன்வடிவு 1982

மாண்புமிகு திரு. எ. டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்து மேற்படி சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பொது விற்பனை வரி சட்டத்தை இங்கே விவாதத்திற்கு எடுத்து கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த சட்டத்தை அமைச்சர் இவர்கள் இங்கே கொண்டு வருகிற காரணத்தால் அதைப்பற்றி சில விளக்கங்களைச் சொல்வார்களானால் எங்களைப் போன்ற உறுப்பினர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். நாங்களும் அதை படித்துப்பார்த்தோம். எங்களுக்கு அதனுடைய விளக்கங்கள் போதுமானவையாக இல்லை என்று தெரிகிறது. எனவே அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னால் அதை யொட்டி பேசுவதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எ. டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் விளக்கம் தெரியவில்லையென்றால் மற்றவர்களுக்கு எப்படித் தெரியும். வேண்டுமென்றே எப்படியாவது என்னைப் பேச வைக்க வேண்டுமென்ற நோக்கத்தின் காரணமாகசொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை கொண்டு வருகிறபோது பல முனை வரி 4 சதவீதம் என்று இருப்பதை 5 சதவீதமாக உயர்த்திஇருக்கிறோம். அது நடைமுறைக்கு, வந்திருக்கிறது. அதன் பொருட்டு இணைக்க முறை வரி வீதங்களை இன்றைக்கு சட்ட பேரவையின் முன் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்பது தான் இன்றைய தினம் நாம் எடுத்துக் கொள்ளப் போவது. அதேபோல் மற்றொன்று மாற்று சிமெண்டிற்கு சில இடங்களில் வரியில்லாமல் இருந்தது. அதற்கு பல முனை வரி இருப்பதிலே சில சங்கடங்கள் இருந்தன. அதற்குஇப்போது வரிப் போடுவதற்குசட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அடுத்தது எடை பார்க்கும் இயந்திரத்திற்கு மெஷினரி என்ற பொதுவாக வருகிற போது இதிலே சில வரி ஏய்ப்புகள் வந்திருக்கிறது குறிப்பாக எடை பார்க்கும் இயந்திரம் என்று குறிப்பிட்டு 8சதவீதம் வரிப் போட்டிருக்கிறோம். அடுத்து தாவர எண்ணெய் அதிலே கூட சிலர் வரி ஏய்ப்புச் செய்கிறார்கள். அந்த வரி ஏய்ப்பை தடுப்பதற்கு இதை பல முனைவரியாக கொண்டு வந்து வரியைக் குறைத்திருக்கிறோம். இப்படி இரண்டொருஇனங்களுக்கு மட்டும் தான் வரியைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*செப்டம்பர் 4ம் தேதி 1982 தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



[1982 செப்டம்பர் 8

(பிற்பகல் 1.00)

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவை துணைத் தலைவர் அவர்களே விற்பனை வரிச் சட்டத்தைப் பொறுத்த வரையில், பொதுவாக இந்த விற்பனைவரி என்பது அரசாங்கத்திற்கு வருமானத்தை அளிக்கின்ற காமதேனு என்று வர்ணிப்பது உண்டு. அந்தக் காமதேனு நன்றாகப் பால் கொடுக்கிறது என்று சொன்னால், அதை கறந்து தான் பெற முடியும். அதனுடைய மடியை அதற்காக அறுத்து விட முடியாது. இப்படி அடிக்கடி விற்பனை வரியை ஏற்றுவது, மாற்றுவது என்ற காரணத்தினால் விலை வாசிகள் தாறு மாறாக ஏறிவிடுகின்றனஎன்ற குற்ற சாட்டை நான் முதரிவிக்க விரும்புகிறேன்.

பொதுவாக, சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து இந்த வரிகள் தொடர்ந்து நேர்முகமாகவும், மறைமுகமாகவும் விதித்து வருவதக் காரணமாக விலைவாசிகள் ஏறுவதற்கு வழிகோலுகின்றன. குறிப்பாக, 1954-ஆம்ஆண்டில்இருந்துஇந்த மறைமுக வரியான விற்பனையும், நேர்முகவரியையும் ஒப்பிட்டு பார்க்கின்ற நேரத்தில் இவைகள்ஒரே சமமாக இருந்தன என்பது தெரிகிறது. ஆனால் நாளாக நாளாக இந்த விற்பனைவரி -மறைமுக வரி- ஆண்டுக்காண்டு போடப்பட்ட கூடுதல் விதிப்பு காரணமாக அதனுடைய பர்சேன்டேஜ் உயர்ந்ததன் காரணமாக மிக அதிக அளவிற்கு இன்றைக்குப் போய் விட்டது. இப்படி மறைமுக வரி அதிகமாக கூட்டியதன், காரணமாக அது விலைவாசி ஏற்றத்தற்கு முக்கிய காரணமாகப் போய்விட்டது என்பதை வலியுறுத்திச் சொல்ல ஆசைப் படுகிறேன். அதே நேரத்தில் நேர்முக வரி அந்த அளவிற்கு -இன்கம்டாகஸ் போன்ற வரிகள் உயரவும் இல்லை. ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே போகிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மத்திய அரசாங்கத்தின் இந்த வரி கொள்கையால் வசதி படைத்தவர்கள் வரி செலுத்த வேண்டிய அவசியம இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் இந்தவரி அதிகரிப்பு காரணமாக ஆயிரக் கணக்கான, லட்சகணக்கான சாதாரண மக்கள் வரிசெலுத்த வேண்டிய கட்டாயத்திற்குஆட்படுத்தப் படுகிறார்கள். அந்த மக்கள் வாங்கிற அத்தியாவசியப் பொருள்களின் விலையும் அதிகரித்து விடுகிறது. ஆகவே இந்த பொதுவிற்பனை அதிகரிப்பை அரசாங்கம் அவ்வப்போது மேற்கொள்ளமல் இருக்க வேண்டும். பல முனை வரி என்று இருப்பதை ஒரு முனை வரி என்று ஆக்குவதும், ஒரு முனை வரி என்று இருப்பதை பல முனைவரி என்று ஆக்குவதும் நிச்சயமாக விலைவாசியை எற்றுவதற்கு உதவுகிறது. இப்படி 4% லிருந்து 5% என்று உயர்த்துவது விலைவாசியை ஏற்றுகிறது என்றுசொல்லி, இப்படிப் பட்ட வரிக்கொள்கைகளை அரசாங்கம் மாற்றிக் கொள்வதற்கு முன் வர வேண்டும் என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

THIRU T. VENKATA REDDY: Hon. Temporary Speaker Sir, the Government has brought forward an amendment to the sales Tax Act now stating that the tax is to be levied from October 1981.

Before presentation of this Bill to the Assembly, the Government has brought in an Ordinance only on the 24th of July 1982. Though I am not objecting to this procedure, I want to point out in this connection that when the Government is aware that the Assembly is going to be summoned very soon, such kind of promulgating Ordinance just prior to the Assembly is not proper and congenial, There was no urgen to issue an Ordinance about sales Tax.

The other aspect which I want to press in this occassion is this When an amendment to a Bill is brought forward, the Government must also place before the Assembly the relevent provisions of the previous Act. In the proposed amendment Bill, we do not find anywhere the provisions of the previous sections and also the reasons why they are seeking to amend the Act. No reasons have been adduced except stating that during the budget announcement the Government proposed to increase the sales tax, Whenever the Govt. brought forward an amendment to the Act they should also putforth the valid reasons far such amendment. Here the Government has not stated the reasons why they are bringing this amendment and the reasons for increaring the Sales Tax from 4 per cent to 5 Per cent. Absolutely no reasons is given for such an enhancement of the levy of sales tax, Where was the necessity for enhancing the Sales Tax from 4 to 5 per cent Is its necessary to increase the Sales Tax at this juncture The reasons for the enhancement have not been mentioned anywhere in the Bill.

Another aspect that I want to point out is the difference between the old Section 7 and the provisions made in the amendment Bill now before the House. By this amendment, they are actually decreasing the compounding fee. I want to bring to the notice of the Hon. Minister for Revenue the provisions In Section 7 of the old Act. I shall read the provision for the convenience of the Hon· Minister:

"Where the total turnover is not less than ninety-five thousand rupees, but is less than one lakh of rupees, the rate of Tax is Rs three thousand Per annum.,

But in the new amendment Bill, the compounding fees aspect is less. The Hon. Minister for Revenue can go through the procision in Section 7 of the old Act and the provisions made in the amendment Bill. The provision made in the new amendment Bill Rupees two thousand two hundred and eighty per annum. Now the compounding fee is reduced than what was in the previous Act· So, the object is



rupees· The other aspect is the Governmeut has totally forgotten the compounding fees in the case of turnover exceeding one lakh of rupees. There is no provision in the now amended bill. That aspect also to be carified by the Hon. Minster What is the charge of compounding fees? That's silent in the amended Bill. I agree with my Hon. Friend Thiru Krishnan who said that the increase in sales tax would lead to inflationary trends. That aspect will have to be borne in mind by the Hon. Minister, especially when the Centrrl and State Governments are having stringent laws inregad to financial aspects.

The other aspect that I would like to refer is the harassment of industrialists by the Sales tax officials. The Sales tax Authorities are leavping sales tax on most of the Industrial units in our area. They are not assessing thn sales tax in proper way and they are not collecting them in a proper way. They are taking a lot of money outside tha purview of the Act leavlng out the people who are greasing there palms. That is also grievance of industrialists especially in our area where new industrial units have come up. Most of industrialists are complaining that the Sales Tax Officers are not acting within the law. They are putting a lot of obstacles to their business. Such things should be corrected by the Government. If it was done properly, the Government will also get more money and the prestige of the Government would be enhanced. With these few suggestions, I want the Hon. Minister for revenue to rectify the anomrlies in the Act and I am surel the Hon. Minister will rectify those anomolies by bringing in a new amendment to the Sale Tax act.

Thank you for giving me an opportunity.

திரு.இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தை மேலும் திருத்துவதற்காக கொண்டு வரப் பட்டிருக்கிற சட்ட முன் வடிவின் சம்பந்தமாக நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூறுவதற்கு முன் வருகிறேன்.

பொதுவாக அமைச்சர் அவர்களால் அவை முன் வைக்கப் பட்டிருக்கிற இந்தச் சட்டத்திற்கான திருத்தமானது நடைமுறையில் விலைவாசியை எல்லாம் ஏற்றக் கூடிய முறையிலே அதுவும் சாமானிய மக்கள் மீது, அதனுடைய பளு முழுவதும்அவர்கள் மக்கக் கூடிய முறையிலெ, தாங்க முடியாத அளவுக்கு இந்த வரி விதிப்பு அவர்களைக் கொண்டு போய்விடுகிறது என்பதை முதலிலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து வரிவிதிப்பு அதிகமாக அதிகமாக வரி ஏய்ப்பும் அதிகமாகிறது என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். எந்த அளவுக்கு வரிகள் அதிகப் படுத்த படுகிறதோ அந்த அளவுக்கு இந்த வரி ஏய்ப்புகளும் அதிகரித்து, முறையாக கிடைக்கூடிய வருமானத்தைக் கூட

[திரு. இரா. கருப்பையா] 1982 செப்டம்பர் 9]

கிடைக்காமல் தடுத்து நிறுத்தும் படியான நடவடிக்கைகளையும் பலர் மேற்க் கொள்ளக் கூடிய அளவுக்கு ஊக்கம் அளிக்க கூடிய வகையில் தான் இந்த புதிய வரி விதிப்விகளும், வரி விதத்தை அதிகப்படுத்தும் படியான நடவடிக்கைகளும் உண்டாக்குகின்றன.

இந்த வரி விதிப்புச் சம்பந்தமாக சொல்ல வருகையில் ஏற்கனவே தாவர எண்ணெய் வகைகளுக்கு ஒரு முனை வரியாக இருந்திருப்பதை, தற்சமயம் பல முனை வரியாக நம்முடைய அமைச்சர் அவர்கள் மாற்றிக் கொண்டு வந்திருப்பதை குறிப்பிட்டாக வேண்டும். அதிலே நாட்டு எண்ணெய் என்று செக்களால் அல்லது கையால் இயக்கப் படும் ஆலையிலிருந்து எடுக்க படும் எண்ணெய் என்றும், இயந்திரங்களில் மூலமாக பிரித்தெடுக்கப் படும் எண்ணெய் என்றும், இருவகையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த விதமான பிரிவுகளை யார் பிரித்துப் பார்ப்பது. நடைமுறையிலே கையால் இயக்கப்படும் செக்குகளிலிருந்து எடுக்கப் பட்ட எண்ணெய் எது அல்லது எக்ஸ்பெல்லர் போன்றரோட்டரி போன்றஇயந்திரங்களை உபயோகித்து உற்பத்தி செய்த எண்ணெய் எது என்பதை கண்டுப்பிடிப்பதிலே சிக்கல்கள் இருக்குமே, ஆகவே நாட்டு செக்கிலேயிருந்து உற்பத்தியாகக் கூடிய எண்ணெய்யாக இருந்தாலும் சரி இயந்திரங்கள் மூலயாக உற்பத்தியாகிற எண்ணெய் வகையாக இருந்தாலும் சரி, அவைகளுக்கு இந்த வரியைச் செலுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அதுவும் ஒரு முனை வரியாகக் கூட இல்லை பலமுனை வரியாக இருக்கிறது.

உதாரணமாக ஒரு லிட்டர் தேங்காய் எண்ணெய் 20 ரூபாய்க்கு விற்கப் படுகிறது என்றால், இந்த 20 ரூபாய்க்கு 4 சதவீதம் வரி என்று பார்க்கக் கூடிய நேரத்தில் ஒரு லிட்டருக்கு 80 பைசாவாக அமைகிறது. அது மூன்று பேர்களின் வழியாக விற்பனைக்கு வரக் கூடிய நேரத்தில், 2ரூபாய் 40 பைசாவை அதற்காக வரியாக செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே அதன் காரணமாக அந்த அளவுக்கு அந்தப் பொருளினுடையவிலையும் உயர்த்தப்படுகிறது, என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு பார்க்க வேண்டும். இதே வகையில் தான் இன்றைய தினம் பொருள்களின் விலைவாசியை ஏற்றக் கூடிய வகையிலே இந்த வரிவிதிப்பும், இந்த திருத்தச் சட்டத்தின் மூலமாகக் கொண்டு வரப் படுகிறது.

ஆகவே, இம்மாதிரியான முறைகளின் மூலமாக அரசுக்கு வருமானம் தேவை என்ற வகையில் கொண்டு வரப் படுகிறதோ என்னவோ அதுவும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறாரே, ஒரே நேரத்திலே எல்லா விதமான வரிவிதிப்புகளையும் சட்ட முன்வடிவுகளாகக் கொண்டு வந்தால், எதிர்ப்பு எங்கே அதிகமாக கிளம்புமோ என்று யோசித்து, அந்தந்தச் சந்தர்ப்பங்களிலே அவ்வப் போது, அவைகளை மிகவும் இலகுவாக ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையிலே கொண்டு வந்து இப்படிப்பட்ட வரிவிதிப்பையும் புதிய வரிகளையும் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



ஏற்கனவே இது குறித்து கைவார் கமிட்டியின் ரிப்போர்ட் இருக்கிறது. பல முனை விற்பனை வரியாக இருக்க கூடியவைகளையெல்லாம் ஒரு முனை வரியாக மாற்றி அமைக்க வேண்டும் என்ற சிபாரிசு அதில் இருக்கிறது. அந்த சிபாரிசை அமுல்நடத்துவதற்குப் பதிலாக இன்றைய தினம் ஒரு முனை வரியாக இருந்ததையும் பலமுனை வரியாக மாற்றக் கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே இம்மாதிரியான வரிவிதிப்பினாலும் அல்லது/வரி விகிதங்களை மாற்றம் செய்வதன் மூலமாகவும் மக்களுடைய தோள்களிலே வரிப்பளுவை அதிகமாக ஏற்றுகிறீர்கள் என்பதை அரசினர் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஏற்கனவே 4 சதவீதமாக வரிவிதிப்பு இருந்ததை 5சதவீதமாக மாற்றியிருக்கிறோம், அதற்கான நடைமுறைச் சட்டத்தைதான் இப்போது கொண்டு வருகிறோம் என்று அமைச்சர் அவர்கள் பதில்கூறலாம். ஆனால் வரி விதிப்பு என்பதுவிலைஏற்றத்தில் தானே போய் முடிகிறது. மக்களிடமா வரி வசூலிக்கிறோம் வியாபாரிகளிடம் தானே வசூலிக்கிறோம் என்று கூறலாம். ஏதோ வியாபாரிகள் தானேஇந்த தொகையைச் செலுத்துகிறார்கள் என்று நினைக்கலாம். ஆனால் வியாபாரிகள் அவர்கள் விற்கக் கூடிய ஒவ்வொரு பொருளுக்கும், இந்த வரிகளையெல்லாக சேர்த்து தான், இது இதற்கான வரி என்று பில்லிலேயே தனியாகப் போட்டுக் கொடுத்தாலும, அல்லது போடாமலேயே கொடுத்தாலும், அந்தப் பொருள்களுக்கான விலையை நிர்ணயம் செய்து மக்களிடையே விற்பனை செய்கிறார்கள்.

இன்றைக்கு அரசாங்கத்திற்கு அதிகமான நிதி தேவை என்ற காரணத்தால்,அதிலும் அரசாங்கத்திற்கு அதிகமான வருவாயினைத் தருகின்ற ஒரே ஒரு வரி விற்பனை வரி தான் என்ற காரணத்தால் இப்படி வரி விதிக்கப் படுகின்றது. எனவே இந்த வரியின் மூலம் எவ்வளவு வேண்டுமானாலும் மக்களிடத்திலே இருந்து கறக்கலாம் என்ற அடிப்படையிலே செய்வது என்பது நடைமுறையிலே மக்களுக்குப் பாதகமான விளைவினை ஏற்படுத்துவதோடு பணவீக்கம் போன்ற வேறு பலநிலைமைகளையும் ஏற்படுத்தும் என்று சொல்லி எனவே இதனைக் கைவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பத்திலே இராஜாஜி அவர்கள் தான் இந்த வரியினைக் கொண்டு வந்தார்கள். அன்றைக்கு ரூாய்க்கு 192 பைசா இருந்த காலத்திலே ஒரு ரூபாய்க்கு 1பைசா என்று வரி கொண்டு வரப் பட்டது. ஆனால் இன்றைய தினம் ஒரு ரூபாய்க்கு 100 நயா பைசா என்ற அளவு இருக்கின்ற போது 5 சதவீதம் என்று கணக்கிட்டுப் பார்த்தால் மூன்பு இருந்ததை விட 10 மடங்கு இந்த வரி விதிப்பு உயர்ந்திருக்கின்றது. இப்போது மக்களின் வாழ்க்கைத் தரம் குறைந்திருக்கின்ற நேரத்தில் அவர்கள் மீது சுமை 10 மடங்கு அதிகரிக்கின்றது. எனவே இந்த வரி விதிப்பு

மக்களை நேரடியாகப் பாதிக்கின்ற காரணத்தால் இதனை அரசு கைவிட்டு விட்டு பெரும் பணக்காரர்களிடம் நேரடியாக வேறு வகைகளில் வேண்டுமானால் வரி வசூலித்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த விற்பனை வரியின் மூலமாக மறைமுகமாக மக்களின் மீது சுமையினை ஏற்றக்கூடிய நடவடிக்கையை கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் இதனைக் கைவிட வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பொது விற்பனை வரிச் சட்டமுன்வடிவினை அதாவது ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட ஆர்டினன்ஸை ரெகுலேட் பண்ணுவதற்காக இந்த மசோதாவினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எங்களுடைய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். சில குறைபாடுகளைச் சரி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடும், அதே சமயத்திலே வரிகள் அரசாங்கத்திற்கு உரிய முறையில் வந்து சேரவேண்டும் என்ற நோக்கத்தோடும் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்படுவதாக காரண காரிய விளக்கத்திலே சொல்லி இருக்கிறார்கள், இதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை இங்கே என்னுடைய கருத்தாகக் கூற விரும்புகிறேன். இதிலே சிறு வியாபாரிகள் முதல் அதாவது 50 ஆயிரத்திலே இருந்து 60 ஆயிரம், 60 ஆயிரத்திலிருந்து 70 ஆயிரம். 70 ஆயிரத்திலே இருந்து 80 ஆயிரம் என்று இப்படி ஒரு இலட்சம் ரூபாய் வரையில் என்று பகுதி பகுதியாகப் பிரித்து இந்த இந்த ஸ்லாபுக்கு இவ்வளவு இவ்வளவு வரி என்றுபோட்டுருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக்கழகத்தினுடையகருத்து என்னவென்றால் ஒரு இலட்சம் ரூபாய் ஆண்டு வருமானம் என்றால் மாதத்திற்கு கிட்டத்தட்ட 8.000 ரூபாய், அப்படி மாதத்திற்கு 8,000 ரூபாய் என்றால் ஒரு நாளைக்கு 250 அல்லது300 ரூபாய் விற்பனை செய்யக்கூடிய வியாபாரிகளும் இந்த சட்டத்தின் கீழ் வருகிறார்கள். ஒரு நாளைக்கு 200 ரூபாய் விற்பனை செய்யக்கூடிய சாதாரண சில்லறை கடைகளும் கூட இந்தச் சட்டத்தின் கீழ் வரவேண்டுமா என்பதுதான் எங்கள் கருத்து. சுமார் 500 ரூபாய்க்கு டர்ன் ஓவர் இருந்தால் அவர்கள் எல்லாம் கூட கணக்கு எழுத வேண்டுமா? அந்த சிறு வியாபாரிகள் கூட சேல்ஸ் டாக்ஸ் அக்கவுண்ட் மெயின்ட்டெய்ன் பண்ண வேண்டுமா ? அதற்காக ஆஃபீசுக்குப் போக வேண்டுமா?

(பிற்பகல் 1.20)

இதை ஏன் ரூ.50,000 விருந்து ஒரு இலட்சமாக உயர்த்தக்கூடாது என்று நான் ஆலோசனையாகவும். அதே சமயத்தில இதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒரு இலட்சம் வரைக்கும் உள்ள டர்ன் ஓவருக்கு சேல்ஸ் டாக்ஸ் கிடையாது என்று ஏன் சொல்லக்கூடாது?



அப்படிச் சொல்லவில்லை என்றால், சிறுசிறு வியாபாரிகள் சேல்ஸ் டாக்ஸ் கட்டக்கூடிய நிலைமை வரும் அதனால் அவர்களுக்குப் பல பிரச்னைகள் ஏற்படும். இப்போது இருக்கின்ற இந்தச் சட்டத்திலே சொல்லுகிறீர்கள்—மொத்த வியாபாரம் ரூ.50,000க்கு குறையாமலும், ஆனால் ரூ.60,000க்கு குறைவாகவும் இருந்தால் என்று போடப்பட்டிருக்கிறது. இதை யார் நிர்ணயிப்பது? அசிஸ்டென்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபிசர் தான் இந்த அசிஸ்டென்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர். அசெஸ்மென்ட் செய்கிறபோது, இதிலே ஒரு பாரத்தை பூர்த்தி செய்யச் சொல்லி, அதிலே டோட்டல் பர்சேஸ் எவ்வளவு, டோட்டல் சேல்ஸ் எவ்வளவு என்ற விவரத்தைக் கொடுக்க வேண்டும். அப்படி அந்தப் பாரதனை பூர்த்தி செய்தவுடனே, கணக்குகளைக் கொண்டு வாருங்கள், அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்வார். அவர் பரிசீலனை பண்ணுவதாக ஒரு தேதி வைப்பார். எந்த வியாபாரி. சில்லறைக் கடைக்காரர், மளிகைக் கடை வைத்திருப்பவர். பங்கு கடை வைத்திருப்பவர் கணக்கு எழுதுகிறார்? இவர்களால் கணக்கு வைக்க முடியுமா? பில் போட முடியுமா? எழுத முடியுமா? அவர்கள் ஏதோ ஒரு சிட்டாவில் தான் கணக்கை வைத்துக் கொள்வார். அதை யார் நம்புவது? அது தப்பு அதை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று அந்த அசிஸ்டென்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் சொல்லுவார். இப்போது ஒரு இலட்சத்திற்கு ரூ.2,000 வரி. மொத்த வியாபாரத்தொகை ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறையாமலும், ஆனால் அறுபதாயிரம் ரூபாய்க்கு குறைவாகவும் இருந்தால் ரூ.1.,080 வரி. ஆனால் அந்த வியாபாரி ரூ.50,000 டர்ன் ஓவர் என்று சொன்னால், இல்லை ரூ 60,000 அல்லது ரூ.1¼ இலட்சம் என்று அந்த அசஸ்மென்ட் ஆபீசர் சொல்லி விட்டால். டிபரென்ஸ் என்ன டாக்ஸ் வருகிறது? ஆனால், இந்த டிபரென்ஸ் டாக்ஸ் அரசாங்க கஜானாவிற்கு வராது, வேறு எங்கோ போகும்.

ரூ.50,000 என்று ஏன் ஒரு லிமிட்டை வைக்கவேண்டும். இப்போது எல்லாப் பொருட்களின் விலையும் ஏறிவிட்டது? 1952 ஆம் ஆண்டு ஒரு பொருளின் விலை ரூ.10 என்றால் இப்போது ரூ 100 என்றாகி விட்டது. எனவே இப்போது 10 மடங்கு ஏறிவிட்டது. எனவே இப்போது ரூ.50 000 என்றருப்பதை, ரூ.ஒரு இலட்சம் என்று உயர்த்தினால், பல வியாபாரிகள் கணக்குகளை மெயின்டெயின் பண்ணுவதிலிருந்து விடுவிக்கலாம். அதோடு நெம்பர் ஆப் கேசசும் குறையும். அதோடு மட்டுமல்ல அசெஸ்மென்ட் ஆபீசர்கள் வியாபாரிகளை டீல் பண்ணுகிறார்கள். திடீரென்று ஏதாவது வசூல் பண்ண வேண்டுமென்று சொன்னால், அவர்கள் இந்த சிறு வியாபாரிகளிடத்திலேதான் கேட்டுக்கொள்வார்கள். ரூ.20, ரூ.30, ரூ.100 வரை அவர்கள் ஒவ்வொரு கடைக்கும் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்லுவார்கள். ஏதாவது ஒரு பொதுக் காரியத்திற்காக. ஆகவே ஒரு இலட்சம் அளவிற்கு அதை உயர்த்த வேண்டும். அதன்மூலம் சிறு வியாபாரிகள், அவர்கள் தொல்லைகளிலிருந்து விடுவிக்கப் படுவார்கள். இதை வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்

பரிசீலிக்க வேண்டும். இதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாயா வந்துவிடப் போகிறது? மொத்த வரிவசூல் ரூ.500 அல்லது ரூ.600 கோடி என்றால், இதன் மூலம் மொத்தம் வருஷத்திற்கு ரூ.4, ரூ. அல்லது ரூ 10 கோடிதான் வரும். ஆனால், இதிலே நெம்பர் ஆப் கேசஸ் அதிகம். ஒரு லட்சமாக உயர்த்துவதன் மூலம், நெம்பர் ஆப் கேசஸ் குறைவதோடு மட்டுமல்லாமல், அசெஸ்மென்ட் ஆபீசர்களுக்கு இந்த சில்லறை வியாபாரிகளிடமிருந்து ஓய்வு கொடுத்து, தங்களுக்கு இருக்கின்ற பல வேலைகளை ஒழுங்காக செய்ய அவர்களால் இயலும். எனவே, இதை ஒரு லட்சமாக உயர்த்துங்கள். என்னுடைய இந்த ஆலோசனையை பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இல்லை என்றாலும், பிறகாவது ஆலோசனை செய்யவேண்டும்.

இன்னொன்று. பர்சென்டேஜ் ஆப் சேல்ஸ் டாக்ஸ் எங்கே அதிகமாக இருக்கிறதோ, அங்கேதான் எவேஷன் இருக்கும். இன்கம் டாக்ஸானாலும் சரி, சேல்ஸ் டாக்ஸானாலும் சரி, எங்கே வரி விகிதம் அதிகமாக இருக்கிறதோ, அங்கேதான் எவேஷனும் இருக்கும். வரி விகிதம் குறைவாக இருந்தால், மக்களுக்கு வரியை ஒழுங்காக கட்ட வேண்டுமென்ற எண்ணம் வரும். ஏன், உதாரணமாக மோட்டார் ஸ்பேர் பார்ட்சை எடுத்துக்கொள்ளுங்கள். அதிலே என்ன வரி விகிதம்? 13 சதவீதம் 14 சதவீதம் என்று போட்டிருக்கிறீர்கள். மோட்டார் ஸ்பேர் பார்ட்சுக்கு 11 அல்லது 14 சதவீதம் வரி விகிதம் என்று சொன்னால் அந்த வியாபாரி எங்கே முழுமையாக வரி கட்டுகிறான், கால் பங்கு வரியைத்தான் கட்டுகிறான். மீதி முக்கால்வாசி வரியைக் கட்டுவதே கிடையாது. அதற்கான பில்லையும் யாரும் போடுவதில்லை. உதாரணமாக ஜெனரல் பாட்டர்ஸ் ரோடிலே போய்ப் பாருங்கள். யாரும் பில் போடுவதில்லை. காரணம் ரூ. 1,000க்கு பொருள்கள் வாங்கினால், 13 அல்லது 14 சதவீதம் வரி என்றால், ரூ.150 வரியாக கட்ட வேண்டி வரும். இதைக் கட்டாமல் ஏமாற்றுகிறார்கள் அந்த வியாபாரிகள். 8 சதவீதம் 10 சதவீதம், 12 சதவீதம் என்று டாக்ஸை உயர்த்திக்கொண்டே போனால் அரசாங்கத்திற்கு வருமானம் அதிகமாக வரும் என்று நினைப்பது தவறு. எந்த இடத்திலே டாக்ஸ் அதிகமாக இருக்கிறதோ அங்கேதான் 'எவேஷன்' அதிகமாக இருக்கும். அந்த இடத்தில் கண்காணிப்பு அதிகமாக இருக்க வேண்டும். ஒரு வேளை டாக்ஸை குறைத்தால் இன்னும் அதிகமாக வருமானம் வரும். ஒரு முனை வரி என்ற முறையிலே ஒரேயடியாக 10 சதவீதம், 12 சதவீதம் அளவுக்குப் போடாமல் பல முனை வரி என்ற பெயரால் 3 சதவீதம் என்று போட்டால் கன்ஸ்யூமர்களுக்கும் கட்டவேண்டும் என்ற எண்ணம் இருக்கும். பில் போடாமல் கொடுங்கள் என்று கேட்க மாட்டார்கள். வியாபாரிகளும் ஒழுங்காக வரியை கட்டிவிடுவார்கள். எங்கே அதிகமான ஸ்லாப் இருக்கிறதோ அங்கேதான் 'எவேஷன்' இருக்கும். அதன் காரணத்தினால் அரசாங்கத்தின் வருமானம் குறையும். ஆகவே இதை ஆலோசனை செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

நிலக்கடலை மீது வரி விதிப்புப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. மணிலா மார்க்கெட்டில் நிலக்கடலை கொண்டு போனால் தான் வரி கட்டவேண்டியிருக்கிறது. ஆகவே வெளியில் கொடுத்துவிட்டு பணத்தை வாங்கிக்கொள்கிறார்கள். பில்லும் கிடையாது, டாக்ஸும் கிடையாது. மார்க்கெட் கமிட்டிக்குப் போகாமல் வெளியே வியாபாரம் நடந்துவிடுகிறது. வட ஆற்காடு மாவட்டத்திலே மணிலா மார்க்கெட்டுக்கு யார் போகிறார்கள். போவது இல்லை. மணிலாவுக்கு வரி போடுவதால் மார்க்கெட் கமிட்டிக்கு போகாமல் வெளியே விற்றுவிடுகிறார்கள். வெளியே அவர்கள் வைத்ததுதான் விலை. இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு எந்தெந்த விதங்களில் வரி விதிப்பை குறைக்க முடியுமோ அதை குறைத்து அரசாங்கத்திற்கு வருகிற வருமானத்தை செவ்வனே வசூல் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

சிறு வியாபாரிகளுக்கு தொல்லை இல்லாமல் இருப்பதற்கு 50 ஆயிரம் வருமானம் என்று இருப்பதை ரூபாய் ஒரு இலட்சம் என்று திருத்த வேண்டும். இதனால் பல ஆயிரக்கணக்கான சிறு வியாபாரிகள் பலன் அடைவார்கள். இன்றையதினம். சிறு வியாபாரிகள் சேல்ஸ் டாக்ஸ் டிபார்ட்மெண்டாலே படுகின்ற தொல்லைகளுக்கு அளவில்லை. அதிலிருந்து விடுபடும்படியும், அந்த வகையிலே இந்தச் சட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். அந்த கருத்துக்களை எல்லாம் அரசு ஆழமாக யோசிக்கும் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, வரியை எவ்வளவு அதிகமாக உயர்த்திக் காண்டு போகிறோமோ அந்த அளவுக்கு அரசுக்கு வருமானம் வரும் என்று அரசு எண்ணவில்லை. எங்கே வரி ஏற்றம் இருக்கிறதோ அந்த அளவுக்கு அங்கே வரி ஏய்ப்பு இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். வரியை உயர்த்துகிறபோது அல்லது குறைக்கிறபோது அல்லது மாற்றுகிறபோது உற்பத்தி எப்படி இருக்கிறது, நுகர்வோர்களின் நிலைமை எப்படி இருக்கிறது என்பதையெல்லாம் அரசு அடிப்படையாக வைத்து ஆலோசனை செய்து அதற்கேற்றவாறுதான் பல முனை வரியை ஒரு முனை வரியாகவும், ஒரு முனை வரியை பல முனை வரியாகவும் உற்பத்தி செய்பவர்களுக்கு சங்கடம் இல்லாமல் அதே நேரத்தில் வாங்குபவர்களுக்கும் சங்கடம் இல்லாமல் அரசு நடவடிக்கை எடுக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விலைவாசி ஏற்றத்திற்கு எல்லாம் காரணம் வரி மட்டும் தான் என்று சொல்லமுடியாது. நாட்டிலே கருப்பு பணம் அதிகமாக இருப்பதால் விலைவாசி ஏற்றம் இருப்பதாக பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். அதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான்

வேண்டும். வரி இல்லாத பொருள்கள் எவ்வளவோ இருக்கின்றன. உணவு பொருட்களுக்கு வரி இல்லை. ஆனால் அவைகளின் விலை ஏறித்தான் இருக்கிறது.

(பிற்பகல் 1—30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியுடன் பேரவையின் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மற்றவைகள் எல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்கிற விஷயங்கள் என்று சொல்லி இந்தச் சட்டமுன்வடிவினை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்து, மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன், "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 9—9—1982 ஆம் தேதி காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

85. தமிழ்நாடு 1980—ஆம் ஆண்டு உணவகங்கள் மற்றும் தங்குமிடங்களில் உள்ள ஆடம்பரப் பொருட்கள் மீதான வரி விதிப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறநிலையத்துறையின் 19—5—1982 ஆம் ஆண்டு தேதியிடப்பெற்ற 554—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு உணவகங்கள் மற்றும் தங்குமிடங்களிலுள்ள ஆடம்பரப் பொருட்கள் மீதான வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].





86. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு மோட்டார் வாகன விபத்துக்கள் கேட்பு தீர்பாய விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 2—4—1982 ஆம் தேதியிடப்பெற்ற 768 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

87. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 18—5—1982 ஆம் தேதியிடப்பெற்ற 1219 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

88. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 18-5-1982 ஆம் தேதியிடப்பெற்ற 1220 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1959 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

89. தமிழ்நாட்டிலுள்ள கண்பார்வை இழந்தோர்களுக்கான திருவாளர்கள் கிறுத்துவ நிறுவனத்திற்குச் சொந்தமான TMU 6983 ஆம் எண் வண்டிக்கு சலுகைக் கட்டண வீதத்தில் வரி செலுத்த அனுமதிப்பது குறித்து உள் துறையின் (போக்குவரத்து—1) 24—4—1982 ஆம் தேதியிடப் பெற்ற 1002 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

13. 1982 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசர சட்டம் எண் 10/1982)

14. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு.

15. 1982 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (நாற்பத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவின் மீதான செய்திக் குறித்து மாநிலங்களவை செயலாளரிடமிருந்து வரப்பெற்றக் கடித எண். 1/21/81-பி, தேதி 18—8—1982—ன் நகல்.

16. 1982 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (நாற்பத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவு (மக்களவையில் அறிமுகப் படுத்தப் பெற்றவாறு).

17. 1982 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (நாற்பத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவு (நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப் பெற்றவாறு).

18. 1982 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (நாற்பத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவின் மீதான மக்களவை நடவடிக்கைகள்.

19. 1982 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (நாற்பத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவின் மீதான மாநிலங்களவை நடவடிக்கைகள்.

## இணைப்பு I

*[230 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 33-க்கான விடையைக் காண்க.]*

1952 ஆம் ஆண்டின் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் (E.P.F.Scheme, 1952) பத்தி 38-ல் கண்டுள்ளபடி அத்திட்டத்தின் விதிகளுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களின் அதிபர்கள் தங்களிடம பணிபுரியும் தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்த வருங்கால வைப்புநிதித் தொகையுடன் தங்களுடைய பங்குத் தொகையையும் சேர்த்து ஒவ்வொரு மாதமும் முடிவதற்கு 15 தினங்களுக்குள் வருங்கால வைப்புநிதி ஆணையாளர் அலுவலகத்தில் செலுத்த வேண்டும். ஏறக்குறைய 90 சதவிகிதம் தொழிலதிபர்கள் இவ்விதிகளுக்குட்பட்டு பணம் செலுத்தி வருவதாக வருங்கால வைப்புநிதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

2. தேசியப் பஞ்சாலைக் கழகத்தால் எடுத்துக் கொள்ளப்பட்ட நெசவுத் தொழில் நிறுவனங்கள், முறையீட்டு மனுச் செய்து நிறுத்தி வைத்தல் ஆணை பெற்ற (ஸ்டே ஆர்டர்) நிறுவனங்கள், நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள், மூடப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து வரவேண்டிய நிலுவைக்காக வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையாளரால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் உரிய சான்றிதழ்களுடன் மனுக்கள் செய்யப்பட்டுள்ளன. பிற நிறுவனங்களிடமிருந்து தொகைகளை வசூலிப்பதற்கு வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையாளரால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மற்றுமுள்ள நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய தொகைகளுக்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு வருமானத் தண்டல் சான்றிதழ்கள் (ரெவின்யூ ரிகவரி சர்ட்டிபிகேட்ஸ்) அனுப்பப்பட்டு தொகைகளை நிலவரி நிலுவையாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பணம் செலுத்தத்தவறிய நிர்வாகிகள் மீது நீதி மன்றத்தில் வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன.





## இணைப்பு II

*[252 ஆம் பக்கத்திலுள்ள நிதியமைச்சரின் உரையின் தமிழுரைக்கான ஆங்கில உரை]*

Speech of Hon'ble Thiru V.R. Nedunchezhiyan, Minister for Finance, presenting the First Supplementary Estimates for the year 1982-83 to the Tamil Nadu Legislature on 8th September 1982, Aavani 23rd Thundhubi, Thiruvalluvar Aandu 2013.

I. rise to place before the House, The First Supplementary Estimates for the year, 1982-83. The Supplementary Estimates provide for an appropriation of Rs. 130.55 crores. Out of this Rs. 124.35 crores is under Revenue Account. The expenditure on capital and Loan Account is Rs. 6.40 crores. The detailed statement placed along with the estimates explain the purpose for which the expenditure is being incurred. I, would how-ever, like to high light some of the important items for the specific attention of the Honourable Members.

2. As the Honurable Members are aware, the Chief Minister's nutritious Meal Programme for Children is being implemented from 1st July 1982 in all the rural areas of the State. As indicated in the Budget Speech for 1982-83, the programme covers the children in the age-group of 2 to 10 years and involves essentially the supply of one-Nutritious meal to them every day. This programme is to be extended to the urban areas from the 15th September 1982. A sum of Rs.32.00 crores has been set apart in the Supplementary Estimates towards the cost of feeding the children in the age-group 2plus to 4 puls and Rs.20.59 crores for the children in the age-group 5 plus to 9 plus. A sum of Rs.55.00 crores has also been provided for, in the Suplimentary Estimates towards the cost of food articles supplied for the programme by the Tamil Nadu Civil Supplies Corporation.

3. As the Honourable members are aware, the Government have been implementing the self-sufficiency scheme all over the state and the scheme is in its third phase of implimentation this year. In order to ensure that the works taken now under the self-sufficiency programme are completed well in time, Government has sanctioned Rs .1.25 crores for the purchase of 50 road rollers' This amount has been included in the Suplementary Estimates presented now.

4. On account of inadequate rainfall during 1981, there was as possiblity of water levels in the drinking water wells going down in certain pockets of some districts. In order to tide over the situation, the Government has sanctioend Rs. 10 lakhs towards deepening of existing public drinking water wells. This amount has been included in Supprementary Estimates.

5. Master plans for the integrated development of Rameswaram, Mamallapuram and Kanniyakumari townships for developing them at international tourist resorts have been prepared and sent to Government of India, seeking financial assistance and the request is under the consideration of the Government of India. Pending receipt of assistance from the Government has sanctioned a sum of Rs.58 lakhes on 50 percent loan, 50 percent pasip to the townships of Mamallapurem, Rameswaram and Kannipakumari for the provision of basic amenities like, shopping complex, transpor terminal, open air theatre, etc. Thy grant portion of the sanction has been included in the Supplementary Estimates now presented.

6. I have highlighted only a few importance sanctions for which provitsion could not be made in the Budget estimates for 1982-83. I vteke the approval of the House for all the schemes included in the Supplementary Estimates and request necessary appropriation for them.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1982 செப்டம்பர் 9.

ஆவணி 24, துந்துபி, திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகு''.

நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமையாகிய பெருமையை உடையது இவ்வுலகம்,

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்.

உடுக்குறியிடாத வினாக்களையும், அவற்றுக்கான விடைகளையும் இணைப்பில் காண்க.

2. இரங்கல் தீர்மானம்.

காஷ்மீர் முதல் அமைச்சர் திரு. ஷேக் அப்துல்லா அவர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காஷ்மீர் முதலமைச்சரும்' காஷ்மீர் சிங்கம் என்று அன்புடன் அழைக்கப்பட்டவருமான ஷேக் அப்துல்லா அவர்கள் நேற்று இரவு காலமான செய்தியை பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இரங்கல் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஷ்மீர் முதல்வர் திரு. ஷேக் அப்துல்லா அவர்கள் மறைவு குறித்த கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

''1905 ஆம் ஆண்டு, டிசம்பர் 5 ஆம் தேதி, காஷ்மீரில் சௌரா என்ற இடத்தில் பிறந்தார். எம்.எஸ்ஸி. பட்டதாரியான அவர் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றத் துவங்கினார். 1932-ல் ஜம்மு—காஷ்மீர் முஸ்லீம் மாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் அதை தேசிய மாநாடு என்று பெயர் மாற்றம் செய்தார். அவர் மக்கள் கிளர்ச்சியை மன்னர் ஆட்சிக்கு எதிராக தீவிரப்படுத்தினார். 1942-ல் காஷ்மீரை விட்டு வெளியேறு இயக்கத்தை நடத்தினார். 1947—ல் பாகிஸ்தான் ராணுவம் காஷ்மீரை தாக்கியபோது அவர் அவசரநிலை அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்

1948-ல் அவர் ஜம்மு காஷ்மீரின் முதலாவது பிரதமர் பதவியை ஏற்றார். 1953-ல் கைது ஆகும் வரை பிரதமராக இருந்தார். மீண்டும் 1975-ல் முதல்வராசப் பணியேற்று கடைசி வரை அவர் பதவியில் இருந்தார். காஷ்மீர் சிங்கம் என்று அழைக்கப்பட்ட அவர் பழம் பெரும் விடுதலைப் போராட்ட வீரர். அவர் பலமுறை சிறை சென்றவர். தமிழ் நாட்டில் உதகமண்டலத்திலும், கொடைக்கானலிலும் சிறை வைக்கப் பட்டிருந்தார். தமிழ்நாட்டின்பாலும், தமிழக மக்களின்பாலும் சிறப்பான அன்பு கொண்டிருந்த அவர் தமிழகத்திலிருந்து பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் எப்போது காஷ்மீர் சென்றாலும், அவர்களை சந்தித்து உரையாடுவதில் ஆர்வம் காட்டினார்.''

அன்னார் மறைந்தது குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறது.

காஷ்மீரினுடைய பிரதமராக இருந்து நேற்று இரவு 12.00 மணியளவில் இயற்கை எய்திய ஷேக் அப்துல்லா அவர்கள் மறைவு குறித்து இந்த மன்றம் தன்னுடைய இரங்கலை தெரிவித்துக்கொள்கிற வகையில் இந்த தீர்மானம் முன்மொழியப் பட்டிருக்கிறது. காஷ்மீரில் பிறந்து வளர்ந்த அவர்கள் சென்ற 50 ஆண்டுகளுக்கு மேலாக காஷ்மீரினுடைய நலனுக்காகவும், பொதுவாக இந்தியாவினுடைய நலனுக்காகவும் அரும்பாடுபட்டு எல்லோருடைய அன்பையும், அரவணைப்பையும், எல்லோருடைய நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்ற வகையில் சிறந்த ஒரு தலைவராக திகழ்ந்தார்கள் என்பதை நாடு நன்கு அறியும். விடுதலை போராட்ட காலங்களில் அண்ணல் காந்தியடிகள் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் வழிநின்று, பண்டித ஜவர்ஹர்லால் அவர்களுடைய தோளோடு தோள் இணைந்து நின்று, பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டது மட்டுமல்லாமல் தேசியத்தை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டு வந்தவர்களிலே அவர்கள் மிகச் சிறந்து விளங்கினார்கள். ஆகவே அரசியல் உலகத்திலே தேசியத்தைப் பரப்புவதிலே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் எவ்வளவு சுறுசுறுப்போடும், விறுவிறுப்போடும், உறுதியோடும் பணியாற்றி வந்தார்களோ அந்த அளவிற்கு அவருக்கு ஒத்திருக்கிற நண்பராக விளங்கி, இரண்டற கலந்து நின்று பல்வேறு பணிகளிலே தன்னுடைய உறுதியான செயல்களை மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டிய பெருமை ஷேக் அப்துல்லா அவர்களுக்கு உண்டு.

நான் இரங்கல் தீர்மானத்திலே எடுத்துக்காட்டியதைப் போல அவர் ஸ்ரீநகருக்கு பக்கத்திலே ஒரு சிற்றூரிலே பிறந்து, பிறகு அங்கே கல்வி பயின்று வளர்ந்து பிறகு லாகூர் கல்லூரியிலே பட்டம் பெற்று, பிறகு எம்.எஸ்ஸி (கெமிஸ்ட்ரி) பட்டத்தை அலிகார் பல்கலைக்கழகத்திலே பெற்றிருக்கிறார்கள். அதற்குப் பிறகு சில நாட்கள் அல்லது சில திங்கள்தான் அவர்கள் ஆசிரியராகப் பணி புரிந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அரசியலால் ஈர்க்கப்பட்டு, அரசியலிலே தீவிரமாகப் பங்கு



கொள்ளத் தொடங்கினார்கள். அப்படி பங்குகொள்ளத் துவங்கிய காலத்திலேகூட, அவர்கள் முதலிலேயே காஷ்மீர் முஸ்லீம் கான்ஃபரன்ஸ் என்கின்ற காஷ்மீரிலுள்ள முஸ்லீம் மக்களால் உருவாக்கப்பட்ட அந்த அமைப்புக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே, முஸ்லிம் மக்கள் மட்டும்தான் அதிலே வந்து இணைகிறார்கள் என்று கண்டறிந்ததற்குப் பிறகு, காஷ்மீரிலே இருக்கிற இந்துக்களுடைய முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெற வேண்டுமென்ற நோக்கத்தினுடைய அடிப்படையில் காஷமீர் முஸ்லீம் நேஷனல் கான்ஃபரன்ஸ் என்ற ஒரு பொதுப் பெயரை அதற்கு இட்டு, அதிலே முஸ்லீம்களும் இந்துக்களும் சேர்ந்து பங்குகொண்டு, காஷ்மீருடைய நலத்திற்காகவும், இந்தியாவினுடைய நலத்திற்காகவும் பாடுபட வேண்டுமென்பதற்கான அரும்பெரும் முயற்சியை மேற்கொண்டு வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள்.

அதுமட்டுமல்லாமல், காஷ்மீருடைய நலன்கள் காக்கப் படுகின்ற அளவுக்குப் பல்வேறு நிலைகளிலே அவர்கள் உறுதியோடு நின்று போராடி வந்திருக்கிறார்கள் என்பதை நாடு நன்கு அறியும். பாகிஸ்தான் பிரிவினைக் கிளர்ச்சி ஏற்பட்ட பொழுதெல்லாம் ஷேக் அப்துல்லா அவர்கள் ஜின்னாவின் பக்கம் போகாமல், காங்கிரசின் பக்கம் நின்று, பண்டித நேருவின் பக்கம் நின்று, தன்னுடைய கருத்துக்களை உறுதியாக நிலை நாட்டி வந்திருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல், ஜம்மு—காஷ்மீர் என்றென்றும் இந்தியாவினுடைய ஒரு பகுதியாகவே இருந்து தீர வேண்டும் என்பதைத் தொடர்ந்து வாதாடி வந்திருக்கிறார்கள். அந்த வகையிலேதான் அவர்கள் மிகப் பெரும் தலைவராக விளங்கினார்கள் என்பது மட்டுமல்லாமல், பண்டித ஜவஹர்லால் நேரு, அபுல் கலாம் ஆசாத், சான் அப்துல் காபர்கான் ஆகிய பெரும் தலைவர்களிடம் நெருங்கியிருந்து, பல்வேறு கிளர்ச்சிகளிலும் பல்வேறு வகைகளிலும் அவர்கள் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள்.

காஷ்மீரைப் பொறுத்தவரையில் பிரச்னை எழுந்தபொழுது, காஷ்மீர் மகாராஜாவுக்குச் சொந்தம் என்று வாதாடிய காலத்திலே கூட, காஷ்மீர், மகாராஜாவுக்குச் சொந்தமாக இருக்க முடியாது, அது மக்களுக்குத்தான் சொந்தம் என்று போராடி, அதை நிலைநாட்டிய பெருமையும் ஷேக் அப்துல்லாவையே சேரும்.

1948-லே, ஜம்மு—காஷ்மீர் மக்களுடைய பெருவாரியான அன்பையும், அரவணைப்பையும் பெற்று, ஜம்மு—காஷ்மீருடைய பிரதமராக அவர் ஆனார். 1953 ஆம் ஆண்டு ஒரு சந்தேகத்தின் பெயரால், அவர் ஒரு கருத்தை வெளியிட்டதன் காரணமாக, அவர் அமெரிக்காவோடு பேச்சு வார்த்தை நடத்துகிறார், காஷ்மீரைத் தனியாகப் பிரிப்பதற்கு, என்ற ஒரு சந்தேகத்தின் பெயரால்—நான் அப்படி சொல்லவில்லை என்று அவர் வாதாடினாலும், அவர் கைது செய்து வைக்கப்பட்டதற்குப் பிறகும் 1975-லே காஷ்மீர் மக்களுடைய முழு ஆதரவையும்

பெற்று மாநிலப் பிரதமராக ஆனார். அவர் மறைகிற வரையிலும் காஷ்மீருடைய பிரதமராகவே இருந்து மறைந்தார். காஷ்மீர் மக்களுடைய முழு அன்பையும் எல்லா தரப்பினருடைய நம்பிக்கையையும் நன் மதிப்பையும் பெறுவதில் ஷேக் அப்துல்லா அவர்கள் சிறந்த வெற்றிபெற்று நின்றார்கள்.

உறுதிக்கு எடுத்துக் காட்டாகவும், அஞ்சாநெஞ்சத்திற்கு எடுத்துக் காட்டாகவும், தான் கொண்ட கொள்கைகளை நிலை நாட்டுவதிலே உறுதியுடன் பல செயல்களிலே ஈடுபட்டதன் காரணமாகவும்தான் அந்தக் காலத்திலேயே, 40, 45 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலேயே, நாட்டிலே இருக்கிற எல்லா தலைவர்களும், எல்லோரும், அவரைக் காஷ்மீரச் சிங்கம் என்று அழைப்பதிலே தனிப் பெருமைக் கொண்டார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய உள்ள உறுதியையும் அவர்கள் எடுத்துக் கொண்ட செயல்களிலே தயங்காமல், எந்த ஒரு செயலையும் விட்டுக் கொடுக்காத அளவுக்குத் தன்னுடைய கொள்கையை, கடைசி வரையில் நிலைநாட்டியதையும் நாம் பார்க்கிறோம்.

மாநில முதலமைச்சர்களுடைய மகாநாடு டெல்லியிலே நடைபெறுகின்ற பொழுதெல்லாம்கூட அவர் காஷ்மீருடைய நலன் கருதி, காஷ்மீர் மக்களுடைய உரிமைகள், காஷ்மீர் மக்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்களைத் துணிந்து எடுத்துச் சொல்வதில் எந்தக் காலத்திலும் அவர்கள் தயங்கியதே கிடையாது. ஆகவே, மாநில உரிமைகள் சிறப்பிக்கப் பெற வேண்டுமென்றும் மாநிலங்கள் சிறந்த நிலைமையில் அமைய வேண்டுமென்றும் கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றபொழுதெல்லாம், ஷேக் அப்துல்லா அவர்கள் மாநில முதலமைச்சர்கள் மகாநாடு டெல்லியிலே நடைபெறுகின்ற பொழுதும் சரி, வேறு பல கட்டங்களிலேயும் சரி, அந்தக் கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். ஆனால் அதே நிலையில், ஜம்மு காஷ்மீர் இந்தியாவினுடைய ஒரு பாகமாகத்தான் என்றென்றும் இருக்குமே தவிர அது இந்தியாவைவிட்டு ஒரு தனி நாடாக ஆகும் என்றோ, அல்லது வேறு பாகிஸ்தானுடன் சேரும் என்றோ, அதற்குச் சிறிதளவும், கடுகளவும் கூட இடம் கொடுக்காத அளவுக்குத் தன்னுடைய வாதங்களை எல்லாம் எடுத்து வைத்தார்கள். அப்படி மக்களுடைய அன்பைப் பெற்ற ஒரு மாபெரும் தலைவர் 77 ஆண்டு காலம் வாழ்ந்து அந்த ஜம்மு காஷ்மீர் மக்களுடைய அன்பை மட்டுமல்லாமல், இந்தியாவிலே வாழ்கின்ற அத்தனை பேருடைய அன்பையும் அரவணைப்பையும் பெற்று அவர்கள் மறைந்து விட்டார்கள் என்பது நமக்கெல்லாம் பெரும் வருத்தத்தையும் பெரும் துக்கத்தையும் துயரத்தையும் அளிக்கின்ற ஒன்றாக அமைந்திருக்கிறது. இந்தத் தீர்மானத்திலே குறிப்பிட்டிருக்கிறபடி தமிழகத்திலேயிருந்து சட்டமன்ற மேலவை பேரவை உறுப்பினர்கள் காஷ்மீருக்குப் போனபொழுதெல்லாம், அவர்களை அழைத்து வைத்து, 1/2 மணி நேரம், 3/4 மணி நேரம் உரையாடி, பல்வேறு பிரச்னைகளைப் பற்றியெல்லாம் பேசுகின்ற



ஒரு வழக்கம், ஷேக் அப்துல்லா அவர்களுக்குத் தொடர்ந்து இருந்து வந்ததை நண்பர்கள் எல்லாம் அங்கே பேசி விட்டு வந்ததற்குப் பிறகு எடுத்துச் சொல்வதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம்.

[முற்பகல் 9—10]

அந்த அளவிற்குத் தமிழகத்தினிடத்திலே ஒரு தனிப்பற்றும், பந்தமும், பாசமும் கொண்டு, நாம் கொண்டிருக்கின்ற கொள்கைகள் மற்றவைகளிடத்திலேயும் அவர்கள் சிறந்த பற்று வைத்துக் கருத்துக்களைப் பரிமாறி வந்திருக்கிறார்கள்.

அவர்கள் சிறையில் வைக்கப்பட்ட காலத்திலேகூட உதகமண்டலத்திலே சில காலமும், பிறகு கொடைக்கானலிலே உள்ள கோஹினூர் மாளிகையிலே சில ஆண்டுக் காலமும் சிறை வைக்கப்பட்டிருந்தார்.

அந்த வகையிலே தமிழகத்திலே இருக்கின்ற பலபேருடைய நலனையும், தமிகத்தினுடைய சூழ்நிலை, பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றையெல்லாம் நன்றாக அறிந்து கொள்ளுகின்ற வாய்ப்புகூட அவர்களுக்கு ஏற்பட்டது.

அப்படித் தமிழகத்தோடு ஒரு தொடர்பு கொண்டிருந்த ஒரு மாபெரும் தலைவர், இந்திய மக்களுடைய அன்பைப் பெற்ற ஒரு மாபெரும் தலைவர் ஆதரவைப் பெற்ற ஒருவர், காஷ்மீர் மக்களினுடைய ஒரு எடுத்துக்காட்டாகவும், ஒரு வழிகாட்டியாகவும், ஒரு முன்னோடியாகவும் விளங்கிய ஒரு மாபெரும் தலைவர் இறந்துபட்டது, மறைந்தது நமக்கெல்லாம் ஆழ்ந்த இரக்கத்தை அளிக்கிறது. அந்த வகையிலே அன்னாருடைய குடும்பத்தினருக்கு நம்முடைய இரங்கலைத் தெரிவிக்கின்ற முறையில் இந்தத் தீர்மானத்தை நான் வலியுறுத்தி முன்மொழிகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஷேக் அப்துல்லாவை மறந்துவிட்டு காஷ்மீரத்தை நினைக்க முடியாது. அத்தகைய புகழ் மிக்க ஒளி முத்து ஒன்றினை காஷ்மீரத்து மக்கள் மாத்திரம் அல்ல, இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் இன்றையதினம் இழந்து விட்டுத் ஆறாத் துயரில் ஆழ்ந்து இருக்கின்றார்கள். அன்னாருடைய மறைவு குறித்து அவையின் முன்னவரவர்கள் முன்மொழிந்துள்ள இரங்கல் தீர்மானத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வழிமொழிந்து சில கருத்துக்களை எடுத்துக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

விஞ்ஞான ஆசிரியராகத் தொழிலைத் தொடங்கி, பிறகு பொது வாழ்விலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, தேசீய மாநாடு என்கின்ற பெயரால் இஸ்லாமியர்களும், இஸ்லாமியர் அல்லாதவர்களும் இணைந்து விடுதலைப் போராட்டத்திலே ஈடுபடுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி, ஆதிக்க வெறிபிடித்த சமஸ்தான மன்னரை காஷ்மீரத்தை விட்டு வெளியேறு என்று கர்ஜித்து, அதன் விளைவாக ஒன்பதாண்டுக் காலம் சிறைவாசம் என்ற தண்டனையைப் பெற்று, அதற்குப்பிறகு பண்டித

ஜவஹர்லால் நேரு, உத்தமர் காந்தியடிகள் இவர்களுடைய அன்புக்குரிய தோழமையையும், அவர்களுடைய நல்வாழ்த்துக்களையும் பெற்று, காஷ்மீரத்தில் போர்க்களம் கண்டு, பல வெற்றிகளை ஈட்டியவர் ஷேக் அப்துல்லா அவர்கள் ஆவார்கள்.

அவை முன்னவரவர்கள் எடுத்துச் சொன்னதை போல், அவரைக் காஷ்மீரத்து சிங்கம் என்று அரசியல்வாதிகள் அனைவரும் அழைப்பார்கள். சில நேரங்களில் அவருடைய கொள்கைகள் அல்லது கருத்துக்கள் இவைகளில் மாறுபடுகின்ற ஏடுகளிலேகூட அவரைக் குறித்து கேலிச்சித்திரம் வரைகிற நேரத்தில் அவரை ஒரு சிங்கம்போல உருவகப்படுத்தித்தான் கேலிச்சித்திரம் வரைந்தார்கள் என்றால் அவருடைய அற்புதமான பெருமைக்கு இதைத்தவிர வேறு எடுத்துக்காட்டு என்னால் கூற இயலாது.

1953-ஆம் ஆண்டு அவர் மீது ஒரு சதி வழக்கு போடப்பட்டு அந்தச் சதி வழக்கிலே 11 ஆண்டுக் காலம் அவர் சிறையிலே வைக்கப்பட்டு, 1964-ஆம் ஆண்டு விடுபட்டார், விடுபட்டவர் சவூதி அரேபியா, மக்கா போன்ற இடங்களுக்குச் சென்று, அப்படிச் சென்ற நேரத்திலே எடுத்துரைத்த கருத்துக்களின் அடிப்படையில் அவர் மீது அத்தகைய வழக்கு போடப்பட்டது என்றாலும்கூட, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களை அவர் விடுபட்ட பிறகு சந்திக்கின்ற ஒரு வாய்ப்பு ஏற்பட்டு, ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாகும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் 1965—ஆம் ஆண்டு மீண்டும் அவர் கைது செய்யப்பட்டார்.

ஏறத்தாழ, அவருடைய வாழ்க்கையில் 77 ஆண்டுக் காலம் வாழ்ந்தார் என்றால் அதிலே 15 ஆண்டுக் காலம் மக்களிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டு, அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு, அவைகளையெல்லாம் மக்களுக்காக, தான் கொண்ட கொள்கைக்காகத் தாங்கிக் கொண்டார் என்பதுதான் அவருடைய வாழ்க்கையின் சிறப்பான அம்சமாகும்.

1965—ஆம் ஆண்டிலே அவர் நாடு கடத்தப்பட்டதைப் போல அல்ல என்று சொல்ல முடியாவிட்டாலும் வீட்டுச் சிறை என்கின்ற பெயரால் காஷ்மீரத்து மக்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, தமிழகத்திலே அவர் வீட்டுச் சிறை வைக்கப்பட்டார்.

உதகமண்டலத்திலேயும், கொடைக்கானலிலும் அவர் சிறை வைக்கப்பட்டிருந்தார். அவர் சிறை மீண்டு, மீண்டும் பிரதமர் அவர்களே அவர்களை அழைத்து காஷ்மீரத்தினுடைய பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகின்ற அளவிற்கு, தன்னுடைய வலிமையை வளர்த்துக்கொண்ட கால கட்டம் 1975 என்பதை அனைவரும் அறிவார்கள். அந்த நேரத்தில் அவர் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு சென்னைக்கு வந்தார்கள். என்னைச் சந்திக்கவேண்டும் என்ற நோக்கத்தினுடனேயே வந்தார்கள். என்னுடைய இல்லத்திலே அவர் வந்து ஒரு மணி நேரத்திற்கு மேலாக உரையாடியதை, அவைத் தலைவர் அவர்களே உங்களுக்கு



நன்றாகத் தெரியும். அந்த நேரத்திலே கூட அவர் கொண்ட கொள்கையைபற்றி எவ்வளவு உறுதியாக இருந்தார் என்பதை நான் அப்போது ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அனைவரிடத்திலேயும் எடுத்துக்கூறி இருக்கிறேன். அவருடைய மனதிலே என்றென்றும் மறையாது இருந்த கொள்கை மாநில சுயாட்சி தத்துவமாகும். அவர் பொறுப்பை ஏற்கின்ற நேரத்தில் அந்தத் தத்துவத்தை மறந்துவிடவில்லை, என்பதை என்னிடத்திலே உறுதியாக எடுத்துச் சொல்வதற்காக அந்தப் பயணத்தை அவர் பயன்படுத்திக் கொண்டார் என்கிறபோது, அவருடைய உயரத்தையும் என்னுடைய உயரத்தையும் நான் கணக்கிட்டுப் பார்க்கின்றேன்.

இமயம் ஒரு சாதாரண பள்ளத்தாக்கினிடத்திலே வந்து தன்னுடைய உறுதியை என்றைக்கும் நிலைநாட்டுவேன் என்று எடுத்துக் கூறுகின்ற அளவுக்கு கொள்கைப் பிடிப்பு உடையவராக இருந்ததைத்தான் அந்த நிகழ்ச்சி இன்னும் என்னுடைய உள்ளத்திலே பசுமையாக நினைப்பூட்டிக் கொண்டிருக்கிறது, அத்தகைய பெரியவர், அத்தகைய மேதை, அத்தகைய மாவீரர் மறைந்துவிட்டார்.

அவர் சிறை வைக்கப்பட்டிருந்த இடங்கள் தமிழகத்திலே உதகமண்டலம், கொடைக்கானலிலே கோகினூர் மாளிகை. நான் தமிழக அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன், மறைந்த அந்த மாவீரன் நினைவாக, கொடைக்கானலிலே உள்ள கோகினூர் மாளிகையின் பெயரை 'கோகினூர் ஷேக் அப்துல்லா மாளிகை' என்று மாற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோகினூரும் இருக்கட்டும். ஷேக் அப்துல்லா மாளிகையும் இருக்கட்டும். ஏனென்றால் அவரே ஒரு கோகினூர் வைரம்தான் எனவே, 'கோகினூர் ஷேக் அப்துல்லா மாளிகை' என்று அவர் சிறை வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு பெயர் சூட்ட வேண்டும் என்று, நான் தமிழக அரசை, குறிப்பாக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, வாழ்க காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக் அப்துல்லாவின் புகழ் என்று கூறி அமைகின்றேன்,

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த தேசியவாதியாகவும், சுதந்திரப் போராட்ட வீரராகவும் இந்த நாட்டிலே வாழ்ந்த மூத்தத் தலைவர்களுள் ஒருவராக நாம் மதிக்கத்தக்க ஷேக் அப்துல்லா அவர்கள் இன்றைய தினம் நம்மோடு இல்லை. இந்த நாட்டினுடைய நெடிய வரலாற்றிலே, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற நல்ல நெறிய பண்புகளுக்காக வாழ்ந்து மறைந்த தலைவர் அவர். நாட்டு மக்களாலே காஷ்மீரச் சிங்கம் என்று மெத்தப் பெருமிதத்தோடு அழைக்கப்பட்ட அவர், இந்த திருநாட்டினுடைய பல்வேறு காலகட்டங்களில், இந்த நாட்டு விடுதலைக்காக, முன்னேற்றத்திற்காக ஏறத்தாழ அரை நூற்றாண்டுகாலம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் என்பதை நாம் இந்த நேரத்தில் பெருமிதத்தோடு நினைத்துக் கொள்கிறோம்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 செப்டம்பர் 9

1947–ஆம் ஆண்டு நாடு துண்டாடப்பட்ட நேரத்தில் மிகப் பெரும்பான்மையான சமுதாயத்தினர் இருக்கின்ற அந்த அழகான சோலையை அந்த காஷ்மீரத்தினை இந்தியத் திருநாட்டோடு இருக்கவேண்டும் என்ற உறுதியினை அவர் கொண்டு இந்த நாட்டு மக்களுடைய எண்ணத்திலே என்றென்றும் நிலைத்து நிற்கின்றவராக அவர்கள் இருந்தார்கள்.

சாதாரண ஆசிரியராகப் பணியினைத் துவங்கி, பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு, அந்தப் பல்வேறு பொறுப்பு களுக்கு பெருமை சேர்த்துத் தந்தவர் ஷேக் அப்துல்லா அவர்கள். அவர்கள் பதவியிலே இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவருடைய குரலுக்கு என்றைக்குமே காஷ்மீரத்து மக்கள் செவி சாய்க்கத் தவறியதில்லை. சிறந்த எழுத்தாளராக, மிகச் சிறந்த பேச்சாளராக அவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல. தேசபிதா காந்தியடிகளோடு, எல்லைக் காந்தி கான் அப்துல்லா கபார்கான் அவர்களோடு, ஆசியஜோதி பண்டித ஜவகர்லால் நேரு பெரு மகனார் அவர்களோடு, அபுல் கலாம் ஆசாத் அவர்களோடு நட்புறவு கொண்டவர்கள் அவர்கள். மத்திய அரசாங்கத்தோடு அவருக்கு ஒரு சில காலகட்டத்திலே கருத்து வேறுபாடுகள் இருந்த நேரத்திலும் அவர் இந்த நாட்டினுடைய ஒருமை பாட்டைக் கருத்திலே கொண்டு செயல்பட்டார் என்பதை நாம் இந்த நேரத்திலே நன்றியோடு நினைத்துக் கொள்கிறோம். மறைந்த தலைவர் ஷேக் அப்துல்லா அவர்கள் ஒற்றுமைக்கும், மதசார்பின்மைக்கும் சான்றாகத் திகழ்ந்தார் என்று சொல்லு வதிலே பெருமை அடைகின்றோம்.

(முற்பகல் 9-20)

ஆசியஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் மறைந்த நேரத்திலே, இடுகாட்டிலே அவருடைய சிதைக்கு தீ வைக்கப் பட்ட நேரத்திலே, தீ வைத்ததற்குப் பின்னாலே எல்லத் தலைவர்களும் சென்றதற்குப் பின்னாலே கூட, அந்த சிதையைப் பார்த்து அவர் நெக்குருகி, கண்கலங்கி நின்ற காட்சியை இன்றைக்கு நினைத்துப் பார்க்கின்ற நேரத்திலே நம்முடைய தேசியந் தலைவர்களோடு எந்த அளவுக்கு அவர் நெருக்கமாக இருந்திருக்கிறார்கள் என்பது நமக்கு நினைவுக்கு வருகிறது.

மறைந்தத் தலைவருடையப் பிரிவாலே வாடுகின்ற அவரது இனிய துணைவியாருக்கும், இன்றைய பிரதமர் பரூக் அப்துல்லா அவர்களுக்கும் அவருடைய குடும்பத்திற்கும், காஷ்மீரத்து மக்களுக்கும், ஏனைய பெருமக்களுக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, எந்த மத சார்பின்மைக்கும், ஒருமைப் பாட்டிற்கும், ஒற்றுமைக்கும் அவர்கள் வாழ்ந்தார்களோ, அந்த நல்ல பண்புகளை நாம் பின்பற்றுவதே மறைந்த அந்த தேசியத் தலைவருக்கு நாம் செலுத்துகின்ற மிகச் சிறந்த அஞ்சலி என்று கூறி அமைகிறேன்.



1982 செப்டம்பர் 9]

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா அவர்களின் மறைவுக்கு மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக அஞ்சலி செலுத்துகிறேன். அப்படி செலுத்துகிறபோது, அவை முன்னவர் அவர்கள் கூறியிருக்கக்கூடிய அந்தக் கருத்துக்களுடனும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கக்கூடிய கருத்துக்களுடனும் நாங்களும் எங்களுடைய கருத்துக்களை இணைத்துக் கொள் கிறோம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். One of the greatest patriots and the nationalist என்ற கம்பீரமான ஒரு தேசபக்தர். ஒரு தேசியவாதி என்று சொன்னால் அது மிகையாகாது என்று நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். பல்வேறு கட்டங் களிலும் அவர் இல்லாமல் நிலைமையைக் காப்பாற்ற முடியாத நிலைமைதான் நிச்சயமாக நம்முடைய நாட்டுக்கு இருந்திருக்க முடியும், என்பது சரித்திரம் சுட்டிக்காட்டியிருக்கிறது. பிரதமர் நேருவும் இதை உணர வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதை நாம் இதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

சமஸ்தான மன்னர் ஆட்சி நடந்துகொண்டிருந்தபோது அந்த மன்னர் ஆட்சியை ஒழித்து, அந்த ஜனங்களை விடுதலை செய்ய வேண்டியிருக்கிறது என்றபோது. அங்கே இருக்கின்ற இந்துக்களும், முஸ்லீம்களுக்கும் வேற்றுமையை உண்டாக்கிப் பிரிப்பதற்கான முயற்சிகளை அந்த மன்னர் அன்றைக்கு மேற்கொண்டது நமக்குத் தெரியும். இந்துக்கள் ஜம்மு பகுதியிலே அதிகம். முஸ்லீம்கள் வேலிப் பகுதியிலே அதிகம். இரு பகுதியினரையும் பிளவு படுத்தாமல், ஒன்றுபடுத்துவதற்காக அவர் முஸ்லீமாக இருந்தும் கூட அவரால் சாதிக்க முடிந்தது, அவராலே முடிந்ததே தவிர, வேறு யாராலும் அது முடிந்திருக்க முடியாது. ஏன் என்றால், மன்னரால் பிரைம் மினிஸ்டராக வைக்கப்பட்டவரும் இந்து, அந்தப் பகுதியிலே இந்து மக்கள் அதிகம். ஆகவே அவருடைய போராட்டத்தினுடைய அந்தக் கேந்திரமான, அந்தப் பணியை, அந்த விடுதலைக்கு, அந்த வெற்றிக்கு ஒரு அடிக்கல்லாக அவருடைய ஒற்றுமை உணர்வு இருந்தது என்பதை நம்மால் மறக்க முடியாது.

அதேமாதிரி காஷ்மீர் விடுதலை செய்யப்பட்ட உடனே இந்தியாவோடு இணைப்பு என்கிறபோதும் ஒரு கேந்திரமாக ஒரு திரும்புமுனை வந்த கட்டம். இந்தியாவோடு இணைவதா அல்லது பாகிஸ்தானோடு இணைவதா என்று ஒரு நிலைமை. பாகிஸ்தான் முஸ்லீம் மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய நாடு. கிட்ட இருக்கக்கூடிய வேலியில் முஸ்லீம்கள் அதிகமாக இருக்கக் கூடிய பகுதி. ஆகவே அந்தப் பகுதி பாகிஸ்தானோடு சேர வேண்டும் என்று நிலைமைகள் உருவானபோது, ஸ்திரமாக அதை எதிர்த்து, உறுதியாக எதிர்த்து, காஷ்மீர் இந்திய நாட்டோடு பிரிக்கமுடியாத அளவுக்கு இணையவேண்டுமென்ற முறையிலே ஒரு முடிவுக்குக் கொண்டு வந்ததிலெ பெரும் பங்கு அவருக்கு உண்டு. அந்த முடிவை உடைப்பதற்காக பாகிஸ்தான் படை எடுத்தபோதும் இன்னொரு கிரிட்டிகல் பொசிஷன் அதிலேயிருந்து

காஷ்மீர் மக்களைக் காப்பாற்ற, நாட்டை காப்பாற்றி பாதுகாக்க வேண்டுமென்று சொன்னால், ஆயுதங்களாலே மட்டும் முடியாது என்பது நமக்குத் தெரியும். அந்த மக்களுடைய ஒத்துழைப்பு இல்லை என்றால் எவ்வளவு பெரிய ஆயுதங்கள் இருந்தாலும் பாதுகாக்க முடியாது. அந்த மக்களை திரட்டுவதிலே, பிகைன்ட் தி ஆர்மி ராணுவத்திற்குப் பின்னால், அதிலே அவர் பெரும் பங்கு செய்யவில்லை என்று சொன்னால் பிரதமர் நேரு நினைத்தாலும் அன்றைக்கு அந்த மக்களை திரட்ட முடியாது. அவர் நினைத்ததால்தான் அந்த மக்களை திரட்ட முடிந்தது. அந்த நேரத்திலே, அந்த நிலைமையைப் பயன்படுத்தி, மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் அந்தச் சரித்திரம் தெரியும். ஐ.நா.விலே அந்த நேரத்திலே ஏகாதிபத்திய சக்திகள் இதைத் துண்டாட வேண்டும், இந்தியாவிலேயிருந்து பிரிக்க வேண்டும் என்ற பெரிய முயற்சிகள் எல்லாம் நடந்தது. சீரியசான, ஆபத்தான அபாயகரமான முயற்சிகள் அது. அந்த முயற்சியிலே, இவர் காஷ்மீரத்தினுடைய தலைவர் என்ற முறையிலே உறுதியாக நின்று, இந்தப் பக்கம்தான் என்று டெசிஷன் எடுத்தது. ஐ.நா.விலேயுள்ள ஏகாதிபத்தியவாதிகளுடைய அந்த சீரியசான அபாயகரமான அந்த முயற்சிகள் முறியடித்ததிலே இவருடைய பங்கு பெரும் பங்காக இருந்திருக்கிறது.

அதேமாதிரி, நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய மாநிலங்களுடைய மிக முக்கியமான பிரச்சினை, சுயாட்சி வேண்டும் அல்லது அதிக அதிகாரம் வேண்டும் என்ற பிரதானமான, கேந்திரமான நாட்டினுடைய வளர்ச்சிக்கு ஒரு ஆதாரமாக இருக்கக்கூடிய பிரச்சினையிலும் அவருடைய பங்கு பெரும் பங்காக இருந்திருக்கிறது.

அந்த மக்களை மதசார்பற்ற முறையில்—செகுலரிசம் என்று நாம் ஆங்கிலத்தில் சொல்கிறோமோ—மதசார்பற்ற உணர்விலே வளர்த்துக்கொண்டு வந்து இருந்தார். அது பெருத்த அளவிலே எல்லா விஷயங்களிலும் உதவிகரமாக இருந்து வந்து இருக்கிறது. அந்த வகையில் அந்த மக்கள் மனதிலே செகுலர் உணர்வை ஏற்படுத்தியதில் பெரும் பங்கு அவருக்குத்தான் உண்டு. அந்த உணர்வின் அடிப்படையிலேதான் 'ஜம்மு' அன்ட் 'காஷ்மீர்' என்ற இரண்டு பகுதிகளையும் இணைத்து, ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம்' என்று ஒரே பகுதியாக அமைத்து இருக்கிறார்கள். அந்த உணர்வு ஏற்படுத்தப்படவில்லை என்று சொன்னால், அந்த இரண்டு பகுதிகளும் பிரிந்து போய் இருக்கும். அந்த பிரிவு ஏற்படாமல், அந்த நாட்டின் யூனிட்டியையும், அந்த ஸ்டேட்டின் யூனிட்டியையும் மெயின்டெயின் செய்வதற்கு அவர் ஆற்றிய பணி பாராட்டுதற்குரியதாகும்.

ஆனால், 1953 ல் ஏற்பட்டு விட்ட ஒரு சம்பவம் துர்பாக்கியமானதாகும். அந்த 1953 ல் ஏற்பட்ட துர்பாக்கியமான சம்பவத்திற்குப் பிறகு, பலரை அந்த மாநிலத்திற்கு பிரதமராக ஆக்கியிருக்கிறார்கள். ஆனால், அவர்களால் அந்த மாநிலத்திற்கு ஸ்டெபிளிடி கொடுக்க முடியவில்லை. ஷேக் அப்துல்லா இல்லாமல் யார் பிரதமராக வந்தாலும் அந்த ஸ்டெபிளிடியைக் கொடுக்க முடியாது என்ற காரணத்தால், ஒரு அன்—ஸ்டெபிளிடி



அங்கே ஏற்பட்டு விடக்கூடும் என்ற நிலைமையேற்பட்டதால், பின்னர் நேரு அவர்களே ஷேக் அப்துல்லா அவர்களை மீண்டும் அழைத்து பிரதமராக இருக்கச்சொன்னார். அவரும் அந்த உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து, தன்னுடைய நிலைகளையும் சற்று வளைத்துக் கொண்டு, மீண்டும் பிரதமராக வந்து ஒரு ஸ்டெபிளிடி கொடுத்தார்கள்.

இவ்வளவு சாதனைகளையும் அவர்கள் செய்வதற்கு ஒரு 15 ஆண்டு காலம் அவர் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டி வந்தது. அவருடைய மறைவு உண்மையிலேயே காஷ்மீர் மக்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டினுடைய ஒற்றுமைக்கும், ஸ்டெபிளிடிக்கும் அவர் நடத்திய போராட்டம், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கவேண்டும் என்பதற்காக அவர் நடத்திய போராட்டம் ஆகியவற்றிற்கெல்லாம் மிகப்பெருத்த நஷ்டம். ஆகவே, நான் அனைவரையும் ஒன்று சேர்ந்து அதற்காகப் பாடுபடவேண்டியது மிக முக்கியமானது என்று சொல்லி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அவருடைய இழப்பால் வருந்தும் குடும்பத்தாருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்து, மறைந்த ஷேக் அப்துல்லா அவர்களுக்கு அஞ்சலியைச் செலுத்தி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சோ அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, காஷ்மீர் சிங்கம் என்று பெயர் பெற்ற திரு. ஷேக் அப்துல்லா அவர்கள் மறைவு குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்ட இரங்கல் தீர்மானத்தோடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்,

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதை போல, திரு ஷேக் அப்துல்லா அவர்கள் சிறந்த தேசபக்தியோடு இருந்தது மட்டுமல்லாமல், அந்த சமஸ்தான மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் பக்கபலமாக நின்று தொடர்ந்து போராடி, அவர் ஒரு முஸ்லீம் என்ற முறையில் இருந்தாலும், பெரும்பாலான இந்து மக்களின் நல்லெண்ணத்தையும், அபிமானத்தையும் பெற்று, ஒரு மாபெரும் தலைவராக அவர் திகழ்ந்தார். இன்றைக்கு இந்தியாவிலே இணைந்துள்ள அந்த ஜம்மு மற்றும் காஷ்மீர் மநிலத்தை, இந்துக்கள் நிறைந்த பகுதியை இந்து ராஜ்யம் என்றும், முஸ்லீம்கள் நிறைந்த பகுதியை முஸ்லீம்கள் ராஜ்யம் என்று ஆக்கவேண்டும் என்று முயற்சி செய்யப்பட்ட நேரத்தில், அவர் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சியின் காரணமாகவும், கொள்கையின் அடிப்படையிலும், அவைகள் ஒற்றுமையாக ஆக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், இந்தியாவின் பாதுகாப்புக்குக் கேந்திரப் பகுதியாக விளங்கும் காஷமீர் இந்தியாவின் பிரிக்கமுடியாத ஒரு பகுதி என்பதை அவர்கள் உறுதியோடு நிலைநாட்டினார்கள். அதற்காக அவர்கள் தொடர்ந்து பாடுபட்டு வந்தார்கள். அந்த உறுதி நிலைத்து இருக்க வேண்டும் என்று சொன்னால் அங்குள்ள மக்களுக்கு

உறுதியாக இருந்தார்கள். அதன் காரணமாக சில நேரங்களில் அவர் பிரதம அமைச்சரோடு அபிப்பிராயபேதங்களில் ஈடுபட நேரிட்டது என்பதையும் நாம் அறிவோம்.

அதுமட்டுமல்லாமல், அவ்ருடைய பதவிக்காலத்தில் முதன் முதலாக காஷ்மீரிலே ஒரு சிறந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த வகையில் அவர் பல நல்ல முற்போக்கான காரியங்களை செய்து இருக்கிறார்கள். இன்றைக்கு அந்தப் பகுதியில் நிலவும் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு அவர்கள் அதிக அளவில் பாடுபட்டு இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட வகையில் விளங்கிவந்த திரு. ஷேக் அப்துல்லா அவர்களுடைய மறைவு காஷ்மீர் மக்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஒரு ஈடுசெய்ய முடியாத ஒரு மாபெரும் நஷ்டமாகும். அவருடைய மறைவால் துயருறும் அவருடைய குடும்பத்தாருக்கும், காஷ்மீர் மக்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை, அனைவரின் இரங்கலோடு இணைந்து, நானும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.30)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்கள் காஷ்மீரத்துச் சிங்கம் எனப் புகழ்பெற்ற ஷேக் அப்துல்லா அவர்களுடைய மறைவுக்கு தமது எண்ணத்தை அரசின் சார்பிலே வெளியிட்டதோடு காந்திகாமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய எண்ணத்தையும் இணைத்து, அந்த உணர்வோடு பங்குகொள்கிறோம் என்று சொல்லி, சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

சிங்கம் எனப் பெயர் பெற்ற அந்த பெருமனிதன் நம்மிடம் இன்று இல்லை என்று சொன்னாலும் தன்னலமற்ற ஒரு உழைப்பின் காரணத்தாலே அவர் எப்படி உயர்ந்தார்; இன்று புகழிலே நிரந்தரமான ஒரு இடத்தைப் பெற்றிருக்கிறார் என்பதனை உலகம் அறிந்துகொள்ளுகின்ற வகையிலே அவருடைய வாழ்க்கை அமைந்திருக்கிறது.

மாணவர்களை மட்டுமே பார்க்கின்ற ஆசிரியர் பொறுப்பிலே இருந்த அவர் மக்களையும் கவனிக்கின்ற ஆளுகின்ற பொறுப்பிலே அவர் உயர்வதற்கு இடையிலே கடந்துவந்த தடைகள் ஏராளம் என்பதனையும் அதிலே குன்றென கொள்கையிலே அவர் நிமிர்ந்து நின்றார். அசையாமல் நின்றார் என்பதையும் எண்ணிப் பார்க்கிறோம்.

அண்ணல் காந்தி மகான் 1947 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ந்தேதி ஒரு தொழுகைக் கூட்டத்திலே சொன்னதைப் போலே காஷ்மீரிலே இந்துக்களும் முஸ்லீம்களும் இணைத்து செயல்படுகிற ஒரு அற்புத மனிதராக ஷேக் அப்துல்லா இருக்கிறார். அவரைப் பின்பற்றி, அந்த மாநிலத்தைப் பின்பற்றி உலகெலாம் ஒற்றுமை வழியிலே செல்ல வேண்டுமென்று கூறுகின்ற அளவுக்கு அவர் ஒரு



எடுத்துக்காட்டாக இருந்தார், நல்ல கருத்துக்களை மற்றவர்கள் சொல்லுகின்ற போது விரிவுக்காக அனைவரையும் அணைத்துச் செல்வதற்காக சிலவற்றை ஏற்றுக்கொள்வது நல்லது என்பதனை நிரூபித்துக் காட்டியவர் ஷேக் அப்துல்லா அவர்கள்.

முஸ்லீம் மாநாட்டுக் கட்சி என்று பெயர் வைத்திருந்த அப்பொழுதே நல்ல உணர்வுகளுக்கு ஆள்பட்டிருந்த பண்டித நேரு அவர்கள் கூறியதற்கு இசைந்து, நான் தேசிய மாநாட்டுக் கட்சி என்று இந்துக்களும் முஸ்லீம்கள் அல்லாத பிறரும் வந்து சேருவதற்கு வாய்ப்பாக அமைத்துக்கொண்டேன் என்று அவரே சொன்னால், நல்ல கருத்துக்கள் எங்கிருந்து வந்தாலும் ஏற்றுக் கொண்டார், எடுத்துக்கொண்டார் என்பதற்கு ஒரு சான்றாக அவர் அமைந்திருக்கின்றார்.

அதனால்தான் மகாத்மா காந்தியடிகள் சொல்லுகின்ற போது கூட முற்றிலும் குழப்பமான இருள் நிறைந்த சூழ்நிலையிலே இருக்கின்றபோது காஷ்மீரம் மட்டுமே எனக்கு நம்பிக்கை ஒளிக்கீற்றாக இருக்கிறது; அதற்குக் காரணமாக அமைந்திருப்பவர் ஷேக் அப்துல்லா என்று சொன்னார்கள்.

அந்த கோகினூர் மாளிகையிலே அவர் அடைத்து வைக்கப் பட்டாலும் கூட கதவு திறக்கப்பட்டாலும் திறக்கப்படா விட்டாலும் அந்த ஒளிக்கீற்று வெளியே வந்துகொண்டிருந்தது. அவர் சாதாரண மாணிக்கமாக அல்ல; மனிதருள் மாணிக்கமாக இருந்த காரணத்தினாலே அடைக்கப்பட்ட கதவுக்கு உள்ளேகூட கருத்து ஒளி வீசுகின்றது அந்த மாணிக்கச்சுடர்.

அந்த வகையிலே பார்க்கின்றபோது இன்று நாம் இழந்திருப்பது ஒரு சாதாரண மனிதரல்ல; ஒரு நல்ல நம்பிக்கை நட்சத்திரத்தை இந்திய தேசம் இழந்திருக்கிறது. 27-வது வயதிலேயே சிங்கம் எனப் பெயர் பெற்றிருக்கிறார்கள் அரிமா எனப் பெயர் பெற்றிருக்கிறார்கள். பதவி இல்லாமல் இருக்கின்றபோதே இந்தப் பெயர் பெறுகின்றார் என்றால் அதை உழைப்பு ஒன்றுதான் கொடுக்க முடியும், உன்னத தியாகம் ஒன்று தான் கொடுக்க முடியும்.

அவர் சிங்கம், அரிமா என்று பெயர் பெற்றது மட்டுமல்ல, அவர் நடந்துகொண்ட விதத்திலே அவரை எதிர்த்தவர்கள் எல்லாம் ஆடுகளைப்போல அஞ்சி ஓடுகின்ற நிலைதான் இருந்தது. அப்படி அஞ்சி ஓடுகின்ற மக்களை அவர்கள் ஆடுகள் கூட்டம் என்றே சொல்லுகின்ற நிலை ஏற்பட்டது, ஆக, அவர்களுடைய தலைமையில் இருந்ததை அரிமா கூட்டம் என்றும் அவர்களை எதிர்த்தவர்களை ஆடுகள் கூட்டம் என்றும் சொல்லுகின்ற அளவுக்கு ஆளுகின்றவர்களை கூட அவர்கள் அஞ்சச் செய்தார்கள்.

1942-லே மகாத்மா காந்தியடிகள் இந்திய தேசிய காங்கிரசில் இருந்து "வெள்ளையனே வெளியேறு" என்று குரல் கொடுத்தபோது இந்தியாவின் ஒரு பகுதியாக இன்றைக்கு இருக்கின்ற காஷ்மீரத்தில் அரசாங்கம் நடத்திக்கொண்டிருந்த மகாராஜாவைப் பார்த்து "மன்னனே! நீ மண்ணை விட்டு

வெளியேறு'' என்று மாபெரும் குரல் கொடுத்த மாமனிதன் ஷேக் அப்துல்லா. அந்த வகையிலே 1942-லே வெளியேற மறுத்த அரசர் 1947-லே பாகிஸ்தான் படையெடுத்தபோது உயிருக்கு அஞ்சி ஓடியவுடனே மக்களை எல்லாம் ஒன்றுபடுத்தி, அதையே ஒரு முக்கியமான நாடாக மட்டுமல்ல முக்கியமான ஒரு இந்திய பகுதியாக மட்டுமல்ல' உலகத்திலுள்ள எல்லோருடைய பார்வையும் படுகிற அளவுக்கு செழிப்பு மிக்க பூமியாக மாற்ற திட்டங்கள் தந்த உத்தமர் அவர்.

அது மட்டுமல்ல, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதிலே அசையாமல் இருந்து, அதனால் அடைந்த அத்தனை சிறைக் கொடுமைகளும் அவருடைய சிந்தையைச் சிதைக்க முடியவில்லை, அசைக்க முடியவில்லை. 1975-ல் இன்றைய பிரதமர் அவர்களை அழைத்துப் பேசுகின்றபோது அங்கு இருக்கிற அவையிலே பெரும்பான்மை காங்கிரசாக இருந்தாலும் கூட நீங்களே அதை வழிநடத்தும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னதிலிருந்து ஒரு தனி மனிதன் கொள்கைப் பிடிப்போடு என்றென்றும் நின்றுகொண்டிருந்தால் பெரும்பான்மை என்பதிலே கூட அவனுடைய தனிச் சிறப்புக்கு உரிய இடம் கிடைக்கத்தான் செய்யும் என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கிறது. எல்லோரும் கொள்கை வழி நடந்தால் குன்றா புகழ் எய்தலாம் என்பதிலே உலக மக்களுக்கு எடுத்துக் காட்டாக இருந்த ஷேக் அப்துல்லா இன்று மறைந்திருக்கிறார், ஆனால் அவருடைய புகழ் மறையவில்லை, நமது நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிறது. அவர் மற்றவர்கள் பின்பற்றும் நல்ல குணங்களைக் கொண்டிருந்த காரணத்தாலே அந்த உத்தமரை என்றென்றும் நினைத்து, எங்களுடைய எண்ணங்களை, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய எண்ணங்களை அவை முன்னவர் அவர்களுடைய எண்ணங்களுடனும் இங்கே இதற்கு முன்னாலே பேசிய எதிர்க்கட்சித் தலைவர்களுடைய கருத்துடனும் இணைத்துக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தோடு இணைந்து நின்ற ஒரு மகத்தான தலைவர் இன்றைக்கு மறைந்திருக்கிறார்கள். 50 ஆண்டு காலத்திற்கு மேலாக இந்திய அரசியலிலேயும், காஷ்மீர மக்களின் அரசியலிலேயும் இணையற்ற மனிதராக விளங்கிய ஒரு மாபெரும் தலைவர் மறைந்திருக்கிறார். தேசத்தின் தந்தை மகாத்மா காந்தியடிகளோடும் மனிதருள் மாணிக்கம் நேருஜி அவர்களோடும், மற்றும் அபுகலாம் ஆசாத், அப்துல் காபர்கான் போன்ற தலைவர்களோடும் சமமாகப் பழகி, அவர்களின் உற்றத் தோழராக விளங்கியவரும், இந்திய அரசியலிலே, காந்திய சகாப்தத்தின் இறுதி மனிதராக, இறுதிச் சின்னமாக விளங்கிக்கொண்டிருந்தவருமான மதிப்பிற்குரிய ஷேக் அப்துல்லா அவர்களின் மறைவு, இந்தியா பூராவிலும் உள்ள மக்களை வேதனையில் ஆழ்த்தியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.



இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தை இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு பக்கம் நடத்திய போது இந்தியா பூராவும் இருந்த 600க்கும் மேற்பட்ட சுதேச சமஸ்தானங்களிலே, அந்த மன்னர் ஆட்சியினை எதிர்த்து சுதந்திரப் போராட்டத்தை நடத்துகின்ற மகத்தான பொறுப்பினை, அவரிடம் தான் அன்றைக்கு இந்தத் தேசத்தின் தலைமை ஒப்படைத்தது. இந்தியா ஸ்டேட் பியூப்பிள்ஸ் கான்ஃபரன்ஸ்'' என்று சொல்லப் படுகிற இந்திய சுதேச சமஸ்தானங்களின் மக்களின் மாநாடு என்று ஒரு அமைப்பினை நிறுவி அதனுடைய தலைமைப் பொறுப்பினை ஷேக் அப்துல்லா அவர்கள் வசம், இந்தத் தேசத் தலைவர்கள் ஒப்படைத்ததிலிருந்து, அவரைப்பற்றி எத்தகைய சிறந்த எண்ணம் தலைவர்களுக்கு இருந்தது என்பது தெளிவாகிறது.

காஷ்மீர மக்களின் உரிமைக்காக மட்டும் அவர் போராடவில்லை, இந்தியா பூராவும் இருந்த சுதேச சமஸ்தான மக்களின் விடுதலைக்காகவும் போராடினார். அங்கேயிருந்த மன்னர் ஆட்சியின் கொடுமைகளை எதிர்த்து நடைபெற்ற அத்தனை போராட்டங்களுக்கும் அவர் ஒரு ஆதர்ஸ புருஷராக விளங்கினார். 1947-லே இந்தியா சுதந்திரம் பெற்ற நேரத்திலே காஷ்மீர மக்களுக்கு ஒரு மகத்தான சோதனை ஏற்பட்டது. அன்றைக்கு அந்த மாநிலத்தின் மன்னராக இருந்தவர், இந்தியாவுடன் தன் பகுதியை இணைப்பதற்கு தாமதித்த நேரத்தில், அதை எதிர்த்து இவர் இயக்கத்தை தொடங்கினார். இதற்கிடையிலே பாகிஸ்தானின் படைகள் காஷ்மீரத்திற்குள்ளே புகுந்த நேரத்திலே, மன்னரும் மற்ற அதிகாரிகளும் ஸ்ரீநகரை காலி செய்துவிட்டு, ஓடிவிட்ட நேரத்திலே, நம்முடைய காஷ்மீரச் சிங்கமான ஷேக் அப்துல்லா அவர்கள் அவருடைய கட்சித் தொண்டர்களை திரட்டிக் கொண்டு போய், அன்றைக்கு ஸ்ரீநகரை காப்பாற்றுவதற்காகப் போராடினார். இந்தியப் படைவீரர்கள் அவருடைய உதவிக்கு வந்து சேருகிற நேரம் வரை ஸ்ரீநகரையும், அதனுடைய சுற்றியுள்ள பகுதிகளையும், தன்னுடைய கட்சித் தொண்டர்களை வைத்து, அவர் அன்றைக்கு தீவிரமாகப் போராடிக் காப்பாற்றினார்.

அதைப்பற்றி மகாத்மாகாந்தி அடிகளே மனம் திறந்து பாராட்டினார். ''இந்தியர்களுக்கும், முஸ்லீம்களுக்கும், ஒரு ஒற்றுமைச் சின்னமாக விளங்கக்கூடிய ஷேக் அப்துல்லா தலைமையிலே காஷ்மீரத்து மக்கள் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடுகிறார்கள். அந்தப் போராட்ட உணர்வு வெல்ல வேண்டும் என்று'' மகாத்மா காந்தி அவர்களுக்கு வாழ்த்து கூறினார்கள்.

முன்னால் பேசிய தலைவர்கள் அவருடைய பல்வேறு உயர்ந்த கருத்துக்களைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். எல்லாவற்றையும் விடச் சிறந்தது, அவர் ஒரு முஸ்லீம் என்றோ, இந்து என்றோ எந்தப் பேதங்களுக்கும் தன்னை ஆட்படுத்திக் கொள்ளாமல் இருந்ததுதான். அவர் ஒரு முஸ்லீமாக இருந்தும் கூட, முஸ்லீம்களுடைய வழிபாட்டு முறையிலே அவருக்கு

ஆழ்ந்த நம்பிக்கை இருந்தும் கூட, அவர் இந்துக்களை என்றைக்கும் வெறுக்கவில்லை. இந்து முஸ்லீம்களுடைய ஒற்றுமைச் சின்னமாக, இந்து தேசத்தில் எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கி, தன்னுடைய சொந்த மாநிலத்திலேயே அந்த ஒற்றுமையை நிலை நிறுத்தி, இந்தியா பூராவுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக, அந்த மாநிலம் விளங்கும் வகையிலே அவர் செய்தார்.

அப்படி அவர் இந்தியாவின் தேசிய நீரோட்டத்தோடு இரண்டறக் கலந்து நின்ற காலத்திலும் சரி, அதற்குப் பின்னாலும் சரி, காஷ்மீர மக்களின் உரிமைகளை ஒரு போதும் விட்டுக் கொடுப்பதற்கு அவர் ஒப்புக் கொண்டதேயில்லை. ஒருநாளும் அவர் அவற்றை விட்டுக் கொடுத்துத்தான் தேசீய ஒற்றுமை என்ற பேரத்திற்கு தன்னை ஆட்படுத்திக் கொள்ளவில்லை.

[முற்பகல் 9–40]

இந்தியாவின் பிரதம மந்திரியாக இருந்த நேரு அவர்களின் உற்ற தோழராக மட்டுமல்ல அந்தரங்கமான சகாவாக விளங்கியவர் அவர். ஆனால் காஷ்மீரின் உரிமை என்று வருகின்றபோது, யாரைத் தன்னுடைய தலைவராக ஏற்றுக் கொண்டிருந்தாரோ, யாரைத் தன்னுடைய உற்ற சகாவாக ஏற்றுக்கொண்டிருந்தாரோ, அந்த மனிதருள் மாணிக்கமான நேருஜி அவர்களையே எதிர்ப்பதற்கு அவர் கொஞ்சமும் யோசிக்கவில்லை என்பது அவருடைய மிகச் சிறந்த குணமாகும். அது மட்டுமல்ல, அவருடைய காலத்திலே இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு இல்லாத பல்வேறு உரிமைகளைக் காஷ்மீர் மாநிலத்திற்குச் சட்ட பூர்வமாகப் பெற்றுத் தந்த பெருமை அவருக்கு மட்டுமே உண்டு. இந்திய நாடாளுமன்றத்திலே எந்தச் சட்டம் நிறைவேற்றப் பட்டாலும் கூட காஷ்மீர் சட்டமன்றத்திலே அந்தச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டால்தான் அது காஷ்மீரில் செல்லுபடியாகும் என்ற நிலையினை அவர் ஏற்படுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம் இந்தியாவின் மூன்றில் இரண்டு பங்கு மாநிலங்களின் சட்டசபைகளில் நிறைவேற்றப்பட்டால் சட்டம் பின்னர் நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்டால் அது இந்தியா முழுமைக்கும் அமலாகும் என்பது விதி. ஆனால் காஷ்மீருக்கு அவ்வாறு கிடையாது. அது மட்டுமல்லாமல் காஷ்மீர் மாநிலத்தின் ஆளுநரை நியமிக்கின்ற போதுகூட காஷ்மீர் சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றதற்குப் பிறகுதான் அந்த மாநிலத்தில் ஆளுநர் நியமிக்கப்படவேண்டும் என்பதையும் சட்டபூர்வமாக அவர் ஆக்கினார். இப்படிப் பல்வேறு விஷயங்களிலே காஷ்மீர் மக்களுக்குப் பல்வேறு உரிமைகளைப் பெற்றுத் தந்திருக்கிறார் அவர்.

மேலும் காஷ்மீர் மாநிலத்து மக்களில்லாமல் வேறு எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அங்கே எந்த நிலத்தையும் வாங்கிவிடமுடியாது. காஷ்மீர் மாநில மக்களுக்குத்தான் அந்த மண் சொந்தம் என்ற நிலைமையினை உருவாக்கி அந்த மக்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தார். தொடர்ந்து இந்திய அரசுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் விளைவாக



1953 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 ஆம் தேதி அவரை இந்திய அரசு சிறையிலே வைத்தது. அதிலே இருந்து தொடர்ந்து 1968 ஆம் ஆண்டு வரை--இடையிலே இரண்டு தடவைகள் விடுதலை செய்யப்பட்டாலும கூட--14 ஆண்டுகள் அவர் சிறை வாசம் இருந்தார். யாரோடு, தோளோடு தோள் நின்று இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் போராடி தியாகங்கள் பல செய்தாரோ அந்தத் தலைவர்களே அவரைச் சிறையிலே அடைத்த காலத்திலே கூட கொஞ்சம் கூட மன உறுதி குன்றாமல் கடைசிவரை நிமிர்ந்து நின்றார். சிறையிலே இருந்து விடுதலையான பிறகும்கூட காஷ்மீருக்குப் போகக் கூடாது என்று தடுக்கப்பட்டபோதும்கூட, தன்னுடைய சொந்த மண்ணை மிதிக்க முடியாத நிலைமை இருந்த நேரத்திலும் கூட அவர் மன உறுதி குன்றவில்லை. காஷ்மீர் முதலமைச்சராக இருந்த அவர், சிறைப்பிடிக்கப்பட்டு அந்த மண்ணையே மிதிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டவர் மீண்டும் அந்தக் காஷ்மீரிலே மீண்டும் முதலமைச்சர் அந்தஸ்தோடு காஷ்மீர் மக்களின் கோலாகல வரவேற்போடு நுழைந்த பெருமை அவருக்கே உண்டு.

14 ஆண்டுகள் சிறைவாசம் இருந்தபோதிலும், பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்ட போதிலும் அவர் கொஞ்சம் கூட கலங்காமல் தன்னுடைய காஷ்மீர் மக்களின் உரிமைகளைக் கொஞ்சம்கூட விட்டுக் கொடுக்காமல் அதற்காகப் போராடி வெற்றியும் பெற்று முதலமைச்சராக வீற்றிருந்த பெருமை அவருக்கே உண்டு.

அவர் 1953 ஆம் ஆண்டு சிறைப்பிடிக்கப்பட்டபோது சுதந்திர காஷ்மீர் கேட்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்டு அவர் மீது அன்றைக்கு வழக்கு தொடுக்கப்பட்டது. அப்போது அவர்கள் சொன்னார்கள், 'நான் சுதந்திர காஷ்மீர் கேட்கவில்லை. இந்தியா சுதந்திரம் பெறுவதற்காகப் போராடியபோது மதிப்பிற்குரிய ஜின்னா அவர்கள் சொன்ன கருததினை நான் ஏற்க மறுத்தேன், அதற்காக என்னுடைய முஸ்லீம் சமுதாயத்து மக்களின் சினத்திற்கும் நான் ஆளானேன், அந்த நேரத்தில்கூட இந்தியாவின் சுதந்திரத்திற்குப் போராடுவதை நான் நிறுத்தவில்லை, தேசிய தலைவர்களுடன் இணைந்து போராடுவதை நான் விட்டுக்கொடுக்கவில்லை, எனவே நான் சுதந்திர காஷ்மீர் கேட்கிறேன் என்று சொல்வது அபத்தம். நான் கேட்பது இதுதான். I voice my opinion while others do not. I suggested that we have defence, foreign affairs, communications common with india so that there may be least interference by the centre. நான் சுதந்திரம் கேட்கவில்லை, நான் எந்தக் குரலை ஒலிக்கிறேன் என்றால் மற்றவர்கள் ஒலிப்பதற்கு அஞ்சுகிற குரலை நான் ஒலித்தேன், இந்தியாவின் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, செய்தி தொடர்பு ஆகிய மூன்று மட்டுமே இந்திய அரசுக்குப் பொதுவாக இருக்கவேண்டும். மற்ற எல்லாவற்றிலும் மாநிலங்களுக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். மத்திய அரசின் தலையீடு குறைந்த பட்சமாக இருப்பதற்கு அதுதான் வழி. இது தான் என்னுடைய குறிக்கோள். இதற்காகத்தான் நான் போராடினேனே தவிர சுதந்திர காஷ்மீர் என்பது என்னுடைய லட்சியமல்ல, இது பற்றி தவறாகச் சொல்கிறார்கள்' என்று சொன்னார்கள்.

அப்படி இருந்தும்கூட, அவரை 14 ஆண்டுகளாக சிறையில் வைத்தபோது, இந்த லட்சியத்திலிருந்து அவர் கொஞ்சமும் தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை என்பது மிக முக்கியமானது. காஷ்மீர மக்களுக்கு பல்வேறு உரிமைகளைப் பெற்றுத் தந்த அந்த மகத்தான தேசீய தலைவர் மறைந்து போயிருக்கிறார். அவர் எந்த லட்சியங்களுக்காக வாழ்ந்து காட்டினாரோ, அந்த மகத்தான லட்சியங்களுக்காக, உன்னத லட்சியங்களுக்காக அந்த காஷ்மீர் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று, அதே நேரத்தில் தேசிய நீரோட்டத்திலிருந்து கொஞ்சமும் விலகிச் செல்லாத நோக்கத்துடன், போராட்ட உணர்வுடன் அந்த காஷ்மீர மக்களின் உரிமையைப் பெற்றுத் தந்தாரோ, அந்த உணர்வை நாமும் பெற்று, அதே வழியிலே பின்பற்றிச் செல்வதுதான் நாம் அவருக்குச் செலுத்தக்கூடிய உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும் என்பதை இந்த அவையில் கூறி, எங்களுடைய கட்சியின் சார்பாக மறைந்த அந்த மகத்தான தலைவருக்கு அஞ்சலி செலுத்தி அமர்கிறேன்.

திரு. கி. சட்டநாத கரையாளர்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, காஷ்மீர் சிங்கம் என்று போற்றப்பட்ட ஷேக் முகமது அப்துல்லா அவர்கள் மறைந்த இரங்கல் தீர்மானத்திலே என்னையும் இணைத்துக் கொள்கிறேன். ஷேக் முகமது அப்துல்லா அவர்கள் வாழ்விலே சுதந்திர காலத்திற்கு முன்பு ஒரு பகுதியாகவும், சுதந்திர காலத்திற்கு பின்பு ஒரு பகுதியாகவும் பிரித்துப் பார்க்கலாம். அவர்கள் இந்த இருபகுதிகளிலேயும் போராட்டத்திற்கு தயங்கியது கிடையாது. அஞ்சா நெஞ்சத்தோடு, சிங்கம் என்ற அடைமொழிக்கு ஒப்ப, தொடர்ந்து போராடிக்கொண்டே இருந்தார். சுதந்திர காலத்திற்கு முன்பு சமஸ்தானங்களை இணைத்து ஒன்றுபடுத்த, குறிப்பாக, தென்மாநிலங்களிலுள்ள ஹைதராபாத், மைசூர், திரு-கொச்சி ஆகிய மாநிலங்களிலே நடந்த பெரும் போராட்டங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்தார். சுதந்திர காலத்திற்குப் பிறகும், நீண்ட நாள் சிறையில் இருந்த மாபெரும் தலைவர் ஷேக் முகமது அப்துல்லா அவர்கள் மட்டும்தான் ஆவார்கள். சுதந்திர காலத்திற்குப் பிறகு மாநிலங்களுக்குத் தகுந்த அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்று போராடிய ஒரு பெருந்தலைவர், அகில இந்தியத் தலைவர் அவர் ஒருவரே தான். அந்தப் போராட்டத்திலே அவர் வெற்றி பற்று, காஷ்மீரத்திற்கு ஒரு தனித் தன்மை பெறுவதற்குரிய ஒரு நிலையை அவர் உண்டுபண்ணியிருந்தார்கள். சுதந்திர காலத்திலே தன்னை இணைத்துக்கொண்ட காரணத்தினால், அந்த மக்களின் தனிப் பெருந்தலைவராக இருந்த காரணத்தினால், காஷ்மீரத்திற்கு என்று ஒரு தனியான உயர் நிலையை அவரால் பெற்றுக் கொடுக்க முடிந்தது.

அவருடைய மரணத்திற்கு அஞ்சலி செலுத்தும் இந்த நேரத்திலே அன்னாருடைய சிறந்த பண்பையும், மக்களுக்காக அவர் தொடர்ந்து நடத்திய போராட்டங்களையும் எண்ணி, மாநிலங்கள் எந்த அளவு இன்று ஒரு பெடரல் ஸ்டிரக்சராக,



யூனிடரி ஸ்டிரக்சராக மாறக்கூடாது என்ற அடிப்படையிலே மத்தியிலே கூட்டாட்சி இருக்கும்போது, மாநிலங்களிலே எந்த அளவுக்கு சுதந்திரம் இருக்கவேண்டுமென்று அன்னார் அவர்கள் போராடினார்களோ, அதை எண்ணி மனதிலே உன்னி, இன்று நாம் அவருக்கு அஞ்சலி செலுத்தும் நேரத்திலே, அவருடைய நினைவுகளுக்கு, வழிவகைகளுக்கு, உயரிய லட்சியங்களுக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு, அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தார்க்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். நன்றி.

திரு. கே. தனுக்கோடித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை வழிமொழிந்து, தேசிய விடுதலைத் தலைவர்களில் ஒருவரான காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லா அவர்கள் மறைவு குறித்து அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பாக, எல்லாத் தலைவர்களும் பேசிய கருத்துக்களுடன், எங்களுடைய கருத்தையும் தெரிவித்து, ஷேக் அப்துல்லா குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேச விடுதலைக்கு மிகவும் பாடுபட்ட காஷ்மீர் சிங்கம் என்று போற்றப்பட்ட அவரது குடும்பத்தினருக்கும், மத மாற்றமில்லாத அரசியலை உருவாக்கிய அன்னாருடைய குடும்பத்தினருக்கும் மீண்டும் எங்கள் பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பாக அஞ்சலி செலுத்தி அமர்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த இரங்கல் தீர்மானத்தை ஜனதா கட்சியின் சார்பில் வழிமொழிந்து, மிகப் பெரிய விடுதலைப் போராட்ட வீரரும், காஷ்மீர் சிங்கம் என்றும் மக்களால் பாராட்டப்பட்டவரும், இன்றுவரை காஷ்மீரத்தினுடைய முதல்வராக இருந்த ஷேக் அப்துல்லா அவர்கள் மறைவு குறித்து எனது இரங்கலையும் எங்கள் இயக்கமான ஜனதா கட்சியின் இரங்கலையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.50.)

அரசியலில் தனக்கு என்று ஒரு வழியை வகுத்துக் கொண்டு அந்த மக்களால் மிகவும் நம்பப்பட்டு, பாராட்டப்பட்ட ஒரு மாபெரும்மனிதர் இன்றைக்கு மறைந்துவிட்டார். எனக்கு நன்றாக நினைவுக்கு வருகிறது. நாங்கள் இங்கே சட்டமன்ற குழுவிலிருந்து ஸ்ரீநகர்க்கு சென்று அவரைச் சந்தித்தபோது அவர் சொன்ன வார்த்தைகள் இன்றைக்கும் பசுமரத்து ஆணியாக நினைவில் வருகிறது. தமிழகத்தைப் பொருத்தவரையில் அவர் சொன்னார். காஷ்மீரம் எனக்கு முதல் வீடாக இருந்தால் தமிழகம் எனது இரண்டாவது வீடு என்று சொல்லிய அந்த காட்சி எனக்கு நினைவுக்கு வருகிறது. கோடைக்கானலில் நான் இருந்தேன்

என்று சொல்லி அரசியல் கட்சித் தலைவர்களைப் பற்றி விசாரித்தார். தமிழகம் எப்படி இருக்கிறது என்று தமிழகத்தின் நலனில் அக்கறையோடு விசாரித்த அந்த காட்சி இன்றைக்கும் நினைவுக்கு வருகிறது. பல்வேறு அரசியல் பிரச்னைகளில் அவருடைய பெயர் அடிக்கடி அடிப்பட்டாலும் 'கான்ட்ரவர்சீஸ்' என்று சொல்வார்களே அதிலே அவர் பெயர் அடிக்கடி அடிப்பட்டாலும் இந்த நாடு ஒற்றுமையாக இருக்கவேண்டும், இந்த பரந்த பாரத பூமி ஒன்றுமையாக இருக்க வேண்டும் என்பதில் அவர் அக்கரை கொண்டு இருந்தார். அந்த மகாப் பெரிய மனிதரை நாம் இன்றைக்கு இழந்து இருக்கிறோம். இந்திய நாட்டுக்கு இது மிகப் பெரிய இழப்பு மட்டும் அல்ல. குறிப்பாக ஜம்மு காஷ்மீர் சேர்ந்த மக்களுக்கும், அவருடைய குடும்பத்தார்க்கும் மிகப்பெரிய இழப்பு ஆகும். அவருடைய பிரிவால் அவருடைய இழப்பால் வாடிக்கொண்டிருக்கிற அந்த குடும்பத்தாருக்கும், அந்த மாநில மக்களுக்கும் இந்த அவையில் கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானத்தின் இரங்கலை நாங்கள் ஆதரிப்பதோடு எங்களுடைய ஜனதா கட்சின் சார்பில் இரங்கலையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்: Mr. Speaker Sir, நேற்று இரவு ஷேக் அப்துல்லா அவர்கள் மரணம் ஏற்பட்டதால் தேசமே ஒரு பெரிய துக்கத்தில் ஆழ்ந்து இருக்கிறது. முக்கியமாக காஷ்மீர் ஸ்டேட் பெரிய தலைவரை இழந்து இருக்கிறது. சமீபத்தில் 3 மாதத்திற்கு முன்பு நான் பல மணி நேரம் அவரோடு பேசும் பாக்கியம் ஏற்பட்டது. அப்போது அவர் என்னிடம் சொல்லாவிட்டாலும்கூட நான் அறிந்து கொண்ட he was not at all for any confrontation with the centre. He expressed hihgest regard for the tact and ability of our prime minister. பேசிவிட்டு நம்முடைய தேசம் ஒற்றுமையாக இருக்கவேண்டும், எல்லா மதத்தினரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு தமிழ் நாட்டில் எந்தவிதமான மத சார்படைய கலவரமும் ஏற்பட்டது இல்லையே, இப்போது ஏன் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது என்று கேட்டார். அதற்குப்பல காரணங்கள் உண்டு என்று நான் சொன்னேன், ஆர் எஸ்.எஸ். உடையவேலையா இருக்குமோஎன்று அவர்கேட்டார். இருக்கலாம் என்று நான் சொன்னேன். இதைப்பற்றி ரொம்பவும் வருத்தப்பட்டார். மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அசெம்பிளியில் அஸ்யூரன்ஸ் கொடுத்து இருக்கிறார்கள். அது மாதிரி கலவரங்கள் இந்த மாநிலத்தில் இனி ஏற்படாது. அதற்கு தகுந்த வழிகளை நாங்கள் எடுத்துக்கொள்வோம் என்று உறுதி கொடுத்தார். பெரும்பாலும் இப்போது அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன். உடனே சிரித்தார். நீங்கள் தமிழகத்திற்கு வாருங்கள் என்று கூப்பிட்டேன். வந்தால் நீங்கள் கொடைக்கானல் போகலாம், அங்கு தங்கி இருந்தபோது ஏற்பட்ட பழைய நினைவுகள் வரும் என்று சொன்னேன். வர முடியுமோ, முடியாதோ என்று சொன்னார். வந்தால் நான் அவசியம் பார்க்கிறேன் என்று சொன்னார். ஆக எல்லா மாநிலங்களுடைய சங்கதிகளையும் அவர் வைத்துக் கொண்டு இருந்தார். அப்போது அவர் இவ்வளவு சீக்கிரத்தில் இறப்பார்



காரணம் அங்கே பெரிய விருந்து நடக்கிறபோது நாங்கள் 4 பேர் ஒன்றாக உட்கார்ந்து ஒரு பெரிய பிளேட்டில் சாப்பிட்டது உண்டு. நான், அவர், என்னுடைய கிரண்டுசன், என்னுடைய நெப்யூவ், 4 பேரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டோம். அப்போது பெரிய பெரிய பலவிதமான 15, 16 டிஷஸ்கள் வந்து கொண்டு இருந்தன. What is this Sheck It is a combination of Kashmir, Afganistan Iran Iraq and all muslim countries dishes' என்றார். அவர் நன்றாகச் சாப்பிட்டார். அவருடைய மகன் டாக்டர்பரூக் அப்துல்லா "daddy donot take this, donot take that" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இருந்தாலும் கூட அவர் அதை கவனித்ததாக தெரியவில்லை. We have lost an important and very outstanding personality particularly the "Sheri of Kashmir. He kept the integrity of Kashmir Sometimes he was at loggerheads with Centre for which he was imprisoned. But whatever may be the services he rendered at a critical time in keeping Kashmir with us can never be forgotten.

நான் அங்கே இருக்கும்போது பல லீடர்ஸ், ஷேக் சாயப்-விடம் பேசினேன். எல்லோரும், இந்து, முஸ்லீம் எல்லோரும் அவர் ஒருவரால்தான் இந்த காஷ்மீர்—ஐ அந்த சமயத்தில் அடக்க முடிந்தது, பாகிஸ்தானை விரட்டி அடித்தது இவருடைய தலைமைதான் காரணம் என்று பெரிய 'அட்மிரேஷன்' செய்தார்கள். இப்போது அவருடைய மகன் டாக்டர் பரூக் அப்துல்லா முதலமைச்சராக வந்திருக்கிறார். அவருடைய மகன், அவருடைய டாக்ட் எபிலிட்டி, லீடர்ஷிப் எல்லாம் அங்கே வைத்திருக்கிறார். We wish him all success. We pray that the departed soul should rest in peace.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னவர் கொண்டுவந்த தீர்மானத்தை வழிமொழிந்து பேசியவர்களோடு அரசின் சார்பாக என்னுடைய கருத்தையும் ஒருங்கிணைத்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். சில நேரங்களில் எதிர்பாராமல் விபரீதங்கள் ஏற்படுகின்றன என்ற இயற்கையின் நியதிக்கு ஏற்ப இன்றைய தினம் நாம் அனைவரும் உள்ளம் உருக, நெக்குருக, உணர்ச்சிவயப்பட்டு உணர்வைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வேதனைக்குள்ளாக வேண்டிய நிலையில் காஷ்மீரத்து விடுதலைக்கும் இந்திய விடுதலைக்கும் பாடுபட்டு தியாகம் செய்து என்றும் இந்தியத் துணைக் கண்டத்து மக்களின் மனத்திலிருந்து மறைய முடியாத, எல்லோராலும் பாராட்டப் படுகிற வணக்கத்திற்கு உரியவராக இருக்கின்ற ஷேக் அவர்கள் மறைந்துவிட்டதை எண்ணி நம்முடைய எண்ணங்களை வெளிப் படுத்துகின்ற இந்த வேளையில் சிலவற்றை நான் நினைவுப் படுத்திக் கொள்கிறேன் என்றுதான் சொல்கிறேன். இங்கே இருக்கின்ற தலைவர்கள் எதையும் மறந்தவர்களும் அல்ல;

முதலில் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே ஒரு எண்ணத்தை வெளியிட்டிருக்கிறார்கள். கோகினூர் மாளிகைக்கு ஷேக் அப்துல்லா பெயரையும் இணைத்து கோகினூர் ஷேக் அப்துல்லா மாளிகை என்று பெயரிட வேண்டுமென்ற எண்ணத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அது அத்தனை தமிழக மக்களுடைய எண்ணத்தின் எதிரொலி என்று ஏற்றுக்கொள்வதோடு நாங்கள் அதிலே மகிழ்ச்சி கொள்கிறோம் என்ற வகையில் மறைந்து விட்டாலும் அவர் நினைவை மக்கள் மனதில் பதியவைக்க வேண்டுமென்ற வகையில் வருகின்ற டிசம்பர் மாதம் அவருடைய பிறந்த நாள் வருகின்றபோது அந்தப் பெயரை அங்கே சூட்டப் படும் நிகழ்ச்சிக்கு இங்கே இருக்கின்ற அனைத்துத் தலைவர் களும் உறுப்பினர்களும் கலந்துகொண்டு அதற்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இன்னொன்றை நான் என் கருத்தாக அல்ல உறுப் பினர்கள் அனைவருடைய கருத்தோடு இணைத்துத்தான் சொல்ல விரும்புகிறேன். மக்கள் சக்தி இருந்தால் ஒரு தனிப் பட்ட மனிதர்கூட எவ்வளவு சாதிக்கமுடியும் என்பதற்கு ஒரு மாபெரும் எடுத்துக்காட்டுதான் மாண்புமிகு ஷேக் அப்துல்லா அவர்கள் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

ஒரு முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருடைய சமஸ் தானத்தை முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த ஒருவர் எதிர்த்து போராடுவது என்பது பெரிய பிரச்னைக்கு உள்ளாகாது. அதே போல் இந்து சமஸ்தானத்தை எதிர்த்து இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் போராடுவது என்பது வேறு பிரச்னைகளுக்கு இடம் அளிக்காது. ஆனால், இந்து சமஸ்தானத்தை எதிர்த்து ஒரு முஸ்லிம் தலைவர் போராடினார் என்றும் அதற்கு நியாய உணர்வு கொண்ட மனித உலகமே அதை ஆதரித்தது என்று சொன்னால் அது ஒன்றே போதும், அவருடைய சிறப்பு எவ்வளவு உன்னதமானது என்பதை எடுத்துக்காட்ட என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும், மிகச் சாதாரண மனிதர் என்று இருந்தால் கூட அவர் சொல்கிற கருத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்கிற தன்மை எவ்வளவு தேவை என்பதை எடுத்துக்காட்டியவர் ஷேக் அப்துல்லா அவர்கள்.

உதாரணத்திற்கு, மும்மொழியைப் பற்றி ஒரு நேரத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். நான் அவருக்கு எதிராக கருத்தை சொல்கிற போது அவர்களுடைய ஆற்றலையும் அனுபவத் தையும், தியாகத்தையும், அறிவையும் கணக்கிட்டுக் கொண்டு சொல்லவில்லை. அண்ணா அவர்களுடைய கருத்தை வெளிப் படுத்த வேண்டுமென்ற ஒரே உணர்வோடு நான் இரு மொழிக் கொள்கையைப்பற்றி கடிதம் எழுதினேன், பேசினேன். ஆனால், அவர் சிறிதும் ஆத்திரப்படவில்லை, அலட்சியப்படுத்தவில்லை என்கிற முறையில் என்னை டெல்லியில் ஒரு நிகழ்ச்சியில், ஒரு



குழுவில் சந்தித்தபோது அவருடைய கருத்தைச் சொன்னவர், அதற்கு விளக்கமும் சொல்லி பிறகு நான் சொன்னதை அவர்கள் புரிந்து கொண்டல்ல, அவர்கள் ஏற்றுக்கொண்ட வகையிலே அதற்கு பிறகு அவர்கள் அந்த கருத்தை வலியுறுத்தவில்லை, நான் வலியுறுத்தப் போவதில்லை என்று சொன்னதை நிறை வேற்றினார் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அவ்வளவு மாபெரும் மனிதர். எவ்வளவு சாதாரண மனிதராக இருந்தாலும் அவருடைய உணர்விற்கு மதிப்பு தருகிற வகையில், அவருக்கும் பதில் சொல்லவேண்டும், அவரையும் திருப்தி படுத்த வேண்டும், அதை ஏன் அவர்கள் சொல்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும், அதை அறிந்து தக்க செயல்களை செய்யவேண்டும் என்பதிலே அவர்கள் எவ்வளவு அக்கறையோடு இருந்தார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் ஒன்றைச் சொன் னார்கள். காஷ்மீர் மாநிலத்தில் வெளி மாநிலத்தைச் சேர்ந் தவர்கள் நிலம் வாங்குவதற்கு உரிமை இல்லை என்று சொன் னார்கள். இதை நான் அவரிடம் எடுத்துக்கூறி சொன்னபோது ஒரே ஒரு பதிலைச் சொன்னார்கள். எங்களுடைய காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் மிகவும் ஏழைகள். சுதந்திரத்தின் உண்மையான சுவையை இன்னமும் அறியாதவர்கள். அவர்களுக்கு வேலை கிடைக்காத நிலைமையும், வறுமையும் இருக்கிறது. ஏழ்மை மிக மிக அதிகமாக இருக்கிறது. அதை நீக்க வேண்டும். இந்த நேரத்திலே நான் அனுமதி கொடுப்பேனானால் பண முதலைகள் இங்கே வந்து பணத்தைக் கொட்டி அவர்கள் இடங் களை எல்லாம் விலைக்கு வாங்குவார்களானால், இந்த மக்களுக்கு இருக்க இடம் இல்லாமல் போய்விடும். ஆகவே தான் நான் தடுக்கிறேன் என்று அவர்கள் சொன்னதை இன்றையதினம் நாம் நினைவுப்படுத்திக் கொள்கிறபோது எவ்வளவு அக்கறையோடு யாராக இருந்தாலும், இதுபோன்ற காரியங்களில் அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்து மக்களை ஏழ்மைக்கு ஆளாக்கி விடக்கூடாது. நிலமற்ற அநாதைகளாக்கி விடக்கூடாது என்பதிலே அக்கறை காட்டினார் என்பதை அறிந்து அதை இங்கே சொல்வதிலே ஓரளவிற்கு நான் மனநிறைவை பெறுகிறேன்.

இங்கே இன்னொன்றை நான் சொல்வது அவசியம் என்று கருதுகிறேன். சமஸ்தானபதிகள் ஆட்சி இருந்த காலத்தில் அமரர் நேரு அவர்களை காஷ்மீரத்திற்குள்ளே அனுமதிக்கக் கூடாது என்கிற வகையிலே உத்தரவு போடப்பட்டிருந்தது. அதை மீறி நேரு அவர்கள் அங்கே வந்தாகவேண்டும்; என்ன தான் நடக்கிறது பார்ப்போம்: நாங்கள் உயிரையும் தர தயாராக இருக்கிறோம் என்பதை அறைகூவி அதற்கு முன் நின்று, வரவழைக்க தானே முன்நின்று ஏற்பாடு செய்தார் ஷேக் அப்துல்லா அவர்கள் என்பதையும் அதை நிறைவேற்று வதற்கு நேரு அவர்கள் அங்கே சென்றபோது என்ன நடந்தது என்பதையும் நாம் ஒருகணம் நினைத்துப் பார்க்க வேண்டும். பதவியிலேயிருந்து அல்ல; அந்த காலத்தில் ஒரு சாதாரண தொண்டனாகவும், தியாகியாகவும், நாட்டிற்கு ஒரு தலைவ

னாகவும் இருந்தார் என்பதை எடுத்துக்காட்டுகிற வகையில் அவர்கள் அதை செய்தார்கள் என்பதை எண்ணிப்பார்க்கிற போது நான் உங்களோடு இணைந்து, அரசின் சார்பாக வந்த இரங்கல் தீர்மானத்தோடு உள்ளத்தை இணைத்துக் கொள்கிற நேரத்திலே நான் மீண்டும் சொல்கிறேன். சுதந்திரத்தையும், சுதந்திரம் பெறுவதற்கு அந்த நேரத்தையும், நிகழ்ச்சிகளையும் சுதந்திரத்திற்கு அப்பால் எப்படி இருக்கிறது என்பதையும் பற்றி சிந்திக்க வேண்டுமென்று சொன்ன சட்டநாத கரையாளர் அவர்களுக்கு, அவர்களுடைய கருத்தை ஆதரிக்கிற வகையில் நான் சொல்கிறேன். சுதந்திரப் போராட்டத்திலே கலந்து கொண்டவர்கள், அதை உணர்ந்தவர்களுடைய எண்ணத்தின் மறுபதிப்பு தான் அதற்கு பிரதியளிக்கிற அமைப்பு என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டு, எந்த போராட்டமானாலும் அந்த போராட்டம் நின்றால்கூட பின்னால் ஏற்படுகிற விளைவுகள் அனைத்தும் அந்த போராட்டத்தினுடைய எதிரொலி தான் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லி, அந்த வகையில் தான் அவர்கள் யாருக்குமே அஞ்சாமல், யாருக்குமே விட்டுக் கொடுக்காமல், தன்னுடைய மாநிலம் என்று எடுத்துக்கொண்டாலும் கூட, அங்கே தன்னுடைய மதத்தைச் சேர்ந்தவர்கள், தன்னுடைய மதத்தைச் சேராத மக்கள் என்று பிரித்துப் பார்க்கக் கூட அவரால் முடியாமல், அவருக்காக இன்று எத்தனையோ லட்சோப லட்சக்கணக்கான மக்கள் இன்று கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, அதற்கு உறுதுணையாக அவர்களுடைய காரியங்களை, செயல்முறைகளைப் பின்பற்றி இந்த மாநிலமும், இந்திய துணைக்கண்டமும் அதை செயலாக்க வேண்டுமென்ற உணர்வோடு இந்த அரசும், உங்களுடைய நல் ஆதரவோடு, யோசனைகளோடு, அப்படிப்பட்ட காரியங்களுக்கு தொண்டாற்றும் என்பதைச் சொல்லி அந்த தொண்டு ஆற்றுகிற கடமை உணர்வு தான், அதை செயலாக்குவது தான் அந்த பெரியவருக்கு நாம் செய்கிற அஞ்சலி என்பதை இங்கே கூறி இந்தத் தீர்மானத்தை அரசின் சார்பாக நானும் வழிமொழிந்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பேரவை முன்னவரும் மற்ற எல்லாக் கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு என்னுடைய இரங்கலையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்னதாக நான் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய காலத்திலே அவரைப் பண்டித நேரு அவர்களுடைய இல்லத்திலே சந்திக்கின்ற நல் வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். அதிலேயிருந்து தமிழகத்தினுடைய பல்வேறு பிரச்னைகளில் அவருடைய உதவியும் பெறுகின்ற வகையில் அவரைச் சந்திக்கின்ற பொழுதெல்லாம் அவருடைய உதவிகளைப் பெற்றிருக்கிறேன். நம்முடைய தமிழகத்தினுடைய நல்வாழ்வுக்காக அவர்கள் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்ததை நான் இன்றைக்கு நினைவுகூர கடமைப்பட்டிருக்கிறேன்.



அதைப் போலவே தமிழகத்திலேயிருந்து பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு போன்ற குழுக்களின் உறுப்பினர்கள் போன நேரத்திலே, அவர் இவர்களிடத்திலே மனம் திறந்து பேசி, நீங்கள் ஒவ்வொருவரும் மாநில சுயாட்சிக்குப் பாடுபட வேண்டுமென்று எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் நான் நன்றாக அறிவேன்.

அவருடைய வாழ்க்கையை நாம் பார்க்கும்போது, 1905 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் தேதி பிறந்தவர் அவர். ஏறக்குறைய 77 ஆண்டுகள் வாழ்ந்து இறந்திருக்கிறார்கள். அந்த 77 ஆண்டுக்கால வரலாற்றைப் பார்க்கிறபொழுது, அது ஒரு பெரிய போராட்ட வரலாறாகவே நமக்குப் படுகிறது. பதவியிலே இருந்த பொழுதும் சரி, பதவியிலே இல்லாத பொழுதும் சரி, எல்லா காலங்களிலேயும் சில உரிமைகளுக்காக, சில இலட்சியங்களுக்காக, சில கொள்கைகளுக்காக அவர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள் என்பதை நாடு இந்த நேரத்திலே மறந்து விட முடியாது ஏறக்குறைய 17 ஆண்டுக்காலம் 11 நாட்கள் அவர்கள் சிறையிலே இருந்திருக்கிறார்கள், இந்திய அரசியல் வரலாற்றிலே பல தலைவர்களுடைய வரலாறுகளை நாம் புரட்டிப் பார்க்கும்போது, இந்த அளவு சிறைவாசத்தை ஏற்றிட்ட தலைவர் வேறு எவரும் இல்லை என்பதுதான் என்னுடைய எண்ணம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வளவு காலம், வெள்ளைய ஏகாதிபத்தியம் ஆண்ட காலத்திலும் சரி, அதற்குப் பிறகு சுதந்திர இந்தியாவிலும் சரி, அவர்கள் சிறைவாசத்தை மிக இன்முகத்தோடு ஏற்றுக்கொண்டவர்கள்.

கொடைக்கானலிலே கோஹினூர் மாளிகையிலே அவர் வாழ்ந்தபொழுது, சாதாரணமாக அவர்கள் நடந்து கொண்டதையும், வெள்ளிக்கிழமைதோறும் மசூதிக்குப் போய்விட்டு வரும்போது பொது மக்களை, அந்த நேரத்திலே அழைத்துப் பேசுவதை அவர் வாடிக்கையாக வைத்திருந்தார்கள் என்பதையும் நான் நன்றாக அறிவேன்.

சிறைச்சாலையைப் பற்றி அவர் என்றைக்கும் கவலைப்பட்டது கிடையாது. அதைப் போலவே, கொள்கைக்காகப் போராடுவதற்கு அவர் என்றைக்கும் தயங்கியது கிடையாது. அதைப் போலவே, ஒரு போராட்ட உணர்ச்சியை எங்களிடத்திலேயெல்லாம் அந்தக் காலத்திலே இருந்து அவர்கள் உருவாக்கி வந்தார்கள் என்பதை நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே இருக்கிற எல்லா தலைவர்கள்மீதும் அவருக்கு ஒரு அளவற்ற அன்பும் பற்றும் பாசமும் இருந்தது என்பதை நான் வாழ்நாளிலே அவரோடு பழகிய நாட்களில் நன்றாக அறிவேன். சென்னைக்கு வரும்போதெல்லாம் அவர்கள் எல்லோரையும் பார்த்ததோடு, மறைந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவரை அவர்கள் அடிக்கடி சந்தித்து சாஸ்திர விவகாரங்களைப் பற்றி பேசினார் என்பதை நாடு

இன்றைக்கு மறந்துவிட முடியாது. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களும், இராஜாஜி அவர்களும், காஷ்மீரத்தை இந்த நாட்டோடு இணைக்கிற நாட்களில் அவருக்கு ஆலோசனைகள் சொன்னார்கள். கடைசியாக, நமது மாநிலத்தைச் சேர்ந்த திரு. ஜி. பார்த்தசாரதி அவர்கள்தான் இந்திய அரசினுடைய தூதுவராகக் காஷ்மீரத்திற்குப் போய், கடைசியாக, அவருடைய எண்ணங்களைச் சிறிது மாற்றி, பல காரியங்களிலே இந்தியப் பேரரசோடு அவரை ஒத்துழைக்கச் செய்தார்கள் என்பதை என்றைக்கும் நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-10)

வாழ்விலே அயராத கொள்கைப் பற்று கொண்ட ஒரு பெரிய சிங்கம் இன்றைக்கு நம்மை விட்டு மறைந்துவிட்டதாகவே நான் கருதுகின்றேன்.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் இன்றைக்கு அவருடைய மறைவுக்குத் தன்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. அதைப்போலவே இன்றைக்கு நானும் அவர்களோடு சேர்ந்து என்னுடைய இரங்கலை பருக் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பருக் அவர்கள் நாடாளுமன்றத்திலே மூன்றாண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருந்துவிட்டுத்தான் தற்போது காஷ்மீரத்துக்குப் போய் இன்றைக்குத் தற்காலிக முதல்வர் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கும், ஷேக் அப்துல்லாவினுடைய துணைவியார் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.)

3. அறிவிப்பு.

பேரவை அலுவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று பேரவையில் எடுத்துக் கொள்ளப் பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த 9–9–82 தேதியிட்ட நிகழ்ச்சி நிரலில் உள்ள நிகழ்ச்சிகள் நாளை 10–9–82 காலை எடுத்துக் கொள்ளப்படும். 10–9–82 அன்று எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்த நிகழ்ச்சி நிரல் நாளை 10–9–82 பிற்பகல் 4 மணி முதல் எடுத்துக் கொள்ளப்பெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மறைந்த தலைவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் ஒத்திவைக்கப் படுகின்றன. பேரவை மீண்டும் நாளை (10–9–1982) காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை காலை 10,11 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

90. சென்னையிலுள்ள புற்றுநோய் நல நிறுவனத்திற்குச் சொந்தமான TMP. 3382 ஆம் எண் ஸ்டான்டர்டு வண்டி மற்றும் TNO. 8749 ஆம் எண் சிறு பேருந்து இவற்றைப் பொறுத்த வரையில் சலுகை வித வரி செலுத்துவது குறித்து உள் துறையின் (போக்குவரத்து–1) 18-5-1982 ஆம் தேதியிடப்பெற்ற 1218 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

91. சென்னையிலுள்ள கால்நடை நல வாரியத்திற்குச் சொந்தமான MSM 4369 ஆம் எண் நடமாடும் கால்நடை மருத்துவ வண்டியைப் பொறுத்தவரையில் செலுத்தத் தக்க வரி விதத்தைக் குறைப்பது குறித்து உள் துறையின் (போக்குவரத்து-1) 14–5-1982 ஆம் தேதியிடப் பெற்ற 1177 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

92. செங்கல்பட்டு மாவட்டம் உத்திரமேரூர் வட்டத்தில் உள்ள அருணாசலம் பிள்ளை சத்திரத்தைச் சேர்ந்த மல்லியன் கரணை குக்கிராமத்தை கிராமதான இயக்கக் கிராமமாக அறிவிப்பது குறித்து ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 24–6-1982 ஆம் தேதியிடப் பெற்ற 930 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

93. திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை வட்டத்தில் சில கிராமங்களைக் கிராமதான இயக்கக் கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 14-7-1982 ஆம் தேதியிடப் பெற்ற 1051 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

94. திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை வட்டத்திலுள்ள அளகாபுரி கிராமத்தைச் சேர்ந்த வடகம்பட்டிக்கிராமத்தை பூதான இயக்கக் கிராமமாக அறிவிப்பது குறித்து, ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 14-7-1982 ஆம் தேதியிடப்பெற்ற 1052 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

95. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மது (உரிமம்—அனுமதிச்சீட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 16-10-1981 ஆம் தேதியிடப் பெற்ற 268 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

96. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு மகளிர், பெண்டிர் விபச்சாரத் தடை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, சமூக நலத் துறையின் 6-8-1981 ஆம் தேதியிடப் பெற்ற 580 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1956 ஆம் ஆண்டு மகளிர் பெண்டிர் விபச்சாரத் தடைச் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 104/1956) 23 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

97. கோயம்புத்தூரிலுள்ள திருவாளர் இராமகிருஷ்ணா மிஷின் வித்தியாலயா பாலிடெக்னிக்கிற்குச் சொந்தமான TMW 1960 ஆம் எண் வண்டியைப் பொறுத்தவரையில் செலுத்தத்தக்க வரிவீதத்திலிருந்து சலுகை அளிப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து—1) 29-6-1982 ஆம் தேதியிடப்பெற்ற 1660 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

98. 1979-80—ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1948 ஆம் ஆண்டு மின்சக்தி வழங்கும் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

**ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.**

20. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 1981-82 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும், விவாதத்தைத் தொடங்கி வைத்து மின்சாரத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் உரை (தமிழ், ஆங்கிலம்).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வெள்ளிக்கிழமை, 1982 செப்டம்பர் 10
ஆவணி 25, துந்துபி, திருவள்ளுவர் 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

தன் உள்ளம் அறிய ஒருவன் பொய் சொல்லாமல் நடப்பானே யானால், அத்தகையவன் உலகத்தார் உள்ளங்களிலே எல்லாம் இருப்பானாவான்.

( 1) இரங்கல் குறிப்பு

முன்னாள் உறுப்பினரும் அமைச்சருமான திரு. பி. வெங்கிட்டரத்தினம் அவர்களின் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பி. வெங்கிட்டரத்தினம் அவர்கள் 8-9-1982-ம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. வெங்கிட்டரத்தினம் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை ராஜமுந்திரி பொது—கிராமப்புற தொகுதியில் இருந்து அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரகாசம் அமைச்சரவையில் வனத்துறை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

அன்னார் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றி உள்ளார். அவர்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும் படிக் கேட்டுக் கொள்கிறேன்.

## 2. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

### தனியார் துறை மூலம் சிறு மின் நிலையம் அமைக்க அனுமதி வழங்கும் திட்டம்.

*வினா எண். 41—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் துறையினர் சிறு மின் நிலையம் அமைக்க அனுமதி கொடுக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) இது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எங்கெங்கு அமைப்பதாக ஆலோசிக்கப் பட்டிருக்கின்றது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே உள்ள பெரும் தொழிலதிபர்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய மின்தேவையைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு, 200 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி திறன் கொண்ட ஒரு திட்டத்தைத் தயாரித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டம் இன்னும் அரசுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. அனுப்பி வைக்கப்பட்ட பிறகு அதன்மீது அரசு முடிவெடுக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் 200 மெகாவாட் மின்சாரத் துணை மின்நிலையம் அமைப்பதற்காக அனுமதி கோரி இது வரையில் தமிழ்நாட்டிலுள்ள தொழிலதிபர்களிடமிருந்து ஏதாவது விண்ணப்பங்கள் வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பிக்க வேண்டும் என்று தகவல் அனுப்பி இருக்கிறார்கள். திட்டத்தை டாட்டா நிறுவனத்தின் மூலம் தற்போதுதான் பெற்றிருக்கிறார்கள் என்ற தகவலை அளித்திருக்



கிறார்கள். அதைப்பற்றி தொழிலதிபர்கள் ஆராய்ந்து அதற்குப் பிறகுதான் அந்தத் திட்டத்தை அரசுக்கு அனுப்பி வைப்பார்கள்.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, தனியார் அமைக்கும் மின் நிறுவனத்தில் பெறப்படும் மின்சாரத்திற்கு மின் கட்டண வீதங்கள் அரசு வைத்திருப்பதைப்போல நிர்ணயிக்கப் படுமா அல்லது வேறு கட்டணங்கள் நிர்ணயிக்க அனுமதி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் உற்பத்தி நிறுவனம் தங்களுடைய தேவையை தாங்களே நிறைவு செய்து கொள்ள வழி வகுக்கிறது. கூடுதலான மின் உற்பத்தி இருக்குமானால் அதை மின் வாரியம் எப்படி பயன்படுத்திக் கொள்வது என்பதைப்பற்றி அவர்களோடு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்படும்.

திரு. கோவைதம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சிறு மின் நிறுவனங்களை அமைக்க அரசு அனுமதி தர முன்வருவது தமிழக வளர்ச்சிக்கு உகந்ததாக அமையுமா? வேறு எந்த மாநிலங்களிலாவது இப்படித் தனியார் துறைகள் சிறு மின் நிலையங்களை அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி தந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வேறு சில மாநிலங்களிலும் இத்தகைய நடவடிக்கைகள் இப்போது உள்ளன. நமமைப் பொறுத்தவரையில், மின்சக்தி என்பது பெரும் பற்றாக்குறை. மாநில அரசும், மத்திய அரசும் போடுகிற முதலீடு தவிர, மற்றவர்களும் ஆங்காங்கே முதலீடு போட்டு, தங்களுடைய மின் தேவையை நிறைவு செய்து கொள்வதற்கு மின் உற்பத்தி செய்ய முன் வருவார்களானால் இதை ஆதரிக்க வேண்டிய நிலையிலேதான் தமிழக அரசு உள்ளது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பி.அன்ட். சி.மில் கம்பெனியார் அவர்களுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்து பயன்படுத்திக் கொள்கிறார்கள். மீதம் அதிகமாக இருப்பதாக அறிகிறேன். அப்படி, அதிகமாக இருக்கிற அந்த மின்சாரத்தை-என் பகுதியில் அடிக்கடி மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகிறது—எனவே அதிகமாக இருக்கிற அந்த மின்சாரத்தை பயன்படுத்த முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதிகமாக இருக்கிறதா என்று பார்த்து அரசு பரிசீலிக்கும்.

[1982 செப்டம்பர் 10

## கிராமப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ள மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள்

*வினா எண். 42—திரு. இல. பலராமன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் மின்சாரக் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து சோதித்ததின் பலன் யாது?

(ஆ) இச் சங்கங்கள் எந்தெந்த பகுதிகளில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) கிராமப்புறங்களில் மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்து செயல்பட்ட முதலாண்டில் 133 விவசாய இணைப்புகளுக்கும் 65 ஊரகத் தொழில்களுக்கும் மின்சாரம் கொடுக்கப்பட்டுள்ளது. கும்பகோணம் கிராம மின்சாரக் கூட்டுறவு சங்கம் ஆரம்பித்தபோது அதனுடைய வருவாய் ரூபாய் 3.7 இலட்சமாகும். இச்சங்கத்தின் வருவாய் முதலாண்டில் 4.5 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளது.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயத்தில் மற்றொரு சங்கம் 5-3-82-ல் அரசு பதிவு பெற்றுள்ளது. மேலும் இதுபோன்ற சங்கங்கள் ஆரம்பிக்கும் இடங்களைத்தேர்ந்தெடுப்பது பற்றிய குறிப்புகள் மின்சார வாரியத்தால் சேகரிக்கப்பட்டு வருகிறது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பரிட்சார்த்தமாக பார்த்தபோது இது லாபகரமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை ஏதோ ஒரு சில பகுதிக்கு என்பதைக் காட்டிலும், கிராமப்புற மின்சாரத் திட்டங்களுக்கும் இதை பயன்படுத்துவதற்கு அரசு ஏதாகிலும் பரிசீலிக்கிறதா? அதேபோல் நகர்ப்புறத்திலும் இதைச் செய்வதற்கு வாரியம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முதலில் சோதனை அடிப்படையில் இவைகளை ஆரம்பித்து நடவடிக்கை எடுத்துப் பார்த்து, இவைகள் வெற்றிகரமாக இயங்குகிறது என்று ஆராய்ந்த பின்னர், இத்தகைய கூட்டுறவு அமைப்புகளை நாம் மற்ற இடங்களுக்கும் விரிவுபடுத்த இருக்கிறோம். இப்போதுதான கும்பகோணத்தில் ஆரம்பித்து நடைமுறையில் இயங்கி வருகிறது. திருமயத்தில் இன்னும் ஆரம்பிக்க இருக்கிறோம். அடுத்து வந்தவாசியிலும் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மின் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைகள் எல்லாம் எப்படி இயங்குகின்றன என்பதைப் பார்த்துத்தான் செய்ய முடியும்.



1982 செப்டம்பர் 10]

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வாரியம் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மின்சாரத்தை எந்த விலைக்கு விற்கிறது. அவர்கள் அதை விநியோகிக்கும்போது அவர்கள் வசூலிப்பதில் எந்தக் கட்டணத்தில் வசூலிக்கிறார்கள் என்ற விவரம் அரசு தரப்பில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த கூட்டுறவு மின்சார நிறுவனங்கள், நாம் என்ன கட்டணங்களை மின் வாரியத்தின் மூலமாக அமுல்படுத்துகிறோமோ, அதன் அடிப்படையில்தான் அவர்கள் வசூலிக்கிறார்கள். ஆனால் மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்குக் கொடுக்கின்ற மின்சாரத்திற்குப் பெறுகின்றகட்டணம் யூனிட்டுக்கு 15 பைசாவாகும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த கிராமப்புற மின்சாரக் கூட்டுறவு சங்கங்களில் அமைக்கக் கூடிய இந்த மின்சாரத்தை பம்புசெட்டுகளுக்கும், இதர கிராமப்புற சிறு தொழில்களுக்கும் பயன்படுத்துவதற்கு அரசு மின்சார சப்ளை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதற்காகத்தான் இது அமைக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9-10]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது மின்சாரத்தை விநியோகிக்கும் பணியை மட்டும் செய்து வருகிறது. இப்படிப் பட்ட கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சிறிய அளவிலே அவர்களே மின்சாரத்தை உற்பத்தி செய்கிற அந்த முயற்சியை மேற்கொள்ள அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முன்வருவார்களானால் அரசு பரிசீலிக்கும்.

திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் சிறிய தொழில்களுக்கு யூனிட் ஒன்றுக்கு 50 பைசா வீதம் வசூல் செய்வது அதிகம் என்பதை அரசாங்கம் அறியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசு விதிக்கின்ற கட்டணங்களை மின்சார வாரியம் வசூலிக்கிறது; அதைத்தவிர அரசு வேறு ஒன்றும் அறியாது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று சொன்னார்கள். அவைகள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகப் பதிவு செய்யப்படுகின்றனவா அல்லது அரசாங்கமே நேரடியாகப் பதிவு செய்கின்றதா? அதற்காக யார் யார் பொறுப்பாக இருக்கிறார்கள்? அப்பிசியல்ஸ் அதிலே யாராவது கலந்து கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலமாகத்தான் பதிவு செய்கிறார்கள். மின்வாரியப் பொறியாளர் ஒருவரை அதற்கு நிர்வாக இயக்குனராகப் போட்டு இருக்கிறோம். அதற்கென ஒரு குழு (போர்டு) அமைக்கப்பட்டுள்ளது. அதிலே மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள், போன்ற அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். அதிகாரப்பற்றற்றவர்கள் யாரும் இல்லை.

தமிழ்நாட்டிலுள்ள பால் வழங்கும் மற்றும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

*வினா எண். 43—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் எத்தனை?

(ஆ) பால் உற்பத்தியாளர் சங்கங்கள் தமிழ்நாட்டில் எத்தனை?

(இ) இரண்டையும் ஒன்றாக்கும் உத்தேசம் உண்டா?

(ஈ) இரண்டின் மொத்த பால் உற்பத்தி எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, (அ) 30-6-82 வரை தமிழ்நாட்டில் உள்ள பால்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1,935.

(ஆ) 30-6-82-ல் தமிழ்நாட்டில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 4,952.

(இ) இல்லை. பால் வழங்கும் சங்கங்கள் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

(ஈ) இரண்டின் தினசரி சராசரி பால் உற்பத்தி 1982 ஜூன் மாதத்தில் நாளொன்றுக்கு 7,31,067 லிட்டர் ஆகும்.



காப்பாரப்பட்டியில் இயங்கிவந்த பால் குளிரூட்டும் நிலையம்.

*வினா எண். 44—திரு. இரா. அருணகிரி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்கம்புணரிக்கு அருகிலுள்ள காப்பாரப்பட்டியில் இயங்கி வந்த பால் குளிரூட்டும் நிலையம் செயல்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தெரியும்.

(ஆ) இங்கு இயங்கிவந்த பால் குளிரூட்டும் நிலையம் இலாபகரமாக இயங்காததால் அது திருப்பத்தூருக்கு மாற்றப்பட்டுள்ளது.

திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை மீண்டும் செயல்படுத்துவதற்கு அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிகிறது. ஆகவே, ஏற்கனவே இருந்த அந்த நிலையத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அந்த உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, பால் குளிரூட்டு நிலையங்களின் பொறுப்பில் இருக்கும் இரண்டு அதிகாரிகள் தவிர மற்ற பணியாளர்கள் தினக்கூலிகளாக இருப்பதால் பல்வேறு தவறுகளும், முறைகேடுகளும் நடப்பதாக அரசுக்குத் தகவல் வந்து இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி சிங்கம்புணரி அருகில் உள்ள நிலயத்தைப் பற்றியதாக இருப்பதால், அதைப் பற்றி விவரம் தெரிந்தால் கேட்கலாம்.

மதுரை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் ஏலக்காய்.

*வினா எண்: 45—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தற்பொழுது மதுரை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் ஏலக்காயின் அளவு என்ன?

(ஆ) அதன் மூலம் நம் மாநில அரசுக்கு ஆண்டுக்கு வருவாய் எவ்வளவு கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) 1980-81 சீசன்படி சுமார் 210 மெட்ரிக் டன்கள் ஆகும்.

(ஆ) மொத்தம் ரூ. 6,87,500.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மதுரை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஏலக்காய் அளவு 210 மெட்ரிக் டன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதன் மூலம் தமிழ்நாடு சர்க்காருக்கு மொத்தம் ரூ. 6,87,500 வருமானம் வந்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சமீப காலமாக, தமிழகத்தில் ஏலக்காய் உற்பத்தியானது பூச்சி தொல்லையாலும், மற்றவற்றினாலும் பாதிக்கப்பட்டு அதனால் அவர்கள் மிகவும் நஷ்டம் அடைந்து இருக்கிறார்கள். ஆகவே, அவர்களின் நலனைப் பாதுகாக்கின்ற வகையில், அரசாங்கத்தில் இருந்து உதவி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மலைப்பயிர் மற்றும் தோட்டக்கலைத் துறை அது பற்றிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்ன நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள் என்பதை விளக்கமாக அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலக்காய் ஒரு பாரின்-எக்ஸ்சேஞ்சு ஏர்னர். இதற்கு முன்னாலே தமிழ்நாட்டிலே அதை லீஸ் லேண்ட் என்று கொடுத்து, அதிலே ஏலக்காய் பயிர் செய்து வந்தார்கள். அதனால் நமக்கு அதிகமான அளவிற்கு வருமானம் வந்து கொண்டு இருக்கிறது. இப்போது லீஸ் லேண்ட் கொடுப்பது நிறுத்தப்பட்டு விட்டது. அதனால் வருமானம் குறைந்து இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, அந்த லீஸ் லேண்ட் கொடுப்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் சிந்தித்துப் பார்த்து, அதை நடைமுறைப் படுத்தி, அதன் மூலம் அந்த வருமானத்தை அதிகரிப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்வி இந்தத் துறையைப் பொறுத்தது அல்ல. அவருடைய யோசனை அரசு அளவிலே முடிவு செய்ய வேண்டும். அரசு அளவிலே, அது பற்றி ஆராயலாம்.





அதிக சர்க்கரை சத்துள்ள குறுகிய கால கரும்பு ரகம்.

* வினா எண் 46—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக சர்க்கரை சத்துள்ள குறுகிய கால கரும்பு ரகம் ஒன்றை (கோ.சி. 671) மத்திய அரசு ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைப் பயிரிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) தெரியும்.

(ஆ) கோ.சி. 671 என்ற கரும்பு ரகம் தமிழக சர்க்கரை ஆலைப் பகுதிகளில் 1978-79-ம் ஆண்டு முதல் பயிரிடப்பட்டு வருகிறது.

1982-83 ஆம் ஆண்டில், இந்த ரகத்தை மேலும் அதிக அளவில் பயிரிடத் தகுந்த ஏற்பாடுகள் தமிழக சர்க்கரை ஆலைகள் எடுத்து வருகின்றன.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, இந்த கோ.சி. 671 என்ற கரும்பு ரகம் 1981-82-ல் தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது? அதனுடைய சதவீத உற்பத்தி எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, 1981-82-ல் 38,276 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. சதவீதத்தைப் பற்றிய விவரம் இல்லை.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : தலைவரவர்களே, இந்தப் புதுரக கரும்பினால் ஏக்கருக்கு எத்தனை டன் உற்பத்தி கிடைக்கும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இதன் மூலம் 12 சதவீதம் சர்க்கரை மீட்பு கிடைக்கிறது.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, இந்த புதியரக கரும்பான கோ. சி. 671 இரண்டு வருஷத்திற்கு மூன்று அறுவடைகள் செய்யலாம் என்று ஆராய்ச்சித் துறை தெரிவிக்கிறது. இந்த மூன்று வெட்டுகளிலும் 30 டன்னுக்கு மேல் உற்பத்தியாகின்ற கரும்பை மேலும் பெருக்க விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் ஊக்கமளிக்கின்ற வாய்ப்பு இருக்கிறதா? அதற்காக ஆராய்ச்சித் துறையும், அரசும் என்ன ஆலோசனை செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இதை அதிகம் பயிரிட வேண்டுமென்ற வகையில் சர்க்கரை ஆலைகள் முயற்சி எடுத்து வருகின்றன. நடவு மானியமாக 300 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை அளிக்கப்படுகிறது. இதைப்போல மற்ற கரும்பு ரகங்களும் பிரபலமாகி இருக்கின்றன. எல்லா ரகங்களின் உற்பத்தியையும் பெருக்க சர்க்கரை ஆலைகள் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு மானியம் அளித்து ஊக்குவித்து வருகின்றன.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவரவர்களே, அதிகமாக உற்பத்தியைத்தருகிற கரும்பு ரகங்களைப் பயிரிட வேண்டுமென்று அரசு சொல்கிறது. அதுபற்றி ஆராய்ச்சிகளை எல்லாம் அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆனால் ஏற்கெனவே அக்ரீமென்ட் செய்யப்பட்டு, கரும்பு உற்பத்தி செய்த விவசாயிகளின் கரும்பை வெட்டாமல் விட்டிருக்கிறார்கள். இரண்டாவது, மூன்றாவது வெட்டுகள் விடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். வேலூர் சர்க்கரை ஆலையில் அப்படி செய்யவில்லை என்று புகார் வந்திருக்கிறதா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது பற்றி தகவல் இல்லை.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, இந்தப் புதிய ரக கரும்பு 38,276 ஏக்கரில் பயிரிடப்பட்டது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆலைவாரியாக பயிரிடப்பட்ட ஏக்கர் விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, இதைப்போன்ற புதிய ரக கரும்பை அதிகமாக உற்பத்திச் செய்கிறபோது விவசாயிகளிடமிருந்து அதைப் பெற்று, அரைத்து சர்க்கரையாக்குகின்ற வழிவகை எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறதா? கோவை மாவட்டத்தில் விளைகிற கரும்பை அரைக்க போதிய ஆலை இல்லை என்று சொல்லப்படுகிறதே. இந்தக் குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.



## Air Conditional shopping complex in the Centre of Madras City.

* Q. No. 47—THIRU R. UMANATH: will the Hon. the Minister for Local Administation be pleased to state:

(a) whether this Government have any propesal to construct an air-conditional shoping complex in the Centre of Madras City?

(b) if so; the detials thereof?

(c) whether this Government have any proposal to construct Cinema Theatre in the City of Madras; and

d) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) அண்ணா சாலைக்கு அருகில் கிரீம்ஸ் சாலையில் அலுவலகங்களில் மற்றும் கடைகள் வைப்பதற்கு ஏதுவாக சாதாரண பல மாடி கட்டிடம் இந்த ஆண்டு கட்டப்படும்.

(ஆ) ரூ. 44 இலட்சம் செலவில் இதைக் கட்ட அரசு நிர்வாக அனுமதி அளித்துள்ளது.

(இ) மாநகராட்சி ஒரு திரையரங்கை கட்ட அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

(ஈ) இந்த திரையரங்கை கட்டுவதினால் வர்த்தக ரீதியாக மாநகராட்சிக்கு பயனுள்ளதாக இருக்குமா என அரசுக்கு திருப்தி அளிக்கும் வகையில் அறிக்கை அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, கடைகளைப் பொறுத்தவரையில் அரசாங்கம் ப்ரப்போஸ் பண்ணக்கூடிய திட்டத்தில் எத்தனை கடைகள் அங்கே கட்டப்படும்? அந்தக் கடைகள் எப்படிப்பட்டவைகளாக இருக்கும்? அந்தக் கடைகளில் சாதாரண மக்கள் வாங்கக்கூடிய பொருட்கள் விற்கப்படுமா? அல்லது டூரிஸ்டுகள் வாங்கக்கூடிய பொருட்கள் விற்கப்படுமா? எந்தமாதிரியான பொருட்களை விற்பனைச் செய்யக்கூடிய கடைகளாக அவை இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, எல்லாப் பொருள்களும் ஏ டு இஸட் என்று சொல்கிற வகையில், எல்லாப் பொருள்களும் கிடைக்கிற வகையில், இந்தப் பல மாடிக் கட்டிடங்கள் கட்டப்பெறும். குறிப்பாக அந்தப் பகுதியில் எவ்வளவு கடைகள் தேவை என்று அந்தப் பகுதி மக்கள் நினைக்கிறார்களோ, அந்த அளவுக்கு, அவைகள் கட்டப்பெறும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, சமீப காலத்தில் சில முக்கியமான நகரங்களில் இப்படிப்பட்ட கடைகள் கட்டுகிற போது ஏர் கண்டிஷன் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அப்படிப்பட்ட புரொபோசல் ஏதாவது இந்தப் பிரபோஸ்ட் கடைகளில் போடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அப்படி இருந்தால் அவைகளுக்கு வாடகை அதிகமாக இருக்குமே, அதனால் பொருள்களின் விலையும் அதிகமாக்கப்படும். ஆகவே, ஜனங்கள் பாதிக்காத முறையில் அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, டெல்லியிலே இருப்பதைப்போல ''பாலிகா பஸார்'' என்று சொல்லப்படுகிற குளிர் சாதன கருவிகள் பொருந்திய கடைகளை கட்டுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுபோன்ற கடைகளில் வாடகைகளும் அதிகமாகத்தான் இருக்கிறது. அதனால் பொருள்களின் விலையும் சற்று கூடுதலாகத்தான் இருக்கும். ஆனால் அங்கே போய் வாங்குகிறவர்களும் சாதாரண மக்களாக இல்லாமல் பணக்காரர்களாக, அதிக விலை கொடுத்து வாங்கக்கூடிய தகுதி பெற்றவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கும் கூட, அப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்குவதன் மூலமாக மாநகராட்சியின் வருமானத்தை அதிகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இது போன்ற பிரபோசலை நாம் கொண்டு வரயிருக்கிறோம்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, 'ஏ டு இஸட்' அடங்கிய 26 சாமான்கள் தான் அந்தக் கடைகளில் கிடைக்கும் என்று சொன்னார்கள். அப்படியானால் வேறு சாமான்கள் கிடைக்காதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஏ டு இஸட் என்று சொல்கிறபோது, அந்த 26 எழுத்துக்களிலேயே எல்லாப் பொருள்களின் பெயர்களும் அடங்கிவிடுகின்றன என்ற பொருளில் கூறினேன்.

## தன்னிறைவு திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட திட்டங்களைப் பராமரிப்பதற்கான திட்டம்.

* வினா எண் 48—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட திட்டங்களைப் பராமரிக்க வரும் ஆண்டுகளில் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட உள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.





(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயத் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் இந்த தன்னிறைவுத் திட்டம் செம்மையாகத் திட்டப்பெற்று, நமது கிராமங்கள்தோறும் நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வரும் வேளையில், செய்யப்பட்டிருக்கிற அந்த வேலைகளை பராமரிக்க ஒன்றியங்களில் சரியான நிதி வசதி இல்லை. அதற்காக அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில ஒன்றியங்களின் நிதிநிலைமை மிகவும் மோசமாக உள்ள காரணத்தால், அரசு அவைகளுக்கு என்னென்ன செய்யவிருக்கிறது என்பதை தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தன்னிறைவுத் திட்டம் தற்போது 3—வது கட்டத்தில் செயலாற்றிக் கொண்டு வருகிறது. நாம் இதுவரையில் இந்த 3—வது கட்டம் செயல்படுவதையும் சேர்த்து மொத்தம் 227 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். ஆனால் பல்வேறு ஒன்றியங்களிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும், அப்படி செய்து முடிக்கப்பட்ட வேலைகளை பாராமரிப்பதற்கு, நிதி நிலை போதுமானதாக இல்லை என்பதை என்னிடத்தில் பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் கவனித்து, எந்தெந்த ஒன்றியங்களுக்கு எந்தெந்த வேலைகள் எந்தெந்த அளவில் செய்யப்பட்டிருக்கிறதோ, அவைகளை தக்க அளவில் பராமரிப்பதற்காக, மெயின்டெனன்ஸுக்காக, எவ்வளவு பணம் தேவை எனப் பார்த்து, அதனை ஒதுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றுகிற நேரத்தில் ஒரு சில வேலைகள் முடிக்கப்பெறாமல் பாதியிலேயே நிறுத்தி வைக்கப்பட்டன. சில வேலைகள் விடுபட்டிருக்கின்றன. அந்த வேலைகளும் இதில் செய்து முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இதுவரையில் எந்தெந்த கிராமங்களில் பணிகள் விடுபட்டு போயிருக்கின்றனவோ, அந்தக் கிராமங்களில் எல்லாம் அந்தப் பணிகள் மீண்டும் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் அடுத்த ஆண்டு எடுக்கப்படும். எல்லாக் கிராமங்களுக்கும் இந்தத் தன்னிறைவுத் திட்டம் போய்ச் சேருகின்ற வகையில் அரசு செய்து முடிக்க திட்டமிட்டுள்ளது.

திரு. கே. தறுக்கோடித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு கொண்டு வந்த இந்த தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நமது கிராமங்களில் உள்ள மக்கள் மிகவும் பயனடைந்துள்ளார்கள். அந்தக் கிராமப்புற மக்களுக்கு செய்து கொடுத்த பணிகளில் இணைப்புச் சாலைகள் அமைத்தல், குடிதண்ணீர் வசதி போன்றவைகள் தொடர்ந்து பராமரிக்க வேண்டியவை. அப்படி பராமரிக்க போதுமான நிதி வசதி ஊராட்சி ஒன்றியங்களில் இல்லை. அவைகளுக்கு ஏற்பாடு செய்து தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறி யிருக்கிறார்கள். அப்படிச் செய்யப்படும்போது, அந்தப் பரா மரிக்கும் வேலைகளை யார் யார் மூலம் ஒப்படைக்க அரசினர் உத்தேசித்திருக்கிறார்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, குடிதண்ணீர் பிரச்னையைப் பொறுத்தவரையில் கை-பம்புகள் எனப்படும் ஹேண்ட் பம்புகளை பராமரிக்கிற பணி ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்தது என ஆணை பிறப்பிக்கப்பட இருக் கிறது. ஆனால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், மோட்டார் பம்ப் செட்டுகள் போன்றவைகளுக்கு குடிநீர் வடிகால் வாரியத் தின் மூலமாக செய்யப்பட்டு வருகிறது. ஆனால் நமது தொழி லாளர் நல அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக் கைகளின் காரணமாக, பல்வேறு நிலைகளில் ஏதாவது குறைகள் வந்தாலும் கூட, அவைகளை களைவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். ஆனாலும் பராமரிக்கிற சூழ்நிலையை அரசு ஏற்றுக் கொண்டு நல்ல நிலையை உண்டாக்கும்.

திரு. டி. மணி ; மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, விடுபட்டு போன கிராமங்களைச் சேர்த்துக் கொள்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள. ஆனால் முடிக்கப்பட்ட பணிகள் சில பூராவும் முடியாமல் சிமெண்ட், கம்பி போன்ற வைகள் கிடைக்காததன் காரணத்தால் காலம் நீண்டு கொண்டே போகின்றன. எனவே அதைத் துரிதப்படுத்துவதற்கு அரசு நட வடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நமக்கு வேண்டிய சிமெண்ட் போதுமானதாக இல்லை என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். ஆனால் இப்போது அரசு சிமெண்ட் கிடைக்காவிட்டாலும் ஒப்பன் மார்க்கெட்டிலே வேண்டிய அளவுக்கு சிமெண்ட் வாங்கிக்கொள்ளலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது. எனவே சிமெண்டைப் பொறுத்தவரையில் எந்தவிதமான தட்டுப்பாடும் இருக்காது, கம்பியைப் பொறுத்த வரையில் தற்போது தமிழகத்தில் தட்டுப்பாடு இல்லை என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கின்றது.





திரு. கே. ஆர். சுந்தரம் : தன்னிறைவுத் திட்டத்தின் மூல மாக கட்டப்பட்ட. கட்டிடங்கள் மற்றும் ஏற்கெனவே பஞ் சாயத்து யூனியன்களின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கின்ற பள்ளிக் கட்டிடங்கள், மேல்நிலைத் தொட்டிகள் ஆகியவை சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. எனவே அவற்றை பராமரிப்பதற்குப் போதிய நிதி வசதியினையும், வேண்டிய ஊழியர்களையும் நியமிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல அவை எல்லாம் சமுதாய உடைமைகள். அந்தச் சமுதாய உடைமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. எனவே பராமரிக்கின்ற பொறுப்பினையும் அரசு ஏற்றுக்கொண்டு எந்தெந்த ஒன்றி யங்களில் பணம் தட்டுப்பாடாக இருக்கின்றதோ அவற்றைச் சரிக்கட்டுகிற வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு செ. இராமலிங்கம் ; தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டத்திற்காக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் கூடுதல் பொறி யாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் தன்னிறைவுத் திட்டங்களை எடுத்துக்கொள்கின்றபோது ஒன்றியப் பொது நிதி வேலைகளையும் கூடவே எடுத்து நிறைவேற்றுவதற்கு அரசு உத்தரவிடுமா? ஏனென்றால் ஒன்றியப் பொது நிதி வேலைகள் பாதிக்கப்பட்ட நிலைமையில் தற்போது இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; கேள்வி தன்னிறைவுத் திட்டம் பற்றியது.

திரு ஆர். தியாகராசன் ; தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் தன்னிறைவு முடிந்துவிட்டது என்று ஓர் ஆண்டிலேயே வேலைகளை முடித்து விட்டார்கள். ஆனால் பாலங்கள் போன்றவற்றின் வேலைகள் ஒரு இலட்சத்திற்கு மேலே போனால் அவற்றைத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நிறைவேற்ற முடியாது என்றும், அவற்றைப் பிறகு நடத்து கிறோம் என்றும் சொல்கிறார்கள். அதுபோல பல கட்டிட வேலைகளும் நின்றுவிட்டன. சிமெண்ட் போன்றவை இல்லாத தால் கிராமங்களில் கட்டிட வேலைகள் நிற்கின்றன. தன் னிறைவுத் திட்டம் முடிந்துவிட்டது என்று சொல்லி கமிஷனர் மாற்றப்பட்டு விட்டார். எனவே ரோடுகள் பராமரிக்கப் படாமல் இருக்கின்றது. மற்ற வேலைகளும் தடைபட்டு நிற் கின்றன. எனவே அவற்றை மீண்டும் தொடங்குவதற்கு அரசு உத்தரவிடுமா?

[1982 செப்டம்பர் 10

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு ; தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம் பூர்த்தி ஆகிவிட்டது என்று நான் சொல்லவிலலை. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் 3 கட்டமாக எடுத்துக்கொள்ளப் பட்டன. இப்போது இரண்டாவது கட்டத்தைத் தாண்டி மூன்றாவது கட்டத்திற்குப் போய் இருக்கிறோம், ஆனால் முதல் கட்டத்திலும், இரண்டாவது கட்டத்திலும் என்னென்ன பணிகள் எந்தெந்தக் கிராமங்களில் விடுபட்டிருக்கின்றன என்று பார்த்து அவை மீண்டும் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தன்னிறைவு என்று சொல்லக்கூடிய வார்த்தைக்கு என்ன முழு அர்த்தமோ அந்த வகையில் கிராமங்கள் தன்னிறைவு பெற வேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய சீரிய நோக்கமாகும். ஆகவே அந்த நோக்கத்தின் அடிப்படையில் கண்டிப்பாகச் செயல்படும். ஆனால் பால வேலைகளைப் பொறுத்தவரையில் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட வேலைகள் கண்டிப்பாகத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. எனவே அவற்றை நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையின் மூலமாக அந்தப் பால வேலைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் எந்தப் பகுதிகளில் பால வேலைகள் விடுபட்டிருக்கின்றதோ அந்த வேலைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ஏ. தங்கராசு ; மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னிறைவுத் திட்டத்திற்கு வெளி மார்க்கட்டிலே இருந்து சிமெண்ட் வாங்கிக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்கள். ஆனால் அரசாங்கத்தின் சிமெண்ட் விலைக்கும் வெளி மார்க்கெட் விலைக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. எனவே வெளி மார்க்கெட்டில் விலை அதிகமாக இருப்பதாகத் தெரிவித்து அந்த வேலைகளைச் செய்பவர்கள் வாங்குவதற்குத் தயங்குகிறார்கள். எனவே இந்த நிலைமையைப் போக்குவதற்கு அரசாங்க்ம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : அரசாங்கம் கொடுக்கக் கூடிய சிமெண்டின் விலை ஏறத்தாழ 33 அல்லது 34 ரூபாய் தான். ஆனால் வெளி மார்க்கெட் விலை சுமார் 61 அல்லது 62 ரூபாய் இருக்கின்றது. எனவே இவற்றை வெளியிலே இருந்து வாங்கிக்கொள்ளலாம் என்பதை உணர்ந்துதான் எஸ்டிமேட் போடப்படவேண்டும் என்று பொறியாளர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எனவே அதற்கேற்ற முறையில் தான் எஸ்டிமேட் தயார் செய்யப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



சென்னை—கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் கும்மிடிப்பூண்டிக்கு அருகில் கட்டப்பட்டுள்ள பாலம்.

*வினா எண் 49— திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) சென்னை-கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் கும்மிடிப்பூண்டி அருகில் புதியதாகக் கட்டப்பட்ட பாலம் பழு தடைந்துள்ளதால் பழைய பாலத்திலேயே வாகனங்கள் செல்கிறதா?

(ஆ) ஆம் எனில் புதிய பாலத்தை சீரமைக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு ; (அ) ஆம்.

(ஆ) புதிதாகக் கட்டப்பட்ட பாலம் பழுதடைந்து விட்டதால், அந்தப் பாலத்திற்கருகில் வேறு இடத்தில் புதிய பாலம் கட்டுவதற்காக ரூ. 31,83.500/ மதிப்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(முற்பகல் 9.30)

திரு எம். எஸ். மாணிக்கம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய பாலம் எந்த ஆண்டு கட்டப்பட்டது அதைக் கட்டியது யார்? எதனால் அந்தப் பாலம் பழுதடைந்தது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; தலைவர் அவர்களே. கடந்த 1972லே கட்டப்பட்டது அது சரியாக கட்டப்பட வில்லை என்ற காரணத்தினால் பழுதடைந்திருக்கிறது.

திரு எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972-லே கட்டப்பட்ட பாலம் பழுதடைந்து 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பாலத்திலே இன்றும் பாதை சென்று கொண்டிருக்கின்ற காரணத்தினால், இப்படிப் பட்ட குறைபாடுகள் வராமல் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தவறு செய்கிறவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

சென்னை நகரில் வீடு கட்டும் பிளான் அனுமதிக்கப்படுவதற்கான புதிய திட்டம்.

வினா எண் 50—திரு. பெ. சு. திருவேங்கடம் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை நகரில் வீடு கட்டும் பிளான் அனுமதி

கோரும் நபர்கள் ஐந்து மரங்களை நட்டு சான்று காட்டினால் தான் பிளான் அனுமதிக்கப்படும் என்ற திட்டத்தை செயல் படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) எப்பொழுது முதல் அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ), (ஆ) மற்றும் (இ) இது குறித்த செயல்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை ஆனால், இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை செயல்படுத்த மாநகராட்சி ஆய்வு செய்து வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மாநகராட்சி ஆய்ந்து கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். பிளான் கொண்டு வருபவர்கள் மரம் நடுவதற்கு அவர்களுக்கு சொந்தமான இடத்திலே மரத்தை நட வேண்டுமா? அல்லது எங்கே நடுவது என்பதை விளக்கினால், உறுப்பினர்கள் துணைக் கேள்வி கேட்பதற்கு வசதியாக இருக்கும். இதை விளக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இதெல்லாம் முடிந்த பின் விளக்கமாக பதில் சொல்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பை அரசாங்கத்திற்கு மாநகராட்சி அனுப்பியிருகக வேண்டும். ஒருவர் கட்டிடம் கட்டுவதற்கான பிளானைக் அனுப்புகிறார். அவர் தன் சொந்த இடத்திலே மரங்களை நட வேண்டுமா? அல்லது அந்த மரங்களை எங்கே நடுவது என்பதைச் சொல்ல வேண்டும். விடையில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்று சொல்வதால் அமைச்சர் அவர்கள் இதை மேலும் விளக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, எங்கே அவர்கள் மரத்தை நடவேண்டுமென்று நினைக்கிறார் களோ, அந்த இடத்தில் நட வேண்டும். பக்கத்து வீட்டில் அல்ல.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள எரிவாயு உற்பத்தி செய்யும் சாதனம்

*வினா எண் 51—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மனையில் உள்ள 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள எரிவாயு உற்பத்தி செய்யும் சாதனம் செயல்படுகிறதா?

(ஆ) செயல்படவில்லை என்றால் எவ்வளவு காலம் செயல்படவில்லை?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) செயல்படவில்லை. (ஆ) ஜூலை 1968-ல் பழுதுபார்த்து, 9.7.1977க்குப் பிறகு முழுமையாக செயல் படவில்லை.

திரு மு. அப்பாதுரை; பேரவைத்தலைவர் அவர்களே, ஏறத்தாழ 14 ஆண்டு காலமாக 10 இலட்சம் ரூபாய் செலவில் கட் டப்பட்ட அந்த சாதனம் செயல்படாமல் இருக்கிறது. அதே முறையில் கல்லூரிக்கு இன்றைக்கு பல இலட்ச ரூபாய் செலவில் எரிபொருள் வாங்குகிறார்கள். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக அதைச் செயல்படுத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு கியாரண்டி பீரியட் சொடுத் திருந்தார்கள். 12 மாதங்களுக்கு கொடுத்திருந்தார்கள். அதில் 1968 ஜூலை மாதத்தில் கிராக்ஸ் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவந்தது. அதற்குப் பிறகு, பார்த்ததிலே 15 மாதங்கள் ஆகிவிட்டது என்பதற்காக, அதற்கு கியாரண்டு பீரியட் முடிந்து விட்டது என்பதற்காக, அவர் அதைச் செயல்படுத்துவதற்கு முன்வரவில்லை. அதற்குப் பிறகு 1973 ஆம் ஆண்டு அது ஒரு பெரிய பிரச்னையாக சட்டசபையில் விவாதம் நடந்தது அதற்குப் பிறகு அதைப்பற்றி பல்வேறு புகார்கள் வந்ததற்கு பிறகு, விசாரணை நடந்தது அதற்கு In the Circumstances repo ted by the Director of Medical Education, it is for order whether the matter may be dropped என்று கேட்கப்பட்டது. அதற்குப் பிறகு 'மே பி டிராப்ட்' என்று 1.11.73 அன்று அன்றைய அமைச்சரால் உத்தரவிடப் பட்டிருக்சிறது. மீண்டும் நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அது நியாயமில்லை என்று நான் என்னுடைய உத்தரவைச் சொல்லியிருக்கிறேன். எனக்கு கோப்பு வந்த நேரத்தில், I fully endorse the views of the Health Secretary. I would like the responsibility to be fixed and strangent action taken agaiust the officer concerned however I and mighty be the officer may be This should be done expeditously.

என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே பழுது பட்டதை போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மீண்டும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும், யார் குற்றவாளி என்று பார்த்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவு போட்டிருக்கிறோம். இவ்விஷயம் பி.ஏ.சி. கமிட்டிக்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

திரு மு. அப்பாதுரை , பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உற்பத்திச் சாதனம் தொடங்கினால் இன்றைக்கு திருநெல்வேலி பாளையங்கோட்டை, மேலப்பாளையம் ஆகிய 3 நகரா

களுக்குமே எரி வாய்வு சப்ளைச் செய்யக்கூடிய அளவுக்கு கேப்பாசிட்டி அதற்கு இருப்பதாக சொல்லப்படுவது உண்மையா? அப்படியானால பல ஆயிரக்கணக்கான ரூபாய் அதை மெயின் டெயின் செய்வதற்கு செலவழிக்கப்படுகிறது என்பது உண்மையா இன்று அதை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் இல்லை என்றால் ஆயிரக்கணக்கான ரூபாய் வீணாக செலவு ஏற்படுவதை தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. இப்போது உடனடியாக புதுப்பித்து அதை செயல் முறையில் கொண்டு வந்து நமக்கு பயன் அளிக்கக்கூடிய நிலமைகளை ஏற்படுத்தவேண்டும் என்று தான் உத்திரவு போட்டிருக்கிறோம். இன்றைக்கு நாம் பணத்தையும் ஒதுக்கி இருக்கிறோம்.

திரு ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது செயல்படாமல் இருப்பதற்கு காரணம் யார் என்று ரெஸ்பான்ஸிபிளிட்டி பிக்ஸ் பண்ண வேண்டும் என்று உத்தரவு போட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் யார் மீது ரெஸ்பான்ஸிபிளிட்டி பிக்ஸ் பண்ணப்பட்டிருக்கிறது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே, தொடர்ந்து இலாக்காவிலிருந்து இது கூட்டு பொறுப்பு என்றும், யார் ரெஸ்பான்ஸபிளிட்டி என்று பிக்ஸ் பண்ண முடியாது என்றும் ஒவ்வொரு தடவையும் நாம் கோப்பு அனுப்புகிற போது பதில் வந்திருக்கிறது. இதற்கு சாட்சியங்கள் இல்லை என்று பதில் வந்திருக்கிறது. நாம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. என்ன இருந்தாலும் எவ்வளவு பெரிய உயர் மட்ட அதிகாரியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற முறையில் சொல்லியிருக்கிறோம். எப்படியாவது இதை ஒரு அசுரன்ஸாக நான் இங்கே சொல்லி அது அசுரன்ஸ் கமிட்டிக்கு வரவேண்டும் என்பதற்காக நான் சொல்லியிருக்கிறேன். எப்படியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம்.

### அரசு மருத்துவமனைகளிலுள்ள அறுவை சிகிச்சை அறைகளில் அவசர விளக்குகள் பொருத்தும் திட்டம்

*வினா எண். 52—திரு வி. பாலகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் அவசர விளக்குகள் அறுவை சிகிச்சை அறைகளில் பொருத்தப்படும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது பொருத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே, (அ) ஏற்கெனவே பல அரசு மருத்துவமனைகளில் அவசர விளக்குகள் அறுவைச் சிகிச்சை அரங்கில் பொருத்தப்பட்டுள்ளன.





(ஆ) மாவட்ட மருத்துவ அலுவலர்களுக்கு இதுவரை அவசர விளக்குகள் இல்லாத அரசு மருத்துவமனைகளில் அவசர விளக்குகள் பொருத்துவதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டு உள்ளது.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, குறைந்தபட்சம் மாவட்ட தலைமை மருத்துவ
மனைகளில் ஆவது ஜெனரேட்டர் இயந்திரங்கள் வாங்கி
வைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இரண்டு மாவட்ட தலைமை மருத்துவ
மனைகளைத் தவிர மற்ற எல்லா மாவட்ட தலைமை மருத்துவ
மனைகளிலும் இந்த இயந்திரங்கள் பொருத்த ஏற்பாடு செய்
திருக்கிறோம். அந்த இரண்டுக்கும் நடவடிக்கை எடுக்க இப்
போது உத்திரவு போட்டிருக்கிறோம்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே இந்த எமர்ஜென்ஸி லெம்ஸ் ஏற்படுத்தவேண்டும்
என்பதற்கு காரணம், திடீரென்று கரண்டு இல்லாமல் போகும்
போது இதை பயன்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான்,
கரண்டு வீக் ஆக வந்து அதன் காரணமாக ஆப்பரேஷன்
தியேட்டர்களுக்கு மட்டும் இல்லாமல் அங்கே இருக்கிற
இயங்குகிற எக்ஸ்ரே மிஷன்கள் உட்பட்ட பல மிஷன்கள்
இயங்காமல் போகக்கூடிய அபாயம் தொடர்ந்து இருந்துகொண்
டிருக்கிறது. அதற்காக கோவையிலே சி.எம்.சி. மருத்துவ
மனையில் தனியாக ஒரு பெரிய டிரான்ஸ்பார்மர் ஏற்படுத்த
வேண்டும் என்று உத்திரவு போடப்பட்டிருக்கிறது. அது
நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?
அதை நடத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: உடனடியாக நட
வடிக்கை எடுத்துக்கொண்டாகிவிட்டது. வோல்டேஜ் டிராப்
என்ற பிரச்சினை எல்லா வீடுகளிலும் நடைபெறுகிறது.
அதற்கு ஸ்டெபிளைஸர்தான் பொருத்தப்படவேண்டும்.
இல்லையென்றால் மெஷின் பழுதுபட்டுக் கெட்டுப்போய்விடும்.
ஆகவே எல்லா இடங்களிலும் ஸ்டெபிளைஸர் கொடுக்கச்
சொல்லியிருக்கிறோம். டிரான்ஸ்பார்மர்களைப் பொறுத்த
வரையில் எல்லா மருத்துவமனைகளிலும் கல்லூரிகள் இணைக்கப்
பட்ட மருத்துவமனைகளில் — கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச்
செய்திருக்கிறோம்.

[1982 செப்டம்பர் 10

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளில் மின்சார விளக்கு பொருத்துவது சம்பந்தமான முக்கியமான கேள்வி இது. நான்கூட தஞ்சாவூரில் மருத்துவமனைக்கு சென்றிருந்தேன், ஒருவரைப் பார்ப்பதற்கு. 8 மணியிலிருந்து 9 மணி வரையில் மின்சாரம் நின்றுவிட்டது, மாத்திரை பெறக்கூடியவர்கள், ஊசி போடப்படுகிறவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசு மருத்துவமனைகள் சம்பந்தப்பட்ட கேள்வி. மின்சாரம் ஊர் பூராவும் சில சமயங்களில் தடைபடுகிறது என்றால் அதைப்பற்றி இந்த அமைச்சர் பதில் சொல்ல முடியாது. அது வேறு.

மன்னார்குடி அரசினர் மருத்துவ மனையின் தகுதியை

உயர்த்தும் திட்டம்.

* வினா எண். 53—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி அரசினர் மருத்துவ மனையின் தகுதி நிலையை உயர்த்தக் கோரி 14—7—1980 அன்று அரசுக்கு விண்ணப்பம் வந்ததா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மன்னார்குடி அரசினர் மருத்துவமனையின் தகுதியை உயர்த்தக்கோரி கீழ்க்கண்ட விஸ்தரிப்பு வேலைகள் அம்மருத்துவமனைக்குத் தேவையென்று குறிப்பிட்டு 14—7—80-ம் நாளிட்ட சட்டமன்ற உறுப்பினர் திரு. அம்பிகாபதியின் கடிதம் மருத்துவப் பணி மற்றும் குடும்பநலத்துறை இயக்குநருக்கு வந்துள்ளது.

(1) குடும்ப நல அறுவை சிகிச்சை அரங்கு.

(2) குடும்ப நல அறுவை சிகிச்சைக்கான 12 படுக்கைகள் கொண்ட அரங்கு

(3) காச நோய் உள் நோயாளிகள் பகுதி

(4) பால்வினை நோய் பகுதி

(5) 'சி' வகுப்பு தனி நோயாளிகள் பகுதி

இவைகள் வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது.



1982 செப்டம்பர் 10]

திரு. மு. அம்பிகாபதி : மன்னார்குடி தாலுகா விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்து வாழுகின்ற பகுதி. தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகமாக குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை நடைபெறுவது மன்னார்குடி மருத்துவமனையிலேதான். ஒரு நாளைக்கு ஆயிரம் பேர்கள் வெளி நோயாளிகளாக வந்துபோகிறார்கள். இவ்வளவு ஜனநெருக்கம் மிக்க அந்த மருத்துவ மனைக்கு சிறந்த முறையில் இத்தகைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதற்காக 25—7—81 அன்று நம்முடைய ஹெல்த் டிபார்ட்மெண்டிலிருந்து மத்திய அரசுக்கு — நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கடிதம் எழுதிய பிறகு அதன் தொடர்ச்சியாக — நாம் ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறோம். போஸ்ட்பார்ட்டம் பிரிவு, பேமிலி பிளானிங் அறுவை சிகிச்சைக்கு உதவியாக ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று கேட்டு, போஸ்ட்பார்ட்டம் எல்லைக்குள் கொண்டுவரப்படவேண்டுமென்று கேட்டு எழுதியிருக்கிறோம். விரைவிலே பதில் வரும் என்று நினைக்கிறேன்.

கள்ளக்குறிச்சி அரசினர் மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் திட்டம்.

* வினா எண். 54—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி அரசினர் மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி அரசினர் மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் திட்டம் 1982-83 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும்.

போக்குவரத்துக் கழக கட்டிடங்களில் தொழிற்சங்கங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம்

* வினா எண். 55—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்திலுள்ள போக்குவரத்துக் கழக கட்டிடங்களில் தொழிற்சங்கங்களுக்காக இடம் கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை சங்கங்களுக்கு எங்கெங்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது?

(இ) இன்னும் எத்தனை சங்கங்களுக்கு இடம் வழங்கப்பட வேண்டி உள்ளது?

(ஈ) இடம் வழங்குவதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) 11 சங்கங்களுக்கு அண்ணா, பல்லவன் (பெருநகர்), பல்லவன் (புறநகர்) மற்றும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகங்களால் அப்போக்குவரத்துக் கழக கட்டிடங்களில் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) & (ஈ) தொழிற்சங்க அலுவலகங்களுக்கு போக்குவரத்துக் கழக கட்டிடங்களில் இடவசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நிபந்தனைகள் ஏதுமில்லை. இருந்தபோதிலும், அங்கீகரிக்கப்பட்ட தொழிற் சங்கங்களுக்கு போக்குவரத்துக் கழக கட்டிடங்களில் இருக்கும் இட வசதியைப் பொறுத்து, இடம் அளிக்கப்படுகிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு இடம் அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எந்த எந்த சங்கங்கள் அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றன? தொழிலாளர்கள் சங்கங்கள் அங்கீகாரம் கோரி அரசுக்கு மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். அரசு அதைப்பற்றி பரிசீலனை செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 11 சங்கங்களுக்கு நாம் இதுவரை கொடுத்திருக்கிறோம். அதிலே எல்லா சங்கங்களும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள். இதுபோக மற்ற சங்கங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் எதுவும் கேட்காத காரணத்தினால் இதுவரை கொடுக்கப்படவில்லை. அப்படி அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் ஏதாவது மனுக்கள் கொடுத்திருப்பார்களானால் அதைப் பரிசீலிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகாரம் பெற சங்கங்கள் இதுவரையில் கேட்கவில்லை என்று சொல்கிறார்கள். அங்கீகாரம் பெறுவதற்கு அரசாங்கம் என்ன நிபந்தனைகளை விதித்து இருக்கிறது? என்னென்ன நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் அரசாங்கம் அங்கீகாரம் அளிக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகாரம் பெறுவதற்கான சட்டத்திட்டங்களின் வகையில் யார் யார் அந்த அங்கீகாரத்திற்காக கேட்கிறார்களோ அதை இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே அதன் மூலமாக அதன் மீது ... அளிக்கப்படும்.



திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 11 சங்கங்களுக்கு இடம் கொடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்குத்தான் இடம் கொடுக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். அப்படியானால் அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய அங்கீகாரம் என்பதே ரிஜிஸ்டர் செய்யப்பட்டு அந்தந்த கழகங்களில் வேலை செய்யக்கூடிய சங்கங்களை அங்கீகரித்து அவர்களுக்கு இடம் கொடுப்பதற்காக அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ளதா? அந்த அங்கீகாரம் என்பதற்கு வேறு ஏதாவது விசேஷமான அடிப்படையில் அளிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகாரம் பெறுவது என்பது பதிவு செய்தால் மட்டும் போதாது. தொழிலாளர் துறை மூலம் பரிந்துரை செய்யப்பட்டு எந்தெந்த கழகங்களில் பணி செய்துகொண்டிருக்கிறார்களோ, எங்கெங்கு தொழிற்சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கிறதோ அதன் மூலமாக அங்கீகாரம் பெற வேண்டும். அப்படி பெறுவதை தான் அங்கீகாரம் பெறப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகாரம் நிர்வாகம் கொடுக்காவிட்டால், 'எவாலுவேஷன் இம்ப்ளிமெண்டேஷன் கமிட்டி' என்று இருக்கிறது. அந்த கமிட்டிக்கு தொழிற்சங்கங்கள் எழுத வேண்டும். அந்த கமிட்டி பல்வேறு பிரச்னைகளை ஆராய்ந்து, உறுப்பினர்கள் தொகை என்ன என்பதை பார்த்து, அதற்கு மேல் அது பரிந்துரை செய்கிறது. பரிந்துரைக்கு மேல் அங்கீகாரம் செய்யப்படுகிறது. பொதுவாக தொழிற்சங்கங்கள் 'கோட் ஆப் கான்டக்ட்' என்று இருக்கிறது. அதை பின்பற்ற வேண்டும். அங்கத்தினர்கள் தொகை அதிகமாக இருந்தாலும் கூட 'கோட் ஆப் கான்டக்டை' பின்பற்றாத தொழிற்சங்கத்திற்கு நிர்வாகம் அங்கீகாரம் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது நியாயமானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்வது நல்லது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அது தொழிற்சங்க வாதிகள் அத்தனை பேருக்கும் தெரியும் என்று நான் நினைக்கிறேன். உங்களுக்கும் தெரிந்தது தான், தெரியாதது அல்ல; ஆகவே அது புது விளக்கம் இல்லை. (கூச்சல், குழப்பம்)

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, பிரச்னை அது அல்ல. அந்த போர்டிலே ஒதுக்கக்கூடிய அந்த அங்கீகாரத்திற்கு....

[1982 செப்டம்பர் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரம், விவாத நேரமில்லை. (குறுக்கீடு) உப கேள்வி போடுங்கள், தொழிற்சங்க விவகாரங்கள் உங்களுக்கு எல்லாம் அத்துபடியானவை. இதை நான் விவாதத்திற்கு எடுத்துக்கொண்டால் ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 11 சங்கங்கள் அங்கீகரிக்கப்பட்டது என்று சொன்னார்கள். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு தான் இடம் கொடுக்கிறது என்று சொன்னால் அப்போது இந்த 11 சங்கங்களை எப்படி அங்கீகரித்தார்கள்? அதற்கு என்ன 'யார்ட்-ஸ்டிக்' போட்டார்கள்? அதை அவர்கள் சொல்லவில்லை, அதைச் சொல்ல வேண்டும்.

(பதில் இல்லை)

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, அரசுத் துறை நிறுவனமாகிய இந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் ஒரு தொழிலுக்கு ஒரே சங்கம் என்ற கோட்பாட்டை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இரகசிய வாக்கெடுப்பு மூலமாக பிரதிநிதித் துவம் உள்ள சங்கம் எது என்று தீர்மானித்து அந்த முறையிலே அங்கீகாரம் வழங்குவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே போக்குவரத்துத் துறைக்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை. தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தான் அதை பரிந் துரை செய்ய வேண்டும். இப்போது அவர்கள் சொல்லிய கருத்து மத்திய அரசாங்கம் அதை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த துறையின் மூலமாக பரிந்துரை செய்கிறபோது நிச்சய மாக ஏற்றுக்கொள்வார்கள்; போக்குவரத்துத்துறைக்கு எந்த தடையும் இல்லை. இங்கே மாண்புமிகு ரமணி அவர்கள் ஒன்றை குறிப்பிட்டார்கள். எந்தெந்த தொழிற்சங்கங்களுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது அல்லது அங்கீகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். அதிலே அண்ணா போக்கு வரத்துக் கழக அண்ணா தொழிற் சங்கத்திற்கு சேலத்தில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழக அண்ணா தொழிற்சங்கத்திற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐ.என்.டி.யூ.சி. போக்குவரத்து தொழிற்சங்கத்திற்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. இது ஐ.என்.டி.யூ.சி. –யுடன் இணைக்கப் பட்டது. ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் எம்ப்ளாய்மென்ட் ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன்; அது தொழிலாளர் முன்னேற்ற சங்கத்துடன் இணைக்கப்பட்டது; பொதுவாக இருக்கக்கூடிய தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழகங்களில் தொழில்நுட்ப மேற்பார்வை தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எச்.எம்.எஸ்.–ஐ சார்ந்த அந்த தொழிற்சங்கத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.



1982 செப்டம்பர் 10]

பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே அண்ணா சாலையுடன் இணைக்கப்பட்ட தொழிற்சங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக் கிறது. குரோம்பேட்டையில் உள்ள ஒர்க்ஷாப்பிலே இணைக்கப் பட்ட ஒரு தொழிற்சங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல்லவன டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் பொது நிர்வாக பணியாளர்கள் அண்ணா சங்கத்துடன் இணைக்கப்பட்டவர் களுக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறதுதி.ருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே அண்ணா சாலையோடு இணைக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9.50)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் படிக்கும்போது பல்லவன், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள அங்கீகரிக்கப் பட்ட சங்கங்களுடைய பெயர்களைத்தான் படித்தார்கள். கட்டபொம்மன், பாண்டியன், சேரன் போன்ற போக்குவரத்துக் கழகங்களில் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இருக்கின்றனவா? அப்படியென்றால், அந்தச் சங்கங்களின் பெயர்களைப் படிப் பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த வரையிலே அங்கே அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இல்லை, அப்படி இருந்தாலும் அவர்கள் இட வசதி வேண்டுமென்று கேட்டதாகத் தெரியவில்லை. எனவே, அப்படி யாராவது கேட்டிருப்பார்களானால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயன்படுத்தப்படும் சீட் பெல்ட்டுகள்.

*வினா எண். 56— திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் பேருந்துகளில் சீட் பெல்ட் மாட்டுவதற் காக எத்தனை வாங்கப்பட்டன?

(ஆ) அவற்றின் விலை என்ன?

(இ) தற்போது அவை பயன்படுத்தப்படுகின்றனவா?

[1982 செப்டம்பர் 10

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ), (ஆ), (இ) முந்தைய தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையால் 1974-ம் வருடம் மார்ச்—ஜூலை மாதங்களில், பெல்ட் ஒன்று ரூ. 104 வீதம் 1,827 சீட் பெல்ட்டுகள் வாங்கப்பட்டன. அவை தற்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் பயன்படுத்தப் படுகின்றன.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, சீட் பெல்ட்டுகள் பயன்படுத்தப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், நான் பார்த்த அளவிலே, இதுவரையில் பயன்படுத்தப் பட்டதாகத் தெரியவில்லை. அது எந்த அளவிற்குப் பயன் படுத்தப்பட்டு இருக்கிறது? என்னைப் பொறுத்தவரையில் நான் அதைப் பார்க்கவில்லை. பயன்படுத்தாமல் ஐடிலாக வைத்திருக் கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, பயன் படுத்தப்பட வேண்டிய அவசியம் இல்லையென்று சொல்லித் தான் ஏற்கனவே இதை விட்டுவிட்டார்கள். 1979 ஆம் ஆண்டு இது வீணாக இருக்கிறது, இதை எப்படியாவது பயன்படுத்த முடியுமா என்று ஆய்வு நடத்தி இருக்கிறார்கள். அப்பொழுது தான் இந்த சூப்பர் டீலக்சுக்கு மட்டும் பயன்படுத்தலாம் என்று முடிவெடுத்திருக்கிறார்கள். காரணம், இதை விற்கலாம் என்று முயற்சி எடுத்தால், யாரும் வாங்குவதற்குத் தயாராயில்லை. எனவே, சூப்பர் டீலக்சுகளில் மட்டும் அதைப் பயன்படுத்து கிறார்கள். அதை நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள். அதை நீங்கள் பயன்படுத்தியிருக்க மாட்டீர்கள்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இப்படிப் பயன்படுத்தப்படாத, தேவையில்லாத பெல்ட் வாங்கப்பட்டிருக் கிறது. இன்றைக்குச் சாதாரணமாகவே நெடுஞ்சாலையில் செல்லக் கூடிய பேருந்துகளின் பட்டை போனாலோ அல்லது டயர் போனாலோ அல்லது சேதமானாலோ, டிரைவர்களுடைய சம்பளங்களிலிருந்து பிடிக்கக்கூடிய அந்தக் கழகங்களுக்கு இப்படித் தேவையற்ற முறையில் அந்தக் கழகங்களுக்கு நஷ்டம் ஏற்படுத்து கின்ற முறையில் பெல்ட்டுகள் வாங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, யாரால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் சம்பளத்தில் பிடிக்க அரசு தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இது 1974-லே பரிந்துரை செய்யப்பட்டு வாங்கப்பட்டிருக்கிறது. எனவே, அப்பொழுதிருந்த சூழ்நிலையில் அது தேவையென்று கூடக் கருதி வாங்கியிருக்கலாம். ஆனால், இப்பொழுது அது தேவையில்லையென்று நாம் கருதுகின்றோம். ஆனால், அதை விற்றுவிடலாம் என்று முயற்சி எடுத்தால், ரூ. 104-க்கு வாங்கப் பட்டிருக்கிற பெல்ட்டை ரூ. 5-க்குக் கேட்கிறார்கள். அதை விற்பதைவிட நம்மிடத்திலே வைத்துக்கொள்வதுகூட நல்லது



1982 செப்டம்பர் 10]

என்று அதை அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறோம். எனவே நடவடிக்கை என்பது, 10 ஆண்டுக்காலத்திற்கு முன்பு நடந்ததற்கு இப்பொழுது நடவடிக்கை எடுப்பது என்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்று தெரியவில்லை. இருந்தாலும், உங்களுடைய கோரிக்கையாக அதை ஏற்றுப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெல்ட்டை எல்லா சீட்டுகளுக்கும் உபயோகப் படுத்தவில்லையென்றாலும், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே, முதலிலே உள்ள சீட்டுகளிலே உட்காருபவர்கள், பிரேக் போடுகின்ற நேரத்தில், சில நேரங்களில், கண்டக்டர்கள் மீது போய் விழவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறதே, அந்த சீட்டு களுக்கு மட்டுமாவது அந்த பெல்ட் சிஸ்டத்தை நடைமுறைப் படுத்த அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இதைப் பயன்படுத்தலாம், தவறில்லை. ஆனால், பயணிகள் கொஞ்சம் பாதுகாப்பாக அமர்ந்துகொள்வது நல்லது. காரணம், அந்த பெல்ட்டைப் போட்டு கட்டிவிட்டு, வேறு ஏதாவது விபத்துக்கள் ஏற்படுகிற நேரத்தில், அதை அவிழ்ப்பதற்காகக் காலத்தை வீணாக்கிக் கொண்டு உள்ளே தடுமாறிக் கொண்டு இருக்கக் கூடாது. எனவே, அந்த வகையிலே பார்க்கும்போது இது பாதுகாப்பாகக்கூட இல்லை என்ற எண்ணம் எனக்குத் தோன்றுகிறது.

இராமநாதபுரம் தொகுதியில் பனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம்.

* வினா எண். 57—திரு. டி. இராமசாமி : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா

(அ) இராமநாதபுரம் தொகுதியில் பனை மரத்தில் கிடைக்கும் பொருட்களை வைத்து தொழிற்சாலை ஒன்று நிறுவ அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** (அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மாரியூர் மற்றும் மண்டபம் ஆகிய இரு இடங்களிலும் பனைத்தொழில் மையம் ஏற்படுவதற்கான திட்டம் ஒன்று தமிழ்நாடு அரசால் ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ் ரூ. 24·566 இலட்சம் மானியமாக அனுமதிக்கப்பட்டது,

மாரியூரில் உள்ள நிலம் வன இலாசாவைச் சேர்ந்ததால் அந்நிலத்தை மாநில பனைவெல்ல கூட்டுறவு இணையத்திற்கு கொடுப்பதற்காக மத்திய அரசு அவசரச் சட்டத்திலிருந்து விதி விலக்கு வாங்கித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசின் அனுமதியை எதிர்நோக்கி மாரியூரில் தொழிற் கூடங்கள் கட்டுவதற்கான கட்டுமான பொருட்களை வாங்குவதற்காக டெண்டர் கோரி பத்திரிகையில் விளம்பரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மண்டபம் பகுதியில் திட்டத்தினை விரைவில் செயல்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாரியூரில் எந்த அளவிற்கு அவ ர முயற்சிகளை மேற்கொண்டு அந்தத் தொழிற்சாலையை நடத்த அத்தனை காரியங்களைச் செய்ததைப்போல மண்டபத்திலும் உடனடியாகச் செய்வதற்கான நடவடிக்கையை அரசு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே விரைவில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பனைமரத்திலிருந்து பல்வேறு பொருட்கள் கிடைக்கின்றன. ஆரம்பிக்க இருக்கின்ற அந்தத் தொழிற்சாலையில் பனைமரத்தி ருந்து கிடைக்கும் எந்தப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆரம்பிக்கப்படவிருக்கும் மாரியூர் மற்றும் மண்டபம் ஆகிய இரு இடங்களிலும் நுங்கு பதப்படுத்தும் நிலையமும், கற்கண்டு உற்பத்தி நிலையமும், நுங்கு உற்பத்தி நிலையமும், நார்ப்பொருட்கள் உற்பத்தி நிலையமும், ஓலைப் பொருட்கள் உற்பத்தி நிலையமும், கிரஷ் உற்பத்தி நிலையமும், கிழங்கு மாவு உற்பத்தி நிலையமும், பனஞ்சீனி சர்க்கரை ஆலை முதலியவையும் நிறுவப்படும்.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவவர்களே, நுங்கு அபிவிருத்தி செய்யும் பரிசீலனை எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழில் மயமாக்குவதைப் பற்றிய கேள்வி. நுங்கு பதனிடுவது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து அதில் வெற்றிகரமாக முடிவு தெரிந்திருப்பதால் அதைப் பதனிடும் தொழிலை இப்படிப்பட்டமையங்களில் [illegible] முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.



## விளவங்கோடு தாலுகா கடலோரப் பகுதிகளில் கடலரிப்பைத் தடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகள்

* **வினா எண் 58—திரு. டி. மணி:** மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலூகாவில் நீரோடி, பூத்துறை, எரேமியன்துறை போன்ற கடலோரப் பகுதிகளில் கடலரிப்பைத் தடுக்க மீனவர்களின் குடியிருப்புகளை பாதுகாக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(ஆ) பாதுகாப்பு நடவடிக்கையின் காரணமாக மீனவர்களின் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக ஏதேனும் புகார் வந்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** (அ) கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலூகாவில் நீரோடியில் கடலரிப்பு தடுப்புச்சுவர் கட்ட அரசு, ஆணை எண் 909, பொதுப்பணித்துறை, நாள் 2—5—80-ல் ரூ. 16.50 இலட்சத்திற்கு அனுமதி அளித்திருக்கிறது. நீரோடியில வேலை 1981 ஆம ஆண்டு பிப்ரவரியில் துவங்கப்பெற்று 65 சதவீதம் வேலை முடிவு பெற்றுவிட்டது. மீதி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

(ஆ) ஆம். கன்னியாகுமரி மாவட்டத்தில் பொழிக்கரை, கேசவன்புத்தன்துறை, பெரியகாடு, மேல்மணக்குடி, கோவளம் முதலிய இடங்களில் தடுப்புச் சுவர் கட்டுவதால் மீனவர்களின் மீன் பிடிப்புத் தொழிலுக்கு இடையூறாக இருப்பதாக மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. டி. மணி :** பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தக் கடலரிப்பைத் தடுப்பதற்காக நீரோடி என்னும் பகுதியில் தடுப்புச் சுவர் கட்டும் வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்: ஆனால் அங்கே கட்டப்படுவது தடுப்புச் சுவர் அல்ல. கடற்கரையில் 20 அடி, 30 அடி அகலத்திலே மண்ணிலே கல்லைப் புதைக்கின்ற வேலைதான் நடக்கிறது. இதனால் அலைகள் அதிகமாக வருகின்ற நேரத்தில் நாட்டுப் படகு வைத்திருக்கும் மீன்பிடித் தொழிலாளர்கள் கடலிலே படகுகளைத் தள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையை மாற்றியமைப்பதற்காக, மீனவர் குடியிருப்புகளோடு சேர்த்து பத்தடி அகலத்தில் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தடுப்புச் சுவர் கட்டுவதற்கு முன்பாக அந்தக் கடலோரப் பகுதியில் ரேண்டம் ரூபிள்ஸ் போட்டுத்தான் சுவர் கட்டுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கவனத்தில் கொண்டு பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்று 1981 ஆரம்ப காலத்திலே பூத்தரை என்னும் பகுதியில் பூரணியன் துறை கடற்கரையில் இருக்கின்ற ஒரு மாதா கோவில் வரையிலும் கடலரிப்பினால் குந்தகம் ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், நூற்றுக்கும் அதிகமான வீடுகள் இந்தக் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டு, மீனவத் தொழிலாளர்கள் வீடிழந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில்கூட இந்த நிதியாண்டில்கடலரிப்பைத் தடுத்து அவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ், என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு பரிசீலிக்கும்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

தமிழகத்தில் முதியோர் உதவித் தொகை மூலம் பயன் பெறுவோர் எண்ணிக்கை.

*வினா எண் 59— திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 டிசம்பர் இறுதியில் தமிழகத்தில் ''முதியோர் உதவித் தொகை பெறுவோர் எண்ணிக்கை எவ்வளவு ?



(ஆ) அதற்கு அரசுக்கு ஆண்டுக்கு ஆகும் செலவு எவ்வளவு?

(இ) 1975–76-ல் முதியோர் உதவித் தொகை பெற்றவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழகத்தில் 1981–டிசம்பர் இறுதியில் முதியோர் உதவித் தொகை பெற்ற நபர்களின் எண்ணிக்கை 1,83,870 ஆகும்.

(ஆ) அரசு, முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் 1981–1982-ல் நபர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 464 செலவு செய்தது. இதன்படி 1,83,870 நபர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு அரசு ரூ. 8,53,15,680 செலவு செய்கிறது.

(இ) 1975–76 நிதி ஆண்டில் முதியோர் உதவித் தொகை பெற்ற நபர்களின் எண்ணிக்கை 50,613 ஆகும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் உதவித் தொகை என்பது எல்லா இடங்களிலும் அதிகமான பேர்கள் மனு செய்திருக்கிறார்கள். இன்றையதினம் உள்ள கொள்கையின்படி, யாராவது இறந்து விட்டால், அதற்குப் பதில்தான் மற்றவர்களை சேர்த்துக் கொள்ள முடியும். அப்படி இல்லாமல் மனுபோட்ட அனைவரையும் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கும் உதவித் தொகை அளிக்கின்ற வகையில் நிதியை அதிகமான அளவில் ஒதுக்கி, அவர்களுக்கு உதவி செய்ய முயற்சி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி வாய்ந்த அனைவருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து அரசுக்கு அனுப்பினால் அதற்குத் தகுந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்க அரசு தயாராக இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் பென்ஷன் வழங்குவதிலே, மதுரையிலே அதிகாரிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், ஏற்கனவே ஆண்டுக்கு இவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது, அவ்வளவு பேர்களுக்குத்தான் கொடுக்கமுடியும். இடையிலே ஏற்கனவே பென்சன் பெற்றுக் கொண்டிருக்கின்ற யாராவது இறந்துபோனால் அந்த இடத்திலே புதிதாகக் கொடுக்க முடியுமே தவிர, எல்லோருக்கும் கொடுப்பது என்பது இயலாது. என்று சொல்லுகிறார்கள். தகுதி வாய்ந்தவர்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டும், அந்தப் பென்சன் தொகை பல ஆண்டுகாலமாக இன்னும் கொடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா? அவர்களுக்கு விரைவிலே கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

[1982 செப்டம்பர் 10

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தை வைத்துதான் அரசு ஆவன செய்து வருகின்றது. அதோடு மட்டுமல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர், தகுதி வாய்ந்த அந்த மனுக்கள் வருகின்ற சமயத்தில், அவைகளைப் பரிசீலனை செய்து அவற்றை அரசுக்கு அனுப்பினால், அதைப்பற்றி அரசு பரிசீலித்து கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யும்.

திரு. ஜீ. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் தொகை தருகிறபோது, இதைப்பற்றித் தெரிந்தவர்கள் எல்லாம் முதலிலே மனுப்போட்டுவிட்டார்கள். ஆனால் பல கிராமங்களிலே அங்கே உள்ள கிராமசேவக்குகள் சொல்வது கிடையாது.

அந்தப் பகுதியிலே இருக்கின்ற மற்றவர்களும் பொதுமக்களும் எடுத்துச் சொல்லாமல், மலைப் பகுதியிலே வாழ்கின்ற அல்லது ஆந்திரப் பகுதி ஓரமாக நம்முடைய தமிழகப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு எல்லாம் இந்தத் திட்டம் தெரியாமல் உண்மையிலேயே வருந்தத்தக்கதாக உள்ளது. முதியோர்களுக்கும் இயலாதவர்களுக்கும் இந்தத் திட்டம் பலன் அளிக்கவில்லை. அவர்கள் மனுப்போட்டால் இதே போன்று 250 பேர்களிலே யாராவது இறந்து போனால் சேர்த்துக் கொள்கிறோம் என்கிறார்கள். எனவே உண்மையிலேயே ஜெனூயன் கேஸ்களாக இருந்தால் அவைகளுக்கு விதிவிலக்குக் கொடுத்து உதவித் தொகை அளிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அதைப்பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் ஆவன செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் தகுதி வாய்ந்தவர்களுக்குக் கண்டிப்பாகக் கொடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

### உதவித் தொகை பெறும் ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர் எண்ணிக்கை.

* வினா எண் 60—திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–1982-ல் அரசால் வழங்கப்பட்ட ஆதரவற்ற விவசாய தொழிலாளர் உதவித் தொகை பெற்றவர்கள் எண்ணிக்கை என்ன ?

(ஆ) வழங்கப்பட்ட தொகை எவ்வளவு ?



1982 செப்டம்பர் 10]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 31–3–1982 முடிய 25,072 ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்கப் பட்டது.

(ஆ) இதற்கென 1981–82—ல் ரூ. 18,17,672.45 வழங்கப் பட்டது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு 25,072 பேர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட வாரியாக வழங்கப்பட்டவர்கள் விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13–3–81 முதல் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் முதல் கட்டமாக 30 ஆயிரம் ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது. இதில் 31–3–82 முடிய 25,072 பேர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வி, மாவட்ட வாரியாக வேண்டுமென்றுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாவட்ட வாரியாக வைக்க வேண்டுமென்றால் தனி அறிக்கை வைக்கவேண்டியதுதான். எதைப்பற்றியாவது குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆயிரம் பேர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 25,072 பேர்களுக்குத்தான் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். மீதமுள்ளவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை அரசு தரப்பிலே உள்ளது. மற்றும், இந்த விவசாயத் தொழிலாளர்கள் சக்தி இழந்து வலுவிழந்து, வயோதிக நிலையில் இருக்கின்ற அனைத்து விவசாயத் தொழிலாளர்களுக்கும் இந்த திட்டத்தின்படி அந்த உதவித் தொகை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னமேயே பதிலில் சொல்லியிருக்கிறேன். ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு கண்டிப்பாக உதவித் தொகை வழங்கப்படும்.

[1982 செப்டம்பர் 10

திரு. என் ஏ பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகை வழங்குவதில் அரசுத்தரப்பிலிருந்து தகுதி வாய்ந்த என்ற அந்த வார்த்தைக்கு என்ன பொருள்கள் அடங்கும், என்ன கருத்து என்பதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்களா ? எந்த அடிப்படையிலே அந்த தகுதி நிச்சயிக்கப்படுகிறது ? விண்ணப்பித்துள்ள மனுக்கள் அனைத்திலும், எத்தனை தகுதி அடிப்படையில் முடிவு எடுத்து இருக்கிறீர்கள். தகுதி என்பதை மட்டும் தெளிவாகச் சொன்னால் உதவி கோரி விண்ணப்பம் அனுப்புகிறபோது தெளிவாகப் புரிந்து கொள்ள உதவிகரமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதை அறிவிப்பார்களா என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஆதரவற்றவர்களாக இருக்க வேண்டும். ஏழைகளாக இருக்க வேண்டும் ; உழைக்க முடியாதவர்களாக இருக்க வேண்டும் ; 60 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

குறிப்பு : உடுக்குறியிடாத வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் இணைப்பில் காண்க.

3. அறிக்கை அளித்தல்.

(அ) விதி 107 (1)-ன் கீழ் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 25-3-1982 ஆம் தேதியன்று 650 ஆம் எண் வினாவின் கீழ் எழுப்பப்பெற்ற துணை வினாவிற்கு அளிக்கப்பெற்ற விடைக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற பேரவை விதி 107-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, 25-3-1982ம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உடுக்குறியிட்ட வினா எண் 650 (பழைய எண். 9299) தொடர்பாக நடைபெற்ற விவாவத்தின்போது, உறுப்பினர் திரு. எம். சின்னசாமி, அவர்கள் கீழ்க்கண்ட துணை வினாவினைக் கேட்டிருந்தார்:



1982 செப்டம்பர் 10] (ப. குழந்தைவேலு)

''அங்கீகாரம் பெறாமல் வீட்டு மனை விற்கப்படும்பொழுது பத்திரப் பதிவு செய்யக்கூடாது என்று சட்டமாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

இதற்கு ''ஏற்கனவே இருக்கின்ற 1908வது ஆண்டு இந்தியப் பதிவு செய்தல் சட்டத்தில் இதற்கு இடம் இருக்கிறது. அதுவும் உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து 'நோ அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட் வாங்கி வந்தால் தான் பதிவு செய்யவேண்டுமென்று இருக்கிறது, ஆனால் அதற்கு மாறாக உள்ளாட்சி மன்றங்கள் சட்டத்திலேயே திருத்தம் செய்துவிடலாம் என்பது அரசினுடைய பரிசீலனையிலே இருந்துவருகிறது. என்ற பதிலுக்கு மாறாக கீழ்க்கண்ட திருத்திய பதிலை அளிக்கவிரும்புகிறேன்;

''தலைவர் அவர்களே, காலி மனைகளை வீடு கட்டுவதற்கான மனைகளாகவே விற்கப்படுவதை தடுக்கும் பொருட்டு மனைப் பகுதிகள் விற்பனை சம்பந்தப்பட்ட பத்திரங்கள் பதிவு செய்ய சமர்ப்பிக்கப்படும்போது அத்துடன் உள்ளாட்சி (நகராட்சி அல்லது மாநகராட்சியோ) நிறுவனத்திடமிருந்து ஆட்சேபணை எதுவுமில்லை என்னும் சான்றிதழ் கோரிப் பெற சார்-பதிவாளர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், 1908-ம் ஆண்டின் இந்திய பதிவு செய்தல் சட்டத்தினை 1908ம் ஆண்டின் மத்தியச் சட்டம்(XVI) திருத்தம் செய்வதைவிட, உள்ளாட்சி நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட சட்டங்களான 1919ம் ஆண்டின் சென்னை மாநகராட்சிச் சட்டம், 1920-ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், மற்றும் 1971-ம் ஆண்டின் மதுரை மாநகராட்சிச் சட்டம், 1981-ம் ஆண்டின் கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம் ஆகியவற்றை திருத்தம் செய்யலாம் என்ற கருத்துரு ஆய்வில் உள்ளது.

[முற்பகல் 10·10]

4 கவனஈர்ப்பு

செங்கல்பட்டு மாவட்ட கூட்டுறவு கிடங்குகளில் தேங்கியுள்ள காம்பிளக்ஸ உரங்கள்

திரு எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, ''செங்கற்பட்டு மாவட்டத்தில் விவசாய இலாக்கா கிடங்குகளில் 1974 ஆம் ஆண்டு முதல் தேங்கியுள்ள 15:15:15 காம்பிளக்ஸ் உரங்கள் பற்றிய அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே. தற்போது 710 மெட்ரிக் டன் எடையுள்ள என். பி. கே. 15:15:15 காம்பிளக்ஸ் உரம் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு கிடங்குகளில் இருப்பில் உள்ளது. மேற்படி உரத்தை வெளிச்

சந்தையில் விற்பனை செய்வது கடினமாக இருந்ததால், அந்த காம்பிளக்ஸ் உர விலையை மெட்ரிக்டன் ஒன்றுக்கு ரூ. 1,552·01 லிருந்து ரூ. 1,506·01 ஆக குறைக்கப்பட்டது. அப்படி குறைக்கப்பட்ட பின்பும் கூட மேற்படி உர இருப்பை விற்றுத் தீர்க்க இயலவில்லை. திருவாளர் ஸ்பிக் உரக்கம்பெனி நிறுவையில் உள்ள எல்லா என். பி. கே. காம்பிளக்சையும் உரக்கலவை தயாரிக்க எடுத்துக் கொள்வதற்கு முன்வந்த காரணத்தால், மேற்படி உரவிலையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 1.055 ஆக அரசு குறைத்தது. ஆயினும் திருவாளர்கள் ஸ்பிக் உரக் கம்பெனியார் மிகக் குறைந்த அளவு காம்பிளக்ஸ் உரத்தையே இதுவரை அரசின் இருப்பில் இருந்து வாங்கியுள்ளார். மீதமுள்ள என். பி. கே. 15:15:15 இருப்பை கூடிய விரைவில் குறைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

திரு எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, இந்த கையிருப்பில் இருக்கும் காம்பிளக்ஸ் உரத்தால் அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டது? இந்த 15:15:15 காம்பிளக்ஸ் உரத்திற்கு பதிலாக 17:17:17 காம்பிளக்ஸ் உரத்தை வாங்க விவசாயிகள் மிகவும் ஆர்வம் காட்டுவதால், அதனை வழங்குவதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எவ்வளவு இழப்பு என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், 1974-75 ஆம் ஆண்டின் அரசு வாணிபத் திட்டத்தின் கீழ் 11,965 மெட்ரிக் டன் எடையுள்ள என். பி. கே. 15:15:15 காம்பிளக்ஸ் உரம் அரசின் கணக்கில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருப்பில் இருந்தது. அதைக் குறைப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அது குறைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கும் யோசனையை அரசு பரிசீலிக்கும்.

### 3. அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி

### (ஆ) மதிப்பீட்டுக் குழு

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, சிறைத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் பதினான்காவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை (இப் பேரவைக்கு அளிக்கிறேன்.



### 5. அறிவிப்புகள்.

(அ) தமிழ் அறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்குதல் பல்வேறு விதித் துறைகள் சட்டமுன்வடிவு 1982

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்-பல்வேறு விதித்துறைகள் சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவை தெரிவித்துள்ளார்.

### 6 அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் பல்வேறு விதித்துறைகள் சட்டமுன்வடிவு 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் பல்வேறு விதித்துறைகள் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) குஅடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே; இந்த பில் இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலே நான் இதை அப்போஸ் செய்கிறேன். இதன் ஒரிஜினல் பில் 1943 லே இன்ட்ரொடியூஸ் செய்யப்பட்டபோது அன்றைக்கு இருந்த ஆங்கிலேய அரசாங்கம் அடகுக்காரர்களுக்கு சாதகம செய்யும் போது அந்தச் சட்டத்திலே மனிதாபிமான அடிப்படையிலே 'கான்சலேஷன்' என்ற ஒரு சரத்தை வைத்தார்கள். அதாவது அடகுக்கடைக்காரர்கள் தவறு செய்தால் அவர்களுடைய லைசென்ஸை கான்சல் செய்ய வேண்டுமென்ற ஒரு கடுமையான பனிஷ்மென்டை வைத்திருந்தார்கள். அதோடு இம்பிரிசன்மென்டு

பைன் ஆர் போத் என்றும் இருந்தது. அப்போது கான்சலேஷன் என்று வைத்திருந்ததை ஒரு திருத்தம் என்ற முறையில் இப்போது நீங்கள் 'சஸ்பென்ட்' என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். Interupt on I request you Sir as the brain bank of the Ruling party

அப்போது இருந்த அடகுக்கடைக்காரர்கள் சம்பந்தப்பட்ட சட்டத்திலே இருக்கிற ஓட்டைகளை அடைக்கிறோம் என்று சொல்லி கான்சலேஷனுக்குப் பதிலாக சஸ்பென்ஷன் என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். அந்தச் சட்டத்தில் எவ்வளவோ ஓட்டைகள் இருக்கின்றன. அதை எல்லாம் விட்டுவிட்டு இன்றைக்கு இந்த ஒன்றைமட்டும் திருத்தப்போகிறோம் என்று சொல்லி, திருத்தச் சட்டம் கொண்டுவந்திருக்கிறீர்கள்.

12 சதவீதம் வட்டி என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு இருக்கின்ற நிலவரத்தில் ரூபாய்க்கு ஒரு பைசா வட்டி வீதத்தில் யார் கடன் கொடுப்பார். அடகு வைப்பவர்கள் தங்கத்தை வைக்கிறார்கள், புடவையை வைக்கிறார்கள், டேக்சாவை வைக்கிறார்கள். அவைகளுக்கு எல்லாம் கடன் கொடுக்கிறார்கள். இந்தமாதிரியான அவல நிலை இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 5000 அடகுக் கடைக்காரர்கள் இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் அவர்களின் எண்ணிக்கை 15'000 ஆக உயர்ந்தது. இப்போது உங்களுடைய ஆட்சியில் 24,000 அடகுக்கடைக்காரர்கள் இருக்கிறார்கள். கேரளத்தை எடுத்துக்கொண்டால் அங்கே அடகுக்கடைக்காரர்களே கிடையாது. அதைப்போல இங்கேயும் மொத்தமாக ஒழிக்கப்பட வேண்டும். இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்களை காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால் இந்தச் சட்டத்தில் இருக்கிற எல்லா ஓட்டை உடைசல்களும் அடைக்கப்பட்டாக வேண்டும். அதற்கு வேண்டிய முறையில் பல திருத்தங்களைக் கொண்டுவந்து ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இந்த ஒரு திருத்தம் மட்டும் போதாது. ஆகவே இதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு ரெபர் செய்ய வேண்டும். செலக்ட் கமிட்டிக்கு விட்டு, தேவையான திருத்தங்களை எல்லாம் கொண்டுவந்து, இதை ஒரு காம்பிரிஹென்சிவ் லெஜிஸ்லெஷனாகக் கொண்டுவர வேண்டும்.

இப்போது அவசரம் அவசரமாக இந்த ஒரு திருத்தத்தை மட்டும் கொண்டுவந்து நிறைவேற்றுவது சரியல்ல. மேலும் இது தேர்தல் நேரம். இந்த நேரத்தில் இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டுவந்து நிறைவேற்றுவதாக இருந்தால் ஏற்கெனவே பல குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி இருக்கிற உங்கள்மீது மீண்டும் எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுக்கு நீங்கள் ஆளாகாதீர்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை நீங்கள் வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய நோக்கத்தைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். சஸ்பென்ஷன் என்ற ஒரு ப்ரொவிஷனைக் கொண்டுவந்திருப்பதால் கான்சலேஷன் ரத்தாகிவிட்டது என்று அர்த்தமல்ல. கான்சலேஷன் அப்படியே இருக்கிறது. அதோடு சேர்த்து சஸ்பென்ஷனையும் கொண்டு வருகிறோம். ஆகவே சஸ்பென்ஷன் வருவதால் கான்சலேஷன் போய்விடுகிறது என்று தவறாக கருத வேண்டாம். நான் ஏற்கெனவே நேற்றைக்கு முன்தினம் இந்த அவையில் சொல்லும்போதே 1943 ஆம் ஆண்டு 'பான்புரேக்கர் ஆக்டுக்கு வேண்டிய சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கிறேன். அவையிலே அதுபற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அடகுக் கடைக் காரர்கள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) எதிர்பாராச் செலவுநிதி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு 1982

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1982) ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(இ) பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேலும் ஓர் அறிவிப்பு. எதிர்பாராத விதமாக பேரவை நேற்று ஒத்திவைக்கப்பட வேண்டி ஏற்பட்டது. அதனால் 1982-83 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதமும், அதற்கான மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றலும் நேற்று எடுத்துக் கொள்ளப்பெறவில்லை. எனவே, இன்று காலை துணை நிதி நிலை அறிக்கைமீது விவாதத்தை பகல் 12 மணிவரை வைத்துக் கொண்டு. 12 மணிக்கு மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப் பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும்.

பேரவையின் 203—வது விதியின் கீழ் எனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை, இன்றே எடுத்துக் கொள்வதற்கு, அதற்கான விதிகளைத் தளர்த்துவதற்கான தீர்மானத் தப் பேரவை ஏற்ற பின், அனுமதி அளிக்கப்படுகிறது.

எனவே, பகல் 12 மணி வரை பொது விவாதமும். 12 மணிக்கு மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும், அ த யடுத்து நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து உடனே ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு நிறைவேற்றலும் நடை பெறும் என்ப தப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை அடுத்து, இலங்கைத் தமிழ் இளைஞர்கள் இருவருக்கு விதிக்கப்பட்டிருக்கும் மரண தண்டனையை ரத்து செய்யக் கோருவது குறித்த தீர்மானம் ஒரு மணி நேர விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெறும்.

(முற்பகல் 10·20)

(ஈ) கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளை முன்மொழிவது

மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1982 83 ஆம் ஆண்டுகளில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக் கைகள் பேரவைக்கு முன் மொழிதல் குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றிருக்கிறது.

"In pursuance of Article 203 Clause 3 of the Co stitution of India; I, Sundarlal Khu ana, Governor cf Tamil Nadu hreby give my r commendation to the moving in the Tamil Nadu Legislative Assem bly of the demands for further gr nts for the year 1982-83 as detailed intge annexure enclosed".



7 முதல் துணை நிதி அறிக்கை 1982-83 பொது விவாதமும் வாக்கெடுப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 1982—83 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு குறித்ததுணை நிதி அறிக்கையின்மீது பொது விவாதம் திரு. ஜே. எஸ். இராசு (குறுக்கீடு)

திரு சோ அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே தமிழ்நாடு பூராவிலும் வறட்சி நிலவுவதைப் பற்றி, ஒத்தி வைப்புத் தீர்மானமாகக் கூட எடுத்துக் கொள்ளப்பெறவில்லை. அது குறித்துப் பேசுவதற்கு எங்களுக்கு வாய்ப்பே கிடைக்க வில்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நேற்றே கேட்டேன் நாளைய மறுதினம் அவையை நடத்தலாமா என்று. பெரும்பான் மையான உறுப்பினர்கள் அவசரமாக செல்ல விருப்பதால், அந்த நிலை எடுக்கப்படவில்லை. இன்றைக்கு மாலை 4 மணி அளவில் பேரவை திரும்பவும் கூட இருக்கிறது. மாலையில் எடுத்துக் கொள்ள அஜெண்டாவில் சேர்க்கப்பெற்றுள்ளது. ரெயிலுக்கு போகாதவர்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். நீங்களும் பேசலாம்.

திரு. ஜே. எஸ் இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982—83 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப் பீட்டின் பெயரில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளைத் தெரிவித்துக் கொள்ள விழை கிறேன்.

துணை மதிப்பீட்டின் நிதி ஒதுக்கீடுகள். அதற்குரிய புள்ளி விவரங்களைப் பற்றி நான் பேசுவதற்கு முன்னால் மிக முக்கிய மான ஒரு கருத்தினை நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்மையிலே டெல்லிப் பட்டணத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு காங்கிரஸ் கட்சியினுடைய தூதுவராக சங்கர்தயாள் சர்மா அவர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் வந்தது, அவருடைய கட்சி விஷயத்தைப் பற்றி தமிழ்நாட்டில் இருக்கிற தலைவர் களோடு பேசுவதற்காக. அவர் டெல்லிப் பட்டணத்திலே மத்திய அரசாங்கத்திலே உள்ள அமைச்சர் கூட அல்ல, ஆல் இந்தியா காங்கிரஸ் கமிட்டியிலே மெம்பராக இருக்கிறார்கள். அப்படி ஒரு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் தேர்தல் வேலையாக தமிழ்நாட்டிற்கு வந்தபோது, தமிழகத்தினுடைய முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்திருக்கிறார்கள் கோட்டையிலே கூட அல்ல வீட்டிலே.... (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தேர்தல் நடக்கிற காலம். அறிவுமல்லாமல் நீங்கள் என்ன கம்ப்ளெயின்ட் இங்கே செய்யப் போகிறீர்கள் என்றும் தெரியவில்லை. எப்படியிருந்தாலும் அவையிலே இல்லாதவர்களைப் பற்றி இங்கே பேசவேண்டாம் இங்கேயுள்ள உறுப்பினராக இருந்தால், நீங்கள் பேசலாம். உறுப்பினருக்கும் திரும்ப பதில் கூற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் தம்மை இங்கே பாதுகாத்துக் கொள்ளவோ, திரும்ப பதில் சொல்லவோ வாய்ப்பில்லாத வெளியில் இருக்கிற ஒரு தலைவரைப்பற்றி எந்தவிதக் குற்றச்சாட்டும் சொல்ல வேண்டாம். அதைவிட்டு, விட்டு துணை நிதி அறிக்கையில் பேசுங்கள்.

**திரு. ஜே. எஸ். இராசு:** தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே இதற்கு முன்னாலேயே எத்தனையோ பேர்களைப்பற்றி, இந்த அவையில் இல்லாதவர்களைப் பற்றிய செய்திகளைப் பேசியிருக்கிறோம்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்த திரு சங்கர்தயாள் சர்மா அவர்கள் சந்தித்தது பற்றி பத்திரிகையிலே செய்தி வந்தது, அதைப் பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஐயப்பாட்டினை கிளப்புகிறார்கள் என்று கருதுகிறேன். அதில் தவறான செய்தி வந்திருக்கின்றது, அதுபற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். அதனை விளக்கி விட்டால்.. (குறுக்கீடு).... மாண்புமிகு முதல்வர் அவர்களை திரு சங்கர்தயாள் சர்மா அவர்கள் சந்தித்தபோது உடன் இருந்தவர் திரு எம். பி. சுப்பிரமணியம் அவர்கள், ஆனால், அதே நேரத்தில் தலைமைச் செயலாளர் அவர்களும் அங்கே வந்திருந்தார்கள். முன்பு தலைமைச் செயலாளராக இருந்த திரு கார்த்திகேயன் அவர்களுடைய எக்ஸ்டென்ஷன் பைல் சம்பந்தமாக கையெழுத்து வாங்குவதற்காக அங்கே வந்திருந்தார்கள். அதுமட்டுமல்லாமல் அப்போது உடனே முன்னாள் ஆளுநர் திரு ராதிக் அலி அவர்களை வழியனுப்புகின்ற விழாவுக்குப் போகவேண்டிய அவசியம் இருந்ததன் காரணத்தாலும் தலைமைச் செயலாளர் அவர்கள் அங்கே வந்திருந்தது உண்மைதான். ஆனால் திரு. சங்கர்தயாள் சர்மா அவர்களுடன் திரு. எம் பி சுப்பிரமணியம் அவர்கள் வந்திருந்தார்கள். திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் தமிழ், ஆங்கிலம் இரண்டும் நன்கு தெரிந்தவர்கள். எனவே சங்கர்தயாள் சர்மா அவர்களுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் இடையே நடந்த விவாதத்திலே எங்கெங்கு தேவைப்பட்டதோ அங்கெல்லாம் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களே மொழி பெயர்த்து உதவியாக இருந்திருக்கிறார். எனவே தலைமைச் செயலாளர் அவர்கள் அந்த உரையாடலிலே கலந்துகொள்ளவில்லை. எனவே மொழி பெயர்ப்பதற்காக அவர் வைத்துக்கொள்ளப்பட்டார் என்பது உண்மையல்ல



**திரு. ஜே. எஸ். இராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் சொன்னதில் எனக்கு அபிப்பிராய பேதம் இல்லை. ஆனால் செப்டம்பர் மாதம் 3 ஆம் தேதி வந்த செய்திக்கு இப்போது அதனை அவையிலே கிளப்பியதற்குப் பிறகுதான் விளக்கம் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசியல்வாதியாக இருந்தால் அதற்கு மறுப்பு அளித்திருக்க முடியும். அனால் அதிகாரிகள் அப்படித் தெரிவிக்க முடியாது.... (குறுக்கிடு).... அந்தமாதிரி செய்வது வழக்கம் இல்லை.

**திரு. ஜே. எஸ். இராசு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய மேல்நிலைப் பள்ளிகளில் வைக்கப்பட்டிருக்கின்ற ப்ளஸ் டூ வகுப்பிற்கு தேசியம் வளர்த்த தமிழ் என்ற துணைப் பாட நூல் இந்த ஆண்டு வைத்திருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தினை எழுதியவர் இந்த அவையில் இல்லாவிட்டாலும் கூட ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன் மதிப்பிற்குரிய திரு கே. திரவியம் அவர்கள்தான் அந்த நூலினை எழுதி இருக்கிறார்கள். ஆனால் நூலினை எழுதியது பற்றியோ அல்லது விற்பனை செய்தது பற்றியோ என்னைப் பொறுத்தவரையில் நான் கவலைப்படவில்லை. ஆனால் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்திலே தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டு அதன் மூலமாகத்தான் அனைத்து பாடப் புத்தகங்களும் பதிப்பித்து வெளியிடப்பட வேண்டும் என்ற ஒரு சீரிய கொள்கை உருவாக்கப்பட்டு அது இன்றுவரையில் நடைமுறையில் இருந்து வருகின்றது, ஆனால் அதற்கு முற்றிலும் மாறாக தேசியம் வளர்த்த தமிழ் என்ற திரு கே. திரவியம் அவர்கள் எழுதிய நூலை துணைப்பாட நூலாக வைத்து அதனை வேறு ஒரு வெளியீட்டாளர்களுக்கு, அதாவது வேறு பதிப்பாளர்களுக்கு வழங்கி இருக்கிறார்கள் இது ஒரு குறை என்பது மட்டுமல்ல.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதிலே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது அந்தப் புத்தகத்தின் விலை 5 ரூபாய். ஆனால் அதனுடைய பக்கங்களோ 200 தான். இவ்வளவு பக்கங்கள் உடைய ஒரு சின்ன நூலின் விலை 5 ரூபாய். எப்படி இவ்வளவு அதிகமான விலை போட்டார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆனால் அந்தப் புத்தகத்திலே தேசிய மையக் கொள்கைகள் புதைகுழிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அனால் அதே நேரத்தில் விலையும் அதிகம். எத்தனையோ துணைப்பாட நூல்களை இந்தத் தமிழ்ப்பாடநூல் நிறுவனம் வெளியிட்டிருக்கின்றது. ஆனால் இந்த ஒரு குறிப்பிட்ட ஒரு நூல் மாத்திரம் வேறு ஒரு பதிப்பாளருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இதே ப்ளஸ் 2 வகுப்பிற்கு தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்

டிருக்கின்ற பாடநூல் விலை $2\frac{1}{2}$ ரூபாய். ஆகவே பாடநூலின் விலை $2\frac{1}{2}$ ரூபாய். ஆனால் துணைப்பாட நூலின் விலையே ூ 5 ரூப்ாய். இப்படிப்பட்ட மிகப்பெரிய தவறான கொள்கையின் காரணத்தால் மாணவர்கள் பாதிக்கப்படுகின்ற வகையிலே அதிகமான விலையில் துணை நூல் விற்கப்படுகின்றது. அது தவறு. இவைகளையெல்லாம் ஒன்றாக வைத்துப் பார்த்தால, இந்தப் புத்தகம், வெளியீடானது தொடர்ந்து மூன்றாண்டுகள் விற்பனையாக வேண்டும். கணக்குப் போட்டால் குறைந்தபட்சம், ஒரு ஆண்டிற்கு 2 இலட்சம் விற்பனையாகலாம். 3 ஆண்டுகளுக்கு 6 இலட்சம் புத்தகங்கள் விற்பனையாகும். அந்தப் புத்தகத்தை எழுதியவருக்கு ஏறத்தாழ 6 இலட்சம் ரூபாய் கிடைக்கும். இவருக்கே 6 இலட்சம் என்றால் அந்தப் புத்தகத்தை வெளியிட்டவருக்கு எத்தனை இலட்சம் கிடைக்கும் பல இலட்சங்கள் கிடைக்கும். ஏன் இந்தக் கொள்கை மாறுபாடு என்பதை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டும். இந்த கொள்கை மாறுபாட்டிற்கு என்ன காரணம் என்பதை நான் இந்த மன்றத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

இந்தப் புத்தகத்தைப் பற்றிய குற்றச்சாட்டைவிட வேறு ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டு இருக்கிறது. நான் சுமத்த விரும்புவது இந்தப் புத்தகத்திலே பெரிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதியிருப்பதாக அவர் கருதியிருக்கலாம். இந்த ஆய்வுக் கட்டுரைகள் பிளஸ் 2 மாணவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்திலே நாட்டிலே பெரிய தேசியத் தலைவர்களாக மதிக்கப்படுகின்ற தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் தேசிக விநாயகம் பிள்ளை, வ. உ. சிதம்பரனார் போன்ற பெரிய தமிழ் அறிஞர்களை சந்திப்பதுபோலவும், அவர்கள் வெளிநாட்டு வெள்ளைக்காரர்களுக்கு தாசர்கள் போலவும், அவர்களுக்குத் தமிழிலும், ஆங்கிலத்திலும் கலந்து தமிழை எழுதிவிட்டவர்கள் போலவும் பல்வேறு குற்றச்சாட்டுகளை அவர் அந்தப் புத்தகத்திலே சுமத்தியிருக்கிறார்கள் என்றாலும்கூட, இவைகள் பெரிய ஆய்வு செய்வதற்குரியவைகளாக இருக்கக்கூடும், ஆனால் குறைந்தபட்சம் உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு இப்படிப்பட்ட விவாதங்களுக்குரிய விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார். பாரதியாரைப் பற்றி, கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர் ளைப் பற்றி, வ உ சிதம்பரனாரைப் பற்றி சின்ன குழந்தைகள் பள்ளி மாணவர்கள் கருதிக்கொண்டிருக்கின்ற நல்ல கருத்திற்கு எதிராக, இன்றைக்கு அவர்களைத். திருப்பி விட்டிருக்கிறார். ஆகவே இது மிகப் பெரிய குற்றம்,





கவே இந்த நூலை அரசாங்கம் நல்ல முறையிலே படித்துப் ர்த்து, உடனடியாக 'வித்-டிரா' செய்வதற்கு அரசு முயற்சி டுக்க வேண்டுமென்று தக்க உரிமையோடு கேட்டுக்கொள்ளக் -மைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, சத்துணவைப் பற்றி எங்கள் கழகத்தின் சார்பாக கருத்து ஏற்கனவே தெரிவிக்கபபட்டிருக்கிறது. சத்துணவுத் திட்டத்தைப் பற்றித் தனி விவாதம் அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் நடததினால், அது பயனுள்ளதாக இருக்கும். என்றாலும்கூட, சில கருத்துகளை இப்போது தெரிவிக்க விரும்புகிறேன். இலவச சத்துணவுத் திட்டத்தை ஏதோ திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் எதிர்ப்பதாக ஒரு கருத்தை ஆளுங் கட்சித் தரப்பிலே குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு பரப்பி வருகிறார். இந்தத் திட்டத்தை கடந்த நிதிநிலை அறிக்கையிலே அவை முன்னவர் நிதியமைச்சர் அவர்கள் கொண்டுவந்தபோது, மிகுந்த பெருந் தன்மையோடு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள், நல்ல முறையிலே வரவேற்றிருக்கிறார்கள். இலவச சத்துணவு வழங்கும் திட்டத்தை நான் வரவேற்கிறேன் என்று சொல்லிவிட்டு, செலவழிப்பதற்கு தொகையை ஒதுக்காமல் எப்படி திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதோடுகூட கலைஞர் அவர்கள் மட்டுமல்ல, இந்தத் திட்டத்தை அறிவித்த நேரத்திலே சொந்தக் காலிலே நிற்பதுபோல், அதற்குரிய தொகையை பட்ஜெட்டிலே ஒதுக்கியிருக்க வேண்டும், அதுதான் சரியான ஏற்பாடு, நன்கொடையை நம்பியோ, பலவிதமான வசூல்களில் ஈடுபட்டோ செய்வதாக இருந்தால், பிச்சை எடுத்து இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒப்பாகும் என்று முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்களும் சொலலியிருக்கிறார்கள். இதற்கு நிதி ஏன் ஒதுக்கவில்லை, ஒதுக்காமல் இந்தத் திட்டத்தை எப்படி அறிவித்தீர்கள் என்று கேட்டார்கள் ஆனால் திட்டத்தை கலைஞர் அவர்கள் மனப்பூர்வமாக வரவேற்றார்கள். ஆனால், திசை திருப்புவதுபோல அண்மையில் நடைபெற இருக்கின்ற பெரியகுளம் தேர்தல் பொதுக்கூட்டம் ஒன்றிலே இந்தத் திட்டத்தை கலைஞர் அவர்கள் எதிர்க்கிறார் என்று முதலமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள் கிட்டத்தட்ட பொது மக்கள் மத்தியிலே ஒரு நாடகத்தைப்போல, அவர் கேள்வி கேட்கிறார். அதற்குப் பொது மக்கள் பதில் சொல்லுகிறார்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி பொதுக் கூட்டத்திலே கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய முதல்வர் அவர்கள் கேட்கிறார், ''சத்துணவு திட்டத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா அதற்கு மக்கள் சொல்லுகிறார்கள், ஆதரிக்கிறோம்'' சோறு போட்டால் யாரும் ஆதரிப்பார்கள். சரியாக பதிலும் அப்படித்தான் வருகிறது. அடுத்து முதல்வர் கேட்கிறார், ''இதை ஆதரின் காதவர்கள் நண்பர்களா எதிரிகளா, மக்கள்' ''எதிரிகள்தாக

என்று சொல்லுகிறார்கள். உடனே, முதல்வர் கேட்கிறார் ''கருணாநிதி இதை ஆதரிக்கவில்லை'' எதிரிதானே, உடனே மக்கள், '' ஆமாம் எதிரிதான் '', உடனே முதல்வர் அவர்கள் ''இதுதான் தீர்ப்பு இந்த தீர்ப்புதான் எனக்கு, தேவை, இன்றைக்கு கருணாநிதி இதை ஆதரிக்கத் தயாராக இல்லை என்று கூட்டத்திலே இப்படி முதலமைச்சர் அவர்களே பேசியிருக்கிறார்.

கலைஞர் அவர்கள் வரவேற்ற நேரத்தில், கழகம் இதை வரவேற்ற நேரத்தில், இதையெல்லாம் இங்கே பார்த்துக் கொண்டிருந்த முதல்வர் அவர்கள், எப்படி ஒரு எதிர்க்கட்சித் தலைவர் முன்னாள் முதல்வர் அவர்கள் சொன்னதை திருத்தி, உண்மைக்கு மாறாக சொன்னார் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் ரகுமான்கான் அவர்கள், திங்களன்று பேசும்போது. குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டம் பெரியகுளம் தேர்தலில் ஓட்டு வாங்குவதற்காக கொண்டுவரப்பட்ட திட்டமாக கருதப்பட வேண்டியிருக்கிறது என்று சொன்னார். உடனே முதலமைச்சர் அவர்கள், இது ஓட்டுவாங்குவதற்காக கொண்டு வரப்பட்ட திட்டமல்ல என்று இந்த மன்றத்திலே சொன்னார்.வோட்டு வாங்குவதற்காக கொண்டு வரப்பட்டது போல் மக்கள் மத்தியில இதை விமர்சனமாக எடுத்து சொல்லி, கலைஞரை எதிரி என்று சொல்லி, இந்த எதிரிக்கு வோட்டு போடுவீர்களா என்று கேட்டு மாட்டோம் என்று சொல்லி இந்த தீர்ப்புத்தான் எனக்குத் தேவை என்று சொல்லக்கூடிய அளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் இதை தேர்தல் பிரச்சனையாக ஆக்கி இருக்கிறார்களே தவிர, தி.மு.க. அல்ல. இன்னொரு கடைசி கட்டம். கூட்டத்திலே பேசுகிற (கூச்சல், குழப்பம்). . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெளியே பேசுவதற்கு இங்கே பதில் சொல்ல முடியாது. பொதுக்கூட்டத்தில் எவ்வளவோ பேசுகிறோம் அவைகளுக்கு எல்லாம் இங்கே பதில் சொல்லமுடியாது.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் துணைத் தலைவர் பெரியகுளம் தேர்தல் இப்போது வர இருப்பது. ஆனால் சத்துவுணத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது சென்ற ஆண்டு, இதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் தமிழகத்தினுடைய தலையாய திட்டம் ஆகும். ஒரு அரசினுடைய திட்டத்தை அதனுடைய முதலமைச்சர் நாட்டு மக்களிடம் சொல்வதில் என்ன தவறு. ஒரு தேர்தல் வந்தால், பொது மக்களிடம் பேசுகிற நேரத்தில் ஒரு ஆட்சியினுடைய திட்டத்தைப் பற்றி மக்களிடம் தெரிவிப்பதில் என்ன தவறு. ஒரு கழகமோ, ஒரு ஆட்சியோ. . . .



மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கூட்ட விவகாரம், எல்லாம் பேசிக்கொண்டு இருக்கவேண்டாம், இந்த துணை மானியக் கோரிக்கை மீது பேசுங்கள். பொதுக்கூட்டம் நிறையப் போடப் போகிறீர்கள். அதிலே 2 கட்சியைச் சேர்ந்தவர்களும் பேசப் போகிறீர்கள்.

திரு. ஜே. எஸ். இராசு: 100 கோடி ரூபாய் அளவுக்கு திட்டத்தை போட்டிருக்கிறீர்கள். அது போதவில்லை என்று தலைமைச் செயலாளர் 110 கோடி ரூபாய் ஆகும் என்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் 2 வேளைக்கு கூட சோறு போடலாம் என்று கருதுகிறேன். 120,130. கோடிக்கு போகும் என்று பெருந் தன்மையாக தெரிவித்திருக்கிறார்கள். அவ்வளவு பெரிய தொகையை செலவு செய்து தீட்டப்படுகிற திட்டத்தை எதிர் கட்சித் தலைவர் எதிர்க்கிறார் என்ற ஒரு தவறான செய்தியை இங்கே சொன்னால் அது தவறுதான்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்; பொதுக் கூட்டத்தில் பேசுகிற பேச்சுக்களை எல்லாம் இங்கே எடுத்து வைத்து பேச வேண்டும் என்றால் 2,3 நாட்களுக்கு இந்த அவையை நீட்டிக்கொண்டு போக தாங்கள் அனுமதி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே. முதலமைச்சர் அவர்களுடைய எண்ணப்படி அவையை 2,3 நாட்களுக்கு நீட்டித்து போவதற்கு எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கருத்துக்கு நான் மாறுபடவில்லை. ஆனால் இதை எங்கே கொண்டு போக வேண்டாம் என்பதற்காக சொன்னேனோ அதை அப்படி சொல்வதை அவர்கள் விளம்பரத்திற்குப் பயன்படுத்தினால் உண்மையிலேயே நான் ஆட்சேபிக்கவும் இல்லை, நான் பின்தங்கவும் இல்லை. ஆனால் சட்டம் என்ன என்பதை முடிவு செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே அலுவல் ஆய்வு குழுவில் இன்று வரை என்று முடிவு செய்தோம். எல்லோருக்கும் டிக்கட் வாங்கிவிட்டோம் என்று இப்போதுதான் சொல்லிவிட்டு போனார்கள். எனக்குத்தான் தேர்தல் இல்லை. எல்லோருக்கும் தேர்தல் வேலை இருக்கிறது. அதனல் இந்த பிரச்சனையிலே சூடு இல்லாமல் முடித்துவிடுவோம்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் துவக்கத்தில் கூறியதுபோல் ரூ. 100 கோடிக்கு மேற்பட்ட செலவில் போடப்பட்ட திட்டத்திற்கு விரிவான வாதம் தேவை. ஆகவே வரக்கூடிய கூட்டத்தொடரில் அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதில் இருக்கிற குழப்பங்களை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். மத்திய உணவு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வேறு ஒரு திட்டத்தை நிறுத்திவிடக் கூடாது. காரணம்

போடப்படக்கூடிய திட்டத்திற்கு உத்திரவாதம் இல்லாமல் போய் விடும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருச்சியிலே ஜூலை மாதம் 21ம் தேதி பேசியிருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு கூறுகிறார், நகர்ப்புறங்களில் செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி யிலிருந்து சத்துணவு வழங்கப்பட்டிருப்பதால் ஆண்டுக்கு 120, 130 கோடி ரூபாய் தேவைப்படும். நிறைவேற்றப்படுகிற திட்டம் தாமதமானால் கூட பரவாயில்லை. முதலிலே பசியை போக்க வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம் என்கிறார். போடப்படும் திட்டத்திற்காக எந்த திட்டத்தையும் நிறுத்த மாட்டோம் என்பது முதல் வாதம்.

(முற்பகல் 10.40)

இதற்கு என்னதான் செலவு என்பதை இந்த மாமன்றம் கவனித்தாக வேண்டும். காரணம் இது வரி கொடுக்கிற மக்கள் பற்றிய பிரச்சினை ஆகும். இந்தத் திட்டத்திற்கு என்னதான் செலவாகும் என்று இன்னும் ஒரு திட்டம் ஏற்படவில்லை. திட்டமே சரியாக இல்லாமல் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே இந்தத் திட்டத்திற்கு 100 கோடி செலவாகும் என்று எதிர்பார்ப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் எதிர்பாராச் செலவு என்று 50 கோடி ரூபாய் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு விஷயங்களில் குறைபாடானதாக இத்திட்டம் இருப்பதால் அதையெல்லாம் நிறைவுசெய்து சிறந்த முறையில் நல்ல திட்டமாக நிறைவேற்றவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர்களைப் பற்றியும், ஆசிரியர்களுக்கு இந்தத் திட்டத்தினால் ஏற்பட்டுள்ள வேலைக் சுமையைப்பற்றியும் எல்லோரும் அறிவார்கள்.

அடுத்து கடன் நிவாரணச் சட்டம் ஒன்று வந்திருக்கிறது. அதைப்பற்றி ஆளுங்கட்சியிலிருக்கின்ற நண்பர்கள் பேசுகிற போது தற்போது இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் கடன் நிவாரணச் சட்டத்தை முதன்முதல கக் கொண்டுவந்தது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அது தவறான கருத்து என்பதோடு கடன் நிவாரணச் சட்டம் ஒன்றுபட்ட கழக ஆட்சியிலேயே டாக்டர் கலைஞர் முதல்வராக இருந்தபோது 1972 ஆம் ஆண்டு கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டம் கவர்னரின் அனுமதியைப் பெற்று ஜனாதிபதியின் அனுமதியைப் பெற்று 15. 12. 1972 ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதிலே வட்டித் தள்ளுபடி மட்டுமல்ல, இரண்டு மடங்கு வட்டி கட்டியிருந்தால் அசலும் தள்ளுபடி செய்யப்பட் டிருக்கிறது என்பதை நான் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



அடுத்து சட்டம், ஒழுங்கு, நிர்வாகம் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் நான் சொல்லிவிட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நம்முடைய திருப்பூர் நகரத்தில் கல்லூரியிலே வேலை பார்த்துக் கொண்டிருக்கிற நாகம்மாள் தூக்கிலே தொங்கினார் என்பது செய்தி. ஆனால் படுகொலை செய்யப்பட்டார் என்பது நாகம்மாளின் உறவினர் களுடைய கருத்து. போலீஸ் சரியாக நடந்து கொள்ளவில்லை, தாசில்தார் சரியாக நடந்து கொள்ளவில்லை, உள்ளூர் பிரமுகர் களின் தலையீட்டால் கொலை தற்கொலை என்று சொல்லப்படு கிறது என்ற பெரிய விஷயத்தை பாதிக்கப்பட்ட நாகம்மாளின் பெற்றோர்களும் உடன்பிறப்புகளும் மாண்புமிகு முதல்வர் அவர் களுக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பியிருக் கிறார்கள். அதையும் விசாரிக்க வேண்டும்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே ஒரு கொலை. செய்தியே வராத கொலையாகிவிட்டது. அன்பரசன் என்ற ஒருவர், அவர் தன்னுடைய பூலாம்பட்டியிலே இருக்கிற வீட்டில் இருக்கிறார். விடியற்காலை 3 மணிக்கு அவருடைய தோழர் ஒருவர் வக்கீலுக்குப்படித்தவர், அவர் அவருடைய வீட்டிற்கு வந்து திருச்சிக்கு அழைத்துச் செல்கிறார். விடியற்காலை புறப்பட்டுப் போகிறார்கள். ஆனால் அடுத்த நாள் மதியம் 11 மணிக்கு அவர் பிணமாக அதே டாக்சியிலே அதே வழக்கறிஞரால் கொண்டு வரப் படுகிறார். பொதுமக்கள் அந்த வண்டியினுடைய டிரைவரையும் அந்த வழக்கறிஞரையும் போலீசிலே ஒப்படைக்கிறார்கள். அப்படி அவர்கள் ஒப்படைக்கப்பட்டு இன்று 1 மாதம் ஆகிறது. நேற்றைக்குப் பேப்பரிலே செய்தி வருகிறது. அந்த கொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கறிஞரை போலீஸ் தேடுகிறது என்ற செய்தி வருகிறது.

அவரைப் பொதுமக்கள்தான் பிடித்துபோலீசிலே ஒப்படைத் திருக்கிறார்கள். ஒப்படைக்கப்பட்ட கொலைகாரரை போலீஸ் இன்றைக்கு தேடுகிறது என்ற அளவுக்கு நீதி கெட்டுவிடுமோ என்று அஞ்சுகிற அளவுக்கு என்னுடைய தொகுதியிலும் மற்ற வேறு இடங்களிலும் கருத்து நிலவுகிறது. (மணி அடிக்கப் பெற்றது). இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. விஸ்வநாதன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த துணை மானியக் கோரிக்கை மீது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர் அருமை நண்பர் இராசு அவர்கள் சத்துணவுத் திட்டத்தை திராவிட முன்னேற்ற கழகத் தலைமை எதிர்க்க வில்லை என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் அப்படி தான் சொல்லியிருப்பார் என்று கருதுகிறேன். இதிலே திராவிட

முன்னேற்ற கழகம் இரட்டை வேடம் போடுகிறது என்று நான் சொன்னால் அவர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்கள், காரணம் ஒரு பக்கத்திலே எதிர்க்கிறார்கள், இன்னொரு பக்கத்தில் ஆதரிப்பதாக சொல்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆதரித்துப் பேசியிருப்பதாக நண்பர் இராசு அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் என். வி. என். சோமு அவர்கள் கடந்த ஆண்டு பட்ஜெட்டிலே பேசுகிற போது இதை கடுமையாக குறை கூறி பேசியதும், நண்பர் வின்சென்ட் அவர்கள் அவருக்கு மறுப்பு சொல்லியதும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன் இதனை குழப்பான திட்டம் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் பட்ஜெட்டிலே பேசியபோது கூட குறிப்பிட்டேன். இந்த சத்துணவுக் திட்டத்தை எதிர்க்கவில்லை. குழந்தைகளின் பெயரால் கொள்ளை அடிக்காதீர்கள் என்று தான் குறிப்பிட்டேன். நான் வேறு எதையும் சொல்லவிலலை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. மி. வின்சென்ட்: துணைத்தலைவர் அவர்களே, அன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்கள் இந்தத் திட்டத்தை யார் கொள்ளை அடிப்பதற்காக கொண்டுவந்தார்கள் என்றும், அது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சிக்காரர்களுக்காக போடப்பட்ட திட்டம் என்று பகிரங்கமாக குறை கூறி பேசினார். அன்றையதினமே நான் அதற்கு மறுப்பு கூறிய நேரத்தில் கூட அந்தத் திட்டம் தாய் பாசத்தோடு எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்டத் திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் காட்டுவோம். நிறைவேற்றிக் காட்டியதற்கு பிறகாவது நீங்கள் பாராட்டுங்கள் என்று நான் அன்று சவால் விட்டேன். அதை இன்று பாராட்டுகிறார்கள். அன்று எதிர்த்தார்கள் என்பதை உறுதியாகத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கோ. விஸ்வநாதன்: துணைத் தலைவர் அவர்களே. இங்கே இந்தத் திட்டத்தைப் பற்றி குறிப்பிட்ட உறுப்பினர் இராசு அவர்கள் இது ஒரு குழப்பமான திட்டம் என்று குறிப்பிட்டார்கள்: அவர்கள் குழம்பியிருக்கிறார்கள் என்பதை அவர்களே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இதை எதிர்க்கவும் முடியவில்லை, காரணம் மக்கள் அவர்கள் பக்கம் இருக்கிறார்கள். முதல்வர் அவர்களின் சத்துணவுத் திட்டம் அகில இந்தியாவையும் ஈர்த்துள்ளது. இந்தியாவிற்கு வெளியே இருப்பவர்களும் இதிலே அக்கறை காட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)





திரு. ஜே. எஸ். இராசு: துணைத்தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்ற கழகமோ, திராவிட முன்னேற்ற கழக தலைவரோ, என்னைப்போன்ற தொண்டர்களோ ஆதரிக்கிறோம்; எதிர்க்கவில்லை. ஆனால் திட்டம் குழப்பமாக இருக்கிறது. குழப்பத்தை நீக்குங்கள் என்றுதான் குறிப்பிட்டேன், அதை தவறாக புரிந்து கொண்டு அவர்கள்தான் குழப்பத்தில் இருக்கிறார்கள்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: துணைத்தலைவர் அவர்களே, * * * * * *

திரு. துரைமுருகன்: துணைத்தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று மட்டும் கேட்டு விடுகிறேன்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி ஒரு உறுப்பினர் பேசி மற்றொரு உறுப்பினர் அதற்கு கேள்வி கேட்டுக் கொண்டிருக்க முடியாது. வேண்டாம் உட்காருங்கள்.

திரு. துரைமுருகன்: துணைத்தலைவர் அவர்களே, * * * *

(முற்பகல் 10-50)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபாகரன் பேசியதையும் அதையொட்டி பேசப்பட்ட அத்தனை கருத்துக்களையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. கோ. விஸ்வநாதன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தை முழுமையாக திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது என்ற கருத்து சொல்லப்படுகிறது. அதை நான் முழுமையாக வரவேற்கிறேன். இனியாவது குழந்தைகள் பெயராலே கொள்ளையடிக்கப் பார்க்கிறார்கள் என்று பொறுப்பற்ற முறையில் பேசாமல் இருப்பார்கள் என்று நான் எதிர்ப்பார்க்கிறேன். * * *

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * * * நீக்கியாகி விட்டது. ஆகவே, அது பற்றிப் பேசாதீர்கள்.

திரு. கோ. விஸ்வநாதன்: எதிர்க்கட்சி என்றாலும் அரசினுடைய நல்ல திட்டத்தை வரவேற்கிறோம். அதே நேரத்தில் குறை சொல்ல உரிமை இருக்கிறது என்றும் அவர்கள் சொன்னார்கள். அது உரிமை அல்ல. எதிர்க்கட்சியின் கடமை என்பதையும் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நல்ல எதிர்க்கட்சி இருக்க வேண்டுமென்பதில் நாங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். அது நிலையாகவே நீடிக்கவேண்டுமென்றும் விரும்புகிறோம். முதலமைச்சராக இருந்த ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக வருவது என்பது கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பாகும். அப்படிப்பட்ட வாய்ப்பை நல்லமுறையிலே அவர்கள் பயன்படுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். எங்களுடைய நல்ல திட்டங்களை வரவேற்கின்ற அளவுக்கு அவர்கள் எதிர் காலத்திலும் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆட்சி எப்படியும் இறங்க வேண்டும், அந்த நாற்காலியில் நாம் அமர வேண்டுமென்ற நோக்கம் எதிர்க்கட்சிக்கு இருக்கலாம், தவறில்லை. அந்த நோக்கம் நிறைவேறாது என்று தெரிந்தவுடனே, நல்ல கன்ஸ்ட்ரக்டிவ் கிரிட்டிசிஸம் இருப்பது வரவேற்கத்தக்கது என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சத்துணவுத் திட்டம் பார்ப்பதற்கு சாதாரண திட்டமாக தோன்றினாலும் ஒரு லாங் டெர்ம் இன்வெஸ்ட்மென்ட் என்றுதான் சொல்ல வேண்டும். பல ஆண்டுகள் கழித்து 8 ஆண்டுகள், 10 ஆண்டுகள் கழித்து, இன்றைக்குச் சுகாதார அமைச்சகத்துக்குச் செலவழிக்கிற தொகையைக் குறைத்துக் கொள்ள வேண்டிய நிலையேற்படும். நல்ல திடகாத்திரமான குழந்தைகளை, சிறுவர்களை, இளைஞர்களைப பெற முடியும். அப்படிப்பட்ட இந்தத் திட்டத்தை இன்றைக்கு உலகத்திலே பல்வேறு பகுதியிலே இருக்கிற மருத்துவ வல்லுநர்கள் எல்லாம் பாராட்டுகின்ற திட்டத்தை, எதிர்க்கட்சிகள் முழுமையாக ஆதரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு குறைபாட்டைப் பேசுவதையும் நான் பார்க்கிறேன். குழந்தைகளுக்குச் சோறு போட்டு விடுகிறீர்கள், ஆனால் அவர்கள் பெரியவர்கள் ஆன பிறகு அவர்களுக்குச் சோறு போட வேண்டாமா என்று பெரிய தலைவர் ஒருவர் பேசியதாகப் பார்த்தேன். பெரியவர்கள் ஆன பிறகு சோறு இருக்காது என்பதற்காக அவர்கள் குழந்தைகளாக இருக்கும்பொழுதே பட்டினி போட வேண்டுமா?

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



இது அருமையான திட்டம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் அதில் சில குறைபாடுகள் இருக்கக் கூடும். ஒரு கல்யாணத்தில் 500 பேர்களுக்குச் சாப்பாடு போடும் பொழுது குறைபாடுகள் ஏற்பட்டு விடுகின்றன; சாப்பிட்டு விட்டுப் பேசுகின்றவர்கள் ஆளுக்கு ஒரு குறையைச் சொல்லி விட்டுப் போகிறார்கள். அப்படியிருக்கும்பொழுது 60 இலட்சம் குழந்தைகளுக்கு, இன்னும் நகர்ப்புறங்களுக்கும் விஸ்தரிக்கப் படும்பொழுது 80 இலட்சம் குழந்தைகளாக ஆகலாம். அவ்வளவு பேர்களுக்கும் ஒருவேளை சோறு போடுவது என்பது உலகத்திலே யாரும் செய்யாத ஒன்று, செய்ய நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. ஆங்காங்கு சிறு குறைகள் இருந்தாலும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது எதிர்க்கட்சி உறுப்பினர்களோ அல்லது ஆளுங்கட்சி உறுப்பினர்களோ சுட்டிக்காட்டலாம். தமிழகத்திலே புரட்சித் தலைவரவர்கள் எதிர்க்கட்சியினரின் ஆலோசனையோடு செயல்படுத்தியிருக்கின்ற திட்டம் என்ற நிலைமையை உருவாக்குவது தமிழ்நாடு இந்தியாவுக்கே வழிகாட்டியாக அமைவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

துணை மானியக் கோரிக்கையிலே இராமேஸ்வரம், கன்னியாகுமரி, மாமல்லபுரம் ஆகிய இடங்களைச் சர்வதேச சுற்றுலா மையமாக வளர்ப்பதற்காகப் பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். தமிழகத்திலிருந்து எவ்வளவோ முறை எடுத்துச் சொல்லியும் மத்திய அரசாங்கம் இதில் எண்ணும் கருத்தும் காட்டாமலும், வேண்டிய பணத்தை தராமலும் இருக்கிறது. பல்வேறு ஆண்டுகளாக நாம் கேட்டுக் கொண்டிருந்தும் தமிழகத்திலே உள்ள பல்வேறு இடங்களைச் சுற்றுலா மையமாக வளர்ப்பதற்கான முயற்சிகளை அவர்கள் எடுக்கவில்லை. காஷ்மீரத்திற்கும், இன்னும் பல்வேறு இடங்களுக்கும் செலவழிப்பதைபோல அதில் ஒரு பகுதியையாவது தமிழகத்திற்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு வறட்சி நிவாரண வேலையில் மிகவும் பிரமாதமாக வேலை செய்து பல்வேறு இடங்களில் குடிநீர்ப் பிரச்னை தீர்த்து வைக்கப்பட்டது. இந்த ஆண்டும் இன்னும் அடுத்தடுத்த மாதங்களில் குடிநீர்ப் பிரச்னை ஏற்படக்கூடும் என்பதை உணர்ந்த அரசாங்கம் இப்பொழுதே அதற்கான பணத்தை ஒதுக்குகிறது. நிதியமைச்சரவர்கள் இதற்காக இன்னும் கொஞ்சம் அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை அரசாங்கம் ஒழுங்காகச் செலவழித்து வருவதை எதிர்க்கட்சி நிச்சயமாகப் பாராட்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். நிதியமைச்சரவர்களிடம் எல்லாவற்றிற்கும் திடீரென்று பணத்தைப் பெற்றுவிட அமைச்சர்களால் முடிவதில்லை. இது வேண்டுமா. நிறைவேற்றப்பட

வேண்டிய திட்டம்தானா என்பதை யெல்லாம் நிதியமைச்சரவர்கள் ஆராய்ந்து பார்த்துத்தான் பணத்தை அனுமதிக்கிறார்கள். எனவே, இவ்வளவு கண்ணும் கருத்துமாக இருந்து மிகச் சிக்கனமான அளவிலே பணத்தை செலவழிக்கும் அரசின் செயல் பாராட்டத் தக்கது என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, 1982-83 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டிலே நான் சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பண வீக்கத்தின் காரணமாகப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டிருக்கிறது. பணத்திற்கு மதிப்பு இல்லை. பொருட்களின் விலை உயர்ந்து கொண்டே இருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலே சாமான்ய மக்கள் ஏழை மக்கள் பயன்படுத்துகின்ற உணவுப் பண்டங்களுக்கு வரி விதிப்பைக் கொண்டு வருகிறோம். இதனால் ஏழை மக்கள், வாங்கும் சக்தி குறைந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பு இல்லை. இந்த நிலைமையில் பஞ்சம் என்ற அவல நிலை இருக்கும் நேரத்தில் சாதாரண பொதுமக்கள் பயன்படுத்துகின்ற பண்டங்களின் மீது அரசின் மூலம் அதிக வரியை விதித்துக் கொண்டிருககிறோம். இதனால் பண்டங்களின் விலை வியாபாரிகளால் மேலும் உயர்த்தப்படுகிறது. வியாபாரிகள் விலைகளை உயர்த்துவதை எந்த வகையிலேயும் கண்டிக்க முடியாத அவல நிலைமையில் நாம் இருக்கிறோம். சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கும் இந்த நேரத்தில் பண்டங்களின் விலை பலயிடங்களில் உயர்ந்து இருக்கிறது; பொருள்கள் கிடைக்காமல் இருக்கின்றன.

இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலமாக ஏழைக் குழந்தைகளுக்கு உணவு கொடுப்பதில் எந்த விதமான கருத்த வித்தியாசத்திற்கும் இடமில்லை. கிராமங்களில் இருக்கின்ற குழந்தைகளுக்கு உணவு கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, நகரங்களில் எம். ஏ., பி. ஏ., டாக்டர் ஆகிய படிப்புக்களைப் படிக்கின்ற மாணவர்களுக்கு உணவு கொடுக்கப்படவில்லை என்ற அவல நிலை ஏற்படுகிறது. கிட்டத்தட்ட 200க்கும் மேற்பட்டவர்கள் சென்னையை விட்டே, உணவு கிடைக்காததால், படிப்பை நிறுத்திவிட்டு தங்களுடைய கிராமங்களுக்கு அழுதுகொண்டே செல்கிறார்கள்.

சென்ற ஆண்டே முதலமைச்சரவர்களிடத்திலே சொன்னேன். ஆயிரம் மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்ன பொழுது, அவ்வளவுக்கும் இல்லாவிட்டாலும் குறிப்பிட்ட மாணவர்களுக்குக் கொடுக்கிறோம், உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காவது கொடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால் சென்ற ஆண்டு அது கொடுக்கப்படவில்லை. இப்பொழுது ஏழைக் குழந்தைகளுக்கு உணவு என்று சொல்லி



படியாத குழந்தைகளுக்குச் சோறு போட்டுவிட்டு, அரசாங்கத்தின் செலவிலே இலட்சக் கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டு, முன்னேற்றத்திற்கு திட்டங்கள் தீட்டப்பட்டு அப்படிப் படித்த பிள்ளைகள் பாதியிலேயே படிப்பை விட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பும் அவல நிலைமைக்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்குமா?

[முற்பகல் 11-00]

அல்லது அரசாங்கம் உடனடியாக இதைக் கவனிக்குமா? சென்ற ஆண்டு போலவே, அவல நிலை உண்டாக விட்டு விடுவார்களா என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். ஏழைகளின் பெயரைச் சொல்லி, படித்து, பாதியிலே விட்டுவிடுகின்ற அவல நிலை மற்றும் பாவமான காரியமாக இருப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்யாமல் அரசாங்கம் இந்தப் பாவமான மக்கள், பின்தங்கிய மக்கள், பச்சையாக சொல்ல வேண்டுமானால், ஆதி திராவிடக் குழந்தைகளுடைய படிப்பு கெடுகிறது. கிராமங்களிலே கள்ளுக் கடைகளை, சாராயக் கடைகளை, திறந்துவிட்டு, அந்த அவல நிலையின் காரணமாக, பெற்றோர்கள் மயக்கமுற்று பள்ளிகளுக்குப் பிள்ளைகளை அனுப்பாத சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். அதற்கும் மேலாகப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு உணவு என்று சொல்லி, ஆசிரியர்களைச் சாப்பாடு ஆக்குகின்ற சமையல்காரர்களாக்கும் நிலைமை இருக்கிறது. ஆனால் அவர்கள் சொல்கிறார்கள், ஆசிரியர்களுக்கு உதவி செய்ய சமையல்காரர்களைப் போட்டிருக்கிறோம் என்று. இருந்தாலும், ஆசிரியர்கள் சமையல் கூடங்களுக்குச் செல்வதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்திலே 100 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அவையின் பேரிலே நம்பிக்கை வைத்திருக்கலாம். இந்த அவையில் விவாதித்திருக்கலாம். என்னென்ன தகுதிகள் என்று கண்டு பிடித்திருக்கலாம். மற்ற நடவடிக்கைகள் எடுத்திருக்கலாம். அவைகளை எல்லாம் செய்யாமல் இருந்தாலும் நல்ல காரியங்கள் என்பதால் நாங்கள் ஒத்துக் கொண்டோம். ஆனால், இப்போது, ரூ. 100 கோடியிலே முடியாது. ரூ. 130 கோடி அல்லது அதற்கு மேலும் ஆகும் என்று சொல்கிறார்கள். இதன்மூலம் பலருக்கு உத்தியோகம் கிடைக்கும் என்றும் சொல்கிறார்கள்.

ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசியல சாசன சட்டத்தைப் புரிந்துகொண்டும் வேண்டுமென்றே பல இடங்களில் சொல்லி இருக்கிறார்கள், வேதனையாக இருக்கிறது. அவர் சொல்கின்றபோது சொல்லுகிறார், இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ரிசர்வேஷன் கொடுப்பது சரியல்ல. இது என்னுடைய சொந்த அபிப்பிராயம் என்று.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** ஒரு பேச்சினுடைய முழுமையான, ஒட்டுமொத்தமான கருத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், இரண்டு மூன்று வார்த்தைகளை மட்டும் வைத்துப் பேசுவது உண்மையை தெளிவுப்படுத்துவதற்கு உதவாது. நான் சொன்னது இதுதான். எத்தனை காலத்திற்கு மக்கள் பிறரை நம்பியிருப்பது ? தன் சொந்தக் காலிலே நிற்கின்ற அளவிற்கு அதிக வசதிகளைச் செய்து கொடுத்து இந்த நிலைமையிலேயிருந்து மாற்ற வேண்டும். இது என்னுடைய கொள்கையென்று விளக்கி, இந்தக் கருத்தினைச் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக்சொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்வேன். ஆனால் அதிலேயிருக்கிற ஆபத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு முதலமைச்சரே இப்படிச் சொல்வது சரிதானா ? அவர்கள் சொல்கின்ற ரிசர்வேஷனைக் கொடுக்கின்ற அதிகாரிகள் தங்களுடைய கடமையைச் செய்வதற்கு அலட்சியப்படுத்துகிறார்களே.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அதிகாரிகள் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இது சட்டத்திலே நிறைவேற்றப்பட்ட கொள்கை அல்ல. அல்லது மாற்றப்பட வேண்டுமென்ற அடிப்படை கொள்கையும் அல்ல. ஆனால், என்னுடைய எண்ணத்தைச் சொன்னேன் யாரும் பிறருடைய தயவில் இருக்கக் கூடாது. மற்றவர்களுக்குச் சமமாக இருக்க வேண்டும். எப்போதும் பிறரிடம் கையேந்தி நிற்கக் கூடாது. நாட்டிலே ஒற்றுமை இருக்க வேண்டுமென்றால் எல்லோரும் சமமாக மாற்றப்பட வேண்டும். அதற்கு என்ன செலவானாலும் அந்த நிலைமையை உருவாக்க அரசு முன் வரவேண்டும். இது என்னுடைய தனிப்பட்ட கொள்கை என்று சொன்னேன். அதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஆனால் இதே அரசுதான் பஞ்சாயத்துத் தேர்தலிலே எந்த, எந்த அளவுக்கு இட ஒதுக்கீடு செய்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. எல். இளையபெருமாள் :** ஆகவே, முதலமைச்சர் அவர்கள் எத்தனை ஆண்டுக்காலம் கையேந்துவீர்கள் என்று சொன்னார்கள். நிச்சயமாகக் கையேந்த நாங்கள் விரும்பவில்லையென்பதை இப்போதும் தெள்ளத் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்காக வருந்துகிறேன், திரும்பத் திரும்ப நான் சொன்னதை அவர்கள் மாற்றிச் சொல்லக் கூடாது. அதைத் தயவு செய்து விளக்கியாக வேண்டுமென்பதைத்



தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய நோக்கத்தை வேறு விதமாக நீங்கள் மாற்றி ஒரு கருத்தைச் சொல்லி, என்னைக் குற்றவாளியாக ஆக்கி, நீங்கள் பெருமை கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** நான் குற்றவாளியாக ஆக்க விரும்பவில்லை. உண்மை நிலையை எடுத்துச் சொல்வதிலே விருப்பம் உடையவன். எவ்வளவு காலத்திற்கு என்று கேட்டார். எவ்வளவு நாளைக்கு இந்து சமுதாயம் இந்த மக்களை ஜாதியின் காரணமாகத் தீண்டத்தகாதவர்கள் என்று சொல்ல விரும்புகிறார்களோ * *

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, இது அவைக் குறிப்பிலே வைக்கப்பட வேண்டுமா என்பதை யோசிக்க வேண்டும். இவர் தன்னை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்றவர்களைப் பிரித்துப் பேசுகிறார்கள். இது நம்மையும் மற்றவர்களையும் அவமானப்படுத்துகின்ற சொல். எங்கள் கழகத்திற்குத் திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் வைத்திருக்கிறோம் என்பதைத் தயவு செய்து அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும். ஆதி திராவிடர் என்று குறிப்பதே நாங்கள்தான் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டு நாங்கள், நீங்கள் என்று பிரித்துப் பேசாதீர்கள். வேண்டுமானால் நாம், நாங்கள் என்று பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் குறிப்பிட்ட குற்றச் சாட்டுக்களை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடு). நான் சொல்லி முடித்துவிடுகிறேன். அந்த சமுதாயத்திற்கும், மற்ற எல்லா சமுதாயத்தினருக்கும் இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் பொறுப்பாக இருக்கிறார்கள். நீங்கள் ஒருவர்தான் அவர்களை பாதுகாக்கவேண்டிய அவசியம் இல்லை. எல்லா உறுப்பினர்களும் அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்றுதான் இருக்கிறார்கள் (குறுக்கீடு). உறுப்பினர் அவர்கள் சமுதாயத்திலுள்ள எல்லோரும் பாதுகாக்கப்பட வேண்டும். எல்லா உறுப்பினர்களும் அந்தச் சமுதாயத்தைப் பற்றி இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சமுதாயத்தை உறுப்பினர் ஒருவர்தான் பாதுகாக்கவேண்டுமென்று இல்லை எல்லோரும் பாதுகாக்க வேண்டுமென்றுதான் இருக்கிறோம்.

---

** மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

THIRU K. S. G. HAJA SHAREEF: The Hon'ble Member has not used any un-parliamentary language. He has expressed only his own view in the matter.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது வந்து ஒரு குற்றச்சாட்டு. அதற்கு அவர்கள் சொன்ன பதிலை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

THIRU L. ELAYAPERUMAL: I am not saying anything against the Chief Minister. . . . (Interruption).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். திரும்பத் திரும்ப பேசுவதில் அர்த்தம் இல்லை.

டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்களே இங்கே எடுத்துவைத்த சில கருத்துக்களுக்கும், அதற்கு முதல்வர் அவர்கள் பதில் கருத்துக்களுக்கும் நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. அவைகள் ஏற்கனவே பத்திரிக்கையிலே வந்த அந்த கருத்தைத்தான் அவர் பேசினார். ஆனால் தாங்கள் அவைக்குறிப்பிலேயிருந்து எடுக்கப்பட வேண்டியதை தாங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எவ்வளவு காலத்திற்கு தாழ்த்தப்பட்டவர்கள் பிறர் தயவை நாடி இருப்பது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பதில் அளிக்கின்ற வகையில் இளையபெருமாள் அவர்கள் எவ்வளவு காலத்திற்கு என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து சமுதாயக் கொடுமைகளிலிருந்து மீளுகின்ற அந்தக் காலம் வரை என்ற வகையில் சொல்லியிருக்கிறார்கள். அது அனுமதிக்கப்படலாம். வேறு அன்-பார்லியமென்டரி வேர்ட்ஸ் இருந்தால் அதைத் தாங்கள் எடுத்துவிடலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்து சமுதாயம் என்று சொல்லிவிட்டு

* * *

என்று சொன்னார்கள். ஆகையால் *** என்று. . . .(குறுக்கீடு).

டாக்டர் மு கருணாநிதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முழு வாக்கியத்தையும் நீக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. *** என்ற அந்த வார்த்தையை எடுத்து விடலாம்.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த வார்த்தையை எடுத்துவிடலாம். அதில் என்ன பொருள் வருகிறது என்று பார்த்துச் சொல்கிறேன். அதை பிரசுரிக்க வேண்டாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இந்து சமுதாயக் கொடுமைகள் நடக்கின்ற வரை என்பது வரையில் சரி, *** என்று சொல்கின்ற அந்தப் பகுதிகள் வரையில் தாங்கள் நீக்க உத்தரவிட்டால். . . . . . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்தப் பகுதிகள் நீக்கப்படவேண்டும் என்று உத்தரவிடுகிறேன். அந்த வாசகங்கள் நான் பார்த்துச் சொல்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: என்ன சார் இது, நியாயமாக நடத்துங்கள்.

திரு. எல். இளையபெருமாள்: * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த சட்டமுன் வடிவைப்பற்றி உறுப்பினர் பேசவேண்டும். இப்போது இரண்டாவதாக இளையபெருமாள் அவர்கள் பேசியதும் தேவையில்லை.

(முற்பகல் 11.10)

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, 'இந்து சமுதாயக் கொடுமைகள்' என்ற வார்த்தைகள் கூட அவைக் குறிப்பில் வேண்டாம், என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள். சமுதாயக் கொடுமைகள் என்று பொதுவாக இருக்கலாம்.

திரு. எல். இளையபெருமாள்: 'தீண்டாமை' என்ற கொடுமை இந்து சமுதாயத்தினரால் தான் நடத்தப்படுகிறது என்பதை நம்முடைய நண்பர் ஏற்றுக்கொள்வார் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) 'I am not yielding'.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்கு நீங்கள் பதில் சொல்லியக் காரணத்தால், அவர் மீண்டும் குறுக்கிடுகிறார். ஆகவே, அவர் கருத்தைச் சொல்வதற்கு அனுமதி அளிக்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த அவையிலே இருந்து கொண்டு இருக்கிற ஒரு உறுப்பினர் என்ற முறையிலே என்னுடைய கருத்தை நான் வெளிப்படுத்தினேன். மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு மறுப்பு கூறவேண்டும் என்கிற அடிப்படையில் நான் சொல்லவில்லை. *** என்று குறிப்பிட்ட காரணத்தால் அதை நீக்கவேண்டும் என்று குறிப்பிட்டதைப்போல, இந்து சமுதாயம் என்று ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைப் பற்றிச் சொல்லியதால், 'இந்து சமுதாயம், என்று குறிப்பிட வேண்டாம் என்பதற்குச் சொன்னேன். காரணம், சமுதாயத்தின் ஒரு பிரிவில் உள்ளவர்களை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லி, கொடுமைப் படுத்துகிறார்கள் என்று சொல்வதை விட, பொதுப்படையாக 'சமுதாயக் கொடுமை' என்று சொல்லட்டும். சமுதாயக் கொடுமைகள் எங்கேயிருந்தாலும் அதை நாம் சாடுவோம். தாழ்த்தப்பட்டவர்களுக்கு எங்கே கொடுமைகள் செய்தாலும் அதைச் சாடுவோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : நான் சென்ற ஆண்டு கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொன்னேன். கருணையோடு கவனிப்பதாகச் சொன்னார்கள். கிட்டத்தட்ட 33,000 கடைநிலை ஊழியர்கள் இன்றைக்கு அரசாங்கத் துறையில் பல்வேறு இடங்களில் பணி செய்கிறார்கள். அவர்களையெல்லாம் இப்போது உடனடியாக பர்த் சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். 20—30 ஆண்டுகளுக்கு முன்னால் சர்வீசில் சேர்ந்தவர்கள் இப்போது எப்படி சர்ட்டிபிகேட் வாங்கித் தரமுடியும். ஆகவே, அவர்களின் மீது கருணை கொண்டு, அந்த ஆணையை மாற்றி, அவர்களை 60 வயது எய்தும் வரையில் — ஏற்கனவே கொடுத்த தேதியின் அடிப்படையில் — பணியில் இருப்பதற்கு அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது).

துணைத்தலைவர் அவர்களே, நான் இன்னும் இரண்டொரு நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன். குறுக்கீடுகள் இருந்ததன் காரணமாக. எனக்கு இன்னும் இரண்டொரு நிமிடங்கள் பேச அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறைந்த பட்சக் கூலிச்சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அது சரிவர அமல் செய்யப்படவில்லை. அதை அமல் செய்யும் பொறுப்பு ரெவின்யூ அதிகாரிகளிடத்தில் கொடுக்கப் பட்டு விட்டது. ஆகவே, நான் இந்த நேரத்தில் ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்தச் சட்டத்தை அமல்படுத்தும் பொறுப்பு தொழிலாளர் நல இலாகாவிடம் கொடுத்து,

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அதற்காக தனி அலுவலர்கள் நியமித்து செய்யவேண்டும். அப்போதுதான் அது சரியான முறையில் அமல்படுத்தப்படும். ஆகவே, அதைச் செய்வதற்கு அரசு முன்வரவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போலவே, போலீஸ் நிர்வாகத்திலும் சரியான அளவிற்கு ஆதிதிராவிடர்களுக்கு ரெப்ரசன்டேஷன் கொடுக்கப் படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவரிடமும் அதைப் பற்றி கவனிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அவரும் கவனிப்பதாக வாக்குறுதி அளித்து இருக்கிறார்கள். அப்படி யிருந்தும் 130 பேர்தான் அதிலே பயன் அடைந்து இருக்கிறார்கள். ஆதிதிராவிடர் சமுதாயம் மிகவும் தாழ்த்தப்பட்ட சமுதாயம், முன்னேற்றப்படவேண்டிய சமுதாயம் என்று இருந்தும் கூட இந்த அவல நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்துள்ள இந்தத் துறையிலேயே இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியும் இதுவரையில் ஒன்றும் செய்யவில்லை. ரிஜிஸ்டிரேஷன் டிபார்ட்மென்ட்டில் 3,584 பேர்கள் இருந்தும் 137 பேர்தான் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று 1980-ல் தெரிவித்து இருக்கிறார்கள் இப்படி ஒவ்வொரு துறையிலும் நிலைமைகள் இருக்கின்றன ஏழைகள், ஆதரவற்றவர்கள் ஆகியோருக்கு இந்த அரசு அதிகப் படியான உதவிகளைச் செய்து வருகிறது என்று சொல்கிறார்கள். அந்த ஏழைகள், ஆதரவற்றவர்கள் என்ற அவல நிலையில் இருப்பது இந்த ஆதிதிராவிட மக்கள் தான். ஆகவே, இந்தச் சலுகைகளைப் பெறுவதற்கு அவர்களுக்கு பங்கு உண்டு. ஆகவே, அந்தச் சமுதாய மக்களுக்கு இருக்கும் அவல நிலையைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறி உரையை முடிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேரம் இல்லாததால் கொஞ்சம் வேகமாகவே நான் ஆரம்பிக்கிறேன். ஆரம்பத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். இந்த பாரதி நூற்றாண்டு விழாவை ஒட்டி லைப் சென்டன்ஸ் பெற்று சிறையில் இருக்கிற பல்வேறு கைதிகளுக்கு — பத்து ஆண்டுகள் முடித்திருக்கிற கைதிகளுக்கு ஜெனரல் ஆம்னெஸ்டி என்ற முறையிலே விடுதலை அளிக்க வேண்டும். அவர்கள் விஷயத்தில் சாதாரண ப்ரொசீஜர்ஸ் பார்க்காமல் ஒரு பொது விடுதலை டிக்ளேர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பிரசங்கத்தை ஆரம்பிக்கிறேன்.

நான் முதலிலே குறிப்பிட விரும்புவது, மாநில அரசின் அடக்குமுறை கொள்கைக்கு ஒரு முக்கியமான சின்னமாகத்தான் இங்கே நிறைவேற்றிய 'பிரஸ் பில்' இருக்கிறது. புறக்கடை வழியாக நுழைக்கப்பட்ட ஒரு எமர்ஜன்சி மெஷர்தான் அது.

பீகாரில் அந்த முயற்சிக்கு எடுத்துக்காட்டாக உங்களுடைய சட்டத்தை, அதாவது தமிழக அரசு இயற்றிய சட்டத்தைத்தான் சுட்டிக்காட்டுகிறார்கள்.

1980-ல் சர்வாதிகாரத்தை எதிர்ப்பதில் எடுத்துக்காட்டாக தன்னை அர்ப்பணித்த அண்ணா தி.மு.க. இன்று பீகார் சர்வாதிகார நடவடிக்கைக்கு ஒரு 'வாக்கிங் ஸ்டிக்காக' உங்களை அர்ப்பணித்துள்ளீர்கள். வாட் எ ஃபால் மை கன்ட்ரிமென், நாட்டு மக்களே, இது எவ்வளவு பெரிய வீழ்ச்சி என்பது அதனுடைய மொழிபெயர்ப்பு. தமிழக அரசு பிரஸ் பில்லை நிறைவேற்றுகிறபொழுது இருந்த நிலை மலை ஏறி போச்சு. அனைத்திந்திய நிருபர்களும், நான்-ஜெர்னலிஸ்டுகளும், பத்திரிகை சொந்தகாரர்களும் (பிரஸ் ஓனர்ஸ்) 'யூனிக், யூனிட்டி அன்ட் ஸ்டிரைக்' என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள். இந்த நிலையினால் 'நாங்கள் இன்னும் பரிசீலனை செய்வோம்' என்று கூறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் எல்லோரும் சேர்ந்து வெற்றிகரமாக போராட்டத்தை நடத்தியபின் மாநில சர்க்கார் நாங்கள் இன்னும் குளோஸ் செய்யவில்லை, பரிசீலனை செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் மக்கள் அபிப்பிராயத்தை மதிக்கிறேன் என்று கூறும் நம்முடைய முதலமைச்சர் அதை மறுக்கிறார், அது சரியல்ல.

அது மட்டுமல்ல. நம்முடைய முதலமைச்சர் ஒருபடி தாண்டி தனக்கு அரசியல் எதிர்ப்பை தெரிவிக்கும் பத்திரிக்கைக்காரர்களை சிறையில் தள்ளுகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டத்தினாலேயோ அல்லது சிறைத் தண்டனையினாலேயோ எந்த எதிர்க்கட்சியையும் அல்லது எந்த பத்திரிகையையும் நீங்கள் அழிக்க முடியாது, நீங்கள் அப்படி நினைப்பது உங்களுக்கு சாதகமாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் விரும்பாத இந்த கேடுகெட்ட சட்டத்தினால் கறை படிந்த உங்கள் கரங்களை சுத்தப்படுத்த இந்தச் சட்டத்தை ரத்து செய்யுங்கள், கேஸ்களை வாபஸ் பெறுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டிற்கு ஒருவருக்கு வேலை கொடுப்பதற்கான ஒரு புதிய திட்டத்தை சமீபத்தில் அறிவித்தீர்கள். நான் நிதி அமைச்சரிடம் கூற விரும்புகிறேன். இருக்கிறவர்களுடைய வேலையை காப்பேன் என்று நீங்கள் கொடுத்த வாக்குறுதியை முதலில் நிறைவேற்றுங்கள். நான்கு படகு கட்டும் தளங்கள் சென்னை, நாகப்பட்டினம், மண்டபம் ஆகிய இடங்களில் இருக்கின்றன. அவைகளை மூடுவதாக இருந்தால் அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு மாற்றுவேலை கொடுத்துவிட்டுத்தான் மூடுவோம் என்று திட்டவட்டமாக இந்த அவையிலே 2, 3 தடவை வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அவர்களுக்கு வேலை கொடுத்துவிட்டுத்தான் மூடுவோம் என்று நான் சொல்லவில்லை. அதை பின்னால் கூட விளக்க இருந்தேன். இரண்டாண்டுகளுக்கு முன்னால் 60 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதால் மூடவேண்டுமென்ற கருத்து இருந்தது. அப்படி மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அங்கே பணியாற்றுகின்றவர்களுக்கு வேலை இழப்பு ஏற்படாமல் அவர்களுக்கு மாற்று வேலைகள் கொடுப்பது பற்றி முயற்சிகளை மேற்கொள்ள ஒரு தனிக் குழு அமைத்து, அறிக்கை கேட்டிருக்கிறோம் என்று சொன்னேன். மேற்கொண்டு நஷ்டம் வந்தாலும் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற நல்ல எண்ணம் இருந்ததால் தனியாரிடம் லீசுக்கு கொடுத்தால் அல்லது கூட்டுறவுத் துறையில் செயல்படுத்தினால் நல்லமுறையில் செயல்படுத்தி முடியுமா என்று ஆராயப்பட்டது. அதற்குள் மேலும் கிட்டத்தட்ட 80 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. ஆக 140 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படும் அளவுக்கு வந்திருக்கிறது. ஆகையால்தான் வேறு வழியே இல்லாமல் மூடவேண்டுமென்று இருந்தாலும் சட்டப்படி அவர்களுக்கு அளிக்கவேண்டிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்று இப்போதும் சொல்கிறேன்.

அவர்களுக்கு மாற்று வேலை கொடுத்துவிட்டுத்தான் மூடுவோம் என்ற வகையில் நான் சொல்லவில்லை. அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் முயற்சி இருக்கிறது இப்போதுகூட மூடுவதாக இருந்தாலும் அவர்களுக்கு எந்த எந்த துறைகளில் வாய்ப்பு இருக்கிறதோ அங்கே மாற்று வேலைகள் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. கிராஜுட்டி தருவது மட்டுமல்லாமல் அதற்கு ஈடாக தொகைத் தருவது, மற்ற உதவிகள் எல்லாம் சட்டப்படி அளிக்கப்படும். மூடுவதானால் அவர்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்களை அரசு அறிகிறது. அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்ய தேவையான முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கு மாற்றுவேலை கொடுத்துவிட்டுத்தான் மூடுவோம் என்று நான் சொல்லவில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11,20)

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு கிராச்சுவிட்டி கொடுப்பது, அதிலே கூடுதலாக பணம் கொடுப்பது, சப்சிடைஸ் கொடுப்பது, முதலாளிகள் சேர்த்து கொடுப்பது என்பதெல்லாம் இப்போதுள்ள பிரச்னையல்ல. அவர்கள் தற்போது வேலை வாய்ப்பை இழக்க இருக்கிறார்கள். அப்படி அவர்கள் வேலை வாய்ப்பை இழக்க இருக்கிறபோது, மாற்று வேலை வாய்ப்பு என்ன என்பதுதான் பிரச்னை.

நிதியமைச்சர் அவர்கள் ஒரு முறை மிகத் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள். நான் கூட எதற்கும் இருக்கட்டும் என்று சந்தேகப்பட்டு, மின்னிட்ஸைப் பார்த்தேன். அதிலே தெளிவாக இருக்கிறது. அவர்களுக்கு மாற்று வேலைகளுக்கான ஏற்பாடுகள் செய்தபிறகுதான் இந்த முடிவு எடுக்கப்படும் என்று தெளிவாக சொல்லியருக்கிறார். அந்த மின்னிட்ஸின் காப்பியைக் கூட எடுத்து வைத்திருக்கிறேன். பிறகு வேண்டுமானால் கொடுக்கிறேன்.

வீட்டிற்கு ஒரு ஆளுக்கு வேலை கொடுப்பது என்ற ஒரு ஸ்கீமைக் கொண்டு வருகிறபோது, இப்படி ஏற்கெனவே படகு கட்டும் தொழிலாளர்களாக பல வருடங்கள் சர்வீஸ் இருப்பவர்கள் திடீரென்று வேலையை விட்டு தள்ளப்படுகின்ற நிலை ஏற்படுவது சரியாகாது, நியாயமானதும் அல்ல, ஆகவே, அவர்களுக்கு மாற்று வேலைக்சான ஏற்பாடுகள் செய்த பிறகுதான் இதில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது என்னுடைய முக்கியமான வேண்டுகோள். அதை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கவலைத் தரக்கூடிய விஷயம், தமிழகத்தில் மாநிலம் பரவிய ஜாதிக் கலவரங்கள் ஏற்படுவது. சில பிற்போக்கு ஜாதீய சக்திகளும், அமெரிக்க ஏஜென்சிகளும் சேர்ந்து கலவரத்தை மூட்டிக்கொண்டே இருப்பதினால்தான், இத் தீ மாநிலம் பூராவும் பரவியது. இல்லை என்று சொல்ல முடியாது. அஸ்ஸாமிற்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை, பஞ்சாபுக்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை என்று நினைக்க வேண்டாம். இவ்வளவு சீரியஸான நிலைமை குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகவும் குறைத்து மதிப்பிட்டிருக்கிறார் என்று கருதுகிறேன். இந்த ஆஸ்பெக்டைப் பொறுத்தவரையில் சொல்கிறேன்—அவர் இது குறித்து மிகவும் குறைவாகத்தான் மதிப்பிட்டிருக்கிறார், அதுவும் தமிழகத்தைப் பொறுத்தவரையில்.

ஏன் என்று சொன்னால் அதன் காரணமாகத்தான் பத்திரிகையிலே அது பற்றி குறிப்பிடும்போது ''அது, அங்கொன்றும் இங்கொன்றுமாக சிற்சில சம்பவங்கள்தான்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த குறைத்து மதிப்பீட்டை, அப்படியே அதிகாரிகளும் பின்பற்றுகிறார்கள். அதுதான் கலவரங்களை காட்டுத் தீ போல் பரவ விட்டதற்கு மெயின் காரணமாக இருந்திருக்கிறது.



முன்னதாகவே அருமைத் தோழர், சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் கலெக்டரிடம் சென்று இதனைச் சுட்டிக் காட்டி தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்தார். ஆனால் அதனை அதிகாரிகள் அலட்சியப் படுத்தினார்கள். இது குறித்து அவர்களுடைய குறைத்த மதிப்பீடுதான், அண்டர் அஸெஸ்மென்ட் தான், அவர்களை இவ்வளவு அலட்சியமாக இருக்கச் செய்திருக்கிறது. விளைவு, 15 நாட்கள் கழித்து வெடித்த கலவரத்தில் ஏராளமான உயிர் பலி ஏற்பட்டது, ஏராளமான பேர்கள் தாக்கப் பட்டிருக்கிறார்கள்.

இவ்வளவு பெரிதாக இந்தக் கலவரம் வெடித்த பிறகும் அரசின் தரப்பில் மந்தப்போக்கு இருந்திருக்கிறது. அதற்கு உதாரணம் கூட இருக்கிறது. 11 ஆம் தேதி 2,000 பேர்கள் ஓரிடத்தில் கூடி தாக்கப் போகிறார்கள் என்ற செய்தி முன்னதாகவே கிடைத்திருக்கிறது. காலை 9.30 மணி அளவிலேயே இந்தச் செய்தி கிடைத்திருக்கிறது. இந்தக் கலவரம் நடந்த போது, டி.எஸ்.பி. கலெக்டர் ஆகிய எல்லோரும் போலீஸ் ஸ்டேஷனில்தான் இருந்திருக்கிறார்கள். அப்படி இருந்தும், 12 மணிக்குத்தான் டி.எஸ்.பி. தலைமையில் போலீஸ்சார் அந்த கலவரம் நடந்த பகுதிக்கு வந்திருக்கிறரர்கள். ஆனால் அவர்கள் வருவதற்குள் நெருப்பு வைத்திருக்கிறார்கள். 5 பேர்கள் இறந்திருக்கிறார்கள். அப்படி அந்தக்கூட்டத்தினர் நெருப்பு வைப்பதையும், கொல்வதையும் பக்கத்து மரத்தடியில் நின்று பார்ததுக்கொண்டிருக்கின்றனர் போலீசார்.

ஆனால் அந்த இடத்திற்கு 1 மணிக்குத்தான் வருகிறார் கலெக்டர், பக்கத்திலேயே போலீஸ் ஸ்டேஷனில் இருந்துக் கொண்டே, அவர் வரும்போது அந்தக்கூட்டத்தினர் தீ வைத்து விட்டு, கலவரங்களை நடத்திவிட்டு திரும்பிப் போகின்றனர். அப்படி அவர்கள் போவதை இவர் சும்மா நின்றுகொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறார்; ஆகவேதான் சொன்னேன். இவ்வளவுக்குப் பிறகும், மந்தப்போக்கு நீடிக்கிறது அரசின் சார்பில் என்று, இதுமட்டுமல்ல, இவ்வளவுக்குப் பிறகும் நீங்கள் ஒரு நீதி விசாரணை வைக்கத் தயாராயில்லை. மக்கள் மத்தியில் ஜாதீய உணர்வுகளும், ஜாதீய சங்கங்களும் வளர்க்கப் படுகிற போது. அந்த உணர்வுகள் தவறு என்று உணர்த்துவதும் அந்த மக்களிடையே மதச்சார்பற்ற மனோபாவத்தை வளர்ப்பதும், எல்லா மதச் சார்பற்ற கட்சிகளின் கடமை மட்டுமல்ல அரசாங்கத்தின் மிகப் பெரும் கடமையாகும்.

ஆனால், தமிழகத்தில் நாம் காணும் காட்சி என்ன? ஒவ்வொரு அமைச்சரும் அவரவர்களுடைய ஜாதி மாநாடுகளில் கலந்துக்கொண்டு ஜாதீய உணர்வுகளை தட்டி எழுப்புகிறார்கள். அது மட்டுமல்ல, செந்தி ஆதித்தன் அவர்களுக்கு நாடார் ஜாதி சங்கம் கொடுத்த வரவேற்பில் அரசாங்கத்தின் மிகப்பெரிய பொறுப்பில் உள்ள ஒருவர் ஜாதி சங்கங்களை வளர்க்க பகிரங்க

மாக அறைகூவல் விடுகிறார். யார் என்று பிறகு சொல்கிறேன். அப்படி அந்த மதிப்பிற்குரிய பெரியவர் விடுத்த செய்தி தினத்தந்தி 8-8-1982-ல் வந்திருக்கிறது. நானும் இரண்டொரு நாட்கள் தொடர்ந்து கொஞ்சம் கவனமாகப் பார்த்தேன். அதற்கு மறுப்புச் செய்தி ஏதாவது வெளிவருமா என்று. ஆனால் இதுவரையில் மறுப்பு எதுவும் வரவில்லை. அப்படியானால் அது மறுக்கப்படவில்லை என்றுதானே பொருள்.

முதலிலே மாண்புமிகு திரு.ம.பொ.சி. அவர்கள் பேசியிருக்கிறார். ''கல்வித் தொண்டிலே பிற ஜாதிக்கும் வழி காட்டும் ஜாதியால் பாராட்டுக் கூட்டம் நடத்தப்படுகிறது'', என்று அவர் தன்னுடைய உரையில் கூறுகிறார். அதற்குப் பிறகு நம்முடைய மதிப்பிற்குரிய பிரமுகர் பேசும்போது, ''சிவந்தி ஆதித்தனுக்கு ஏன் பாராட்டு என்று காரணம் தெரிவிக்கும் பொழுது, 'அப்படித்தான் வைத்துக்கொள்ளுங்கள்' என்று நாடார் சமுதாயத்தினரை மனதில் வைத்து ம.பொ.சி. பேசினார். அதை ஏன் மறைக்க வேண்டும். மற்ற சமுதாயத்தினர்கள் கூட்டம் நடத்தும்பொழுது நாடார்கள் ஏன் நடத்தக் கூடாது? ஏன் மறைக்க வேண்டும்?

வன்னியர்கள் நடத்தவில்லையா, பிராமணர்கள் நடத்தவில்லையா, முஸ்லீம்கள் நடத்தவில்லையா, கிறிஸ்தவர்கள் நடத்தவில்லையா; யார் நடத்தவில்லை. ஆகவே எல்லோரும் நடத்துகிறார்கள். நாங்களும் நடத்துகிறோம். பிறகு ஏன் நடத்தவேண்டாம் என்று சொல்கிறார்கள் என்று.....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, அதைப் பேசியது இந்த எம்.ஜி.ஆர். தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: நாடார் ஜாதியினர் சார்பாக நாடார் பிரதிநிதி பேசியதல்ல. மாண்புமிகு முதலமைச்சர் பேசியதுதான் இது. இதன் பொருள் என்ன? மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியதன் பொருள் மிகவும் சீரியஸ்ஸானது. ஜாதி உணர்வை வளர்த்துங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் அறைகூவல் விடுகிறாரா? ஜாதிப் பிரச்சினையை நிரந்தரமாக்குங்கள் என்று அவர் அறைகூவல் விடுவதாகத்தான் இதன் பொருள்........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத்தலைவர் அவர்களே, அவர் எந்த இடத்திற்கு வருகிறார் என்பதைத் தெரிந்துதான் நான் சொல்கிறேன். ஒன்றைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளவேண்டும். ஜாதிச் சங்கங்கள் இருக்கக்கூடாது என்று பலமுறை நான் வற்புறுத்திப் பேசி இருக்கிறேன். நான் திருச்செந்தூரில் என்ன பேசினேன் என்பதைக் கொஞ்சம் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஒருவர் ஜாதிச் சங்கத்தை உருவாக்கினால் மற்றவர்களும் அதைப்போன்ற



வழியைப் பின்பற்றவேண்டி இருக்கின்றது. எனவே இந்த நிலைமையில் ஜாதிப் பற்றைப் பற்றி அதிகம் பேசுகின்றவர்கள் அதனைக் குறைத்துக்கொண்டால் இந்தப் பிரச்சினை வராது என்று நான் வலியுறுத்தி இருக்கின்றேன். ஒரு இனத்தினர் தங்களுக்கு உரிமை இருக்கின்றது என்று கருதுகின்றபோது மற்றவர்களுக்கும் அப்படி உரிமை இருக்கின்றது. ஆனால் அப்படி உரிமை கூடாது என்று சொல்வதற்கு அரசுக்கு உரிமை இல்லை. வேண்டுமானால் பொதுக்கொள்கையாகச் சொன்னால் அதாவது பொதுவாக யாரும் ஜாதிச் சங்கங்கள் வைக்கக்கூடாது என்று சொன்னால் அதை நான் ஒத்துக்கொள்கிறேன், அப்படிப்பட்ட நிலைமை வருமேயானால் நாங்கள் முதலிலே அதற்குத் துணையாக இருப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: துணைத்தலைவர் அவர்களே, அந்த நிலைமை தானாக வருமா என்றல் வராது என்பதுதான் என்னுடைய கருத்து. லீடிங் பார்டிஸ், பர்டிகுலர்லி கவர்ன்மென்ட் அதாவது செக்யூலர் கவர்ன்மென்ட் என்கின்றபோது அந்த அரசாங்கம் என்ன சொல்லவேண்டும்? அவர்கள் தப்புசெய்கிறார்கள் எனவே நீங்களும் தப்பு செய்யுங்கள் என்று சொல்வது ஒரு வகை, இன்னொரு வகை அவர்கள் அப்படிச் செய்யக்கூடாது, அதேபோல் அந்தத் தப்பை நீங்களும் செய்யக் கூடாது என்று சொல்வது இன்னொரு வகை......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே நான் மறுபடியும் வற்புறுத்திச் சொல்கிறேன். இங்கே வேறு பிரச்சினைக்கு நான் போகவில்லை, நேரம் இல்லை. ஆனால் சில அரசியல் கட்சிகள்-நான் உமாநாத் அவர்களிடம் சொன்னால் அவர்களுக்குப் புரியும் என்று சொல்கிறேன்.—சில அரசியல் கட்சிகள் சில இனத்தவர்களிடம் சென்று, சில இனத்தவர்கள் என்றால் தாழ்த்தப்பட்டவர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அல்லது வேறு வகுப்பினர் என்று வைத்துக்கொள்ளுங்கள், அவர்களை எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதை உமாநாத் அவர்கள் நன்றாக உணர்ந்து இருக்கிறார்கள். தஞ்சைப் பகுதியிலே இப்போது கூட சில இடங்களில் தாழ்த்தப்பட்டவர்களிலேயே ஒரு பகுதியினரை தங்கள் இஷ்டம் போல் அவர்கள் செய்யவில்லை என்ற காரணத்தால் ஜாதிப் பிரஸ்டீஜ் செய்வது போல் அவர்களை ஒதுக்கி வைத்து அவர்களை வெளியேற்றி அவமானப்படுத்துவது, வேதனைப் படுத்துவது போன்ற காரியங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவற்றைச் சட்டப்பூர்வமாகத் தடுக்க முடியாவிட்டாலும் அரசு ஆட்சியிலே இருக்கக் கூடிய அதிகாரிகளை வைத்துக் கொண்டு தடைசெய்வது மட்டுமல்ல, பாதிக்கப்படுகின்றவர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டிய அவசியமும் இருக்கின்றது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிலைமை போல பிராமணர் சங்கம் துவங்குவது நியாயம் என்றால் நாடார் சங்கமும் வன்னியர் சங்கமும் துவங்குவதும் நியாயம், முதலியார் சங்கமும் துவங்கு

வது நியாயம். அப்படித் தோன்றுவதில் தவறு இல்லை. இப்படித்தான் மற்றவர்களுடைய அமைப்புகளும் ஏற்படுகின்றன. அவர்கள் எல்லாம் கூட பிரச்னைகளைச் சொல்வது தவறல்ல. ஆனால் பொதுவாக ஜாதிச் சங்கங்களே கூடாது என்ற முடிவுக்கு வந்தால் அதாவது மதத்தின் பேரால் அமைப்புக்கள் இருக்கக்கூடாது என்று அவர்கள் ஒத்துக்கொள்வார்களேயானால் நாங்கள் அதை வரவேற்போம், அதற்கு முழு ஒத்துழைப்பும் எங்களுடையதுதான்.

திரு. ரா. உமாநாத்: துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஹரிஜனங்கள் பற்றிக் குறிப்பிட்டார். ஜாதி என்ற பிரச்சினையிலே கொண்டுபோய் அதாவது நாயுடு, கவுண்டர், நாடார் ஆகியவர்கள் என்ற பிரச்சினையிலே கொண்டுபோய் தயவுசெய்து ஹரிஜனங்களை மிக்ஸப் பண்ணாதீர்கள். அவர்கள் எல்லாம் டிப்ரஸ்ட் க்ளாஸ் அவர்களை உயர்த்த வேண்டியது நம் அத்தனை பேருடைய கடமையாகும். ஜாதி வித்தியாசம் இல்லாமல்....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத்தலைவரவர்களே, மன்னிக்கவேண்டும். தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்துவது அல்லது அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பது என்பதிலே நான் குறுக்கிடவில்லை. ஆனால் என்னுடைய கருத்தெல்லாம் அந்த தாழ்த்தப்பட்டவர்களைப் பிரித்து ஒரு அரசியல் கட்சி ஒரு எண்ணத்தைச் சொல்லி அவர்கள் செய்யவில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அதற்காகவே ஜாதிப் பிரஸ்டம் செய்கின்ற வகையிலே மற்றவர்களைத் தூண்டிவிட்டு அவர்களை ஒதுக்கி வைத்துவிடுவது என்பது எப்படி நியாயமாகும்?

(பிற்பகல் 11.30)

திரு எல். இளையபெருமாள்: பாயின்ட் ஆப் ஆர்டர், 4½கோடி மக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகம்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது வேறு பிரச்னை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நாம் எல்லோரும் இருக்கிறோம். ஏற்கனவே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நாம் எல்லோரும் பேசுகிறோம். தயவு செய்து குறுக்கிட வேண்டாம் உட்காருங்கள். திரு. உமாநாத்.

திரு ரா. உமாநாத்: துணைத்தலவர் அவர்களே, "When I talk of chalk, you talk of cheese என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். இந்தமாதிரி முதலமைச்சர் அவர்கள் ஜாதிப் பிரச்னை வரும்போது அவ்வாறு சொல்லக்கூடாது. செகுலரிசம் என்று



வரும்போது, அரசாங்கத்திற்கு அதிக பொறுப்பு இருக்கிறது. அது ஒரு கடமை. அரிசனங்களுடைய பிரச்னையைக் கொண்டு வந்து, இதிலே இப்படி திருப்புவது சரியல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைப் பற்றி டீடெய்ல்டாகப் பேசலாம் என்றார்கள். பேசலாம். ஆனால் எல்லா ஜாதிச் சங்கங்களையும் ஒழித்து, அவர்களே அதற்கு முன் வந்தால், அதை நான் வரவேற்கிறேன் என்று சொல்வது அரசாங்கத்தின் சார்பிலே சரியல்ல. செகுலர் கவர்ன்மென்ட் என்று சொல்லுகிற போது, அந்த செகுலர் உணர்வுதான் உண்டாக வேண்டுமே தவிர இப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்குவது சரியல்ல. எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும்; ஜாதிச் சங்கங்களும் தாங்களாகவே இந்த நிலைக்கு வரவேண்டுமென்று சொல்வது சரியல்ல அவர்களாக வரமாட்டார்கள். மாற்றவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. அது அரசாங்கத்தின் கடமை என்று சொல்ல விரும்புகிறேன். ஆனால், அங்கேயிருந்துதான் அரசு தவறுகிறது. தாய் 4 அடி பாய்ந்தால் குட்டி 8 அடி பாயும் என்று சொல்வார்கள். அதேபோல், மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் இந்து கோவிலுக்கு உள்ளே நுழைந்து ரதத்தை இழுத்தார். நான் அதற்கு இளைத்தவரா என்று டி.ஐ.ஜி. அவர்கள் நெல்லையப்பர் கோவில் இரதத்தை இழுத்தார். அங்குள்ள எஸ்.பி. அவர்களும் இழுத்தார். ஆனால், நான் கேட்கிறேன்? அரசாங்கம், அமைச்சர்கள்......

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஒரு அரசியல்வாதியாக இருக்கக்கூடியவர் எல்லா மதத்திற்கும் அல்லது பக்தர்களுக்கும் மரியாதை கொடுக்கவேண்டுமென்பது பண்பாடு. முன்பு விழுப்புரத்தில் ஒரு பிள்ளையார் கோவில் இருந்தது. அதற்கு கம்யூனிஸ்ட் பிள்ளையார் கோவில் என்று பெயர் வைத்து, அதைப்பற்றி குத்தூசி குருசாமி அவர்கள் விடுதலையிலே கம்யூனிஸ்ட் பிள்ளையார் கோவில் என்று எழுதியிருக்கிறார்கள் கம்யூனிஸ்டுகளும் கோவிலுக்குப் போவதுண்டு. அதற்கு ஆதரவு தந்தது உண்டு. ஒரு அரசியல்வாதி கம்யூனிஸ்டாக இருந்தாலும் ஏதிஸ்டாக இருந்தாலும், பிறருடைய உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் அதைத்தான் நீங்களும் செய்கிறீர்கள்; நாங்களும் செய்கிறோம்.

திரு. ரா. உமாநாத்: துணைத்தலைவர் அவர்களே, கம்யூனிஸ்டுகளுக்கும், அந்தக் கோவிலுக்கும் சம்பந்தம் கிடையாது. ஒரு ரெஸ்பான்சிபிள் செகுலர் கவர்ன்மென்ட் என்று இருக்கும்போது தனிப்பட்ட முறையிலே ஒரு அமைச்சர் போய் கோவிலிலே கும்பிடுவது என்பது 'ஆஸ் எ ரெப்ரசென்டேடிவ் ஆப் தி கவர்ன்மென்ட் என்பதற்கும் செகுலர் கவர்ன்மென்ட் என்பதற்கும் அது மாறானது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இந்த மத சார்பற்ற உணர்வை குழி தோண்டி புதைக்கக்கூடிய ஒரு நிலைமை வந்து கொண்டிருக்கிறது.

இன்னொரு வேண்டுகோள். அண்மையில் புளியங்குடியில், கலவரத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்; கன்னியாகுமரி மாவட்டத்தில் காணாமற் போனவர்களுக்கு ரூ. 15,000 நஷ்டஈடு கொடுத்தார்கள்; ஆனால் இறந்தவர் குடும்பங்களுக்கு ரூ. 10,000 தான் கொடுக்கப்பட்டது. இந்த டிபரென்ஸ் இல்லாமல், எல்லோருக்கும் ரூ. 15,000 கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தொழில் வளர்ச்சி. தொழில் வளர்ச்சிக்கு தொழில் அமைதி வேண்டுமென்று தொழில் அமைச்சர், அரசாங்கம் சொல்லுகிறார்கள், நாட்டின் முன்னேற்றத்திற்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். தங்கு தடையின்றி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்கிறீர்கள் ஆனால், வேலை நிறுத்தங்கள் உற்பத்தியை தடை செய்கிறது என்கிறீர்கள். அகவே. உற்பத்திச் சக்கரத்தைத் தொடர்ந்து உருட்டு, உருட்டு என்கிறீர்கள். ஆனால், துப்பாக்கிச் சூடும் நடத்த இந்த அரசு தயங்கவில்லை. நான் கேட்கிறேன்.

சிம்கோ முதலாளி 320 நபர்களை ஆட்குறைப்பு செய்தார். அதற்கு சுப்ரீம் கோர்டு தடை விதித்தது. ஆனால், அந்த முதலாளி சுப்ரிம் கோர்ட் தீர்ப்பை அமுல் நடத்தாமல், அதைத் தவிர்க்க, அந்த சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பையும் மதிக்காமல், லாக் அவுட்டை நீடித்துக் கொண்டே இருக்கிறார். ஆனால், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் நாங்கள் தான் நீட்டித்துக் கொண்டு போகிறோம் என்று எங்களைச் சாடுகிறார்கள். ஆனால், கதவடைப்பை நீட்டுகிற முதலாளியைச் சாடுவதற்கு இந்த அரசாங்கத்திற்கு தைரியமில்லை; திராணியில்லை. அப்படிச் சாடினால். என்னதான் இழந்து விடுவார்கள் என்று அஞ்சுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. அவரைச் சாடாமல், அவருக்கு பாதுகாப்பு தரப்படுகின்றது. இது சரியல்ல.

அடுத்து, நான் முதல்வர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். அசோக் லேலண்ட் முதலாளி, உற்பத்திப் பெருக்கத்தைப் பற்றிப் பேசுகின்ற நேரத்திலே, முதலமைச்சர் அவர்கள் முன்னாலேயே 40% உற்பத்தியைக் குறைத்துவிட்டதாக தெளிவாகச்சொல்லி, சென்னையிலேயே அந்த உற்பத்தியைக் குறைத்திருக்கிறார். வேலை நிறுத்தம் செய்கிறபோது, உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்று தொழிலாளியைப் பார்த்து முறைக்கும் அரசாங்கம், ஏன் இந்தஅசோக் லேலண்ட் முதலாளி பகிரங்கமாகத் தான் 40% உற்பத்தியைக் குறைத்துவிட்டேன் என்று சொல்லும்போது முறைக்காமல் இருக்கிறது? உற்பத்திச் சக்கரத்தை உருட்ட மறுத்த தொழிலாளியைச் சுட்ட உங்கள் துப்பாக்கி ஏன் இந்த அசோக்லேலண்ட் முதலாளியை சுடவில்லை? ஆகவே, நீங்கள் இந்த அரசாங்கம் உற்பத்தியின்மீது பக்தி கொள்ளவில்லை; முதலாளியின் கொள்ளை லாபத்தின் மீதுதான் பக்தி கொண்டிருக்கிறது. உற்பத்தி அதிகரித்தால்தான் லாபம் அதிகரிக்கும். லாபம் கிடைக்கும். உற்பத்தியைக் குறைப்போம் எனறு சொல்லியும் நீங்கள் பேசாமல் இருப்பது சரியல்ல.





அரசியலில் தங்களை எதிர்ப்பவர்களை அழிப்பது என்ற பாதையில் அரசு போய் கொண்டிருக்கிறது. அதற்காக அரசு அதிகாரத்தை துஸ்பிரயோகப்படுத்தவும் செய்கிறார்கள். ஐ.என்.டி.யூ சி. எச்.எம்.ஸ், முன்னேற்றப் பேரவை, அண்ணா தொழிற் சங்கப் பேரவை ஏ.ஐ.டி.யூ.சி.; சி.ஐ.டி.யூ. போன்றவை எப்படி தொழிற்சங்கங்களாக இருக்கின்றனவோ அதே போல் சி ஐ.டி.யூவும் தொழிற்சங்கமாக இருக்கின்றது. சமீபத்தில் குடிநீர் வடிகால் வாரிய சீப் இன்ஜினியர் ஒரு சர்க்குலர் போட்டிருக்கிறார்.

All the Superintending Engineers and Executive Engineers of TWAD Board are informed that the C.ITU is a Trade Union under a political party Hence as per Regulation 21 and 31 (a) of the Conduct Regulation, the employees fo the Board cannot join the trade union of a political party and they are requested not to allow any person to become a member in the CITU.

அதில் ஏ. டீ. எம். கே. யூனியன் இருக்கிறது. அதில் சேர தடை இல்லை. சி.ஐ.டீ.யூவில் சேர்ந்தால் தான் தடை. சி.ஐ.டீ.யூவில் சேராதே என்று ஒரு சர்குலர் விட்டிருக்கிறார் என்று சொன்னால் என்ன அர்த்தம்? அரசியலில் வேறுபாடு இருக்கக்கூடிய சங்கத்தை அதை ஒழிப்பதற்கு அரசாங்க அதிகாரியிடம் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு அத்தாட்சி.

கடைசியாக விவசாயிகள் மீது ஜப்தி பற்றி ஒரு கருத்தை சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறேன். விவசாயிகளை சமீப காலத்தில் ஜப்தி மூலம் எப்படி கடுமைப் படுத்தினீர்கள்? அதற்கு காரணம் என்ன சொன்னீர்கள்? ரிசர்வ் வங்கி கடன் வஜா செய்யாதே என்று கட்டளை இட்டு இருக்கிறது; நாங்கள் என்ன செய்வோம் என்று கூறினீர்கள். சமீபத்தில் நான் ரிசர்வ் வங்கியின் அறிக்கையை படித்துப் பார்த்தேன். அதிலே பெரிய முதலாளிகளும், நிறுவனங்களும் நாங்கள் கொடுத்த கடன் ரூ. 1,200 கோடி திரும்பி எங்களுக்கு வராது என்று எங்களுக்கு தெரிகிறது என்று சொல்லியிருக்கிறது. ஆகவே அதற்காக ஜப்தி செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. அதை வஜா செய்யவேண்டும் என்று ரிசர்வ் வங்கி அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது. நான் முதலமைச்சர் அவர்களை கேட்கிறேன். எப்படி ரிசர்வ் வங்கி அவர்களுக்கு கடன் ரூபாய் 1,200 கோடியை வஜா செய்யவேண்டும் என்று சொல்கிறது? அதைப்போன்று எங்களுடைய விவசாயிகளுக்கு சில கோடி ரூபாயை நீங்கள் வஜா செய்யக்கூடாது என்று சொல்வதற்கு உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது? என்ன தவறு என்று ஏன் கேட்கக் கூடாது? கேட்கலாம். ரிசர்வ் வங்கி அறிக்கையை வைத்தே நீங்கள் அப்படி கேட்பதற்கு முடியும். உங்களுக்கு அதற்கான தைரியம் இருக்கிறது. ஆனால் இந்திரா காங்கிரஸ் உடன் வளர்ந்து வரக்கூடிய உறவு பாதிக்கும். நான்

கேட்கிறேன். இந்த மாதிரி ஜப்தி செய்கிறபோது என்னுடைய விவசாயிகளுடன் உறவு பாதிக்காதா Government has go to choose எந்தப் பாதையில் நீங்கள் போகவேண்டும்? Do you want Indra Congres Natpu or do you wan your peants Natpu.?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் உணர்ச்சியோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே நான் குறுக்கிட வேண்டியது இல்லை. இருந்தாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்திரா காங்கிரஸ் உடைய உறவுக்குப் பாதகம் இருக்கும் என்று தவறான கணக்குப் போட வேண்டாம். அப்படியானால் தொடக்கத்திலேயே நாங்கள் எதிர்த்து இருப்போம். இதை நாங்கள் வஜா செய்யமாட்டோம் என்று சொல்லியிருக்க வேண்டும். அண்மையில் கூட மத்திய அரசிடமிருந்து நாங்கள் பிளாக் லிஸ்டில் சேர்க்கப்பட இருக்கிறோம். ஏறத்தாழ 48 கோடி ரூபாய் அக்டோபர் முடிவிற்குள் உடனடியாக வசூல் செய்யாவிட்டால் பிளாக் லிஸ்டில் சேர்க்கப்பட்டுவிடுவோம் என்று கடிதம் வந்திருக்கிறது. அதையும் கற்பனை செய்து பாருங்கள். ஆனால் இந்த மன்றத்தினுடைய அத்துணைப் பேரும் எங்களோடு ஒத்துழைப்பீர்கள் என்ற நம்பிக்கையில் நாங்கள் அவர்களோடு போராடிக் கொண்டிருக்கிறோம். கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அந்தமாதிரி மத்திய அரசாங்கம் வற்புறுத்துகிறபோது அதை 'ரெஸிஸ்ட்டு' பண்ணுவதற்கு ரிசர்வ் வங்கி ரிப்போர்ட் இந்த மாதிரி இருக்கிறது. அரசாங்கத்திற்கு பலம் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒத்துழைப்புக் கொடுக்கிறபோது நாங்கள் ஒவ்வொரு டிஸ்கஸனிலேயும் வஜா செய்யவேண்டும் என்றுதான் வற்புறுத்திக் கொண்டு இருக்கிறோம், ஒத்துழைப்பு இருக்கிறது. ரிசர்வ் வங்கியினுடைய லேட்டஸ்டு பேக்டை நான் கொடுத்து இருக்கிறேன் So you have no moral right to object அந்த மாதிரியான ஃப்ர்ம் போஸிஸனை இந்த அரசாங்கம் எடுக்க வேண்டும். இந்த விவசாயிகளுடைய பிரதிநிதிகளை மீண்டும் முதலமைச்சர் அவர்கள் அழைத்துப்பேசி இனிமேல் பிரச்சினை வராத அளவுக்கு முழுமையாக அதை பைசல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் பேசிய போது குறிப்பிட்ட * * * என்பதையும் அதையொட்டி மற்றவர்கள் குறிப்பிட்டதையும் சேர்த்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



[முற்பகல் 11–40]

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காந்தி காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை இந்த துணை மானியக் கோரிக்கையின் பேரிலே வைக்க விரும்புகிறேன். இங்கே தன்னிறைவுத் திட்டத்தைப்பற்றி எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். ஏழைகளுக்கு உணவு அளிக்கக் கூடிய இந்த நல்ல திட்டத்திலே 2 வயதுக் குழந்தைகளுக்கு உணவு வேண்டுமென்றால் அவர்கள் உணவு சாப்பிடுவதற்கு 2 கிலோமீட்டர் தூரம் செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. காரணம் உணவுக் கூடங்கள் இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்று இருந்தாலும்கூட அரை கிலோமீட்டர் தூரம் உணவு கூடங்களுக்குக் கூட 2 வயதுக்குழந்தைகள் செல்ல முடியாத நிலைமை இருக்கிறபோது எப்படி 2 கிலோ மீட்டர்கள் செல்லமுடியும் என்று தெரியவில்லை. ஆகவே இதைக் கருத்திலே கொண்டு இந்த தூரத்தின் அளவைக் குறைத்து 2 வயதுக் குழந்தைகள் குறைந்த தூரமே சென்று உணவுப் பெறக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது போன்று வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்புத் தருகிற திட்டத்தை அரசு கொண்டுவந்திருக்கிறது. பொதுவாக இப்போது சர்வே துறையில்—ரெவின்யு துறையில் வேலை வாய்ப்புத் துறையின் மூலமாக வேலைக்கு எடுக்கப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்போலவே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் வேலைவாய்ப்புத் துறையின் மூலமாக வேலை பெற்றவர்கள் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களையும் சர்வே துறையிலே சேர்ப்பதற்கு முன் அனுமதிவழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம உத்யோகஸ்தர்களுக்கு தலையாரிகள் உறுதுணையாக இருக்கிறார்கள். அவர்கள் பல பிரச்சினைகளைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். 4, 5, வருடங்களுக்குப் பிறகுகூட அவர்களுக்கு சம்பள உயர்வு அளிக்கப்படவில்லை. அதேபோன்று ரயில்வே ஸ்டேஷன், தண்டவாளங்களைப் பாதுகாக்கின்ற நிலை ஏற்படுகிறபோது படி வகைகள் தரப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே அவைகளையும் வழங்குவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லி உரையை முடித்துக் கொள்கிறேன். புளியங்குடியில் கலவரங்கள் முடிந்துவிட்டன. முடிந்த பிறகுகூட சில காவல் துறையினர் பெரிய மனிதர்களை, வசதி படைத்தவர்களை அணுகி நீங்கள் இவ்வளவு ரூபாய் தரவேண்டும், இல்லையென்றால் வழக்கிலே சேர்த்துவிடுவோம் என்று அச்சுறுத்தி பணம் வாங்குவதற்கான நிலைமை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரி...

களை அங்கே அனுப்பி காவல் துறையினர் செய்யக்கூடிய தவறான காரியங்களை தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த துணைமானியக் கோரிக்கையை ஆதரித்து வரவேற்கிறேன். வணக்கம்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு கூடுதல் துணை மானியக் கோரிக்கையின் மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கருத்துக்களை கூறவிரும்புகிறேன்.

மாநிலத்தில் இப்போது ஜாதிக் கலவரங்கள், இனக் கலவரங்கள் பல்வேறு இடங்களில் நடைபெற்றுக்கொண்டிருக் கின்றன. அரிசனங்கள் இன்றைக்கும் கொடுமை படுத்தப்படு கிறார்கள். திருச்சி மாவட்டம் லால்குடிக்கு பக்கத்தில் சிறு களத்தூரில் அரிசனங்கள் தாக்கப்பட்டு 25 பேர்கள் காயப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். என்பதாகச் செய்தி வந்திருக்கிறது. பல்வேறு மாவட்டங்களில் என்றும் இல்லாத அளவிற்கு வறட்சி ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு வறட்சி காரணமாக பல்வேறு நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் இன்னும் வறட்சி நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. காவிரியிலே தண்ணீர் இல்லை. மேட்டூரில் 44 அடிதான் தண்ணீர் இருக்கிறது. இந்த நிலைமையிலே வறட்சியைப் போக்குவதற்கு, உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்ன ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. என்பதற்கு விவரங்கள் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)

சத்துணவுத் திட்டம் சம்பந்தமாக அதிகமாக விவாதிக்கப் பட்டு இருக்கிறது, சத்துணவு அளிக்கவேண்டுமென்ற பாச உணர்வோடு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு 110 கோடிக்கு மேலே செலவழிக்கப்பட்டிருக்கிறது. எதிர் காலத்தில் இந்தத் தொகை இன்னும் உயரும் என்பதில் ஐயமில்லை.

கிராமப்புறங்களில் அடிப்படையாக இருக்கின்ற வறுமையைப் போக்குவதற்கு திட்டம் எதுவுமில்லாமல் சத்துணவு போடுவதன் மூலமாக மட்டும் நாட்டை முன்னேற்றிவிட முடியும் என்று எண்ணுவது சரியாக இருசகாது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். இந்த வறட்சிக் காலத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். இன்றையதினம் தமிழகத்திலே இருக்கிற பலர் மத்தியிலே தமிழகத்தின் எதிர்காலம் வளர்ச்சி, சம்பந்தமாக என்ன நிலை ஏற்படும் என்கிற ஒருகவலை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை முழுமையாக விவாதித்து, ஆய்வு செய்து அதன் அடிப்படையிலே நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை



களை எடுப்பது தான் சரியாக இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 60 லட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கக் கூடிய ஒரு பெரிய திட்டத்தை நிர்வகிப்பதற்கு ஒரு நேர்முக உதவியாளரையும், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கணக்காளர் பதவியையும் ஏற்படுத்தி இருப்பது எப்படி அவர்கள் இந்த பணியை நிறைவேற்றப் போகிறார்கள் என்ற கேள்வி குறி இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து இன்றையதினம் விவசாயிகளுடைய கடன் நிவாரணம் கோரி இயக்கம் தொடர்ந்து இருக்கிறது. அது சம்பந்தமாக எந்த நிலைமையும் இல்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். போலீஸ் அடக்கு முறைகளும், அத்துமீறிய நடவடிக்கைகளும் தொடர்ந்து நடக்கிறது. ஏற்கெனவே தர்மபுரி மாவட்டத்தில் இருந்தது. அண்மையில் ஊத்தங்கரையில் ஒரு விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்ட ஒருவர் கொலை செய்யப்பட்ட நிலைமையில், அதன் காரணமாக ஊத்தங்கரையில் நடந்த நிகழ்ச்சிகள் அனைவருக்கும் தெரியும். துப்பாக்கிச்சூடு ஏற்பட்டிருக்கின்றன. அங்கே ஆர்.டி.ஓ. மற்றும் தாசில்தார் அந்த ஸ்தலத்திலேயே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாமலேயே போலீஸ் அதிகாரிகள் துப்பாக்கிச்சூடு செய்கிறார்கள். அந்தத் துப்பாக்கிச் சூட்டில் தாசில்தாருக்குக் கூட குண்டு பாய்ந்து இருக்கிற நிலைமை இருக்கிறது. இம்மாதிரியான பல அத்து மீறல்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன.

கோவை, இராமநாதபுரத்திலே இன்றைக்குக்கூட செய்தி வந்திருக்கிறது. தமிழ்நாடு விவசாயிகளின் அலுவலகம் தாக்கப் பட்டிருக்கிறது. சூறையாடப்பட்டிருக்கிறது. பெரியார் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள். பவானி வட்டம் தாடயான்பட்டியில் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டு தாக்கியவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. அதேபோல போடியில் கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர் களான கணேசன், துரை ஆகிய இருவரும் நிர்வாணமாக போலீசாரால் அழைத்துச் செல்லக்கூடிய நிலை இருக்கிறது. பெருந்துறையில் ஊரிலே இல்லாத ஒருவர் மீது கொலை வழக்கு சுமத்தப்பட்டிருக்கிறது. நாமக்கல் பாளையம் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொடிக் கம்பத்தை அறுத்தார்கள் என்ற காரணத்தாலே வழக்குப் போட வேண்டுமென்று கோரிய காரணமாக 15 நாட்கள் கழித்து அங்கே இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான சம்பவங்கள் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து வருகின்றன.

அதேபோல் திருச்சி மாவட்டத்தில் பூலாம்பாடி நிகழ்ச்சியைப் பற்றி உறுப்பினர் இராசு அவர்கள் குறிப்பிட்டார்கள். போலீஸ் காரர்களிடம் மக்கள் பிடித்து ஒப்படைத்திருக்கிறார்கள். ஒப்படைக்கப்பட்ட அந்த வழக்கறிஞரை காணவில்லை, தேடிக்

கொண்டிருக்கிறோம். நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று காவல் அதிகாரிகள் அறிக்கை விடுகிறார்கள். இந்த அளவிற்கு போலீஸ் நடவடிக்கைகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவை முன்னவர் அவர்கள் பேசுவார்கள் .

திரு. ப. நெடுமாறன் : மற்ற கட்சிகளுக்கு பேச வாய்ப் பில்லையா? இது முக்கியமான பட்ஜெட் ஆயிற்றே?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நேரம் இல்லை; 12 மணிக்கு நிகழ்ச்சி நிரலிலே இருக்கிற அடுத்த நிகழ்ச்சியை எடுத்துக் கொள்ளவேண்டும். இன்னொரு சமயத்தில் நீங்கள் பேசுங்கள்.

[முற்பகல் 11.50]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதி நிலை மதிப்பீடு பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபல கருத்துக்களை இங்கே கூறியிருக்கிறார்கள். போதிய நேரம் இல்லாமையின் காரணமாக, மற்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களை கூறுவதற்கு வாய்ப்பில்லை யென்றாலும் அவ்வப்போது ஏற்படுகின்ற வாய்ப்பை அடிப்படையாக வைத்து, அவர்களுடைய கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு முடியும் என்பதை மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டிலே, எந்த, எந்த இனங்களுக்கு, எவ்வளவு, எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை விளக்கக் குறிப்பிலேயே நாம் தெளிவுபட கூறி இருக்கிறோம். அந்த வகையிலே இதிலே முக்கியமாக, ரூ. 130 கோடிக்கு அனுமதி தர வேண்டுமென்று நான் கோரியிருக்கிறேன். அதிலே, ரூ. 107 கோடி அளவுக்கு' குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு இதுவரையில் செலவழிக்கப்பட்டதற்கு அனுமதி பெறவும், இனிமேல் செலவழிக்கப்படுகின்ற இனங்களுக்காகவும் நாம் மதிப்பீடு போட்ட தொகையின் அடிப்படையில் ரூ. 107 கோடி ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அது தவிர, மற்ற பல இனங்களுக்கும் வேளாண்மைத் துறைக்கும், காவல் துறைக்கும், கல்வித் துறைக்கும், சுகாதாரத் துறைக்கும், எந்த, எந்த இனங்களில், எவ்வளவு, எவ்வளவு தேவைப்படுகிறது என்று விளக்கக் குறிப்புக்கள் தரப்பட்டிருக்கின்றன.



இங்கே சத்துணவுத் திட்டத்தைப் பற்றி உறுப்பினர்கள் கோடிட்டுக்காட்டினார்கள், விரிவாகவும் பேசினார்கள். இந்தச் சத்துணவுத் திட்டமானது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று என்ற வகையிலேதான் இங்கே எல்லோராலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. குழந்தைகளுடைய நலன்கள் காப்பாற்றப் பட வேண்டுமென்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய எதிர்காலம் சிறப்பாக அமைவதற்கு, குழந்தைகளுக்குச் சத்துணவு தரவேண்டுமென்ற திட்டம் வரவேற்கப்படுகின்றது என்ற முறையில் அவையிலுள்ள அத்தனை கட்சிக்காரர்களும் ஆதரித்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே யார், யார் வரவேற்கிறார்கள்; யார், யார் எதிர்க்கிறார்கள்; யார், யார் துணைபோகிறார்கள் துணைபோகாமல் இருக்கிறார்கள் என்பதை அவர்களுடைய சொற்களிலிருந்தும், அவர்களுடைய செயல்களிலிருந்தும் நாடு நன்கு அறிந்திருக்கிறது. நான் அந்தப் பிரச்சனைகளுக்குள்ளே இப்பொழுது செல்ல விரும்பவில்லை. ஆனால், இந்தச் சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது இந்த அரசின் நிதிநிலை அறிக்கை வருகின்றபொழுதே வெளியிடப்பட்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையிலே இது கொள்கை அளவில் வெளியிடப் பட்டதன் காரணமாக, ரூ. 100 கோடி செலவு இதற்கு ஏற்படும் என்று குத்துமதிப்பாக எடுத்துச் சொல்லப்பட்டது. ஆனால், பார்ட் ஒன், அல்லது பார்ட் டூவிலே இது சேர்க்கப்படாததன் காரணமாக, நாம் எதிர்பாராத செலவினத்திலிருந்து எடுத்து செலவழித்துவிட்டு, செலவு செய்தாலும் இந்த அவையினுடைய அனுமதி பெற வேண்டிய தன்மை இருக்கிற காரணத்தால், இப்பொழுது செலவு செய்யப்பட்டவைகளுக்கு நாம் அனுமதி கோரியிருக்கிறோம். இனிமேல், மார்ச் 31 ஆம் தேதி வரையில் ஏற்படும் செலவுகளுக்கும் அனுமதிதரும்படியாகக் கேட்டிருக் கிறோம். இந்தச் சத்துணவுத் திட்டத்தினுடைய அடிப்படை நோக்கத்தைப் பெரும்பாலானவர்கள் மிகச் சிறப்பாக வரவேற்றிருக்கிறார்கள். இது மிகப் பெரும் திட்டம் என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். கிட்டத்தட்ட 60 லட்சம் குழந்தைகளுக்கு 2 வயதிலிருந்து 10 வயதுக்கு இடையாக உள்ள குழந்தைகளுக்கு, மதிய உணவு அளிக்கின்ற பெரும் திட்டத்தை நாம் தீட்டியிருக்கிறோம். இத்திட்டமானது, கல்வித் துறையின் மூலமாக, 32,000-க்கு மேலான துவக்கப்பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இவைத் தவிர, 21,000 காப்பகங்கள் மூலமாக, இந்தத் திட்டமானது 2 வயதிலிருந்து 5 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு, நிறைவேற்றப்பட்டு வருகிறது. சமூகநலத் துறையின் மூலமாக. இந்த இரண்டு துறை களின் மூலமாக நிறைவேற்றப்பட்டு வந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழே இந்தத் திட்டத்தினுடைய தன்மைகள் அவ்வளவும் ஆராயப்பட்டு, அவ்வப்போது அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, ஏழைக் குழந்தைகளுடைய பசிக் கொடுமையை நீக்க வேண்டு மென்பது இந்தத் திட்டத்தினுடைய அடிப்படை நோக்கமாகும். உணவு கொடுக்கிறோம் என்பதோடுமட்டுமல்லாமல், ஊட்டச் சத்துள்ள உணவாக அளிக்க வேண்மென்பதிலேதான் நாம் அக்கறை செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

எற்கனவே நாம் உணவு தந்த வகையிலேயும்கூட சாதாரணமாக 15 காசு அளவிற்குத்தான் உணவு தரப்பட்டது. அதிலேகூட 5 காசுகளை ஊராட்சி ஒன்றியம் தருவது என்றும், மிகுதி 5 காசுகளைப் பொதுமக்களிடத்திலிருந்து நன்கொடையாகத் திரட்டி நிறைவேற்ற வேண்டுமென்றும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பெற்றது. முதன்முதலாக அன்றைக்கு முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் என்பதை மாண்புமிகு முதலவரவர்களே பாராட்டி வரவேற்றிருக்கிறார்கள். அவர்கள் தொடங்கிய திட்டம் இப்பொழுது விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. திட்டவட்டமாக, தெளிவாக இதனுடைய பலன்கள் விரிவாக ஆக்கப்படுகின்ற அளவிற்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்பொழுது கிட்டத்தட்ட 5 காசுகளைப் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பெற வேண்டுமென்றும் மிகுதி 5 காசுகளைப் பொதுமக்களிடத்திலிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற முறையிலேதான் இருந்தது. அரசாங்கத்தின் மூலமாக எந்தப் பணமும் ஆரம்பத்திலே தரப்படவில்லை. அதற்குப் பிறகு கேர் நிறுவனம் 6 கோடி ரூபாய், 7 கோடி ரூபாய் அதில் தந்ததற்குப்பிறகு மேற்கொண்டு ஐந்தாறு காசுகள் கிடைத்து, 15 காசு, 16 காசு அளவிலேதான் உணவு தரப்பட்டதே தவிர சத்துணவு என்று தருவதற்கில்லை.

ஆகவே, 45 காசுகள் 50 காசுகள் ஆனாலும் சத்துணவாக இருக்கவேண்டும் என்று இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சத்துணவு என்பது, வைட்டமீன்கள் சேர்ந்த, சத்துக்கள் நிறைந்த அளவிற்கு என்னென்ன சத்துக்கள் சேர வேண்டுமென்று வல்லுநர்கள் ஆராய்ந்ததற்குப் பிறகு அவர்கள் கொடுத்த கணக்கின்படித்தான் 45 காசுக்காவது இருக்க வேண்டும், எண்ணெய் இவ்வளவு இருக்க வேண்டும், பருப்பு இவ்வளவு இருக்கவேண்டும், காய்கறி என்னென்ன வகைகளில் சேரவேண்டும் என்று அவர்கள் சொன்னதன் அடிப்படையிலேதான் நிறைவேற்றிருக்கிறோம். ஆகவே, இது பெரும் திட்டம் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம்.

குழந்தைகளுடைய வாட்டத்தை நீக்குவது மட்டுமல்லாமல், ஏழை எளிய தாய் தந்தையர்களுடைய கவலையைப் போக்குவதற்கும் இந்தத் திட்டம் பயன்படுகிறது. அதுமட்டுமல்ல, பசியோடு இருக்கின்றவர்களுக்கு கல்வியில் கவனம் செல்லாது என்பதை அண்ணல் காந்தியடிகள் போன்றவர்களும் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். கல்வியிலே கவனம் செலுத்துவதற்கு இதுவொரு ஆதாரமாக இருக்கும் என்பது இந்தத் திட்டத்தினுடைய அடிப்படை நோக்கம் ஆகும்.



மக்களுக்கும் தர வேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து, 10 மணிக்கே வந்து 12 மணி வரையில் அப்படிப் பட்ட பயிற்சிகளையெல்லாம் தந்து, அவர்கள் அ, ஆ கற்றுக் கொள்ளவும், ஏ, பி, சி, டி போன்றவைகளைக் கற்றுக் கொள்ளவும், முதலாவது வகுப்பிலே துவக்கப் பள்ளயிலே சேர்வதற்கு அவர்களை ஆயத்தப் படுத்துவதற்கும் இந்தக் குழந்தைகள் காப்பகம் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற முறையிலேதான் காப்பகத்திற்காக ஒருவரைப் போட்டு, சமையல் செய்வதற்கு மற்றொருவரைப் போட்டு, உதவியாக இருப்பதற்கு வேறொருவரையும் நாம் ஆங்காங்கு போட்டிருக்கிறோம்.

பள்ளியில் வருகை எண்ணிக்கையைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கமும் ஓரளவுக்கு நிறைவேறியிருக்கிறது. இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்குப் பிறகு ஒரு இலட்சத்து அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பள்ளிகளிலே சேர்கின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்றும், பள்ளியினுடைய வருகையினுடைய பட்டியல் கணக்கைப் பார்க்கின்றபொழுது ஓரளவுக்கு அது சிறப்பாக அமைந்திருக்கிறது என்பதையும் நாம் காண்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், பள்ளிக்கூட மாணவ மாணவியர்களின் வருகை, குழந்தைகளை இந்தக் காப்பகங்களில் சேர்ப்பதன் மூலமாக தாய் தந்தையர்கள் ஓய்வு பெறவோ அல்லது அவர்கள் வேலைகளைப் பார்க்கவோ இந்தத் திட்டத்தின் மூலமாக வசதி ஏற்படுகிறது என்பது மட்டுமல்லாமல், ஏழை விதவை, ஊனமுற்ற ஏழை எளிய தாய்மார்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் இந்தத் திட்டம் பயன்படுகிறது.

இந்தத் திட்டத்தில் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை நாம் உணர்கிறோம். சிலபல குறைபாடுகள் இருக்கின்றன. ஆனால் நாங்கள் எதிர் பார்த்ததற்கு மேல் இதிலே பொது மக்களுடைய நல்ல ஒத்துழைப்பும், ஆசிரியப் பெருமக்களுடைய நல்ல ஒத்துழைப்பும் அதிகாரிகளுடைய விறுவிறுப்பான தன்மைகளும் இருந்து வருகின்றன.

32,000 பள்ளிகள், 21,000 காப்பகங்கள் கிட்டத்தட்ட 53,000 இடங்களில் உணவு அளிக்கும்பொழுது சிலபல குறை பாடுகள் இருக்கத்தான் செய்யும். வசதிகள் முழுவதும் நாங்கள் செய்து தந்து விட்டோம் என்று நான் சொல்ல வரவில்லை. அந்த வசதிகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம். வசதி குறைவான நிலையிலேயே ஆசிரியப் பெருமக்களும், மற்றவர் களும் ஓரளவுக்கு இதிலே பணியாற்றி வருகிறார்கள்.

சிலபல இடங்களில் சிலபல குறைபாடுகள் இருக்கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, ஆயிரக்கணக்கான பள்ளிகளிலே இருக்கின்ற பல இலட்சக் கணக்கான ஆசிரியர்கள் அத்தனைபேர்களும் தவறு செய்கிறார் கள் என்றோ, அத்தனைபேரும் இதிலே மோசமாக நடந்து

கொள்கிறார்கள் என்றோ நான் குறிப்பிட வரவில்லை. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சிலபல இடங்களில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணியில் பெருமகிழ்ச்சியோடு அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இதிலே எல்லாக் கட்சியினருடைய ஒத்துழைப்பும், பொதுமக்கள் அத்தனைபேர்களுடைய ஒத்துழைப்பும் இருப்பதன் மூலமாகத்தான் இந்தத் திட்டம் நிறைவேற முடியும்.

இப்பொழுது நாம் துணை மதிப்பீடுகளின் மூலமாக இதற்கான தொகைகளை ஒதுக்குகின்ற சூழ்நிலை ஏற்பட்டாலும், எதிர்காலத்தில் அதற்கான சூழ்நிலைகள் வருகிறபொழுது, அடுத்த ஆண்டு பட்ஜெட் போடுகின்ற பொழுது முன்கூட்டியே ஒதுக்குவதற்கு வாய்ப்பு வசதிகள் ஏற்பட்டு விடும். ஆகவே, எல்லாத் தரப்பினருடைய ஒத்துழைப்பும் வேண்டும். திட்டம் மிகப் பெரிய திட்டம். இதிலே சிக்கல்களும், குறைபாடுகளும் இருக்கக் கூடும். அவற்றை நீக்குவதற்கு ஒத்துழைப்பு தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேறு பல பிரச்சனைகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பிரச்சனைகளிலே இருக்கின்ற நியாயமான குறைபாடுகளைப் போக்குவதற்கு அந்தந்தத் துறைகளைச் சார்ந்திருக்கின்ற அமைச்சர்கள் அதற்காகப் பாடுபடும் என்பதையும் எடுத்துச் சொல்லி, இந்த மானியக் கோரிக்கை மூலமாகக் கேட்டிருக்கின்ற தொகைகளை ஒதுக்கித் தரும்படியாக இந்த அவையை நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது மணி 12.00 ஏற்கனவே முடிவு செய்தபடி விவாதம் முடிவுற்று, மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு விடப்படுகின்றன.

“1982-83 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகள் அடங்கிய 8-9-1982 நாளிட்ட அறிவிப்பில் இரண்டாவது வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் அந்தந்த இனங்களுக்கு, 1982-83 ஆம் நிதியாண்டிற்கான கூடுதல் செலவுக் கணக்கில் அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.”

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அரசுக்கு கோரிய தொகைகள் வழங்கப் பெற்றன.





1982-83 ஆம் ஆண்டில் துணை மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றப் பெற்றவை.

A வருவாய்க் கணக்கில் செலவு.

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | | |
|---|---|---|---|
| கோரிக்கை | 1 | நிலவரித்துறை .. .. | 1,44 |
| ஷை | 4 | பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் —நிர்வாகம். | 79,04 |
| ஷை | 11 | மாவட்ட நிர்வாகம் .. | 10,43 |
| ஷை | 13 | நீதி நிர்வாகம் .. .. | 13,63 |
| ஷை | 15 | காவல் துறை .. .. | 2,75,67 |
| ஷை | 16 | தீயணைப்பு பணிகள் .. | 4,75 |
| ஷை | 17 | கல்வி .. .. .. .. | 20,33,09 |
| ஷை | 18 | மருத்துவம் .. .. .. | 1,26,91 |
| ஷை | 19 | பொதுச் சுகாதாரம் .. | 10,00 |
| கோரிக்கை | 20 | வேளாண்மை .. .. | 3,00 |
| ஷை | 22 | கால்நடை வளர்ப்பு .. .. | 14,61 |
| ஷை | 23 | கூட்டுறவு .. .. .. | 4,54,71 |
| ஷை | 25 | சின்கோனா .. .. .. | 7,62 |
| ஷை | 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. .. | 43,85 |
| ஷை | 30 | சமூக நலன் .. .. .. | 33,40,00 |
| ஷை | 31 | பழங்குடியினர், ஆதி திராவிடர்கள் முதலியவர்களின் நலன். | 93,8[illegible] |
| ஷை | 32 | பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன், .. .. | 23,81 |
| ஷை | 34 | நகக்ப்பகுதி வளர்ச்சி .. | 50,00 |
| ஷை | 35 | நுகர் பொருள் வழங்கள் .. | 55,36,[illegible] |

| | | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|---|
| கோரிக்கை | 36 | பாசனம் .. .. .. | 18,58 |
| ஷை | 38 | பொதுப் பணிகள்—பணியாளர் அமைப்பும் கருவிகளும் தளவாடமும். .. .. .. | 2,40,85 |
| ஷை | 39 | சாலைகளும் பாலங்களும் .. | 1,65 |
| ஷை | 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும். .. | 2,01 |
| ஷை | 43 | பல்வகை .. .. .. | 6 |
| ஷை | 44 | எழுதுபொருள் அச்சுத்துறை .. | 24,00 |
| ஷை | 45 | காட்டுவளத்துறை .. .. | 75 |
| ஷை | 47 | செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. | 24,68 |
| | | மொத்தம்—A வருவாய்க் கணக்கில் செலவு | 1,24,35,15 |

B வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு

| | | | |
|---|---|---|---|
| கோரிக்கை | 48 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. .. .. | 62,00 |
| ஷை | 50 | பாசனம் குறித்த மூலதனச் செலவு. .. .. .. | 1,80,05 |

[1982 செப்டம்பர் 10

| | | | |
|---|---|---|---|
| கோரிக்கை | 51 | பொதுப் பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு | 84,20 |
| ஷை | 52 | சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. .. | 1,17,85 |
| ஷை | 55 | பல்வகை மூலதனச் செலவு .. | 50,00 |
| | | மொத்தம்—B மூலதனக் கணக்கு .. | 4,94,10 |

C கடன்களையும், முன்பணங்களையும் வழங்குதல்

| | | | |
|---|---|---|---|
| கோரிக்கை | 56 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் .. | 1,45,54 |
| | | பெரு மொத்தம் .. | 1,30,74,79 |



(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு 1982

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்யவும், அய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்."

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(இ) நிதி ஒதுக்க (எண்.3) சட்ட முன்வடிவு, 1982.

மாண்மிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க எண். 3—சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(8) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 127(1)—ஐ தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 127(1)—ஐத் தளர்த்தி, இப்பேரவை இன்று தமிழ்நாடு 1982-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.3) சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(இ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1982—தொடர்ச்சி

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.3) சட்ட முன்வடிவு *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 மற்றும் அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். தலைவர் அவர்களே,'' தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.3) சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(9) தனித் தீர்மானங்கள்

(அ) இலங்கையில் தமிழர் உரிமை காக்கப் போராடிய இரு தமிழ் இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு இருப்பதை ரத்து செய்வது.

*திரு. ப. நெடுமாறன். தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''இலங்கையில் தமிழர் உரிமைக்காகப் போராடிய திரு. செ. யோகச்சந்திரன் என்ற குட்டிமணி. திரு. க. ஜெகநாதன் ஆகிய இரு தமிழ் இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு இருப்பதை ரத்து செய்ய, தலையிட்டு ஆவன செய்யும்படி இந்தியத் தலைமை அமைச்சருக்குப் பரிந்துரை செய்யும்படி தமிழக அரசை இப்பேரவை வேண்டிக்கொள்கிறது.''

---

*1982 செப்டம்பர் 10 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்டத்தின்போது பகத்சிங், சுகதேவ், ராஜகுரு ஆகிய 3 இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபோது இந்தியா பூராவும் அதிர்ச்சி அடைந்தது. சொல்லொணா வேதனையிலே ஆழ்ந்தனர் மக்கள். அதைப் போலவே தமிழகத்திலே 1942 ஆகஸ்டு புரட்சிப் போராட்டத்தின்போது குலசேகரப்பட்டினம் கொலை வழக்கிலே சம்பந்தப்பட்ட ராஜகோபாலன், காசிராஜன் என்ற இரண்டு பேர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபோதும், தமிழகம் மிகபெரிய அதிர்ச்சி அடைந்தது. அந்த நிலையை இன்றைக்கு தமிழகம் அடைந்துள்ளது. நம்முடைய யோகச்சந்திரன், என்ற குட்டிமணி, ஜெகன் என்பவர்களுக்கு இலங்கையிலே மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பதைக் கண்டு தமிழகம் பூராவும் அதிர்ச்சி அடைந்திருக்கிறது. எல்லாம் கட்சிகளும் கட்சி சார்பற்ற மக்களும் மிக வேதனையில் ஆழ்ந்திருக்கிறார்கள். குட்டிமணி அவர்கள், ஜெகன் அவர்கள் ஆகிய இரண்டு பேர்களும், ஈழத் தமிழ் நாட்டினை நேசித்ததைத் தவிர வேறு குற்றம் அவர்கள் செய்யவில்லை. ஆனால் அந்த நாட்டின் அரசு அவர்களை சிறையிலே சித்திரவதை செய்து சொல்லொணா கொடுமைகளுக்கு ஆளாக்கி, அவர்களிடமிருந்து வெற்றுத்தாள்களிலே கையெழுத்து வாங்கி அதை ஒப்புதல் வாக்குமூலமாக நீதி மன்றத்திலே சமர்ப்பித்து அதையே அவர்களுக்கு எதிரான சாட்சியமாகப் பயன்படுத்தி, அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

தென் ஆப்ரிக்க அரசாங்கத்தின் கொடுமையான சட்டத்தினை இலங்கை அரசாங்கமும் அதை அப்படியே ஏற்றுக் கொண்டு அந்தச் சட்டத்தின்படி குட்டிமணி, ஜெகன் ஆகியவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எதிராக எந்தச் சாட்சியங்களும் இல்லை. அவர்களுக்கு எதிராக யாரும் சாட்சியம் சொல்வதற்கு முன்வரவில்லை. ஆனால் அவர்களை அங்கே ராணுவசிறை முகாமிலே எப்படியெல்லாம் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு சிலவற்றை நான் உங்கள் மத்தியிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அவர்களுடைய கைகளிலும், கால்களினும் விலங்கு பூட்டி அந்தரத்திலே தொங்கவிட்டு அடித்தார்கள். கண், காது, மூக்கு, ஆண் உறுப்பு எங்கும் மிளகாய்த்தூளைத்தடவி.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சம்பவங்களைப் பற்றிப் பேசுவதில் பயன் இல்லை. அது இன்னொரு நாட்டு சம்பவம். விடுதலைப் பற்றி மட்டும் பேசினால் நல்லது.

திரு ப. நெடுமாறன்: அவர்களைச் சித்திரவதை செய்து பெற்ற வாக்குமூலத்தின் மூலம்தான் அவர்களுக்கு அங்கே எதிராக பயன்படுத்தப்படுகிறது. அதன் விளைவாக

அவர்களுக்கு மரணதண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த மரண தண்டனையை ரத்து செய்யவேண்டும். அவர்களை விடுவிக்க வேண்டுமென்று தமிழக மக்கள் விரும்புகிறார்கள். தமிழகத்திலேயுள்ள எல்லாக் கட்சிகளும் எந்த வேறுப்பாடும் இல்லாமல் அந்தக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள்.

சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்ட பகத்சிங்கோடு ஒப்பிட்டுப் பேசுவதற்குக் காரணம் சொல்ல விரும்புகிறேன். பகத்சிங்குக்கு விதிக்கப்பட்ட அந்தத் தூக்கு தண்டனையை எதிர்த்து தேசத்தந்தை மகாத்மா காந்தி அடிகள் அன்றைக்கு வைசிராயாக இருந்த இர்வின் அவர்களைச் சந்தித்து அதற்காகப் போராடினார், வேண்டினார். அந்த இளைஞர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்யவேண்டுமென்று வற்புறுத்தினார். காங்கிரஸ் செயற் குழுவிலும் அதைப்பற்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தேசம் பூராவும் இருக்கக்கூடிய சகல அமைப்புகளும் பகத்சிங், குருதேவ், ராஜகுரு ஆகிய இவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்யவேண்டுமென்று வற்புறுத்தின. அன்றைக்கு மகாத்மா காந்தி அடிகள்கூட அதைப் பற்றிச் சொல்லும்போது ஒன்றை வற்புறுத்திச் சொன்னார்கள்.

'Well, I was not on my deferce, and so I did not bother you with the details of what I did to save Bhagat Singh and his comrades. I pleaded with the Viceroy as best I could. I brought all the persuasion at my command to bear on him. On the day fixed for the final interview with Bhagat Singh's relations I wrote personal letter to the Viceroy on the morning of 23rd. என்று மகாத்மா காந்தியடிகள் எழுதின அந்த வாசகத்தை நான் இங்கே சொல்வது இவர்களுக்கும் பொருந்தும் என்ற காரணத்தாலேதான் அதை நான் சுட்டிக் காட்டுகிறேன். இன்னொரு இடத்திலே மகாத்மா காந்தி அடிகள் 'And it was not I alone who did what was humanly possible. The revered friend Panditji and Dr. Sapru tried their best.' என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 12.10)

இப்படித் தொடர்ந்து இந்த இளைஞர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென்று மகாத்மா காந்தியடிகள் போராடியதைப்போல் இன்று அந்த விடுதலை வீரர்களான ஜெகன், குட்டிமணி ஆகியவர்களின் மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென்று தமிழகத்திலே உள்ள அனைத்து மக்களும் குரல் கொடுக்கிறோம்



அதைப்போல தமிழ்நாட்டிலே ராஜகோபால், காசிராஜன் ஆகியோர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்ய ஒரு இயக்கம் நடத்தப்பட்டது. மதிப்புக்குரிய இராஜாஜி அவர்கள் அந்த இயக்கததை தலைமை தாங்கி நடத்தினார்.

அதைப்போல அமெரிக்காவில் அணு விஞ்ஞானிகளாக இருந்த ரோசன் பெர்க் தம்பதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டபோதும் உலகம் பூராவும் குரல் கொடுத்தது. அவர்கள் விடுதலை செய்யப்படாவிட்டாலும் உலகம் பூராவிலும் ஒரு இயக்கம் ஏற்பட்டு, ஒரு செனட் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினால் அமெரிக்காவின் குற்றச்சாட்டு நியாயமற்றது என்று கண்டறியப்பட்டது. அதையும் இங்கே சுட்டிக்காட்டி, இப்படிப்பட்ட சூழ்நிலைகளை மனதில் வைத்து, ஜெகன், குட்டிமணி என்ற இரண்டு தமிழ் இளைஞர்களையும் விடுதலை செய்ய நாம் பாடுபட வேண்டும். ஈழ நாட்டு தமிழர்களின் உரிமைகளைக் காக்க போராடினார்கள் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற மரண தண்டனையை ரத்து செய்து. அவர்கள்மீது கருணை காட்ட வேண்டுமென்று இலங்கை அரசை நம்முடைய தலைமை அமைச்சர் வற்புறுத்த வேண்டும். அதை நம்முடைய தமிழக அரசு பரிந்துரைக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய தீர்மானத்தை வற்புறுத்தி, என் உரையை முடிக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கோவா கிளர்ச்சியிலே ஈடுபட்டு, சிறையிலே வாடிக்கொண்டிருந்த ரானடே என்ற விடுதலை வீரனை விடுவிக்க வேண்டுமென்று வெளிநாட்டிலே இருந்தபோது ரோமாபுரியில் போப்பாண்டவரை சந்தித்து முறையீடு செய்து, வீரன் ரானடேயை விடுவித்த அண்ணா வழியில் நின்று இந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

நண்பர் நெடுமாறன் அவர்கள் தந்திருக்கிற தீர்மானத்தைப் போல திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நண்பர் ரகுமான்கான் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கருப்பையா அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே உமாநாத் அவர்களும், காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என். எஸ். வி. சித்தன் அவர்களும் இங்கே தீர்மானங் களை அளித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்கின்ற அளவில் இந்த அரசும் இருக்கும் என்கின்ற நிறைந்த நம்பிக்கையோடுதான் நான் என்னுடைய கருத்துக் களை இங்கு எடுத்துவைக்க முன் வந்துள்ளேன்.

இலங்கையிலே தமிழ் ஈழர் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கிற இளம் தமிழர் பட்டாளம் உலகத்தின் பல்வேறு பகுதிகளிலேயும் இன்றைக்கு சிதறிக் கிடக்கிறார்கள். அப்படி சிதறிக் கிடப்பவர்களில் சிலர் தமிழ்நாட்டிலேயும் இருக்கிறார்கள் என்பதை அறிந்த நேரத்தில், அவர்கள்மீது சில வழக்குகள் தமிழகத்திலே தொடரப்பட்டபோது, அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டுமென்று இலங்கை அரசு கூறிய நேரத்தில் தமிழகத்திலே உள்ள எல்லாக் கட்சிகளும், ஆளும் கட்சி உள்ளிட்ட அனைவரும் அவர்களைத்திருப்பி அனுப்ப இயலாது, அப்படி அனுப்புகின்ற நிலையை உருவாக்கக்கூடாது என்று இந்திய தலைமை அமைச்சர் அவர்களிடத்திலே வலியுறுத்தி இருக்கிறோம். நேரிலே நான் டெல்லியிலே பிரதமரை சந்தித்த போதும், வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவ் அவர்களைச் சந்தித்தபோதும் அதை வற்புறுத்திக் கூறி இருக்கிறேன்.

இன்றைக்கு ஏற்பட்டுள்ள நிலை, இதற்கு முன்பு நாம் இலங்கைத் தமிழர்களுக்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்க, அவர்களுக்கு பாதுகாப்பாக தாய்த் தமிழகம் இருக்கும்; இந்தியத் திருநாடு இருக்கும் என்பதை எடுத்துக் காட்ட நடத்திய கூட்டங்கள், பேரணிகள் அனைத்தையும்விட மிக முக்கியமான ஒரு கட்டத்தில் வந்து இருக்கிறது.

குட்டிமணி, ஜெகன் என்கிற இரண்டு இளைஞர்கள் மேலே கொலை குற்றம் சுமத்தப்பட்டு, கூண்டிலே ஏற்றப்பட்டு அவர் களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. மரணத்தை தழுவிட நாங்கள் மகிழ்ச்சியோடு முன் வருகிறோம் என்று அவர்கள் மார்தட்டி வீர உரை ஆற்றியிருந்தாலும் கூட, அவர்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை நமக்கெல்லாம் இருக்கிறது. அந்தக் கடமையை நிறைவேற்றத்தான் இந்தத் தீர்மானம் ஆகும்.

அவர்கள் வன்முறையிலே ஈடுபட்டார்கள் என்ற வார்த்தை பயன்படுத்தப்படலாம். ஆனால் சில நேரங்களில் விடுதலை இயக்கத்தில் வன்முறை தவிர்க்கப்பட இயலாத ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறது என்பதை நாடு அறியும், அனைவருமே அறிவார்கள். இன்றைக்கு யாசர் அராபத் அவர்களுடைய தலைமையிலே நடைபெறுகின்ற பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை நம்முடைய இந்திய யூனியனுடைய அரசு அங்கீகரித் திருப்பதை, ஆதரிப்பதை நாம் காண்கிறோம். அதைப்போலவே தென் ஆப்பிரிக்கா விடுதலைப் போராட்டத்தை, இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் அண்மையிலே மொரீஷியஸ் தீவுக்கும், மற்ற தீவுகளுக்கும் சென்றபோது ஆதரித்து தன்னுடைய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள்.





அந்த வன்முறைகள் நியாயப்படுத்தப்படுகிற நேரத்தில், ஒரு வேளை இலங்கையிலே நடைபெற்றிருப்பது வன்முறை என்றாலும்கூட, ஒரு விடுதலை நோக்கத்தோடு, நாட்டுப்பற்று என்கிற எண்ணத்தோடு அவை நடைபெற்றிருக்குமேயானால், பாலஸ்தீனத்தையும், தென் ஆப்பிரிக்காவையும், எந்தக் கண் கொண்டு நோக்குகிறோமோ, அதே கண் கொண்டுதான் இன்றைக்கு இலங்கையிலுள்ள இந்த இரண்டு இளைஞர்களையும் அவர்களுக்குப் பின்னாலே இன்னும் வரிசையாக நிறுத்திட இருக்கிற, தூக்குமரத்தை நோக்கி நிறுத்தப்படக்கூடிய சூழ்நிலையில் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிற, சிறையிலே பல்வேறு கொடுமைகளை, சொல்ல நாகூசுகிற, சொன்னாலும் கேட்க சகிக்காத அத்தகைய சித்திரவதைகளையும் ஏற்றுக் கொண்டிருக்கிற அந்த தமிழ் இளைஞர்களை எல்லாம், மரண தண்டனையிலிருந்து காப்பாற்றுங்கள் என்பது மாத்திரம் அல்ல நம்முடைய தீர்மானம் அப்படி இருந்தாலும்கூட, அவர்களை யெல்லாம் விடுவிக்க வேண்டும் என்கிற உட்பொருளையும் கொண்டுதான் இந்தத் தீர்மானங்களை நாம் கொண்டு வந்திருக் கிறோம் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதை நம் தலைமை அமைச்சரிடத்திலே கேட்கிற அதே நேரத்தில், அவர்கள் நம்மைப் பார்த்து திருப்பிக் கேட்கிற சூழ்நிலையில் நாம் நடந்துக் கொள்ளக் கூடாது. அதே இலங்கை இளைஞர்கள் மீது நீங்கள் வழக்குப் போட்டிருக்கிறீர்களே என்று அப்படி ஒரு குற்றம் சுமத்துகிற நிலைமைக்கு கூட இல்லாமல், இலங்கைத் தமிழ் இளைஞர்கள் மீது தமிழக அரசு போட்டிருக் கிற வழக்குகளை எல்லாம் திரும்பப் பெற்று, இந்தத் தீர்மானத்தை நம்முடைய தலைமை அமைச்சருக்கு அனுப்பி வைப்போமேயானால், இந்தத் தீர்மானம் மிக உயர்ந்த மதிப்பை தரக்கூடிய தீர்மானமாக இருக்கும் என்று கூறி இந்தத் தீர்மானத்தை நானும் வழி மொழிந்து அமைகிறேன். வணக்கம்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர் பிரச்னை மொழி உணர்வில் அல்லது வேறு உணர்வுகளின் அடிப்படையில் இல்லாமல், ஒரு மனிதாபிமான அடிப்படையில் ஏற்பட்ட உணர்வாக நாம் பார்த்திட வேண்டும். ஸ்ரீலங்கா அரசினுடைய உள்நாட்டுப் பிரச்னையாக இருந்தாலும், அதில் நாமெல்லாம் அதிகமாகத் தலையிட முடியாது என்ற ஒரு நிலைமை இருந்தாலும், இந்தியப் பிரதமர் அவர்களும், இந்திய அரசும் இதில் தலையிட வேண்டும் என்ற உணர்வை நாம் மதித்து, இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

[திரு. இல. பலராமன்] [1982 செப்டம்பர் 10

குட்டிமணியும், ஜகன் அவர்களையும் தூக்கு தண்டனையிலிருந்து காப்பாற்றுவது என்கிற நிலையில் மட்டும் இந்தப் பிரச்னையைப் பார்க்காமல், அங்கேயிருக்கக்கூடிய மொழிவாரி நிலையில், தமிழர்கள், இலங்கையர்கள், சிங்களவர்கள் என்கிற பிரிவு நிலை ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று மனிதாபிமானத்தோடு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்மானத்தை மத்திய அரசும், மாநில அரசும் வெகு ஜாக்கிரதையாக அணுகும் என்ற நம்பிக்கையுடன், மாநில அரசு மத்திய அரசை அணுகி, நல்லதொரு நிலையில் தீர்வு காண வேண்டும் என்று, தமிழ் மக்களின் சார்பாக, தமிழ் பேசும் இளைஞர்கள் சார்பாக, காங்கிரஸ் கட்சியின் சார்பாக, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து விடை பெறுகிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நண்பர் நெடுமாறன் அவர்களால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஏற்கெனவே இலங்கையில் வாழக்கூடிய தமிழ் மக்களுடைய உரிமைகளுக்காக இயக்கம் நடத்திக்கொண்டு வரக்கூடிய நண்பர்கள் தமிழகத்திலே கைது செய்யப்பட்டபோதும், மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த நிலை-அவர்கள் தங்களுடைய உரிமைகளுக்காக போராடக்கூடிய இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்கிற வகையிலே, வேறு ஒரு நாட்டில் அடைக்கலம் புகுந்துக் கொள்வதற்கு உரிமையிருக்கிறது. அந்த உரிமையை அவர்களுக்கு அளிக்க வேண்டும். ஆகவே அவர்கள் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால், அவர்கள் அங்கே கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள். ஆகவே அவர்களை இலங்கை அரசு திருப்பி அனுப்பியாக வேண்டும் என்று வற்புறுத்தினாலும், அதற்கு மத்திய அரசு இடம் கொடுக்காமல், அந்த நண்பர்களைக் காப்பாற்ற வேண்டும், என்ற நிலையைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்தது.

(பிற்பகல் 12-20)

அதேபோன்று நமக்கு அண்மையில் இருக்கக்கூடிய நாடாகிய இலங்கை அரசோடு பேசி அங்கே இரண்டு இளைஞர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்வதற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்துவதற்காக இந்த நடவடிக்கையிலே மாநில அரசு ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காகத்தான் இந்தத் தனியார் தீர்மானம் இப்போது இங்கே முன்மொழியப்பட்டிருக்கின்றது. பொதுவாக அரசியல் இயக்கங்களிலே இந்தியாவிலே உள்ள இயக்கங்களானாலும் அல்லது மற்ற இடங்களிலே உள்ள இயக்கங்களானாலும் அரசியல் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு மரண தண்டனை



[திரு. என். சங்கரய்யா] [1982 செப்டம்பர் 10

இந்தத் தீர்மானத்தை நான் இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மீண்டும் வற்புறுத்தி அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இலங்கையினைச் சேர்ந்த இளைஞர்கள் மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகள் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினையிலே தமிழ்நாடு அரசாங்கத்திற்கும், இங்கே இருக்கக்கூடிய அனைவருக்கும் ஒரேமாதிரியான கருத்துத்தான் இருக்கின்றது. அவர்கள் மீது பழிவாங்கப்படக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதுதான் நம் அனைவருடைய நோக்கமாக இருக்கின்றது என்ற காரணத்தால் அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் சம்பந்தமாக இதே அணுகுமுறையினை தமிழ்நாடு அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வழிமொழிந்து அமர்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் போராடிய திரு. குட்டிமணி, திரு. ஜகன் ஆகிய இருவருக்கும விதிக்கப்பட்டிருக்கின்ற மரண தண்டனையை ரத்து செய்யும்படி இந்திய அரசு தலையிட்டு ஆவன செய்யும்படி இந்திய தலைமை அமைச்சருக்குப் பரிந்துரை செய்யும்படி தமிழக அரசு வேண்டிக்கொள்ளக்கூடிய இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வழிமொழிகிறேன். எனக்கு முன்பு பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற அனைத்து தலைவர்களும் பேசிய கருத்தோடு நானும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இலங்கையில் வசிக்கின்ற தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து சென்ற ஆண்டு தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு, ஒருநாள் நம்முடைய கண்டனக் குரலை ஒரு மிகப் பெரிய பந்த் நடவடிக்கை மூலமாக நம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்தினோம். அதைத் தொடர்ந்து இன்றைய தினம் இலங்கைக்குச் சென்றுவந்த, பல்வேறு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும், தாங்கள் நேரடியாக பார்த்துவந்து கூறக்கூடிய விஷயங்களை பார்க்கும்போது, தமிழ் மக்கள் பல்வேறு பகுதிகளில், இன்றைக்கு அவர்கள் நடமாட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கடைகள் சூறையாடப்படுகின்றன. பெண்கள் தனித்து செல்ல முடியாத ஆபத்தான நிலைமை இன்றைக்கும் நீடிக்கிறது. அங்கே இருக்கின்ற தமிழ் மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். அங்கே இருக்கின்ற தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற்று நல்வாழ்வு வாழவும், அதற்கான இயக்கமும் நடைபெற்று வருகிறது.

விதிக்கும்போது அந்தத் தண்டனையை ரத்து செய்யவேண்டும் என்றும் அதிலே சில காலம் கழித்து அவர்கள் சிறையிலே இருந்தாலும் கூட அவர்களுடைய தண்டனையை ரத்து செய்து விடுதலை செய்யவேண்டும் என்று இயக்கங்கள் நடைபெறுவது என்பது இயற்கை.

இன்றைக்கு இருக்கக்கூடிய இன்டர்னேஷல் அம்னாஸ்டி என்று சொல்லப்படுகின்ற சர்வதேச ரீதியில் இருக்கக்கூடிய மக்கள் உரிமைகளுக்கான அமைப்பு கூட மரண தண்டனை என்பதையே ரத்து செய்யவேண்டும் என்று சொல்கின்ற ஒரு நிலையினை எடுத்திருக்கின்றது. உலகின் பல பகுதிகளிலும் எந்தவிதமான குற்றங்களுக்காகவும், கொலை குற்றமாக இருந்தாலும் கூட மரண தண்டனை என்பது சமுதாய ரீதியிலே பொருத்தமானதல்ல என்ற கருத்து விரைவாகப் பரவி இருக்கக் கூடிய காலத்திலே நாம் வாழ்கிறோம்.

இந்த நிகழ்ச்சி ஒரு போலீஸ்காரரைக் கொலை செய்தது சம்பந்தப்பட்டது. அதன்படி இரண்டு இளைஞர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டிருக்கின்றது. சாதாரணமாக சுதந்திர இயக்கங்கள் நடைபெறுகின்றபோது அரசாங்கத்தின் அமைப்புகளுக்கும் போராடுகின்ற இயக்கங்களுக்கும் இடையே மோதல் ஏற்படுகின்றபோது இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்பட்டு விடுகின்றன. எனவே இதை ஒரு கிரிமினல் குற்றமாகக் கருதுவது என்பது ஒரு வழக்கமல்ல. அந்த அடிப்படையிலேதான் இலங்கையிலே இருக்கக்கூடிய தமிழ் மக்களும், சிங்கள மக்களும் சேர்ந்து ஜனநாயக ஒற்றுமையின் அடிப்படையில் அங்கே உள்ள தமிழ் மக்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்ற வகையிலே இந்தியாவிலே உள்ள ஜனநாயக சக்திகளும் விரும்புகின்றன. அதற்கு வழிவகுக்கக்கூடிய வகையில் இந்திய அரசாங்கம் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி அவர்களைக் காப்பாற்றவேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்வது முற்றிலும் சரியானதாகும். அது முற்றிலும் நியாயம். எனவே இது இன்னொரு நாட்டினுடைய உள்நாட்டுப் பிரச்சினை என்ற வகையிலே அதிலே தலையிடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளவில்லை, ஆனால் மக்களின் இயக்கங்கள் நடைபெறக்கூடிய காலத்திலே ஏற்படக்கூடிய உரிமைப் பிரச்சினைகள் என்ற அடிப்படையிலே இன்று இதிலே இந்திய அரசாங்கம் தலையிட்டு தன்னுடைய நல்லெண்ணத்தையும் தன்னுடைய செல்வாக்கையும் பயன்படுத்தி அந்த இளைஞர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்யவேண்டும் என்பதற்காக தமிழ்நாடு அரசு இந்திய அரசிடம் தீவிரமாக வற்புறுத்தவேண்டும் என்று



அங்கேயிருக்கின்ற சிங்கள வெறியர்கள் எப்படியாவது தமிழ் மக்களை வெளியேற்றி விடவேண்டும் என்று, ஒரு வெறித்தனமான பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக, தமிழ் மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வோடு, பல்வேறு உணர்வுகளுக்கு ஆளாகியிருக்கின்ற இந்த குட்டிமணி, ஜகன் ஆகியோர் போலீசாரை, காவல் துறையைச் சார்ந்த ஒருவரை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. நாம் இந்த தண்டனையை ரத்து செய்யவேண்டும் என்று கோரக்கூடிய இந்த தீர்மானத்தை நம்முடைய மாமன்றம், அனைத்துக் கட்சிகளும், இங்கே அங்கம் வகிக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் ஏகோபித்து, இந்த தமிழக அரசினுடைய வேண்டுகோளின் பேரில் இதை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய பிரதம அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளும் முறையில் நாம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியாக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இலங்கையிலே வசிக்கக்கூடிய தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்காக சிங்கள வெறியர்கள், அவர்களைத் தனிமைப்படுத்துவதற்காக நடைபெறுகின்ற இயக்கத்தில், அங்கேயிருக்கின்ற ஜனநாயக சக்திகளும், இலங்கையிலே வாழும் மக்களுக்குப் பாதுகாப்பாக ஒத்துழைக்க வேண்டும். இலங்கையிலே வாழக்கூடிய தமிழ்மக்கள் ஏதோ சிங்களவர்களுக்கு எதிரிகள் என்ற உணர்வோடு அல்லாமல் அவர்களுக்கு சகல உரிமைகளையும் வழங்கி, அங்கே இருக்கக்கூடிய ஜனநாயக இயக்கம் செயல்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அந்த நேரத்தில்தான், இந்த தமிழ் மக்களுடைய பிரச்னைகளுக்கு அடியோடு ஒரு தீர்வுகாண முடியும். அந்த ஜனநாயக இயக்கம் வெற்றி பெறுவதற்கு நமு , தமிழ் மக்கள் அனைவரும் உதவ வேண்டியது மிகமிக அவசியம்.

அங்கே இருக்கின்ற தமிழ் மக்கள் தாக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பதிலும், அது நம்மைத் தாக்குவது போன்ற உணர்வு நம் எல்லோருக்கும் ஏற்படுகிறது. ஆகவே, அந்தத் தாக்குதல்களை தடுத்து நிறுத்தவேண்டும். தமிழ் மக்கள் அனைவரும் தங்கள் உரிமைகளைப் பெற்று, அவர்களும் மனிதர்கள், அவர்களும் இலங்கையிலே வசிக்கின்ற பிரஜைகள் என்ற நிலைமையை உண்டாக்குவதற்கு, வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். அதற்கான முறையிலே இந்திய அரசு தலையிட்டு, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்தத்

தீர்மானத்தை, நம்முடைய தமிழக அரசு, இந்தப் பேரவையின் தீர்மானத்தை ஏற்று, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக்கூடிய இந்தத் தீர்மானத்தை கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக வழிமொழிந்து அமர்கிறேன்.

(பிற்பகல் 12-30)

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஈழத்து தமிழன் நலனுக்காக போராடி, இன்று மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்ற குட்டிமணி, ஜெகன் ஆகிய இருவருடைய மரண தண்டனையை ரத்து செய்வதற்கான ஒரு வேண்டுகோளை இந்தப் பேரவையில் ஒரு மனதாகச் சொல்லி, அதன் மூலம் இந்த தமிழ்நாடு அரசாங்கம் நடுவன அரசுக்கு பரிந்துரை செய்ய அருமைக்குரிய நண்பர் திரு. நெடுமாறன் அவர்கள் கொண்டுவந்த இந்த தீர்மானத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருந்த நேரத்தில் பகத் சிங், குருதேவ், ராஜகுரு ஆகியோருக்கு ஏற்பட்ட நிலையை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அண்ணல் காந்தி போன்றவர்கள் அன்று ஜனநாயக ஆட்சி இல்லாத நேரத்தில் விடுதலைக்காக போராடியதை எடுத்துக் கூறினார்கள். அண்ணல் காந்தி அடிகள் மக்களுடைய பிரதிநிதியாக நின்று வாதாடினார்கள். பகத் சிங், குருதேவ், ராஜகுரு போன்றவர்களுக்கு மரண தண்டனை விதித்து இருந்தாலும் கூட அவர்களுடைய தியாகத்தை சொல்லி சொல்லி மக்கள் நாட்டு பாடல்கள் பாடிக்கொண்டு இருந்தது நமக்குத் தெரியும். ஆனால் அதிலிருந்து ஒரு மாற்றம் ஏற்பட்டு தூக்கு மேடை ராஜகோபால் என்று அடையாளமாக, அறிகுறியாக அழைக்கப்படுகின்ற அளவுக்கு தூக்கு மேடை வரை சென்று விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள என்பதையும் எண்ணிப் பார்க்கிறோம். ஆக, உலக வரலாற்றிலே இருக்கின்ற சான்றுகள் ஒரு புறம் இருக்க, உள்நாட்டு சான்றுகள் இருக்கின்ற இந்த இந்திய திரு நாட்டிலே மாபெரும் மாமன்றத்திலே இந்த தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது.

குட்டிமணி, ஜெகன் இருவரும் மக்களுடைய நல்வாழ்வில் அக்கறை கொண்டு நல்வாழவு வாழ வேண்டும் என்ற உரிமைகளுக்காக ஈழத்து வேழங்களாக எழுந்து நின்று போராடியிருக்கிறார்கள், அப்படி போராடுகிறபோது அவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுடைய சித்தத்தை மதியாது சித்திரவதை



செய்யப்படும்போது கூட புன்னகையோடு தியாகம் செய்வதற்கு தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் புன்னகை பூத்தாலும் கூட இங்கே இருக்கக்கூடிய மனிதாபிமானம் உள்ளவர்கள் அவர்களுடைய விடுதலை வேண்டும் என்று கோருகிறோம். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் எங்கெங்கே விடுதலை போராட்டங்கள் நடைபெற்றன என்பதை அழகாக தொடுத்துச் சொன்னார்கள். மனிதாபிமான உணர்வு கொண்ட மக்கள் அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று கோருகிறார்கள்.

அவர்கள் மக்களுடைய உரிமைக்காக போராடுகின்ற காரணத்தால் காந்தி அடிகளும் அதைத்தான் சொன்னார். இந்திய மச்களுடையப் விடுதலைக்காக போராடுகிறேன் என்று சொன்னார். அடிமைப்பட்ட மக்கள் அத்தனைபேருக்காகவும் நான் போராட வேண்டும். அதனை நான் இங்கிருந்து ஆரம்பிக்கிறேன். எங்கிருந்தாவது தொடங்கத்தான் வேண்டும் அல்லவா? அதைப்போல் இன்று இரண்டு இளைஞர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு வீர இளைஞர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே நமது கோரிக்கையாக இருக்க வேண்டும். விடுதலை செய்யப்படுவதன் மூலம் தான் அவர்களுடைய உரிமையை மதிக்கிறோம் என்பது மட்டும் அல்ல மனிதாபிமானத்தை மதிக்கிறோம் என்பதும் நமக்குத் தெரியும். எனவே இந்த அரசாங்கம் அதற்கு செவி சாய்க்கும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. ஏன் என்றால் வெள்ளையர் ஆதிக்கத்தில் இந்தியாவும் இருந்தது, இலங்கையும் இருந்தது, நாமும் துன்பம் பட்டோம். அவர்களும் துன்பப்பட்டார்கள். நாமும் விடுதலை பெற்றோம். அவர்களும் விடுதலை பெற்றார்கள். விடுதலை பெற்ற நாட்டில் ஒரு அங்கமாக இருக்கின்ற இந்தப் பேரவை, விடுதலை பெற்ற நாட்டினுடைய அரசாங்கத்திற்கு வேண்டுகோள் இடப்படுவதை இந்த மாபெரும் தேசத்தின் பிரதமருக்கு பரிந்துரை செய்வதற்கு முன்வந்திருக்கிற இந்த தீர்மானத்தை இங்கே நாம் ஏகமனதாக, ஒரே மனதாக நிறைவேற்றுவதன் மூலம் மனித இதயத்தையே தொடுகின்ற ஒரு தீர்மானமாக இது இருக்கும். அது மட்டும் அல்ல; குட்டிமணி ஜெகன் போன்றவர்கள் எந்த உரிமைக்காக போராடிக்கொண்டிருக்கிறார்களோ அந்த உணர்வினை நாமும் நம்மை ஈடுபடுத்திகொண்டிருக்கிறோம் என்ற காரணத்திற்காக காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் நான் வழி மொழிகிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜ் காங்கிரஸ் தலைவர் மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் முன் மொழிந்த இந்த தீர்மானத்தை ஆதரித்து, தமிழுக்கு எல்லாம் பெருமை சேர்த்து, தமிழுக்கு ஆபத்து வருகிற நேரங்களிலும், அதற்குத்துணை நின்று போராட தயாகார இருக்கிறது என்பதை இந்திய நாட்டிற்கு எடுத்துக் கூறு

கின்ற வகையில் தமிழுக்கும், தமிழனுடைய உயர்வுக்கும் தமிழனுக்காகவும் போராடி இன்றைக்கு தூக்கு மேடைக்கு போவதற்கு துணிந்து விட்ட அந்த இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவிக்கின்ற வகையில் அவர்களுடைய தண்டனையை ரத்து செய்கின்ற தீர்மானத்தை அந்த மக்களை காப்பாற்று கின்ற வகையிலே ஒரு தீர்மானத்தை இயற்றி ஒரு நம்பிக்கை ஏற்படுத்துகின்ற வகையில் நம்முடைய அவையில் பல கட்சித் தலைவர்கள் சொன்னதை ஆதரித்து இந்தியக் குடியரசுக் கட்சி சார்பில் அதை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது தனியார் தீர்மானம் என்ற முறையில இங்கே இருக்கின்ற அனைவருடைய உள்ளத்திலேயும் இருக்கின்ற எண்ணத்தின் பிரதிபலிப்பாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை அனைத்துக் கட்சித் தலைவர்களும் எந்த நல்லுணர்வோடு எந்த விதமான களங்கமுமின்றி அதை ஆதரித்தார்களோ அதே நிலையில் தமிழக அரசும் அதை ஆதரிக்கிறது என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தபோது சிலவற்றைக் குறுப்பிட்டார்கள். அதோடு இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு சங்கரய்யா அவர்கள் குறிப்பிடுகிறபோது இங்கே கைதுசெய்யப்பட்டிருக்கின்ற தமிழ் இளைஞர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெறவேண்டுமென்றும் அவர்களை யாரிடமும் ஒப்படைத்துவிடக் கூடாது என்றும் அதுபோன்ற உணர்வுகளையெல்லாம் வார்த்தைகளாக்கி நல்ல செய்திகளை நமக்குத் தந்தார்கள். இந்தத் தமிழக அரசைப்பற்றி, இது எடுத்து இருக்கின்ற நடவடிக்கைகளைப் பற்றி நான் ஒன்றிரண்டு வார்த்தைகளை இங்கே குறிப்பிட வேண்டும். காரணம், எதிர்க்கட்சித் தலைவர் நல்ல உள்ளத்தோடு சொன்னார்கள் என்ற அடிப்படையில் நான் சொல்கிறேன். என்னென்ன பேரணிகள், என்னென்ன பிரச்னைகள் என்பதைப்பற்றி அவர்கள் ருத்துப்பட வேறு வார்த்தைகளிலே அவர்கள் வெளியிட்டார்கள். குட்டிமணி என்கிற யோகச்சந்திரன் என்கிற ராஜரத்தினம் என்று அழைக்கப்படுகிறவருடைய வாழ்க்கைக்கும் அவர்களுடைய நிலைமைக்கும் தமிழகத்திற்கும் என்றிலிருந்து தொடர்பு இருந்திருக்கிறது என்பதை நான் சொல்ல வேண்டியது நீங்காத கடமை என்று கருதுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் வன்முறை என்ற பெயரில் யார் மீதும் பழி சுமத்தி - அதிலே தமிழகத்தை காப்பாற்றுகின்ற இடமாக தன்னை ஆக்கிக் கொண்டு அதற்கு தன்னை உட்படுத்திக்கொள்ளும் என்ற நம்பிக்கையோடு இருக்கிற தமிழ்



இளைஞர்களை-தண்டனைக்கு உள்ளாக்கவேண்டுமென்ற ஆசை இந்த தமிழக அரசுக்கு இல்லை என்பதையும், ஆகவே திரும்ப இலங்கை அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற எண்ணம் அறவே இல்லை என்பதையும் நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏன் கைது செய்தார்கள் என்பதைப்பற்றி காவல் துறை கைது செய்யவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது என்பதைப் பற்றி நாடு அறியும். வன்முறையில் நடப்பதற்கு அவர்கள் துப்பாக்கிகளைப் பயன்படுத்துகின்ற நிலை உருவானதல்தான் எல்லோருக்கும் உள்ள சட்டத்தின் அடிப்படையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர, அதுவரையில் தமிழகத்திலிருந்து ஒருவர்மீதாவது அப்படிப்பட்டவர்மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா, கைது செய்ததா, தேடி அலைந்ததா, குற்றப் பத்திரிக்கை அங்கே தாக்கல் செய்ததா என்பதை நாடு அறியும். அந்த நிலைமைகள் நடைபெறாமல் இருந்தால் தமிழகத்திலே அந்தப் பிரச்சினை வந்திருக்காது. அதைச் சொல்லும்போது குட்டிமணி என்பவர் மட்டுமல்ல, இதைத் தொடர்ந்து, பல ஆண்டுகளுக்கு தமிழகத்திலே அவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இடம் பிடிக்கவும் அவர்கள்மீது சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்திருக்கின்றன என்பதையும் இங்கே நான் குறிப்பிட்டால் தான் இந்த அரசு நாணயமாக நேர்மையாக எந்தவிதமான வெறுப்புணர்ச்சிக்கும் ஆட்படாமல் நியாயத்தின் அடிப்படையில் செயல்பட்டிருக்கிறது என்பதை இங்கே உள்ள அனைத்துக்கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் உண்மையைத் தெரிந்துக் கொள்ள முடியும் என்பதற்காக இந்த வரலாற்றுக் குறிப்புகளை நான் படிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

நான் முன்பே சொல்லியிருக்கிறேன். இந்தத் தீர்மானத்தை தமிழக அரசு முழு மனதோடு அப்படியே ஏற்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் அதிலே எந்தப் பிரச்னையும் இல்லை, 1. குட்டிமணி என்ற யோகச்சந்திரன் என்ற ராஜரத்தினம் 2. குட்டிமணி என்ற ஈஸ்வரலிங்கம் மற்றும் 3. சந்திரலிங்கம் என்கிற சந்திரி என்ற சிவகுமார் என்று சொல்லப்படுகிறவர்களாகிய மூன்று இலங்கையினைச் சேர்ந்த இளைஞர்களை 18.11.73 அன்று வேதாரண்யம் காவல் துறையினர் வேதரண்யம் காவல் நிலைய எல்லைக்குள் உள்ள தென்னம்பரம் என்ற இடத்தில் காலை 9 மணி அளவில் கைதுசெய்து குற்றநடைமுறை சட்டப்பிரிவு 54 மற்றும் இந்திய பாஸ்போர்ட் சட்டபிரிவுகள் 3(2) 3(c)இன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு அவர்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டார்கள். அவர்கள் இந்திய எல்லைக்குள் தக்க பயண அனுமதிசீட்டு இன்றி நுழைந்திருந்தார்கள். சென்னையில் இருக்கின்ற இலங்கை துணை ஹை மிஷனர் அலுவலகத்திலிருந்து 3..11.73 அன்று மாநில அரசுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் இந்த மூவரும் இந்தியாவிலிருந்து வெடிப்பொருள்களை இலங்கைக்குக் கடத்துவதில் ஈடுபட்டதற்காக இலங்கை காவல்துறையினரால் தேடப்பட்டு

வருவதாகவும், அவர்களை கைதுசெய்து இலங்கைக்குக் கொண்டு போவதற்கு இலங்கை காவல்துறை அதிகாரி ஒருவர் வந்திருப்பதாகவும் அவர்களை இலங்கை போலீஸ் அதிகாரிகளிடம் ஒப்புடைக்குமாறும் கோரப்பட்டது.

(பிற்பகல் 12.40)

31.5.73 அன்று இலங்கைப் பிரஜைகள் ஓட்டிச்சென்ற நாட்டுப் படகு ஒன்று இலங்கைக் கப்பற்படையினால் பிடிக்கப்பட்டது. அதில் 20,000 வெடிபொருள்கள் (Eetonators) இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவைகள் குட்டிமணி என்பவரின் பெயரில் அனுப்பப்பட்டு இருந்தன. சென்னையிலிருந்தும், ஐதராபாத்திலிருந்தும் அவைகள் வாங்கப்பட்டிருந்தன என்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வெடிபொருள்கள் திரு ஜே. மணி என்பவரால் குட்டிமணிக்கு விற்கப்பட்டு இருந்தது என்பது விசாரணையில் தெரிய வந்தது, அவைகள் நாட்டுப்படகு ஒன்றில் வேதாரண்யத்திலிருந்து அனுப்பப்பட்டு இலங்கை சென்று கொண்டிருக்கையில் தான் இலங்கை கப்பற்படையினரால் குறுக்கீடு செய்யப்பட்டு கைப்பற்றப்பட்டது. குட்டிமணி என்பவர் தலைமறைவானார். அவரைக் கைது செய்ய முயற்சிகள் நடந்து கொண்டிருந்தன.

இந்த நிலையில்தான் வேதாரண்யத்தில் திரு. குட்டிமணியும் அவரைச் சேர்ந்த வேறு இருவரும் தமிழக காவல் துறையினரால் மேற்கூறியவாறு கைது செய்யப்பட்டனர். சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்திலிருந்து கோரிக்கை வந்ததும் அப்போதிருந்த தமிழக அரசு, மைய அரசு வெளி விவகார அமைச்சகத்துக்கு உடனடியாக டெலக்ஸ் மூலம் செய்தி அனுப்பி இலங்கைத் தூதரது கோரிக்கையின் மீது மைய அரசின் அறிவுரையைக் கோரியது.

இதற்கிடையில் அவர்களை மைய அரசு உத்தரவு வரும் வரையில் ஜாமீனில் வெளிவிட வேண்டாமென்றும், குற்றவியல் நீதிபதியை அணுகி அவர்களைத் தொடர்ந்து காவலில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்குமாறும் தஞ்சாவூர் காவல்துறை கண்காணிப்பாளருக்கு உத்தரவிடும்படி 7.12.73 அன்று காவல் துறைத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

10-12-73 நாளிட்ட டெலக்ஸ் செய்தியில் மேற்கூறிய மூன்று இலங்கை இளைஞர்களை இலங்கை காவல்துறை அதிகாரிகளிடம் அவர்களை இந்தியாவிலிருந்து நாடு கடத்திச் செலவதற்கென ஒப்படைப்பதற்கு ஆட்சேபணை இல்லையென்று மைய வெளி



விவகார அமைச்சகம் டெலக்ஸ் செய்தி மூலம் தெரிவித்தது. அயல் நாட்டினர்கள் சம்பந்தப்பட்ட 1957ஆம் ஆண்டு ஆணையின்படி மைய அரசுதான் அவர்களை நாடு கடத்த வேண்டும். எனவே, அவர்கள்மீது கொடுக்கப்பட்டிருக்கும் வழக்கு முடிவதற்கு முன் அவர்களை நாடு கடத்துவதற்கான முறையான ஆணைகள் மைய அரசிடமிருந்து பெறப்படவில்லையென்றால் அவர்கள் விடுதலையாகி தலைமறைவாகிவிட ஏதுவாகும் என்ற நிலை மைய அரசுக்கு டெலக்ஸ் செய்தி மூலம் எடுத்துக் கூறப்பட்டு, அந்த மூன்று இளைஞர்களையும் நாடு கடத்துமாறு ஆணைகளை விரைவில் பிறப்பிக்குமாறு மைய அரசை அப்போதைய மாநில அரசு கோரியது.

வேதாரண்யம் காவல்துறையினர் கொடுத்த வழக்கு 28-12-73 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தது. 26-12-73 அன்று மைய உள்துறை அமைச்சகம் 1946 ஆம் ஆண்டு அயல்நாட்டினர் சட்டத்தின் கீழ் மேற்கூறிய மூன்று இளைஞர்களையும் நாடு கடத்தி ஆணைகள் பிறப்பித்தது. இதற்கிடையில் பாஸ்போர்ட் சட்டத்தை மீறியதற்காக அவர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்கில் திருத்துறைப்பூண்டி சப்-மாஜிஸ்ட்ரேட் அவர்கள் மூவரும் குற்றவாளிகள் எனத் தீர்மானித்து 10-1-74 அன்று அவர்களுக்கு தலா ஒரு மாதம் சிறை தண்டனை விதித்தார். அதுவரை குற்றவாளிகள் மூவரும் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர். தண்டனைக்காலம் முடிந்து 9-2-74 அன்று விடுதலைப்பெற்றார்கள். உடனடியாக அவர்கள் இலங்கை காவல்துறை இரகசிய புலனாய்வுத் துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு 10-2-74 அன்று மீனம்பாக்கம் விமான நிலையம் மூலம் இலங்கைக்கு கொண்டு போகப்பட்டார்கள். அவர்கள் இலங்கைக்கு கொண்டுபோகப்பட்டபின் அவர்கள் மீது அங்கு இலங்கை அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்ற விபரம் நம்மிடம் இல்லை.

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் சில நேரங்களில் பொதுப்பணிகளில் இருப்பவர்கள் சிலவற்றை செய்வதற்கு கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். அதற்கேற்ப அவைகள் நடைபெறும். இந்த அரசைப் பொறுத்தவரையில் நாங்கள் நடந்து கொண்டிருக்கிற விதமும் ஜாமினிலே விடுவதற்கோ, பாதுகாப்பாக வைத்து அவர்கள் உயிரையும் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கையை நாங்கள் எடுத்திருக்கிறோம் என்றால் எங்களுடைய நல்ல எண்ணத்திற்கு அடையாளமே தவிர பழி வாங்குவதற்கு அடையாளம் இல்லை. பிரதம அமைச்சருக்கு கடிதம் எழுதினோம். உங்களுக்குத் தெரியும். அனைத்துக் கட்சியினரும் அங்கே போய் பார்த்தோம். இறுதியாக அண்மையில் தேதியை குறிப்பிட்டு நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. கடைசியாக எழுதிய கடிதத்தில் என்ன எழுதினோம் என்றால், இந்திய வெளி நாட்டு அமைச்சகத்தின் மூலம் அங்கே இருக்கிற இலங்கை ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்து இந்த தண்டனையை ரத்து

செய்யவேண்டுமென்று அதிலே குறிப்பிட்டு இருந்தோம். அதை அனுப்பிய முறை நியாயமான முறை என்பதன் விளைவாக, அவர்கள் தாங்களே அதைப்பற்றி குறிப்பிடுவது போல கடிதம் எழுதி, அது அங்கே இருக்கிற தூதுவரிடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி இரண்டு நாட்களுக்கு முன் அரசுக்குக் கிடைத்திருக்கிறது என்ற நல்ல செய்தியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மைய அரசும் இதிலே அக்கறை காட்டியிருக்கிறது என்பதையும், அதற்கு இந்த தீர்மானம் இன்னும் உதவும் என்பதையும் எடுத்துக் காட்டி, இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்தவர்களை நான் பாராட்டி, ஆதரித்தவர்களுக்கு நன்றி சொல்லி, நான் என்னுடைய கருத்துக்களை வைத்ததற்காக நீங்கள் மகிழ்வீர்கள், உண்மை நிலைமையை நீங்கள் பாராட்டுவீர்கள் என்ற நம்பிக்கையோடு, நிச்சயமாக உங்கள் ஆதரவோடு அந்த உயிர்களை காப்பாற்றுவதற்கு எங்களால் இயன்ற அனைத்து வழிகளிலும் நாங்கள் பாடுபடுவோம் என்ற உத்தரவாதத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

''இலங்கையில் தமிழர் உரிமை காக்க போராடிய திரு. செ. யோகச்சந்திரன் என்ற குட்டிமணி, திரு. க. ஜெகநாதன் ஆகிய இரு தமிழ் இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு இருப்பதை ரத்து செய்ய, தலையிட்டு ஆவன செய்யும்படி இந்திய தலைமை அமைச்சருக்குப் பரிந்துரை செய்யும்படி, தமிழக அரசை இப்பேரவை வேண்டிக்கொள்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

8. அரசினர் தீர்மானங்கள்— தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசை மாற்றம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30(-)-ன் கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 10, அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்ற தலைப்பின் கீழ் வரிசை எண் (i) 1982-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 43/1982) என்ற சட்ட முன்வடிவு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேலவையில் இருப்பதன் காரணமாக பின்னர் எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும். மற்ற சட்டமுன்வடிவுகள் தொடர்ந்து வரிசைப்படி எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும.



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்— தொடர்ச்சி

(ஈ) கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1982.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்து, மேற்படி சட்டமுன்வடிவு @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

**திரு. அ. ரகுமான்கான்:** ஒரு ஒழுங்கு பிரச்சனை கிளப்ப விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவை நேற்று, அமைச்சர் வரவில்லையென்று விட்டு விட்டார்கள், அஜெண்டாபடி கேளிக்கை வரிச் சட்டம், அதற்குப் பிறகுதான் வரவேண்டும். ஆனால் உங்களுடைய சௌகரியத்திற்காக நாங்கள் தயாராக இல்லாத நிலையில்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேளிக்கை வரிச் சட்ட முன்வடிவை முதலில் எடுத்துக் கொள்வதற்காகத்தான் தீர்மானம் மொழியப்பெற்று அது நிறைவேறிவிட்டது. ஆகவே, அந்தப் பிரச்னை அதோடு முடிந்துவிட்டது. அத்தீர்மானத்தை அவையும் ஏற்றுக்கொண்டுவிட்டது.

**திரு. அ. ரகுமான்கான்:** நான் ஒரு டிஸ் ஆர்டரைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் சொல்வது தவறாக இருந்தால் உட்கார்ந்து விடுகிறேன். எனக்கு ஒரே ஒரு நிமிடம் அனுமதி கொடுங்கள்.

---

@ 1982 செப்டம்பர் 4 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[1982 செப்டம்பர் 10

(பிற்பகல் 12.50)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பிரச்சினை இல்லாமல் வேறு எந்தப் பிரச்னையாவது இருந்தால் பாயின்ட் ஆஃப் ஆர்டரை உறுப்பினர் எழுப்பலாம்.

திரு. அ. ரகுமான்கான்: நான் கேட்டு விடுகிறேன், அது தவறு என்றால் ஒத்துக் கொள்கிறேன். மன்றத்தினுடைய மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற பட்டியலின் அடிப்படையில் பார்த்தால் இந்தந்த மசோதாக்கள் எடுத்துக கொள்ளப்படுகின்றன என்ற வரையறையைக் கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பற்றிய மசோதா இருக்கிறது. அது நேற்றே வர வேண்டியது, அமைச்சர் வரவில்லை என்பதால் எடுத்துக் கொள்ளள்ப்படவில்லை. இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பற்றிள் மசோதா முன்னுரிமை பெற்றிருக்கிறது. அடுத்து தான் கேளிக்கை வரி மசோதா வருகிறது. முதலில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பற்றிய மசோதாவை எடுத்துக் கொள்ளாமல் கேளிக்கை வரி மசோதா எடுத்துக்கொள்ளப்படுகிறது. நாங்கள் அதற்கும் தயார் நிலையில்தான் இருக்கிறோம். அஜென்டாவை மாற்றுவதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. நேற்றைக்கும் மாற்றினீர்கள்; இன்றைக்கும் அமைச்சர் வரவில்லை என்பதற்காக மாற்றுகிறீர்கள். எந்த அமைச்சர் இருக்கிறாரோ அதை எடுத்துக்கொள்வது என்பது மாதிரி சொன்னால் உறுப்பினர்கள் எப்படி விவாதம் செய்வது? இப்பொழுது மின்துறை அமைச்சர் கூறியிருக்கிறார், அவருக்கு கேளிக்கை வரிச் சட்டம் செக்ஷன் 16 என்ன என்று தெரியுமா? அதுபற்றிய வாதத்திற்கு அவர்கள் தயாரா? அது அந்த அமைச்சருக்குத் தெரியாது. ஏனென்றால் அவர் அந்த இலாக்கா அமைச்சர் அல்ல.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, தங்கள் இரண்டு பிரச்னைகளைக் கவனிக்க வேண்டும். கேளிக்கை வரிச் சட்டத் திருத்தம் நேற்றைய தினமே நிகழ்ச்சி நிரலில் உள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அவகாசம் இல்லை என்று சொல்வது சரியல்ல.

இரண்டாவது, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திருத்த சட்டமுன்வடிவு பற்றி இந்த அவை தீர்மானித்து விட்டது. தீர்மானித்த பிறகு அவர்கள் பேசுகிறார்கள் என்றால் ஒருவேளை அவையிலே இருக்கிறார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை.

அடுத்து, அமைச்சருக்குத் தெரியுமா என்று கேட்டார்கள். அவர்கள் அப்படித்தான் கேட்பார்கள். அப்படி அவர்கள் கேட்பதற்குக் காரணம் அவர்கள் எல்லாம் தெரிந்தவர்கள்; எங்களுக்கு எதுவுமே தெரியாது.



1982 செப்டம்பர் 10] [திரு. ச. இராமச்சந்திரன்]

அது ஒருபுறமிருக்க, சட்டமுன்வடிவு எதைப்பற்றி வந்திருக்கிறது என்பதைத் தயவு செய்து வழக்கறிஞராகவும் உள்ள சட்டசபை உறுப்பினர் கொஞ்சம் கண்ணைத் திறந்து படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மெஜாரிட்டி இருக்கிறது என்பதற்காக இப்படி நிறைவேற்றி விடுவது ப்ராப்பரா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுபற்றிய தீர்மானம் கொண்டு வரப்பட்டு அது ஏகமனதாக நிறைவேற்றப் பட்டு விட்டது.

திரு. அ. ரகுமான்கான்: ஏகமனதாக அல்ல; ஏகமனதாக இருந்திருந்தால் நான் ஏன் எழுந்திருக்கிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஓட்டுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டு விட்ட பிறகு அது ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: நேற்றைக்கும் இன்றைக்கும் அமைச்சர் வரவில்லை என்று சொல்லப்படுகிறது....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுபற்றி ஏதாவது கூறவேண்டியதாயிருந்தால் அந்தத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் பெற்ற நேரத்திலேயே சொல்லியிருந்திருக்க வேண்டும். இப்பொழுது அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது. (குறுக்கீடு)

பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்து, மேற்படி சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்கிற தீர்மானத்தை மாண்புமிகு..........

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சருக்கு பதிலாக, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இதை முன்மொழிவதாக இருந்தது. அவர் இப்போது அவையில் இல்லாததால், இச்சட்ட முன்வடிவு மீதான ஆய்வு மாலையில் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் இப்படி அவையை அவமதிப்பது பற்றி தாங்கள்தான் ஒரு தீர்ப்பு கூறவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அவையை அவமதிப்பதாகக் கருதக்கூடாது. ஒரு அவைக்கு பதிலாக, இரு அவைகளிலும் விவாதங்கள் நடைபெறுவதால் ஏற்படுகிற கஷ்டங்களே தவிர, அவமதிப்பது என்று இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12.57-க்கு ஒத்தி வைக்கப் பெற்றது.





(மாலை 4-00)

மாலை 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(எ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவைக்கு கீழ்க்கண்ட இரண்டு உறுப்பினர்களின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளன.

1. திரு. செ. இராமலிங்கம்

2. திரு. த. வீராசாமி.

முறைப்படி நியமனம் செய்யப்படவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும், நிரப்பப்படவேண்டிய ஒற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் மேற்கண்ட இருவரும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் அறிவிக்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்."

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்துள்ள இந்தச் சட்டத்தினை நான் எதிர்க்கின்றேன் எதிர்ப்பதற்கான காரணங்களை இங்கே நான் கூற முற்படுகின்றேன். மதுவிலக்குத் திட்டத்தினை தளர்த்தவேண்டுமென்று அரசு அதிலே இருக்கக்கூடிய, வரக்கூடிய அபாயங்களை எல்லாம், முன்னெச்சரிக்கையாகவே நாங்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்து இருக்கின்றோம். அப்படி இருந்தபோதிலும், தமிழ்நாடு அரசாங்கம் 1937 ஆம் ஆண்டிலேயே வெள்ளைக்காரனால், இன்னும் சொல்லப்போனால் இராஜாஜி அவர்கள் மந்திரி சபையிலே இருந்த சமயத்திலே சட்டத்தினுடைய துணையைக் கொண்டு மது விலக்கினை தளர்த்துகின்ற முயற்சியிலே அரசாங்கம் ஈடுபட்டது. அது ஒரு காரணத்தின்பால் செய்யப்பட்டது. வேண்டுமென்றே ஒரு பாதுகாப்புக்காக செய்யப்பட்டிருக்கிறது என்று

** 1982 செப்டம்பர் 8-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1972 ஆம் ஆண்டில் இதே மன்றம் தமிழ்நாடு எக்ஸைஸ் ஆக்ட் என்று நிறைவேற்றி தமிழ்நாட்டிலே மதுவிலக்கு ஏறத்தாழ 2 ஆண்டு காலம் அன்றைய தினம் ஒத்திவைக்கப்பட்டது. அப்படி ஒத்திவைக்கப்பட்ட சட்டம் இன்னும் அமலில் இருக்கிறது. இன்னும் ரிப்பீல் ஆகவில்லை. அதே சமயத்தில் இன்றைக்கு இந்தத் தமிழ்நாடு புரோகிபிஷன் ஆக்ட் 1937-ன்படி கொண்டுவரவேண்டுமென்று எண்ணி அதன்கீழ் இந்த சட்டங்களையெல்லாம் கொண்டுவர வேண்டுமென்றால், தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு சட்டத்திலே எக்ஸைஸ் ஆக்ட்டுக்கு அரசியல் சட்டத்தினுடைய பாதுகாப்பு கிடையாது.

ஆனால், இது டைரக்டிவ் பிரின்சிபில்—ஆர்டிகிள் 47-ன் கீழ் வருகிற காரணத்தால் மக்கள் உடல் நலத்திற்கும் மற்றவைகளுக்கும் பாதுகாப்பு செய்வதற்கு அரசாங்கம் சட்டங்களை இயற்றலாம். இவைகளுக்கெல்லாம் அரசியல் சட்டத்தில் பாதுகாப்பு இருக்கிறது என்ற முறையிலே ஆர்டிகிள் 47-ன் கீழ் வருகின்ற காரணத்தாலே அதன்கீழே சென்றால் அரசாங்கம் எடுக்கக்கூடிய முடிவுகளை எல்லாம் கோர்ட்டிலோ மற்ற இடங்களிலோ செல்லத் தகாததாக ஆகாது என்ற காரண—காரியத்திற்காக இந்த அரசாங்கம் வேண்டுமென்றே 1972 ஆம் வருஷத்திலே இயற்றப்பட்ட சட்டம் நிறைவேற்றப்பட்ட சட்டம் இன்னும் ஆயுளில் இருக்கின்ற நிலையிலே தமிழ்நாடு அரசாங்கம் வேண்டுமென்றே இந்த 1937 ஆக்ட்டுக்கு ஒரு அமண்ட்மெண்டு கொண்டு வந்து மதுவிலக்கினை ஒத்தி வைத்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு ஒத்தி வைக்கப் பட்டுள்ளது என்பது வேறு. மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிறது என்பது வேறு, உரிமம் பெற்று மது அருந்தலாம் என்ற நடைமுறை இருக்கிறபோது, உரிமம் பெறாமல் மது அருந்துகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். உரிமம் இல்லாமல் மது அருந்துவது குற்றம் தான்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: விளக்கத்திற்கு நன்றி. நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற சமயத்திலே கொண்டுவரப்பட்ட சட்டம், அமல்படுத்துகின்றபோது, முழுவதும் மதுவிலக்கை ஒத்திவைத்த சமயத்திலே தமிழ்நாட்டிலே 5 ஆயிரம் சாராயக் கடைகள். இப்போது பெர்மிட் வாங்கி இன்னும் சொல்லப்போனால் மதுவிலக்கு இன்னும் அமுலிலே இருக்கிறது என்று சொல்லி, ஒரு 10 ஆயிரம் சாராயக் கடைகள், அதற்கு கிளைக் கடைகள் 5 ஆயிரம், ஆக ஒரு 15 ஆயிரம் கடைகள், பிறகு ஒரு 1,200 அல்லது 1,300 பாரின் விஸ்கி போன்ற மது வகைகள் விற்கின்ற கடைகள் அப்போது இருந்ததே. அதை முழுவதும் ஒத்திவைத்த சமயத்திலே, ஆனால் எப்போது மதுவிலக்கு இன்னும் அமுலிலே இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே தற்சமயம் ஒரு 6 ஆயிரம் 7 ஆயிரம் கடைகள் இருக்கின்றன





பெர்மிட் வைத்துக் கொண்டுதான் எல்லோரும் அருந்துகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் எங்களை நம்பவேண்டுமென்று சொன்னால் நம்புகிறோம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 5 அயிரம் கடைகள் அப்போது, 10 ஆயிரம் கடைகள் தற்போது என்று சொல்கிறார்கள். அப்போது 5 ஆயிரம் உரிமங்கள் வழங்கப்பட்டுவிட்டு, ஒரு மெயின் கடைக்கு பல கிளைக் கடைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. தற்போது அது இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: நம்முடைய அமைச்சர் அவர்கள் மதுவிலக்கு இன்னும் தொடர்ந்து அமல்படுத்தப்படுகிறது என்று தமிழ்நாட்டு மக்களுக்கு சொல்லுகின்ற சமயத்தில் அதைப்பற்றி எல்லா மக்களும் முடிவு செய்வார்கள். ஏனென்றால் எல்லோரும் கையிலே பெர்மிட்டை எடுத்துக்கொண்டுதான் கடைக்குப் போகிறார்கள், என்டார்ஸ்மென்ட் போட்டதற்குப் பிறகுதான், பாட்டிலைக் கொடுக்கிறார்கள், அல்லது சாராயத்தைக் கொடுக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டுதான் அருந்துகிறார்கள், அந்த பெர்மிட்டைக் கையிலே வைத்துக்கொண்டுதான் வீட்டிற்கு வருகிறார்கள் என்று அரசாங்கம் சொன்னால், தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய மக்கள், அரசாங்கம் சொல்வதிலே எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்று புரிந்து கொள்வார்கள். அதற்கு மேலே நான் போகவில்லை. ஆகையினாலே, இந்தச் சட்டத் திருத்தம், அரசியல் சட்டத்திலே இருக்கக்கூடிய ஆர்ட்டிகிள் 47-ன் கீழ் இருக்கக்கூடிய பாதுகாப்பு கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்திலேதான் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்று சொல்வதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உரிமை உண்டு. அதை நாங்கள் இங்கே சொல்கிறோம். இந்த மதுவிலக்கு இன்னும் சொல்லப்போனால் ஓரளவிற்கு தளர்த்தப்படுகிறது என்று சொன்ன சமயத்திலேகூட நாங்கள் இதிலே இருக்கக்கூடிய ஆபத்தை உணர்ந்தோம். அப்படி உணர்ந்ததன் காரணத்தாலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லியது. ஏனென்றால் இந்த மதுக்கடைகளைத் திறப்பதற்கு முன்னதாக அது எப்படி தரப்படும், பாட்டிலிலே அடைத்து, காத்து புகாமல், வெளியிலேயிருந்து ஏதும் உள்ளே கலக்காமல் அருமையாக, உயர்ந்த சரக்காக தரப்போகிறோம் என்று இப்படி எல்லாம் திட்டம் போட்ட சமயத்திலே சில நடைமுறைகளை எல்லாம் பார்த்தோம். இதிலே பல தவறுகள் பல ஒழுங்கீனங்கள், பல ஊழல்கள் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தால்தான் அரசாங்கத்திற்கு முன்னெச்சரிக்கையாக நாங்கள் சொன்னோம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஆகையால் நாங்கள் 17–5–81 அன்று பொதுக்குழுவிலே போட்ட தீர்மானம் பிரகாரம், கமிஷனர் ஆஃப் புரோகிபிஷன் அன்ட் எக்சைஸ் அவர்கள் இடத்திலே நேரடியாக நாங்கள் சந்தித்து,

[1982 செப்டம்பர் 10

We wish to point out that both blending as well as whole sale be entrusted to the Co-operative Sugar Mills, as in Kerala or to Industrial undertakings like TANSI OR SIDCO since the process involved is simple and the service of the Civil Supplies Corporation may be utilised. Otherwise, it will lead to corruption.

என்ற தவறு நடக்கும் என்று அப்போதே எச்சரித்திருந்தோம், * * *

(மாலை 4—10)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே * * அந்த மேட்டர் சப்-ஜுடிஸ், காரணம், அது குறித்த வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அவை பென்டிங்காக இருப்பதால், தற்போது அதைப் பற்றிப் பேசுவது சப்-ஜுடிஸ் ஆகும். * * * எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டமுன் வடிவு மீது மட்டும் பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்ற விவரங்களைப் பேசுவது சரியாக இருக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பிரச்னை 'சப்-ஜுடிஸ்' என்று சொல்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அது குறித்துப் பேச வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு) ஒரு வழக்கு நீதிமன்றத்தில் முன் இருந்தாலும், கமிஷன் ஆப் என்கொயரி முன் இருந்தாலும், அது சப்ஜுடிஸ் தான். ஆகவே, அதைப் பற்றி விளக்கம் அளிக்க வேண்டாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: இதே மன்றத்தில் ஏற்கனவே இது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருக்கிறார்கள், * *

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தருகின்ற தகவல்கள் 'சப்-ஜுடிஸ்' என்பதால், அது தங்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. ஆகவே, தாங்கள் அதன் மீது தீர்ப்பு வழங்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சப்-ஜுடிஸ் மேட்டர் அவையில் பேசக் கூடாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, அது குறித்து விளக்கம் தேவையில்லை,

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைப் பற்றிய விவாதம் தற்போது தேவையில்லை. அது குறித்த தீர்ப்புகள் ஏற்கனவே இந்த அவையில் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன சப்-ஜுடிஸ் பற்றிய விஷயங்களை இந்த அவையில் பேசக் கூடாது,

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1982 செப்டம்பர் 10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன், 'ஷெக்தார் அன்ட் கவுல்' அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். கமிஷன் ஆப் என்கொயரியில் இருக்கும் ஒரு விஷயம் குறித்து பேசக்கூடாது. அதுவும் 'சப்-ஜுடிஸ்' தான், அதைப் போலவே, சட்டமன்ற விதிகளிலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதை இந்த மன்றமும் அறியும், இந்த விஷயத்தில்

two criminal cases are pending before the judicial forum. The Rule 90 of the Assembly Rules also clearly indicates that such matters become matters of Sub Judice.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அந்த விஷயத்தை விட்டுவிட்டு, பேசவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: குற்றப்பத்திரிகை கொடுக்கவில்லை. அதனால் பேசலாம், பேச வேண்டாம் என்றால் சொல்லி விடுங்கள் போய் விடுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு சப்ஜெக்ட் ஒரு கமிஷன் முன்னால் அல்லது ஒரு கோர்ட் முன்னால் இருந்தால் அதைப்பற்றிப் பேசக் கூடாது என்பது எல்லோருக்கும் தெரியும்,

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: நான் இங்கே சொல்ல விரும்புவதெல்லாம் எவ்வளவு தவறுகள் இப்படி எல்லாம் நடைபெறுகின்றன என்பதுதான் * *

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, ஒரு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு

and it is pending 'The moment a complaint is filed in a Court it becomes sub-judice.

என்று தீர்ப்புகள் இருக்கின்றன, ஏற்கெனவே அவை இந்த அவையிலும் வாசித்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: துணைத் தலைவரவர்களே, * * *

அலாவுதீன் அற்புத விளக்கா வைத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அதுதான் சப்-ஜுடிஸ், வழக்கு இருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: துணைத் தலைவரவர்களே,, நாங்கள் பேசவேண்டாம் என்றால் சொல்லிவிடுங்கள். விட்டு விடுகிறோம். இப்படி தடுப்பது சரியல்ல.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாம் சட்ட மற்ற விதி வைத்திருக்கிறோம். அந்த விதிகளுக்கு உட்பட்டு தான் பேச முடியும். அது உங்களுக்குத் தெரியாதது அல்ல. ஏதாவது ஒரு கமிஷன் முன்னால் ஒரு சப்ஜெக்ட் இருந்தால் அல்லது நீதி மன்றத்தில் இருந்தால் அதுபற்றி இங்கே பேச முடியாது. நம்முடைய விதியைத் திருத்தினால் அதற்குப் பிறகு அது பற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, 'நாங்கள் பேச வேண்டாம் என்று சொல்லி விட்டால் போய்விடுகிறோம்' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். பேசவேண்டும் என்பதற்காகத் தான் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. கொண்டுவருவதற்கான நோக்கம் அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை கூட்ட வேண்டும், அல்லது குறைக்க வேண்டுமென்று தாராளமாகச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்; சப்ஜெக்டுக்கு உட்பட்டு பேசுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: நான் இந்த மன்றத்திலே குற்றஞ் சாட்ட விரும்புகிறேன். * * *
என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; அதைப் பற்றி பேச வேண்டாம் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அதைப் பற்றி விரிவாகப் பேசி விட்டார்கள் அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை விட்டுவிடலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை நான் மீண்டும் சொல்ல விரும்பவில்லை. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் பேசத் தொடங்கியதிலிருந்து இப்போது நடந்த விவாதம் வரையில் அனைத்தையும் நீக்கி விட உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, எல்லாவற்றையும் சகட்டுமேனியாக நீக்கி விடுவது சரியல்ல. குறிப்பிட்ட பகுதிகளை நீக்கினால் போதும் என்று கருதுகிறேன்.

மாலை (4-20)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கடைசியாக 5 நிமிடங்கள் பேசியவை நீக்கப்படும். திரு. கிருஷ்ணமூர்த்தி தொடர்ந்து பேசட்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே,



மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியதைப் போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சியூட்டபிளிட்டி என்ற அந்த வார்த்தைக்கான எண்ணம் ஏதோ இந்த ஆட்சியில் தான் திடீரென்று தோன்றி போட்டிருக்கிற மாதிரி பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது அவ்வளவு சரியல்ல. சியூட்டபிளிட்டி என்ற சொல், இந்த ஆக்டைப் பொறுத்த வரையில், இதனுடைய பேரண்ட் ஆக்டில் 20 ஏ பிரிவில் இருக்கிறது. ஏற்கெனவே இருந்த தமிழ்நாடு புரொஹிபிஷன் ஆக்ட் விதிகளின் கீழ் நடைமுறையில் கையாளப்பட்டன. அப்படி இந்த விதிகள் கையாளப்பட்டதை—பீயிங் எக்சிகியூட்டிவ் ஆர்டராக மட்டும் இருந்த காரணத்தால், லெஜிஸ்லேடிவ் மூலமாக சட்டத்திலே இடம் பெறவேண்டும் என்ற காரணத்தால் இது தற்போது சட்டத்திலே இடம் பெற்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. சட்டத்திலேயே ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ் பகுதியிலேயே இறுதி பக்கத்திலே இது பற்றி தெளிவாகச் சொடுக்கப்பட்டிருக்கிறது.

'Though these guidelines have always been the basis for deciding the suitability of an applicant by the competent authority.........'
என்று தெளிவாக இருக்கிறது. எனவே மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல போட்டிருக்கும் 4, 5 கைட் லைன்கள் போதாது, இன்னும் கொண்டு வாருங்கள் என்று சொல்லுங்கள். அல்லது உள்ளதிலேயே ஏதாவது மாற்றங்கள் சொல்லுங்கள், அதை விட்டு விட்டு சம்பந்தம் இல்லாத சப்ஜெக்டைப்பற்றி பேச வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

'Past matter cannot be discussed here because that is a subject matter of enquiry.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த செய்திகளை நான் இங்கே சொல்லலாம். அதற்கு ரைட்ஸ் இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தற்போது சொன்னதையும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுகிறேன். ஏனெனில் கிரிமினல் வழக்கு 2 பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. வழக்குகள் வழக்குமன்றத்தில் பெண்டிங்காக இருக்கிறது. குறிப்பிட்ட வழக்குகள் நீதிமன்றத்திலே இருக்கிறபோது,

*When it is adjudicated before a judicial forum. it becomes matter of sub judice and the Assembly Rule 90 also clearly indicates that whenever a matter is pending before a Court or Enquiry Commission it becomes a matter of sub judice, என்று நமது விதிகளிலே தெளிவாகப் போடப்பட்டிருக்கிறது.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டமும் விதிகளும், நீதிமன்ற விசாரணைக்குள்ளே இருக்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது

கின்ற பிரச்னைகளுக்கு உள்ளீட்டாக எதையும் பேசக் கூடாது என்பது. இது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறை மரபாகும், ஆனால் வர இருக்கிற சட்டத்திலே வருகிற

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்வபற்றது.

ஒரு சொல்லிலே ஏற்படக்கூடிய விளைவுகளை, அந்த சொல் அந்த இடத்திலே வருகிற காரணத்தாலே ஏற்படுத்தக் கூடிய விளைவுகளை எடுத்துக் காட்டுகிற போது, பேசக் கூடாது என்றால், எப்படிப்பேச முடியும்?

ஆனால் * * * *
கருதப்படக் கூடியது பற்றி சட்டமன்றத்திலே பேசக்கூடாது என்றால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகின்றபோது அதைப்பற்றிய உண்மைகளை விளக்க வாய்ப்பு இல்லாமல் போகின்ற ஒரு சூழ்நிலை உருவாகின்றது என்று கருத வேண்டிய நிலைமை ஏற்படும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கூறியதற்கு விளக்கம் ரூல் 5-லேயே இருக்கின்றது. 5 ஏ—தெளிவாகச் சொல்கின்றது.

'The matters to be taken into consideration by the Licensing Authority'.

அடுத்து பினாமியா, இல்லையா என்பது அடுத்த விதியில் ஏற்கெனவே இருக்கிறது. 5 பி-யில்

Whether the application made is bona fide or not or made on beha[illegible] of any other person.

என்று ஏற்கனவே விதியில் இருக்கின்றது. ஏற்கன[illegible] 5-வது விதியில் இருப்பதைப் பேரன்ட் ஆக்டிலே கொ[illegible] வருகிறார்கள். ஆகவே ஏற்கனவே விதியில் இருப்ப[illegible] காறும் கடைப்பிடிக்கப்படுவதுதான் சட்டத்திற்குக் கொ[illegible] வரப்படுகின்றது என்றுதான் நான் சொன்னேன்.

திரு. க. அன்பழகன்: பொதுவாக எப்போதும் ஒரு க[illegible] சொல்லப்படுகின்ற காரணத்தால் இன்னொரு கருத்தும் [illegible] பெறும். இந்தச் சட்டத்திலே பார்க்கின்றபோது பின[illegible] அல்லவா என்பதைப் பார்ப்பதற்கு விதி இருக்கின்றது [illegible] சொல்கின்றபோது ஏற்கனவே கடைப்பிடிக்கப்பட்ட[illegible] போது சட்டத்திலே கொண்டு வருகிறோம் என்று [illegible] அவர்கள் சொல்கிறார்கள், * *

எனவே அது சப்ஜுடிஸ் அல்ல. அது சட்டத்தின் [illegible] யிலே பேசப்பட்டது என்றுதான் வரும். எனவே [illegible] வகையிலே பேசுவதற்குத் தடை இருக்கக் கூடாது என்[illegible] வலியுறுத்த விரும்புகிறேன்.

***) மாண்புமிகு பேரவை துணைத் தலைவரி[illegible] ஆணைக்கு அகற்றப்பட்டது [illegible]



மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகின்றபோது *
ஆனால், ஏற்கெனவே விதியில்

5-A matters to be taken into considaration by the Licensing authority.

என்ன என்பது 5-வது விதியில் இருக்கின்றது. 1937—ஆம் ஆண்டு பழைய சட்டத்திலும் 20 ஏ பிரிவின் கீழ் சூட்டபிலிட்டி என்பது பற்றியும் அதையொட்டிய வரையறையும் இருக்கின்றது. எனவே ஏற்கெனவே விதியில் இருப்பதை பேரண்ட் ஆக்டிலே கொண்டு வருவதற்காகத்தான் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்படுகின்றது. மற்றபடி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

** ** * * *

எனவேதான் சப்-ஜுடீஸ் என்று சொல்கிறேன். சட்டமன்ற விதிகள் பல இருக்கின்றன. நான் இதைச் சொல்லவில்லை' சட்டமன்ற விதிகள் சொல்கின்றன. எனவே துணைத் தலைவர் அவர்கள் இது பற்றிய தீர்ப்பினை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியது கூட பல வகையில் சப்ஜுடீஸ்தான்.

திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, நான் பேசியதையும் சபைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: எந்த ஒரு பிரச்சினை நீதிமன்றத்திலே விசாரிக்கப்பட வேண்டிய கட்டத்திலே இருக்கின்றதோ அந்த பிரச்சினையைப் * *

* * *

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் சொன்னதைப்போல் நான் பேசியதையும் அவைக்குறிப்பிலே இருந்து * * * நீக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(மாலை 4—30)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: இது அவைக்குத் தெரிந்த ஒரு விஷயம்தான். நீதி மன்றத்தின் முன், கமிஷன் முன் இது சப்ஜுடிஸ்தான்... (குறுக்கீடு) இதற்கு முன் பல பில்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இந்த மாதிரியான பிரச்னையெல்லாம் அப்போது வரவில்லை. சப்ஜுடிஸ் மாட்டர் ரெயிஸ் பண்ணவில்லை. ஆகவே சப்ஜுடிஸ் மாட்டரை ரெயிஸ் பண்ணாதீர்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசியதையும், பேராசிரியர் அவர்கள் பேசியதையும், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னால் பேசியதையும் எல்லாமே நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, சப்ஜுடிஸ் என்பதற்கு ஒரு விளக்கம் தருகிறேன். கிராம அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டபோது அதைப்பற்றி இங்கே பேசிய போது வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கத்தான் செய்தது. ஆக நீதி மன்றத்தில் இருப்பதனாலேயே, இந்த அம்சங்கள் அனைத்தும் விவாதிக்க கூடாது என்று சொல்வதைவிட, அதற்குள்ளே போகாமல் ஜெனரலாக, 'சூடபிலிடி ஆப் தி அப்ளிகண்ட்' என்ற பிரச்னை வருகிற போது பேராசிரியர் அவர்கள் எடுத்து சொல்லியதைப் போல, இதுவே நீதிமன்றத்தில் பிரச்சினைக்குரியதாக இருக்கிறது. சப்ஜுடிஸ் என்று சொன்னால், அரசாங்கம் இந்த பில்லை வாபஸ் வாங்குவதுதான் நியாயம். சப்ஜுடிசுக்கு உள்ளே போகாமல், மேலெழுந்தவாரியாக இதைப் பற்றி விவாதிக்கலாம், கிராம அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டு, பிரச்னை வந்தபோது, கோர்டிலே இருந்தபோதும் இது இங்கே விவாதிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: எந்த மேட்டர் கோர்டிலே இருந்தாலும், அதற்குள்ளே போகாமல் பேசியிருக்கிறோம். (குறுக்கீடு)

* * *

சப்ஜுடிஸ் ஆக உள்ளதை விட்டு விடவும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: திரு பொன்னையன் அவர்கள் சட்டம் படித்தவர்: நானும் சட்டம் படித்திருக்கிறேன்: நீங்களும் சட்டம் படித்திருக்கிறீர்கள் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: எந்த இரண்டு வக்கீல்களும் ஒன்றாக போக மாட்டார்கள். சப்ஜுடிஸ் மாட்டர் ஒன்றும் வர வேண்டாம். வேறு பிரச்னையைப் பற்றிப் பேசுங்கள்,

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: நான் சொல்வதெல்லாம், இந்த அரசாங்கம், இந்த மதுவிலக்குத் திட்டத்தை அமுல்படுத்துவதாகச் சொல்லுகிறார்கள். தவறு இருந்தால், அந்தத் தவறை திருத்திக் கொள்ளுங்கள். பேராசிரியர் அவர்கள் எடுத்துச் சொன்ன தவறைத் திருத்திக் கொள்ளாமல் இருந்தால், இப்படி தொடர்ந்து நடத்தினால் நாங்கள் என்ன செய்வது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று சொல்லுகிறார் என்பதைச் சொல்லட்டும், அரசு அதை கவனிக்கும்

திரு, வி, கிருஷ்ணமூர்த்தி: * * *
* * *

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்: * *
* * *

வெளியிலே ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பார்கள்:

திரு. வி, கிருஷ்ணமூர்த்தி: எங்களுக்குத் தெரிந்ததை நாங்கள் சொல்லக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *
* * *

இது வேண்டாம், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கடைசியாக பேசியதையெல்லாம் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு, வி. கிருஷ்ணமூர்த்தி: நாம் பேசுவதை எல்லோரும் கேட்கிறார்கள், நீக்கிவிட்டால் மட்டும் போதாது, சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி: * *
அன்றைக்கு நானே இந்த சட்ட சபையில் பேசியிருக்கிறேன் வருவாய்த் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். டி, எஸ். அவர்கள்
* * *
பதில் சொன்னார்கள். அது பேசப்பட்டு வந்த ஒன்றாகும்.

மாண்புமிகு துணைத் தலைவர்: சப்ஜுடிஸ் காரியங்களைப் பற்றி பேச வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: இதில் சப்ஜுடிஸ் இல்லை.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்ப விரும்புகிறேன். பேராசிரியர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல நீங்கள் அதை விளக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மசோதாவில் சப்ஜுடிஸ் இல்லையா? நான் question of law வில் கேட்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் : இந்தச் சட்டத்தை இயற்றுகின்ற உரிமை அவைக்கு உண்டு. இதில் யாரும் தலைஇட முடியாது. கொண்டு வருகிற சட்டத்தை வேண்டுமானால் நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லலாம். இந்த அவையில் சட்டம் கொண்டு வருவதை யாரும் தடுக்கமுடியாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த சட்டத் திருத்தத்தை பொறுத்த வரையில் அப்ஜக்ட்டிவ்-ஆக பார்த்தால் பிரச்சனை வராது. உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இதை சப்ஜெக்ட்டிவ் ஆக பார்க்கிற காரணத்தால் சில கருத்துக்கள் ஏற்படுகின்றன. ஆனால் இந்த கருத்துக்களின் அடிப்படையில் பினாமி பற்றி குறிப்பிட்டால் எப்படி அது பொருத்தமாக இருக்க முடியும்? ஏன் என்றால் அதை எல்லாம் பற்றித்தான் கமிஷன் போட்டிருக்கிறோம். அதைப்பற்றி சொன்னதால்தான் இந்தப் பிரச்சனை எழுகிறது. ஏற்கனவே விதிமுறைகள் போடப் பட்டிருக்கின்றன. அதை மாற்றுவதற்குச் சர்க்காருக்கு உரிமை உண்டு. அதைச் சட்டம் ஆக்குவதற்கும் சர்க்காருக்கு உரிமை உண்டு. அது இந்தச் சட்டமன்றத்திற்கு வருகிறபோது அதை வரவேற்பதுதான் சரியாக இருக்கும். எடுத்த எடுப்பிலேயே எதிர்ப்பது சரியல்ல. அப்ஜெக்ட்டிவ் ஆக எப்படி எப்படி இருந்தால் நல்லது, எப்படி எப்படி இல்லாவிட்டால் என்ன என்ன விளைவுகள் வரும் என்று சொல்வது தான் சரியாக இருக்கும் அதை விடுத்து நடந்து விட்டவைகளைப் பற்றிப் பேசுவதால் தான் பிரச்சனைகள் வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டம் இயற்ற இந்த அவைக்கு முழு உரிமை இருக்கிறது. அதை யாரும் தடுக்க முடியாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் எடுத்துச் சொல்லக்கூடிய * *

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவைக்குறிப்பிலிருந்து திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசியதை நீக்கி உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசிய அந்த வார்த்தைகளை அவை குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்திரவிடுகிறேன்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு திருத்தமோ, ஒரு சட்டமோ கொண்டு வரப்படும்போது அது வராத நிலையில் என்ன என்ன தவறுகள் ஏற்பட்டன என்பதை விளக்கிச் சொல்ல இந்த அவையிலுள்ள உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் ஏற்கனவே வந்திருக்கிறது. ஆனால் வழக்கு மன்றத்தில் இருக்கிறது. அந்தச் சட்டத்தைப் பற்றி பேசுகிறபோது அந்த சட்டம் வராத காரணத்தால் ஏற்பட்டுவிட்ட கேடுபாடுகளை விளக்கி விட்டுத் தான் அதை சட்டமாக தருகிறோம் அல்லது எதிர்க்கிறோம் என்று சொல்கிறபோது அவற்றை விளக்கிச் சொல்வது உறுப்பினர்களுடைய கடமை. இப்போது இந்த திருத்தம் வருகிறபோது, இந்தத் திருத்தம் கடைப்பிடிக்கப் பட்டிருந்ததால் என்னென்ன கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை விளக்குவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை உண்டா இல்லையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நன்றாக அறிவார்கள். குறைகள் என்பதற்கும் குற்றச்சாட்டுகள் என்பதற்கும் உள்ள வேறுபாடு *இந்த வேறுபாடு தெரியாமல் போவதால் தான் இப்படிப்பட்ட பிரச்சனைகள் வருகின்றன.

டாக்டர் மு. கருணாநிதி: நான் இப்போது சொல்லப் *போவதை துணைத்தலைவர் அவர்கள் அவை குறிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4.40)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். குறைகள் என்று சொல்வதுதான் இப்போது குற்றச்சாட்டுகள் என்று விசாரணைக் கமிஷன் முன்னாலே இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்கிணங்க அது நீக்கப்படுகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: இந்தச் சட்டத்தினை குறை கூற விரும்புவதன் நோக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இதிலே 'டி' கிளாஸில் என்ன போட்டிருக்கிறார்கள் என்றால் "(d) Whether the applicant carries on any other business which is likely to prevent him from giving his due attention to the purpose for which the licence or permit under this Act is sought for; என்று போட்டிருக்கிறார்கள். இதை இப்போது ஆக்டிலே

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1982 செப்டம்பர் 10

கொண்டு வருகிறார்கள். ஏற்கெனவே ஆக்டிலே கமிஷனர் தன்னுடைய டிஸ்கிரிஷனிலே வைத்துக் கொண்டிருந்தார். கமிஷனர் செய்ததிலே மெரிட் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்து அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்தின்கீழ் முடிவு செய்தது. அரசாங்கம் சொல்வது சரியல்ல, கமிஷனர் சொல்வது சரியல்ல என்று சம்பந்தப்பட்டவர்கள் கோர்டிற்குச்சென்றார்கள். பெரியார் மாவட்டத்திலே வாடியப்பன் என்ற ஒருவர் தவறு நடந்து இருக்கிறது என்று சொல்லி கோர்ட்டிற்குப் போனார். அதைப்போலவே திருநெல்வேலி மாவட்டத்திலே ராமசாமி என்ற எஞ்ஜினியரிங் கான்ட்ராக்டர் ஒருவரும், செங்கொடி என்பவரும் இரண்டு பங்குதாரர்களாக அவர்கள் இருக்கிறார்கள். ஒருவர் அராக் ஹோல்சேல் கேட்டார், இன்னொருவர் ஐ.எம்.எப்.எல். ஹோல்சேல் கேட்டார். அவரைக் காட்டி இவருக்குக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள், இவரைக் காட்டி அவருக்கு செங்கொடிக்கு—கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். இரண்டு பேர்களும்—இராமசாமி, செங்கொடி ஆகிய இருவருமே—கோர்ட்டிற்குச் சென்றார்கள். அந்த இரண்டு பேர்களுக்கும் சாதகமாக கோர்ட்டு தீர்ப்பு அளித்தது. அதற்குப் பிறகு அரசாங்கம் அப்பீல் செய்தது. ஜஸ்டிஸ் கோகுலகிருஷ்ணன் அவர்கள் இருக்கின்ற பெஞ்சுக்கு அரசாங்கம் அப்பீல் செய்தார்கள். அந்த ஜட்ஜ்மெண்டிலே என்ன சொல்கிறார்கள் என்றால்—நான் அதை ஏற்கெனவே தங்களிடம் காட்டிவிட்டேன், அந்த டிஸ்கிரிஷனை அரசாங்கம், கமிஷனர் முடிவு செய்வது சரியல்ல என்று அந்த பெஞ்ச் முடிவு செய்துவிட்ட காரணத்தினால்—பெரியார் ஜில்லாவிலே ஒரு வருஷத்திற்கு அராக்கும், திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு வருஷத்திற்கு ஐ.எம்.எப்.எல்-லும் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. அந்த பெஞ்ச் டெஸிஷனில்

"Unless a business comes into conflict with the one licensed under these rules, it cannot be said that it may not be possible for the party to devote full attention to the wholsale business of arrack in Periyar district. It is common knowledge that many of the businessmen dealing in wholesale business do not confine themselves to a single trade alone and they are able to manage such businesses. In the absence of any prohibition in the rules for the recipient of the licences to do any other business other than the one licensed under the rules, we do not think it is correct to state that the money lending business run by the respondent would disable him to devote full attention to the wholesale business in arrack.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதில் "due attention" என இருக்கிறது. ஒருவர் 7 பிஸினஸ், 8 பிஸினஸ், 5 பிஸினஸ்



1982 செப்டம்பர் 10] [திரு. சி. பொன்னையன்]

வைத்துக்கொண்டும் கூட, If he is capable of devoting duly to the management and administration of a business, there won't be a bar. That is why the words "due attention" have been included therein.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அரசாங்கத்தினுடைய விருப்பத்திற்கு விரோதமாக 3 பேர்களுக்கு தரவேண்டுமென்று ஹைக்கோர்ட்டு சொன்னதால் இங்கே இதைக் கொண்டு வருகிறார்கள் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சூட்டபிலிட்டி ஆப் தி அப்ளிகேன்ட்ஸ்
சம்பந்தமாக சில திருத்தங்களை கொண்டு வருவதற்காக இந்த
மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் லைசென்ஸ்
வழங்குவதிலே ஏற்பட்டிருக்கிற பிரச்னை மட்டும் இதில் இருப்ப
தாக தெரியவில்லை. ஏற்கனவே லைசென்ஸ் கொடுக்கப்பட்டி
ருக்கிறவர்களுக்கு இன்று எப்படி சாராயம் விற்கப்படுகிறது
என்பதை அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்பு
கிறேன். அரசு விநியோகம் செய்கிற சாராயத்தின் குவாலிட்டி
சரியாக இல்லை என்றும், அதனுடைய விலை அதிகமாக
இருக்கிறது என்றும் லைசென்ஸ் எடுத்திருக்கிறவர்களே கள்ளச்
சாராயத்தை காய்ச்சி அவர்களுடைய ஷாப்புகளில் விற்கக்கூடிய
நிலை இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக
மக்களிடத்தில் நோய்கள் ஏற்பட வழி ஏற்பட்டு விடுகிறது.
பலர் இறந்து போவதற்குமான நிலை தமிழகத்திலே ஏற்பட்டுக்
கொண்டிருக்கிறது என்பதை பத்திரிகை வாயிலாக பார்க்
கிறோம். சமீபத்திலே கொச்சி என்ற இடத்தில் சாராய
வியாபாரிகள் சாராயத்தில் கெமிக்கல்ஸ் கலந்து விற்றதால்
மிகப்பெரிய விபத்து ஏற்பட்டு உயிர்ச்சேதமும் ஏற்பட்டுள்ளது.
லைசென்ஸ் கொடுக்கக்கூடிய நிலையில் இந்த திருத்தங்களைக்
கொண்டு வந்து பிரச்னைகளை போக்குவது மட்டுமல்லாமல்,
சாராயம் உபயோகப்படுத்துகிறவர்களின் ஹெல்த் கண்டிஷன்
களையும் நல்லமுறையில் கணக்கில் எடுத்து வியாபாரம் செய்கிற
நிலையை தமிழகத்தில் ஏற்படுத்துவதற்கு இந்த அரசிற்கு
பொறுப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
அந்த முறையில் லைசென்ஸ் வழங்குவதற்கு வழிவகை செய்ய
வேண்டுமென்று வலியுறுத்துவதற்கு இந்த நேரத்தை உபயோகப்
படுத்திக்கொள்கிறேன்.

மற்றொரு பிரச்னை. சாராயக் கடைகள் வைப்பதற்கு
தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற இடங்கள் பொது இடங்களாக
இருக்கக் கூடாது என்று ஏற்கனவே பல மாண்புமிகு
உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும்
இன்று பல இடங்களில் பாக்டரிகளுக்கு பக்கத்திலே, பஸ்

ஸ்டாண்டுகளுக்கு பக்கத்திலே, மருந்துவ மனைகளுக்கு பக்கத்திலே, பள்ளிக்கூடங்களுக்குப் பக்கத்திலே சாராயக்கடைகள் கள்ளுக்கடைகள் வைப்பதற்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. லைசென்ஸ் எடுத்திருக்கிறவர்கள் கூட பிரான்ஞ்சுகள் என்ற முறையில் பல இடங்களில் சாராயக் கடைகளை, கள்ளுக் கடைகளை, இதுபோன்ற பொது இடங்களில் வைத்துக் கொண்டு அதனால் இன்று பலவிதமான தொல்லைகள் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன என்பதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே கல்குளம் அருகில் அருவிக் கரை கிராமத்தில் தாயன்தளை என்ற இடத்தில் ஒரு கள்ளுக் கடையும், ஒரு சாராயக்கடையும் பக்கத்து பக்கத்திலே வைக்கப் பட்டிருக்கிறது. பஸ் ஏறி செல்லக்கூடிய பிரயாணிகள் பலவிதமான தொல்லைகளை அனுபவிக்கிறார்கள். இது மட்டும் ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சியல்ல. பல நிகழ்ச்சிகள் இன்றைக்கு அந்த மாவட்டத்தில் இருந்து வருவதை இந்த அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாது முஸ்லிம்கள் வழிபாடு செய்கின்ற மசூதி களுக்கு பக்கத்தில் கூட இதுபோன்று கடைகள் ஏற்பட்டு அவர்களுக்கும் தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. முஸ்லிம்கள் கன்னியாகுமரி மாவட்ட கலெக்டருக்கு இதுகுறித்து மனு கொடுத்தார்கள். அதன் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலை இருக்கிறது. பாக்டரிகளுக்கு பக்கத்தில் இப்படிப்பட்ட கடைகளை வைத்தன்காரணமாக தொழிலாளர்கள் சம்பளத்தை வாங்கி வீட்டிற்கு எடுத்துச் சென்று குடும்பத்தை காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. பாக்டரிகளுக்கு பக்கத்தில் சாராயக் கடைகளையும், கள்ளுக்கடைகளையும் வைக்கக்கூடாது என்றும், லைசென்ஸ் வழங்கக்கூடாது என்றும் வலியுறுத்த விரும்புகிறேன். அதே போன்று மற்றொரு மிக முக்கியமான பிரச்னை இது சம்பந்தமாகக் கடுமையான தண்டனை கொடுப்பதற்கு அரசு சட்டத்திலே விதிகள் கொண்டு வரப்பட வேண்டும்.

(மாலை 4-50)

இன்றையதினம் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. மத்திய பிரதேசத்திலே, லைசன்ஸ் வாங்கி ஷாப்புகளை வைத்துக் கொண்டு, அந்த லைசன்ஸ்களின் மறைவிலே கள்ளச் சாராயத்தை விற்று, வியாபாரம் நடத்தி, மக்களைக் கொலை செய்யக் கூடிய அளவுக்கு செல்லக்கூடியவர்களுக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டுமென்ற முறையிலே ஒரு சட்டம் கொண்டு வர முடிவெடுத்திருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு



சட்டம் கொண்டு வர வேண்டுமா, இல்லையா என்பது வேறு பிரச்னை. ஆனால், இப்படி மக்களுடைய உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய முறையிலே உள்ள லைசன்ஸ்தாரர்கள் பேரிலே கடுமையான நடவடிக்கை எடுத்து, இப்படிக் கள்ளச் சாராயம் விற்பவர்கள், மக்கள் உயிருக்கு ஆபத்து விளைவிப் பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும், கடும் தண்டனைக்கு ஆளாக்கப்படுவார்கள் என்ற ஒரு மாரல் ஃபியரை வியாபாரி களுக்கு ஏற்படுத்தக் கூடிய முறையிலே இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். அதுதான் இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவது சம்பந்தமாக இருக்கக் கூடிய மிகப் பெரிய பிரச்னை. இல்லாமல், அதில் குட்டபிட்டி ஆஃப் லைசன்ஸ் என்பது மட்டும் சேர்ந்திருப்பது அல்ல என்பதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வருவதற்கு இந்த நேரத்தை உபயோகப் படுத்தி, அந்த முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்த 1982 ஆம் ஆண்டு மது விலக்குத் திருத்தச் சட்ட முன்வடிவை நான் வன்மையாக எதிர்க்கிறேன். காரணம், ஏழை, எளிய மக்களுடைய நல்வாழ்விற்கு, உத்தமர் காந்தி போன்றவர்கள் பெரியார் போன்றவர்கள், அண்ணா போன்றவர்கள்கூட, ஏழை, எளிய மக்களுடைய வாழ்வு நசித்து விடக் கூடாது என்ற எண்ணங்களை தங்களுடைய வாழ்நாள் பூராவும் பறைசாற்றி வந்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகக் கடுமையாகச் சொன்னார்கள், நிச்சயமாக மதுவிலக்கு ரத்து செய்யப்படமாட்டாது என்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதெல்லாம் ஏற்கனவே பேசப்பட்ட விவகாரம். பேசியதையே திரும்பத் திரும்பத் பேசினால், நேரமாகும்.

திரு எல் இளையபெருமாள்: உறுதிமொழிகள் காப்பாற்றப் படவில்லை என்பதற்காகத்தான் சொன்னேன். பேச வேண்டா மென்றால் நிறுத்தி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே சொன்னதையே திரும்பப் பேசினால், நேரம் அதிகமாகும் என்று நான் சொன்னேன். திருத்தத்தைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு எல். இளையபெருமாள்: இந்தச் சட்டத்திலே பிராஞ்சுக் கடைகளுக்கு உரிமம் கொடுக்கிறோம். ஆனால், அதே சமயத்தில் பிராஞ்சுக் கடைகள் வைத்துக் கொள்ளலாம் என்றால் கிராமங்களிலே தெருத் தெருவாக, வீதி, வீதியாக, பதநீர் விற்பதுபோல் விற்கிறார்கள். அது மட்டுமல்ல, அரசாங்கம் கொடுக்கின்ற சாராயத்தினால் தங்களுக்கு நல்ல இலாபம்

கிடைக்கவில்லை, கட்டுபடியாகவில்லை என்பதால், அவர்களே கள்ளச்சாராயம் காய்ச்சி, அதையும் இதையும் கலந்து விற்கிறார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் 100 மில்லி 8 அணாவுக்குக் கொடுக்கிறார்கள். நீங்கள், 100 மில்லி, ரூ. 2க்கு விற்க உரிமம் கொடுத்துள்ளீர்கள். எனவே, ஏழைகள் 8 அணாவிலே சாப்பிடலாம் என்று சாப்பிட்டு, தற்கொலை செய்கிற மாதிரி செத்துப் போகிறார்கள். ஒரு பக்கத்திலே உறுதி கொடுக்கிறீர்கள். மறுபக்கத்தில் உரிமம் கொடுக்கிறீர்கள். மறு பக்கத்திலே பிராஞ்சு கடைகள் வைக்க அனுமதி கொடுக்கிறீர்கள். பிராஞ்சு கடைக்காரர்கள் இரண்டு வியாபாரத்தையும் செய்கிறார்கள். உதாரணமாக, நகரத்தில், புரசைவாக்கத்தில் கங்காதீஸ்வரர் கோயிலருகில் பிராஞ்சுக் கடைகள் வைத்திருக்கிறார்கள். நாங்கள் நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்களை சந்தித்து இதுபற்றி கேட்டபோது, அது அறநிலையத் துறையின் இடமாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த கங்காதீஸ்வரர் கோவிலுக்கு அரசு டிரஸ்டுகளை அப்பாயின்ட் செய்திருக்கிறது. அந்தக் கோயிலுக்குப் பக்கத்திலேயே ஒருவர் பிராஞ்சுக் கடையைத் திறந்து இருக்கிறார். அங்குள்ள பொது மக்களும் அரசாங்கத்தை அணுகினார்கள். அதிகாரிகளை அணுகினார்கள். ஒன்றும் நடக்கவில்லை ஆகவே, பிராஞ்சுக் கடைகள் மூலமாக விற்கலாம் என்று அனுமதி கொடுப்பது மிக ஆபத்தானது. அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். அது நிறுத்தப்பட வேண்டும்.

அடுத்ததாக, பள்ளிக்கூடங்கள் ஏற்கனவே இடவசதி இல்லாமல் ஒருவேளை நடக்கின்றன. உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் குடித்துவிட்டு பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் செல்கிறார்கள். நாம் சொல்கிறோம், குறிப்பிட்ட வயதானவர்களுக்குத்தான் பர்மிட் கொடுக்கிறோம் என்று, ஆனால், ஸ்தலத்திலுள்ள அதிகாரிகள், ரெவினியூ அதிகாரிகளாக இருந்தாலும், எக்சைஸ் துறை அதிகாரிகளாக இருந்தாலும், போலீஸ் அதிகாரிகளாக இருந்தாலும் அவர்கள் ஒழுங்காக அமுல் நடத்தாத காரணத்தால், இளைஞர்கள் குடித்துக் கெடுகிறார்கள். கல்லூரிக்குப் பக்கத்திலேயே விற்கப்படுகிறது. இந்தப் பாவமான காரியத்தை, அங்குள்ள அதிகாரிகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் இதைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் விரும்பவில்லையென்றால், மது விலக்கை ரத்து செய்து விட்டால், இந்தச் சனியன்களும் தொல்லைகளும் ஒழிந்துவிடும். இராஜாஜி அவர்கள் சொன்னார்கள், ஆண்டவன் தான் இந்த நாட்டைக் காவல் செய்ய வேண்டுமென்று. கடவுள் வந்தால்தான் முடியும். அல்லது ஆண்டவனே மறுபிறவி எடுத்தால்தான் சீர்செய்ய முடியும் என்ற நிலைமைக்கு இந்த நாட்டை நாம் கொண்டு செல்கிறோம் என்பதை அறியும்போது நிச்சியமாக அரசாங்கத்தை நடத்துகின்றவர்கள், நாம் கவலை கொள்ள வேண்டும், அக்கறை கொள்ள வேண்டும். இளைஞர்கள் குடித்து கெடுகிறார்கள். இந்த நிலையில், நாம் இளைஞர்களைக்



காபந்து செய்கிறோம் என்று சொல்கிறார்கள். நாம் நல்லவைகளைச் செய்ய வேண்டுமென்று விரும்பினால், அதிகாரிகள் மூலமாக, நாம் நல்ல குடிமகன்களை உருவாக்க வேண்டும். பல அறுப்பினர்கள் இதிலே தெளிவான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் வருங்கால சந்ததியினை கருத்திலே கொண்டு, நல்லெண்ணம் கொண்டு, இதை ரத்து செய்து விட்டோம் என்ற பெயரை எடுத்துக் கொண்டாலும் பரவாயில்லை, கொலை நடக்கிறது, மக்கள் அவதிப்படுகிறார்கள். பலபேர் கண் தெரியாமல் போகிறார்கள், பல பேர்களுக்குக் கை கால் சுருண்டு விடுகின்றன. பிராஞ்ச் கடைகள் என்று கோயில், பஸ் ஸ்டான்ட், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் ஆகியவைகளுக்குப் பக்கத்தில் இருக்கின்றன. இதைப்பற்றி அரசாங்கம் உடனடியாகக் கவனிக்க வேண்டும். அதிகாரிகளிடத்திலும், அமைச்சரிடத்திலும் சொல்லியாகிவிட்டது. முதலமைச்சரவர்கள இன்னும் சொல்கிறார்கள், மதுவிலக்கு ரத்தாகவில்லை என்று. ஒத்தி வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். கண்ட இடங்களில் இப்படிப்பட்ட அவல நிலை இருப்பது அவர்களுக்கும் தெரியும், இதுகுறித்து அதிகாரிகள் கவனிக்கவில்லை. அரசாங்கம் சட்டத்தைக் கொண்டு வந்தால் அதை ஒழுங்காக அமல் படுத்த வேண்டும், அது எந்தச் சர்க்காராக இருந்தாலும் சரி. மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் என்று இதில் சொல்லிக் கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை. மனிதனை வாழ வைக்கக் கூடிய முறையில் சட்டங்களை அமல் படுத்த வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற நிலைமையில், சோறு கொடுத்துப் படிக்க வைக்கிறோம் என்று சொல்லுகின்ற நேரத்தில், அவனைக் குடிகாரனாக ஆக்கினால் இது என்ன நிலையில் இருக்கிறது என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்தியப் பிரதேச அரசாங்கம் கடுமையாகச் சட்டம் கொண்டு வருகிறது. இருக்கின்ற சட்டத்தைக் கடுமையாக அமல்படுத்தவில்லையென்றால் மதுவிலக்கை ரத்து செய்து விட்டோம் என்று சொல்லி விடுங்கள். அப்பொழுது யாரும் இதுபற்றி இந்தச் சபையில் பேச மாட்டார்கள், யாரும் எதையும் கேட்க மாட்டார்கள். அப்படிச் செய்து விட்டால் நீங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்கைக் காபந்து செய்யவில்லை. அண்ணா, பெரியார், காமராஜ், காந்தி வழியில் மதிப்புக் கொடுத்துச் செல்லவில்லை என்ற நிலை வரும். (குறுக்கீடு) பெரியார் கள்ளுக்கடை கூடாது என்று தான் ஆரம்பத்தில் சொன்னார்கள். கடைசியிலே என்ன காரணத்தாலோ அப்படிச் சொன்னார்கள். ஆனால் ஆரம்பத்தில், 1934, 1935 ஆம் ஆண்டுகளில் தன்னுடைய தென்னை மரங்களை வெட்டி விட்டார்கள். ஆனால் பிறகு என்ன நடந்தது என்று தெரிய

[திரு. எல். இளையபெருமாள்] [1982 செப்டம்பர் 10

வில்லை. இதுபற்றியெல்லாம் அமைச்சரவர்களுக்குத் தெரியும். ஆகவே, இந்த நிலையில் அரசாங்கம் செய்தது தவறு என்று தெரிவித்து, அதைக் களைவதற்கு இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. அதில் ஒன்று, அதிகாரிகள் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இரண்டாவது, ரத்து செய்து விட்டோம் என்று தைரியமாக அறிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் மக்களை ஏமாற்றத்திற்கு ஆளாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் திரு. இளையபெருமாள் அவர்கள் பேசுகின்றபொழுது பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், ஆலயங்கள் ஆகியவற்றின் அருகே இதுபோன்ற சாராய கடைகளைத் திறக்கக் கூடாது என்று சொன்னார்கள். அண்மையில், 1-7-82ஆம் தேதி ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய இடங்களுக்கு 150 மீட்டர் தூரத்திற்குள்ளாக எந்தவொரு கடையும் வைக்கக் கூடாது என்ற ஆணை அரசால் தற்பொழுது இடப்பட்டிருக்கிறது.

**திரு. எல். இளையபெருமாள்:** துணைத் தலைவரவர்களே, 150 மீட்டர் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் கேட்கிறேன், கங்காதீஸ்வரர் கோயிலுக்கு அருகில் இப்பொழுது வைக்கப்பட்டிருக்கும் அந்தக் கடைக்கும் கோயிலுக்கும் இடையிலுள்ள தூரம் 10 மீட்டர்தான். இன்றைக்கும் விசாரிக்கலாம். இதுபற்றிக் கலெக்டரித்திலும் சொல்லியிருக்கிறோம்; அமைச்சரிடத்திலேயும் சொன்னோம். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த ஆணை 1-7-82 ஆம் தேதியன்றுதான் இடப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னால் அப்படி உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கலாம். அது களையப்பட வேண்டும், நீக்கப்பட வேண்டுமென்பதுதான் அரசின் எண்ணம். அதற்காகத்தான் இந்த ஆணை இடப்பட்டிருக்கிறது

குறிப்பிட்ட இந்தச் சட்டத் திருத்தத்தைப் பெறுத்த வரைக்கும் ஏற்கனவே செக்ஷன் 20 (ஏ) என்று சொலலப்படுகின்ற இடத்தில் 37ஆம் ஆண்டு சட்டத்திலேயே சூட்டபிலிட்டி என்ற ஒரு வார்த்தை, மனுதாரரைத் தேர்ந்தெடுக்கும்பொழுது அவர் எத்தகையவராக இருக்க வேண்டுமென்பதிலே,

"the suitability of the applicant for the grant of lieence or permti as the case may be; should be taken into account"
என்று இருக்கிறது. அது மட்டுமல்லாமல்,



1982 செப்டம்பர் 10] [திரு. சி. பொன்னையன்]

"whether the applicant is a person who will abide by the provisions of this Act and the rules made thereunder;"
என்று இருக்கிறது. இதவிட மிக முக்கியமாக

"such other matters as may be prescribed"
என்று இருக்கிறது.

"such other matters as may be prescribed"
என்று சட்டமன்றம், லெஜிஸ்லேஷன், அரசுக்கு அந்த அதிகாரத்தைத் தருகின்றபொழுது இன்றைக்குச் சில விதிமுறைகளை வைத்துக்கொண்டு நாளைக்கு மாற்றி, நாளைக்கு மறுநாள் இன்னும் சில விதிமுறைகளை மாற்றி மாற்றி

"such other matters as may be prescribed"
என்று இருப்பதால், அது மிகவும் தவறான முறையிலேகூட பயன்படுத்தப்படக் கூடிய வாய்ப்பு விதிமுறைகள் மாற்றப்படும் பொழுது ஏற்பட்டு விடும்.

ஆனால் இந்தச் சட்டத் திருத்தத்தைப் பெறுத்த வரைக்கும் ஏற்கனவே இருக்கின்ற 1981ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தை ஒட்டிய விதிகள், விதி 5-இன் கீழ் இதே ஷரத்துக்கள் இருக்கின்றன. Ii: 5 A,B,C,D,

"the suitability of the applicant for the grant of licence - - whether the applicant is a person who will abide by the provisions of the Act and the Rules made thereunder"
என்ற வகையிலே

"the suitability of the site and building, whether the application is made bona fide oo behalf of the applicant himself or in benami of any other person

(மாலை 5-00)

என்ற பிரிவுகள் எல்லாம் ஏற்கனவே விதியில் இருக்கின்ற பிரிவுகளை சட்டத்திலே கொண்டு வருகின்றபோது, இந்த நடைமுறையில் விதிகள் அளவிலே இருந்து வருகின்றன, அதைச் சட்டமாக போடுகின்றபோது எடுத்த நேரத்தில். எந்த நேரத்தில் வேண்டுமானாலும் மாற்றலாம் என்ற முறையிலே மாற்றக் கூடிய வாய்ப்பில்லாமல் இருக்கும். ஏற்கனவே

These are things which had been alread followed; which had beed in force. That is now being embodied in the Act.
அவ்வளவுதான். அந்த அடிப்படையிலேதான் இது கொண்டு வரப்படுகின்றதேயொழிய, ஏதோ புதிதாக, இருக்கின்ற விதிமுறைகளை இதுகாறும் கடைபிடிக்கப்பட்ட விதி முறையினைக் கொண்டு வருவதாகக் கருதக் கூடாது. அது தெளிவாக, ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்சிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது அதிலும் குறிப்பாக சுப்ரீம் கோர்ட்டிலே உள்ள நீதி மன்றத்திலே தீர்ப்பு கூறப்பட்டிருக்கின்றது. நேற்று கூட மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது அதையும் சுட்டிக் காட்டினார்கள்.

"The Supreme Court has held that the expression "suitability or "suitable has to be viewed in the context in which it is used, having regard to the object of the enactment and the purpose sought to be achieved.

என்றிருக்கிறது, அது ஏதோ தற்போது சிலர் உச்சநீதி மன்றத்திலே வழக்குத் தொடர்ந்து அங்கே பெண்டிங்கிலே இருக்கிறது, அந்த வழக்கை ஒட்டிய தீர்ப்பை இந்த ஆப்ஜக்டிலே கொடுப்பதாகக் கருதவேண்டாம். அப்படியில்லை. 1961-ம் ஆண்டிலேயும், அதைப்போலவே 1973-ம் ஆண்டிலேயும் இரண்டு வழக்குகளில் உச்சநீதி மன்றம் ஒரு தீர்ப்பினை வழங்கி இருக்கின்றது. அந்த தீர்ப்பின் அடிப்படையில் அந்த 'சூட்டபிலிட்டி' என்ற வார்த்தை சொல்லக்கூடிய ஒன்று. அதற்கு மேற்படியான விளக்கம் கூட தேவையில்லை, என்ற அளவிலே அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. அப்போது குறிப்பிட்டதைத்தான் இந்த சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு என்று குறிப்பிட்டிருக்கின்றதே ஒழிய, தற்போது உச்சநீதி மன்றத்திலே நிலுவையிலே இருக்கின்ற வழக்குகளைக் குறிப்பிட்டு......

AIR 1965 Supreme Court 446

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தியன் மெட் பாரின் லிக்கர் சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட் வழக்கு இன்னும் முடிவு பெறாமல் இருக்கின்றது. 14ந் தேதி வழக்கு வருவதாக கேள்விப்படுகிறேன். அந்த வழக்குக்காகத் தான் இந்த சட்டத்தை அவசரமாகக் கொண்டு வருகிறார்களா என்பதை விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, உச்சநீதி மன்றத்திலே இருக்கின்ற வழக்கு ஒரு தனிப்பட்ட வழக்கு. ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் அனைத்து உரிமங்களுக்கும் இதுகாறும் கடைபிடிக்கப்பட்டு வந்த விதிகள், விதி 5 என்ற விதியின் கீழ் கடைபிடிக்கப்பட்டு வந்தவை. செக்ஷன் 20 (ஏ) என்பதின் கீழ் கடைப்பிடிக்கப்பட்டு வந்தவைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக அதை சட்ட ரீதியாகக் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் தற்போது இதைக் கொண்டுவந்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, சுப்ரீம் கோர்ட் 'suitability' பற்றி சொன்னதற்குக் காரணம்

It was held that "though the expression suitable was not defined. It does not require a definition because any man of experience would know who is a suitable tenant. The case has to be viewed in the context in which the word, 'suitability' or suitable is used having regard to the object of the enactment and the purpose sought to be used. ஏற்கனவே சூட்டபிலிட்டி என்று 1937ம் ஆண்டு சட்டத்திலே



இருந்தாலும் சரி, ஏற்கனவே இருக்கின்ற சட்டத்திலே கூட 1971லே இருந்து நடைமுறையிலே இருந்து வந்தது தற்போது விதி 5ன் கீழ் நடைமுறையில் இருந்து வந்ததை இது காறும் கடைபிடிக்கப்பட்டு வந்த டிக்ளரேடிவ் புரொவிஷன் என்ற முறையிலே, அதை சேர்த்துத்தான் ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்லே கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, புதிதாக ஒன்றும் இதில் சேர்க்கப்படவில்லை என்று சொல்லி, இந்த சட்ட திருத்தத்தை அவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

தமிழ்நாடு 1932 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1982 ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெற்றித்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 44/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஏ) அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1982

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1982 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 6. அரசினர் சட்டமுன் வடிவுகள்—தொடர்ச்சி

### (ஊ) அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1982

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1982-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

திரு. அ. ரகுமான் கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, அண்ணாமலை பல்கலைக்கழகம் திடீரென்று பட்டப் படிப்புகளுக்கான வகுப்புகளை மூடியிருக்கிறது. இதனாலே ஏற்கனவே அண்ணாமலை பல்கலைக் கழகத்திலே படிக்கின்ற படிப்பை இழந்து மாணவர்கள் இந்தப் பட்டப்படிப்பு வகுப்புகளை மூடிவிட்டதன் காரணமாக படிக்கமுடியாத ஒரு சூழ்நிலை அந்த பகுதியிலே ஏற்பட்டிருக்கிறது. இந்த காரணத்தினாலே அரசாங்கம் ஒரு சட்ட திருத்தம் கொண்டு வந்து சிதம்பரத்திலே ஒரு கலைக் கல்லூரியை உருவாக்குவதற்காக இங்கே ஏற்பாடு செய்திருக்கிறது.

இதிலே நான் சொல்ல விரும்புவது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம். போன்ற பட்டப் படிப்பு வகுப்புகளை மூடுகிறபோது அரசாங்கம் அதைத் தவறு என்று சொல்லவில்லை. இன்றைக்கு எஸ்.ஐ.ஈ.டி. இதைப் போலவே பட்டப் படிப்பை மூடிவிட்டார்கள். பல பேர்கள்—மாணவர்கள் அங்கே படிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே அது சிறுபான்மை சமுதாய மக்கள் உரிமைகளுக்கு நடைபெறக்கூடிய கல்வி ஸ்தாபனமாய் இருந்தாலும் கூட, மாணவர்கள் பட்ட படிப்பு வகுப்புகளில் சேர முடியாத ஒரு சூழ்நிலை இதை மூடிவிடுவதன் காரணமாக இருக்கிறது. இஸ்லாமிய சமுதாயத்தினராலே நடத்தப்படுகின்ற இந்த எஸ்.ஐ.ஈ.டி. நிர்வாகத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. இந்த எஸ்.ஐ.ஈ.டி நிர்வாகிகள் சமூக விரோதிகள். ஆகவே அரசாங்கமே எடுத்துக் கொள்கிறது. அமைச்சரவர்கள் கோபப்பட்டு, ஆத்திரப்பட்டு, அந்த நிர்வாகத்தை சர்க்காருடைய மைப்பின் கீழே கொண்டுவருவதற்கான முறையிலே சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இதே காரியத்தைச் செய்கின்றபோது இது போன்ற கோபம் நமது அமைச்சர் அவர்களுக்கு வரவில்லை, வருத்தம் வரவில்லை, மாறாக அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை சர்க்கார் எடுத்துக்கொள்கின்ற அளவுக்கு நாங்கள்

*1982 செப்டம்பர் 7ம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(திரு. அ. ரகுமான்கான்)

தயாராக இருப்போம் என்று சொல்கிற நிலையிலே இல்லை. அதற்கு மாறாக அரசாங்கமே இந்த பட்டப் படிப்பை அண்ணாமலை பல்கலைக் கழகம் மூடிவிட்ட காரணத்தாலே அந்த பல்கலைக்கழகத்தின் மீது அரசாங்கம் வழக்கு தொடுப்போம் என்ற முடிவுக்கும் வரவில்லை. மாறாக ஒரு புதுச் சட்டத்தைக் கொண்டு வந்து கல்லூரி துவக்கியபடி, பல்கலைக் கழகத்தினுடைய எல்லைக்குள்ளே 10 மைலுக்குள்ளே தானே இந்த சட்டத்தின் 4ஆவது பிரிவுதானே தடையாக இருக்கிறது. ஆகையினாலே கல்லூரியை பல்கலைக் கழக எல்லை 10 மைலுக்குள் கொண்டு வர புதிய சட்டத்தை கொண்டு வந்து இருக்கிறார்கள் நமது அமைச்சரவர்கள். ஆனால் நமது அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இரட்டை முறையான அணுகுமுறை இருப்பது நியாயம் தானா என்பதை நம்முடைய அமைச்சரவர்கள் இங்கே தெரிவிக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் பெரியநாயக்கன் பாளையம் ராமகிருஷ்ண வித்யாலயாவிலே பி.காம் படிப்பை நிறுத்தி விட்டார்கள். கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் எம்.ஏ. (தமிழ்) படிப்பை நிறுத்தியிருக்கிறார்கள். சேலம் சாரதா கல்லூரியிலே பி.ஏ. தமிழ் பட்டப் படிப்பு நிறுத்தியிருக்கிறார்கள். இதைப் போலவே எஸ்.ஐ.ஈ.டி-யிலும் நிறுத்தியிருக்கிறார்கள். அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் நிறுத்தியிருக்கிறார்கள், எஸ்.ஐ.ஈ.டி-க்கு மட்டும் ஒரு அணுகுமுறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு மட்டும் ஒரு அணுகுமுறை என்று சொன்னால் உங்கள் தேர்தல் சின்னம் இரட்டை இலை என்பதாலே இரட்டை நடிப்பு என்று அறிவோம்—அல்லது உங்கள் தேர்தல் சின்னம் இரட்டைஇலை என்பதாலே இரட்டை நிலையா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால் அண்ணாமலை பல்கலைக் கழகம் பி.ஏ.,பி.எஸ்.சி.,பி.காம்,போன்ற பட்டப்படிப்புகளை நிறுத்தியது தப்பு என்று நீதிமன்றம் கருத்து சொல்லியிருக்கிறது நீதிபதி அவர்களுடைய தீர்ப்பின் ஒரு பகுதியை அமைச்சரவர்கள் படித்திருந்தாலும் கூட மன்றத்தின் மூலமாக தெரிவிக்க வேண்டியதற்கு நான் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அமைச்சரவர்கள் ஒரு சமாதானத்தை சொல்லலாம். அது ஒரு பல்கலைக்கழகம். அது ஒரு ஆராய்ச்சிக் கூடமாக இருக்க வேண்டும். அறிவுக் கூடமாகவும் இருக்கவேண்டும். ஒரு பல்கலைக்கழகம் ஆராய்ச்சிக் கூடமாகவும், அறிவுக் கூடமாகவும் இருப்பதற்கு ஒரு புதிய ஆராய்ச்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். ஆனால் சென்னை உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அந்த தீர்ப்பின் ஒரு பகுதியை சுருக்கமாக சொல்ல விரும்புகிறேன்.

If alternative arrangements had been made by the authorities of the University, who were competent to do so, certainly everyone would welcome. A University can develop in to a centre for P.G. courses. But this should not be done at the cost of undergraduates course.

தெளிவாகவே நீதிபதி சொல்கிறார்கள். பல்கலைக் கழகத்திலே பட்டப்படிப்பு பெறுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித்தரவில்லை. அதற்கு மாற்று ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனாலும் அதே நேரத்திலே பி.ஜி. கோர்ஸ் என்று சொல்லக்கூடிய மேல் பட்டப்படிப்பு பயிலுவதற்கான தேவையான வசதிகளை செய்து கொடுப்பது வரவேற்கக் கூடிய ஒன்றுதான். ஆனால் அதற்காக பட்டப் படிப்பை மூடி விடுவது சரியில்லை, வகுப்புகளை மூடிவிடுவது சரியில்லை. இருந்தாலும்கூட இவர்கள், அந்த செனட் எடுக்கக்கூடிய முடிவு, சின்டிகேட் எடுத்திருக்கக்கூடிய முடிவு தவறானது என்ற தீர்ப்பை நீதிபதி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே நீதிபதி தெரிவித்த, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே பட்டப்படிப்பு வகுப்பை மூடியது தவறு என்று சொல்லியதற்கு பிறகும்கூட அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே நீங்கள் கவனம் செலுத்தவில்லை என்று சொன்னால் ஏன் என்று என்னால் தெரிந்து கொள்ளமுடியவில்லை.

அதுமட்டுமல்லாமல் இங்கே கூட அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எஸ். ஐ. ஈ. டி. கல்லூரி நிர்வாகத்திலே காலிலே விழாத குறைதான், அந்த அளவிற்கு நாங்கள் நிர்வாகத்தோடு பேசினோம் என்றெல்லாம் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் மீது நான் ஒரு உரிமைப் பிரச்னைகூட கொண்டு வரமுடியும். ஆனால் சபைக்கூட்டம் இன்றோடு முடிகின்ற காரணத்தாலே அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தாலே நான் அந்த முறையிலே போகாமல் வேறு வழியிலே சொல்லவிரும்புகிறேன். பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தர் நிர்வாகத்திற்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். 27-7-82ல பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தர் சாந்தப்பா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

"I wish to repeat, so that it can go on records as for as your corres pondence goes, that the meeting has been cancelled at my instancr because I felt that because of the two suits field against the manage ment of the S.I.E.T. College my carrying on further negotiations would be sub judice and would have no meaning or purpose....

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் முழுமையாகச் சொல்ல வேண்டும். அவர் ஒரு தடவைப் பேசி அந்தப் பிரச்னைக்கு முடிவு காண முடியாமல் சரி, இன்னொரு முறை சந்திக்கலாம் என்று அவர் சொல்லியிருந்து அந்த இரண்டாவது கூட்டம்தான் கூடாமல் போய்விட்டதே தவிர அதற்கு முன்னாலே அவர்கள் சந்தித்திருக்கிறார்கள். கவர்னர் அவர்களை சந்திக்க முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய கல்லூரிக் கல்வி



இயக்குநர் அவர்களைச் சந்திக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி பல்வேறு நிலைகளில் இருக்கின்றவர்களைச் சந்திக்க முயற்சிகள் மேற்கொண்டிருந்தார்கள். மதிப்பிற்குரிய கவர்னர் என்று வருகிறபோது, பல்கலைக்கழகத்தினுடைய வேந்தர் என்ற முறையில் இதிலே தனியான அக்கறை எடுப்பதற்கு அவருக்கும் வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் எல்லாம் எடுத்துக்கொண்ட அந்த முயற்சிகளின் அடிப்படையிலே தான் அந்தக் கருத்தைச் சொன்னேன். இப்போது அவர்கள் பேச வருகிறார்கள் என்பது இந்த மசோதாவைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான். இந்த நிர்வாகத்தோடு இப்படிப் பட்ட ஒரு அனுபவம் எங்களுக்குப் புதிதாக இருக்கலாமே தவிர, திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு, 7 ஆண்டுக்காலத்திலே நல்ல் முறையிலே கிடைத்திருக்க வேண்டும். அவர்களும் இதை உணர்வார்கள். ஆகவே அந்த நிர்வாகத்தைப் பற்றி அவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏற்கனவே பல்வேறு கட்டங்களில் எஸ்.ஐ.ஈ.டி. நிர்வாகத்தோடு பேசுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டதாக, துணைவேந்தர் மூலமாக, ஆளுநர் மூலமாக முயற்சிகள் எடுத்துக்கொண்டதாகச் சொன்னார்கள். ஆனால் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய தகவலின் அடிப்படையில் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். நிர்வாகம் ஒரு கருத்திலே உறுதியாக இருந்தது. ஆனால் அதே நேரத்திலே பேச்சு வார்த்தைக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் நிர்வாகம் பின் வாங்கியது கிடையாது. இன்னும் சொல்லப்போனால் பேசித் தீர்க்கப்பட வேண்டும், பிரச்னை விளக்கப்படவேண்டும், தங்களுடைய கருத்து நியாயமா, சரியா என்பது குறித்து அரசாங்கத்தை அது சமாதானப்படுத்தவேண்டும், அல்லது அரசாங்கம் சொல்வதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற மனநிலையிலேதான் பலமுறை சந்தித்திருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களை பலமுறை சந்திக்க வந்த நேரத்திலேயெல்லாம் அமைச்சருடைய பி. ஏ. அவர்கள் சந்திப்பதற்கு நேரம் இல்லை என்று அவர்களை அனுப்பி இருக்கிறார்கள். காலிலே விழாத குறையாக அவர்களோடு நாங்கள் பேசினோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

களைச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. வேண்டுமானால் எஸ்.ஐ.ஈ.டி.யை ஆதரிப்பதற்கு விருப்பம் இருந்தால் நேரடியாக, தைரியமாக ஆதரித்துப் பேசலாம். அதிலே கருத்து வேறுபாட்டிற்கு உங்களுக்கு எல்லாவிதமான சுதந்திரமும் இருக்கிறது. அதற்காக எங்களை இப்படித் தவறான முயற்சியிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எஸ்.ஐ.ஈ.டி. நிர்வாகம் தவறு செய்யுமானால், அதைக் கண்டித்து முதல் குரல் கொடுப்பது திராவிட முன்னேற்றக் கழகமாகத்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எஸ்.ஐ.ஈ.டி. மட்டுமல்ல, சிறுபான்மை சமூகத்தினரால் நடத்தப்படும் கல்லூரிகளில் மட்டுமல்ல, அரசாங்க கல்லூரிகளில் மட்டுமல்ல, தனியார் கல்லூரிகளில் மட்டுமல்ல, தவறுகள் எங்கே நடக்குமானாலும் அதைக் கண்டிக்கின்ற நிலையில்தான் திராவிட முன்னேற்றக்கழகம் என்றைக்கும் இருக்கிறது. அது ஆசிரியர்களா, மாணவர்களா என்கிற பிரச்னை அல்ல. அது வேறு விவகாரம்.

ஆனால் நான் சொல்ல விரும்புவது, எஸ். ஐ. ஈ. டி. கல்லூரி நிர்வாகம் எடுத்த முடிவு தவறானது என்று அமைச்சர் சொல்கிறார். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எடுத்த முடிவு பட்டப்படிப்பு வகுப்புகளை நிறுத்துவது என்று எடுத்த முடிவு தவறானது என்று நீதிமன்றமே சொல்லியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இரண்டு விவகாரங்களிலும் எத்தகைய அணுகுமுறையினைக் கையாண்டு இருக்கிறார் என்பதை விளக்கத்தான், இரண்டு விதமான அணுகுமுறையைக் கையாண்டு இருக்கிறார் என்பதை எடுத்துக் கூறத்தான் இந்த விவரங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்து இருக்கிறது என்பதற்காக நான் குறைகூற வரவில்லை. இன்றைக்கு சிறுபான்மைச் சமுதாய மக்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கவேண்டும் என்ற முறையில் அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றம் செல்வார்கள். இங்கே உங்களால் நிறைவேற்றப்பட்ட பல்வேறு சட்டங்கள் நீதிமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டு இருக்கின்றன. நீங்கள் எடுத்து இருக்கும் நடைமுறை நீதிமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டு இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டவே சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தச் சட்டமுன்வடிவின் மீது மட்டும் பேசவேண்டும் என்று தாங்கள் பணிக்க வேண்டும்என்று சொல்லிக்கொள்கிறேன். ஏனெனில் சிறுபான்மைச் சமூகம், அதற்கு அரசியல் சட்டப் பாதுகாப்பு என்றெல்லாம் இதிலே பேசுகிறார்கள். அது தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. துரைமுருகன் :** இந்த அவையில் நேற்று பேசிய பேச்சுக்கு இன்றைக்குப் பதில் அளிக்கின்ற நிலைமைகள் எல்லாம் இருந்து இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** யாரும் குறுக்கிட்டுக் கேட்காத வரையில், பேசிக்கொண்டு இருக்கலாம்; கேட்டுவிட்டால் பேசாமல் இருப்பதுதான் நல்லது.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் எப்போதுமே பிரச்னைகள் மீது மட்டுமே பேசவேண்டும் என்பதிலே ஆர்வம் உடையவர்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்திற்கு ஒரு மசோதா கொண்டு வருகிறார்கள். அந்த மசோதாவில், அந்தப் பல்கலைக்கழகம் பட்டப்படிப்புகளை நிறுத்திவிட்டது, அப்படி நிறுத்திவிட்ட காரணத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு வசதி செய்கிற அடிப்படையில் அங்கே சிதம்பரத்தில் ஒரு கல்லூரியைத் துவக்கலாம் என்ற முறையில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. அதை நான் தப்பு என்று சொல்லவில்லை. அதே அடிப்படையில் தான் இங்கே எஸ். ஐ. ஈ. டி. நிர்வாகம் ஒரு முடிவை எடுத்து இருக்கிறது. அதன் மீது உங்களுடைய அணுகுமுறை எப்படியிருக்கிறது என்கிற விவரங்களைச் சொல்கின்ற அடிப்படையில் தான், 'கம்பேர் அன்ட் கான்ட்ராஸ்ட்' என்ற முறையில் அதை விவரித்து, உங்களுடைய இரட்டைக் கொள்கையை நான் சொல்கிற வகையில் இந்தக் கருத்துக்களை இங்கே எடுத்து வைக்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எடுத்த முடிவு தவறு என்று நீதிமன்றமே சொல்லிவிட்டது. தீர்ப்பு வழங்கிவிட்டது. அதற்கு ஒரு அணுகு முறை. இதற்கு ஒரு அணுகு முறையா? அப்படி இரட்டை அணுகுமுறை வைக்கலாமா?

இன்னும் சொல்லப்போனால், நீதிமன்றம் அளித்த தீர்ப்பைப் பற்றிக் கவலைப்படாமல் நீங்கள் இங்கே சட்டத் திருத்தம் கொண்டு வந்து இருக்கிறீர்கள். அந்த நிர்வாகத்தோடு பேசவில்லை என்று சொல்கிறீர்கள். சிறுபான்மை சமூகத்தினர் நடத்தும் கல்லூரியைப் பொறுத்தவரையில் இப்படி சட்டம் கொண்டு வரலாமா என்று நான் பேசினால், அதிலே எந்த வகையில் நான் பிரச்னையில் இருந்து மாறுபட்டு இருக்கிறேன் என்பதை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர் ஏன் அப்படிக் கூறினார் என்றால், என்னுடைய பேச்சை திசை திருப்புவதற்காகதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலைமைகள் மாறவேண்டும். அதன் மூலமாகத்தான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஜனநாயகம் பாதுகாக்கப்படும் என்பதை உங்கள் மூலமாக நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே கொண்டு வரப்பட்டுள்ள மசோதாவிலே இன்னொரு
பிரச்னையும் இருக்கிறது. இத்தகைய ஒரு மசோதாவை நீங்கள்
எதற்காகக் கொண்டு வரவேண்டும்? ஏற்கனவே இதே மன்றத்தில்,
ஆளுநர் உரையில்' ஒன்றைச் சொன்னீர்கள். இப்போது
கொண்டு வரப்பட்டுள்ள சட்டத்திருத்தம் 1928-ஆம் ஆண்டு
அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் 4-வது பிரிவுக்குத்
தான். ஆனால் ஏற்கனவே நீங்கள் அறிவித்தது என்ன?
அண்ணாமலைப் பல்கலைக் கழகச்சட்டத்திலே பல குறைபாடுகள்
இருக்கின்றன. அந்தக் குறைகள் களையப்படவேண்டும்.
சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராஜ் பல்கலைக்
கழகம் ஆகியவற்றில் இல்லாத ஒரு பிரத்யேக ஒரு உரிமை
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு இருக்கிறது. அதனுடைய
சட்டத்தில் இருக்கிறது. அதாவது — அதற்கு ப்ரோ — சான்சலர்
என்று ஒரு பதவி இருக்கிறது. அந்த ப்ரோ — சான்சலர் இடத்தில்
சகல அதிகாரங்களும் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பிரிவு
நீக்கப்படவேண்டும் என்று அண்ணாமலைப் பல்கலைக் கழக
மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள், ஆசிரியர்கள் பலர்
குரல் கொடுத்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக
ப்ரோ-சான்சலருக்கு இருக்கக்கூடிய அதிகார எல்லை அதிகமாக
இருக்கிறது, அது நீக்கப்படவேண்டும் என்று ஆசிரியர்கள்,
மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். பலர் கைது
செய்யப்பட்டார்கள். அப்போது 144 தடைச்சட்டம் போட்டது
இந்த சர்க்கார். கூட்டம் நடத்த விடவில்லை இந்த சர்க்கார்.
ஆசிரியர்களையும் மாணவர்களையும் கைது செய்து, அவர்களைச்
சிறையில் அடைத்தது இந்த சர்க்கார். அன்றைக்கு ஒத்திவைப்புத்
தீர்மானம் கொடுத்து இந்த அவையிலேயும் மேலவையிலேயும்
பேசியிருக்கிறோம். ஆக, நியாயம் எங்கே இருந்தாலும்
அதற்காக நாங்கள் குரல் கொடுக்கிறோம்.

அன்றைக்கு ஆளுநர் உரையின்போது சொன்னார்கள்.
அண்ணாமலை பல்கலைக் கழகச் சட்டத்திலே பல குறைபாடுகள்
இருக்கின்றன: அவற்றைச் சீர்செய்ய விரைவிலே திருத்தம்
கொண்டுவருவோம் என்று சொன்னார்கள். அந்தத் திருத்தத்தைக்
கொண்டுவர வேண்டாமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அப்போது பேசியது இந்த டிபேட்டில் இருக்கிறது. என்ன
சொன்னார்கள்? அறிஞர்களுடன் ஆலோசித்துக்கொண்டிருக்
கிறோம். எதற்கு? அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்
போராட்டம் நடக்கிறது. எதற்காக? பல சட்டத் திருத்தங்கள்
செய்வதற்காக. அந்த முறையில் சட்டத் திருத்தங்கள் கொண்டு
வர அறிஞர்களுடன் பேசுகிறோம்: விரைவிலேயே திருத்தங்கள்
வரும் என்று சொன்னார்கள்.

ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
கொடுத்த வாக்குறுதிகளை எந்தக் காரணத்தைக் கொண்டும்
இந்த அரசு பிறழவிடாது; கொடுத்த வாக்குறுதியிலிருந்து பிறழ
மாட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையில்



அந்த 1928 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அண்ணாமலை பல்கலைக்
கழகச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவராமல் 4-வது பிரிவுக்கு
மட்டும் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக
அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். சிதம்பரத்திலே என்ன
செய்தீர்கள்? இங்கே ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்? நிர்வாகத்
திலே சீர்கேடு, ஆகையால் எடுக்கிறேன் என்று சொன்னால்
நிர்வாகச் சீர்கேடு வேறு இடத்தில் இல்லையா? உதாரணத்திற்கு
சொல்கிறேன். மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம் கருத்த
ராவுத்தர் கல்லூரி இருக்கிறது, அதைப்பற்றி இந்த மன்றத்
திலே சொல்லியிருக்கிறோம். அங்கே முதல் நாள் ஒருவர்
கல்லூரி முதல்வராக நியமிக்கப்படுகிறார். அவர் அந்தக் கல்லூரி
முதல்வராக பொறுப்பு ஏற்கப்போகிறார். உடனே அவரை
தூக்கி எறிந்துவிட்டு இன்னொரு உத்தரவு போகிறது. நீ அல்ல
கல்லூரி முதல்வர், இவர்தான் கல்லூரி முதல்வர் என்று உத்தரவு
போகிறது அடுத்த நாள். அவர் யார்? முதலிலே கல்லூரி முதல்
வராக பொறுப்பு ஏற்கப்போனவருடைய மாணவர். இதிலே
சீர்கேடு இருக்கிறதா, இல்லையா? இரண்டு உத்தரவுகள்
போகின்றன. அதனால் என்ன நிலைமை? முதலிலே போனவர்
நான் முதல்வர், நீ அல்ல என்று அவர் சொல்ல: இல்லை,
இல்லை, நான்தான் முதல்வர் என்று இவர் சொல்ல: இரண்டு
பேருக்கும் ஒரு போராட்டம். இரண்டு பேர்களும் நீதிமன்றத்
திற்குப் போகிறார்கள். அதுபற்றி மக்கள் சிரிப்பாய் சிரித்துக்
கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை ஏற்பட்டது யாரால்? யார்
இதற்குப் பொறுப்பு? ஒரு தனிப்பட்ட நபரா? இல்லை. உங்கள்
இலாகாதானே. இவ்வளவு பெரிய தப்பு நடக்கிறதே உங்கள்
நிர்வாகத்தில். இவ்வளவு பெரிய கேலிக்கூத்து நடக்கிறதே.

எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் நிர்வாகச் சீர்கேடு என்பதற்காக
அதை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வழக்கு போடுகிறது என்றால்
இந்த ஊழலைச் செய்திருக்கிற உங்கள்மீது என்ன நடவடிக்கை
எடுப்பது? யார் நடவடிக்கை எடுப்பது? ஆக, தவறு எங்கும்
இருக்கலாம். அதைத் திருத்த வேண்டும். போலீஸ் சட்டம்
ஒழுங்கை சரியாக பராமரிக்காமல் இருக்கலாம். அதற்காக
போலீஸ் ஸ்டேஷன் தேவையில்லை என்று சொல்லலாமா?
நிர்வாகச் சீர்கேட்டை களைவது வேறு, நிர்வாகத்தை எடுப்பது
வேறு.

இன்னொன்று. இன்றைக்கு நிர்வாகத்தை எடுத்துக்கொள்
ளுங்கள். இந்தக் காரியத்தில் இந்தக் கல்லூரி ஊழல் செய்கிறது,
தப்பு செய்கிறது; ஆகையால் அரசாங்கம் கல்லூரியை எடுத்துக்
கொள்கிறது என்று ஒரே ஒரு உத்தரவு மூலம் எடுத்துக்கொள்
கிறீர்களா என்றால் இல்லை. அதிலேதான் உங்கள் கெட்டிக்
காரத்தனம் இருக்கிறது. தலைக்குமேலே கத்தியை வைத்திருக்

கிறீர்கள். கிறிஸ்தவ நிறுவனமாக இருக்கட்டும் அல்லது முஸ்லீம் நிறுவனமாக இருக்கட்டும். 'மிஸ்மானேஜ்மென்ட்' என்று எங்களுக்குத் தெரிந்தால் உங்கள் நிர்வாகத்தை எடுத்துவிடுவோம், ஜாக்கிரதை என்று சொல்லுகின்ற ஒரு பயங்கரமான ஆயுதத்தை வைத்துக் கொண்டிருக்கிறீர்களே தவிர வேறு என்ன?

சேப்பாக்கம் என்னுடைய தொகுதி. அங்கே ஒரு அரசாங்கக் கல்லூரி, கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்கள் பெயரால் இருக்கிறது. அது ஒரு அரசாங்கக் கல்லூரி. அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. நான். நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்காக நான் ஒவ்வொரு நாளும் நான் அந்தக் கல்லூரிக்குப் போய்வந்தேன் அட்மிஷனுக்காக. ஒரு இடம் கூட தரப்படவில்லை. அது எந்த மேலிடம் போட்ட உத்தரவு? அதை நான் காட்டட்டுமா? நான் அதற்கு சவால் விடட்டுமா? ஆளும் கட்சி எம்.எல்.ஏ. சிபாரிசில் எவ்வளவு பேர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறீர்கள் என்று காட்டட்டுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இன்றைய நிலையில் அரசு கல்லூரிக்கு மட்டுமல்ல: தனியார் கல்லூரிக்குக் கூட எம். எல். ஏ. யாரும் போக வேண்டிய அவசியம் இல்லை: தேவை இல்லை. அவர்கள் தவறு செய்தால் மட்டுமே அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறதே தவிர, சிபாரிசுக்குப் போய் இடம் பெறுகிற நிலைமையை தனியார் கல்லூரிகளிலேயே தடுத்து விட்டோம், இந்த ஆண்டிலிருந்து. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள், தான் 100 மாணவிகளுக்காகப் போனதாகவும், இடம் கிடைக்கவில்லை என்றும். போனதே பெரிய தவறு. அதற்கே வருத்தப்படுகிறோம்.

இந்த நிலைமை பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலேயே, அவர் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே, இவைகளை மாற்றவேண்டும் என்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம். மார்க் அடிப்படையிலேதான் மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்று சொல்லி உத்தரவு போட்டுள்ளோம். அதுதான் நடைமுறையில் இருந்து வருகிறது. இன்னும் சொல்லப் போனால் சில கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் அட்மிஷன் ஆகவேண்டிய மாணவர்களின் பெயர்களை, அவர்களுடைய மார்க் எண்களோடு சேர்த்து வெளியிலே நோட்டீஸ் போர்டில் அச்சடித்து ஒட்டிவிடுகிறார்கள். அங்கே எம். எல். ஏ.க்களுக்கு என்ன வேலை என்று எனக்குப் புரியவில்லை. அந்தக் கல்லூரிகளில் ஏதாவது தவறு நடந்தால், அரசாங்கத்தின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வரலாமே தவிர, சிபாரிசுக்குப் போக வேண்டிய தேவையில்லை.



திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கல்லூரிகளாக இருந்தாலும் சரி, மருத்துவமனைகளாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த அரசு நிறுவனமாக இருந்தாலும் சரி சிபாரிசுக்கு வரக்கூடாது, வரவேண்டிய தேவையில்லை என்று சொல்கிறார். வரவேற்கிறேன்.........

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் களை தயவுசெய்து நான் பேசிய வார்த்தைகளை மாற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் கல்லூரிகளைப் பற்றி மட்டும்தான் சொன்னேன். இப்போது இருக்கிற நடைமுறைகளைப் பற்றிச் சொன்னேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த காலத்திலேயே எடுக்கப்பட்ட நடைமுறைதான் இது. அப்பொழுதும் சிபாரிசுக்காகச் செல்ல முடியாது. இப்போதும் செல்ல முடியாது. சிபாரிசுகளே இல்லாமல் செய்து கொண்டிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறபோது கூட யாரும் இடம் கேட்டு கல்லூரிகளுக்குப் போகிற சூழ்நிலை இல்லை. எந்த எம். எல். ஏ யும் அப்படி கல்லூரிகளுக்குப் போவதில்லை. அவர் மட்டும்தான் போயிருக்கிறார்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, முறைகேடாக காரியங்களைச் செய்வதுதான் தப்பு. என்னுடைய தொகுதியிலே முறையாக மார்க்குகள் வாங்கிய பலபேருக்கு ஒட்டுமொத்தமாக இடம் கிடைக்கவில்லை என்ற சூழ்நிலையில்தான் அது எப்படி நியாயமாகும் என்று கேட்டு அறிவதற்காக நான் போனேன். அது மட்டுமல்ல....(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இந்த இடத்திலே நான் ஒரு விளக்கம் சொல்லியாக வேண்டும். தமிழகத்தில் எந்த இடத்தில் ஒரு அரசு கல்லூரி இருந்தாலும் தமிழகத்தில் இருக்கிற அத்தனை பேர்களுக்கும் அதிலே விண்ணப்பம் செய்ய உரிமை இருக்கிறது. குறிப்பிட்ட தொகுதியில் அது இருக்கிறது என்ற காரணத்தால் பிரஃபெரன்ஸ் கிடையாது. அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக வேண்டுமானால் 5 மார்க்குகளோ அல்லது 10 மார்க்குகளோ கொடுக்கலாம். இன்னும் சொல்லப் போனால் தற்போது மாணவர்களைச் சேர்ப்பது என்பது ஒரு கிளார்க்கினுடைய வேலையாக இருக்கிறதே தவிர பிரின்சிபாலின் வேலையாகக்கூட அது இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் அந்தக் கல்லூரிக்குச் சென்றது, அப்படி ஒட்டுமொத்தமாக பலபேருக்குக் கிடைக்காத சூழ்நிலை எப்படி ஏற்பட்டது, ஏன் வரவில்லை என்று பார்க்கத்தான்

சென்றேன். சிபாரிசுக்காக அல்ல. சட்டவிதிகளுக்கு மாறாகவும் அல்ல. நான் இதில் ஒரு முக்கியமான விஷயம் அமைச்சர் அவர்களிடத்திலே தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆளும் கட்சியிலே உள்ள பெருமக்களோ, அமைச்சர்களோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்களோ கல்லூரிகளுக்கு யாருக்கும் இட அனுமதி கேட்டு கடிதங்கள் கொடுக்கவில்லை என்று சொல்லத் தயாராக இருக்கிறார்களா......(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்கு என்ன சொன்னேனோ அதுதான் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும். அவர் போனாலும் தவறு என்றால், இவர்கள் போனாலும் தவறுதான். யாரும் அப்படி சிபாரிசு கேட்டு போகக்கூடாது.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கு வழியில் இறங்கக்கூடாது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொல்கிறார். அமைச்சர்களானாலும் சரி, மற்ற கட்சி உறுப்பினர்களானாலும் சரி சிபாரிசு செய்யக்கூடாது என்று கல்வியமைச்சர் அவர்கள் சிபாரிசு செய்திருப்பதற்கு நன்றி. இன்னு ஒரு முக்கியமான பிரச்னை பற்றிய விளக்கத்தை நான் அவர்களிடத்திலேயிருந்து கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பற்றிய சட்டமுன்வடிவினைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அன்றைக்கு 1922 ஆவது வருடத்திய சட்டத்தின் அடிப்படையிலே-அன்றைக்கு கல்விக்காக ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் மிகச் சிறப்பான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அவர் மிகப் பெரிய வள்ளல் என்பதிலே மாறுபட்ட கருத்துக்கள் கிடையாது. அந்தக் காலத்திலேயே 25 இலட்சம் ரூபாய் நன்கொடையை இந்தக் கல்விக்காக கொடுத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 5.30)

அன்றைக்கு 25 இலட்சம் ரூபாய் என்று சொன்னால் அது இன்றைக்கு ஒரு பெரிய காரியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. மேலும் அந்தத் தொகையிலே மட்டும் அந்த நிர்வாகம் இயங்கவில்லை. இன்றைக்கு அரசாங்கம் உட்பட பல்வேறு அமைப்புகளின் மூலம் பல நிதி உதவிகள் அவற்றிற்கு வருகின்றன. ஆனால் அங்கே பல நிர்வாகச் சீர்கேடுகள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பலமுறை இந்த மன்றத்தில் சொல்லி இருக்கிறார்கள். அதுபற்றி விரைவில் சட்டம் வரும் என்று கூடச் சொன்னார்கள். ஆகவே அதற்கு சட்டம் கொண்டு வரப்படாமல் இப்போது இதற்கு மட்டும் சட்டம் கொண்டு வந்திருப்பது எந்தவிதத்திலே நியாயம் என்பதை நான்



இப்போது அமைச்சரவர்களிடத்திலே கேட்க விரும்புகிறேன். எஸ்.ஐ.இ.டி. கல்லூரி விவகாரம் பற்றி அதிகம் பேசத் தேவையில்லை. அதுபற்றி பேசவேண்டிய அளவுக்கு எல்லோரும் பேசி விட்டார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்துச் சொல்லியதுபோல நிர்வாகத்தில் தவறு ஏற்படுகின்றது என்று சொன்னால் அரசாங்கம் எடுக்கின்ற நடைமுறையிலும் சரி, மற்ற தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட நடைமுறைகளிலும் சரி பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. முதலாளி, தொழிலாளி சம்பந்தப்பட்ட வகையிலே பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆனால் அப்போது முதலாளிகள் பக்கம் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா என்று தலைவர் கலைஞர் அவர்கள் கேட்டார்கள். பஸ்களைப் பொறுத்தவரையில் தனியார் துறையிலேகூட பல்வேறு ஊழல்கள் இருக்கின்றன. அப்படி இருந்தும் தேசியமயமாக்குகின்ற கொள்கையினை அமல் நடத்துகின்ற நீங்கள் தனியார் போக்குவரத்துத் துறையிலே உள்ள பல்வேறு தவறுகளைச் சுட்டிக்காட்டியதற்குப் பிறகும் பேருந்துகள் தனியாரிடம் இருப்பதுதான் வசதியானது என்று நீங்கள் அன்றைக்குப் போக்குவரத்து மானியத்திலே பதிலளிக்கின்றபோது சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் மட்டும் சிறுபான்மை கல்லூரிகளுக்கு அது பொருந்தாது என்று சொல்லி அவற்றை அரசாங்கம் எடுத்துக் கொள்கிறது என்று சொல்வது தவறு. ஆனால் சிறுபான்மைச் சமுதாயம் மட்டுமல்ல, யார் தவறு செய்தாலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். சிறுபான்மையோர் மட்டுமல்ல, யார் தவறு செய்தாலும் தவறு செய்வதை சட்டத்தின்படி அனுமதிக்க முடியாது. ஆனால் உங்களுடைய அணுகுமுறைகள் திட்டத்திற்கு இடம் மாறுபடுகின்றன. காலத்திற்குக் காலம் மாறுபடுகின்றன. அதுவும் குறிப்பாக வருத்தத்தோடு அன்றைக்குப் பேசிய நமது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'நான் கோவை மேற்குப் பகுதியிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன், முஸ்லீம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன். எனவே நான் எப்படி சிறுபான்மை மக்களுக்கு எதிராகப் போவேன்' என்று கேட்டார்கள். அப்படி கேட்கக்கூடிய உங்களை அவர்கள் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. இன்றைக்காவது சிறுபான்மைச் சமுதாயம் உங்களைப் புரிந்துகொண்டு.......

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, சிறுபான்மைச் சமுதாயம் என்றால் முஸ்லீம் சமுதாயம் மட்டும் என்று நினைத்துக் கொண்டு பேசுகிறார்கள். முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாமல் என்னுடைய பகுதியிலே மொழிவாரி சிறுபான்மையினரும் இருக்கிறார்கள். மலையாளிகள் இருக்கிறார்கள். குஜராத்தியர்கள் இருக்கிறார்கள். இப்படிப் பார்த்தால் தமிழர்

களும் அந்தத் தொகுதியிலே சிறுபான்மையோராகத்தான் இருக்கிறார்கள். கோமுட்டிச் செட்டியார் கூட இருக்கிறார்கள். தெலுங்குச் செட்டியார்கள் இருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு சிறுபான்மையோர் இருக்கிறார்கள் என்ற அர்த்தத்திலேதான் நான் சொன்னேன். எனவே சிறுபான்மையோர் பற்றி நல்ல அக்கறை மாண்புமிகு உறுப்பினரை விட அதிகமாக எனக்கு இருக்கின்றது என்பதை வலியுறுத்துகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, சிறுபான்மைச் சமுதாயம் பற்றிய ஒரு பொய்ய விளக்கத்தை வெளியிட்டதற்காக கல்வி அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் சிறுபான்மையோர் என்று சொல்கின்ற போது, முஸ்லீம் சமுதாயத்தினர் மட்டும்தான் என்று கருதுகின்றவனல்ல நான். லிங்க்விஸ்டிக் மைனாரிட்டிஸ் கூட சிறுபான்மைச் சமுதாயம்தான். அதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நிர்வாகத்திலே சீர்கேடு என்று சொல்லிவிட்டு சிறுபான்மைச் சமுதாயத்தினரின் உரிமையைப் பறிப்பது எப்படிச் சரியானதாகும்? நம்முடைய துரைமுருகன் அவர்களுடைய தொகுதியிலே வேலூரிலே கூட கிறிஸ்தவ மிஷனரி ஹாஸ்பிட்டல் இருக்கின்றது. அங்கே பல தவறுகள் நடப்பதாகச் சொல்லப்பட்டது. இந்த சர்க்காருக்கு தைரியம் உண்டா? மிஸ்மானேஜ்மென்ட் என்று சொல்லி எனவே அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்று சொல் அரசாங்கம் எடுத்துக் கொள்ள முடியுமா? அப்படியானால் அரசாங்கத்தின் கைவரிசையினைப் பார்க்கலாம். அப்படி எடுத்துக்கொள்ள உங்களால் முடியுமா? அப்படி வேலூரிலே நடத்தப்படுவது சிறுபான்மைச் சமுதாயத்தினரின் நிர்வாகம் தானே, ஆனால் அங்கே நீங்கள் போக முடியாது. எனவே இந்த அரசாங்கம் இரட்டை அணுகுமுறைகளைக் கொண்டு இயங்குகின்றது. 928-வது வருடத்திய சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் மாற்றப்படவேண்டும். அவற்றுக்குத் திருத்தம் கொண்டு வரப்படவேண்டும் என்று கேட்டு இந்த அரசு இரட்டை அணுகுமுறைகளைக் கையாளுகின்றது என்று கூறிக்கொண்டு இரட்டை இலை என்பதால் இரட்டை அணுகுமுறைகளையும், இரட்டை நடிப்பும் தேவையில்லை என்று சொல்லி முடிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் ஒரு கல்லூரி திறப்பதற்கு எனேபிள் பண்ணக்கூடிய, உதவி செய்யக்கூடிய இந்த பில்லை எங்களைப் பொறுத்தவரைக்கும்—எங்கும் கல்லூரி திறப்பதற்கு எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. சிதம்பரத்தில் மட்டுமல்ல, இன்னும் பல கல்லூரிகள் அடிஷனலாக மற்ற வட்டாரங்களில் திறப்பதற்கு எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால்





அண்ணாமலை யூனிவர்சிடியிலே இருந்த பட்டப்படிப்பு வகுப்புகள் மூடியதை இந்த அரசு கொள்கை அடிப்படையில் ஏற்றுக்கொள்கிறது என்று சொல்லக்கூடிய பொசிஷனை எங்களால் அக்செப்ட் பண்ணமுடியாது இந்த நிகழ்ச்சியை நிச்சயமாக நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்; இதை எதிர்க்கிறோம்.

அது மட்டுமல்ல, எங்கள் கோரிக்கையை இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புவதெல்லாம் முந்தா நாள் நிறைவேற்றப் பட்ட சட்டத்தை வைத்துக்கொண்டு அதன்மூலம் சர்க்கார் பெற்ற அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அண்ணாமலை யூனிவர்சிடியில் மூடியிருக்கக்கூடிய அந்தப் பட்டப் படிப்பு வகுப்புகளை மீண்டும் திறப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அண்ணாமலை யூனிவர்சிடியில் மீண்டும் அந்தப் பட்டப் படிப்பு வகுப்புகளைத் திறக்க வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம். குறிப்பாக, ஹைகோர்ட் தீர்ப்புக்குப் பிறகு, அண்ணாமலை யூனிவர்சிடியைப் பொறுத்த வரைக்கும் இப்போது எடுத்திருக்கக் கூடிய முடிவு சட்டவிரோதமானது என்று தீர்ப்புகொடுத்த பிறகு அதற்கு மேல் அப்பீல் பண்ணாமல், ஸ்டேயும் வாங்காமல் இருக்கிறபோது, அந்த ஐட்ஜ்மென்ட் ஸ்டான்ட்ஸ், எனவே தொடர்ந்து மூடியிருக்கக்கூடிய அந்த நிகழ்ச்சி இல்லீகல், இந்த இல்லிகாலிட்டியை நாம் அனுமதிக்கக் கூடாது. ஆகவே அந்த பட்டப்படிப்பு வகுப்புகளைத் திறப்பதற்கு நாம் ஏற்பாடு செய்தாக வேண்டும்.

வகுப்புகள் மூடியதை அரசாங்கம் கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொள்கிறது என்றாலும், அதற்கான ஒன்றிரண்டு காரணங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினாலும் அந்த விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையல்ல.

They are not acceptable not convincing. அவைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவையல்ல என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். மாணவர்களுடைய போராட்டங்கள் அங்கே வகுப்புகளிலே ஏற்பட்டன, அங்கே மாணவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள், அதனால் அங்கே அடிக்கடி போராட்டங்கள் ஏற்படுகின்றன என்ற ஒன்றிரண்டு காரணங்களை மையமாக வைத்துக் கூறப்படுகிறது. போராட்டத்தினால் ரிசர்ச் ஒர்க் பாதிக்கப்படுகிறது என்று......

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போராட்டங்கள் காரணமாக அங்கே வகுப்புகள் மூடியதை நாங்கள் ஆதரிக்கவில்லை.

வன்முறைச் செயல்கள் என்ற அடிப்படையிலே, ஜாதியின் அடிப்படையிலே அங்கே வன்முறைகள் நடந்திருக்கின்றன. ஒரு அறையிலே 4, 5 பேர்கள் இருக்கிறார்கள். கத்தியை வைத்துக்கொண்டு, செயின்களை வைத்துக்கொண்டு அங்கே கொலைகள் நடந்திருக்கின்றன. நிறையப் பேர்கள் கத்தியை வைத்துக்கொண்டு குத்திக்கொண்டார்கள். இப்படி கட்டுக் கடங்க முடியாத ஒரு நிலையில் அங்கே வன்முறை அதிகமான காரணத்தினால்தான், இந்த ஒரு காரணத்திற்காகத்தான் பட்டப்படிப்பை மூடுவதற்கு நாங்கள் ஆதரவு தந்தோம். இன்னொரு காரணம், பல்கலைக் கழகம் என்பது ஒரு ஆராய்ச்சி மையமாக, மேல் உயர் நிலைக் கல்வி மையமாக, சமுதாயப் பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய ஒரு ஆராய்ச்சி மையமாக. சமுதாயத்திற்கும் அரசிற்கும் பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும். இதே பல்கலைக் கழகம் தென்னாற்காடு மாவட்டத்தில் 50 ஆண்டுக்காலமாக இருக்கிறதே தவிர, அந்த தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மக்கள் பிரச்னையில் இதுவரையில் அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கவனம் செலுத்தவில்லை. இப்போது நாங்கள் முயற்சி எடுத்தோம். அதற்குப் பிறகுதான் 7, 8 பிராஜக்டை அவர்கள் ஆரம்பித்து ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக, இவைகளுக்கு நாம் ஆதரவு தந்தால், வசதி தந்தால் இந்தப் பல்கலைக் கழகம் அந்த மாவட்டத்திலுள்ள மக்களுக்குப் பயன்படும். அது மட்டுமல்ல. அந்த மாவட்டம் ஓரளவிற்கு பொருளாதார ரீதியாக, சமுதாய ரீதியாக முன்னேறக்கூடிய ஒரு முகாந்திரம் இருக்கிறது. அதன் காரணமாக மேல் பட்டப் படிப்பிற்கு பல்கலைக்கழகத்திலே மாணவர்களைக் குறைவாகவும்- இப்போது சென்னையிலேகூட, ஒரு 15 மாணவர்களை வைத்துக் கொள்ளலாமே தவிர, அதிகமான மாணவர்களை வைத்துக் கொள்ளக்கூடாது. இப்போது மூடப்பட்டிருப்பதுகூட ஒரு நல்ல நோக்கோடு, நல்ல எண்ணத்தோடுதான், அரசினுடைய பணி மக்களுக்கு நல்ல முறையில் பயன்பட வேண்டும், அந்த நோக்கத்தில்தான் இந்தக் காரியங்களைச் செய்கிறோம்.

இன்றைக்கு அண்ணா பல்கலைக் கழகத்திலேகூட, பி. ஈ. பட்டப் படிப்பை எடுத்து விடலாம் என்ற பிரச்னையை அதன் வைஸ் சான்சலர் அவர்கள் யோசனையாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பல்கலைக் கழகம் ஒரு கன்சல்டன்சி, ரிசர்ச் செய்யக்கூடிய அந்தஸ்தோடு, அது தொடர்புள்ள வேறு காரியங்களைச் செய்தால்தான், டிபார்டுமெண்டுடன் தொடர்பு கொண்டு பல காரியங்களைச் செய்தால் மக்களுடைய பல்வேறு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உதவியாக இருக்கும். இல்லாவிட்டால், பி. ஈ. பட்டதாரிகளை உற்பத்தி செய்து இங்கேயிருந்து வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போகின்ற ஒரு காரியம்தான் அங்கே நடக்கும்.



(பிற்பகல் 5-40)

**திரு. ரா. உமாநாத்:** காரணம் கூறுகிறபோது, போராட்டங்கள், பலவிதமான வன்முறைச் சம்பவங்கள் ஜாதி அடிப்படையில் பல விளைவுகள் ஏற்பட்டு சைக்கிள் செயின் விவகாரங்கள் எல்லாம் நடைபெறுவதாகச் சொன்னார்கள். இது அடிப்படையான பிரச்சனை என்று சொல்வார்கள். மூடிவிடுவதால் மாணவர்கள் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது என்றாலும்— இன்னொரு காலேஜ் திறப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள்— ஏற்கனவே பாதியில் படித்துவிட்டு இருக்கிற மாணவர்கள் அங்கேயேதான் இருக்கிறார்கள். அவர்கள் அந்த கோர்ஸ்களை முடித்துவிட்டுத்தான் அங்கேயிருந்து போவார்கள். ஆகவே, அப்போது அங்கே வன்முறை ஏற்படும் அல்லவா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** விடுதியிலே நிறையப் பேர்கள் இருந்தால் வன்முறை நடக்கிறது என்று சொல்கிறபோது உள்ளூர் மாணவர்கள் அதிகமான பேர்கள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, இப்போது நாம் ஆரம்பிக்கிற கல்லூரி உள்ளூர் மாணவர்களுக்கும், பக்கத்தில் இருக்கின்ற மாணவர்களுக்கும் இதுவரை இருந்துவந் வகுப்புகள் பெரும்பாலும் வெளியூர்க்காரர்களுக்கும் வெளி மாவட்டத்துக்காரர்களுக்கும். அவர்கள் வந்து இந்த உணவு விடுதியில் தங்கிக் கொண்டு பல்கலைக் கழகமே சரியாக இயங்காத முறையில் குறிப்பாக ஜாதி அடிப்படையில் கலவரங்கள், ஜாதி வன்முறைகள் நடந்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் உண்மையிலேயே வரவேற்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்,

போராட்டம் என்பது வேறு, மாணவர்களுடைய உரிமைக்காக அவர்கள் போராடுவது என்பது வேறு. அதை நாம் தவறு என்று சொல்லவில்லை. அப்படி பட்ட போராட்டம் வருகிறபோது நாம் அந்தப் பிரச்சினைகளைப் பார்த்து தீர்த்துக் கொள்கிறோம். ஆனால் இது நீங்களோ மற்றவர்களோ யாருமே விரும்பாத பிரச்சனை. நாம் 2, 3 ஆண்டுக்காலமாக பலவிதமான முயற்சிகளை மேற்கொண்ட பிறகுகூட தொடர்ந்து இந்த நிலைமை இருந்து வருகிறது என்பதைப் பார்க்கிறோம். அதனால்தான் நாங்கள் இப்படிப்பட்ட நிலைமைகளை மேற்கொண்டு இருக்கிறோம்.

**திரு. ரா. உமாநாத்:** ஜாதிக் கலவரங்கள் மாணவர்களிடையே இருக்கக்கூடாது. ஆனால் ஏற்கனவே படித்த மாணவர்கள் தொடர்ந்து அங்கே படித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களிடத்தில் அப்படிப்பட்ட உணர்வுகள் இருக்காதா? ஆகவே இந்த ப்ராப்ளம் அங்கே இருக்கத்தான் செய்யும். you have yet to face it. இப்போது புதிதாக நீங்கள் திறக்கக்கூடிய கல்லூரியிலே ஆஸ்டல்

இல்லை என்றாலும் கூட வெளியேயிருந்து வரக்கூடிய மாணவர்கள் என்று வருகிறபோது ஜாதி அடிப்படையில் கலவரங்கள் வரலாம். பொதுவாக புதிதாக வரக்கூடிய கல்லூரியிலே ஜாதிக் கலவரங்கள் வரத்தான் செய்யும். அந்த செக்ஷன் மாணவர்கள் அங்கே வரத்தான் செய்வார்கள். ஆகவே இது உண்மையான காரணம் அல்ல. நிர்வாகம் உண்மை என்று எதைச் சொல்கிறதோ அதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள் நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. கோர்ஸ் முழுவதும் முடியும் வரை இந்த ப்ராப்ளம் அங்கே தொடர்ந்து இருக்கத்தான் செய்யும் புதுக் கல்லூரியிலும் அந்த ப்ராபளம்வரத்தான் செய்யும் இதே மாதிரி நாம் மூடிக்கொண்டே போனால் கடைசியில் பள்ளிக்கூடங்களைக் கூட மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும் இந்த வட்டாரத்திலே எலித் தொல்லைக்காக எலியை கொல்வதற்கு பதில் குடிசைக்கே நெருப்பு வைக்கிற நிலைமை மாதிரி இருக்கிறது நிர்வாகத்தின் ஆர்குமெண்டு. நீங்கள் அந்த ஆர்குமெண்டை ஏற்றுக்கொண்டு விட்டீர்கள். நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த டிஸ்டிரிக்ட் ஆராய்ச்சிக் கூடமாக மாற வேண்டும், அப்போதுதான் அதிலே கான்செண்டிரேட் பண்ணுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று சொல்வது எல்லாம் நல்ல நோக்கம் தான். நிர்வாகத்தினுடைய அந்த நோக்கத்தில் தவறு இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஐதராபாத் யூனிவர்சிட்டியை எடுத்துக் கொண்டால் ஐ ஆம் சப்ஜெக்ட் டு கரெக்ஷன்—எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன் ஐதராபாத் யூனிவர்சிட்டியில் பட்டப்படிப்பு உண்டு. இங்கேயும் இந்த மாதிரி தகராறு வருகிறது. ஆனால் அதனால் ரிசர்ச் எதுவும் பாதிக்கப்படவில்லை

Why cant, you accept the administrations argument?

டெல்லியிலே ஜவஹர்லால் நேரு யுனிவர்சிடி இருக்கிறது. அடிக்கடி அங்கே தகராறு என்று பேப்பரிலே வந்துகொண்டிருக்கிறது. அங்கேயும் பட்டப் படிப்புகள் உண்டு. அடிக்கடி தகராறுகள் உண்டு. இங்கே ஜாதி என்றால் அங்கே வன்முறை. சோஷிய ப்ராப்ளம்ஸ் எல்லா இடங்களிலும் இருக்கிறது. அதனால் அந்த யுனிவர்சிடியிலே ரிசர்ச் பாதிக்கப்படவில்லையே. ஆனால் அண்ணாமலை யுனிவர்சிடியிலே பாதிக்கப் பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே உண்மையான காரணம் என்று நிர்வாகம் சொன்னதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளலாம். நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த வகுப்புகளை க்ளோஸ் பண்ணியதற்கு உண்மையான காரணம் அந்த நிர்வாகம் அதை வியாபாரப் பொருளாகப் பயன் படுத்துவதுதான். Heart sof h rts t e Educ tion Minister knows it. மனதிற்குள்ளே உங்களுக்கே அது தெரியும். அதை அவர்கள் பேமிலி ப்ராப்பர்டியாக குடும்பச் சொத்தாக பாவித்து, லஞ்சம், ஊழல் பகிரங்கமாக அந்த அட்மினிஸ்டிரேஷனிலே





நடந்திருக்கிறது. நான் அதைப்பற்றி ஏற்கெனவே இந்த அவையிலே சொல்லி இருக்கிறேன். ஒரு அட்மிஷனுக்கு 25 ஆயிரம் ரூபாய் சில சீட்டுகளைப் பொறுத்தவரையில் என்று நான் சொல்லியிருக்கிறேன். அட்மிஷனில் லஞ்சம், அப்பாயின்ட் மெண்டிலே லஞ்சம், அப்பாயின்ட்மெண்டிலே பேவரிட்டிஸம், சொந்தக்காரர்களுக்கு வேலை, அது யுனிவர்சிடியா?

Do you call it an University?

அப்படி ஊழல்கள் நடைபெறக்கூடிய யுனிவர்சிடியாக இத்தனை ஆண்டுக்காலமாக நடந்து வந்திருக்கிறது. ஆகவே ரியல் சோர்ஸ் என்னவென்றால் யுனிவர்சிடி அட்மினிஸ்டிரேஷனில் உள்ள இர்ரகுலாரிடிஸ், கரப்ஷன்தான்.

As longas the foun ain head is there, water will be. going on coming. நீங்கள் டிரபிளைத் தடுக்க அந்தரியல் சோர்சில் கைவைப்பதற்குப் பதிலாக இதைச் செய்கிறீர்கள். ஆகவே டிரபிளைத் தீர்க்க முடியாது. you dare not c allenge. ஆகவே அதுதான் அங்கே இருக்கக்கூடிய ஊற்று என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த ஊழல்களை யெல்லாம் அங்கே பகிரங்கமாக வெளியே கொண்டுவந்தது அங்கே உள்ள ஆசிரியர்கள்தான். On the basis of these exposures furt her dem cratisatio took pl ce என்று சொல்கிறேன். யாருமே சொல்ல முடியாத, தைரியம் இல்லாத காலம் ஒன்று இருந்தது. ஆனால் அங்கே உள்ள ஆசிரியர்கள் பகிரங்கமாக ஹேன்ட் பில்ஸ் போட்டு சேலஞ் பண்ணுவதைப் போல் கொண்டுவந்தார்கள். யார் வேண்டுமானாலும் சேலஞ் பண்ணலாம் என்ற முறையிலே வெளியே கொண்டு வந்தார்கள். அந்த ஊழல்கள் இல்லையென்று சொன்னால் அந்த நிர்வாகமே அந்த ஆசிரியர்கள் பேரிலே கேஸ் போட்டிருப்பார்களே, ஆகவே. I stand corrected Coruption is the successful occ pation there.

அந்த உண்மையை ஆசிரியர்கள் வெளியே கொண்டுவந்தார்கள். மாணவர்கள் வெளியே கொண்டு வந்தார்கள். அதுதான் பேக்ட். அந்த முறையிலேதான் ஒரு கோரிக்கை வந்தது. ஆசிரியர்களும் சரி, மாணவர்களும் சரி, ஜெனரல் பப்ளிக்கும் சரி, அந்த யுனிவர்சிடியை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற பாப்புலர் டிமாண்டை வைத்தார்கள். அந்தக் கட்டத்திலே அரசும் அதற்கு அஷ்யூரன்ஸ் கொடுத்தது. ஒரு குடும்ப சொத்தாக இருப்பதை, ஆதிக்கத்தை மாற்றவேண்டுமென்பதற்காக டெமாக்ரடைஸ் பண்ணுவதற்காக, ஜனநாயகப்படுத்து

வதற்காக சட்டம் கொண்டுவரப்படும் என்ற அஷ்யூரன்ஸ் கொடுக்கப்பட்டது. அந்த வகுப்புகளை மூடுவதற்கு பிரதான காரணம், அந்த அட்மினிஸ்டிரேஷன் ஊழல்களை அந்த ஆசிரியர்கள் தானே, அந்த மாணவர்கள்தானே அம்பலப்படுத்தினார்கள். ஆகவே கண்டிசமாக இருக்கக்கூடிய அந்த செக்ஷனை குளோஸ் பண்ணிவிட்டால் நல்லது என்று திடீரென்று எந்தவிதமான தடையும் இல்லாமல் அந்த ஊழல்களை நடத்திக் கொண்டு போகலாம் என்று நினைத்து அப்படிச் செய்தார்கள். ஆகவே அவர்களை வெளியேற்றுகிறோம் என்று சொன்னார்கள். பிறகு Further democratisation took place. Abolition of further courses took place. என்பது தான் உண்மை. அரசும் ஒரு ஸ்டேஜிலே ஒப்புக்கொண்ட அரசும் பின்னாலே திடீரென்று நிர்வாகத்தை ஆதரித்தது. அங்கே தான் விவகாரம் வருகிறது. அந்த பேக்டையும் யாரும் மறுக்க முடியாது.

(பிற்பகல் 5.50)

எர்லியர் ஸ்டேஜிலே இந்த உண்மைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஏற்றுக் கொண்டதால் தான் பல்வேறு அஷ்யூரன்ஸ்கள் வந்தன. பிறகு திடீரென்று வேறு பொசிஷன். அட்மினிஸ்டிரேஷன் குளோஸ் பண்ணியது சரிதான் என்று ஆதரித்தது. உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது சிதம்பர இரகசியம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் உறுதிமொழிகள் கொடுத்திருக்கிறோம். அதை இல்லையென்று சொன்னாலும் அல்லது திருப்பப் பெற்றுக் கொண்டாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்த குற்றச்சாட்டிற்கு காரணம் ஆகிவிடுவோமே தவிர, பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். தக்க நடவடிக்கைகள் எடுப்போம். அன்றைக்குக் கூட அதைத்தான் சொன்னேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மற்ற எல்லாப் பல்கலைக் கழகங்களையும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். தேவையான நடவடிக்கைகள் எடுப்போம் என்பதை இன்றைக்கும் சொல்கிறோம். வாக்குறுதியை விட்டு விடவில்லை. நிச்சயமாக செய்வோம். அந்த அடிப்படையில் ஏதோ வராதது போலவும், நாங்கள் நிறுத்தி வைத்திருப்பது போலவும் நிறுத்தி வைப்பது என்று நினைப்பது கூட மிக மிக தவறாகும். பரிசீலனை ஒரு பக்கம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் நாங்கள் நிச்சயமாக





காலம் யாரும் அந்தப் பல்கலைக் கழகத்தைப் பற்றிக் கவலைப் படாமல் இருந்திருக்கலாமே தவிர, நாங்கள் வந்ததற்குப் பிறகு அதற்காக கவலைப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுப்போம் என்று உறுதிமொழி தந்து அந்த அடிப்படையில் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றமாட்டோம் என்பதை வைத்து மேற்கொண்டு பேசவேண்டியதில்லை.

திரு. ரா. உமாநாத். வாக்குறுதி என்ற பிரச்னையிலே அல்ல நான் ரெய்ஸ் பண்ணியது. அங்கேயிருந்து வந்திருக்கக் கூடிய சார்ஜஸ், மால்—அட்மினிஸ்ட்ரேஷன், கரப்ஷன், இரெகுலாரிட்டி, இந்த விஷயத்தைப் பொறுத்த வரைக்கும் பேசிஸ்—ஆக இருப்பதை அரசாங்கம் ஒரு ஸ்டேஜிலே ஏற்றுக் கொண்டு ஒரு பர்ம் பொசிஷன் எடுத்தது. அதனுடைய ஊற்றை குளோஸ் பண்ணுவதற்கென்று வகுப்புகளை அபாலிஷ் பண்ணுவதற்கென்று உள்ளவற்றில் ஆரம்பத்தில் எடுத்த பொசிஷனில் திடீரென்று பிறகு மாறி அது முழுக்க குளோஷரை ஆதரித்தது மட்டுமல்ல, கொள்கை ரீதியிலே ஏற்றுக்கொள்கிறோம் என்று கொள்கை வடிவம் கொடுத்திருக்கிறது என்பது கம்ப்ளீட்டாக டாப்சி டர்வி பொசிஷன் அரசாங்கம் எடுத்தது. ஆயிரம் எக்ஸ்ப்ளெயின் பண்ணினாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் I do not doubt his bonafide or anything எக்ஸ்ப்ளனேஷன் பப்ளிக்கை பொறுத்த வரைக்கும், அல்லது என்லைட்டன்ட் பப்ளிக் ஒப்பினியன் இந்த இரண்டைப் பொறுத்த வரைக்கும் அது கன்வின்சிங்காக இல்லை. திடீரென்று இப்படி ஒரு சேஞ்ஜ் வருவதற்கு என்ன காரணம் within a short period என்ற விஷயத்திலே நிச்சயமாக அங்கே இது இருக்கிறது. ஆகவே நடந்தது என்னவென்று சொன்னால் அரசாங்கம் இன்றைக்கு குளோஷர் பொறுத்தவரைக்கும் வகுப்புகளை மூடியவரைக்கும் கொள்கை ரீதியாகவும் மற்றவகையிலும் ஆதரிக்கிறீர்கள் என்கிறபோது நடைமுறையிலே அதற்கு பொருள் அங்கே நடக்கும் லஞ்ச ஊழல் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஆதரவு கொடுக்கிறது என்பதுதான் பொருள் ஆகும். லஞ்ச ஊழல் குறித்து நான் கேட்கிறேன். லஞ்ச ஊழல் ப்ரீயாக போவதற்குத் தான் அதை நல்லதொரு ஆராய்ச்சிக் கூடமாக ஸ்ட்ரெங்த்தன் பண்ணப்போகிறதா? என்ன ஆராய்ச்சி, நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்கும் அந்த அட்மினிஸ்டிரேட்டிவ் பேமிலி செய்திருக்கிற ஊழல் முறைகள் எல்லாம் அம்பலமான பிறகு புது ஊழல் முறைகள் என்ன என்று கண்டுபிடிப்பதற்கு ரிசர்ச்சா? என்ன ரிசர்ச்? அதற்கு ஸ்டூடன்ஸ் ட்ரபிள், வயலென்ஸ் வந்து குறுக்கே நிற்கிறதா? அப்சல்யூட்லி அன்—கன்வின்சிங். ஆகவே அரசாங்கம் எடுத்திருக்கின்ற டெசிஷன் அன்—கன்வின்சிங். அதனாலே எந்தமாதிரி மற்ற யூனிவர்சிட்டீஸ், இந்த வகுப்புகள் இருக்கிற இடங்களிலே இப்படி நீங்கள் சொன்ன வன்முறைகள் இருந்தும் கூட ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டாக வலுப்படுத்துவதற்கு குறுக்கே நிற்காது இருக்கிறபோது இங்கேயும் குறுக்கே நிற்காது.

வதற்காக சட்டம் கொண்டுவரப்படும் என்ற அஷ்யூரன்ஸ் கொடுக்கப்பட்டது. அந்த வகுப்புகளை மூடுவதற்கு பிரதான காரணம், அந்த அட்மினிஸ்டிரேஷன் ஊழல்களை அந்த ஆசிரியர்கள் தானே, அந்த மாணவர்கள்தானே அம்பலப்படுத்தினார்கள். ஆகவே கண்சமாக இருக்கக்கூடிய அந்த செக்ஷனை குளோஸ் பண்ணிவிட்டால் நல்லது என்று திடீரென்று எந்தவிதமான தடையும் இல்லாமல் அந்த ஊழல்களை நடத்திக் கொண்டு போகலாம் என்று நினைத்து அப்படிச் செய்தார்கள். ஆகவே அவர்களை வெளியேற்றுகிறோம் என்று சொன்னார்கள். பிறகு Further democratisation took place Abolition of further courses took place. என்பது தான் உண்மை. அரசும் ஒரு ஸ்டேஜிலே ஒப்புக்கொண்ட அரசும் பின்னாலே திடீரென்று நிர்வாகத்தை ஆதரித்தது. அங்கே தான் விவகாரம் வருகிறது. அந்த பேக்டையும் யாரும் மறுக்க முடியாது.

(பிற்பகல் 5.50)

எர்லியர் ஸ்டேஜிலே இந்த உண்மைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஏற்றுக் கொண்டதால் தான் பல்வேறு அஷ்யூரன்ஸ்கள் வந்தன. பிறகு திடீரென்று வேறு பொசிஷன். அட்மினிஸ்டிரேஷன் குளோஸ் பண்ணியது சரிதான் என்று ஆதரித்தது. உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற போது சிதம்பர இரகசியம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் உறுதிமொழிகள் கொடுத்திருக்கிறோம். அதை இல்லையென்று சொன்னாலும் அல்லது திருப்பப் பெற்றுக் கொண்டாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்த குற்றச்சாட்டிற்கு காரணம் ஆகிவிடுவோமே தவிர, பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். தக்க நடவடிக்கைகள் எடுப்போம். அன்றைக்குக் கூட அதைத்தான் சொன்னேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மற்ற எல்லாப் பல்கலைக் கழகங்களையும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். தேவையான நடவடிக்கைகள் எடுப்போம் என்பதை இன்றைக்கும் சொல்கிறோம். வாக்குறுதியை விட்டு விடவில்லை. நிச்சயமாக செய்வோம். அந்த அடிப்படையில் ஏதோ வராதது போலவும், நாங்கள் நிறுத்தி வைத்திருப்பது போலவும் நிறுத்தி வைப்பது என்று நினைப்பது கூட மிக மிக தவறாகும் பரிசீலனை ஒரு பக்கம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது அந்த அடிப்படையில் நாங்கள் நிச்சயமாக [illegible] தான் செய்வோம். இத்தனை ஆண்டுக்



காலம் யாரும் அந்தப் பல்கலைக் கழகத்தைப் பற்றிக் கவலைப் படாமல் இருந்திருக்கலாமே தவிர, நாங்கள் வந்ததற்குப் பிறகு அதற்காக கவலைப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுப்போம என்று உறுதிமொழி தந்து அந்த அடிப்படையில் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றமாட்டோம் என்பதை வைத்து மேற்கொண்டு பேசவேண்டியதில்லை.

திரு. ரா. உமாநாத். வாக்குறுதி என்ற பிரச்னையிலே அல்ல நான் ரெய்ஸ் பண்ணியது. அங்கேயிருந்து வந்திருக்கக் கூடிய சார்ஜஸ், மால்—அட்மினிஸ்ட்ரேஷன், கரப்ஷன், இரெகுலாரிட்டி, இந்த விஷயத்தைப் பொறுத்த வரைக்கும் பேசிஸ்—ஆக இருப்பதை அரசாங்கம் ஒரு ஸ்டேஜிலே ஏற்றுக் கொண்டு ஒரு பர்ம் பொசிஷன் எடுத்தது. அதனுடைய ஊற்றை குளோஸ் பண்ணுவதற்கென்று வகுப்புகளை. அபாலிஷ் பண்ணுவதற்கென்று உள்ளவற்றில் ஆரம்பத்தில் எடுத்த பொசிஷனில் திடீரென்று பிறகு மாறி அது முழுக்க குளோஷரை ஆதரித்தது மட்டுமல்ல, கொள்கை ரீதியிலே ஏற்றுக்கொள்கிறோம் என்று கொள்கை வடிவம் கொடுத்திருக்கிறது என்பது கம்ப்ளீட்டாக டாப்சி டர்வி பொசிஷன் அரசாங்கம் எடுத்தது. ஆயிரம் எக்ஸ்ப்ளெயின் பண்ணினாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் I do not doubt his bonafide or anything எக்ஸ்ப்ளனேஷன் பப்ளிக்கை பொறுத்த வரைக்கும், அல்லது என்லைட்டன்ட் பப்ளிக் ஒப்பினியன் இந்த இரண்டைப் பொறுத்த வரைக்கும் அது கன்வின்சிங்காக இல்லை. திடீரென்று இப்படி ஒரு சேஞ்ஜ் வருவதற்கு என்ன காரணம் within a short period என்ற விஷயத்திலே நிச்சயமாக அங்கே இது இருக்கிறது. ஆகவே நடந்தது என்னவென்று சொன்னால் அரசாங்கம் இன்றைக்கு குளோஷர் பொறுத்தவரைக்கும் வகுப்புகளை மூடியவரைக்கும் கொள்கை ரீதியாகவும் மற்றவகையிலும் ஆதரிக்கிறீர்கள் என்கிறபோது நடைமுறையிலே அதற்கு பொருள் அங்கே நடக்கும் லஞ்ச ஊழல் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஆதரவு கொடுக்கிறது என்பதுதான் பொருள் ஆகும். லஞ்ச ஊழல் குறித்து நான் கேட்கிறேன். லஞ்ச ஊழல் ப்ரீயாக போவதற்குத் தான் அதை நல்லதொரு ஆராய்ச்சிக் கூடமாக ஸ்ட்ரெங்த்தன் பண்ணப்போகிறதா? என்ன ஆராய்ச்சி, நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்கும் அந்த அட்மினிஸ்டிரேட்டிவ் பேமிலி செய்திருக்கிற ஊழல் முறைகள் எல்லாம் அம்பலமான பிறகு புது ஊழல் முறைகள் என்ன என்று கண்டுபிடிப்பதற்கு ரிசர்ச்சா? என்ன ரிசர்ச்? அதற்கு ஸ்டூடன்ஸ் ட்ரபிள், வயலென்ஸ் வந்து குறுக்கே நிற்கிறதா? அப்சல்யூட்லி அன்—கன்வின்சிங். ஆகவே அரசாங்கம் எடுத்திருக்கின்ற டெசிஷன் அன்—கன்வின்சிங். அதனாலே எந்தமாதிரி மற்ற யூனிவர்சிட்டீஸ், இந்த வகுப்புகள் இருக்கிற இடங்களிலே இப்படி நீங்கள் சொன்ன வன்முறைகள் இருந்தும் கூட ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டாக வலுப்படுத்துவதற்கு குறுக்கே நிற்காது இருக்கிறபோது இங்கேயும் குறுக்கே நிற்காது.

அதற்கு தடையாக இருப்பதற்காகத்தான் இதை செய்திருக்கிறார்கள். அரசாங்கம் இதை ஆதரிப்பது தவறு. அதை வாபஸ் வாங்க வேண்டும். குறிப்பாக ஹைகோர்ட் ஜட்ஜ்மெண்டை நீங்கள் பயன்படுத்திக்கொண்டு, நேற்று முன்தினம் நீங்கள் கொடுத்திருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு அங்கே மூடியிருக்கிற வகுப்புகளை மீண்டும் ரெஸ்டோர் செய்ய வேண்டுமென்றுதான் நாங்கள் கோருகிறோம். அந்த முறையில் நான் கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சென்ற ஆண்டு டிசம்பர் மாத வாக்கில் பட்டப் படிப்புகளைக் கைவிடுகிறோம் என்று பல்கலைக் கழகம் அறிவித்த பிறகு அடுத்த ஆண்டு—அதாவது, இந்த 1982-ஆம் ஆண்டு பட்ஜெட் கூட்டத்தில் பட்டப் படிப்பை சிதம்பரம் பகுதியில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தருவதற்காக இரண்டு அரசுக் கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டும் என்ற உறுதி அளித்து, இந்த அரசின் அந்த உறுதி மொழியின் அடிப்படையில், அதற்கு 1928—ஆம் வருஷத்திலே இயற்றப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய சட்டத்தில் 4—வது விதி தடையாக இருக்கிறது என்பதனால், அதை மாற்றுவதற்காக, அவசரம் அவசரமாக சட்டத்தைக் கொண்டு வந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை நான் பாராட்டுகிறேன், காட்டுமன்னார்குடி தாலுகா, சிதம்பரம் தாலுக்கா மாணவர்கள், மாணவிகள், பெற்றோர்கள், அரசு கலைக் கல்லூரி அமைப்புக் குழு சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களும் உமாநாத் அவர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழக நிர்வாகத்தைப் பற்றி பயங்கரமான குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். இந்த ஆண்டு மாத்திரமல்ல, கடந்த பல ஆண்டுகளாக அந்தக் குற்றச்சாட்டுகள் சாட்டப்படுவது எல்லோரும் அறிந்த உண்மையாகும். ஒரு நிர்வாகத்தைப் பற்றி இலஞ்ச ஊழல் மிகுந்த நிர்வாகம் என்றும் குடும்பச் சொத்தாக பாவிக்கிறார்கள் என்றும் அதை ஏதோ வியாபார ஸ்தலமாக நடத்துகிறார்கள் என்றும் சொன்ன பிறகு அதே நிர்வாகம் தான் அந்தப் பட்டப் படிப்புகளையும் நடத்த வேண்டுமென்று போராடுபவர்கள் கேட்கும்போதுதான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது.

ஒன்றை மாத்திரம் இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த காலத்தில் காங்கிரஸ் ஆண்ட பொழுதும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட பொழுதும் பல்வேறு குற்றச் சாட்டுகளை இதே பல்கலைக் கழகத்தைப் பற்றி சொன்னபொழுது அவர்களால் எல்லாம்



அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று மசோதா கொண்டு வர முடியவில்லை. நினைத்திருக்கலாம். ஆனால், மசோதாக்கள் அனைத்தும் கருவிலேயே சிதைந்து விட்டன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே உள்ள சின்டிகேட், செனட், அகடமிக் கவுன்சில் ஆகியவற்றில் இருப்பவர்கள் இரண்டு பருவத்திற்கு மேல்—மொத்தமாக 6 ஆண்டுகளுக்கு மேல்—ஒருவர் உறுப்பினராக இருக்கக்கூடாது என்ற சீர்திருத்தமான சட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் கொண்டு வந்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

அது மாத்திரமல்ல, கடந்தகால அரசுகள் செய்யாத அந்தச் சீர்திருத்தத்தை, இன்றைய தினம், உடனடியாக தேவைப்படுகின்ற அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழக 1928-ஆம் ஆண்டு சட்டத்தைத் திருத்துவதற்கு முன்வந்த முதல் அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை மறந்துவிடக்கூடாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஏதோ இருக்கிறது, இருக்கிறது என்றும் அது என்ன சிதம்பர இரகசியம் என்றும் சொல்கிறார்களே தவிர, நான் நன்றாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே கௌரவ டாக்டர் பட்டம் வாங்க வேண்டுமென்று பேரம் பேச வேண்டிய அவசியத்தில் எங்களுடைய முதலமைச்சர் இல்லை.

அது மாத்திரமல்ல, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொன்விழாக் கொண்டாட்டத்தின்பொழுது, நாங்கள் கௌரவ டாக்டர் பட்டம் தருகிறோம் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களிடம் சொன்னபொழுது, அதை மறுத்துவிட்டார் முதல்வர் அவர்கள். இந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மாத்திரம் அல்ல, தமிழ்நாட்டிலே உள்ள எந்தப் பல்கலைக் கழகமாக இருந்தாலும், நான் முதல்வராக இருக்கிற காலத்தில் கௌரவப் பட்டம் கொடுத்தால் வாங்க மாட்டேன் என்று சொன்ன முதலமைச்சர் இந்தியாவில் தமிழ் நாட்டிலேதான் இருக்கிறாரே தவிர வேறு எங்கும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அது மாத்திரம் அல்ல. இந்த மாமன்றத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு நிதி உதவி செய்தவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு முதலமைச்சராக இருந்தபொழுதோ அல்லது இல்லாத பொழுதோ நிதி உதவி செய்தார் என்று சொன்னால், அது புரட்சித்தலைவர் எங்களுடைய மாண்புமிகு எம். ஜி. ஆர்-யைத் தவிர வேறு யாரும் இல்லை. அதுவும் ஆட்சிக்கு வருவதற்கு

வதற்காக சட்டம் கொண்டுவரப்படும் என்ற அஷ்யூரன்ஸ் கொடுக்கப்பட்டது. அந்த வகுப்புகளை மூடுவதற்கு பிரதான காரணம், அந்த அட்மினிஸ்டிரேஷன் ஊழல்களை அந்த ஆசிரியர்கள் தானே, அந்த மாணவர்கள்தானே அம்பலப்படுத்தினார்கள். ஆகவே கண்சமாக இருக்கக்கூடிய அந்த செக்ஷனை குளோஸ் பண்ணிவிட்டால் நல்லது என்று திடீரென்று எந்தவிதமான தடையும் இல்லாமல் அந்த ஊழல்களை நடத்திக் கொண்டு போகலாம் என்று நினைத்து அப்படிச் செய்தார்கள். ஆகவே அவர்களை வெளியேற்றுகிறோம் என்று சொன்னார்கள். பிறகு Further democratisation took place Abolition of further courses took place. என்பது தான் உண்மை. அரசும் ஒரு ஸ்டேஜிலே ஒப்புக்கொண்ட அரசும் பின்னாலே திடீரென்று நிர்வாகத்தை ஆதரித்தது. அங்கே தான் விவகாரம் வருகிறது. அந்த பேக்டையும் யாரும் மறுக்க முடியாது.

(பிற்பகல் 5.50)

எர்லியர் ஸ்டேஜிலே இந்த உண்மைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஏற்றுக் கொண்டதால் தான் பல்வேறு அஷ்யூரன்ஸ்கள் வந்தன. பிறகு திடீரென்று வேறு பொசிஷன். அட்மினிஸ்டிரேஷன் குளோஸ் பண்ணியது சரிதான் என்று ஆதரித்தது. உறுப்பினர் ரஹமான்கான் அவர்கள் பேசுகின்றபோது சிதம்பர இரகசியம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் உறுதிமொழிகள் கொடுத்திருக்கிறோம். அதை இல்லையென்று சொன்னாலும் அல்லது திருப்பப் பெற்றுக் காண்டாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்த குற்றச்சாட்டிற்கு காரணம் ஆகிவிடுவோமே தவிர, பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். தக்க நடவடிக்கைகள் எடுப்போம். அன்றைக்குக் கூட அதைத்தான் சொன்னேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மற்ற எல்லாப் பல்கலைக் கழகங்களையும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். தேவையான நடவடிக்கைகள் எடுப்போம் என்பதை இன்றைக்கும் சொல்கிறோம். வாக்குறுதியை விட்டு விடவில்லை. நிச்சயமாக செய்வோம். அந்த அடிப்படையில் ஏதோ வராதது போலவும், நாங்கள் நிறுத்தி வைத்திருப்பது போலவும் நிறுத்தி வைப்பது என்று நினைப்பது கூட மிக மிக தவறாகும். பரிசீலனை ஒரு பக்கம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது அந்த அடிப்படையில் நாங்கள் நிச்சயமாக [illegible] செய்வோம். இத்தனை ஆண்டுக்



காலம் யாரும் அந்தப் பல்கலைக் கழகத்தைப் பற்றிக் கவலைப் படாமல் இருந்திருக்கலாமே தவிர, நாங்கள் வந்ததற்குப் பிறகு அதற்காக கவலைப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுப்போம் என்று உறுதிமொழி தந்து அந்த அடிப்படையில் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றமாட்டோம் என்பதை [illegible] மேற்கொண்டு பேசவேண்டியதில்லை.

திரு. ரா. உமாநாத். வாக்குறுதி என்ற பிரச்னையிலே அல்ல நான் ரெய்ஸ் பண்ணியது. அங்கேயிருந்து வந்திருக்கக் கூடிய சார்ஜஸ், மால்—அட்மினிஸ்ட்ரேஷன், கரப்ஷன், இரெகுலாரிட்டி, இந்த விஷயத்தைப் பொறுத்த வரைக்கும் பேசிஸ்—ஆக இருப்பதை அரசாங்கம் ஒரு ஸ்டேஜிலே ஏற்றுக் கொண்டு ஒரு பர்ம் பொசிஷன் எடுத்தது. அதனுடைய ஊற்றை குளோஸ் பண்ணுவதற்கென்று வகுப்புகளை அபாலிஷ் பண்ணுவதற்கென்று உள்ளவற்றில் ஆரம்பத்தில் எடுத்த பொசிஷனில் திடீரென்று பிறகு மாறி அது முழுக்க குளோஷரை ஆதரித்தது மட்டுமல்ல, கொள்கை ரீதியிலே ஏற்றுக்கொள்கிறோம் என்று கொள்கை வடிவம் கொடுத்திருக்கிறது என்பது கம்ப்ளீட்டாக டாப்சி டர்வி பொசிஷன் அரசாங்கம் எடுத்தது. ஆயிரம் எக்ஸ்ப்ளெயின் பண்ணினாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் I do not doubt his bonafide or anything எக்ஸ்ப்ளனேஷன் பப்ளிக்கை பொறுத்த வரைக்கும், அல்லது என்லைட்டன்ட் பப்ளிக் ஒப்பினியன் இந்த இரண்டைப் பொறுத்த வரைக்கும் அது கன்வின்சிங்காக இல்லை. திடீரென்று இப்படி ஒரு சேஞ்ஜ் வருவதற்கு என்ன காரணம் within a short period என்ற விஷயத்திலே நிச்சயமாக அங்கே இது இருக்கிறது. ஆகவே நடந்தது என்னவென்று சொன்னால் அரசாங்கம் இன்றைக்கு குளோஷர் பொறுத்தவரைக்கும் வகுப்புகளை மூடியவரைக்கும் கொள்கை ரீதியாகவும் மற்றவகையிலும் ஆதரிக்கிறீர்கள் என்கிறபோது நடைமுறையிலே அதற்கு பொருள் அங்கே நடக்கும் லஞ்ச ஊழல் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஆதரவு கொடுக்கிறது என்பதுதான் பொருள் ஆகும். லஞ்ச ஊழல் குறித்து நான் கேட்கிறேன். லஞ்ச ஊழல் ப்ரீயாக போவதற்குத் தான் அதை நல்லதொரு ஆராய்ச்சிக் கூடமாக ஸ்ட்ரெங்த்தன் பண்ணப்போகிறதா? என்ன ஆராய்ச்சி, நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்கும் அந்த அட்மினிஸ்டிரேட்டிவ் பேமிலி செய்திருக்கிற ஊழல் முறைகள் எல்லாம் அம்பலமான பிறகு புது ஊழல் முறைகள் என்ன என்று கண்டுபிடிப்பதற்கு ரிசர்ச்சா? என்ன ரிசர்ச்? அதற்கு ஸ்டூடன்ஸ் ட்ரபிள், வயலென்ஸ் வந்து குறுக்கே நிற்கிறதா? அப்சல்யூட்லி அன்—கன்வின்சிங். ஆகவே அரசாங்கம் எடுத்திருக்கின்ற டெசிஷன் அன்—கன்வின்சிங். அதனாலே அந்தமாதிரி மற்ற யூனிவர்சிட்டீஸ், இந்த வகுப்புகள் இருக்கிற இடங்களிலே இப்படி நீங்கள் சொன்ன வன்முறைகள் இருந்தும் கூட ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டாக வலுப்படுத்துவதற்கு குறுக்கே நிற்காது இருக்கிறபோது இங்கேயும் குறுக்கே நிற்காது.

அதற்கு தடையாக இருப்பதற்காகத்தான் இதை செய்திருக்கிறார்கள். அரசாங்கம் இதை ஆதரிப்பது தவறு. அதை வாபஸ் வாங்க வேண்டும். குறிப்பாக ஹைகோர்ட் ஜட்ஜ்மெண்டை நீங்கள் பயன்படுத்திக்கொண்டு, நேற்று முன்தினம் நீங்கள் கொடுத்திருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு அங்கே மூடியிருக்கிற வகுப்புகளை மீண்டும் ரெஸ்டோர் செய்ய வேண்டுமென்றுதான் நாங்கள் கோருகிறோம். அந்த முறையில் நான் கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சென்ற ஆண்டு டிசம்பர் மாத வாக்கில் பட்டப் படிப்புகளைக் கைவிடுகிறோம் என்று பல்கலைக் கழகம் அறிவித்த பிறகு அடுத்த ஆண்டு—அதாவது, இந்த 1982–ஆம் ஆண்டு பட்ஜெட் கூட்டத்தில் பட்டப் படிப்பை சிதம்பரம் பகுதியில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தருவதற்காக இரண்டு அரசுக் கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டும் என்ற உறுதி அளித்து, இந்த அரசின் அந்த உறுதி மொழியின் அடிப்படையில், அதற்கு 1928–ஆம் வருஷத்திலே இயற்றப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய சட்டத்தில் 4–வது விதி தடையாக இருக்கிறது என்பதனால், அதை மாற்றுவதற்காக, அவசரம் அவசரமாக சட்டத்தைக் கொண்டு வந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை நான் பாராட்டுகிறேன், காட்டு மன்னார்குடி தாலுகா, சிதம்பரம் தாலுக்கா மாணவர்கள், மாணவிகள், பெற்றோர்கள், அரசு கலைக் கல்லூரி அமைப்புக் குழு சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களும் உமாநாத் அவர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழக நிர்வாகத்தைப் பற்றி பயங்கரமான குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். இந்த ஆண்டு மாத்திரமல்ல, கடந்த பல ஆண்டுகளாக, அந்தக் குற்றச்சாட்டுகள் சாட்டப்படுவது எல்லோரும் அறிந்த உண்மையாகும். ஒரு நிர்வாகத்தைப் பற்றி இலஞ்ச ஊழல் மிகுந்த நிர்வாகம் என்றும் குடும்பச் சொத்தாக பாவிக்கிறார்கள் என்றும் அதை ஏதோ வியாபார ஸ்தலமாக நடத்துகிறார்கள் என்றும் சொன்ன பிறகு அதே நிர்வாகம் தான் அந்தப் பட்டப் படிப்புகளையும் நடத்த வேண்டுமென்று போராடுபவர்கள் கேட்கும்போதுதான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது.

ஒன்றை மாத்திரம் இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த காலத்தில் காங்கிரஸ் ஆண்ட பொழுதும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட பொழுதும் பல்வேறு குற்றச் சாட்டுகளை இதே பல்கலைக் கழகத்தைப் பற்றி சொன்னபொழுது அவர்களால் எல்லாம்



அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று மசோதா கொண்டு வர முடியவில்லை. நினைத்திருக்கலாம். ஆனால், மசோதாக்கள் அனைத்தும் கருவிலேயே சிதைந்து விட்டன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே உள்ள சின்டிகேட், செனட், அகடமிக் கவுன்சில் ஆகியவற்றில் இருப்பவர்கள் இரண்டு பருவத்திற்கு மேல்– மொத்தமாக 6 ஆண்டுகளுக்கு மேல்—ஒருவர் உறுப்பினராக இருக்கக்கூடாது என்ற சீர்த்திருத்தமான சட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் கொண்டு வந்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

அது மாத்திரமல்ல, கடந்தகால அரசுகள் செய்யாத அந்தச் சீர்திருத்தத்தை, இன்றைய தினம், உடனடியாக தேவைப்படுகின்ற அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழக 1928-ஆம் ஆண்டு சட்டத்தைத் திருத்துவதற்கு முன்வந்த முதல் அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை மறந்துவிடக்கூடாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஏதோ இருக்கிறது, இருக்கிறது என்றும் அது என்ன சிதம்பர இரகசியம் என்றும் சொல்கிறார்களே தவிர, நான் நன்றாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே கௌரவ டாக்டர் பட்டம் வாங்க வேண்டுமென்று பேரம் பேச வேண்டிய அவசியத்தில் எங்களுடைய மு... இல்லை.

அது மாத்திரமல்ல, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொன்விழாக் கொண்டாட்டத்தின்பொழுது, நாங்கள் கௌரவ டாக்டர் பட்டம் தருகிறோம் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களிடம் சொன்னபொழுது, அதை மறுத்துவிட்டார் முதல்வர் அவர்கள். இந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மாத்திரம் அல்ல, தமிழ்நாட்டிலே உள்ள எந்தப் பல்கலைக் கழகமாக இருந்தாலும், நான் முதல்வராக இருக்கிற காலத்தில் கௌரவப் பட்டம் கொடுத்தால் வாங்க மாட்டேன் என்று சொன்ன முதலமைச்சர் இந்தியாவில் தமிழ் நாட்டிலேதான் இருக்கிறாரே தவிர வேறு எங்கும் இல்லை, (மேசையைத் தட்டும் ஒலி)

அது மாத்திரம் அல்ல. இந்த மாமன்றத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு நிதி உதவி செய்தவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு முதலமைச்சராக இருந்தபொழுதோ அல்லது இல்லாத பொழுதோ நிதி உதவி செய்தார் என்று சொன்னால், அது புரட்சித்தலைவர் எங்களுடைய மாண்புமிகு எம். ஜி. ஆர்-யைத் தவிர வேறு யாரும் இல்லை. அதுவும் ஆட்சிக்கு வருவதற்கு

முன்பே, 1965-ஆம் ஆண்டு, நாணயத்தினுடைய மதிப்பு குறையாத காலத்தில் ரூ. 25,000 அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குக் கொடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆயுள் செனட் உறுப்பினராக மாறியது மட்டுமல்ல, அந்த ரூ. 25,000-லிருந்து வருகிற வட்டியை வைத்து ஒவ்வொரு ஆண்டும் முத்தமிழுக்கும்......

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நான் வேறொன்றும் சொல்ல வில்லை, நம்முடைய உறுப்பினர் சுவாமிநாதன் அவர்கள் டாக்டர் பட்டத்தை முதலமைச்சர் விரும்பவில்லையென்று சொன்னார்கள். ஆனால், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் டாக்டர் பட்டத்தை விரும்பியிருக்கிறாரே, அவருக்கு விரோதமாக ஏற்றிருக்கிறாரா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(இரவு 6 00.)

திரு. வி. வி. சுவாமிநாதன்: நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பற்றியும், ஆட்சியிலே இருக்கிறபொழுது நடப்பவை பற்றியும், முதலமைச்சரைப் பற்றியும்தான் சொல்கிறேனே தவிர, பேரறிஞர் அண்ணா அவர்களுக்குக் கூட அந்தப் பல்கலைக் கழகத்திலே பட்டம் கொடுத்தார்கள். அவர் போக முடியாமல் டாக்டர் நாவலர் வாங்கினார்கள். அந்தப் பிரச்சனைகளுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. நான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் நிலைமையை மாத்திரம் விளக்க விரும்புகிறேன். காரணம், அவர் யாருடைய தயவு தாட்சண்யத்திலும் இல்லை. ரூ. 25,000 பணத்திலிருந்து வருகிற வட்டியிலிருந்து முத்தமிழுக் கும் இயல், இசை, நாடகம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு ஆண்டிலும் முதல் மாணவனானாலும், மாணவியானாலும் 3 தங்கப் பதக்கங்கள், பொறியியல் கல்லூரி இறுதி வகுப்பில் படித்து முதல் மார்க்குகள் வாங்குகிற மாணவன் அல்லது மாணவிக்கு ஒரு தங்கப் பதக்கம் வழங்கப்படுகின்றன.

(இரவு 6.50 )

பள்ளி ஆண்டு ஆரம்பத்தில் படிக்க வருகின்ற, விவசாயக் கல்லூரிக்கு வருகின்ற மாணவர்களில் எம். ஜி. ஆர். கட்டுரைப் போட்டியிலே முதல் மார்க் வாங்கி வெற்றி பெற்ற மாணவர் களுக்காக எம்.ஜி. ஆர். ரொக்கப் பரிசு என்ற வகையிலே 500 ரூபாய் ரொக்கப் பரிசும், பாக்கி இருக்கின்ற வட்டித் தொகையிலிருந்து ஏழை எளிய, பிற்பட்ட மாணவர்கள் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காக விலையுயர்ந்த பாடப் புத்தகங்களை வாங்கி வைக்க வேண்டுமென் பதற்காக அறக்கட்டளை ஏற்படுத்தியவர் மாண்புமிகு முதலமைச்சரவர்கள். எனவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்துவதற்குத் தயங்குகிறது என்ற குற்றச் சாட்டைச்சாட்டக் கூடாது.



அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பட்டப் படிப்பை விட்டு விட்டதைக் குறித்து சென்னை உயர்நீதிமன்றத்திலே வழக் கிருப்பதாகவும், ஸ்டே தள்ளுபடியாகி விட்டதாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூறினார்கள். எனக்குத் தெரிந்தவரையில் இந்த வினாடி வரையில் ஸ்டே நிற்கிறது என்றுதான் கருதுகிறேன். முரட்டுப் பெண்ணும், சுருட்டுப் பாயும் என்று சொல்வார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இந்தப் பட்டப் படிப்பை நடத்த மாட்டோம் என்று சொன்னதையும் கூறி, இலஞ்ச லாவண்யம் இருப்பதாகக் கூறி குற்றச் சாட்டை ஆசிரியர்களும், மாணவர்களும், ஏ.யு.டி.யும் சொன்னபிறகும், அதே பல்கலைக் கழகம் பட்டப் படிப்பை நடத்த வேண்டுமென்று 'சொல்வதிலேதான் சிதம்பர இரகசியம் போல் தெரிகிறதே ஒழிய வேறொன்றுமில்லை.

சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்தில் அவர்கள் பட்டப் படிப்பை நிறுத்துவதாக அறிவித்தார்கள். டிசம்பர் மாதத்திற்குப் பிறகு பாதியில் கல்லூரியை ஆரம்பிக்க முடியாது. பட்ஜெட் கூட்டத்தில் இரண்டு கல்லூரிகள், ஆண்கள் கல்லூரி ஒன்று, பெண்கள் கல்லூரி என்று ஆரம்பிப்பது பற்றி அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்த ஆண்டு புதிய கல்லூரி ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அது அதிகதூரத்திலும் இல்லாமல், மிக அருகிலும் இல்லாமல் நடத்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கட்டளையிட்டார்கள்.

கல்வி அதிகாரிகளைப் பற்றிச் சொன்னார்கள். கல்வி இலாகா அதிகாரிகள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் டெல்லிப் பட்டணத்திலே என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் கல்வி கன்கரன்ட் லிஸ்டிலே இருக்கிறது. ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால் மாநில அரசு உடனடியாக ஆரம்பித்து விட முடியாது. டெல்லிப் பட்டணத்திற்குப் போய் சட்டத்துறை, உள்ளாட்சித்துறை மற்றும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலை வாங்கி வந்த பிறகுதான் கவர்னர் அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க முடியும். அந்த நேரத்தில் புதிதாகக் குடியரசுத் தலைவர் தேர்தல் வருகிறது. அது முடிந்த பிறகு கவர்னர் மாறுகிறார். இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில் இக்கட்டான கட்டத்தில், மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்கள் போவதற்கு முன்பாக ஒப்புதலைப் பெற்ற கல்வி யமைச்சரவர் களையும், அரசையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எஸ். ஐ. ஈ. டி. கல்லூரியைப் பற்றி சொல்கிறார்கள். அந்த நிலைமைக்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பட்டப்படிப்பை விட்டதற்கும் முரண்பாடு மட்டுமல்ல, வேறு பாடும் இருக்கிறது. காரணம், தமிழ்நாட்டில் எல்லாத் தாலூக்காக்களிலேயும் பட்டப் படிப்புக்கான ஒரு கல்லூரி இருக்கிறது. ஆனால் சிதம்பரம் தாலூக்காவிலேயும், காட்டு

மன்னார்குடி தாலூக்காவிலும் பட்டப் படிப்பிற்கான கல்லூரிகள் இல்லை. சென்னையை எடுத்துக் கொண்டால் இருபாலருக்கும் கல்லூரிகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள், ஏன் எஸ். ஐ. ஈ. டி. கல்லூரியில் பட்டப் படிப்பை விட்டவுடன் வழக்குத் தொடர்ந்த அரசாங்கம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மீது தொடுக்கக் கூடாது என்று. 1976—ஆம் ஆண்டு பிரைவேட் காலேஜ் ரெகுலேஷன் ஆக்டில் செக்ஷன் 25-இன்படி ஒரு கல்லூரியைச் சேர்ந்தவர்கள் எழுத்து மூலமாக அரசாங்கத்திற்கு அறிவிப்பு கொடுக்காமல் ஒரு பட்டப் படிப்பையோ அல்லது கல்லூரியையோ மூடக் கூடாது என்று இருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழ் தான் சர்க்கார் வழக்கு தொடுத்ததே தவிர வேறு சட்டத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், 1976-ஆம் ஆண்டு பிரைவேட் காலேஜ் ரெகுலேஷன் ஆக்ட் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குப் பொருந்தாது என்பது வழக்கறிஞரான திரு. ரகுமான்கான் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்கள். நாம் இப்பொழுதுள்ள நிலைமையில் இது தேவையா இல்லையா என்று தான் பார்க்க வேண்டுமே தவிர அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பற்றி ஒரு சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும், அதுவரையில் இதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதுவரையில் இதை நிறுத்தி வைக்க வேண்டுமென்றால் அது முடியாது. பல்வேறு பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பு இருக்கிறது என்று......

திரு. ஆர். உமாநாத்; மாண்புமிகு பேரவைத் துணை தலைவரவர்களே, அதுவருகின்ற வரையில் இதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. நான் ஆரம்பத்திலேயே சொன்னேன், சிதம்பரத்தில் கல்லூரி அமைப்பதையும், இன்னொரு இடத்தில் அமைப்பதையும் வரவேற்கிறோம். இந்தக் காலத்தைப் பொறுத்தவரையில். அதை குளோஷர் பண்ணுவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அதை ரெஸ்டோர் செய்ய வேண்டுமென்று அப்படித்தான் சொன்னேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: அதிலே பட்டப் படிப்பை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடியதை, அரசு கொள்கையாக ஆதரித்ததாகச் சொன்னார்கள். மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழக மானியக் குழு கூட, இது மாதிரி பட்டப்படிப்புக்கு கல்லூரி இருக்க வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறது. அது மாத்திரம் அல்லாமல், 1957ஆம் ஆண்டில் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் தலைமையில் பனாரஸ் யுனிவர்சிடி சார்பில் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. அதில் இந்தியாவில் ஒரு பல்கலைக் கழகத்தில் 3,500



4,000 அதிகப்படியாகப்போனால் 5,000 வரை அதற்கு மேல் மாணவர்கள் என்று ஒரு பல்கலைக்கழக முகாமில் இருக்க கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். அதுமாதிரி பல்வேறு கொள்கையின் அடிப்படையில் அவர்கள் செய்திருக்கலாம். ஆனால் என்னுடைய முக்கியமான கேள்வி இப்போது இந்த மசோதா, அவசரச் சட்டமாகக் கொண்டு வந்ததை நாம் ஆதரிக்க வேண்டுமா, வேண்டாமா என்பது தான். அண்ணாமலைப்பல்கலை கழகத்திற்கும் எஸ்·ஐ.இ.டி. கல்லூரிக்கும் வேறுபாடு காண்பித்து ஒரு சந்தேகத்தில் ஆழ்த்தாமல் கலங்கம் கற்பிக்காமல் செய்ய வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோளாகும்.

நம்முடைய கல்வி அமைச்சர் பற்றிச் சொன்னார்கள்· எனக்கு தெரிந்த வரையில், தமிழ்நாட்டில் கல்வி அமைச்சருக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு சுமுகமான இணைப்பு ஒரு பிணைப்பு உள்ள நல்ல காலம், இருக்குமானால் மாண்புமிகு முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் தலைமையிலே இயங்கிக் கொண்டு இருக்கும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அரங்கநாயகம் காலம் தான் என்று என்னால் நிச்சயமாகச் சொல்லமுடியும். இந்த எஸ். ஐ. இ டி. சம்பந்தமாக தனியார் கல்லூரியைக் கட்டுப்படுத்துவதன் சம்பந்தமாக வந்த சட்ட முன்வடிவின் மீது ஒரு வேண்டுகோளை விடுத்தார்கள். வேலை நிறுத்தம் செய்கின்ற ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட வேண்டும் என்று சொன்னார்கள். மறு நாளே கைவிட்டு விட்டார்கள். அது மாத்திரமல்ல. இன்றைய தினம் உலகத்தில் முதியோர் கல்வி பரப்பியதற்காக குறிப்பாக 1981ஆம் ஆண்டு உலகத்தில் ஐ. நா. சபை சம்பந்தப் பட்ட உலக விஞ்ஞானக் கல்வி கலாச்சார இலாக்காவால் பாவீரன் லெனின் மனைவியின் பேரால் ஏற்படுத்தப் பட்ட பரிசை மாண்புமிகு கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் காலத்திலே தான் அந்தப் பரிசை தமிழகம் பெற்றிருக்கிறது.

ஆகவே நல்ல நிர்வாகம் இருப்பது மாத்திரமல்ல. எம். எல். ஏக்கள் கல்லூரிகளுச்கு போக வேண்டாம் என்று சொன்னார்கள் காது குளிரக் கேட்டேன் பல்வேறு கல்லூரி முதல்வர்கள் மாத்திரமல்ல. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே உள்ளவர்கள் கூட தாங்கள் தயாரித்த பட்டியலில் கல்வியமைச்சர் துளிக் கூட தலையிடவில்லை என்று சொன்னார்கள். அப்போது நான்கூடகேட்டேன் உங்களுக்குக் கூட வேலைக் குறைவு. ஒரு எழுத்தர் இருந்தால் போதும், அல்லது தங்களுடைய தனி உதவியாளர் இருந்தால் போதும், இன்னார் வரவில்லை என்றால் அடுத்தப்படி யார் அதிக மார்க் வாங்கியிருக்கிறார்களோ அந்தப் பெயரை பென்சிலால் டிக் செய்து விட்டு அட்மிஷன் கார்டு அனுப்பி விடலாம் என்று சொன்னேன். அந்த முறையில் மிக அருமையாக நிர்வாகம் நடத்திக் கொண்டிருக்கிற கல்வியமைச்சர் காலத்தில் சிதம்பரத்திற்கு இந்த ஆண்டு அவசரமாக இருபாலாரும் படிக்கக் கூடிய கல்லூரி கொண்டுவந்ததற்காக மனமாரப் பாராட்டுகிறேன்.

முதலமைச்சரைப் பாராட்டுகிறேன். அந்தக் கல்லூரி வருவதற்காக பங்கு தொகை கொடுக்கவேண்டுமென்ற முறையிலே தேவிகருமாரி யம்மன் கோவிலிருந்து ரூபாய்5லட்சம் கொடுப்பதற்கு உதவிய அற நிலையத்துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொன்னதைப் போல வன்முறை தொடர்ந்து இருக்கும் என்று சொன்னார்கள். எனக்கு தெரிந்தவரை கடந்த 30 ஆண்டுகளாக சிதம்பரத்தில் குடியிருக்கிறவன் என்ற முறையில் உறுதியளிக்கிறேன். இந்தக் கல்லூரி ஆரம்பிக்கின்ற போது கல்லூரி அமைப்புக் குழுவிடம் ஒன்று கேட்டார்கள். இந்தக் கல்லூரியை அரசு ஆரம்பிக்கும்பொழுது அங்கே மாணவ விடுதி இருக்காது; என்று சொன்னார்கள் உண்மையிலேயே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே நடக்கிற வன்முறையானாலும், குழப்பமானாலும், கலக்கமானலும் மாணவர்களிடத்திலே நடைபெறுகின்ற கலகத்தைப் பற்றி குறிப்பிடுகிறேன். அதற்குக் காரணம் ஹாஸ்டல் வசதிதான், ஹாஸ்டல் வசதி உள்ளூர் மாணவர்களுக்கு கிடையாது என்று சொல்லிவிடுகிறோம். 10 மைல் வரை கிடையாது என்று சொல்லிவிடுகிறோம். வேறு மாவட்டத்திலிருந்தும் வருகின்ற மாணவர்கள் தொடர்ந்து விடுதியிலே இருப்பதாலேதான் இந்தச் சம்பவம் வன்முறைச் சம்பவங்கள் நடக்கிறத்தா தவிர உண்மையிலேயே விடுதியே இல்லாமல் ஒரு அரசு கல்லூரி துவக்கப் படுமானால் நிச்சயமாக அங்கே எந்தவிதமான கலகமும் நடக்காது. அமைதியாக கல்லூரி நடைபெறும் என்று சொல்லி மீண்டும் ஒரு முறை இந்த மசோதாவை வரவேற்று இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[இரவு 6.10]

ஆர். தியகராஜன் :- தலைவர்அவர்களே, இந்த அண்ணாமலைக் கலைக் கல்லூரியினுடைய பட்ட படிப்பை மூடுவதன் காரணமாக கொண்டு வரப் பட்ட சட்டத்தை எதிர்த்து என்னுடைய உரையை நிகழ்த்து கின்றேன். அண்ணாமலைக் கல்லூரி என்பது பெரும்பாலும் பல ஆண்டுகள இந்த மாநிலத்திலேயே பெரிய பேரும் ஒருபுகழும் பெற்ற கலைக் கல்லூரி ஆகும். தென்னாற்காடு மாவட்டத்திலேயுள்ள அண்ணாமலைக் கலைகக்ல்லூரியில் படித்தமாணவர்களில் பல பேர்கள்இங்கே கூட பெரும் பொறுப்பில் இரு கிறார்கள் இன்றைக்கு அமைச்சர்கள் சொன்னார்கள் அங்கே ஏற்படக்கூடிய குழப்பங்கள் எந்தக் கல்லூரியிலே ஏற்படவில்லை? விருத்தாச்சலத்திலே உள்ள அரசு கல்லூரியிலே கூட போன ஆண்டு கலவரம் நடந்தது. கலவரமே நடக்காத கல்லூரி ஒன்று இருக்குமானால் உண்மையாகவே அந்தக் கல்லூரிக்கு பரிசு வழங்கலாம் குறிப்பாக துடிப்பான இளைஞர்கள் பலர் ஒன்று சேர்கிறபோது அங்கே கலவரம் ஏற்படுகிறது அது தொடர்ப்பாக சம்பவங்கள் ஏற்படுகின்றது. அந்தக் கலவரத்தையே பட்டப் படிப்பை மூடவேண்டுமென்று சொன்னால்



உண்மையிலேயே ஆளுகின்ற அரசு எந்த அளவு தங்களது திறமையை அங்கே செம்மையாக செயல் படுத்தியிருப்பார்கள்] என்பதே அதற்குரிய காரணமாக இருக்கிறது. அதே பகுதியில் பட்டப் படிப்புகளை துவங்குவதற்கு, கல்லூரிகளை துவங்குவதற்கு பெண்கள் கல்லூரி, ஆண்கள் கல்லூரி துவங்குவதற்கு ஏற்பாடுகள் அங்கேயே நடந்து கொண்டிருக்கின்றன. அப்போது அங்கே ஏற்படுகிற ஜாதிச் கலவரம், மதக்கலவரம், இனக்கலவரம் அந்தப்பகுதியிலே நடக்காதா. நடக்குமா என்பதே எனக்குத் தெரியவில்லை. அந்தப் பகுதியிலுள்ள மாணவர்கள் தான் சேரப் போகிறார்கள். அதே மாணவர்கள் தான் அங்கே படிக்கப் போகிறார்கள். அங்கே கொலை நடக்கிறது. கொள்ளை நடக்கிறது; ஒருவரோடொருவர் அடித்துக் கொள்கிறார்கள். பல ஆண்டுகளுக்கு அந்தக் கல்லூரி மூடப்படுகிறது. ஆனால் மூடினால் நிரந்தரமாக மூடிவிட உத்தரவு இட வேண்டும், அதற்குப்பதிலாக அரசே எடுத்து நடத்தி வரவேண்டும். அதுதான் நியாயமான தீர்ப்பு, என்று இந்த அரசிற்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முடிந்தால் கல்லூரியை இந்த அரசு முழுமையாக எடுத்துக் கொண்டு பொறுப்பேற்று நடத்த வேண்டும். அதற்குப் பிறகு தொடர்ந்து தகராறு ஏற்பட்டால் மூடிக்கொண்டே போவது சரியல்ல, அது தவறு. இடவசதி குறைவு, இரட்டைச் செலவுகள் போன்றவைக் குறையும். இடப் பிராப்ளம் ஏற்படுவது குறையும் இது அமைச்சருக்கும் தெரியும் அதற்கு பல சட்டச் சிக்கல்கள் இருக்கலாம். இருந்தாலும் அந்தப் பகுதியிலே வேண்டாம்: வேறு நடுபகுதியாக உள்ள இடத்தைப் பார்த்து பொதுவான ஒரு இடத்தில் இதை வைக்கலாம் நம்முடைய புவனகிரி நண்பர் அவர்கள் கல்லூரி துவங்குவது பற்றிச் சொன்னார்கள் இந்தக் கல்லூரியை விருத்தாச்சலத்திலோ அல்லது கள்ளக்குறிச்சியிலோ வைக்கலாம். கள்ளக்குறிச்சியிலே கல்லூரி கிடையாது. அங்கே பிற்படுத்தப் பட்ட மாணவர்கள்; தாழ்த்தப்பட்ட மாணவர்கள் நிறைய இருக்கிறார்கள். சிதம்பரத்திலே செல்வாக்கு படைத்தவர்கள, பணக்காரர்கள், படித்தவர்கள் இருக்கிறார்கள். ஆனாலும், அங்கே கலவரம் நடபபதற்கு அதிகமான வாய்ப்புகள் இருக்கின்றன. மீண்டும் அதே இடத்தில் பட்டப் படிப்பை பெண்கள் கல்லூரியை ஆண்கள் கல்லூரியை துவங்கினால் கலவரம் அதிகமாக நடப்பதற்கு ஏதுவாக இருக்குமென்பதை அமைச்சருக்கும் இந்த அரசுக்கும் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் கூட அந்தக்கல்லூரியிலே உள்ள மாணவர்கள் மீது அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை சில இடங்களிலே எடுப்பதில்லை. சில கல்லூரிகளில் உள்ள முன்னவர்கள் சில மாணவர்களை கல்லூரியைவிட்டு நீக்குவதாலும் அந்தக்கல்லூரி நல்ல முறையிலே செயல்படுகிறது. இந்த கல்லூரியிலே சாராயம் குடிக்கும் மாணவர்களை இந்தக் கல்லூரியிலே பிராந்தி குடிக்கும் மாணவர்களை, இந்தக் கல்லூரியிலே பெண்களை கேலி செய்யும் மாணவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்து கல்லூரியை விட்டு நீக்கி விட்டால் மாணவர்களிடையே ஏற்படக்கூடிய குழப்பங்கள் வெகுவாகக் குறைந்து விடும். அப்படியே குழப்பங்கள் ஏற்பட்டாலும், போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் செய்து பிரின்ஸ்பால் உதவி கேட்டால், கல்லூரி

யின் உள்ளே வருவதற்கு சட்டம் இல்லை என்று போலீசார் சொல்கிறார்கள். கல்லூரியில் உள்ள மாணவர்கள் அல்லது ஆசிரியர்கள் மற்றும் அங்கே உள்ளவர்கள் ஒருவரோடொருவர் தங்களுக்கு அடித்துக் கொண்டு, போர் நடைப்பெற்றப் பின்னர், அனுமதியோடு உள்ளே வருகிறார்கள். எனவே அரசு கல்லூரி சட்டதிட்டங்களுக்குட்பட்டு அந்த கூட்டங்களில் நடக்கக் கூடிய சம்பவங்கள் பற்றி விசாரிக்க போலீசாரோ, மற்ற அதிகாரிகளோ உள்ளே சென்று விசாரிக்க அனுமதியளிக்க வேண்டும். அவர் காங்கிரஸ் மாணவராயிருந்தாலும் சரி, தியாகராஜன் சொன்னார் என்பதற்காக தவறு செய்த மாணவரை மீண்டும் கல்லூரியில் சேர்த்துக் கொள்ள கூடாது.

அரசியல் செல்வாக்கைப் பெற்று தவறு செய்யக் கூடிய மாணவர்களை தகாத மாணவர்களை, கலவரம் உண்டாக்கக்கூடிய மாணவர்களை அங்கே சேர்த்துக் கொள்வதன் காரணமாகத் தான் அடிக்கடி கல்லூரியில் கலவரங்கள் நடைபெறுகின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இத்தனை ஆண்டுகள் பட்டப்படிப்பு பெற்று வந்த மாணவர்கள் ரொம்ப அடித்து நொருக்கிக்கொண்டிருந்தார்களா? அவர்களின் மேல் அரசு எடுத்து நடவடிக்கைகள், அரசு எடுத்த முறையான நடவடிக்கைகள் அங்கே சரியாக எடுக்கப் படவில்லை என்றுதான் என்னுடைய குற்றச்சாட்டு அதற்காக தான் இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் மென்று அரசு சொல்வது நியாயமா. முறையா? அல்ல என்பதை மீண்டும் அரசுக்குச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு முறையான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்பது தான் என்னுடைய குற்றச்சாட்டு. இதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவேன் என்று சொல்வதும் கட்டாயமாக இது நியாயமாக இல்லை. முறையில்லை என்பதை மீண்டும் அரசுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அரசு ஒரு திட்டவட்டமாக இந்தத் தமிழகத்திலேயுள்ள அத்தனைத் தனியார் கல்லூரிகளில் யார் தவறு செய்தாலும் அந்தக் கல்லூரிகளை உடனே அரசுடைமையாகிக் கொள்வோம் என்பதைப் போல் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அதை முழுமையாக கைப்பற்றிக் கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமே தவிர ஏதோ கொஞ்சம் கொஞ்சமாக இன்றைக்குப் பட்டப்படிப்பை மூடிவிடுவது, நாளைக்கு இஞ்ஜினியரிங் செக்ஷனை மூடிவிடுவது நாளைக்குஒரு செக்ஷனை மூடிவிடுவது என்று இப்படி ஒவ்வொரு சட்டத்தையும் பாஸ் பண்ணிக் கொண்டு அவைகளை மூடிக்கொண்டிருப்பதிலே எந்தவிதமான நியாயமும் இல்லை.

அதே போல் இன்றைக்கு அரசாங்கத்திலே எடுத்திருக்கக் கூடிய கல்லூரிகளில் மரியாதைக்குரிய உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொன்னார்கள் அந்தக் கல்லூரிகளிலே நடக்கப்பட்ட லஞ்சலாவண்யத்தைப் பற்றித் தெளிவாகச் சொன்னார்கள்.



லஞ்சலாவண்யம் அந்தக் கல்லூரியில் மட்டும்தான் நடக்கிறதா, இன்ஜினியரிங் கல்லூரியிலே மட்டும்தான் பணம் வாங்கப்படுகிறதா? இல்லை. அந்தக் கல்லூரியிலே மட்டும்தான் எந்த ஒரு காரியத்திற்குப் போனாலும் பணம் வாங்கப்படுகிறதா, மற்ற இடத்திலே வாங்கப்படவில்லையா? அரசுக் கல்லூரிகளிலே பல இடங்களில் நடக்கிறது. அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ என்பதல்ல.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக் கல்லூரிகளிலே எல்லாம் வாங்குகிறார்கள் என்று அவர் பாட்டுக்கு சகட்டுமேனிக்குச் சொல்லிக் கொண்டே போகிறார்கள். அவருடைய ஊரிலே ஒரு அரசுக் கல்லூரி இருக்கிறது என்று கருதுகிறேன். அங்கே என்ன நடைபெறுகிறது. எப்படி அந்த மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பது அவருக்குத் தெரிந்த ஒன்றுதான். நாம் அங்கே மார்க் பிரகாரம்தான் போடுகிறோம். இதை மீறி யாராவது செய்திருந்தால் அதை எனக்குச் சொன்னால் நான் உடனே விசாரித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம்; நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி புகார்கள் வருகிறபோது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே கல்லூரிகளைப் பொறுத்தவரையில் அனுமதிக்கப்படுவதிலே எங்களுடைய விதிமுறைகளுக்கு மாறாக யாரும் போகக் கூடாது என்பதை திட்டவட்டமாக நாங்கள் சொல்லியிருக்கிறோம். அரசுக்கு இருக்கிற வேலையே எங்கே தவறு செய்கிறார்களோ, அதைக் கண்டுபிடிப்பதுதானே தவிர வேறு அல்ல. ஆகவே அப்படி பொதுவாக ஒரு புகாரை சொல்லிக்கொண்டிருப்பதை விட, தாராளமாக குறிப்பிட்ட கல்லூரியிலே இப்படி இன்ன நடந்திருக்கிறது என்று. சொன்னால் அதை மாண்புமிகு உறுப்பினர் விரும்பாததைப் போல நாமும் விரும்பாத ஒரு நிலையைத் தவிர்ப்பதற்கு உதவியாக இருக்கும்; நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, தவறுகள் எந்தக் கல்லூரியிலே நடைபெற்றாலும், அவைகளை எடுத்துச் சொன்னால் நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் என்னுடைய சேப்பாக்கம் தொகுதியிலே இருக்கக்கூடிய காயிதே மில்லத் கல்லூரியிலே அங்கே ஆளும்கட்சியைத் சேர்ந்தவர்கள் பல பேர்கள் சிபாரிசுக் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். அந்த சிபாரிசுக் கடிதத்தினுடைய அடிப்படையை ஒட்டி பல பேருக்கு அட்மிஷன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் எந்தவிதமான சிபாரிசுக் கடிதமும் இல்லாமல் சென்ற பல பேர்களுக்கு அனுமதி கொடுக்கப்படாமல் இருக்கிறது. நான் அந்த 2 பேர்களை அமைச்சர் அவர்களுக்குத் தரத்தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதிலே குறிப்பாக என்ன நடந்திருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. பொதுவாக சில குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்கள். அதிலும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிபாரிசுக்கடிதம் தந்தார்கள் என்பதை இந்த மாணவன் அல்லது மாணவி குறைவாக வாங்கியிருக்கிறார்கள்; இந்த மாணவன் அல்லது மாணவி அதிகமாக வாங்கியிருக்கிறார்கள். அவருக்கு கொடுக்காமல் இவருக்குக் கொடுத்திருக்கிறது என்று குறிப்பாகச் சொன்னால் ஒரு புகாரை விசாரிப்பதற்கு நியாயமாக இருக்கும். இருந்தாலும் கல்லூரிகளைக் பொறுத்த வரையில் இன்ஸ்பெக்ஷன் ஆபிசரைப் போன்று இருக்கின்ற இயக்குநர்கள் அதைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவான முறையிலே ஒன்றைச் சொல்லி, அது பத்திரிகைச் செய்தியாக வரலாமே தவிர ஆனால் அது அவ்வளவு நடைமுறைக்கு உகந்தது மட்டுமல்ல நாம் எல்லாம் விரும்புகிற நிலைமையை உருவாக்குவதற்கு அது உதவி செய்யாது, வெறும் புகாராகத்தான் இருக்கும்.

திரு. அ. ரகுமான்கான்: அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க அந்த விவரங்களை நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கையிலே அவரிடத்திலே நான் தரத் தயாராக இருக்கிறேன்.

திரு. ஆர். தியாகராசன்: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. இப்போது நிர்வாகத்திலே உள்ள அந்த நடுநிலைப் பள்ளிகளிலேகூட நன்கொடை என்ற பெயரால் அரசு அதை அனுமதிக்கிறதோ இல்லையோ என்பது பிரச்சனை அல்ல நன்கொடை என்ற பெயராலே அங்கே உள்ள கல்லூரிமுதல்வர்கள் அல்லது மற்றவர்கள் இன்னும் சொல்லப் போனால் பெற்றோர்கள் தனியார் கல்லூரியில்கூட அதை வைத்துக்கொண்டு பணம் எல்லாம் வாங்குகிறார்கள். அதனால்தான் அதை அண்ணாமலை பல்கலைக்கழகத்திலே மட்டும் வாங்கவில்லை. மற்ற இடங்களிலேயெல்லாம் நன்கொடை என்ற பெயராலே இந்த மாதிரி தவறுகள் நடக்கின்றன என்பதை நான் சொன்னேன். அமைச்சர் அவர்கள் எங்கள் ஊர் கல்லூரியிலே அந்த மாதிரி நடக்கிறதா என்று கேட்டார்கள். இல்லை. அவருடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால் சிறு சிறு குறைகள் ஏற்பட்டாலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மட்டுமல்ல, நிறையக் கல்லூரிகளில் ஏற்படுகிற போது அந்தக் குறைகளைக் களையவேண்டும் கிராமத்திலே சொல்வார்கள். மூட்டைப்பூச்சி அதிகமாக இருக்கிற காரணத்தாலே நெருப்புக்குச்சி வைத்து வீட்டைக் கொளுத்தி விடக்கூடாது. வீடே எரிந்துவிடும்.





ஆகவே, மூட்டைப்பூச்சியைப் போக்குவதற்கு என்ன வழி அதற்கு என்ன மருந்து அடிக்கவேண்டும் என்கிற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர அந்த வீட்டையே ஒரு தீக்குச்சியைக் கொண்டு கொளுத்தி அழித்து விடும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இரவு 6.20)

கல்லூரிகளில் நடக்கும் தவறுகளை ஒடுக்குவதற்கு, ஒழிப்பதற்கு, அடங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு நம்முடைய அரசுக்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போலீஸ் இலாகாவைக் கையில் வைத்து இருக்கிறார்கள். பல்வேறு மாண்புமிகு அமைச்சர்கள் பல்வேறு துறைகளை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அங்கே தவறு நடைபெறுகின்ற நேரத்தில், அந்தத் துறை அதிகாரிகள் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அந்த இடத்திற்குச் சென்று, அவற்றை ஆராய்ந்து பார்த்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

நாம் பயிர் செய்கிறோம். சிறு சிறு மணிகளைத் தூவுகிறோம். அது பயிராக வளர்கிறது. கூடவே களையும் வளருகிறது. அந்தக் களையை நாம் முளையிலேயே கிள்ளி எறிந்தால் தான் பயிர் வளரும். ஆகவே, அந்த வகையில், இப்படிப்பட்ட தவறுகளை ஆரம்பக் கட்டத்திலேயே கிள்ளி எறிவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஜாதி, மதம் ஆகியவற்றின் அடிப்படையில் மாணவர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள் என்று சொன்னால், அப்படிப்பட்ட மாணவர்களை அப்புறப்படுத்தி, நல்ல மாணவர்களை உருவாக்கும் பொறுப்பைக் கல்வித் துறை ஏற்க முன் வரவேண்டும். அதற்கு உறுதுணையாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறு தவறுகள் நடக்கின்றது என்பதற்காக வேண்டி, பட்டப்படிப்பை மூடவேண்டாம். ஆகவே, இந்த பிரிவைத் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டு, என் உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்நாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், சிதம்பரத்திலே புதிதாக அரசு சார்பிலே ஒரு கல்லூரியைத் துவக்கி, அதை சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கவேண்டும் என்ற உரிமை பெறுவதற்காக வழிவகை செய்கின்றது. இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பட்டப் படிப்பை மூடிவிட்டால் பாதிக்கப்பட்ட அந்த சுற்றுப்புற வட்டாரங்களில் இருக்கும் மாணவர்களுக்கு அந்த வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும் என்கிற வகையில் கொண்டுவரப்பட்ட

தாகும். அந்த வகையில் அங்கே ஒரு கல்லூரியை அரசே ஏற்படுத்தி நடத்துவது என்ற முடிவு எடுத்து, அதைச் செயல்படுத்துகின்ற வகையில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டு இருக்கிறது.

இந்த மசோதாவின் மீது பேசுகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இருப்பினும், இந்த மசோதாவை எதிர்ப்பதற்கு அதிலே எந்த விதமான முகாந்திரமும் இல்லை என்று கருதுகிறேன். ஆனால் அது தொடர்பாக பல்வேறு பிரச்னைகள் இங்கே பேசதபட்டு இருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உள்ள பல்வேறு பிரச்னைகள் குறித்துப் பேசி இருக்கிறார்கள். அது தொடர்பாக பல்வேறு வாக்குறுதிகள் தரட்பட்டு இருக்கின்றன. அதை நிறைவேற்றாமல், அல்லது அதைத் தாமதப்படுத்திக் கொண்டு, இப்படிப்பட்ட ஒரு மசோதா கொண்டு வருவது அந்த நிர்வாகத்திற்கு அரசு ஆதரவாக இருக்கும் ஒரு நிலைமை இல்லையா என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூட கேட்டார்கள்.

அந்த நிர்வாகத்திற்கு ஆதரவாக அரசு இதுவரையிலும் எந்த நிலையையும் எடுக்கவில்லை என்பதை இங்கே நான் முதலில் சொல்லிக் கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால் அங்கேயுள்ள தவறான நிலைமைகளை மாற்றுவதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிறது. ஏற்கனவே அரசு கொடுத்துள்ள வாக்குறுதிகளுக்கு சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கின்ற அந்த நோக்கத்தில் இருந்து அரசு எந்த விதத்திலும் மாறவில்லை என்பதை நான் இங்கே வலியுறுத்த ஆசைப்படுகிறேன். அந்த முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

ஆனால், அந்தப் பல்கலைக் கழகம் எடுத்துள்ள ஒரு முடிவுக்கு அந்த ஒரு நிலைக்கு நாங்கள் ஆதரவாக இருக்கிறோம். ஹைதராபாத் பல்கலைக் கழகம் அல்லது ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் அல்லது வேறு பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பட்டப்படிப்பு வகுப்புகள் இருக்கலாம். இந்த அரசைப் பொறுத்த வரையில் ஒரு கொள்கை எடுத்துள்ளது. பல்கலைக் கழகம் என்பது ஒரு விசேஷமான கடமையைச் செய்வதற்கு இருக்கிறது. அதைச் செய்வதிலே பல்கலைக் கழகங்கள் ஈடுபடவேண்டும் என்பதை விரும்புகிறது. இன்றைக்கு தமிழ்நாட்டிலே பல்கலைக் கழகங்கள் ஏற்பட்டு 100 ஆண்டுகள், அல்லது அதற்குக் குறைவான ஆண்டுகள் ஆகியிருந்தபோதிலும், ஆராய்ச்சித் துறையில் கவனம் செலுத்துவதற்கு நாம் தவறியிருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.



குறிப்பாக ஒரு விஞ்ஞானி குறிப்பிட்டதைப் போல் நம்முடைய பல்கலைக் கழகம் இமீடேடிவ் ரிசர்ச் செய்கின்றதே தவிர சமுதாயத் தேவைகளுக்கான ஆராய்ச்சிகளைச் செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய பல்கலைக் கழகங்கள் சமுதாயத்திற்கு தேவைப்படும் ஆராய்ச்சிகளைச் செய்ய வேண்டும் என்று அரசு விரும்புகிறது. குறிப்பாக மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் நல்லமுறையில் பல ஆராய்ச்சிகளை செய்து இருக்கிறது. இப்படி ஒவ்வொரு பல்கலைக் கழகமும் ஆராய்ச்சிகளைச்செய்து ஒரு சர்வதேச மையமாகத் திகழவேண்டும் என்று அரசு விரும்புகிறது. அந்த வகையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் முடிவு எடுத்து இருப்பதை அரசு வரவேற்கிறது. காரணம் அங்கே பல்லாயிரக்கணக்கான மாணவர்சள் சேர்ந்து கொண்டு ஜாதி, மத அடிப்படையில் போராட்டங்களில் ஈடுபடுவதால், அங்கேயிருக்கும் நிர்வாகமோ துணை வேந்தரோ அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதால் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதிலே ஒரு நடவடிக்கை இந்த எண்ணிக்கையை குறைப்பது என்று வருகிறது. ஆக உயர் ஆராய்ச்சிப் படிப்பை அமுல்படுத்த வேண்டுமென்று பேசும்போது, பட்டப்படிப்பை மூடவேண்டுமென்று நிலை வருகின்ற போது நாம் அதை ஆதரிக்கிறோமே தவிர நிர்வாகத்தினுடைய நடைமுறைகள் முழுவதையும் ஆதரிக்கிறோம் என்று தயவுசெய்து யாரும் நினைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த நான்கு ஆண்டுகளாக கொஞ்சம் கொஞ்சமாக கட்டுப்படுத்த நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோமே தவிர நாம் அவர்களுக்கு ஆதரவாக எந்த நடவடிக்கையும் எடுகக வில்லை. நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாக இருந்த அண்ணாமலை பல்கலைக்கழகம் வேறு, இப்போது இருக்கிற அண்ணாமலை பல்கலைக்கழகம் வேறு. விரைவிலே அங்கே ஒரு நல்ல நிலைமையை உருவாக்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

அதைப் போலவே இன்றைக்கு புதிய கல்லூரிகளைத் திறக்கும் போது, அது சிதம்பரமாக இருந்தாலும், வேறு இடமாக இருந்தாலும் அதைச் சுற்றியிருக்கின்ற இரண்டு மூன்று தாலுக்காக்களிலுள்ள மாணவர்களுக்கு அது பயன்பட வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இதைச் செய்கிறோம். நாம் விரும்புவதும் அதுதான்.

இதற்கு முன்னால் இருந்த அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு இருந்தபோது, அங்கே மாணவர்களைச் சேர்த்துக்கொண்ட போது பெரும்பாலும் அந்த வட்டாரத்தைச் சேராதவர்கள் தான் அங்கே வந்து படித்துக்கொண்டிருந்தார்கள், வேறு பல மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ' அங்கே வந்து படித்தார்கள். அண்ணாமலை பல்கலைக் கழகம் இருப்பது தென்னாற்காடு மாவட்டமாக இருந்தாலும் பெருமளவில் அது தென்னாற்காடு மாவட்ட மக்களுக்கு பயன்பட்டது என்று சொல்ல முடியாது. அங்கே படிப்பவர்கள் பலர் பெரிய நிலைக்கு வரலாம் வேறு பல வாய்ப்புகளும் ஏற்படலாம். ஆகவே அந்த

வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள், அந்த தென்னாற்காடு மாவட்ட மக்கள் அங்கே படிப்பதற்கு வசதி இருந்தால் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே நாம் எடுக்கின்ற நடவடிக்கை மூலம் தென்னாற்காடு மாவட்ட மக்களுடைய சமுதாய, பொருளாதார முன்னேற்றத்திற்கு பல ஆராய்ச்சிகள் நடைபெற வேண்டும், அந்த வகையில் முடிவு எடுக்கப்பட வேண்டும். நாம் எடுக்கின்ற நடவடிக்கை அந்த மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்று இன்றைக்கும் விரும்புகிறோம். இப்படி பல்வேறு திட்டங்களை நாம் பெரிய அளவில் செயல்படுத்துவதாக இருந்தால் எதிர்காலத்தில் அண்ணாமலை பல்கலைக் கழகம் மட்டுமல்ல, எந்தப் பல்கலைக் கழகமாக இருந்தாலும் அது தமிழ் நாட்டிக்கு பயனுடையதாக இருக்கும் என்பதற்காகத்தான் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறோம். அந்த எண்ணம் நிறைவேறும் என்று கருதுகிறோம். ஆக இன்றைக்கு கொண்டு வந்திருக்கிற இந்த மசோதா அங்கே இன்றைக்கு இருக்கிற சில சங்கடங்களைத் தவிர்க்கக்கூடியதாக இருக்கிறது.

கோர்ட் தீர்ப்பு ஒன்று இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நாம் தடை வாங்கி இருக்கிறோம். இந்த மசோதா நிறைவேறினால் அங்கே கல்லூரி அமைந்து விடும். அதன் பிறகு கோர்ட்டின் மூலம் தக்க முடிவு எடுப்பார்கள் என்று சொல்லி, இந்த மசோதாவுக்கு எல்லோரும் முழு ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''1982 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை (சட்டமுன் வடிவு எண். 43/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 43/1982) நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.





## அரசினர் தனித் தீர்மானங்கள்

மின்சார வாரியத்திற்கு கடன் வரம்பு பற்றிய அரசின் செயற் குறிப்பு ஏற்பளிப்பு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1) உட்பிரிவின் தமிழ்நாடு மின்சார வாரிய திற்கு ஒரு சமயத்தில் கடனாக அறுநூறு கோடி ரூபாய் இருக்கலாம் என்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்.''

[இரவு 6.30]

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, 400 கோடி கடன் வாங்குவதற்கு இருந்ததை, 600 கோடியாக கடன் வாங்க அனுமதி கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அப்படி 200 கோடி ரூபாய்க்கு மேலே அதிகமாக கடன்வாங்குகிற போது—மின்சாரஇலாகாவிற்கு என்று அதில் ஒரு நிமிடத்திற்குள்பேசுங்கள் என்றால், துணைத்தலைவர் அவர்களே எப்படி பேசமுடியும்?

இந்த மின்சார இலாகாவிற்கு ஏற்கனவே 400 கோடி ரூபாய் வரையில் கடன் வாங்கலாம் என்று அதிகாரம் அளிக்கப்பட்டு, அதை வாங்கி முடித்துவிட்டார்கள். ஆனால் இந்த 400 கோடி வாங்கியதற்குப் பின்னால், அந்த மின்சார வாரியம் நாட்டிற்கு ஆற்றிய பணி என்ன என்பதை பார்த்தால் ஒரு உதாரணத்தில் பார்த்தாலே போதும்.—நான் இங்கேஇப்பொழுது தான் வந்தேன் வந்தவுடனேயே இந்த நிதி ஒதுக்கம் பற்றி பார்க்க நேரிட்டது. இரண்டு நாட்களாக நான் வரவில்லை. அப்படியே அசந்துப் போய்விட்டேன்.

6—வது ஐந்தாண்டு பிளானுக்கு டெல்லியிலே போய் கேட்கிற போது நான் அப்போதே இந்த அவையிலேயே அதுபற்றி கேட்டேன். நீங்கள் 3500 கோடி ரூபாய் செலவு செய்யப் போவதாக ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில்- சொல்கிறீர்களே அதற்கான பைனான்சியல் ரிசோர்செஸ் எங்கே என்று கேட்ட போது, மார் தட்டிக்கொண்டு சொன்னார் நம்முடைய நாவலர் அவர்கள், அருகேயிருந்து தூண்டிவிட்டார் நமது மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் எங்களுக்கு பைனான்சியல் ரிசோர்ஸஸ் எங்கே என்று கேட்கிறீர்கள் ''பொன்விளையும்.களமாக இருக்கிறது மின்சார

லாபமாக கிடைக்கப் போகிறது என்று சொன்னார்கள். நான் அப்பொழுதே இந்த மாமன்றத்திலேயே சொன்னேன். ஏற்கனவே மின்சார வாரியம் கடனிலே ஓடிக்கொண்டிருக்கிறது. எப்படி ஓட்டினாலும் இருக்கிற கடனை அடைக்கவே சரியாக இருக்குமே' லாபம் எப்படி வரும் என்று. சரி இந்த 400கோடியை கடனாகப் பெற்றுக் கொண்டு செலவழித்தீர்களே இதனால்நாட்டு மக்களுக்கு என்ன நன்மைகிடைத்தது; இப்பொழுது 600 கோடி ரூபாய் வரையில் கேட்கிறீர்களே, கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானத்தில் ஏறி வைகுந்தத்திற்கு வழிகாட்டுகிறேன் என்று சொல்வதைப் போல், மேலும் அந்தக் கடன் தொகையை 600 கோடியாக உயர்த்துவதில் என்ன நியாயம் இருக்கிறது என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல. இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் தமிழகத்திலே பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. எனக்குத் தெரியும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த துறையிலே என்ஜினீயரிங் படித்தவர். அந்தத் துறையிலேயே பணியாற்றியவர். ஆனால் அவர் ஏன் இவைகளை எல்லாம் சிந்திக்க வில்லை. அமைச்சர் மிகவும் ஆற்றல் உள்ளவர்தான். அதிலே இங்கே யாருக்கும் சந்தேகம் இல்லை. அவர் கரம் ஏன் கட்டப் பட்டருக்கிறது என்று தான் புரியவில்லை. இவ்வளவு பணமும் இந்த இலாகாவில் செலவழித்தற்குப் பிறகும் ஏன் இது வெள்ளை யானையாகப் போய்க் கொண்டேயிருக்கிறது என்று தெரியவில்லை ஏற்கனவே வாங்கிய கடனிலே இப்போது என்ன நிலை என்பதை பற்றி அவர் சொல்கிறார்.

"The otal of the outstanding balance of the various loans raised by the Tamil Nadu Elec rici y Board upto February 1982 is abou 330.60 crores"

ஏற்கனவே வாங்கிய கடனிலே திருப்பிக் கொடுக்க முடியாத நிலையாக பாக்கியாக இருப்பது 330கோடிரூபாய். இப்படி வாங்கிய கடனையே திருப்பிக் கொடுக்க முடிக்கவில்லை என்கிறபோது இன்னும் வாங்குகிற பவரை கேட்கிறீர்களே, எதை வைத்துக் கொண்டு அந்த கடனை நீங்கள் திருப்பித் தருவீர்கள்? திருப்பிக் கொடுக்கிற யோக்கியதை உங்களுக்கு உண்டு என்று எப்படி நம்புவது?

அப்படி மின்சாரமாவது நாட்டிலே பெருவாரியாக உபயோகப் படுகிறதா என்றுபார்த்தால் இல்லை. கிணற்றிலே தண்ணீர் இல்லை. இறவைக்கு மின்சாரம் இல்லை. நாட்டிலே வறட்சி, ஊராட்சிகளிலே பல்புகள எரிகின்றன்தா என்றால், பல்புகளும் எரிவதில்லை; பஞ்சாயத்துதலைவரும் இல்லை.



மின்சாரத்திற்கு என்று நிலக்கரி வாங்கியிருக்கிறீர்கள். இந்த சபையிலேயே நண்பர் திருவேங்கடம் அவர்கள் இது குறித்துப் பேசியதாக எனக்கு நினைவு. மின்சாரத்திற்கு நிலக்கரி வாங்கியிருக்கிறீர்கள். வாங்கிய நிலக்கரி என்ன ஆயிற்று? யாரோ தனியார்கள் அதனை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். ஆனால் வாங்கிய நிலக்கரிக்கு இந்த மின்சார இலாகா பணம் கட்டிக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அரசாங்கத்தின் வரவுகளில் பெரும் பகுதியை விழுங்கிக் கொண்டு, ஒரு வெள்ளை யானை இலாகாவாகத்தான் இந்த மின்சார இலாகா இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த சட்டசபையிலே, துணை மானியமானாலும் சரி, நிதி ஒதுக்கீடானாலும் சரி, அல்லது வேறு எதற்காக இருந்தாலும் சரி அவ்வப்போது இந்த மின்சார இலாகாவிற்கு ஏதாவது ஒரு தொகையை ஒதுக்ககோருகிறார்கள். நம்முடைய நாவலர்அவர்கள் தமிழ் படித்தவர்கள் தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு என்று கரைத்துக் குடித்தவர். பாவம் அவருக்கு இந்த மின்சாரத் துறையின் கணக்கு வழக்குகள் சரியாக புரியாததால், நீங்கள் சுலபமாக நிதி ஒதுக்கத்திலிருந்து அதிகமான பணத்தை மினசார இலாகாவிற்கு என்று எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்கிற குற்றச்சாட்டை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். (சிரிப்பு) (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது போன்ற ஒரு குற்றச்சாட்டை மாண்புமிகு நிதிமைச்சர் அவர்கள் மீது சுமத்த வேண்டாம். It is an insinu tionYou shouldnt do that.

**திரு. துரைமுருகன்:** இதிலே விவகாரமாக கணக்குவழக்குகள் அதிகமாக பண்ணியிருக்கிறீர்கள் என்று சொன்னேன். 'எந்த வருடம் பட்ஜெட் ஒதுக்கீட்டைப் பார்த்தாலும் நமது மாநிலத் தின் பெரும்பகுதி வருவாய். மின்சார இலாகாவிற்கே ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பது தெரியும்.

ஆனால் நிலைமை என்ன? எல்லாம் இருக்கின்றன. திட்டங்கள் எல்லாம் திட்டப்பட்டிருக்கின்றன. வேலைகள் எல்லாம் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. டெண்டர்கள் எல்லாம் கோரப்பட்டிருக்கின்றன. மேட்டூர் டாம், லோயர்டாம் எல்லா டாம்களும் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் நாட்டிலே மின்சாரம் இல்லை. இன்றைக்கு பம்ப்செட்டுக்குமின்சார கனெக்ஷன் கொடு என்று கோட்டால் கிடைக்கவில்லை. டிரான்ஸ்பார்மர் கிடையாது. நேரளாவைக் கேட்டிருக்கிறோம் என்று சொல்லி அமைச்சர் அவர்கள் அங்கே போகப்போகிறார்கள். ஆவன நடைபெறும், அஞ்சேல், அதுவரையில் வயல் சாயட்டும், இந்த நிலைமையைதான் நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். வேறு எதுவும் உதாரணம் வேண்டாம். கவர்ன்மெண்ட் எஸ்டேட்டுக்கு போங்கள், அங்கே விளக்குகள் எப்படி எரிகின்றன? மங்கலாக எரி

கின்றன. மினுக்கு மினுக்கென்று எரிகின்றன. எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கே இந்த நிலைமை. ஏன்? மின்சாரத்திற்கு பவர் லோட் கிடையாது. ஏன் கிடையாது. மின்சாரம் ப்ரைட்டாக எரியவில்லை. எனவே எனக்கு 400 கோடி என்று இருப்பதை 600 கோடியாகக் கொடுங்கள் என்று கேட்டு கடன் வாங்குவதற்காகவே வந்திருக்கிறார் அமைச்சர் அவர்கள். ஆனால் இங்கே அமைச்சர் அவர்கள் 400 கோடி ரூபாய் கடன் வாங்குகிற அதிகாரம் இந்த இலாகாவிற்கு உண்டு. ஆனால்தேவையில்லை. 200கோடி ரூபாய் போதும் இங்கே 400 கோடியை 200 கோடியாக ஆக்குங்கள் என்று ஒரு திட்டத்தை இந்த அவையில் கொண்டு வந்திருந்தால் சபாஷ் என்று அமைச்சருக்கு சபாஷ் போட்டுப் பாராட்டி இருப்பேன். ஆனால் அவர்களோ 400 கோடியை 600கோடியாக ஆக்குங்கள் என்று கேட்கிறார். 600 கோடி என்ன 800 கோடி எடுத்துக் கொள்ளுங்கள், ஏற்பட்டிருக்கின்ற நிலைமை என்ன? மின்சாரம் இல்லை. அமைச்சர் சொல்கிறார் மின்சார கட் வராது. அதற்கு தேவை இருக்காது என்று. அப்படி சொல்ல அதைப் பேப்பரில் பார்க்கிறோம். சட்என்று கரண்ட் ஆப் ஆகிவிடுகிறது. இப்படியே போய் ஒரு நாள் இந்த அவையிலே கூட லைட்ஆஃப் ஆகிவிட்டது, மின்சாரம் இருக்கிறதா ட்ரான்ஸ்பார்மர் இருக்கிறதா எவ்வளவு ட்ரான்ஸ்பார்மர் திருடு போகிறது தெரியுமா? இதில் ஜினியர்ஸ் அதிகம் பேர் இந்த இலாகாவிலே இருக்கிறார்கள் ஆனால் சிப்பந்திகள் குறைவு. இவர்கள் என்ன சொல்கிறார்கள் குழுகூட்டியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதற்கு எவ்வளவு பணம் செலவாகிறது தெரியுமா? அது மட்டுமல்ல. இந்த இலாக்காவிலே இப்போது ஒரு புதுத்திட்டம் கொண்டு வந்தார்கள். கொண்டு வாருங்கள், அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை, ஆனால் ஓடினவனுக்கு ஒன்பதாம் இடத்தில் குரு கெட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி என்பதைப் போல எவன் கட்ட வில்லையோ அவன் கட்டாமலே இருக்கிறான். கட்டியவன் கட்டிக் கொண்டே இருக்கிறான். ஆனால் நீங்கள் என்ன சொன்னீர்கள். வீட்டுக்கு வீடு வந்து எவ்வளவு மீட்டர் ஓடி இருக்கிறது என்று பார்த்து விட்டு போவார்கள் என்று சொன்னீர்கள் எங்கள் வீட்டில் அப்படி வந்து பார்த்து விட்டுப் போய் மூன்று மாதம் ஆகிறது. திருப்பி வந்து பார்க்கவே இல்லை ஆனால் அமைச்சர் சொல்கிறார் நல்ல திட்டம் தானே என்று ஆனால் கணக்கெடுப்பவரே வருவதில்லை. பணத்தை எடுத்துக் கொண்டு போனால் அடுத்த மாதம் வாங்குகிறேன் போ என்று சொல்கிறார்கள். இப்படி வசூலிக்க முடிவதைக் கூட வசூலிக்கவில்லை. கோடிக்கணக்கான பணத்தை பல மில் முதலாளிகள் கட்டாமல் இருக்கிறார்கள். அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அவர்கள் ஸடே வாங்கப் போவார்கள் ஆனால் அப்போது அரசாங்க வக்கீல்ஆஜர் ஆகமாட்டார்கள். ஏன் அவன் வீட்டில் கல்யாணமோ என்னவோ. இப்படி பல கோடி ரூபாய்தேங்கியிருப்பது பற்றி இந்தஅவையிலே பேசியிருக்கிறோம். பல முறை சுட்டிக் காட்டி இருக்கிறோம். ஆனால் இவ்வளவு விவரமும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சருக்குத் தெரியாதா என்றால் நன்றாகத் தெரியும். தெரிந்த பிறகும் ஏன்நடவடிக்கை எடுக்கவில்லை, யாம் அறியோம் பராபரமே. அவரை எது கட்டுப்



படுத்தியிருக்கிறது என்பது தெரியவில்லை. ஆனால் சுருக்கமாகச் சொன்னால், இந்த அரசாங்கத்திற்கு வருகின்ற மொத்த வருமானத்தைக் கூட நீங்கள் இந்த இலாகாவிற்கு செலவு செய்யுங்கள் அப்போதும் கூட இந்த இலாகா உருப்படப்போவதில்லை. அரசாங்கத்தின் வருமானத்தை தின்று மின்சார வாரியம் ஒரு வெள்ளை யானையாக ஆகப்போகும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. 600 கோடி ரூபாய் கடன் கேட்டிருக்கிறது எண்ணை கடையைக் கிண்டி பிள்ளை பிழைக்கப்போவதில்லை. ஆகவே 400 கோடிரூபாய் கடன் என்பது 600 கோடியாக ஆனது என்பதைத் தவிர இதனால் மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படப் போவதில்லை. உங்கள் காலத்தில், மின்சரா இலாகாவைகடனாளியாக ஆக்கி விட்டு சென்று விட்டார் பன்ருட்டியார் அவர்கள் என்று பின்னால் வருபவர்கள் சொன்னால் எங்கள் மனம் கஷ்டப்படுமே என்பதற்காக இந்த திட்டத்தை வாபஸ் வாங்கிக் கொள்வது நல்லது என்று கூறி அமர்கிறேன்.

THIRU. K.S.G. HAJA SHAREEF: Mr. Deputy Speaker Sir, This is a resolution seeking permission to extend the limit of loan abtainable by the Tamil Nadu Electricity Board upto Rs.600 crores. If this amount is going to be spent in a very useful manner I certainly welcome it. But I have got to inform the Hon'ble Minister the practical things that are going on now.

Till about two years ago every month the meter checking inspector or person used to come and check the meter and every month the payment will be made. But for the last 2 years, this is not the case. The checker comes only once in three or four months and at any rate not less than once in two months. If this is the case either at Madras or throughout the State will it not amount to loss of revenue to the Government and the Electricity Board? What is the difficulty in checking up and collecting the money every month. If the money is sent to the office even after two or three months, the people in the office asks us to come after 10 days when he will accept the payment. I can say this with a definite example.

Last month in a particular place the checking was made after phree months and the bill was sent for about Rs: 1800/-. When the party went to remit the same, the office at the Creams Road said that" we have not yet received the proper data. You may please come after 10 days." This is a horrible thing. Why should the people be penalised by way of asking them to pay for three months at a time. Only rich people can pay such huge amount. What about the millions of people who have got small house connections and who would like to pay every month and who cannot pay the dues of two, three months together:. Will the Government accept if such people

come forward to pay the dues in 2, 3 monthly instalments. All these things should have to be checked. We know that the electricity plays an important role. Without power nothing can be there. I always used to joke with the Electricity Minister "you are a powerful minister. But you are not giving us enough power"

(இரவு 6.40)

I just glanced through the statement of his speech. I found that about 1 lakh and 20 to 30 thousand tonnes of coal is necessary, where as that amount of coal cannot be transported. But, if a dump is treated at Haldia or at Calcutta I can give my assistance in the transportation of coal by the Steamers. Not only 1 lakh 20 thousand tonnes, they can even transport 1 lakh 75 thousand tonnes by this arrangement. He should see that proper dump of at least 3 or 4 ships load cargo is always kept available at Calcutta or Haldia so that the ship movement can be made remunerative. Instead of that, I learn from the papers, you wanted to acquire 3 ships from a Japanese Company at a cost of about Rs.60 crores. Whereas originally the proposal was to acquire three steamers at a cost of Rs.100 crores. That proposal has now been left.

The Karnataka Government had acquired steamers and they had been running steamers and met with very heavy loss. With the result the steamers had been sold to one of the subsidiary companies of the Government of India. It is not an easy joke to run steamers. When the ship owners do not come forward to help you to bring coal why should why the Government venture on such things?

The department should come forward to mitigate the hardships caused to the Industrialists and the people and see that they serve the people.

Now-a-days I find that most of the road lights are not burning properly. Even In the Marina the lights are not burning properly. With the result the people fall on each ther. I have pointed out umpteen number of times that this should be rectified. I do not know why this has not been rectified at all. Whenever I telephone to the Corporation or to the Electricity Board, I am told that there are no cables. How long they can repeat the same excuse? The department concerned should rectify all these things.



are rectified and see that the practice of taking meter reading once in two, or three months should be put an end. Responsible persons should be entrusted with the job of going to each and every house every month and prepare the consumption charge bills and see that the amounts are being collected properly. Thank you.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை)

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைப்பார்க்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்காமல் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். அதற்கு மாறாக குறை சொன்னார்கள் என்று கருதுகிறபோது, ஒரு வேளை எதிர்க்கட்சி என்ற காரணத்தினால், குறை சொல்ல வேண்டுமென்ற ஒரு அடிப்படையில் சொல்லியிருப்பார்களோ என்று நான் அஞ்சுகிறேன். ஏன் என்றால் கடன் என்றால் கேட்டால் யாருக்கும் கிடைக்காது. கடன் பெறுவதற்குக் கூட ஒரு தகுதி வேண்டும். எல்லோருக்கும் எளிதில் யாரும் கடன் கொடுத்து விட மாட்டார்கள். ஆகவே, 400 கோடி ரூபாய் அளவுக்குக் கடனைப் பெற்று மின்வாரியம் தன்னுடைய பணியை ஆற்றிக் கொண்டிருந்து இன்று 600 கோடி ரூபாய் அளவுக்குக்கடனை உயர்த்துகிறது என்றால் அது தக்க முறையில் பணி ஆற்றுகிறது என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு தேவையில்லை. மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் கூரை ஏறி கோழி பிடிக்காதவர்கள் வானத்தைக் கீறி வைகுண்டத்தைக் காட்ட முடியுமா? என்று கேட்டார்கள், இங்கே கூரை ஏறி கோழியும் பிடித்து கோழியிடுகிற முட்டையைக் கைப்பற்றி குழம்பும் வைத்து சாப்பிட்டுவிட்டு இதை கேட்டுக் கொண்டிருக்கிறோம், என்று நான் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வாங்குகிற கடன் சரியாக செலவு செய்யப்படுகிறதா, சரியான நோக்கத்திற்கு செலவு செய்யப்படுகிறதா என்று ஆய்வு செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கடமை உண்டு, பொறுப்பு உண்டு, அந்த ஆய்வு மின் வாரிய நிதி நிலை அறிக்கை விவாதத்தின் போது அந்த ஆய்வு செய்வதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆகையால் இந்த ஆய்வினை அந்த நேரத்திலே வைத்துக் கொள்வது அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். தமிழக மின் வாரியத்தைப் பொறுத்த வரையில் அண்மையில் டெல்லியில் நடந்த மின்துறை அமைச்சர்கள் மாநாட்டிலே கூட சிறந்த முறையில் செயலாற்றி வருகிற மின்வாரியம் தமிழக மின் வாரியம் என்று மத்திய அரசைச் சேர்ந்த அமைச்சர் அவர்களே பாராட்டுகின்ற அளவுக்குத் தன்னுடைய கடமையை ஆற்றி வருகிறது.

இந்தச் சமயத்தைப் பயன்படுத்தி சிலயிடங்களில் மின்சாரம் தருவதிலே உள்ள குறைப்பாட்டினைச் சொன்னார்கள். மாண்புமிகு ஹாஜா செரீப் பேசுகிறபோது கடற்கரையில் இருக்கிற விளக்குகள் சரியாக எரிவதில்லை என்றும், மாண்புமிகு துரைமுருகன் பேசுகிறபோது அரசாங்க விடுதி, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி அங்குள்ள கட்டடங்களில் இருக்கக்கூடிய விளக்குகள் சரியாக எரிவதில்லை என்றும் சொன்னார்கள். குறை சொல்வதிலே கூட ஒரு நல்ல உதாரணம் இவர்களுக்கு கிடைக்கவில்லையே என்று நான் நிச்சயமாக ஏங்கிக் கொண்டு இருந்தேன். ஏன் என்றால் இரண்டுமே மின் வாரிய பராமரிப்பிலே இல்லை. கடற்கரையிலே உள்ள விளக்குகளைப் பராமரிப்பது மாநகராட்சி. அரசாங்க எஸ்டேட்டிலுள்ள கட்டிடங்களில் இருக்கின்ற விளக்குகளைப் பராமரிப்பது பொதுப்பணித்துறை. இருந்தாலும் அதை விடுத்து மின்வாரியத்தைக் குறை சொல்கிறார்களே என்று கருதுகிறபோது விவரம் தெரிந்த உறுப்பினர்களே இப்படி பேசினால் விவரம் தெரியாத மக்கள் குறை கூற மாட்டார்களா என்று நினைக்கத்தான் எனக்குத் தோன்றுகிறது.

THIRU. K.S.G. HAJA SHAREEF: Sir, you are only supplying electricity through various agencies.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சொல்ல வேண்டிய நேரத்திலே சொல்ல வேண்டிய இடத்திலே சொல்லியிருந்தால் அதற்குரிய அமைச்சர் தக்க பதிலைத் தந்திருப்பார் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதற்கு மாறாக இந்தத் தீர்மானத்திலே போய் அதை உதாரணமாக விவரம் தெரிந்த உறுப்பினர்களே கொடுத்தார்களே என்பதற்காகத்தான் சொன்னேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன், சரியாக பில் வரவில்லை கட்டணம் செலுத்த முடியவில்லை என்ற குறைகளைச் சொன்னார்கள். அதைப்பற்றி சென்ற மின்வாரிய நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது நீண்ட நேரம் அதற்கான விளக்கங்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஒரு நிறுவனத்தை நடத்துவது என்பது நினைத்த மாத்திரத்திலே நடத்தக்கூடிய நிலையில் இன்றைய ஜனநாயக அமைப்பு இல்லை. தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. நிர்வாகம் சொன்னாலும் தொழிற்சங்கங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதுவும் போக நீதிமன்றங்கள் வேறு இருக்கின்றன. ஆக நீதிமன்றங்களின் தீர்ப்புக்கும் கட்டுப்பட்டு ஆக வேண்டும். இவ்வளவு சிக்கல்கள் எல்லாம் இருந்தபோதும் கூட இந்த மாதத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு ரெக்கார்டு கலெக்ஷன் என்று சொல்வார்களே அந்த அளவுக்கு வசூல் அதிகமாகி இருக்கின்றது. 600 கோடி ரூபாய் கடன் தொகை வரம்பை உயர்த்த வேண்டும் என்று கேட்பதே இந்த ஆண்டு நாம் 219 கோடி ரூபாய்க்கு மூலதன செலவுக்குத்திட்டமிட்டு இருக்கிறோம் அந்த 219 கோடி ரூபாய் மின் உற்பத்தி திட்டங்கள், மின்சாரத்தை வினியோகிப்பதற்கான திட்டங்கள் இவைகளுக்காக முதலீடு செய்கின்ற அந்தகாரணத்திற்காகப்பயன்படுத்தப்படுகிறது.





அவைகளை ஒழுங்காக நிறைவேற்றுகிறபோது மின் பற்றாக்குறை நீங்குவதற்கு நமக்கு வாய்ப்பு கிடைக்கிறது. ஆகவே இதை எல்லோரும் ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதை ஒயிட் எலிபெண்டு என்று திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னார்கள், ஒருவேளை அவர்கள் ஆங்கில நாட்டுக்குப் போய் வந்தகாரணத்தால் அங்கே பயன்படுத்துகின்ற ஒயிட் எலிபெண்ட் என்ற வார்த்தையை இங்கே பயன்படுத்த வேண்டும் என்ற காரணத்தால் இங்கே பயன்படுத்துகிறார்களோ என்று தெரியவில்லை. ஆகவே தமிழ்நாட்டில் ஒரு நல்ல அழகான பழமொழி உண்டு. யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன். ஆகவே தமிழக மின்வாரியத் துறையைப் பொறுத்த வரையில் விவசாயத் துறையிலும். தொழில்துறையிலும் சமூகத்துறையிலும் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த சிறந்த முறையிலே பணியாற்றி வருகிறது என்பதைத் தெரிவித்து இதை நிறைவேற்றி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன் உள்ள கேள்வி:

> "1948-ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 541/948) 65-வது பிரிவின் (1) உட்பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக அறுநூறு கோடி ரூபாய் இருக்கலாம் என்று மேற்படிச் சட்டத்தின் அதே பிரிவை சேர்ந்த (3) உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்"

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(இரவு 6.50)

(ஆ) அரசியலமைப்பு (நாற்பத்தி ஆறாவது திருத்த) சட்டமுன்வடிவு 1982—பேரவையின் ஏற்பளிப்பு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன்:

"நாடாளுமன்ற இருஅவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1982 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்தி ஆறாவது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள, இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் கீழ் வரும் திருத்தங்களுக்கு. இப்பேரவை ஏற்பளிக்கின்றது."

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய மாண்புமிகு தலைவர் அவர்களே, இது மாநில அதிகாரம் பற்றிய மிக முக்கியமான பிரச்சினையாகும். ஆகவே அமைச்சர் அவர்கள் இதைப் பற்றிய விளக்கத்தைச் சொல்வார்களேயானால் உறுப்பினர்கள் பேசுவதற்கு வசதியாக இருக்கும் என்பதை நான் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இதுபற்றி நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்து அந்த விவாதங்கள் எல்லாம் உறுப்பினர்களுக்குஅளிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு மேல் நான் என்ன அதிலே விளக்கம் தரவேண்டியிருக்கிறது.

**திரு. அ. ரகுமான்கான்** லோக் சபாவினுடைய டிபேட்ஸ் எங்களிடத்திலே கொடுக்கப்பட்டிருப்பது உண்மைதான். நான் கேட்க விரும்புகிறேன், இதிலே உள்ள பல்வேறு பிரச்சினைகள் பற்றி அரசாங்கத்தின் கருத்துக்கள் சொல்லப்பட வேண்டும். இதைக் கொண்டுவந்திருப்பது மத்திய சர்க்கார். ரேடிபிகேஷனுக்காக நமக்கு இதை அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே அரசுத் தரப்பில் அதனுடைய விளக்கத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்ததீர்மானத்தை நிறைவேற்றவேண்டுமென்று அரசு கோருகிறது.

**திரு. அ. ரகுமான்கான்** அரசு இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டுவந்து ஆதரிப்பதாகச் சொல்லியிருப்பதாக நான் கருதுகிறேன். அப்படியானால் இங்கே இருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தையொட்டிய விவாதம் அப்படியே ஆங்கிலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது, இதிலே உள்ள பல்வேறு உறுப்பினர்களுக்கு—நான் சொல்வதை யாரும் தவறாகக் கருதக் கூடாது—தமிழில் கொடுத்தால்தான் விளக்கமாக இருக்கும். ஆங்கிலம் தெரியாத உறுப்பினர்கள் எப்படி இதைப் புரிந்து கொள்ள முடியும்? ஆகவே சுருக்கமாக ஷார்ட் அன்ட் ஸ்வீட். என்ற முறையில் அமைச்சர் அவர்கள் விளக்கத்தைத் தர வேண்டும்.

**திரு. கே. எ. ஜி. ஹாஜாஷெரீப் :** தலைவர் அவர்களே, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்று சொல்வார்கள், அதைப் போல அமைச்சர் அவர்கள் சுருக்கமாகச் சொன்னால் எல்லோரும் விளங்கிக் கொள்வதற்கு சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே ஆங்கிலத்தில் இருப்பதாக உறுப்பினர் திரு ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். அவர் படித்துவிட்டார். ஆகவே அவர் பேசிவிட்டால் எல்லோருக்கும் தெரிந்துவிடும். ஆகவே உறுப்பினர் அவர்கள் பேசட்டும்.



**திரு. அ. ரகுமான்கான்:** தமிழ் ஆட்சிமொழியாக சட்டமன்றமொழியாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். ஆங்கிலத்திலே மட்டும் இது தரப்படாமல் இந்தியிலும் கூட தரப்பட்டிருக்கிறது. சில அமைச்சர்களுக்கு இந்தி தெரிந்தால் கூட படித்துக் கொள்ளலாம் தமிழில் கொடுக்கப்படவில்லை. ஆங்கிலம் தெரியாத உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதை மொழிகின்ற அமைச்சர் அவர்கள் கூட இதைத் தமிழில் சொல்லவில்லை. எனக்கு ஆங்கிலம் தெரியும் அது வேறு விவகாரம்.

'In the interest of the members of the Assembly' அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வது மத்திய சர்க்கார் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானம் இங்கே ரேடிபிகேசனுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த அரசாங்கத்தின் சார்பில் இந்தத் தீர்மானம் என்னஎன்பது சொல்லப்பட வேண்டும். ஆதரிக்கிறோம் என்று சொன்னால் நாங்களும் திரும்பவும் ஆதரிக்கிறோம் என்று சொல்ல வேண்டும் நான் சபாநாயகர் அவர்களுக்கு தமிழ் தெரியாத உறுப்பினர்களுடைய உரிமை இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்குக் கடைசி நாள் நேரமில்லை. தாங்கள் பேசவேண்டிய கருத்துக்கள் ஏதாவது இருந்தால் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லலாம்.

**திரு. துரைமுருகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசாங்கம் ஒரு அறிக்கை கொடுக்கிறது. இதில் இந்தச் சமாச்சாரம், இதனால் இதன் மேல் விவாதம் என்று கொடுக்க வேண்டுமா இல்லையா? இது ஆங்கிலத்தில் இருக்கிறது. இது கண்கட்டு வித்தையைப் போல இருப்பதால் தமிழில் அரசாங்கம் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொண்டே கேட்கிறார்கள். சாதாரண ஒரு சட்டத் திருத்தம் தான் இது. விற்பனை வரியை விதிப்பதற்கு மாநில அரசிற்கும் மத்திய அரசிற்கும் அதிகாரங்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு நிறுவனம் ஒரு மாநிலத்தில் உற்பத்தி செய்கிற தனது பொருள்களை இன்னொரு மாநிலத்திலுள்ள தன்னுடைய கிளை அலுவலகங்களுக்கு அனுப்புகிற போது அது விற்பனையாக கருதப்பட மாட்டாது. விற்பனை வரி விதிப்பதற்கு அரசிற்கு அதிகாரம் இல்லை. இந்திய அரசிற்கும் அதிகாரம் இல்லை மாநில அரசிற்கும் அதிகாரம் இல்லை. இந்தச் சட்டத்திருத்தத்தின் மூலம் அந்த அதிகாரத்தைத் தான் கொடுக்கிறோம்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பாக சொல்லப்பட்ட இந்த வினக்கும் தனிப்பட்ட ஒரு நிறுவனம் தான் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு இங்கே விற்பனை வரி செலுத்தாமல் தன்னுடைய துணை நிறுவனத்திற்கு, கிளை நிறுவனத்திற்கு வேறு மாநிலத்திற்கு அனுப்பி அதன் மூலமாக வணிகம் செய்கிறபோது அரசை ஏமாற்றுகிறார்கள், அதிலேயிருந்து அதைத் தடுப்பதற்காக என்று சொல்கிற அந்தக் கொள்கையை வரவேற்பதிலே யாருக்கும் மாறுபாடு இருக்காது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுகிற போது அந்த வரியை வசூலிக்கிற போது மாநில அரசிற்கு என்ற முறையிலே இந்தத் திருத்தம் வருகிறதா? இந்தத் திருத்தத்தின் மூலமாக மத்திய அரசு தான் வசூலிக்கும் என்ற நிலைமை வருகிறதா? Is there any infringement on the right of the State Government by the Centre or not அந்த அடிப்படையிலே மாநில அரசு தன்னுடைய நிலைமையை விளக்கி விடுமானால், அரசாங்க நிர்வாகத்திலே இருப்பவர்கள் என்பதாலே அரசு அதை விளக்கி விடுமானால், மாநில அரசுக்கு எந்தவிதமான இழப்பும் இல்லாமல் நியாயமான முறையிலே விற்பனை வரி வசூலிக்க இந்தச் சட்டம் வகை செய்கிறது என்ற நம்பிக்கையோடு இது வரவேற்கப்படுமானால் இதை ஏற்றுக் கொள்வதிலே எதிர்க்கட்சிக்கு எந்தவிதமான மாறுபாடும் இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்ட்டர் ஸ்டேட் சேல்ஸ் டாக்ஸ் இப்போதும் மத்திய அரசு தான் வசூலித்து மாநில அரசுகளுக்குக் கொடுக்கிறது. கன்சைன்மெண்ட் என்ற காரணத்தாலே அவர்களுக்கு டாக்ஸ் வசூலிக்க முடியவில்லை. அதனால் எவேஷன் இருக்கிறது. கன்சைன்மெண்ட் டாக்ஸ் வசூலித்து அவர்கள் நமக்கு கொடுப்பார்கள். அது தான் இதிலே இருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட திருத்தத்திலே சென்ட்டர் ஸ்டேட் ரிலேஷன்ஸ் சம்பந்தமான ஒரு பிரச்னை அடங்கியிருக்கிறது என்ற காரணத்தாலே அது சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை பொதுவாக மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. இந்தச் சட்டத்தை ஏற்கனவே கொண்டு வந்திருக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்து. காலம் கடந்து கொண்டு வரப்பட்டிருக்கிற ஒரு சட்டதிருத்தமாக இருந்தாலும் கூட இது சம்பந்தமாக நிலை இன்று நேற்று ஏற்பட்ட பிரச்னை அல்ல. 1958–லே சுப்ரீம் கோர்ட் சானன் அண்ட் டங்ககர்லியிலிருந்து 1978 வரையில் பல்வேறு கேஸ்களில் கொடுக்கப்பட்ட தீர்ப்புகளின் விளைவாக இந்த நாட்டிலே வியாபாரம் செய்யக் கூடியவர்கள் விற்பனை வரியிலிருந்து அதைச் செலுத்தாமல் தப்பித்துக் கொள்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.



(இரவு 7–00)

அது சம்பந்தமாக என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கைகள் மத்திய அரசால் காலா காலத்திலே எடுக்கப்படவில்லை, என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் இந்த விஷயத்தில் இருக்கக் கூடிய பிரச்னை என்னவென்றால், மத்திய அரசு, ஏற்கனவே மாநில அரசுகளுடைய அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவது, குறைப்பது என்ற அந்த மனப்பான்மை வைத்திருப்பதன் காரணமாகத்தான் இந்தப் பிரச்னை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், இந்தச் சட்டம் சம்பந்தமாக, இப்பொழுது அரசியல் சட்டத்திலேயே திருத்தம் கொண்டு வந்திருக்கக்கூடிய நேரத்தில், இந்த அரசியல் சட்டத்தை உருவாக்கக் கூடிய நேரத்தில், மைய அரசு, 1935-ஆம் ஆண்டிலே மாநில அரசுகளுடைய அதிகாரங்களைக் குறைப்பதற்காக என்ன, என்ன விதிமுறைகளை வகுத்தார்களோ, அவைதான் அரசியல் சட்டத்திலும் ஏற்கப்பட்டிருக்கின்றன. 1935–ல் இயற்றப்பட்ட மைய அரசின் சட்டமே சரியில்லையென்று காங்கிரஸ் கட்சியே ஒரு காலத்திலே பேராட்டம் நடத்தியிருக்கிறது. ஆனால் அரசியல் சட்டம் உருவான பிறகு, மாநில அரசினுடைய அதிகாரங்களைக் குறைப்பது சம்பந்தமாக இருந்த ஷரத்துக்களை அரசியல் சட்டத்திலே எடுத்துக் கொண்டிருப்பதோடு மட்டுமல்ல, அவைகளை மாற்றுவதற்கு எந்த முறையிலே நடவடிக்கைகள் மத்திய அரசால் காலாகாலத்திலே எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமோ அவை எடுக்கப்படவில்லை.

Additional Excise duty on specific and important items, Act, 1977 In that the items like Sugar, Cotton Yarn, Rayaon and Woollen fibres were included.

இந்த மாதிரி உள்ள பிரிவுகள் மூலமாக, ஒரு மாநிலத்திற்கு உள்ள உரிமைகளை மைய அரசு பிடுங்கிக் கொண்டது.

அது மட்டுமல்ல, இன்னும் மைய அரசு என்ன நிலையைக் கையாளுகிறது? எக்சைஸ் டியூட்டீஸ் அளிப்பதிலும் ஒரு புது முறையைக் கையாண்டு மாநில அரசுக்குக் கிடைக்க வேண்டிய விகிதம் காலாகாலத்திலே கிடைக்காத ஒரு நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இது இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னும் மைய அரசு லெவி, எக்சைஸ் டியூட்டி, சர்சார்ஜ் போன்றவைகளைப் போடுவது என்ற நடவடிக்கையை, அந்தக் கொள்கையைத் தான் கடைபிடித்து வருகிறது. இதன் காரணமாக, ஒரு பக்கத்திலே மாநில அரசினுடைய பொறுப்புக்கள் அதிகரிக்கப்படுகின்றன. ஏனென்றால், கல்வி, சுகாதாரம், சமூக வளர்ச்சி போன்ற மிகப் பெரிய பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டிய கடமை மாநில அரசுக்கு இருக்கிறது. ஆனால், அதற்குத் தகுந்த அளவிலே ரிசோர்சஸ் எங்கே என்று கேட்டால், அந்த ரிசோர்சஸ் இன்றைக்கு மாநில அரசுக்குக் கொடுக்கப்பட

வில்லை. இதை மத்திய அரசே தகுந்த முறையிலே பங்கு வைத்து கொடுக்கிறதா என்றால் இல்லை, ஒரு சில எடுத்துக்காட்டு களுடன் அதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1970-ஆம் ஆண்டு முதலமைச்சர்கள் மகாநாட்டிலே ஒரு ரெவின்யூ கமிட்டி, பங்கு பிரிப்பது சம்பந்தமாக 2:1 ரேஷியோவிலே அமைக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், 1979-வரை மைய அரசால் அப்படிப்பட்ட ஒரு ரெவியூ கமிட்டி நியமனம் செய்யப்படவில்லை. 7-வது நிதிக் குழு கூட அதைச் சுட்டிக் காட்டியிருககிறது. ஆனால், மாநில அரசினுடைய அதிகாரங் களை, ரிசோர்சஸைக் குறைப்பதற்கான அந்த மனோபாவம், அந்த முறையிலே உள்ள நடவடிக்கை, அரசியல் சட்டத் திலே காணப்படுகிறது. ஏனென்றால், இந்தச் சட்டத்திலே செக்ஷன் 6, அரசியல் சட்டத்தினுடைய பகுதியாக ஏற்படுத்தப் படாமல் தனி சட்டமாக வரக்கூடிய நிலைதான் உருவாக்கப் பட்டிருக்கிறது. உண்மையிலே 6-வது பகுதி அரசியல் சட்டத் திற்கே திருத்தமாக வந்திருக்க வேண்டும் இது எதைக் காட்டுகிறது என்றால் மாநில அரசுகளுக்குக் கொடுக்க வேண்டிய ரிசோர்ஸ்களை காலாகாலத்திலே ஒழுங்காகச் சரியாகக் கொடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம், அது மத்திய அரசின் மனோபாவத்தைக் காட்டுகிறது என்பதேயாகும். அந்த மனோபாவத்தை மாற்ற வேண்டும். அதுதான் உண்மை யாக மாநிலங்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் பொறுப்புக்களை நிறைவேற்றக் கூடிய அந்த வேலையைச் செய்து முடிக்கத் தகுந்த அளவில் உள்ள வருவாயை ஏற்படுத்த உதவும் என்பதை இந்த அவையின் வழியாக மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொண்டு, மாநில அரசுகளை, முனிசிபாலிட்டிகளாக மாற்றக் கூடிய அந்தக் கொள்கையை மாற்ற வேண்டும் என்று தெரி வித்து இந்தச் சட்டத் திருத்தத்தை ஒட்டுமொத்தமாக நாங்கள் ஆதரிக்கிறோம் என்பதைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய மாநில நிதி ஆதாரங்களைப் பற்றிய விளக்கங்களை மாண்புமிகு உறுப்புனர் திரு. ஹேமச் சந்திரன் அவர்கள் இங்கே அளித்தார்கள். ஒவ்வொரு தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும், மத்திய அரசு நிதிகளைப் பற்றி ஆராய்கின்ற கூட்டங்களிலேயும் நமுடைய அரசின் சார் பிலும், அதே போல மற்ற மாநில அரசுகளும் தங்களுடைய நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கான காரண காரியங்களை எடுத்து வைத்த வண்ணம்தான் இருக்கின்றன.

இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், இதுவரையில் வரியே தராமல் ஏமாற்றிக் கொண்டிருந்த வணிக நிறுவனங்கள், பெரும் தொழிலகங்கள் வரி கொடுக்க வேண்டிய வகையை இது உருவாக்குகிறது. ஆகவே, முதல்படியாக அவர்கள் மீது வரி விதித்து, அவ்வரியினத்தை மாநிலங்களுக்குத் தருவதற்கு முன் வந்த மத்திய அரசை நாம் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக் கின்றோம்.





ஆனால் அதே நேரத்தில், ஒரு பொருளின் மீது எவ்வளவு வரியினைப் பெற முடியுமோ அந்த வரியினைப் பெறுவதற்குப் பல வகைகள் இருக்கின்றன, சில வகைகளின் மூலம் பெற்றால் மாநிலங்களுக்குத் தர வேண்டும். வேறு சில வகைகளின் மூலம் பெற்றால் மத்திய அரசே வைத்துக் கொள்ளலாம். அதாவது டாக்ஸ் பொடன்ஷியல் என்று சொல்வார்கள். மத்திய அரசு தானே வைத்துக் கொள்ளுகின்ற அந்த வகைகளின் மூலம் முழு அளவுக்கு வரி போட்டு எடுத்துக் கொண்டும், மாநில அரசுகளுக்கு அந்த டாக்ஸ் பொடன்ஷியலைக் குறைத்துக் கொண்டும் வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு எல்லா மாநிலங் களாலும் சொல்லப்பட்டு வருகிறது. அதைச் சரிவர உணர்ந்து மத்திய அரசு செயல்படும் என்று நம்பி, இத்தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி; "நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப் பெற்ற 1982-ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்தி ஆறாவது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள, இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் கீழ் வரும் திருத்தங்களுக்கு, இப்பேரவை ஏற்பளிக்கின்றது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

## 8 அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை அலுவல் வரிசை மாற்றம்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30, உள்விதி (2)—ன் கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 11, அரசினர் தனித் தீர்மானங்கள் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண். 3 மற்றும் வரிசை எண். 4 ஆகியவற்றின் மீதான விவாதத்தை ஒத்தி வைத்து மற்ற இனங்களை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

11 ஒரு மணி நேர குறுகிய கால விவாதம்.

(அ) வறட்சி காரணமாக குடி தண்ணீர் பற்றாக்குறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. அப்பாதுரை அவர்கள் கீழ்க்கண்ட 'நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்த ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகிய கால விவாதத்தைத் துவக்கி வைப்பார் :—

"தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாகக் குடி தண்ணீர் பற்றாக்குறை பற்றி இப் பேரவையில் விவாதிக்கப் பெற வேண்டும்".

"Regarding Drought and Scarcity of Drinking water prevailing in certain Districts of Tamil Nadu"

The following members have given notice under Rule 54:

1. Thiru Vedasandur V.P. Balasubramanian.
2. Thiru J.S. Raju.
3. Thiru M. Chinnaraj.
4. Thiru Kovai Thambi.
5. Thiru P. Kandasamy.
6. Thiru C. Palanimuthu.
7. Thiru K.M. Thangamani.
8. Thiru P. Thirtharaman.
9. Thiru N.S.V. Chithan.

Under Rule 55:

1. Thiru N.A. Poongamanam.
2. Thiru T. K.Nallappan.
3. Thiru P.S. Thiruvengadam
4. Thiru M. Appadurai.
5. Thiru K.R. Sundaram
6. Thiru B.Sundaram.
7. Thiru D. Venugopal.
8. Thiru Vijayaragunatha Thondaman
9. Thiru M. Arumugam.
10. Thiru R. Karuppiah.
11. Thiru S. Alangaraswamy.
12. Thiru Pammal Nallathambi.



13. Thiru L.Balaraman.
14. Thiru C.Pallanimuthu.
15. Thiru K.M.Thangamani.
16. Thiru S.Sivaraman
17. Thiru R.Sundaramurthy.
18. Thiru P.Theertharaman.
19. Thiru S.Sivasamy.
20. Thiru P.Eswarmurthi alias Sornam.
21. Thiru N. Varadharajan.
22. Thiru K. Ramani.
23. Thiru. P. Vijayaragavan.
24. Thiru S. Balan.
25. Thiru G. Chockalingm.
26. Thiru T. Venkata Reddy.
27. Thiru S.N. Ramaswamy.

Under Rule 77.

1. Thiru P. Nedumaran.
2. Thiru K. Sattanatha Karayalar.
3. R. Karuppiah.
4. Thiru R. Umanath.

(இரவு 7·10)

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சென்ற ஆண்டு மிகப்பெரிய வறட்சி ஏற்பட்டு, ஏறத்தாழ 55 கோடி ரூபாய் அந்த வறட்சியை நீக்கு வதற்காக நம்முடைய தமிழக அரசு செலவழித்து இருக்கிறது. இந்த ஆண்டிலேயும் காலத்திலே பெய்ய வேண்டிய பருவ மழை பெய்யாத காரணத்தால், இன்றைக்குக் காவிரி டெல்டா பகுதியில் தமிழகத்தில்—10-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் மிகப்பெரிய வறட்சி ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பாக, நெல்லை, இராமநாத புரம், திருச்சி, கோவை, பெரியார், தருமபுரி போன்ற மாவட்டங் களிலே இன்றைக்குக் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத நிலைமையேற்பட்டு இருக்கிறது. இந்த வறட்சி நிலைமையைப் போக்குவதற்காக, குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக குடிநீர் வடிகால் வாரியம் இன்றைக்குக் குழாய்க் கிணறுகளைப் போட்டுக் கொண்டு இருக்கும் நிலைமையை நாம் பார்க்கிறோம்.

நான் இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு வடிகால் வாரிய அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையிலே எங்கே குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கிறதோ, எங்கே பொதுமக்கள் தண்ணீர் இருப்பதாகக் காண்பிக்கிறார்களோ அந்த இடங்களில் இந்தக் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். காரணம், மக்கள் விரும்புகின்ற இடங்களில் போடாமல் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்காத இடங்களில் போடுவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் பல ஆயிரக் கணக்கான ரூபாய் செலவு செய்தும், பயன் இல்லாமல் போய் விடுகிறது. இன்றைக்கு ஒரு அடி பம்ப் போடுவதற்கு 5,000, 6,000 ரூபாய் செலவாகிறது. (குறுக்கீடு) 8,000 ரூபாய் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அவ்வளவு ரூபாய் செலவழித்தாலும்கூட இன்றைக்குப் போடப்பட்ட ஆழ்குழாய் கிணறுகள் தண்ணீர் இல்லாத நிலையில் இருந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே, இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிற, வறட்சி மழைப் பற்றாக்குறையால் ஏற்பட்டு இருக்கும் வறட்சி மட்டுமல்ல, இருக்கக்கூடிய தண்ணீரை எடுத்துச் சீராகக் கொடுக்க முடியாத அவநிலையும் ஏற்பட்டு இருக்கிறது.

இந்த மாமன்றத்திலே மட்டுமல்ல, நாடாளுமன்றத்திலும் ஒரு மாபெரும் கருத்து எடுத்துச்சொல்லப்பட்டது தமிழகத்திலே திரைவானிலே ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய ஒரு சினிமா படத்தை —தண்ணீர் தண்ணீர்—என்ற சினிமா படத்தைத் தடை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். நான் இங்கே இதை எடுத்துச் சொல்வதற்குக் காரணம் அந்த—தண்ணீர் தண்ணீர்—என்ற சினிமாவின் தளம் என்னுடைய தளம் எடுக்கப்பட்ட இடம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தது. இன்றைக்கு அந்த சினிமாவிலே சொல்லப்பட்ட தனோஜ் என்ற பகுதியில் ஏறத்தாழ 15 லட்சம் ரூபாய் செலவில் கூட்டு குடிநீர் திட்டத்திற்காக கிணறுகள் வெட்டப்பெற்று, வேலைகள் நடைபெற கிராமத்திலே குழாய்கள் பதிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், துரதிருஷ்டம் என்னவென்றால் எப்படி அந்தப் படத்தில் மக்களுக்காக அந்தக் கால்வாயை மூடுவோம் என்று அரசாங்கம் சொல்கிறதோ அதைப் போல இன்றைக்கு அரசாங்கம் வெட்டி உருவாக்கி இருக்கக் கூடிய இந்தத் திட்டத் தவன இலாகாவிலே—எங்கள் பகுதியிலே மின்சாரத்தை இணைப்பதற்காக கம்பத்தை நடுவதற்கு விட மாட்டோம் சாலைகளை அமைக்க விடமாட்டோம் என்று சொல்லி தடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த மாமன்றத்தின் மூலம் மாண்புமிகு அமைச்சருக்கும் தமிழக அரசுக்கும் நான் சொல்வதெல்லாம், ஏறத்தாழ 15 லட்சம் ரூபாய் செலவிட்ட பிறகு, இன்னும் ஒரு சில மாதங்களில் நமக்குப் பெய்யவேண்டிய வடகிழக்குப் பருவ மழை ஆரம்பித்து விட்டால் அந்தப் பகுதியில் மின்கம்பங்கள் நடமாட முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்கு இந்த 15 லட்ச ரூபாயின் கதி என்ன என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே, வறட்சிப் பகுதியில். வளமான பகுதியில், இன்றைக்கு 15 லட்ச





ரூபாய் குழாய்கள் பதிக்கப்பட்டு இந்தத் திட்டத்தை இன்னும் ஒரு மாத காலத்திற்குள் முடிக்கவில்லையென்று சொன்னால், அங்கே செலவழிக்கப்பட்ட பணம் முழுமையாகப் பாழாகக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தக் காரணத்தின் அடிப்படையில் இன்றைக்குத் துரிதமாக வன இலாகாவினர் அந்த இடத்தை விட்டுக்கொடுத்து அங்கே மின்சாரக் கம்பங்கள் இணைப்பதற்கும் சாலைகள் போடுவதற்கும் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நெல்லை மாவட்டத்திலே தாமிரபரணி பாசனத்தில்கூட இன்றைக்கு மிகப் பெரிய வறட்சி ஏற்பட்டிருக்கிறது. செங்கோட்டைத் தாலுகா, தென்காசி தாலுகா, குற்றாலத்திற்கு வந்திருக்கக் கூடிய நம்முடைய அமைச்சர் அவர்கள் அதைப்பார்த்திருப் பார்கள். இன்றைக்கு குற்றாலம் சீசன்கூட முழுமையாக இல்லாத காரணத்தால் தென்காசி, — செங்கோட்டைத் தாலுக்காக்களிலே கூட இன்றைக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. எங்களுடைய தாமிரபரணி ஆற்றுப் பாசனத்தில் ஏறத்தாழ 8 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இன்றைக்கு மழை இல்லாத காரணத்தால் வறண்டு கொண்டிருக்கின்றன. அங்கே தண்ணீர் இல்லாத காரணத்தால் நெல்லை மாவட்டத்தில் குடிநீர் சப்ளை செய்ய முடியாத நிலை முக்கியமாக அந்தப் பகுதிகளில் ஏற்பட்டு, இன்றைக்கு வறண்டிருக்கிறது என்று நான் நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆடிப்பட்டம் தேடி விதை என்று சொல்வார்கள். அப்படிப் பட்ட ஆடிப் பட்டத்தில் தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் துவரை விதைக்கவேண்டிய சமயத்தில் தண்ணீர் இல்லாத காரணத்தால் இன்றைக்குத் துவரைப் பயிர் செய்ய முடியாத ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்திற்கு தேவையான பருப்பு வகைகளை இன்றைக்கு நாம் வெளிமாநிலங்களிலிருந்து வாங்கிக்கொண்டிருக்கிறோம். அவைகளில் ஏறத்தாழ 25 சதவிகிதம் உற்பத்தி செய்யக்கூடியது இராமநாதபுரம் மாவட்டம். அந்த மாவட்டத்தில் ஒரு படி அளவு துவரை பருப்புகூட பயிர் செய்ய முடியாமல் இன்றைக்குப் பருவமழை பொய்த்திருக்கிறது. அங்கே சத்திரப்பட்டி என்று சொல்லக்கூடிய கிராமத்தில் குடிநீருக்காக தாய்மார்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இன்றைக்கு போராட்டம் நடத்தியிருக்கிறார்கள் என்ற காட்சியினை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல் என்னுடைய தொகுதியிலேகூட நம்முடைய அமைச்சர் அவர்களோடு செல்லுகின்றபோது எங்களைமறிக்கின்ற காட்சியைப் பார்த்திருக்கிறோம். ஆகவே இன்றைக்குக் குடி தண்ணீர் பற்றாக்குறை என்று சொல்கிறபோது, அவைகளைப் போக்குவதற்கு நாம் கடந்த காலத்தில் ஆயிரம் கோடி ரூபாய்க்கு செலவழித்திருந்தாலும்கூட முழுமையான குடிநீர் தேக்கங்களுக்கான வசதிகளை நாம் பல இடங்களில் செய்யவில்லை.

ஆற்றுப்பாசனமாக இருந்தாலும் சரி, மழைப் பாசனமாக இருந்தாலும் சரி, அப்படிப்பட்டவைகள் இன்று தூர்ந்து போய் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவைகளைத்தூர் எடுப்பதன்மூலம் அங்கே பெய்யக்கூடிய மழையின் மூலம் வருகின்ற தண்ணீரைத் தேக்கி நீர்ப்பாசனங்கள் ஏற்படக்கூடிய அந்த நிலைமைகளை இந்தத் திட்டத்தில் உருவாக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு எப்படி நகர்ப்புறங்களில் இருக்கக்கூடிய, வாழக்கூடிய மக்களுக்குத் குடிதண்ணீர் உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கிறதோ, அதைப்போன்று கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு பெரிய கூட்டுகுடிநீர் திட்டங்களை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்குவதன் மூலம்தான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய தண்ணீர் பிரச்னையை இப்படிப்பட்ட வறட்சிக் காலங்களில் மட்டுமல்லாமல் நிரந்தரமாக போக்கக்கூடிய அப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்கவேண்டும்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு மழை இல்லாத காரணத்தால் வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் விவசாயிகள் கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கிக் கொண்டிருக்கிறார்கள். வாங்கிய கடனை கட்டாத காரணத்தால் இன்றைக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் புதிய கடன்கள் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு மாதம் கழித்து தமிழகத்திலே இருக்கக்கூடிய மிகப்பெரிய பகுதிகளில் விவசாயிகள் விவசாயத்தை தொடங்க வேண்டும். அப்படிப்பட்ட காலச் சூழ்நிலையில் விதைகள் வாங்குவதற்கும் இன்னும் விவசாயிகளுடைய அடிப்படைத் தேவைகளுக்கும் அவர்களுக்குப் புதிய கடன் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எற்கனவே வாங்கிய கடன்களுக்கு இன்றைக்கு ஜப்தி செய்யக்கூடிய நடவடிக்கையும், புதிய கடன்களைப் பெற முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்தச் சூழ்நிலைகளில் இன்றைக்குக் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாத அந்த விவசாயிகள் இந்த கிராமப்புறத்து மக்கள் எப்படி கடன்களைப் பெறுவார்கள்? ஆகவே புதிய கடன்களை, கூட்டுறவு கடன்களை வழங்குவதற்கு தமிழகத்தில் ஆவனசெய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு தமிழகத்தில் தஞ்சைத் தரணியில் நம்முடைய காவிரி டெல்டா பகுதியில்கூட மிகப் பெரிய வறட்சி ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை தரணியிலே அப்படிப்பட்ட வறட்சி என்று சொன்னால் தர்மபுரி மாவட்டம், இன்னும் இருக்கக்கூடிய வட ஆற்காடு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டங்களில் இன்றைக்கு மிகப் பெரிய வறட்சி இருக்கக்கூடிய சூழ்நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே குடிநீர் வடிகால் வாரியம் இன்றைக்குத் துரிதமாக நடவடிக்கை எடுத்து, குடி தண்ணீர் பஞ்சத்தை போக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.



அதுமட்டுமல்லாமல் அந்த வறட்சித் துயர் துடைப்பதன் மூலம் புதிய பாசன திட்டங்களை உருவாக்குவதற்கான வழிவகைகளில் நம்முடைய அரசாங்கம் அதிக கவனம் செலுத்தவேண்டும். அப்படிப்பட்ட நிலையை உருவாக்குவதன் மூலம்தான் நீர்ப்பிடிப்புகளில் நீர் ஏற்படுவதன் மூலம்தான் அவைகளை பாசனத்திற்காகவும், குடிநீருக்கும் பயன்படுத்த முடியும். அப்படிப்பட்ட ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்யவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

(இரவு 7.20)

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே இன்றையதினம் தமிழகத்திலே பரவலாக எல்லா மாவட்டங்களிலும் தென் மேற்குப் பருவ மழை தவறியதன் காரணமாக பொதுமக்கள் குடிநீருக்கும் விவசாயம் செய்வதற்கும் தண்ணீர் இல்லாமல் மொத்த அவல நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் உங்கள் மூலமாக அரசுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் சென்ற ஆண்டும், இதற்கு முந்தைய ஆண்டும் கடுமையான வறட்சி இருந்த காலத்திலேயும் சரி, திருவண்ணாமலை, போளூர், வந்தவாசி, செய்யாறு போன்ற பகுதிகளிலே சரியான மழையில்லை. இந்த ஆண்டும் ஏற்கனவே பெய்து இருக்கவேண்டிய தென்மேற்குப் பருவ மழை இதுவரை பெய்யாமல் பொய்த்து விட்டது. அதன் காரணமாக—விவசாயிகளுக்கு நல்ல முறையில் பொருளாதார வளத்தைத் தரக்கூடிய, கைகொடுக்கக்கூடிய மானாவாரி மணிலா மிகவும் 'பெயில்யூர்' ஆகிவிட்டது.

அதேபோன்று, சம்பாவிற்கு ஆடி 18-ல் விதை விட்டு இருக்கும் விவசாயிகள்—தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் உள்ள விவசாயிகள்—இன்றைக்கு நடவு நடுவதற்கு தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். கிணற்றில் கூட தண்ணீர் இல்லை.

இந்த நிலைமையில் அரசாங்கம் சுறுசுறுப்பாகப் பணியாற்றி இருக்கிறதா என்று கேட்டால், நிச்சயமாக இல்லை என்பதைச் சொல்ல முடியும். காரணம், இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்பதை வடாற்காடு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய மட்டத்தில் உள்ள அதிகாரிகளிடத்தில் மட்டுமல்ல, கோட்ட வளர்ச்சி அதிகாரிகளிடத்திலும் பல முறை, பல நேரங்களில், பல சந்தர்ப்பங்களில் எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. இருப்பினும், இதுவரையில் இதற்காக அரசாங்கம் போதிய கவனம் செலுத்தவில்லை. இந்த நேரத்தில் அரசாங்கம் எந்த வகையில் சுறுசுறுப்பாக, சிறப்பான முறையில் பணியாற்ற வேண்டும் என்று சொன்னால், குடிநீர் வடிகால் வாரியத்

துறையைச் சேர்ந்த அமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆகியோர் மெத்த க்கறை எடுத்துக் கொண்டு பணியாற்றினாலும் கூட பொதுமக்களின் குறைகளை முழு அளவிலே அறிந்து, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிற அளவில் இருக்கவேண்டும். அப்படி செய்யப் படுகிறதா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

எதிர்பாராத விதமாக பருவமழை வந்து விடுமானால் பிரச்னை இல்லை. ஆனால் இன்றைக்கு ஏற்பட்டு இருக்கும் பிரச்னை சாதாரணமான பிரச்னை இல்லை. இன்றைய தினம் இந்தப் பிரச்னையில் அரசாங்கம் போதிய கவனம் செலுத்த வில்லை என்பதை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

காரணம், சென்ற ஆண்டுக்கு முன் ஆண்டே கூட தமிழ கத்தில் கடுமையான வறட்சி. அரசாங்கமே கூட சொல்லியது. 100 ஆண்டு காலமாக தமிழகத்தில் ஏற்படாத வறட்சி இப்போது வடாற்காடு மாவட்டத்தில் ஏற்பட்டு இருக்கிறது என்று. இப்படி அரசாங்கம் சொல்லியதற்குப் பிறகும் கூட அரசாங்கம் அந்த மாவட்டம் வறட்சியாலே பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று அறிவித்ததா என்று சொன்னால், அறிவிக்கவே இல்லை. பஞ்சம் வறட்சி என்று அறிவித்தால் தான் விவசாயிகளுக்குப் பல சலுகைகளை அரசாங்கம் செய்ய முடியும். ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் கூட இப்படிப்பட்ட விதிமுறைகள் இருந்து இருக் கின்றன. ஆனால், 100 ஆண்டு காலமாக இல்லாத ஒரு வறட்சி ஏற்பட்டு இருந்தும் அரசாங்கம் வறட்சி என்று அறிவிக்கவே இல்லை. நான் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்துச் சொன்னேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வேலூருக்கு வந்திருந்த நேரத்தில் அவரைப் பார்த்துச் சொன்னேன். ஆனால் வறட்சி நிலைமை என்கிற முறையில் அந்த மாவட்டத்தை அரசாங்கம் அறிவிக்கவே இல்லை. ஏன் செய்யவில்லை? அப்படி செய்தால், விவசாயிகளின் கடனை அரசாங்கம் தள்ளுபடி செய்யவேண்டும். வரியைத் தள்ளுபடி செய்யவேண்டும். வரி வசூல் செய்வதை, கடன் வசூல் செய்வதை அரசாங்கம் ஒத்தி வைக்கவேண்டும். இப்படிப்பட்ட தலையாய கடமைகள் அரசாங்கத்திற்கு வறட்சி என்ற அந்த மாவட்டத்தை அறிவித்த உடனேயே ஏற்பட்டு விடுகின்றது. ஆகவே, அரசாங்கம் தன்னுடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் வகையில் அந்த மாவட்டத்தை வறட்சி மாவட்டம் என்று அறிவிக்கவே இல்லை. அதற்கு மாறாக கூட்டுறவுக் கடன் வசூல் கடுமையான முறையில் வசூல் செய்வதற்கான முயற்சிகள் அந்த மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட்டன என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



(திரு. பெ. சு. திருவேங்கடம்)

அந்த மாவட்டத்தில் அன்றையதினம் எந்தவிதமான பயிரும் இல்லாத நேரத்தில் கூட ஜப்தி போன்ற பயங்கரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட கசப்பான முன் அனுபவம் அந்த மாவட்டத்து மக்களுக்கு உண்டு என்பதை இங்கே நான் மெத்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

நான் இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது—இப்படிப்பட்ட ஒரு அபாயகரமான நிலைமை இன்றைய தினம் அங்கே ஏற்பட்டு விட்டது. அங்கேயுள்ள மக்கள் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள் இங்கே எனக்கு முன்னாலே பேசிய ஒரு உறுப்பினர்கூட 'தண்ணீர், தண்ணீர்' சினிமாப்படம் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். நான் இந்தப் பேரவைக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்னாலே என்னுடைய தொகுதியில் இரண்டு நாள் சுற்றுப்பயணம் செய்தேன் பல யிடங்களில் என்னிடத்தில் மக்கள் மனு கொடுத்தார்கள். தண்ணீர் இல்லை, ஏதாவது செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். நான் அவர்களிடத்திலே தெரிவித்தேன். நான் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்திக்கிறேன், அமைச்சரைப் பார்த்து விவரங்களைச் சொல்லி உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கச்சொல்கிறேன் என்று சொன்னேன். அப்படி நான் அவர்களிடத்திலே சொன்னபோது, பொதுமக்கள் என்ன சொன்னார்கள் என்றால், இது என்ன ஏதோ 'தண்ணீர், தண்ணீர்' படத்தில் வருகின்ற ஒரு சீன் போல் அல்லவா இருக் கிறது என்று கேட்டார்கள். இத்தகைய வார்த்தைகள் என்னைப் பார்த்து அப்போது தெரிவிக்கப்பட்டு இருந்தாலும், இந்த நாட்டு மக்கள் இன்றைக்கு நாட்டில் உள்ள நிலைமைகளை நன்கு புரிந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக் கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, நான் அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக வடாற்காடு மாவட்டத்தை வறட்சி மாவட்டம் என்று அறிவித்து அங்கேயுள்ள மக்களுக்கு, நிவாரணம் அளிக்க வேண்டும். ஏற்கனவே விதையைப் போட்டு விட்டு, நடவு செய்ய முடியாமல் மக்கள் தவித்துக்கொண்டு இருக்கின்ற நிலை யில், அவர்கள் பெற்றுள்ள கூட்டுறவுக் கடனை அடியோடு ரத்து செய்து விடுகிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் சொல்லியும்—இன்னும் 2–3/4 ஆண்டு எங்களுக்கு இருக்கிறது, அதற்குள் நிச்சயமாக அதை நாங்கள் கவனிப்போம் என்று முதலமைச்சர் அறிவித்திருந்தாலும் கூட—இந்த ஆண்டு அந்தக் கடன் வசூலிப்பதைத் தவிர்க்க உடனடியாக ஆணைகள் பிறப் பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடனை ரத்து செய்ய முடியாவிட்டாலும், உடனடியாக வட்டி வசூலிப்பதை ரத்து செய்து, அந்த விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. பெ. சு. திருவேங்கடம்)

அதைப்போன்று நீங்கள் வறட்சி என்று அறிவித்தால்தான் இன்றையதினம் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற ஆணையாளர்கள் ஏற்கனவே இருக்கிற கிணறுகளை, பாறை இல்லாத கிணறுகளை, ஆழப்படுத்த முடிந்த கிணறுகளை ஆழப்படுத்த மதிப்பீடுகளை தயார் செய்து ஒப்பந்தக்காரர்களிடம் கொடுத்து, பணிகளைத் தொடங்க வசதியாக இருக்கும். இப்போதுகூட கடுமையான தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது.

ஏற்கனவே குடிநீர் கிணறுகள் ஆழமாக இருப்பதால், அதை மேலும் ஆழப்படுத்த அரசாங்கம் கொடுக்கிற பணம் போதாது என்பதால் ஒப்பந்தக்காரர்கள் அந்த வேலைகளைச் செய்ய முன்வரவில்லை. வறட்சி என்றால் அந்த அவசர நிலையைக் கருதி சாதாரணமாகத் தேவைப்படும் பணத்தைப்போல இரண்டு மடங்கு பெறலாம் என்ற விதி இருக்கிறது. ஏனென்றால் வறட்சியிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நிலை வருகிறது. ஆகவே ஆழப்படுத்தும் கிணறுகளுக்குப்பணத்தைஇன்னும் அதிகமாகப் பெற அரசாங்கம் ஒதுக்கீடு செய்தால் ஒப்பந்தக்காரர்கள் முன்வருவார்கள்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியாக இருந்தாலும் சரி, வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற தண்டராம்பட்டு, போளூர், செங்கம், செய்யாறு, திருப்பத்தூர் தொகுதிகளாக இருந்தாலும் சரி, இராணிப்பேட்டை தொகுதியாக இருந்தாலும் சரி, அல்லது நாட்ராம்பள்ளி தொகுதியாக இருந்தாலும் சரி இப்படிப்பட்ட பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டியிருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியம் ஏற்கனவே சென்ற ஆண்டுக்கு முன்னால் கூட எந்த எந்தக் கிராமங்களில் கைப்பம்புகளைப் போட வேண்டுமென்று அரசாங்கம் அறிவித்ததோ அங்கெல்லாம் கைப்பம்புகளைப் போடாமல் விட்டுவிட்டது. அதனால்இந்த நேரத்தில் உடனடியாகக் குடிநீர் வடிகால் வாரியம் அந்தப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். குடிநீர் வடிகால் வாரியத்திடம் அதற்கு வேண்டிய மெஷினரி இருக்கிறதோ இல்லையோ தெரியாது. இல்லை என்றால் மற்ற மாநிலங்களிலிருந்தாவது உடனடியாக வரவழைத்து, கைப்பம்புகளைப் போடும் பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டும்; அதற்கு வேண்டிய நிதியையும் உடனடியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

அதைப்போன்று பல இடங்களில் ஏற்கனவே போடப்பட்ட கைப்பம்புகள் பழுதடைந்திருக்கின்றன. அப்படி பழுதடைந்திருக்கிற கைப் பம்புகளை உடனடியாக பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



(திரு. பெ.சு. திருவேங்கடம்)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வறட்சிக்குப்பிறகு வந்தார்கள். அப்போது ஆங்காங்கே பல்வேறு இடங்களில் கிணறுகள் தோண்ட பணம் ஒதுக்கீடு செய்தார்கள். பல இடங்களில் பொதுப்பணித் துறையின் மூலம் கிணறுகள் தோண்டப்பட்டன. ஆனால் சென்ற ஆண்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பொதுப்பணித் துறை அல்லது குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தோண்டப்பட்ட கிணறுகளில் தண்ணீர் இருக்கிறது. அதை இந்த நேரத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மற்றுள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவைப்பட்டால் புதிய கிணறுகளைத் தோண்டுவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். இந்தவகையில் உடனடியாக நீங்கள் பிரச்சனைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைப்போன்று தர்மபுரி மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம், புவனகிரி பகுதி போன்ற இடங்களில் மிகக் கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது.

அதைப்போன்று சென்னை போன்ற நகரங்களானாலும் சரி, வேலூர், திருவண்ணாமலை நகரங்களானாலும் சரி, மற்ற மாவட்டங்களில் இருக்கிற முனிசிப்பல் நகரங்களானாலும் சரி அங்கெல்லாம் கடுமையான தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் உடனடியாக லாரிகள் மூலம் தண்ணீர் சப்ளை செய்ய சம்பந்தப்பட்ட நகரசபை கமிஷனர் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சென்னை மாநகரில் பெரம்பூர், வியாசர்பாடி, பெரம்பூர் பகுதிகளில் கடும் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பஞ்சத்தைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நம்முடைய குடிநீர் வடிகால் துறை அமைச்சர் நாங்கள் இதைச் சொல்லும்போது, நீங்கள் எந்த ஊரிலே தண்ணீர் இல்லை என்று சொல்லுங்கள் என்று கேட்பார்கள்.

(மணி அடிக்கப் பெற்றது.)

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான்; மாண்புமிகு தலைவரவர்களே, வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு எனக்கும் வாய்ப்பு கொடுத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டிலே என்றும் காணாத பெரிய வறட்சியை இன்றைக்கு கண்டிருக்கிறோம். காவேரி ஆற்றில் கூட தண்ணீர் கிடையாது. மேட்டூர் நீர் தேக்கத்தில் 50 அடிக்

கும் கீழே தண்ணீர் வந்துவிட்டது. இப்படி இருக்கும்போது வானம் பார்த்த பூமியாக இருக்கிற மற்ற பிரதேசங்களில் எந்த மாதிரி நிலை இருக்கும் என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(திரு. ராஜ்குமார் விஜய ரகுநாத தொண்டமான்)

(இரவு 7-30)

இந்த மாதிரியான ஒரு கடுமையான வறட்சி இன்று தமிழகத்திலே உள்ள மக்களை எதிர்நோக்கி நிற்கிறது. அதை இந்த நேரத்திலேயே நாம் இந்தச் சட்டசபையிலே விவாதித்து எப்படி தீர்வு காணவேண்டும் என்று பார்ப்பதற்கு இங்கே கூடியிருக்கிறோம். நான் ஒன்றை மட்டும் மிக அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த வறட்சியின் காரணமாக மனிதர்களுக்கு குடிக்கக்கூட தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை சில இடங்களில் நிலவுகிறது. இன்னும் பல இடங்களிலும் இந்நிலை பரவ இருக்கிறது. ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு மற்ற மநிலங்களுக்கு நம்முடைய ஜனங்கள் போகக்கூடிய ஒரு நிலைமையைக்கூட நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலை இன்று மாநிலம் பூராவும் இருக்கிறது அதை தீர்க்க நாம் எந்த வழியிலாவது பரிகாரம் காண வேண்டும். அதற்கு மிகக் கடுமையான அளவில் நடவடிக்கையும் எடுக்க வேண்டும்—அரசாங்கத்தின் தரப்பிலே என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று புதுக்கோட்டை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் எல்லோருக்கும் தெரியும் 3 வருஷம் 4 வருஷத்திற்கு ஒரு முறை தான் மழை பெய்யும், பயிர்களும் விளையும். இப்பொழுது 5,6 வருஷங்களாக மழை பெய்யாமல் மிகவும் கஷ்டமான நிலையில் அந்த மக்கள் இருக்கக்கூடிய நேரத்திலே, அவர்கள் வறட்சியை மட்டும் அல்ல பஞ்சத்தையும் எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இன்று அங்கேயெல்லாம் டுவார்ட் போர்டிலே போடப்பட்ட ஆழ்துளை கிணறுகள் எல்லாம் வற்றிவிட்டன. போடப்பட்ட கை பம்புகள் எல்லாம் விடுபட்டு போய்விட்டன. ஏற்கெனவே கீழே இருந்த தண்ணீர் மிகவும் கீழாகப் போய் விட்டது. தண்ணீர் வரக்கூடிய இடங்களாகப் பார்த்து, இன்னும் கொஞ்சம் அதிக அக்கறையோடு இந்த பம்புகளையும், கிணறுகளையும் அமைக்க வேண்டும் என்று டுவார்டு போர்டை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக புதுக்கோட்டை மாவட்டத்திற்கு என்ன ரீதியிலே 50 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அது எவ்வளவு பின்தங்கிய பகுதி என்பது அனைவருக்கும் தெரியும். அதற்கு 50 லட்சம் ரூபாய் போதாது.



இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டும். குறைந்தது 2 கோடி அல்லது 3 கோடி ரூபாய் செலவழித்தால்தான், தற்போதைய நிலைமையிலே அந்த ஊருக்கு ஏதாவது நல்லது செய்ய முடியும். சென்டிரல் கவர்ன்மென்டிலேயிருந்து வறட்சிப் பிரதேசங்களைப் பார்வையிட்டு போவதற்கு சென்டிரல் டீம் என்கிற குழுவினர் வந்து வறட்சிப் பிரதேசங்களில் என்னென்ன வேலைகள் நடைபெறவேண்டும் என்று பார்த்து, மத்திய அரசிடம் சிபாரிசு செய்வதாக அறிகிறேன். அவர்கள் நமக்கு ஏதாவது மானியம் கொடுத்தால்தான் அது நமக்கு இந்த நேரத்திலே உதவியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். கொடைக்கானல் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அது அனைவருக்கும் தெரியும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர்களே அனேகமாக எல்லோரும் அங்கே வருகிறார்கள். அந்த ஊரில் சரித்திரத்திலேயே காணாத அளவுக்கு இன்று வறட்சி ஏற்பட்டிருக்கிறது. எல்லாக் கிராமங்களிலும் பெண்கள் தலையிலே குடத்தை வைத்து சுமந்துப் போய் 6 மைல் 5 மைல் நடந்துச் சென்று குடிதண்ணீர் தூக்கி வருகிறார்கள். இன்னும் கொஞ்ச நாட்கள் சென்றால், அவர்களுக்கு குடிக்கவே தண்ணீர் இருக்காது. இந்த நேரத்திலே ஜாண்டீஸ், காலரா போன்ற பல சீக்குகள் வருகின்றன. ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலேயும், ஓவர் ஹெட் டாங்குகளையும், ஆழ்குழாய் கிணறுகளையும் போட்டால்தான், அந்தந்த ஊர்களிலே ஜனங்கள் வசிக்க முடியும். டெம்பரிரி ரிலீஃப் கொடுத்து மட்டும் பிரயோஜனம் இல்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓவர் ஹெட் டாங்க் போட்டால்கூட அதிலே தண்ணீர் வருவது சந்தேகம்தான். அவ்வளவு ஆழத்தில் சென்றுவிட்டன.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: ஆழ்குழாய் கிணறுகளைப் போட்டால் ஓவர் ஹெட் டாங்கிகளை கட்டலாம். மேலும் அந்த கிராம ஜனங்களுக்கு தற்போது லாரிகளில் தண்ணீர் கொண்டு வந்து தரப்படுகிறது, அந்த தண்ணீர் அவர்களுக்குப் போதாது. ஆகவே டுவார்டு போர்டு மூலமாக, அதிக கிணறுகளை தோண்டி, பம்புகளைப் போட்டு, அவர்களுக்கு இன்னும் அதிக அளவில் தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலைமையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது நினைத்த இடத்தில் கிணறுகளை தோண்டுகிறார்கள். அவைகளில் தண்ணீர் வரவில்லை. சகதிகள் தான் வருகின்றன. அந்த சகதி தண்ணீரைத்தான் மக்கள் குடிக்கிறார்கள். அதனால்தான் இத்தகைய கடும் ஜுரம் போன்றவை அந்தப் பகுதிகளிலே வந்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதை கவனித்துப் பார்த்து, இந்த நேரத்திலே அரசாங்கம் நிவாரணம் கொடுக்கவில்லை என்றால்,

அந்த ஊர் ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள். அதுபோன்ற கஷ்டமான நிலைமை அந்த ஊர்களில் அதிகரித்து இருக்கிறது. மழையும் பெய்யவில்லை. (மணி அடிக்கப் பெற்றது.)

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாடு முழுவதும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வடாற்காடு மாவட்டம் பற்றி திருவேங்கடம் அவர்கள் பேசிவிட்டார்கள். எனவே வேறு ஏதாவது பேசவேண்டும் என்றால் மட்டும் பேசினால் போதும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே இதுவரை இல்லாத அளவுக்கு வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. முன்னாலே பேசிய உறுப்பினர்கள் வடாற்காடு மாவட்டம் பற்றிச் சொன்னார்கள். குடியாத்தம் தாலுக்கா, செங்கம் தாலுக்கா, வந்தவாசித் தாலுக்கா ஆகியவை பற்றிஎல்லாம் குறிப்பிடப்பட்டது. இதுமட்டுமல்லாமல் நெல்லை மாவட்டத்தில் சிவகிரி தாலுக்கா, சங்கரன்கோவில் தாலுக்கா, தென்காசித் தாலுக்கா, நாங்குனேரித் தாலுக்கா, கோவில்பட்டித் தாலுக்கா, சாத்தான் குளம் தாலுக்கா, போன்ற இடங்களில் எல்லாம் தண்ணீர் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுக்காவில் உள்ள கிராமங்களிலே குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது. மேற்கு முகவை மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் போன்ற பகுதிகளில் தண்ணீர் இல்லை, மதுரை நகரிலே லாரி மூலமாக தண்ணீர் கொடுக்கப்படுகின்றது. திண்டுக்கல் பகுதியில் பெரியகுளம், சேடப்பட்டி போன்ற பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. கோவை, பெரியார் போன்ற மாவட்டங்களிலும் அதேபோன்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது

கடந்த ஆண்டு இதற்காக 55 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது ஓரளவுக்கு உதவியாக இருந்தது. அதன்மூலம் பல்வேறு கிராமங்களிலே கை பம்ப் அமைக்கப்பட்டது. ஆனால் இன்றைக்குப் பெருவாரியான இடங்களில் நீர் ஊற்றுக்கள் இல்லை. குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க வேண்டும் என்றால் ஓரளவுக்கு நிலத்தடி நீரைப் பெருக்கவேண்டும். மலைப் பகுதிகளிலே மழை வரும் காலங்களிலே குட்டைகளை அமைத்து நீரினைத் தேக்கினால் நிலத்தடி நீர் பெருகுவதற்கு வசதி ஏற்படும். எங்களுடைய மாவட்டத்தில் குடியாத்தம், அணைக்கட்டு போன்ற பகுதிகளில் புதிதாக பம்ப்செட்களுக்கு இணைப்பு கொடுக்கக்கூடாது என்று சொல்லி அவற்றை கறுப்புப் பட்டியலிலே சேர்த்திருக்கிறார்கள். நிலத்தடி நீர் இல்லை என்பதற்காக அப்படி கறுப்புப் பட்டியலிலே சேர்த்திருக்கிறார்கள். ஆகவே நிலத்தடி நீரினைப் பெருக்குவதற்கு என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றனவோ அவற்றை மாநிலம் முழுவதும் செய்வதன் மூலமாகத்தான் நிரந்தரமாக இந்தப்





பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். எங்களுடைய மாவட்டம் எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் இல்லாத ஒரு வானம் பார்த்த பூமி. நெல் பயிர் தீய்ந்துவிட்டது. கடலைக்காய் காய்ந்துவிட்டது. கரும்பு காய்ந்துவிட்டது. ஓரளவுக்குக் கரும்பு உற்பத்தி செய்திருந்தாலும் அவர்கள் பதிவு செய்யவில்லை என்று சொல்லி அதையும் வாங்க மறுக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

எனவே இந்த நிலைமையில் வறட்சி நிவாரணம் என்று அறிவிக்கவேண்டும். வறட்சி நிவாரண வேலைகள் துவக்கப்பட வேண்டும். ஏழை விவசாயிகளுக்கு வேலையே கிடையாது. அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அரிசியினை அதிகப்படுத்தி கொடுக்கவேண்டும். வறட்சியால் அல்லல் பட்டுக்கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும். வரிகளை ரத்து செய்யவேண்டும். வறட்சி நிவாரணம் என்று அறிவிக்கப்பட்டால் தான் தமிழகத்திற்கு உதவ முடியும். மத்திய அரசினிடத்திலே நிதியுதவி கோர வேண்டும் என்று கூறி வறட்சியைப் போக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. எஸ் என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மழை இல்லாததன் காரணத்தால் பல இடங்களிலே நீர் இல்லாமல் குடிதண்ணீர் கூட கிடைக்காத அளவுக்கு பொதுமக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக இந்த அரசு மக்களுக்காக நல்ல திட்டங்களைச் செயல்படுத்துகின்ற அரசு மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கும் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சாத்தான்குளம் பகுதியைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதியில் வாழக்கூடிய மக்களுக்கு எந்தவிதமான போக்குவரத்து வசதிகளும் இல்லாமல் இருப்பதால் அவர்களும் நிலத்தடி நீரினை நம்பித்தான் வாழவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் ஆழ்துளைக் கிணறுகளின் மூலமாகவும், நீர்த்தேக்கத் தொட்டிகளின் மூலமாகவும் தான் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர் கொடுத்து தாங்களும் குடிநீர் எடுத்து வாழ்ந்து வருகிறார்கள். நிலத்தடி நீர் இல்லாததன் காரணத்தால் அங்குள்ள மக்கள் ஒரு பெரிய போராட்டமாகவே வாழ்க்கையை நடத்தக்கூடிய சூழ்நிலை அமையப் பெற்றிருக்கின்றது.

(இரவு 7-40)

மேலும், அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டும் என்று கிராமம் கிராமமாக குடிநீர் தொட்டிகள் கட்டியோ அல்லது ஆழ் குழாய் பம்புகள் போட்டோ மக்களுக்கு தண்ணீர் வழங்க முடியாது. அந்த பகுதியிலே தாமிரபரணி என்ற ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றில் மழைக்காலங்களில் அதிகமாக வெள்ளம் பெருக்கெடுத்து, கடலிலே சென்று கழிவு

நீராக சேருகிறது. மூன்று மாதங்களுக்கு கடலிலே சென்று விழும் அந்த ஆற்று நீரை, ஒரு குடிநீர் திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்தால், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க முடியும். அதன் மூலம் அங்கிருந்து 15 மைல்கல் தொலைவில் இருக்கும், சாத்தான்குளம் ஒன்றியம், அந்த ஒன்றியத்திலே இருக்கக்கூடிய 26 பஞ்சாயத்துக்கள் பயனடையும்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** சாத்தான்குளம், அதைச் சேர்ந்த 26 பஞ்சாயத்துக்கள் என்று இதையே பேசிக் கொண்டிருந்தால் நேரமாகிறது. திரு. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மழையில்லாத காரணத்தினால், கிழக்கு இராமநாதபுரம் முழுவதும் விவசாயம் ஆரம்பிக்கப்படவில்லை. இன்னும் ஒரு மாத காலமாகியும் ஆரம்பிக்கப்படவில்லை என்று சொன்னால், அங்கே கடுமையான பஞ்சயத்தை மக்கள் எதிர்நோக்க வேண்டிய அளவிற்கு, இன்றைக்கு நிலைமை மோசமாக இருக்கிறது.

அத்தோடு குடிதண்ணீர் பிரச்னையிலே மிகமிக மோசமான நிலைஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே எங்கள் பகுதியில் கிணறு வெட்டுவதற்குஇராண்டாயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டது திடீரென்று நிதி பற்றாக்குறை காரணமாக ஓராயிரம் ரூபாய் வழங்கி, அதை நிறுத்தி விட்டார்கள் அப்பேர்ப்பட்ட விவசாயிகளுக்கு தொடர்ந்து முன்பு கொடுத்து வந்ததுபோல், மீதப்பணத்தைக் கடனாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தக் கண்மாய்களை, சப்ளை சேனல்களை, அரசே வெட்டிக் கொடுக்கலாம் என்ற நல்ல தீர்மானத்தை சென்ற சட்டசபை தொடர் கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஆயிரக்கணக்கான ஏரிகள் இருக்கின்ற மாவட்டமாக இருப்பதால், இன்றைக்கு மக்களிடையே அன்—எம்ப்ளாய்மென்ட், வேலையில்லாமல் இருக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு வேலை கொடுக்கின்ற வாய்ப்பாக, இந்தக் குளங்களை, சப்ளை சேனல்களை யெல்லாம் வேட்டிக் கொடுப்பதற்குரிய ஒரு திட்டத்தைப் போட்டு, அதற்குப் பணத்தை ஒதுக்கி, அந்த வேலையைச் செய்தால்' வேலையில்லாமல் இருக்கும் மக்களுக்கு வேலை கொடுப்பதற்கு வசதியாக இருக்கும்,





அதைப் போல், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், இந்தத திட்டத்தை நிறைவேற்றினால், அரிமண்டபம், ராஜக்கமங்கலம் போன்ற கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி கிடைக்கும். அதை ஏற்பாடு செய்ய வேண்டும். அதைப்போல, முத்தனேந்தலிலிருந்து நரிக்குடி போகிற குடிநீர் திட்டத்திற்கு வசதி செய்தால், தீர்த்தாம்பேட்டை, மேலமேல்குடி போன்ற கிராமங்கள் பயனடையும். அதையும், உடனடியாக செய்து அங்கு குடிநீர் வசதிக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

இன்றைக்கு இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளிடம் கடன் வசூல் த்விரமாக இருக்கிறது. அதை நிறுத்திவைத்து, கஷ்டபடுகின்ற ஏழைகளுக்கு தரவு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு மானா மதுரை, திருப்புவனம் போன்ற பகுதிகளில் தன்னிறைவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. அதன் காரணமாக, தற்காலிகமாக தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தின் நிதி குறைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு வறட்சி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், தன்னிறைவுத் திட்டம் செயல்படும வட்டாரங்களி கூட, இந்த தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்திறகு அதிக நிதி வசதி கொடுப்பதோடு, இந்த இரண்டு வட்டாரங்களில் இன்றைக்கு ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது. அதாவது, ஆழ்குழாய், கைப் பம்பு போன்றவைகள் ஏறத்தாழ 40 சதவீதம் சரியாக இல்லாமல் இருப்பதை சரி செய்து போடுவதற்கு சற்றுத் தீவிரமாக வேலைகள் நடைபெற்றாலும் அமைச்சர் அவர்கள் இதிலே இன்னும் கொஞ்சம் தீவிர செலுத்தி, கைப் பம்புகள், ஆழ் குழாய்கள் சரியாக செயல்பட ஏற்பாடு செய்து, குடிநீர் திட்டத்தை நல்லமுறையில் செய்யும்படி கேட்டுக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் 6 உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். இதிலே முக்கியமானது எல்லோருமே குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு இருப்பதால் காரணம் 2 ஆண்டும் பருவ மழை தவறி விட்டதுதான் என்று சொன்னது மிகவும் வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அந்த வகையில் நான் அவர்களை பாராட்டுகிறேன். எல்லாமே அரசாங்கத்தால்தான் ஏற்பட்டது என்று எதிர்க்கட்சி என்ற காரணத்தால் எதிர் கருத்தைச் சொல்ல வேண்டும் என்ற காரணம் இல்லாமல் எல்லோருமே பேசினார்கள். மாண்புமிகு திருவேங்கடம் மட்டும் எப்போதும் அவர் வழக்கமாக பேசுவது போல் அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள்.

எனவே அரசாங்கம எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கை களை சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும். சற்று நேரம் ஆனாலும் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பொறுத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

1976 ஆம் ஆண்டு கணக்குப்படி 18,167 ஆபிடேஷன் குடியிருப்புகளுககு தண்ணீர் கொடுக்கவேண்டும். இதில் 31-3-1980ல் 3,465 குடியிருப்புகளுக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டு விட்டது. அதன் பின்னால் 1980–81, 1981-82-ல் 5,286 குடியிருப்புகளுக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டது. அதற்கு மட்டும் ஆன செலவு ரூபாய் 4,972 இலட்சம். இதில் மத்திய அரசு கொடுத்தது ரூபாய் 1,602 லட்சம்தான். எனவே மத்திய அரசு கொடுத்து இருப்பது போதாது. அதைப்பற்றி பின்னால் சொல்கிறேன். கேட்டு இருக்கிறோம். இங்கே பேசிய காங்கிரஸ் ஐ உறுப்பினர்கள் அதிகமான தொகை கிடைக்க உதவி செய்வார்கள் என்று கருதுகிறேன். 1–4–1980-ல் 14,702 ஆபிடேஷனுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டி இருந்தது. 1981-82-ல் 5,286 ஆபிடேஷனுக்கு கொடுத்துவிட்ட காரணத்தால் பாக்கி இருப்பது 9,416 தான். ஆனால் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள்—5 ஆவது பிரிவு என்று சொன்னால் பொதுவாக தண்ணீர் இருக்கக்கூடிய குடியிருப்புகள் என்று பொருள். அது சரியாக கணக்கிடப்படவில்லை என்று சொன்னதன் காரணமாக மறுபரிசீலனை செய்து 3, 4, 5 என்று இந்த அரசு மாற்றியிருக்கிறது. கலெக்டருக்கு அந்த அதிகாரம கொடுத்து அதன் பிரகாரம் 7,600 குடியிருப்புகள் 6 ஆவது பிரிவிலிருந்து மாற்றப்பட்டிருக்கின்றன. இப்போது 17,016 குடியிருப்புகளுக்கு உடனடியாக தண்ணீர் கொடுக்க வேண்டும். தண்ணீர் கொடுக்க வேண்டிய ப்ராப்ளம் ஆபிடேஷன் என்று இவைகளுக்கு சொல்ல வேண்டும். இவைகளுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு 1982-83-ல் 4,060, 1983-84-ல் 6,000 மும், 1984 85-ல் 6,956 மொத்தம் 17,016. 1985–க்குள்ளாக எல்லா கிராமங்களுக்கும் குடிதண்ணீர் கொடுத்துவிட வேண்டும் என்பது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய கொள்கை. அதற்கு ஏற்ப இங்கே திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஆகக்கூடிய செலவு ரூபாய் 170 கோடி. இந்த ரூபாய் 170 கோடியில் ரூபாய் 55 கோடியாவது மத்திய அரசு தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

புதிய 20 அம்ச திட்டம் பிரதமர் இந்திரா காந்தி அறிவித்து இருப்பதில் 8-வது எண் "All problem villages should be supplied with good potable drinking water" நல்ல குடிநீர் கொடுக்க வேண்டும் என்பது, அப்படி ஒரு திட்டத்தைச் சொல்லிவிட்டால் மட்டும் போதாது, அதை நாங்கள் செயல்படுத்தத் தயாராக இருக்கும்போது நீங்கள் பணம் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் கடிதம் எழுதினோம். கொடுத்த பணம் போதாது என்று சொன்னோம். இன்றைக்கு ப்ராப்ளம் வில்லேஜஸ் 17,016 இருக்கின்றன, 3 ஆண்டு காலத்தில் 1984–85–க்குள் இதை முடித்து





விடுவோம் பணம் தர வேண்டும் என்று நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்வது இதுவரையில் என்ன செய்தோம் என்பதை சொல்ல வருகிறேன். இது வறட்சி நிவாரணத்திற்காக செய்தது அல்ல. இதற்கு முன்னதாகவே இந்த அரசு செய்த பணியினை சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் போன்றவர்கள் இந்த அரசை It was not sitting idle சும்மா ஐடெல்லாக இருக்கவில்லை அருமையான பணிகளை செய்திருக்கிறார்கள் என்று பாராட்டுவார்கள் என்று நான் கருதுகிறேன். மழையின்மை காரணமாக வறட்சி ஏற்பட்டதை ஒட்டி முதல்வர் அவர்கள் அதிகாரிகள் கூட்டத்தை ஏற்பாடு செயதார்கள். ஆட்சித் தலைவர் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்கள். இதனுடைய முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லி தண்ணீர் கொடுக்க வேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதையொட்டி தலைமை செயலர் தலைமையில் கூட்டம் நடந்தது. அந்த கூட்டம் 26-8-1982 அன்று நடந்தது. அந்த கூட்டத்திற்கு பிறகு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

1982–83 ஆம் ஆண்டுக்காக கிராம குடிநீர் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தொகை ரூபாய் 40 கோடியை கீழ்க்கண்ட இனங்களுக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கும், மாவட்ட ஆட்சியாளருக்கும் கீழ்க்கண்ட முன்னுரிமை தந்து பருவம் போன மழை இடர்பாடுகளை சமாளிக்கும் பணிகளை செய்வதோடு தன்னிறைவு பிரிவுகள் மற்றவைகள் குடிநீர் வழங்குவதற்காக பிற பிரிக்கப்பட்டுள்ள இனங்கள், என்று பாகுபாடு எதுவும் இல்லாமல் இப்பணிகளை கீழ்க்கண்ட இனங்களில் உடனடியாக தொடங்க 27—8—1982–ல் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே 3 வகையான உத்திரவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1. கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை நிலவும் மாவட்டங்களில் உள்ள எல்லா குடியிருப்புகளுக்கும்—மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்—

(இரவு 7.50)

2. குடிநீர் பஞ்சம் நிலவும் எல்லா பேரூராட்சிகளுக்கும்—மாண்புமிகு துணை சபாநாயகர் தாம் பேசவில்லையே என்று நினைக்கக்கூடாது, அவருடைய தொகுதியிலேயும் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் —அதைப் போன்று குடிநீர் கிடைக்காத நகராட்சிகளுக்கும் கொடுக்க இருக்கிறோம். முதல்வர் அவர்களும் மற்ற அதிகாரிகளும் கூடிய கூட்டத்தில் முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பேரூராட்சிகள் நகராட்சிகளைப் பொறுத்தவரையில் அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்த அந்த குடிநீர் வாரியப் பொறியாளர்களுடன் கலந்து செய்வார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், இங்கே பேசினார்களே, அவர்கள் எல்லாம் அங்கே போய் அதைப் பேசி

முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 3. கிராமங்களுக்குக் குடிநீர் இனாமாக கொடுக்கிறோம், ஆழ்துளைக் கிணறுகளுக்கு கிராமப் பகுதிகளுக்கு அளிக்கப்படுவதைப் போன்று பேரூராட்சிகளுக்கு புல் கிராண்டாகத் தருகிறோம் (உறுப்பினர்கள் மேசையைத் தட்டினர்.) நகராட்சிகளுக்கு 50 சதவீதம் கிராண்ட் என்றும் 50 சதவீதம் லோன் என்ற முறையிலே கொடுக்கிறோம். கடனாகத் தரப்படுகிற லோனை உடனே தரவேண்டுமென்று சொல்லவில்லை. பின்னலே தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இப்படிப்பட்ட முடிவுகள் எல்லாம் எடுக்கப்பட்டு இருக்கின்றன. இதைத் தவிர கீழ்க்கண்ட பணிகளை யுத்த கால நடவடிக்கைகளைப் போன்று செய்யவேண்டுமென்று நாம் உத்திரவிட்டிருக்கிறோம்.

1982–83 ஆம் ஆண்டில் 146 பேரூராட்சிகளுக்கு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ 5 கோடி செலவில் தண்ணீர் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. வறட்சி காரணமாக தன்னிறைவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை பேரூராட்சிகளில் வேண்டிய இடங்களில் கைபம்புகள் ஏற்படுத்தப் பயன்படுத்தப்படும்.

ஏற்பட்டுள்ள கடுமையான தண்ணீர் பற்றாக்குறையைப் போகுவதில் மிக முக்கியமானது ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பயன்படும் ஆழ்துளைக் கருவிகள்—ரிக்ஸ் ஆகும். 1981–82 இல் செயல்பட்டதைப் போல அரசின் எல்லாத் துறைகளிலேயும் உள்ள—வேளாண்மைத் துறை, பொதுப் பணித் துறை, குழாய் கிணறு நிறுவனம் (டியூப் வெல் நிறுவனம்) முதலிய எல்லாத் துறைகளிலும் உள்ள—ஆழ்துளைக் கருவிகள் பயன்படுத்தப்படும் இவற்றிற்காகப் பயன்படும் ஆழ்துளைக் கருவிகள் போதாது என்று நினைத்தால் தக்க வாடகையில் தனியார் ஆழ்துளைக் கருவிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

நிலவும் கடுமையான தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க போடப்படும் ஒவ்வொரு ஆழ்துளைக் கிணற்றிற்கும் அருகிலிருந்து கிடைக்கும் தண்ணீரின் அளவு குறைவாக இருந்தாலும் கூட ஒரு கைபம்பு போடப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயரகுநாத தொண்டமான் இங்கே இல்லை. அவர்கள் சொன்னார்கள் மேல்நிலைத் தொட்டிகள் அமைக்கப்படவேண்டுமென்று, கிடைக்கிற தண்ணீரின் அளவு அதிகமாக இருந்தால் மேல்நிலை நீர்த் தொட்டிகளைக் கட்டி வேறிடத்திலிருந்து குடிநீர்க் குழாய்கள் மூலம் எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்படும்.

இவ்வேலைகளில் குறைபாடுகள் ஏற்பட வழியின்றி கண்காணிப்புடன் செயல்படுத்தப்பட வேண்டுமென்று அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்னும் ஒன்றை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.





There is some resistence from certain inhabitations சில ஊர்களில் எங்கள் ஊரிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு வேறு ஊருக்கு போகக் கூடாது என்று சொல்கிற நிலைமை இருக்கிறது, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திலே அது அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் "உடனே சென்று அப்படிச் சொல்லக் கூடாது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வெளியிலிருந்து அரிசி வரவில்லையென்றால் பட்டினியாக இருக்க வேண்டும், அதைப்போலவே மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் இருந்து வேட்டி, புடவை துணிமணி வரவேண்டும், இல்லையென்றால் நாம் எதைக் கட்டிக் கொள்வது என்று விளக்கிச் சொல்லி, ஒருவர் ஒருவரை நம்பித்தான் வாழ வேண்டும், ஒரு கிராமத்தை நம்பி இன்னொரு கிராமம் வாழ வேண்டும், என்று சொல்ல வேண்டும்." எனவே காம்ப்ரஹன்சிவ் ஸ்கீம் என்று போடுகிறபோது என்னுடைய ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு தண்ணீர் போக விட வேண்டும், என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் ஏறத்தாழ 30–க்கு மேற்பட்ட கிராமங்கள் அந்த மாதிரி தண்ணீர் கொடுக்கப்படாமல் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. எனவே எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அண்மையில் வருவாய்த் துறையில் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்தும் பணிக்காக—'உப்பனிங் ஆப் வெல்ஸ்—இதுவரை 116 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த தொகையிலே 103 லட்சம் மாவட்டங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது. லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு அரசாங்கம் 5 லட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. இந்தத் தொகையிலேயிருந்து 2.50 லட்சம் மாவட்டங்களுக்கு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையாளர் அவர்களால் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது. மாவட்டங்களில் கடற்கரை பகுதிகளில் உறை கிணறுகள் மற்றும் சிறிய கிணறுகள் அமைப்பதற்கு அரசு 10 லட்சம் அனுமதித்துள்ளது. இந்தத் தொகையிலேயிருந்து 5 லட்சம் ரூபாய் மட்டும் ராமநாதபுரம் மாவட்டத்திற்கு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையாளரால் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. குடிநீர் கிணறுகள் ஆழப்படுத்தும் பணிக்காக 13 லட்சமும், லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்காக 2.50 லட்சமும், மாவட்டங்களிலே கடற்கரை பகுதிகளில் உறை கிணறுகள் மற்றும் சிறிய கிணறுகள் அமைக்கும் பணிக்காக ரூபாய் 5 லட்சமும், ஆக மொத்தம் 20.50 லட்சம் ரூபாய் மாவட்டங்களில் கூடுதல் தேவைகளுக்கேற்ப சிறப்பு ஆணையாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது.

நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் நீர் ஏற்றும் சாதனங்களுக்கு தனி மின் வழி கம்பிகள் அமைப்பதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள ரூபாய் 25 லட்சமும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையாளரால் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு தேவையுள்ள இடங்களில்

பணிகள் மேற்கொள்ளப்படும். மாவட்டங்களில் பல்வேறு குடிநீர் மேம்பாட்டு பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விவரங்கள்—நான் சொல்வதற்கு விரும்பவில்லை, ஏனென்றால் அதிக நேரம் ஆகும். ஆகவே பணத்தை பொறுத்தமட்டிலும் பிராப்ளம் இல்லை; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் தாராளமாக பணத்தைக் கொடுப்பதற்கு உறுதி அளித்திருக்கிறார்கள். பணத்தை கொடுப்பதற்கு நாங்கள் ஆலோசனை செய்து கொண்டிருக்கவில்லை. எவ்வளவு பணம் ஆனாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் இந்த விஷயத்திலே தாராளமாக கொடுக்கிறார்கள் என்பதை பெருமையாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பேசியவர்கள் எல்லாம் சென்னையைப் பற்றிச் சொல்லவில்லை. சென்னையைப் பற்றி பேசிய மாண்புமிகு திருவேங்கடம் அவர்கள் மாண்புமிகு பாலன் அவர்கள் சொன்ன தகவலை வைத்துக்கொண்டு பெரம்பூர் பகுதியை மட்டும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். சென்னை பூராவும் இந்த சிரமங்கள் இருக்கின்றன. சென்னையை பொறுத்த மட்டில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். இந்த ஆண்டு தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக பருவ மழை பொய்த்தது; எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். நீர் தேக்கங்களில் பாதி அளவு கூட தண்ணீர் நிரம்பவில்லை. இந்த நிலைமையை சமாளிக்க 72.46 லட்சம் ரூபாய் செலவில் நல்ல திட்டங்கள் தொடங்கப் பட்டுள்ளன. 72.46 லட்சம் சென்னைக்கு மட்டும்; ''டு ஆக்மெண்ட் டிரிங்கிங் வாட்டர் சப்ளை' குடிதண்ணீரை அதிகமாக்குவதற்காக கீழ்கண்ட பணிகள் இதுவரையில் நடந்துள்ளன. பொது கிணறுகள் தூர் எடுத்தது 455; புதிய பொது கிணறுகள் 6; குழாய் கிணறுகள் புதுப்பித்தல் 1808; புதிதாக அமைக்கப் பட்ட குழாய் கிணறுகள் 4704; ஆழ் துளை பம்புகள் இந்தியா மார்க்-2—19; புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர் தொட்டிகள் 116; மொத்தம் உபயோகத்தில் உள்ள குழாய் கிணறுகள் 4,704; மொத்தம் உபயோகத்தில் உள்ள குடிநீர் தொட்டிகள் 455; தண்ணீர் லாரிகள் 42; வாடகைக்கு எடுக்கப்பட்ட தண்ணீர் லாரிகள் 5; இவைகளை உபயோகப்படுத்துகிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

5—8—1982 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்து எப்படியிருந்தாலும் குடிதண்ணீர் சென்னைக்கு கொடுத்தே ஆக வேண்டும். அதிலே தட்டுப்பாடு இருக்கக் கூடாது என்று கண்டித்து சில ஆலோசனைகளை சொன்னார்கள். அதையொட்டி எடுத்த நடவடிக்கைகள்—மேற்கொண்டு பூண்டி தாமரைப்பாக்கம் பகுதியில் ராட்சத ஆழ்துளை கிணறுகள், மற்றும் பூண்டி ஏரியாவில் உள்ள மேட்டை வெட்டுவதற்கும் இன்னும் அதிகமாக ரூபாய் 35 லட்சம் செலவிற்கு





ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் தொடங்கப் படும் மேற்படி பகுதியில் இதுவரையில் 9 ஆழ் துளை கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். இதன் காரணமாக 1974–75 லே இப்படி வறட்சி ஏற்பட்ட போது ஒரு நாள் விட்டு ஒரு நாளைக்கு 30 மிலியன் கேலன் தான் தண்ணீர் கொடுத்தார்கள். அந்த நிலை வராமல் தினமும் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். ''கிராவிட்டி ஆப் தி சிச்சுவேஷன்'' இருக்கிற நிலைமையை நாங்கள் உணர்ந்து இருக்கிறோம். அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் மிகுந்த அக்கறை கொண்டு தக்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்கு உள்ள கஷ்டங்களை அந்தந்த கிராமங்களுக்குச் சென்று அங்கே பார்த்து, கலெக்டரிடமும் வாட்டர் போர்டு சூப்பரிண்டெண்ட்டிங் என்ஜினியரிடமும் கலந்து பேசி தீர்வு காணலாம். நான் ஏற்கனவே சொன்னதைப் போல பேரூராட்சிக்கும் மானியம கொடுக்கிற காரணத்தால், நகராட்சிக்கு 50:50 என்று ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அதை நல்லதொரு வகையில் உபயோகப்படுத்திக் கொண்டு தமிழக மக்கள் தண்ணீர் பஞ்சத்திலிருந்து விடுபடவும், போதுமான தண்ணீர் கிடைப்பதற்கும் ஒத்துழைக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 8–00)

8. அரசினர் தீர்மானங்கள் –(தொடர்ச்சி).

(அ) பேரவை அலுவல் வரிசை மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30 (3)–ன் கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:–

''இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 12, நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகிய கால விவாதம் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண். (ii)-ல் உள்ள இனம், 13, பேரவை முன் வைக்கப் பெற்ற அறிக்கைகளுக்கான திருத்தங்கள் என்பதற்குப் பின்னர் எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

9. தனித் தீர்மானங்கள்— தொடர்ச்சி

(அ) பேரவை முன்வைக்கப்பெற்ற அறிக்கைகளுக்கான திருத்தங்கள்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்வைக்கப்பெற்ற அறிக்கைகளுக்கான திருத்தங்கள் என்ற தலைப்பில், (i), (iii) மற்றும் (iv) ஆகிய மூன்றையும் திரு. உமாநாத் அவர்கள் முதலில் மொழியலாம். இவற்றுக்கு தொழிலாளர் நல அமைச்சர் பதில் அளிப்பார், கல்வி துறை அமைச்சர் பதில் அளிக்க வேண்டிய தீர்மானம் (ii)-ஐ பிறகு மொழியலாம்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே நான் கீழ்கண்ட தீர்மானங்களை மொழிகிறேன்:—

(க) ''தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பணியாளர்களின் பணி அங்கீகாரச் சங்க .திகளை இயற்றுவது குறித்து 5-8-1981 ஆம் தே. யன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான 18-7-198:-ஆம் தேதியிடப்பெற்ற வீட்டு வச.-நக.பற வளர்ச்சித் துறையின் 581-ஆம் எண். அரசாணையில் வெளியாகி, 2-21982-ஆம் தேதியன்று பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிப்பில் கீழ்க் கண்ட திருத்தங்கள் செய்யப்பெற வேண்டும்'.

Rule 5: Delete sub-rules d, e, f, g, h, i and j.

Rule :6 At the end of the rule, aft r the word "Associa'ion" add the following : "Afte giving due notice of the reasons for the proposed withdrawal, t the Asociations concerned, as well as after seeking the xplanation f om the Association',

Rule 7 : Delete rule 7.

Rule 8 : Delete rule 8.

(ங) ''தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு தொழில் நிர்வாக (தொழிலாளர்களுக்கு நிரந்தரத் தகுதி அளித்தல் குறித்து) விதிகளை உருவாக்குவது குறித்து 28 12.1981 ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான 24-12-981 ஆம் ஆண்டு தேதியிடப்பெற்ற, தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறையின் 2813-ஆம் எண் அரசாணையில் வெளியாகி 6 3,1932- ம் தேதியன்று பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிப்பில் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யப்பெற வேண்டும் .

Rule 2: Add the following as sub-rule (f) after sub-rule (e) " (f)Service means, the peri d of emplyment commencing (beginning) with the date of joining of the said employee". Re-letter "Sub-rule (f) as sub-rule (g)."

Rule-3: In sub-section (ii) in line 3 at the end, after the word 'employer' and before the words 'a summary' add the words "as well as to the registered union or unions in the establishment",



Rule 6: In Sub-rule 2, in line 4 for the words 'prominently at any part of, substitute the following words:—

"in every dapartment or section of".

In Sub-rule 3, in line 6, after words "sub-section, (2) add the following as a new sentence.

"A copy in the said list must be sent to the registered unions in the said establishment

In sub-rule 4, in line 6 after the sentence ending with the words Inspector concerns add the following sentence.

The Union of which the workmen is a member may also make representation to the Insp ctor concerned.

Rule 7: In line 3 for the words "Tamil or English" substitute the words Tamil and English.

(இ) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பிழைப்பு ஊதிய விதிகளை உருவாக்குவது குறித்து, 30-12-1981 ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான 29-12-1981 ஆம் தேதியிடப் பெற்ற, தொழிலாளர் வேலை வாய்ப்புத் துறையில் 2838 ஆம் அரசாணையில் வெளியாகி 6-3-1982 ஆம் தேதியன்று பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிப்பில் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யப்பெற வேண்டும்'':

Rule 5: In sub-rule 4 at the end of line 1 for the words "as early as possible" substitute the words "within one week".

In sub-rule 4, in line 4 after the word "therein" *add* the following sentence,

"the said date and time shall be fixed as to fall within fifteen days from the date of issue of notice".

Rule 7: In the provison in line 2 for the words "thirty days substitute the words "fifteen days".

In the proviso at the end after the word "applieation" *add* the following

"and final ordered passed within a further two weeks,"

The resolutions were duly seconded.

திரு ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கக்கூடிய விதிகளுக்கான திருத்தங்களில் 3 தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சம்பந்தப் பட்டவை. ஒன்று கல்வி சம்பந்தப்பட்டது. ஆகவே ,

தொழிலாளர் நல அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்டவற்றை ஒன்றாகவே எடுத்துக் கொள்கிறேன். அவர் அதற்கு ஒன்றாகவே பதில் அளித்து விடலாம். அதற்கு பிறகு கல்வி சம்பந்தப்பட்டது ஒன்றுதான். அதையும் எடுத்து சுருக்கமாகவே முடித்து விடலாம். சீக்கிரமாகப் போக வேண்டிய தேவை எனக்கு இருப்பதால், சுருக்கமாகவே நான் பேசுகிறேன்.

தொழிலாளர் சம்பந்தமானதைப் பொறுத்தவரை, இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் பணியிலிருந்து பூர்த்தி செய்த தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்ற சட்டத்தை நாம் இயற்றியிருக்கிறோம் அதனுடைய விதிகள் இப்போது வெளியிடப்பட்டிருக்கின்றன. அதிலே முக்கியமானவை பற்றி மட்டும்தான் நான் சொல்ல விரும்புகிறேன். மற்றவை சின்ன திருத்தங்கள்தான் இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் பூர்த்தி செய்தவர்கள், நிரந்தரம், பர்மனன்சி செய்யப்படுவார்கள் என்பது அச்சட்டத்தினுடைய உயிரான ஷரத்து. ஆனால், முதலாளிகள் என்ன செய்கிறார்கள்? இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து 2 ஆண்டுகளுக்குப் பிறகு 480 நாட்கள் ஆனபிறகுதான் பர்மனென்ட் என்று சொல்கிறார்கள். அப்படியானால், 10 ஆண்டுகள் சர்விசில் இருந்தவர்கள் கூட 480 நாட்கள் வந்த பிறகு தான் பர்மனென்ட் செய்யப்படக்கூடிய நிலை இருக்கிறது. அப்படியானால், 10 ஆண்டுகள் சர்வீஸ் என்ன ஆவது? பர்மனென்சி இல்லை. இந்தச் சட்டம் ப்ராஸ்பெக்டிவ்தான், ரெட்ராஸ்பெக்டிவ் அல்ல என்ற முறையிலே அவர்கள் சொல்கிறார்கள். அரசாங்கம் வெளியிட்டுள்ள விதிகளில், சட்டத்திலே இருக்கக் கூடிய வார்த்தைகளுக்கு 'டெஃபனிஷன்' அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது ஆண்டு என்பதற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 'சர்வீஸ்' என்பதற்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவேதான், என்னுடைய முக்கியமான திருத்தம்

"Service means, the period of employment commencing (begining) with the date of joining of the said employee"

என்பதாகும். அந்தத் தொழிலாளி சேர்ந்த தேதியிலிருந்து கணக்கில் எடுத்து வரக்கூடியதுதான் சர்வீஸ் என்ற வார்த்தைகளை, 'டெஃபனிஷன்' கிளாசில் சேர்த்தால், இந்தச் சர்க்கார் எந்த பர்ப்போஸோடு அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்களோ, அந்த வகையிலே, சட்டம் பயன்படுவதற்கு உண்மையிலே வாய்ப்பிருக்கும்.





கூறப்படுகிறது. அந்த இர்ரெகுலாரிட்டீஸ் பற்றி முதலாளிகளுக்கு மட்டுமல்ல, தொழிற்சங்கங்களுக்கும் நகல் அனுப்ப வேண்டுமென்று கூறுகிறேன். அப்பொழுதுதான் அதை ப்ராப்பராக எக்ஸ்போஸ் செய்ய தொழிற்சங்கங்களுக்கு உதவியாக இருக்க முடியும்.

அடுத்தது ஒவ்வொரு பாக்டரி முதலாளியும், தொழிலாளிகளுடைய பெயர் ரிஜிஸ்டரை வைக்க வேண்டுமென்று செக்ஷன் 6-லே இருக்கிறது. பாக்டரியில் முக்கியமான இடங்களில் அந்த லிஸ்டுகளை வைக்க வேண்டுமென்று இருக்கிறது. Perminently at any part என்று போடப்பட்டிருக்கிறது. அது பொதுவாக இருப்பதால், முதலாளி தன் இஷ்டப்படி போடுவார் என்பதால், ஒவ்வொரு துறையிலும் every Department போட வேண்டுமென்று நான் சொல்கின்றேன்.

அதே மாதிரி, தொழிலாளிகள் லிஸ்டை முதலாளி தயார் செய்தால், அது அந்த பாக்டரியிலே இருக்கிற ரிஜிஸ்டர்ட் சங்கங்களில் யார், யார் இருக்கிறார்களோ, அவர்களுக்கு அனுப்ப வேண்டுமென்று இருக்கிறது. அந்த லிஸ்டிலே எந்தத் தொழிலாளி பெயராவது இல்லையென்றால், அந்தத்தொழிலாளி அதுபற்றி எடுத்துச் சொல்லலாம் என்றிருக்கிறது. நான் கொடுத்திருக்கக் கூடிய அமென்ட்மென்ட், தொழிலாளியோ, அல்லது தொழிலாளி எந்தச் சங்கத்திலே மெம்பராக இருக்கிறாரோ, அந்தச் சங்கமும் அதை எடுத்துச் சொல்லலாம் என்பதாகும்.

கடைசியிலே, முதலாளி மெயின்டெயின் செய்கிற ரிஜிஸ்டரை, தமிழிலோ, ஆங்கிலத்திலோ, போட வேண்டுமென்று இருக்கிறது. நான் சொல்வது, தமிழிலும், ஆங்கிலத்திலும் இரண்டிலும் போட வேண்டுமென்பதாகும். இவை ஒன்று. இரண்டாவது. சஸ்பென்ஷன் காலத்திலே அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அதிலே, இரண்டு மூன்று ஐட்டம்களுக்கு மட்டும்தான் விதிகளுக்கு திருத்தம் செய்ய வேண்டுமென்று சொல்கிறேன். சஸ்பென்ட் செய்யப்பட்ட காலத்தில் அலவன்ஸ் கொடுக்கப்படவில்லையென்றால், அந்த அலவன்ஸை கிளெய்ம் செய்வதற்கு பெட்டிஷன் போடலாம் என்று செக்ஷன் 5—ல் இருக்கிறது, ஆனால், பெட்டிஷன் போடுகிறபொழுது அந்த பெட்டிஷன் கிடைத்தவுடனே வெகு விரைவில் முதலாளிக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது.

அது பொதுவாக வேகாக இருக்கிறது. ஒரு வாரத்திற்குள்ளே என்று போட வேண்டுமென்று நான் சொல்லியிருக்கிறேன்.

அப்ளிகேஷன் போட்டவுடன் ஒரு வாரத்திற்குள்ளே முதலாளிக்கு நோட்டீஸ். முதலாளிகளுக்கு 15 நாட்கள் டைம் கொடுத்து டேட்டை பிக்ஸ் பண்ணிக் கொடுக்க வேண்டுமென்பதுதான் அதிலே இருக்கின்ற அமென்ட்மென்ட்.

முதலாளி வராமல் எக்ஸ் பார்ட்டி தீர்ப்பு கொடுத்தால் 30 நாட்களுக்குள் ரீ ஓப்பன் செய்ய வேண்டுமென்று முதலாளி கேட்டால் என்று இருக்கிறது. அந்த 30 நாட்களை 15 நாட்களாக ஆக்க வேண்டுமென்பதும், 15 நாட்கள் டைமுக்குள்ளே பாட்டால் உத்தரவு, ஃபைனல் ஆர்டர்ஸ் ''வித்தின் எ பீரியட் ஆஃப் டூ வீக்ஸ்,'' இதுதான் அந்த இரண்டாவதைப் பொறுத்தவரைக்கும். அது முடிந்து விட்டது.

மூன்றாவதைப் பொறுத்தவரைக்கும் ஸ்லம் கிளீயரன்ஸ் போர்டிலே இருக்கும் சர்வீஸ் அசோசியேஷன்—அந்த ஊழியர்களினுடைய சங்கம் அங்கீகாரம் சம்பந்தமான விதிகள். அதுதான் முக்கியமான மாறுதல்களை நான் கொடுத்திருக்கிறேன். குடிசை மாற்று வாரிய ஊழியர்களின் சங்க அங்கீகாரத்திற்காக வாரியம் வெளியிட்ட விதிகளுக்கு நான் திருத்தங்கள் கொடுத்துள்ளேன். அதை ஒவ்வொன்றாக நான் எடுக்கவில்லை. அதனுடைய எசன்ஸ் என்ன என்பதை மட்டும் நான் சொல்லி விடுகிறேன். சங்க அங்கீகாரம் என்றால் என்ன? வாரிய ஊழியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே தொழில் தாவாக்கள் ஏற்பட்டால், நிர்வாகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு யார் என்பதை நிர்வாகம்தான் டிசைட் பண்ணும். அதிலே தொழிலாளர்கள் தலையிட முடியாது. நிர்வாகம் சார்பாக இன்னார்தான் வர வேண்டுமென்று சொல்லி நாங்கள் சொல்ல முடியாது. கரெக்ட், அதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதேபோல ஊழியர்களின் பிரதிநிதிகள் யார், எப்படிப்பட்ட சங்கம் என்ற முடிவைச் செய்யும் உரிமை ஊழியர்களைச் சார்ந்ததுதானே? ஆனால் இந்த ரூல்ஸ்படி அந்த உரிமை ஊழியர்களுக்கு இல்லை என்பது சாராம்சம். ஊழியர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சங்கம் எப்படியிருக்க வேண்டுமென்பதையும் வாரிய நிர்வாகம்தான் முடிவு செய்யலாம் என்பது அந்த விதிகளிலே இருக்கிறது. இதுதான் வாரியம் வெளியிட்ட அங்கீகார விதிகளினுடைய சாராம்சம். நாட்டில் எந்தவொரு சங்கமும் தனது அங்கத்தினர்களின் மகாசபையின் முன் அனுமதி பெற்றுத்தான் சங்கத்தின் விதிகளை மாற்றலாம்—கான்ஸ்டிடியூஷனை. ஆனால் வாரியம் கூறுவது என்னவென்று சொன்னால், வாரியத்தினுடைய முன் அனுமதி பெற்றுத்தான் சங்கம் தனது முக்கியமான விதிகளைத் திருத்தலாம் என்று அந்த விதிகள் கூறுகின்றன.



நாட்டில் ஊழியர்கள் சங்கங்கள் பகிரங்கமாகக் கூடலாம்; ஓப்பனாக அதனுடைய ஜெனரல்பாடி கூடலாம்; கூட்ட நடவடிக்கைகளைப் பொதுமக்கள் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அரசாங்கம் வெளியிட்டிருக்கக் கூடிய விதிகளிலே வாரியம் கூறுகிறது: சங்கக் கூட்டங்களைப் பொதுமக்களிடமிருந்து மறைத்து, பத்திரிகைகளிடமிருந்து மறைத்துத்தான் நடத்த வேண்டும். வாரியம் மனமுவந்து அனுமதித்தால்தான் சங்க நடவடிக்கைகளைப் பகிரங்கப் படுததலாம். வாரிய விதிகள் வேலை நிறுத்த உரிமைகளையும் முழுமையாகப் பறிக்கிறது. அத்துடன் வாரியம் குறிப்பிட்ட ஒரு ரூலை நான் கோட் செய்கிறேன். கோரிக்கைகளை அடைய வேலை நிறுத்தத்தையோ, வேலை நிறுத்த அச்சுறுத்தலையோ என்றைக்கும் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்த மாட்டோம் என்று சங்க விதியிலேயே சேர்க்கவேண்டுமென்று வாரியம் ஊழியர்களிடத்தில் சொல்கிறது. அதுமட்டுமல்ல; வாரியம் நினைத்தால் ஒருதலைப் பட்சமாக சங்க அங்கீகாரத்தை ரத்து செய்யலாம் என்று இருக்கிறது. This is n t ing sho t f h lding the right to rec gnition t ran scme in return for su rendering the sc veregnty and in ependence f the Union அதாவது சங்கத்தின் ஆதிபத்திய உரிமையை வாரியத்திற்குச் சரணடையச் செய்ய, வாரியம் அங்கீகார உரிமைகளை பணயக் கைதியாக வைத்திருக்கிறது என்பதுதான். இந்த நிபந்தனைகள் அனைத்தும் ஊழியர் சங்கத்தின் உள் விவகாரத்தில் அப்பட்டமாக நிர்வாகம் தலையிடுவதாகும். Blatant interference in th internnal aff irs of the employ es association ஆகவேதான் நான் கூறுவது இப்படிப்பட்ட சாராம்சத்தைக் கொண்டிருக்கக்கூடிய விஷயம் இது.

நாங்கள்கூட வெஸ்ட் பெங்காலிலே கூட கவர்ன்மென்ட் சர்வென்ட் கான்டக்ட் ரூல் கூட - இவர்கள்கூட கார்ப்பரேஷனுடைய சப்—ஆர்கனைசேஷன் ஊழியர்கள்-ஆனால் டைரக்டாக என். ஜி. ஓ க்களினுடைய அந்த ரூல்ஸையேகூட பழைய காலத்து ரூல்சை அடித்து அவர்களுக்கு கம்ப்ளீட் ரைட் ஆஃப் ட்ரேட் யூனியனிசம் என்பதையும், ரைட் டு ஸ்ட்ரைக் என்பதையும், இப்பொழுது லேட்டஸ்ட்டாக திரிபுராவிலேயும், வெஸ்ட் பெங்காலிலேயும் வெளியிட்டிருக்கிறோம். ஆகவே, இதில் அரசியல் நோக்கம் என்ற பிரச்னை கிடையாது. அப்படி சர்க்காருக்கு இடைஞ்சல் உண்டாக்குவதற்கு என்று சொன்னால் நாங்கள் அப்படி மாற்றுவோமா? நாங்கள் மாற்றியிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் இங்கேயும் அது மாற்றப்பட வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

(இரவு 8.10)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள், Conferment of permanency, subsistence allowance, Slum clearance Board regulations என்பவைகளைப் பற்றியுள்ள விதிகளுக்குத் திருத்தங்களைச் சொன்னார்கள். அதைப்பற்றி அரசினுடைய கருத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பெர்மனன்ட் செய்ய வேண்டும் என்ற சட்டத்தை யாரும் வலியுறுத்தியோ அல்லது போராட்டம் நடத்தியோ, ஆர்பாட்டம் நடத்தியோ, புரட்சித் தலைவர் அரசு கொண்டு வரவில்லை என்பதும், இந்த அரசே இது முக்கியமான தேவை, பன்னெடுங் காலமாக 6, 7, 8 வருஷம் என்று கேஷுவல் லேபராக இருந்த அவர்கள் வேலையை விட்டு நீக்கபடுகிறார்கள், நடுத்தெருவிலே நிற்கிறார்கள், அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது. ஆனால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபிறகு அதை முழுமையாகச் செயல்படுத்தவேண்டும் என்ற ஆசையோடு ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்து தொழிற்சங்கத் தலைவர்கள் அத்தனை பேரையும் அழைத்து அவர்களுடைய கருத்தை இந்த அரசு கேட்டது அடுத்த நாள் தொழிலதிபர்கள் பிரதிநிதிகள் அனைவரையும் அழைத்து அவர்களுடைய கருத்தையும் கேட்டது. இந்த இரண்டு கருத்துக்களையும் கேட்டு, அதற்குப் பின்னால் அரசு உட்கார்ந்து தொழிற்சங்கத் தலைவர்கள் சொன்ன குற்றங்கள், குறைபாடுகள் பெரும்பாலும் உண்மையாக இருந்த காரணத்தால், இந்தச் சட்டத்திற்கும் மற்ற ஏனைய சட்டங்களுக்கும் என்னென்ன திருத்தங்கள் கொண்டு வரவேண்டும் என்று அரசு பரிசீலனை செய்து இருக்கிறது. அதற்கென ஒரு குழு ''கமிட்டி ஆன் லேபர் லாஸ்'' என்று போட்டது. அந்தக் குழுவிலே சி. ஐ. டி. யு. உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எனவே, அந்தக் குழுவிற்கு வைத்து, அந்தக் குழுவின் முடிவையும் கேட்டு கொண்டு வரலாம். சட்டத்தை 1-1-1982-ல் இருந்துதான் கொண்டு வந்து இருக்கிறோம். எனவே, அதைப் பொறுத்தவரையில் நாம் அவசரப்படவேண்டிய தேவையில்லை. இந்தக் கருத்துக்களை மனதிலே வைத்து கொண்டு வரலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

1-1-1982-யில் இருந்து இது 'ரெட்ராஸ்பெக்ட்டிவ் எபக்ட்' அல்ல. It is retro active. There is difference between 'retrospective effect' and 'retro active' இந்த அரசு கொண்டு வந்து இருக்கிற சட்டம் 1-1-1982 ஆம் தேதியில் இருந்து அமலுக்கு வந்தாலும், அது 'ரிட்ரோ ஆக்டிவ்'. கணக்கெடுக்கும்பொழுது எப்படி கிராச்சுவிடி ஆக்ட் கொண்டு வந்தோமோ, அதைக்கணக்கெடுக்கும் பொழுது அதற்கு முந்திய ஆண்டில் இருந்து கணக்கு எடுக்க வேண்டும். எனவே, அரசு It takes effect from so and so, so and so date என்று சொல்லவேண்டிய தேவையில்லை.



''It is this legislation which is retro active'' என்ற நிலைமையை நாங்கள் எடுத்து விளக்கியிருக்கிறோம். எனவே, தொழிலதிபர்கள் ஒழுங்காக நடந்து கொள்ளவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற குறைபாடு தொடர்ந்து நடக்குமானால், அதைப்பற்றி அடுத்து வருகின்ற பட்ஜெட் தொடர் கூட்டத்திற்குள்ளாக, கமிட்டி ஆன் லேபர் லாஸுக்கு வைத்து, திருத்தம் கொண்டுவருவது பற்றி யோசனை செய்யலாம்.

சர்வீசைப் பற்றிச் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். செக்ஷன் 3 (2)—ல் 'அன்—இன்ட்ரஸ்டட் சர்வீஸ்' என்றால் என்ன என்பதற்கு விளக்கம் இருக்கிறது. என்ன இருந்தாலும், கமிட்டி ஆன் லேபர் லாஸ் முன் வருகின்றபோது அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டு, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தீர்மானத்தை வலியுறுத்தமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்ததாக, சப்சிஸ்டென்ஸ் அலவன்சை பொறுத்தவரையில் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அது தொழிற் சங்கத்திற்கு சொல்லவேண்டும் என்பது; தமிழிலும் ஆங்கிலத்திலும் இருக்கவேண்டும் என்பது, நாட்களை ஒரு மாதத்தில் இருந்து 15 நாட்கள் ஆக்கவேண்டும் என்பது, 14 நாட்கள் என்பதை ஏழு நாட்கள் ஆக்கவேண்டும் என்பது எல்லாம் பரிசீலிக்கப்படவேண்டிய கருத்துக்கள் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆனால் அந்தச் சட்டமும் இப்போது தான் கொண்டு வந்து இருக்கிறோம். இதுவரையில் அந்த மாதிரியான சட்டம் இருந்தது இல்லை. ஸ்டாண்டிங் ஆர்டரில் தான் 90 நாள் வரையில் சஸ்பென்ட்டில் இருந்தால் 75% ஊதியம் கொடுக்கலாம் என்று ஸ்டாண்டிங் ஆர்டரில் இருந்தது. அதுவும், மாடல் ஸ்டாண்டிங் ஆர்டரில் தான் இருந்தது. மாடல் ஸ்டாண்டிங் ஆர்டரை அந்தந்த நிறுவனத்தில் 'இன்கார்ப்பரேட்' செய்யவில்லை என்றால், சப்சிஸ்டென்ஸ் அலவன்சு கிடைக்காது. ஆனால் இந்த அரசு தான் இதற்கென ஒரு சட்டம் கொண்டு வந்து, எப்படி செயல்படுகிறது என்பதைப் பார்த்து இந்தத் திருத்தங்களையும் மற்றவைகளையும் கமிட்டி ஆன் லேபர் லாஸுக்கு அனுப்பி அதைப் பற்றி வேண்டிய பரிசீலனை செய்யவேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு செய்யும். அரசியல் சட்டத்திற்கே, என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால், 46 திருத்தங்கள் வந்து விட்டது என்று நினைக்கிறேன். எனவே, இந்தத் திருத்தங்களும் அப்படியே இருக்கவேண்டும். ஒவ்வொரு எழுத்தையும் மாற்றக் கூடாது என்று இந்த அரசு கருதவில்லை. நடைமுறையில் எப்படி செயல்படுகிறது என்பதைப் பார்த்து, திருத்தத்தைச் செய்யவேண்டும் என்று இருக்கிறது என்பதைச் சொல்லி, இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தை

மூன்றாவதாக, ஸ்லம் கிளியரன்ஸ் போர்ட்டைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே இருக்கிற conflict of opinion and approach ஆகியவை தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், ஆளும் கட்சிக்கும் உள்ளது. அது ஒரு சர்வீஸ் அசோசியேஷன் என்பது இந்த அரசின் கொள்கை. சர்வீஸ் அசோசியேஷனுக்கு என்னென்ன உரிமைகள் இருக்கவேண்டுமோ அவற்றைத் தந்து இருக்கிறோம். அங்கீகாரம் கொடுப்பதில் என்னென்ன சலுகைகள் இருக்கவேண்டும். தவறுகள் நடந்தால் அங்கீகாரத்தை வித்ட்ரா செய்து கொள்வோம் என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நோட்டீஸ் கொடுத்து, எக்ஸ்பிளனேஷன் கேட்டு, பிறகு செய்யவேண்டாம் என்ற திருத்தத்தை சொல்லியிருக்கிறார்கள். இது நியாயம் தான்.

தவறு செய்தால் அங்கீகாரம் பின் வாங்கப்படும் என்று சொல்லும்பொழுது "சுவா மோட்டோ" உடனே நீ தவறு செய்து விட்டாய், எனவே நாங்கள் இந்த அங்கீகாரத்தைப் பின்வாங்குவோம் என்று சொல்லமாட்டோம். The implied meaning is that a show cause notice will be given. A reply will be received and then it will be considered. If the Board satisfies that the explanation given is proper, it may not withdraw the recognition. If it satisfies otherwise, that they have committed a grave mistake they may withdraw the recognition. மெம்பர் சொல்வது நியாயமானது. ஒரு எக்ஸ்பிளனேஷன் கொடுத்து அங்கீகாரம் வித்டிரா பண்ணுவோம். அது இம்ப்ளைடு மீனிங் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்பது இந்த அரசினுடைய கொள்கை என்பதை நான் திட்டவட்டமாக சொல்லிவருகிறேன். குடிநீர் இல்லை என்று இந்தியன் எக்ஸ்பிரஸில் திங்கட்கிழமை, திங்கட்கிழமை எழுதுகிறார்கள். உடனே சொல்லமாட்டார்கள். ஏழு நாட்கள் காத்திருந்து அதற்குப் பின்னர் தான் திங்கட்கிழமை எழுதுவார்கள் படிக்க வேண்டுமென்று. ஒவ்வொரு நாளும் எழுதினால் பார்ப்பதற்கு உதவியாக இருக்கும். உடனே அதை இந்தியன் எக்ஸ்பிரஸில் எழுதுவார்கள். அதற்கு பதிலாக எனக்கு எழுதலாம். நான் உடனே நடவடிக்கை எடுப்பேன். அவர்களே அதை ஏழு நாட்கள் தாமதப்படுத்தி ஒவ்வொரு திங்கட்கிழமையும் எழுதுவார்கள். எழுதுகிறவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸிற்கு எழுதுவதற்கு பதிலாக எனக்கு எழுதலாம். நான் உடனே நடவடிக்கை எடுப்பேன் ஆனால் நான் இப்பொழுது இந்தியன் எக்ஸ்பிரஸை பார்த்து அதற்கப்புறம் எனது அதிகாரிகளை அனுப்பி, நாங்கள் என்ன நடவடிக்கை எடுத்தோம் என்று எழுதி அனுப்பினால் அதையும் திங்கட்கிழமை தான் போடுகிறார்கள். நடவடிக்கையையும் திங்கட்கிழமை தான் போடுகிறார்கள். தண்ணீர் இல்லை என்பதையும் திங்கட்கிழமை தான் போடுகிறார்கள். அவர்களை



அப்படி வரும்பொழுது இந்தியன் எக்ஸ்பிரஸில் வந்ததைப் பார்த்து நான் ஒரு ஊருக்குப்போய் பார்த்து, டாங்கில் தண்ணீர் ஊற்றவேண்டுமென்று உத்தரவு கொடுத்தபோது ஒரு அம்மையார் வந்து சொன்னார்கள்—இங்கே லாரியில் வந்து தண்ணீர் ஊற்றக்கூடிய அந்த லாரி டிரைவர் $2\frac{1}{2}$ ரூபாய் பணம் கேட்கிறார்கள். ரூபாய் கொடுக்கவில்லை என்று சொன்னால் அந்த டாங்கில் ஊற்றாமல் அடுத்த தொட்டியில் ஊற்றுகிறார்கள். இப்படி தண்ணீர் ஊற்றாமல் போய்விடுகிறார்கள் என்று ஐந்தாறு பேர்கள் சொன்னார்கள். இதுகுறித்து தீர விசாரித்து சம்பந்தப் பட்ட டிரைவரை சஸ்பெண்டு செய்தோம். சஸ்பென்ஷன் தான். மறுபடியும் விசாரணை நடக்கும். விசாரணைக்குப் பின்னால் நிரூபிக்காவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படலாம். இல்லாவிட்டால் வேலைக்கு எடுத்துக் கொள்வோம். ஆனால் அத்தனை லாரி டிரைவர்களும்,—46 பேர்கள் என்று கருதுகிறேன். உடனே வேலைநிறுத்தம் செய்துவிட்டார்கள். நான் உங்களை ஒன்று கேட்கிறேன். வறட்சி நிவாரணம் வேண்டும். உடனடியாக தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று ஒரு மணி நேரம் விவாதம் வேண்டுமென்று சொல்லி விவாதித்தீர்கள். தண்ணீருக்குள்ள முக்கியம்—உண்ணாவிரதம் போது கூட நானும் நண்பர் கருப்பையா, உமாநாத் போன்றவர்கள் கூட தண்ணீரைக் குடித்துவிட்டுத் தான் இருப்போம். நாங்கள் எல்லாம் உண்மையாக உண்ணாவிரதம் இருப்பவர்கள். சில பேர்கள் மாதிரி ராத்திரியிலே இட்லி சாப்பிட்டுவிட்டு உண்ணாவிரதம் இருக்க மாட்டோம். Water with a pinch of salt—அப்போதுகூட தண்ணீர் குடிப்போம். தண்ணீர் எவ்வளவு முக்கியமான தேவை என்று தெரிந்து நானே—அமைச்சரே—போய் அதிகாரிகளைப் பார்த்து தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று சொல்லும்பொழுது டிரைவர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று அவர்களை சஸ்பெண்டு செய்தால் அதற்காக வேலை நிறுத்தம் என்று சொன்னால், குடிநீர் இலாகாவில் வேலைநிறுத்தத்தை அனுமதிக்க முடியுமா? இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் மேற்கு வங்காளத்தைப் பற்றி சொன்னார்கள். மேற்கு வங்காளத்திலே என்னென்ன நடக்கிறது என்பதையெல்லாம் கட்டிங் எடுத்து வைத்துக்கொண்டே வருகிறேன். நம்முடைய டிமாண்ட் வரும பொழுது மேற்கு வங்காளம் மேலா, தமிழ்நாடு மேலா என்பதைப்பற்றி சொல்கிறேன். அது ஸ்டேட்ஸ்மென்லே கரெட்டாக வருகிறது. ஸ்டேட்ஸ்மென் எடுத்து கட் பண்ணி ரெடியாக வைத்திருக்கிறேன். எவ்வளவு லாக்அவுட் நடந்திருக்கிறது என்பதையெல்லாம் வைத்திருக்கிறேன். 'குளோஷர்' இந்தியாவிலேயே அதிகமான 'பாக்டரிகள்' குளோஸ் ஆகி இருப்பது மேற்குவங்காளத்திலே தான். அந்தத் தகவல் எல்லாம் வெட்டி வைத்திருக்கிறேன். நம்முடைய டிமாண்ட் வரும்பொழுது தமிழ்நாடு மேலா, மேற்கு வங்காளம் மேலா என்பதை பேசிக்கொள்ளலாம். ஏனென்றால் இங்கே மேற்கு

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 செப்டம்பர் 10

வங்காளத்தைப் பற்றியும், திரிபுரா பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். I will clearly establish that Indust ial peace and harmony is previlling more in Tamil Nadu than in West Bengal and Tirupura. எனவே குடிசைமாற்று வாரியத்தைப் பொறுத்த வரையில் அங்கே வேலை நிறுத்தம் போன்றவை இல்லாமல் அவர்கள் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தி -- இப்பொழுது ஒரு பெண்—தாய்குலத்தைச் சேர்ந்தவர்—தலைவராக வந்திருக்கிறார்கள். பொதுவாகவே நல்ல இரக்க குணம் படைத்தவர்கள். அவர்களோடு பேசி முடிவு செய்துகொள்ளலாம். இல்லையென்றால் என்னிடம் பேசலாம். இல்லையென்றால் முதல்வர் அவர்கள் இருக்கிறார்கள் அவர்களிடமும் பேசி திருப்தி அடையவில்லை என்றால் சும்மா இருந்துவிடலாம். ஏனென்றால் சுப்ரீம் கோர்ட்டிடமே போய்விட்ட பிறகு வேறு வழியில்லை. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்கிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர் இந்தத் திருத்தத்தை வலியுறுத்தவேண்டாம். பின் வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்மிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர் தம் தீர்மானங்களை வற்புறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பின்னிரண்டு தீர்மானங்களை வற்புறுத்தவில்லை. குடிசைமாற்று வாரியம் சம்பந்தப்பட்ட முதலாவது தீர்மானத்தை வற்புறுத்துகிறேன்.

தீர்மானங்கள் ங, ச ஆகிய இரண்டும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு குடிசைமாற்று வாரியப் பணியாளர்களின் பணி அங்கீகாரச் சங்க விதிகளை இயற்றுவது குறித்து 5-8-1981 ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான 18-7-1981 ஆம் தேதியிட்டப் பெற்ற வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 581 ஆம் எண் அரசாணையில் வெளியாகி, 2-2-1982 ஆம் தேதியன்று பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிப்பில் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யப்பெற வேண்டும்.''



1982 செப்டம்பர் 10] [பேரவைத் தலைவர்]

Rule-7: Delete rule 7.

Rule-8: Delete rule 8.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

திரு. ரா. உமாநாத்: நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

(ஞ) ''தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குபடுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, 19-8-1981 ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான 31-7-1981 ஆம் தேதியிடப்பெற்ற கல்வித் துறையின் 1620 ஆம் எண். அரசாணையில் வெளியாகி, 2-2-1982 ஆம் தேதியன்று பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிப்பில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பெற வேண்டும்.''

In the amended rule published in the Notification aforesaid, in line 1, for the words "the duty of" substitute the words "in the discretion of".

The resolution was duly seconded.

திரு. ரா. உமாநாத்: ஆசிரியர்கள் இன்றைக்குத் தேர்விலே மேற்பார்வை பார்ப்பது இந்த ஜி. ஓ. வெளிவந்ததற்குப் பின்னாலே — இந்த ஜி. ஓ. தமிழ்நாடு கெசட் நாள் 19-8-1981-ல் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு முன்னால் வரைக்கும் தேர்வு மேற்பார்வை பார்ப்பது ஆசிரியர்களுடைய டியூட்டி அல்ல. சட்டக் கட்டாயக் கடமையல்ல. இஷ்ட பூர்வமாக அவர்கள் செய்யலாம். செய்யாமலும் இருக்கலாம். இப்பொழுது இந்த ஜி. ஓ. அரசாங்கம் திடீரென்று வெளியிட்டு, அது சட்டக் கட்டாயமாக்கி அதைச் செய்யவில்லையென்றால் தண்டிக்கப்படுவார்கள். டிசிப்ளினரிக்கு உட்படவேண்டுமென்று கொண்டுவரப்படுகிறது.

(இரவு 8-20)

இதிலே என்னுடைய மெயின் அப்ஜெக்ஷன் என்பதாக நான் கொடுத்திருப்பது டியூட்டி என்ற வார்த்தையை மாற்றி, அட் தி டிஸ்கிரிஷன் ஆஃப் என்று சேர்க்க வேண்டுமென்பது; மெயின் அப்ஜெக்ஷன் ஒன்றே ஒன்றுதான். அதிலே சொல்லக்கூடிய விஷயத்தை ஒரு பில்லாக நம்முடைய சர்க்கார் 1980 ஆகஸ்ட் திங்கள் 8 ஆம் தேதியன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் பிரேரிக்கப்பட்டது. இன்ட்ரொடக்ஷனிலே நாங்கள் அதை அப்ஜெக்ட் பண்ணி, பிறகு முதலமைச்சரிடம் இது சரியில்லை, தப்பு, இன்றைக்கு அவர்கள் வாலன்டரியாக செய்யவேண்டியதை நீங்கள் டியூட்டி என்று மாற்றுவது சரியல்ல என்று சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம்

பேசி, கடைசியிலே இந்த அவையினுடைய அனுமதியின் பேரிலே அந்த பில்லை வாபஸ் வாங்கிவிட்டார்கள். பில்லை வாபஸ் வாங்கின பிறகு, அந்த ஷரத்தை ஜி.ஓ. மூலம் கொண்டுவந்து இன்றைக்கு அமுல்நடத்துவது என்று சொன்னால், இந்த அவைக்கு கொடுத்த வாக்குறுதி என்ன? அவைக்கு முன்னாலே வாபஸ் வாங்குகிறோம் என்று சொன்னதற்கு அர்த்தம் என்ன? It is actually, I mean, if I use a strong word, deceiving the Assembly. அதாவது வாபஸ் வாங்குகிறோம் என்று சொல்லிவிட்டு பிறகு ஜி.ஓ. மூலம் அதை அமல்படுத்தினால் அது ரொம்ப தப்பு, அது அவைக்கு செய்திருக்கக்கூடிய ஒரு அவமரியாதை, அதை வாபஸ் வாங்கின பிறகு ஜி.ஓ. மூலமாக, எக்ஸிகியூட்டில் ஆர்டரிலே கொண்டு வருவது தப்பு, ஆகவே டியூட்டி என்பதற்குப் பதிலாக அதை டிஸ்கிரிஷன் என்று சேர்க்கவேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவையின் முன்னாலே ஒரு மசோதா கொண்டுவரப் பட்டதும், அது திரும்பப் பெறப்பட்டதும் உண்மைதான். இந்த மசோதா நிறைவேறியிருக்குமானால் ஒரு ஆசிரியர் தேர்வை மேற்பார்வையிடுகின்ற அந்த உத்தரவை அல்லது கடமையைத் தவறுகின்றபோது தண்டிக்கப்படுகின்ற பீனல் கிளாஸ் இதிலேயிருந்தது. பீனல் பனிஷ்மெண்ட் வைத்திருந்தோம். இப்போது அதை அவர்கள் அதிகமான அளவிற்கு ஆட்சேபித்ததன் காரணமாக திரும்பப்பெறப்பட்டது. இன்றைக்கு நம் முன்னாலே அந்தப் பிரச்னையின் அடிப்படையிலே நாம் பார்க்கின்றபோது இப்போது மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்களுக்கு நாம் தேர்வு வைப்பது என்பது மிகமிகத் தேவை. அந்தத் தேர்வை மேற்பார்வையிடுவது என்பது அதைவிட மிக மிக முக்கியமானது. அந்தத் தேர்வை மேற்பார்வையிடுகிற அந்தப் பணியை ஒருவருக்குக் கடமையாக ஆக்காமல் நாம் அந்தத் தேர்வை நிச்சயமாக நடத்த முடியாது.

அதுமட்டுமல்லாமல் ஆசிரியர்கள் பொறுப்புக்கு யார் வந்தாலும் அவர்கள் சொல்லித்தருவது என்பது எப்படிக் கடமையோ, ஒரு கேள்வித்தாளை தயாரிப்பது என்பது எப்படிக் கடமையோ, பரிட்சை நடத்துவதும் அதைப்போலவே அவர்கள் கடமையாக ஆக்கவேண்டுமென்பது இந்த நிமிஷம் வரைக்கும் இருந்து வந்திருக்கிறது. ஆனால் சட்டத்திலே ஒருவேளை அது இல்லாமல் இருந்திருக்கலாம். அதை ஆசிரியர்கள் பயன்படுத்தியிருக்கலாமே தவிர, நடைமுறையில் இது சட்டாயமாக அவர்கள் கடமையாகத்தான் கருதப்பட்டு வந்திருக்கிறது. அதை இன்றைக்கு ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்கிறபோது நாம் தேர்வை மேற்பார்வையிடுகிற பணியை வேறு யாரிடத்திலேயும் தரமுடியாது. ஆகவே இன்றைக்கு ஆசிரியர்களுடைய நலன் ஒருபக்கமும், மாணவர்களுடைய நலனை நாட்டினுடைய நலனை ஒரு பக்கமும் வைத்துப் பார்க்கின்ற போது நாம் இத்தகைய முடிவை எடுப்பது நம் நாட்டு நிலைமையும், மாணவர்கள் நிலமையையும் பாதுகாப்பதாக இருக்கும், ஆசிரியராக இருக்கின்ற எவரும் இந்தப் பணியை



நிறைவேற்றித்தான் தீரவேண்டும். அப்படி இல்லையென்றால் அவர்கள் ஆசிரியர்கள் என்ற வேலைக்கு வந்திருக்கக்கூடாது. ஆசிரியர்கள் என்று வந்துவிட்ட பிறகு தேர்வு நடத்த முடியாது என்று சொல்வது சரியல்ல. ஏதோ ஒரு முக்கியமான காரணத்தையொட்டி வரவில்லை என்றால் அதை நாம் ஏற்றுக் கொள்ளலாம். நோய்வாய்ப்பட்டிருந்தால், உடல்நலக்குறைவு ஏற்பட்டால் வரமுடியவில்லை என்கிறபோது அதை நாம் ஏற்றுக் கொள்ள முடியும். நானும் ஒரு மாணவனாக ஆசிரியனாக இருந்து பணிபுரிந்தவன் என்ற இந்த அடிப்படையிலே சொல்கிறேன். பரீட்சை மேற்பார்வையிடமாட்டேன் என்று சொல்கிற ஒரு ஆசிரியர் ஆசிரியரே அல்ல. அப்படிப்பட்டவர் ஆசிரியர் பணிக்கே வந்திருக்கக்கூடாது. ஆசிரியர்கள் மேற்பார்வையிடாமல் பரீட்சையை நடத்தமுடியாது. பரீட்சை நடத்த முடியாமல் போனால் மாணவர்களுடைய முன்னேற்றம் தடைபடும். அரசாங்கம் இதை ஒரு போராட்டத்தை நசுக்குவதற்காகப் போடவில்லை. மாணவர்களுடைய நலனுக்கு உகந்ததாக நாட்டினுடைய நலனுக்கு உகந்ததாக செய்யவேண்டுமென்ற அடிப்படையிலேதான் இதைப் போட்டிருக்கிறோம். இதைத்தவிர மற்ற எந்தப் போராட்டமாக இருந்தாலும் ஆசிரியாகள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்துப் போராடுகிறபோது அரசாங்கம் அதைப்பற்றி பரிசீலனை செய்து வந்திருக்கிறது. பரீட்சை மேற்பார்வையிடமாட்டேன் என்று சொல்கிற நிலைமை தவறானது. அதை கடமையாகக் கருதவேண்டும்.

ஆகவே நான் எடுத்துக்காட்டியதைப் போல் மாணவர்கள் நலன், நாட்டு நலன் என்ற அடிப்படையில் இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டு தீர்மானத்தை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, 19-8-1982-ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான 31-7-1981-ஆம் தேதியிடப்பெற்ற கல்வித் துறையின் 1620 ஆம் எண் அரசாணையில் வெளியாகி, 2-2-1982-ஆம் தேதியன்று பேரவை முன் வைக்கப்பெற்ற அறிவிப்பில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பெறவேண்டும்".

In the amended rule published in the Notification aforesaid, in line 1, for the words "the duty of", substitute the words "in the discretion of".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

11. ஒரு மணி நேர குறுகிய கால விவாதம்—தொடர்ச்சி.

(ஆ) காவிரி நதி நீர்ப்பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப்பேரவை விதி 77-ன் கீழ் திருவாளர்கள் ப. நெடுமாறன், கி. சட்டநாத கரையாளர், இரா. கருப்பையா, ரா. உமாநாத் ஆகியோர் கீழ்க்கண்ட நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகிய கால விவாதம் தேவையென்று கோரியுள்ளனர்.

''காவிரி நதி நீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பது பற்றி இப்பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

இதே பொருள் குறித்து விதி 54-ன் கீழ் திருவாளர்கள் எம். செல்லமுத்து, ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், மு. அம்பிகாபதி, என். எஸ். வி. சித்தன் ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளனர்.

இதே பொருள் குறித்து விதி 55-ன் கீழ் திருவாளர்கள் பொ. உத்திராபதி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், எம். செல்லமுத்து, ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, மு. அப்பாதுரை, இரா. இராசமாணிக்கம், ந. சிவஞானம், இரா. கருப்பையா, சோ. அழகர்சாமி, செ. இராமலிங்கம், என். எஸ். வி. சித்தன், மு. அம்பிகாபதி, எஸ். இராஜாராமன் ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளனர்.

இது குறித்து, திரு. ப. நெடுமாறன் முதலில் பேசுவார்.

**திரு. ப. நெடுமாறன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் எதிர்காலத்திற்கு மிக அதிகமான அளவிற்கு பாதிக்கும் பிரச்னையாக காவிரி நீர்ப் பிரச்னை ஆகிவிட்டு இருக்கிறது. இந்த ஆண்டு காவிரியில் விடப்படவேண்டிய நீர் விடாமல் இருந்ததால், மேட்டூர் அணைக்கு வந்து சேரவேண்டிய நீர் வந்து சேரவில்லை. அதன் காரணமாக தமிழகத்தில் குறிப்பாக தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் தவிர்க்க முடியாத அளவிற்கு நிலைமைகள் உண்டாகியிருக்கின்றன. இதேபோன்று கடந்த காலத்தில், 1976-77 ஆம் ஆண்டில் இப்படிப்பட்ட நீர் வரத்து தாமதமான காரணத்தால், தமிழகத்திற்கு என்னென்ன கேடுகள் விளைந்தது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1976–77 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் 15.78% நிலம் சாகுபடி செய்யப்படவில்லை. அதன் விளைவாக மொத்த நெல் உற்பத்தியில் 28.82% குறைந்தது. கிட்டத்தட்ட 2.51 லட்சம் ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாதிக்கப்பட்டன. 4.11 லட்சம் டன் அரிசி உற்பத்தி குறைந்தது. இதன் விளைவாக விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் மட்டும்—அந்த ஒரு ஆண்டில் 48 கோடி ரூபாய். தமிழகத்தின் அரிசி உற்பத்தியில் 4—ல் ஒரு பாகம் மிகப்பெரிய பாதிப்புக்கு உள்ளாகியது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு ஆண்டு இப்படி ஆகியது என்றால் 1974—ல் இருந்து தொடர்ந்து 1982-வரையில்—இந்த 8 ஆண்டு காலமாக—இந்தப் பிரச்னை இழுபறியாகவே இருந்து வந்துள்ளது. கருநாடக அரசு மனது வைத்தால்தான் தமிழகத்திற்கு தண்ணீர், இல்லாவிட்டால் இல்லை என்ற நிலைமை இன்றைக்கு உருவாக்கப்பட்டு இருப்பதால், தமிழகத்தின் எதிர்காலம் இருள் சூழ்ந்து இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1974-க்கு பிறகு 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி ஒரு தடவை கூட கருநாடக அரசு தமிழகத்திற்கு தண்ணீர் விடவில்லை என்பது மிகவும் முக்கியமானது. பேச்சுவார்த்தை என்ற பெயரிலேயே இந்த நிலைமை தொடர்ந்து நீடித்து வருவதற்கு கருநாடக அரசு விரும்புகிறது.

(இரவு 8-30)

ஏனென்றால் அவர்கள் நீர் உற்பத்தியாகிற இடத்தில் இருக்கிறார்கள். நாம் கீழ்மட்டத்தில் இருக்கிறோம். அதுபற்றி நடைபெறும் பேச்சுவார்த்தை இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. இது எவ்வளவு காலம் நீடிக்குமோ அவ்வளவு காலம் அவர்களுக்கு நல்லது. அதன் காரணமாக ஏதாவது சாக்குப்போக்குகளைச் சொல்லி, பேச்சுவார்த்தையை முடிக்க அந்த மாநில முதல்அமைச்சரும் வரவில்லை, மத்திய அமைச்சரும் வரவில்லை. அவர்களுக்கு லாபம் என்பதால்தான் தமிழ்நாட்டின் பிரச்சனையை அவர்கள் அலட்சியப்படுத்துகிறார்கள். இதை மேலும் வளரவிட்டால் நம்முடைய தமிழகத்திற்கு பேரபாயமாக முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதியான மெர்க்காராவில் எவ்வளவு மழை பெய்கிறது என்ற விவரத்தை தமிழக அரசுக்குத் அவர்கள் தெரிவிக்க வேண்டும். அந்த ஒப்பந்தத்தில் அதற்கு சரத்து இருக்கிறது. ஆனால் 1974 ஆம் ஆண்டுக்குப் பின்னால் எவ்வளவு மழை அங்கே பெய்கிறது என்ற தகவலை கர்நாடகம் நமக்கு கொடுக்கவில்லை என்ற தகவல் எனக்குக் கிடைத்து இருக்கிறது. இது ஒரு முக்கியமான விஷயம், சீரியஸ் மேட்டர். இதை வலியுறுத்தி மத்திய அரசின் மூலமாக அந்தத் தகவலை

நாம் பெற்றாக வேண்டும். காரணம் அங்கே ஒரு இஞ்ச் மழை பெய்தால் ஒரு டி. எம். சி. தண்ணீர் அணைக்கு வந்துசேரும் என்பது ஒரு குத்துமதிப்புக் கணக்கு. அந்த மழை அளவை வைத்து இவ்வளவு தண்ணீர் கிருஷ்ணராஜசாகருக்கு வந்திருக்கிறது; எங்களுக்கு இவ்வளவு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்பதற்கு வழி இருந்தது. இப்போது அந்தத் தகவலை அளிக்க கர்நாடக அரசு மறுக்கிறது என்ற செய்தி கிடைத்திருக்கிறது.

அதைப்போல நம்முடைய தமிழக அரசினுடைய எதிர்ப்பை மீறி மத்திய திட்டக் குழுவின் எதிர்ப்பை மீறி, ஹேமாவதி, கபினி போன்ற காவிரியின் கிளை நதிகளில் கர்நாடக அரசு அணைகளைக் கட்டியிருக்கிறது. ஆனால் அதற்கான ஆயக்கட்டு இன்னும் நிர்ணயிக்ப்படவில்லை. அதற்கான வேலை கூட நடக்கவில்லை. அணை கட்டியாகிவிட்டது, ஆனால் ஆயக்கட்டு இல்லை. காவிரிக்கு வரவேண்டிய 32 டி. எம். சி. தண்ணீரை அந்த அணைகளில் தேக்கி வைத்திருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கும் பயனில்லை; நாமும் பயனடைய முடியவில்லை. வீணாக தடுத்து வைத்திருக்கிறார்கள் என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன்.

அந்த 32 டி. எம். சி. தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் அங்கே அணை கட்டி தடுத்து விட்டார்கள். ஆயக்கட்டு இல்லாமல் அணை கட்டி, தண்ணீரை தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள். அதற்கு நம்முடைய அரசு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுத்து நம்முடைய உரிமையை நிலைநாட்ட வேண்டும்.

கர்நாடக அரசு காவிரியை ஒரு அரசியல் ஆதிக்கப் பிரச்னையாக ஆக்கிக்கொண்டிருக்கிறதே தவிர, அதனால் இரண்டு மாநில மக்களின் எதிர்காலமும் பாதிக்கப்படுகிறது என்பதை உணரவில்லை; இதிலே ஒரு அலட்சியப் போக்கைக் காட்டி வருகிறது.

காவேரி குழு என்ற ஒரு குழுவை அவர்கள் அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவிற்கு சென்னபசவப்பாவை தலைவராக வைத்திருக்கிறார்கள். அவர் ஒவ்வொரு முதலமைச்சர் மாநாட்டுக்கும் வந்து கலந்து கொள்கிறார். அவரை நம்பி, கர்நாடக அரசு தன்னுடைய ஆலோசகராக வைத்திருக்கிறது. அவர் சொல்கிறார்..

'Why should Tamil Nadu have three crops while Karnataka is starved of even one crop?' என்று கர்நாடகத்தில் இருக்கிற விவசாயிகள் ஒருபோக சாகுபடிக்கு தண்ணீர் இல்லாமல் தவிக்கும்போது தமிழக விவசாயிகளுக்கு மூன்று போக சாகுபடிக்கு எதற்காக தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று பகிரங்கமாக முதலமைச்சர் மாநாட்டில் சொன்னார். அப்படிப்



பட்ட சுபாவத்தை உடையவர் அவர். இந்த மனோபாவம் உடையவரை ஆலோசகராக வைத்துக்கொண்டு அந்த அரசு இயங்குமானால் இந்தப் பிரச்சனையில் எப்படி நியாயம் கிடைக்கும் என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

15 தடவை அமைச்சர்கள் மட்டத்திலும், முதலமைச்சர்கள் மட்டத்திலும் கூடிக் கூடி பேசியாகிவிட்டது கடந்த 8 ஆண்டுக் காலமாக. ஏற்கெனவே நிர்ணயித்த கூட்டங்களுக்கு அந்த முதலமைச்சர் ஏதோ காரணம் சொல்லி வர மறுக்கிறார் அல்லது மத்திய அமைச்சர் வர மறுக்கிறார். கர்நாடகத்தில் மறு தேர்தல் நடக்கும்வரை இந்தப் பிரச்சனை முடிக்கப்பட போவதில்லை. ஆகவே இந்த பேரபாயத்தை எண்ணிப்பார்த்து நாம் இந்தப் பிரச்சனையை முடிக்க ஏற்பாடு செய்தாக வேண்டும். எப்படிப்பட்ட அபாயம் வந்திருக்கிறது என்பதற்கு சில புள்ளி விவரங்களைக் கொடுக்கிறேன்.

தமிழகத்தைப்போல கர்நாடகம் காவிரியை மட்டும் நம்பி இருக்கிற ஒரு மாநிலம் அல்ல. ஏனென்றால் வேறுபல நதிகள் அங்கே உண்டு. கர்நாடகத்தில் ஆண்டுதோறும் 3?00 டி. எம். சி. தண்ணீர் கிடைக்கிறது. தமிழ்நாட்டுக்கு 1300 டி. எம். சி. தண்ணீர்தான் கிடைக்கிறது.

கர்நாடகத்தில் ஒரு தனி நபருக்கு கிடைக்கும் தண்ணீரில் கால் பாகம்தான் தமிழ்நாட்டில் ஒரு தனி நபருக்குச் சராசரியாக கிடைக்கிறது. நான் இங்கே சொல்லுகின்ற புள்ளி விவரம் கர்நாடக அரசே கொடுத்திருக்கிற புள்ளிவிவரம்தான்.

தமிழ்நாட்டிலே ஆற்று நீர் பாசன நிலம் என்பது 23 லட்சம் ஏக்கர். அதிலே காவிரி நதியின் மூலம் 19 லட்சம் ஏக்கர்கள் இங்கே பாசனம் ஆகின்றன. தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஆறுகளையும் சேர்த்தால் 23 லட்சம் வரும். அதிலே 80 சதவீதம் காவிரி பாசனத்தின் மூலம் இருக்கிறது. ஆகவே, இது ரொம்பவும் முக்கியமானப் பிரச்சனை. இதிலே எவ்வளவு சங்கடங்கள் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தப் பிரச்னை இன்று நேற்று அல்ல பல நூற்றாண்டு காலத்திற்கு முன்னாலேயே இருந்திருக்கிறது. நம்முடைய அவையின் முன்னவர் நாவலர் இவர்கள் இலக்கியம் பயின்றவர். அவர்களுக்குத் தெரியும் 11 ஆம் நூற்றாண்டிலே இரண்டாம் இராஜ இராஜ சோழன் ஆண்டக் காலத்தில், இது போன்ற பிரச்னை வந்து, காவிரியிலே ஒரு அணையைக் கட்டி தடுத்து. தமிழகத்திற்கு தண்ணீர் வரவிடாமல் குடகு நாட்டு மன்னன்

செய்தபோது, இரண்டாம் இராஜராஜ சோழன், படையோடு போய் அந்த அணையை உடைத்துத்தான் தண்ணீர் கொண்டு வந்தான் தமிழகத்திற்கு என்பது வரலாறு. அந்த நிலைமை மீண்டும் தமிழகத்திற்கு வரவேண்டும் என்று எதிர் பார்க்கிறீர்களா என்ன? அந்த நிலைமைக்குப் போகவேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. நானும் சொல்லவில்லை. யாரும் சொல்ல மாட்டோம். நம்முடைய மூவர் உலாவிலே சொல்லப் பட்டிருக்கிறது, இலக்கியம் படித்த நமது நாவலர் அவர்களுக்குத் தெரியும்;

''சுழியிட்ட காவிரிக்கு சோணாடு வாழ
வழியிட்ட வாள் காண வாரீர்''

என்று ஒட்டக்கூத்தர் பாடி வைத்திருக்கிறார். அந்த நிலைமை தமிழகத்திற்கு வரவேண்டுமா? அதைப்போல, இன்று இந்தப் பிரச்னை....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இலக்கிய மேற்கோள் எல்லாம் காட்ட ஆரம்பித்தால் நேரம் போதாது. 2 ஆயிரம் வருஷங்களுக்கு மேலாக காவிரியைப் பற்றி பாடிக் கொண்டேயிருக்கிறார்கள். (சிரிப்பு)

திரு. ப. நெடுமாறன்: நான் எதற்காக இலக்கிய மேற்கோள் சொன்னேன் என்றால் நம்முடைய பக்கம் நியாயம் இருக்கிறது. நம்முடைய உரிமை நிலை நாட்டப்பட வேண்டும். அது முக்கியமானது. 1966—லே ஹெல்சிங்கி என்ற இடத்திலே இண்டர்நேஷனல் லா அசோசியேஷன் கூடி இது போன்ற ஆற்றுநீர் பிரச்னைகளுக்கு என்ன செய்வது என்பதை சர்வதேச ரீதியிலே சில முடிவுகளை செய்திருக்கிறார்கள் அப்பர்—ஸ்டீரீம் நாடுகளுக்கு என்ன உரிமை, டவுன்-ஸ்டீரீம் நாடுகளுக்கு என்ன உரிமை என்பதை அவர்கள் தெளிவாக வரையறைகளை வகுத்திருக்கிறார்கள். ஐக்கிய நாட்டு சபை அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறது. உலகம் பூராவும் அதை அமல் நடத்துகின்றன. அந்த அடிப்படையிலேதான் அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையிலே ஓடிக் கொண்டிருக்கிற கொலம்பியா ஆற்று நீர் பிரச்னைக்கு பரிகாரம் செய்யப்பட்டது. எகிப்துக்கும், சூடானுக்கும் நடுவிலே ஓடுகிற நைல் நதி பிரச்னையிலே இந்த அடிப்படையிலேயே சுமுகமான தீர்வு ஏற்பட்டது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நடுவிலே சிந்து நதி பிரச்னையிலே அதே அடிப்படையிலேயே சுலபமான தீர்வு வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் நம்முடைய அரசாங்கமும், இனியும் பேச்சுவார்த்தைகளுக்குப் போகாமல் இந்த பிரச்னையை தீர்ப்பதற்காக ஒரு டிரிப்யூனல் வைக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தியாக வேண்டும்.



ஏனெனில் நாம் இது விஷயமாக நிறைய பேசியாகி விட்டது. 8 ஆண்டு காலமாக பேச்சு வார்த்தைகளை நடத்தியும் எந்தப் பயனும் இல்லையே. நமது இண்டர் ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட் ஆக்ட் 1956ன்படி, நாம் இந்தப் பிரச்னையை ஒரு டிரிப்யூனலுக்கு விட வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். அந்தச் சட்டத்திலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு மாநில அரசு இன்னொரு மாநில அரசோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை மறுத்தாலோ அல்லது அவர்களுக்கு நியாயமாக அளிக்கப்பட வேண்டிய நீரை அளிப்பதற்கு மறுத்தலோ அந்த மாநில அரசு மத்திய அரசிடம் புகார் செய்வார்களே யானால் மத்திய அரசு உடனடியாக தலையிட்டு அதற்கு ஒரு டிரிப்யூனல் நியமிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. டிரிப்பியூனலுக்கு போவதைத் தவிர இதற்கு வேறு வழியே இல்லை. இந்த அரசியல் மத்தியஸ்தம் என்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிற முயற்சி.

நான் பச்சையாக பட்டவர்த்தனமாக சொல்ல விரும்புகிறேன். அரசியல் மத்தியஸ்தம் யார் செய்தாலும் சரியாக வராது என்பதை அதற்கு ஒரு உதாரணத்தையும் உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன். டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் இந்தியா கண்ட மிகச் சிறந்த என்ஜினியர் என்பதிலே யாருக்கும் சந்தேகம் இல்லை, இந்த 20 ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த என்ஜினியர். அவர் நேருஜி ஆண்ட காலத்திலே மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவையிலே நீர் பாசனத்துறை அமைச்சரா நியமிக்கப்பட்டார். சாஸ்திரி காலத்திலேயும் அமைச்சராக இருந்தார். மகாராஷ்டிரத்திற்கும், ஆந்திராவிற்கும் இடையே கிருஷ்ணா நதிநீர் பிரச்னையில் ஏற்பட்ட சிக்கலிலே இரண்டு மாநில முதல்வர்களையும் அழைத்துப் பேசி, ஒரு சுமுகமான தீர்வு காணவேண்டும் என்பதற்காக, அவர் ஒரு சிறந்த என்ஜீனியர் என்ற முறையிலே, அமைச்சர் என்ற முறையிலே, எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சிறந்த இந்தியன் என்ற முறையிலே, இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என்பதற்காக ஒரு சுமுகமான தீர்வைச் சொன்னார். அன்றைக்கு மகாராஷ்டிர முதலமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. வி. பி. நாயக் அவர்கள், அந்தத் தீர்வை ஏற்றுக்கொள்ளவில்லை. சாஸ்திரி அவர்களிடம் அவர் போய் சொன்னார், ராவ் அவர்கள் ஆந்திரக்காரர், ஆகவே, ஆந்திரர்களுக்கு சாதகமாக தீர்ப்பு சொன்னார் என்று சொன்னார்.

(இரவு 8 40)

இந்தச் செய்தியை கேள்விப்பட்டவுடன் திரு. கே. எல். ராவ் அவர்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு வெளியே போனார். இனிமேல் நான் இந்தப் பதவியிலே ஒட்டிக்கொண்டிருக்கப்போவதில்லை, நான் சொன்ன ஒரு தீர்ப்பினை ஒரு முதலமைச்சர் விமர்சனம் செய்யும்போது, அப்படி நம்பிக்கையை இழந்த பிறகு இந்தப் பதவியிலே இருக்கப

போவதில்லை என்று சொல்லி அவர்கள் ராஜினாமா செய்தார்கள். ஆகவே யாராக இருந்தாலும் மத்தியஸ்தத்திற்கு விட்டால் நம்முடைய நஷ்டம் தான் அதிகமாகும். எனவே இதை ட்ரிபியூனலுக்கு விடுவதற்குரிய முயற்சியை அரசு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி என்னுடைய உரையினை முடிக்கிறேன்.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் காவிரி நீர் சம்பந்தமான பிரச்னையின்மீது நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்து பேசத் துவங்குகிறேன். இன்றையதினம் தஞ்சை, திருச்சி மாவட்டத்திலே உள்ளவர்களும் தென்னாற்காடு மாவட்டத்திலே சிதம்பரம், காட்டு மன்னார் கோயில் போன்ற பகுதியிலே உள்ள விவசாயிகள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் அவதிப்படும் இந்த நேரத்தில் இது பற்றிப் பேச முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று எண்ணுகிறபோது உள்ளபடியே நான் வருந்துகிறேன். மேட்டூர் நீர்ப்பிரச்னையால் விவசாயிகள் அல்லல் பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில் அதுபற்றி இங்கே விவாதிக்கப்பட்டு அதன் மூலம் அவர்களுக்கு ஏதேனும் பலன் ஏற்படும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் இப்போது சட்டசபை முடிகின்ற போது இப்போது விவசாயிகள் பற்றி பேசப்படுவது குறித்து நான் வருத்தப்படுகிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் விவசாயிகள் கோடிக்கணக்கான ருபாயினை இழந்து இருக்கிறார்கள். அவர்கள் இழப்பு கிட்டத்தட்ட 1 கோடி ருபாய்க்கு மேல் இருக்கும் என்று எண்ணுகிறேன். இது இந்த அரசினுடைய அலட்சியப் போக்கு என்றுகூட நான் சொல்லுவேன். குழுக்கள் கூடுகின்றன அதிகாரிகள் சந்தித்து பேசுகிறார்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்களால காவிரி நீர்ப்பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் என்றெல்லாம் பேசப்பட்டது. இதே அவையிலே மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் 1980 ஆம் ஆண்டு சொன்னார்கள். காவிரிப்பகுதியிலே மழை பெய்து கர்நாடகாவிலே கிருஷ்ணசாகரிலே நீர் நிரம்பி வழிந்தபோது தமிழகத்தின் முதலமைச்சர் கர்நாடக மாநிலத்திற்கு சென்று கர்நாடக முதலமைச்சரை சந்தித்துப் பேசினார்கள். எனவே தஞ்சை மாவட்டத்து விவசாயிகளுக்கு தண்ணீர் வழங்கி இருக்கிறார்கள். எனவே தஞ்சை மாவட்டம் செழிக்கின்றது என்றெல்லாம் இந்த அவையிலே பேசினார்கள். ஆனால் இரண்டாண்டு காலமாக தஞ்சை மாவட்டத்து விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது இயற்கையினுடைய சாதக பாதகம் என்று இன்றையதினம் அரசின் சார்பிலே சொல்லப்படுகின்றது. 1980 ஆம் ஆண்டு கர்நாடகத்திலே காவிரி நீர்ப் பகுதியிலே அதிகமான மழை பெய்கின்றபோது





முதலமைச்சரின் சாதனை என்று பேசிய நீங்கள் இந்த இரண்டாண்டுகாலமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களே, இயற்கை இப்போது சாதகமாக இல்லையா, அதற்கு என்ன காரணம், என்ன தவறு நடந்திருக்கின்றது, யார் தவறு செய்தார்கள் என்பதை நீங்கள் சொல்லியாக வேண்டும்.

1924—ஆம் ஆண்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவில்லை. 8 ஆண்டு காலமாக அது ஒத்திப் போடப்பட்டு வருகின்றது. குழு கூட்டத்திலே பேசப்படுகின்றது. ஆனால் தீர்வு காணப்படவில்லை. எனவே உடனடியாக மத்திய அரசினை அணுகி இதற்கு தீர்வு காணவேண்டும் என்று வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த சென்ற ஆண்டு ஜூன் மாதம் 12-ம் தேதி கண்டிப்பாகத் தண்ணீர் திறந்து விடப்படும் என்று தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டது. அதை நம்பி ஏராளமான விவசாயிகள் விதை விட்டார்கள், நட்டம் அடைந்தார்கள். ஆனால் இந்த ஆண்டும் ஜூன் மாதம் 12 ஆம் தேதி கண்டிப்பாக தண்ணீர் திறந்து விடப்படும் என்று அரசின் சார்பாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அப்படி 12 ஆம் தேதி திறந்துவிடப்பட்டதா என்றால் திறந்துவிடப்படவில்லை. 21-ம் தேதி திறந்து விடப்பட்டது. மேட்டூர் அணையினைத் திறந்து 70 நாட்கள் ஆகியும் கடைமடைப் பகுதிகளுக்கு இதுவரையில் தண்ணீர் போய்சேரவில்லை.

காவிரி நீரை நம்பி விதைவிட்ட விவசாயிகள் நாற்றை அழித்திருக்கிறார்கள். நாற்றுக்கள் அழிந்திருக்கின்றன. பல பகுதிகளிலே நட முடியாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசு அறிவித்த காரணத்தினால் எப்படியும் தண்ணீர் விடுவார்கள், நாத்து நடலாம், நடவு நடலாம் என்று நம்பிக் கொண்டிருந்த விவசாயிகள், இப்போது நாத்துக்கள் காய்ந்து, ஏராளமாக நஷ்டமடைந்திருக்கிறார்கள். இது தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு கோடி இருக்கும் என்று நம்புகிறேன். இதற்கு ஒரு மாற்று ஏற்பாடாக, அப்படி நஷ்டமடைந்திருக்கும் விவசாயிகளுக்கு நாற்றை, அழித்திருக்கும் விவசாயிகளுக்கு, இதனால் கஷ்டப் பட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு அரசின் சார்பாக உடனடியாக உதவி செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நாற்றை அழித்தவர்கள், நடவு நட முடியாமல் கஷ்டப்படுபவர்களுக்கு அரசின் சார்பாக உடனடியாக விதை நெல் வழங்கப்பட வேண்டும் அல்லது அவர்களுக்கு கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே காவிரி சீரமைப்புத் திட்டம், அதாவது காவிரியில் வருகின்ற நீரை சரியாக சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் அதன்மூலம் விவசாய உற்பத்தியை பெருக்க வேண்டுமென்பதற்காக காவிரிநீர் சீரமைப்புத் திட்டம் தஞ்சை மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது இந்தத் திட்டம் இப்போது சரியாக செயல்படுகிறதா என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் வாய்க்கால் வெட்டப்படுவதில்லை. அதன் காரணமாக, வருகிற நீர் சீராக வாய்க்கால் வழியாகப் போவதில்லை, இதைப்பற்றி நான் ஏற்கனவே பல நேரங்களில் சொல்லியிருக்கிறேன். எனவே தஞ்சை மாவட்டத்தில் உடனடியாக வாய்க்கால்கள் அனைத்தும் வெட்டப்பட வேண்டும். வருகின்ற நீரை ஆறுகளில் கடைநிலைப் பகுதிகள்வரை செல்ல அரசு ஆவன செய்ய வேண்டும. இந்த யோசனையை உடனடியாக செய்ய வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், மேட்டூரிலிருந்து விடப்படும் நீர் கிடைக்காத நேரத்தில் விவசாயிகளுக்கு நீர் வழங்க வாய்க்கால்களின் தலைப்புகளில் ஆழ் குழாய்க்கிணறுகளை இறக்கி, தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்தால்தான், விவசாயிகள் பாதுகாக்கப்பட முடியும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கூட, சமுதாய கிணறுகள் இறக்கப் பட்டன. இந்தக் கிணறுகள் செயல்படவில்லை. அவற்றை இந்த அரசால் செயல்படுத்த முடியவில்லை. உடனடியாக எல்லா வாய்க்கால்களின் தலைப்புகளிலும். ஆழ் குழாய்க் கிணறுகளை இறக்கி, இப்படி தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு, விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற நேரத்தில் அவர்களுக்கு இந்தத் தண்ணீரை இறைத்துக் கொடுக்க வேண்டும் இது மிக முக்கியமான பிரச்சனை யாகும் அதோடு, இன்றையதினம் மேட்டூர் நீர்த் தேக்கத்தின் நிலவரம் 44 அடி இருப்பதாகக் காலைப் பத்திரிகையிலே பார்த்தேன். 17,000 கியூசெக்ஸ் தான் தண்ணீர் விடப்படுவதாகச் சொல்கிறார்கள். இந்த நிலை நீடித்தால் இன்னும் 10 தினங் களுக்குத் தண்ணீர் விட முடியுமா என்று சந்தேகமாக இருக்கிறது. 35 அடிக்கு தண்ணீர் மட்டம் குறையுமானால், மேட்டூர் அணையிலே இருந்து தண்ணீர் எடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். அத்தோடு, அங்கே மீன் வளர்க்கக் கூடியவர்கள், அனுமதிக்கமாட்டார்கள் என்று சொல்கிறார்கள். இன்னும் 18 அல்லது 19 அடி வரைதான் அங்கே, தண்ணீர் எடுக்கமுடியும். ஆனால். கிருஷ்ணராஜ சாகரில் நீர்த்தேக்கம் நிரம்பிவழிந்து கொண்டிருக்கிறது. கிருஷ்ணராஜசாகர் நிரம்பி வழிந்து, அந்த மாநிலத்தின் முதலமைச்சர் அதற்காக பூஜை போட்டதாக பத்திரிகையில் செய்தி வருகிறது. இப்படி நமக்கு கொடுக்கவேண்டிய தண்ணீரைக் கொடுக்





காமல், அந்த மாநில அரசு தண்ணீரைத் தேக்கிவைத்து, தேவைக்கு மேல் வைத்திருக்கிறார்கள். நமக்கு கொடுக்கவேண்டிய உரிமையைக் கொடுக்க மறுக்கிறார்கள். நாம் இதை இந்த நேரத்திலே எண்ணிப்பார்க்க வேண்டும் எண்ணிப் பார்த்து, எது எதற்கோ பறந்து செல்லும் நமது முதலமைச்சர், தண்ணீர் பிரச்னைக்குப் பரிகாரம் காண கர்நாடக முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசி இருக்கவேண்டும். அதற்கு மாறாக, நம்முடைய முதலமைச்சர் தலைமைச் செயலாளர் மூலம் தந்தி கொடுக்கச் சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது, வருத்தப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. நம்முடைய முதலமைச்சர் கர்நாடக முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து நமக்கு கொடுக்க வேண்டிய தண்ணீரை கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கவேண்டும். அல்லது மத்திய அமைச்சரைச் சந்தித்து, உடனடியாக நமக்கு கிடைக்கவேண்டிய உரிமையைப் பெற்று. விவசாயிகளுக்கு தண்ணீர் வழங்கியிருக்க வேண்டும். அப்படி வழங்கவில்லை. நம்முடைய தலைமைச் செயலாளரை விட்டு, தந்தி கொடுக்கச் சொல்லிவிட்டு, அதோடு இருந்துவிட்டதாக நான் அறிகிறேன். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் உடனடியாக தஞ்சை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட 4 25 இலட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி செய்யக்கூடிய பரப்பாகும். இந்த ஆண்டு $2\frac{1}{4}$ இலட்சம் ஏக்கர்தான் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது என்ற புள்ளிவிவரம் கொடுக்கிறார்கள்; பத்திரிகை செய்தியும் வருகின்றது அரசு அதிகாரிகளும் சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் கிட்டத்தட்ட 2 இலட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் அந்தப் பகுதிகளில் தண்ணீர் சரியாக போவதில்லை. காரணம் முறைவைத்து தண்ணீர் விடுவதுதான். இன்றைக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா பயிருக்கு தண்ணீர் கிடைக்காமல் சுமார் 8 இலட்சம் ஏக்கர் நிலம் பாதிக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. இதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும். (மணியடிக்கப்பெற்றது.)

(இரவு 8—50)

திரு. போ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் விரைவாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். நாங்களும் அந்த கருத்தோடு ஒட்டி தஞ்சாவூர் மாவட்டத்தில் $2\frac{1}{4}$ லட்சம் குறுவை நட்டு இருப்பதாக கலெக்டர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். $4\frac{1}{2}$ லட்சம் எதிர்பார்த்தது. இன்னும் 8 லட்சம் ஏக்கர் சம்பா நடாமலே தரிசாக கிடக்கிறது. விதைவிட்டு சுமார் 20 ஆயிரம் கோட்டை கருகப்பட்டும், மாடுவிட்டு மேய்க்கப்பட்டும் அழிந்து விட்டது. இன்னும் தஞ்சை மாவட்டத்தில் முத்துப்பேட்டை

பகுதியில் பெரும்பகுதி, தோண்டியக்காடு, இடும்பாவனம் இந்த பகுதியில் மாடுகளுக்கு தண்ணீர் இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். அதைப்போல் மன்னார்குடியில் தாலுக்காவில் திருமக்கோட்டைப் பகுதி, கோட்டூர் பகுதியில் பெரும்பாலான இடங்களில் வயலுக்கு அல்லது குளத்திற்கு தண்ணீர் போகாமல் மாட்டுக்குக் கூட தண்ணீர் இல்லாமல் தவிக்கிறார்கள். அதே போல், தலைஞாயிறு யூனியன், வேதாரண்யம் பகுதி, சீர்காழி தாலுக்கா இப்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் பல பகுதிகளிலும், எனக்குத் தெரிந்து இதுவரையிலும் தஞ்சை மாவட்டம் இப்படியொரு அவல நிலைக்கு மக்கள் ஆளாக்கப்பட்ட நிலை என் வாழ்வில் பார்த்தது கிடையாது. இப்படியொரு பக்கம் விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி விவசாயத் தொழிலாளர்கள் பல லட்சம் பேர்கள் இன்றைக்கு பட்டினியால் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு மூட்டை முடிச்சு கட்டிக்கொண்டு வாழ்வதற்கு எந்த மாவட்டத்திற்குப் போவோம் என்று வழி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று வழி என்ன ஏற்பாடு செய்யப்போகிறார்கள் இந்த அரசு.

அதேபோல் தஞ்சாவூர் மாவட்டம் விளைந்தால், திருச்சியின் ஒரு பகுதி விளைந்தால்தான், சிதம்பரத்தின் ஒரு பகுதி விளைந்தால்தான் தமிழ்நாட்டில் 5 கோடி மக்களுக்கு உணவு கிடைக்கும். இப்படி தஞ்சாவூர் மாவட்டம் காவேரியை நம்பி வாழக்கூடிய விவசாயப்பகுதியாக இருப்பதை பற்றி தமிழக அரசு திட்டம் என்ன? எதிர்காலத்தில் தமிழகமே கொந்தளிக்கப் போகிறது. இதற்கு மாற்று ஏற்பாடு என்ற பெயரால் உண்மையிலேயே தமிழக அரசு சத்துணவுத் திட்டம் மற்ற மற்ற திட்டங்கள் அறிவித்ததோடு இத்திட்டத்திற்கான மாற்று திட்டம் அரசாங்கம் இதுவரையில் அறிவித்திருக்கிறதா என்று பார்த்தால், அறிவித்திருப்பதாக உண்மையிலே தெரியவில்லை என்பதை வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன்.

இன்னொன்று இன்றைக்கு இந்த காவேரி நீர் என்பது 9 ஆண்டு காலமாக தமிழகத்தை ஆளக்கூடியது மாற்றுக்கட்சி. ஆனால் கர்நாடகத்தை ஆளக்கூடியது காங்கிரஸ் கட்சி. டெல்லியில் ஆளக்கூடியது காங்கிரஸ் கட்சி. ஆனால் டெல்லியில் ஆளக்கூடிய காங்கிரஸ் கட்சி நினைத்தால் தமிழ்நாட்டு மக்கள் வாழவேண்டும்; தமிழ்நாட்டை புறக்கணிக்கக்கூடாது. தமிழ்நாட்டை எந்தக் கட்சி ஆண்டாலும், அந்தக்கட்சித் துரோகம் இல்லாமல், தமிழ்நாட்டு நலம்தான் பார்க்கவேண்டும். மத்திய அரசு இந்திரா காங்கிரஸ் கட்சி நினைத்திருக்குமேயானால் கர்நாடகத்தை ஆளக்கூடிய காங்கிரஸ் கட்சியை அழைத்து தமிழ்நாட்டு நலனுக்காக தண்ணீரைத் திறந்து விட்டிருப்பார்கள். ஆனால் டெல்லியில் என்ன நினைக்கிறார்கள். மீண்டும் மீண்டும் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி வரவில்லை. தமிழ்நாட்டில் வேறு ஒரு கட்சியை தேர்ந்தெடுக்கிறார்கள். எனவே இந்த தண்ணீர் 9 ஆண்டுக் காலமாக மத்திய அரசுக்கூட்டம் 4 மாநில அரசுகளை அழைப்பதும், அதை ஒத்திவைப்பதும்—இந்த மாதம் கூட 4, 5



தேதியில் பெங்களூரில் அழைத்திருந்தார்கள். ஆனால் தமிழ் மக்களும், தஞ்சாவூர் மாவட்ட மக்களும், ஏதோ ஒரு தீர்வு காணப்போகிறது, தண்ணீர் கிடைக்கும் என்று ஏங்கியிருந்தார்கள். இறுதியாக ஏமாற்றம். மத்திய அமைச்சர் திரு. பாண்டே வரவில்லை. ஆகவே ஒத்திவைத்தாகிவிட்டது என்று அறிவித்து விட்டார்கள். இதையெல்லாம் பார்க்கிறபோது காவிரி நீர்ப் பிரச்சனையில் மத்திய அரசு உடனடியாக தலையிட்டு தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கையை தமிழ்நாட்டு மக்கள் இழந்து விட்டார்கள். தஞ்சாவூர் மாவட்டம் பெரிதும் பாதித்திருக்கிறது. இந்த தஞ்சாவூர் மாவட்ட உற்பத்தி பாதித்தால் சத்துணவு திட்டமே தமிழகத்தில் பெரு பகுதி பாதிக்கும்.

1924 ஆம் ஆண்டு நடந்தது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. தமிழகத்திலே எங்கு பார்த்தாலும் மக்கள் பையும் கையுமாக அலைந்தார்கள். அதுபோன்ற நிலைமை அடுத்த ஆண்டு தமிழகத்திலே உருவாகும். இதில் உடனடியாக தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் பாதிக்கப்படுகின்ற துர்ப்பாக்கியமான நிலைமை தமிழகத்திலுள்ள விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும்தான் ஏற்படும். ஆகவே விவசாயிகளை, விவசாயத் தொழிலாளர்களை பட்டினியிலிருந்து பாதுகாக்கக் கூடிய முறையிலே மாற்றுத் திட்டத்தை இந்த அரசு உடனடியாக உருவாக்க வேண்டும். இலங்கைத் தமிழர்கள் பாதிக்கப்பட்டபோது நடவடிக்கை எடுத்ததுபோல் காவிரி நீர்ப் பிரச்சினையைம் தீர்ப்பதற்காக தமிழ் மக்களை ஒன்று திரட்டி ஆளுங்கட்சியும் எதிர்கட்சிகளும் ஒன்று சேர்ந்து மத்திய சர்க்காரை வலியுறுத்துவதற்காக ஒரு போராட்டத்தை நடத்தியாக வேண்டும். அந்த முறையிலே மத்திய சர்க்காரை வலியுறுத்துவதற்காக வெகு விரைவிலே காவிரியிலிருந்து போதுமான அளவுக்கு தமிழகத்திற்குத் தண்ணீர் பெறுவதற்காக எல்லாக் கட்சிகளும் துரித நடவடிக்கை எடுத்து தஞ்சை மாவட்ட விவசாயிகளையும் விவசாயத் தொழிலாளர்களையும் பாதுகாத்து உற்பத்தியை பெருக்குவதற்கு ராணுவ நடவடிக்கை போல் பாவித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே பேசியிருக்கிறார்கள் அவசர உணர்வோடு இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மத்திய அரசு முன்வந்து தமிழ் நாட்டு மக்களின் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தோழர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் சொன்னதைப் போன்று நாகப்பட்டிணம், திருவாரூர், மாயவரம் போன்ற கடைகோடி பகுதிகளில் உள்ள பயிர்களுக்கு தண்ணீர் போகாத நிலைமையில் இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்திலே பெரும்பாலும்

பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த நன்செய் பயிர் செய்யமுடியும் என்ற நம்பிக்கை கிடையாது. இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலே சுமார் இரண்டரை லட்சம் ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்திலே கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தை நம்பியிருக்கக்கூடிய ஒரு பகுதியும், அதைப் போலவே வடாற்காடு மாவட்டத்திலே சாத்தனூர் நீர்த் தேக்கத்தை நம்பி ஒரு பகுதியும், திருக்கோவிலூர் பகுதியும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே இன்றைக்குப் பொது வாக எல்லா இடங்களிலுமே தண்ணீர் இல்லாததால் தமிழகம் முழுவதுமே பாதிக்கப்பட்டிருக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கர்நாடக மாநிலத்திலே சமீபத்திலே பெருமழை பெய்திருந்தாலும் நமக்குத் தேவையான நியாயமான தண்ணீரைக் கொடுக்க தயங்குகிறார்கள். ஆகவே உடனடியாக தமிழக அரசும் இந்திய அரசும் இதிலே முன்வந்து பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஏற் பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே இவ்வாண்டு காவிரி நீர்ப் பற்றாக்குறை காரணமாக தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். காவிரி நீர்ப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் இங்கே பேசுகின்றபோது குறிப்பிட்டுள்ளார்கள், தமிழக அரசைப் பொறுத்தவரையில் அவ்வுணர்வுகளை முழுக்க முழுக்க ஏற்றுக் கொண்டு செயல்படுகிறது, பற்றாக்குறையைப் போக்கவேண்டும் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்பதிலே தமிழக அரசு மட்டும் முயன்றால் போதாது, அதேபோல் மற்ற மாநில அரசுகளும் அதிலே ஈடுபட்டு ஒத்துழைத்தால்தான் இதிலே தீர்வு காணமுடியும் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு நெடுமாறன் அவர்கள் பேசுகின்றபோது பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தினார். பல இலக்கிய சான்றுகளையெல்லாம் எடுத் துச்சொன்னார். நான் அவர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். கர்நாடக மாநிலத்திலேயும் சட்டமன்றம் உண்டு அங்கேயும் எதிர்கட்சிகள் உண்டு, கேரள மாநிலத்திலேயும் சட்டமன்றம் உண்டு, அங்கேயும் எதிர்கட்சிகள் உண்டு. ஆகவே இதிலே தீவிரம் காட்டுவதைவிட காவிரி பள்ளத்தாக்கு வாழ் மக்களின் ஒட்டுமொத்த நலனிற்கு ஏற்றவகையில் தீர்வு காண வண்டு மன்டுபதில் கவனம் செலுத்த வேண்டும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இவ்வாண்டு நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறது என்பது முற்றிலும் உண்மை. அதனால் உணவு நிலைமை பாதிக்கப்படுமோ என்று அஞ்சுவதும் இயல்பு.



(இரவு 9.00)

அதற்கு காரணம் மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டதைப் போல மற்ற மாநிலங்கள், காவிரியைச் சார்ந்த மாநிலங்கள் கர்நாடகமும், கேரளமும் எந்த அளவிற்கு நீர் வளத்தைப் பெற்றிருக்கிறதோ அந்த அளவிற்கு தமிழ் நாட்டிற்கு நீர் வளம் இல்லை. நமக்கு என்று இருக்கிற ஒரே ஒரு ஆறு காவிரி ஆறுதான். தமிழ் நாட்டினுடைய உயிர் நாடியாக இருப்பதும் காவிரி ஆறுதான். ஆனால் கர்நாடகத் திற்கு காவிரியும் உண்டு, கிருஷ்ணாவும் உண்டு, துணை ஆறுகளும் உண்டு. கேரளாவிற்கு பெய்கிற மழையே போதும். அவர் களுக்கு அந்த வாய்ப்புகள் எல்லாம் உண்டு. ஆகவே காவிரி யிலே தண்ணீர் வரவில்லையென்றால் தமிழ்நாட்டினுடைய உயிர் நாடியே பாதிக்கப்படுகிறது என்றும் அதனாலே தமிழக மக்கள் துடித்து எழுவதும் இயற்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டூர் நீர்த்தேக்கத்தில் ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் இயல்பாகவே திறந்து விடப்படுவதும், முதல் 10 நாட்களுக்கு குறைந்தது 25 ஆயிரம் கன அடிகள் தண்ணீர் விடுவதும் இயல்பு. அப்போதுதான் மகசூலை எளிதாக செய்யமுடியும். இந்த ஆண்டு அதற்குமாறாக 12 ஆம் தேதிக்கு மாறாக 21 ம் தேதி (ஜூன் மாதம்) தான் மேட்டூர் அணை திறந்து விடப்பட்டது. அப்போது மேட்டூர் நீர்த் தேக்கத்தில் தண்ணீர், 35 டி.எம்.சி. தான் இருந்தது. முதல் 15 நாட்கள் 25 ஆயிரம் கன அடிகள் விடுவதற்கென்று அல்ல, 12 ஆயிரம், 18 ஆயிரம் கன அடிகள் தான் விட்டோம், மழை வரும் என்ற நம்பிக்கையோடு மேட்டூருக்கு போதுமான தண்ணீர் வந்து சேரும் என்ற நல்ல எண்ணத்தோடும் தண்ணீர் விடப்பட்டது. எதிர்பார்த்த அளவிற்கு அந்த நேரத்தில் மழை இல்லை: தண்ணீர் வரவில்லை. அதன் விளைவாக 18.7.82 முதல் மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போல பாசனத்தில் முறை வைப்பு மேற்கொள்ளப்பட்டது. அந்த முறை வைப்பில் கூட சங்கடங்கள் ஏற்பட்ட காரணத்தால் பவானிசாகரிலிருந்து கூட 8 டி.எம்.சி. சேர்த்து விட்டு—140 டி.எம்.சி. தஞ்சைக்கு பாசனத்திற்கு விட வேண்டுமென்றால் நாம் 79 டி.எம்.சி. தான் விட முடிந்தது. மற்றவைகளை எல்லாம் சேர்த்து 91 டி.எம்.சி. தான் விட முடிந் திருக்கிறது. அதன் விளைவாக தான் இன்றைக்கு குறுவை 3 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டிருக்கிறது. அந்த குறுவையை வடகிழக்கு பருவமழை வருகிற வரையில் காப்பாற்றுகிற பொறுப்பும் நமக்கு உண்டு. அதேபோல சம்பா சாகுபடிக்கு பாதுகாப்பு தரவேண்டிய பொறுப்பும் நமக்கு உண்டு. இன்று இரண்டும் கெட்டான் நிலையில் குறுவை சாகுபடியை காப்பாற்ற முடியுமா என்ற அச்சமும், சம்பாவை நாம் எப்படி முழுவதும் பயன்படுத்தப்போகிறோம் என்ற அச்சமும் ஏற்படுகிற அளவிற்கு, 8-9-82 அன்றைய நிலவரப்படி மேட்டூரில் 17.5 டி.எம்.சி. தான்

தண்ணீர் இருக்கிறது. இது போதாது. ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல இந்த 4ஆம் தேதி பெங்களூரில் நடைபெறவிருந்த காவிரி சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் ஒத்திப்போடப்பட்டாலும், மின்சாரம் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளுக்கு சென்றிருந்த நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாக கர்நாடக முதலமைச்சரிடத்திலே நிலையை விளக்கினேன். சுமார் 36 டி.எம்.சி. கர்நாடக நீர் தேக்கங்களிலிருந்து அவர்களுடைய சாகுபடிக்கு பாதகம் ஏற்படாத வகையில் நமக்கு கர்நாடகத்தினால் இயலும் என்பதை கர்நாடக முதலமைச்சரிடத்தில் விளக்கிக் காட்டினேன். அவர்களும் அங்கே உள்ள அதிகாரிகளோடு கலந்து கொண்டு கூடிய விரைவில் சாதகமான நிலையை எடுப்பதாகச் சொன்னார்கள். தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று சொல்லப்படும் தஞ்சையிலே மிகவும் இக்கட்டான, நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்கிறபோது விரைவிலே ஒரு நல்ல முடிவை எடுத்து போதிய அளவிற்கு நாம் கேட்டிருக்கிற 36டி.எம்.சி. தண்ணீரை அவர்கள் தருவார்கள் என்று நாங்கள் நிச்சயமாக எதிர்பார்க்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அவர்களோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்கள் என்று கருதுகிறேன். பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடைபெறவில்லை; தலைமைச் செயலாளர் அடிக்கிற தந்தியிலே தான் எல்லா காரியங்களும் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். நாங்கள் பேசுவது, பேசியது எல்லாவற்றையும் பத்திரிக்கையிலே கூட போட்டார்கள். அந்த பத்திரிக்கை அவர் கண்ணிற்கு கிடைக்க மாட்டேன் என்கிறது, அது நாங்கள் செய்த பாவமே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் முறையாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். ஆனால், இந்த நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் பேசுகிறபொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். எப்பொழுதும் மழை நிரம்பப் பெய்கின்ற காலங்களில் எந்த ஒப்பந்தமும் பயன்படுவது இல்லை. எல்லா மாநிலங்களுக்கும் தேவையான அளவு நீர் கிடைத்து விடுகிறது. ஒப்பந்தமே எதற்குப் போடுகிறோம் என்றால், பற்றாக்குறை ஆண்டுகளில் தான். பருவ மழை தவறுகிறபொழுது, தண்ணீர் குறைகிறபொழுது எந்தப் பகுதிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதற்குத்தான் முக்கியமாகவே ஒப்பந்தங்கள் போடப்படுகின்றன. உலகம் முழுவதுமே ஏற்றுக்கொண்ட முறை என்னவென்றால், ஒரு ஆற்றுப் பள்ளத்தாக்கு என்று வைத்துக் கொள்வீர்களானால், ஒரு ஆற்றுப் பகுதி என்று வைத்துக் கொள்வீர்களானால், Existing uses will always get preferance ovcr the new uses



English matter என்று பயன்படுத்துகின்ற பகுதிகள் புதிதாகப் பயன்படுத்தப்பட இருக்கிற பகுதிகளை விட முன்னுரிமை பெறும். ஆனால், இன்றைக்குப் புதிதாக அவர்கள் செய்கின்ற அந்தப் பாசன பகுதிகளுக்கு நீரைத் தேக்கி ஏற்படுத்துகிற ஒரு முறையை கர்நாடக அரசு மேற்கொள்வது உண்மையிலேயே இந்த இயற்கை விதிக்கு முரணானது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் கிருஷ்ண ராஜசாகருக்குக் கீழே இருக்கிற நிலங்களுக்கு நீரைத் தேக்கி வைக்கிறார்கள் என்றால் அது நியாயமானது. ஏனென்றால், கிருஷ்ண ராஜசாகரும் பழைய ஆயக்கட்டாகும். அதேபோல், காவிரி, வெண்ணாறு என்று இருக்கிற அந்த ஆயக்கட்டுகளும் பழைய ஆயக்கட்டுகள்,

1965 ஆம் ஆண்டு பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு திரு. உத்திராபதி என்று கருதுகிறேன். காங்கிரஸ் கட்சி என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். 1976 ஆம் ஆண்டு ஆளுநர் ஆட்சிக்காலத்தில், திரு. மோகன்லால் சுகாதியா அவர்களே முயற்சி செய்துகூட வெற்றிபெறவில்லை என்பவை எல்லாம் நாம் கடந்தகால வரலாற்றை எண்ணுகிறபொழுது உணரலாம். அந்த நேரத்தில் நாம்கூட ஒன்றைச் செய்தோம். தண்ணீர் குறைவாக இருக்கிறபொழுது நம்முடைய அரசின் சார்பில் கிராண்ட் அணைக்கட் கெனால், — ஜி. ஏ. கெனாலுக்கு — நிறுத்தப்பட்டு, வெண்ணாறுக்கும் காவிரி பகுதிகளுக்கும் தண்ணீர் விடப்பட்டது, அதற்குக் காரணம், Existing uses will alwa/s have a preference over the new uses. ஆகவே, பற்றாக்குறை ஏற்படுகிறபொழுது பருவ மழையின் மூலம் போதிய அளவு தண்ணீர் கிடைக்காத பொழுது, கிடைக்கின்ற தண்ணீரை, முதலில் யாருக்குக் கொடுப்பது என்பதற்கு உலகம் முழுவதும் ஏற்றுக்கொண்ட வரைமுறைகள், யார் ஆதி காலத்திலிருந்து படிப்படியாகப் பயன்படுத்துகிறார்களோ, அவர்களுக்கு உண்டு. அதற்கு மாறாக புதிதாக வருபவர்களுக்கு என்று அதை மாற்றியமைப்பது என்பது எந்த ஒப்பந்தத்திலும் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. இதைத் தான் திரும்ப, திரும்ப, நாம் நம்முடைய அரசின் சார்பிலே வலியுறுத்துகிறோம். ஆனாலும் இந்தப் பிரச்னை தீராமல் போய்க் கொண்டே இருக்கிறது என்பதையும் அதற்குப் பல்வேறு சூழ்நிலைகள் காரணம் என்பதையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் நான் தெளிவாக விளக்க விரும்புவது இந்தப் பிரச்னையைச் சீக்கிரத்திலே தீர்க்க வேண்டுமென்பதிலே நாங்கள் அக்கறையோடு இருந்து கொண்டிருக்கிறோம். இதைத் தீர்ப்பதற்கு மத்திய அரசு முன்

வரவேண்டுமென்றும் நாங் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் நடுவர் தீர்ப்புக்கு விடுவதாக இருந்தாலும் மத்திய அரசுதான் செய்ய வேண்டும். பேச்சு வார்த்தைகளின் மூலம் ஒரு ஒற்றுமையைக் காண முடியும் என்றாலும், அதை மத்திய அரசுதான் உடனடியாக நிறைவேற்றியாக வேண்டும். இப்படி எந்தக் காரியத்தை இதிலே செய்ய வேண்டுமென்றாலும், 3 மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தால், இந்திய அரசு உடனடியாக இதிலே கவனம் செலுத்துவதன்மூலம்தான் இதிலே தீர்வு ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. அவர்கள் அந்த வகையிலே தீர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்று சொல்கிறபொழுது — கிருஷ்ணராஜசாகருக்கும் — கர்நாடகத்திலே இருக்கிறவர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன் காவிரி என்கிறபொழுது, இந்தக் காவிரி பகுதியிலே வாழ்கிற மக்கள் அனைவருக்கும் சேர்த்துத்தான் நாம் பேசுகின்றோம். ஏற்கனவே பயன்படுத்துகிறவர்களுக்கு அந்த முன்னுரிமையைத் தருவது, பற்றாக்குறை ஆண்டுகளில் மிகமிக இன்றியமையாதது. இன்றைக்கு நாம் கஷ்டப்படுவதற்கே காரணம், கர்நாடக மாநிலத்திலே உள்ள நீர்த் தேக்கங்களிலே நீரைத் தேக்கி வைப்பதன் காரணமாக, ஏற்கனவே பயன்படுத்திக் கொண்டிருந்த பகுதி மக்களுக்கு, இன்றைக்கு அந்தத் தண்ணீர் கிடைக்கவில்லையென்ற குறைதான். ஆகையினாலே அதைப் புரிந்துகொண்டு இதற்குத் தக்க முறையிலே கர்நாடக அரசும் நமக்கு உதவி செய்யும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நான் நேரிலே அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் கடிதம் எழுதி இருக்கிறார்கள். கர்நாடக அரசும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கனவே கேட்டுக்கொண்டதற்கிணங்க, 12 டி. எம். சி. தந்தார்கள். அதற்குப் பிறகும் கொஞ்சம் தண்ணீர் வந்தது. அவர்களாலே உடனடியாக 36 டி. எம். சி. தர முடியும். அதை விரைவிலே தருவார்களானால், தஞ்சையைக் காப்பாற்றுவதற்கும் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற பேரிழப்பைச் சரி செய்வதற்கும் அது உதவி செய்யும். அதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அந்த அளவிற்கு இந்த விவாதம் பயன்பட்டது என்கின்ற காரணத்தினால் இத்துடன் அதை நிறுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

(இரவு 9.10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

## 8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (இ) பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—





"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக்கூட்ட அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுகிறது.

பின்னர் இரவு 9-11 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெற்றது.

## 12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

99. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு மரத்தடிகளை எடுத்துச் செல்லுதல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வன-மீனளத்துறையின் 15—4—1981 ஆம் தேதியிடப் பெற்ற 438 ஆம் என அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1882-ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1882) 64-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

100. தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு மரத்தடிகளை எடுத்துச் செல்லுதல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வன-மீனளத் துறையின் 30-‑-1981-ஆம் தேதியிடப் பெற்ற 919-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1882-ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

101. வட ஆற்காடு மாவட்டம், கரகிரியிலுள்ள விப்லின் தொழுநோய் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமான சில வண்டிகளுக்கு சலுகைக் கட்டண வீதத்தில் வரி செலுத்த அனுமதிப்பது குறித்து உள் துறையின் (போக்குவரத்து-1) 7-5-1982 ஆம் தேதியிடப் பெற்ற 1129-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

102. தஞ்சாவூர் மாவட்டம் சாக்கோட்டையிலுள்ள தூய இருதய தொழுநோய் மருத்துவ மனைக்குச் சொந்தமான 5342-ஆம் எண் வண்டிக்கு சலுகைக் கட்டண வீதத்தில் வரி செலுத்த அனுமதிப்பது குறித்து ,உள் (போக்குவரத்து.1) துறையின் 18-5-1982-ஆம் தேதியிடப்பெற்ற 1229-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

103. சென்னையிலுள்ள பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்திற்குச் சொந்தமான 5665-ஆம் எண் வண்டிக்கு சலுகைக் கட்டண வீதத்தில் வரி செலுத்த அனுமதிப்பது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 18-5-1988 ஆம் தேதியிடப்பெற்று 1222-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நரடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ்பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

104. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளின் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 30-9-1981-ஆம் தேதியிடப் பெற்ற 2349-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [193)-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது)

105. தமிழ்நாடு 198)-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 30-4-1982-ஆம் தேதியிடப்பெற்ற 1068-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தன் (மத்தியச் சட்டம் 4/1939 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

106. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 6-10-1981-ஆம் தேதியிடப்பெற்ற 2386-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1938) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

107. தமிழ்நாட்டிலுள்ள உருக்கு ரீரோலிங் ஆலைகளினால் தயாரிக்கப்பெறும் இரும்பு மற்றும் உருக்கு ரீரோல்டு பொருட்கள் விற்பனை மீது வரிவிதப்பதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 13-3-1982-ஆம் தேதியிடப்பெற்ற 311 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959). 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது



108. வணிகவரிகள்--சமய அறக்கட்டளைகள் துறையில் 24-12-1981-ஆம் தேதியன்று உருவாகி, 26-12-1981-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் 2, பிரிவு 1-ல் வெளியான II (1)/வ.வ. ச.அ./580 (a)/81 ஆம் எண் அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 11-3-1982 ஆம் தேதியிடப்பெற்ற 300 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

109. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 8-7-1981 ஆம் தேதியிடப்பெற்ற 98 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

110. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள்-சாராயக் கடைகள் (ஏலத்தில் ஒருவகை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறையின் 27-5-1981 ஆம் தேதியிடப்பெற்ற 40 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

111. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள்-விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறையின் 4) ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

112. பொதுத் (காவல்) துறையில் 20-11-1935 ஆம் தேதியன்று உருவாகி, 20-11-1935 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பக்கம் 1-ல் வெளியான 173 ஆம் எண் அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 17-2-1982 ஆம் தேதியிடப்பெற்ற 181 ஆம் எண் அரசாணையில் வெளியான அறுவிப்பு தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

113. உதகமண்டலத்தில் ஒவ்வொரு குதிரைப்பந்தய கூட்டத்தின் போதும் விதிக்கப் பெறும் தானியங்கி பந்தயக் கணிப்பு பொறி மற்றும் பந்தயம் பிடிப்பவர் மீதானவரியினைக் குறைப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 13-4-1982 ஆம் தேதியிடப்பெற்ற 405 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

114. இந்தியாவிலுள்ள அனைத்து குதிரைப் பந்தய மையங்களிலும் நடைபெறவிருக்கும் குதிரைப்பந்தயத்துக்கு உதகமண்டலத்திலுள்ள குதிரை பந்திய மைதானத்தில் விதிக்கப் பெறும் வரிவீதத்தை நிர்ணயிடப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 30-3-1982 ஆம் தேதியிடப் பெற்ற 375 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

115. வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையில் 10-4-1982 ஆம் தேதியன்று உருவாகி 1-4-1982 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் 2, பிரிவு, 1ல் 1 ஆம் பக்கத்தில் வெளியான II (1), வ.வ.& ச.அ/118 (அ), 82 ஆம் எண் அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 28-6-1982 ஆம் தேதியிடப் பெற்ற 738 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

116. சென்னை-4-ல் உள்ள இராமகிருஷ்ணா மிஷின் வாங்கியுள்ள டிராக்டருக்கு செலுத்தவேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 29-4-1982 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 456 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

117. ஆரோவில்லிலுள்ள ஏரோபுட் தனியார் நிறுவனம் தயாரிக்கும் கோதுமை குழல் பண்ணியம்' வடிசாற்றிலிடப்படும் மாவு முட்டைக் கலவையின் வற்றல தூளுக்கு, திரி இடியாப்ப வகை, சேமியா, மற்றும் ஏனையப் பசைப் பொருட்கள் மீது விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 2-6-1982-ஆம் தேதியிட்ப்பெற்ற 622-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1059-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவையின்முன் வைக்கப் பெற்றது].

D Y(211,31) N82 N83-3852



118. வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 3-3-1981 ஆம் தேதியிடப் பெற்ற II (1)/வ.வ.& ச.அ/152/80 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 10-2-1982-ஆம் தேதியிடப்பெற்ற 160-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

119. வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையில் 18-8-1977-ஆம் தேதியன்று உருவாகி 7-9-1977 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாடம் 2, பிரிவு 1ன் 115 116-ஆம் பக்கங்களில் வெளியான II (1)/வ.வ.& ச.அ./185/77-ஆம் எண் அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 26.4.1982 ஆம் தேதியிடப் பெற்ற 437 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொதுவிற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

120. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 24-3-1982 ஆம் தேதியிடப்பெற்ற 312 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்ப [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின்( தமிழ்நாடு சட்டம் 10/1939/16(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

121. ஏற்கனவே ஒருமுறை வரி விதிப்பிற்கு உட்படுத்தப் பெற்ற சாயங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களுக்குப் பலமுனை வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக-வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 13-7-1982 ஆம் தேதியிடப்பெற்ற 795 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959/53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

122. 1978-79 மற்றும் 1979-80 ஆம் ... களுக்கான மாவட்ட வளர்ச்சிக் குழுவின் நிர்வாக ... (தமிழ்) [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு மாவட்ட வளர்ச்சிக் குழுச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் ...8/1958/11(2) பிரிவின் கீழ் பேரவையின்முன் வைக்கப் பெற்றது].

1982253

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ...னைய தாள்கள்.

31. 1981-82 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாம் அறிக்கைக்க ... (ஏழாவது சட்டமன்றப் பேரவை) இணைப்பு.

32. உடுக்குறியிடப் பெறாத வினாக்களுக்கான ...களும் எண்கள் 901 முதல் 1000 வரை).

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras 14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem 1
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem
16 Meenakshi Pathippagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai 1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-12.

---

© TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.